# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஐப்பசி 17, யுவ - திருவள்ளுவர் ஆண்டு 2026

## 1995, நவம்பர் 3, வெள்ளிக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்*
*அடிதழீஇ நிற்கும் உலகு."*

குடிகளை அன்போடு அணைத்துக்கொண்டு செங்கோல் செலுத்துகின்ற அரசின் வழியில், அவ்வரசின் மக்கள் அனைவரும் நிற்பர்.

## 1. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள், வினா எண் 1, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு நிதி அமைச்சர்.

**1—**

**தமிழ்நாடு அரசுப் பணியாளர்களுக்கு ஊதியக்குழு நிறுவுதல்**

**67487*—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின் ஊதியக்குழு நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விரங்கள் யாவை?*

[*1995 நவம்பர் 3*

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஐந்தாவது ஊதியக்குழுவின் பரிந்துரையின் பேரில் இம்மாநில பணியாளர்களுக்கு மத்திய அரசுப் பணியாளர்களுக்கு இணையான ஊதிய விகிதம் அளிக்கப்பட்டுள்ளதால், இனி வரும் ஊதிய விகிதங்களின் மாற்றம், மத்திய அரசுப் அப்பணியாளர்களின் ஊதிய விகிதங்களை மாற்றியமைத்த பின்னரே சிந்திக்கப்பட வேண்டும் என்று ஐந்தாவது ஊதியக் குழு பரிந்துரைத்துள்ளது. எனவே, தற்பொழுது இம்மாநில அரசுப் பணியாளர்களுக்கு ஆறாவது ஊதியக் குழு நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதிய விகிதம் மாநில அரசுப் பணியாளர்களுக்கும் அளிக்கப்படுவதுடன், அண்மையில் மத்திய அரசுப் பணியாளர்களுக்கு பஞ்சப்படி உயர்த்தி வழங்கப்பட்டதுபோல், நமது மாநில அரசுப் பணியாளர்களுக்கும் பஞ்சப்படியை உயர்த்தி வழங்கிய நமது மாண்புமிகு டாக்டர் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் கருணை வடிவமான அரசுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுபோன்று, ஊதியக் குழு அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை கடந்த 3 ஆண்டு காலமாக அரசுப் பணியாளர்களிடம் வலு பெற்று வருகிறது. இதற்கு முன்னர் 40 சதவீதம், 50 சதவீதம் என்ற அகவிலைப்படி உயர்வுக்கே ஊதியக் குழு அமைக்கப்பட்டது. ஆனால், தற்போது 136 சதவீதம் அகவிலைப்படி வழங்கப்படுவதால் ஊதியக் குழு அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியபடி, மத்திய அரசுப் பணியாளர்களுக்கு இணையான ஊதிய விகிதங்கள் மாநில அரசுப் பணியாளர்களுக்கும் வழங்கப்படுகின்ற முறை 5-வது ஊதியக் குழுவின் மூலமாக மேற்கொள்ளப்பட்டது. அக்குழு 1988-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அதிலே சிலபல முரண்பாடுகள் இருக்கின்றன என்று பல்வேறு அரசு அலுவலர்கள் சம்பந்தப்பட்ட சங்கங்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் அலுவலர் குழு அமைக்கப்பட்டு, அவர்கள் அந்த முரண்பாடுகளைக் களைந்து, கடந்த 1-4-1992 முதல் பணப் பயன் வழங்குகின்ற அளவு உத்தரவு இடப்பட்டிருக்கிறது. 5-வது ஊதியக்*

*1995 நவம்பர் 3]*

குழு தன்னுடைய பரிந்துரையிலே மத்திய அரசுப் பணியாளர்களுக்கு இணையான ஊதிய விகிதங்களை நாம் வழங்குகின்ற காரணத்தால் மத்திய அரசினுடைய அடுத்த ஊதியக் குழுவின் பரிந்துரை வந்ததற்குப் பிறகுதான் மாநில அரசு ஊதியக் குழுவை அமைக்கலாம் என திட்டவட்டமாகக் கூறியிருக்கிறது. மத்திய அரசுப் பணியாளர்களுக்கான ஊதியக் குழுவை மத்திய அரசு நியமித்து இருக்கிறது. அது பரிசீலனையில் இருந்து வருகிறது. அவர்கள் அறிக்கை வெளியிட்டதற்குப் பிறகு அந்த அறிக்கையின் அடிப்படையிலே, மாநில அரசும் ஊதியக் குழுவை அமைக்கும். அதுவரையில் எந்த நடவடிக்கையும் நாம் எடுப்பதற்கு இல்லை.

**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருள் சூழ்ந்திருந்த தமிழகத்திற்கு ஒளியேந்தி, தமிழக மக்களின் இதயவானில் பவனி வரும் உதய நிலவாக விளங்கும் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் மகத்தான தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் ஊதியக் குழு அமைக்கப்படும் என்ற உறுதிமொழி அளிக்கப்பட்டதைக் கருத்தில் கொண்டும், மத்திய அரசில் இல்லாத பல பணிப் பிரிவுகள் மாநில அரசில் இருப்பதாலும், மத்திய அரசின் ஊதிய விகிதங்கள் இன்னும் நிறைவேற்றப்படாத பிரிவுகள் உள்ளதாலும் மத்திய அரசின் ஊதியக் குழுவின் பரிந்துரைகளை எதிர்பார்க்காமல் முடிவு எடுப்பதற்கும் மேலும் இடைக்கால நிவாரணம் ஊதியக் குழுவுடன் நேரிடையாக தொடர்புடைய அம்சமாகவும் இருப்பதாலும் மாநில அரசு ஊதியக் குழுவினை அமைக்க மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசுப் பணியாளர்களுக்கான ஊதியக் குழுவை அமைப்பதில் எந்தத் தகராறும் இல்லை. ஆனால் எப்போது அமைக்கப்படும் என்பதுதான் இப்போது கேள்வி. மத்திய அரசினுடைய ஊதியக் குழுவினுடைய அறிவிப்பு வந்ததற்குப் பின்னர், அதனுடைய அடிப்படையிலே நாம் நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். மத்திய அரசினுடைய பணியாளர்களுக்கு தரப்படுகின்ற ஊதிய விகிதங்களை மாநில அரசுப் பணியாளர்களுக்கும் தர வேண்டிய கடப்பாடு நமக்கு இருப்பதன் காரணமாக, அந்த அறிக்கை வந்த பின்னர்தான் அதனை நாம் செய்ய வேண்டும். தனித்தனியாக ஆரம்பித்தால் இரண்டுக்கும் முரண்பாடுகள வந்துவிடும். அந்த

முரண்பாடுகளைப் போக்குவது சிரமமாகும். மத்திய அரசு அந்த அறிக்கையை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறது. ஆகவே, மத்திய அரசினுடைய ஊதியக் குழுவினுடைய அறிவிப்பு வந்ததற்குப் பின்னால் மாநில அரசு தக்க நடவடிக்கை எடுக்கும். அந்த அறிக்கை விரைவிலே வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்குப் பிறகு அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும்.

முற்பகல் *10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. வேலையா.

**திரு. டி. வேலையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊதியக் குழுவினுடைய முக்கியமானப் பணி சம்பளங்களை சரிவிகிதப்படுத்துதலும், முரண்பாடுகளைக் களைதலும் ஆகும். ஆனால், ஒவ்வொரு ஊதியக் குழு நியமிக்கப்படுகிறபொழுதும் சம்பளங்களை அதிகப்படுத்துவது ஒன்றேதான் என்கிற அடிப்படையிலே ஊதியக் குழுவும் செயல்படுகிற மாதிரித் தெரிகிறது. அரசாங்கத்தில் வேலை பார்ப்பவர்களும் அதைத்தான் எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது. இந்தச் சூழ்நிலை வளர்ந்து வருவதால், அரசாங்கத்தில் வேலை பார்ப்பவர்களுக்கு மட்டும்தான் சலுகை அதிகமாகக் கிடைக்கிறது; அதனால் விலைவாசி எல்லாம் கூடுகிறது; பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள் என்ற கருத்து மக்கள் மத்தியிலே இருக்கிறது. ஆகவே, ஊதியக் குழுவின் உண்மையான நோக்கத்தை நிறைவேற்றுகிற வகையில்,—சம்பளத்தைக் கூட்டுவதுதான் உண்மையான நோக்கம், முக்கியமான நோக்கம் என்று இல்லாத அளவுக்கு—நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு இருக்கும் உணர்வு எல்லா அரசு ஊழியர்களுக்கும் இருக்குமேயானால் மிகமிக நல்லதுதான். ஊதியக் குழு வைக்க வேண்டும் என்று கேட்பதன் நோக்கமே ஊதியம் உயர்த்தப்பட வேண்டும் என்கிற அடிப்படையிலும், விலைவாசி ஏறி இருக்கிற அளவுக்கு இன்றைக்கு பஞ்சப்படியை அடிப்படைச் சம்பளத்தோடு சேர்க்க வேண்டும் எனபது தான் அவர்களுடைய முக்கியமான கோரிக்கையாக இருக்கிறது. இப்பொழுது சம்பளம் நூறு ரூபாய் என்று வைத்துக்கொண்டால், படி *136* ரூபாய் தருகின்ற அளவுக்கு வளர்ந்து வளர்ந்து வந்து சேர்ந்திருக்கிறது. இதிலே ஒரு முறையான தன்மையை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் ஊதியக் குழுவிலே வல்லுநர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மத்திய

*1995 நவம்பர் 3]*

அரசிலேயும் வல்லுநர் குழு அமைக்கப்பட்டு அவர்களும் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். உச்சநீதிமன்றத்தினுடைய நீதிபதி ஒருவர் அதற்குத் தலைமை தாங்கி நடத்திக் கொண்டு வருகின்றார். விசாரணை முடிந்து அவர்களுடைய அறிக்கை வெளிவந்த பிறகு அதனைப் பரிசீலித்து அதற்கேற்றபடி இங்கே ஊதியக் குழு அமைத்து, இங்கே இருக்கிற அரசு ஊழியர்களுடைய ஊதிய விகிதங்களை எந்த வகையிலே மாற்றலாம் என்று முடிவு செய்யலாம். ஆகவே, இதிலே தொடர்ந்து முறைப்படி மத்திய அரசு எடுக்கின்ற முடிவுகளுக்கு நாம் கட்டுப்பட வேண்டி இருப்பதன் காரணமாக, கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டி இருப்பதன் காரணமாக, முரண்பாடுகளை எல்லாம் நீக்கி, ஒரு நியாயமான அடிப்படையில் நாம் ஊதியம் வழங்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. தம்புசாமி.

**திரு. வே. தம்புசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு வழங்குகின்ற வீட்டுவாடகைப்படி அடிப்படையில் மாநில அரசு வழங்க வேண்டும் என்று ஊதியக் குழு சிபாரிசு செய்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்தாவது ஊதியக் குழுவினர் பெரும்பகுதி மத்திய அரசினுடைய ஊதியத்திற்கு இணையாகக் கொண்டு வருகின்ற சூழ்நிலையிலேதான் அவர்கள் அறிக்கையை வெளியிட்டார்கள். அதிலே சில பல முரண்பாடுகள் இருக்கின்றன. ஆகவே, ஒருவரையொருவர் பார்க்கின்ற பொழுது அதிலே வேறுபாடுகள் இருக்கக்கூடாது என்று பல சங்கத்தினர் முறையிட்டதன் பேரிலே அவைகளுக்கெல்லாம் அலுவலர் குழு ஒன்று அமைக்கப்பட்டு அவர்கள் ஆராய்ந்து அதற்குப் பிறகு 1-4-92 ஆம் ஆண்டிலேயிருந்து அந்த முரண்பாடுகள் எல்லாம்கூட நீக்கப்பட்டு விட்டன. ஆனால், இப்போது இந்திய அரசினுடைய ஊதியக் குழுவிற்கு இணையாக ஒரு ஊதியக் குழு அமைக்க வேண்டும் என்ற கருத்து இருப்பதன் காரணமாகத்தான் அந்த அறிக்கையை எதிர்பார்த்து ஊதியக் குழு அமைத்து அதன் அடிப்படையிலே நாம் நடவடிக்கை எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 2, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு சட்ட அமைச்சர்.

[*1995 நவம்பர் 3*

2—

**வரதட்சணை வழக்குகளை முடிக்க காலக்கெடு நிர்ணயித்தல்**

**44812*—**திருமதி ப. சரஸ்வதி:**

மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரதட்சணை வழக்குகள் முடிக்க குறிப்பிட்ட காலக்கெடு நிர்ணயித்து அரசு சட்டம் இயற்றுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திருமதி ப. சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில்தான் இந்த அவையிலே 30 பெண் உறுப்பினர்கள் வர முடிந்தது. பெண் காவல் நிலையங்கள், குடும்ப நீதிமன்றம், பெண் சிசு வதைத் தடுப்புச் சட்டம், தொட்டில் குழந்தைத் திட்டம், இப்படி பெண்களுக்காகவே பல திட்டங்களைத் தீட்டி, நல்லாட்சி புரிந்துவரக் கூடிய அன்னை, இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவியின் அரசில், வரதட்சணை வழக்கு போடப்பட்டு, அவர்கள் இரண்டாவது திருமணம் செய்து கொண்டு, அவர்களுக்கு இரண்டு, மூன்று குழந்தைகள் பிறந்த பிறகும்கூட, அந்த வழக்கு முடியாமல் இருக்கிறது. கேட்டால் அவர்கள் வீட்டு வேலைக்காரி என்று சொல்லி விடுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசில் வரதட்சணை வழக்குகளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்தாக வேண்டும் என்ற சூழ்நிலை உருவாகுமானால் பெண் சமூகத்திற்காக வாழும் எங்கள் அன்னையின் ஆட்சியில் நிரந்தரமான இன்பம் பெண் இனத்திற்குக் கிடைக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து இதைப் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கிற 1961 ஆம் ஆண்டு Dowry

*1995 நவம்பர் 3]*

Prohibition Act-இன்படி காலக் கெடு கிடையாது. ஆனால், ஒரு மாநில அரசு விரும்பினால் அதனைச் சட்டமன்றத்திலே நிறைவேற்றலாம் என்ற வாய்ப்பு இருக்கிறது. எனவே, விரைவில், ஒரு ஆறுமாத காலத்திற்குள் இந்த வரதட்சணை வழக்குகளை அவசியம் முடிக்க வேண்டும் என்ற சட்ட திருத்தத்தை இந்த அரசு கொண்டுவரும் என்பதனை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய சார்பிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் *10-10*

**திருமதி ப. சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரதட்சணை வழக்கைப் போட்டுவிட்டு சம்பந்தப்பட்ட ஆண்கள், அவர்களுடைய குடும்பங்களுடன் வெளிநாடுகளுக்குச் சென்றுவிடுகிறார்கள். அவ்வாறு அவர்கள் வெளிநாடுகளுக்கு செல்கின்ற காலகட்டங்களில், இந்த வரதட்சணை வழக்குகளுக்கு சம்பந்தப்பட்டவர்களை குறித்த மாதத்தில் அங்கிருந்து இங்கே வரவழைக்க அரசாங்கமே நடவடிக்கை எடுக்குமா என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத் துறையைக் கலந்து கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் ஆறு மாத காலத்திற்குள் வழக்கை முடிக்கலாம் என்ற ஒரு சட்ட திருத்தத்தைக் கொண்டு வரலாம் என்று யோசித்துக் கொண்டிருப்பதாக இங்கே தெரிவித்தார்கள். எந்தவொரு குற்றவழக்கும் இரண்டு மாதங்களில் முடியவேண்டுமென்று ஏற்கெனவே ஹைகோர்ட்டினுடைய விதிமுறைகள் இருக்கின்றன. ஆனால் இரண்டு மாதங்களுக்குள் எந்த வழக்கும் முடிந்தபாடில்லை. பொதுவாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், காவல் துறை வழக்கு பதிவு செய்து, அவர்கள் குற்றப் பத்திரிகை போடுவதற்கே இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் எடுத்துக் கொள்ளக்கூடிய கால கட்டங்களை நாம் நிறைய பார்த்திருக்கிறோம். ஆகவே, இனி இவ்வளவு நாட்களுக்குள் இந்த வழக்கை முடிக்க வேண்டுமென்ற ஒரு சட்ட திருத்தத்தைக் கொண்டு வருவது இயலாத ஒரு காரியம். ஆனால், சாட்சிகளைக் கொண்டுபோய் நீதிமன்றத்திலே நிறுத்தாத

காரணத்தினால்தான் நிறைய வழக்குகள் இன்று தேங்கிக் கிடக்கின்றன. வரதட்சணை சம்பந்தமாக எத்தனை வழக்குகள் இப்போது நிலுவையில் இருக்கின்றன? தமிழகத்தில் எத்தனை வழக்குகள் தற்போது பதிவு செய்யப்பட்டிருக்கின்றன? எத்தனை வழக்குகள் இப்போது முடிந்திருக்கின்றன? என்ற விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு அம்சங்களை தன்னுடைய கேள்விகள் மூலம் கேட்டிருக்கிறார்கள். ஒன்று, எவ்வளவு வழக்குகள் இருக்கின்றன என்று. அதற்கு தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன். இரண்டாவது அம்சம், வழக்குகளைப் பதிவு செய்வதிலே கால தாமதம் ஆகிறது என்று சொன்னார்கள். அதற்காகத்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு 'டைரக்ட்டரேட் ஆஃப் ப்ராசிகூயூஷன்' என்ற அமைப்பை உருவாக்கி ஆறு மாத காலத்தில் இந்த 'க்ரிமினல்' வழக்குகளையெல்லாம் மிகமிக வேகமாக முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. சின்னசாமி.

**திரு. வி.கே. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரதட்சணைப் பிரச்சினையில், கிராமப் பகுதிகளிலே சில சமயங்களில் இரண்டு, மூன்று திருமணங்கள் கூட செய்து கொள்கிறார்கள். அவர்கள் மீது வழக்கு பதிவு செய்வது கூட சில நேரங்களிலே முடியாத சூழ்நிலை இருப்பதாகச் சொல்கின்றார்கள். ஆகவே, எந்தெந்த சமுதாயத்தில் இப்படி இரண்டு திருமணங்கள், மூன்று திருமணங்கள் செய்து கொள்ளலாம் என்று ஏதாவது விதி இருக்கிறதா? இல்லையென்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை முழுமையாக அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் மிகத் தெளிவாக இருக்கிறது. வரதட்சணை வாங்கினால் அது எந்தச் சமுதாயமாக இருந்தாலும் சட்டத்தினுடைய கட்டுப்பாட்டிற்குள் வரவேண்டுமென்று இருக்கிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

*1995 நவம்பர் 3]*

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரதட்சணை கொடுமை என்று வழக்குகள் இருக்கின்றன. சில நேரங்களில் ** வரதட்சணை கொடுமை என்று பொய் வழக்கு போடுகிறார்கள் **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒட்டுமொத்தமாக **என்று சொல்லிவிட்டு **என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சம்பந்தம் இல்லாமல், தொடர்பில்லாமல் கேள்வி இருக்கின்ற காரணத்தினால் அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

முற்பகல் *10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 3, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

**3—**

**வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகளுக்கு நிவாரண உதவி**

*33332—**திரு. ப. கலியபெருமாள்:***

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடந்த ஆண்டு டிசம்பரில் ஏற்பட்ட புயல் மழையினால் பாதிக்கப்பட்ட வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகளுக்கு நிவாரண உதவி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது..

*1995 நவம்பர் 3]*

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரதட்சணை கொடுமை என்று வழக்குகள் இருக்கின்றன. சில நேரங்களில் ** வரதட்சணை கொடுமை என்று பொய் வழக்கு போடுகிறார்கள் **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒட்டுமொத்தமாக **என்று சொல்லிவிட்டு **என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சம்பந்தம் இல்லாமல், தொடர்பில்லாமல் கேள்வி இருக்கின்ற காரணத்தினால் அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 3, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

3—

**வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகளுக்கு நிவாரண உதவி**

*33332—**திரு. ப. கலியபெருமாள்:**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடந்த ஆண்டு டிசம்பரில் ஏற்பட்ட புயல் மழையினால் பாதிக்கப்பட்ட வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகளுக்கு நிவாரண உதவி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது..

[*1995* நவம்பர் *3*

*1993*–ஆம் ஆண்டு நவம்பரில் ஏற்பட்ட புயல், மழையினால் வெற்றிலைக் கொடிக்கால் மற்றும் வாழை, காய்கறித் தோட்டங்கள் பாதிக்கப்பட்டன என்றும், அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ப. கலியபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு, என் தொகுதியிலே, புயலாலும், வெள்ளத்தாலும் வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். அப்படி விவசாயிகள் யாரும், தங்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட்டதாகக் கூறவில்லை. ஆகையினால், அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கப்படாமல் இருந்தால், அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு அமைச்சர் அவர்கள் மீண்டும் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினால் நிவாரணம் பெறாதவர்கள், உடனுக்குடனே அங்கேயுள்ள தொடர்புள்ள அதிகாரிகளிடத்தில், 'எனக்குக் கிடைக்கவில்லை' என்று சொன்னால், அவர்கள் கொடுத்திருப்பார்கள். அப்படியும் அவர்கள் பெறவில்லை என்று சொன்னால், சம்பந்தப்பட்ட தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களை அவர்கள் அணுகியிருக்க வேண்டும்; தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் அதற்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டும். அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சர் அங்கே போகிறபொழுதாவது, அவரிடத்திலே கேட்டிருக்க வேண்டும். இத்தனைக்குப் பிறகும் யாருக்கும் கிடைக்கவில்லை என்று இன்றைக்கு உறுப்பினர் சொல்கிறார். ஆக, இத்தனைக்குப் பிறகும், இவ்வளவு நாட்கள் கழித்தும் கிடைக்கவில்லை என்றால், அதன்மீது உடனடியாக விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ப. கலியபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டபோது, நானே எல்லா ஊர்களுக்கும், கிராமங்களுக்கும் சென்று, அங்கே எவையெவை பாதிக்கப்பட்டன; எத்தனை ஏக்கர்கள் பாதிக்கப்பட்டன; வாழை எத்தனை ஏக்கர் பாதிக்கப்பட்டது; வெற்றிலைக் கொடிக்கால் எத்தனை ஏக்கர் பாதிக்கப்பட்டது; அதனால், எத்தனை விவசாயிகள் பாதிக்கப்பட்டார்கள் என்ற புள்ளிவிவரங்களையெல்லாம் சேகரித்து,

*1995 நவம்பர் 3]*

கலெக்டர் அவர்களிடத்திலே கொடுத்திருக்கிறேன். அதனுடைய நகலும் என்னிடத்திலே இருக்கிறது. ஆனால், அங்கே நிவாரணம் வாழைகளுக்கு மாத்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது. எனது தொகுதி, காவிரிக் கரை ஓரமாக இருக்கிற காரணத்தினால், அங்கே வாழை, கரும்பு மற்றும் வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகள்தான் அதிகமாக இருக்கிறார்கள். வெற்றிலைக் கொடிக்கால், 100 குழிக்கு, 200 பட்டம் வீதம் போடவேண்டுமென்று சொல்கிறார்கள். ஒரு பட்டம் 200ரூபாயிலிருந்து 250 ரூபாய்வரை செலவாகிறது. அந்த கொடிக்கால் போடுகிற விவசாயிகள், தங்களது சொந்த நிலத்தில் போடுவதில்லை. போடுவதற்கு நிலம் இல்லை. அவர்கள், மற்றவர்களிடத்திலே குத்தகை முறைக்கு நிலத்தை வாங்கி, அதன்மீது கடன் வாங்கி வெற்றிலை போடுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. ப. கலியபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நிலையில், அந்தப் பயிர்கள் புயலால் பாதிக்கப்பட்டு அவை அடியோடு அழிந்துவிட்டன. நானே நேரிலே சென்று, படம் பிடித்துக்கூட வந்தேன். அந்தப் படத்தோடு, நான் கலெக்டர் அவர்களிடத்திலே விவரத்தையும் கொடுத்திருக்கிறேன். அப்படிப்பட்ட நிலையில், வாழைக்கு நிவாரணம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கப்படவில்லை. இதுகுறித்து, நான் கலெக்டர் அவர்களிடத்திலே—இதற்கு முன்னாலே இருந்த கலெக்டர் அவர்களிடத்திலேகூட—கூறினேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியாகக் கேட்கச் சொன்னேன்; கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. ப. கலியபெருமாள்:** சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளிடத்திலும் கூறினேன். அதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்கிறோம் என்று சொன்னார்களே தவிர, இதுவரைக்கும் அவர்கள் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. எனவே, மீண்டும் அமைச்சர் அவர்கள், இதுகுறித்து பரிசீலிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் நல்ல விவ்சாயி என்பது இப்போது அவர் கேள்வி கேட்கிறபோதே தெரிகிறது. அதுமட்டுமல்ல; அவர் எல்லா

இடங்களுக்கும் சென்று பார்த்தேன் என்றும் சொன்னார். அதற்காக அவருக்குப் பாராட்டு, அரசின் சார்பிலும் பாராட்டு. எங்கெங்கே விடுபட்டிருக்கிறது என்று அவர் இன்றைக்கு என்னிடத்திலே கொடுத்தாலும் சரி, அல்லது நான் தஞ்சைக்குச் செல்கிறபோது கொடுத்தாலும் சரி, நேரடியாக அதிகாரிகளை அழைத்து, அவருக்கு முன்னாலே பேசி, அதற்கு வேண்டிய நடவடிக்கையை நான் எடுக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 4, திரு. கு. தங்கமுத்து, இருக்கையில் இல்லை. திரு. கு. தங்கமுத்து அவர்களுக்குப் பதிலாக திரு. என். பன்னீர்செல்வம். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** அவர் முதல் கேள்விக்கு 'சப்ளிமென்டரி' கேட்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தக் கேள்வி முடிந்துவிட்டது. அடுத்தக் கேள்விக்குப் போய்விட்டோம். (குறுக்கீடு)

**திரு. என். பன்னீர்செல்வம்:** நான் திரு. தங்கமுத்து அவர்களுக்குப் பதிலாகத்தான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியானால் சரி. வினா எண் 4, திரு. கு. தங்கமுத்துக்குப் பதிலாக திரு. என். பன்னீர்செல்வம் கேட்கிறார், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

**4—**

**வறட்சியின் காரணமாக நிலவரியை தள்ளுபடி செய்தல்**

*39615—திரு. கு. தங்கமுத்து:

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எந்தெந்த மாவட்டங்களில் 1401 பசலி ஆண்டுக்கு வறட்சியின் காரணமாக நிலவரியை அரசு தள்ளுபடி செய்துள்ளது?

(ஆ) எவ்வளவு தொகை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது?

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இடங்களுக்கும் சென்று பார்த்தேன் என்றும் சொன்னார். அதற்காக அவருக்குப் பாராட்டு, அரசின் சார்பிலும் பாராட்டு. எங்கெங்கே விடுபட்டிருக்கிறது என்று அவர் இன்றைக்கு என்னிடத்திலே கொடுத்தாலும் சரி, அல்லது நான் தஞ்சைக்குச் செல்கிறபோது கொடுத்தாலும் சரி, நேரடியாக அதிகாரிகளை அழைத்து, அவருக்கு முன்னாலே பேசி, அதற்கு வேண்டிய நடவடிக்கையை நான் எடுக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 4, திரு. கு. தங்கமுத்து, இருக்கையில் இல்லை. திரு. கு. தங்கமுத்து அவர்களுக்குப் பதிலாக திரு. என். பன்னீர்செல்வம். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** அவர் முதல் கேள்விக்கு 'சப்ளிமென்டரி' கேட்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தக் கேள்வி முடிந்துவிட்டது. அடுத்தக் கேள்விக்குப் போய்விட்டோம். (குறுக்கீடு)

**திரு. என். பன்னீர்செல்வம்:** நான் திரு. தங்கமுத்து அவர்களுக்குப் பதிலாகத்தான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியானால் சரி. வினா எண் 4, திரு. கு. தங்கமுத்துக்குப் பதிலாக திரு. என். பன்னீர்செல்வம் கேட்கிறார், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

**4—**

**வறட்சியின் காரணமாக நிலவரியை தள்ளுபடி செய்தல்**

**39615—திரு. கு. தங்கமுத்து:*

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எந்தெந்த மாவட்டங்களில் 1401 பசலி ஆண்டுக்கு வறட்சியின் காரணமாக நிலவரியை அரசு தள்ளுபடி செய்துள்ளது?

(ஆ) எவ்வளவு தொகை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது?

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*1995 நவம்பர் 3*]

(அ) மற்றும் (ஆ): இராமநாதபுரம், திருநெல்வேலி-கட்டபொம்மன், காமராசர், சிதம்பரனார், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்காக நில வரித் தொகை 1 கோடியே 87 லட்சத்து 24 ஆயிரத்து 37 மற்றும் பைசா 34 தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**திரு. என். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டிலே அடித்த புயல் காரணமாக தஞ்சாவூர் மாவட்டம் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட ஒரு பெரிய மாவட்டமாகும். அங்கே விவசாயிகளினுடைய தென்னை, வாழை, கரும்பு போன்ற பயிர்கள் அடியோடு அழிந்து, வீடுகளும் நாசமாயிற்று. அங்கு ஒதுக்கப்பட்ட தொகை மிகக் குறைவாக இருந்தாலும், அவர்கள் சரியான பலனை அனுபவிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டதாலும், அவர்களால் கொடுக்கப்பட்ட லிஸ்ட்டை அரசு முழுமையாக ஏற்று, அதைப் பரிசீலனை செய்து, மீண்டும் ஒரு தொகை வழங்குவதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக தஞ்சை, திருவையாறு, ஒரத்தநாடு, கும்பகோணம், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வட்டமான திருவிடைமருதூர், வலங்கைமான், பட்டுக்கோட்டை, பேராவூரணி வட்டங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்காக தள்ளுபடி செய்யப்பட்ட தொகை ரூ.4,05, 22, 575.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 5, திரு. காஞ்சி பன்னீர்செல்வம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

**5—**

## காஞ்சிபுரம் மருத்துவமனைக்கு கூடுதல் மருத்துவப் பணியாளர்கள் நியமித்தல்

*35952—**திரு. காஞ்சி பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத் தலைமையிடம் காஞ்சிபுரத்தில் இருக்கும் அரசு தலைமை மருத்துவமனையில் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதை அரசு அறியுமா?

*1995 நவம்பர் 3]*

*(அ) மற்றும் (ஆ): இராமநாதபுரம், திருநெல்வேலி–கட்டபொம்மன், காமராசர், சிதம்பரனார், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்காக நில வரித் தொகை 1 கோடியே 87 லட்சத்து 24 ஆயிரத்து 37 மற்றும் பைசா 34 தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.*

**திரு. என். பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டிலே அடித்த புயல் காரணமாக தஞ்சாவூர் மாவட்டம் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட ஒரு பெரிய மாவட்டமாகும். அங்கே விவசாயிகளினுடைய தென்னை, வாழை, கரும்பு போன்ற பயிர்கள் அடியோடு அழிந்து, வீடுகளும் நாசமாயிற்று. அங்கு ஒதுக்கப்பட்ட தொகை மிகக் குறைவாக இருந்தாலும், அவர்கள் சரியான பலனை அனுபவிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டதாலும், அவர்களால் கொடுக்கப்பட்ட லிஸ்ட்டை அரசு முழுமையாக ஏற்று, அதைப் பரிசீலனை செய்து, மீண்டும் ஒரு தொகை வழங்குவதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக தஞ்சை, திருவையாறு, ஒரத்தநாடு, கும்பகோணம், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வட்டமான திருவிடைமருதூர், வலங்கைமான், பட்டுக்கோட்டை, பேராவூரணி வட்டங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்காக தள்ளுபடி செய்யப்பட்ட தொகை ரூ.4,05, 22, 575.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 5, திரு. காஞ்சி பன்னீர்செல்வம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.*

**5—**

**காஞ்சிபுரம் மருத்துவமனைக்கு கூடுதல் மருத்துவப் பணியாளர்கள் நியமித்தல்**

**35952*—**திரு. காஞ்சி பன்னீர்செல்வம்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத் தலைமையிடம் காஞ்சிபுரத்தில் இருக்கும் அரசு தலைமை மருத்துவமனையில் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதை அரசு அறியுமா?*

(ஆ) ஆம் எனில், மருத்துவர்கள், செவிலியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஒவ்வொரு ஆண்டும் உள் நோயாளிகள், வெளி நோயாளிகளினுடைய எண்ணிக்கை சற்றே அதிகரித்துக்கொண்டு இருக்கிறது. அவசியமேற்படின் கூடுதல் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பணியாளர்கள் மாற்றுப்பணிகள் மூலம் நியமிக்கப்படுவார்கள்.

**திரு. காஞ்சி பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான உத்திரமேரூர், வாலாஜாபேட் பகுதிகளிலும் காஞ்சிபுரத்திற்கு அருகே இருக்கின்ற கிராமப் பகுதிகளிலேயும் இருக்கின்ற மக்கள், இன்னும் பல்வேறு பகுதிகளில் இருக்கின்ற மக்களில் நிறைய பேர் புறநோயாளிகளாகவும், உள்நோயாளிகளாகவும் வருகை தருகின்ற காரணத்தால்—நோயாளிகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால்—படுக்கை வசதிகளை இன்னும் அதிகம் ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் சென்னையிலிருந்து, காஞ்சிபுரம் தலைமையிடத்துக்குப் பக்கத்திலே லாரிகள், பஸ்கள் நிறைய செல்கின்றன; அந்தப் பகுதியிலே ஏதாவது விபத்துக்கள் நடைபெற்றால், அவர்களை காஞ்சிபுரத்திலே இருக்கின்ற அரசு மருத்துவமனைக்குத்தான் கொண்டுவருகிறார்கள். சமீபத்திலேகூட தீபாவளிக்கு முன்னாலே, காஞ்சிபுரத்திற்கு அருகே, தனியார் வெடி தயாரித்துக்கொண்டிருந்தபோது, வெடி விபத்து ஏற்பட்டது. அவர்களிலே ஒருவர் காஞ்சிபுரத்திற்கு வந்து சிகிச்சை பெற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அவர்களில் ஒரு நோயாளியை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பரிந்துரை அடிப்படையிலே அங்கிருந்து சென்னையில் உள்ள கே.எம்.சி. மருத்துவமனைக்கு கொண்டு வந்ததற்கு பின்னர்தான் (மணி அடிக்கப்பெற்றது) அவருக்கு பிளாஸ்டிக் சர்ஜரி செய்து, இன்றைக்கு உயிர் பெற்று இருக்கிறார். ஒருவனுக்கு தலையிலே அடிபட்டாலும்கூட ஸ்கேன் எடுக்கின்ற வசதி சென்னையிலேதான் இருக்கிறது. அதைப்போல, தலைநகரமாக இருக்கின்ற காஞ்சிபுரத்திலே உள்ள அந்த மருத்துவமனையிலே, அப்பேர்பட்ட வசதிளை செய்வதற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் அரசு முன்வருமா என அறிய விரும்புகின்றேன்.

*1995 நவம்பர் 3]*

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது காஞ்சிபுரம் தலைமையிட மருத்துவமனையிலே 366 படுக்கைகள் இருக்கின்றன. தேவை என்றால், இன்னும் அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். அதைப்பற்றி ஆய்வு செய்து, அவசியம் ஏற்படின் நடவடிக்கை எடுக்கலாம். அதேநேரத்திலே தேவையான, ஒரு மாவட்டத் தலைநகரத்திலே இருக்க வேண்டிய வசதிகள், அந்த மருத்துவமனைக்கு செய்து கொடுக்கப்பட்டு இருக்கின்றன. இருந்தாலும்கூட, ஸ்கேன் போன்ற வசதிகளும் செய்யப்பட வேண்டும் என்பது அரசாங்கத்தினுடைய எண்ணமாக இருக்கிறது. எல்லா மாவட்டத் தலைநகரங்களிலேயும் ஸ்கேன் வரவேண்டும் என்று கருதினாலும், நிதிநிலையின் காரணமாக ஒரே நேரத்தில் அதைச் செய்ய இயலாது; படிப்படியாக ஒவ்வொரு மாவட்டமாக எதிர்காலத்தில் அதைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், தற்போது ஒரு மாவட்டத் தலைநகரத்திற்கு அவசியமான ஸ்டாண்டர்டு என்னவோ, அந்த நார்ம்ஸ்படி அந்த மருத்துவமனையிலே அனைத்தையும் அங்கே செய்து கொடுத்து இருக்கிறோம். எனவே கூடுதலாக என்ன தேவை என்பதை ஆய்வு செய்து, நிதிநிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 6, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

**6—**

**பெரியநாயக்கன்பாளையம் ஆரம்பச் சுகாதார நிலையத்தை விரிவுபடுத்துதல்**

*39969—திரு. கே. செல்வராஜ்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா –

கோயம்புத்தூர், பெரியநாயக்கன்பாளையம் ஆரம்பச் சுகாதார நிலைய மருத்துவமனையை விரிவுபடுத்தி படுக்கை வசதியை அதிகப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஏதுமில்லை.

*1995 நவம்பர் 3*]

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது காஞ்சிபுரம் தலைமையிட மருத்துவமனையிலே 366 படுக்கைகள் இருக்கின்றன. தேவை என்றால், இன்னும் அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். அதைப்பற்றி ஆய்வு செய்து, அவசியம் ஏற்படின் நடவடிக்கை எடுக்கலாம். அதேநேரத்திலே தேவையான, ஒரு மாவட்டத் தலைநகரத்திலே இருக்க வேண்டிய வசதிகள், அந்த மருத்துவமனைக்கு செய்து கொடுக்கப்பட்டு இருக்கின்றன. இருந்தாலும்கூட, ஸ்கேன் போன்ற வசதிகளும் செய்யப்பட வேண்டும் என்பது அரசாங்கத்தினுடைய எண்ணமாக இருக்கிறது. எல்லா மாவட்டத் தலைநகரங்களிலேயும் ஸ்கேன் வரவேண்டும் என்று கருதினாலும், நிதிநிலையின் காரணமாக ஒரே நேரத்தில் அதைச் செய்ய இயலாது; படிப்படியாக ஒவ்வொரு மாவட்டமாக எதிர்காலத்தில் அதைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், தற்போது ஒரு மாவட்டத் தலைநகரத்திற்கு அவசியமான ஸ்டாண்டர்டு என்னவோ, அந்த நார்ம்ஸ்படி அந்த மருத்துவமனையிலே அனைத்தையும் அங்கே செய்து கொடுத்து இருக்கிறோம். எனவே கூடுதலாக என்ன தேவை என்பதை ஆய்வு செய்து, நிதிநிலைமைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 6, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

**6—**

**பெரியநாயக்கன்பாளையம் ஆரம்பச் சுகாதார நிலையத்தை விரிவுபடுத்துதல்**

**39969*—திரு. கே. செல்வராஜ்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா –

கோயம்புத்தூர், பெரியநாயக்கன்பாளையம் ஆரம்பச் சுகாதார நிலைய மருத்துவமனையை விரிவுபடுத்தி படுக்கை வசதியை அதிகப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஏதுமில்லை.

[1995 நவம்பர் 3

**திரு. கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியநாயக்கன்பாளையம் ஆரம்பச் சுகாதார நிலைய மருத்துவமனையைச் சுற்றி சுமார் 2 லட்சம் மக்கள் தொகை இருக்கிறது. சுற்றுப்புறங்களிலுள்ள 150-க்கும் அதிகமான கிராமங்களில் இருந்து பொதுமக்கள் அங்கே வந்து சிகிச்சை பெறவேண்டிய நிலை உள்ளது. அங்கே படுக்கை வசதிகள் மிகவும் குறைவாக அதாவது, 10, 15 படுக்கைகளுக்கு மேல் இல்லாத நிலை இருக்கிறது. அதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து, அடுத்த நிதியாண்டிலாவது, நிதி ஒதுக்கி அந்த மருத்துவமனையிலே அதிக படுக்கை வசதிகள் செய்து கொடுப்பதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பச் சுகாதார நிலையங்கள் என்பது பொதுவாக இந்த அவுட் பேஷன்ட்ஸ் புற நோயாளிகளை மட்டும் பார்க்கிற ஒரு நிலையமாகத் தான் நடத்தப்படுகிறது. சில இடங்களிலே 6 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகள்தான் அமைக்கப்பட்டு இருக்கும். இது கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலிருந்து 18 கி.மீ. மட்டுமே தூரம் உள்ள ஒரு இடம். எனவே, அங்கே அதிகமான படுக்கை வசதிகள் தேவையா என்பது ஐயமான நிலையாக இருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று அதைப் பற்றி பரிசீலிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப் போல கோவையிலிருந்து 20 கி.மீ. தூரத்தில் இருந்தாலும்கூட அங்கு சுற்றுப்புற கிராமங்களிலிருந்து 1000க்கும் அதிகமாக மக்கள் மருத்துவமனைக்கு வருகிறவர்களாக உள்ளார்கள். அந்த மருத்துவமனையில் பிரசவ சிகிச்சை பார்ப்பதற்கு இரண்டு டாக்டர்கள் உள்ளார்கள். படுக்கை வசதி இல்லாத காரணத்தால் அவர்களை கோவைக்கு அனுப்பிவிடுகிறார்கள். இந்தக் குறையைப் போக்குவதற்கு அங்கு உடனடியாக படுக்கை வசதியை அதிகப்படுத்திக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*1995 நவம்பர் 3]*

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத் தான் ஏற்கெனவே சொன்னேன். அதைப் பற்றி ஆய்வு செய்யும்படி அரசாங்கம் அதிகாரிகளுக்கு உரிய ஆணையிடும். நார்மல் டெலிவரி என்று சொன்னால் ஆரம்பச் சுகாதார நிலையத்திலேயே பார்த்துவிடுவார்கள். ஆனால் மற்றபடி அவர்களுக்கு அறுவைச் சிகிச்சை தேவை என்பது போன்ற நிலை காம்பிளிகேட்டட் டெலிவரி என்று சொல்லும்போது தான் பக்கத்தில் இருக்கும் பெரிய மருத்துவமனைகளுக்கு அனுப்புகிறார்கள், அதுதான் அந்த மக்களுக்குப் பாதுகாப்பாக கூட இருக்கும். எல்லா வசதிகளையும் எல்லா கிராமங்களிலும் நாம் கொண்டு போய் சேர்த்து விட முடியாது. அடிப்படை வசதிகளை நாம் அங்கே செய்கிறோம். கூடுதலான வசதிகள், அதிகப்படியான வசதிகள் தேவை என்று சொன்னால் பக்கத்திலே இருக்கும் மருத்துவமனைகளைப் பயன்படுத்துவதுதான் அங்கே இருக்கிற பொதுமக்களுக்கு பாதுகாப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். எனவே அதை ஆய்வு செய்யும்படி உத்தரவிட்டு என்ன அடிப்படைவசதி தேவையோ அந்தத் தேவைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி எல். சுலோசனா.

**செல்வி எல். சுலோசனா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியநாயக்கன்பாளையத்தில் 2 இலட்சம் பேருக்கு மேல் இருப்பதால்—மேலும் தொழிலாளர்கள் சுற்றுப்புற கிராமங்களில் விவசாயிகள் அதிக அளவில் உள்ளனர்—விபத்துக்கள் ஏற்படும்போது உடனடி சிகிச்சைக்காக இரத்த சேமிப்பு வங்கியுடன் கூடிய அவசர சிகிச்சைப் பிரிவை அரசு ஏற்படுத்த முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசர சிகிச்சைப் பிரிவு என்பதை, 10 படுக்கைகளோடு அதற்குண்டான மருத்துவர்களோடு தனியாக மருத்துவமனைகளிலே ஹெட்குவார்ட்டர்ஸ் ஹாஸ்பிட்டலிலோ, தாலுகா ஹாஸ்பிட்டலிலோ மட்டும்தான் நாம் இப்போது அமைத்துக் கொண்டிருக்கிறோம். அதிலே ஆரம்பச் சுகாதார நிலையத்தை ஆய்வுக்கு நாம் கொண்டு போகவில்லை. பக்கத்தில் இருக்கும் தாலுகா மருத்துவமனையிலோ, தலைமை மருத்துவமனையிலோ அந்த வசதிகள் கண்டிப்பாக இருக்கும். அதைப் பயன்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

[1995 நவம்பர் 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.பி. ராஜு.

**திரு. கே.பி. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையின் சுற்று வட்டாரத்திலிருந்து 18 கி.மீ., 20 கி.மீட்டரில் இருந்துதான் கோயம்புத்தூர் ஆஸ்பத்திரிக்கு வரவேண்டியிருக்கிறது. பெரியநாயக்கன்பாளையம், பேரூர், குனியமுத்தூர், குறிச்சி போன்ற இடங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் செயல்பட்டாலும் அன்றாடம் மக்கள் கோயம்புத்தூரை நாடித்தான் மருத்துவமனைக்கு வருகிறார்கள். புறநகர்ப் பகுதியான குனியமுத்தூர், பேரூர், குறிச்சி போன்ற பகுதிகளில் மருத்துவமனை விஸ்தரிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. தாலுகா மருத்துவமனைகள் இருக்கின்றன. கோவையிலே பெரிய மருத்துவமனை இருக்கிறது. எனவே அதை எங்கே விஸ்தரிப்பது என்று எனக்குப் புரியவில்லை. அந்த மருத்துவமனையில் ஏற்கெனவே அனைத்து வசதிகளும் இருக்கின்றன. அது முழுமையாகப் பயன்பட்டுக் கொண்டு இருக்கிறது. கிராமப்புறங்களில் இருக்கிற ஆரம்பச் சுகாதார நிலையம், அதே போல் தாலுகா மருத்துவமனைகளைப் பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். அதற்கு மேலே சூப்பர் ஸ்பெஷாலிட்டி அந்த வசதிகளுக்காகத்தான் கல்லூரி மருத்துவமனைக்கு அவர்கள் வருகிறார்கள்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 7, திருமதி அ.தி. சரஸ்வதி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

**7—**

### காட்டுப்பன்றிகள் பயிர்களை அழிப்பதைப் பாதுகாத்தல்

**25274*—**திருமதி அ.தி. சரஸ்வதி:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுப்பன்றிகள் பயிர்களை அழிப்பதைப் பாதுகாக்க சூரிய சக்தி மின் கம்பி வேலி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[*1995 நவம்பர் 3*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.பி. ராஜு.

**திரு. கே.பி. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையின் சுற்று வட்டாரத்திலிருந்து 18 கி.மீ., 20 கி.மீட்டரில் இருந்துதான் கோயம்புத்தூர் ஆஸ்பத்திரிக்கு வரவேண்டியிருக்கிறது. பெரியநாயக்கன்பாளையம், பேரூர், குனியமுத்தூர், குறிச்சி போன்ற இடங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் செயல்பட்டாலும் அன்றாடம் மக்கள் கோயம்புத்தூரை நாடித்தான் மருத்துவமனைக்கு வருகிறார்கள். புறநகர்ப் பகுதியான குனியமுத்தூர், பேரூர், குறிச்சி போன்ற பகுதிகளில் மருத்துவமனை விஸ்தரிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. தாலுகா மருத்துவமனைகள் இருக்கின்றன. கோவையிலே பெரிய மருத்துவமனை இருக்கிறது. எனவே அதை எங்கே விஸ்தரிப்பது என்று எனக்குப் புரியவில்லை. அந்த மருத்துவமனையில் ஏற்கெனவே அனைத்து வசதிகளும் இருக்கின்றன. அது முழுமையாகப் பயன்பட்டுக் கொண்டு இருக்கிறது. கிராமப்புறங்களில் இருக்கிற ஆரம்பச் சுகாதார நிலையம், அதே போல் தாலுகா மருத்துவமனைகளைப் பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். அதற்கு மேலே சூப்பர் ஸ்பெஷாலிட்டி அந்த வசதிகளுக்காகத்தான் கல்லூரி மருத்துவமனைக்கு அவர்கள் வருகிறார்கள்.

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 7, திருமதி அ.தி. சரஸ்வதி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

**7—**

**காட்டுப்பன்றிகள் பயிர்களை அழிப்பதைப் பாதுகாத்தல்**

**25274*—**திருமதி அ.தி. சரஸ்வதி:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுப்பன்றிகள் பயிர்களை அழிப்பதைப் பாதுகாக்க சூரிய சக்தி மின் கம்பி வேலி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*1995 நவம்பர் 3]*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இப்பொருள் பற்றிய கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

**திருமதி அ.தி. சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் நெஞ்சத்தில் நீக்கமற நிறைந்து நிற்கும், எங்களை எல்லாம் வாழ வைத்துக்கொண்டிருக்கும் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் தாளவாடி, கடம்பூர் மலைப் பகுதிகளில் வாழும் மலைவாழ் மக்கள் விவசாயம் செய்யும்போது, காட்டுப் பன்றிகளால் பயிர்கள் அழிந்து, பாதிக்கப்படுகிறார்கள். அங்கு ராகி, கடலை மற்றும் கிழங்கு வகைகள் பயிரிடப்படுகின்றன. அங்கே விவசாயம் செய்யும் மலைவாழ் மக்களின் பயிர்களை எல்லாம் காட்டுப் பன்றிகள் அழித்துவிடுகின்றன. கர்நாடக மாநிலத்தில் இதைத் தடுக்க சூரிய சக்தி மின் கம்பி நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. அதைப்போல நமது அரசும், போக்குவரத்தைப் பொலிவுடனும், வனத் துறையை வளமுடனும் ஆக்கிக்கொண்டிருக்கும் அமைச்சரவர்களும் இங்கே அப்படிச் செய்ய ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பன்றிகளால் பயிர்கள் சேதப்படுத்தப்படுகின்றன என்று கருத்துருவோ அல்லது பொது மக்களிடமிருந்து குறைகளோ எங்களுக்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் அந்தப் பகுதிகளுக்குச் சென்று பார்க்கிற காரணத்தாலே, பொது மக்கள் அவர்களிடம் சுட்டிக்காட்டியிருக்கலாம். ஆக, அது போன்று சேதப்படுத்துகின்றபோது, கர்நாடக மாநிலத்தில் சோலார் எனர்ஜி என்று சொல்லப்படுகிற சூரிய வெப்பத்தால் மின்சாரக் கம்பிகள் பயிர் செய்யும் பகுதிகளில் போடும் நிலை இருக்கிறதா என்பதை அரசு ஆய்வு செய்யும். அப்படிப்பட்டச் சூழ்நிலை வருகிற போது, பன்றிகளுக்காக வைக்கப்பட்டுள்ள அந்தக் கம்பிகளை அந்த வழியாக பொதுமக்கள் யாராவது செல்லுகிறபோது தெரியாமல் மிதிக்கின்றபோது விபத்துகள் ஏற்படுகிற சூழ்நிலை இருக்கிற காரணத்தாலே அது தடை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் பன்றிகளை அகற்றுவதற்காக வனத் துறையைப் பொறுத்தவரையில் அரசு சில அறிவுரைகளை வழங்கி இருக்கிறது. அங்கே தகரங்களை வைத்துக்கொண்டு சத்தம் இடுகிறபோது,

பன்றிகளை துரத்திவிடலாம். அல்லது சிறிய பட்டாசுகளை வெடித்து, காயமில்லாமல் பன்றிகளை அப்புறப்படுத்தலாம் என்று மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

**திருமதி அ.தி. சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் அவர்கள் விரிவாக, விளக்கமாக இங்கே சொன்னார்கள். அதற்கு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். மேலும் பேட்டரி ஷெல்லால் வரும் கரண்டில் பொதுமக்கள் பாதிக்கப்பட மாட்டார்கள். அதன்மூலம் எலக்ட்ரிக் ஷாக் மட்டும்தான் கொடுக்கமுடியும். அதனால் பன்றிகளும் பயந்துகொண்டு போகும். எனவே பன்றிகள் இறக்க வாய்ப்பு இல்லை. அதற்குக் கூட மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்யலாம். அந்த நடைமுறையைப் பின்பற்றக் கூட ஏற்பாடு செய்யலாம். மேலும் அந்தப் பகுதி மலைவாழ் மக்கள் விவசாயம் செய்யும்போது, அவர்கள் பயிர்கள் பன்றிகளால் பாதிக்கப்படும்போது, விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுவதால், நஷ்ட ஈட்டுத் தொகையை—நமது அரசு—மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் அளிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பன்றிகளால் அல்ல; யானைகள் பயிர்களைச் சேதம் செய்கின்றபோது, நஷ்ட ஈட்டுத் தொகையை அரசு வழங்குவதற்கு நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறோம். பல பகுதிகளில் அந்த நஷ்ட ஈட்டுத் தொகையை நாம் வழங்கி இருக்கிறோம். பன்றிகளால் பயிர்கள் சேதமாகிறது என்ற குறைபாடுகள் இதுவரை எங்களுக்குச் சுட்டிக்காட்டப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாட்டரிகளைக் கொண்டு மின்சாரத்தை கம்பிகளில் செலுத்துவதன்மூலம் பன்றிகளைத் தடுக்க முடியும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. தருமலிங்கம்.

**திரு. கி. தருமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலை அடிவாரத்தில் இருக்கும் உழவர் பெருமக்களுக்கு காட்டுப் பன்றிகளால் அதிகம் சேதாரம் விளைவது என்பது உண்மைதான். ஆனால் அந்தப் பன்றி இறைச்சி உண்பதற்கு நன்றாக இருக்கிறது. அதேநேரத்தில் மின்சாரத்தால் கொல்லப்படும் பன்றியின் இறைச்சி கெட்டுவிடுகிறது. எனவே மின்சாரத்தைப் பயன்படுத்தி நாம்

*1995 நவம்பர் 3]*

கொல்லாவிட்டாலும், அந்தப் பன்றிகளை வன இலாக்கா மூலம் வலை போட்டு—அந்தப் பகுதிக்கு உணவுக்காக வரும்போது வலை போட்டு அதை ஓட வைத்து, பிடித்து, மனித இனத்திற்கு உண்ணும் உணவாக கொடுத்தால் நன்றாக இருக்கும். அதைப் பெரும்பாலானோர் சாப்பிட்டிருக்க மாட்டார்கள். நாங்கள் அதை நன்றாகச் சாப்பிடுகிறோம். நல்ல உணவு அது. காட்டுப் பன்றி நல்ல உணவு. அதனாலே மாண்புமிகு அமைச்சரவர்கள் வன இலாக்கா மூலம் பன்றிகளைப் பிடித்து, உணவாகக் கொடுக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். *(சிரிப்பு)*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதற்காக வலை போடுகிறார் என்பது எனக்குத் தெரியவில்லை. வலை போட்டுப் பார்க்கிறார். ஆனால் அரசு அந்த வலைக்குக் கிடைக்காது. *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *8*, டாக்டர் எஸ்.எஸ்.ஆர். இராமதாஸ், இருக்கையில் இல்லை.

வினா எண் *9*, திரு. தா. செழியன், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

முற்பகல் *10.35*

9—

**வெங்கலம்-தொண்டமாந்துறை பாலம் கட்டுதல்**

**19795*—**திரு. தா. செழியன்:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பெரம்பலூர் தொகுதி, வெங்கலம்-தொண்டமாந்துறை பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* மற்றும் *(ஆ)*: தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

கொல்லாவிட்டாலும், அந்தப் பன்றிகளை வன இலாக்கா மூலம் வலை போட்டு—அந்தப் பகுதிக்கு உணவுக்காக வரும்போது வலை போட்டு அதை ஓட வைத்து, பிடித்து, மனித இனத்திற்கு உண்ணும் உணவாக கொடுத்தால் நன்றாக இருக்கும். அதைப் பெரும்பாலானோர் சாப்பிட்டிருக்க மாட்டார்கள். நாங்கள் அதை நன்றாகச் சாப்பிடுகிறோம். நல்ல உணவு அது. காட்டுப் பன்றி நல்ல உணவு. அதனாலே மாண்புமிகு அமைச்சரவர்கள் வன இலாக்கா மூலம் பன்றிகளைப் பிடித்து, உணவாகக் கொடுக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். *(சிரிப்பு)*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதற்காக வலை போடுகிறார் என்பது எனக்குத் தெரியவில்லை. வலை போட்டுப் பார்க்கிறார், ஆனால் அரசு அந்த வலைக்குக் கிடைக்காது. *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 8, டாக்டர் எஸ்.எஸ்.ஆர். இராமதாஸ், இருக்கையில் இல்லை.

வினா எண் 9, திரு. தா. செழியன், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

*முற்பகல் 10.35*

9—

**வெங்கலம்-தொண்டமாந்துறை பாலம் கட்டுதல்**

*19795—**திரு. தா. செழியன்:***

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பெரம்பலூர் தொகுதி, வெங்கலம்-தொண்டமாந்துறை பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* மற்றும் *(ஆ)*: தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[1995 நவம்பர் 3

**திரு. தா. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து, என்னுடைய தொகுதியின் தலைநகரமான பெரம்பலூரைத் தலைமையிடமாகக் கொண்ட திருவள்ளுவர் மாவட்டத்தைத் தந்து, அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நெடிய நாள் கோரிக்கையை இன்றைக்குத் தீர்த்து வைத்திருக்கின்ற—சோதனைகளை எல்லாம் சாதனைகளாக்கி, அந்தச் சாதனைகளை எல்லாம் சரித்திரமாக்கிக் கொண்டிருக்கிற—தமிழகத்தினுடைய ஒப்புயர்வற்ற தலைவி, தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் சார்பாகவும, என் தொகுதி மக்களின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியினை அவர்களுடைய பொற்பாதங்களிலே சமர்ப்பிக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் வருகின்ற இந்த வெங்கலம்—தொண்டமாந்துறை பாலம் ஏறத்தாழ நான்கு அடி தரைப்பாலமாக இருக்கிறது. மழைக் காலங்களில் தொடர்ந்து 10 அடி, 12 அடி வரை வெள்ள நீர் வரத்து அதிகமாகி உயிர்ச்சேதம் ஏற்படுகின்ற நிலை கூட இருந்து வருகின்றது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பகுதியின் மீது தனிக்கவனம் செலுத்தி இந்த முக்கியத்துவம் வாய்ந்த பாலத்தினைக் கட்டித் தருவதற்கு முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற பாலம் ஒரு மூழ்கு பாலமாக (சப் மெர்சிபிள் பிரிட்ஜ்) இருக்கிறது. அதை உயர்மட்டப் பாலமாகக் கட்டுவதற்கு ஏறத்தாழ ரூ.25 லட்சம் தேவைப்படுகிறது. மழைக்காலங்களில் சில நேரங்களில் போக்குவரத்து அங்கே பாதிக்கப்படுகிறது என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதுதான். இது சம்பந்தமாக பகுதி-2 திட்டத்தின் கீழாவது, அல்லது சிறப்பு நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையிலாவது இந்தப் பாலத்தின் கட்டுமானத்தை நிர்மானிக்கலாம் என்பதை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. எதிர்காலத்திலே நிதியாதாரத்திற்கேற்ப, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. தா. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் இந்தப் பாலத்திற்கு சிறப்பு நிதி மூலமாகவோ அல்லது பகுதி-2 திட்டத்தின் மூலமாகவோ நிதி ஒதுக்கீடு செய்வதாகக் கூறியுள்ளார்கள். அதற்காக என சார்பாகவும் தொகுதி மக்களின்

*1995 நவம்பர் 3]*

சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொகுதிக்கு ஒரு பாலம் என்கின்ற அடிப்படையில் தங்கத் தலைவி அவர்கள், கருணையுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அவர்கள், இன்றையதினம் உத்தரவிட்டு, தொகுதிக்கு ஒரு பாலம் வேலை நடைபெற்று வருகிறது. மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக உள்ள இந்தக் காலக் கட்டத்தில், அந்தப் பகுதியில் மழை வரத்து அதிகமாக இருக்கிற காரணத்தால், இரண்டு பேரூராட்சிகள் மற்றும் ஐந்து ஊராட்சிகள் ஆகியவற்றில் உள்ள சுமார் 40,000 மக்கள் பாதிப்படைகிறார்கள். அதனால் மழைக் காலங்களில் அந்தப் பகுதி மக்கள் எந்தப் பணியிலும் ஈடுபட முடியாமல் முடக்கப்பட்ட நிலையில் இருக்கிறார்கள். மழைக்காலத்தில் அந்தப் பகுதி ஒரு தீவுத் திடலாகக் காட்சி அளிக்கிறது. எனவே, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் இதை மறு ஆய்வு செய்து, அந்தப் பணியை விரைவிலே தொடங்கி அந்தப் பாலத்தைக் கட்டித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தமட்டில் இது போன்ற பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்க வேண்டும் என்பதிலே ஆழ்ந்த கவனம் கொண்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப் பின்னாலேதான், நெடுஞ்சாலைத் துறையின் சார்பிலே பல்வேறு புதிய திட்டங்களை உருவாக்குவதற்கும், புதிய சாலைகளை உருவாக்குவதற்கும், புதிய பாலங்களைக் கட்டுவதற்கும் பல்வேறு நிதி ஆதாரங்களைத் தந்து, அது சம்பந்தமாக பல்வேறு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, ஒரு தொகுதிக்கு ஒரு பாலம் என்ற திட்டமும் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே வந்ததுதான். எல்லா இடங்களுக்கும் பாலம் கட்ட வேண்டுமென்று கோரிக்கை வருகிறபோது, அதற்கு ஏறத்தாழ ரூ.250 கோடிக்கு மேலே உடனடியாகத் தேவைப்படுகிறது. நம்மிடத்திலே இருக்கிற இதுபோன்ற கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து பார்க்கிறபோது, பழுதடைந்த பாலங்களைக் கட்டுவதற்கும், சீரமைப்பதற்கும் ஏறத்தாழ 250 கோடி ரூபாய்க்கு மேல் தேவைப்படுகிறது. பாலங்கள் கட்டுவற்கு என்று நாம் ஒதுக்குகிற தொகை ஆண்டுதோறும் ஓரளவுக்குத்தான் முடிகிறது. இது தவிர, சாலைகளைப் பராமரிப்பது, சாலைகளை அகலப்படுத்துவது, ஏற்கெனவே பழுதடைந்திருக்கிற சாலைகளைச் சீரமைப்பது, இப்படிப் பல்வேறு பணிகள்—ஏறத்தாழ 65,000 கிலோ மீட்டருக்கு மேல் இருக்கிற இந்தச் சாலைகளில் உள்ள பணிகளை நாம் செய்வதற்கு பல

கோடிக்கணக்கான ரூபாய் நமக்குத் தேவைப்படுகிறது. ஆகவே, அந்த அடிப்படையில்தான் முன்னுரிமை கொடுத்து—எந்தெந்த பகுதிகளிலே போக்குவரத்து அதிகமாக இருக்கிறதோ அந்த அடிப்படையிலே நாம் முன்னுரிமை கொடுத்து-பாலங்களையும் சாலைகளையும் இன்றைக்குச் சீரமைத்துக் கொண்டிருக்கிறோம். இந்தப் பகுதியினுடைய முக்கியத்துவத்தை உணர்ந்துதான் நான் ஏற்கெனவே இதுபோன்று தெரிவித்தேன். ஆகவே, காலப்போக்கில் இது பரிசீலிக்கப்பட்டு, உடனடியாக அதிகாரிகளோடு கலந்து பேசி, விரைவிலே இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 10, திரு. ஆ.கு. சீனிவாசன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

10—

**பெரணமல்லூர் பேரூராட்சியில் வீடுகள் கட்டுதல்**

*38097—**திரு. ஆ.கு. சீனிவாசன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழக்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் பேரூராட்சியில் வீட்டு வசதி வாரியம் அல்லது கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் மூலம் வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரணமல்லூர் பேரூராட்சியில் வீட்டுவசதி வாரியம் அல்லது கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலம் வீடுகள் கட்டித்தர திட்டம் எதுவும் அரசிடம் தற்சமயம் இல்லை. கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம் வீடுகள் கட்ட கடன் மட்டுமே வழங்கப்படுகின்றது.

**திரு. ஆ.கு. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரணமல்லூர் தொகுதியிலோ அல்லது பெரணமல்லூர் பேரூராட்சியிலோ இதுவரையில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகவோ,

கோடிக்கணக்கான ரூபாய் நமக்குத் தேவைப்படுகிறது. ஆகவே, அந்த அடிப்படையில்தான் முன்னுரிமை கொடுத்து—எந்தெந்த பகுதிகளிலே போக்குவரத்து அதிகமாக இருக்கிறதோ அந்த அடிப்படையிலே நாம் முன்னுரிமை கொடுத்து-பாலங்களையும் சாலைகளையும் இன்றைக்குச் சீரமைத்துக் கொண்டிருக்கிறோம். இந்தப் பகுதியினுடைய முக்கியத்துவத்தை உணர்ந்துதான் நான் ஏற்கெனவே இதுபோன்று தெரிவித்தேன். ஆகவே, காலப்போக்கில் இது பரிசீலிக்கப்பட்டு, உடனடியாக அதிகாரிகளோடு கலந்து பேசி, விரைவிலே இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 10, திரு. ஆ.கு. சீனிவாசன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

10—

### பெரணமல்லூர் பேரூராட்சியில் வீடுகள் கட்டுதல்

*38097—**திரு. ஆ.கு. சீனிவாசன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழக்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் பேரூராட்சியில் வீட்டு வசதி வாரியம் அல்லது கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் மூலம் வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரணமல்லூர் பேரூராட்சியில் வீட்டுவசதி வாரியம் அல்லது கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலம் வீடுகள் கட்டித்தர திட்டம் எதுவும் அரசிடம் தற்சமயம் இல்லை. கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம் வீடுகள் கட்ட கடன் மட்டுமே வழங்கப்படுகின்றது.

**திரு. ஆ.கு. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரணமல்லூர் தொகுதியிலோ அல்லது பெரணமல்லூர் பேரூராட்சியிலோ இதுவரையில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகவோ,

*1995 நவம்பர் 3]*

கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் மூலமாகவோ இன்னும் வீடுகள் கட்டப்படவில்லை. அந்தப் பகுதியில் அரசு அலுவலகங்களும் மற்ற நிறுவனங்களும் அதிகமாக இயங்குகின்றன. அவற்றில் வேலை செய்கிற அரசு அலுவலர்கள் 25 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள நகராட்சிகளாகிய வந்தவாசி, போளூர், ஆரணி, செஞ்சி போன்ற இடங்களிலிருந்து வருகிறார்கள். ஆகவே, காலையில் வருவதும் மாலையில் போவதுமாக செயல்முறைகள் இருக்கின்றன. அதேசமயத்தில் வளர்ச்சிப் பணிகள் சரிவர நடைபெறுவதில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வீட்டு வசதி பற்றிக் கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. ஆ.கு. சீனிவாசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று இரண்டு ஆண்டு காலமாக கோரிக்கைகள் பொது மக்கள் சார்பில் எடுத்துக்கூறியும் அரசின் பரிசீலனையில் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரைத்து இருக்கிறார்கள்.

“ அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை ”

என்னும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க, பூமா தேவி எதிரிகளையும் மற்றவர்களையும் தாங்கிக் கொண்டு பொறுமையாக இருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள். நீங்கள் சொன்ன குறளுக்கு எல்லோருக்கும் பொருள் தெரியும்.

**திரு. ஆ.கு. சீனிவாசன்:** தாயுள்ளம் கொண்ட நம்முடைய இதய தெய்வம், அம்மா அவர்களின் நல்லாட்சியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டித் தருவதற்கு—அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை என்றாலும்,—மேலும் பரிசீலனை செய்து வீடுகள் கட்டித் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சே. ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் வீடுகள் கட்டித் தருவதற்காக 500 சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் தேர்வு செய்யப்பட்டதில் பெரணமல்லூர் அதிலே இடம் பெறவில்லை. மேலும் அந்த இடங்களில் உள்ள பொது மக்களின்

தேவையை அறிந்து, அதற்குப்பிறகுதான் டிமாண்ட் ரெஜிஸ்டர் செய்யப்பட்டு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பெரணமல்லூர் பகுதியில் கேட்கக்கூடிய பேரூராட்சிப் பகுதியில் எவ்வளவு பேர்கள் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டிக் கொள்ள விரும்புகிறார்கள் என்ற தேவையினை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு தெரிவிப்பார்களானால், அந்தத் தேவையின் அடிப்படையில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டித் தருகிற திட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அரசில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போல கிராமிய கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், வந்தவாசி வீட்டு வசதிச் சங்கத்தினுடைய எல்லையிலேதான் பெரணமல்லூர் பேரூராட்சி இருக்கிறது. எனவே, அந்தப் பேரூராட்சி பகுதியில் கிராமிய கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் மூலமாக வீடுகள் கட்டிக் கொள்ள கடன் வேண்டுமென்று கேட்கிறவர்களுக்கு கடன் வழங்குவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்படும்.

**திரு. ஆ.கு. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டு காலமாக சுமார் 100 மனுக்கள் பெறப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கொடுத்து, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் அந்தப் பகுதிக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டித்தர வேண்டுமென்று கேட்டு, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் அங்கீகாரம் செய்யப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டு, அரசின் பரிசீலனையில் நிலுவையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நினைவூட்டிக் கொண்டு (மணியடிக்கப்பெற்றது) மேலும் வீடு கட்டித்தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு திரு. சே. ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் கட்டித் தரப்படுகின்ற வீடுகளைப் பெற்றுக் கொள்ள 100 நபர்கள் அங்கே முன்வருவார்களேயானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, நிச்சயமாக வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகளைக் கட்டித்தர உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

*1995 நவம்பர் 3]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 11, திரு. வெ. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

இந்தக் கேள்வியில் ஒரு சிறு வார்த்தை விடப்பட்டு இருக்கிறது. 'வசிப்பதற்கு தகுதியற்ற குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளை' என்பதற்குப் பிறகு 'மாற்றி' என்று ஒரு வார்த்தை விடப்பட்டு இருக்கிறது. அதைச் சேர்த்துக் கொள்ளவும். 'குடியிருப்புகளை மாற்றிப் புதிதாக கட்டித் தரப்படுமா?' என்று இருக்கவேண்டும்.

11—

குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் கட்டுதல்

*80162—திரு. வெ. பாலசுப்பிரமணியன்:

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வசிப்பதற்குத் தகுதியற்ற குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளை மாற்றி புதிதாகக் கட்டித் தரப்படுமா?

(ஆ) பழுதடைந்த குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் விரைவில் பழுது பார்க்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): மிகவும் பழுதடைந்த, மக்கள் வசிப்பதற்கு பாதுகாப்பற்ற குடிசை மாற்று வாரிய வீடுகளை மட்டும், பயனாளிகள் தவணை முறை திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தவுடன், புதிதாக கட்டித் தரப்படும். அதைப்போலவே, பயனாளிகளிடமிருந்து தவணைமுறை திட்டத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன், குடிசை மாற்று வாரிய வீடுகளை பழுதுபார்க்கும் பணியும் செய்யப்படும்.

**திரு. வெ. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையின் மூலமாக குடிசை மாற்று வாரியக் கட்டிடங்களை பழுது பார்ப்பது சம்பந்தமாக வெளியிட்டுள்ள அறிவிப்பிற்கு நன்றியைத் தெரிவித்துக்

*1995 நவம்பர் 3]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 11, திரு. வெ. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

இந்தக் கேள்வியில் ஒரு சிறு வார்த்தை விடப்பட்டு இருக்கிறது. 'வசிப்பதற்கு தகுதியற்ற குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளை' என்பதற்குப் பிறகு 'மாற்றி' என்று ஒரு வார்த்தை விடப்பட்டு இருக்கிறது. அதைச் சேர்த்துக் கொள்ளவும். 'குடியிருப்புகளை மாற்றிப் புதிதாக கட்டித் தரப்படுமா?' என்று இருக்கவேண்டும்.

11—

குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் கட்டுதல்

*80162—திரு. வெ. பாலசுப்பிரமணியன்:

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வசிப்பதற்குத் தகுதியற்ற குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளை மாற்றி புதிதாகக் கட்டித் தரப்படுமா?

(ஆ) பழுதடைந்த குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் விரைவில் பழுது பார்க்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): மிகவும் பழுதடைந்த, மக்கள் வசிப்பதற்கு பாதுகாப்பற்ற குடிசை மாற்று வாரிய வீடுகளை மட்டும், பயனாளிகள் தவணை முறை திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தவுடன், புதிதாக கட்டித் தரப்படும். அதைப்போலவே, பயனாளிகளிடமிருந்து தவணைமுறை திட்டத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன், குடிசை மாற்று வாரிய வீடுகளை பழுதுபார்க்கும் பணியும் செய்யப்படும்.

**திரு. வெ. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையின் மூலமாக குடிசை மாற்று வாரியக் கட்டிடங்களை பழுது பார்ப்பது சம்பந்தமாக வெளியிட்டுள்ள அறிவிப்பிற்கு நன்றியைத் தெரிவித்துக்

கொள்கிறேன். தற்போது பல பகுதிகளில் இந்த மாதிரி தவணை முறை திட்டத்திற்கு ஒப்புதல் தந்ததன் காரணமாக, என்னுடைய தொகுதியில் இன்றைக்கு பல இடங்களில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பெரும் அளவிலே நிதி ஒதுக்கி பழுது பார்க்கும் பணி மிக வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தப் பழுது பார்க்கும் பணிகள் மிக வேகமாக நடப்பதற்கு நிதி உதவி தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் அந்தப் பணியைச் செய்வதற்கு திட்டமிட்டு மிக வேகமாக அதைச் செய்து தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், என்னுடைய தொகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஜீனத் சர்புதீன்.

**திருமதி ஜீனத் சர்புதீன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான சேப்பாக்கத்தில், சிந்தாதிரிப் பேட்டையில் உள்ள, நமது நிதி அமைச்சர் அவர்களின் பெயரில் அமைந்துள்ள குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக கட்டப்பட்ட வீடுகள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்தன. அதனை, குடிசை மாற்று வாரியத் தலைவர் அவர்கள் வந்து பார்வையிட்டு, இப்போது நல்லமுறையில் பழுதுபார்க்கும் வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதற்காக முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல், சேப்பாக்கம் கெஸ்ட் ஹவுசுக்குப் பக்கத்தில் உள்ள வீடுகளும் அதுவும் நமது நிதியமைச்சர் அவர்கள் பெயரில்தான் அந்த குடிசை மாற்று வாரிய வீடுகளும் உள்ளன. அதையும் பழுது பார்த்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆனாலும் அதைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சே. ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தினுடைய வீடுகளை பழுது பார்ப்பதற்காக ஹட்கோ நிறுவனத்திடமிருந்து *411* லட்சம் ரூபாய் கடனாகக் கேட்கப்பட்டு அதற்கான அனுமதியும் பெறப்பட்டு இருக்கிறது. எனவே, குடிசை மாற்று வாரியத்தினுடைய வீடுகளிலே வாடகைக்காக இருக்கின்ற பயனாளிகள் அல்லது அங்கே இருக்கின்றவர்கள் தவணைமுறைத் திட்டத்திற்கு ஒப்புதல் தந்தவுடன், யார் யார் எல்லாம் ஒப்புதல் தந்திருக்கிறார்களோ, அந்த வீடுகளினுடைய பழுது பார்க்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதியிலே இருக்கின்ற அந்தக் குடிசை மாற்று

*1995 நவம்பர் 3]*

வாரியக் குடியிருப்புகளில் இருக்கின்ற பயனாளிகள் தவணை முறைத் திட்டத்திற்கு ஒப்புதல் தந்தவுடன் அங்கேயும் பணிகள் துவங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 12, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**12—**

**தமிழகத்தில் கரும்பு விலையை நிர்ணயித்தல்**

**61824—திரு. ஆர். சிங்காரம்:*

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கரும்பு விலை டன் ஒன்றுக்கு ரூ.800/–விலை நிர்ணயிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கரும்புக்கு குறைந்தபட்ச அடிப்படை விலையை நிர்ணயம் செய்வது மத்திய அரசின் பொறுப்பாகும். எனவே, டன் ஒன்றுக்கு 800 ரூபாய் குறைந்தபட்ச அடிப்படை விலையை மத்திய அரசு அறிவிக்குமானால், அதைத் தமிழக அரசு மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டு, கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு ஆதரவு அளிக்கும்.

முற்பகல் 10–50

**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதலமைச்சராக டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி ஏற்ற பிறகு, அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது, சுமார் 250 ரூபாய் ஒரு டன்னுக்கு இருந்த விலை சென்ற ஆண்டு மட்டும் திடீரென்று ஸ்பெசல் பிரைசாக 106 ரூபாயை கூடுதலாக்கி இந்த அரசு நிர்ணயித்து உத்தரவிட்டது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அப்படிக் கரும்பு விவசாயிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து கொண்டிருக்கிற இந்த அரசு தற்போது கரும்பு விவசாயிகள், விலைவாசி ஏறிவிட்ட காரணத்தாலும், வெட்டுக்கூலி ஒரு டன்னுக்கு சுமார் 200 ரூபாய் என்று ஆகிவிட்ட காரணத்தாலும், லிப்டிங் லேபர் ஒரு டன்னுக்கு 3 பேர் என்ற படி 75 ரூபாய் ஆகிறது என்றும், மாமூல் ரூபாய்

*1995 நவம்பர் 3]*

வாரியக் குடியிருப்புகளில் இருக்கின்ற பயனாளிகள் தவணை முறைத் திட்டத்திற்கு ஒப்புதல் தந்தவுடன் அங்கேயும் பணிகள் துவங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 12, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**12—**

**தமிழகத்தில் கரும்பு விலையை நிர்ணயித்தல்**

*61824—**திரு. ஆர். சிங்காரம்:**

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கரும்பு விலை டன் ஒன்றுக்கு ரூ.800/–விலை நிர்ணயிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கரும்புக்கு குறைந்தபட்ச அடிப்படை விலையை நிர்ணயம் செய்வது மத்திய அரசின் பொறுப்பாகும். எனவே, டன் ஒன்றுக்கு 800 ரூபாய் குறைந்தபட்ச அடிப்படை விலையை மத்திய அரசு அறிவிக்குமானால், அதைத் தமிழக அரசு மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டு, கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு ஆதரவு அளிக்கும்.

முற்பகல் 10–50

**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதலமைச்சராக டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி ஏற்ற பிறகு, அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது, சுமார் 250 ரூபாய் ஒரு டன்னுக்கு இருந்த விலை சென்ற ஆண்டு மட்டும் திடீரென்று ஸ்பெசல் பிரைசாக 106 ரூபாயை கூடுதலாக்கி இந்த அரசு நிர்ணயித்து உத்தரவிட்டது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அப்படிக் கரும்பு விவசாயிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து கொண்டிருக்கிற இந்த அரசு தற்போது கரும்பு விவசாயிகள், விலைவாசி ஏறிவிட்ட காரணத்தாலும், வெட்டுக்கூலி ஒரு டன்னுக்கு சுமார் 200 ரூபாய் என்று ஆகிவிட்ட காரணத்தாலும், லிப்டிங் லேபர் ஒரு டன்னுக்கு 3 பேர் என்ற படி 75 ரூபாய் ஆகிறது என்றும், மாமூல் ரூபாய்

8 முதல் 10 என்ற கணக்குப்படி 200 ரூபாய் ஆகிறது என்றும் லாரி வாடகை 8 முதல் 10 டன் கொண்டது, ஒரு டன்னுக்கு 40 ரூபாய் ஆகிறது என்றும் மற்றும் பொட்டாஷ், யூரியா, லேபர் போன்றவை விலை ஏறிவிட்ட காரணத்தாலும்—புரட்சிகரமாக தமிழகத்தை ஆட்சி செய்து கொண்டிருக்கிற தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில், எங்கும் புரட்சி எதிலும் புரட்சி என்று ஆட்சி செய்துக் கொண்டிருக்கிற வேளையில், இன்னும் சொல்லப்போனால் சமீபத்திலே சிதம்பரத்திலே, 1100 ஏழைகளுக்கு இலவசமாக திருமணம் செய்து (மேசையைத் தட்டும் ஒலி), ஒரு ஏழைக்கு 25 ஆயிரம் ரூபாய் என்ற அடிப்படையிலே பல கோடி ரூபாய்களை கட்சிப் பணத்திலிருந்து செலவு செய்து அந்த ஏழை எளிய மக்களுக்கு திருமணம் செய்து வைத்து தமிழகத்தில் மட்டும் அல்ல, இந்தியாவில் மட்டும் அல்ல, ஏன் உலகத்திலேயே எந்த ஒரு தலைவரும் செய்யாத (மேசையைத் தட்டும் ஒலி) வகையில் செய்து, ஏழைகளுக்கு வாழ்வு அளிக்கின்ற திருமணத்தை செய்து காட்டிய புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில்--எதையும் எப்படியும் செய்ய முடியும் என்று தனி தைரியத்தோடு செயல்படுகிற புரட்சித் தலைவி ஆட்சி காலத்தில் இதையும் கரும்பு விவசாயிகளுக்கு செய்து கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு மத்திய அரசு அறிவித்த அடிப்படை விலை 391 ரூபாய். அது விவசாயிகளுக்கு கட்டுப்படியாகாத ஒன்று என்பதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 134 ரூபாய் அரசினுடைய பரிந்துரை விலையாக அறிவித்து 8.5 சதவீத சர்க்கரை சத்துக்கு 525 ரூபாய் கொடுப்பதற்கு ஆவண புரிந்தார்கள். நடப்பு ஆண்டுக்கு 1995–96 ஆம் ஆண்டுக்கு, குறைந்த விலையை நிர்ணயம் செய்வதற்கு நாளைக்கு முத்தரப்பு மாநாடு சென்னையிலே கூட இருக்கிறது. அதிலே விவசாயிகளுடைய கருத்துக்களை ஏற்று அதற்குரிய நடவடிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளை கூட இருக்கிற முத்தரப்பு மாநாட்டிலே இது குறித்து தமிழக அரசின் ச்சார்பாக கலந்து கொண்டு நிச்சயமாக விவசாயிகளுக்கு நல்ல் ஒரு செய்தியை அமைச்சர் அவர்கள் கொடுப்பார்கள் என்று கருதுகிறேன். அதே நேரத்திலே தற்போது கரும்புக்கு ஸ்டேச்சுடரி பிரைஸ் அல்லது

*1995 நவம்பர் 3]*

அட்வைசரி பிரைஸ் என்று வழங்கப்படுகிறது. அதை மாற்றி தமிழ்நாடு ஷுகர் கேன் பிரைஸ் என்று வழங்கினால் நிச்சயமாக அந்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைவார்கள் என்று கருதுகிறேன். அத்தோடு 1934-ல் வெள்ளைக்காரன் ஆட்சியில் ஷுகர் ரெக்கவரி 8.5 பெர் டன் என்கிற பிளாட் ரேட் முறை ரத்து செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்புக்கு அடிப்படை விலையை நிர்ணயம் செய்யக் கூடிய அதிகாரம் மைய அரசினுடைய கையிலேதான் இருக்கிறது என்று நான் ஏற்கெனவே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். அந்த அதிகாரம் மாநில அரசுகளுக்கு பகிர்ந்து அளிக்கப்படவில்லை, மைய அரசு அறிவிக்கக் கூடிய விலை குறைகிறது, எனவே விவசாயிகளுக்கு அவர்களுடைய செலவினங்களுக்கு உரிய லாபகரமான தொழிலாக அது அமைய வேண்டும் என்பதற்காகத்தான் மாநில அரசு பரிந்துரை விலையை அறிவிக்கிறது. அதேபோல 8.5 சதவீதம் சர்க்கரை சத்து கொண்ட கரும்புக்கு மத்திய அரசு தான், அதற்குரிய விதி முறைகளை வகுத்திருக்கிறது. எனவே, அதை ரத்து செய்வதற்கு இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மைய அரசு தன்னுடைய அதிகாரத்தை மாநில அரசுக்கு பகிர்ந்து அளிக்கும் என்று சொன்னால் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 13, திரு. வி.கே. சின்னசாமி, மாண்புமிகு வணிக வரிகள்துறை அமைச்சர்.

**13—**

**பூவிருந்தவல்லி சோதனைச் சாவடி சாலையில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்த்தல்**

**35147*—**திரு. வி.கே. சின்னசாமி:**

மாண்புமிகு வணிகவரிகள்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூவிருந்தவல்லி சோதனைச் சாவடிகளில் சாலை இரு மருங்கிலும் வாகனங்களை நிறுத்தி சோதனை செய்யப்படுவதால், பேருந்துகள் மற்றும் இதர வாகனங்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளதை அரசு அறியுமா?

TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

அட்வைசரி பிரைஸ் என்று வழங்கப்படுகிறது. அதை மாற்றி தமிழ்நாடு ஷுகர் கேன் பிரைஸ் என்று வழங்கினால் நிச்சயமாக அந்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைவார்கள் என்று கருதுகிறேன். அத்தோடு 1934-ல் வெள்ளைக்காரன் ஆட்சியில் ஷுகர் ரெக்கவரி 8.5 பெர் டன் என்கிற பிளாட் ரேட் முறை ரத்து செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்புக்கு அடிப்படை விலையை நிர்ணயம் செய்யக் கூடிய அதிகாரம் மைய அரசினுடைய கையிலேதான் இருக்கிறது என்று நான் ஏற்கெனவே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். அந்த அதிகாரம் மாநில அரசுகளுக்கு பகிர்ந்து அளிக்கப்படவில்லை, மைய அரசு அறிவிக்கக் கூடிய விலை குறைகிறது, எனவே விவசாயிகளுக்கு அவர்களுடைய செலவினங்களுக்கு உரிய லாபகரமான தொழிலாக அது அமைய வேண்டும் என்பதற்காகத்தான் மாநில அரசு பரிந்துரை விலையை அறிவிக்கிறது. அதேபோல 8.5 சதவீதம் சர்க்கரை சத்து கொண்ட கரும்புக்கு மத்திய அரசு தான், அதற்குரிய விதி முறைகளை வகுத்திருக்கிறது. எனவே, அதை ரத்து செய்வதற்கு இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மைய அரசு தன்னுடைய அதிகாரத்தை மாநில அரசுக்கு பகிர்ந்து அளிக்கும் என்று சொன்னால் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 13, திரு. வி.கே. சின்னசாமி, மாண்புமிகு வணிக வரிகள்துறை அமைச்சர்.

**13—**

### பூவிருந்தவல்லி சோதனைச் சாவடி சாலையில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்த்தல்

*35147—**திரு. வி.கே. சின்னசாமி:**

மாண்புமிகு வணிகவரிகள்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூவிருந்தவல்லி சோதனைச் சாவடிகளில் சாலை இரு மருங்கிலும் வாகனங்களை நிறுத்தி சோதனை செய்யப்படுவதால், பேருந்துகள் மற்றும் இதர வாகனங்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதனைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரிகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பூவிருந்தவல்லி சோதனைச் சாவடி அருகே போக்குவரத்து இடையூறு உள்ளது என்பதை அரசு கவனத்தில் கொண்டுள்ளது.

(ஆ) போக்குவரத்து இடையூறைத் தவிர்க்க தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. வி. கே. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூவிருந்தவல்லி மற்றும் இது போன்ற பல்வேறு இடங்களில், சோதனைச் சாவடிகள் இருக்கின்ற இடங்களில் லாரிகளையும் மற்ற வாகனங்களையும் ஓட்டிச் செல்ல மணிக் கணக்கிலே காத்து இருக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதனை நேரிடையாக சில இடங்களிலேயும் பார்த்து இருக்கிறோம். அதனைத் தவிர்க்கின்ற வகையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அப்படி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோதனைச் சாவடிகளில் போக்குவரத்து இடைஞ்சல் இருக்கிறது என்பதை கருத்தில் கொண்டு அரசு ஏற்கெனவே முன் எச்சரிக்கை நடவடிக்கையாக, அப்படிப்பட்ட சோதனைச் சாவடிகளை இருவழி சோதனைச் சாவடியாக மாற்றி இருக்கிறது. அந்த வகையிலே பூவிருந்தவல்லி சோதனைச் சாவடியைப் பொறுத்தவரையில் இங்கேயிருந்து வெளியிலே செல்லும் வாகனங்களை சோதனை செய்வதற்கு தனியாக ஒரு அலுவலகமும், வெளியிலேயிருந்து சென்னைக்குள்ளே வருகிற வாகனங்களை சோதனை செய்வதற்கு தனி அலுவலகமும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அப்படி அனுமதிக்கப்பட்டிருந்தாலும், கட்டிட வசதியும், இட வசதியும் இல்லாததால், ஒரே இடத்தில் செயல்பட்டு வருகிறது என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. இதனைத் தவிர்ப்பதற்காக உள்ளே வருகின்ற வாகனங்களையும், வெளியில் செல்லும் வாகனங்களையும் மாற்றுப் பாதையில் எடுத்துச் சென்று, தனித்தனி இடத்தில் சோதனை செய்து, சோதனைக்கு உட்படாத வாகனங்கள் தாமதமின்றி நேர்வழியில்

*1995 நவம்பர் 3]*

செல்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற வகையில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கலந்து கொண்ட ஒரு கூட்டத்தில், துறை அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். அந்த அறிவுரைகளின் பேரில் மாவட்ட ஆட்சியர்கள் தகுந்த இடங்களைத் தேர்வு செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 10-55*

**திரு. வி.கே. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பூவிருந்தவல்லி சோதனைச் சாவடி சம்மந்தமாக அங்கே அந்த வாகனங்களுடைய நெருக்கங்களை நீக்குவதற்கு நல்ல வழிவகைகள் செய்திருப்பதாக அறிவித்தார்கள். நன்றி, அதேபோல், மாநிலத்திலே பல்வேறு இடங்களில் அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. சில பாதைகள் நெடுஞ்சாலைத் துறை சம்பந்தமாக இருக்கிறது. சில பாதைகள் என்.எச். ஆக இருக்கிறது. ஆகவே, அவற்றை மத்திய அரசாங்கத்தினுடைய நிதியைப் பெற்று செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆக, மாற்றுப்பாதை அமைக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இதுபோல் மாநிலத்தில் எந்தெந்த இடங்களில் மாற்றுப் பாதைகள் அமைக்க உள்ளோம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா? குறிப்பாக எங்களுடைய மாவட்டத்தில் பவானியில் அப்படி ஒரு நிலைமை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பூவிருந்தவல்லி பற்றியது மூலக் கேள்வி. பவானிக்குப் போக முடியாது. பவானிக்கு சம்பந்தமானது அல்ல.

**திரு. வி.கே. சின்னசாமி:** அது போன்ற இடங்களையும் சேர்த்து ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் 23 சோதனைச் சாவடிகள், மிகப் பெரிய சோதனைச் சாவடிகள் என்று கணக்கிடப்பட்டிருக்கின்றன. அதில் முதல் கட்டமாக 8 சோதனைச் சாவடிகளுக்கு மாற்றுப்பாதையைக் கண்டுபிடித்து வாகனங்களை மாற்று வழியில் எடுத்துச் சென்று சோதனை செய்து அனுப்பலாம் என்று முடிவு எடுக்கப்பட்டு, அந்தந்த

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில் அந்தந்த மாவட்டத்தில் ஒரு குழுவை ஏற்படுத்தி, குழுவின் மூலம் தகுந்த இடத்தைத் தேர்வு செய்து, வணிக வரித் துறை ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அந்த வகையில், புழல், இரும்புலியூர், கந்தேக்கவுண்டன் சாவடி, கனியூர், போரூர், தோப்பூர், இராணிப்பேட்டை ஆகிய 8 சோதனைச் சாவடிகள் முதல் கட்டமாக எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூவிருந்தவல்லி சோதனைச் சாவடி பெங்களூர் நெடுஞ்சாலையிலே அமைந்திருக்கிறது. இரவு நேரங்களிலே அது இரு வழி சோதனைச் சாவடியாக இருக்கின்ற காரணத்தினாலே பயணிகள் செல்வதற்கு 2 மணி நேரம்கூட தாமதப்பட வேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் மதிப்பீட்டுக் குழுத் தலைவராக இருந்தபோது, அந்த சோதனைச் சாவடிக்கு அழைத்துச் சென்று காட்டினோம். உடனடியாக அங்கிருந்து 2, 3 மைல்களுக்கு அப்பால் இருக்கின்ற ஒரு இடத்தைத் தேர்வு செய்து அதை 4 வழி பாதையாக ஆக்குவதற்கு அன்றைக்கு குழுத் தலைவர் உறுதி அளித்துச் சென்றார்கள். இன்றைக்கு வணிக வரிகள் துறை அமைச்சராகப் பொறுப்பு ஏற்றிருக்கிறார்கள். அந்த சோதனைச் சாவடிக்குப் பக்கத்திலே இன்றைக்கு போலீஸ் சோதனைச் சாவடி இருக்கிறது. விரைவாகச் செல்ல முடியாமல் பொதுமக்கள் 2 மணி நேரம், 3 மணி நேரம் கூட அந்த இடத்திலே நிற்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதற்காக உடனடியாக இருங்கால் கோட்டைக்கு வருகின்ற வாகனங்கள் மட்டும் இருங்கால்கோட்டையிலும், போகின்ற வாகனங்கள் பூவிருந்தவல்லியிலும் பரிசோதனை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமதத்தைத் தவிர்க்க வேண்டுமென்பதற்காக 29-8-1994-ல் பூவிருந்தவல்லி போன்ற 23 பெரிய சோதனைச் சாவடிகளுக்கு 46 கூடுதல் மேல்நிலை ஆய்வாளர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. இருப்பினும் தாமதம் தவிர்க்கப்படவில்லை என்பதை அரசு அறிந்திருக்கிறது. அந்த வகையில் தான் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாற்று இடங்களைத் தேர்வு செய்ய பணிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த வகையில் செங்கை

*1995 நவம்பர் 3]*

எம்.ஜி.ஆர். மாவட்ட ஆட்சித் தலைவர் 7-40 ஏக்கர் நிலத்தை பெண்ணலூர் என்ற கிராமத்தில் தேர்வு செய்து அரசுக்குக் குறிப்பு அனுப்பியிருக்கிறார். அந்த இடத்தில் கட்டிடம் கட்டுவதற்குத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கிடையில் தற்காலிகமாக மாற்று ஏற்பாடு செய்வதற்கு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சொன்ன யோசனை உபயோககரமாக இருக்குமேயானால், துறை பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு 'வினாக்கள் விடைகள்' நேரம் நீட்டிக்கப்படுகிறது. வினா எண் 14, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

**14—**

**சிவகிரி பேரூராட்சியில் விசைத்தறி கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்துதல்**

*26655—திருமதி **கவிநிலவு தர்மராஜ்:***

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகிரி பேரூராட்சியில் விசைத்தறி கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி தொகுதியினுடைய பேரூராட்சிகளிலேயே அதிக மக்கள் தொகை கொண்டிருக்கின்ற பேரூராட்சியாக விளங்கிக் கொண்டிருக்கின்ற சிவகிரியில் 35,000 மக்கள் தொகையில் 30,000 பேர் இந்த நெசவுத் தொழிலை நம்பிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் சிவகிரி பேரூராட்சியிலே அரசின் சார்பிலே ஒரு கூட்டுறவுச் சங்கத்தை

*1995 நவம்பர் 3]*

எம்.ஜி.ஆர். மாவட்ட ஆட்சித் தலைவர் 7-40 ஏக்கர் நிலத்தை பெண்ணலூர் என்ற கிராமத்தில் தேர்வு செய்து அரசுக்குக் குறிப்பு அனுப்பியிருக்கிறார். அந்த இடத்தில் கட்டிடம் கட்டுவதற்குத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கிடையில் தற்காலிகமாக மாற்று ஏற்பாடு செய்வதற்கு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சொன்ன யோசனை உபயோககரமாக இருக்குமேயானால், துறை பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் *11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு 'வினாக்கள் விடைகள்' நேரம் நீட்டிக்கப்படுகிறது. வினா எண் 14, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

**14—**

**சிவகிரி பேரூராட்சியில் விசைத்தறி கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்துதல்**

**26655*—**திருமதி கவிநிலவு தர்மராஜ்:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகிரி பேரூராட்சியில் விசைத்தறி கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி தொகுதியினுடைய பேரூராட்சிகளிலேயே அதிக மக்கள் தொகை கொண்டிருக்கின்ற பேரூராட்சியாக விளங்கிக் கொண்டிருக்கின்ற சிவகிரியில் 35,000 மக்கள் தொகையில் 30,000 பேர் இந்த நெசவுத் தொழிலை நம்பிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் சிவகிரி பேரூராட்சியிலே அரசின் சார்பிலே ஒரு கூட்டுறவுச் சங்கத்தை

நிர்ணயம் செய்து அதன் மூலமாக நெசவாளர்களுடைய வாழ்க்கையை வளமுறச் செய்ய வேண்டும் என்பதற்காக இந்தக் கூட்டுறவுச் சங்கம் வேண்டும் என்று நாங்கள் கேட்டிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கருத்தை ஏற்று நெசவாளப் பெருங்குடி மக்களுடைய கண்ணீரைத் துடைக்க வேண்டும். இந்தத் தமிழகத்திலே எந்தெந்தத் துறையிலே குறை இருக்கிறதோ அதையெல்லாம் தீர்த்து வைத்து தன்னிகரல்லாத தலைவி என்று இந்தத் தரணியே போற்றக்கூடிய விதத்திலே ஆட்சி நடத்திக்கொண்டிருக்கும் புண்ணியத் தலைவியினுடைய பொற்கால ஆட்சியிலே மனிதனை மனிதனாக்க, ஆடை இல்லா மனிதன் அரை மனிதன் என்பதைப் போக்கி, மானத்தையும் மதிப்பையும் அளித்துக் கொண்டிருக்கின்ற மகத்தான பணியை மறைமுகமாக குடத்தின் மேல் விளக்கமாக இருந்து செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, நெசவாளர்களின் கண்ணீரைத் துடைப்பதற்கு இந்த கூட்டுறவுச் சங்கத்தை நிறுவுவீர்களேயானால் அதன் மூலமாக அதிகப்படியான கடன் தொகைகளை குறைந்த வட்டி வீதத்திலும் அதிகப்படியான நூல்களையும் பெற்று தங்களுடைய வாழ்க்கை வசதியை மேம்பாடு செய்துகொள்வதற்கும் வாய்ப்பாக அமையும் என்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதய தெய்வத்தினுடைய அனுமதியோடு மீண்டும் இந்தத் திட்டத்தை மறுபரிசீலனைச் செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி தொகுதியில் கூட்டுறவுத் துறையின் சார்பாக கைத்தறிகள் *6,000*மும் தனியார் கைத்தறிகள் *2,000*மும், விசைத் தறிகள் *560*ம் இருக்கின்றன. குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கின்ற சிவகிரி கிராமத்தில் ஏற்கனவே தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் சார்பாக *96* விசைத்தறிகளுடன் ஒரு விசைத்தறிக் கூடம் இயங்கி வருகிறது. ஆனால் அதில் தற்போது *62* விசைத் தறிகள் தான் இயங்குகின்றன. மீதி *34* விசைத் தறிகளுக்கு பயனாளிகள் வருவதில்லை. அப்படிப் பயனாளிகள் வருவார்கள் என்று சொன்னால் இந்த விசைத்தறி கூடத்தையே விரிவாக்குவதற்கு அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய *3* பஞ்சாலைத் தொழிற்சாலைகளில் சிவகிரியிலே இருக்கக்கூடிய பஞ்சாலை நிறுவனத்திலே *96* விசைத்தறிகளிலே *62* விசைத்தறிகள் மட்டுமே

*1995 நவம்பர் 3]*

இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்றன. காரணம் விசைத்தறிகள் நிறுவப்பட்டு கிட்டத்தட்ட 40,50 ஆண்டுகளுக்கு மேலாகியிருக்கின்ற நிலையில் அவை மிகவும் பழமையாக இருப்பதால் அவற்றை பயன்படுத்த முடியாத சூழ்நிலையில்தான் அவைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. புதிய விசைத்தறி கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக புதியதாக அமைத்துக் கொடுப்பார்களேயானால் இந்த தனியார் விசைத்தறிகள் அனைத்தும் கூட்டுறவுச் சங்கத்திலே பயன் அடைவதன் மூலம் அரசுக்கு போதிய வருமானமும் அதன்மூலம் வேலைவாய்ப்பும் நிறைய கிடைக்கிற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால், பழைய விசைத்தறிகளைப் புதுமையாக்கி அதை விரிவுபடுத்தி, மீண்டும் பல்வேறு நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதற்கான திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலேதான் பழைய விசைத்தறிகள் புதியதாக மாற்றப்பட்டுள்ளன. இன்றைக்கு எல்லா இடங்களுக்கும் பழுதுபட்ட விசைத்தறிகளை மாற்றி கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அப்படியிருப்பின் அந்த விசைத்தறிகள் மாற்றப்படும். அதைப்பற்றி தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்திற்குச் சொன்னாலே அவர்கள் மாற்றித் தருவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 15, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

**15—**

**அச்சங்குளம் கூட்டுறவு நூற்பாலைத் திறனை உயர்த்துதல்**

*42759—**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், அச்சங்குளம் கூட்டுறவு நூற்பாலைத் திறன் 12,500-இல் இருந்து 25,000 ஸ்பின்டில்களாக உயர்த்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்றன. காரணம் விசைத்தறிகள் நிறுவப்பட்டு கிட்டத்தட்ட 40,50 ஆண்டுகளுக்கு மேலாகியிருக்கின்ற நிலையில் அவை மிகவும் பழமையாக இருப்பதால் அவற்றை பயன்படுத்த முடியாத சூழ்நிலையில்தான் அவைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. புதிய விசைத்தறி கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக புதியதாக அமைத்துக் கொடுப்பார்களேயானால் இந்த தனியார் விசைத்தறிகள் அனைத்தும் கூட்டுறவுச் சங்கத்திலே பயன் அடைவதன் மூலம் அரசுக்கு போதிய வருமானமும் அதன்மூலம் வேலைவாய்ப்பும் நிறைய கிடைக்கிற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால், பழைய விசைத்தறிகளைப் புதுமையாக்கி அதை விரிவுபடுத்தி, மீண்டும் பல்வேறு நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதற்கான திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலேதான் பழைய விசைத்தறிகள் புதியதாக மாற்றப்பட்டுள்ளன. இன்றைக்கு எல்லா இடங்களுக்கும் பழுதுபட்ட விசைத்தறிகளை மாற்றி கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அப்படியிருப்பின் அந்த விசைத்தறிகள் மாற்றப்படும். அதைப்பற்றி தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்திற்குச் சொன்னாலே அவர்கள் மாற்றித் தருவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 15, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

**15—**

**அச்சங்குளம் கூட்டுறவு நூற்பாலைத் திறனை உயர்த்துதல்**

*42759—**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், அச்சங்குளம் கூட்டுறவு நூற்பாலைத் திறன் 12,500-இல் இருந்து 25,000 ஸ்பின்டில்களாக உயர்த்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம், மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், அச்சங்குளம் கூட்டுறவு நூற்பாலை லாபத்தில் இயங்குகின்ற கூட்டுறவு நூற்பாலை ஆகும். இங்கு 1982 ஆம் ஆண்டு 25 ஏக்கர் நிலப்பரப்பில் 25,000 ஸ்பின்டில்கள் மூலம் நூற்பாலை நிறுவுவதற்கு திட்டமிட்டு 12,500 ஸ்பின்டில்கள் மூலம் இப்பொழுது இயங்கிக் கொண்டு வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே விரிவுபடுத்த சாத்தியக்கூறு இல்லை என்று கூறினார்கள். 12,500 ஸ்பின்டில்களை 25,000 ஸ்பின்டில்களாக மாற்றுவதன் மூலம் வேலைவாய்ப்பை அதிகப்படுத்துவதற்கும், அதே சமயம் உற்பத்தித் திறன் அதிகமாகி லாபத்தில் இயங்குவதற்கும் சாத்தியக்கூறு இருக்கிறது. ஆகவே, மீண்டும் பரிசீலனை செய்து அங்கே வேலைவாய்ப்பை அதிகப்படுத்துவதற்கும் லாபத்தை ஈட்டுவதற்கும் 25,000 ஸ்பின்டில்களாக உயர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-05*

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அச்சங்குளம் கூட்டுறவு நூற்பாலை 1982-ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. 1985-ஆம் ஆண்டு இந்த நூற்பாலை உற்பத்தியைத் துவங்கிய ஆண்டு ஆகும். ஆனால் 1985 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட காலத்திலிருந்து இன்றையதினம் வரை முழுக்க நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது. ஒரு ஆண்டு கூட லாபத்தில் இயங்கவில்லை. இன்றைக்கு இந்தக்கூட்டுறவு நூற்பாலை 5 கோடி ரூபாய் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. தமிழகத்திலேயே முழுக்க, முழுக்க ஆதி திராவிட தொழிலாளர்களைக் கொண்டு இயங்கி வரக்கூடிய ஒரே கூட்டுறவு நூற்பாலை இந்த நூற்பாலை தான். ஆகவேதான் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆதிதிராவிட மக்கள் மீது அதிக அளவுக்கு அன்பும், பாசமும் கொண்டிருக்கிற ஒரே முதலமைச்சர் என்ற (மேசையைத் தட்டும் ஒலி)

*1995 நவம்பர் 3]*

காரணத்தால் இன்றைக்கு அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டாலும் இந்த ஆலையை தொடர்ந்து நடத்த முடிவு எடுத்து நடத்தச் சொல்லியிருக்கிறார்கள். அரசும் நடத்திக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு இதை லாபத்தில் கொண்டு வருவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அப்படி லாபத்தில் வரும் என்று சொன்னால் நிச்சயமாக 12,500 ஸ்பின்டில்ஸ் என்பது 25,000 ஸ்பின்டில்ஸ் ஆக உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்களே அதைப் பாராட்டுகின்ற சூழ்நிலையில் சென்ற முறை பேப்பர் வாயிலாக அறிவித்தார்கள். இருப்பினும் கூட்டுறவு நூற்பாலையில் இருக்கின்ற அந்த வேஸ்ட் காட்டனை உபயோகம் செய்து ஓப்பன் ஸ்பின்னிங் என்று சொல்லத்தக்க அளவுக்கு நம்பர் 10 லிருந்து 16 ஆம் நம்பர் வரை உபயோகம் செய்ய இந்த கூட்டுறவு நூற்பாலையில் இடம் இருக்கிறது, கட்டிடங்கள் இருக்கின்றன; மேலும் அதை விரிவு செய்ய அரசின் அனுமதிதான் தேவை. ஆகவே, மிஷின் மட்டும் வாங்கிக் கொடுத்து மேலும் வேலைவாய்ப்பு ஏற்படுத்த அந்த ஓப்பன் ஸ்பின்னிங்கைத் துவக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு நூற்பாலை மட்டுமல்ல, பொதுவாக தமிழகத்தில் நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கிற அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளையும் லாபத்தில் கொண்டுவருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கைத்தறித் துறை செயலாளர் தலைமையில் ஒரு குழுவை அமைத்து ஆராய்ந்து அதன் அறிக்கையைத் தரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அறிக்கை பெறப்பட்டவுடன் நஷ்டத்தைப் போக்கி லாபத்தில் கொண்டு வர அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 16, டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன், மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்.

[1995 நவம்பர் 3

16—

## உயர்நிலைப்பள்ளிகளுக்கு விடுதி ஏற்படுத்துதல்

*33375—**டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன் :**

மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, நெருப்பூர் மற்றும் ஏரியூரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கான பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, நெருப்பூர் மற்றும் ஏரியூரில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கான பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய மாவட்டம். இன்றைக்குப் பல்வேறு துறைகளிலே பல முன்னேற்றங்களை பெற்று வந்திருக்கிற மாவட்டம். இந்த மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய என்னுடைய தொகுதியில் உள்ள ஏரியூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் 1400 மாணவர்களும், நெருப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 1200 மாணவர்களும்; அதற்கு அருகில் உள்ள செல்லமுடி அரசு உயர்நிலைப் பள்ளியில் 600 மாணவர்களும்; ஆக 3 ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்களைக் கொண்ட இந்தப் பகுதியில் ஒரு மாணவர் விடுதி அமைத்தால்-அங்குள்ள மிகவும் பின்தங்கியப் பகுதியாக உள்ள இந்த ஏரியூர் மையப் பகுதியில் அது அமைக்கப்படுமானால்-அந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு மிகவும் சிறப்பாக அமையும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனைச் செய்து வருகின்ற ஆண்டிலாவது இந்தப் பகுதிக்கு ஒரு மாணவர் விடுதி அமைத்துக் கொடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

*1995 நவம்பர் 3]*

**மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பென்னாகரம் தொகுதியில் மிகப்பிற்படுத்தப்பட்ட நலத்துறை சார்பாக மாணவர் விடுதி ஒன்று இருக்கிறது. இன்று பொதுவாகவே மாணவியர்களுக்கு மட்டுமே புதிய விடுதி துவங்க வேண்டும் என்று அரசு ஒரு கொள்கை முடிவு எடுத்திருக்கிற காரணத்தால் மாணவியர்களுக்கு மட்டுமே விடுதி நிறுவுகின்ற சூழ்நிலையில் மாணவர்களுக்கு என புதிய ஒரு விடுதி துவங்குகிற சாத்தியக்கூறு ஏதும் இல்லை.

**டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பென்னாகரம் பகுதிக்கும் இந்தப் பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 30 கிலோ மீட்டர் ஆகும். வருகின்ற காலத்தில் அரசின் கொள்கைப்படி குறைந்தபட்சம் மாணவியர் விடுதியையாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறப்பதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பென்னாகரம் தொகுதியில் 4 மாதங்களுக்கு முன்னதாகத்தான் ஒரு மாணவியர் விடுதி திறக்கப்பட்டது. எதிர்காலங்களில் தேவைக்கேற்ப இதுகுறித்து அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 17, திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**17—**

**மாறாந்தை உயர்நிலைப்பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

*14983—**திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் ஒன்றியம், மாறாந்தை உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதலாக கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*1995 நவம்பர் 3]*

**மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பென்னாகரம் தொகுதியில் மிகப்பிற்படுத்தப்பட்ட நலத்துறை சார்பாக மாணவர் விடுதி ஒன்று இருக்கிறது. இன்று பொதுவாகவே மாணவியர்களுக்கு மட்டுமே புதிய விடுதி துவங்க வேண்டும் என்று அரசு ஒரு கொள்கை முடிவு எடுத்திருக்கிற காரணத்தால் மாணவியர்களுக்கு மட்டுமே விடுதி நிறுவுகின்ற சூழ்நிலையில் மாணவர்களுக்கு என புதிய ஒரு விடுதி துவங்குகிற சாத்தியக்கூறு ஏதும் இல்லை.

**டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பென்னாகரம் பகுதிக்கும் இந்தப் பகுதிக்கும் இடைப்பட்ட தூரம் 30 கிலோ மீட்டர் ஆகும். வருகின்ற காலத்தில் அரசின் கொள்கைப்படி குறைந்தபட்சம் மாணவியர் விடுதியையாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறப்பதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பென்னாகரம் தொகுதியில் 4 மாதங்களுக்கு முன்னதாகத்தான் ஒரு மாணவியர் விடுதி திறக்கப்பட்டது. எதிர்காலங்களில் தேவைக்கேற்ப இதுகுறித்து அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 17, திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**17—**

**மாறாந்தை உயர்நிலைப்பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

*14983—**திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் ஒன்றியம், மாறாந்தை உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதலாக கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1995 நவம்பர் 3

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் ஒன்றியம், மாறாந்தை உயர்நிலைப் பள்ளியானது 100 சதவீத மாணவர்களை வெற்றியடைய செய்யக்கூடிய ஒரு அரசு உயர்நிலைப் பள்ளியாக இருக்கின்றது. அதிலே ஆதிதிராவிட மாணவர்கள் அதிகமாகப் பயின்று நிறைந்த வெற்றி காணக்கூடிய ஒரு நல்ல பள்ளிக்கூடம். அந்தப் பள்ளியில் போதுமான கட்டிட வசதி இல்லாததாலும், அங்கே இருக்கை வசதிகள் இல்லாததாலும் மாணவர்கள் மரத்தடியிலே உட்கார்ந்து படிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதேபோல, லேபரட்டரி வசதிக்கான கட்டிடங்களும் அங்கே இல்லை. ஆதலால், இதை உடனடியாகச் செய்ய வேண்டும். ஏற்கெனவே இதுபற்றி பலமுறை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் எடுத்துச்சொல்லி இருக்கிறேன். ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டிட வசதி செய்வதற்கு இப்போது சாத்தியக்கூறுகள் இல்லை என்று சொல்வது எனக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்துள்ளது. ஆதலால், இதுகுறித்து மறுபரிசீலனை செய்து கட்டிடங்களைக் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? அதற்கு பண ஒதுக்கீடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தியக்கூறுகள் இல்லை என்று நான் சொல்லவில்லை. தற்போது அரசிடத்திலே செயற்குறிப்பு இல்லை என்றுதான் தெரிவித்தேன். பள்ளிகளிலே கட்டிடங்கள் கட்டுவதற்கு முழுமையாக மானியம் தரும் திட்டம் தற்போது அரசிடத்திலே இல்லை. 50 விழுக்காடு தொகையை பொது மக்கள் பங்குத் தொகையாக செலுத்த முன்வந்தால் அந்தப் பள்ளிகளுக்கு இணைத் தொகையாக, 50 விழுக்காடு தொகையைத் தருவதற்கு அரசிடத்திலே திட்டம் இருக்கிறது. சென்ற ஆண்டிலும் அதற்கு முந்தைய ஆண்டிலும் இது குறித்து எல்லா மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் கடிதங்கள் எழுதப்பட்டு இருந்தபோதிலும், திருநெல்வேலி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து இது தொடர்பான எந்தவித முன்மொழிவும் பெறப்படவில்லை. ஆகவே, சென்ற இரண்டு ஆண்டுகளில் இதுகுறித்து எந்த நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை.

*1995 நவம்பர் 3]*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 50 விழுக்காடு தொகையைச் செலுத்துவதற்கு இந்த ஆண்டே முயற்சி எடுத்து அதைச் செய்தால் அரசு தன்னுடைய பங்காக 50 விழுக்காடு தொகையைத் தருவதற்கு முன்வரும். இதைத் தவிர, பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டத்தின் மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவரே பள்ளிக் கட்டிடங்களைக் கட்டித் தருவதற்கான வாய்ப்பை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கி இருக்கிறார்கள். அதன்மூலமும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்பாடு செய்யலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறையிலே இருந்து மாறாந்தை உயர்நிலைப் பள்ளிக்கு முதலாவதாக 2 இலட்சம் ரூபாய் ஒதுக்கி இருப்பதாக—ஒரு புரபோசல் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், அதை இப்போது பரவலாக்கப்பட்ட திட்டத்தின் மூலமாகக் கட்டிக்கொள்ளலாம்; ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாகக் கட்டிக்கொள்ளலாம் என்பதைப்பார்க்கும்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதோ அந்தத் துறையிலிருந்து தட்டிக்கழிப்பதைப்போல, பதிலில் சொல்லி இருக்கின்றார்கள். எஜுகேஷன் டிபார்ட்மெண்டிலிருந்து 2 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டதாக முதலாவதாகச் சொல்லப்பட்டு அது மாற்றப்பட்டிருக்கிறது. இதுசம்பந்தமாக அரசிடத்திலே ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா? மேலும் அந்தப் பள்ளிக்கூடத்திலே காம்ப்பௌண்ட் சுவர் இல்லை. அரசினுடைய கொள்கை என்னவென்றால், அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு காம்ப்பௌண்ட் சுவர் கட்டுக்கொடுக்கக்கூடிய திட்டம் எதுவுமே இல்லை என்பதை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கேட்டால் சொல்கிறார்கள். ஆதலால் இதையும் செய்து தரவேண்டும். நிறைய ஊர்களில் உள்ள அரசு பள்ளிகளுக்கு காம்ப்பௌண்ட் சுவர் இல்லாததால் பாதுகாப்பற்ற சூழ்நிலை இருக்கிறது. ஆதலால் அதையும் கட்டித் தருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இருக்கிற அனைத்து பள்ளிகளுக்கும் என்னென்ன வசதிகள் செய்து தரவேண்டுமென்று ஒரு ஆய்வு நடத்தி, அறிக்கை தருமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்கள். அந்தவகையிலே கல்வித் துறை அதற்கான

ஆய்வை நடத்தி அறிக்கை சமர்ப்பித்து இருக்கிறது. அதிலே பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டுகின்ற நிலைமை இல்லை. அதை அரசு செய்வதற்கு இயலாது என்பதை முன்பே தெளிவாகத் தெரிவித்து இருக்கிறோம். அதற்கு பதிலாக உயிர்வேலி அமைப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்குகின்ற சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கிறோம். அதைப்போலவே, 2 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்ற தகவல் வந்தது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அந்த 2 இலட்சம் ரூபாய் தருவதற்கான வாய்ப்பு, 50 விழுக்காடு தொகையை பொது மக்கள் ஏற்பாடு செய்து செலுத்தினால்தான் தர முடியும் என்று அரசு விதி இருக்கிறது. ஆகவே, நீங்கள் 50 விழுக்காடு தொகையை செலுத்த முன்வந்தால், 50 விழுக்காடு தொகையை அரசு தருவதற்கு இன்றைக்கும் தயாராக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை அங்கே செய்வதில் தாமதம் இருக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அரசு அல்லது கல்வித் துறை எந்தவிதமான தயக்கத்தையும் காட்டவில்லை. எந்தெந்த பள்ளிகள் 50 விழுக்காடு தொகையை செலுத்த முன்வருகிறதோ, தகுதி அடிப்படையிலே நிதியை ஒதுக்குவதற்காக 150 லட்சம் ரூபாயை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கி இருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர் செய்ய வேண்டிய பணியை அங்கே செய்யுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 18, திரு. எஸ். ஜெயக்குமார், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**18—**

### மேட்லி ரோடு ரயில்வே பாலம் கட்டுதல்

*10742—**திரு. எஸ். ஜெயக்குமார்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தியாகராய நகர் தொகுதி, மேட்லி ரோடு ரயில்வே பாலம் அரசு கட்டுமான கழகத்தின் மூலம் எப்பொழுது கட்டி முடிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆய்வை நடத்தி அறிக்கை சமர்ப்பித்து இருக்கிறது. அதிலே பள்ளிகளுக்கு சுற்றுச்சுவர் கட்டுகின்ற நிலைமை இல்லை. அதை அரசு செய்வதற்கு இயலாது என்பதை முன்பே தெளிவாகத் தெரிவித்து இருக்கிறோம். அதற்கு பதிலாக உயிர்வேலி அமைப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்குகின்ற சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கிறோம். அதைப்போலவே, 2 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்ற தகவல் வந்தது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அந்த 2 இலட்சம் ரூபாய் தருவதற்கான வாய்ப்பு, 50 விழுக்காடு தொகையை பொது மக்கள் ஏற்பாடு செய்து செலுத்தினால்தான் தர முடியும் என்று அரசு விதி இருக்கிறது. ஆகவே, நீங்கள் 50 விழுக்காடு தொகையை செலுத்த முன்வந்தால், 50 விழுக்காடு தொகையை அரசு தருவதற்கு இன்றைக்கும் தயாராக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை அங்கே செய்வதில் தாமதம் இருக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அரசு அல்லது கல்வித் துறை எந்தவிதமான தயக்கத்தையும் காட்டவில்லை. எந்தெந்த பள்ளிகள் 50 விழுக்காடு தொகையை செலுத்த முன்வருகிறதோ, தகுதி அடிப்படையிலே நிதியை ஒதுக்குவதற்காக 150 லட்சம் ரூபாயை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கி இருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர் செய்ய வேண்டிய பணியை அங்கே செய்யுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 18, திரு. எஸ். ஜெயக்குமார், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**18—**

**மேட்லி ரோடு ரயில்வே பாலம் கட்டுதல்**

*10742—**திரு. எஸ். ஜெயக்குமார்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தியாகராய நகர் தொகுதி, மேட்லி ரோடு ரயில்வே பாலம் அரசு கட்டுமான கழகத்தின் மூலம் எப்பொழுது கட்டி முடிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*1995 நவம்பர் 3*]

சென்னை தியாகராயர் தொகுதி, மேட்லி ரோடு இரயில்வே சுரங்கப் பாதை தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகத்தின் மூலம் கட்டிமுடிக்கப்பட்டு தற்போது வாகனம் மற்றும் பாதசாரிகள் போக்குவரத்திற்காக திறந்து விடப்பட்டுள்ளது.

**திரு. எஸ். ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே வாகனங்கள் விடப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் சொன்னார். ஏற்றுக் கொள்ளுகிறேன். அதே சமயத்தில் பத்து விழுக்காடு வேலைகள் அங்கே பாக்கி நிறுத்தப்பட்டிருக்கின்றன. அதைச் சீக்கிரம் முடித்து அந்தப் பாலத்திலே வாகனங்கள் செல்ல மாண்புமிகு அமைச்சரவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னை தியாகராயர் தொகுதி மேட்லி சாலை இரயில்வே சுரங்கப்பாதை கட்டும் பணியின் மதிப்பீட்டுத் தொகை சுமார் *2* கோடியே *40* இலட்சம் ரூபாய் அளவிலே இன்றைக்கு தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகத்தின் மூலம் கட்டி முடிக்கப்பட்டு, கடந்த *1994*-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் வாகனம் மற்றும் பாதசாரிகள் போக்குவரத்திற்காக அது ஏற்கெனவே திறந்துவிடப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது சுரங்கப் பாதையிலே மழைநீர்வடிகால் பணியும், சுரங்கப்பாதையில் இதர பணிகளும், வர்ணம் பூசுகின்ற பணியும் துரிதமாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இன்னும் *30* விழுக்காடு பணிகள் முடிவடைய இருக்கின்றன. அனைத்துப் பணிகளும் முடிவடைந்தவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வத்தினுடைய ஆட்சியிலே என்னுடைய தொகுதியிலேயுள்ள *972* ரோடுகளும் போடப்பட்டு *4* ஆண்டுகளிலே அந்தத் தொகுதியை ஒரு புதுப் பொலிவு உள்ள தொகுதியாக மாற்றியதற்காக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோலவே கடந்த *22* ஆண்டுகால ஆட்சியிலே *70* சோடியம் விளக்குகள்தான் போடப்பட்டிருந்தன. இப்பொழுது *4* ஆண்டுக்கால ஆட்சியிலே *975* சோடியம் விளக்குகளைப் போட்டு அங்கே பகலைப்போல மாற்றிய இதய தெய்வத்திற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். மேலும் இந்தப் பாலத்திற்கு அந்தப் பக்கத்திலுள்ள மேற்கு மாம்பலம் ரோடு மிகவும் பழுதடைந்துள்ளது.

அந்த ரோட்டை மாற்றி உடனடியாக நல்ல ரோடு அமைத்து வாகனங்கள் செல்ல மாண்புமிகு அமைச்சரவர்கள் உடனடி நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தினுடைய ஈடு இணையற்ற முதல்வர் எங்களது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் இன்றைக்குச் சென்னை மாநகரத்திலே "எழில்மிகு சென்னை 2000" திட்டத்தின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லிய அத்துணை பணிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லிய மேற்கு மாம்பலத்தினுடைய அந்தச் சாலையும் செப்பனிடப்பட்டு கூடிய விரைவிலே ஜனவரி மாதத்திற்குள்ளாக அந்தப் பணிகள் முடிக்கப்பட்டு அனைத்துச் சாலைப் போக்குவரத்தும் அங்கே மாமூலமாக விடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 19, திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**19—**

### இராசிபுரம் நகரில் சாலை செப்பனிடல்

*33210—**திருமதி க. பழனியம்மாள்:**

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், இராசிபுரம் நகரில் தெருச்சாலைகளைச் செப்பனிட்டு, சாக்கடை வசதி செய்து தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், இராசிபுரம் நகரில் சாக்கடை மற்றும் தெருச்சாலை வசதிகள் மேற்கொள்ள நகர்புற வளர்ச்சி மேம்பாட்டு நிதியின் கீழ் முறையே ரூ.10 இலட்சம் மற்றும் ரூ.22.65 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த ரோட்டை மாற்றி உடனடியாக நல்ல ரோடு அமைத்து வாகனங்கள் செல்ல மாண்புமிகு அமைச்சரவர்கள் உடனடி நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தினுடைய ஈடு இணையற்ற முதல்வர் எங்களது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் இன்றைக்குச் சென்னை மாநகரத்திலே "எழில்மிகு சென்னை 2000" திட்டத்தின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லிய அத்துணை பணிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லிய மேற்கு மாம்பலத்தினுடைய அந்தச் சாலையும் செப்பனிடப்பட்டு கூடிய விரைவிலே ஜனவரி மாதத்திற்குள்ளாக அந்தப் பணிகள் முடிக்கப்பட்டு அனைத்துச் சாலைப் போக்குவரத்தும் அங்கே மாமூலமாக விடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 19, திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**19—**

### இராசிபுரம் நகரில் சாலை செப்பனிடல்

**33210*—**திருமதி க. பழனியம்மாள்:**

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், இராசிபுரம் நகரில் தெருச்சாலைகளைச் செப்பனிட்டு, சாக்கடை வசதி செய்து தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், இராசிபுரம் நகரில் சாக்கடை மற்றும் தெருச்சாலை வசதிகள் மேற்கொள்ள நகர்புற வளர்ச்சி மேம்பாட்டு நிதியின் கீழ் முறையே ரூ.10 இலட்சம் மற்றும் ரூ.22.65 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

*1995 நவம்பர் 3]*

**திருமதி க. பழனியம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் இரண்டாவதாக உருவாக்கப்பட்டது இராசிபுரம் நகராட்சி. ஆனால் இத்தனை ஆண்டு காலமாக அங்கே அடிப்படை வசதிகள் செய்யப்படாமல் இருந்த காலகட்டத்தில் நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடம் அந்தக் கோரிக்கையை வைத்தபொழுது அதற்காக இப்பொழுது நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 51 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து இன்றைக்குப் பணிகளெல்லாம் நல்லமுறையிலே நடந்து வருகின்றன. இந்தக் காலகட்டத்தில் அந்த எக்ஸ்டென்ஷன் ஏரியாக்களில் இருக்கின்ற இன்னும் சில பகுதிகள் அந்தத் திட்டத்தில் சேர்க்கப்படாமல் இருக்கின்றன. அதையும் சேர்த்து அந்தப் பகுதிகளிலும் ரோடு வசதி, சாக்கடை வசதி செய்துதர அமைச்சரவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு நகர்ப்புற அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நிதியுதவியை முறையாக அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளினுடைய நிதிநிலையைப் பொறுத்து அரசு தந்து கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே இராசிபுரம் நகரத்திற்கு என்று ரூபாய் 32 இலட்சத்து 65 ஆயிரம் மதிப்பீட்டிலே அங்கே அடிப்படை வசதிகள் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன அந்த 51 இலட்சம் ரூபாய்க்கு உண்டான அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக இன்றைக்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்கான அறிக்கையினை கடந்த 30-8-94-ஆம் தேதியன்று திட்ட மேலாண்மைக் குழு, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. ஆய்வு மேற்கொள்ளப்பட்டபின், முன்மொழிவுகளைச் சரிபார்த்தபின் அதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 11-20*

**திருமதி க. பழனியம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராசிபுரம் நகரத்தின் நடுவில் நெடுஞ்சாலை சென்று கொண்டிருக்கிறது. அந்த நெடுஞ்சாலையின் இருபுறங்களிலும் சரியான திட்டமிட்ட சாக்கடை வசதி இல்லாததால், எத்தனை தடவை ஹைவேஸில் ரோடு போட்டாலும், விரைவில் அது பழுதடைந்துவிடக்கூடிய நிலையிருக்கிறது. எனவே, அந்த நெடுஞ்சாலையின் இருபக்கமும்

[1995 நவம்பர் 3

திட்டமிட்ட சாக்கடை வசதி செய்து, அந்த நெடுஞ்சாலையை மேம்படுத்தித்தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய பணி, ஏற்கெனவே இன்றைக்கு நகர்ப்புற திட்ட மேலாண்மைக் குழுவிற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. நான் ஏற்கெனவே எடுத்துச் சொன்னது போல 32 இலட்சத்து 65 ஆயிரம் மதிப்பீட்டில் நடைபெறுகின்ற வேலையில் சுமார் 7 பணிகள் சாக்கடை அபிவிருத்திக்காக மட்டும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதிலே இரண்டு பணிகள் முடிந்துவிட்டன. 5 பணிகள் முன்னேற்றத்திலே இருந்து கொண்டிருக்கின்றன. திட்ட மேலாண்மைக் குழு இந்தப் பணிகளையெல்லாம் ஆய்வு செய்தபின் மேலும் 51 இலட்சம் ரூபாய்க்கு முன்மொழிவு பெற்றிருக்கிறது நகராட்சியிடமிருந்து. அதையும் ஆய்வு செய்து நகராட்சியினுடைய நிதிநிலைக்கேற்ப வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 20, திருமதி ஆர். சாவித்திரி அம்மாள், இருக்கையில் இல்லை.

8—

## மலைப் பகுதிகளில் மரம் வளர்க்கும் திட்டம்

*44248—**டாக்டர் எஸ்.எஸ்.ஆர். இராமதாஸ்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் குறிப்பாக செஞ்சி, கல்வராயன் மலை, சேர்வராயன் மலைப் பகுதிகளில், ஹெலிகாப்டர் மூலம் பழம் தரும் விதைகளைத் தூவி, மரம் வளர்க்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திட்டமிட்ட சாக்கடை வசதி செய்து, அந்த நெடுஞ்சாலையை மேம்படுத்தித்தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய பணி, ஏற்கெனவே இன்றைக்கு நகர்ப்புற திட்ட மேலாண்மைக் குழுவிற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. நான் ஏற்கெனவே எடுத்துச் சொன்னது போல 32 இலட்சத்து 65 ஆயிரம் மதிப்பீட்டில் நடைபெறுகின்ற வேலையில் சுமார் 7 பணிகள் சாக்கடை அபிவிருத்திக்காக மட்டும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதிலே இரண்டு பணிகள் முடிந்துவிட்டன. 5 பணிகள் முன்னேற்றத்திலே இருந்து கொண்டிருக்கின்றன. திட்ட மேலாண்மைக் குழு இந்தப் பணிகளையெல்லாம் ஆய்வு செய்தபின் மேலும் 51 இலட்சம் ரூபாய்க்கு முன்மொழிவு பெற்றிருக்கிறது நகராட்சியிடமிருந்து. அதையும் ஆய்வு செய்து நகராட்சியினுடைய நிதிநிலைக்கேற்ப வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 20, திருமதி ஆர். சாவித்திரி அம்மாள், இருக்கையில் இல்லை.

8—

### மலைப் பகுதிகளில் மரம் வளர்க்கும் திட்டம்

*44248—**டாக்டர் எஸ்.எஸ்.ஆர். இராமதாஸ்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் குறிப்பாக செஞ்சி, கல்வராயன் மலை, சேர்வராயன் மலைப் பகுதிகளில், ஹெலிகாப்டர் மூலம் பழம் தரும் விதைகளைத் தூவி, மரம் வளர்க்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*1995 நவம்பர் 3]*

*(அ)* தமிழ்நாட்டில் குறிப்பாக செஞ்சி, கல்ராயன் மலை, சேர்வராயன் மலைப்பகுதிகளில் ஹெலிகாப்டர் மூலம் பழம் தரும் விதைகளைத் தூவி மரம் வளர்க்கும் திட்டம் வனத்துறையில் செயல்முறையில் இல்லை.

*(ஆ)* திட்டம் நடைமுறையில் இல்லாததால் கேள்வி எழவில்லை.

**20—**

**குலதீபமங்கலத்தில் சர்க்கரை ஆலை அமைத்தல்**

**38093*—**திருமதி ஆர். சாவித்திரி அம்மாள்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் ஒரு சர்க்கரை ஆலையை முகையூர் தொகுதி, குலதீபமங்கலம் கிராமத்தில் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் முகையூர் தொகுதி குலதீபமங்கலம் கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக்கு தனியாக சர்க்கரை ஆலை அமைக்க திட்டம் ஏதும் இல்லை.

**(ஆ) *உடுக்குறியிடாத வினாக்கள்-**

(முதல் பட்டியல்)

**1—**

**கல்லங்குறிச்சியில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிக்கிளை அமைத்தல்.**

வினா எண் *78697*—**டாக்டர் சு. மணிமேகலை:** மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் ஒன்றியத்தினைச் சார்ந்த கல்லங்குறிச்சியில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கி ஒன்றினைத் துவங்க அரசு பரிந்துரை செய்யுமா?

---

*இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

*1995 நவம்பர் 3*]

(அ) தமிழ்நாட்டில் குறிப்பாக செஞ்சி, கல்ராயன் மலை, சேர்வராயன் மலைப்பகுதிகளில் ஹெலிகாப்டர் மூலம் பழம் தரும் விதைகளைத் தூவி மரம் வளர்க்கும் திட்டம் வனத்துறையில் செயல்முறையில் இல்லை.

(ஆ) திட்டம் நடைமுறையில் இல்லாததால் கேள்வி எழவில்லை.

**20—**

**குலதீபமங்கலத்தில் சர்க்கரை ஆலை அமைத்தல்**

**38093*—**திருமதி ஆர். சாவித்திரி அம்மாள்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் ஒரு சர்க்கரை ஆலையை முகையூர் தொகுதி, குலதீபமங்கலம் கிராமத்தில் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் முகையூர் தொகுதி குலதீபமங்கலம் கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக்கு தனியாக சர்க்கரை ஆலை அமைக்க திட்டம் ஏதும் இல்லை.

**(ஆ) *உடுக்குறியிடாத வினாக்கள்-**

(முதல் பட்டியல்)

**1—**

**கல்லங்குறிச்சியில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிக்கிளை அமைத்தல்.**

வினா எண் *78697*—**டாக்டர் சு. மணிமேகலை:** மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் ஒன்றியத்தினைச் சார்ந்த கல்லங்குறிச்சியில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கி ஒன்றினைத் துவங்க அரசு பரிந்துரை செய்யுமா?

---

*இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

*1995 நவம்பர் 3*]

(அ) தமிழ்நாட்டில் குறிப்பாக செஞ்சி, கல்ராயன் மலை, சேர்வராயன் மலைப்பகுதிகளில் ஹெலிகாப்டர் மூலம் பழம் தரும் விதைகளைத் தூவி மரம் வளர்க்கும் திட்டம் வனத்துறையில் செயல்முறையில் இல்லை.

(ஆ) திட்டம் நடைமுறையில் இல்லாததால் கேள்வி எழவில்லை.

**20—**

**குலதீபமங்கலத்தில் சர்க்கரை ஆலை அமைத்தல்**

**38093*—திருமதி **ஆர். சாவித்திரி அம்மாள்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் ஒரு சர்க்கரை ஆலையை முகையூர் தொகுதி, குலதீபமங்கலம் கிராமத்தில் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் முகையூர் தொகுதி குலதீபமங்கலம் கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக்கு தனியாக சர்க்கரை ஆலை அமைக்க திட்டம் ஏதும் இல்லை.

**(ஆ) *உடுக்குறியிடாத வினாக்கள்-**

(முதல் பட்டியல்)

**1—**

**கல்லங்குறிச்சியில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிக்கிளை அமைத்தல்.**

வினா எண் *78697*—**டாக்டர் சு. மணிமேகலை:** மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் ஒன்றியத்தினைச் சார்ந்த கல்லங்குறிச்சியில் தேசியமயமாக்கப்பட்ட வங்கி ஒன்றினைத் துவங்க அரசு பரிந்துரை செய்யுமா?

---

*இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

விடை--

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:**

வங்கிக் கிளைகள் தொடங்குவதற்கான உரிமம் வழங்குவது இந்திய ரிசர்வ் வங்கிக் கொள்கையின்படி செயல்பட்டு வருகிறது. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் ஊரகப் பகுதிகளில் கிளைகளைத் திறப்பது குறித்து ஆய்வு செய்ய மாவட்டந்தோறும் செயல்பட்டு வரும் மாவட்ட ஆலோசனைக் குழு (District Consultative Committee) மேற்கொண்டு வருகிறது. இதன்படி மாவட்ட ஆலோசனை குழு தங்கள் தங்கள் மாவட்டங்களில் வங்கி வசதியில்லாத கிராமங்களைக் கண்டறிந்து பரிந்துரை செய்த இடங்களை அரசின் பரிசீலனைக்கு பின் உரிமம் வழங்கக்கோரி மத்திய ரிசர்வ் வங்கிக்கு அனுப்பப்பட்டு வருகிறது. தேவையான ஆய்வுக்கு பின் மத்திய ரிசர்வ் வங்கி புதிய வங்கிக் கிளைகள் திறக்க உரிமம் வழங்கி வருகிறது. திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டத்தில் உள்ள கல்லங்குறிச்சியில் வணிகவங்கி விரிவாக்கத் திட்டம் *1990-95*-ஆம் ஆண்டுக்கான திட்டத்தில் புதிய வங்கிக்கிளை திறப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவில் இடம் பெறவில்லை. மேலும், பணிப் பகுதி அணுகுமுறையின் கீழ் சிட்டி யூனியன் வங்கி, அரியலூர் கிளை, கோவிந்தபுரம், இலுபியூர், கருகூர், கல்லங்குறிச்சி, ஒட்டகோவில், பொட்ட வெளி, சென்னிவானம், அமினாபாத் மற்றும் ராயம்புரம் ஆகிய கிராமங்களுக்கு வங்கி வசதியினை அளித்து வருகிறது. எனவே, பணி பகுதி அணுகுமுறையின் கீழ் கல்லங்குறிச்சி கிராமம் சிட்டி யூனியன் வங்கி, அரியலூர் கிளையில் சேவையை பெற்று வருகிறது என்ற விவரம் அறிய வருகிறது.

2—

**குடிசை மக்களுக்கு இலவச கூட்டுமனைப் பட்டா வழங்குதல்**

வினா எண் *8055*—திரு. **ஆர். சிங்காரம்:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் குடிசை மக்களுக்கு கணவன்-மனைவி பெயரில் இலவச கூட்டுமனைப்பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:**

'இல்லை'.

1995 நவம்பர் 3]

3—

## அவிநாசி ஒன்றியத்தில் நிலங்களை நலத்திட்டத்திற்கு பயன்படுத்துதல்

வினா எண் 21528—டாக்டர் மு. **சீனியம்மாள்:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அவிநாசி ஒன்றியம், பொங்கலூர் கிராமத்தில், அரசிற்கு தானமாக கொடுத்துள்ள சுமார் 27½ ஏக்கர் பூமியை, ஏதாவது அரசு நலத்திட்டத்திற்குப் பயன்படுத்தத் திட்டம் உள்ளதா?

**விடை**---

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:**

அவிநாசி வட்டம், பொங்கலூர் கிராமத்தில் அரசிற்கு தானமாக கொடுத்துள்ள 11.16.5 ஹெக்டேர் நிலத்தினை அரசின் நலத்திட்டத்திற்கு பயன்படுத்தும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

4—

## பேராவூரணி ஒன்றியத்தில் குடிமனைப்பட்டா வழங்குதல்.

வினா எண் 24353—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், குறிச்சியைச் சேர்ந்த மேட்டுவயல், இந்திரா நகர் குளம் புறம்போக்கில் குடியிருந்துவருவோர்க்கு குடிமனைப்பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை**--

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:**

[*1995 நவம்பர் 3*

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், குறிச்சியைச் சேர்ந்த மேட்டுவயல், இந்திரா நகர் புறம்போக்கு நிலம் அரசால் ஒப்படை வழங்க தடை செய்யப்பட்டுள்ள நீர்நிலைப் புறம்போக்காகும். எனவே, இந்த புறம்போக்கில் குடியிருப்போர்க்கு வீட்டுமனைப்பட்டா வழங்க இயலாது.

**5—**

**கந்தர்வக்கோட்டை யூனியனில் வீட்டுமனைப்பட்டா வழங்குதல்**

*வினா எண் 26409*—**திரு. சி. சுவாமிநாதன்:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கந்தர்வக்கோட்டை யூனியன் பகுதியில், இதுவரை எத்தனை நபர்கள் வீட்டுமனைப்பட்டா கேட்டு விண்ணப்பித்து உள்ளனர்?*

*(ஆ) எத்தனை நபர்களுக்கு இந்த ஆண்டு வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது?*

*(இ) வரும் ஆண்டு எத்தனை நபர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்படும்?*

**விடை--**

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:**

*(அ), (ஆ) மற்றும் (இ):* கந்தர்வக்கோட்டை யூனியன் பகுதியில் இதுவரை வீட்டுமனைப்பட்டா கேட்டு விண்ணப்பித்துள்ளவர்கள் எண்ணிக்கை 33 ஆகும். இவர்களுடன் சேர்த்து, 1993-94-ஆம் ஆண்டில் மொத்தம் 731 பேருக்கும் 1994-95-ஆம் ஆண்டில் 281 பேருக்கும் வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. தற்போது வீட்டுமனைப்பட்டா வழங்கக் கேட்டு மனுக்கள் ஏதும் நிலுவையிலில்லை. எனினும், 1995-96-ஆம் ஆண்டில், தோராயமாக 600 பேருக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட உள்ளது.

*1995 நவம்பர் 3]*

**6—**

### மேட்டூர் தொகுதியில் மனைப்பட்டா வழங்குதல்

*வினா எண் 28001*—**திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா*—

*மேட்டூர் தொகுதியில், மேட்டூர் நகரியத்தில் 1 முதல் 60 வரை வார்டுகளில் உள்ள வீடுகளுக்கு மனைப்பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை**—

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:**

மேட்டூர் நகரியத்திலுள்ள ஆக்கிரமிப்புக்களை வரன்முறை செய்து வீட்டுமனைப்பட்டா வழங்குவது தொடர்பான செயற்குறிப்பு அரசின் ஆய்விலுள்ளது.

**7—**

### வல்லவன் பட்டினத்தில் பட்டா வழங்குதல்

*வினா எண் 28002*—**திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா*—

*தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருத்தேவன் ஊராட்சி வல்லவன் பட்டினத்தில் குடியிருப்பு மனை கிரயம் வாங்கிவிட்டபடியால் அவர்களுக்குப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை**—

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:**

திருத்தேவன் ஊராட்சியில் மீனவர்களும் மற்றவர்களும் தனியாருக்குச் சொந்தமான இடங்களில் குடியிருந்து வருகிறார்கள். எனவே, அந்த நிலத்தில் குடியிருந்து வரும் மக்கள் நிலக் கிரய தொகையைச் செலுத்தி தாங்கள் குடியிருந்து வரும் நிலங்களை வாங்குவதாலும், நில உரிமையாளர்களும் இதில் ஒருங்கிணைந்து செயல்படுவதாலும் அரசால்

பட்டா வழங்க வேண்டிய நிலை ஏதும் எழவில்லை. மேலும் பட்டா வழங்குவதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**8—**

**திருப்பத்தூர் தொகுதியில் பட்டா வழங்குதல்**

வினா எண் *33116*—**திரு. ஏ.கே. சி. சுந்தரவேல்:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருப்பத்தூர் தொகுதியில் அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்கள் எத்தனை ஏக்கர் உள்ளன?*

*(ஆ) இதுவரை எத்தனை பேருக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளது?*

**விடை--**

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்**

*(அ) திருப்பத்தூர் தொகுதியில் அரசுக்குச் சொந்தமான 827.26.5 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்கள் உள்ளன.*

*(ஆ) 27,390 பேருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. (வீட்டுமனைகள் உட்பட)*

**9—**

**தனியார் அபிவிருத்தி சமூகக்காடு வளர்ப்புத் திட்டம்.**

வினா எண் *33299*—**திரு. வி. ரவிச்சந்திரன்:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*உப்பிலியாபுரம் தொகுதியிலுள்ள புறம்போக்கு நிலங்களை தனியார் அபிவிருத்தி சமூகக்காடு வளர்ப்புத் திட்டத்திற்கு 99 வருட குத்தகைக்கு விட அரசு அனுமதி அளிக்குமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:**

*உப்பிலியாபுரம் தொகுதியில் உள்ள புறம்போக்கு நிலங்களில் மலைவாழ் மக்களின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வனத்துறை மூலம்*

*1995 நவம்பர் 3]*

வன உற்பத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. திட்டப்பணிகளின் பயன்கள் மலைவாழ் மக்களுக்கு சென்றடையும் நோக்கத்தோடு நிறைவேற்றப்படுவதால் தனியாருக்குக் குத்தகைக்கு விட அரசு அனுமதிக்காது.

**10—**

**புறம்போக்கு நிலத்தை ஏழைகளுக்கு வழங்குதல்**

*வினா எண் 36565*—**திரு. சிங்கை கோவிந்தராசு:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலத்தை விவசாயம் செய்ய நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கப்படுகின்றதா?

*(ஆ)* ஆம் எனில், கோவை மாவட்டத்தில் எஸ்.எஸ். குளம் ஒன்றியத்தில் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டுள்ளது?

**விடை--**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:**

*(அ)* விவசாயம் செய்வதற்கு ஏற்ற புறம்போக்கு நிலங்கள் உள்ள கிராமங்களில் நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் வழங்கப்படுகிறது.

*(ஆ)* எஸ். எஸ். குளம் ஒன்றியத்தில் விவசாயம் செய்வதற்கு ஏற்ற புறம்போக்கு நிலம் இல்லாத காரணத்தால் ஒருவருக்கும் நிலம் வழங்கப்படவில்லை.

**11—**

**கிருஷ்ணகிரி ஒன்றியத்தில் நிலங்களை வருவாய்க் கிராமத்தில் சேர்த்தல்**

*வினா எண் 38482*—**திரு. கே. முனிவெங்கடப்பன்:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கிருஷ்ணகிரி ஒன்றியம், ஆலப்பட்டி வருவாய்க் கிராமத்தில் சேர்ந்துள்ள வெலகலஅள்ளி கிராம நிலங்களை வெலகலஅள்ளி வருவாய்க்கிராமத்தில் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருத்தப்பட்ட 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி தேர்தல்கள் நடைபெற்று தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் புதிய அமைப்புகளில் பதவியேற்றப் பின்னர் அந்த அமைப்புகளின் தீர்மானங்களை பெறறு, ஆய்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**12—**

**கடம்பூர்க்குட்டையில் பட்டா வழங்குதல்**

வினா எண். 39622-திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், கடம்பூர்க் குட்டையில் வீடு கட்டிக் கொண்டிருப்பவர்களுக்கு பட்டா கொடுக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

**விடை---**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம்; கடம்பூர் கிராமம், புல எண். 272/2இல் வீடு கட்டிக் கொண்டிருக்கும் நிலம் குட்டை புறம்போக்கு நிலமாகும். இக்குட்டையில் மழை காலங்களில் நீர் நிரம்பி வீடுகள் கட்டியுள்ள பகுதியில் தண்ணீர் தேங்கி விடுகின்றது. எனவே, மழைக்காலங்களில் வீடுகள் பாதிக்கப்பட வாய்ப்பு இருப்பதாலும், நீர்நிலைப் புறம்போக்குகளில் ஒப்படை செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளதாலும் இதில் வீடு கட்டியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**13—**

**இயற்கை இடர்பாடுகளுக்கு நட்ட ஈட்டுத் தொகையை உயர்த்துதல்**

*வினா எண் 40042*—**திரு. சி. ஞானசேகரன்:** *மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மழைக்காலத்தில் வீடு இழந்தோர் தீக்கிரையாவோர் ஆகியோருக்கு அளிக்கப்படும் நட்ட ஈட்டுத் தொகையை ரூ. 1,000 ஆக உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

**விடை--**

***மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:***

இயற்கை இடர்பாடுகளான மழை, வெள்ளம் மற்றும் தீ விபத்தினால் பாதிக்கப்படும் குடிசைகளுக்கு சென்னை மாநகரத்தில் முழுமையாக பாதிக்கப்படும் குடிசை ஒன்றுக்கு ரூ. 600-ம் பகுதியாக பாதிக்கப்பட்ட குடிசை ஒன்றுக்கு ரூ. 300-ம் வழங்கப்படுகிறது. இது போன்று இத்தொகை சென்னை நகரைத் தவிர ஏனைய இடங்களுக்கு முறையே ரூ. 500 மற்றும் ரூ. 250 என்ற விகிதத்தில் வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் தொகை முன்பு முறையே ரூ. 400 மறறும் ரூ. 200 என்றிருந்தது. 1994 நவம்பர் முதல் மேற்கண்டபடி உயர்த்தப்பட்டுள்ளது. இதனை மேலும் உயர்த்த அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**14—**

**ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம்**

*வினா எண் 45609*—**திரு. கே. கந்தசாமி:** *மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*1994-95-ஆம் நிதியாண்டில் ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் பயன் பெற்றவர் எத்தனை பேர்?*

**விடை--**

***மாண்புமிகு திரு. எஸ். டி சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:***

1994-95-ஆம் நிதியாண்டில் ஏழைகளுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் மாநிலம் முழுவதும் பயன்பெற்றோர் எண்ணிக்கை 2,09,541 ஆகும்.

**15—**

## இராமநாதபுரம் துணை இயக்குநர் நலப்பணிகள் அலுவலகத்தைப் பரமக்குடிக்கு மாற்றுதல்

வினா எண் 9115—**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரத்தில் இயங்கி வருகின்ற பரமக்குடி துணை இயக்குநர் நலப் பணிகள் அலுவலகத்தை பரமக்குடிக்கு மாற்றப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நலவாழ்வுத்துறை அமைச்சர்:**

ஆம். அரசு ஆணை (நிலை) எண். 292, சுகாதாரம், நாள் 6-3-1995-இல் துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் அலுவலகத்தை பரமக்குடிக்கு மாறுதல் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**16—**

## திருப்பத்தூர் தொகுதியில் தடுப்பூசி போட நடவடிக்கை

வினா எண் 27804—**திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதியில் டைபாயிட் மலேரியா போன்ற நோய்களை தடுக்க தடுப்பூசி போட அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :**

டைபாயிட் நோய் பரவிய தகவல் தெரிந்தவுடன் சுகாதார அதிகாரிகளால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு தடுப்பூசி போடப்படுகிறது. உடனடி சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. காய்ச்சல்

*1995 நவம்பர் 3]*

என்று சந்தேகப்படும் நோயாளியின் இரத்தம் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு, மலேரியா காய்ச்சல் என்று உறுதி செய்யப்பட்டால், நோயாளிகளுக்கு மாத்திரைகள் மூலம் உடனடி சிகிச்சை அளிக்கப்படுகிறது.

**17—**

**குலசேகரம் ஊராட்சியில் கொசுத் தொல்லையைப் போக்க நடவடிக்கை**

வினா எண் *33174*—**திரு. இரா. அப்பு நடேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில், குலசேகரம் ஊராட்சியில் கொசுத் தொல்லையால் பொது மக்கள் அவதிப்படுவது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :**

(அ) ஆம்.

(ஆ) கொசு ஒழிப்பது சட்டப்படி உள்ளாட்சி மன்றங்களின் பொறுப்பாகும். தற்பொழுது அரசு மானிய உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் கொசு ஒழிப்புத் திட்டம் இப்பகுதியில் இல்லை. இப்பகுதி மக்கள் கொசுத் தொல்லையினால் அவதிப்படுவதைக் கருத்திற் கொண்டு கொசு ஒழிப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்த அப்பேரூராட்சி நிர்வாக அதிகாரிக்குக் கருத்துரு ஒன்றினை அனுப்புமாறு நாகர்கோவில் துணை இயக்குநர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

**18—**

**ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குக் கட்டிடங்கள் கட்டுதல்**

வினா எண் *36272*—**திரு. பி.வி. இராஜேந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தொகுதியில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டிட வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளின் விவரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வேதாரண்யத் தொகுதியில் ஏழு ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன.

இவற்றில் தலைஞாயிறு காரியப்பட்டினம், கோடிக்கரை, ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசு நிரந்தரக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன.

நாலுவேதபதி ஆரம்ப சுகாதார நிலையம் சமுதாய நல மையத்திலும், நீர்மூலை ஆரம்ப சுகாதார நிலையம் ஊராட்சி ஒன்றியக் கட்டிடத்திலும் ஆயக்காரன் புலம் ஆரம்ப சுகாதார நிலையம் ஊராட்சிக்குச் சொந்தமான கட்டிடத்திலும் வாடகை இல்லா அடிப்படையில் இயங்கி வருகின்றன.

தேத்தாக்குடி ஆரம்ப சுகாதார நிலையம் வாடகைக் கட்டிடத்தில் செயல்பட்டு வருகின்றது.

மேற்குறிப்பிட்டவற்றுள் நாலுவேதபதி, ஆயக்காரன்புலம் மற்றும் தேத்தாக்குடி ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டிடம் கட்ட ரூ. 10,000 பொதுமக்கள் நன்கொடை பெறப்பட்டுள்ளது. தேவையான நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**19—**

## விளாத்திகுளம் அரசு மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளின் விவரம்

வினா எண் 37909—**திருமதி என். கனகவல்லி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*1995 நவம்பர் 3]*

(அ) விளாத்திகுளம் தொகுதி, விளாத்திகுளம் அரசு மருத்துவமனைக்கு தினசரி வரும் புற நோயாளிகள் எத்தனை பேர்?

(ஆ) உள்நோயாளிகள் எத்தனை பேர் அங்கு தங்க முடியும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

(அ) விளாத்திக்குளம் தொகுதி, விளாத்திகுளம் அரசு மருத்துவமனைக்கு தினசரி வரும் புறநோயாளிகளின் எண்ணிக்கை சராசரியாக 149 பேர்.

(ஆ) உள் நோயாளிகள் 56 பேர் அங்கு தங்க முடியும்.

**20—**

**மருத்துவ அலுவலர்களுக்கு வீடுகட்டும் திட்டம்**

வினா எண் 44928—**திரு. கே. முனிவெங்கடப்பன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருட்டிணகிரி தொகுதி, ஆலப்பட்டியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களுக்கு வீடுகட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை--**

**மாண்புமிகு சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஆலம்பட்டியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவ அலுவலர் குடியிருப்பு கட்டிடம் கட்டும் திட்டம் தற்சமயம் ஏதுமில்லை.

[1995 நவம்பர் 3

21—

### காவேரிப்பட்டினத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 44961—**திரு. எம். பூராசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, காவேரிப்பட்டினத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டத் தேவையான நிலம் இல்லாமையால் இங்கு கட்டிடம் கட்ட தற்சமயம் வாய்ப்பில்லை.

22—

### வேலூர் மருத்துவமனைக்கு ஆலோசனைக்குழு அமைத்தல்.

வினா எண் 48002—**திரு.ஏ.கே. சி. சுந்தரவேல்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், வேலூர் அரசு தலைமை மருத்துவமனை சிறப்பாக நடத்தப்படுவதற்கு ஆலோசனைக்குழு அமைக்கப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம் வேலூர் அரசு தலைமை மருத்துவமனையில் ஏற்கனவே மருத்துவ ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

*1995 நவம்பர் 3]*

**23—**

**கொடுமுடி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மற்றும் சவஊர்தி வழங்குதல்.**

வினா எண் *48344*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்**, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொடுமுடி அரசு மருத்துவமனைக்கு ஒரு ஆம்புலன்ஸ் மற்றும் சவஊர்தி வழங்கப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

*50* படுக்கைகளுக்கு மேல் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கு பகுதி *2* திட்டத்தின் கீழ் இரண்டு அல்லது மூன்று தவணைகளாக ஆம்புலன்ஸ் வேன் வழங்கப்பட்டு வருகின்றன. கொடுமுடி அரசு மருத்துவமனை *26* படுக்கை வசதி கொண்டதாகும். *50* படுக்கை வசதி கொண்ட அரசு மருத்துவமனைகளுக்கு ஆம்புலன்ஸ் வசதி செய்த பிறகு நிதி நிலைமை ஒட்டி வருங்கால நிதி ஆண்டுகளில் *50* படுக்கைக்குக் கீழுள்ள மருத்துவமனைகளுக்கு ஆம்புலன்ஸ் வேன் பகுதி *2* திட்டத்தின் கீழ் வழங்க அரசு ஆவன செய்யும். மற்றும் ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு மாவட்ட மருத்துவமனைக்கு இறந்தவர்களை எடுத்துச் செல்ல ஒரு ஊர்தி வழங்கப்பட்டுள்ளது. மற்றபடி அரசு தாலுக்கா/தாலுக்கா அல்லாத மருத்துவமனைகளில் இறந்தவர்களை எடுத்துச் செல்ல ஊர்திகள் இதுவரை வழங்கப்படவில்லை.

**24—**

**பள்ளப்பட்டி ஹாஜிவாப்பு நினைவு மருத்துவமனைக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *52114*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா**, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், பள்ளப்பட்டி ஹாஜி, வாப்பு நினைவு மருத்துவமனைக்கு கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

இல்லை.

**25—**

**டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்திற்கு ஆய்வரங்கம் கட்டுதல்**

வினா எண் *52127*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் ஆய்வரங்கம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :**

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் ஆய்வரங்கம் கட்ட செயற்குறிப்பு ஏதுமில்லை.

**26—**

**மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் பத்திரிகைகள் வெளியிடுதல்**

வினா எண் *52128*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் பத்திரிகைகள் வெளியிடப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1. செய்தி மடல் இயக்குநர், ஐபிபி-5, துறையிலிருந்து 10,000 நகல்கள் அச்சிடப்பட்டு, விலையின்றி அடிப்படை ஊழியர், பல்நோக்கு சுகாதார அலுவலர், மருத்துவ அலுவலர், சுகாதாரப் பணியாளர், துணை தொடர்பு அலுவலர், மகளிர் குழந்தைகள் முன்னேற்றத்திட்டப் பணியாளர் (ICDS Staff) ஆகியோருக்கு அளிக்கப்படுகிறது.

2. குடும்ப நலச் செய்திக்கதிர்.

3. ஹெல்த் நியூஸ். இவை இரண்டும் இயக்குநர், குடும்ப நலத்துறையால் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

**27—**

**மருத்துவக் கல்விச் சம்பந்தமாக திங்கள் இதழ்.**

வினா எண் 52141--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் மூலம் மருத்துவக் கல்வி சம்பந்தமான திங்கள் இதழ் நடத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை---**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் மூலம் மருத்துவக் கல்வி சம்பந்தமான திங்கள் இதழ் நடத்த செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**28—**

**மருத்துவ ஆராய்ச்சி பூங்கா மற்றும் அறிவியல் பூங்கா அமைத்தல்**

வினா எண் 52145--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகத்தில் மருத்துவ ஆராய்ச்சி பூங்கா மற்றும் அறிவியல் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ ஆராய்ச்சி பூங்கா மற்றும் அறிவியல் பூங்கா அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**29—**

**இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் கூடுதலாக மருத்துவர் நியமித்தல்**

வினா எண் 52155--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்ட அரசினர் மருத்துவமனையில் கூடுதலாக மருத்துவர்கள் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

387 படுக்கைகள் கொண்ட இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ஆறு பெண் உதவி மருத்துவர்களும் 22 ஆண் மருத்துவர்களும் பணி புரிந்து வருகின்றனர். எனவே மேற்கண்ட மருத்துவமனைக்கு கூடுதலாக மருத்துவர்களை நியமிப்பதற்குத் தற்போது அவசியம் இல்லை.

**30—**

**சூளகிரி ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர் நியமனம்**

வினா எண் 52157--திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*1995* நவம்பர் *3*]

தர்மபுரி மாவட்டம், ஓசூர் வட்டம், சூளகிரி ஆரம்ப சுகாதார நிலையத்தில் காலியாக உள்ள மருத்துவ அதிகாரி பணியிடத்தை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

தர்மபுரி மாவட்டம் சூளகிரி ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர் பணியிடங்கள் இரண்டு. இவ்விரண்டு பணியிடங்களிலும் இரு பெண் மருத்துவர்கள் பணி புரிந்து வருகிறார்கள். இங்கு பணியிடங்கள் ஏதும் காலியாக இல்லை.

**31—**

**அரசு பொது மருத்துவமனையில் வி.ஐ.பி. விசேஷ அறைக்கு குளிர்சாதன வசதி**

வினா எண் *61821*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:-

சென்னை அரசு பொது மருத்துவமனையில் வி.ஐ.பி. விசேஷ அறை *5*-க்கும் குளிர்சாதன வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை-**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

இல்லை.

**32—**

**திருச்சிராப்பள்ளி மாவட்ட அரசு பொது மருத்துவமனைக்கு கூடுதல் பல் மருத்துவர் நியமனம்**

வினா எண் *61854*---**டாக்டர் ஜி. ஆர். மாலா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் அரசு பொது மருத்துவமனையில் பல் மருத்துவர் பற்றாக்குறை இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் கூடுதலாக பல் மருத்துவர்களை நியமிக்க அரசு முன் வருமா?

**விடை--**

***மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:***

(அ) திருச்சிராப்பள்ளி அரசினர் தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவர் (பல்) பதவி ஒன்று ஏற்படுத்தப்பட்டு அதில் பல் மருத்துவர் ஒருவர் பணி புரிந்து வருகிறார். பற்றாக்குறை இருப்பதாக இதுநாள் வரை எந்தவித புகாரோ (அல்லது) கூடுதல் பணியிடங்கள் ஏற்படுத்தக் கோரிக்கையோ அரசின் கவனத்துக்குக் கொண்டு வரப்படவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**33—**

**தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்குதல்**

வினா எண் *67751*—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எய்ட்ஸ் நோய் தடுப்பு பணியாற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்குவதற்கு அரசிடம் செயற் குறிப்பு இருக்கிறதா?

**விடை--**

***மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:***

ஆம்.

~~1995~~ 34 நவம்பர் 3]

## மருத்துவ தகவல் தொடர்பு அமைப்பு ஏற்படுத்துதல்

வினா எண் 67787—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் சார்பில் மருத்துவ தகவல் தொடர்பு அமைப்பு ஏற்படுத்துவதற்கு திட்டம் இருக்கிறதா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

நவீன மருத்துவ தகவல்களையும் குறிப்புகளையும் உடனுக்குடன் செயற்கைக் கோள் வழியாக சேகரிப்பதற்காக மெட்லார்ஸ் (Medlars Medical Literature Analysis And Retrieval System) என்னும் மையம் ஒன்று தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பட்டுள்ளது. அமெரிக்காவிலுள்ள மருத்துவத் தகவல் மையத்துடன் இணைக்கப்பட்டு உள்ளது. புது தில்லியில் உள்ள தேசிய தகவல் மையத்துடனும் இது இணைக்கப்பட்டு, 1993 டிசம்பர் மாதம் முதல் செயல்பட்டு வருகிறது. இதைத் தவிர வேறு தகவல் தொடர்பு அமைப்பு ஏற்படுத்துவதற்கு இப்போது திட்டம் ஏதுமில்லை.

**35—**

## மாணவர்களுக்கு எய்ட்ஸ் நோயினைப் பற்றிய குறிப்பேடுகள் வழங்குதல்

வினா எண் 67700—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு எய்ட்ஸ் நோயினைப் பற்றிய குறிப்பேடுகள் வழங்குவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?*

விடை--

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

குறிப்பேடுகள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் அறிவிப்புகள் பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

**36—**

**வாஸக்டமி அறுவை சிகிச்சை செய்தோர் விவரம்.**

வினா எண் *77354*—**டாக்டர் பிட்ரிக்ஸ் டி' சோசா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

Whether the Government will provide statistics for percentage of failure in vasectomy operations?

விடை--

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

நமது மாநிலத்தில் இந்நாள் வரை வாஸக்டமி அறுவை சிகிச்சைகளில் எவ்விதமான தோல்வியும் ஏற்படவில்லை. கடந்த *5* வருடத்தில் நடைபெற்ற வாஸக்டமி அறுவை சிகிச்சை செய்தோர் விவரம் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| *1990-91* | .. | .. | *7,201* |
| *1991-92* | .. | .. | *3,133* |
| *1992-93* | .. | .. | *1,492* |
| *1993-94* | .. | .. | *991* |
| *1994-95* | .. | .. | *580* |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**37—**

**நகரப் பேருந்தின் தூரத்தை அதிகப்படுத்துதல்.**

வினா எண் 30121--**திரு. ஆர். பி. பரமசிவம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகரப் பேருந்து இயக்குவதற்கான தூரத்தை 50 கிலோ மீட்டராக அதிகப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**38—**

**இராமநாதபுரம் மாவட்டத்தில் துறைமுகம் ஏற்படுத்துதல்:**

வினா எண் 40245—**டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் துறைமுகம் ஏற்படுத்தும் திட்டத்தை மாநில அரசு மத்திய அரசிடம் வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

39—

### வாழைத்தோட்டம் சாலையை பிரதான சாலையுடன் இணைத்தல்

வினா எண் 44332—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், மசினக்குடி ஊராட்சி, வாழைத் தோட்டம் கிராமபுறச் சாலையை பிரதான சாலையுடன் இணைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள வனச்சாலை செப்பனிடப்பட்டு, தார்ச்சாலையாக மாற்றப்பட்டு, தற்பொழுது ஊட்டி தெப்பக்காடு வழி கல்லட்டி நெடுஞ்சாலையுடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், பாரதியார் போக்குவரத்துக் கழக பேருந்துகள் இச்சாலை வழியாக சென்று வருகின்றன.

40—

### கோனேகவுண்டன் குட்டையினைப் புதுப்பித்தல்

வினா எண் 53337—**திரு. கே. ஏ. மனோகரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தருமபுரி மாவட்டம், சூளகிரி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மேல் மொரசபட்டி கிராமத்தில் உள்ள கொனேகவுண்டன் குட்டையினை இடைபடுகாடுகள் துறை மூலமாக புதுப்பிக்க அரசு முன்வருமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3]*

இடைபடுகாடுகள் திட்டத்தின் கீழ் குளங்களை மேம்படுத்தும் பணிக்கு நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால் தருமபுரி மாவட்டம், சூளகிரி ஊராட்சி ஒன்றியம், மேல் மொரசப்பட்டி கிராமத்திலுள்ள கொனேகவுண்டன் குட்டையினை இத்திட்டத்தின் கீழ் புதுப்பிக்க இயலாது.

**41—**

**சமூக நலக்காடுகளில் பயன்தரும் மரங்களை நடுதல்**

வினா எண் *53560*—**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியத்திலுள்ள சமூக நலக்காடுகளில் பயன்தரும் ஈட்டி, கருங்காலி, மரங்களை நட அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

சமூகக் காடுகள் திட்டத்தின் கீழ் ஏரிகள் மற்றும் அவற்றின் கரைகளில் தோட்டங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. இத்தகைய இடங்களில் ஈட்டி மற்றும் கருங்காலி மரங்கள் வளராதாகையால், மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றிய சமூகக்காடுகளில் ஈட்டி மற்றும் கருங்காலி மரங்களை நடுவது இயலாது.

**42—**

**அரசு போக்குவரத்துக் கழகங்களில் இலவச அனுமதி சீட்டுகள்**

வினா எண் *64907*—**திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் யார் யாருக்கு பேருந்துகளில் இலவசமாக செல்ல அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன?

(ஆ) அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு இதற்கான இழப்புத் தொகை வழங்கப்பட்டுள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

(அ) தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி இயக்குநர்களின் கட்டுப்பாட்டிலுள்ள பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள், 50. விழுக்காடுகளுக்கும் அதற்கு மேலும் கை, கால் ஊனமுற்றும்,, காது கேளாதும் இருப்பவர்கள் 20 வயது வரையிலும், 50 விழுக்காடு அதற்கு மேல் பார்வையற்றோர் (வயதுவரம்பின்றி), மத்திய மாநில ஒய்வூதியம் அல்லது இரு ஒய்வூதியம் பெறும் சுதந்திர எல்லைப்போராட்ட வீரர்கள் மற்றும் மொழிக்காவலர்கள், சில வரைமுறைகளுக்குட்பட்டு அனுமதிக்கப்படும் பத்திரிகை நிருபர்கள் மற்றும் சட்டபேரவை உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் சட்டமன்ற, மேலவை மற்றும் பேரவை உறுப்பினர்கள் ஆகியோர் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

(ஆ) இதற்கான இழப்பு தொகையை சம்மந்தப்பட்ட அரசு நிர்வாகத்துறைகள் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஈடு செய்து வருகின்றன.

**43—**

## எரிசக்தி மரம் பயிரிடும் திட்டம்

வினா எண் 64969—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எரிசக்தி மரம் பயிரிடும் திட்டத்தினைச் செயல்படுத்த எந்தெந்த மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன?

(ஆ) இதன் மூலம் கிராம மக்களுக்கு வேலை வாய்ப்புபெற அரசு ஆவன செய்யுமா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

(அ) எரிசக்தி மரம் பயிரிடும் திட்டம் வனத்துறையினால் பல்வேறு மாவட்டங்களில் குறிப்பாக செங்கை-எம்.ஜி.ஆர்,. விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார், வடஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர், தருமபுரி, திண்டுக்கல்-அண்ணா, திருச்சி, மதுரை போன்ற மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றது.

(ஆ) மேற்காண் திட்டத்திற்கான ஒதுக்கீட்டில் சுமார் 80 விழுக்காடுகள் கிராம மக்களை வேலைக்கு அமர்த்தி, திட்டங்களை செயல்படுத்த செலவு செய்யப்படுகிறது. இதனால் 19,375 குடும்பங்களுக்கு ஆண்டு முழுவதும் வேலை வாய்ப்புத் தர ஏதுவாக உள்ளது.

**44—**

**கோடிக்கரையில் கலங்கரை விளக்கம் அமைத்தல்**

வினா எண் 67558—திருமதி கே. **மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

நாகை-காயிதே மில்லத் மாவட்டம் கோடிக்கரையில் புதிதாக கலங்ரை விளக்கம் உடனடியாக அமைக்குமாறு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா ?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் கோடிக்கரையில் மற்றுமொரு கலங்கரை விளக்கம் கட்டுவதற்கு தமிழ்நாடு துறைமுகத் துறையில் திட்டம் ஏதும் இல்லை.

45—

## சென்னை திருவள்ளுவர் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துதல்

*வினா எண் 67606*—**திருமதி கே. மரியம் உல் ஆசியா** : மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையிலுள்ள திருவள்ளுவர் விரைவுப்பேருந்து நிலையத்தை விரிவுப்படுத்துவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

**விடை**--

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

ஆம். எம்.யு.சி. மைதானத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

46—

## மன்னர் சேதுபதி பெயரில் போக்குவரத்துக் கழகம் அமைத்தல்.

*வினா எண் 66633*—**திருமதி கே. மரியம் உல் ஆசியா**: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மன்னர் சேதுபதி பெயரில் போக்குவரத்துக் கழகம் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை**---

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

இல்லை.

47—

## குளச்சலில் பணிமனை அமைத்தல்

*வினா எண் 78626*--**திரு. ஆ. பாலையா**: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*1995 நவம்பர் 3]*

*(அ) குளச்சலில் நேசமணி போக்குவரத்து கழகப் பணிமனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?*

**விடை--**

***மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:***

*(அ) மற்றும் (ஆ): நேசமணி போக்குவரத்துக் கழக நிதி நிலை பற்றாக்குறை காரணமாக, தற்போது குளச்சலில் பணிமனை அமைக்க முடியாத சூழ்நிலை உள்ளது.*

**48—**

**ஆலங்குளம் போக்குவரத்துக் கழக டிப்போ அமைத்தல்**

வினா எண் *81819*—திரு. **எஸ்.எஸ். ராமசுப்பு:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஆலங்குளம் ஒன்றியம் ஆலங்குளம் நகரில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக டிப்போ அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில் எப்போது அமைக்கப்படும்?*

**விடை--**

***மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:***

*(அ) ஆம்.*

*(ஆ) ஆலங்குளத்தில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக பணிமனை அமைக்க 2.30 ஏக்கர் நிலத்தை நிலம் கையகப்படுத்துதல் நடவடிக்கைகள் மூலம் பெற, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு பிரேரணைகள் அனுப்பப்பட்டுள்ளன.*

[*1995 நவம்பர் 3*

**49—**

## குன்னாண்டார் கோவில் ஒன்றியத்தில் கால்நடை மருத்துவமனை துவங்குதல்

வினா எண் *33803*—**திரு. சி. சுவாமிநாதன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குன்னாண்டார் கோவில் ஒன்றியம், தொழுதாம்பட்டி, பின்னாத்தூர், சின்னனூர், கொப்பம்பட்டி மற்றும் வந்தாக்கோட்டை ஊராட்சிகளில் கால்நடை மருத்துவமனை துவக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது துவக்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தொழுதாம்பட்டி கிராமத்துக்கு அருகில் *5* கி.மீ. தொலைவில் புத்தாம்பூர் என்ற கால்நடை மருந்தகம் (புதுக்கோட்டை ஒன்றியத்தைச் சார்ந்தது) செயல்பட்டு வருகிறது. மேலும் தொழுதாம்பட்டி கிராமத்திலேயே வைத்தூர் கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. பின்னாத்தூர் கிராமத்திற்கு அருகில் *4* கி.மீ. தொலைவில் கந்தர்வக்கோட்டை கால்நடை மருந்தகம் உள்ளது. கிள்ளனூர் கிராமத்திற்கு அருகில் *4* கி.மீ தொலைவில் அனட்குளம் கால்நடை கிளை நிலையம் உள்ளது. தற்போது இசைவளிக்கப்பட்ட *386* நடமாடும் கால்நடை மருந்தகங்களில் குன்னாண்டார் கோவில் ஒன்றியத்திற்கான நடமாடும் கால்நடை மருந்தகம் வாரத்தில் ஒரு நாள் மேற்படி பின்னாத்தூர் மற்றும் கிள்ளனூர் கிராமங்களுக்கு சென்று மருத்துவ வசதிகள் அளிக்கிறது. வந்தனாக்கோட்டை கிராமத்திலேயே ஒரு கால்நடை கிளை நிலையம் உள்ளது. கொப்பம்பட்டி கிராமத்திலிருந்து *5* கி.மீ. தொலைவில் கிள்ளுக்கோட்டை கால்நடை கிளை நிலையமும், *8* கி.மீ தொலைவில் செங்கிப்பட்டி கால்நடை மருந்தகமும் உள்ளன.

மேற்படி கிராமங்களுக்கு அருகில் கால்நடை மருத்துவ நிலையங்கள் செயல்பட்டு வருவதால், அக்கிராமங்களில் கால்நடை மருந்தகங்கள் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

*1995 நவம்பர் 3]*

**50—**

**செஞ்சி வட்டத்தில் கால்நடை வளர்ப்பிற்கு கடனுதவி வழங்குதல்**

வினா எண் *44366*—**டாக்டர் எஸ்.எஸ்.ஆர். இராமதாஸ்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், செஞ்சி வட்டத்தில், கால்நடை வளர்ப்பிற்காக மானியமாகவும் கடனாகவும் இதுவரை எத்தனை பேர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன?

(ஆ) இதன் மூலம் பயன் பெற்றவர்கள் எத்தனை பேர்கள்?

**விடை--**

**மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): விழுப்புரம் படையாச்சியார் மாவட்டம், செஞ்சி தாலுக்காவில் *399* எண்ணிக்கை ஆடு அலகுகள் வழங்கப்பட்டு *399* எண்ணிக்கை பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர். இவர்களுக்கு ரூ. *15,16,000* மானியமாகவும், ரூ. *15,16,000* வங்கி கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது.

**51—**

**நீப்பத்துறையில் கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

வினா எண் *44557*—**டாக்டர் பெ. வீரபாண்டியன்:** மாண்புமிகு கால்நடைப்பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, நீப்பத்துறை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டில் செயல்படுத்தப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கால்நடைப்பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): செங்கம் ஊராட்சி ஒன்றியத்தில் செங்கம் என்ற இடத்தில் மட்டும் ஒரு கால்நடை மருந்தகம் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. நீப்பத்துறை கிராமத்திலுள்ள கால்நடைகளுக்கு வைத்திய வசதி மற்றும் கருவூட்டும் வசதிகள் செங்கம் கால்நடை மருந்தகம் மற்றும் மேல் ராவந்தாவடி கால்நடை கிளை நிலையம் மூலம் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் அருகாமையிலுள்ள கால்நடை கிளை நிலைய கால்நடை ஆய்வாளர் வாரம் ஒரு நாள் நீப்பத்துறை கிராமத்திற்குச் சென்று மருத்துவ வசதி அளிக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. எனவே, செங்கம் தொகுதி நீப்பத்துறை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க செயற்குறிப்பு தற்போது இல்லை.

**52—**

**மடவாளம் கால்நடை மருத்துவமனைக்குக் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *45708*—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, மடவாளம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனைக்கு சொந்தக் கட்டிடம் கட்டப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(1) மடவாளம் கால்நடை மருந்தகம் தற்போது ஊராட்சி ஒன்றியக் கட்டிடத்தில் வாடகையின்றி இயங்குகிறது.

(2) நிரந்தரக் கட்டிடம் கட்ட நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

(3) மடவாளம், கால்நடை மருந்தகம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் முதல் கால்நடை மருந்தகமாக அமைவதால் ஊராட்சி ஒன்றியம் இம்மருந்தகத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட 25 விழுக்காடு பங்குத் தொகையாக செலுத்த வேண்டும். அரசு அதன் பங்கு தொகையாக 75 சதவிகிதம் தொகையினை ஏற்கெனவே வழங்கி விட்டது. ஆனால் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் அதன் பங்கு

*1995 நவம்பர் 3]*

தொகையை (25 சதவிகிதம்) இதுவரை வழங்கவில்லைல. திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் நிதி வசதியில்லாததால் வடஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூடுதல் நிதி கோரி ஊரக வளர்ச்சித் துறைக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

(4) திருப்பத்தூர் ஒன்றியம் அதன் பங்குத் தொகை 25 சதவிகிதம் அளித்தவுடன் அல்லது ஊரக வளர்ச்சித்துறை கூடுதல் நிதி வழங்கினால் மடவாளம் கால்நடை மருந்தகத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்டப்படும்.

**53—**

**கிளியனூர் கால்நடை மருந்தகத்திற்கு கட்டிடம் கட்டுதல்.**

*வினா எண் 46489—* **திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா –

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம்-குத்தாலம் தொகுதி தரங்கை வட்டம், கிளியனூரில் உள்ள "கால்நடை மருந்தகத்திற்கு" நிரந்தரக் கட்டிடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கால்நடைப்பராமரிப்புத் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம் குத்தாலம் தொகுதி தரங்கை வட்டம், கிளியனூரில் உளள கால்நடை கிளை நிலையம் தற்பொழுது வாடகையில்லா இலவச கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அந்த கிளை நிலையத்திற்கு நிரந்தர கட்டிடம் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் கட்டித் தர உரிய ஊராட்சி ஒன்றிய அலுவலர்களிடம் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**54—**

**பாப்பாவலசில் கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

*வினா எண் 46578—* **திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம் பழமங்கலம் ஊராட்சி, பாப்பாவலசு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

மொடக்குறிச்சி ஒன்றியத்தில், மொடக்குறிச்சி கணபதி பாளையம், அவல்பூத்துறை மற்றும் அரச்சலூர் ஆகிய நான்கு இடங்களில் கால்நடை மருந்தகங்கள் ஏற்கனவே செயல்பட்டு வருகின்றன. மேலும் ஒன்பது இடங்களில் கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. பாப்பாவலசு கிராமத்திற்கு அருகில் வெள்ளோட்டப்பரப்பு கொம்மணைப்புதூர், சிவகிரி மற்றும் கரட்டாம்பாளையம் ஆகிய இடங்களில் கால்நடை மருந்தகங்கள் செயல்படுகின்றன. கால்நடை மருந்தகம் துவக்குவதற்கு நிர்ணயிக்கப்பட்ட அளவான 10,000 கால்நடை அலகுகள் (கேட்டில் யூனிட்ஸ்) பாப்பாவலசு மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் இல்லாததால், பாப்பாவலசு கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**55—**

**புதுக்கோட்டை உளூரில் கால்நடை மருந்தகம் தொடங்குதல்**

வினா எண் *46658*—**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் புதுக்கோட்டை உளூரில் கால்நடை மருந்தகம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

கால்நடை மருந்தகம் அமைக்க நிர்ணயிக்கப்பட்ட அளவான 10,000 கால்நடை அலகுகள் (Cattle units) புதுக்கோட்டை உளூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் இல்லாததால், புதுக்கோட்டை

*1995 நவம்பர் 3]*

உளூர் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. புதுக்கோட்டை உளூர் கிராமத்திலும் அதனைச் சுற்றி உள்ள பகுதிகளிலும் கால்நடை மருந்தகம் அமைக்கும் அளவுக்கு கால்நடைகள் இல்லாவிட்டாலும் அப்பகுதியில் பொதுவாக கால்நடைகள் அதிகம் இருப்பதை கருத்தில் கொண்டு புதுக்கோட்டை உளூரில் ஒரு பார்வை கிளை நிலையம் அமைக்கப்பட்டு அதன் மூலம் மருத்துவ வசதிகள் அளிக்கப்படுக்கிறது. பள்ளிக்கொண்டான் கால்நடை கிளை நிலையத்தில் பணியாற்றி வரும் கால்நடை ஆய்வாளர் நிலை 2, வாரத்தில் செவ்வாய் மற்றும் வெள்ளி ஆகிய இரு கிழமைகளில் மேற்படி பார்வை கிளை நிலையத்திற்கு வந்து மருத்துவ வசதிகள் அளிக்கிறார்.

மேலும், பட்டுக்கோட்டையை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் நடமாடும் கால்நடை மருந்தகமும் வாரத்தில் ஒரு நாள் புதன்கிழமையன்று மேற்படி கிராமத்திற்கு வந்து மருத்துவ வசதிகள் அளிக்கிறது. இது தவிர புதுக்கோட்டை உளூருக்கு வெகு அருகில் (3 கி.மீ.) அமைந்துள்ள அதிராம்பட்டினம் கால்நடை மருந்தகம் மூலமும் மருத்துவ வசதிகள் அளிக்கப்பட்டு வருகிறது.

**56—**

**ஊமத்தநாடு கால்நடை மருந்தகம் கட்டுதல்**

வினா எண் *46659*—**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு கிராமத்தில் கால்நடை மருந்தகம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை**--

**மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

ஊமத்தநாடு கிராமத்திலேயே ஒரு கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும் சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டு கால்நடை மருந்தகங்களும் நான்கு கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. பொதுவாக, கால்நடை

மருந்தகங்கள் கிராமங்களிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டும், அந்த ஊராட்சி ஒன்றியத்தில், ஏற்கெனவே செயல்பட்டுவரும் கால்நடை நிலையங்களைக் கருத்தில் கொண்டும், கால்நடை மருந்தகம் துவக்கப்படவுள்ள கிராமத்திற்கும் ஒன்றியத்தில் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்ற கால்நடை நிலையங்களுக்குமிடையே உள்ள தூரத்தை கருத்தில் கொண்டும் துவக்கப்படுகின்றன. கால்நடை மருந்தகம் அமைக்க நிர்ணயிக்கப்பட்ட அளவான 10,000 கால்நடை அலகுகள் (Cattle Units) ஊமத்தநாடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் இல்லாததால், ஊமத்தநாடு கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை. ஊமத்தநாடு கிளை நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட நடப்பு நிதியாண்டில் ரூ.70,000 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் முடச்சிக்காடு என்ற கிராமத்தில் நடமாடும் கால்நடை மருந்தகம் அமைக்கப்பட்டுள்ளது. முடச்சிக்காடு கிராமம் ஊமத்தநாடு கிராமத்திற்கு அருகில் (3 கி.மீ. தொலைவில்) உள்ளது. எனவே ஊமத்தநாடு கிராமத்தில் உள்ள கால்நடைகள் முடச்சிக்காடு நடமாடும் கால்நடை மருந்தகம் மூலமும் மருத்துவ வசதிகள் அடையலாம்.

**57—**

**பள்ளிகொண்டா--குடியாத்தம் தரைப்பாலத்தை சீர் செய்தல்**

வினா எண் 35867—**திருமதி கே.எம். கலைச்செல்வி:**

**திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்பாடி தொகுதி பள்ளிகொண்டா--குடியாத்தம் நெடுஞ்சாலை பாலாற்றின் குறுக்கேயுள்ள தரைப்பாலம் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பாலத்தை சீரமைக்க அரசு முன் வருமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள தரைப்பாலம் அமைந்துள்ள சாலையின் சரியான பெயர் பள்ளிகொண்டா பலமநேரி சாலையாகும். இச்சாலையானது நெடுஞ்சாலைத் துறையால்

*1995 நவம்பர் 3]*

பராமரிக்கப்பட்டு வரும் ஒரு மாவட்ட நெடுஞ்சாலையாகும். இச்சாலை கி.மீ. 1/4—8ல் பாலாறு குறுக்கிடுகிறது. இவ்விடத்தில் ஆற்றின் நீர்வழிப்பாதையின் அகலம் 534 மீட்டர் ஆகும். இவ்விடத்தில் தற்போது கருங்கல் பரத்தப்பட்ட தரைமட்ட தாம்போகி கடந்த ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தினால் பழுதடைந்து வெள்ள நிவாரணப் பணிகள் திட்டத்தின் மூலமாக தற்காலிகமாக போக்குவரத்து தடைப்படாமல் இருக்கும் வகையில் சீர் செய்யப்பட்டு, போக்குவரத்து நடைபெற்று வருகிறது. இவ்விடத்தில் தற்சமயம் உள்ள தரைமட்ட தாம்போகிக்கு மாற்றாக ஓர் உயர்மட்ட பாலம் அமைப்பது மிகவும் அவசியமாகும். அதற்கு தோராயமாக ரூ. 500 லட்சம் தேவைப்படும். இவ்விடத்தில் உயர்மட்டப் பாலம் அமைக்கும் பணி மைய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்ட மையசாலை நிதி திட்ட கருத்துரு பட்டியலில் முதல் பணியாக இடம் பெற்றுள்ளது. மைய அரசின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றவுடன் இப்பாலம் அமைக்கும் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**58—**

**செல்வபுரம் வீட்டு வசதிவாரிய மாடி வீடுகளைப் புதுப்பித்தல்**

வினா எண் 39971—**திரு. கே. செல்வராஜ்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நகரில் உள்ள செல்வபுரம் வீட்டுவசதி வாரிய மாடி வீடுகள் பழுதடைந்துள்ளதைப் புதுப்பிக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள வீடுகளைப் புதுப்பிக்க நிதி ஒதுக்கீடு செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. அரசு நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப செல்வபுரத்தில் பழுதடைந்துள்ள வீடுகளைப் புதுப்பிக்க தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் நடவடிக்கை எடுக்கும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

[*1995 நவம்பர் 3*

**59—**

**ஆதி திராவிடர்களுக்கு விட்டு வசதி வாரியத்தின் மூலம் கடன் வழங்குதல்**

*வினா எண் 43856*—**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வீடு கட்டிக்கொள்ளவோ, பழுதடைந்த வீட்டைச் சீர்செய்யவோ ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கடன் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், ஆதிதிராவிடர்களுக்கு வீடு கட்டிக்கொள்ளவோ, பழுதடைந்த வீட்டைச் சீர் செய்யவோ கடன் வழங்குவது இல்லை. அதற்கான செயற்குறிப்பும் இல்லை. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதிக் கழகம் அமைக்கப்பட்டு அவர்களுக்கு வீடு கட்டும் பணி மற்றும் சீர் செய்தல் முதலியவைகளைச் செய்து வருகிறது.

**60—**

**வடக்கப்பாளையத்தில் அடுக்குமாடி விடுகள் கட்டுதல்**

*வினா எண் 46535*—**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, பழமங்கலம் ஊராட்சி, வடக்கப்பாளையம் கிராமத்தில் உள்ள ஆதிதிராவிட வீடுகளை அடுக்குமாடி வீடுகளாக்கி குடிசை மாற்று வாரியத்திடம் ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3]*

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பணிகள் ஊராட்சிப்பகுதிகளுக்கு விரிவு படுத்தப்படவில்லை. எனவே ஆதிதிராவிட வீடுகளை குடிசை மாற்று வாரியத்திடம் ஒப்படைக்கும் செயற்குறிப்பு இல்லை.

**61—**

**வடக்கப்பாளையத்தில் வீட்டுவசதி கடன் சங்க அலுவலகம் அமைத்தல்**

*வினா எண் 46560*—**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** *மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், பழமங்கலம் ஊராட்சி, வடக்கப்பாளையம் கிராமத்தில் கூட்டுறவு வீட்டுவசதிக் கடன் சங்க அலுவலகம் அமைக்க ஆவன செய்யப்படுமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், பழமங்கலம் ஊராட்சி, வடக்கப்பாளையம் கிராமத்தில் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் ஏற்படுத்தக் கூடிய அவசியம் எழவில்லை.*

**62—**

**அரவக்குறிச்சியில் துணை வணிகவரி அலுவலகம் அமைத்தல்**

வினா எண் *52166*—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு வணிகவரிகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரவக்குறிச்சியில் துணை வணிகவரி அலுவலகம அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிக வரிகள் துறை அமைச்சர்:**

அரவக்குறிச்சி, கரூர் (ஊரகம்) வணிகவரி அலுவலர் அலுவலக எல்லைக்குட்பட்டிருந்தது. வணிகவரி அலுவலர் அலுவலகம், கரூர் (ஊரகம்) அரசாணை எண் 354, வணிக வரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 8-11-1994 இல் வணிகவரி அலுவலர், கரூர் (கிழக்கு) மற்றும் வணிகவரி அலுவலர் கரூர் (மேற்கு) என்று இரண்டு அலுவலகங்களாகப் பிரிக்கப்பட்டு 28-12-1994 முதல் செயல்பட்டு வருகிறது. தற்போது அரவக்குறிச்சி, வணிகவரி அலுவலர் கரூர் (மேற்கு) அலுவலகத்தின் எல்லைக்குட்பட்டுள்ளது. மேலும் அங்கு மொத்தம் 61 பதிவு பெற்ற வணிகர்களே உள்ளனர். எனவே அரவக்குறிச்சியில் துணை வணிகவரி அலுவலகம் அமைப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் இல்லை.

**63—**

### தாராபுரம் வணிகவரித் துறை அலுவலகத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 52165—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், தாராபுரத்திலுள்ள வணிகவரித் துறை அலுவலகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரிகள் துறை அமைச்சர்:**

பெரியார் மாவட்டம், தாராபுரத்தில் துணை வணிகவரி அலுவலகம் மட்டுமே, எண் 100, பார்க் ரோடு, தாராபுரம் என்ற முகவரியில் ஒரு தனியார் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அரசின் நிதிநிலைக்கேற்பவும், தேவையைக் கருத்தில் கொண்டும் படிப்படியாக தனியார் கட்டிடங்களில் அலுவலகங்கள் செயல்படும் இடங்களில் அரசுக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. தற்போது தாராபுரத்தில் அரசுக் கட்டிடம் கட்ட பிரேரணை ஏதும் இல்லை.

**64—**

### போளூர் பகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைத்தல்

வினா எண் 4284—**திரு. தா. வேடியப்பன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*1995 நவம்பர் 3]*

(அ) போளூர் பகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:**

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், போளூர் பகுதியில் தனியார் துறையைச் சார்ந்த தரணிசுகர்ஸ் 2,500 டிசிடியில் சர்க்கரை ஆலை அமைக்க மத்திய அரசு தொழில் உரிமம் வழங்கியுள்ளது. இந்நிலையில் போளூர் பகுதியில் மேலும் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**65—**

### அயல் நாட்டில் வாழும் இந்தியர்களுக்கு தொழில் சலுகைகள்

வினா எண் 40010—**டாக்டர் வெ. சரோஜா:** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அயல்நாட்டில் வாழும் இந்தியர்கள் தமிழகத்தில் தொழில் தொடங்க அரசு அளிக்கும் சலுகைகள் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் தொழில்கள் துவங்க அரசு கீழ்க்கண்ட சலுகைகள் வழங்குகிறது:-

(1) மிகவும் பிற்பட்ட வட்டங்களிலும் மற்றும் தூத்துக்குடி, மானாமதுரை, புதுக்கோட்டையில் உள்ள சிப்காட் தொழில்வளாகங்களில் துவக்கும் தொழில்களுக்கும் ரூ.20 இலட்சம் உச்சவரம்பிற்குட்பட்டு நிலையான சொத்து மதிப்பில் 20 விழுக்காடு முதலீட்டு மானியம்.

(2) பிற்பட்ட வட்டங்களிலும் தூத்துக்குடி, மானாமதுரை, புதுக்கோட்டையில் உள்ள சிப்காட் தொழில் வளாகங்களைத் தவிர்த்து மற்ற தொழில் வளாகங்களிலும் துவக்கும் தொழில்களுக்கு ரூ.15 இலட்சம் என்ற உயர்விற்குட்பட்ட 15 விழுக்காடு முதலீட்டு மானியம்.

(3) அனைத்து இடங்களிலும் துவக்கப்படும் மின்னணுத் தொழில்களுக்கு ரூ.35 இலட்சம் உச்சவரம்பிற்குட்பட்டு நிலையான சொத்து மதிப்பில் 20 சதவீதம் முதலீட்டு மானியம். தோல் பொருள் தொழில்களுக்கு ரூ.20 இலட்சம் உச்சவரம்பிற்குட்பட்டு நிலையான சொத்து மதிப்பில் 20 சதவீதம் முதலீட்டு மானியம்.

(4) மோட்டார் வாகன உதிரி பாகங்கள், மருந்து வகைகள் சுற்றுச்சூழல் சம்மந்தமான கருவிகள், விளையாட்டு சாதனங்கள் போன்ற ஒன்பது வகை பொருட்கள் தயாரிக்கும் நடுத்தர மற்றும் பெருந் தொழில்களுக்கு ரூ.15 இலட்சம் உச்சவரம்பிற்குட்பட்டு நிலையான சொத்து மதிப்பில் 10 சதவீதம் முதலீட்டு மானியம்.

(5) மிகவும் பிற்பட்ட வட்டங்கள், புதுக்கோட்டை, மானாமதுரை மற்றும் தூத்துக்குடி சிப்காட் வளாகங்களில் விக்ரம் சாராபாய் மின்னணுவியல் தொழிற் பேட்டை, சோழிங்கநல்லூர் மின்னணு நகர் மற்றும் பெருங்குடி தொழிற் பேட்டையில் துவக்கும் தொழில்களுக்கு 5 ஆண்டுகள் விற்பனை வரி தள்ளுபடி அல்லது 9 ஆண்டுகள் விற்பனை வரி ஒத்திவைப்பு.

(6) பிற்படுத்தப்பட்ட மற்றும் புதுக்கோட்டை, மானாமதுரை மற்றும் தூத்துக்குடி தவிர்த்து இதர அரசு தொழில் வளாகங்களில் துவக்கும் தொழில்களுக்கு 9 வருடம் விற்பனை வரி ஒத்திவைப்பு.

(7) மேலே இனம் (5) மற்றும் (9)-ல் குறிப்பிட்ட இடங்கள் அல்லாமல் இதர இடங்களில் துவக்கும் தொழில்களுக்கு முதலீட்டில் 60 சதவீதம் உச்சவரம்பிற்குட்பட்டு 5 வருட விற்பனை வரி ஒத்திவைப்பு.

(8) தமிழ்நாட்டில் ரூ.50 கோடிக்கு மேற்பட்டு முதலீடு செய்யும் தொழில்களுக்கு கீழ்க்கண்டவாறு விற்பனை வரி ஒத்திவைப்பு/தள்ளுபடி அளிக்கப்படுகிறது:-

| | | |
|---|---|---|
| ரூ.50 கோடி முதல் 100 கோடிக்குள் | .. | 5 ஆண்டு விற்பனை வரி தள்ளுபடி அல்லது 10 ஆண்டு விற்பனை வரி ஒத்திவைப்பு. |
| ரூ.100 கோடிக்கு மேல் | .. | 300 கோடிக்குள் 6 ஆண்டு விற்பனை வரி தள்ளுபடி அல்லது 12 வருடம்-விற்பனை வரி ஒத்திவைப்பு. |
| ரூ.300 கோடிக்கு மேல் | .. | 7 ஆண்டு விற்பனை வரி தள்ளுபடி அல்லது 14 வருட விற்பனைவரி ஒத்திவைப்பு. |

*1995 நவம்பர் 3]*

*(9)* முதலாண்டு *40* விழுக்காடு, இரண்டாம் ஆண்டு *30* விழுக்காடு, மூன்றாம் ஆண்டு *20* விழுக்காடு, என மின் கட்டண மானியம்.

*(10)* மின் ஜெனரேட்டர் அமைத்துக் கொள்ளும் பிரிவுகளுக்கு ரூ.5 இலட்சம் வரை மானியம்.

*(11)* தொழிலில் பின்தங்கிய மற்றும் மிகவும் பின் தங்கிய வட்டங்களில் ரூ.5 கோடிக்கு மேல் நிலையான சொத்தில் முதலீடு செய்யும் புதிய தொழில் பிரிவுகளுக்கு இதே அளவிற்கு முதலீடு செய்துள்ள வேறு தொழில் பிரிவுகள் ஏதும் அவ்வட்டத்தில் இல்லாதிருப்பின், ரூ.25 இலட்சம் வரை முதலீட்டு மானியம்.

*(12)* *30* சதவீதத்திற்கு மேல் பெண்கள் வேலை பார்க்கும் பிரிவிற்கு ஐந்து இலட்சம் உச்சவரம்பிற்குட்பட்டு *5* சதவீத மானியம்.

*(13)* மாசுக்கட்டுப்பாடு உபகரணங்கள் பிரிவிற்கு ரூபாய் இரண்டு இலட்சம் உச்சவரம்பிற்குட்பட்டு *10* சதவீத மானியம்.

மேற்கண்ட அனைத்து சலுகைகளும் தமிழகத்தில் தொழில்கள் துவங்க முன்வரும் வெளிநாட்டில் வாழும் இந்தியர்களுக்கும் அளிக்கப்படுகிறது.

**66—**

**வடக்குப்பாளையத்தில் கரும்பாலை அமைத்தல்**

வினா எண் *48401*—**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், பழமங்கலம் ஊராட்சி, வடக்குப்பாளையம் கிராமத்தில் கரும்பாலை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்:**

ஈரோடு வட்டத்தில் கரும்பு பகுதிகள் யாவும் சக்தி சர்க்கரை மற்றும் டெக்கான் சர்க்கரை ஆலைகளுக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு ஆலைகளின் பிழிதிறன் முறையே *4,000* மற்றும் *2,500* டன்களாகும். மொடக்குறிச்சி பகுதியில் புதிய சர்க்கரை ஆலை

அமைத்தால் அது சக்தி மற்றும் டெக்கான் சர்க்கரை ஆலைகளை பெரிதும் பாதிக்கும். மொடக்குறிச்சி பகுதியில் 2,500 டன் (மத்திய அரசின் கொள்கைப்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்த பட்ச பிழிதிறன்) பிழிதிறன் கொண்ட சர்க்கரை ஆலைக்கு 4.30 இலட்சம் டன் கரும்பு (சுமார் 15,000 ஏக்கரில் கரும்பு) விளைவிக்க வாய்ப்பு இல்லை.

இந்நிலையில் மொடக்குறிச்சி ஒன்றியத்தில் புதிய சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

**67—**

**வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் நூற்பாலை துவங்குதல்**

வினா எண் 46818—திரு ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் புதிய நூற்பு ஆலை தொடங்கும் திட்டம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:**

இல்லை.

**68—**

**ஊத்தங்கரை நூற்பாலையை விரிவுபடுத்துதல்.**

வினா எண் 46820—திரு ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை அரசு நூற்பாலையை விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:**

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**ஊத்தங்கரையில் உள்ள தர்மபுரி மாவட்ட கூட்டுறவு** நூற்பாலையினை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**69—**

**நாட்ராம்பள்ளியில் நூற்பாலை அமைத்தல்**

வினா எண் *46861*—**திரு ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் நாட்ராம்பள்ளி தொகுதியில் அரசு நூற்பாலை அமைக்கப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை**--

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* இக்கேள்விக்கு இடமில்லை.

**70—**

**வடக்குப்பாளையத்தில் நெசவாலை அமைத்தல்**

வினா எண் *48400*—**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், பழமங்கலம் ஊராட்சி, வடக்குப்பாளையம் கிராமத்தில் நெசவாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை**--

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:**

சிவகிரியில் ஏற்கனவே ஒரு விசைத்தறிக்கூடம் இருப்பதாலும், இப்பகுதியில் நெசவாளர்கள் அதிகமாக இருப்பதாலும் வடக்குப்பாளையம் கிராமத்தில் நெசவாலை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

**71—**

**மொடக்குறிச்சி தொகுதியில் சாயத் தொழிற்சாலை அமைத்தல்**

வினா எண் 48810—**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, நஞ்சை-ஊத்துக்குளி மற்றும் சிவகிரியில் சாயத் தொழிற்சாலை அமைக்க அரசு முன் வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:**

ஈரோடு நகரில் செயல்பட்டு வரும் ஈரோடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 3,500 கட்டுகளும், தமிழ்நாடு கூட்டுறவுத் துறையால் பதனிடும் ஆலையில் 4,000 கட்டுகளும் சாயம் தோய்க்க அதாவது இப்பகுதிகளின் தேவைக்கதிகமாக வசதி இருப்பதால் நஞ்சை-ஊத்துக்குளி மற்றும் சிவகிரியில் சாயத் தொழிற்சாலை அமைக்கத் தேவையில்லை.

**72—**

**தாண்டாம்பாளையத்தில் நூற்பாலை அமைத்தல்**

வினா எண் 48820—**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், தாண்டாம்பாளையத்தில் ஒரு நூற்பாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3]*

தாராபுரத்தில் பெரியார் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை இயங்கி வருவதாலும், அந்த நூற்பாலைக்கு அருகாமையில் தாண்டாம்பாளையம், மொடக்குறிச்சி தொகுதியில் மேலும் ஒரு நூற்பாலையை அமைக்கத் தேவையில்லையென அரசு கருதுகிறது.

**73—**

**அன்னசாகரத்தில் விசைத்தறி தொழிற்கூடம் அமைத்தல்**

வினா எண் 52205—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், அன்னசாகரம் கிராமத்தில் நெசவாளர்கள் அதிக அளவில் இருப்பதால் அங்கு விசைத்தறி தொழிற்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:**

தருமபுரியில் ஏற்கனவே இயங்கிவரும் விசைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கம் லாபகரமாக இயங்காத நிலையில், தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், அன்னசாகரம் கிராமத்தில் விசைத்தறி தொழிற்கூடம் அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை.

**74—**

**கரூர் வட்டத்தில் விசைத்தறி தொழிற்கூடங்கள் அமைத்தல்**

வினா எண் 52207—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் வட்டம், கோடந்தூர் கிராமம், மலைக்கோவிலூர், தென்னிலை சின்னம்மநாயக்கன்பட்டி ஆகிய இடங்களில் விசைத்தறி தொழிற்கூடங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:**

[*1995* நவம்பர் *3*

பல்வேறு காரணங்களினால், தொழிலியல் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இலாபகரமாக இயங்க இயலவில்லை. தவிர, திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் வட்டம், கோடந்தூர் கிராமம், மலைக்கோவிலூர், தென்னிலை சின்னம்மநாயக்கன்பட்டி ஆகிய இடங்களில் குறைந்த அளவிலே விசைத்தறி நெசவாளர்கள் உள்ளனர். எனவே, அங்கு விசைத்தறி தொழிற்கூடம் அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை.

**75—**

**நெசவாளர் குடியிருப்புகளை சீர்செய்தல்**

வினா எண் *60897*—**திரு. இரா. தங்கராசு:** மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, செங்குந்தர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்குக் கட்டப்பட்ட குடியிருப்பு வீடுகளில் பழுதடைந்துள்ளவற்றைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:**

ஆண்டிமடம் தொகுதி, செங்குந்தர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் மூலம் கட்டப்பட்ட குடியிருப்பு வீடுகளில் பழுதடைந்த வீடுகளை சீர் செய்யும் திட்டம் ஏதுமில்லை.

**76—**

**சலவைத் தொழிலாளிகளுக்குச் சலவைப் பெட்டி வழங்குதல்**

வினா எண் *34294*—**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொடுமுடி ஒன்றியம், பாசூர் ஆவுடையார் பாறை கிராம சலவைத் தொழிலாளிகளுக்குச் சலவைப்பெட்டி வழங்க அரசு ஆவன செய்யுமா?

*1995* நவம்பர் *3*]

**விடை--**

**மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

பெரியார் மாவட்டம், கொடுமுடி ஒன்றியம் ஆவுடையார் பாறை கிராமத்தில் *9* சலவைத் தொழிலாளர்களிடமிருந்து இலவச சலவைப் பெட்டிகள் வழங்கக் கோரி மனுக்கள் பெறப்பட்டு, முன்னுரிமைப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இம்மாவட்டத்திற்கான இலவச சலவைப் பெட்டிகள் ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் பயனாளிகளுக்கு முன்னுரிமைப்படி சலவைப் பெட்டிகள் வழங்கப்படும்.

**77—**

**ஒசூர் வட்டத்தில் விட்டுமனைப்பட்டா வழங்குதல்**

வினா எண் *36802*—**திரு. கே.ஏ. மனோகரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒசூர் வட்டம், சூளகிரி வளர்ச்சி வட்டாரத்தில் உள்ள காளிங்கவரம் ஊராட்சியில் பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோருக்கு வீட்டுமனைப்பட்டா கோரி வந்த விண்ணப்பங்களின் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது.

**விடை--**

**மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

ஒசூர் வட்டம், சூளகிரி வளர்ச்சி வட்டாரத்தில் உள்ள காளிங்கவரம் ஊராட்சியில் பிற்பட்டோர் மற்றும் மிகப் பிற்பட்டோர் இனத்தவருக்கு வீட்டுமனைப்பட்டா கோரி விண்ணப்பங்கள் ஏதும் அரசுக்கு வரப்பெறவில்லை.

**78—**

**கிராமியக் கலைக்கு முன்னுரிமை வழங்குதல்**

வினா எண் *61711*—**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[*1995 நவம்பர் 3*

அரசு விழாக்களில் கிராமியக் கலைக்கு முன்னுரிமை வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

மாவட்டங்களில் அரசு நடத்தும் சாதனை விளக்க முகாம்களில் (Multi-Media Publicity Campaign) அரசின் நலத்திட்டங்கள், மதுவிலக்கு எதிர்ப்பு பிரசாரம், வரதட்சணை ஒழிப்பு, பெண் கல்வி, சிசுவதைத்தடுப்பு போன்றவற்றை விளக்கும் நாடகங்கள் நடத்தப்படுகின்றன. மேலும் கரகம், காவடி, வில்லுப்பாட்டு, மயிலாட்டம், ஒயிலாட்டம் போன்ற கிராமியக்கலைகள் சிறந்த முறையில் நடத்தப்படுகின்றன. பெருந்தலைவர்கள் பிறந்த நாள் விழாக்களில் மேற்கண்ட கலை நிகழ்ச்சிகளுக்கு எந்த தொடர்பும் இல்லை. ஆதலால் நடத்தப்படுவது இல்லை.

**79—**

**பரமக்குடியில் டாக்டர் அம்பேத்கார் திருவுருவச்சிலை அமைத்தல்**

வினா எண் *72393*—**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் டாக்டர் அம்பேத்கார் திருவுருவச்சிலை ஏற்படுத்திட அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

இல்லை.

*1995 நவம்பர் 3]*

**80--**

**ஸ்ரீவெங்கடேஸ்வரா மேல்நிலைப்பள்ளியை கல்லூரியாக்குதல்**

வினா எண் *37219*—**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகரில் உள்ள ஸ்ரீவெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளியை கல்லூரியாக மாற்ற ரூ.10 இலட்சம் கட்டவேண்டும் என்ற நிபந்தனையை அரசு தளர்த்தி கல்லூரி அமைய உத்தரவு பிறப்பிக்குமா?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

இவ்வாறான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**81—**

**வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் கூடுதல் மகளிர் கல்லூரி துவங்குதல்**

வினா எண் *46850*—**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் எத்தனை அரசு மகளிர் கலைக் கல்லூரிகள் உள்ளன?

(ஆ) மேலும் கல்லூரிகளின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

(அ) ஒன்று.

(ஆ) இல்லை.

**82—**

**மொடக்குறிச்சி தொகுதியில் நூலகங்கள் அமைத்தல்**

வினா எண் *54434*—**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், வள்ளிபுரம் ஊராட்சி, கருக்கம்பாளையம், வள்ளிபுரம் கொங்காளிவலசு, கோக்காட்டூர் ஆகிய கிராமங்களில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை––**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

இக்கிராமங்கள் ஒவ்வொன்றிலும் பொது நூலகம் அமைக்கத் தேவைப்படும் குறைந்தபட்ச மக்கள் தொகை 5,000 இல்லாத காரணத்தால் நூலகம் அமைக்க இயலாது. இருப்பினும், அக்கிராம மக்களின் நலன் கருதி, அக்கிராமங்கள் ஒவ்வொன்றிலும், ஒரு பகுதிநேர நூலகம் அமைத்திட, அக்கிராம மக்கள் அதற்கான சில நிபந்தனைகளை நிறைவு செய்து தந்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**83—**

**திருச்சியில் அறிவியல் கண்காட்சி மையம் அமைத்தல்**

வினா எண் 67690—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சியில் நிரந்தர அறிவியல் கண்காட்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை––**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

ஆம். விரைவாக செய்து முடிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**84—**

**திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 45941—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*1995 நவம்பர் 3]*

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் பீடித் தொழிலாளர்களுக்காக வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. ஏ.எம்.. பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள பீடித் தொழிலாளர்களுக்காக முக்கூடல் மற்றும் மேலப்பாளையம் ஆகிய இடங்களில் தலா 500 வீடுகள் வீதம் 1,000 வீடுகள் கட்டித் தருவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, அதற்கான நிலங்களும் கையகப்படுத்தப்பட்டு, வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**85—**

**திருச்சியில் பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *46383*—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சியில் பீடித் தொழிலாளர்களுக்கென வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

திருச்சியில் பீடித் தொழிலாளர்களுக்கென வீடுகள் கட்டுவதற்குத் தேவையான நிலங்களை தெரிவு செய்ய தொழிலாளர் நல ஆணையரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**86—**

**திருப்பத்தூர் தொகுதியில் பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *46845*—**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி பீடித் தொழிலாளர்களுக்கு இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுமா?

விடை--

**மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நல அமைச்சர்:**

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் பீடித் தொழிலாளர்களுக்கு இலவச வீடுகள் கட்டிக்கொடுக்க செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை. ஆயினும், வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் பீடித் தொழிலாளர்கள் அதிகமாக உள்ள இடங்களில் அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் பொருட்டு புறம்போக்கு நிலம் ஒதுக்கீடு செய்யும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

87—

**ஒகனேக்கல்லில் தொழிலாளர் விடுமுறை இல்லம் கட்டுதல்**

வினா எண் *46882*—**திரு. சி. முனிவெங்கடப்பன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், ஒகனேக்கல் சுற்றுலா மையத்தில் தொழிலாளர்கள் தங்குவதற்கு விடுமுறை இல்லம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை--

**மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நல அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், ஒகனேக்கல் சுற்றுலா மையத்தில் தொழிலாளர்கள் தங்குவதற்கு விடுமுறை இல்லம் கட்டும் திட்டம் பற்றிய செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**88—**

**பரமக்குடி கூட்டுறவு நிலவள வங்கியில் கடன் பெற்றோர் விவரம்**

வினா எண் *37923*—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) 1992-93* ஆம் ஆண்டில் பரமக்குடி கூட்டுறவு நிலவள வங்கி மூலம் கடன் பெற்றோர் எத்தனை பேர்?

(ஆ) ஆழ்குழாய் கிணறுகள் போட மேலும் கடன் வழங்கிட வங்கிக்குப் பரிந்துரை வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) 1992-93* ஆம் ஆண்டில் பரமக்குடி பிரதம நிலவள வங்கி *67* உறுப்பினர்களுக்கு ரூ.*31.72* இலட்சம் கடன் வழங்கியுள்ளது.

(ஆ) ஆழ்குழாய் கிணறுகள் அமைக்க *1992-93, 1993-94* மற்றும் *1994-95* ஆம் ஆண்டுகளில் கடன் மனுக்கள் ஏதும் பெறப்படாத நிலையில் இதற்காக கடன் வழங்கப்படவில்லை. தற்சமயம் இவ்வகையான கடன் மனுக்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

(இ) ஆழ்குழாய் கிணறுகள் அமைப்பதற்காக கடன் மனுக்கள் ஏதும் பெறப்படாத நிலையில் இவ்வினா எழவில்லை.

**89—**

**சங்ககிரி ஒன்றியத்தில் கூட்டுறவு வங்கிக்குக் கூடுதல் கட்டிடம்**

வினா எண் *47313*—டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி ஒன்றியம், கஸ்தூரிபட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**90—**

**அரவக்குறிச்சி ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்குதல்**

வினா எண் 7901—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 14-6-1988, சமூக நலத் துறை, அரசாணை (நிலை) எண் 1589-ன் கீழ் கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், அங்கலக்குறிச்சி ஆதிதிராவிட மக்களுக்காக கையகப்படுத்தப்பட்ட நிலம் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைக்காக வழங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், வீட்டுமனை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): விவர அறிக்கை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

*1995 நவம்பர் 3]*

# இணைப்பு

பொள்ளாச்சி வட்டம், அங்கலக்குறிச்சி கிராமத்தில் க.ச. 201/1 மற்றும் 202 எண் சாலைகளின் 2.80.5 ஹெக்டேர் நிலத்தையும், க.ச.149/அ2 150 மற்றும் 151/1 எண் சாலைகளில் 2.52.2 ஹெக்டேர் நிலத்தையும் கையகப்படுத்தி, ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்க இரண்டு தனித் தனியான நேர்வுகளில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த இரண்டு நேர்வுகளிலும் 4 (1) அறிவிக்கை மூலம் கீழ்க்கண்டவாறு அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| க.ச.201/1 மற்றும் 202 (2.80.5 ஹெக்டேர்) | .. | அரசு ஆணை எண் 1585, நாள்: 14-8-1989. |
| க.ச.149/ஏ2/150 மற்றும் 151/1 (2.52.5 ஹெக்டேர்) | .. | அரசு ஆணை எண் 1589, நாள்: 14-6-1988. |

க.ச. 201/1 மற்றும் 202 எண் சாலைகளில் 2.80.5 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, மொத்தம் 240 பேருக்கு வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டன. பின்னர் இந்தச் சாலையில் காலியாக இருந்த இடத்தில் மேலும் 20 பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. இந்தச் சாலைகளில் வேறு காலியிடம் இல்லை. க.ச.149/ஏ2 முதலான சாலைகளில் வீட்டுமனை வழங்கப்பட மொத்தம் 108 பயனாளிகள் குறிப்பிடப்பட்டனர். இந்த நேர்வில் 5ஏ விசாரணையின்போது நில உடைமையாளர் தெரிவித்த ஆட்சேபணைகளின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்டதில் வீட்டுமனை வழங்கப்பட வேண்டிய ஆதிதிராவிடர் குடும்பங்கள் 43 மட்டுமே என்பதும் கிராமக் குடியிருப்பில் 26 வீட்டுமனை ஏற்கனவே காலியாக இருப்பதால் மேற்குறிப்பிட்ட 43 பேரில் 26 பேருக்கு இந்தக் காலி வீட்டுமனையிடங்களில் பட்டா வழங்கலாம் எனவும் மீதியுள்ள 17 பேருக்கு க.ச.201/1 மற்றும் 202 எண் சாலைகளில் கையகப்படுத்தும் நிலத்தில் வீட்டுமனை வழங்கலாம் எனவும் முன்மொழிவுகள் அனுப்பப்பட்டன. அதன் பேரில் 149/ஏ2 150 மற்றும் 151 முதலான சாலைகளில் நிலம் கையகப்படுத்தும் நேர்வு, அரசு கடித எண் ந.க.36413 ஆதிந. 8/88-1 நாள் 29-7-1989-ன்படி ரத்து செய்யப்பட்டு உத்தரவிடப்பட்டது. மேறகுறிப்பிட்டவாறு, க.ச. 149/ஏ2 முதலான சாலைகளில் வீட்டுமனை வழங்கப்படத் தேர்வு செய்யப்பட்ட 108

பேர்களில் உண்மையிலேயே வீட்டுமனை வழங்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கை 43 என்று உறுதி செய்யப்பட்டது. இந்த 43 பேரில் 17 பேருக்கு மட்டுமே க.ச.201/1 மற்றும் 202 முதலான சாலைகளில் கையகப்படுத்தும் நிலத்தில் வீட்டுமனைப்பட்டா வழங்க முடிவு செய்யப்பட்டது. ஆனால் மேற்படி 17 பேருக்கு க.ச. 201/1 முதலான சாலைகளில் ஆர்ஜிதம் செய்யப்பட்ட 2.80.5 ஹெக்டேர் நிலத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படவில்லை. அதற்குப் பதிலாக மேற்கண்ட 17 பேர்கள் மற்றும் வீட்டுமனை அற்ற மற்றும் உள்ளோரையும் சேர்த்து மொத்தம் 86 பேர்களுக்கு வீட்டுமனை வழங்க, அங்கலக்குறிச்சி கிராமம் க.ச. 99/1பி மற்றும் 3பி எண் சாலைகளில் 3.99 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நேர்வில் பொள்ளாச்சி ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியாரிடமிருந்து 4 (1) முன்மொழிவுகள் வரப்பெற்று, அவை பரிசீலனையில் உள்ளன. ஆகவே, பொள்ளாச்சி வட்டம், அங்கலக்குறிச்சி கிராமத்தில் க.ச.201/1 மற்றும் 202 எண் சாலைகளில் கையகப்படுத்தப்பட்ட 2.80.5 ஹெக்டேர் நிலத்தில் மொத்தம் 260 ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டது என்றும் க.ச. 149/2 முதலான சாலைகளில் குறிப்பிடப்பட்ட 150 மற்றும் 151/1 எண் சாலைகளில் 2.52.5 ஹெக்டேர் நிலத்தைக் கையகப்படுத்தும் நேர்வு உரிய பயனாளிகள் இல்லாததால் கைவிடப்பட்டது என்றும் க.ச.149/ஏ2 முதலான சாலைகளில் குறிப்பிடப்பட்ட 108 பயனாளிகளில், 17 பேருக்கு மட்டுமே வீட்டுமனையிடம் தேவைப்படுகிறது என்று கண்டறியப்பட்டது என்றும் இந்தப் பதினேழு பேருடன் மேலும் வீட்டுமனை இல்லாதோரையும் சேர்த்து மொத்தம் 86 ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்க அங்கலக்குறிச்சி கிராமம் க.ச.99/1பி மற்றும் 3பி எண் சாலைகளில் 3.00 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு நில ஆர்ஜித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**91—**

### அரசு உறைவிடப் பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டுதல்

வினா எண் 37637—**திரு. வெ. பெரியசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதி, அந்தியூர் ஒன்றியம், பர்கூர் ஊராட்சி, குட்டையூர் மற்றும் சோழகனை அரசு உறைவிடப் பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

***மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:***

பெரியார் மாவட்டம், அந்தியூர் ஒன்றியம், பர்கூர் ஊராட்சி, குட்டையூர் மற்றும் சோழகனை அரசு உண்டுறைவிடப் பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன்மொழிவுகள் ஏதும் இல்லை.

**92—**

**புவனகிரி ஒன்றியத்தில் மின்இணைப்பு வழங்குதல்**

வினா எண் *38343*—**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*(அ)* புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், அம்மன் குப்பம், குளக்கரை ஓரம் கோயிலுக்கு மின் இணைப்பு கொடுக்காமல் உள்ளதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது மின் இணைப்பு வழங்கப்படும்?

**விடை--**

***மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:***

*(அ)* மற்றும் *(ஆ):* சிதம்பரம் வட்டம், வளையமாதேவி கிராமம் ஆதிதிராவிடர் குடியிருப்பு அம்மன் குப்பம், அருள்மிகு மாரியம்மன் கோயில் *(குளக்கரையோரத்தில் உள்ளது)* இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கீழ் வரப்பெறாத, சொத்துக்களோ, வருமானமோ இல்லாத சிறிய கோயிலாகும். மின் இணைப்பு வழங்குதல் தொடர்பாக இந்து சமய அறநிலையத்துறையின் மூலம் நடவடிக்கை எடுக்க இயலாது.

**93—**

**கண்ணன் கோயிலை பழுதுபார்த்தல்**

வினா எண் *38348*—**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள கீழச்சாவடி கிராமத்திலுள்ள கண்ணன் கோயிலை பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பழுதுபார்க்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் உள்ள கீழச்சாவடி கிராமத்தில் உள்ள கண்ணன் கோயில், இந்து சமய அறநிலையத்துறையின் ஆளுகையின் கீழ் கொண்டுவரப்படாத திருக்கோயிலாகும். எனவே விதிகளின்படி இத்திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய நிதி உதவி வழங்க இயலாது.

**94—**

**கீழ்மூங்கிலடியிலுள்ள கோயிலைப் புதுப்பித்தல்**

வினா எண் 38337—**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், கீழ் மூங்கிலடியிலுள்ள கோயிலைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது புதுப்பிக்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம் கீழ்மூங்கிலடி கிராமத்தில் உள்ள கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின் கீழ் இல்லாத திருக்கோயில். எனவே விதிகளின்படி இத்திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய நிதியுதவி வழங்க இயலாது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**95—**

**ஜலகண்டேஸ்வரர் ஆலயத்தைப் பழுதுபார்த்தல்**

வினா எண் *39329*—**திரு. சி. குழந்தைவேலு:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி குடுமியான் மலை, ஜலகண்டேஸ்வரர் ஆலயம் பழுதடைந்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் புதுப்பிக்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலை அருள்மிகு சிகாகிரிஸ்வரர் திருக்கோயிலே சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் மத்திய அரசின் தொல்பொருள் இலாகா பாதுகாப்பிலும் பொறுப்பிலும் இருந்து வருகிறது. அத்துறையின் மூலம் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**96—**

**ஏரிப்புறக் கரையில் சமுதாயக் கூடம் அமைத்தல்**

வினா எண் *46708*—**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை ஒன்றியம் ஏரிப் புறக்கரை மீனவர்களுக்கு சமுதாயக் கூடம் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத் துறை அமைச்சர்:**

செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்சமயம் இல்லை.

97—

### நவீன மீன்பிடிக் கப்பல்கள் வாங்குதல்

வினா எண் *48529*—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வெளிநாடுகளிலிருந்து நவீன மீன்பிடிக் கப்பல்களை வாங்குவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை**—

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத் துறை அமைச்சர்:**

இல்லை.

98—

### மீனவர்களுக்கு வீட்டுமனை வழங்குதல்

வினா எண் *53546*—**திரு. எம். பூராசாமி:** மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியிலுள்ள காவிரிப்பூம்பட்டினம், வானகிரி, தரங்கம்பாடி, சந்திரபாடி ஆகிய கடற்கரையோர மீனவர்கள் வாழும் பகுதியில் மீனவர் குடும்பங்களுக்கு கடற்கரையோரங்களில் உள்ள அதிக் பரப்பளவுள்ள புறம்போக்கு நிலங்களில் வீட்டுமனை வழங்குவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆமெனில், எப்போது வழங்கப்படும்?

**விடை**—

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

99—

### ஊத்தங்கரை பாம்பாறு அணையில் மீன்பிடித்தல் மூலம் வருமானம்

வினா எண் *55323*—**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*1995* நவம்பர் *3*]

(அ) தர்மபுரி மாவட்டம், ஊத்தங்கரை பாம்பாறு அணையில் ஒரு ஆண்டிற்கு எத்தனை டன் மீன்கள் பிடிக்கப்படுகின்றன?

(ஆ) அவற்றின் மதிப்பு எவ்வளவு?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தர்மபுரி மாவட்டத்திலுள்ள பாம்பாறு அணையில் கடந்த மூன்று ஆண்டுகளுக்கான மீன் பிடிப்பு மற்றும் அதன் மூலம் கிடைத்த வருமானங்கள் பற்றி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| ஆண்டு | கிடைத்த மீனின் எடை (கிலோ) | ஈட்டிய வருமானம். (ரூபாய்) |
|---|---|---|
| *1991-92* .. | *10,901* | *42,720* |
| *1992-93* .. | *20,408* | *1,05,758* |
| *1993-94* .. | *13,560* | *56,991* |

**100—**

**சென்னையில் மீன்வளர்ச்சிக்கழக விற்பனை அங்காடிகள் அமைத்தல்**

வினா எண் *69511*—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் மேலும் முக்கிய இடங்களில் மீன் வளர்ச்சிக் கழக விற்பனை அங்காடிகள் அமைக்கப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத் துறை அமைச்சர்:**

சென்னை நகரில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக மீன் விற்பனை அங்காடிகளை மேலும் நிறுவிடும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

[*1995 நவம்பர் 3*

# இரண்டாம் பட்டியல்

**1—**

**அரசு நிர்வாகச் செலவுகளில் சிக்கனத்தைக் கடைப்பிடித்தல்**

*வினா எண் 47990*—**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** *மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா*—

*அரசு நிர்வாகச் செலவுகளில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகின்றதா? ஆமெனில், விவரம் என்ன?*

**விடை**--

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்:***

*ஆம். அரசு நிர்வாகச் செலவுகளில் சிக்கனத்தைக் கடைபிடிப்பதற்காக பல அரசு ஆணைகளை வெளியிட்டு அனைத்துத் துறையினரையும் நிர்வாகச் செலவுகளைக் குறைக்கும்படி வலியுறுத்தியுள்ளது.*

*2. அண்மைக்காலங்களில், குறிப்பாக நான்கு ஆண்டுகளாக அரசு நிர்வாகச் செலவுகளைக் குறைப்பதற்காகவும், பலவகைச் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்காகவும் ஆணைகளை வெளியிட்டு அரசுத்துறைகள், கண்டிப்பாக அவ்வாணைகளில் உள்ள அறிவுரைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டு வந்துள்ளன.*

*3. உதாரணமாக அரசு அலுவலர்களுடைய பயணப்படி செலவு, மருத்துவச் செலவு, தொலைபேசிச் செலவு போன்றவற்றிற்கு உயர்ந்தபட்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டு அதற்கு மிகாமல் செலவு செய்யும்படி 1992ஆம் ஆண்டு அரசு ஆணை எண் 404 நிதி (வ.செ.பொ.1)த் துறை, நாள் 16-6-1992, வெளியிடப்பட்டு, செலவும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாணையில் அலுவலகங்களுக்குத் தேவையான புதிய மரச்சாமான்கள் (மேஜை, நாற்காலி போன்றவை) வாங்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் வாங்குவதற்கான அவசியம் நேரிடும்போது அரசிடம் ஆணை பெறும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*4. மேலும், 1994ஆம் ஆண்டு அரசு ஆணை எண் 520, நிதி (வ.செ.பொ.1)த் துறை, நாள் 27-6-1994ன்படி காலாண்டு நிதி ஒதுக்கீட்டு கட்டுப்பாட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. வருட நிதி ஒதுக்கீட்டில்*

*1995 நவம்பர் 3]*

(Budget Estimate) *10* விழுக்காடு தனியாக ஒதுக்கி, எதிர்பாரா/உயர் செலவுகளுக்காகவும், *5* விழுக்காடு திட்டமிடாத/சம்பளமில்லாத செலவுகளில் குறைக்கப்பட்டு மீதமுள்ள நிதி ஒதுக்கீட்டை நான்கு காலாண்டுகளுக்குப் பங்கிட்டு, அதற்கு மிகாமல் செலவு செய்யுமாறும், தவிர்க்க முடியாத சூழ்நிலையில், அரசு நிதித்துறை ஒப்புதலுடன் மட்டுமே செலவு செய்ய வேண்டும் என்று ஆணையிட்டு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இவ்வருடமும் *(1995)* அரசு ஆணை எண் *252*, நிதி *(வ.செ.பொ.1)*த் துறை, நாள் *31-3-1995*, ஆணை வெளியிடப்பட்டு அதில் ஏற்கெனவே சென்ற ஆண்டு வெளியிடப்பட்ட மேற்சொன்ன முறையை முதல் காலாண்டிலிருந்தே கடைப்பிடிக்கும்படியும் ஒவ்வொரு பட்டியலிலும் அச்செலவிற்கான ஒதுக்கீடு செலவு செய்யப்பட்ட தொகை, மீதமுள்ள தொகை இவற்றிற்கான அட்டவணை (Statement) வைக்கும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**2—**

**மொடக்குறிச்சி தொகுதியில் கிளைச் சிறைச்சாலை அமைத்தல்**

வினா எண் *48834*—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதிக்கு உட்பட்ட *4* காவல் நிலையங்களுக்கு கிளைச் சிறைச்சாலை அமைக்கும் எண்ணம் அரசிடம் உண்டா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்:**

இல்லை.

**3—**

**அதம்பை ஆதிதிராவிடர்களுக்கு இல்வச வீட்டுமனைப்பட்டா வழங்குதல்**

வினா எண் *13421*—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை (வடக்கு) ஆதிதிராவிடர்களுக்கு சர்வே எண் *117*ல் ஏக்கர் *1.92* சென்ட் நத்தம் புறம்போக்கில் *1992-93* இல் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

**விடை--**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:**

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை வடக்கு கிராம புல எண். 117, "சர்க்கார் புறம்போக்கு வண்ணான்படிகுளம்" என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது. நீர் நிலைப் புறம்போக்கு நிலங்களை ஒப்படை செய்வதற்கு தடையாணை உள்ளது. எனவே, இந்த குளம் புறம்போக்கு நிலத்தை ஒப்படை செய்யும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

**4—**

**வலங்கைமான் தொகுதியில் மனைப்பட்டா வழங்குதல்**

வினா எண் 22799—**திருமதி கே. பஞ்சவர்ணம்:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வலங்கைமான் தொகுதியில் கிராமப்புறத்தில் உள்ள தொழிலாளர் வசிக்கும் புறம்போக்கு மனைக்குப் பட்டா வழங்க அரசு முன் வருமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டத்தில் வலங்கைமான் தொகுதியில் தடைசெய்யப்படாத புறம்போக்கு நிலங்களில் உள்ள 159 ஆக்கிரமனுதாரர்களுக்கும் வரன்முறை செய்யப்பட்டு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுவிட்டன. தடை செய்யப்படாத நிலங்களில் வீட்டுமனைப்பட்டா வழங்கப்படவேண்டிய ஆக்கிரமனுதாரர்கள் ஒருவரும் இல்லை. வலங்கைமான் வட்டத்தில் தடைசெய்யப்பட்ட புறம்போக்குகளாகிய நீர்நிலைப் புறம்போக்கு, நெடுஞ்சாலை புறம்போக்கு ஏனைய தடைசெய்யப்பட்ட புறம்போக்குகளில் 301 கிராமப்புற ஆதிதிராவிட தொழிலாளர்கள் ஆக்கிரமனம் செய்து குடியிருந்து வருகின்றனர். அவர்கள் ஆக்கிரமனம் செய்து குடியிருந்துவரும் இடத்தை வரன்முறை செய்து வீட்டுமனைப்பட்டா வழங்க இயலாததாகையால் அவர்களுக்கு தனியார் நிலங்களை கையகப்படுத்தி பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

*1995 நவம்பர் 3]*

**5—**

**சின்னூர் கிராமத்தில் பட்டா வழங்குதல்**

*வினா எண் 38192*—**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* புவனகிரி தொகுதி பரங்கிப்பேட்டை ஒன்றியம் சின்னூர் கிராமத்தில் குடியிருப்புக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ):* புவனகிரி ஒன்றியம், சின்னூர் கிராமத்திலுள்ள மீனவர்களில் அரிய கோஷ்டி கிராமம் மறு அளவை எண் 155 டி.கே.டி. எண் 25/1403ன்படி 51 நபர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. மீதி பரவலாக ஆங்காங்கே உள்ள நபர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**6—**

**திடீர்குப்பம் பகுதியில் விட்டுமனைப்பட்டா வழங்குதல்**

*வினா எண் 38345*—**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், சுத்துக்குழியின் அருகில் திடீர் குப்பம் பகுதியில் குடியிருப்பவர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது பட்டா வழங்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சிதம்பரம் வட்டம், புவனகிரி ஒன்றியம் சுத்துக்குழியின் அருகில் திடீர் குப்பம் கிராமத்தில் உள்ள 32 நபர்களில் 8 நபர்களுக்கு நத்தம் சர்வே திட்டத்தின் கீழ் பட்டா வழங்கப்பட்டு விட்டது. மீதம் உள்ள 24 நபர்களுக்கு வீட்டு மனை வசதி செய்துதர நத்தம் புறம்போக்கு நிலம் இல்லை. எனவே, அவர்களுக்கு ஆதிதிராவிட நலத்துறை மூலம் நில எடுப்பு செய்து மனைப்பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**7—**

**டி. ஆதனூரில் மனைப்பட்டா வழங்குதல்**

வினா எண் 38359—**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், டி. ஆதனூரில் மனைப்பட்டா இல்லாதவர்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம் டி. ஆதனூரில் மொத்தம் உள்ள 225 ஆதிதிராவிடக் குடும்பங்களில் 67 குடும்பங்களுக்கு மட்டும் வீட்டுமனைகள் இல்லை. மேற்படி 67 குடும்பங்களுக்கு மேற்படி கிராமத்தில் பொருத்தமான வேறு அரசு நிலங்கள் இல்லை என்பதால் நில எடுப்புச் சட்டம் மூலம் நிலம் எடுக்கப்பட்டு ஆதிதிராவிடர் நலத்துறையில் வீட்டுமனை ஒப்படை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**8—**

**கண்டியப்பேரி மக்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்குதல்**

வினா எண் 39242—**திரு. டி. வேலையா:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*1995 நவம்பர் 3*]

திருநெல்வேலி தொகுதி, கண்டியப்பேரி கிராமம் புல எண் *544*இல் குடியிருந்துவரும் மக்களுக்கு அந்த இடத்திலேயே இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:**

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், திருநெல்வேலி வட்டம், கண்டியப்பேரி கிராமம், புல எண் *544*இல் மக்கள் குடியிருந்துவரும் நிலம், தாமிரபரணி நதிமூலம் பாசனம்பெறும் குளமாக இருப்பதாலும், மழைக்காலங்களில் வெள்ளத்தினால் அபாயம் ஏற்படும் நிலையில் உள்ளபடியாலும், மேற்படி நிலம் ஒப்படைக்கு தடைசெய்யப்பட்ட குளம் புறம்போக்காக இருப்பதாலும், இதில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க இயலாது.

**9—**

## இனாம் ஒழிப்புச் சட்டம்

வினா எண் *40559*—**திரு. ஆர். முருகையா பாண்டியன்:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் அரசினரால் எத்தனை கிராமங்கள் இது வரை இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டன?

(ஆ) எத்தனை கிராமங்களில் இனாம் ஒழிப்புச் சட்டப்படி குடிசைகளுக்குப் பட்டா வழங்கப்பட்டது?

(இ) இது தொடர்பாக நீதிமன்ற வழக்குகள் எவ்வளவு காலமாக உள்ளன?

**விடை--**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் கிராமங்கள் இனாம் ஒழிப்புச் சட்டங்களின்கீழ் அறிவிக்கப்பட்டன.

(ஆ) 605 கிராமங்களில் இனாம் ஒழிப்புச் சட்டப்படி குடிசைகளுக்குப் பட்டா வழங்கப்பட்டது.

(இ) இது தொடர்பாக 27 நீதிமன்ற வழக்குகள் 1979 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையிலுள்ளன.

10—

**புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்கள் விவரம்**

வினா எண் 36389—**டாக்டர் வெ. சரோஜா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் புற்று நோயால் பாதிக்கப்பட்டு அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகள் எத்தனை பேர்?

(ஆ) தனியாக அதற்கு என்று நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறதா?

(இ) ஆகும் செலவு ஆண்டுக்கு தோராயமாக எவ்வளவு?

விடை--

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

| | | 1993 | 1994 ஜனவரி முதல் டிசம்பர் வரை. |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| (அ) | (1) புற நோயாளிகளின் எண்ணிக்கை | 20,711 | 61,440 |
| | (2) உள் நோயாளிகளின் எண்ணிக்கை | 2,532 | 15,635 |

(ஆ) ஆம்.

(இ) 1993-94—29,52,000

1994-95—38,11,100

*1995 நவம்பர் 3]*

**11—**

**அடுக்கம்பாறை வேலூர் மருத்துவமனையில் கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

*வினா எண் 38142*—**டாக்டர் ஜெ. பரந்தாமன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் மாவட்ட காசநோய் (அடுக்கம்பாறை வேலூர்) மருத்துவமனையில் கூடுதல் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டும் கூடுதல் உள்நோயாளிகள்* (Inpatients) *எண்ணிக்கை அனுமதிக்காததை அரசு அறியுமா?*

*(ஆ) இந்த அனுமதி உடனே கிடைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துற அமைச்சர்:**

*(அ) கூடுதல் கட்டிடத்திற்குத் தேவையான அலுவலர்கள் மற்றும் நிர்வாக செலவினங்களுக்கான நிதி ஒதுக்கீடு இல்லாத போதிலும் ஏற்கெனவே இருக்கின்ற அலுவலர்களைக் கொண்டு, தற்போது கூடுதல் படுக்கைக்கு உள் நோயாளிகள் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள்.*

*(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.*

**12—**

**காவேரிப்பட்டணம் தொகுதியில் உள்ள கிராமிய மருத்துவமனைகள் விவரம்**

*வினா எண் 39455*—**திரு. கா.பூ. முனுசாமி:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காவேரிப்பட்டணம் தொகுதியில் உள்ள கிராமிய மருத்துவமனைகள் எத்தனை?*

*(ஆ) அவை ஆரம்பச் சுகாதார நிலையங்களாக உயர்த்தப்படுமா?*

விடை--

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

(அ) காவேரிப்பட்டணம் தொகுதியில் பனத்தூர் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய பகுதி நேர சித்த மருந்தகம் ஒன்று மட்டும் செயல்பட்டு வருகிறது.

(ஆ) பகுதிநேர சித்த மருந்தகம் ஆரம்ப சுகாதார நிலையமாக நிலை உயர்த்தப்படுவது இல்லை. முழுநேர ஊராட்சி ஒன்றிய அலோபதி மருத்துவமனைகள் மட்டுமே ஆரம்ப சுகாதார நிலையங்களாக நிலை உயர்த்தப்படுகின்றன.

13—

**தொக்காவிக்காட்டில் தாய் சேய் நல விடுதி அமைத்தல்**

வினா எண் 43619-ஏ—**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், தொக்காவிக்காட்டில் தாய் சேய் நல விடுதி கட்டிடம் கட்டப்பட்டு அதில் இயங்காத மருத்துவமனையை இயங்க வைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த தொக்காவிக்காட்டில் தாய் சேய் நல விடுதி இயங்கிவந்த அரசு கட்டிடம் பழுதடைந்துள்ளது. இக்கட்டிடத்தை செப்பனிட பட்டுக்கோட்டை ஒன்றிய ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். தற்சமயம் தாய் சேய் நலப்பணிகளை சம்பந்தப்பட்ட கிராம சுகாதார செவிலியர் வாடகை வீட்டில் இருந்து கொண்டு செய்து வருகிறார்.

*1995 நவம்பர் 3]*

**14—**

**மானியக்காடு கிராமத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் தொடங்குதல்**

*வினா எண் 43855*—**திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

*பேராவூரணி, மானியக்காடு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்க் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

*மானியக்காடு கிராமம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தது. இந்த ஊராட்சி ஒன்றியத்தில் (1) அழகிய நாயகிபுரம், (2) ஊமத்தநாடு, (3) குருவிகரம்பை, (4) பெருமகளூர் ஆகிய கிராமங்களில் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 1991ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்த ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 86, 995 ஆகும். 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சேர்ந்த மானியக்காடு கிராமத்தில் மேலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

**15—**

**திருப்பத்தூர் தொகுதியில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அமைத்தல்**

*வினா எண் 44776*—**திரு ஏ.கே.சி. சுந்தரவேல்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் 1994-95 ஆம் ஆண்டில் புதிதாக, எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளது?*

விடை--

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் ஏற்கனவே 27 ஆரம்ப சுகாதார நிலையங்களும், இரண்டு வட்டாரமில்லா மருத்துவமனைகளும் செயல்பட்டு வருகின்றபடியால் 1994-95 ஆண்டில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

16—

**வேலூர் மாவட்ட அரசு மருத்துவமனையை நவீனப்படுத்தல்**

வினா எண் 45688—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு மாவட்டம், வேலூர் மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையை நவீனப்படுத்தி படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

அரசின் நிதி நிலையைக் கருத்தில் கொண்டு, வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம், வேலூர் தலைமை அரசு மருத்துவ மனையை நவீனப்படுத்தி, படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க தற்போது இயலாது.

17—

**மாடப்பள்ளி ஊராட்சியில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைத்தல்**

வினா எண் 45710—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*1995 நவம்பர் 3]*

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி மாடப்பள்ளி ஊராட்சியில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கப்படுமா?

**விடை--**

***மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:***

திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஆண்டியப்பனூர், கதிரம்பட்டு ஆகிய இடங்களில் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. மேலும் வட்டாரமில்லா மருத்துவமனை ஒன்றும் திருப்பத்தூரில் இயங்கி வருகின்றது. எனவே, மாடப்பள்ளியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடத்தில் இல்லை.

**18—**

**ஜோலார்பேட்டை ஒன்றியத்தில் ஆரம்பச் சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மேம்படுத்துதல்**

வினா எண் *45718*—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி ஜோலார்பேட்டை ஒன்றியத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் அரசு மருத்துவமனையாக மேம்படுத்தப்படுமா?

**விடை--**

***மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:***

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் ஜோலார்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்றும் திட்டம் எதுவும் இல்லை.

[1995 நவம்பர் 3

**19—**

## பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் ஓட்டுநர் நியமித்தல்

வினா எண் 47226—**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை அரசினர் மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் ஓட்டுநர்கள் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

பட்டுக்கோட்டை அரசினர் மருத்துவமனையில், 3 ஊர்திகள் உள்ளன. இவற்றில் 1 ஊர்திக்கு ஓட்டுநர் பணியிடம் நிரப்பப்பட்டு விட்டது. இன்னொரு ஆம்புலன்ஸ் ஊர்தி 19-3-1995 முதல் நாகப்பட்டினம் அரசினர் தலைமை மருத்துவ மனைக்கு தருவிக்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இன்னொரு ஊர்திக்கான ஓட்டுநர் பதவியை நிரப்ப மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

**20—**

## போக்குவரத்து விபத்துகள்

வினா எண் 14089—**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1991-92ஆம் ஆண்டில் எத்தனை போக்குவரத்து தொடர்பான விபத்துகள் நடந்துள்ளன?

(ஆ) அதனால் உயிரிழந்தோர் எத்தனை பேர்?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3]*

*(அ) 33,037*

*(ஆ) 6,521*

**21—**

**குன்னத்தூரிலிருந்து திருப்பூருக்கு கூடுதல் பேருந்து இயக்குதல்**

வினா எண் 25769—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பனியன் தொழிலாளர் வசதிக்காக குன்னத்தூரிலிருந்து திருப்பூருக்கு கூடுதலாகப் பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

திருப்பூர்-குன்னத்தூர் நகர்ப்புற வழித்தடத்தில் சேரன் போக்குவரத்துக் கழகப் பேருந்து மூலம் இரண்டு தனி நடைகளும், ஜீவா போக்குவரத்துக் கழகத்தின் 15 பேருந்துகள் மூலம் 156 தனி நடைகளும், இரு தனியார் பேருந்துகள் மூலம் 28 தனி நடைகளும் தற்போதைய போக்குவரத்து தேவைக்கேற்ப தினசரி இயங்கி வருகின்றன. மேலும் திருப்பூர்-கோபி பேருந்து குன்னத்தூர் வழியாக இயக்கப்படுவதன் மூலமும் போதிய பேருந்து வசதி பெற்றுள்ள நிலையில் மேலும் கூடுதல் பேருந்துகள் மேற்படி வழித்தடத்தில் இயங்குவதற்கான தேவை தற்போது எழவில்லை என்று கருதப்படுகிறது.

**22—**

**சோளக்காளிபாளையத்தில் பேருந்து இயக்குதல்**

வினா எண் 26824—**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி சோளக்காளி பாளையத்தில் கால்நடை மருந்தகம், அரசு அலுவலகம் இயங்குவதாலும் வியாபாரஸ்தலமாக உள்ளதாலும் அரசுப் பேருந்துகளை நிறுத்தி பயணிகளை ஏற்றிச்செல்வதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை--

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, சோளக்காளி பாளையத்தில் ஜீவா போக்குவரத்துக் கழக நகரப்பேருந்துகள் நின்று பயணிகளை ஏற்றி/இறக்கிச் செல்கின்றன.

**23—**

பாகநத்தம்-கரூருக்கு பேருந்து இயக்குதல்

வினா எண் *33031*—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*மாணவ, மாணவிகள் வசதிக்காக பாகநத்தம் கிராமத்திலிருந்து கரூர் வரை காலை நேரத்தில் தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இயக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?*

விடை--

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

பாகநத்தம் கிராமத்திலிருந்து கரூர் செல்லும் பள்ளி மாணவ மாணவிகள் வசதிக்காக பல நோக்கு திட்டத்தில் நகரப் பேருந்து ஒன்றின் மூலம் வெஞ்சமாங்கூடலூர், கரூர் (வழி) பாகநத்தம் வழியாக காலை 7-40 மணிக்கு நடை எடுத்து கரூருக்கு காலை 8-50 மணிக்கு வந்தடையுமாறு 14-3-1995 முதல் இயக்கப்படுகிறது.

**24—**

**பள்ளப்பட்டி-பெங்களூருக்கு விரைவுப் பேருந்து இயக்குதல்**

வினா எண் *34195*—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா --

*பள்ளப்பட்டியிலிருந்து பெங்களூருக்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

*பள்ளப்பட்டி என்ற இடமானது கரூர்-திண்டுக்கல் பாதையில் 32 கி.மீ. தொலைவிலும், திண்டுக்கல்-கரூர் பாதையில் 44 கி.மீ. தொலைவிலும் உள்ளது. மேலும் பள்ளப்பட்டி பிரதான சாலையிலிருந்து 1 கி.மீ. உள்ளே இருப்பதாலும், இந்தச் சாலை விரைவுப் பேருந்து இயக்கத்திற்கு பொருத்தமற்றதாக இருப்பதாலும், தற்சமயம் பள்ளப்பட்டியிலிருந்து பெங்களூருக்கு விரைவுப் பேருந்து இயக்குவது நடைமுறையில் சாத்தியமற்றதாக உள்ளது. ஆயினும், மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி, கம்பம் செங்கோட்டை, நாகர்கோவில் கன்னியகுமரி, மார்த்தாண்டம் மற்றும் பாபநாசத்திலிருந்து பெங்களூருக்கு 40 புரட்சித் தலைவி ஜெ.ஜெயலலிதா போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மூலம் கரூர்-திண்டுக்கல் சாலை வழியாக 50 ஒருவழிப் பயணப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. பள்ளப்பட்டி மக்கள் கரூரை அடைந்து மேற்கூறிய பேருந்து வசதியினை பயன்படுத்திக் கொள்ளலாம்.*

**25—**

### கரூரிலிருந்து நகரப்பேருந்து இயக்குதல்

*வினா எண் 34211*—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூரிலிருந்து முஷ்டகிணத்துப்பட்டிக்கு சாரதா மகளிர் கல்லூரி, தம்மாநாயக்கன்பட்டி, நொச்சிப்பட்டி, வெடிக்காரன்பட்டி வழியாக தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக நகரப்பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

*கரூர்-முஷ்டக்கிணத்துப்பட்டி (வழி) தம்மாநாயக்கன்பட்டி, நொச்சிப்பட்டி, வெடிக்காரன்பட்டி வரையிலான வழித் தடத்தின் தூரம் 23 கி.மீ. தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் கரூர்*

ஆர். வெள்ளோடு (வழி) சாரதா கல்லூரி வெடிக்காரன்பட்டி பாகநத்தம், நந்தனூர் வழித்தடத்தில் 8 நடைகளும் கரூர், முஷ்டகிணத்துப்பட்டி (வழி) சாரதா கல்லூரி, தம்மாநாயக்கன்பட்டி, நொச்சிப்பட்டி, வெடிக்காரன்பட்டி பாகநத்தம் வழியாக 2 தனி நடைகளும் ஒரு நகரப்பேருந்து மூலம் இயக்கி வருகிறது. நொச்சிப்பட்டியிலிருந்து வெடிக்காரன்பட்டி வரையிலான 1 கி.மீ. சாலை மண்சாலையாகும். ஒரு தனியார்துறை பேருந்து கரூர்-முஷ்டகிணத்துப்பட்டி வழித்தடத்தில் தினசரி 16 நடைகள் இயங்கி வருகிறது. எனவே இப்பகுதிக்கு தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாகும்.

**26—**

**அரவக்குறிச்சி பள்ளப்பட்டி வழியாக கரூருக்குப் பேருந்து இயக்குதல்**

வினா எண் *34302*—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், ஈசநத்தத்திலிருந்து காலை 5.30 மணிக்கு புறப்படும் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகப் பேருந்தை அரவக்குறிச்சி, பள்ளப்பட்டி வழியாக கரூருக்கு இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

கோரிக்கை, வழித்தடத்தில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் மூலம் காலை 5.30 மணிக்கு பேருந்து இயக்கப்படுவதில்லை. தற்போது காலை 11 மணிக்கு ஈசநத்தத்திலிருந்து அரவக்குறிச்சிக்கு நகரப் பேருந்து இயக்கப்படுகிறது. காலை 11.30 மணிக்கு ஈசநத்தத்திலிருந்து பாகநத்தம் வழியாக கரூருக்கு புறநகர் பேருந்து இயக்கப்படுகிறது. அரவக்குறிச்சியிலிருந்து காலை 5.00 மணி முதல் ஒவ்வொரு 15 நிமிடத்திற்கும் கரூருக்கு பேருந்து உள்ளது. அரவக்குறிச்சி-கரூர் வழித்தடத்தில் தினமும் 104 நடைகள் இயக்கப்படுகின்றன. எனவே, தற்போதுள்ள வசதிகளே போதுமானவை என்று கருதப்படுகிறது.

*1995 நவம்பர் 3]*

**27—**

**அஞ்சூர் கிராமத்திற்குப் பேருந்து இயக்குதல்**

வினா எண் *34325*— **திருமதி கே. மரியம் உல் ஆசியா**மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், அஞ்சூர் கிராமத்திற்கு ஈரோட்டிலிருந்து இயக்கப்படும் ஜீவா போக்குவரத்துக் கழக நகரப் பேருந்தை நண்பகலில் ஒரு முறை இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:***

ஈரோட்டிலிருந்து அஞ்சூர் கிராமத்திற்கு தற்போது காலை மற்றும் மாலை நேரங்களில் டி.சி.பி. *2813 (42/கே1)* பேருந்து மூலம் தினசரி *4* தனி நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. இப்பேருந்து பல்முனை வழித்தடங்களில் இயக்கப்பட்டு வருவதால் கோரிக்கையின்படி நண்பகல் கூடுதல் தனி நடைகள் இயக்க இயலாத நிலை உள்ளது. மேலும் தற்போதுள்ள வசதிகளே போதுமானவை என்று கருதப்படுகிறது.

**28—**

**கோடந்தூர்-காங்கேயம் பேருந்து இயக்குதல்**

வினா எண் *3511*—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் வட்டம், கோடந்தூர்-வெள்ளகோயில் வரை இயக்கப்படும் ஜீவா போக்குவரத்துக் கழக நகரப் பேருந்தை (கே.4) காங்கேயம் வரை இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:***

கோரிக்கையில் உள்ள ஜீவா போக்குவரத்துக் கழக தடம் எண் கே.4 நகரப் பேருந்து காங்கேயம்-கோடந்தூர் என தினசரி 6 தனிநடைகள் 17-6-1994 முதல் நீட்டித்து இயக்கப்பட்டு வருகிறது.

**29—**

**அரவக்குறிச்சி-வெள்ளியனை நகரப் பேருந்து இயக்குதல்**

வினா எண் 35117—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சியிலிருந்து வெஞ்சமாங்கூடலூர் வழியாக வெள்ளியனை வரை நகரப்பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

அரவக்குறிச்சி-வெள்ளியனை (வழி) வெஞ்சமாங்கூடலூர் என்ற வழித்தடத்தின் நீளம் 32 கி.மீ. மேற்படி வழித்தடத்தில் அனைத்து பகுதிகளும் ஏற்கெனவே பேருந்து வசதி பெற்ற பகுதிகளாகும். எனவே பேருந்து வசதி பெற்ற பகுதிகளுக்கு 30 கி.மீ. மேல் நகரப்பேருந்து இயக்க இயலாது.

**30—**

**பேராணம்பட்டில் ஆய்வு மாளிகையை சீரமைத்தல்**

வினா எண் 35712—**டாக்டர் ஜெ. பரந்தாமன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் பேரணாம்பட்டில் உள்ள வனத் துறைக்குச் சொந்தமான தங்கும் விடுதி ஆய்வு மாளிகையினை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3]*

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், பேரணாம்பட்டில் உள்ள வனத் துறைக்குச் சொந்தமான தங்கும் விடுதி ஆய்வு மாளிகையின் சீரமைப்புப் பணி 1995–96 ஆம் ஆண்டில் "தமிழ்நாடு வன மேம்பாட்டு நிதி"க்காக ஏற்படுத்தப்பட்டுள்ள குழுவின் முன் வைக்கப்பட்டு, ஒப்புதல் பெற்ற பின், இதற்காக நிதி ஒப்பளிப்பு வழங்கிய உடன் ஆரம்பிக்கப்படும்.

**31—**

**கிருட்டிணகிரியில் ஜெ.ஜெ.டி.சி. பேருந்துகளில் இருக்கைகள் ஒதுக்குதல்**

வினா எண் *35862*—**திரு கே. முனிவெங்கடப்பன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெங்களூரிலிருந்து சென்னைக்கு இயக்கப்படும் ஜெ.ஜெ.டி.சி. பேருந்துகளில் ஏதேனும் ஒன்றில் கிருட்டிணகிரிக்கென 15 இருக்கைகள் ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

பெங்களூரிலிருந்து சென்னைக்கு இயக்கப்படும் ஜெ.ஜெ.டி.சி. பேருந்துகள் அனைத்திலும் அனைத்து இருக்கைகளும் பெங்களூரிலேயே முன்பதிவு செய்யப்பட்டு பயணிகள் அமர்ந்துவிடுவதால், கிருஷ்ணகிரிக்கென தனியாக 15 இருக்கைகள் ஒதுக்கீடு செய்ய இயலாது.

**32—**

**துறையூர்-நாகூருக்குப் பேருந்து இயக்குதல்**

வினா எண் *36133*—**திரு வி. ரவிச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா --

(அ) உப்பிலியாபுரம் தொகுதி துறையூரிலிருந்து நாகூருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் இயக்கப்படும்?

விடை--

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கோரிக்கையில் கூறப்பட்டுள்ள துறையூர்-நாகூர் வழித்தடத்தின் தூரம் 176 கி.மீ. துறையூரிலிருந்து திருச்சிக்கு தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழகம் மற்றும் தனியார் பேருந்துகள் மூலம் தினசரி 242 நடைகள் திருச்சியிலிருந்து நாகூருக்கு சோழன் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் 16 நடைகளும் மற்றும் திருச்சியிலிருந்து நாகப்பட்டினம் வழித்தடத்தில் தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழகம் மற்றும் சோழன் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் 78 நடைகளும் இயக்கப்படுகிறது. நாகப்பட்டினத்திலிருந்து நாகூருக்கு சோழன் போக்குவரத்துக் கழக மற்றும் தனியார் நகரப் பேருந்துகள் மூலம் 106 நடைகளும் இயக்கப்பட்டு வருகிறது. தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாகும்.

33—

**திருக்கோவிலூர்-அருமலை சாலையில் நகரப்பேருந்தை கூடுதல் நடை இயக்குதல்**

வினா எண் 37139—**திருமதி ஆர். சாவித்திரி அம்மாள்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி திருக்கோவிலூர்-அருமலை சாலையில் ஒரு நகரப் பேருந்து காலை, மாலை வேளைகளில் மட்டும் இயக்கப்படுவதை நாளொன்றுக்கு ஐந்து முறையாக இயக்க அரசு முன்வருமா?

விடை--

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

திருக்கோவிலூர்-அருமலை தடத்தில் கூடுதலாக 4 நடைகள் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தால் 4-1-1995 முதல் இயக்கப்பட்டு வருகின்றன.

*1995 நவம்பர் 3]*

**34—**

### ஏ.டி.சி. பேருந்து நிலையம் வழியாக பேருந்து இயக்குதல்

*வினா எண் 37380*—**திரு எச்.எம். ராஜு:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

நீலகிரி மாவட்டம், உதகை நகர மத்திய பேருந்து நிலையத்திலிருந்து பெங்களூர், மைசூர், காலிக்கட், கடலூர், சோலூர் நஞ்சநாடு, இத்தலார், முள்ளிகூர் பகுதிகளுக்கு பாரதியார் போக்குவரத்துக் கழகம் மூலம் இயக்கப்படும் பேருந்துகளை மார்க்கட் அருகிலுள்ள ஏடிசி பேருந்து நிலையம் வழியாக இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

மார்க்கெட் அருகிலுள்ள ஏடிசி பகுதி பேருந்து நிலையமல்ல. சில கிராமப் பேருந்துகளின் திருப்பு முனையாகும். இப்பகுதி, மக்கள் நடமாட்டம் உள்ள நெரிசலான பகுதியாகும். நீண்ட தூரங்களுக்கு இயக்கப்பட்டு வரும் பெங்களூர், மைசூர், காலிக்கட் மற்றும் கூடலூர் வழித்தடப் பேருந்துகளை ஏடிசி வரை இயக்குவது உகந்ததல்ல என்று கருதப்படுகிறது.

**35—**

### அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு குடியிருப்பு வீடுகள் கட்டுதல்

*வினா எண் 37522*—**டாக்டர் சு. மணிமேகலை:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா --

(அ) அரசு போக்குவரத்துக் கழகங்களின் ஊழியர்களுக்கு குடியிருப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை--

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**விவரம்**

| | |
|---|---|
| அண்ணா போக்குவரத்துக் கழகம் | 179 வீடுகள் கட்டும் பணி நடைபெறுகிறது. |
| அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம். | 124 மனைகளில் வீடு கட்டும் பணி தொடங்கப்பட உள்ளது. |
| சேரன் போக்குவரத்துக் கழகம் | 1,647 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. |
| கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம். | 140 வீடுகள் கட்டி பணியாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. |
| நேசமணி போக்குவரத்துக் கழகம் | நிலம் தேர்வு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு உள்ளது. |
| பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் | 100 வீடுகள் ஏற்கெனவே கட்டி ஒப்படைக்கப்பட்டு விட்டன. மேற்கொண்டும் வீடு கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |
| புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகம். | நிலம் தேர்வு செய்யும் பணி மேற்கொள்ளப்படுகிறது. |
| ராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம். | 193 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மேற்கொண்டும் நிலம் தேர்வு நடைபெறுகிறது. |
| சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம். | 421 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 73 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. |

1995 நவம்பர் 3]

| | |
|---|---|
| புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகம். | புதிதாக அமைக்கப்பட்ட கழகம். தனியாக வீடு கட்டும் சங்கம் அமைக்கப்பட உள்ளது. |
| டாக்டர் அம்பேத்கார் போக்குவரத்துக் கழகம். | புதிதாக அமைக்கப்பட்ட கழகம். வீடு கட்டிக் கொடுக்கப்படவில்லை. |
| சேரன் இன்ஜினியரிங் போக்குவரத்துக் கழகம். | சேரன் போக்குவரத்துக் கழக வீடு கட்டும் சங்கத்தில் உறுப்பினராகி வீடுகள் ஒதுக்கீடு பெறுகிறார்கள். |
| தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம். | 511 வீடுகள் 1991–ல் பணியாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. 200 வீடுகள் கட்ட ஏற்பாடுகள் நடக்கின்றன. |
| ஜீவா போக்குவரத்துக் கழகம் | 262 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. |
| மகாகவி பாரதியார் போக்குவரத்துக் கழகம். | சேரன் போக்குவரத்துக் கழகத்துடன் இணைந்திருந்த பொழுது 1986–ல் குன்னூரில் 3.65 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது. நிதி நிலை காரணமாக வீடு கட்டும் பணி காலதாமதமாகி வருகிறது. |
| மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம். | 103 வீடுகள் உடனடியாக கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் பல வீடுகள் கட்டவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம். | இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்துவதற்கு முன் தேனியில் 107 வீடுகள் கட்டப் பட்டன. தற்பொழுது சங்கத்திடம் எந்த ஒரு நிலமும் ஒப்படைக்கப் படவில்லை. நிலம் ஒப்படைக்கப் பட்டவுடன் அடிப்படை வசதிகள் இலவசமாக செய்து தரப்படும். |

| | |
|---|---|
| பல்லவன் போக்குவரத்துக் கழகம். | மொத்தம் 249 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. |
| தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம். | 393 வீடுகள் கட்டப்பட்டு பணியாளர்கள் குடியமர்த்தப்பட்டு உள்ளனர். மேலும் கடலூரில் வீடுகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம். | 412 வீடுகள் கட்டப்பட்டு பணியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளன. |

**36—**

## தளி தொகுதியில் பேருந்து இயக்க அனுமதி

வினா எண் 37538—திரு. மு. வெங்கடராமரெட்டி: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதியில் பெட்டமுகளாளம், நாட்ராம்பாளையம் பேருந்துகள் மாலை 4 மணிக்கு மேல் ஓட்ட அனுமதிக்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களைக் களைய அரசு முன் வருமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பெட்டமுகளாளம் மற்றும் நாட்ராம்பாளையம் தடம் வனத் துறை சாலையில் செல்கின்றது. பாதுகாப்பு கருதி வனத்துறையினர் பேருந்துகளை காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை மட்டுமே இத்தடத்தில் அனுமதிக்கின்றபடியால் மாலை 6 மணிக்கு மேல் அத்தடத்தில் பேருந்துகள் இயக்கப்படுவதில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**37—**

**கிருஷ்ணகிரி-நாகரசம்பட்டிக்கு பேருந்து இயக்குதல்**

வினா எண் *37571*—**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கிருஷ்ணகிரியிலிருந்து நாகரசம்பட்டிக்கு புதிய பேருந்து தடம் துவக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?*

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ): தற்போது கிருஷ்ணகிரியிலிருந்து நாகரசம்பட்டி வழியாக கீழ்க்கண்டவாறு பேருந்துகள் இயங்கி வருகின்றன.*

| | நடைகள் |
|---|---|
| *அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம்* | |
| *4 நகரப் பேருந்துகள்* .. .. .. | *22* |
| *தனியார்–1 நகரப் பேருந்து* .. .. | *10* |
| *தனியார்–4 புற நகரப் பேருந்துகள்* .. .. .. | *16* |
| மொத்தம் .. .. | *48* |

தற்போதுள்ள வசதிகளே போதுமானவை. எனவே நாகரசம்பட்டிக்கு கூடுதலாக பேருந்து இயக்குவது தேவையில்லை.

**38—**

**சந்தன மரங்களை விற்பனை செய்தல்**

வினா எண் *37793*—**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூரில் அரசு கிடங்கில் எத்தனை டன் சந்தன மரங்கள் விற்காமல் உள்ளன?

*(ஆ)* அவற்றின் மதிப்பென்ன?

*(இ)* விசாரணையில் வழக்குகள் உள்ளதால் விற்க முடியாமல் எத்தனை டன் சந்தன மரங்கள் வட ஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்ட நீதிமன்றங்கள், வனத்துறை அலுவலகங்களில் தேங்கிக் கிடக்கின்றன?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

*(அ) மேற்படி கிடங்கில் செப்டம்பர் 1994 நிலவரப்படி துலக்கப்பட்ட 175 டன்கள் சந்தனக் கட்டைகளும், துலக்கம் செய்யப்பட வேண்டிய 76,892 சந்தன மரங்களும் இருப்பில் உள்ளன.*

*(ஆ) இறுதித் துலக்கம் செய்யப்பட்ட 175 டன்கள் சந்தனக் கட்டைகளின் மதிப்பு ரூ.4,02,60,675. துலக்கம் செய்யப்பட வேண்டிய மரங்களின் மதிப்பு தரப்படவில்லை.*

*(இ) வழக்குகள் நிலுவையில் உள்ளதால் சுமார் 100 டன்கள் தேக்கத்தில் உள்ளன.*

**39—**

**பெரிய நெல்லிக்கொல்லைக்கு கூடுதல் பேருந்து இயக்குதல்**

வினா எண் *38340*—**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், பெரிய நெல்லிக்கொல்லைக்கு இயக்கப்படும் 11ஏ பெரியார் பேருந்தை மேலும் கூடுதலாக 2 தடவை இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?

*1995* நவம்பர் *3*]

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ):* தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து ஒன்று பல்திசை வழித்தட இயக்கத் திட்டத்தின் கீழ் சிதம்பரம் பெரிய நெல்லிக்கொல்லை தடத்தில் நாளொன்றுக்கு *4* நடைகளில் இயங்கி வருகிறது. இந்நடைகளில் பயணியர் போக்குவரத்து, இத்தடத்தில் கூடுதல் நடைகளை இயக்கிடும் அளவிற்கு இல்லை. எனவே, கோரிக்கை தடத்தில் தற்போதுள்ள வசதிகளே போதுமானவை என்று கருதப்படுகிறது.

**40—**

### சிதம்பரம்-சின்னநெற்குணம் பேருந்து இயக்குதல்

வினா எண் *38342*—**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், சிதம்பரம் சின்ன நெற்குணம் வரை புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ):* சிதம்பரம்-சின்னநெற்குணம் வழி புவனகிரி, உடையூர், எறும்பூர் தட நீளம் *26.5* கி.மீ. இத்தடத்தில் எறும்பூருக்கும், சின்னநெற்குணம் கிராமத்திற்கும் இடைப்பட்ட *2.7* கி.மீ. தூரப்பகுதி மட்டும் இதுவரை பேருந்து வசதி பெறாதது. இப்பகுதியின் சாலை பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதாக இல்லை. மேலும் எறும்பூரிலிருந்து சின்னநெற்குணம் நோக்கிய சாலையில் *0.4-* ஆவது கி.மீட்டரில் அமைந்துள்ள ஒரு குறுகிய வளைவில் பேருந்து திருப்ப இயலாது. பேருந்து திரும்பி வருவதற்கு ஏற்ற வகையில் சின்னநெற்குணத்தில் போதிய இட வசதியும் இல்லை. மேலே குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களால் சிதம்பரம்-சின்னநெற்குணம் தடத்தில் தற்போதைய நிலையில் பேருந்து வசதி அளித்திட இயலாத நிலை உள்ளது.

41—

**சேத்தியாதோப்பு பேருந்தை பழைய பேருந்து நிலையம் வரை இயக்குதல்**

வினா எண் *38352*—**செல்வி கோ. மல்லிகா**: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், சேத்தியாதோப்பு புதிய பாலம் திறந்த பின் பேருந்துகள் பழைய பேருந்து நிலையம் (போலீஸ் நிலையம்) அருகில் சென்று வர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**விடை**--

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)*: சேத்தியாதோப்பு புதிய பேருந்து நிலையத்திலிருந்து பழைய பேருந்து நிலையம் (போலீஸ் நிலையம்) வரையிலான தூரம் சுமார் 200 மீட்டர் மட்டுமே. சேத்தியாதோப்புடன் முடிவடையும் தடங்களில் இயக்கப்பட்டுவரும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகள் அனைத்தும் பழைய பேருந்து நிலையம் வரையிலேயே இயக்கப்படுகின்றன. சேத்தியாதோப்பு வழியாக இயக்கப்பட்டுவரும் பிற புறநகர் பேருந்துகளையும் சேத்தியாதோப்பு பழைய பேருந்து நிலையம் வரை சென்று வருமாறு இயக்கினால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதுடன் அனைத்து பேருந்துகளும் சென்று திரும்புவதற்கான போதிய இட வசதியும் பழைய பேருந்து நிலையத்தில் இல்லை. தவிரவும் நெடுந்தூரம் பயணிகட்கும் இது மிகுந்த இடையூறாக அமையும். எனவே, தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் முறையிலேயே தொடரலாம் எனக் கருதப்படுகிறது.

42—

**நத்தமேடு வரை 10பி பேருந்தை நீட்டித்து இயக்குதல்**

வினா எண் *38395*—**செல்வி கோ. மல்லிகா**: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*1995 நவம்பர் 3*]

(அ) புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம் நத்தமேடு வரை டி.10பி பேருந்து நீட்டித்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த தடம் எண் டி.10பி எனும் நகரப்பேருந்து முன்னதாக சிதம்பரத்திலிருந்து குமுடிமூலை, நத்தமேடு வழியாக நாளொன்றுக்கு 4 நடைகளில் இயங்கி வந்தது. இந்நகரப் பேருந்தின் வழித்தட எண் டி.32 எனத் தற்போது மாற்றப்பட்டு இதே தடத்தில் நாளொன்றுக்கு 8 நடைகள் வீதம் கூடுதலாக இயக்கப்பட்டு வருகிறது. தற்போதைய பேருந்து வசதிகளே நத்தமேடு கிராமத்திற்கு போதுமானது என கருதப்படுகிறது.

**43—**

**கும்மூடிமூலைக்கு பேருந்து இயக்குதல்**

வினா எண் *38396*—**செல்வி கோ மல்லிகா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், 17, 10வி, 10பி ஆகிய பெரியார் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை கும்மூடிமலைக்கு முறையாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் சிதம்பரம் கிளை பணிமனையைச் சார்ந்த தடம் எண் டி.17, டி.10பி/ஏ, டி 10பி/பி ஆகிய மூன்று நகரப் பேருந்துகள் மூலம் மொத்தத்தில் 10 நடைகளில் கும்மூடிமூலை கிராமத்திற்கு போக்குவரத்து வசதிகள் அளிக்கப்பட்டு வந்தன. இவை இக்கிராமத்தை சிதம்பரத்துடனும் குறிஞ்சிப் பாடியுடனும்



TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

இணைத்து வந்தன. இந்த மூன்று நகரப் பேருந்துகளுமே பல திசை வழித்தட இயக்குதலின் அடிப்படையில் இயக்கப்பட்டவை. இக்கிராமத்திற்கு குறிப்பிட்ட நேரங்களில் எந்தவித இடையூறுமின்றியும் போக்குவரத்து வசதி அளித்திடும் நோக்கத்தில் பொது மக்களின் கோரிக்கைப்படி மேற்கண்ட வசதிகளை தடம் எண் டி32 என்ற ஒரே நகரப் பேருந்து மூலம் நடைகள் ஏதும் துண்டிக்கப்படாமல் தற்பொழுது கீழக்காணும் வகையில் அளிக்கப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது.

1. சிதம்பரம்-குறிஞ்சிப்பாடி (வழி) கும்மூடிமூலை, நத்தமேடு-8 நடைகள்.

2. சிதம்பரம்-நத்தமேடு (வழி) கும்மூடிமூலை- 2 நடைகள்.

தற்போது ஒரே பேருந்து இயக்கப்படுவதால் பயணிகள் கொள்திறனும் நான்கு சதவீதம் அதிகரித்துள்ளது. தற்போதுள்ள இவ்வசதிகளே அப்பகுதி மக்களின் தேவையை நிறைவு செய்யும் வகையில் அமைந்துள்ளன.

**44—**

### சிதம்பரம்-சாமியார்பேட்டை பேருந்து இயக்குதல்

வினா எண் 38409—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், சின்னாண்டிகுழி சாமியார்பேட்டைக்கு பள்ளி மாணவர்கள் நலன் கருதி சிதம்பரம் சாமியார்பேட்டை (கொத்தட்டை வழி) பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சிதம்பரம்-சாமியார்பேட்டை வழி கொத்தட்டை சின்னாண்டிக்குழி தடத்தில் 10-12-1994 முதல் ஒரு நகரப் பேருந்து நாளொன்றுக்கு நான்கு நடைகளில் இயங்கி வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**45—**

**கடலூரிலிருந்து பேருந்து இயக்குதல்**

வினா எண் *38411*—**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியில் கடலூரிலிருந்து பி. முட்லூருக்கு இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட போக்குவரத்துக் கழகப் பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது இயக்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கடலூர் முதுநகர்-பி. முட்லூர்-தோணித்துறை தடத்தில் வி. முட்லூர் தோணித்துறை கூட்டுச் சாலை முதல் தோணித்துறை வரையிலான *0.9* கி.மீட்டர் சாலை பேருந்து இயக்கிட சற்றும் தகுதியற்ற நிலையில் உள்ளது. மேலும் பி. முட்லூர் முதல் கடலூர் முதுநகர் வரையிலான தடத்தில் தற்பொழுது சராசரியாக *5* நிமிட இடைவெளியில் நகர மற்றும் புறநகர் பேருந்து வசதிகள் போதிய அளவு உள்ளதால் இத்தடத்தில் மீண்டும் பேருந்து இயக்கிட வேண்டிய தேவை எழவில்லை.

**46—**

**குத்தாலம் ஒன்றியத்தில் பேருந்து வசதி அளித்தல்**

வினா எண் *38468*— **திரு எஸ். ஆசைமணி**மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், பருத்திக்குடி நாகம்பாடி கீழப் பருத்திக்குடி, ஆரலூர் கிராமங்களுக்கு பேருந்து வசதி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

மயிலாடுதுறையிலிருந்து நாகம்பாடி, பருத்திக்குடி வழியாக வடமட்டம் வரை நகரப் பேருந்து மூலம் 19-2-1995 முதல் தினசரி நான்கு நடைகள் சோழன் போக்குவரத்துக் கழகத்தினால் இயக்கப்பட்டு வருகின்றன.

**47—**

**கரூர்-கூனம்பட்டி இடையே மீண்டும் பேருந்து இயக்குதல்**

வினா எண் 38518—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூரிலிருந்து கூனம்பட்டிக்கு இயக்கப்பட்டு, நிறுத்தப்பட்ட தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக நகரப் பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித்தடமாகிய கரூர்-கூனம்பட்டி வழித்தடத்தில் ஒரு நகரப் பேருந்தின் மூலம் தினசரி 4 நடைகள் மாற்றம் ஏதுமின்றி தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகிறது.

**48—**

**துறையூர்-பி. மேட்டூர் வரை பேருந்து இயக்குதல்**

வினா எண் 38665—**திரு வி. ரவிச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, துறையூர்-பி. மேட்டூர் (வழி) மாராடி வழியாக புதியதாக பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*1995 நவம்பர் 3]*

*(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?*

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ):* கோரிக்கை வழித் தடமாகிய துறையூர்-பி. மேட்டூர் (வழி) மாராடி வழியாக நான்கு நகரப் பேருந்துகள் மூலம் 18 நடைகள் இயக்கப்பட்டு வந்தன. மேலும் 3-9-1994 முதல் கூடுதலாக 6 தனி நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

**49—**

**சென்னை-இராமேஸ்வரம் டாக்டர் ஜெ.ஜெயலலிதா போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்குதல்**

வினா எண் *39063*—**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சென்னையிலிருந்து இராமேஸ்வரம் வரை டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ):* புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகம் தமிழகத்திலிருந்து அண்டை மாநிலங்களுக்கு இடையேயுள்ள தொலை தூரங்களில் சொகுசுப் பேருந்துகளை இயக்கிட ஏற்படுத்தப்பட்டதாகும். சென்னை-இராமேஸ்வரம் வரை செல்லும் இத்தடமானது தமிழகத்திலேயேயுள்ள தடமாகும். எனவே, இத்தடத்தில் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை இயக்க இயலாது.

TRUTH ALONE TRIUMPHS

[1995 நவம்பர் 3

50—

## ஆத்தூர்-இராஜகோபாலபுரத்திற்கு பேருந்து இயக்குதல்

வினா எண் 39619—**திரு கே. கந்தசாமி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா போக்குவரத்துக் கழக ஆத்தூர் நகரப் பேருந்து தட எண் 37-ஐ இராஜகோபாலபுரத்திற்கு மாலை 5.45 மணி அளவில் இயக்க அரசால் நடவடிக்கை மேற் கொள்ளப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கோரிக்கையில் கேட்ட மாலை 5.45 மணியளவில் தடம் எண். 37 பேருந்து தலைவாசல்-கூகையூர் தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றது. இத்தடத்தில் இந்த ஒரே ஒரு நகரப் பேருந்து மட்டுமே இயக்கப்பட்டு வருகிறது. கோரிக்கையில் கேட்டபடி இப்பேருந்தின் கால நேரங்களை மாற்றி இயக்கினால் வீரபயங்கரம் மற்றும் கூகையூரிலிருந்து தலைவாசல் சென்று பயிலும் மாணவர்களுக்கும் ஏனைய வழித்தட மக்களுக்கும் வீண் சிரமமும், அசௌகரியமும் ஏற்படும். ஆதலால், இப்பேருந்தின் கால நேரங்களை மாற்றி இயக்க வகையில்லை. இருப்பினும், கோரிக்கையின் கேட்ட நேரத்திற்கேற்றார்போல், தலைவாசல் — நெற்குணம் செல்லும் தடம் எண். 35 பேருந்து மாலை 4.30 மணிக்கு ஆத்தூரில் புறப்பட்டு தலைவாசல், வீரகனூர் வழியாக சுமார் மாலை 6.00 மணியளவில் இராஜகோபாலபுரம் சேர்ந்து பின்னர் 6.20 மணிக்கு நெற்குணம் செல்கிறது.

51—

## வேலூரிலிருந்து பேருந்து இயக்குதல்

வினா எண் 40038—**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*1995 நவம்பர் 3]*

பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் குளிர்சாதன வசதி செய்து *5* பேருந்துகளைப் பெங்களூருக்கும், *5* பேருந்துகளை சென்னைக்கும் வேலூரிலிருந்து இயக்கும் திட்டத்தை அரசு நிறைவேற்றுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

வேலூர்-பெங்களூர் வழித்தடம் என்பது அண்டை மாநில வழித்தடம். அண்டை மாநில ஒப்பந்தத்தில் ஏற்கனவே இடம் பெற்றுள்ள தடங்களை தவிர்த்து மேற்கொண்டு பேருந்துகள் இயக்க இயலாது. மேலும், புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகத்தால் சென்னைக்கும், பெங்களூருக்கும் இடையே வேலூர் வழியாக பல சொகுசு பஸ்களும், குளிர்சாதன வசதி செய்யப்பட்ட பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. தவிரவும் வேலூர்—காட்பாடி ரெயில்வே நிலையம் வழியாக சென்னை—பெங்களூருக்கு இடையே குளிர் சாதன வசதியுடன் பல ரெயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. கோரிக்கைத் தடத்தில் தற்போதுள்ள வசதிகளே போதுமானவை. மேலும் குளிர் சாதன வசதியுடன் இயக்கப்படும் பேருந்துகளுக்கு பயணக் கட்டணம் சாதாரண பேருந்துகளை விட அதிகமாக இருக்கும் என்பதால் ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்கள் விரும்பி பயணம் செய்ய மாட்டார்கள். எனவே, அதிக முதலீட்டில் குளிர்சாதன வசதி கொண்ட பேருந்துகளை பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தினால் இயக்குவது தேவை இல்லை என்று கருதப்படுகிறது.

**52—**

**மல்லிநாயணப்பள்ளிக்கு பேருந்து வசதி அளித்தல்**

வினா எண் *40595*—**திரு கே. முனிவெங்கடப்பன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருட்டிணகிரி தொகுதி, மல்லிநாயணப்பள்ளி கிராமத்திற்கு பேருந்து வசதியளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

மல்லிநாயணப்பள்ளி கிராமம், மல்லிநாயணப்பள்ளி கிராஸிலிருந்து 1 கி.மீ. தூரத்தில் மட்டுமே உள்ளது. மல்லிநாயணப்பள்ளி கிராஸ் வழியாக நகரப் பேருந்துகள் மூலம் 35 நடைகள் இயக்கப்படுகின்றன. மல்லிநாயணப்பள்ளி கிராம மக்கள் மல்லிநாயணப் பள்ளி கிராஸ் வழியாக இயக்கப்படும் பேருந்துகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். எனவே, மல்லிநாயணப்பள்ளி கிராமத்திற்கு தனியே பேருந்து வசதி அளிப்பது தற்போதைய சூழ்நிலையில் தேவையில்லை என்று கருதப்படுகிறது.

**53—**

### கரூர்-அரவக்குறிச்சி பேருந்தை மீண்டும் இயக்குதல்

வினா எண் *40617*—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூரிலிருந்து மணல்மேடு, ஆறு ரோடு, வெஞ்சமாங்கூடலூர், ராசாப்பட்டி, கணக்குவேலம்பட்டி, சின்னவளையம்பட்டி வழியாக அரவக்குறிச்சிக்கு இயக்கப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்ட தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக பேருந்தை மீண்டும் இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

கோரிக்கை தடத்தின் நீளம் 19.8 கி. மீட்டர் ஆகும். இப்பகுதி பேருந்து வசதி பெறாத பகுதியாக இருந்தது. ஆகவே, இத்தடத்தில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தால் 7-6-1993 முதல் தினசரி மாலை 2 தனி நடைகள் கரூர்-அரவக்குறிச்சி நகரப் பேருந்து மூலம் இயக்கப்பட்டது. பின்னர் பெரு மழை காரணமாக அமராவதி ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால் 8-11-1993 தேதி முதல் இப்பேருந்து நிறுத்தப்பட்டது. 28-3-1994 முதல் மீண்டும் இந்த 2 நடைகளும் மேற்படி நகரப் பேருந்து மூலம் இயக்கப்பட்டு வருகிறது.

*1995 நவம்பர் 3]*

**54—**

**தேன்கனிக்கோட்டை-திருப்பத்தூர் கூடுதல் பேருந்து இயக்குதல்**

வினா எண் *42767*—**திரு. கே. முனிவெங்கடப்பன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை—திருப்பத்தூர் (வழி) சூளாகிரி—ராயக்கோட்டை கூடுதல் பேருந்து விடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

தற்போது திருப்பத்தூர்—தேன்கனிக்கோட்டை தடத்தில் இயங்கி வரும் பேருந்திற்கே போதிய பயணிகளின் எண்ணிக்கை இல்லை. எனவே, இத்தடத்தில் கூடுதல் பேருந்துகள் இயக்க இயலாது.

**55—**

**திருப்பத்தூர் வழியாக பேருந்து இயக்குதல்**

வினா எண் *42779*—**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெங்களூர்-சென்னை வழித் தடத்தில் 831ஆம் எண். பேருந்துகளை திருப்பத்தூர் வழியாக விட அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித்தடம் சுற்றுவழித்தடமாகும். எனவே, பெங்களூருக்கு நேரடிப் பயணம் செய்யும் பயணிகள் அதிகப்படியான 17 கி.மீ தூரத்திற்கு கூடுதல் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும். எனவே, கோரிக்கையில் குறிப்பிடப்பட்ட பேருந்தை திருப்பத்தூர் வழியே இயக்குவது இயலாது.

[1995 நவம்பர் 3

56—

## ஓட்டுநர்களுக்கு எரிபொருள் சிக்கனம் குறித்த பயிற்சி

வினா எண் *43910*—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக அரசு போக்குவரத்துக் கழகங்களில் எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்துவது குறித்து ஓட்டுநர்களுக்கு பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

அரசு போக்குவரத்துக் கழகங்களைச் சார்ந்த ஓட்டுநர்கள் மற்றும் ஓட்டுநர் பயிற்சி ஆசிரியர்களுக்கு எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்துவதின் இன்றியமையாமை குறித்து சாலைப் போக்குவரத்து நிறுவனம் கும்மிடிப்பூண்டியிலுள்ள ஓட்டுநர் பயிற்சிப் பிரிவின் மூலமாக சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு பயிற்சிபெற்று ஓட்டுநர் பயிற்சி ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட போக்குவரத்துக் கழகத்தில் அங்கு இருக்கும் மற்ற ஓட்டுநர்களுக்கு பயிற்சி கொடுக்கிறார்கள். போக்குவரத்துக் கழகங்களில் இவ்வாறு பயிற்சி அளிப்பதற்கென்று பிரிவு ஒன்றும் செயல்பட்டு வருகிறது.

57—

## ஈசநத்தத்திற்கு நகரப் பேருந்து இயக்குதல்

வினா எண் *44043*—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம் பள்ளப்பட்டி குஜிலியம்பாறை, ஈசநத்தம் நகரப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3*]

திருச்சி மாவட்டம், பள்ளப்பட்டி குஜிலியம்பாறை, ஈசநத்தம் வழியாக தற்போது நகர் மற்றும் புறநகர் பேருந்துகள் தேவைக்கு ஏற்ப இயக்கப்பட்டு வருகின்றன. தனியார் 3 புறநகர் பேருந்து மூலம் 8 தனி நடைகளும் இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து மூலமாக பகுதி வாரியாக 1 பேருந்து 4 தனி நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. இத்தடத்தில் அனைத்து கிராமங்களும் பேருந்து வசதி பெற்ற கிராமங்களாகும். எனவே கோரிக்கை தடத்தில் நகரப் பேருந்து ஒன்று தனியே இயக்குவது தேவையில்லை என்று கருதப்படுகிறது.

**58—**

**மலைக்கோவிலூர் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை பகுதியில் பேருந்து நிறுத்த வசதி**

வினா எண் 44075—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சி தொகுதி, மலைக்கோவிலூர் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை பகுதியில் பஸ் நிற்கும்பகுதிக்கு எல்.எஸ்.எஸ். (வேண்டுகோளுக்கு இணங்க நிற்க) பஸ் ஸ்டாப் வசதி செய்து தருவதற்கு அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

கரூர்—திண்டுக்கல் வழித் தடத்தில் உள்ள மலைக்கோவிலூர் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை அருகில் மேற்படி வழித் தடத்தில் பேருந்துகள் நின்று பயணிகளை இறக்கி ஏற்றிச் செல்ல தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் சுற்றறிக்கையின் மூலம் அறிவுறுத்தியுள்ளது. தற்போது அனைத்து பேருந்துகளும் வேண்டுகோளுக்கு இணங்க அங்கு நின்று செல்கின்றன.

[*1995 நவம்பர் 3*

**59—**

## கரூரிலிருந்து தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து இயக்குதல்

வினா எண் *44211*—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூரிலிருந்து பரமத்தி, ஆண்டிசெட்டிபாளையம், வேட்டையார்பாளையம், கடலூர், சின்னதாராபுரம், வழியாக தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து இயக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

கோரிக்கையில் உள்ள கரூர், சின்னதாராபுரம் (வழி) பரமத்தி, ஆண்டிசெட்டிபாளையம், வேட்டையார் பாளையம், கூடலூர் வழித் தடத்தின் மொத்த நீளம் *39.0* கி.மீ. ஆகும். அரவரக்குறிச்சி, பரமத்தி (வழி) சின்னதாராபுரம், கூடலூர், வேட்டையாப்பாளையம், ஆண்டி செட்டிபாளையம் வழியாக தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து ஒன்றின் மூலம் தினசரி 4 நடைகள் இயக்கப்படுகின்றன. பரமத்தி-கரூர் பகுதி முழுவதும் பேருந்து வசதி பெற்றுள்ளது. கோரிக்கை வழித்தடம் முழுவதும் ஏற்கெனவே, பேருந்து வசதி பெற்றிருப்பதாலும் இவ்வழித்தடத்தின் நீளம் நகரப் பேருந்து இயக்க அதிக பட்ச தூரமான *30* கி.மீ.க்கு மேல் உள்ளதாலும் கோரிக்கை வழித்தடத்தில் நகரப் பேருந்து இயக்க இயலாது.

**60—**

## அரவக்குறிச்சி-கரூருக்கு பேருந்து இயக்குதல்

வினா எண் *44262*—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சியிலிருந்து மஞ்சுவளி, செம்பாறைப்பட்டி, மல்லிகாபுரம், ஜங்கால்பட்டி, குமரபாளையம், நெல்லிக்கொம்பை, தோப்புப்பட்டி, ஈசநத்தம் வழியாக கரூருக்கு தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக நகரப்பேருந்து விட அரசிடம் செயற் குறிப்பு இருக்கிறதா?

*1995 நவம்பர் 3*]

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

கோரிக்கையில் உள்ள அரவக்குறிச்சி—கரூர் (வழி) மல்லிகாபுரம், செம்பாறைப்பட்டி, மஞ்சுவளி, ஜங்கால்பட்டி, குமரபாளையம், நெல்லிக்கொம்பை, தோப்பப்பட்டி, ஈசநத்தம் வழித் தடத்தின் மொத்த நீளம் 83.4 கி.மீ. இவற்றில் மல்லிகாபுரம் பிரிவு சாலையிலிருந்து ஆண்டிப்பட்டி கோட்டை வரை உள்ள 13 கி.மீ. பகுதி பேருந்து வசதி பெறாத பகுதி. இவற்றில் 10.2 கி.மீ. மண் சாலையாகவும், 2.8 கி.மீ. மெட்டல் சாலையாகவும் உள்ளது. கோரிக்கை வழித்தடத்தின் நீளம் நகரப் பேருந்து இயக்க அதிகபட்ச தூரமான 30 கி.மீ.க்கு மேல் உள்ளதாலும், இவ்வழித்தடத்தில் 10.2 கி.மீ மண் சாலையாக உள்ளதாலும் இவ்வழித்தடத்தில் நகரப் பேருந்து இயக்க இயலாது.

**61—**

**கரூர் இரயில் நிலையத்திற்கு நகரப் பேருந்து இயக்குதல்**

வினா எண் 44726—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், கரூர் இரயில் நிலையத்திற்குத் தினசரி காலையும், மாலையும் நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

திருச்சி மாவட்டம், கரூர் இரயில் நிலையத்திற்கு பல நோக்கு திட்டத்தின் மூலம் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் இரண்டு நகரப் பேருந்துகள் கரூர் பேருந்து நிலையத்திலிருந்து தினசரி காலை இரண்டு நடைகளும், மாலை இரண்டு நடைகளும் 14-3-95 முதல் இயக்கப்படுகின்றன.

**62—**

**பள்ளப்பட்டி--கோபிசெட்டிபாளையம் பேருந்து இயக்குதல்**

வினா எண் *44728*—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் வட்டம், பள்ளப்பட்டியிலிருந்து கோபிச்செட்டிப் பாளையத்திற்கு சின்னதாராபுரம், தென்னிலை, வெள்ளக்கோயில், ஈரோடு வழியாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

கரூர் வட்டம், பள்ளப்பட்டி-கோபிசெட்டிபாளையம் (வழி) சின்னதாராபுரம், தென்னிலை, வெள்ளக்கோயில், ஈரோடு வழித்தடம் தீரன் சின்னமலை மற்றும் ஜீவா போக்குவரத்துக் கழக இயக்கப் பகுதியில் அமைந்துள்ளது. மேற்படி வழித்தடத்தின் பகுதிகள் அனைத்தும் பேருந்து வசதி பெற்றுள்ளமையாலும், பள்ளப்பட்டியிலிருந்து கோபிசெட்டிபாளையத்திற்கு அன்றாடம் போதுமான நேரடி பயணிகள் இருக்க வாய்ப்பில்லை என்பதாலும் மேற்படி வழித் தடத்தில் பேருந்து இயக்க தேவையில்லை என்று கருதப்படுகிறது.

**63—**

**கால்நடை ஆய்வாளர் பணியிடங்கள் நிரப்புதல்**

வினா எண் *36275*—**திரு. பி.வி. இராஜேந்திரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் கால்நடை (நிலை-2) பயிற்சி எங்கெங்கு நடைபெற்று வருகிறது?

(ஆ) கால்நடை மருந்தகங்களில் காலியிடங்களாக உள்ள கால்நடை ஆய்வாளர் (நிலை-2) பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படுமா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) தற்போது இம்மாநிலத்தில் கால்நடை ஆய்வாளர் (நிலை2) பயிற்சி நடைபெறவில்லை. கால்நடை ஆய்வாளர்களுக்கான பயிற்சியினை ஒரத்தநாடு மாவட்ட கால்நடைப் பண்ணையில் அளிக்க அரசு கொள்கை அளவில் ஒப்புக்கொண்டுள்ளது.*

*(ஆ) கால்நடை ஆய்வாளர் பயிற்சி அளிக்கப்பட்டு காலியாக உள்ள கிளை நிலையங்களில் பயிற்சி பெறப்பட்ட நபர்களால் பணி நியமனம் செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்படும்.*

**64—**

**கள்ளிக்காடு கால்நடை மருந்தகத்திற்கு கட்டிடம் கட்டுதல்**

*வினா எண் 46492*—**திரு. எஸ். ஆசைமணி:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம் குத்தாலம் தொகுதி மயிலாடுதுறை வட்டம் கள்ளிக்காடு கிராமத்திலுள்ள கால்நடை மருந்தகத்திற்கு கட்டிடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம் குத்தாலம் தொகுதி மயிலாடுதுறை வட்டம் கள்ளிக்காடு கிராமத்தில் கால்நடை மருந்தகம் அரசினால் தோற்றுவிக்கப்படாததால் நிரந்தர கட்டிடம் கட்டுவது சம்பந்தமாக கேள்வி எழாது.*

**65—**

**மயிலாப்பூர் தொகுதியில் கட்டிடங்களை பழுதுபார்த்தல்**

*வினா எண் 45534*—**திரு. வெ. பாலசுப்பிரமணியன்:** *மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மயிலாப்பூர் தொகுதி, நொச்சிகுப்பம், நொச்சிநகர், டுமிங்குப்பம், சீனிவாசபுரம், ஏகாம்பரம் பிள்ளை தெரு, சண்முகப்பிள்ளைத் தெரு, ஆண்டிமான்ய தோட்டம், குப்பைமேடு ருக்மணி நகர் போன்ற இடங்களிலுள்ள குடிசை மாற்று வாரியக் கட்டிடங்கள் சமீபத்தில் பெய்த மழையால் மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளதால் அவற்றை அவசர கால அடிப்படையில் உடனடியாக பழுது பார்க்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

ஆம்.

**66—**

**பேராவூரணி தொகுதியில் சமுதாயக்களம் அமைத்தல்**

*வினா எண் 28954*—**திரு ஆர். சிங்காரம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி சேதுபாவாசத்திரம், ஒன்றியம் அடைக்கத்தேவன், திருவத்தேவன், குப்பத்தேவன், செம்பியன் மாதேவிப்பட்டினம், செல்லப்பிள்ளையார் கோவில் சேதுபாவாசத்திரம், மல்லிப்பட்டினம், சரபேந்திரராஜபட்டினம், சோலைக்காடு ஆகிய கிராமங்களில் நெல் அறுவடைக் காலங்களில் பயன்படுத்த சமுதாயக் களம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இல்லை.

**67—**

**போளூர் வட்டத்தில் சாலைகளைச் செப்பனிடுதல்**

*வினா எண் 36608*—**திரு தா. வேடியப்பன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*1995* நவம்பர் *3*]

*(அ)* போளூர் வட்டம், படவேடு, சந்தவாசல் பகுதிகளில் விளையும் வாழைக்காய் போளூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு வருவதால் இந்தச் சாலைகளை வேளாண்மைத்துறை மூலம் செப்பனிட அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில் எப்பொழுது செயல்படுத்தப்படும்?

**விடை--**

***மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:***

*(அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாட்டில் உள்ள ஐந்து மாவட்டங்களில் 19 விற்பனை மையங்களில் ஊரகச் சாலைகள் அமைப்பதற்கு ரூ.45.28 கோடி செலவிட நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இதில் போளூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் சேர்க்கப்படவில்லை.*

**68—**

**விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்தல்**

வினா எண் *42752*—***திரு ஆர். முருகையா பாண்டியன்:*** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*1992*-ல் ஏற்பட்ட புயல், வெள்ளச் சேதத்தினால் ஏற்பட்ட நஷ்டங்களை ஈடுசெய்ய விவசாயிகளுக்கு அரசு புல்டோசர் மூலம் கடனாக கொடுத்து இருப்பதை தள்ளுபடி செய்ய பரிசீலனை செய்யப்படுமா?

**விடை--**

***மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:***

*1992-ஆம் ஆண்டில் ஏற்பட்ட புயல் வெள்ளத்தினால் சேதமடைந்த விவசாய நிலங்களுக்கு அரசு மொத்தமாக வேளாண்மை பொறியியல் துறை மூலம் ரூ.600 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தது. 1992-ஆம் ஆண்டு வெள்ளத்தினால் மணலினால் சேதமடைந்த 6" முதல் 1'6" வரையும் (டைப் 2) மற்றும் 1'6"க்கும் (டைப் 3) பாசன நிலங்களை செம்மைப்படுத்த*



LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மான்யமும், இதர விவசாயிகளுக்கு 50 சதவீத மான்யமும் மேலும் சேதமடைந்த பாசன கிணறுகளுக்கு 50 சதவீத மான்யமும் அரசு அனுமதித்தது. 1992-ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தில் சேதமடைந்த நிலங்களுக்கு வேளாண்மை பொறியியல் துறையின் புல்டோசர்கள் மூலம் எந்தவித வேலையும் கடனாக செய்து தரப்படவில்லை. எனவே அதனை தள்ளுபடி செய்வது குறித்து பிரச்சினை எழவில்லை.

69—

**தோட்டக் கலையில் பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்துதல்**

வினா எண் 47900—**திரு ஆர். சிங்காரம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தோட்டக்கலையில் பயிர் விளைச்சல் போட்டிகள் 1994-95-ல் நடத்தப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் 1994-95-ஆம் ஆண்டு தோட்டக்கலை பயிர் விளைச்சல் போட்டி நடத்தப்படவில்லை.

(ஆ) அவசியம் எழவில்லை.

70—

**தேசிய பயறுவகை அபிவிருத்தித் திட்டம்**

வினா எண் 52079—**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு கோட்டத்தில் தேசிய பயறுவகை அபிவிருத்தித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

ஆம். 1986–87–ஆம் ஆண்டு முதல் இந்நாள் வரையில் தேசிய பயறுவகை அபிவிருத்தித் திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1995–96–ஆம் ஆண்டும் இத்திட்டம் சென்னை மற்றும் நீலகிரி மாவட்டம் தவிர ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படவுள்ளது. இந்த ஆண்டு தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு கோட்டத்தில் தேசிய பயறு அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்படும்.

**71—**

**திருப்பத்தூர் நகரில் வணிகவரி அலுவலகத்திற்கு கட்டிடம் கட்டுதல்**

வினா எண் 46788—**திரு ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு வணிகவரிகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் நகரில் வணிகவரி அலுவலகத்திற்கு கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரிகள் துறை அமைச்சர்:**

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் நகரில் வணிகவரி அலுவலகத்திற்கு கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு தற்சமயம் அரசிடம் இல்லை. 'ஆயினும்' திருப்பத்தூர் நகரில் டி.எஸ்.எண் 442 வார்டு/ பிளாக் 18–ல் 6720 சதுர அடி காலிமனை வணிகவரித் துறைக்கு கட்டிடம் கட்டுவதற்காக பூர்வாங்கமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. அரசின் நிதி நிலையைக் கருத்தில் கொண்டும் மற்ற இடங்களில் வாடகை கட்டிடங்களில் இயங்கிவரும் அலுவலகங்களின் முக்கியத்துவத்தைப் பரிசீலித்தும் திருப்பத்தூரில் கட்டிடம் கட்டுவது சம்பந்தமாக பிறகு முடிவு செய்யப்படும்.

[*1995 நவம்பர் 3*

**72--**

**கருப்புக்கல் வெட்டியெடுக்க தனியாருக்கு அனுமதியளித்தல்**

வினா எண் *40987*--**திரு ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா--

திருப்பத்தூர் தொகுதியில் கருப்புக்கல் கனிமம் வெட்டி எடுக்க தனியாருக்கு அனுமதி வழங்கப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:**

தனியாருக்கு பட்டா நிலங்களில் கருப்புக்கல் வெட்டி எடுக்க தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகள் *1959*-ல் விதி எண் *19*-எ-ன்படி திருப்பத்தூர் தொகுதி உட்பட தமிழகத்தில் அனைத்துப் பகுதியிலும் அரசால் உரிமம் வழங்கப்படுகின்றது. மேற்படி விதிகளின் தற்போதைய விதி எண் *8*-எ மற்றும் *8*-சின்படி அரசு புறம்போக்கு நிலங்களில் கருப்புக்கல் வெட்டியெடுக்க அனுமதி வழங்கப்படுவதில்லை.

**73--**

**மொடக்குறிச்சியில் தொழில் வளாகம் அமைத்தல்**

வினா எண் *48398*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சியில் தொழில் வளாகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:**

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சியில் தொழில் வளாகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. எனினும், மொடக்குறிச்சிக்கு அருகாமையிலுள்ள பெருந்துறையில் சுமார் *2800* ஏக்கர் நிலப்பரப்பில் மத்திய அரசு உதவியுடன் ஒரு தொழில் வளர்ச்சி மையத்தை தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் அமைத்து வருகிறது.

*1995 நவம்பர் 3]*

**74--**

## அரசுப் பணியில் நரிக்குறவர்கள் விவரம்

வினா எண் *2835*--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*அரசு வேலையில் அமர்த்தப்பட்டுள்ள நறிக்குறவர்கள் எத்தனைபேர்?*

**விடை--**

**மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*அரசுப் பணி, அரசு சார்பு நிறுவனங்கள், உள்ளாட்சி அலுவலகங்கள் (மற்றும்) பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் நரிக்குறவர் இனத்தைச் சார்ந்தோர் விவரம்.*

| துறை | | பணியாளர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| *(1)* | | *(2)* |
| *1.* அரசுப் பணி | .. | *16* |
| *2.* அரசு சார்பு நிறுவனங்கள் | .. | *30* |
| *3.* உள்ளாட்சி அலுவலகங்கள் | .. | *2* |
| *4.* பல்கலைக் கழகங்கள் | .. | *10* |
| மொத்தம் | .. | *58* |

**75--**

## புதுத்தெரு தொடக்கப்பள்ளிக்கு ஆசிரியர் நியமனம்

வினா எண் *7547*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருத்தேவன் ஊராட்சி புதுத்தெரு தொடக்கப் பள்ளிக்கு *200* மாணவர்களுக்கு *2* ஆசிரியர்கள் போதவில்லையாதலால் மேற்கொண்டு போதிய ஆசிரியர்கள் நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[*1995 நவம்பர் 3*

**விடை--**

***மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:***

கடந்த சில ஆண்டுகளாக கூடுதல் சேர்க்கைக்காக ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு அரசினால் இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் எதுவும் அனுமதிக்கப்படவில்லை. எனவே மேற்குறித்த பள்ளிகளில் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்கும் வகையில் இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் வழங்கி கூடுதல் ஆசிரியர்களை நியமிக்க இயலவில்லை. எதிர்காலத்தில் கூடுதல் சேர்க்கைக்காக ஊராட்சி ஒன்றிய பள்ளிகளுக்கு வழங்குவதற்காக அரசினரால் இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டால், மேற்குறித்த பள்ளிகளுக்கு முன்னுரிமைப்படியும், விதிகளின்படியும் உரிய மாவட்டக்கல்வி அலுவலர்கள் வழியாக கூடுதல் இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் வழங்குவது பற்றி பரிசீலிக்க இயலும்.

**76--**

**விளையாட்டுத் துறையில் பணி நீக்கம்**

வினா எண் *7964*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*தமிழக விளையாட்டுத் துறையின் இயக்குநர் அலுவலகத்தில் தேவையில்லாமல் இருக்கும் வணிக எழுத்தர், இரண்டு கணக்கு அலுவலர் பதவிகளை நீக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

**விடை--**

***மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:***

முன்னாள் இளைஞர் விளையாட்டுப் பயிற்சித் துறையையும், முன்னாள் விளையாட்டு வளர்ச்சிக் கழகத்தையும் இணைத்து 1992-ல் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தினை அரசு தோற்றுவித்துள்ளது. ஒரே அலுவலகத்திற்கு இரு கணக்கு அலுவலர் பதவிகள் தேவையில்லை எனக் கருதி முன்னாள் இளைஞர் விளையாட்டு பயிற்சித் துறையின் கீழ் செயல்பட்டு வந்த கணக்கு அலுவலர் பணியிடம் ஒன்று ஆணையத்தின் முதல் செயலாண்மைக் குழுவின் தீர்மானத்தின்படி சரண் செய்யப்பட்டுவிட்டது. முன்னாள் தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சிக் கழகத்தில் செயல்பட்டு வந்த வணிக கணக்கர்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

பணியிடங்கள் இரண்டும் தொடர்ந்து தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திலும் செயல்பட்டு வருகின்றன. இப்பணியிடங்களுக்கு தகுந்த பணிப் பொறுப்புகள் ஆணையத்திலும் உள்ளனவா என்பதை விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் விரிவாக ஆய்வு செய்து வருகிறது.

**77--**

**தனபாக்கியம் கிருஷ்ணசாமி முதலியார் மகளிர் கல்லூரி மாணவிகள் விடுதி கட்டுதல்**

வினா எண் *37740*--**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வேலூர் தனபாக்கியம் கிருஷ்ணசாமி முதலியார் மகளிர் கல்லூரி மாணவிகள் விடுதியைக் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**78--**

**தொல்பொருள் துறையின் கீழ் உள்ள திருக்கோயில்களின் விவரம்**

வினா எண் *39575*--**திரு. செ.து. வரதராஜன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழகத்தில் மைய அரசின் தொல்பொருள் துறையின் பொறுப்பில் இருக்கும் திருக்கோயில்கள் எத்தனை?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

மத்திய அரசின் தொல்பொருள் ஆய்வுத்துறையின் கட்டுப்பாட்டில் *104* திருக்கோயில்கள் உள்ளன.

[*1995 நவம்பர் 3*

**79--**

**மாவட்டத் தலைநகரங்களில் ஓவியக் கல்லூரி துவங்குதல்**

வினா எண் *42097*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் ஓவியக் கல்லூரி துவங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

சென்னை மற்றும் கும்பகோணம் ஆகிய இடங்களில் அரசு கலை மற்றும் கைத்திறத் தொழிற் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இதர மாவட்டத் தலைநகர்களில் ஓவியக் கல்லூரி துவங்க செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

**80--**

**பத்மநாபபுரம் அரண்மனையை வரலாற்றுச் சின்னமாக்குதல்**

வினா எண் *44357*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் அரண்மனைக் கோட்டையைத் தொல்பொருள் ஆய்வுத்துறை வரலாற்றுச் சின்னமாக எடுத்துப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் அரண்மனைக் கோட்டையைத் தொல்பொருள் ஆய்வுத்துறை வரலாற்றுச் சின்னமாக எடுத்துப் பராமரிக்கும் கருத்துரு ஏதும் அரசிடம் பரிசீலனையில் இல்லை.

*1995 நவம்பர் 3]*

**81--**

**தளவாய் கிராம நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுதல்**

வினா எண் *61870*--**திரு. இரா தங்கராசு:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஆண்டிமடம் தொகுதி, தளவாய் கிராமத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

நடுநிலைப் பள்ளியை நேரடியாக மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த இயலாது என்பதால் இது குறித்து அரசு நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பு இல்லை.

**82--**

**30 வயதைக் கடக்கும் நிலையிலுள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை**

வினா எண் *22430*--**திருமதி க. பழனியம்மாள்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருப்பவர்களில் வேலைக்கான வயது வரம்பைக் கடக்கக் கூடிய நிலையில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க அரசு முன்வருமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:**

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பெயரைப் பதிவு செய்து 30 வயதைக் கடக்கும் நிலையில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்ற கருத்தை அரசு ஏற்கனவே ஆய்வு செய்து அவ்வாறு முன்னுரிமை எதுவும் அளிக்க வேண்டியதில்லை என்று முடிவெடுத்துள்ளது.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU TRUTH ALONE TRIUMPHS

**83--**

## வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தோர் விவரம்

வினா எண் 42132--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வைத்திருப்பவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

**விடை--**

**மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:**

31-12-1994 அன்றைய நிலவரப்படி தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வைத்திருப்பவர்களின் மொத்த எண்ணிக்கை 36,49,515.

**84--**

## தனியார் நிறுவனங்களில் பெண்களுக்கு வேலைவாய்ப்பு

வினா எண் 46363--**திருமதி ப. சரஸ்வதி:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தனியார் நிறுவனங்களில் 30 சதவீதம் பெண்கள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனரா?

(ஆ) அதற்கு அரசு தனியாக் ஆணை ஏதும் பிறப்பித்துள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தனியார் நிறுவனங்களில் உருவாகும் வேலை வாய்ப்புகளில் 30 விழுக்காடு பெண்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தும் ஆணை ஏதும் மைய அரசு மூலமாகவோ மாநில அரசு மூலமாகவோ இதுவரை பிறப்பிக்கப்படவில்லை.

*1995 நவம்பர் 3]*

**85--**

### கிணறு காப்புறுதித் திட்டம்

*வினா எண் 21024--***திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*கிணறு காப்புறுதி திட்டத்தால்* (Well Insurance Scheme) *1992-93-ல் பயன் அடைந்தவர்கள் தமிழ்நாட்டில் எத்தனை பேர்?*

**விடை--**

**மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கிணறு காப்புறுதித் திட்டம் என்ற திட்டம் எதுவும் தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையால் செயல்படுத்தப்படவில்லை. எனினும், பொய்த்த கிணறு இழப்பீட்டு நிதித் திட்டம் என்பது இத்துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1992-93-ம் ஆண்டில் 15 நபர்களுக்கு ரூ.2.63 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**86--**

### ஒசூரில் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கட்டிடம் கட்டுதல்

*வினா எண் 36786--***திரு. கே.ஏ. மனோகரன்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

*(அ) ஒசூர் கூட்டுறவு நிலவள வங்கி மற்றும் ஒசூர் பிரதம விவசாயக் கூட்டுறவுக் கடன் சங்கம் ஆகியவற்றிற்குச் சொந்தமாகக் கட்டிடம் கட்ட திட்டம் ஏதேனும் உள்ளதா?*

*(ஆ) ஆம், எனில் எப்பொழுது கட்டப்படும்?*

**விடை--**

**மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) அத்தகைய திட்டம் ஏதும் நிலுவையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

87--

**மொடக்குறிச்சி தொகுதி மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு கட்டிடங்கள் கட்டுதல்**

வினா எண் *46543*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி கொடுமுடி, மொடக்குறிச்சி மற்றும் சிவகிரியில் உள்ள பெரியார் மத்திய கூட்டுறவு வங்கிக்கு கட்டிடங்கள் உடனே கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கொடுமுடி, மொடக்குறிச்சி மற்றும் சிவகிரியில் உள்ள பெரியார் மத்திய கூட்டுறவு வங்கியின் கிளைகளுக்குச் சொந்தக் கட்டிடங்கள் கட்டுவதற்கு பெரியார் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

88--

**மத்திகிரி நகரில் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்குதல்**

வினா எண் *36803*--**திரு. கே.ஏ. மனோகரன்:** மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஒசூர் வட்டம், மத்திகிரி நகரில் ஆதிதிராவிட மக்களுக்காக வீட்டு மனை ஒதுக்கக் கோரி இடம் தெரிவு செய்யப்படும் திட்டம் செயல்படாமல் உள்ளதனை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் வீட்டு மனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

*(அ) மற்றும் (ஆ): ஒசூர் வட்டம் மத்திகிரி நகரில் ஆதி திராவிடர் மக்களுக்காக வீட்டுமனை வழங்குவதற்கான நில எடுப்பு நடவடிக்கைகள் முடிவடைந்துவிட்டன. பட்டா விரைவில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

**89--**

**ஆதிதிராவிடர்களுக்கு மார்ஜின் மணியை அதிகரித்தல்**

*வினா எண் 37819--***டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

*(அ) ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்படும் மார்ஜின்மணியை* (Margin Money) *அதிகப்படுத்த (20%விருந்து 50%) அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை--**

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ): ஆதிதிராவிட மக்களுக்கு வழங்கப்படும் மார்ஜின் மணி* (Margin Money) *20%லிருந்து 50%க்கு உயர்த்துவது தொடர்பாக தாட்கோ மூலம் அரசுக்கு பிரேரணை ஏதும் அனுப்பப்படவில்லை என்றாலும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கடந்த 6-12-1994 அன்று முன்னாள் மேயர் திரு என். சிவராஜ் அவர்களின் சிலையைத் திறந்து வைத்து, சில திட்டங்களை அறிவித்துள்ளார். அவற்றில் ஒன்று தாட்கோ திட்டத்தில் வழங்கப்படும் விளிம்புத் தொகை (மார்ஜின்மணி) இதுவரையிலும், அதிகப்படியாக ரூ.85,000 இருந்தது. அதனை ரூ.1,25,000 ஆக உயர்த்துவது ஆகும். இது சம்பந்தமாக விளிம்புத் தொகை (மார்ஜின்மணி) ரூ. 85,000 லிருந்து ரூ.1,25,000 ஆக உயர்த்தி அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. (அரசு ஆணை நிலை எண் 45, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (சி.உ.கி.2) துறை, நாள் 22-3-1995.)*

**90--**

**கல்வராயன் மலைவாழ் மக்களுக்கு உதவித் தொகை வழங்குதல்**

*வினா எண் 38757--***திரு. ஆர்.பி. பரமசிவம்:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

*(அ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1994-95-ஆம் ஆண்டில் கல்ராயன் மலையிலுள்ள பழங்குடியினர் குடும்பங்களுக்கு தேன்பெட்டி, உபகரணங்கள் அளிக்க உதவித் தொகை வழங்க முன்னுரிமை அளிக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?*

**விடை--**

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1994-95-ம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் உள்ள கல்ராயன் மலை மற்றும் விழுப்புரம்-இராமசாமி படையாட்சியார் மாவட்டத்திலுள்ள கல்ராயன் மலைப்பகுதிகளில் வாழும் 80 பழங்குடியினர் குடும்பங்கள் பயன் பெறும் வகையில் 800 தேன்பெட்டி உபகரணங்கள் வழங்க அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.*

**91--**

**பெரியநாயகிபுரம் சிவன்கோவிலை பராமரித்தல்**

*வினா எண் 719--***திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*1995 நவம்பர் 3]*

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் பெரிய நாயகிபுரம் சிவன் கோவிலை பழுதுபார்த்து மண்டபம் கட்டி பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:**

அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

**92--**

**தமிழக அரசு வேதாகமப் பயிற்சிப் பள்ளிகள் விவரம்**

வினா எண் 4601--திரு. **செ.து. வரதராஜன்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) அரசு வேதாகமப் பயிற்சிப் பள்ளிகள் தமிழகத்தில் எந்தெந்த இடங்களில் செயல்படுகின்றன?

(ஆ) பயிற்சி முடிந்து வெளிவந்த பிராமணர் அல்லாத மாணவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:**

(அ) முதல் (இ) வரையில் மாணவர்களுக்கு வேதாகமப் பயிற்சி அளிக்கும் வகையில் வேதாகமக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி சங்கம் ஒன்று 17-1-1994 அன்று நிறுவப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்டம், கம்பரசம்பேட்டை கிராமத்தில் வேதாகமப் பயிற்சி நிறுவனம் அமைப்பதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சிச் சங்கத்திற்கு பொதுக்குழு அமைக்கவும் மாணவர்களுக்கான பாடத்திட்டங்களை வல்லுநர்களுடன் கலந்து முடிவு செய்யவும் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் நடவடிக்கை எடுத்து வருகிறார். பாடத்திட்டங்கள் முடிவு செய்யப்பட்டு பொதுக்குழு அமைத்த பின்னர், மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

93--

**அருள்மிகு ரெங்கநாத சுவாமி ஆலயத்தை திருப்பணி செய்தல்**

வினா எண் *15940*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், மன்னார்குடி வட்டம், திருமக்கோட்டை அருள்மிகு ரெங்கநாத சுவாமி ஆலயத்தை திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

***மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:***

இல்லை.

94--

**பிரசன்ன கிருஷ்ணசாமி ஆலயத் திருப்பணி**

வினா எண் *15972*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி அருள்மிகு பிரசன்ன கிருஷ்ணசாமி ஆலயத்தை திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

***மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:***

இல்லை.

95--

**வலங்கைமான் வட்டத்தில் ஆலயங்களைப் புதுப்பித்தல்**

வினா எண் *16972*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

தஞ்சை மாவட்டம், வலங்கைமான் வட்டம், மணக்கால் வருவதியம்மன், செல்வ விநாயகர் வகையறா ஆலயத்தைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:**

இல்லை.

**96--**

**மன்னார்குடி வட்டத்தில் கோயில்களுக்கு திருப்பணி செய்தல்**

வினாக்கள் எண் *18806, 18815, 18829, 18919, 18925, 18935, 18936, 18993, 18997*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள--

1. தஞ்சாவூர் கீழவாசல் அருள்மிகு வல்லப விநாயகர் ஆலயம்.

2. மன்னார்குடி வட்டம், திருமக்கோட்டை அருள்மிகு திரௌபதியம்மன் கோயில்

3. நீடாமங்கலம் வட்டம், வேலுகுடி, அருள்மிகு அங்காள அம்மன் ஆலயம்.

4. திருக்காட்டுப்பள்ளி வட்டம், கரியப்பட்டி, அருள்மிகு உய்யக் கொண்டீஸ்வரர் ஆலயம்.

5. பாபநாசம் வட்டம், மன்னார்குடி நகர் அருள்மிகு சுப்பிரமணியர் மற்றும் காளியம்மன் ஆலயம்.

6. தஞ்சாவூர் வட்டம், இராமநாதபுரம் அருள்மிகு கருப்பண்ணசாமி ஆலயம்.

7. மன்னார்குடி வட்டம், மன்னை அருள்மிகு சோளீஸ்வரர் ஆலயம்.

8. வலங்கைமான் வட்டம் ஆதனூர் ரெங்கநாதப் பெருமாள் ஆலயம்.

9. வலங்கைமான் வட்டம், பட்டுக்குடி சுப்பிரமண்ய சுவாமி ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:**

இல்லை.

**97--**

**ஆதனூர் கிராமத்தில் நந்தனாருக்கு ஆலயம் கட்டுதல்**

வினா எண் *38187*--திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காட்டுமன்னார்கோவில் வட்டம், ம.ஆதனூர் கிராமத்தில் அவதரித்த ஸ்ரீ நந்தனாருக்கு ஆலயம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:**

இல்லை.

**98--**

**மீன் விற்பனை அங்காடிகள் துவங்குதல்**

வினா எண் *44443*--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

புதிதாக மீன் விற்பனை அங்காடிகள் துவக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத் துறை அமைச்சர்:**

புதிதாக மீன் விற்பனை அங்காடிகள் உடனடியாக துவங்கும் திட்டம் ஏதும் இல்லை. எனினும், கடற்கரை கிராமங்களில் கிடைக்கும்

*1995 நவம்பர் 3]*

மீன்களைச் சேர்த்து முக்கிய நகரங்களில் விநியோகம் செய்ய குளிர்பதன வாகனங்கள் கொண்ட செயல்திட்டமாகிய கோல்ட் செயின் (Gold Chain) திட்டத்தை செயல்படுத்த தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் பரிசீலித்து வருகிறது. அத்திட்டத்தின் கீழ் புதிய அங்காடிகள் திறக்கப்படும்.

**99--**

**மீன்வளர்க்க மானிய உதவி**

வினா எண் *55363*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டத்தில் எத்தனை குளங்களில் மீன் வளர்க்க அரசு மானிய உதவி அளித்து வருகிறது.

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத்துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டத்தில் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் கீழ் மீன் வளர்ப்பு விவரங்கள் வருமாறு:

| | |
|---|---|
| 1. தஞ்சாவூர் மாவட்டத்தில் இதுவரை மீன் வளர்ப்பதற்காக மீன் வளர்ப்போருக்கு வழங்கப்பட்ட குளங்களின் எண்ணிக்கை | 362 |
| 2. மேற்படி குளங்களின் விஸ்தீரணம் | 318.57 (ஹெக்டேர்) |
| 3. இதுவரை புதிதாக குளங்கள் வெட்டப்பட்டவை | 43 |
| மற்றும் விஸ்தீரணம் | 36.10 (ஹெக்டேர்) |
| 4. மேற்படி குளத்தில் இதுவரை வழங்கப்பட்ட மானியத் தொகை | ரூ.4,33,616 |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இதன் விபரம் வருமாறு:--

| | |
|---|---|
| 1. புதிதாக குளங்கள் வெட்ட 1993-94-ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மானியத் தொகை | ரூ.2,98,600 |
| 2. புதிய குளங்கள் வெட்ட 1994-95-ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மானியத் தொகை | ரூ. 1,35,016 |
| மொத்தம் | ரூ. 4,33,616 |

**100--**

**கொடுமுடியில் காதி விற்பனை நிலையம் அமைத்தல்**

வினா எண் 54727--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சித் தொகுதி, கொடுமுடியில் காதி விற்பனை நிலையம் அமைக்கப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்:**

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சித் தொகுதி, கொடுமுடியில் ஏற்கெனவே ஒரு கதர் அங்காடி இயங்கி வருவதோடு இதன்மூலம், கதர் கிராமத் தொழில் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. எனவே மேலும் ஒரு கதர் விற்பனை நிலையம் தற்போது அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

*1995 நவம்பர் 3]*

## மூன்றாம் பட்டியல்

### அரசு ஊழியர்களுக்கு மருத்துவப்படி வழங்கிய விவரம்

**1--**

வினா எண் *14075*--**திரு. ஆ. சுப்புரத்தினம்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*தமிழக அரசு ஊழியர்களுக்கு மருத்துவப் படியாக கடந்த 5 (ஐந்து) ஆண்டு காலத்தில் வழங்கப்பட்டுள்ள தொகை (ஆண்டு வாரியாக) எவ்வளவு?*

**விடை--**

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்:***

தமிழக அரசு ஊழியர்களுக்கு மருத்துவப் படியாக கடந்த எட்டு ஆண்டு காலத்தில் வழங்கப்பட்டுள்ள தொகை:

(ரூபாய் கோடியில்)

| | | | |
|---|---|---|---|
| *1988-89* | .. | .. | *3.30* |
| *1989-90* | .. | .. | *7.40* |
| *1990-91* | .. | .. | *7.65* |
| *1991-92* | .. | .. | *7.70* |
| *1992-93* | .. | .. | *7.73* |
| *1993-94* | .. | .. | *7.75* |
| *1994-95* | .. | .. | *18.81* |
| *1995-96* | .. | .. | *19.33* |
| | **மொத்தம்** | .. | ***79.67*** |

**2--**

### தனித் தொகுதிகளை மாற்றி அமைத்தல்

வினா எண் *45612*--**திரு. கே. கந்தசாமி :** மாண்புமிகு நிதிஅமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) 1977 முதல் தனித் தொகுதிகளாகத் தொடர்ந்து இருந்துவரும் சட்டமன்ற, நாடாளுமன்றத் தொகுதிகளை மாற்றியமைக்க தேர்தல் ஆணையத்தை தமிழ்நாடு அரசு கேட்டுக்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**3--**

**பெண் கைதிகளின் மறுவாழ்விற்கு நடவடிக்கை**

வினா எண் 77359--**டாக்டர் பீட்ரிக்ஸ் டி'சோசா:** Will the Honourable Minister for Law be pleased to state :

Whether there are, Half-way Homes maintained by the Government for the rehabilitation of women prisoners ?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்:**

இல்லை.

**4--**

**விவசாய நிலங்களுக்குப் பட்டா வழங்குதல்**

வினா எண் 37108--**திரு வே. பெரியசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் ஒன்றியம், எண்ண மங்கலம் கிராமத்தில் வனங்களுக்கருகில் விவசாயம் செய்துவரும் விவசாயிகளின் நிலங்களுக்குப் பட்டா வழங்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா ?

*1995 நவம்பர் 3]*

**விடை---**

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ):* பெரியார் மாவட்டம், பவானி வட்டம், எண்ணமங்கலம் கிராமத்தில் வனநிலங்களாக இருந்தவை மாற்றம் செய்யப்பட்டு பலருக்கு நில ஒப்படை வழங்கப்பட்டது. ஒப்படை பெற்றவர்கள் அந்நிலங்களை விதிமுறைகளுக்குப் புறம்பாக விற்பனை செய்துவிட்டதால் ஒப்படை நிபந்தனை மீறப்பட்டதாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்நிலங்கள் மீண்டும் அரசு புறம்போக்காக (தீர்வை ஏற்பட்ட தரிசாக) மாற்றம் செய்யப்பட்டுவிட்டது. மேற்படி நிலங்கள் நிலக் கொள்கை விதிகளுக்கு முரண்பட்டதாக இருப்பதால் கிரயம் பெற்ற நபர்களுக்குப் பட்டா வழங்க இயலாத நிலை உள்ளது.

**5--**

**நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் வழங்குதல்**

*வினா எண் 57153*--**திரு. கே. ஏ. மனோகரன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1991-92, 1992-93* மற்றும் *1993-94* ஆண்டுகளில் தருமபுரி மாவட்டத்தில் எவ்வளவு நிலமற்ற ஏழைகளுக்கு விவசாய நிலம் வழங்கப்பட்டுள்ளது?

**விடை---**

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

*1991-92, 1992-93* மற்றும் *1993-94* ஆண்டுகளில் தருமபுரி மாவட்டத்தில் நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கப்பட்ட நிலங்கள் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| | | மொத்தம் பயன் அடைந்தோர் | மொத்தப் பரப்பு |
|---|---|---|---|
| *1991-92* | .. | *815* | *1,342.52* ஏக்கர் |
| *1992-93* | .. | *962* | *1,185.24* ஏக்கர் |
| *1993-94* | .. | *875* | *906.86* ஏக்கர் |

[1995 நவம்பர் 3

6--

**செங்குன்றம் பகுதியில் இறைச்சித் தொட்டிகளை நீக்குதல்**

வினா எண் 17465--திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சென்னைக்கு அருகில் உள்ள செங்குன்றம் பகுதியில் உரிமம் இல்லாத இறைச்சித் தொட்டிகள் உள்ளனவா?

(ஆ) அவ்வாறெனில் அவைகளை நீக்குவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

7--

**அம்மாபேட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுதல்**

வினா எண் 21440--திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி, அம்மாப்பேட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட தனி நபர்களால் இலவசமாக வழங்கப்பட்ட நிலம் எத்தனை ஏக்கர்?

(ஆ) தற்சமயம் இப்பூமியின் நிலை என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : அந்தியூர் தொகுயிலுள்ள அம்மாப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்ட தனி நபர் ஒருவரால்

*1995 நவம்பர் 3]*

சுமார் 2 ஏக்கர் நிலம் தானமாக வழங்கப்பட்டதில் 0.40 செண்ட் நிலம்தான் இத்துறைக்கு மாற்றப்பட்டு கட்டிடம் கட்டப்பட்டு செயல்பட்டு வருகின்றது. மீதியுள்ள நிலம் இத்துறைக்கு இன்னும் மாற்றப்படவில்லை.

**8--**

**புதுநகருக்கு கூடுதல் மருத்துவமனைக் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் 25494---**திரு. சி. சுவாமிநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம் புதுநகருக்கு கூடுதல் மருத்துவமனைக் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

கட்டிடம் கட்ட ஏப்ரல் மாதம் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**9--**

**சித்த மருத்துவப் பட்டப்படிப்பு படித்தோர் விவரம்**

வினா எண் 35926--**டாக்டர் சு. மணிமேகலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

1993-94 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் சித்த மருத்துவப் பட்டப்படிப்பு படித்து வேலையில்லாமல் இருப்போர் எவ்வளவு பேர்?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

சென்னை தொழிற்கல்வி வேலைவாய்ப்பகத்தில் 331 ஆண் மற்றும் 313 பெண் சித்த மருத்துவப் பட்டதாரிகள் வேலைக்காகப் பதிவு செய்துள்ளனர்.

10--

## பையனபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தற்குக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 36258--**திருமதி அ.தி. சரஸ்வதி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா---

பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் தொகுதி, பையனபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டத் தேவையான நிலம் முழுமையாகக் கிடைக்கப் பெறாமையால் இங்கு கட்டிடம் கட்ட தற்சமயம் வாய்ப்பில்லை.

11--

## மருத்துவ அதிகாரி குடியிருப்புக்களைப் புதுப்பித்தல்

வினா எண் 37757--**திரு. சி. ஞானசேகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா---

வேலூர் அரசு மருத்துவமனை உள்ளூர் மருத்துவ அதிகாரிக்கான குடியிருப்பு பாழடைந்து உள்ளதால் எப்பொழுது புதிய கட்டிடம் கட்டப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மருத்துவ அதிகாரிக்கு தற்சமயம் குடியிருப்பு கட்டும் திட்டம் ஏதுமில்லை.

*1995 நவம்பர் 3]*

**12--**

**அரசு மருத்துவமனைகளுக்குப் பரிசுகள் வழங்குதல்**

*வினா எண் 44683*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்திருக்கும் அரசினர் மருத்தவமனைகளுக்கு பரிசுகள் வழங்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்திருக்கும் அரசினர் மருத்தவமனைகளுக்கு பரிசுகள் வழங்கும் திட்டத்திற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**13--**

**அரசு சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்**

*வினா எண் 44965*--**திரு. எம். பூராசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*பூம்புகார் தொகுதி, செம்பனார் கோவிலில் உள்ள அரசு சுகாதார நிலையத்திற்குச் சொந்தக் கட்டிடம் எப்போது கட்டப்படும்?*

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

செம்பனார் கோவிலில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்ட சமீபத்தில்தான் நிலம் கிடைக்கப் பெற்றுள்ளது. பொது மக்களிடத்திலிருந்து நன்கொடை கிடைக்கப் பெற்றவுடன் நிதி நிலைமைக்கு ஏற்ப கட்டிடம் கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

14--

## டாக்டர் புரட்சித் தலைவி இலவச மருத்துவ முகாம்

வினா எண் 47217--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

டாக்டர் புரட்சித் தலைவி இலவச மருத்துவ முகாமினால் கடந்த ஆண்டில் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா பள்ளிச் சுகாதார இலவச மருத்துவ முகாமினால் 28-2-1995 வரை சுமார் 74,48,090 மாணவர்கள் பரிசோதனை செய்யப்பட்டனர். அதில் சுமார் 42,88,139 மாணவர்களுக்கு குறைபாடு கண்டறியப்பட்டது. 2,17,907 மாணவர்கள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

15--

## மருத்துவர்கள் சங்கத்திற்கு தனிக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 47224--**திரு. ஆர் சிங்காரம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மாவட்ட மருத்துவமனைகளில் மருத்துவர்கள் சங்கத்திற்கு தனிக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மாவட்ட மருத்துவமனைகளில் மருத்துவர்கள் சங்கத்திற்கு தனிக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

*1995 நவம்பர் 3]*

**16--**

**பஞ்சாயத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

வினா எண் 47994--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*ஒரு பஞ்சாயத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

தற்போது கிராமப் புறங்களில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம், மலைப்புறங்களில் 20,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்னும் மத்திய அரசின் கொள்கைப்படி அமைக்கப்படுகிறது. இதனை மாற்றி ஒரு பஞ்சாயத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான திட்டம் மாநில அரசிடம் தற்போது ஏதும் இல்லை.

**17--**

**குடவாசல் அரசு மருத்துவமனைக்குக் கூடுதல் வசதி ஏற்படுத்துதல்**

வினா எண் 48685--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*நாகை காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி குடவாசல் வட்டம் பேரூராட்சியில் உள்ள அரசு மருத்துவ மனைகளில் அறுவை சிகிச்சை பிரிவும், அதற்கு போதிய மருத்துவர் வசதியும் ஏற்படுத்தி தர அரசு முன்வருமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

இல்லை.

[*1995 நவம்பர் 3*

18--

**சிவகிரியில் குழந்தைகள் நல மருத்துவ சிகிச்சைப் பிரிவு துவங்குதல்**

*வினா எண் 48780*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*மொடக்குறிச்சி தொகுதி, சிவகிரியில் குழந்தைகள் நல மருத்துவ சிகிச்சைப் பிரிவு அமைத்து மேம்படுத்தப்படுமா ?*

**விடை--**

***மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:***

*பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதியிலுள்ள சிவகிரி 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்பட்டு வருவதால் குழந்தைகள் நல மருத்துவ சிகிச்சைப் பிரிவு தனியே அமைப்பதற்கான தேவை இல்லை.*

19--

**பள்ளப்பட்டி ஹாஜி வாப்பு நினைவு மருத்துவமனையில் விபத்து சிகிச்சைப் பிரிவு துவங்குதல்**

*வினா எண் 53113*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*திருச்சிராப்பள்ளி மாவட்டம், பள்ளப்பட்டி ஹாஜி வாப்பு நினைவு அரசினர் மருத்துவமனையில் விபத்து சிகிச்சைப் பிரிவு துவக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

***மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:***

*பள்ளப்பட்டி ஹாஜி வாப்பு அரசினர் மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு தொடங்க தற்போது இயலாது.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**20--**

**பள்ளப்பட்டி அரசினர் மருத்துவமனையில் மகப்பேறு வார்டில் மருத்துவ வசதியை அதிகரித்தல்**

வினா எண் *52126*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*கரூர் வட்டம், பள்ளப்பட்டி ஹாஜி வாப்பு அரசினர் மருத்துவமனையில் மகப்பேறு வார்டில் கூடுதலாக படுக்கை வசதிகள் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

***மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:***

*தற்போது இது சாத்தியமில்லை.*

**21--**

**மொடக்குறிச்சி தொகுதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல்**

வினா எண் *54293*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், எல்லைக்காடு ஊராட்சி, எல்லைக்காடு புதூர், கொங்காளி வலசு, கருக்கம்பாளையம், கோக்காட்டூர், ஊஞ்சல் பாளையம் ஆகிய கிராமங்களில் மகப்பேறு வசதி மற்றும் இரத்த வங்கியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை--**

***மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:***

*மொடக்குறிச்சி ஒன்றியம், எல்லைக்காடு ஊராட்சியை சார்ந்த கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தும் திட்டம் ஏதுமில்லை.*

**22--**

### மொடக்குறிச்சி ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல்

வினா எண் *54305*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், வள்ளிபுரம் ஊராட்சி, கருக்கம்பாளையம் மற்றும் கோக்காட்டூர் கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மொடக்குறிச்சி ஒன்றியம், வள்ளிபுரம் ஊராட்சி கருக்கம்பாளையம் மற்றும் கோக்காட்டூர் கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

**23--**

### அஞ்சூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல்

வினா எண் *54341*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், அஞ்சூர் ஊராட்சி, காட்டூர், நல்லசெல்லிபாளையம் முத்துகவுண்டன் பாளையம், குள்ளம்பாளையம், கொட்டாம்பாளையம், ஆகிய கிராமங்களில் மகப்பேறு வசதி மற்றும் இரத்த வங்கியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது பற்றி அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3]*

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், அஞ்சூர் ஊராட்சியை சேர்ந்த கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதரா நிலையம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

**24--**

## கொடுமுடி ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல்

வினா எண் *54346*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், அஞ்சூர் ஊராட்சி, சாரவலசு, நடுப்பாளையம், நல்லசெல்லிபாளையம், ராமநாதபுரம், பொரசப்பாளையம் ஆகிய கிராமங்களில் மகப்பேறு வசதி மற்றும் இரத்த வங்கியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது பற்றி அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், அஞ்சூர் ஊராட்சியை சேர்ந்த கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

**25--**

## திருப்பத்தூரில் செவிலியர் பயிற்சிப் பள்ளி அமைத்தல்

வினா எண் *61381*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் நகரில் செவிலியர் பயிற்சிப் பள்ளி அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆமெனில், எப்போது அமைக்கப்படும்?



TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) இவ்வினா எழவில்லை.

**26--**

**திருப்பத்தூர் மருத்துவமனையில் உள்ள வசதிகள்**

வினா எண் 61385--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் நகர் பெரிய நகராக இருப்பதால் மாவட்ட தலை நகர் வெகு தொலைவில் இருப்பதால் திருப்பத்தூர் மருத்துவமனையில் எல்லா வசதிகளும் அமைக்கப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

அரசு மருத்துவமனை திருப்பத்தூர் 176 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகும். இங்கு கண் சிகிச்சைப் பிரிவு, குழந்தைகள் நலப் பிரிவு ஆகிய சிறப்புப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. மேலும் பரிசோதனைக் கூடம் இயங்கி வருகிறது. விபத்து மற்றும் அவசர சிகிச்சைக்கென ரத்த வங்கி உள்ளது. எக்ஸ்ரே பிரிவும் இங்கு இயங்கி வருகிறது. போதுமான மருத்துவர்கள் இங்கு பணிபுரிந்து வருகிறார்கள். எனவே திருப்பத்தூர் மருத்துவமனையில் தற்போது உள்ள வசதிகள் போதுமானவையாக உள்ளன.

*1995 நவம்பர் 3]*

**27--**

**திருப்பத்தூரில் அரசு மருத்துவமனையில் புதிய சிகிச்சைப் பிரிவுகள் துவங்குதல்.**

*வினா எண் 61366*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–*

*(அ) திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் புற்றுநோய்த் தடுப்பு சிகிச்சைப் பிரிவு, உடல் தோற்றப் பொலிவு பிரிவு அறுவை சிகிச்சைப் பிரிவு, இருதய அறுவை சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றை தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?*

*விடை--*

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ): இது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.*

**28--**

**இராயக்கோட்டையில் ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவ மனையாக உயர்த்துதல்**

வினா எண் *67782*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--.

தர்மபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், இராயக்கோட்டையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக உயர்த்துவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

தர்மபுரி மாவட்டம் கேமங்களம் ஒன்றியம், இராயக்கோட்டையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

[1995 நவம்பர் 3

**29--**

**காட்டுமன்னார்கோயில் பேருந்தினை மீண்டும் இயக்குதல்**

வினா எண் 25758--**திரு. என்.ஆர். ராஜேந்திரன் :** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சேலம்-சிதம்பரம் (வழி) திருமுட்டம், காட்டுமன்னார் கோயில் பேருந்தினை மீண்டும் இயக்க அரசு நட.வடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

சேலத்திலிருந்து சிதம்பரத்திற்கு விருத்தாசலம், வடலூர், சேத்தியாதோப்பு வழியாக இயக்கப்படும் வழித்தடம் நேர்வழித்தடமாகும். இதன் நீளம் 199 கி.மீ. ஆகும். ஆனால் சேலம் சிதம்பரம் (வழி) திருமுட்டம், காட்டுமன்னார் கோயில் ஒரு சுற்று வழித்தடமாகும். இதன் நீளம் 214 கி.மீ. ஆகும். கோரிக்கை தடம், சுற்று வழித்தடமாதலால் நேரடியாக செல்லும் பயணிகளுக்கு அதிக பயணக் கட்டணம், அதிக பயண நேரம் போன்ற அசௌகரியங்கள் ஏற்படுகின்றன. நேரடியாக செல்லும் பயணிகள் இச்சுற்று வழித்தடத்தை விரும்பவில்லையென்று அண்ணா போக்குவரத்துக் கழக ஆய்வின் மூலம் தெரிய வருகிறது.

மேற்கூறிய காரணங்களால் கோரிக்கை தடத்தில் இயக்கப்பட்ட அண்ணா போக்குவரத்துக் கழக பேருந்து மிகக் குறைவான வருவாய் ஈட்டியது. மேலும் விருத்தாசலம் - சிதம்பரம் (வழி) காட்டுமன்னார்குடி தடத்தில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் பயணிகள் தேவைக்கேற்ப அதிக அளவில் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, மேற்படி பேருந்து பயணிகள் நலன் கருதி, சேலம் - சிதம்பரம் என நேரிடையாக இயக்கப்பட்டு வருகிறது.

**30--**

**இ. ஆலமரத்துப்பட்டிக்கு பேருந்து இயக்குதல்**

வினா எண் 25764--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், இ. ஆலமரத்துப்பட்டி கிராமத்திற்கு ஈசநத்தம், ஆத்துமேடு, வெள்ளோடு ஆகிய ஊர்களின் வழியாக தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் நகரப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**விடை––**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

கோரிக்கை தடமாகிய அரவக்குறிச்சி முதல் இ. ஆலமரத்துப்பட்டி (வழி) ஈசநத்தம், ஆர். வெள்ளோடு, ஆத்துமேடு வரையிலான தூரம் 49.0 கி.மீ. ஆகும். இச்சாலையில் சத்திரம் இ. ஆலமரத்துப்பட்டி வழித்தடத்தில் துலுக்கம்பாறை பிரிவு செந்தாம்பட்டி, செந்தாம்பட்டி பிரிவு இ. ஆலமரத்துப்பட்டி வரையில் உள்ள 5.0 கி.மீ. சாலை கப்பிச் சாலையாகவும் கப்பி பெயர்ந்தும், மேடு பள்ளங்கள் நிறைந்தும் குறுகலான பாதையாக உள்ளதால் பேருந்து இயக்க இயலாது. மேலும் அனுமதிக்கப்பட்ட தூரமான 30.0 கி.மீ.–க்கும் கூடுதலாக கோரிக்கை தடம் இருப்பதால், அத்தடத்தில் நகரப்பேருந்து இயக்க இயலாது.

**31––**

**கரூர் வட்டத்தில் பேருந்து இயக்குதல்**

வினா எண் 34315––**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா––

கரூர் வட்டம், மணல் மேட்டிலிருந்து காரிபாளையம், புத்தாம்பூர் பி. வடுகப்பட்டி, சுக்கராம்பட்டி வழியாக ஆர். வெள்ளோடு ஈசநத்தம் வரையில் தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**விடை––**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

கோரிக்கையின் வழித்தடத்தில் வடுகப்பட்டி – புத்தாம்பூர் செல்லும் பாதையில் சுமார் 0.5 கி.மீ. மட்டும் மெட்டல் சாலை புதியதாக

அமைக்கப்பட்டுள்ளது. இவ்வழித்தடத்தில் மணல்மேடு பிரிவிலிருந்து புத்தாம்பூர் வரை 2.5 கி.மீ. கப்பி சாலையாகவும் மேடு பள்ளங்கள் நிறைந்தும், புத்தாம்பூரிலிருந்து சுக்கிராம்பட்டி வரை 3.5 கி.மீ. மண் சாலையாகவும் மேடு பள்ளங்கள் நிறைந்தும், குறுகலாகவும் பராமரிப்பு பணிகள் ஏதும் செய்யப்படாமல் முட்கள் அடர்ந்து வளர்ந்து உள்ளதால் தற்போது பேருந்து இயக்க இயலாது.

**32--**

## கொடுமுடிக்கு பேருந்து இயக்குதல்

வினா எண் *35112*--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஈசநத்தத்திலிருந்து வெள்ளோடு, சின்னவலையப்பட்டி, அரவக்குறிச்சி, ராஜாபுரம், வாய்க்காலூர், சீரங்க கவுண்டலூர், சின்னநாயக்கனூர், எலவனூர், சின்னதாராபுரம், தென்னிலை, க. பரமத்தி, நொய்யல் வழியாக கொடுமுடிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

கோரிக்கையில் கூறப்பட்டுள்ள ஈசநத்தம் - கொடுமுடி வழித்தடத்தின் தூரம் *88.0* கி.மீ. அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மூலம் மற்றும் தனியார் பேருந்துகளின் மூலமாகவும் மேற்படி வழித் தடத்தில் பேருந்து வசதி நன்கு செய்து தரப்பட்டுள்ளது. அதன் விவரம் கீழே தரப்பட்டுள்ளது :--

| | | நகரம் | புறநகர் |
|---|---|---|---|
| ஈசநத்தம்--அரவக்குறிச்சி | .. | 6 | 4 |
| அரவக்குறிச்சி--சின்னதாரபுரம் | .. | 6 | 4 |
| சின்னதாராபுரம்--தென்னிலை | .. | 7 | 6 |
| தென்னிலை--கொடுமுடி | .. | 2 | 6 |

தற்போது ஈசநத்தம் - கொடுமுடிக்கு ஒரு நடை புறநகர் பேருந்து மூலம் இயக்கப்படுகிறது. மேலும் ஈசநத்தம்-கொடுமுடிக்கு நேரடி

*1995 நவம்பர் 3]*

பயணிகள் அடர்வு குறைவாக இருப்பதால் தற்போதுள்ள பேருந்து வசதிகளே போதுமானதாகும்.

**33--**

## சேத்தியாதோப்பிற்குப் பேருந்து இயக்குதல்

வினா எண் *38338*--**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ) புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், விருத்தாசலத்திலிருந்து சேத்தியாதோப்பிற்கு இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட 2 ஏ பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?*

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): விருத்தாசலத்திலிருந்து கம்மாபுரம், அகர ஆலம்பாடி, ஆதனூர், பெரிய குப்பம் வழியாக சேத்தியாதோப்பு வரையிலான தடத்தில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து டி2ஏ இயக்கப்பட்டு வந்தது. 1993 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக இத்தடத்தில் பெரியகுப்பம் கிராமத்திற்கும் சேத்தியாதோப்பிற்கும் இடைப்பட்ட பகுதியில் பெரிய அளவில் சாலைத் துண்டிப்பு ஏற்பட்டதால் இந்நகரப் பேருந்தின் இயக்கம் இத்தடத்தில் தகுதியுடைய சாலையைக் கொண்ட பகுதி வரையறுக்கப்பட்டது. சாலைத் துண்டிப்பு சீரமைக்கப்பட்ட பின்னர் இந்நகரப் பேருந்தின் இயக்கம் மீண்டும் தற்சமயம் சேத்தியாதோப்பு வரை நீட்டிக்கப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது.

**34--**

## பெரியநற்குணத்திற்கு பேருந்து இயக்குதல்

வினா எண் *38347*--**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியத்தில் பெரிய நற்குணம் ஊர் உள்ளே சுமார் 1 கி.மீ. தூரத்திற்கு நகரப் பேருந்துகள் அனைத்தும் வந்து செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியத்தில் பெரியநற்குணம் கிராமம் சேத்தியாதோப்பு அகர ஆலம்பாடி நெடுஞ்சாலையில் பெரியநற்குணம் கூட்டுச் சாலையிலிருந்து 1 கி.மீ. தூரத்திற்குள்ளாகவே அமைந்துள்ளது. இச்சாலையில் பேருந்தினை இறுதியாக பெரியநற்குணம் கிராமத்தில் திருப்பிவிடுவதற்கான இடவசதி இல்லை. பெரியநற்குணம் கிராமத்தில் பேருந்து சென்று திரும்பிட இடவசதி இல்லாத காரணத்தாலும் இச்சாலையில் 1.2 வது கி.மீ. தூரத்தில் ஒரு மாடி வீடும் மின்கம்பமும் உள்ளதாலும் இதில் பேருந்து செல்ல இயலாது.

**35--**

முகந்திரியாங்குப்பத்திற்குப் பேருந்து இயக்குதல்

வினா எண் 38375--செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சிதம்பரம்--அகர ஆலம்பாடி பெரியார் போக்குவரத்துக் கழக பேருந்து புவனகிரி தொகுதி புவனகிரி ஒன்றியம் முகந்திரியாங்குப்பம் வரை வந்து செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சிதம்பரம்--அகர ஆலம்பாடி செல்லும் நகரப் பேருந்தினை முகந்திரியாங்குப்பம் வரை நீட்டித்து இயக்கினால் தட

*1995 நவம்பர் 3]*

நீளம் 30 கி.மீட்டருக்கு கூடுதலாகின்றது. முகந்திரியாங்குப்பம் கிராமம், விருத்தாசலம்-சேத்தியாதோப்பு வழி, அகர ஆலம்பாடி தடத்தில் இயக்கப்படும் 2 நகரப் பேருந்துகளால் பேருந்து வசதி பெற்று வருகிறது. பேருந்து வசதி பெற்ற பகுதிகளில் 30 கி. மீட்டருக்கு மேல் தட நீளமுடைய தடங்களில் மோட்டார் வாகன விதிகளின்படி நகரப் பேருந்து வசதி அளித்திட வழி வகை இல்லை என்பதால் சிதம்பரம்-அகர ஆலம்பாடி நகரப் பேருந்தினை முகந்திரியாங்குப்பம் வரை நீடித்து இயக்கிட இயலாத நிலை உள்ளது.

**36--**

### அரவக்குறிச்சிக்குப் பேருந்துகள் இயக்குதல்

வினா எண் 38524--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கோபியிலிருந்து பெருந்துறை, ஊத்துக்குளி, காங்கயம் வெள்ளக்கோயில், அரவக்குறிச்சி வழியாகவோ பெருந்துறை சென்னிமலை காங்கயம் வெள்ளக்கோயில், தென்னிலை, சின்ன தாராபுரம் வழியாகவோ அரவக்குறிச்சிக்கு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

கோபி - அரவக்குறிச்சி (வழி) பெருந்துறை, ஊத்துக்குளி காங்கயம், வெள்ளக்கோயில் மற்றும் கோபி-அரவக்குறிச்சி (வழி) பெருந்துறை, சென்னிமலை, காங்கயம், வெள்ளக்கோயில், சின்னதாராபுரம் வழித்தடப் பகுதிகள் யாவும் பகுதி வாரியாக போதுமான அளவு நகர மற்றும் புறநகர் பேருந்துகள் மூலம் பேருந்து வசதி பெற்றுள்ளதால் கோரிக்கையின்படி பேருந்து இயக்கத் தேவையில்லை.

**37--**

### உடுமலையில் வட்டார போக்குவரத்து அலுவலகம் திறத்தல்

வினா எண் 38530--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

உடுமலைப்பேட்டையில் வட்டார போக்குவரத்து அலுவலகம் திறக்க நடப்பாண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

இல்லை.

**38--**

**பொள்ளாச்சி--மணப்பாறைக்குப் பேருந்து இயக்குதல்**

வினா எண் *39009*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பொள்ளாச்சியிலிருந்து தாராபுரம், வேலூர், அரவக்குறிச்சி பாளையம் வழியாக மணப்பாறைக்கு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

பொள்ளாச்சியிலிருந்து தாராபுரம், மூலனூர், அரவக்குறிச்சி, பாளையம் வழியாக மணப்பாறைக்கு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்கிட திட்டம் ஏதும் இல்லை.

**39--**

**உடுமலை--அரவக்குறிச்சிக்குப் பேருந்து இயக்குதல்**

வினா எண் *39018*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

உடுமலையிலிருந்து கணியூர் தாராபுரம், மூலனூர் வழியாக அரவக்குறிச்சிக்கு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

உடுமலை - அரவக்குறிச்சி (வழி) கணியூர் தாராபுரம், மூலனூர் வழியாக அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்கிட செயற்குறிப்பு ஏதுமில்லை.

**40--**

**அரவக்குறிச்சி - புதுக்கோட்டைக்குப் பேருந்து இயக்குதல்**

வினா எண் *39019*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரவக்குறிச்சியிலிருந்து பாளையம் மணப்பாறை வழியாகப் புதுக்கோட்டைக்கு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

அரவக்குறிச்சியிலிருந்து பாளையம், மணப்பாறை மற்றும் புதுக்கோட்டை வழித்தடங்கள் முழுவதும் புறநகர் பேருந்துகள் மூலம் நன்கு இணைக்கப்பட்டுள்ள பகுதிகளாகும். மேலும் அரவக்குறிச்சியிலிருந்து புதுக்கோட்டைக்கு நேரடிப் பேருந்து இயக்கும் அளவிற்கு நேரடிப் பயணம் செய்யும் பயணிகளின் அடர்வு மிகவும் குறைவானது. எனவே, அரவக்குறிச்சியிலிருந்து புதுக்கோட்டைக்குப் பேருந்து இயக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**41--**

**துறையூர்-அரவக்குறிச்சிக்குப் பேருந்து இயக்குதல்.**

வினா எண் *39021*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

துறையூரிலிருந்து முசிறி, குளித்தலை, கரூர் வழியாக அரவக்குறிச்சிக்கு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

துறையூரிலிருந்து முசிறி குளித்தலை, கரூர் வழியாக அரவக்குறிச்சி வரை உள்ள வழித் தடம், முழுவதும் கீழ்க்கண்டவாறு புறநகர்ப் பேருந்துகள் மூலம் இணைக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண்ணும், வழித்தடமும் | | தற்போது இயக்கப்படும் நடைகள் |
|---|---|---|
| 1. துறையூர்--முசிறி | .. | 62 |
| 2. துறையூர்--குளித்தலை | .. | 40 |
| 3. குளித்தலை--கரூர் | .. | 356 |
| 4. குளித்தலை--கரூர் | .. | 74 (தனியார் துறை பேருந்துகள்) |
| 5. கரூர்--திண்டுக்கல் (வழி) அரவக்குறிச்சி | | 220 |

மேலும் துறையூரிலிருந்து அரவக்குறிச்சி செல்லும் நேரடி பயணிகளின் அடர்வு மிகவும் குறைவாக இருக்கும் என்பதால் கோரிக்கையில் உள்ள வழித்தடத்தில் கூடுதலாக ஒரு பேருந்து இயக்கத் தேவை இல்லை.

**42--**

**சத்தியமங்மலம் - அரவக்குறிச்சிக்கு பேருந்து இயக்குதல்**

வினா எண் 39023--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

சத்தியமங்மலத்திலிருந்து புன்செய் புளியம்பட்டி, திருப்பூர், காங்கேயம், வெள்ளக்கோயில், தென்னிலை வழியாக அரவக்குறிச்சிக்கு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

சத்தியமங்கலத்திலிருந்து புன்செய் புளியம்பட்டி, திருப்பூர், காங்கேயம், வெள்ளக்கோயில், தென்னிலை வழியாக அரவக்குறிச்சிக்கு அரசு போக்குவரத்து கழகப் பேருந்து இயக்கிட அரசிடம் செயல் திட்டம் ஏதுமில்லை.

**43--**

**எல்லபாளையம்--சிவகிரிக்கு பேருந்து இயக்குதல்**

வினா எண் *390044*-**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

எல்லபாளையம் (மொடக்குறிச்சி) ஈரோடு பேருந்தை குலவிளக்கு வழியாக சிவகிரி வரை நீட்டித்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

எல்லபாளையம் (மொடக்குறிச்சி) ஈரோடு பேருந்தை குலவிளக்கு வழியாக சிவகிரி வரை நீட்டித்து இயக்கும்போது காகம் பகுதி மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதால், கோரிக்கையின்படி வழித்தட மாறுதல் செய்து இயக்க இயலாத நிலை உள்ளது.

44--

## பி. தாழைப்பட்டிக்கு பேருந்து இயக்குதல்

வினா எண் 42118---**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தாந்தோன்றி ஒன்றியம், பிச்சம்பட்டி கிராமம், பி. தாழைப்பட்டி கிராமத்திற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்திலிருந்து இரண்டு நகரப் பேருந்துகள் மூலம் கரூர்-ஆலமரத்துப்பட்டி (வழி) விஜயபுரம், பி. தாழைப்பட்டி பிரிவு வழியாக தினசரி 12 நடைகளும், கரூர் வசந்தகதிர்பாளையம் (வழி) வெள்ளியனை, பி. தாழைப்பட்டி பிரிவு வழியாக தினசரி 4 நடைகளும் இயக்கப்படுகின்றன. இவ்வழித்தடத்தில் பி. தாழைப்பட்டி பிரிவு சாலையிலிருந்து பி. தாழைப்பட்டி கிராமம் 0.4. கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. எனவே, பேருந்துகள் இயங்கும் பிரதான சாலையிலிருந்து 1.0 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கிராமங்கள் அனைத்தும் பேருந்து வசதி பெற்ற கிராமங்கள் ஆகும் என அரசு ஆணை உள்ளது. எனவே, பி. தாழைப்பட்டி கிராமம் பேருந்து வசதி பெற்ற கிராமமாகக் கணக்கில் கொள்ளலாம். இக்கிராமத்திற்குத் தனியாகப் பேருந்து இயக்க தேவையில்லை.

45--

## திருப்பத்தூர்-பெங்களூர் பேருந்து இயக்குதல்

வினா எண் 42780--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வேலூர்-பெங்களூர் செல்கிற வழித்தடத்தில் இயக்கப்படும் 444 ஆம் எண் பேருந்து திருப்பத்தூர் வழியாக விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

வேலூரில் இருந்து பெங்களூருக்கு இயக்கப்படும் தடம் எண் 444 நாட்ராம்பள்ளி வழியாக இயக்கவே உரிமம் பெறப்பட்டுள்ளது. திருப்பத்தூர் வழியாக இயக்க உரிமம் பெறப்படவில்லை. மேலும் அவ்வழி சுற்றுவழியாதலால் திருப்பத்தூர் வழியாகப் பேருந்து இயக்க சாத்தியக்கூறு இல்லை.

**46--**

**சங்ககிரி-பெங்களூருக்கு பேருந்து இயக்குதல்.**

வினா எண். 47309--**டாக்டர் வெ. சரோஜா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சங்ககிரியிலிருந்து பெங்களூருக்கு ஜெ.ஜெ. போக்குவரத்துக் கழக சொகுசுப் பேருந்து விடும் ஒரு கருத்துக் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆமெனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

(அ) சங்ககிரி பெங்களூர் தடம் பிற மாநிலத்தடம். இத்திட்டம் சங்ககிரியிலிருந்து சேலம், தர்மபுரி, கிருட்டிணகிரி ஓசூர் வழியாக பெங்களூருக்கு இயக்கப்பட வேண்டும். இத் தடத்தின் நீளம் 247 கிலோ மீட்டர். இத்தடத்தினை கர்நாடக மாநில அரசின் ஒப்புதலுடன்தான் இயக்க முடியும். தற்பொழுது கோயம்புத்தூரிலிருந்து பெங்களூருக்கு 6 சொகுசுப் பேருந்துகள், 12 ஒரு வழிப்பயணங்களுடன் சங்ககிரி வழியாக இயக்கப்படுகின்றன. சங்ககிரியிலிருந்து பயணம் செய்ய விரும்புவோர் இத்தகைய பேருந்துகளை பயன்படுத்திக்கொள்ளலாம். மேலும் தென்னகத்தில் உள்ள பல்வேறு இடங்களிலிருந்து பெங்களூருக்கு இயக்கப்படும் சுமார் 30 பேருந்துகள் சேலம் வழியாக இயக்கப்படுகின்றன.

சங்ககிரிக்கும் சேலத்திற்கும் இடையேயுள்ள தூரம் 41 கிலோ மீட்டர். சங்ககிரியிலிருந்து பெங்களூருக்கு பயணம் செய்ய விரும்புவோர் சேலம் சென்று இத்தகைய பேருந்துகளை பயன்படுத்திக் கொள்ளலாம். எனவே சங்ககிரியிலிருந்து பெங்களூருக்கு ஜெ.ஜெ. போக்குவரத்துக் கழக சொகுசுப் பேருந்து விடும் திட்டம் எதுவும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினவிற்கு இடமில்லை.

**47--**

**கொடுமுடியிலிருந்து சிவகிரி வழியே பேருந்து இயக்குதல்**

வினா எண் *48292*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

(அ) கொடுமுடியிலிருந்து, பழனி கோவை, செல்லும் பேருந்து சிவகிரி வழியாகச் செல்ல அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் எப்போது செயல்படுத்தப்படும்.?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கொடுமுடியிலிருந்து பழனி மற்றும் கோயம்புத்தூருக்கு இயக்கப்படும் பேருந்துகளை சிவகிரி வழியாக இயக்கினால் சுற்று வழித்தடமாக அமையும் என்பதாலும், நேரடி பயணிகள் பாதிப்படைவார்கள் என்பதாலும் கோரிக்கைப்படி இயக்க இயலாத நிலை உள்ளது.

**48--**

**சந்தனக் கிடங்கில் பணிபுரிவோருக்கு கூலி உயர்த்துதல்**

வினா எண் *55345*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சந்தனக் கிடங்கில் வேலை செய்யும் வேலையாட்களின் தினசரிக் கூலி உயர்த்தப்படுமா?

*1995 நவம்பர் 3]*

*(ஆ) இப்போது ஆண், பெண் பணியாளர்களுக்கு எவ்வளவு கூலி கொடுக்கப்படுகிறது?*

**விடை--**

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:***

*(அ)* சேலம் மற்றும் சத்தியமங்கலம் ஆகிய இரு இடங்களில் உள்ள சந்தனமரக் கிடங்குகளில் பணிபுரியும் கூலியாட்கள் குத்தகைதாரர்களால் நியமனம் செய்யப்பட்டு அந்த குத்தகைதாரர்களுக்காகப் பணிபுரிகின்றனர். எனவே இக் கூலியாட்களுக்கு அரசு தினசரி கூலியை உயர்த்தும் வினாவிற்கு இடமில்லை. திருப்பத்தூர் சந்தனமரக் கிடங்கைப் பொறுத்த மட்டில், இங்கு வனத்துறையே கூலியாட்களை நியமித்து பணிகளை செய்து வருகிறது. தற்போது இந்த கிடங்கில் பணிபுரியும் கூலியாட்களுக்கு தினசரிக் கூலியை உயர்த்துவது பற்றிய செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

*(ஆ)* திருப்பத்தூர் சந்தனமரக் கிடங்கில் பணிபுரியும் கூலியாட்களுக்குக் கீழ்க்கண்டவாறு இப்போது கூலிகள் வழங்கப்படுகின்றன:--

*(1)* மாத தொகுப்பூதியம் பெறும் மஸ்தூர்கள் *(55 மஸ்தூர்கள்)* *(ஆண்கள் மற்றும் பெண்கள்)* தொகுப்பூதியம் *ரூ.600* இடைக்கால நிவாரணம் *ரூ.40* சிறப்புப்படி *ரூ.60* மொத்தம் *ரூ.700*

*(2)* கிரேடு II மஸ்தூர்கள் நாள் ஒன்றுக்கு பெறும் கூலி *(43 மஸ்தூர்கள்) (ஆண்கள் மட்டும்)*தினக்கூலி *ரூ.24–50* அகவிலைப்படி *ரூ.13–70* மொத்தம் *ரூ.38–20*

*(3)* கிரேடு III மஸ்தூர்கள் நாள் பெறும் கூலி *(29 மஸ்தூர்கள்)* *(பெண்கள் மட்டும்)* தினக்கூலி *ரூ.21–50* அகவிலைப்படி *ரூ.13–70* மொத்தம் *ரூ.35-20*

**49--**

**மொடக்குறிச்சி தொகுதியில் பேருந்து வசதி செய்தல்**

வினா எண் *57847*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி மொடக்குறிச்சி ஒன்றியம், அட்டவனை அனுமன்பள்ளி, ஊராட்சி அமராவதிபாளையம் மாப்பிள்ளை கவுண்டன்தோட்டத்துபுதூர் அஞ்சுராம்பாளையம் முருங்கம்பாளையம், பழையபாளையம், ஊஞ்சபாளையம் வேமாண்டம்பாளையம் ஆதிதிராவிடர் தெரு, மாப்பிள்ளை பெரிபாளையம் கரும்புளியாம் பாளையம், வேமாண்ட.ம் பாளையம், ஆகிய கிராமங்களில் பேருந்து வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை--

*மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:*

மொடக்குறிச்சி தொகுதி மொடக்குறிச்சி ஒன்றியம், அட்டவனை அனுமன்பள்ளி ஊராட்சிக்கு உட்பட்ட அனைத்து கிராமங்களும் தற்போது பேருந்து வசதி பெற்றுள்ளன. மாப்பிள்ளை தோட்டத்து புதூர் என்ற ஒரு கிராமம் மட்டும் சுமார் 0.5 கி.மீ. தூரத்தில் பிரதான சாலையில் இருந்து பேருந்து வசதி பெருகிறது.

**50--**

**மொடக்குறிச்சி தொகுதியில் பேருந்து வசதி ஏற்படுத்துதல்**

வினா எண் *57901*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி கொடுமுடி ஒன்றியம் கொந்தளம் ஊராட்சி காளிபாளையம், கோட்டைக்காட்டு வலசு புதூர், வீரசங்கிலி மண்திட்டு, பூசாரிபாளையம், கொந்தளம் மாரியம்மன் கோயில்புதூர் கள்ளாவரம் கோட்டை ஆண்டிக் காட்டுப்பாளையம், குள்ளக்கவுண்டனூர், கொண்ணாங்காட்டூர் பெரும்பருப்பு, முத்தையன்வலசு, காரக்காட்டுவலசு, திட்டான் பாளையம், வேளான்காட்டுப்பாளையம், ஆகிய கிராமங்களில் பேருது வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை--

*மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:*

*1995 நவம்பர் 3]*

மொடக்குறிச்சி தொகுதி கொடுமுடி ஒன்றியம், கொந்தளம் ஊராட்சிக்கு உட்பட்ட கோட்டை காட்டுவலசு திட்டாம்பாளையம், பெரும்பரப்பு ஆகிய கிராமங்கள் நேரடியாக பேருந்து வசதி பெற்று வருகின்றன. இக் கிராமங்களான காளியபாளையம், புதூர், வீரசங்கிலி மண்திட்டு, பூசாரி பாளையம், கொந்தளம், மாரியம்மன் கோயில், பூதூர் கள்ளாரம்கோட்டை ஆண்டிகாட்டுபாளையம் குள்ளகவுண்டனூர், பொன்னாங்காட்டூர், முத்தையன்வலசு காரக்காட்டுவலசு, வேளான்காட்டு பாளையம் ஆகிய கிராமங்கள் அருகாமையில் உள்ள வழித்தடங்கள் மூலம் பேருந்து வசதி பெருகின்றன.

**51--**

**கொடுமுடி ஒன்றியத்தில் பேருந்து வசதி ஏற்படுத்துதல்**

வினா எண் *57919*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி கொடுமுடி ஒன்றியம், முருங்கியாம்பாளையம் ஊராட்சி பூலாவலசு, சொரியம்பாளையம் ஆகிய கிராமங்களில் பேருந்து வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

கோரிக்கையில் உள்ள அனைத்து ஊர்களுமே தற்போது பேருந்து வசதி பெற்றுள்ளன.

**52--**

**வேலாம்பாளையம் ஊராட்சியில் பேருந்து வசதி ஏற்படுத்துதல்**

வினா எண் *60966*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி மொடக்குறிச்சி ஒன்றியம், வேலாம்பாளையம் ஊராட்சி வேலாம்பாளையம், புதுவள்ளியம்பாளையம், பூமாண்டம்வலசு கருமாண்டபாளையம், நொச்சிக்காட்டுவலசு, வெள்ளிபத்தாம்பாளையம்,

விளாங்காடு புதூர், காங்கயம்பாளையம் ஆகிய கிராமங்களில் பேருந்து வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், வேலாம்பாளையம் ஊராட்சி, கருமாண்டபாளையம் கிராமம் பிரதான சாலையில் அமைந்துள்ளதால் நேரிடையாக பேருந்து வசதி பெற்றுள்ளது. இதர கிராமங்களான வேலாம்பாளையம், புதுவள்ளியம்பாளையம், பூமாண்டவலசு குன்னங்காட்டுவலசு நொச்சிக்காட்டு வலசு, வெள்ளிபத்தாம்பாளையம், விளாங்காடு, புதூர், காங்கயம்பாளையம், ஆகிய கிராமங்கள் தற்போது சாலை வசதி குறைபாடு காரணமாக அருகாமையில் உள்ள வழித்தடங்களின் மூலமாகப் பேருந்து வசதி பெற்று வருகின்றன.

**53--**

**மொடக்குறிச்சி தொகுதியில் சில ஊர்களுக்கு பேருந்து இயக்குதல்**

வினா எண் *61012*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், புஞ்சைலக்காபுரம் ஊராட்சி, கொமாராபாளையம், புதுவலசு, புஞ்சைலக்காபுரம், புஞ்சைலக்காபுரம் ஆதிதிராவிடர் காலனி ஆகிய கிராமங்களில் பேருந்து வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

கோரிக்கையில் உள்ள புஞ்சைலக்காபுரம், கொகார பாளையம், ஆகிய கிராமங்கள் பிரதான சாலையில் அமைந்துள்ளதால் நேரிடையாகப் பேருந்து வசதி பெருகின்றன. இதர கிராமங்களான புதுவலசு

*1995 நவம்பர் 3]*

புஞ்சைலாக்காபுரம் ஆதிதிராவிடர் காலனி சுமார் 0.5 கி.மீ. தூரத்தில் பேருந்தி வசதி பெறுகின்றன.

**54--**

**மழைக்காலங்களில் வீணாகும் தண்ணீரைச் சேகரிக்கும் திட்டம்**

வினா எண் 39074--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மழைக்காலங்களில் வீணாகும் தண்ணீரைச் சேகரிக்க இராமநாதபுர மாவட்டத்தில் அரசு எடுத்துள்ள திட்டங்களின் விவரம் என்ன?

(ஆ) மாவட்டத்தின் அனைத்து கண்மாய்களையும் புல்டோசர் வைத்து ஆழப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் வைகை ஆற்றில் மழைக்காலங்களில் வரும் வெள்ள நீரைத் தேக்கி வைத்து பயன்படுத்த வைகையாற்றின் கீழ்ப்பகுதியில் ஒரு நீர்த்தேக்கம் கட்ட ஆய்வுப்பணி தற்போது செயற்பொறியாளர் பொதுப்பணித் துறை (திட்டம் மற்றும் வடிவமைப்புக் கோட்டம்) காரைக்குடி அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பரமக்குடி, கமுதி மற்றும் முதுகுளத்தூர் தாலுக்காவில் மொத்தம் 13 பெரிய கண்மாய்களை புல்டோசர் வைத்து ஆழப்படுத்த தேர்ந்தெடுத்து இதற்கான தோராய மதிப்பீடு மொத்தம் ரூ. 853.61 லட்சத்திற்கு தயாரித்து தலைமைப் பொறியாளர் (சிறுபாசனம்) சென்னை அவர்களுக்கு சமர்பிக்கப்பட்டுள்ளதாக, அருப்புக்கோட்டை கண்காணிப்புப் பொறியாளர் தெரிவித்துள்ளார். இப்பணிக்கான ஒதுக்கீடு தொகை கிடைக்கப் பெற்றவுடன் இப்ப்ணிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

[1995 நவம்பர் 3

**55--**

**பரமக்குடி தொகுதியில் கண்மாய்களை ஆழப்படுத்துதல்**

வினா எண் 40228--டாக்டர் **எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பரமக்குடி தொகுதி, மேலாயக்குடி, நாகாச்சி, வேண்தோணி, பார்த்திபனூர் கண்மாய்களை ஆழப்படுத்த 1994-95 ஆம் ஆண்டு திட்டத்தில் சேர்த்துக் கொள்ள அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

1. மேலாயக்குடி, நாகாச்சி வேந்தோணி ஆகிய கண்மாய்களை ஆழப்படுத்த திட்டம் ஏதும் இல்லை. பார்த்திபனூர் கண்மாயை மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் அவர்களின் ஆய்வில் உள்ள பரந்த நீர் வழங்குதல் திட்டத்தில் (Comprehensive Water-Supply Scheme) சேர்த்து ஆழப்படுத்த செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பரமக்குடிக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

2. மேலும் பார்த்திபனூர் கண்மாய் நீர்மேலாண்மை ஒருங்கிணைப்புத் திட்டத்தின் (Water Resources Consolidation Project) தரப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

**56--**

**அரசு ஊழியர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல்**

வினா எண் 43590--திரு. **ஆர். சிங்காரம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், சங்கரன் கோவில் நகரில் அரசு ஊழியர்களுக்கு குடியிருப்புகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

இல்லை. அரசு ஆணை எண் *373*, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் *24-2-1979*-ன்படி மாவட்ட தலைமையிடம் மற்றும் வருவாய் கோட்ட தலைமையிடங்களில் மட்டுமே அரசு அலுவலர் வாடகை குடியிருப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், சங்கரன்கோவில் ஒரு வட்டாட்சியர் தலைமையிடமாக இருப்பதால் அரசு அலுவலர் வாடகை குடியிருப்புத் திட்டத்தினை அங்கு செயல்படுத்த இயலாது.

**57--**

**வடக்குப்பாளையத்தில் அடுக்குமாடி வீடுகள்**

வினா எண் *46540*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்**: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், பழமங்கலம் ஊராட்சி, வடக்குப்பாளையம் கிராமத்தில் அடுக்குமாடி வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், பழமங்கலம் ஊராட்சி, வடக்குப்பாளையம் கிராமத்தில் அடுக்குமாடி வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

**58--**

**டான்சி மூலம் கேஸ் சிலிண்டர்**

வினா எண் *34513*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா**: Will the Honourable the Minister for Rural Industries Department be pleased to state--

[1995 நவம்பர் 3

(a) Whether TANSI has undertaken any investigation for the manufacture of domestic gas cylinders for State Owned Oil Corportions?

(b) the details thereof?

(c) If not the reasons thereof?

விடை--

*மாண்புமிகு திரு. துரைராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:*

*(அ)* இல்லை.

*(ஆ)* மற்றும் *(இ)*: வினாவிற்கு இடமில்லை.

59--

பாலிதீன் கோணி ஆலையை மீண்டும் இயக்குதல்

*வினா எண் 38069--திரு. பி. சொக்கலிங்கம் :* மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மதுராந்தகம் ஒன்றியம், பாக்கம் ஊராட்சிக்கு உட்பட்ட இடத்தில் கட்டப்பட்ட பாலித்தின் கோணி ஆலை மீண்டும் இயக்கப்படுமா?

விடை--

*மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:*

மதுராந்தகம் ஒன்றியம், பாக்கம் ஊரில் மதுராந்தகம் பாலிதீன் மெல்லிழை கோணிகள் தயாரிப்பு தொழிற் கூட்டுறவுச் சங்கம் 8-6-1981-ல் தொடங்கப்பட்டு சரிவர இயங்காததாலும் கட்டாய சரக்கு பேக்கிங் பொருள் சட்டம் 1987-ன்படி, உணவு தானியம், சர்க்கரை விழுக்காடு, சிமெண்ட் 70 விழுக்காடு மற்றும் உரம் 30 விழுக்காடு பேக்கிங் செய்வதற்கு சணல் கோணிப் பைகளைத்தான் உபயோகப்படுத்த வேண்டும் என்ற காரணத்தினால் பாலீத்தீன் மெல்லிழை கோணிகளுக்கு போதுமான சந்தை வாய்ப்பு கிடைக்கப் பெறாமையாலும், 30-6-1988 முடிய இச்சங்கம் ரூ.20.03 இலட்சம் நட்டத்தினை எய்தியது. பாலீத்தீன் மெல்லிழை தயாரிக்கும் மூலப்பொருள் கிடைப்பதில் மிகுந்த சிரமங்கள் இருப்பதினால் இத்தொழிலை லாபகரமானதாக இயக்க முடியவில்லை. பல தடவை சீரிய முயற்சிகள் மேற்கொண்ட பிறகும் சங்கத்தினை தொடர்ந்து நடத்த சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லாததால் தமிழ்நாடு

*1995 நவம்பர் 3]*

கூட்டுறவுச் சங்க விதிமுறைகளை முழுமையாக அனுசரித்து, அங்கத்தினருக்குத் தகுந்த வாய்ப்பு கொடுத்த பிறகு *15-6-1989*-ல் கலைக்கப்பட்டு விட்டது. மீண்டும் இயக்க சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

**60--**

## டான்சி மூலம் மின்பொருட்கள் தயாரித்தல்

வினா எண் *42776*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(a) Whether TANSI has examined the manufacture of tubes for the tube lights for supply to Electricity Board?

(b) If so, the details thereof?

(c) If not the reasons thereof?

**விடை--**

***மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:***

*(அ) இல்லை.*

*(ஆ) மற்றும் (இ): இவ்வினா எழவில்லை.*

**61--**

## மொடக்குறிச்சி தொகுதியில் சாயத் தொழிற்சாலை அமைத்தல்

வினா எண் *48405*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, நஞ்சை ஊத்துக்குளி ஊராட்சி, தம்பிரான் வலசில் ஒரு சாயத் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

**விடை---**

***மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:***

அரசு கொள்கை ரீதியாக எந்த ஒரு சிறு தொழிற்சாலையையும் இத்துறையின் மூலம் நிறுவுவதில்லை. ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்க முன் வருவார்களேயானால், அவர்களுக்கு மாவட்ட தொழில் மையங்கள் மூலம் தக்க ஆலோசனைகளும் உதவிகளும் அளிக்கப்படும்.

**62--**

**தமிழகத்தில் டான்ஹோப் நிறுவுதல்**

வினா எண் *47898*--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* தமிழகத்தில் தோட்டக்கலைப் பயிர்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் (டான்ஹோப்) *1994-95*-ல் நிறுவப்பட்டதா?

*(ஆ)* ஆம் எனில், எங்கெங்கு நிறுவப்பட்டது?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* தமிழகத்தில் தோட்டக்கலைப் பயிர்கள் உற்பத்தியாளர் கூட்டுறவு என்டர்பிரைசஸ் லிமிடெட் (டான்ஹோப்) *1994-95*-ல் நிறுவப்பட்டு, அதற்கான கூட்டுறவு பதிவுச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் பதிவு எண் எக்ஸ் எண் *876* நாள் *21-10-1994*. தற்போது உழவர் பெருமக்களை உறுப்பினராக்கும் பணியும், அலுவலகப் பணியாளர்களை நியமிப்பதற்கு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணி முழுமையடைந்தவுடன் சென்னையை தலைமையிடமாகக் கொண்டு இந்நிறுவனம் செயல்படும்.

**63--**

**மரவள்ளிக்கிழங்கிற்கு விலை நிர்ணயம் செய்தல்**

வினா எண் *52037*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

கரும்புக்கு விலை நிர்ணயம் செய்வது போல் மரவள்ளிக்கிழங்கிற்கு விலை நிர்ணயம் செய்வதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்.**

ஆம். மரவள்ளிக் கிழங்கிற்கு விலை நிர்ணயம் செய்வது குறித்து செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

64--

**சேலம் பால் பண்ணையில் பால் பவுடர் விற்பனை**

வினா எண் 44533--திரு. **கே. கந்தசாமி:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சேலம் பால்பண்ணையில் உற்பத்தியாகும் பால் பவுடர் வேறு மாநிலங்களில் விற்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் பால்பண்ணையில் உற்பத்தியாகும் பால்பவுடர் வேறு மாநிலங்களில் விற்கப்படுகிறது.

(ஆ) குஜராத் மாநிலத்தில் அகமதாபாத், மகாராஷ்டிரா மாநிலத்தில் பம்பாய், இராஜஸ்தான் மாநிலத்தில் ஜோத்பூர், கர்நாடக மாநிலத்தில் பெங்களூர், கேரள மாநிலத்தில் திருவனந்தபுரம், பாண்டிச்சேரி ஆகிய நகரங்களிலுள்ள தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் முகவர்கள் மூலமாகவும் சென்னையிலுள்ள தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தின் தலைமை அலுவலகத்தின் உத்திரவின் பேரிலும் பால் பவுடர் வெளி மாநிலங்களில் விற்கப்படுகின்றது. 1994-95-ம் ஆண்டிற்கு 12,92,404 கிலோ பால் பவுடரை ரூ.4,35,49,692-க்கு வெளி மாநிலங்களுக்கு சேலம் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் விற்பனை செய்துள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1995 நவம்பர் 3

**65--**

**பெண்கள் பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் விவரம்**

வினா எண் 45581--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் பெண்கள் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அவற்றின் எண்ணிக்கையை அதிகரிக்க ஆவன செய்யப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் 5 பெண்கள் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(ஆ) ஆம், மேலும் மகளிர் சங்கங்கள் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**66--**

**வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் கூட்டுறவு பால் உற்பத்தி ஒன்றியம் தொடங்குதல்**

வினா எண் 65006--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் கூட்டுறவு பால் உற்பத்தி ஒன்றியம் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு தொடங்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3]*

(அ) வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் 1982-ஆம் ஆண்டு முதல் வேலூரை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இவ்வொன்றியத்தின் விவகார எல்லை வடாற்காடு அம்பேத்கார் மற்றும் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்களை உள்ளடக்கியது ஆகும்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**67--**

**தமிழ்நாட்டிலுள்ள சோதனைச் சாவடி விவரங்கள்**

வினா எண் 61430--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்**: மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழ்நாட்டில் எத்தனை இடங்களில் வணிகவரிச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன?

**விடை--**

**மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரித் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் 50 இடங்களில் 58 வணிகவரிச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

**68--**

**சர்க்கரை ஆலை விவசாயிகளுக்குச் சலுகைகள்**

வினா எண் 36544--**திரு. கே. முனிவெங்கடப்பன்**: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தருமபுரி மாவட்டம், பாலக்கோடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லாபத்தில் இயங்குகிறதா?

(ஆ) அந்த சர்க்கரை ஆலைக்குக் கரும்பு வழங்கும் விவசாயிகளுக்கு என்னென்ன சலுகைகளை இச்சர்க்கரை ஆலை வழங்குகிறது?

விடை--

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:

(அ) தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லாபத்தில் இயங்குகிறது. 1991–92 முதல் 1993–94 வரை மேற்படி ஆலை டிய நிகர லாபம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1991–92 | ரூ.31,90,855.95 |
| 1992–93 | ரூ.74,86,646.82 |
| 1993–94 | ரூ.1,14,44,930.00 |

(ஆ) தருமபுரி மாவட்டம், பாலக்கோட்டில் இயங்குகின்ற கூட்டுறவுச் சர்க்கரை ஆலை, தங்களுக்குத் தேவையான கரும்பு உற்பத்தியை செய்யவேண்டி, கரும்பு விவசாயிகளுக்கு பல்வேறு மானியங்கள், சலுகைகள் அளித்து ஊக்குவித்து வருகின்றன. இவ்வகை மானியங்கள் மற்றும் சலுகைகளில் விவசாயிகளுக்கு நாற்றங்கால், கரும்பு நடவு, அதிக சர்க்கரை சத்து உள்ள கரும்பு பயிரிட, கரும்பு ஏற்றிவர வாகன வாடகை, கரும்பில் வரும் களைகளை போக்க களைக்கொல்லி, பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் ஆகிய மானியங்களும் அதிக மகசூல் எடுப்பவர்களுக்கு ஊக்கப் பரிசுகள் ஆகிய பல்வேறு சலுகைகள் வழங்கப்படுகிறது. இவ்வாறான கரும்பு அபிவிருத்தித் திட்டங்களுக்காக இவ்வாலை ஆண்டுதோறும் சுமார் ரூ.100 லட்சம் வரை அவ்வாலையின் நிதியிலிருந்து செலவு செய்து வருகிறது.

69--

தமிழ்ப் புத்தாண்டிற்கு வேட்டி சேலை வழங்குதல்

வினா எண் 47231--திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகைகளுக்கு வேட்டி சேலை வழங்கப்படுவது போல் தமிழ்ப் புத்தாண்டிற்கும் வேட்டி சேலை வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:**

இல்லை.

**70--**

**குடியான்குப்பத்தில் சத்துணவுக்கூடம் அமைத்தல்**

வினா எண் 47685--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஜோலார்பேட்டை ஒன்றியம், குடியான்குப்பத்தில் உள்ள ஆரம்ப பள்ளிக்கூடத்தில் சத்துணவுக்கூடம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:**

பிள்ளைகளின் எண்ணிக்கைக்கேற்ப அரசு ஆவன செய்யும்.

**71--**

**அரசு தொட்டில் குழந்தைகள் விவரம்**

வினா எண் 48001--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் எத்தனை குழந்தைகள் அரசு தொட்டில்களில் போடப்பட்டுள்ளன?

**விடை--**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:**

வடாற்காடு மாவட்டத்தில் இதுவரை தொட்டில் குழந்தைகள் ஏதும் பெறப்படவில்லை.

**72--**

**உடல் ஊனமுற்றோர் தொழிற்பயிற்சி தொடங்குதல்**

*வினா எண் 48786--***திருமதி கவிநிலவு தர்மராஜ்** *: மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*கொடுமுடி மற்றும் மொடக்குறிச்சியில் உடல் ஊனமுற்றோர் தொழிற்பயிற்சி பள்ளி தொடங்கும் திட்டம் உள்ளதா ?*

**விடை--**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:**

இல்லை.

**73--**

**காரைமேடு கிராமத்தில் சத்துணவு மையம் அமைத்தல்**

*வினா எண் 61832--***திரு. எம். பூராசாமி** *: மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

*(அ) சீர்காழி ஊராட்சி ஒன்றியம், காரைமேடு ஊராட்சி, காரைமேடு கிராமத்தில் சத்துணவு மையம் ஒன்று அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை--**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ): ஜனத்தொகை 1000-க்கு குறைவாக இருந்தால் சத்துணவுக் கூடம் அமைக்க இயலாது.*

1995 நவம்பர் 3]

74--

## ஆண்டிமடம் தொகுதியில் சத்துணவுக் கூடங்களுக்குக் கட்டிடங்கள் கட்டுதல்

வினா எண் 64137--**திரு. ஆர். தங்கராஜ் :** மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஆண்டிமடம் தொகுதி, ஆலத்தியூர் மற்றும் நந்தியக்குடிக் காட்டில் இருக்கும் சத்துணவுக் கூடங்களுக்குக் கட்டிடங்கள் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை--**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : சத்துணவுக் கூடம் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வந்தால் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டிடம் கட்ட மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுரைகள் வழங்கப்படும்.

75--

## கரூர் வட்டத்தில் சலவைத் தொழிலாளர்களுக்கு இலவச தொழிற்கருவிகள் வழங்குதல்

வினா எண் 34526--**திருமதி கே. மரியம் உல் ஆசியா :** மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கரூர் வட்டம், அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், எருமார்பட்டி கிராமத்தில் புயல் வெள்ளத்தால் தொழிற் கருவிகளை இழந்த 10 சலவைத் தொழிலாளர்களுக்கு இலவச தொழிற்கருவிகள் வழங்குவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா ?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

திருச்சி மாவட்டம், கரூர் வட்டம், எருமார்பட்டி கிராமத்தில் உள்ள குடகனாத்து கரைப் பகுதியில் சலவைத் தொழில் செய்து வந்த

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[1995 நவம்பர் 3

கீழ்க்கண்ட 10 சலவைத் தொழிலாளர்களும், கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு தொழிற்கருவிகளை இழந்துள்ளனர்:--

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி |
|---|---|
| 1. | திரு. மருதன், த/பெ. பெரியன்ன வண்ணான், பெத்தாட்சி நகர். |
| 2. | திரு. தங்கவேல், த/பெ. மருதன் வண்ணான், பெத்தாட்சி நகர். |
| 3. | திரு. அரசன், த/பெ. மருதன் வண்ணான், பெத்தாட்சி நகர். |
| 4. | திரு. காத்தமுத்து, த/பெ. பெரியாண் வண்ணான், பெத்தாட்சி நகர். |
| 5. | திரு. மாரி, த/பெ. மருதன் வண்ணான், பள்ளப்பட்டி. |
| 6. | திரு. மலையாளன், த/பெ. அப்பு வண்ணான், பெத்தாட்சி நகர். |
| 7. | திரு. ராமசாமி, த/பெ. மாரி வண்ணான், பெத்தாட்சி நகர். |
| 8. | திரு. முனியப்பன், த/பெ. மாரி வண்ணான், ஆத்தூர் மஜராஅம்மாபட்டி. |
| 9. | திரு. வீரமலை, த/பெ. கருப்பன், மணமேட்டுப்பட்டி, ஈசநத்தம், மஜரா. |
| 10. | திரு. பச்சையப்பன், த/பெ. பெரியசாமி, கருங்கல்பட்டி, ஈசநத்தம். |

மேற்படி 10 நபர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு தங்களுடைய தொழில் கருவிகளை இழந்துவிட்ட நிலைமையை அரசு உணர்ந்து, இவர்களின் தொழில் பாதிக்காத வண்ணம் உடனடி நிவாரணம் அளிக்கின்ற வகையில் கடந்த 23-1-1995-ஆம் தேதியன்று இலவச சலவைப் பெட்டி இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**76--**

**நரிக்குறவர் குடும்பங்களுக்குக் குடியிருப்பு கட்டுதல்**

வினா எண் 35030--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சென்னை மாநகராட்சி பகுதியில் நேரு விளையாட்டரங்கம் அருகே குடியிருந்த நரிக்குறவர் குடும்பங்களுக்குக் குடியிருப்பு கட்ட அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

*1995 நவம்பர் 3]*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை--**

***மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்:***

*(அ) மற்றும் (ஆ):* சென்னை மாநகராட்சி பகுதியில் நேரு விளையாட்டரங்கம் அருகில் சுமார் 75 நரிக்குறவர் குடும்பங்கள் குடியிருந்தார்கள். மேற்சொன்ன நரிக்குறவர் குடும்பங்கள் விளையாட்டரங்கம் புதுப்பிக்கப்பட்டபோது, மேற்சொன்ன இடத்தை காலி செய்துவிட்டு சென்னையில் வெவ்வேறு பகுதிகளுக்குச் சென்று விட்டதால், அவர்களின் தற்போதைய முகவரியை விசாரணை மூலம் தெரிந்துகொள்ள இயலவில்லை. கோட்டை, தண்டையார்ப்பேட்டை, வட்டாட்சியர் அலுவலகத்தில் நரிக்குறவர்களிடமிருந்து பட்டா கோரி மனுக்கள் எதுவும் பெறப்படவில்லை. எனவே, சென்னை மாநகராட்சி பகுதியில் நேரு விளையாட்டரங்கம் அருகே குடியிருந்த நரிக்குறவர் குடும்பங்களுக்குக் குடியிருப்பு கட்ட அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**77--**

### விளாத்திக்குளம் வட்டத்தில் பிற்பட்ட மாணவ-மாணவியர் விடுதிகள் விவரம்

வினா எண் *37907*--**திருமதி என். கனகவல்லி**: மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* விளாத்திகுளம் வட்டத்தில் உள்ள பிற்பட்ட மாணவர்-மாணவியர் விடுதிகள் எத்தனை?

*(ஆ)* பள்ளியிறுதித் தேர்வில் விடுதி மாணவ-மாணவிகள் பெற்ற சதவீதம் என்ன?

**விடை--**

***மாண்புமிகு கு. லாரன்ஸ், பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்:***

*(அ)* விளாத்திகுளம் வட்டம் விளாத்திகுளத்தில் ஒரு அரசு பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மாணவர் விடுதியும், புதூரில் ஒரு அரசு பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மாணவியர் விடுதியும் இயங்கி வருகின்றன.

(ஆ) *1993-94* ஆம் ஆண்டு பள்ளியிறுதித் தேர்வில் விடுதி மாணவ மாணவியர் பெற்ற சதவீதம் பின்வருமாறு:--

| | தேர்வு சதவீதம் | |
|---|---|---|
| விடுதியின் பெயர் | *10-ம்* வகுப்பு | *12-ம்* வகுப்பு |
| *(1)* | *(2)* | *(3)* |
| அரசு மாணவ விடுதி, விளாத்திகுளம் | *57%* | *34%* |
| அரசு மாணவியர் விடுதி, புதூர், | *77%* | *57%* |

**78--**

**பிற்பட்டோர் நல மாணவர் விடுதிகளுக்கு கட்டிடங்கள் கட்டுதல்**

வினா எண் *40546*--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* திருப்பத்தூர் தொகுதி பிற்பட்டோர் நல மாணவர் விடுதி நிரந்தர கட்டிடங்கள் எத்தனை உள்ளன?

*(ஆ)* மேலும் புதிய கட்டிடங்கள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. லாரன்ஸ், பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதியில் பிற்பட்டோர் நல மாணவர்/மாணவியர் விடுதிகள் ஏதும் இயங்கவில்லை. அந்த தொகுதியில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ/மாணவியருக்கென *3* விடுதிகள் உள்ளன. அவற்றில் ஒரு விடுதி மட்டும் அரசுக்குச் சொந்தமான கட்டிடத்தில் இயங்குகிறது.

*(ஆ)* இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**79--**

**உடையநாடு அரசு உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்குதல்**

வினா எண் *43473*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பட்டுக்கோட்டை மாவட்டம், உடையநாடு அரசு உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

இப்பள்ளியில் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப போதிய ஆசிரியர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காலியாகவுள்ள பணியிடங்கள் ஆசிரியர்கள் தேர்வு செய்யும்போது நிரப்பப்படும்.

**80--**

**பேராவூரணி தொகுதியில் கிளை நூலகங்கள் அமைத்தல்**

வினா எண் *43846*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பேராவூரணி தொகுதி, மாவடுகுறிச்சி மற்றும் பின்னவாசலில் கிளை நூலகங்கள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

ஏதுமில்லை.

**81--**

**அண்ணான்டப்பட்டியில் கிளை நூலகம் அமைத்தல்**

வினா எண் *46793*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

[1995 நவம்பர் 3

(அ) வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி அண்ணான்டப்பட்டி கிராமத்திற்குப் புதியதாக ஒரு கிளை நூல் நிலையம் ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை--

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

**82--**

**முடக்கிக்காட்டில் நூல் நிலையம் அமைத்தல்**

வினா எண் *47141*--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், முடக்கிக்காட்டில் ஒரு நூல் நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

இல்லை.

**83--**

**குத்தாலம் தொகுதியில் நூலகம் அமைத்தல்**

வினா எண் *48688*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகை-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, தரங்கம்பாடி வட்டம், சேத்தூர் கிராமம், எடக்குடி மற்றும் கிளியனூர் ஆகிய இடங்களில் நூலகம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

நூலகம் திறப்பதற்கான விதிகளின்படி போதிய மக்கள் தொகை இல்லாததால் முழுநேர நூலகம் திறக்க இயலாது.

**84--**

**கல்லூரி முறைகேடுகளை கவனிக்க கண்காணிப்புக் குழு அமைத்தல்**

*வினா எண் 61305*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ) தனியார் கல்லூரிகளில் முறைகேடுகள் நடக்காமலிருக்க சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட கண்காணிப்புக்குழு மாநில, மாவட்ட அளவில் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது நியமிக்கப்படும்?*

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மண்டல இணை இயக்குநரகங்கள் தோற்றுவிக்கப்பட்டப் பின்னர் தனியார் கல்லூரிகளிலுள்ள குறைபாடுகள்/நடைமுறைச் சிக்கல்கள் ஆகியவற்றை மண்டல இணை இயக்குநர்கள் மண்டல அளவில் கண்காணித்து வருகிறார்கள். இதற்கென சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்கிய கண்காணிப்புக்குழு அமைப்பது குறித்து தனியார் கல்லூரி (ஒழுங்காற்று) சட்டத்தில் எவ்வித வழி வகையும் இல்லை.

**85--**

**பள்ளத்தூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் தேர்வு மையம் அமைத்தல்**

*வினா எண் 61756*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதி, பள்ளத்தூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் தேர்வு மையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

விடை--

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

இல்லை.

**86--**

**பச்சையப்பன் கல்லூரிக்கு பல்கலைக்கழக அந்தஸ்து வழங்குதல்**

வினா எண் 67686--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா---

பச்யைப்பன் கல்லூரிக்கு பல்கலைக்கழக அந்தஸ்து (Deemed University) வழங்குமாறு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

விடை--

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

இது தொடர்பாக எந்தவிதமான கருத்துக்களும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**87--**

**அதிராம்பட்டிணத்தில் அரசு தொழிற் பயிற்சி நிலையம் அமைத்தல்**

வினா எண் 47194--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம் அதிராம்பட்டிணம் அரசு தொழிற் பயிற்சி நிலையம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :**

தஞ்சாவூர் மாவட்டத்தில் தற்போது தஞ்சாவூரில் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் ஒன்று உள்ளது. அதில் 9 தொழிற் பிரிவுகளில் மொத்தம் 400 இருக்கைகள் உள்ளன. மேலும், இம்மாவட்டத்தில் 21

*1995 நவம்பர் 3]*

*தனியார் பயிற்சி நிலையங்கள் உள்ளன. இவற்றில் 2,372 இருக்கைகள் உள்ளன. மேலும் ஒரு அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தை அதிராம்பட்டிணத்தில் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.*

88--

**சங்ககிரி தொகுதியில் தாட்கோ மூலம் கடனுதவி வழங்குதல்**

*வினா எண் 16896--டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

*(அ) சங்ககிரி தொகுதிக்காக தாட்கோ மூலம் குழுவினரால் ஒப்பளிக்கப்பட்ட தொகை எவ்வளவு?*

*(ஆ) எந்தெந்த ஊர்களில் எந்தெந்த தொழிலுக்குப் பணம் ஒப்பளிக்கப்பட்டு வங்கியில் கொடுக்கப்படாமல் நிலுவையில் உள்ள தொகை எவ்வளவு?*

**விடை--**

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) தாட்கோ திட்டத்தின் மூலம் சுயதொழில் செய்வதற்கும், தனி நபர் தொழில் முனைவோர் திட்டம் மற்றும் துப்புரவுப் பணியாளர் துயர் துடைப்புத் திட்டத்தின் கீழ் 1993-94-ஆம் ஆண்டுக்கு சேலம் மாவட்டம் சங்ககிரி தொகுதியில் தாட்கோ மூலம் குழுவினரால் ஒப்பளிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 6,10,500 (ரூபாய் ஆறு இலட்சத்து பத்தாயிரத்து ஐநூறு மட்டும்) ஆகும்.*

*(ஆ) சங்ககிரி தொகுதியில் பல்வேறு தொழில் செய்வதற்கு ஆதிதிராவிடர் மக்களுக்கு தாட்கோ மூலம் வங்கிகளுக்கு ஒப்பளிக்கப்பட்டு அத்தொகை முறையே தொகுதியில் உள்ள அனைத்து வங்கிகள் மூலம் பயனாளிகளுக்கு அளிக்கப்பட்டுவிட்டன.*

*மேலும், எந்தெந்த தொழிலுக்கு எந்த வங்கியில் யார் யாருக்கு எவ்வளவு தொகை வழங்கப்பட்டது, அதில் இனாம் மற்றும் விளிம்புத் தொகை எவ்வளவு போன்ற விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :--*

**(1) தனி நபர் தொழில் முனைவோர் திட்டம்:**

| வரிசை எண் | பெயரும், விலாசமும் | அலகின் மதிப்பீடு | தொழில் | மான்யம் | விளிம்புத் தொகை ரூ. | வங்கியின் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | எம். பெருமாள், த/பெ. முனியன், நாகிசெட்டிபட்டி, சங்ககிரி தாலுகா. | 44,000 | ஆட்டோ | 15,000 | 8,800 | தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சேலம். |
| 2 | ஆர். ராஜப்பன், த/பெ. ராமன், கொங்கணாபுரம், சங்ககிரி. | 1,80,000 | டிராக்டர் | 15,000 | 36,000 | இந்தியன் வங்கி, சங்ககிரி. |
| 3 | கே. சுப்ரமணி, த/பெ. கந்தசாமி, மாமுண்டி கிராமம், மல்லசமுத்திரம். | 30,000 | கட்பீஸ் | 15,000 | 6,000 | யூனியன் வங்கி ஆப் இந்தியா, மல்ல சமுத்திரம். |
| 4 | ஆர். பெரியசாமி, த/பெ. ராமன், கூத்தகவுண்டம் பாளையம், அவினாசிப்பட்டி, சங்ககிரி தாலுகா. | 5,42,544 | லாரி | 15,000 | 85,000 | இந்தியன்பாங்க், எலச்சிப் பாளையம். |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 5 | எம். பழனிசாமி, த/பெ. மாரியப்பன், 23, டி.பி.தெரு, சங்ககிரி தாலுகா. | 2,21,200 | வேன் | 15,000 | 44,200 | இந்தியன் வங்கி, சங்ககிரி. |
| 6 | ஆர். கந்தசாமி, த/பெ. ராமசாமி, பெரன்காடு, மாரப்பான்பாளையம், இலுப்புளி, எலச்சிப்பாளையம். | 5,11,000 | லாரி | 15,000 | 85,000 | பெடரல் வங்கி, இலுப்புளி. |
| 7 | கே. பெருமாள், த/பெ. கந்தசாமி, பள்ளர் தெரு, செண்பகமாதேவி, சங்ககிரி தாலுகா. | 5,19,000 | லாரி | 15,000 | 85,000 | தமிழ்நாடு சிறு தொழில் முதலீட்டுக் கழகம் சேலம். |
| | | | மொத்தம் .. | 1,05,000 | 3,50,000 | |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

**(2) சுயதொழில் திட்டம்:**

| | | (ரூபாய்) |
|---|---|---|
| (1) இந்தியன் வங்கி, சங்ககிரி தாலுகா .. | 2 | 5,500 |
| (2) இந்தியன் வங்கி, எலச்சிப்பாளையம் .. | 2 | 6,250 |
| (3) கிராம வேளாண்மைக் கூட்டுறவு வங்கி (பிரைமரி அக்கிரிகல்சுரல் கோ-ஆப்பரேடிவ் பேங்க், மல்லசமுத்திரம்) .. | 3 | 14,000 |
| (4) இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பெரியமணலி .. | 4 | 17,500 |
| (5) இந்தியன் வங்கி, எலச்சிப்பாளையம் .. | 3 | 6,750 |
| மொத்தம் .. | | **50,000** |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

**(3) விவசாய மற்றும் அதைச்சார்ந்த தொழிலுக்கு டயர் வண்டி:-**

| | | | (ரூபாய்) |
|---|---|---|---|
| (1) | கிராம வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, செண்பகமாதேவி.. .. | 3 | 23,250 |
| (2) | இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பெரிய மணலி .. | 2 | 15,500 |
| (3) | இந்தியன் வங்கி, எலச்சிப்பாளையம் .. | 1 | 7,750 |
| (4) | பேங்க் ஆப் இந்தியா, மரப்பாறை .. | 1 | 7,750 |
| | மொத்தம் .. | | **54,250** |

**(4) மின்சார மோட்டார் 7.5 ஹார்ஸ்பவர் பொருத்துவதற்கு:--**

| | | | |
|---|---|---|---|
| (1) | யூனியன் வங்கி ஆப் இந்தியா, மல்லசமுத்திரம் .. | 1 | 5,000 |
| (2) | யூனியன் வங்கி ஆப் இந்தியா, மல்லசமுத்திரம் .. | 1 | 5,000 |
| | மொத்தம் .. | | **10,000** |

**துப்புரவுத் தொழில் செய்பவர்களுக்கு:--**

| | விளிம்புத் தொகை (ரூபாய்) | மான்யம். (ரூபாய்) |
|---|---|---|
| பேங்க் ஆப் இந்தியா, மரப்பாறை .. | 11,250 | 30,000 |
| மொத்தம் .. | **41,250** | |

**89--**

## வேளாண்மைத் துறையின் திட்டம்

*வினா எண் 33058*--**டாக்டர் வெ. சரோஜா:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தாட்கோ மூலம் வேளாண் கருவிகள் ஆதிதிராவிட மக்களுக்கு வழங்குவதை வேளாண்மைத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் :**

தாட்கோ மூலம் வேளாண் கருவிகள் ஆதிதிராவிட மக்களுக்கு வேளாண்மைத் துறையின் மூலம் 50 சதவீதம் மானிய உதவியுடன் நடைமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**90--**

## அவிநாசித் தொகுதியில் வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

*வினா எண் 35621*--**டாக்டர் மு. சீனியம்மாள்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அவிநாசித் தொகுதி, அன்னூர் ஒன்றியம், கருங்கல் காட்டுப் புதூரில் வசிக்கும் ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், அவிநாசி வட்டம், கருங்கல் காட்டுப்புதூரில் வசிக்கும் 20 ஆதி திராவிடர்கள் தலா 840 சதுர அடி வீதம் செட்டில்மெண்டு என்ற பெயரில் தனியாரிடம் கிரையம் பெற்று பட்டாவும் தாக்கல் ஆகியுள்ளது. எனவே இவ்விடத்திற்கு ஆதி திராவிட நலத்துறையினரால் வீட்டு மனைப்பட்டா வழங்க இயலாது. இதைத் தவிர இக்குக்கிராமத்தைச் சார்ந்த விண்ணப்பங்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

*1995 நவம்பர் 3]*

**91--**

**கலவரங்களினால் பாதிக்கப்பட்டோர் விவரம்**

வினா எண் *37849*--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

இராமநாதபுரம் மாவட்டத்தில் *1991-92, 1992-93, 1993-94* ஆகிய வருடங்களில் ஏற்பட்ட இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

**விடை--**

***மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:***

இராமநாதபுரம் மாவட்டத்தில் *1991-92, 1992-93, 1993-94* ஆகிய வருடங்களில் ஏற்பட்ட இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்கள் விவரங்கள் பின்வருமாறு:--

| *1991-92* | *1992-93* | *1993-94* |
|---|---|---|
| *20* | *21* | *23* |

**92--**

**ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சாலை அமைத்தல்**

வினா எண் *44528*--**திரு. கே. கந்தசாமி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம், கெங்கவல்லி ஒன்றியம், வலசக்கல்பட்டியிலிருந்து நடுர் வழியாக மால்பள்ளி வரை சாலை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை--**

***மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், கெங்கவல்லி ஒன்றியம், வலசக்கல்பட்டியிலிருந்து நடூர் வழியாக மால்பள்ளி வரை அமைக்கப்பட வேண்டிய சாலையின் மொத்த நீளம் 4 கி.மீ ஆகும். இந்தச் சாலை அமைக்க சுமாராக ரூ. 50 இலட்சம் தேவைப்படும். இச்சாலை அமைக்கப்பட்டால் 510 ஜனத்தொகையுடைய 4 குக்கிராமங்களே பலனடையும். இந்தச் சாலைக்குச் செலவிடப்படும் தொகையைப் பார்க்கும்போது இதனால் பலனடையும் மக்கட்தொகை குறைவாக உள்ளது. எனவே, மலைவாழ் மக்கள் திட்டத்தில் மேற்குறிப்பிட்ட சாலையை அமைக்க, ஏற்கனவே எடுத்துக்கொள்ளப்பட்ட சாலைகள் நிதிநிலை காரணமாக முடிக்கப்பெறாத நிலையில் அரசிடம் செயற்குறிப்பு எதுவுமில்லை.

**93--**

### திருச்செந்தூரில் கடல் அரிப்பை தடுத்தல்

வினா எண் 1323--திரு. ஆ. செல்லதுரை: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி ஆலயத்தில் வள்ளிக்குகை ஓரம் கடல் அரிப்பு ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.**

(அ) மற்றும் (ஆ): திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் வளாகம் வள்ளிகுகை கோயில் அமைந்துள்ள கிழக்கு கிரிப்பிரகாரத்தை ஒட்டிய கடற்கரைப் பகுதியை கடல் அரிப்பிலிருந்து தடுத்து பலப்படுத்துவதற்காக தடுப்புச் சுவர் கட்டு முடிக்கப்பட்டுள்ளது.

**94--**

### திருக்கோயில் பணியாளர்களை பதவி உயர்வு செய்தல்

வினா எண் 26504--திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

*(அ)* திருக்கோயில்களில் பல ஆண்டுகளாகப் பணிபுரியும் பணியாளர்களை நான்காம் நிலை செயல் அலுவலர்களாக பதவி உயர்வு செய்யும் திட்டம் பரிசீலிக்கப்படுகிறதா?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.**

*(அ)* மற்றும் *(ஆ)*: தமிழகத் திருக்கோயில்களில் நான்காம் நிலை செயல் அலுவலர்களின் பதவிகளில் காலி (Vacancy) ஏற்படும்போது *40* சதவீத காலியிடங்களில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவின் மூலம் உரிய தேர்வுகள் வைத்து தேர்ந்து எடுக்கப்படும் நபர்கள் நேரடியாக நியமனம் செய்யப்படுகிறார்கள். *40* சதவீத நேரடி நியமனத்தில் ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை முதுநிலைத் திருக்கோயில் பணியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்து அவர்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் நான்காம் நிலை செயல் அலுவலர்களுக்கான நியமனத் தேர்வில் கலந்துகொள்ள வாய்ப்பளிப்பது குறித்து செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

**95--**

**திருக்கோயில்களில் ஓதுவார்கள் நியமனம்**

வினா எண் *26533*--**திரு. வெ. பழனிசாமி:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* தமிழ்நாட்டிலுள்ள சிவாலயங்களில் தேவாரம் திருவாசகம் ஓதுகின்ற ஓதுவார்கள் இல்லையென்பதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், அத்தகைய ஓதுவார்கள் இல்லாத கோயில்களில் ஓதுவார்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.**

(அ) மற்றும் (ஆ): பாடல் பெற்ற ஸ்தலங்கள் மற்றும் நிதிவசதி மிகுந்த திருக்கோயில்களில் தேவாரம், திருவாசகம் ஓதுகின்ற ஓதுவார்கள் உள்ளனர். நிதி பற்றாக்குறை காரணமாக மற்ற திருக்கோயில்களில் ஓதுவார்கள் நியமிக்கப்படவில்லை.

96--

**கொடுமுடியில் திருமண மண்டபத்திற்கு தளம் அமைத்தல்**

வினா எண் *37355*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கொடுமுடி வெங்கம்பூர் வரதராஜபெருமாள் திருக்கோயில் திருமண மண்டபத்திற்கு தளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

***மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:***

பெரியார் மாவட்டம், ஈரோடு வட்டம், கொடுமுடி வெங்கம்பூர் அருள்மிகு வரதராஜபெருமாள் திருக்கோயிலுக்குச் சொந்தமான திருமண மண்டபத்தில் மொசைக் தளம் நல்ல முறையில் உள்ளது. எனவே இத்திருமண மண்டபத்தில் புதிதாக தளம் அமைக்க வேண்டிய அவசியம் ஏதும் தற்போது இல்லை.

97--

**சங்கமேஸ்வரர் கோவிலில் குடிநீர் வசதி செய்தல்**

வினா எண் *43957*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரியார் மாவட்டம், பவானி பகுதியிலுள்ள சங்கமேஸ்வரர் கோவிலில் குடிநீர் பிரச்சினையை தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

***மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:***

1995 நவம்பர் 3]

பெரியார் மாவட்டம், பவானி வட்டம் மற்றும் நகரில் உள்ள சங்கமேஸ்வரர் கோவிலில் இருந்துவந்த குடிநீர் பிரச்சினை தற்போது தீர்க்கப்பட்டுவிட்டது.

98--

**இளம்பிள்ளை அம்மன் திருக்கோவிலில் நந்தவனம் அமைத்தல்**

வினா எண் 44729--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

கரூர் வட்டம், ஈசநத்தம் கிராமம், இளம்பிள்ளை அம்மன் திருக்கோவிலில் நந்தவனம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை**--

**மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.**

இல்லை.

99--

**மீன்பிடிப்பதற்கு உரிமம் வழங்குதல்**

வினா எண் 80199--**திரு. என். ஆர். ராஜேந்திரன்:** மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வீராணம் ஏரி மற்றும் தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், சிதம்பரம் காட்டுமன்னார்கோயில் கரையோரம் கொள்ளிடம் ஆற்றில் மீன்பிடிப்பதற்கு உள்நாட்டு மீனவர்களுக்கு எவ்வகையில் உரிமம் வழங்கப்படுகிறது?

(ஆ) தற்போது எத்தனை பேருக்கு உரிமம் அளிக்கப்பட்டுள்ளது?

**விடை**--

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத் துறை அமைச்சர்:**

(அ) வீராணம் ஏரியில் மட்டும் மீன்பிடிப்பதற்கு உரிமங்கள் வழங்கப்படுகின்றன. கொள்ளிடம் ஆற்றில் மீன்பாசி குத்தகை கீழ்க்கண்டவாறு வரைமுறைப்படுத்தப்பட்டுள்ளது:--

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(1) கொள்ளிடம் வடக்கு ராஜன் வாய்க்கால் தலைப்பகுதியிலிருந்து எய்யலூர் முதல் மைல்கல்லிலிருந்து 5வது மைல்கல்வரையிலும் மற்றும் 6வது மைல்கல்லிலிருந்து 12-வது மைல்கல் வரை ஒவ்வொரு ஆண்டும் ஓமாம்புலியூர் மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்படுகிறது.

(2) கொமராட்சி கோப்படி கட்டையிலிருந்து ரெட்டாறு பிரிவு, வரையிலும் கொள்ளிடம் வடக்கு ராஜன் வாய்க்கால் சிதம்பர இளநிர்கூடர் ரோடிலிருந்து சிதம்பரம் கடவாச்சேரி மற்றும் இனம் புதிய கொள்ளிடம் எய்யனூர் முதல் இரட்டாறு பிரிவு வரையிலும் வல்லம் படுகையிலுள்ள புதிய கொள்ளிடம் மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்படுகிறது.

(3) கொள்ளிடம் ஆற்றின் கடைசி பகுதியில் மீன்பாசி குத்தகையை தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டத்திலுள்ள கொள்ளிடம் மீனவர் கூட்டுறவுச் சங்கம் ஒரு ஆண்டும் நாகை-காயிதே மில்லத் மாவட்டத்திலுள்ள கொள்ளிடம் மீனவர் கூட்டுறவுச் சங்கம் ஒரு ஆண்டும் மாறி மாறி அனுபவித்து வருகிறது. சிதம்பரம் வழியாகப் பாயும் வாய்க்கால்கள் மற்றும் பாசன ஓடைகளின் மீன்பாசி குத்தகை சிதம்பரம் மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்படுகிறது.

(ஆ) தற்போது 1994-95-ல் 972 உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் ரூ.41,420 வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**100--**

## ஜவ்வாது சந்தன சோப் தயாரிக்கும் திட்டம்

வினா எண் 40022--திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், வாணியம்பாடி தாலுக்கா தெக்குப்பட்டு சந்தன எண்ணெய் ஆலையை கதர்த் துறை மூலம் திறந்து ஜவ்வாது சந்தன சோப் தயாரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்:**

இல்லை.

1995 நவம்பர் 3]

# நான்காம் பட்டியல்

1--

## சட்ட நடவடிக்கை தொடர்வு இயக்குநர் அலுவலகம் அமைத்தல்

வினா எண் 40561--திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழக்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

தமிழகத்தில் சட்ட நடவடிக்கை தொடர்பு இயக்குநர் அலுவலகம் (Directorate of Prosecution) சென்னையிலும் மற்ற 8 இடங்களில் சட்ட நடவடிக்கை தொடர்வு துணை இயக்குநர் அலுவலகம் எப்போது துவங்கப்படும்?

விடை--

**மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்:**

காவல்துறை தலைவர் அந்தஸ்த்தில் உள்ள திரு. வி.சி. பெருமாள், இ.கா.ப., அவர்களை குற்றவியல் வழக்கு தொடர்வு இயக்குநராக அரசு தற்போது நியமித்துள்ளது. அவர் மேற்படி இயக்குநர் பதவியினை 20-4-1995 முதல் பொறுப்பேற்று பணியாற்றி வருகிறார். மேற்படி இயக்ககம் சென்னையிலுள்ள முன்னாள் படைவீரர்கள் நல வாரிய கட்டிடத்தில் 3-5-1995 முதல் இயங்கி வருகிறது.

மேலும் கீழ்க்கண்ட 8 இடங்களில் குற்றவியல் வழக்கு தொடர்பு உதவி இயக்குநர் பதவிகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

1. காஞ்சிபுரம்
2. கடலூர்
3. திருச்சிராப்பள்ளி
4. மதுரை
5. திருநெல்வேலி
6. சேலம்
7. கோயம்புத்தூர்
8. சிவகெங்கை

மேற்படி உதவி இயக்குநர்கள் 1994 ஜூன் திங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர். இக்குற்றவியல் வழக்கு உதவி இயக்குநர் அலுவலகங்கள் ஜூன் திங்கள் முதல் செயல்பட்டு வருகின்றன.

**2--**

**வடஆற்காடு அம்பேத்கார் மாவட்ட குடும்ப நீதிமன்றங்கள்**

வினா எண் 61405---**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழக்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் எங்கெங்கு குடும்ப நீதிமன்றங்கள் உள்ளன?

**விடை---**

**மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்:**

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் குடும்ப நீதிமன்றங்கள் ஏதும் தற்போது இல்லை.

**3--**

**முத்திரைத்தாள் கட்டணத்தை வசூலிக்கக் கூடுதல் பதிவுத்துறை தலைவர் நியமித்தல்**

வினா எண் 24462--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழக்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

முத்திரைத்தாள் கட்டணத்தை வசூலிக்க தனியாக கூடுதல் பதிவுத்துறை தலைவர் ஒருவரை பதிவு அலுவலர்களுக்கு உதவியாக நியமிக்க 1994-95ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை---**

**மாண்புமிகு திரு. எஸ்.டி.சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

முத்திரைத்தாள்கள், சார்பதிவாளர் மூலமாகவும் முத்திரைத்தாள் விற்பதற்கென்று உரிமம் பெற்றவர்கள் மூலமாகவும் விற்பனை செய்யப்படுகிறது. போதுமான முத்திரைத்தாள்கள் கிடைக்காத நிலையில் அந்தந்த சார்பதிவாளரே முத்திரைத் தீர்வைக்கான தொகையை

*1995 நவம்பர் 3]*

நேரடியாகப் பெற்றுக்கொண்டு ஆவணங்களைப் பதிவு செய்து கொடுக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் தனியாக ஒரு கூடுதல் பதிவுத்துறைத் தலைவரை நியமிக்கும் தேவை எழவில்லை.

4--

**மருத்துவ உதவியாளர் நிரந்தரமாகத் தங்கி சிகிச்சை அளித்தல்**

வினா எண் *38820*--**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழக்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், சோலூர்-கிராமம், கிளென் மார்கன் பகுதியில் உள்ள அரசு சுகாதார நிலையத்தில் மருத்துவ உதவியாளர் நிரந்தரமாகத் தங்கி மக்களுக்கு முறையான சிகிச்சை அளிக்கச் செய்ய அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

சோலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்கள் தங்குவதற்கு ஏற்ற குடியிருப்புகள் இல்லை. எனினும், இங்கு பணிபுரியும் இரு மருத்துவ அலுவலர்களும் தினந்தோறும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்று முறையாக பணிபுரிகின்றார்கள். புகார் ஏதும் இல்லை.

5--

**திருப்பத்தூர் பொது மருத்துவமனையில் ஆம்புலென்ஸ் ஊர்தி**

வினா எண் *48000*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழக்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருப்பத்தூர் பொது மருத்துவமனையில் 24 மணிநேரமும் மகப்பேறுக்காக மகளிரை அழைத்துவர மருந்துகளுடன் தனி ஆம்புலென்ஸ் ஊர்திகளை அனுப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருப்பத்தூர் மருத்துவமனை 176 படுக்கைகள் கொண்டது. பகுதி-2 1991-92 திட்டத்தின்படி திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு ஒரு ஆம்புலென்ஸ் வழங்கப்பட்டு தற்சமயம் நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே திருப்பத்தூர் பொது மருத்துவமனைக்கு 24 மணிநேரமும் மகப்பேறுக்காக மகளிரை அழைத்துவர மருந்துகளுடன் தனி ஆம்புலென்ஸ் ஊர்திகளை அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை.

**6--**

**தாராபுரம் அரசு மருத்துவமனையில் ரேடியாலஜி பிரிவு துவங்குதல்**

வினா எண் 52115--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழக்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரியார் மாவட்டம், தாராபுரத்திலுள்ள அரசினர் மருத்துவமனையில் ரேடியாலஜி பிரிவு துவக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

தாராபுரம் அரசு மருத்துவமனையில் ரேடியாலஜி பிரிவு தொடங்க தற்போது அவசியமேதுமில்லை.

**7--**

**மொடக்குறிச்சி தொகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

வினா எண் 54318--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழக்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

1995 நவம்பர் 3]

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், விளக்கேத்தி ஊராட்சி அத்தப்பம்பாளையம், ஓலப்பாளையம், பச்சாகவுண்டன் வலசு, விளக்கேத்தி கஸ்பா, செம்மாண்டபுரம், வெடிக்காரன்பாளையம், அம்மாண்டிபாளையம், விளக்கேத்தி, புதூர், கொக்கிரி, காட்டுப்புதூர் ஆகிய கிராமங்களில் மகப்பேறு வசதி மற்றும் இரத்த வங்கியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மொடக்குறிச்சி ஒன்றியம், விளக்கேத்தி ஊராட்சியைச் சார்ந்த கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

**8--**

**மொடக்குறிச்சி தொகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

வினா எண் 54328--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம் முகாசி அனுமன்பள்ளி ஊராட்சி, நஞ்சப்பம்பாளையம், கொளத்தூர், கள்ளக்கவுண்டன்பாளையம், கோப்பன்காட்டு, ஆதிதிராவிடர் தெரு, கள்ளக்கவுண்டர்பாளையம், ரொட்டிபாளையம், அஞ்சுராம்பாளையம், பவலத்தான்கவுண்டன் வலசு, சொத்து முட்டிபாளையம், கோவில்பாளையம், ராயபாளையம், அனுமன்பள்ளி, வில்வகாட்டுபுதூர் ஆகிய கிராமங்களில் மகப்பேறு வசதி மற்றும் இரத்த வங்கியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மொடக்குறிச்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மேற்படி கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

9--

**கொந்தளம் ஊராட்சிப் பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

வினா எண் *54352*--திருமதி **கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழக்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், கொந்தளம் ஊராட்சி, வீரசங்கிலி, ஆண்டிக்காட்டுப்பாளையம் கோட்டை, காட்டுவலசு, புதூர், பொன்னாங்கட்டூர், குள்ளகவுண்டனூர், பெரும்பருப்பு, முத்தையன் வலசு, காரக்காட்டுவலசு, திட்டான்பாளையம், வேளாண் காட்டுப்பாளையம், மாரியம்மன் கோவில் புதூர், கொந்தளம், கொந்தளம் ஆதிதிராவிடர் காலனி, பூசாரிபாளையம், மண்திட்டு, கள்ளாபுரம் கோட்டை ஆகிய கிராமங்களில் மகப்பேறு வசதி மற்றும் இரத்த வங்கியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், கொந்தளம் ஊராட்சியைச் சேர்ந்த கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

LEGISLATIVE ... TRUTH ALONE TRIUMPHS

10--

**கொங்குடையாம்பாளையம் ஊராட்சிப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

வினா எண் *54388*--திருமதி **கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழக்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், கொங்குடையாம்பாளையம் ஊராட்சி, கொல்லன்வலசு, ஆதிதிராவிடர் தெரு, காசிபாளையம், கொல்லன்வலசு, சேனாதிபதிபுரம், கொமாரபாளையம், மணமேட்டுவலசு, வாழைத் தோட்ட வலசு, மொசுவலான், காட்டுவலசு, தம்பிரான் வலசு, செங்காளி காட்டுபுதூர் ஆகிய கிராமங்களில் மகப்பேறு வசதி மற்றும் இரத்த வங்கியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம் கொங்குடையாம்பாளையம் ஊராட்சியில் அமைந்த கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

**11--**

**கொடுமுடி ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

வினா எண் *54398*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், முருங்கியாம்பாளையம் ஊராட்சி, சொரியம்பாளையம், முருங்கியாம்பாளையம் ஆகிய கிராமங்களில் மகப்பேறு வசதி மற்றும் இரத்த வங்கியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், முருங்கியாம்பாளையம் ஊராட்சியைச் சேர்ந்த கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

**12--**

**தமிழ்நாட்டில் நடமாடும் மருத்துவமனை அமைத்தல்**

வினா எண் 61383--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழக்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் எல்லா கிராமங்களுக்கும் நடமாடும் மருத்துவமனை அமைத்து செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆமெனில், எப்பொழுது?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாட்டில் எல்லா கிராமங்களுக்கும் நடமாடும் மருத்துவமனை அமைத்து செயல்படுத்தும் திட்டம் ஏதும் இல்லை.

**13--**

**தோகமலை ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்துதல்**

வினா எண் 67779--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழக்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம், தோகமலை அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், தோகமலை அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

*1995 நவம்பர் 3]*

**14--**

**கரூரிலிருந்து பேருந்துகள் இயக்குதல்**

வினா எண் *33459*--**திரு. வி. ரவிச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழக்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கரூரிலிருந்து சித்தம்பட்டிக்கும், கத்தாலப்பட்டிக்கும் தனித்தனியே பேருந்து இயக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**விடை**--

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கோரிக்கையில் உள்ள கரூர்-சித்தம்பட்டி வழித்தடத்தின் சாலை பழுது பராமரிப்பு பணிகள் முடிந்து விட்டதால், இவ்வழித் தடத்தில் பலநோக்கு திட்டத்தில் இரண்டு நகரப் பேருந்துகள் மூலம் தினசரி 4 நடைகள் கடந்த 31-3-1995 முதல் இயக்கப்படுகிறது. மேலும் கரூர்-கத்தாலப்பட்டி வழித்தடத்தில் இரயில்வே பாலத்தின் அருகிலும், இரயில்வே லைனுக்கு அருகிலும் சாலை செப்பனிடும் பணி முடிவுறாததால் இவ்வழித்தடம் தற்போது பேருந்து இயக்க இயலாத் நிலையில் உள்ளது.

**15--**

**ஒரத்தநாடு-முத்துப்பேட்டை பேருந்தை மீண்டும் இயக்குதல்**

வினா எண் *33759*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழக்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டிலிருந்து ஆம்லாபட்டு, திட்டக்குடி, ஆத்திக்கோட்டை, வெண்டாக்கோட்டை, துவரங்குறிச்சி வழியாக முத்துப்பேட்டை வரை இயக்கப்பட்ட சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளதால் அதனை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

கோரிக்கை தடத்தில் ஒரத்தநாடு-பாப்பநாடு, ஆம்லாபட்டு-திட்ட[illegible], துவரங்குறிச்சி-முத்துப்பேட்டை வரை பகுதி பகுதியாக, போதிய பேருந்துகள் இயக்கப்படுவதாலும் கழகப் பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் மூலம் இப்பகுதிகளுக்கு போதிய நடைகள் இயக்கப்படுவதாலும் மேற்குறிப்பிட்ட தடத்தில் புறநகரப் பேருந்து இயக்கினால் போதிய அளவு மக்கள் பயன்பாடு இருக்காது.

16--

## கரூர்-ஆத்துமேடு பேருந்தை நீட்டித்து இயக்குதல்

வினா எண் 34304--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

கரூரிலிருந்து ஆத்துமேடு செல்லும் தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்தை புங்கம்பாடி கிராமம் கொளிஞ்சிவாடி வரை இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

கோரிக்கையின் தடமாகிய கரூர் ஆத்துமேடு (வழி) புங்கம்பாடி, கொளிஞ்சிவாடி வரையுள்ள சாலையின் தூரம் 32.0 கி.மீ. இச்சாலையில் நல்லாம்பட்டி என்ற இடத்திலிருந்து கொளிஞ்சிவாடி, புங்கம்பாடி பிரிவு வரையிலான 4.0 கி.மீ. தூரத்தில் 3.4 கி.மீ. தூரம் மண் சாலையாகவும் மேடுபள்ளங்கள் நிறைந்தும், எஞ்சிய 0.6 கி.மீ. தூரம் கப்பி பெயர்ந்த நிலையில் மேடுபள்ளங்களாகவும் உள்ளதால் இப்பகுதியில் தற்பொழுது பேருந்து இயக்க இயலாது.

*1995 நவம்பர் 3]*

**17--**

## சத்திரம்-ஈசநத்தத்திற்கு பேருந்து இயக்குதல்

வினா எண் *34310*--திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழக்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

சத்திரத்திலிருந்து ஈசநத்தத்திற்கு தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழக நகரம் பேருந்தை துலுக்கம்பாறை, செந்தாம்பட்டி, மேற்கு காட்டூர் ஆலமரத்துப்பட்டி, கருங்கல்பட்டி, குள்ளமாபட்டி, நல்ல நாய்க்கன்பட்டி, நடுவூர் வழியாக காலை நேரத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

கோரிக்கையின் வழித்தடம் சத்திரம்-ஈசநத்தம் வரையிலான தூரம் *12.0* கி.மீ. இச்சாலையில் சத்திரம்-ஈசநத்தம் (வழி) துலக்கம்பாறை பிரிவு, துலக்கம்பாறை, செந்தாம்பட்டி செந்தாம்பட்டி பிரிவு, மேற்கு காட்டூர் ஆலமரத்துப்பட்டி வரையிலான *8* கி.மீ. சாலை கப்பி சாலையாகவும்,, கற்கள் பெயர்ந்து மேடுபள்ளங்களாகவும் குறுகலாகவும் பேருந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது.

**18--**

## கரூர்-சி. கூடலூருக்கு பேருந்து இயக்குதல்

வினா எண் *34320*--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் கரூர்-சி. கூடலூர் வரை நகரப் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித் தடத்தின் தூரம் 39.0 கி.மீ. இவ்வழித் தடம் முழுவதும் பேருந்து வசதி பெற்ற பகுதியாகும். அரசு உத்தரவுபடி பேருந்து வசதி பெற்ற பகுதிகளில் 30.0 கி.மீ.-க்கு மேல் நகரப் பேருந்து இயக்கிட இயலாது.

**19--**

**பச்சமலை டாப்செங்காட்டுப்பட்டி-செம்புளிச்சாம்பட்டிக்கு பேருந்து இயக்குதல்**

வினா எண் 36162--**திரு. வி. ரவிச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) உப்பிலியபுரம் தொகுதி பச்சமலை டாப்செங்காட்டு பட்டியிலிருந்து செம்புளிச்சாம்பட்டிக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் இயக்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): உப்பிலியபுரம் தொகுதி பச்சைமலை டாப்செங்காட்டுப்பட்டியிலிருந்து செம்புளிச்சாம்பட்டி சாலையின் தூரம் 30.0 கி.மீ. இச்சாலையில் இராமநாதபுரம் என்ற இடத்தில் இருந்து சின்ன இலுப்பூர் பிரிவு வரையிலான 11.0 கி.மீ. தூரத்தில் 10 கி.மீ. தூரம் சாலை பாரமரிப்புப் பணிகளும், எஞ்சிய 1.0 கி.மீ. தூரத்தில் இரண்டு பாலங்கள் கட்டுமானப் பணிகள் நடைபெற்றுவருவதால் தற்பொழுது பேருந்து இயக்க இயலாது.

**20--**

**பள்ளப்பட்டி-ஏர்வாடிக்கு பேருந்து இயக்குதல்**

வினா எண் 38323--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவ்ரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

*கரூர் வட்டம், பள்ளப்பட்டி-ஏர்வாடி வழித்தடத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:***

பள்ளப்பட்டியிலிருந்து ஏர்வாடிக்கு உள்ள தூரம் 245 கி.மீ. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் 250 கி.மீ. தூரத்துக்கு மேல் உள்ள வழித்தடங்களில் பேருந்துகளை இயக்குவதற்கு அரசினால் நிறுவப்பட்டதாகும். எனவே மேற்படி வழித்தடத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் பேருந்துகளை இயக்குவது சாத்தியமில்லை.

**21--**

**செல்லியம்பாளையம் வரை பேருந்து இயக்குதல்**

*வினா எண் 39617--திரு* **கே. கந்தசாமி:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

*(அ) அண்ணா போக்குவரத்துக் கழக ஆத்தூர் நகரப் பேருந்து தட எண் 18-ஐ திட்டச்சேரியிலிருந்து செல்லியம்பாளையம் வரை 2 கி.மீ. தூரம் நீட்டித்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?*

**விடை--**

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) : தடம் எண் 18 பேருந்து ஆத்தூர்-உடுப்பியம் வீரகனூர் என இயக்கப்பட்டு வருகிறது. ஆனால், தடம் எண் 27 பேருந்து ஆத்தூர்-திட்டச்சேரி என இயக்கப்பட்டு வருகிறது. இத்தடத்தை ஆய்வு செய்ததில், திட்டச்சேரிக்கருகில், செல்லியம்பாளையம் என்ற அங்கீகரிக்கப்பட்ட கிராமம் இல்லை. ஆனால் திட்டச்சேரியிலிருந்து சுமார் 1.9 கி.மீ. தொலைவில், செம்பியம்மன்கோயில் ஒன்று உள்ளது. கோரிக்கையில், தட நீட்டிப்புக்கேட்ட திட்டச்சேரி-செம்பியம்மன் கோயில் பாளையம் பகுதி அகலம் குறைவாகவும் மண் தடமாகவும்

உள்ளது. மேலும் இத் தடத்தில் திட்டச்சேரியிலிருந்து 0.3 கி.மீ. தொலைவில் கிணறு ஒன்றும், ஓடை இரண்டும் குறுக்கிடுகின்றன. இத்தடத்தில் சிறுவாகனம்கூட செல்ல இயலாது. மேற்படி கிராமத்தில் ஜனத்தொகை மிகக் குறைவாக உள்ளதாலும், சாலை, பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதாக இல்லாததாலும், மேற்படி பேருந்தை தற்போது நீட்டித்து இயக்க இயலாத சூழ்நிலை உள்ளது.

**22--**

**கரூர்-சின்னமநாயக்கன்பட்டி பேருந்தை நீட்டித்து இயக்குதல்**

வினா எண் 40064--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கரூர்-(வழி) சின்னமநாயக்கன்பட்டி செல்லும் நகரப் பேருந்தை சின்னமநாயக்கன்பட்டியிலிருந்து நத்தமேடு, கந்தசாரப்பட்டி, விஜயபுரம் வழியாக-கே.பிச்சம்பட்டி, எ. வெள்ளகவுண்டம்பட்டி, அண்ணா மாவட்டம், சி.சி.சி. குவாரி சைட் வரை இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

கோரிக்கையில் உள்ள கரூர்-சி.சி.சி. குவாரிசைட் (வழி) சின்னம்மநாயக்கன்பட்டி, நத்தமேடு, கந்தசாரப்பட்டி வழித்தடத்தின் மொத்த நீளம 31.5 கி.மீ. இவ்வழித்தடத்தில் உள்ள நத்தமேடு-கந்தசாராப்பட்டி ஆகிய இரண்டு ஊர்களுக்கும் இடையே சுமார் 1.0 கி.மீ. தூரம் மணல்வாரி (மண்சாலை) உள்ளது. கோரிக்கையின் வழித்தடம் நகரப்பேருந்து இயக்க அதிகபட்ச தூரமான 30.0 கி.மீட்டருக்கு அதிகமாக உள்ளதாலும் இவ்வழித்தடம் முழுவதும் ஏற்கனவே பேருந்து வசதி பெற்றிருப்பதாலும், கரூர் சின்னப்பநாயக்கன்பட்டி இயங்கும் நகரப்பேருந்தினை நத்தமேடு, கந்தசாராப்பட்டி, விஜயபுரம், கே. பிச்சம்பட்டி, எ. வெள்ளக்கவுண்டம்பட்டி, அண்ணா மாவட்டம் சி.சி.சி. குவாரிசைட் வரை நீட்டித்து இயக்க இயலாது.

1995 நவம்பர் 3]

23--

### வாசுகுமரன்பட்டியிலிருந்து பேருந்து இயக்குதல்

வினா எண் 42116--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தாந்தோன்றி ஊராட்சி ஒன்றியம், கே. பிச்சம்பட்டி கிராமம் வாசுகுமரன்பட்டியிலிருந்து அரசினர் மேல்நிலைப் பள்ளி 13 கி.மீ. தொலைவில் இருப்பதால் பள்ளி மாணவர்களுக்கான நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

கோரிக்கையின் வழித்தடத்தின், கே. பிச்சம்பட்டி-வாசுகுமரன்பட்டி வரை உள்ள 3.0 கி.மீ. பேருந்து வசதி பெறாத பகுதியில் 0.5 கி.மீ. மெட்டல் சாலையாகவும், 2.5 கி.மீ. மண் சாலையாகவும், இருபுறமும் முட்கள் அடர்ந்து வளர்ந்து, சாலையின் அகலம் 6 அடி மட்டும் கொண்டுள்ளதாகவும் பராமரிப்புப் பணிகள் எதுவும் செய்யப்படாமலும் உள்ளது. எனவே, வாசுகுமரன்பட்டி கிராமத்திற்கு தற்சமயம் பேருந்து வசதி செய்ய இயலாது.

24--

### கரூர் வட்டத்தில் பேருந்து இயக்குதல்

வினா எண் 44062--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கரூர் வட்டம், அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம் ஜமீன் ஆலமரத்துப்பட்டி கிராமம், திண்டுக்கல் கரூர் தேசிய நெடுஞ்சாலையிலுள்ள முக்கிய ஊரான ஆண்டிப்பட்டி-கோட்டையில் அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகள் நின்று செல்வதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை--

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

கரூர் வட்டம், அரவக்குறிச்சி ஒன்றியம் ஜமீன் ஆலமரத்துப்பட்டி கிராமம் திண்டுக்கல்-கரூர் தேசிய நெடுஞ்சாலையிலுள்ள முக்கிய ஊரான ஆண்டிப்பட்டி கோட்டையில், கரூர்-திண்டுக்கல் வழித்தடத்தில் இயங்கும் அனைத்து புறநகரப் பேருந்துகளையும் நிறுத்தி பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்லுமாறு தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பணிபுரியும் அனைத்து ஓட்டுநர் மற்றும் நடத்துனர்களுக்கு சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**25--**

**அரவக்குறிச்சியிலிருந்து பேருந்து இயக்குதல்**

வினா எண் *44256*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரவக்குறிச்சியிலிருந்து கரடிப்பட்டி, தடாகோயில், கருமேட்டுப்பட்டி, ஆரியூர் கணக்குவேலம்பட்டி, புதூர், கக்கரம்பட்டி, ஆனுரோடு, மணல்மேடு ஆகிய ஊர்களின், வழியாக கரூருக்கு தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

அரவக்குறிச்சி-கரூர் (வழி) கரடிப்பட்டி, தடாகோயில், கருமேட்டுப்பட்டி, ஆரியூர், கணக்குவேலம்பட்டி, புதூர், வெஞ்சமாங்கூடலூர், கக்கரம்பட்டி, ஆனுரோடு, மணல்மேடு வழித்தடத்தின் மொத்த நீளம் *34.1* கி.மீ. இதில் தடாகோவிலிலிருந்து *0.4* கி.மீ. தொலைவில் கருமேட்டுப்பட்டி மற்றும் *0.5* கி.மீ. தொலைவில் ஆரியூர் ஆகிய இரண்டு பேருந்து வசதி பெறாத கிராமங்கள் உள்ளன. அரசு ஆணைப்படி பிரதான சாலையிலிருந்து *1.0* கி.மீ. தொலைவில் உள்ள கிராமங்கள் பேருந்து வசதி பெற்ற கிராமங்களாகக் கருதப்பட வேண்டும்

*1995 நவம்பர் 3]*

என்பதால், மேற்குறிப்பிட்டுள்ள கிராமங்களை பேருந்து வசதி பெற்ற கிராமங்களாகக் கருதலாம். எனவே, கோரிக்கையின் வழித்தடத்தின் நீளம் நகரப் பேருந்து இயக்க அதிகபட்ச தூரமான 30.0 கி.மீ. க்கு மேல் உள்ளதாலும், கோரிக்கையின் மற்ற பகுதிகள் ஏற்கனவே பேருந்து வசதி பெற்று இருப்பதாலும், இவ்வழித்தடத்தில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்கிட செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**26--**

**தலைவாசல்-பாலக்காடு பேருந்தை நீட்டித்து இயக்குதல்**

வினா எண் *45615*--**திரு கே. கந்தசாமி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தலைவாசலிலிருந்து பாலக்காடு வரை செல்லும அண்ணா போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து 38-ஐ வேப்படி வரை நீட்டிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பாலக்காட்டிலிருந்து வேப்படி செல்லும் சாலை 1.6 கி.மீ. ஜல்லி பொருத்திய கப்பி சாலையாகும். இதில் 0.8 கி.மீட்டரில் ஓடையின் மீது சிமெண்ட் பைப் பொருத்தி அதன் மேல் மண் கொட்டி உள்ளனர். இந்த இடம் அகலம் குறைவாக உள்ளதால், பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதாக இல்லாமல் உள்ளது. மேலும் அதே தடத்தில் மற்றொரு ஓடை ஒன்று பாலம் இல்லாமல் சாலையின் குறுக்கே செல்வதால், இவ்வோடையில் மழைக் காலங்களில் தொடர்ந்து தண்ணீர் செல்லும் போது பேருந்து இயக்க இயலாத சூழ்நிலையில் உள்ளது. எனவே மேற்படி சாலையை பேருந்து இயக்கும் வகையில் சரி செய்து விபரம் தெரிவிக்க கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை), சேலம் அவர்களுக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது. எனவே, மேற்குறிப்பிட்ட சாலை பேருந்து இயக்கத்திற்கு ஏற்றவாறு சீர் செய்தவுடன் இக்கோரிக்கை குறித்து பரிசீலிக்கப்படும்.

27--

**ஜெ.ஜெ. போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் ஒயர்லெஸ் வசதி**

வினா எண் *46806*--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஜெ.ஜெ. போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் ஒயர்லெஸ் வசதி செய்து கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழகத்தின் பல்வேறு இடங்களிலிருந்து அண்டை மாநிலங்களான கேரளம், ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம் மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களில் உள்ள முக்கிய நகரங்களை இணைக்கும் பிற மாநிலத் தொலைதூரத் தடங்களில் ஒளி ஒலி வசதிகளுடன் கூடிய சொகுசுப் பேருந்துகளை இயக்கும் பொருட்டு, மாண்புமிகு நமது முதலமைச்சர் அவர்களின் பெயரில் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா போக்குவரத்துக் கழகம் துவங்கப்பட்டு *27-01-1994*-ம் நாள் முதல் செயல்பட்டு வருகிறது. முதல் கட்டமாக *1995-96* ஆம் ஆண்டில் சென்னை-பெங்களூர்-மதுரை-திருவனந்தபுரம் ஆகிய முக்கிய நகரங்களுடன் தொடர்பு கொள்ளும் பொருட்டு ஒயர்லெஸ் வசதி செய்து கொடுக்கும் திட்டம் தற்சமயம் பரிசீலனையில் உள்ளது. புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இத்தகைய ஒயர்லெஸ் வசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

28--

**பெண்கள் குழந்தைகளுக்கென்று வெளிமாநிலங்களுக்குத் தனி பேருந்து இயக்குதல்**

வினா எண் *47342*--திரு கே. செல்வராஜ்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995* நவம்பர் *3*]

அரசு போக்குவரத்துக் கழகம் மூலம், தமிழ்நாட்டில் வெளி மாநிலம் செல்லும் பஸ்களில் தனியாக பெண்கள், குழந்தைகளுக்கென்று பஸ் விடப்படுமா?

**விடை--**

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:***

தமிழக அரசுக்கும், ஆந்திரப்பிரதேசம், கேரளம், கர்நாடகம் மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களுக்கும் இடையே பயணிகள் பேருந்து இயக்குவது குறித்து ஏற்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில், தமிழகத்தின் பல்வேறு இடங்களிலிருந்து அண்டை மாநிலங்களில் உள்ள முக்கிய நகரங்களை இணைக்கும் பிற மாநிலத் தடங்களில் தமிழக போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. தொலைதூர அண்டை மாநிலத் தடங்களில் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த ஒளி/ஒலி வசதிகளைக் கொண்ட சொகுசுப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இவ்வாறு இயக்கப்படும் பேருந்துகளில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கென தனியாக பேருந்துகள் இயக்குவது நடைமுறையில் சாத்தியமில்லை.

**29--**

**கோவை-ஹைதராபாத்துக்கு பஸ் வசதி**

வினா எண் *47343*--**திரு. கே. செல்வராஜ்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கோவையில் இருந்து ஹைதராபாத் செல்ல நேரடி பஸ் வசதி செய்து தரப்படுமா?

**விடை--**

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:***

கோவை-ஹைதராபாத் தடம் பிற மாநிலத்தடம், இத்தடத்தினை கோவையில் இருந்து ஈரோடு, சேலம் அரூர், திருப்பத்தூர், வேலூர், திருப்பதி, கடப்பா, கர்நூல், செட்செர்லா வழியாக ஹைதராபாத்துக்கு

இயக்கப்பட வேண்டும். இத்தடத்தின் நீளம் 1,066 கிலோ மீட்டர். இத்தடத்தினை ஆந்திர மாநில அரசின் ஒப்புதலுடன் இயக்க இயலும். மேலும், இத்தகைய தொலைவுள்ள தடங்களில் பயணிகள் பேருந்துகளில் பயணம் செய்வதை விரும்பமாட்டார்கள். எனவே, கோவை-ஹைதராபாத் தடத்தினை இயக்குவது இயக்க ரீதியில் சாத்தியமில்லை.

**30--**

### ஒசூரிலிருந்து பேருந்து இயக்குதல்

வினா எண் *57160*--**திரு. கே.ஏ. மனோகரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஒசூர்-ஏ. சாமனப்பள்ளி கிராமம் வரை அனுமந்தபுரம், மாரனப்பள்ளி வழியாக நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

ஒசூர் முதல் ஏ. சாமனப்பள்ளி வரை தடத்தின் நீளம் 9.1 கி.மீ. உள்ளது. இதில் ஏ. சாமனப்பள்ளி கிராஸ் முதல் ஏ. சாமனப்பள்ளி வரையுள்ள 4.1 கி.மீ. தூரம் மட்டுமே யாதொரு பேருந்து வசதியுமில்லை. இந்த 4.1 கி. மீட்டரில், சுமார் 0.5 கி.மீ. தூர சாலை நல்ல நிலையில் உள்ளது. மீதமுள்ள 3.6 கி.மீ. தூர சாலை பழுதடைந்து பேருந்து செல்ல இயலாத நிலையிலுள்ளது. மேற்படி சாலை செப்பனிட்டு சரிசெய்யப்பட வேண்டும்., என்கின்ற காரணத்தால் தற்போது பேருந்து இயக்க இயலாத நிலையுள்ளது. மேற்படி சாலை செப்பனிட்டு சரிசெய்யப்பட்ட பின்னர், பேருந்து இயக்க பரிசீலனை செய்யப்படும்.

**31--**

### ஜெ.ஜெ. போக்குவரத்துக் கழகப் பேருந்தில் ஒசூருக்கு கூடுதல் இருக்கைகள் ஒதுக்குதல்

வினா எண் *57162*--**திரு. கே.ஏ. மனோகரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

பெங்களூர்-திருவனந்தபுரம் வழித் தடத்தில் நடத்தப்படும் ஜெ.ஜெயலலிதா போக்குவரத்துக் கழகப் பேருந்தில் ஓசூருக்கு கூடுதல் இருக்கைகள் அளிக்கப்படுமா?

**விடை--**

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:***

தற்பொழுது பெங்களூர்-திருவனந்தபுரம் வழித் தடத்தில், இரண்டு பேருந்துகள் இரண்டு ஒரு வழிப் பயணங்களுடன் ஓசூர் வரை இயக்கப்படுகின்றன. கர்நாடக மாநில அரசுடன் பயணிகள் பேருந்து இயக்குவது குறித்து ஒப்பந்தம் ஏற்பட்டவுடன், பெங்களூர் வரை நீட்டித்து இயக்கப்படும். எனவே, இவ்வழித் தடத்தில் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகப் பேருந்தில் ஓசூருக்கு கூடுதல் இருக்கைகள் அளிக்கப்படுவது என்பது அவசியமில்லை.

**32--**

## மொடக்குறிச்சி தொகுதியில் பேருந்து வசதி

வினா எண் 57857--**திருமதி கவிநிலவு தர்ம்ராஜ்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், குலவிளக்கு ஊராட்சி, கோவில்பாளையம், ஆதிதிராவிட காலனி, கோவில்பாளையம், காணியாம்பாளையம், பூசாரிபாளையம், மின்னப்பாளையம், பூசாரிபாளையம் ஆதிதிராவிடர் தெரு, கணக்கம்பாளையம், மொசுகவுண்டன் புதூர், புதுப்பாளையம், குலவிளக்கு ஆதிதிராவிடர் காலனி ஆகிய கிராமங்களில் பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:***

கோரிக்கையில் உள்ள மின்னப்பாளையம், குலவிளக்கு, புதுப்பாளையம், மொசுக்கவுண்டனூர், குலவிளக்கு ஆதிதிராவிடர்

காலனி ஆகிய கிராமங்கள் நேரிடையாக தற்போது பல்வேறு பேருந்து இயக்கங்களினால் வசதி பெற்றுள்ளன. இதர கிராமங்களான பூசாரிபாளையம் ஆதிதிராவிடர் தெரு, பூசாரிபாளையம், கணக்கம்பாளையம், காணியாம்பாளையம், கோவில்பாளையம் போன்ற கிராமங்கள் அருகாமையில் உள்ள வழித்தடங்கள் மூலம் தற்போது பேருந்து வசதி பெற்று வருகின்றன.

**33--**

## மொடக்குறிச்சி தொகுதியில் பேருந்து வசதி

வினா எண் *57867*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம, பழமங்கலம் ஊராட்சி, குட்டப்பாளையம், செம்மாண்டாம்பாளையம், பாப்பா வலசு, பழமங்கலம் ஊராட்சி ஆதிதிராவிடர் காலனி ஆகிய கிராமங்களில் பேருந்து வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

கோரிக்கையில் உள்ள பழமங்கலம் மற்றும் ஆதிதிராவிடர் காலனி ஆகிய இரண்டு கிராமங்களும் சுமார் *0.5* கி.மீ. தூரத்தில் பேருந்து வசதியும் செம்மாண்டாம்பாளையம் மற்றும் குட்டப்பாளையம் ஆகிய கிராமங்கள் சுமார் *1.5* கி.மீ. தூரத்தில் பேருந்து வசதியும், பாப்பாவலசு என்ற கிராமம் சுமார் *1.0* கி.மீ. தூரத்தில் பேருந்து வசதியும் பெற்று வருகின்றன.

TRUTH ALONE TRIUMPHS

**34--**

## மொடக்குறிச்சி தொகுதியில் பேருந்து வசதி

வினா எண் *57871*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம் விளக்கேத்தி ஊராட்சி, கொக்கிரி காட்டுப்புதூர், விளக்கேத்திபுதூர், அம்மாண்டிப் பாளையம், வெடிக்காரன்பாளையம், பச்சாகவுண்டன் வலசு, ஓலப்பாளையம், செம்மாண்டபுரம், ஆத்தப்பம்பாளையம், விளக்கேத்தி கஸ்பா ஆகிய கிராமங்களில் பேருந்து வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை *அமைச்சர்:***

விளக்கேத்தி ஊராட்சிக்கு உட்பட்ட பெரும்பான்மையான கிராமங்கள் தற்போது பேருந்து வசதி பெற்றுள்ளன. நேரிடையாக பேருந்து வசதி பெறாத விளக்கேத்திபுதூர், வெடிக்காரன்பாளையம் மற்றும் பச்சாகவுண்டன்பாளையம் ஆகிய மூன்று கிராமங்களும் மிகக் குறுகிய தூரத்தில் பேருந்து வசதி பெற்று வருகின்றன.

**35--**

**மொடக்குறிச்சி தொகுதியில் பேருந்து இயக்குதல்**

வினா எண் *57921*--**திருமதி கவிநிலவு *தர்மராஜ்:*** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், அஞ்சூர் ஊராட்சி, ரொசப்பாளையம், காரவலசு, குள்ளம் பாளையம், செல்லிபாளையம், வடக்கு நல்ல செல்லி பாளையம், முத்துகவுண்டன்பாளையம், நடுப்பாளையம், பருத்திகாட்டாம்பாளையம், காட்டூர், ராமநாதபுரம் ஆகிய கிராமங்களில் பேருந்து வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை *அமைச்சர்:***

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், அஞ்சூர் ஊராட்சி, குள்ளம்பாளையம், காரவலசு, அஞ்சூர் நல்ல செல்லிபாளையம் போன்ற கிராமங்கள் நேரிடையாக தற்போது பேருந்துகள் மூலமாக போக்குவரத்து

வசதி பெற்றுள்ளன. இதர கிராமங்களான புரசபாளையம், இராமநாதபுரம் காட்டூர் பருத்தி காட்டாம்பாளையம் முத்துகவுண்டன்பாளையம், ஆகிய கிராமங்கள் சுமார் 1.5 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள வழித்தடங்கள் மூலமாக பேருந்து வசதி பெறுகின்றன. நடுப்பாளையம் கிராமம் சுமார் 0.5 கி.மீ. தூரத்தில் உள்ள பிரதான சாலையின் மூலமாக பேருந்து வசதி பெறுகின்றது.

**36--**

மொடக்குறிச்சி தொகுதியில் பேருந்து வசதி

வினா எண் 60945--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், அரச்சனூர் ஊராட்சி சேனாபதி பாளையம், செல்லப்பாளையம், அழக்கவுண்டன்பாளையம், ஊரான்பாட்டுபுதூர், அரச்சலூர், மேட்டூர், நல்லிக்கவுண்டன்வலசு, குன்னரங்கம்பாளையம், நாச்சிவலசு, மீனாட்சி வலசு, வெட்டுக்காட்டு வலசு, பத்தையன் பாளையம், நல்லமங்காபாளையம், ஊசிபாளையம். ஓடாநிலை, வீரப்பன்பாளையம், கொமாரபாளையம், நடுப்பாளையம், பூசாரியூர், புதுவலசு, ஓலவலசு ஆகிய கிராமங்களில் பேருந்து வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

கோரிக்கையில் உள்ள அரச்சலூர், குன்னரங்கம்பாளையம், நாச்சிவலசு, வெட்டுக்காட்டுவலசு, கொமாரபாளையம், ஓடாநிலை புதுவலசு போன்ற கிராமங்கள் தற்போது பிரதான சாலைகளில் உள்ள பேருந்துகள் மூலமாக பேருந்து வசதி பெறுகின்றன. இதர கிராமங்களான பூசாரியூர், வீரப்பன்பாளையம், ஊரான்காட்டுபுதூர், அழகுகவுண்டன்பாளையம், பத்தையன்பாளையம், மீனாட்சிவலசு, நல்லிகவுண்டன்வலசு, மேட்டூர், சேனாபதி பாளையம், ஓலவலசு, செல்லப்பன் பாளையம் மற்றும் நல்லமங்காபாளையம் ஆகிய கிராமங்கள் சாலை வசதி குறைவினால் அருகாமையில் உள்ள வழித்தடங்களில் பேருந்து வசதி பெறுகின்றன.

*1995 நவம்பர் 3]*

**37--**

**கிருஷ்ணகிரி-சென்னைக்கு பேருந்து இயக்குதல்**

வினா எண் *61505*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*கிருஷ்ணகிரியிலிருந்து சென்னை செல்லும் தடம் எண் 400 பேருந்தை திருப்பத்தூர் வழியாக இயக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

*கோரிக்கையில் கேட்டுள்ளவாறு கிருஷ்ணகிரியிலிருந்து சென்னை செல்லும் தடம் எண் 400 பேருந்தை திருப்பத்தூர் வழியாக இயக்கினால் பயண நேரம் மற்றும் பயணக் கட்டணம் அதிகரிப்பதோடு நேரடிப் பயணிகளும் இச்சுற்று வழித் தடத்தை விரும்பமாட்டார்கள். எனவே வழித்தடத்தில் மாற்றம் செய்வது சாத்தியமில்லை.*

**38--**

**பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பணிமனையை விரிவுபடுத்துதல்**

வினா எண் *64905*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் திருப்பத்தூர் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பணிமனையை விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

*திருப்பத்தூரில் தற்போது உள்ள பணிமனையில், ரூபாய் ஒரு இலட்சத்து தொண்ணூறு ஆயிரம் செலவில் பராமரிப்புக் கூடம்*

அண்மையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மேலும், பணிமனையில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணி ரூபாய் ஏழு இலட்சம் செலவில் இந்நிதியாண்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

**39--**

கரூர் வட்டத்தில் பேருந்து இயக்குதல்

வினா எண் 67531--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் வட்டம், அரவக் குறிச்சி, சின்னதாராபுரம் (வழி) இராஜபுரம், வாய்க்காலூர், நம்பகவுண்டனூர், சீரங்க கவுண்டனூர், பொன்னாபுரம், தொக்குப்பட்டி புதூர், தொக்குப்பட்டி, புளியம்பட்டி, இடையே தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து ஒன்றின் மூலம் பலநோக்குத் திட்டத்தில் அரவக்குறிச்சி பரமத்தி (வழி) இராஜபுரம், வாய்க்காலூர், நம்பகவுண்டனூர் பிரிவு, சீரங்க கவுண்டனூர், பொன்னாபுரம், தொக்குப்பட்டி புதூர், தொக்குப்பட்டி, சின்னதாராபுரம் வழியாக தினசரி 4 நடைகள் இயக்கப்படுகிறது. இவ்வழித்தடத்தில் நம்பகவுண்டனூர் பிரிவிலிருந்து பேருந்து வசதி பெறாத நம்பகவுண்டனூர் கிராமம் 1.5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. அரசு ஆணைப்படி, பேருந்து இயங்கும் பிரதான சாலையிலிருந்து 1.0 கி.மீ. தொலைவில் உள்ள கிராமங்கள் அனைத்தும் பேருந்து வசதி பெற்ற கிராமங்களாகக் கருதப்படவேண்டும என்பதால், நம்பகவுண்டனூர் கிராமத்தினை பேருந்து வசதி பெற்ற கிராமமாகக் கருதலாம்.

*1995 நவம்பர் 3]*

**40--**

### மூலனூர்-சின்னதாராபுரத்திற்குப் பேருந்து இயக்குதல்

வினா எண் *67535*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*தாராபுரம்-கரூர் வழி மூலனூர் சின்னதாராபுரம் இடையே இரவு 8.30 மணிக்கு தாராபுரத்திலிருந்து பேருந்து விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

*தாராபுரம்-கரூர் (வழி) மூலனூர், சின்னதாராபுரம் இடையே இரவு 8.15 மணிக்கு தற்போது ஜீவா போக்குவரத்துக் கழகம் பேருந்துவை இயக்கம் செய்து வருகிறது. அதற்குப் பின் இரவு 8.45 மணிக்குத் தனியார் பேருந்து அதே வழித்தடத்தில் இயங்கி வருகின்றது. எனவே கோரிக்கையில் கேட்டுள்ளவாறு தற்சமயத்திற்கு இரவு 8.30 மணிக்கு பேருந்து இயக்க நடவடிக்கை எதுவும் இல்லை. அவ்வழித்தடத்தில் பயணிகள் விகிதாச்சாரம் அதிகரிக்கும்போது, தேவை இருப்பின் கூடுதல் நடைகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

**41--**

### ஜீவா போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் முக்கிய பிரமுகர்களுக்குத் தனி இருக்கைகள்

வினா எண் *67565*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*தாராபுரம்-சென்னை ஜீவா போக்குவரத்துக் கழகப் பேருந்தில் முக்கிய பிரமுகர்களுக்கான இருக்கைகள் ஒதுக்கப்படுமா ?*

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

[1995 நவம்பர் 3

தாராபுரம்-சென்னை வழித்தடத்தில் இயக்கப்படும் ஜீவா போக்குவரத்துக் கழகப் பேருந்தில் முக்கிய பிரமுகர்களுக்கான இருக்கைகள் தற்போது ஒதுக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.

**42--**

**காயிதே மில்லத் பெயரில் போக்குவரத்துக் கழகம் அமைத்தல்**

*வினா எண் 67584--***திருமதி கே. மரியம் உல் ஆசியா:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*காயிதே மில்லத் அவர்களின் பெயரில் போக்குவரத்துக் கழகம் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

இல்லை.

**43--**

**திருவையாறு தொகுதியில் பணிமனை அமைத்தல்**

*வினா எண் 78547--திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*திருவையாறு தொகுதியில், சோழன் போக்குவரத்துக் கழகத்திற்கு வருவாய்த்துறை மூலம் நிலம் கையகப்படுத்தி ஒப்படைத்துள்ள இடத்தில் விரைவில் பணிமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

31-3-1995 ஆம் தேதி நடத்தப்பட்ட சோழன் போக்குவரத்துக் கழகத்தின் 129ஆவது நிர்வாக இயக்குநர் குழுக் கூட்டத்தில், சோழன் போக்குவரத்துக் கழகத்தின் இக்கட்டான நிதி நிலையினைக் கருதி,

*1995 நவம்பர் 3]*

திருக்காட்டுப்பள்ளியில் நிலத்தினை கையகப்படுத்துவதைக் கைவிடும்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளதால், மேற்படி இடத்தில் பணிமனை அமைப்பது கைவிடப்பட்டுள்ளது.

**44--**

**கன்னியாகுமரி மாவட்டத்தில் நிவாரணப் பணிகள்**

*வினா எண் 36105*--**திரு. இரா. அப்பு நடேசன்:** மாண்புமிகு *வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

*(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில், கடந்த 1992 ஆம் வருட இறுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் குடிசை வீடுகளை இழந்தவர்களுக்கு நிவாரணம் வழங்காதது அரசுக்கு தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், குடிசை வீடுகளுக்கு எப்போது நிவாரணம் வழங்கப்படும்?*

**விடை--**

**மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ):* கன்னியாகுமரி மாவட்டத்தில் நவம்பர் 1992இல் ஏற்பட்ட வெள்ளத்தில் கட்டிட வீடு முழுவதுமாக இழந்தவர்களுக்கு அரசு ஆணை எண். 998 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 27-12-1993-ன்படி 2,741 வீடுகளுக்கு அதனை மறுபடி கட்ட வீடு ஒன்றுக்கு தலா ரூ. 15,000 வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டம் ஹட்கோ கடனும் மற்றும் மத்திய-மாநில அரசுகளின் மானியமும் கொண்டதாகும்.

இதைத்தவிர அரசு ஆணை எண் 69, நாள் 25-1-1995 ன்படி நவம்பர் 1992 வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கல்சுவர் மற்றும் ஓலைக் கூரையுடன் கூடிய 3,759 வீடுகளுக்கும், நவம்பர் 1993 வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அத்தகைய 62 வீடுகளுக்கும் ரூ.3,000 மாநில மானியமும் ரூ.6,000 ஹட்கோ கடனும் என்னும் வீதத்தில் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்ற கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்துடன் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

**45--**

## சுப்ரா திட்டத்தின் கீழ் பயன் அடைந்தோர் விவரம்

வினா எண் *53539*--**திரு. கே.ஏ. மனோகரன்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* சுப்ரா திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்டத்தில் பயன் அடைந்தோர் எண்ணிக்கை என்ன?

*(ஆ)* எந்த ஆண்டில் திட்டம் செயல்படத் துவங்கியது?

**விடை--**

**மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)*: சுப்ரா (Shupra) திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டத்தில் *1991-92* ஆம் ஆண்டில் *530* குடும்பங்களும், *1992-93* ஆம் ஆண்டில் *1590* குடும்பங்களும் ஆக மொத்தம் *2120* குடும்பங்களும், *1993-94*ல் *1590* குடும்பங்களும் தேர்வு செய்யப்பட்டு திட்டத்திற்கு நிதியுதவி செய்து வரும் எச்.டி.எப்.சி. (H.D.F.C.) நிறுவனம் நிதியுதவியினை குறித்த காலத்தில் அனுமதிக்காததால் மேற்படி குடும்பங்களுக்கு முறையே *1993-94*, *1994-95* மற்றும் *1995-96* ஆம் ஆண்டுகளில் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

**46-**

## சேலம் மாவட்டத்தில் குளிர்சாதன கூடம் அமைத்தல்

வினா எண் *47308*--**டாக்டர் வெ. சரோஜா:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* சேலம் மாவட்டத்தில் பயிராகும் பழங்கள் மற்றும் காய்கறிகளை பாதுகாக்க குளிர்சாதன கூடம் (Cold Storage) அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பார்வையில் உள்ளதா?

*(ஆ)* ஆமெனில், எப்போது செயல்படுத்தப்படும்?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) அவசியம் எழவில்லை.*

**47--**

**கிருட்டிணகிரியில் குளிர் வைப்பறை துவங்குதல்**

வினா எண் 47359--**திரு. கே. முனிவெங்கடப்பன்:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கிருட்டிணகிரியில் ஆரம்பிக்கப்படும் குளிர் வைப்பறை (Cold Storage) எப்பொழுது துவக்கப்படும்?

(ஆ) அதற்கான வாடகை விவரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) கிருட்டிணகிரியில் குளிர் வைப்பறை கட்டுவதற்கு அரசு பரிசீலனை செய்து அதன் முதன்மை அறிக்கை முடியும் நிலையில் உள்ளது. இதற்கான நிதி உதவி பல மத்திய அரசு நிறுவனங்களிடம் இருந்து எதிர்ப்பார்க்கப்படுகிறது. நிதி உதவி கிடைத்ததும் கட்டுமானப் பணி துவங்கப்படும்.

(ஆ) அதற்கான வாடகை விவரம் இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

**48--**

**திருப்பத்தூர் தொகுதியில் தோட்டக்கலைப் பண்ணை அமைத்தல்**

வினா எண் 48010--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் தோட்டக்கலைப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில், திருப்பத்தூர் தொகுதியில் தோட்டக்கலை பண்ணை அமைக்கும் திட்டம் எதுவும் தற்சமயம் இல்லை.

(ஆ) அவசியம் எழவில்லை.

**49--**

**கொடுமுடி விளைபொருள் விற்பனைக் கூடத்திற்குக் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் 48384--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கொடுமுடியில் விளைபொருள் விற்பனைக் கூடத்திற்குக் கட்டிடம் கட்டித்தர அரசு முன் வருமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

பெரியார் மாவட்டம், கொடுமுடியில் அமைந்துள்ள விளைபொருள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு ஏற்கனவே 8.99 ஏக்கர் நிலம் சொந்தமாக வாங்கப்பட்டு, அங்கு அலுவலகக் கட்டிடம், வியாபாரக் கொட்டகை, உலர்களம், ஆழ்துளைக் கிணறு, கழிவறை போன்ற கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு விற்பனைக் கூடம் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. இவை தவிர 1994-95 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட ரூ.5 இலட்சம் செலவில் விவசாயிகள் ஓய்வு அறை, ரூ.95,000 செலவில் சுற்றுச்சுவர், ரூபாய் ஒரு இலட்சம் செலவில் கப்பிச் சாலைகள் மற்றும் ரூ.15,000 செலவில் சாலைப்பாலம் போன்ற கட்டுமானப் பணிகள் முடிவுறும் தருணத்தில் உள்ளன. மேலும்

1995 நவம்பர் 3]

கொடுமுடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு ஊரகக் கிட்டங்கி கட்டுமானப் பணியை ரூ.8 இலட்சம் மதிப்பீட்டில் மேற் கொள்ள மத்திய அரசு அனுமதி வழங்கி உள்ளது. முதல் தவணையாக மத்திய அரசு ஒரு இலட்சமும், மாநில அரசு உதவியாக ரூ.2 இலட்சமும் அரசு ஆணை எண் 314, வேளாண்மைத் துறை நாள், 3-6-1994-ன் படி அனுமதிக்கப்பட்டுள்ளது. இவை தவிர தேவைப்படும் கூடுதல் வசதிகள் வரும் நிதி ஆண்டுகளில் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

**50--**

## முருங்கைக்காய் உற்பத்திக்குச் சிறப்புத் திட்டம்

வினா எண் 52032--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரவக்குறிச்சி பகுதியில் முருங்கைக்காய் தீவிர உற்பத்திக்காக சிறப்புத் திட்டம் கொண்டு வருவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரவக்குறிச்சி பகுதியில் முருங்கைக்காய் தீவிர உற்பத்திக்காக சிறப்புத் திட்டம் கொண்டு வருவதற்கு செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை. எனினும் ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் விதைகள் வழங்கப்படும்.

**51--**

## ஆவின் ஊழியர் பற்றிய விவரம்

வினா எண் 10446--**டாக்டர் சு. மணிமேகலை:** மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கிராமப்புறச் சங்கங்கள், மாவட்ட ஒன்றியங்கள், ஆவின் நிறுவனம் இவைகளில் ஒவ்வொன்றிலும் பணிபுரியும் ஊழியர்கள் எத்தனை பேர்?

(ஆ) கிராமப்புறச் சங்கங்கள் ஊழியர்களுக்கு தொழிலாளர் நல சட்டங்கள் பொருந்துமா?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை--

**மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:**

(அ) (1) தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தில் பணிபுரியும் மொத்த ஊழியர்கள்--3,427.

(2) 17 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களில் பணிபுரியும் ஊழியர்கள்--3781

(3) கிராமப்புற பால் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் ஊழியர்கள்--24096.

(ஆ) கிராமப்புறச் சங்க ஊழியர்களுக்கு 1948-ஆம் ஆண்டின் குறைந்த பட்ச ஊதியச் சட்டமும், 1958ஆம் ஆண்டின் தமிழ் நாடு தொழில் நிறுவனங்கள் சட்டமும் பொருந்தும். மேலும், குறைந்த பட்ச ஊதியப் பிரிவின் கீழ் வரும் சம்பளப் பட்டுவாடா சட்டம், தொழில் தகராறுகள் சட்டம் ஆகியவையும் பொருந்தும். போனஸ் பட்டுவாடாச் சட்டம், பணிக்கொடைப் பட்டு வாடாச் சட்டம், வருங்கால வைப்பு நிதிச் சட்டம் ஆகியன அச்சங்கத்தில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கைக்கு ஒப்ப பொருந்தும்.

**52--**

**தானியங்கி பால் நிலையங்களின் விவரம்**

வினா எண் 48594--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் சென்னையில் எத்தனை உள்ளன?

(ஆ) அவற்றை மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:**

(அ) சென்னையில் தற்போது 182 தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் இயங்கி வருகின்றன.

*1995 நவம்பர் 3*]

(ஆ) மூன்றாம் பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் இவ்வருட முடிவில் சென்னையில் மேலும் 68 தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் அமைக்க பணிகள் நடைபெற்று வருகின்றன.

**53--**

## 1993-94ல் டான்மாக் உற்பத்தி

வினா எண் 47196--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) 1993-94 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மேக்னசைட் (டான்மாக்) உற்பத்தி எவ்வளவு?

(ஆ) மேக்னசைட் உற்பத்தியின் மூலம் கிடைத்த வருமானம் எவ்வளவு?

**விடை--**

**மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1993-94 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மேக்னசைட்டின் உற்பத்தி மற்றும் வருமான விபரங்கள் பின்வருமாறு:

| | பொருள் | உற்பத்தி டன்கள் | வருமானம் (இலட்சங்கள்) |
|---|---|---|---|
| 1 | கச்சா மேக்னசைட் (Raw Magnasite) | 98,180 | ரூ.561.32 |
| 2 | முழுவதும் எரியூட்டப்பெற்ற மேக்னசைட் (Dead Burned Magnasite) | 11,914 | ரூ.874.10 |
| 3 | மித எரியூட்டப்பெற்ற மேக்னசைட் (Lightly Cabined Magnasite) | 9,030 | ரூ.443.97 |
| 4 | ரேமிங் மாஸ் (Ramming Mas) | 1,002 | ரூ.69.91 |
| | **மொத்தம்** | **1,13,126 டன்கள்** | **ரூ.1949.30** |

மேலே கூறியுள்ள 4 பொருட்களும் தனித்தனி உற்பத்தி பொருட்கள் ஆகும்.

54--

## கனிம நிறுவனம் மூலம் 1993-94ல் கிடைத்த வருமானம்

வினா எண் *61417*--**திரு ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*தமிழ்நாட்டில் கனிம நிறுவனங்களின் மூலம் 1993-94-ல் அரசுக்கு கிடைத்த வருமானம் எவ்வளவு?*

**விடை--**

**மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்:**

*தமிழ்நாடு கனிம நிறுவனம் மூலம் 1993-94ல் தமிழ் நாடு அரசுக்குக் கிடைத்த வருமானம் ரூ.619.10 இலட்சங்களாகும். அதன் விவரம் பின்வருமாறு:*

(ரூபாய் இலட்சத்தில்)

| | | | |
|---|---|---|---|
| 1 | பங்கீட்டுத் தொகை 1993-94 | .. | 275.42 |
| 2 | இராயல்டி | .. | 30.670 |
| 3 | பரப்பு மதிப்பு மற்றும் உள்ளாட்சி வரி | .. | 13.91 |
| 4 | வரி மற்றும் பிற கட்டணங்கள் | .. | 4.50 |
| 5 | விற்பனை வரி | .. | 18.57 |
| | மொத்தம் | .. | **619.10** |

55--

## உப்பிலியாபுரம் தொகுதியில் பெண்களுக்கு தையல் பயிற்சி அளித்தல்

வினா எண் *36198*--**திரு. வி. ரவிச்சந்திரன்:** மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*உப்பிலியாபுரம் தொகுதி, சிக்கத்தம்பூர், வடக்குப்பட்டி வெங்கடாசலபுரம் ஆகிய ஊர்களில் பெண்களுக்கு தையல் பயிற்சி அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:**

உப்பிலியாபுரம் தொகுதி சிக்கத்தம்பூர், வடக்குப்பட்டி வெங்கடாசலபுரம் ஆகிய ஊர்களில் பெண்களுக்கு தையல் பயிற்சி அளிக்க சமூக நலத்துறையில் தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**56--**

**சிவகிரி அண்ணா பஞ்சாலையை விரிவுபடுத்துதல்**

*வினா எண் 48821*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு சமூகநலம், கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*சிவகிரி அண்ணா பஞ்சாலையை விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?*

**விடை--**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:**

சிவகிரியில் தமிழ்நாடு பஞ்சாலை கழகத்தின் மூலம் விசைத்தறிக்கூடம் ஒன்று 96 விசைத்தறிகளைக் கொண்டு இயங்கி வருகிறது. அதை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை.

**57--**

**சத்துணவு மையங்களில் தோட்டம் அமைத்தல்**

*வினா எண் 613433*--**திரு ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*சத்துணவு மையங்களில் தோட்டம் அமைக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளதா?*

**விடை--**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்:**

[1995 நவம்பர் 3

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் சத்துணவு மையங்களில் தோட்டம் அமைக்கும் திட்டம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது. அதன்படி தண்ணீர் வசதியுள்ள அனைத்து சத்துணவு மையங்களிலும் தோட்டம் அமைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது. அதில் பப்பாளி, முருங்கை போன்ற தாவரங்கள வளர்க்கப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் சத்துள்ள காய்கறி, கீரை ஆகியன குழந்தைகளுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

**58--**

**விசைத்தறித் தொழிலாளர்களுக்கு விசைத்தறிகள் வழங்குதல்**

வினா எண் *61794*--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் கீழ் இயங்கி வரும் சிவகிரி விசைத்தறிக்கூடத் தொழிலாளர்கள் வீட்டிலேயே தொழில் புரிய விசைத்தறிகள் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்:**

இல்லை.

**59--**

**நெசவாளர்களுக்கு மருத்துவ மையங்கள் அமைத்தல்**

வினா எண் *65121*--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கைத்தறி நெசவாளர்களுக்கான மருத்துவ மையங்கள் துவக்குவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

**விடை--**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்:**

ஆம், *1993-94* ஆம் ஆண்டு முதல், மைய அரசின் மான்ய உதவியுடன் மையம் ஒன்றிற்கு ரூ.*1* இலட்சம் செலவில் கைத்தறி நெசவாளர்கள் வாழும் குடியிருப்புகளில் அவர்களின் உடல் நலப் பாதுகாப்பிற்காக ஆரம்ப சுகாதார மையங்கள் அமைக்கப்பட்டு

*வருகின்றன. 1993-94 ஆம் ஆண்டில் 19 சுகாதார நிலையங்களும் 1994-95 ஆம் ஆண்டில் 10 சுகாதார நிலையங்களும் அமைக்க மத்திய அரசு நிதி உதவி வழங்கியுள்ளது.*

**60--**

**தர்மபுரி கூட்டுறவு நூற்பாலையை விரிவுபடுத்துதல்**

*வினா எண் 65125--***திருமதி கே. மரியம் உல் ஆசியா:** *மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறி துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*தர்மபுரி மாவட்டம் கூட்டுறவு நூற்பாலையை நவீனப்படுத்துவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?*

**விடை--**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்:**

*தருமபுரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலையினை தேசிய வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் நவீனப்படுத்துவது குறித்தான முன்மொழிவு அரசின் பரிசீலனையில் உள்ளது.*

**61--**

**க. பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில் சத்துணவு மையங்கள் அமைத்தல்**

*வினா எண் 84033--***திருமதி கே. மரியம் உல் ஆசியா:** *மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*திருச்சிராப்பள்ளி மாவட்டம், க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், ராஜபுரம், வள்ளிபுரம், குப்பம்பாளையம், வெட்டுகாட்டுவலசு, வாங்கல்பட்டி, மரகதபுரி, மாளபாளையம் புதூர், அணைப்பாளையம்புதூர், ரெங்கநாதபுரம், கொள்ளம்பரப்பு, தர்மகோடங்கிப்பட்டி, இழவம்பாளையம், கொளத்தூர் கள்ளிப்பட்டி, மல்லநத்தம், சென்னிப்பட்டி, சால்நாயக்கன்பட்டி, நொச்சிப்பாளையம், இலுப்பை கிணத்துப்பட்டி, முத்துசோளிப்பட்டி, பொன்னிவாடி, புதூர், மண்ணுக்கட்டிப்பாளையம், கரிமா புதூர், மூலத்துறை, வீரன்பாடு, முத்தனம்பாளையம், மற்றும் முதலிக்கவுண்டன்புதூர் ஆகிய இடங்களில் சத்துணவுக்கூடம் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்:**

ஜனத்தொகை 1000-க்குக் குறைவாக இருந்தால் சத்துணவுக்கூடம் அமைக்க இயலாது.

**62--**

**அரசு கலைத்தொழில் கல்லூரியில் பயிற்றுநர்கள் பணியமர்த்தல்**

வினா எண் 26925--திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு கல்வியமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) அரசு கலைத் தொழில் கல்லூரியில் காலியாக உள்ள பயிற்றுநர்கள் (Tutors) பதவிகள் காலியாக உள்ளதால் மாணவர்களுக்கு சரியான முறையில் பாடம் நடத்த இயலாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், 94-95 ஆம் நிதியாண்டில் பி.எஸ்சி., (Visual) போன்ற பட்டப்படிப்பு முடித்தவர்களை பணியமர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அரசு கலைத் தொழில் கல்லூரிகளில் காலியாக இருந்த 22 பயிற்றுநர் பணியிடங்களில் அரசு விதிமுறைகளின்படி 11 பணியிடங்கள் பதவி உயர்வு மூலமும், 6 பணியிடங்கள் ஒப்பந்த அடிப்படையிலும், நிரப்பப்பட்டுள்ளன. எஞ்சிய 5 பதவிகளை ஆசிரியர் தேர்வாணையத்தின் மூலம் நிரப்ப நேரிடை நியமனங்கள் தற்போது நடவடிக்கையில் உள்ளது.

**63--**

**முதன்மைக் கல்வி அலுவலகங்களில் ஃபேக்ஸ் (Fax) வசதி செய்தல்**

வினா எண் 67647--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

*முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகங்களில் ஃபேக்ஸ் (Fax) வசதி செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா?*

**விடை––**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

*ஆம். அனைத்து முதன்மைக் கல்வி அலுவலகங்களுக்கும் ஃபேக்ஸ் வசதி சாதனங்கள் அளிக்கப்பட்டுள்ளன.*

**64––**

பெண்களுக்கு இட ஒதுக்கீடு

*வினா எண் 46354––***திருமதி ப. சரஸ்வதி:** *மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா––*

*(அ) பெண்களுக்கு வேலைவாய்ப்பில் 30% எனில் பொதுப் பிரிவு மற்றும் இதர பிரிவுகளிலும் இந்த சதவீத முறை கடைப்பிடிக்கப்படுகிறதா?*

*(ஆ) தகுதி அடிப்படையில் நியமனம் செய்யப்படும்போது O.C.யில் பெண்கள் இல்லையெனில் மற்ற பிரிவுகளிலிருந்து நிரப்பப்படுகிறதா அல்லது பொதுப்பிரிவில் தகுதியான ஆள் இல்லை என்பதால் நிரப்பப்படாமல் விடப்படுகிறதா?*

**விடை––**

**மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) பொதுப் பிரிவு மகளிருக்கான பணி காலியிடங்களுக்கு பொதுப் பிரிவினைச் சார்ந்த மகளிர் மட்டுமல்லாமல் இதர பிரிவுகளைச் சார்ந்த மகளிரும் தகுதி மற்றும் பதவி மூப்பின் அடிப்படையில் பரிந்துரைக்கப்படுவதால் அப்பணியிடங்கள் நிரப்பப்படாமல் விடப்படும் நிலை ஏற்பட வாய்ப்பில்லை.*

**65––**

**தருமபுரி மாவட்டத்தில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தோர் விவரம்**

*வினா எண் 57147––***திரு. கே.ஏ. மனோகரன்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா––*

[*1995 நவம்பர் 3*

*1985 மற்றும் 1990-ஆம் ஆண்டுகளில் தருமபுரி மாவட்டத்தில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து உள்ளவர்கள் எண்ணிக்கை எவ்வளவு?*

**விடை--**

**மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:**

*1985-ஆம் ஆண்டில் 31-12-1985 அன்றைய நிலவரப்படி ஆண்கள் 51,262, பெண்கள் 23,339 ஆக மொத்தம் 74,601 பேர்கள் பதிவு செய்துள்ளனர். 1990ம் ஆண்டில் 31-12-1990 அன்றைய நிலவரப்படி ஆண்களில் 76,875 பேர்களும் பெண்களில் 33,247 பேர்களும் ஆக மொத்தம் 1,10,122 பேர்கள் பதிவு செய்திருந்தனர்.*

**66--**

**கூட்டுறவுத் துறை பத்திரிக்கை விவரம்**

*வினா எண் 48476--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

*(அ) கூட்டுறவுத் துறையின் மூலம் பத்திரிக்கை நடத்தப்படுகின்றதா?*

*(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?*

**விடை---**

**மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) தமிழக அரசு கூட்டுறவுத் துறையின் திட்டங்கள், சாதனைகள் மற்றும் பலவகைப்பட்ட கூட்டுறவு நிறுவனங்களின் பணிகள் 14 செயல் பதிவாளர்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் பல்வகைப்பட்ட கூட்டுறவு நிறுவனங்கள் சாதனைகள் மற்றும் சேவைகளை மக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் பின் கண்டுள்ள மூன்று கூட்டுறவு இதழ்களை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், சென்னை வெளியிட்டு வருகிறது:*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

| | |
|---|---|
| 1. கூட்டுறவு | தமிழ் மாத இதழ் |
| 2. கூட்டுறவு முரசு | தமிழ்மாத இருமுறை இதழ் |
| 3. தமிழ்நாடு ஜர்னல் ஆப் கோவாப்பரேஷன் | ஆங்கில மாத இதழ் |

இவ்விதழ்களை கூட்டுறவாளர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள், கூட்டுறவில் பணிபுரிவோர்கள், கூட்டுறவு பயிற்சி பெறுவோர் மற்றும் பொதுமக்கள் ஆகியவர்கள் வாங்கி படித்து பயன்பெறுகிறார்கள்.

**67--**

**கிராம கூட்டுறவு சேவை சங்க உறுப்பினர்களுக்கு கடன் வழங்குதல்**

வினா எண் *55346*--**திரு.** ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* கிராம கூட்டுறவு சேவை சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும் புதிய விவசாயப் பயிர்க்கடன் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**விடை--**

**மாண்புமிகு திரு.** கா. ப. பட்டாபிராமன், **கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* மாநிலத்தில், கிராம அளவில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், பயிர் சாகுபடிக்காக குறுகிய கால வேளாண்மைக் கடன்கள் வழங்கி வருகின்றன. வங்கிகளில், பெற்ற முந்தைய கடன்களை திரும்பச் செலுத்திய உறுப்பினர்களுக்கும், கடன் பெற்று தவணை தவறிய நிலுவை இல்லாத உறுப்பினர்களுக்கும், புதிய உறுப்பினர்களுக்கும் பயிர்ச் சாகுபடிக்காக பயிர் கடன்கள் வழங்கப்படுகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[1995 நவம்பர் 3

68--

## கூட்டுறவு மஞ்சள் விற்பனை அங்காடி அமைத்தல்

வினா எண் 53564--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியப் பகுதியில் கூட்டுறவு மஞ்சள் விற்பனை அங்காடி ஒன்றைத் துவக்க அரசு முன்வருமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

பெரியார் மாவட்டத்தின் தலைமையிடமான ஈரோட்டிலிருந்து சுமார் 40 கிலோ மீட்டர் தொலைவில் கொடுமுடி அமைந்துள்ளது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உற்பத்தியாகும் அனைத்து வகை மஞ்சள் விற்பனையும் ஈரோடு நகர எல்லைக்குள் நீண்ட நெடுங்காலமாக செயல்படும் கீழ்க்கண்ட அமைப்புகள் மூலமாக நடத்தப்பட்டு வருகிறது:--

1. ஒழுங்குமுறை விற்பனைக் குழு.

2. ஈரோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம் மற்றும் கோபி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கம், ஈரோடு கிளை.

3. ம்ஞ்சள் வணிகர் சங்கம்.

2. மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள் மூலமாக மஞ்சள் பயிரிடுவோர் ஏற்கத்தக்க வகையில், வணிகர்களின் வசதிக்கு உகந்தவாறு சிறந்த முறையில் மஞ்சள் விற்பனை செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. இந்தியாவில் செயல்படும் பல விற்பனை மையங்களுள் முக்கியமானதொரு மையமாக (Marketing Centre) ஈரோடு விளங்குகிறது. தமிழகத்திலேயே பல்வேறு பகுதிகளில் உற்பத்தியாகும் மஞ்சள் யாவும் ஈரோட்டிற்கு எடுத்து வரப்பட்டு, ஈரோடு நகரத்தில் செயல்படும் கூட்டுறவு விற்பனைச் சங்கம், உள்ளூர் தரகு மண்டி மற்றும் ஏற்றுமதி செய்யும் வணிகர்கள் மூலமே பெரும்பாலும் விற்பனை செய்யப்படுகிறது. தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய மஞ்சள் விற்பனை சந்தையாக

*1995 நவம்பர் 3*]

ஈரோடு விளங்கி வருகிறது. இதனால் மஞ்சள் வணிகர்கள் அனைவரும் ஈரோடு நகரிலேயே நீண்டகாலமாக கிடங்கு மற்றும் இதர வியாபார வசதிகளை ஏற்படுத்திக்கொண்டு வியாபாரம் செய்து வருகின்றனர். இவர்கள் ஈரோடு நகர எல்லைக்கு வெளியே கொடுமுடி போன்ற இடங்களில் மஞ்சள் விற்பனை நிலையம் அமைத்தால் அங்கு சென்று வாங்குவதற்கு முன்வரமாட்டார்கள்.

3. ஈரோடு கூட்டுறவு விற்பனைச் சங்கம் மஞ்சள் விற்பனையில் நற்பெயர் ஈட்டி தொடர்ந்து இலாபகரமாக செயல்பட்டு வருகிறது. கொடுமுடி, மொடக்குறிச்சி பகுதிகளில் அச்சங்கத்தின் செயல் எல்லைக்குள் இருப்பினும், அப்பகுதிகளில் இருந்துவரும் மஞ்சள் அளவு மிகவும் குறைவாக உள்ளதால் கொடுமுடிப் பகுதியில் தனியே விற்பனை அங்காடி ஒன்றினை ஈரோடு கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மூலம் நடத்தினாலும், அதனை இலாபகரமாக இயக்கிட இயலாது. அவ்வாறு மஞ்சள் விற்பனை அங்காடியினைத் துவக்குவதால், ஈரோடு கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் செயல்பாடுகள் பாதிப்புக்கு உள்ளாக நேரிடும். மேலும் கொடுமுடியில் விற்பனை அங்காடி தொடங்கினால் வியாபாரிகளும் அங்கு நடக்கும் ஏல விற்பனையில் கலந்து கொள்வதில் ஆர்வம் காட்டாமாட்டார்கள் என மஞ்சள் வியாபாரிகளிடம் விசாரித்ததில் தெரிய வருகிறது. மேலும், சமீபத்தில் கோபி மற்றும் பொள்ளாச்சியில் மஞ்சள் விற்பனை நிறுவ மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. மேற்குறித்த சூழ்நிலையில் கொடுமுடி வட்டாரத்தில் தனியே ஒரு மஞ்சள் விற்பனை அங்காடி நிறுவுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

**69--**

**விவசாயக் கூட்டுறவு வங்கிகளின் கறவை மாட்டுக் கடன் விவரம்**

வினா எண் *83009*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் மத்திய மற்றும் விவசாயக் கூட்டுறவு வங்கிகளின் மூலம் "கறவை மாட்டுக் கடன்" *1992-93, 1993-94, 1994-95*ஆம் ஆண்டுகளில் பெற்றவர்கள் முறையே எத்தனை பேர்?

**விடை--**

**மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன், கூட்டுறவுத்துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டத்தில் மத்திய மற்றும் விவசாயக் கூட்டுறவு வங்கிகளின் மூலம் கறவை மாட்டுக் கடன் 1992-93ஆம் ஆண்டில் 508 நபர்களுக்கும், 1993-94ஆம் ஆண்டில் 461 நபர்களுக்கும், 1994-95ஆம் ஆண்டில் 1,015 நபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

**70--**

**நகராட்சி நிர்வாகத்தை சீரமைத்தல்**

வினா எண் 7419--திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நகராட்சிகள் நிர்வாகத்தை சீர்மைப்படுத்த குழு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): நகராட்சி மற்றும் மாநகராட்சி நிர்வாகத்தை மேம்படுத்துவது குறித்து ஆராய்ந்து அரசுக்கு பரிந்துரை செய்ய உயர் மட்டக் குழு ஒன்றை அமைப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டது. 73 மற்றும் 74ஆவது அரசியல் சட்ட திருத்தத்தைத் தொடர்ந்து (பஞ்சாயத்து ராஜ் மற்றும் நகர்பாலிகா சட்டங்கள்) மாநில உள்ளாட்சி சட்டங்களுக்குத் தேவையான திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. மேற்படி சட்ட திருத்தங்களின்படி, உள்ளாட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து பரிந்துரைகள் செய்ய மாநில நிதிக் குழு (State Finance Commission) ஒன்று நியமிக்கப்பட உள்ளது. அக்குழு நகராட்சி மற்றும் மாநகராட்சிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய நிதி ஆதாரங்கள் குறித்து அரசுக்கு பரிந்துரை செய்வதோடு மேற்படி உள்ளாட்சி நிர்வாகத்தில் செய்யப்படவேண்டிய சீர்திருத்தங்கள் குறித்தும் அரசுக்கு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

பரிந்துரை செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே மாநகராட்சி மற்றும் நகராட்சி நிர்வாகத்தை சீர்படுத்துவதற்கென தனியாக ஒரு குழு அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

**71--**

**பெரியார் நகரில் சமுதாயக் கூடம் அமைத்தல்**

*வினா எண் 12044*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், நடுவிக்கோட்டை பெரியார் நகரில் 1992-93-ல் ஒரு சமுதாயக் கூடம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், நடுவிக்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த பெரியார் நகரில் சமுதாயக் கூடம் தேவை என்று கருதும் அளவு போதிய மக்கள் தொகை அங்கு இல்லை. மக்கள் தொகை அதிகம் உள்ள இடங்களில் மட்டும் தான் முன்னுரிமை அடிப்படையில் சமுதாயக் கூடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. எனவே, போதுமான மக்கள் தொகை இல்லாததால் பெரியார் நகரில் சமுதாயக் கூடம் கட்ட தற்போது வாய்ப்பு இல்லை.

**72--**

**மானூர் ஊராட்சி சிப்பந்திகளுக்கு சம்பள உயர்வு**

*வினா எண் 15370*--**திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் மானூர் ஒன்றியப் பகுதியிலுள்ள 42 ஊராட்சிகளில் 15 ஆண்டுகளாக பணிபுரிந்துவரும் சிப்பந்திகளுக்கு சம்பளத்தை அதிகப்படுத்திக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், மானூர் ஊராட்சி ஒன்றியத்தில் 42 ஊராட்சிகளில் பணிபுரிந்து வரும் 90 சுகாதார சிப்பந்திகளும், 66 மேல்நிலை நீர்த் தேக்க தொட்டி இயக்குநர்களும் பகுதி நேரம் மட்டும் பணி புரிவதால் தற்போது உயர்ந்த பட்சமாக வழங்கப்படும் ரூ.150-க்கு மேல் அதிக சம்பளம் வழங்க நிதிநிலைமை திருப்திகரமாக இல்லை.

**73--**

**பந்தல்குடி சாலையின் பெயர் மாற்றம்**

வினா எண் 19370--திரு. **சஞ்சய் ராமசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) காமராஜர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகராட்சி பந்தல்குடி சாலையின் பெயரை ஸ்ரீஜெயவிலாஸ் டி.ஆர். சுப்புராஜ் சாலை என பெயர் மாற்றம் செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பெயர் மாற்றம் செய்யப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் நடந்த பிறகு புதியதாகப் பொறுப்பேற்கும் நகர் மன்றத்தின் பரிந்துரையின் பேரில் அருப்புக்கோட்டை நகராட்சி பந்தல்குடி சாலையின் பெயரை ஸ்ரீஜெயவிலாஸ் டி.ஆர். சுப்புராஜ் சாலை என பெயர் மாற்றம் செய்வது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

**74--**

**அடிபம்புகளைப் பழுது பார்த்தல்**

வினா எண் 21977--திரு. **எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

*(அ) மயிலாடுதுறை தொகுதி, ஆடியபிள்ளையார் கோயில் தெருவில் அனைத்து அடிபம்புகளும் பழுதடைந்து இருப்பது அரசுக்குத் தெரியுமா??*

*(ஆ) ஆம் எனில், அவற்றைப் பழுதுபார்க்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மயிலாடுதுறை நகராட்சியில் உள்ள ஆடியபிள்ளையார் கோவில் தெருவில் ஒரே ஒரு கைபம்பு உள்ளது. மேற்கண்ட கைப்பம்பு பழுதாகியிருந்தது பழுது பார்க்கப்பட்டு தற்பொழுது நல்ல நிலையில் இயங்குகிறது.

**75--**

**கடனுதவி விரைவில் வழங்க நடவடிக்கை**

வினா எண் *22678*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*ஐ.ஆர்.டி.பி. மூலம் வழங்கப்படும் கடன் தொகைகளை காலதாமதமின்றி விரைவில் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கிராம மக்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கடனை விரைவில் வழங்க அனைத்து வங்கிகளுக்கும், ரிசர்வ் வங்கி தக்க அறிவுரை வழங்கி வருகிறது. இதைத் தவிர மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெறும் மாதாந்திர ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அனைத்து வங்கி அலுவலர்களுக்கும் ஐ.ஆர்.டி.பி. கடன்களை விரைவில் வழங்க அறிவுரை வழங்கி வருகிறார்.

53/382-16b

[1995 நவம்பர் 3

மாநில அளவில் நடைபெறும் வங்கி அலுவலர்கள் ஆய்வுக் கூட்டத்தில், ஊரக வளர்ச்சி இயக்குநர், ஊரக வளர்ச்சித்துறை செயலாளர், நிதித்துறை செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நலிந்த பிரிவினர்களுக்கு கடன் வழங்குவது குறித்து ஏற்படும் காலதாமதம் குறித்து சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு சென்று தீர்வு காணப்படுகிறது.

**76--**

**தெருப் பெயர்கள் வைத்தல்**

வினா எண் *22696*--**திரு. ஏ.கே.சி** *சுந்தரவேல்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருப்பத்தூர் நகரில் தெருப் பெயர்கள் இல்லாத தெருக்களுக்கு மறைந்த தலைவர்கள் பெயர் வைக்க அரசு முன்வருமா?

**விடை--**

***மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

திருப்பத்தூர் நகராட்சியில் தெருப் பெயர்கள் இல்லாத தெருக்களுக்கு எந்த மறைந்த தலைவர்களின் பெயர்களை வைக்க வேண்டுமோ அதை நகராட்சிக்கு உறுப்பினர் தெரிவித்தால் நகர்மன்றத்தின் ஒப்புதல் பெற்ற பின்னர் நகராட்சி நிர்வாக இயக்குநரிடமிருந்து செயற்குறிப்பு பெறப்பட்டால், அரசு அதனை பரிசீலனை செய்து முடிவெடுக்கும்.

**77--**

**செல்வம் நகருக்கு குடிநீர் வசதி**

வினா எண் *23484*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரவக்குறிச்சி தொகுதி, சின்னதாராபுரம், செல்வம் நகருக்கு அமராவதி ஆற்றுத் தண்ணீரை குழாய்கள் மூலம் சப்ளை செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அரவக்குறிச்சித் தொகுதி, சின்ன தாராபுரம், செல்வம் நகருக்கு குடிநீர் வழங்க, அமராவதி ஆற்றின் மேற்புறம் மற்றும் அருகில் மேற்கொண்ட ஆய்வில் நீராதாரம் கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லாததால், குழாய்கள் மூலம் அமராவதி ஆற்று நீரை செல்வம் நகருக்கு விநியோகிக்க வாரியத்திட்டம் வரும் ஆண்டுகளில் திட்டம் ஏதுமில்லை. மேலும், தற்போது செல்வம் நகருக்கு சின்ன தாராபுரத்தில் உள்ள ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

**78--**

**பரமக்குடி நகராட்சியில் தனித்தனியாக கதவிலக்க எண்கள் வழங்குதல்**

*வினா எண் 25128*--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*பரமக்குடி நகராட்சி, பாலன் நகரில் 3/532 இலக்க எண்ணில் உள்ள 70க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு தனித்தனியாக கதவிலக்க எண்கள் வழங்க அரசு முன்வருமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பரமக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பாலன் நகரில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் உட்பிரிவு கதவு எண்கள் தற்போது இருந்து வருகின்றன. தமிழ்நாடு சட்டமன்ற வாக்காளர் பட்டியல் தொடர்பான பணி தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதால் நகராட்சிகளில் புதிய கதவு இலக்கங்கள் கொடுப்பதற்கு தடை உள்ளது. இத்தடை நீக்கம் செய்யப்பட்ட பிறகு புது கதவிலக்கம் கொடுக்க அரசு அனுமதி அளிக்கும்போது பாலன் நகரிலுள்ள உட்பிரிவு எண்கள் கொண்ட வீடுகளுக்கு தனித்தனியாக கதவிலக்க எண்கள் நகராட்சி ஆணையாளரால் கொடுக்கப்படும்.

**79--**

### பரமக்குடி நகராட்சியில் தனித்தனி கதவிலக்க எண்கள் வழங்குதல்

வினா எண் *25129*--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*பரமக்குடி நகராட்சி காமராஜ் நகர், திருவள்ளுவர் நகர், பர்மா காலனி போன்ற பகுதிகளில் 12/338 என்ற ஒரே கதவிலக்க எண்ணில் உள்ள 1,000-த்துக்கும் மேற்பட்ட வீடுகளுக்கு தனித்தனியாக கதவிலக்க எண்கள் வழங்க அரசு முன்வருமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பரமக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட காமராஜ் நகர், திருவள்ளுவர் நகர், பர்மா காலனி பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் உட்பிரிவு கதவு எண்கள் தற்போது இருந்து வருகிறது. தமிழ்நாடு சட்டமன்ற வாக்காளர் பட்டியல் தொடர்பான பணி தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதால் நகராட்சிகளில் புதிய கதவு இலக்கங்கள் கொடுப்பதற்கு தடை உள்ளது. இத்தடை நீக்கம் செய்யப்பட்ட பிறகு புது கதவிலக்கம் கொடுக்க அரசு அனுமதி அளிக்கும்போது பாலன் நகரிலுள்ள உட்பிரிவு எண்கள் கொண்ட வீடுகளுக்கும் தனித்தனியாக கதவிலக்க எண்கள் நகராட்சி ஆணையாளரால் கொடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

**80--**

### பரமக்குடி நகராட்சியில் தனித்தனியாக கதவிலக்க எண்கள் வழங்குதல்

வினா எண் *25130*--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*பரமக்குடி நகராட்சி எம்.ஜி.ஆர். நகரில் 3/538 இலக்க எண்ணில் உள்ள 300-க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு தனித்தனியாக கதவிலக்க எண்கள் வழங்கிட அரசு முன்வருமா?*

*1995 நவம்பர் 3]*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பரமக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட எம்.ஜி.ஆர். நகரில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் உட்பிரிவு கதவு எண்கள் தற்போது இருந்து வருகின்றது. தமிழ்நாடு சட்டமன்ற வாக்காளர் பட்டியல் தொடர்பான பணி தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதால் நகராட்சிகளில் புதிய கதவு இலக்கங்கள் கொடுப்பதற்கு தடை உள்ளது. இத்தடை நீக்கம் செய்யப்பட்டபிறகு புது கதவிலக்கம் கொடுக்க அரசு அனுமதி அளிக்கும்போது எம்.ஜி.ஆர். நகரில் உள்ள உட்பிரிவு எண்கள் கொண்ட வீடுகளுக்கும் தனித்தனியாக கதவிலக்க எண்கள் நகராட்சி ஆணையரால் கொடுக்கப்படும்.

**81—**

**செங்கோட்டை ஒன்றியத்தில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல்**

*வினா எண் 28519—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் செங்கோட்டை ஒன்றியத்தில் கீழ்க்கண்ட கிராமங்களில் தொலைக்காட்சிப் பெட்டி வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*மூன்று வாய்க்கால், தவணை, செம்பூர், தெற்குமேடு, பார்வதிபுரம், பூலான்குடியிருப்பு, புதூர், புளியறை, சாம்பவர் வடகரை மற்றும் சீவநல்லூர்.*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தெற்குமேடு, புளியறை மற்றும் சீவநல்லூர் ஊராட்சிகளில் தொலைக்காட்சிப் பெட்டிகள் உள்ளன. செம்பூர் என்ற கிராமத்தை உள்ளடக்கிய இனங்காடு ஊராட்சியில் தொலைக்காட்சிப் பெட்டி உள்ளது.

மூன்று வாய்க்கால், தவணை, பார்வதிபுரம், பூலான் குடியிருப்பு, புதூர், சாம்பவர் வடகரை ஆகிய பகுதிகள் பேரூராட்சிப் பகுதிகளைச் சார்ந்ததாகும். போதிய நிதிவசதியில்லாமையால் இப்பகுதிகளில் தொலைக் காட்சிப் பெட்டிகள் தற்சமயம் அமைக்கப்படவில்லை.

**82--**

**சுடுகாடு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்கள் மீது நடவடிக்கை**

வினா எண் *33115*--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருப்பத்தூர் நகர் கிருஷ்ணகிரி சாலையிலுள்ள சுடுகாடு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களின் மீது நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருப்பத்தூர் நகர எல்லைக்குள் கிருஷ்ணகிரி சாலையிலுள்ள வார்டு எண் *2* நகரளவு எண் *2*-ல் உள்ள சுமார் *19* ஏக்கர் *6,488* சதுர அடி கொண்ட சுடுகாடு புறம்போக்கு நிலத்தில் சுமார் *36,494* சதுர அடிபரப்பில் இருந்த ஆக்கிரமிப்புகள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது.

**83--**

**கடனுதவி மூலம் வாங்கப்படும் கறவைமாடுகளின் பாலை கூட்டுறவு பால் விற்பனை சங்கத்திற்கு வழங்குதல்**

வினா எண் *33256*--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாடு ஆதிதிராவிடர் வளர்ச்சிக் கழகம் மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (THADCO and IRDP) கடன் பெற்று வாங்கப்படும் கறவை மாடுகளின் பாலை கூட்டுறவு பால் விற்பனைச் சங்கத்திற்கு வழங்கிட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ): ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கறவை மாடுகள் வாங்குவதற்கான கடன் அளிக்கும் போது கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் உள்ள இடங்களை மனத்தில் கொண்டும் கடன் அளித்த பிறகு மேற்கண்ட கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக சேருவார்கள் என்ற முதன்மை அடிப்படையிலேயே கடன் அளிக்கப்படுகிறது. கறவை மாடுகளைப் பெறும் பயனாளிகள் பாலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு விற்பனை செய்து வருகின்றனர். மேலும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வளர்ச்சிக் கழகத் திட்டத்தின் கீழ் கறவை மாடுகளை இந்து ஆதிதிராவிட பயனாளிகளுக்கு தமிழ்நாடு பாலுற்பத்தி மற்றும் மேம்பாட்டுத் துறையின் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. இதுவும் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக செயல்பட்டு வருகிறது.*

**84--**

**பெரியார் மாவட்டத்தில் நிழற்குடைகள் அமைத்தல்**

*வினா எண் 34251--***திருமதி கவிநிலவு தர்மராஜ்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*கொடுமுடி, அரச்சலூர், சிவகிரி, கணபதிபாளையம், மொடக்குறிச்சி, தாமரைப்பாளையம், நடுப்பாளையம் ஆகிய இடங்களில் உள்ள தார்ச்சாலை சந்திப்புகளில் நிழற்குடைகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி, சிவகிரி, அரச்சலூர் ஆகிய இடங்களில் தார்ச்சாலை சந்திப்புகளில் ஏற்கனவே நிழற்குடைகள் உள்ளன. கொடுமுடி, கணபதிபாளையம், தாமரைப்பாளையம், நடுப்பாளையம் ஆகிய இடங்களில் உள்ள தார்ச்சாலை சந்திப்புகளில்

நிதிப்பற்றாக்குறையினால் நிழற்குடைகள் அமைக்க இயலவில்லை. உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலைமை சீரானதும் நிழற்குடைகள் அமைக்கப்படும்.

**85--**

**கிருஷ்ணகிரி மற்றும் வேப்பனப்பள்ளி ஒன்றியங்களில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல்**

வினா எண் *34255*--**திரு. கே. முனிவெங்கடப்பன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* கிருஷ்ணகிரி மற்றும் வேப்பனப்பள்ளி ஒன்றியங்களில் எத்தனை கிராமங்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன?

*(ஆ)* தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படாத கிராமங்களுக்கு எப்போது வழங்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* கிருஷ்ணகிரி ஒன்றியத்திலுள்ள *92* கிராமங்களுக்கும் வேப்பனப்பள்ளி ஒன்றியத்திலுள்ள *95* கிராமங்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

*(ஆ)* தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படாத கிராமங்களுக்கு ஊராட்சிகளின் நிதி வசதியை அனுசரித்தும் நிதி வசதி குறைந்த ஊராட்சிகளுக்கு அரசு மான்யமாக வழங்கப்படுவதை அனுசரித்தும் வரிசைப்படி தொலைக்காட்சிப் பெட்டி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**86--**

**துறையூர் ஒன்றியத்தில் கடனுதவி பெற்றோர் விவரம்**

வினா எண் *34414*--**திரு. வி. ரவிச்சந்திரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

1995 நவம்பர் 3]

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் ஒன்றியம், கானப்பாடி கிராமத்தில் 1993-94-ஆம் ஆண்டில் ஐ.ஆர்.டி.பி. கடன் வழங்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(ஆ) கடன் வழங்கப்பட்டவர்களில் பெண்கள் எத்தனை பேர்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் ஒன்றியம், கானப்பாடி கிராமத்தில் 1993-94-ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன்கள் ஏதும் இல்லை.

**87--**

**சலவன்பேட்டை சலவைத்துறைக்கு இலவச மின் இணைப்பு வழங்கல்**

வினா எண் 36483--திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வேலூர் நகராட்சி சலவன்பேட்டை சலவைத் துறைக்கு இவ்வாண்டிலேயே இலவச மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் நகர், சலவன்பேட்டையில், சலவைத்துறை என்று தனியாக ஏதும் கிடையாது. சலவன்பேட்டை மலையடிவாரத்தில் நகராட்சிக்கு சொந்தமான இடுகாடு உள்ளது. இடுகாட்டிற்கு சென்று வருபவர்களின் வசதிக்காக அங்குள்ள கிணற்றில் மின்மோட்டார் வசதியுடன் குளிப்பதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த இடத்திற்கு அருகில் உள்ள காலி இடத்தில் அங்குள்ள சலவைத் தொழிலாளர்களின் கோரிக்கைக்கேற்ப தண்ணீர் தொட்டி வசதியுடன் ரூ.50,000 செலவில் சலவைத் துறை கட்ட நடவடிக்கையில் உள்ளது. தற்போது அந்த இடத்தில் மின்சார வசதியுடன் மின்மோட்டார் இயக்கத்தில் உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

88--

### பழுதடைந்த குடிநீர்க்குழாய்களை சீர்செய்ய நடவடிக்கை

வினா எண் *36710*--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

இராமநாதபுரம் மாவட்டத்தில் பழுதடைந்துள்ள இணைப்புக் குழாய்களை சீர் செய்ய ஆவன செய்யப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இராமநாதபுரம் மாவட்டத்தில் கூட்டுக் குடிநீர் திட்டங்களில் பழுதடைந்துள்ள குழாய்களை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அனைத்து கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கும் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது.

89--

### கோமல் பேருந்து நிலையத்தை பழுதுபார்த்தல்

வினா எண் *36771*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

குத்தாலம் தொகுதி, குத்தாலம் ஒன்றியம், கோமல் கிராமத்தில் சேதமடைந்துள்ள பேருந்து நிலையத்தைப் பழுது பார்த்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கோமல் ஊராட்சியில் பேருந்துநிலையம் எதுவும் இல்லை. நிழற்குடை உள்ளது. 1993-94 நிதியாண்டில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் புதிதாக பேருந்து நிழற்குடை ஒன்று கட்டப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து 50 அடி தூரத்தில் அமைந்துள்ள பழுதடைந்த பேருந்து நிழற்குடையும் தற்போது பழுதுநீக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது.

*1995 நவம்பர் 3]*

**90--**

**பாண்டியன் நகரில் நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

வினா எண் *37884*--**திரு. ஜெ. பாலகங்காதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருத்தங்கல் பேரூராட்சி, பாண்டியன் நகரில் தரைமட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருத்தங்கல் பேரூராட்சியில் கலைமகள் இளநிலைப்பள்ளி அருகில், பழனிச்சாமி நாடார் தெருவில் *8.00* இலட்சம் லிட்டர்கள் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று கட்டப்பட்டு, மேற்படி மேல்நிலைத் தொட்டியிலிருந்து பாண்டியன் நகருக்கு குடிநீர் பகிர்மானக் குழாய் மூலம் வழங்கப்படுகிறது. எனவே, பாண்டியன் நகரில் புதிதாக தரைமட்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்ட செயற்குறிப்பு எதுவும் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

**91--**

**சுந்தர் நகருக்கு குடிநீர் திட்டம்**

வினா எண் *38010*--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சியின் அருகில் உள்ள சுந்தர் நகருக்கு நகராட்சியின் குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பரமக்குடி நகராட்சியில் உள்ள குடிநீர்த் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் நீரின் அளவு தேவையைவிடக் குறைவாக உள்ளதால்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

இத்திட்டத்திலிருந்து சுந்தர் நகருக்கு குடிநீர் வழங்க இயலாத நிலை உள்ளது. இதனைக் கருத்திற் கொண்டு சுந்தர் நகர் உள்ளிட்ட புறநகர் பகுதிகள் மற்றும் பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீர் அபிவிருத்தித் திட்டம் செயலாக்க ரூ.2.80 இலட்சங்களுக்கு ஆய்வு மதிப்பீடு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு, இந்த ஆய்வுக் கட்டணத்தை செலுத்துமாறு பரமக்குடி நகராட்சி ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். இக்கட்டணம் செலுத்தப்பட்டவுடன் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**92--**

**கள்ளிக்குடி ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு குடிநீர்வசதி**

வினா எண் *38022*--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பரமக்குடி தொகுதி, சோமாத்தூர் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தில் இருந்து கள்ளிக்குடி ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு தண்ணீர் விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் நடைமுறைப்படுத்தப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஏற்கனவே குடிநீர்த் திட்டம் செயலாக்கத்தில் உள்ளது. பல ஆண்டுகளாகவே, கள்ளிக்குடி ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு கோமாத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் இரண்டு பொது குடிநீர் குழாய்கள் அமைக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**93--**

**குத்தாலம் தொகுதியில் ஒலி எழுப்பான் அமைத்தல்**

வினா எண் *46595*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம்-குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், கோனேரிராஜபுரம் ஊராட்சியில் மக்களும், மாணவ மாணவியரும் நேரம் அறிய "ஒலி எழுப்பான்" சங்கு ஒன்று அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம்-குத்தாலம் ஊராட்சி ஒன்றியம், கோனேரிராஜபுரம் ஊராட்சி 4359 மக்கள் தொகை கொண்ட ஒரு சாதாரண குறைந்த வருமானம் உள்ள ஊராட்சியாகும். இங்கு பெரியதாக தொழிற்பேட்டைகளோ மற்றும் எந்த அலுவலகங்களோ கிடையாது. எனவே ஒலி எழுப்பான் சங்கு அமைக்க வேண்டிய தேவையில்லை என்று கருதப்படுகிறது.

**94.-**

**ஊராட்சிகளுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல்**

வினா எண் 53515--டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பேரணாம்பட்டு தொகுதியின் அனைத்து ஊராட்சிகளுக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு வழங்கப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் 1995-96-ம் ஆண்டில் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும்.

**95--**

**குடும்பக் கடனுதவி பெற்றோர் விவரம்**

வினா எண் 59813--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் குடும்பக் கடன் உதவி திட்டத்தில் பயன்பட்ட குடும்பங்கள் எத்தனை?

(ஆ) இத்திட்டத்திற்கென செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 1994-95-ஆம் ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் குடும்பக் கடன் திட்டத்தில் பயன்பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை 73.

(ஆ) இத்திட்டத்திற்கென செலவிடப்பட்ட தொகை:

| | | |
|---|---|---|
| மானியம் | .. .. .. | ரூ. 2.99 லட்சம் |
| கடன் | .. .. | ரூ. 4.52 லட்சம் |
| மொத்தம் | .. | ரூ. 7.51 லட்சம் |

**96--**

**பாலகிருஷ்ணம்பட்டி, சிறுநாவலூரில் உயர்நிலைப்பள்ளி, விடுதி அமைத்தல்**

வினா எண் 34401--திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, பாலகிருஷ்ணம்பட்டி ஆதிதிராவிடர் உயர்நிலைப் பள்ளி மற்றும் சிறுநாவலூரில் அரசினர் மாணவர் விடுதி அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

***மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:***

*(அ) உப்பிலியாபுரம் தொகுதி, பாலகிருஷ்ணன்பட்டியில் ஒரு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியும் சிறுநாவலூரில் அரசினர் மாணவர் விடுதியும் ஏற்கனவே இயங்கி வருகிறது.*

*(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.*

**97--**

**ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு நடைபாதை அமைத்தல்**

வினா எண் *46574*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், முகாசி அனுமன்பள்ளி ஊராட்சி ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு நடைபாதை அமைத்துத் தரப்படுமா?

**விடை--**

***மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:***

*முகாசி அனுமன்பள்ளி கிராம ரி.ச. 327–10, 328–4-ல் காந்திநகர் ஆதிதிராவிடர் குடியிருப்பு உள்ளது. இச்சாலைகளிலிருந்து முகாசி அனுமன்பள்ளி கிராமத்திற்கு செல்ல இணைப்புச் சாலை வசதி ஏற்படுத்தித்தர செய்யப்பட்ட கோரிக்கைகளின் பேரில் முகாசி அனுமன்பள்ளி கிராம ரி.ச. 278–5, 279-8, 325-1, 328-7–ல் 0.23.5 ஹெக்டேர் நில எடுப்பு செய்ய நடவடிக்கை தொடரப்பட்டு அவார்டு தீர்ப்பும் 6–6–1994–ல் பகரப்பட்டுள்ளது.*

*நில உடமையாளர்கள் நில எடுப்பு துவக்க நிலையிலேயே தொடர்ந்த வழக்கின்பேரில் சென்னை உயர்நீதிமன்றம் நீதிப்பேராணை பல்வகை மனு எண் 15035/93 (நி.பே. மனு 9764/93), நாள் 18–5–1993–ல் நிலத்தைச் சுவாதீனம் எடுக்கமட்டும் தடை விதித்துள்ளதால் நிலம் சுவாதீனம் எடுக்கப்பட வேண்டியுள்ளது. இவ்வழக்கு முடிவுற்றவுடன் நிலத்தை சுவாதீனம் எடுத்து இணைப்புச் சாலை வசதி செய்து தரப்படுமென பெரியார் மாவட்டாட்சியர் தெரிவித்துள்ளார்.*

98--

## திருப்பத்தூர் தொகுதியில் சுடுகாடு அமைத்தல்

வினா எண் 47432--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, சின்ன வெங்காயப்பள்ளி ஆதிதிராவிடர்களுக்கு சுடுகாடு அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை**--

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): 1994-95 (ம) 1995-96-ஆம் ஆண்டிற்குள் 2,123 குடியிருப்புகளுக்கு மயானம் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை 355 குடியிருப்புகளுக்கு மயான வசதி செய்துதரப்பட்டுள்ளது. மீதமுள்ள 1,768 குடியிருப்புகளுக்கும் 31-12-1995-க்குள் மயான வசதி செய்துதரப்பட வேண்டும். இவற்றில் மயானங்களுக்கு இடம் நில ஆர்ஜித நடவடிக்கையில் உள்ளது. 1,123 குடியிருப்புகளுக்கு நில எடுப்பு மூலம்தான் மயான வசதி செய்து தரப்பட முடியும். தனியார் நிலங்களை விலைக்கு வாங்கி துரிதமாகச் செயல்பட முடிவு எடுக்கப்பட்டுள்ளது. 1995-ஆம் ஆண்டின் முடிவிற்குள் எல்லா ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கும் மயானம் (ம) மயானப்பாதை வசதிகள் செய்துதரப்பட வேண்டும் என அரசு முடிவு எடுத்துள்ளது.

99--

## காரங்குடாவில் கோவிலைப் புதுப்பித்தல்

வினா எண் 6951--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், காரங்குடாவில் உள்ள கோவிலைப் புதுப்பித்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*1995 நவம்பர் 3*]

**விடை--**

**மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

இல்லை. காரங்குடாவில் உள்ள அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இல்லாத திருக்கோயிலாகும்.

**100--**

**திருக்கோவில்களில் திருடுபோன பொருள்களின் மதிப்பு**

வினா எண் *15799*--**டாக்டர் எஸ். கந்தரராஜ்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள திருக்கோவில்களில் *1991-92*-ல் திருடுபோன பொருட்களின் மதிப்பு எவ்வளவு?

(ஆ) மீட்கப்பட்ட பொருட்களின் மதிப்பு எவ்வளவு?

**விடை--**

**மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள திருக்கோயில்களில் *1991-92*ஆம் ஆண்டில் களவுபோன பொருட்கள் மற்றும் உண்டியல் தொகை ஆகியவற்றின் மொத்த மதிப்பு ரூ.*18,800* ஆகும்.

(ஆ) களவுபோன பொருட்களோ அல்லது உண்டியல் தொகையோ மீட்கப்படவில்லை. காவல் துறை புலனாய்வு செய்து வருகிறது.

[*1995 நவம்பர் 3*

## ஐந்தாம் பட்டியல்

1--

**விராலிப்பட்டி சித்த மருத்துவமனைக்குக் கூடுதல் செவிலியர் நியமித்தல்**

வினா எண் *25496*--**திரு. சி. சுவாமிநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கந்தர்வக்கோட்டை ஒன்றியம், விராலிப்பட்டியில் இருக்கும் சித்த மருத்துவமனைக்குக் கூடுதல் செவிலியர் நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் விராலிப்பட்டியில் சித்த மருத்துவமனை இல்லை. எனவே கூடுதல் மருத்துவ செவிலியர் நியமனம் பற்றிய கேள்விக்கு இடமில்லை.

2--

**கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சி.டி. ஸ்கேன் வசதி**

வினா எண் *38819*--**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கோயம்புத்தூரில் உள்ள அரசு கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சி.டி. ஸ்கேன் வசதி செய்து தரப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) இல்லையெனில், இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கையின் முழு விவரம் யாவை?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): கோயம்புத்தூரில் உள்ள அரசு கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சி.டி. ஸ்கேன் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**3--**

**திருப்பத்தூர் தொகுதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல்**

வினா எண் *40714*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு -அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி பெரிய மோட்டூர் குரிசிலாப்பட்டு, பூங்குளம் ஆகிய கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

குரிசிலாப்பட்டு, பூங்குளம் ஆகிய கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லை. ஆனால் துணை சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. பூங்குளத்தில் உள்ள துணை சுகாதார நிலையம் வாடகைக் கட்டிடத்திலும், குரிசிலாப்பட்டு துணை சுகாதார நிலையம் அரசுக் கட்டிடத்திலும் இயங்கி வருகின்றன. பெரிய மோட்டூரில் துணை சுகாதார நிலையம் அல்லது ஆரம்ப சுகாதார நிலையம் எதுவும் இல்லை. கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**4--**

**இராஜாமடத்தில் சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *43617*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், இராஜாமடத்தில் இயங்கி வரும் பிரதம சுகாதார நிலையத்திற்கு முன்னாள் ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களினால் இனாம் வழங்கப்பட்ட இடத்தில் கட்டிடம் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்ட இவ்வாண்டு மே திங்களில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

5--

மஜீரா கொல்லம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் *47960*--திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வீரபாண்டி தொகுதி, மஜீரா-கொல்லம்பட்டியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டித் தரப்படுமா?

விடை--

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

பொது மக்கள் நன்கொடையான ரூ. 10,000மும் கட்டிடம் கட்ட தேவையான நிலமும் பெறப்படாமையால் வீரபாண்டி தொகுதி மஜீரா கொல்லம்பட்டியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்ட தற்சமயம் வாய்ப்பில்லை.

6--

ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு விஷமுறிவு மருந்து வழங்குதல்

வினா எண் *47997*--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் நகர மருத்துவ மனைகளிலும் வெறி நாய், பாம்புக் கடி விஷ முறிவு மருந்து இருப்பில் வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1995 நவம்பர் 3]

(ஆ) ஆமெனில், எப்பொது?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர மருத்துவமனைகளின் தேவைக்கேற்ப வெறி நாய்க்கடி, பாம்புக்கடி ஆகியவற்றிற்கான விஷ முறிவு மருந்துகளை கிண்டி கிங் நிலையத்தில் இருந்து பெற்றுக் கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. பாம்புக் கடிக்கான விஷமுறிவு மருந்து 15-6-1995 முதல் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் மூலம் அனைத்து மருத்துவ நிலையங்களுக்கும் விநியோகம் செய்யப்படுகிறது.

**7--**

**ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு போதிய அளவு மருந்துகள் வழங்குதல்**

வினா எண் 47998--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஆரம்ப சுகாதார நிலையங்களில் நோயாளிகளுக்கு உயிர்காக்கும் மருந்துகள் இருப்பில் இருப்பதற்கு போதிய வசதி செய்து கொடுக்கப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

ஆரம்ப சுகாதார நிலையங்களில் நோயாளிகளுக்குத் தேவையான உயிர் காக்கும் மருந்துகள் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் மூலமாக மாவட்டங்களில் அமைக்கப்பட்டிருக்கும் சேமிப்பு கிடங்கில் இருந்து விநியோகிக்கப்படுகின்றன. இம்மருந்துகள் ஒரு மாத இருப்பு உள்ளவாறு வழங்கப்படுகின்றன. இக்கழகத்தால் வழங்கப்படாத மருந்துப் பொருட்களை அந்தந்த மருத்துவமனைகளின் அவசரத் தேவைக்கேற்ப அவரவர்கட்கு வரையறுக்கப்பட்ட நிதி வரம்புக்குட்பட்டு உள்ளூர்

கொள்முதல் செய்து கொள்ள நிலையான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

8--

**கோனேரிராஜபுரம் அரசு மருத்துவமனைக்கு மருந்துகளை வழங்குதல்**

*வினா எண் 48686*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகை-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், கோனேரிராஜபுரம் ஊராட்சியில் உள்ள அரசு மருத்துவமனைக்கு "உயிர் காக்கும் அத்தியாவசிய மருந்துகளை" போதிய அளவு வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

**விடை**--

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

நாகை-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி மயிலாடுதுறை வட்டம், கோனேரிராஜபுரம் ஆரம்ப சுகாதார நிலையம் உட்பட அனைத்து மருத்துவ நிலையங்களுக்கும் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் மூலமாக மாவட்டங்களில் அமைக்கப்பட்டிருக்கும் சேமிப்பு கிடங்கிலிருந்து தேவையான அனைத்து மருந்துகளும் விநியோகிக்கப்படுகின்றன. இக்கழகத்தால் வழங்கப்படாத மருந்துப் பொருட்களை அந்தந்த மருத்துவமனைகளின் அவசரத் தேவைக்கேற்ப அவரவர்கட்கு வரையறுக்கப்பட்ட நிதி வரம்புக்கு உட்பட்டு உள்ளூர் கொள்முதல் செய்து கொள்ள நிலையான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

9--

**திருச்சி அரசு பொது மருத்துவமனைக்கு சி.டி. ஸ்கேன் வசதி**

*வினா எண் 61855*--**டாக்டர் ஜி. ஆர். மாலா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

*திருச்சிராப்பள்ளி அரசு பொது மருத்துவமனைக்கு சி.டி. ஸ்கேனர் கருவி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

திருச்சிராப்பள்ளி அரசு பொது மருத்துவமனைக்கு சி.டி. ஸ்கேன் வழங்க தற்சமயம் அரசிடம் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

**10--**

**கரூர்-அத்திப்பாளையத்திற்குப் பேருந்து இயக்குதல்**

*வினா எண் 35100--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*கரூரிலிருந்து க. பரமத்தி, முன்னூர், வேலம்பாளையம் வழியாக அத்திப்பாளையத்திற்கு தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக நகரப் பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

கோரிக்கையின் வழித் தடத்தின் தூரம் 29 கி.மீ. இத்தடத்தில் கரூரிலிருந்து க.பரமத்தி வரை இக்கழகத்தின் நகரப் பேருந்து மூலம் 6 நடைகளும் கரூரிலிருந்து அத்திப்பாளையம் வரை தனியார் புறநகர் மினி பேருந்து மூலம் தினசரி 8 நடைகளும் இயக்கப்பட்டு வருகிறது. இப்பகுதியின் சாலை தன்மை கரூர்-முன்னூர் பிரிவு 24 கி.மீ தார்சாலை, முன்னூர் பிரிவு-முன்னூர் 1 கி.மீ. கப்பி சாலை பெயர்ந்த நிலையில் உள்ளது. முன்னூர் -அத்திப்பாளையம் 4.0 கி.மீ. மண் சாலை. மேற்படி வழித்தடத்தில் சாலைகள் பெயர்ந்த நிலையில் கப்பி சாலையாகவும் மண் சாலையாகவும் சாலையின் அகலம் குறுகலாகவும் இருப்பதால் இப்பகுதியில் பேருந்து இயக்க இயலாது. முன்னூர்-அத்திப்பாளையம் வரை உள்ள 4.0 கி.மீ. பகுதியில் தற்பொழுது, மெட்டல் சாலை அமைப்பதற்காக ஜல்லி கற்கள் கொட்டப்பட்டுள்ளன. இந்த 4.0 கி.மீ.

மண் சாலையில் மெட்டல் சாலை அமைக்கும் பணி நிறைவடைந்த உடன் கோட்ட பொறியாளரிடம் சாலை தகுதி சான்றிதழ் பெற்ற பின்பு பேருந்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ள இயலும்.

**11--**

**தச்சம்பாளையத்திற்குப் பேருந்து இயக்குதல்**

வினா எண் *38406*--**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், பெரியப்பட்டியிலிருந்து சிதம்பரத்திற்கு இயக்கப்படும் 6-ஆம் எண் பெரியார் போக்குவரத்துக் கழகப் பேருந்தை தச்சம்பாளையம் வரை இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

பேருந்து வசதி கோரிடும் தச்சம்பாளையம் கிராமம் பெரியப்பட்டியிலிருந்து 2 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. மேற்படி சாலையினை தட ஆய்வு செய்ததில் பெரியப்பட்டு--தச்சம்பாளையம் இடைப்பட்ட 2 கி.மீ சாலையில் 0.5 கி.மீ. சாலைப் பகுதி தவிர எஞ்சியுள்ள 1.5 கி.மீ சாலைப் பகுதிகள் இதுநாள் வரை செப்பனிடப்படாத நிலையில் பேருந்து இயக்கத்திற்கு சற்றும் தகுதியற்ற நிலையிலேயே உள்ளமையால், தற்போது உள்ள சாலையின் நிலையில் சித்தம்பரம் பெரியப்பட்டு தடத்தில் இயங்கிடும் தடம் எண் டி.6 நகரப் பேருந்து உள்ளது. பாளையம் வரை நீட்டித்து இயக்கிட இயலாத நிலை.

**12--**

**பெரிய மோட்டூர் வழியாக நாட்றம்பள்ளிக்குப் பேருந்து இயக்குதல்**

வினா எண் *43439*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

திருப்பத்தூர் தொகுதியிலுள்ள ஜோலார்பேட்டை ஒன்றியம், பெரிய மோட்டூர் வழியாக நாட்றம்பள்ளிக்குப் புதியதாகப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

பெரிய மோட்டூர் கிராமம் பேருந்து வசதி பெற்ற பார்சம் பட்டு, புத்துக்கண்ணு சாலை பிரிவில் சுமார் 0.5 கி.மீ. நடக்கும் தூரத்தில் உள்ளது. அரசு கொள்கைபடி பேருந்து வசதி பெற்ற நெடுஞ்சாலையிலிருந்து 1.0 கி.மீ தூரம் உள்ள அனைத்து கிராமங்களும் பேருந்து வசதி பெற்ற கிராமங்களாகவே கருதப்படுவதால் மேற்படி தடத்தில் புதிய பேருந்து இயக்க இயலாது.

**13--**

**திண்டிவனம்-மரக்காணம் பேருந்தை நீட்டித்து இயக்குதல்**

வினா எண் 45929--**திரு. எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திண்டிவனம் முதல் மரக்காணம் வரை செல்லும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் தடம் எண் 87பி மற்றும் தடம் எண் 218 எம் பேருந்தை கனகசெட்டிகுளம் வரை நீட்டிப்பு செய்துதர அரசு முன்வருமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

திண்டிவனம்-கனகசெட்டிகுளம் பகுதியில் நேரடி பேருந்து வசதியில்லா நிலை இருப்பினும், திண்டிவனம்-மரக்காணம் மற்றும் மரக்காணம்-கனகசெட்டிகுளம் தடப் பகுதிகள் போதிய அளவு பேருந்து வசதிகளைப் பெற்றவையாகும். தற்போதுள்ள பேருந்து வசதிகள் விவரம் பின்வருமாறு:

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

| தடப்பகுதி | பேருந்து எண்ணிக்கை | | நடைகள் |
|---|---|---|---|
| (1) | (2) | | (3) |
| திண்டிவனம்-- மரக்காணம் | அரசு போக்குவரத்துக் கழக பேருந்து | 3 | 16 |
| | தனியார் பேருந்து | 13 | 50 |
| மரக்காணம்-- கனகசெட்டிகுளம் | அரசு போக்குவரத்துக் கழக பேருந்து | 19 | 50 |
| | தனியார் பேருந்து | 19 | 102 |

தட நீட்டிப்பு செய்திடக் கோரும் பகுதி மேற்குறிப்பிட்டவாறு போதிய பேருந்து வசதிகளைப் பெற்றுள்ளமையாலும், கனக செட்டிகுளம் கிராமம், பாண்டி மாநிலத்திலடங்கியுள்ளதாலும் 87பி, 218எம் தடப் பேருந்துகளை கனகசெட்டிகுளம் வரை நீட்டித்து இயக்கிடும் அவசிய நிலை இல்லை.

**14--**

**பள்ளப்பட்டி-மயிலாடுதுறைக்குப் பேருந்து வசதி**

*வினா எண் 45959*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா :** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சி மாவட்டம், பள்ளப்பட்டி, மயிலாடுதுறைக்கு கரூர், திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம் வழியாக பேருந்து வசதி செய்வதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

திருச்சி மாவட்டம், பள்ளப்பட்டியிலிருந்து மயிலாடுதுறைக்கு கரூர், திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம் வழியாக பேருந்து இயக்குவதற்கு செயற்குறிப்பு ஏதும் இல்லை.

*1995 நவம்பர் 3]*

**15--**

**பேராவூரணி--இராமேஸ்வரம் பேருந்து இயக்குதல்**

*வினா எண் 47859--***திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*தஞ்சை மாவட்டம், பேராவூரணியிலிருந்து மதுரை வழியாக இராமேஸ்வரத்திற்கு ஒரு பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை--**

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:***

*பேராவூரணியிலிருந்து இராமேஸ்வரத்திற்கு மதுரை வழியாகப் பேருந்து இயக்குவது சுற்று வழித்தடமாகும். இது பயண நேரத்தையும், பயணக் கட்டணத்தையும் அதிகரிக்கும். நேரடியாகச் செல்லும் பயணிகள் இதனை விரும்பமாட்டார்கள். எனவே இந்த வழித் தடத்தில் பேருந்து இயக்குவது சாத்தியமில்லை.*

**16--**

**ஈரோடு-வைரமடை நகரப் பேருந்தை இயக்குதல்**

*வினா எண் 52171--***திருமதி கே. மரியம் உல் ஆசியா:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*ஈரோடு-சிவகிரி (வழி) வைரமடை நகரப்பேருந்தை மீண்டும் இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:***

*தற்பொழுது ஒரு நகரப் பேருந்து மூலம் ஈரோடு-சிவகிரி (வழி) வைரமடை என தினசரி 4 தனி நடைகள் இயக்கப்பட்டு வ்ருகின்றன.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

**17--**

**பள்ளப்பட்டி--நாகர்கோவில் பேருந்து இயக்குதல்**

வினா எண் *52172*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம், பள்ளப்பட்டி-திருவனந்தபுரம் (வழி) திண்டுக்கல், மதுரை, கோவில்பட்டி, திருநெல்வேலி, நாகர்கோவில் இடையே ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக்கழக பேருந்து விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

திருச்சி மாவட்டம், பள்ளப்பட்டி, திருவனந்தபுரம் தடம் திருச்சியிலிருந்து மதுரை, கோவில்பட்டி, திருநெல்வேலி, நாகர்கோவில் வழியே திருவனந்தபுரத்திற்கு இயக்கப்பட வேண்டும். இத்தடத்தின் நீளம் 414 கி.மீ, ஆகும். அவற்றில் 381 கி.மீ. தமிழகத்திலும் 33 கி.மீ கேரளாவிலும் அடங்கும். இத்தடத்தினை கேரள மாநில அரசின் ஒப்புதலுடன்தான் இயக்க முடியும். மேலும் பள்ளப்பட்டி என்ற இடமானது கரூரிலிருந்து 32 கி.மீ தொலைவிலும், திண்டுக்கல்லிலிருந்து 44 கி.மீ. தொலைவிலும் உள்ளது. தவிர, இவ்விடமானது பிரதான சாலையிலிருந்து 1 கி.மீ உள்ளே இருப்பதாலும் இந்தச் சாலை விரைவுப் பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதாக இல்லாததாலும் பள்ளப்பட்டி, திருவனந்தபுரம் தடத்தினை இயக்குவது நடைமுறையில் சாத்திய மற்றதாகும்.

**18--**

**கொடுமுடி-வெள்ளக்கோவில் பேருந்து இயக்குதல்**

வினா எண் *54146*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கொடும்டி--வெள்ளக்கோவில் (வழி) கணபதிபாளையம், நகப்பாளையம், செங்கோடம்பாளையம், நல்லியாங்காரன் புதூர்,

*1995 நவம்பர் 3]*

முருகம்பாளையம், காட்டம்பட்டி, மேட்டுகடை, கொள்ளம்பரப்பு, கார்வழி, முத்தாம்பாளையம், பெரிய காங்கயம்பாளையம், மங்களப்பட்டி, நால்ரோடு, மேட்டுப்பாளையம், மாந்தபுரம், தண்ணீர்பந்தல் இடையே நகரப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

வெள்ளக்கோவில் கார்வழி தடத்தில் இயக்கி வந்த வி1 வழித்தடப் பேருந்தை கடந்த *3-7-1995* முதல், கொடுமுடி வரை நீட்டிப்பு செய்து கணபதிபாளையம், நகப்பாளையம், செங்கோடம்பாளையம், நல்லியங்காரன்புதூர், முருகம்பாளையம், காட்டம்பட்டி, மேட்டுகடை, கொள்ளம்பரப்பு, கார்வழி, முத்தாம்பாளையம், பெரியகணபதிபாளையம், மங்களபட்டி, நால்ரோடு, மேட்டுப்பாளையம், மாந்தபுரம், தண்ணீர்பந்தல் என கோரிக்கையில் கண்டுள்ள ஊர்கள் வழியே வெள்ளக்கோவில் கொடுமுடி என இயக்கப்பட்டு வருகிறது.

**19--**

**க. பரமத்தி பழனி இடையே பேருந்து இயக்குதல்**

வினா எண் *54236*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம், க. பரமத்தி--கொடைக்கானல் (வழி) தென்னிலை, சின்ன தாராபுரம், அரவக்குறிச்சி, பள்ளப்பட்டி, இடையகோட்டை, ஒட்டன்சத்திரம், பழனி இடையே பேருந்து வசதி செய்வதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

கோரிக்கையில் உள்ள க.பரமத்தி--கொடைக்கானல் (வழி) தென்னிலை, சின்ன தாராபுரம், அரவக்குறிச்சி, பள்ளப்பட்டி, இடையகோட்டை, ஒட்டன்சத்திரம் வழித் தடத்தின் மொத்த நீளம்

182.9 கி.மீ. இவ்வழித்தடம் முழுவதும் புறநகர மற்றும் நகரப் பேருந்துகள் மூலம் நன்கு இணைக்கப்பட்டு உள்ளது. மேலும் எல்லா நாட்களிலும் நேரடி பயணிகள் பயணம் செய்ய வாய்ப்பில்லை. எனவே, இவ்வழித்தடத்தில் புதியதாக பேருந்து இயக்கத் தேவையில்லை.

**20--**

**கரூர்-மூலனூர் பேருந்து இயக்குதல்**

வினா எண் 54237--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கரூர்-தாராபுரம் (வழி) க. பரமத்தி, தென்னிலை சி.கூடலூர், சின்னதாராபுரம், மூலனூர் இடையே பேருந்து வசதி செய்வதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

கரூர்-தாராபுரம் (வழி) க.பரமத்தி, தென்னிலை, சி.கூடலூர், சின்னதாராபுரம், மூலனூர் வழித்தடத்தின் மொத்த நீளம் 84.0 கி.மீ. இவ்வழித்தடத்தில் கரூர்-தென்னிலை, தென்னிலை-சின்னதாராபுரம், சின்னதாராபுரம்-தாராபுரம் வழித்தடம் முழுவதும் புறநகர் மற்றும் நகரப் பேருந்துகள் மூலம் நன்கு இணைக்கப்பட்டுள்ளன. எல்லா நாட்களிலும் நேரடி பயணிகள் பயணம் செய்ய வாய்ப்பில்லை. எனவே, இவ்வழித்தடத்தில் புதியதாக பேருந்து இயக்கத் தேவை இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

**21--**

**தாராபுரம்-பழனி பேருந்து வசதி**

வினா எண் 54239--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரியார் மாவட்டம், தாராபுரம்-கொடைக்கானல் (வழி) தொப்பம்பட்டி, பழனி இடையே பேருந்து வசதி செய்வதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

*1995* நவம்பர் *3*]

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

ஈரோடு–கொடைக்கானல், சத்தி கொடைக்கானல் ஆகிய இரு பேருந்துகளும், தாராபுரம், தெப்பம்பட்டி, பழனி வழியே கொடைக்கானலுக்கு இயக்கப்பட்டு வருகின்றன.

**22--**

**கோபிசெட்டிப்பாளையம்-அரவக்குறிச்சி பேருந்து வசதி**

வினா எண் *54240*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கோபிசெட்டிப்பாளையம்–பள்ளப்பட்டி (வழி) ஈரோடு காங்கேயம், வெள்ளகோயில், சின்னதாராபுரம், அரவக்குறிச்சி இடையே பேருந்து வசதி செய்வதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

கோபிசெட்டிப்பாளையம்–பள்ளப்பட்டி (வழி), ஈரோடு காங்கேயம், வெள்ளகோயில், சின்னதாராபுரம், அரவக்குறிச்சி வழித்தடத்தில் பகுதி வாரியாக போதிய பேருந்து வசதி உள்ளது. எனவே, வினாவில் கோரியவாறு பேருந்து வசதி செய்வதற்கு செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**23--**

**க.பரமத்தி-ஒட்டன்சத்திரம் இடையே பேருந்து இயக்குதல்**

வினா எண் *54243*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம், க. பரமத்தி–பழனி (வழி) தென்னிலை, சின்னதாராபுரம், ராஜபுரம், அரவக்குறிச்சி, பள்ளப்பட்டி, இடையக்கோட்டை, ஒட்டன்சத்திரம் இடையே பேருந்து வசதி செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

க. பரமத்தி-பழனி (வழி) தென்னிலை, சின்னதாராபுரம், ராஜபுரம், அரவக்குறிச்சி, பள்ளப்பட்டி, இடையகோட்டை, ஒட்டன்சத்திரம் வழித்தட நீளம் 118.7 கி.மீ. இவ்வழித்தடம் முழுவதும் புறநகர மற்றும் நகரப் பேருந்துகள் மூலம் நன்கு இணைக்கப்பட்டுள்ளதால், இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்கத் தேவையில்லை.

**24--**

**மொடக்குறிச்சி தொகுதியில் பேருந்து வசதி செய்தல்**

வினா எண் *57835*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், முகாசி அனுமன்பள்ளி ஊராட்சி, வில்லக்காட்டுபுதூர், கோவில்பாளையம், நஞ்சப்பம்பாளையம், கொளத்தூர், கள்ளக்கவுண்டன்பாளையம், சுள்ளக்கவுண்டன்பாளையம், அனுமன்பள்ளி, பவளத்தான் கவுண்டன் வலசு, ரெட்டிபாளையம், அஞ்சுராம்பாளையம், கொத்துமுட்டிபாளையம், இராயர்பாளையம் ஆகிய கிராமங்களுக்குப் பேருந்து வசதி செய்து தரப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், முகாசி அனுமன்பள்ளி ஊராட்சியில் உள்ள அனுமன்பள்ளி கொளத்தூர், அஞ்சுராம்பாளையம், வில்லக்காட்டுபுதூர் போன்ற கிராமங்கள் பிரதான சாலையில் உள்ள பேருந்து போக்குவரத்து வசதியையும், இதர கிராமங்களான கோவில்பாளையம், நஞ்சப்பம்பாளையம், கள்ளக்கவுண்டன்பாளையம், கொத்துமுட்டிபாளையம், ஆகிய கிராமங்கள் சுமார் 0.5 கி.மீ தூரத்தில் உள்ள வழித்தடங்கள் மூலமாகப் பேருந்து வசதியையும் ரெட்டிபாளையம், இராயர்பாளையம் மற்றும்

*1995 நவம்பர் 3]*

பவளத்தான் கவுண்டன்வலசு ஆகிய கிராமங்கள் 1.0 கி.மீ. தூரத்தில் உள்ள வழித்தடங்கள் மூலமாகவும் பேருந்து வசதி பெற்று வருகின்றன.

**25--**

**மொடக்குறிச்சி தொகுதியில் பேருந்து வசதி**

வினா எண் *57881*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி கொடுமுடி ஒன்றியம், சிவகிரி ஊராட்சி, சின்னிய கவுண்டன்பாளையம், வேட்டுவபாளையம், எல்லப்பாளையம் அம்மன்கோவில், சிவகிரி, சின்னரங்க கவுண்டன் வலசு, ரங்கசமுத்திரம், மோளவிநாயகம்பாளையம், நம்மகவுண்டம்பாளையம், சிலுவம்பாளையம், பாலமேட்டுப்புதூர் கஸ்பா கவுண்டம்பாளையம், சானார்பாளையம், பெரியகாட்டூர், கோட்டைபுதூர், அண்ணாமலைகோட்டை வேலாயுதம்பாளையம் கொமரவலசு, தொப்பம்பாளையம், தலையநல்லூர் ஆதிதிராவிட காலனி ஆகிய கிராமங்களில் பேருந்து வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள கிராமங்கள் அனைத்தும் தற்பொழுது பேருந்து வசதி பெற்றுள்ளன.

**26--**

**திருப்பத்தூரில் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி அமைத்தல்**

வினா எண் *61481*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூரில் ஓட்டுநர் பயிற்சிப்பள்ளி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தின் தலைமையகமான வேலூரில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தால் ஒட்டுநர் பயிற்சிப்பள்ளி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தில் புதிதாக பணியில் சேரும் கனரக பயணிகள் வாகன ஓட்டுநர் உரிமம் பெற்ற ஓட்டுநர்களுக்கு சிறந்த முறையில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. எனவே, திருப்பத்தூரில் பயிற்சிப் பள்ளி அமைக்கத் திட்டம் ஏதும் இல்லை.

**27--**

**அரியலூர் - சிற்றுடையாருக்குப் பேருந்து வசதி**

*வினா எண் 61888*--திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரியலூரிலிருந்து சிற்றுடையாருக்கு பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

கோரிக்கையில் உள்ள அரியலூர்-சிற்றுடையார் வழித் தடத்தின் நீளம் 32.0 கி.மீ. அரியலூர்-கோட்டைக்காடு (வழி) பெரியாக்குறிச்சி, மாத்தூர், ஆர்.எஸ். வழித்தட பிரதான சாலையில் பெரியாக்குறிச்சி என்ற இடத்தில் இருந்து 3.0 கிமீ. தூரத்தில் சிற்றுடையார் கிராமம் உள்ளது. தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக நகரப்பேருந்து ஒன்றின் மூலம் அரியலூர்-ஆர்.எஸ். மாத்தூர் (வழி) பெரியாக்குறிச்சி வழித்தடத்தில் தினசரி 6 நடைகளும் அரியலூர்-கோட்டைக்காடு (வழி) பெரியக்குறிச்சி, ஆர்.எஸ் .மாத்தூர் வழித்தடத்தில் புறநகர் பேருந்து மூலம் தினசரி 8 நடைகளும் இயக்கப்பட்டு வருகிறது. மற்றும் ஜெயங்கொண்டம்-குழுமூர் (வழி) பெரியாக்குறிச்சி சிற்றுடையார் வழித்தடத்தில் தனியார் மினி பேருந்து ஒன்று தினசரி 6 நடைகள்

1995 நவம்பர் 3]

இயங்கிக் கொண்டுள்ளது. சிற்றுடையார் கிராம மக்கள் மேற்படி மினி பேருந்து மூலம் பெரியாக்குறிச்சியில் வந்து இறங்கி அங்கிருந்து அரியலூர் சென்று வருவதற்குப் போதுமான பேருந்து வசதியுள்ளது. எனவே, சிற்றுடையார் கிராமத்திற்கு தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாகும்.

**28--**

**அகல இரயில் பாதை அமைத்தல்**

வினா எண் *67533*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

விருதுநகர், சிவகாசி, இராஜபாளையம், தென்காசி, கொல்லம் மீட்டர்கேஜ் ரயில் பாதையை அகல இரயில் பாதையாக மாற்றுமாறு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

தென்னக இரயில்வேயின் ஒரலகு இருப்புப்பாதை கொள்கைப்படி மீட்டர்கேஜ் இரயில் பாதையை அகல இரயில் பாதையாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் போக்குவரத்தின் முக்கியத்துவம் மற்றும் நிதி ஆதாரங்களின் கையிருப்பு ஆகியவற்றினை சார்ந்து படிப்படியாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, விருதுநகர் தென்காசி மீட்டர்கேஜ் இரயில் பாதையினை அகல இரயில் பாதையாக மாற்றுவது குறித்து தக்க சமயத்தில் பரிசீலிக்கப்படும்.

**29--**

**கன்னியாகுமரி-ஜம்முதாவி இரயில் விடுதல்**

வினா எண் *67537*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கன்னியாகுமரியிலிருந்து ஜம்முதாவிற்கு திருநெல்வேலி, மதுரை, திண்டுக்கல், கரூர், ஈரோடு வழியாக இரயில் விடுமாறு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா ?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

பொருளாதார தட்டுப்பாடு காரணமாக கன்னியாகுமரி, ஜம்முதாவிக்கும் இடையே புதிய இரயில் விடுவது இயலாதது எனத் தென்னக இரயில்வே தெரிவித்துள்ளது.

**30--**

**திருக்காட்டுப் பள்ளி-கல்லணைக்குப் பேருந்து இயக்குதல்**

வினா எண் *67557*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், திருக்காட்டுப்பள்ளியிலிருந்து கல்லணைக்கு நகரப் பேருந்து விடுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா ?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

திருக்காட்டுப்பள்ளி கல்லணை பகுதியில் போதிய அளவு புறநகர் பேருந்துகள் இயங்கி வருகின்றன. மேலும் *1-6-1995* முதல் குறிப்பிட்ட தடத்தில் புறநகர் பேருந்து ஒன்றும் இயக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் மேற்படி தடத்தில் புதிய நகரப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**31--**

**சங்ககிரி-கொண்டலாம்பட்டி புறவழிச்சாலை வரை பேருந்து இயக்குதல்**

வினா எண் *72339*--**டாக்டர் வெ. சரோஜா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சங்ககிரி-கொண்டலாம்பட்டி புறவழிச்சாலை வரை பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் :**

(அ) சங்ககிரி-கொண்டலாம்பட்டி புறவழிச்சாலை வரையிலான தடத்தின் நீளம் 33.5 கி.மீ. இவ்வழித்தடத்தின் அனைத்துப் பகுதிகளும் பல்வேறு நகர மற்றும் புறநகர பேருந்துகள் மூலம் பேருந்து வசதி பெற்று வருகின்றன. மோட்டார் வாகன விதிகளின்படி ஏற்கெனவே பேருந்து வசதி பெற்று வரும் தடத்தில் 30.0 கி.மீ.-க்கு அதிகமாக நகரப் பேருந்துகளை இயக்க இயலாது என்பதால், இத்தடத்தில் நகரப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. சட்டமன்ற உறுப்பினர் ஏற்கனவே கேட்ட கோரிக்கைகளின்படி இதே வழித்தடத்தில் சங்ககிரியிலிருந்து அரியலூர் வரை ஒரு நகரப் பேருந்து மூலம் 4 நடைகள் 15-7-1994 முதல் இயக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**32--**

**முத்துநாயக்கன்பட்டியிலிருந்து தாரமங்கலத்திற்குப் பேருந்து இயக்குதல்**

வினா எண் 78610--**திரு. க. அர்ச்சுனன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அண்ணா போக்குவரத்துக் கழக வழித்தடம் எண் 8 பேருந்தை முத்துநாயக்கன்பட்டியிலிருந்து ஆற்காடு வழியாக தாரமங்கலத்திற்கு விடப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் :**

கோரிக்கையை ஆய்வு செய்வதில் தடம் எண் எஸ்.8 நகரப் பேருந்து சேலம்–தாரமங்கலம், கொளசம்பட்டி, ஓமலூர் என பல்முனைத் தடத்தில் இயக்கப்பட்டு வருகிறது. இப்பேருந்தானது தாரமங்கலம் மற்றும் ஓமலூர் செல்லும்போது முத்துநாயக்கன்பட்டி வழியாகவே செல்கிறது. இதனை கோரிக்கையில் கேட்டபடி ஆத்துக்காடு வழியாக மாற்றி இயக்கினால் இதுகாறும் பேருந்து வசதி பெற்று வந்த கரசாவடி மக்கள் பேருந்து வசதியை இழக்க நேரிடும். இருப்பினும், இக்கோரிக்கையைக் கருத்திற்கொண்டு வேறு ஒரு வழித்தடப் பேருந்தின் மூலம் மேற்கண்ட வழித்தடத்தில் பேருந்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**33--**

**சென்னை-ஆலங்குளத்திற்கு திருவள்ளுவர் பேருந்து இயக்குதல்**

வினா எண் *81818*--**திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளத்திற்கு சென்னையிலிருந்து திருநெல்வேலி வழியாக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து விடுவதற்கு அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது ?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)*: சென்னையிலிருந்து செங்கோட்டைக்கு ஆலங்குளம், திருநெல்வேலி வழியாக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் நாளொன்றுக்கு இரண்டு சாதாரண பேருந்துகள் 2 நடைகளாகவும் மற்றும் இரண்டு சொகுசு பேருந்துகள் இரண்டு நடைகளாகவும் இயக்கப்பட்டு வருகின்றது. மேலும் திருநெல்வேலியிலிருந்து ஆலங்குளத்திற்கு 31 கி.மீ. ஆகும். எனவே, ஆலங்குளத்திலிருந்து சென்னைக்குச் செல்ல விரும்பும் பயணிகள் திருநெல்வேலி வந்து அங்கிருந்தும், அவ்வழியாக இயக்கப்படும் சுமார் 106 பேருந்துகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். எனவே, பிரத்தியேகமான ஒரு வழித்தடம் இயக்குவதற்குச் சாத்தியமில்லை.

*1995 நவம்பர் 3]*

**34--**

**கோத்தகிரியில் பணிமனைக்கு சொந்தக் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *81999*--**டாக்டர் எம். கருப்புசாமி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கிவரும் பாரதியார் போக்குவரத்துக் கழகப் பணிமனைக்கு சொந்தக் கட்டிடம் கட்டித் தரப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

மகாகவி பாரதியார் போக்குவரத்துக் கழகத்தின் கோத்தகிரி புதிய பணிமனை கட்ட கோத்தகிரி தாலூக்கா, கோத்தகிரி கிராமத்தில் புல எண் *392/2*-ல் *1.52* ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. கழக நிதி நிலைமையின் காரணமாக இன்னும் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

**35--**

**முத்தரையர் எனப் பெயர் சூட்டல்**

வினா எண் *82955*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அம்பலக்காரர், வலையர், மூப்பனார், முத்துராஜா போன்ற பிரிவுகளை ஒன்று சேர்த்து 'முத்தரையர்' எனப் பெயர் சூட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

அம்பலக்காரர், வலையர், மூப்பனார், முத்துராஜா போன்ற பிரிவுகளை ஒன்று சேர்த்து 'முத்தரையர்' எனப்பெயர் சூட்ட செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

36--

**தேவர், முத்திரையர் மற்றும் யாதவ இனத்தவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்**

வினா எண் *82956*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தேவர், முத்திரையர் மற்றும் யாதவ இன மக்களை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தேவர், முத்திரையர் மற்றும் யாதவ இன மக்களை மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

37--

**8-வது உலகத் தமிழ் மாநாடு நிகழ்ச்சிகளை கிராமங்களில் திரையிடுதல்**

வினா எண் *52202*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

8-வது உலகத் தமிழ் மாநாடு நிகழ்ச்சிகளின் முழுத்தொகுப்பினை திரைப்படமாக செய்தி-மக்கள்தொடர்புத் துறையினர் மூலம் கிராமங்களில் திரையிடுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்:**

8-வது உலகத் தமிழ் மாநாடு 1-1-1995 முதல் 5-1-1995 வரை தஞ்சாவூரில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. 5 நாட்கள் நிகழ்ச்சிகளின் முழுத் தொகுப்பினை திரைப்படமாகத் தயாரித்தால் மிக நீளமானத்

1995 நவம்பர் 3]

திரைப்படமாக அமைந்துவிடும்,. எனவே, முழு நிகழ்ச்சிகளையும் திரைப்படமாக செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் மூலம் கிராமங்களில் திரையிடுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இல்லை. ஆயினும், 8-வது உலகத் தமிழ் மாநாட்டின் முக்கிய நிகழ்ச்சிகளைத் தொகுத்து 20 நிமிடங்கள் திரையிடக்கூடிய செய்திப் படமாகத் தயாரிக்கப் பட்டு செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் மூலம் ஏப்ரல் திங்கள் 1995 முதல் அனைத்து மாவட்டங்களிலும் கிராமங்களிலும் திரையிடப்பட்டு வருகிறது.

**38--**

**முன்னாள் அமைச்சர்களுக்கு சிலை நிறுவுதல்**

வினா எண் 61709-- **திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சென்னை நகரத்தில் ஏதாவதொரு இடத்தில் முன்னாள் அமைச்சர்களின் சிலை நிறுவ அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்:**

இல்லை.

**39--**

**அமரர் தியாகராஜ பாகவதர் மற்றும் பி.யு. சின்னப்பாவிற்குச் சிலை அமைத்தல்**

வினா எண் 78636--**திரு. கே. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அமரர் தியாகராஜ பாகவதருக்கு திருச்சியிலும், அமரர் பி.யு. சின்னப்பா அவர்களுக்கு புதுக்கோட்டையிலும் உருவச் சிலைகள் அமைக்கப்படுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

**விடை--**

**மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்:**

அமரர் தியாகராஜ பாகவதருக்கு திருச்சியிலும், அமரர் பி.யு. சின்னப்பா அவர்களுக்கு புதுக்கோட்டையிலும் உருவச் சிலைகள் அமைக்கப்படும் கோரிக்கை தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

**40--**

**இடைநிலை ஆசிரியர் நியமனம்**

வினா எண் *38979*--**டாக்டர் பெ. வீரபாண்டியன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

செங்கம் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கூடுதலாக இடைநிலை ஆசிரியர்களை நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

இல்லை.

**41--**

**தேவூரில் கிளை நூலகம் அமைத்தல்**

வினா எண் *39999*--**டாக்டர் வெ. சரோஜா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சங்ககிரி ஒன்றியம், தேவூரில் ஒரு 'கிளை நூலகம்' அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் செயல்படுத்தப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், சங்ககிரி ஒன்றியம், தேவூரில் கிளை நூலகம் ஒன்று திறக்கப்பட்டு, *4-9-1961* முதல் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

*1995 நவம்பர் 3]*

**42--**

**தமிழகத்தில் மேலும் ஓவியக் கல்லூரிகள் அமைத்தல்**

வினா எண் *47184*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழ்நாட்டில் ஓவியக் கல்லூரிகள் மேலும் ஏற்படுத்த அரசு முன்வருமா?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

தமிழ்நாட்டில் சென்னை மற்றும் கும்பகோணம் ஆகிய இடங்களில் அரசு கலை மற்றும் கைத்திறத் தொழிற் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இதுபோன்ற கல்லூரிகளை மேலும் ஏற்படுத்த செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

**43--**

**சென்னைப் பல்கலைக் கழகத்தில் கல்விசாராப் பணியாளர்களை நிரந்தரம் செய்தல்**

வினா எண் *48320*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சென்னைப் பல்கலைக்கழகத்தில் தற்காலிக கல்விசாராப் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்வதற்கு அரசு சிபாரிசு செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

சென்னைப் பல்கலைக்கழகத்தில் தற்காலிக கல்விசாராப் பணியாளர்கள் (Temporary Non-Teaching Staff) இல்லை. அதனால் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்ற வினா எழவில்லை.

**44--**

**அரவக்குறிச்சி ஒன்றியத்தில் கூடுதல் ஆசிரியர் நியமனம்**

வினா எண் *52873*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

[*1995* நவம்பர் *3*

திருச்சி மாவட்டம், அரவக்குறிச்சி ஒன்றியத்தைச் சேர்ந்த நாகம் பள்ளி ஊராட்சி, நாகம்பள்ளியில் உள்ள துவக்கப் பள்ளி மூலப்பட்டி, முத்துக்கவுண்டன் பாளையம், வடுகநாதம் பள்ளி, செல்லிபாளையம் ஒன்றிய துவக்கப் பள்ளிகள், பெத்தாக்கோட்டை என். வெங்கடாபுரம் மலைக் கோவிலூரில் உள்ள துவக்கப் பள்ளிகளுக்கு கூடுதல் ஆசிரியர் நியமனம் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

இல்லை.

**45--**

**திருச்சி மாவட்டத் துவக்கப்பள்ளிகளுக்குக் கூடுதல் ஆசிரியர் நியமனம்**

வினா எண் *52885*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம் தாந்தோணி ஊராட்சி ஒன்றியம் முஷ்ட்டகிணத்துப்பட்டி, சின்ன திருமங்கலம், வெடிக்காரன்பட்டி, சின்னகுளத்துப்பட்டி. வெள்ளாகவுண்டம் பட்டி, கொரவப்பட்டி, குமாரபாளையம் வேலாயுதபாளையம் மாணிக்கபுரம் தாளியாபட்டி, சென்னலாண்டிப்பட்டி, கோடாங்கிப்பட்டி ராயனூர், ஆச்சிமங்கலம், டி. காளியப்பகவுண்டனூர், தாந்தோணி மலைப்பட்டி, கத்தாளப்பட்டி, சின்னநாயக்கன்பட்டி, வெங்ககல் பட்டி, பாதம்பட்டி, வீரணம்பட்டி, ஆண்டாள்கோவில் கிராம ஆதி திராவிட துவக்கப்பள்ளி, காவிண்டம்பாளையம் ரோட்டுக்கடை மொச்சக் கொட்டம்பாளையத்திலுள்ள ஆதி திராவிடர் துவக்கப்பள்ளி, ஆண்டாள் கோயில் புதூர், ஆண்டாள் கோவில் மேற்கு மற்றும் வடக்கு கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிகள், பொம்மனத்துப்பட்டி, ரெட்டிப் பாளையம் வெஞ்சமாங்கடலூர் மேற்கு ஊராட்சி பாரப்பட்டி, டி. செல்லாண்டிப்பாளையம், தாளப்பட்டி, நொச்சிப் பட்டி, தம்மநாயக்கன்பட்டி, பி. வடுகப்பட்டி, கொடையூர், பி.பி. செல்லாண்டிப்பாளையம், செங்காலிபாளையம், விஜயபுரம், கண்டராசாரப்பட்டி, கே. பிச்சம்பட்டி, வாசுகுமரன்பட்டி, கே. ஆலமரத்துப்பட்டி, புத்தாம்பூர், கே. பசுபதிபாளையம்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

தண்டுதக்காரன்பட்டி, புதூர் ஆகிய கிராமங்களில் உள்ள துவக்கப்பள்ளிகளுக்குக் கூடுதல் ஆசிரியர் நியமனம் செய்ய அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

கடந்த ஆண்டில் ஊராட்சி ஒன்றிய பள்ளிகளுக்குக் கூடுதல் பணியிடங்கள் ஏதும் வழங்கப்படாததால் தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த துவக்கப்பள்ளிகளுக்குக் கூடுதல் ஆசிரியர் நியமனம் செய்யும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**46--**

**மொடக்குறிச்சி தொகுதியில் தொடக்கப்பள்ளிகள் துவங்குதல்**

வினா எண் *54723*--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி கொடுமுடி மற்றும் சிவகிரியில் தொடக்கப் பள்ளிகள் தொடங்கிட அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

மொடக்குறிச்சி தொகுதி கொடுமுடி மற்றும் சிவகிரியில் புதிய ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி துவங்க வேண்டி அரசுக்கு விண்ணப்பம் ஏதும் வரப்பெறவில்லை. மேற்படி கிராமங்களில் புதிய ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி தேவையென கருத்துருக்கள் பெறப்பட்டால் தேவையின் அடிப்படையில் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க இயலும்.

**47--**

**கோவை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் மூடப்பட்ட தொழிற்சாலைகள் விவரம்**

வினா எண் *10624ஏ*--**திரு. எம். ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

[*1995 நவம்பர் 3*

*(அ)* கோவை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் இயங்கிய எந்தெந்த எஞ்சினியரிங் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன?

*(ஆ)* அவற்றை மீண்டும் இயங்கச் செய்ய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை--**

**மாண்புமிகு** திரு. ஏ.எம். **பரமசிவன்**, தொழிலாளர் **நலத்துறை அமைச்சர் :**

*(அ)* கோவை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் இயங்கிய கீழ்க்கண்ட இஞ்சினியரிங் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன :

1. ஸ்ரீ இராமகிருஷ்ணா இண்டஸ்டரியல்ஸ் லிமிடெட், கோவை.
2. எவரெஸ்ட் என்ஜினியரிங் கம்பெனி, கோவை.
3. நியுசிட்டி என்ஜினியரிங் ஓர்க்ஸ், கோவை.
4. கெம்ப்ஸ் (இந்தியா) லிமிடெட், கோவை.

**(ஆ) 1. ஸ்ரீ ராமகிருஷ்ணா இண்டஸ்டரியல் லிமிடெட், கோவை**

கோவை, ஸ்ரீ இராமகிருஷ்ணா இண்டஸ்டரியல்ஸ் லிமிடெட் என்ற தனியார் நிறுவனத்தில் சுமார் 378 தொழிலாளர்கள் பணிபுரிந்து வந்தனர். நிர்வாகத்தின் பங்குதாரர்களுக்கு இடையே ஏற்பட்ட தகராறு காரணமாகவும், நிதி நெருக்கடி காரணமாகவும், மேற்படி நிறுவனம் 1-3-1984 முதல் மூடப்பட்டது. இந்நிறுவனத்தில் சி.-ஐ.டி.யு., டி.என்.டி.யு.சி. மற்றும் இராமகிருஷ்ணா இண்டஸ்டிரியல் எம்ப்ளாயீஸ் யூனியன் ஆகிய தொழிற் சங்கங்கள் இயங்கி வந்தன. பங்குதாரர்களிடையே ஏற்பட்ட தகராறினைத் தொடர்ந்து இரண்டு பங்குதாரர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் இந்த நிறுவனத்தைக் கலைத்து விடுமாறு கோரி தனித்தனியாக மனுக்கள் தாக்கல் செய்தனர். சென்னை உயர்நீதிமன்றம் இம்மனுக்களை விசாரித்து இந்நிறுவனத்தைக் கலைத்துவிட ஆணையிட்டது. இதனை எதிர்த்து தொழிற்சங்கங்கள் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு மனு தாக்கல் செய்தன. உச்சநீதிமன்றம், சென்னை உயர்நீதிமன்றம் அளித்த ஆணையைத் தள்ளுபடி செய்து ஆணை பிறப்பித்தது. இதனையடுத்து நிறுவனத்திற்கு தற்காலிக கலைப்பு அதிகாரி நியமிக்கப்பட்டு அவர் 27-12-1981 அன்று

*1995 நவம்பர் 3]*

இந்நிறுவனத்தின் பொறுப்பை ஏற்றார். இதன் பின்னர் 7-3-1982 முதல் இந்நிறுவனம் கலைப்பு அதிகாரியின் பொறுப்பில் இயங்க ஆரம்பித்தது. ஆனால் நிதி நெருக்கடி காரணமாக நிறுவனம் மீண்டும் 1-9-1984 முதல் மீண்டும் மூடப்பட்டது. தற்போது கலைப்பு அதிகாரி இந்த நிறுவனத்தை நடத்துவதற்காக புதிய திட்டத்தைத் தயாரித்து, உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார் எனவும், உயர்நீதிமன்றம் இந்தத் திட்டத்திற்கு ஒப்புதலளித்த பின்னர்தான் இந்த நிறுவனத்தை மீண்டும் திறந்து நடத்த இயலும். இவ்வழக்கு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

**2. எவரெஸ்டு என்ஜினியரிங் கம்பெனி, கோவை**

கோவையில் உள்ள 397 தொழிலாளர்களைக் கொண்ட எவரெஸ்ட் என்ஜினியரிங் கம்பெனி என்ற நிறுவனம் நிதி நிலை நெருக்கடி காரணமாக 28-4-1986 முதல் மூடப்பட்டது. பாரத வங்கி இந்நிறுவனத்திற்கு சுமார் 200 இலட்சம் நிதி உதவி அளித்து வந்ததை இந்நிறுவனத்தின் கடன்தாரர்கள் சிலர் நொடிப்பு மனுக்களும் (Insolvency petition) மேலும் சிலர் அட்மினிஸ்ட்ரேடிவ் மனுக்களும் தாக்கல் செய்தை அடுத்து 1-4-1986 முதல் திடீரென நிறுத்தி விட்டது.

பாரத வங்கி தொடர்ந்து நிதி அளிக்க தயாராக உள்ளதாகவும், ஆனால் மேற்கண்ட தகராறுகள் தீர்க்கப்பட்டு முடிக்கப்பட வேண்டும் என்றும் கூறுகிறது. இதற்கிடையில், கோவை முதன்மை நீதிமன்றம் இந்நிறுவனத்திற்கு 3 கலைப்பு அதிகாரிகளை நியமித்தது. இந்த நியமனம் சென்னை, உயர் நீதிமன்றத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது. பாரத வங்கிக்கும் மற்ற கடன்தாரர்களுக்கும் இந்நிறுவனம் வழங்கப்பட வேண்டிய மொத்தத்தொகை ரூ.2.5 கோடி ஆகும். 6-4-1992 அன்று இந்நிறுவனத்தை ஏலத்தில் விட நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் இதனை ஏலத்தில் எடுக்க யாரும் முன்வராத காரணத்தால் ஏலம் விடுவது ஒத்திவைக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் இயக்குனர்கள் இந்திய தொழில் நிறுவனத்தில் புனரமைப்பு வங்கிக்கு (I.R.B.I) ஒரு புதிய புனரமைப்பு திட்டத்தினை அளித்து, அத்திட்டத்தில் நிரந்தர முன்வைப்புத்தொகை அளித்தவர்களுக்கு கடன்களை பைசல் செய்யவும், நிறுவனத்தை திறந்து இயக்கவும், ரூ.2.255 கோடி அளிக்கக் கோரியுள்ளது.

**3. நியுசிட்டி என்ஜினியரிங் ஒர்க்ஸ், கோவை**

182 தொழிலாளர்களைக் கொண்ட இந்நிறுவனம் ஒரு பங்குதாரர் நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் தொழிலாளர்கள் முன்னாளில்

ஏ.ஐ.டி.யு.சி. தொழிற்சங்கத்தாலும், தற்போது சோசியலிஸ்ட் தொழிலாளர் சங்கத்தினாலும் பிரதி நிதித்துவப்படுத்தப்படுகின்றனர். இந்நிறுவனம் நிதிநிலை நெருக்கடி காரணமாகவும், பங்குதாரர்கள் இடையே ஏற்பட்ட மன வேற்றுமை காரணமாகவும் 20-12-1986 முதல் மூடப்பட்டது. கோவை, தொழிலாளர் இணை ஆணையர் முன்பு, இந்நிறுவனத்தின் அனைத்துத் தொழிலாளர்களும் நஷ்டஈடு மற்றும் இதர தொகைகள் அளிப்பது குறித்து தொழில் தகராறு சட்டம் பிரிவு 12(3)ன் கீழ் 9-4-1988 அன்று ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் இந்த ஒப்பந்தத்தை நிர்வாகம் அமல்படுத்தத் தவறியதால், தொழில் தகராறுகள் சட்டம் பிரிவு 29-ன் கீழ் நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கோவை தொழிலாளர் இணை ஆணையர் இதுகுறித்துப் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறார்.

**4. கெம்ப்ஸ் (இந்தியா) லிமிடெட், கோவை**

கெம்ப்ஸ் (இந்தியா) லிமிடெட், கோவை நிறுவனத்தில் 186 தொழிலாளர்கள் பணிபுரிந்துவந்தனர். இந்நிறுவனத்தில் கெம்ப்ஸ் எம்ப்ளாயிஸ் மற்றும் சி.ஐ.டி.யு. ஆகிய இரு தொழிற் சங்கங்கள் இயங்கிவந்தன. இந்நிறுவனம் 31-7-1989 முதல் நிதிநெருக்கடி காரணமாக இயங்கவில்லை.

நிர்வாகம் இத்தொழிற்சாலைளை மூடுவதற்கு அனுமதி அளிக்கக்கோரி தொழில் தகராறு சட்டம், பிரிவு 25(0)ன் கீழ் தொழிலாளர் ஆணையருக்கு மனு செய்தது. இந்த மனு மீது தொழிலாளர் ஆணையர் அனுமதி வழங்க மறுத்து ஆணையிட்டதால், நிர்வாகம் அரசுக்கு மேல்முறையீடு செய்தது. 17-6-1991 நாளிட்ட ஆணை மூலம் இத்தொழிற்சாலையை மூட அரசு அனுமதி அளித்தது. மேற்கண்ட இந்த அரசு ஆணையை எதிர்த்து கெம்ப்ஸ் இந்தியா எம்ப்ளாயிஸ் யூனியன் என்ற தொழிற்சங்கம் சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தது. இந்த ரிட் மனு மீது, சென்னை உயர்நீதிமன்றம் தனது இடைக்கால உத்தரவில் இம்மனுவின் மீது இறுதி உத்தரவு பிறப்பிக்கும்வரை நிறுவனத்தில் அப்போது இருந்த நிலையைத் தொடர்ந்து நீட்டித்து வர (Status quo to be maintained) ஆணை பிறப்பித்தது. இவ்வழக்கு தற்போது சென்னை, உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இதற்கிடையில் இந்த நிறுவனத்தை மீண்டும் திறப்பதற்குள்ள வழிமுறைகளை ஆராய நிர்வாகத்தினரையும், தொழிற் சங்கத்தினரையும் 19-8-1992 அன்று கோயம்புத்தூரில் பேச்சு வார்த்தைக்கு வருமாறு சென்னை தொழிலாளர் ஆணையர் அழைப்பு அனுப்பினார். ஆனால் நிர்வாகத்தினர் இந்நிறுவனத்தைத் திறந்து நடத்துவது என்பது எந்தக்

1995 நவம்பர் 3]

கோணத்திலிருந்தும் இயலாத ஒன்று என்றும், தாம் எடுத்த நிலை இறுதியானது என்றும் திட்டவட்டமாக அறிவித்தனர். உயர் நீதிமன்றத்தில் இந்த நிறுவனம் தொடர்பான வழக்கு இன்னமும் நிலுவையில் உள்ளது.

**48--**

**பேராவூரணி தொகுதியில் கிராம அங்காடி கட்டிடங்களைப் பழுதுபார்த்தல்**

*வினா எண் 61650--***திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், முதல்சேரி ராஜாமடம் ஆகிய இடங்களிலுள்ள பழுதடைந்த கிராம அங்காடிக் கட்டிடங்களைப் பழுதுபார்க்க ஆவன செய்யப்படுமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத்துறை அமைச்சர்:**

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், முதல்சேரி ராஜாமடம் ஆகிய இடங்களிலுள்ள பழுதடைந்த கிராம அங்காடிக் கட்டிடங்களைப் பழுதுபார்க்க கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இவ்வேலைகள் அந்த அந்த சங்கங்களால் மேற்கொள்ளப்படலாம்.

**49--**

**சோலைக்காட்டிற்கு ஊராட்சி மன்ற அலுவலகம் கட்டுதல்**

*வினா எண் 6417--***திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சோலைக்காட்டிற்கு ஊராட்சி மன்ற அலுவலகம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் 1993-94-ம் நிதியாண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் சோலைக்காடு ஊராட்சிக்கு ரூ.87,000 மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டிடம், மாவட்ட

ஊரக வளர்ச்சி முகமை மூலமாக கட்ட அனுமதி வழங்கப்பட்டு கட்டிட வேலை நடைபெற்று வருகிறது.

**50--**

**கழனிக்கோட்டை தொடக்கப்பள்ளிக்குக் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *6600*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழனிக்கோட்டையில் தொடக்கப்பள்ளிக்குப் புதிய கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், கழனிக்கோட்டை தொடக்கப்பள்ளிக்கு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1992-93-ல் ரூ. 12,000 மதிப்பீட்டில் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டிக்கொடுக்கப்பட்டு உள்ளது.

**51--**

**முதலைமேடு ஊராட்சிக்குக் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *8538*--**திரு. து. மூர்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கொள்ளிடம் ஒன்றியத்தில் முதலைமேடு ஊராட்சிக்குக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், முதலைமேடு ஊராட்சி மன்ற கட்டிடம் கட்டும் பணி 1993-94-ம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத்

*1995 நவம்பர் 3]*

திட்டத்தில் ரூ. 1.05 லட்சம் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**52--**

## செல்லப்பன்பேட்டை பள்ளிக்குக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 10520--**திரு. ப. கலியபெருமாள்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பூதலூர் ஊராட்சி ஒன்றியம், செல்லப்பன்பேட்டையில் நடுநிலைப்பள்ளிக் கட்டிடம் கட்ட மதிப்பீடு செய்து கட்ட ஆரம்பிக்கப்பட்ட கட்டிடம் முடிக்கப் படாமல் உள்ளது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஊராட்சி ஒன்றியம், செல்லப்பன்பேட்டை ஊராட்சியில் நடுநிலைப்பள்ளிக் கட்டிடம் முழுமையாகக் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது.

**53--**

## தெய்வேந்திரநல்லூர் ஆரம்பப் பள்ளிக் கட்டிடத்தை திறத்தல்

வினா எண் 15713--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியம், தெய்வேந்திர நல்லூர் ஆரம்பப்பள்ளிக் கட்டிடத்தை விரைவில் திறக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியம், தெய்வேந்திர நல்லூரில் உள்ள ஆரம்பப்பள்ளிக் கட்டிடம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே திறக்கப்பட்டு நன்கு இயங்கி வருகின்றது.

54--

## புத்தூரில் சங்கு அமைத்தல்

*வினா எண் 22073*--**திரு. வி. ரவிச்சந்திரன் :** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

*(அ) பச்சைமலையில் உள்ள புத்தூரில் பொதுமக்கள் பயனுக்காக ஒரு சங்கு (Siron) அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?*

*(ஆ) ஆம் எனில், எப்போது அமைத்துத் தரப்படும் ?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

*(அ) மற்றும் (ஆ) : பச்சைமலையில் துறையூர் ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டு ஊராட்சிகளும் உப்பிலியாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் இரு ஊராட்சிகளும் அடங்கியுள்ளன. பச்சைமலையின் மக்கள் தொகை சுமார் 9,000. இங்கு வாழும் மக்களில் பெரும்பாலோர் அவரவரது நிலங்களில் வேளாண்மை செய்து வாழ்ந்து வருகின்றனர். இங்கு தனியார் பண்ணையோ அல்லது தொழிற்சாலையோ கிடையாது. அதனால் சங்கு அமைத்து அந்த நேரப்படி வேலைக்குச் செல்லும் அவசியம் ஏற்படவில்லை. எனவே, புத்தூரில் சங்கு அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதப்படுகிறது.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

55--

## கடலாச்சேரி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்

*வினா எண் 22886*--**திரு. என். ஆர். ராஜேந்திரன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

*(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, குமராட்சி ஒன்றியத்திலுள்ள கடலாச்சேரி ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

1995 நவம்பர் 3]

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு மாவட்டம், குமராட்சி ஊராட்சி ஒன்றியத்தில் கடவாஞ்சேரி துவக்கப்பள்ளிக்குக் 1994-95-ல் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

**56--**

**கிராமங்களில் சாண எரிவாயு இணைப்புகள்**

வினா எண் 23423--**டாக்டர் ஜெ. பரந்தாமன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சமுதாய சாண எரிவாயுக் கலன் ஏற்படுத்துவதன் மூலம் கிராமங்களில் உள்ள வீடுகளுக்கு இணைப்புகள் தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**57--**

**ஊஞ்சலூர் அரசு ஆரம்பப் பள்ளிக் கட்டிடத்தைப் புதுப்பித்தல்**

வினா எண் 26671--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, ஊஞ்சலூர் அரசு ஆரம்பப் பள்ளிக் கட்டிடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெரியார் மாவட்டம், ஊஞ்சலூர் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி கட்டிடத்தை நடப்பு ஆண்டில் பழுது பார்த்துப் புதுப்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**58--**

**நம்மனேரி ஊராட்சியில் அடிப்படை வசதிகள் செய்தல்**

வினா எண் 26702--திருமதி இலதா பிரியகுமார்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம் நம்மனேரி ஊராட்சியில் குடிதண்ணீர், வடிகால் வசதி, சாலை வசதி ஆகியவற்றை நிறைவேற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், அரக்கோணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மோசூர் ஊராட்சியின் மதுரா நம்மனேரி காலனியில் குடிதண்ணீர் தங்குதடையின்றி வழங்க குடிநீர் வடிகால் வாரியத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது, வடிகால் வசதி 1995-96-ம் நிதியாண்டில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் மேற்கொள்ளப்படும், சாலை வசதி செய்ய இந்த நிதியாண்டில் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

*1995 நவம்பர் 3]*

**59--**

**உப்பிலியாபுரம் தொகுதியில் சமுதாயக்கூடம் அமைத்தல்.**

*வினா எண் 26795--***திரு. வி. ரவிச்சந்திரன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

உப்பிலியாபுரம் தொகுதியில் பச்சைமலை, கோம்பை, மஜாரா ஏரிக்காட்டில் சமுதாயக்கூடம் அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உப்பிலியாபுரம் சட்டமன்றத் தொகுதி பச்சைமலைப் பகுதி துறையூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கோம்பை புதூர் மஜாரா மணமேடையில் சமுதாயக்கூடம் கட்டப்பட்டு வருவதால், தற்சமயம் கோம்பை மஜாரா ஏரிக்காட்டில் சமுதாயக்கூடக் கட்டிடம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

**60--**

**உப்பிலியாபுரம் தொகுதியில் சமுதாய நலக்கூடம் அமைத்தல்**

*வினா எண் 27244--***திரு. வி. ரவிச்சந்திரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

உப்பிலியாபுரம் தொகுதி கீரம்பூரிலும் பச்சைமலை கோம்பை மஜாரா மருதையில் சமுதாய நலக்கூடம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உப்பிலியாபுரம் தொகுதி கீரம்பூரில் சமுதாய நலமன்றம் கட்டப்பட்டுள்ளது. கோம்பை மஜாரா மருதையில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் உறைவிடப்பள்ளி கட்டப்பட்டுள்ளது. தற்போது கீரம்பூர் மற்றும் மருதை கிராமங்களில் சமுதாயக்கூடம் கட்டும் திட்டம் ஏதுமில்லை.

61--

**கொல்லம் புதுப்பாளையம் காலனிக்கு மயான வசதி செய்தல்**

வினா எண் *33897*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்**: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், கொல்லம்புதுப்பாளையம், காலனிக்கு மயான வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

**விடை**--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி கொடுமுடி ஒன்றியம், கொல்லம்புதுப்பாளையம் காலனியில் வசிக்கும் அருந்ததியர்கள் சென்ன சமுத்திரம் புதிய புல (Re-Survey) எண் *16*-இல் உள்ள ஓடைப் புறம்போக்கையும் ஆதிதிராவிடர்கள் புதிய புல எண் *14/4* இடத்தில் ஒரு பகுதியையும் சுடுகாடாகப் பயன்படுத்துகிறார்கள். எனவே ஏற்கனவே அந்த மக்களுக்கு முன் சொன்ன வசதி உள்ளது. ஆகையால் வேறு மயான வசதி செய்து கொடுக்கும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

62--

**திருச்சி மாவட்டத்தில் கழிவுநீர் வாய்க்கால் அமைத்தல்**

வினா எண் *34448*--**திரு. வி. ரவிச்சந்திரன்**: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், உப்பிலியாபுரம் ஊராட்சி ஒன்றியம், எரகுடி, வடக்குப்பட்டு, மற்றும் சிச்கத்தம்பூர் ஆகிய கிராமங்களுக்குக் கழிவுநீர் வாய்க்கால் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செய்து தரப்படும்?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ): தற்போது திட்டம் இல்லை.*

**63--**

**ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக் கட்டிடங்கள் சீர் செய்தல்**

*வினா எண் 34814*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தில் கடந்த ஆண்டு பெய்த மழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் பூலாங்கொல்லை, கீழ்ப்பூவானம், பள்ளத்தூர், கட்டையங்காடு, உக்கடை, உடையநாடு ஆகிய ஊர்களிலுள்ள ஊராட்சி ஒன்றியத்துவக்கப் பள்ளிகளில் கட்டிடங்கள் சேதம் அடைந்துள்ளதைச் சரிசெய்து கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் பூலாங்கொல்லை, கீழ்ப்பூவானம், கட்டையன்காடு மற்றும் உடையநாடு கிராம துவக்கப் பள்ளிக் கட்டிடங்கள் பழுதுபார்க்கப்பட்டுவிட்டது. பள்ளத்தூர் துவக்கப்பள்ளி பழுதுபார்க்கும் பணி நடைபெற்று வருகிறது.

**64--**

**பொய்யாதநல்லூரில் சமுதாய நலக்கூடம் அமைத்தல்**

*வினா எண் 35789*--**டாக்டர் சு. மணிமேகலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் தொகுதி, பொய்யாத நல்லூர் கிராமத்தில், சமுதாயநலக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1994-95-ம் ஆண்டு தேசீய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில், ரூ. 50,000 மதிப்பீட்டில், அரியலூர் ஊராட்சி ஒன்றியம், பொய்யாத நல்லூர் கிராமத்தில், சமுதாயநலக் கூடம் கட்டப்பட்டு தற்போது குழந்தைகள் நல சத்துணவு மையமாக அது பயன்படுத்தப்பட்டு வருகிறது.*

**65--**

**சகாயமாதா கோவில் அருகே ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்**

*வினா எண் 36024*--**திரு. இரா. அப்பு நடேசன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

*(அ) திருவட்டார் தொகுதி, ஈஞ்சக்கோடு பகுதியில் குடிநீர் பஞ்சத்தைப் போக்க சகாயமாதா கோவில் பக்கம் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், உடனடியாகக் கிணறு அமைக்கும் பணி ஆரம்பிக்கப்படுமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) : திருவட்டார் தொகுதி, ஈஞ்சக்கோடு பகுதியில் ஆழ்குழாய்க் கிணறு அமைப்பதற்கு இந்நிதியாண்டில் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**66--**

**குச்சூர் ஊராட்சி ஒன்றியத்தில் பள்ளியை பழுதுபார்த்தல்**

*வினா எண் 36435*--**திரு. என்.ஆர். ராஜேந்திரன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*1995 நவம்பர் 3]*

காட்டுமன்னார் கோயில் தொகுதி, குச்சூர் ஊராட்சி ஒன்றியப்பள்ளி பழுது பார்க்கப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை *அமைச்சர்:***

காட்டுமன்னார் கோயில் தொகுதி, குச்சூர் ஊராட்சி ஒன்றியப்பள்ளி *1994-95*-ம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்பு திட்டம், *80*-சதவிகிதம் நிதி ஒதுக்கீட்டில் பழுது நீக்கம் செய்ய ஆண்டு செயல் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

**67--**

**வீரானநல்லூர் நீர்த்தேக்கத் தொட்டியை மேம்பாடு செய்தல்**

வினா எண் *36439*--**திரு. என்.ஆர். ராஜேந்திரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காட்டுமன்னார் கோயில் தொகுதி, வீராணநல்லூர் கிராம நீர்தேக்கத் தொட்டியை மேம்பாடு செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை *அமைச்சர்:***

காட்டுமன்னார் கோயில் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வீராணநல்லூர் ஊராட்சியில் ஜனத்தொகை *1456* ஆகும். இவ்வூராட்சியில் *6* மார்க் II கைப்பம்புகளும், சாதாரண கைப்பம்புகள் *2*-ம், *1* மேல்நிலைத்நீர்த்தேக்கத்தொட்டியும் இயங்கி வருகின்றன.

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் வழங்கப்படும் குடிநீர், ஆதிதிராவிடர்க்குடியிருப்புக்கு மட்டுமே போதுமானதாக உள்ளதால், வீராணநல்லூர் கிராமத்திற்கென தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கான திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நிறைவேற்றப்படவுள்ளதாக தென்னாற்காடு-வள்ளலார் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[*1995 நவம்பர் 3*

**68--**

## இந்தியா மார்க் II கைப்பம்பு அமைத்தல்

*வினா எண் 36764*--**திரு எஸ். ஆசைமணி:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், சேதினிபுரம் ஊராட்சி, விழுதியூர் ஆதிதிராவிடத் தெருவில் இந்தியா மார்க் II கைப்பம்பு அமைத்துத்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குடவாசல் ஊராட்சி ஒன்றியம், சேதினிபுரம் ஊராட்சி, விழுதியூர் ஆதிதிராவிடத் தெருவில் இந்தியா மார்க் II கைப்பம்பு அமைத்திட தற்பொழுது நிதி ஆதாரம் இல்லாததால், வரும் நிதியாண்டில் இது குறித்து ஆய்வு செய்யப்படும் என்று நாகப்பட்டினம்--காயிதே மில்லத் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**69--**

## தாமரைப்பாளையத்தில் அரசு புறம்போக்கு நிலத்தில் சந்தை அமைத்தல்

*வினா எண் 36884*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

கொடுமுடி, தாமரைப்பாளையம், சந்தையை மாற்றி அருகிலுள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தாமரைப்பாளையம் சந்தைக்கு அருகில் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் நடைபெற்று வருகிறது. மீதி உள்ள நிலம் சந்தை அமைக்கப் போதுமானது அல்ல. ஆகையால்

*1995 நவம்பர் 3]*

தாமரைப்பாளையம் சந்தையை மாற்றி அருகில் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் அமைக்கும் எண்ணம் அரசுக்கு தற்போது இல்லை.

**70--**

**வையங்குட்டைப்புதூரில் மின் கம்பங்கள் மற்றும் விளக்குகள் அமைத்தல்**

வினா எண் 37002--**திரு. வே. பெரியசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) அந்தியூர் தொகுதி, அந்தியூர் ஒன்றியம், மைக்கேல் பாளையம் ஊராட்சி, வையங்குட்டைப்புதூரில் மின்கம்பங்களில் மின் விளக்கு பொருத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், 1994-95-ல் மின் விளக்குப் பொருத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பெரியார் மாவட்டம் அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மைக்கேல்பாளையம் ஊராட்சியிலுள்ள வையங்குட்டையில் 30 குடும்பங்கள் உள்ளன.

அங்கு நான்கு மின் விளக்குகள் உள்ளன. இருப்பினும் 1994-95-ம் ஆண்டில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கூடுதலாக மின் விளக்குகள் பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**71--**

**பிள்ளையார்குப்பத்தில் குடிநீர் வசதி**

வினா எண் 37259--**திரு சி. ஞானசேகரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வேலூர் தொகுதி, பெருமுகை ஊராட்சி, பிள்ளையார் குப்பத்தில் குடிநீர் குழாய்மூலம் வழங்கப்படாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், குடிநீர் வழங்க ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வேலூர் தொகுதி பெருமுகை ஊராட்சி, பிள்ளையார் குப்பம் கிராமத்தில் கட்டப்பட்டுள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு மின் மோட்டார் பொருத்தி 29-11-1994 முதல் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**72--**

**சேதுராயன் புதூர் ஆதிதிராவிடர் காலனிக்கு தெருவிளக்கு வசதி செய்தல்**

வினா எண் 37627--**திரு. டி. வேலையா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருநெல்வேலி சட்டமன்றத்தொகுதி, சேதுராயன் புதூர் ஆதிதிராவிடர் காலனிக்குத் தெருவிளக்கு வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி, சேதுராயன் புதூர் ஆதிதிராவிடர் காலனிக்கு 12 தெருவிளக்குகள் அமைக்கும் பணி ஆதிதிராவிடர் நல சிறப்புத் திட்டத்தின் கீழ் நடவடிக்கையில் உள்ளது.

**73--**

**மரவன்குட்டை தொடக்கப்பள்ளிக்குக் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் 37630--**திரு. வே. பெரியசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி, அம்மாப்பேட்டை ஒன்றியம், பட்லூர் ஊராட்சி, மரவன்குட்டை தொடக்கப்பள்ளிக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெரியார் மாவட்டம், அந்தியூர் ஊராட்சி ஒன்றியம், பட்லூர் ஊராட்சி, மரவன்குட்டை தொடக்கப்பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் ஆய்வின் இல்லை.

**74--**

**பரமக்குடி தொகுதியில் சொந்தக் கட்டிடம் இல்லாத துணை சுகாதார நிலையங்கள்**

வினா எண் *37718*--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* பரமக்குடி தொகுதி, நயினார் கோயில் ஒன்றியத்தில் சொந்தக் கட்டிடம் இல்லாத துணை சுகாதார நிலையங்கள் எத்தனை?

*(ஆ)* எந்த ஆண்டு கட்டிடம் கட்டித்தரப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* பரமக்குடி தொகுதி, நயினார் கோவில் ஒன்றியத்தில் உள்ள புனிதவயல் நகரம், வல்லம், கொலுவூர், பகைவென்றி, அக்கிரமேசி ஆகிய ஆறு துணை சுகாதார நிலையங்களுக்குச் சொந்தக் கட்டிடம் இல்லை.

*(ஆ)* புனித வயல், துணை சுகாதார நிலையத்திற்கு அரசு புறம்போக்கு நிலம் பொது சுகாதாரத் துறைக்கு மாறுதல் செய்யும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதாகவும் மற்ற ஐந்து துணை சுகாதார நிலையங்களுக்கு பொது மக்களிடமிருந்தோ தனியாரிடம் இருந்தோ அரசு புறம் போக்கு நிலமாகவோ இடம் கிடைத்தவுடன் விரைவில் கட்டிடம் கட்ட ஆவன செய்யப்படும் என இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

75--

## ஏந்தல் கண்மாயில் குடிநீர் கிணறு வெட்டுதல்

வினா எண் *37953*--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ) பரமக்குடி தொகுதி, வெங்கடக்குறிச்சியில் ஏந்தல் கண்மாயில் குடிநீர் கிணறு (திறந்தவெளி கிணறு) வெட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு வெட்டப்படும்?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வறட்சி நிவாரணத் திட்டத்தில் திறந்த வெளிக் கிணறுகள் அமைக்கும் பணிகளுக்கு அரசிடம் நிதி பெறப்படும்போது வெங்கடக்குறிச்சி ஏந்தல் கண்மாயில் திறந்த வெளி கிணறு அமைக்கப்படும் என இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

76--

## நாகமநாய்க்கன் பாளையத்தில் கழிவு நீரை குழாய் மூலம் அகற்றுதல்

வினா எண் *38645*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, நாகமநாய்க்கன்பாளையத்திலுள்ள இரயில்வே பாலத்திற்கு கீழ் மக்கள் நடக்க இடைஞ்சலாக வரும் கழிவு நீரை குழாய் மூலம் செலுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3]*

மொடக்குறிச்சி தொகுதி, நாகமநாய்க்கன்பாளையத்திலுள்ள இரயில்வே பாலத்தின் அடிமட்ட நிலம் இரயில்வே துறையினருக்குச் சொந்தமானதாகும். இப்பாலத்திற்குக் கீழ்வரும் கழிவு நீரைக் குழாய் மூலம் செலுத்தும் பணியை தற்போது மேற்கொள்ள இயலாது என இரயில்வே நிர்வாகம் தெரிவித்துள்ளது.

77--

**அரவக்குறிச்சி தொகுதியில் பேருந்து நிழற் குடை அமைத்தல்**

வினா எண் 38914--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரவக்குறிச்சி தொகுதி, க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், நொய்யல் சாலையில் கிரசர் மேடு, ஆண்டி செட்டிப் பாளையம், பவித்திரம் மேடு, காருடையாம்பாளையம் மற்றும் நஞ்சைக் காளக்குறிச்சியில் பேருந்துநிழற்குடை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், க. பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில் 1993-94 ஆம் ஆண்டு, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியிலிருந்து செலவு செய்து கிரசர் மேடு, ஆண்டி செட்டிப்பாளையம், பவித்திரம் மேடு மற்றும் காருடையாம்பாளையம் ஆகிய கிராமங்களில் நிழற்குடை கட்டப்பட்டுள்ளது. நஞ்சைக் காளக்குறிச்சி கிராமத்தில் 1995-96 ஆம் நிதியாண்டில் நிழற் குடை கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

78--

**அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஈப்பு வழங்குதல்**

வினா எண் 39757--**திரு. வே. பெரியசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* அந்தியூர் தொகுதி, அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஈப்பு தேவையின் அவசியத்தை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், அரசே விரைவில் வாங்கித்தர இயலுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

*(அ)* மற்றும் *(ஆ)*: அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு புதிய ஈப்பு வழங்கித்தர அரசு ஆணை வெளியிடப்பட்டு விட்டது.

**79--**

**மகாலிங்கபுரத்தில் தெரு விளக்குகள் அமைத்தல்.**

வினா எண் *39764*--திரு. **வே. பெரியசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி மேம்பத்தி ஊராட்சி மகாலிங்கபுரத்தில் புதிய தெரு விளக்கு போட்டுக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் உள்ள மகாலிங்கபுரம் குடியிருப்பில் *1994-95* ஆம் ஆண்டு சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தில் *4* தெரு மின் விளக்குகள் அமைக்க உரிய தொகை மின் வாரியத்திற்குச் செலுத்தப்பட்டுள்ளது. விரைவில் தெரு விளக்கு வசதி செய்யப்படும்.

**80--**

**அந்தியூர் தொகுதியில் கழிவு நீர் வாய்க்கால் அமைத்தல்**

வினா எண் *39792*--திரு. **வே. பெரியசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3*]

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி நாகலூர் ஊராட்சி, கொண்டையம்பாளையம், குப்பாண்டாம்பாளையம், அந்தியூர் நகரில் காவலர் குடியிருப்பு பின்புறம், சங்கராப் பாளையம் ஊராட்சி, பாரதி நகர், ஆதிதிராவிடர் காலனி ஆகிய இடங்களில் கழிவு நீர் வாய்க்கால் வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெரியார் மாவட்டம், அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நாகலூர் ஊராட்சி, கொண்டையம்பாளையம், குப்பாண்டாம்பாளையம், அந்தியூர் நகரில் காவலர் குடியிருப்பு பின்புறம், சங்கராப்பாளையம் ஊராட்சி, பாரதிநகர், ஆதிதிராவிடர் காலனி ஆகிய இடங்களில் கழிவு நீர் வாய்க்கால் வசதி செய்யும் பணியை நிதிப் பற்றாக்குறையினால் தற்பொழுது மேற்கொள்ள இயலவில்லை.

**81--**

**கல்குடி ஆரம்பப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *39955--திரு. சி. குழந்தைவேலு:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஒன்றியம், கல் குடியில் இருக்கும் ஆரம்பப் பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றியம், கல் குடியில் உள்ள ஆரம்பப் பள்ளி தனியாரால் நடத்தப்படும் பள்ளியாதலால் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் கட்டிடம் கட்டித்தர விதிமுறைகள் இல்லை.

82--

**நன்னிலம் ஒன்றியத்தில் தொடக்கப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் 41592--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், நன்னிலம் ஒன்றியம், நன்னிலம் மற்றும் சன்னாநல்லூர் தொடக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், நன்னிலம் ஒன்றியம், நன்னிலம் மற்றும் சன்னாநல்லூர் தொடக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

83--

**மேற்பனைக்காடு துவக்கப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் 43498--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஒன்றியம், மேற்பனைக்காடு கிராமம் துவக்கப்பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், மேற்பனைக்காடு தொடக்கப்பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டும் திட்டம் தற்சமயம் ஏதும் அரசிடம் இல்லை. 1995-96ல் இது குறித்து பரிசீலிக்கப்படும் என்று புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்துள்ளார்.

*1995 நவம்பர் 3]*

**84--**

**தாந்தோணி தொடக்கப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *43502*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஒன்றியம், தாந்தோணி தொடக்கப்பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், தாந்தோணி துவக்கப்பள்ளிக்கு *1994-95* ஆம் ஆண்டில் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

**85--**

**ஓலயக்குண்ணம் தொடக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *43503*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் ஒன்றியம், ஓலயக்குண்ணம் தொடக்கப்பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் ஊராட்சி ஒன்றியத்தில், ஓலயக்குண்ணம் துவக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் குறித்து செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

**86--**

**வேங்கிக்கால் தொடக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

*வினா எண் 43519--***திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

திருவண்ணாமலை ஒன்றியம், வேங்கிக்கால் தொடக்கப்பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், வேங்கிக்கால் தொடக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டித்தர செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**87--**

**வானாபுரம் ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

*வினா எண் 43605--***திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியம், வானாபுரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1994-95* ஆம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியம், வானாபுரம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

*1995 நவம்பர் 3]*

**88--**

**தண்டரை ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

*வினா எண் 43609*--**திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா*--

திருவண்ணாமலை ஒன்றியம், தண்டரை ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், தண்டரை ஊராட்சியில் உள்ள துவக்கப்பள்ளிக்கு அண்மையில் கூடுதல் கட்டிடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

**89--**

**மாவடுக்குறிச்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை பழுதுபார்த்தல்.**

*வினா எண் 43654*--**திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா*--

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், மாவடுகுறிச்சியில் உள்ள பழுதுபட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை பழுதுபார்த்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், மாவடுக்குறிச்சியில் 30,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதுபார்க்கப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

**90--**

**பெரியகோளாபாடியில் சமுதாயக் கிணறு அமைத்தல்**

வினா எண் *44559*--டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

செங்கம் தொகுதி, பெரியகோளாபாடி கிராமத்தில் சமுதாயக் கிணறு அமைத்துத்தரும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

செங்கம் ஊராட்சி ஒன்றியம், பெரியகோளாபாடி ஊராட்சி ஏரியின் கீழ், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம், ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு போதிய நீர் ஆதாரம் உள்ளதால், குழாய் விஸ்தரிப்பு செய்யப்பட்டு, குடிநீர் தடையின்றி விநியோகிக்கப்பட்டு வருகிறது. எனவே, அங்கு சமுதாயக் கிணறு அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**91--**

**பாகநத்தத்தில் தடுப்புச் சுவர் அமைத்தல்**

வினா எண் *44584*--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரவக்குறிச்சி தொகுதி, தாந்தோன்றி ஊராட்சி ஒன்றியம், பாகநத்தத்தில் தடுப்புச் சுவர் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3]*

திருச்சிராப்பள்ளி மாவட்டம், தாந்தோன்றி ஊராட்சி ஒன்றியம், பாகநத்தத்தில் தடுப்புச் சுவர் கட்டும் பணி *1994-95*-ல் மாவட்ட பரவலாக்கப்படும் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டு கட்டப்பட்டு வருகிறது.

**92--**

**அரவக்குறிச்சி தொகுதியில் துவக்கப்பள்ளிகளுக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *44671*--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரவக்குறிச்சி தொகுதி, க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், பவித்திரம், வேட்டையார்பாளையம் ஆகிய கிராமங்களில் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டிடங்கள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

**விடை--**

***மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :***

திருச்சிராப்பள்ளி மாவட்டம், க. பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில் பவித்திரம் மற்றும் வேட்டையார்பாளையம் ஆகிய கிராமங்களில் கூடுதல் பள்ளிக் கட்டிடம் ஒன்று *1994-95* ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொண்டு கட்டப்பட்டு வருகிறது.

**93--**

**கோனேரிராஜபுரம் ஊராட்சி நடுநிலைப்பள்ளி கட்டிடத்தை பழுதுபார்த்தல்**

வினா எண் *45028*--திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், கோனேரிராஜபுரம் ஊராட்சி நடுநிலைப்பள்ளிக் கட்டிடம் பழுதடைந்துள்ளதால் கட்டிடத்தை பழுதுபார்த்து புதுப்பித்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

***மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :***

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, கோனேரிராஜபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக் கட்டிடம் ரூ.40,000 செலவில் பழுதுபார்க்கப்பட்டு வருகிறது.

**94--**

**சின்னசமுத்திரத்தில் புதிய சமுதாயக் கூடம் அமைத்தல்**

வினா எண் *45647*--**திரு.ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, சின்னசமுத்திரம் கிராமத்தில் புதிய சமுதாயக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, சின்னசமுத்திரம் என்ற ஊரின் மக்கள் தொகை 1595. இது மிகக் குறைவாக உள்ளதாலும், சமுதாயக்கூடம் கட்டுவதற்கு போதிய இடவசதி இல்லாததாலும் சின்னசமுத்திரத்தில் சமுதாயக் கூடம் கட்ட வாய்ப்பு ஏதும் இல்லை.

**95--**

**குத்தாலம் தொகுதியில் தொடக்கப்பள்ளி கட்டிடங்களை பழுதுபார்த்தல்**

வினா எண் *46495*--**திரு.எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், கப்பூர் மற்றும் கோமல் ஊராட்சி, செம்பியன்கோமல் ஆகிய கிராமங்களிலுள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பள்ளிக் கட்டிடங்களைச் செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் ஊராட்சி ஒன்றியம், கப்பூர் ஊராட்சி, கப்பூரில் இரண்டு ஆர்.சி.சி.. கட்டிடங்கள் உள்ளன. அவற்றின் மராமத்துப்பணி விரைவில் துவங்கப்பட்டு முடிக்கப்படும்.

(ஆ) கோமல் ஊராட்சி, செம்பியன்கோமல் பள்ளிக் கட்டிடம் பழுது நீக்கம் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளது. விரைவில் வேலை துவக்கப்படும்.

**96--**

**தேரழுந்தூரில் விளையாட்டு மையம் அமைத்தல்**

வினா எண் 46601--**திரு.எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், தேரழுந்தூர் கிராமத்தில் மணற்கேணி குளம்--பெரிய பள்ளிவாசல் அருகில் விளையாட்டு மைதானம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் ஊராட்சி ஒன்றியம், தேரழுந்தூர், கிராமத்தில் மணற்கேணி குளம் பெரிய பள்ளிவாசல் அருகில் விளையாட்டு மைதானம் அமைக்க பெற்றோர்-ஆசிரியர் கழகத்திடமிருந்து இடம் கிராமத்தில் நன்கொடையாகப் பள்ளிக்கு கிடைக்கப் பெற்றால் விளையாட்டு மைதானம் அமைக்கலாம்.

**97--**

### கொத்தங்குடியில் வானொலி மன்றக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் *46645*--**திரு.எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், கொத்தங்குடி கிராமத்தில் வானொலி மன்றக் கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், கொத்தங்குடி கிராமத்தில் மக்கள் தொகை 617. இக்கிராமத்தில் ஆதி திராவிடர் தொகுப்பு வீடுகள் காலனிக்கு அருகில் சமுதாயக் கூடம் ஒன்று கட்டப்பட்டு அதில் வானொலிப் பெட்டி ஒன்று இயங்கி வருகிறது. இங்குக் குறைந்த அளவு மக்கள் தொகையே உள்ளதால் இப்போதுள்ள கட்டிடங்கள் போதுமானது. தனியாக வானொலி மன்றக் கட்டிடம் கட்டும் திட்டம் எதுவும் இல்லை.

**98--**

### இடையநல்லூர், ஆதிதிராவிடர் காலனிக்குத் தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் *47600*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தருமபுரி மாவட்டம், ஒசூர் வட்டம், இடையநல்லூர் கிராமத்தில் ஆதிதிராவிடர் குடியிருப்புக்குத் தெரு விளக்குகள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

*1995 நவம்பர் 3]*

தருமபுரி மாவட்டம், நாகொண்டப்பள்ளி ஊராட்சிக்கு உட்பட்ட எடையநல்லூர் அரிசன காலனிக்குச் சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ், 1992-93-ல், தெருவிளக்குகள் அமைக்கப்பட்டு நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது. மேற்படி காலனியில் உள்ள 50 வீடுகளுக்கு, 8 தெருவிளக்குகள் போதுமானது. புதியதாக விளக்குகள் அமைக்கத் தேவையில்லை.

**99-**

**கோவில் பாதுகாப்புப் படை அமைத்தல்**

வினா எண் 16060--திரு.ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, ஸ்ரீவீரமாகாளி அம்மன் (ஆத்தாளூர்) கோவிலுக்குப் பாதுகாப்புப் படை அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

இல்லை.

**100--**

**சோமநாத சுவாமி ஆலயத்தைப் புதுப்பித்தல்**

வினா எண் 16966--திரு.ஆர். சிங்காரம்: மாண்புமிகு இந்து அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், விளத்தூர் சோமநாத சுவாமி ஆலயத்தைப் புதுப்பித்துத் திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

இல்லை.



TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

## ஆறாம் பட்டியல்

1--

### வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் குடும்பநல நீதி மன்றங்கள் அமைத்தல்

வினா எண் 61402--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் குடும்பநல நீதிமன்றங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர் :

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் குடும்பநல நீதிமன்றங்கள் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2--

### ராதாபுரம் தாலுகா அலுவலகக் கட்டிடம் கட்டும் பணி

வினா எண் 33229--திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ராதாபுரம் தாலுகா அலுவலகக் கட்டிடம் கட்டும் பணியில் தற்போதைய நிலை என்ன?

விடை--

மாண்புமிகு திரு. எஸ் டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :

ராதாபுரம் தாலுக்கா அலுவலகக் கட்டிடம் கட்டும் பணி தற்போது முதல் மாடி வரை தளம் போடப்பட்டுள்ளது. கட்டிடம் கட்டி முடிக்க ஒப்பந்த காலம் 21-1-1995இல் முடிவடைகிறது.

*1995 நவம்பர் 3]*

**3--**

**ஆரம்ப சுகாதார நிலையத்தில் படுக்கை வசதி ஏற்படுத்துதல்**

*வினா எண் 22694*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*திருப்பத்தூர் ஒன்றியத்தில் மிட்டூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் படுக்கை வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

திருப்பத்தூர் ஒன்றியத்தில் உள்ள ஆண்டியப்பனூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கீழ் மிட்டூர் துணை சுகாதார நிலையம்தான் இயங்கி வருகிறது. அங்கே படுக்கை வசதி செய்து கொடுக்க இயலாது.

**4--**

**சங்கரன்கோவில் சுகாதார துணை இயக்குநர் அலுவலகத்திற்குக் கட்டிடம் கட்டுதல்**

*வினா எண் 26342*--**திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், சங்கரன்கோவில் சுகாதார துணை இயக்குநர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்டத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், சங்கரன் கோவில் சுகாதார துணை இயக்குனர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

5--

## குண்ணலாடி சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் *37403*--**திரு. எச். எம். ராஜு**: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், நெல்லியாளம் கிராமம் குண்ணலாடி பகுதியிலுள்ள சுகாதார நிலையத்தில் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டிக் கொடுக்கப்படும்?

**விடை**--

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், நெல்லியாளம் கிராமம் குண்ணலாடி பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லை. ஒரு துணை சுகாதார நிலையம் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இங்கு கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

6--

## உப்புவேலூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் *44499*--**திரு. செ. ஆறுமுகம்**: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா---

விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார் மாவட்டம், வானூர் ஒன்றியத்தின் உப்புவேலூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை**--

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3]*

இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடங்கள் கட்ட போதுமான நிலம் கிடைக்கப் பெறாமையால் கட்டிடம் கட்டும் வாய்ப்பு தற்சமயம் இல்லை.

7--

**மருத்துவர்கள் தங்க வீடுகள் கட்டுதல்**

வினா எண் *47223*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர் தங்குவதற்கு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

***மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :***

*தற்சமயம் அரசின் பரிசீலனையில் ஏதும் இல்லை.*

8--

**மொடக்குறிச்சி தொகுதியில் ஆரம்ப சுகாதார நிலையத்தைப் புதுப்பித்தல்**

வினா எண் *48771*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி மற்றும் அரச்சானூரில் ஆரம்ப சுகாதார நிலையத்தைப் புதுப்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

***மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :***

மொடக்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையம் அரசுக் கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. *1995-96*ல் ஆரம்ப சுகாதார நிலையங்களை பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்புக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட

நிதியில் இவ்வாரம்ப சுகாதார நிலையத்திற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

அரச்சனூர் ஆரம்ப சுகாதார நிலையம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கட்டிடத்தில் இயங்கிவருவதால் இக் கட்டிடத்தில் ஏற்படும் பழுதுகள், பராமரிப்பு வேலைகளை ஊராட்சி ஒன்றியமே கவனித்துக்கொள்ளும்.

**9--**

**சின்னதாராபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *52117*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கரூர் வட்டம், சின்னதாராபுரம், அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :**

சின்னதாராபுரம் அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் கட்டிடம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை.

**10--**

**அரவக்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *52130*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரவக்குறிச்சியில் இடவசதியின்றி இருக்கும் அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

அரவக்குறிச்சியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் கட்டிடம் கட்டித்தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை.

**11--**

**உதயநத்தம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *67774*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம், தா. பழூர் ஊராட்சி ஒன்றியம், உதயநத்தம் கிராமத்திலுள்ள அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிட வசதி செய்து தருவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

போதுமான நிலமும், மக்கள் நன்கொடையும் பெறப்படாமையால் இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்ட தற்சமயம் வாய்ப்பில்லை.

**12--**

**மொடக்குறிச்சி தொகுதியில் சுகாதார நிலையங்கள் அமைத்தல்**

வினா எண் *79679*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், அரச்சலூர் ஊராட்சி, புதுவலசு, நல்லமங்காபாளையம், வெட்டு காட்டுவலசு, ஓலவலசு, குள்ளரங்கன்பாளையம், நடுப்பாளையம், அரச்சலூர், பூசாரியூர், வீரப்பன்பாளையம், ஊசிப்பாளையம், அழக் கவுண்டன்பாளையம், ஊதன்காடுபுதூர், மேட்டூர் நல்ல கவுண்டன்வலசு, மீனாட்சிவலசு,

பத்தையன்பாளையம், சேனாபதிபாளையம், செல்லப்பாளையம், ஆதிதிராவிடர் காலனி, நாச்சிவலசு, ஓடாநிலை ஆகிய கிராமங்களில் பிரசவ வசதி மற்றும் இரத்த வங்கியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

பெரியார் மாவட்டம் மொடக்குறிச்சி ஒன்றிய மக்கள் தொகை *1,29,025.* இவ்வூராட்சி ஒன்றியத்தில் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. *30,000* மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அரசின் கொள்கையின்படி மொடக்குறிச்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மேற்காணும் கிராமங்களில் மேலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**13--**

**வி.சி. பாளையம்-கல்லாத்து கோம்பை பேருந்து இயக்குதல்**

வினா எண் *33252*--திரு வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், உப்பிலியாபுரம் தொகுதி, வி.சி. பாளையத்திலிருந்து கல்லாத்து கோம்பை வரை புதிய பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருச்சிராப்பள்ளி, உப்பிலியாபுரம் தொகுதி வி.சி. பாளையத்திலிருந்து கல்லாத்துக்கோம்பை வரை பேருந்துகள் எதுவும் இயக்கப்படவில்லை. வி.சி. பாளையத்திலிருந்து கல்லாத்துக்கோம்பை வரை தூரம் *5.0* கி.மீ. வி.சி. பாளையத்திலிருந்து கல்லாத்துக்கோம்பை வரையுள்ள *5.0* கி.மீ. சாலை முழுவதும் மண்சாலையாகவும் அதிக மேடு பள்ளங்கள் நிறைந்தும் பேருந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது. தற்சமயம் துறையூரிலிருந்து வி.சி. பாளையம் வழியாக பி. மேட்டூர் வரை தீரன் சின்னமலை போக்குவரத்துக்

கழகத்திலிருந்து நாள் ஒன்றுக்கு 22 நடைகளும் தனியார் பேருந்துகள் மூலம் 56 நடைகளும் இயக்கப்பட்டு வருகிறது. சாலை சீர் செய்ததும் வி.சி. பாளையம் கல்லாத்துக் கோம்பைக்கு பேருந்து வசதி செய்து தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**14--**

**அதிராம்பட்டினத்திலிருந்து மதுரைக்குப் பேருந்து இயக்குதல்**

வினா எண் 35107--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அதிராம்பட்டினத்திலிருந்து மதுரைக்கு மருது பாண்டியர் கழகப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

அதிராம்பட்டினம்-மதுரை வழித்தடத்தில் அரசு மற்றும் தனியார் நகர மற்றும் புறநகர்ப் பேருந்துகள் போதுமான அளவில் இயங்கி வருவதால் மேற்படி வழித் தடத்தில் பேருந்து செல்லாத பகுதியே கிடையாது. எனவே, அதிராம்பட்டினத்திலிருந்து மதுரைக்கு மருது பாண்டியர் போக்குவரத்துக் கழக நேரடிப் பேருந்து இயக்கிட செயற்குறிப்பு ஏதுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

**15--**

**சேலம்-நாமக்கல் நகரப் பேருந்து இயக்குதல்**

வினா எண் 36664--**டாக்டர் வெ. சரோஜா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சேலத்திலிருந்து வேலகவுண்டம்பட்டி, மாணிக்கம் பாளையம் வழியாக நாமக்கல்லுக்கு நகரப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

விடை--

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் :**

(அ) சேலத்திலிருந்து மாணிக்கம்பாளையம் வேலகவுண்டம்பட்டி வழியாக நாமக்கல் செல்லும் தடத்தின் தட நீளம் 73.3 கி.மீ. ஆகும். இத்தடத்தின் அனைத்துப் பகுதிகளும் பல்வேறு நகர மற்றும் புற நகரப் பேருந்துகள் மூலம் பேருந்து வசதி பெற்று வருகின்றன. மோட்டார் வாகன விதிகளின்படி ஏற்கெனவே பேருந்து வசதி பெற்று வரும் தடத்தில் 30.0 கி.மீ.க்கு அதிகமாக நகரப் பேருந்துகளை இயக்க இயலாது என்பதால், இத்தடத்தில் நகரப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

**16--**

**கீரனூரிலிருந்து கூடுதல் பேருந்து இயக்குதல்**

வினா எண் 38237--**திரு. சி. சுவாமிநாதன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கீரனூரிலிருந்து திருமலைராயபுரம் மற்றும் வேறு ஊர்களுக்குச் செல்லும் வழித்தடத்தில் மேலும் ஒரு நகரப் பேருந்தை இயக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது இயக்கப்படும்?

விடை--

**மாண்புமிகு திரு கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): கோரிக்கை தடத்தின் வழியாக ஏற்கெனவே கழக நகரப் பேருந்துகளும், தனியார் புறநகரப் பேருந்துகளும் இயங்கி வருவதால், மேலும் நகரப்பேருந்து இயக்குமளவிற்குப் பயணிகள்

*1995 நவம்பர் 3]*

நெரிசல் இல்லை. எனவே இத்தடத்தில் மேலும் ஒரு நகரப் பேருந்து இயக்கிட செயற்குறிப்பு ஏதுமில்லை.

**17--**

**குரிஞ்சிக்கொல்லைக்குப் பேருந்து இயக்குதல்**

*வினா எண் 38361*--**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், பெரிய நெல்லிக்கொல்லைக்கு இயக்கப்படும் 11ஏ பெரியார் போக்குவரத்துக் கழகப் பேருந்தை குரிஞ்சிக்கொல்லைவரை இயக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் :**

பெரியநெல்லிக்கொல்லை-குரிஞ்சிக்கொல்லை சாலையின் தற்போதைய நிலை குறித்து தட ஆய்வு செய்ததில், இவ்விரு கிராமங்களுக்கும் இடைப்பட்ட 1.5 கி.மீ. சாலையில் 0.5 கி.மீ. சாலை ஜல்லி சாலையாகவும் சாலையின் இரண்டு பக்கமும் முட்செடிகள் அடர்ந்து பேருந்து இயக்கிட தகுதியற்ற நிலையில் உள்ளமையால் தற்போதைய நிலையில் சிதம்பரம்-பெரிய நெல்லிக்கொல்லை தடத்தில் இயக்கப்படும் நகரப் பேருந்தினை குரிஞ்சிக்கொல்லைவரை நீட்டித்து இயக்கிட இயலாத நிலை உள்ளது.

**18--**

**ஈசநத்தம்-கே. பரமத்தி பேருந்து இயக்குதல்**

*வினா எண் 38515*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் ஈசநத்தத்திலிருந்து குள்ளமாபட்டி, ஆலமரத்துப்பட்டி, செந்தாம்பட்டி கிழக்கு, செந்தாம்பட்டி மேற்கு, துலுக்கம்பாறை, ஆர். வெள்ளோடு, ஆத்துமேடு, மாலப்பட்டி, உத்தரராசப்பட்டி, பெரியவளையப்பட்டி,*

சின்னவளையப்பட்டி, அரவக்குறிச்சி, ராஜபுரம், வாய்க்காலூர், சின்னதாராபுரம் வழியாக கே. பரமத்திவரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் :**

ஆர். வெள்ளோடு-பரமத்திவரையுள்ள பகுதி ஏற்கெனவே பேருந்து வசதி பெற்ற பகுதியாகும்.

ஈசநத்தம்-ஆர். வெள்ளோடு வழித்தடத்திலுள்ள பேருந்து வசதி பெறாத துலுக்கம்பாறை, செந்தாம்பட்டி கிழக்கு, செந்தாம்பட்டி மேற்கு, ஆலமரத்துப்பட்டி, குள்ளமாபட்டி ஆகிய கிராமங்களுக்கு பேருந்து வசதி செய்யும் பொருட்டு அரவக்குறிச்சி-மல்லாபுரம் (வழி) ஆத்துமேடு, குள்ளமாபட்டி, ஈசநத்தம் வழியாக நகரப்பேருந்து ஒன்றின் மூலம் தினசரி 4 நடைகள் கடந்த 24-11-1994 முதல் இயக்கப்படுகிறது. எனவே கோரிக்கையின் வழித்தடம் முழுவதும் உள்ள அனைத்து ஊர்களும் தற்பொழுது பேருந்து வசதி பெற்றுள்ளது.

**19--**

### அரவக்குறிச்சி-திருப்பூர் பேருந்து இயக்குதல்

வினா எண் *39012*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரவக்குறிச்சியிலிருந்து வெள்ளக்கோயில், காங்கேயம் வழியாகத் திருப்பூருக்கு அரசு போக்குவரத்துக் கழக பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் :**

அரவக்குறிச்சி-திருப்பூர் (வழி) கரூர், வெள்ளக்கோயில், காங்கேயம் வழித்தடத்தின் மொத்த நீளம் 116.9 கி.மீ. இவ்வழித்தடம் அரவக்குறிச்சி-கரூர், கரூர்-திருப்பூர் என்ற புறநகரப் பேருந்துகள் மூலம்

*1995* நவம்பர் *3*]

நன்கு இணைக்கப்பட்டுள்ளது. இவ்வழித் தடத்தில் நேரடிப் பயணிகள் எல்லா நாட்களிலும் பயணம் செய்யும் வாய்ப்பில்லை. எனவே கோரிக்கை வழித்தடத்தில் பேருந்து இயக்கத் தேவை இல்லை.

**20--**

### அரவக்குறிச்சி வழித்தடத்தில் பேருந்துகள் இயக்குதல்

வினா எண் *42771*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஊட்டி-அரவக்குறிச்சி (வழி) குன்னூர், மேட்டுப்பாளையம், அன்னூர், திருப்பூர், வெள்ளக்கோயில், தென்னிலை, சின்னதாராபுரம், ஆகிய வழித்தடத்தில் அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் :**

கோரிக்கையில் குறிப்பிட்டுள்ள வழித்தடத்தில் அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்கிட செயல் திட்டம் ஏதுமில்லை.

**21--**

### பள்ளப்பட்டி-பெங்களூர் பேருந்து இயக்குதல்

வினா எண் *46081*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா---

ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகப் பேருந்தினை கரூர் வட்டம், பள்ளப்பட்டி-பெங்களூர் இடையே விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் :**

நாள்தோறும் *40* பேருந்துகள், மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி, கம்பம், செங்கோட்டை, நாகர்கோவில், கன்னியாகுமரி, மார்த்தாண்டம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

மற்றும் பாபநாசத்திலிருந்து பெங்களூருக்கு 50 ஒரு வழிப் பயணங்களுடன் இயக்கப்படுகிறது. அனைத்துப் பேருந்துகளும் கரூர், திண்டுக்கல் வழியாக இயக்கப்படுகின்றன.

பள்ளப்பட்டி என்ற இடம் கரூரிலிருந்து 32 கி.மீ. தொலைவிலும், திண்டுக்கல்லிலிருந்து 44 கி.மீ. தொலைவிலும் உள்ளது. மேலும் பள்ளப்பட்டி பிரதான சாலையிலிருந்து 1 கி.மீ. உள்ளே இருப்பதாகவும், இந்தச் சாலை விரைவுப் பேருந்து இயக்கத்திற்குப் பொருத்தமற்றதாக இருப்பதாலும், தற்சமயம் பள்ளப்பட்டியிலிருந்து பெங்களூருக்கு ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழக விரைவுப் பேருந்து இயக்குவது நடைமுறைக்கு சாத்தியமற்றதாக உள்ளது. மேற்படி ஊரிலிருந்து கரூர் சென்று, விரைவுப் பேருந்து வசதியைப் பயன்படுத்தலாம்.

**22--**

**அரவக்குறிச்சி-ஊட்டி பேருந்து இயக்குதல்**

வினா எண் 46087--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சி மாவட்டம், அரவக்குறிச்சி முதல் ஊட்டிக்கு சின்னதாராபுரம், தென்னிலை, வெள்ளக்கோவில், திருப்பூர், மேட்டுப்பாளையம், குன்னூர் வழியாகப் பேருந்து விடுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் :**

திருச்சி மாவட்டம், அரவக்குறிச்சி-ஊட்டி (வழி) சின்னதாராபுரம் தென்னிலை, வெள்ளக்கோவில், திருப்பூர், மேட்டுப்பாளையம், குன்னூர், வழித்தடம் முழுவதும் புறநகர் பேருந்து மூலம் நன்கு இணைக்கப்பட்டுள்ளது. மேலும், அரவக்குறிச்சியிலிருந்து அன்றாடம் ஊட்டிக்குப் போதுமான பயணிகள் இருக்க வாய்ப்பில்லை என்பதால் மேற்படி வழித்தடத்தில் தற்போது பேருந்து இயக்கத் தேவையில்லை.

*1995 நவம்பர் 3]*

**23--**

**பேராவூரணி-திருச்சி பேருந்து இயக்குதல்**

*வினா எண் 47869--***திரு ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*தஞ்சை மாவட்டம், பேராவூரணியிலிருந்து திருச்சிக்கு ஒரு சோழன் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை--**

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் :***

தஞ்சை மாவட்டம்-பேராவூரணியிலிருந்து திருச்சிக்கு சோழன் பேருந்து ஏற்கெனவே இயங்கி வருகிறது.

**24--**

**குடவாசல்-பூந்தோட்டம் பேருந்தை மீண்டும் இயக்குதல்**

*வினா எண் 48643--***திரு எஸ். ஆசைமணி:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*நாகை காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி குடவாசலிலிருந்து கண்டிரமாணிக்கம், எரவாஞ்சேரி வழியாக பூந்தோட்டம் வரை சென்று கொண்டிருந்த சோழன் போக்குவரத்துக் கழக 50-ஏ நகரப் பேருந்து நிறுத்தப்பட்டுவிட்டதை மீண்டும் செலுத்திட அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் :***

சாலை பழுது காரணமாக குடவாசல்-பூந்தோட்டம் (வழி) கண்டிரமாணிக்கம், பிலாவடி, எரவாஞ்சேரி தடத்தில் பேருந்து இயக்க இயலவில்லை. தற்போது இத்தடத்தில் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

**25--**

**கரூர்-பள்ளப்பாளையம் நகரப் பேருந்து இயக்குதல்**

வினா எண் *54144*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கரூர்-பள்ளப்பாளையம் (வழி) செல்லாண்டிபாளையம் இடையே தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து விடுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் :**

தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த மூன்று நகரப் பேருந்துகள் மூலம் பல்நோக்குத் திட்டத்தில் கரூர்-பள்ளப்பாளையம் (வழி) செல்லாண்டிபாளையம் வழியாக தினசரி *6* நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

**26--**

**கரூர்-பாகநத்தம் பேருந்து இயக்குதல்**

வினா எண் *54245*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கரூர்-பாகநத்தம் வழி தாந்தோணி, கே.பிச்சம்பட்டி, முஷ்டகிணத்துப்பட்டி, வெடிக்காரன்பட்டி, தாளப்பட்டி, காக்காவாடி, வாசுகுமரன்பட்டி இடையே நகரப் பேருந்து விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் :**

கரூர்-வாசுகுமரன்பட்டி (வழி) தாந்தோணி, காக்காவாடி, வெடிக்காரன்பட்டி, முஷ்டகிணத்துப்பட்டி, தாழைப்பட்டி, கே.

*1995 நவம்பர் 3]*

பிச்சம்பட்டி வழித்தடத்தின் மொத்த நீளம் 39.0 கி.மீ. இவ்வழித்தடத்தின் நீளம் நகரப் பேருந்து இயக்க அதிக பட்ச தூரமான 30.0 கி.மீ.க்கு மேல் உள்ளதால், கோரிக்கையின் வழித்தடத்தில் நகரப் பேருந்து இயக்க இயலாது.

**27--**

**அரவக்குறிச்சி தொகுதியில் பேருந்து வசதி**

வினா எண் 54249--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரவக்குறிச்சி தொகுதி, தாந்தோன்றி ஊராட்சி ஒன்றியம், கே. பிச்சம்பட்டி கிராமம் வாசுகுமரன்பட்டியில் நகரப் பேருந்து விடுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் :**

தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து ஒன்றின் மூலம் பல்நோக்குத் திட்டத்தில் கரூர்-வசந்தகதிர்பாளையம் (வழி) வெள்ளியமனை, பி. தாழைப்பட்டி, கே. பிச்சம்பட்டி வழியாக தினசரி 4 நடைகள் இயக்கப்படுகிறது. இவ்வழித்தடத்தில் உள்ள கே.பிச்சம்பட்டி கிராமத்திலிருந்து சுமார் 3.0 கி.மீ. தொலைவில் வாசுகுமரன்பட்டி உள்ளது. இந்தப் பேருந்து வசதி பெறாத 3.0 கி.மீ. பகுதியில் 0.5 கி.மீ. மெட்டல் சாலையாகவும், 2.5 கி.மீ. மண்சாலையாகவும் இருபுறமும், முட்கள் அடர்ந்து வளர்ந்து சாலை சுமார் 6 அடி அகலம் கொண்டுள்ளது. எனவே வாசுகுமரன்பட்டி கிராமத்திற்குப் பேருந்து வசதி செய்ய இயலாது.

**28--**

**மொடக்குறிச்சி தொகுதியில் பேருந்து வசதி**

வினா எண் 57819--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

[1995 நவம்பர் 3

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், வள்ளிபுரம் ஊராட்சி, கொங்காளி வலசு, கோக்காட்டூர், கருக்கம்பாளையம், வள்ளிபுரம், எல்லைக்காடுபுதூர் ஆகிய கிராமங்களுக்கு பேருந்து வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் :**

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், வள்ளிபுரம் ஊராட்சி, கொங்காளி வலசு, கோக்காட்டூர், கருக்கம்பாளையம், வள்ளிபுரம், எல்லைக்காடுபுதூர் ஆகிய ஊர்கள் தற்பொழுது பேருந்து வசதி பெற்றுள்ளன.

**29--**

திருச்சி-ஈச்சங்காடு பேருந்து இயக்குதல்

*வினா எண் 61884--திரு ஆர். தங்கராஜ்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

திருச்சியிலிருந்து தளவாய் வரை வரும் தீரன் சின்னமலைப் போக்குவரத்துக் கழகப் பேருந்தை ஈச்சங்காடு வரை இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் :**

*திருச்சி-தளவாய் (வழி) அரியலூர், திட்டக்குடி பார்டர் சன்னாசிநல்லூர் பேருந்து இயங்கும் வழித்தடத்தில் ஈச்சங்காடு பிரிவிலிருந்து ஈச்சங்காடு கிராமம் 0.8 கி.மீ. தொலைவில் உள்ளது. இந்த 0.8 கி.மீ. தூரத்தில் ஏரிக்கரையில் செல்லும் சாலை முழுவதும் மழைநீரால் அரிக்கப்பட்டு, மேடு பள்ளங்களாகவும், சாலை குறுகலாகவும் பேருந்து இயக்க இயலாத அளவிற்கு உள்ளது. மேலும் பேருந்துகள் இயங்கும் பிரதான சாலையிலிருந்து 1.0 கி.மீ. தூரம் வரையுள்ள பகுதிகள் அனைத்தும் அரசு ஆணைப்படி பேருந்து வசதி பெற்ற*

TRUTH ALONE TRIUMPHS

பகுதிகளாகக், கருதப்படும். எனவே ஈச்சங்காடு கிராமத்தினை பேருந்து வசதி பெற்ற கிராமமாகக் கருதலாம்.

**30--**

**அரியலூர்-ஈச்சங்காடு பேருந்து இயக்குதல்**

*வினா எண் 65397*--**திரு ஆர். தங்கராஜ்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) அரியலூரில் இருந்து சன்னாசி நல்லூர் வரை வரும் பேருந்தை ஈச்சங்காடுவரை செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது விடப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கோரிக்கையில் உள்ள ஈச்சங்காடு கிராமம், சன்னாசி நல்லூரிலிருந்து 7.0 கி.மீ. தொலைவிலும், திருச்சி-தளவாய் (வழி) அரியலூர்-சன்னாசிநல்லூர் வழித்தடத்தில் ஈச்சங்காடு பிரிவு சாலையிலிருந்து 0.8 கி.மீ. தொலைவிலும் உள்ளது. பிரிவு சாலையிலிருந்து ஈச்சங்காடு செல்லும் சாலை ஏரிக்கரையில் செல்கிறது. இச்சாலை மழை நீரால் அரிக்கப்பட்டு சாலை குறுகலாகவும், மேடு பள்ளமாகவும் பேருந்து இயக்க இயலாத நிலையிலும் உள்ளது. மேலும பேருந்து இயங்கும் பிரதான சாலையிலிருந்து 1.0 கி.மீ. தொலைவில் உள்ள அனைத்து பகுதிகளும் பேருந்து வசதி பெற்ற பகுதியாகக் கருதப்படும் என்று அரசு ஆணை உள்ளது. எனவே ஈச்சங்காடு கிராமத்திற்கு தற்போது பேருந்து இயக்க இயலாது.

**31--**

**அரவக்குறிச்சி-மூலனூர் பேருந்தை மாற்றி இயக்குதல்**

*வினா எண் 67571*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரவக்குறிச்சியிலிருந்து பள்ளப்பட்டி வழியாக மூலனூர்வரை செல்லும் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக நகரப் பேருந்தை பள்ளப்பட்டி, ஆனங்கூர், செங்காளிவலசு, கோட்டப்பாளையம், எரவநாயக்கன்பட்டி, கரியாஞ்செட்டி வலசு, வஞ்சிவலசு, கன்னிவாடி, மூலனூர் இடையே இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் :**

கோரிக்கையில் உள்ள அரவக்குறிச்சி-மூலனூர் (வழி) பள்ளப்பட்டி, ஆனங்கூர், செங்காலிவலசு, கோட்டார்பாளையம், எரவநாயக்கன்பட்டி, கரியான்செட்டிவலசு, வஞ்சிவலசு, கன்னிவாடி வழித்தடத்தின் மொத்த தூரம் *44.0* கி.மீ. எனவே நகரப் பேருந்து இயக்க அதிகபட்ச தூரமான *30.0* கி.மீ.க்கு மேல் உள்ளதால் இவ்வழித்தடத்தில் இந்நகரப் பேருந்தினை மாற்றி இயக்க இயலாது.

**32--**

**காரியாபட்டியில் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் கிளை அமைத்தல்**

வினா எண் *70710*--**திருமதி வி.ஜி. மணிமேகலை:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) காமராஜர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதி, காரியாபட்டியில் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் கிளை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் :**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

*1995 நவம்பர் 3]*

**33--**

**அரியலூர்-சென்னைக்குப் பேருந்து இயக்குதல்**

வினா எண் *70736*--**டாக்டர் சு. மணிமேகலை:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரியலூரிலிருந்து பெரம்பலூர் வழியாக சென்னைக்கு தீரன் சின்னமலை போக்குவரத்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

கோரிக்கையில் உள்ள அரியலூர்-சென்னை (வழி) பெரம்பலூர் வழித்தடத்தில் *10-5-1995* முதல் ஒரு பேருந்தின் மூலம் தினசரி *2* நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

**34--**

**பெங்களூர் செல்ல கிருஷ்ணகிரியில் முன்பதிவு வசதி**

வினா எண் *77416*--**திரு. கே. முனிவெங்கடப்பன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெங்களூர்-சென்னை செல்லும் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழக சொகுசுப் பேருந்து கிருஷ்ணகிரியிலிருந்து பயணிகளை ஏற்றிச் செல்ல முன்பதிவு செய்வதற்கு முன்பதிவு அலுவலகம் ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

பெங்களூர்-சென்னை தடத்தில் இயக்கப்படும் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் அனைத்து இருக்கைகளுக்கும் பெங்களூரிலேயே முன்பதிவு செய்யப்பட்டு நிரப்பப்படுகின்றன. எனவே மேற்குறிப்பிட்ட தடத்தில் இயக்கப்படும் பேருந்துகளுக்கு

கிருஷ்ணகிரியில் முன்பதிவு செய்யும் பொருட்டு முன்பதிவு அலுவலகம் ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

**35--**

**எருமாபாளையம் அருந்ததியர் காலனிக்கு பேருந்து இயக்குதல்**

வினா எண் *78591*--**திரு. க. அர்ச்சுனன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வீரபாண்டி தொகுதியில் சேலம்-எருமாபாளையம்வரை சென்று வரும் பேருந்து எண் *57*ஐ எருமாபாளையம் அருந்ததியர் காலனி வரை நீட்டிக்கப்படுமா?

(ஆ) வீரபாண்டி தொகுதியில் சேலம்-புத்தூர்வரை சென்று வரும் பேருந்து கணவாய்காடு வரை நீட்டிக்கப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்::**

(அ) கோரிக்கையை நிறைவு செய்யும் வகையில் சேலம்-எருமாபாளையம் செல்லும் தடம் எண் *57* பேருந்தினை அருந்ததியர் காலனி வழியாக பனங்காடுவரை நீட்டித்து *1-4-1995* முதல் இயக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இக்கோரிக்கையை நிறைவு செய்யும் வகையில் சேலம்-புத்தூர் வரை வரும் பேருந்தை, கணவாய்க்காடு வழியாக பெருமாம்பட்டியுடன் நீட்டித்து *14-4-1995* முதல் இயக்கப்பட்டு வருகிறது.

**36--**

**சின்னதாராபுரத்தில் விதைப்பண்ணை அமைத்தல்**

வினா எண் *52076*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சின்னதாராபுரத்தில் விதைப்பண்ணை அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை––**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

இல்லை.

**37--**

வரி ஏய்ப்பு நடைபெறுவதைத் தடுத்தல்

வினா எண் *35161*--திரு. **வ.மு. சுப்பிரமணியம்:** மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) காகித வியாபாரத்தில் வரி ஏய்ப்பு நடைபெறுவதை அரசு அறியுமா?

(ஆ) இதனைத் தவிர்க்க இருமுனை வரியினை கடைபிடிக்க அரசு முன்வருமா?

(இ) இதுபோன்ற இருமுனை வரி மூலம் வரி ஏய்ப்பைத் தடுக்கக்கூடிய பொருள்கள் எவை எவை என துறை ஆய்வு செய்து உள்ளதா?

(ஈ) ஆம் எனில், அப்பொருட்களின் விவரம் என்ன?

**விடை––**

**மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரிகள் துறை அமைச்சர் :**

(அ) ஆம். காகித வியாபாரத்தில் போலி வணிகர்களின் பில்களைப் பயன்படுத்தி தவறாக இரண்டாம் விற்பனை வரி விலக்கு கோருதல் மற்றும் பில் இல்லாமல் விற்பனை செய்தல் ஆகிய வழிகளில் ஓரளவு கணிசமான வரி ஏய்ப்பு இருப்பது உண்மைதான்.

(ஆ) காகிதத்துக்கு இருமுனை வரியைக் கடைபிடிக்கும் உத்தேசம் தற்போது இல்லை. நாடெங்கும் கூடுதல் மதிப்புத் தீர்வை (வி.ஏ.டி) முறையை அமுல்படுத்தும் கருத்துடன் இது இணைந்தது.

(இ) மற்றும் (ஈ): வரி ஏய்ப்பு மிகுதியாக உள்ள பொருட்களையும் மற்றும் இரண்டாம் விற்பனையில் விலை உயரும் பொருட்களையும் நன்கு ஆய்வு செய்து கீழ்க்காணும் பதின்மூன்று பொருட்களுக்கு இருமுனை வரிவிதிப்பு முறையைக் கொணர்வதன் மூலம் சென்ற பட்ஜெட்டில் இருமுனை வரிக்கான ஆறாம் அட்டவணையில் சேர்க்கப்பட்டன :--

1. தாவர எண்ணெய்

2. ஏலக்காய்

3. ஒளி, ஒலி பதிவு செய்யப்பட்ட நாடாக்கள்

4. இன்ஸ்டன்ட் காபி

5. வாசனைப்பாக்கு, பான் மசாலா

6. சூட்கேஸ் முதலிய பயணப் பொருட்கள்

7. மரம்

8. இரும்பு அலமாரிகள்

9. பிற தளவாடப் பொருட்கள்

10. பெயரிடப்பட்டு விற்பனையாகும் பிஸ்கட் முதலிய உணவுப் பண்டங்கள்.

11. இயந்திரத்தால் தயாரிக்கப்படும் சோப்புகள்

12. பற்பசை முதலியன

13. வாசனை மற்றும் அழகு சாதனப்பொருட்கள், பிற வணிகர்களுக்கும் நுகர்வோருக்கும் ஓரளவு சலுகையளிக்கும் முகத்தான் இன்ஸ்டன்ட் காபி, வாசனைப் பாக்கு பெயரிடப்பட்டு விற்பனையாகும் உணவுப் பண்டங்கள், சோப்பு, பற்பசை, வாசனைப் பொருட்கள் (மேலே குறித்த வரிசை எண்கள் 4, 5, 10, 11, 12 மற்றும் 13) ஆகியவை இந்த ஆறாம் அட்டவணையிலிருந்து அரசால் நீக்கப்பட்டு ஒரு முனை வரி விதிப்பு முறையில் தொடர்கின்றன.

38--

## டாசிட் மூலம் தொழிற்பேட்டைகள்

வினா எண் 57150--திரு. கே.ஏ. மனோகரன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

(TACID) டாசிட் மூலம் தருமபுரி மாவட்டம், பர்கூர் பகுதியில் அமைக்கப்பட்ட தொழிற்பேட்டையில் எத்தனை நிறுவனங்கள் தொழிலகங்களைத் தொடங்க உள்ளன?

**விடை--**

**மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர் :**

டாசிட் நிறுவனம், பர்கூர் பகுதியில் 1,378 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு தொழில் வளாகம் அமைக்க உத்தேசித்து உள்ளது. சிட்கோ, தமிழ்நாடு கனிம நிறுவனம், மேகாம், தோல் ஏற்றுமதி பிரிவு ஆகிய நிறுவனங்கள் தொழில்கள் துவங்க 550 ஏக்கர் நிலம் கேட்டுள்ளன. இவை தவிர மேலும், தோல், பழவகைகள், கனிமம், நெசவு ஆலைகள், பொறியியல் தொழில்கள், சம்பந்தப்பட்ட 100 நடுத்தர மற்றும் 300 சிறிய தொழிற்சாலைகள் இவ்வளாகத்தில் அமைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**39--**

குலசேகரப்பட்டினத்தில் நூற்பாலை அமைத்தல்

வினா எண் 63600--**திரு. ஆ. செல்லத்துரை:** மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பு ஆலையிலிருந்து குலசேகரப்பட்டினத்திற்குத் துணை நூற்பு ஆலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் :**

(அ) திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலையிலிருந்து குலசேகரப்பட்டினத்திற்கு துணை நூற்பு ஆலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**40--**

**மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு மின்மோட்டார் அமைத்தல்**

வினா எண் *2321*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், குறிச்சியைச் சேர்ந்த மேட்டுவயலில் அமைக்கப்பட்ட மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிக்கு மின் மோட்டார் உடன் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், குறிச்சி ஊராட்சியைச் சேர்ந்த மேட்டுவயல் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு தற்போது மின் மோட்டார் பொருத்தப்பட்டு நல்லமுறையில் இயங்கி வருகிறது.

**41--**

மாநகராட்சிக்கு நிதி உதவி

வினா எண் *2906*--**திரு. கே. செல்வராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஒரு கோடி நிதி உதவி செய்தது போல், மாநகராட்சிகளுக்கும் நிதி உதவி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பஞ்சாயத்து யூனியன்களுக்கு ரூபாய் ஒரு கோடி நிதி உதவி செய்தது போல் மாநகராட்சிகளுக்கும் நிதி உதவி செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

*1995 நவம்பர் 3]*

**42--**

**நாடியத்தில் பள்ளிக் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *6735*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், நாடியத்தில் பள்ளிக் கட்டிடம் கட்ட உடன் நடவடிக்கை எடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் நாடியத்தில் நிரந்தர பள்ளிக் கட்டிடங்கள் உள்ளன. கட்டிடமே இல்லாத இடங்களுக்கு முதலில் கட்டிட வசதி செய்து கொடுத்த பின்னர், நாடியம் போன்ற ஊராட்சிப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டிக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**43--**

**மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு நீர்மூழ்கி மோட்டார் அமைத்தல்**

வினா எண் *6766*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் குருவிக்கரம்பை ஊராட்சி சின்னக்கள்ளங்காட்டில் உள்ள மேல் நிலை நீர்தேக்கத் தொட்டியின் மோட்டாரை மாற்றி நீர் மூழ்கி மோட்டார் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த குருவிக்கரம்பை ஊராட்சியில் செயல்படும் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிகளில், இரண்டு

தொட்டிகளின் மோட்டார்கள், நீர் மூழ்கி மோட்டார்களாக 1993 ஆம் ஆண்டில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. தற்போது குருவிக்கரம்பை ஊராட்சியில் நிதிநிலை திருப்திகரமாக இல்லாததால், சின்னக்கள்ளங்காடு நீர்த்தேக்கத் தொட்டியின் மோட்டாரை நீர்மூழ்கி மோட்டாராக மாற்றி அமைக்க இயலாது உள்ளது. நிதிவசதி ஏற்படும் போது நீர்மூழ்கி மோட்டார் அமைக்கப்படும்.

44--

**காமராஜ்நகர் குடிநீர்ப்பிரச்சினையைத் தீர்த்தல்**

வினா எண் 6824--செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள காமராஜ்நகர் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): புவனகிரி ஊராட்சி ஒன்றியம், எரும்பூர் ஊராட்சியைச் சேர்ந்த காமராஜ் நகரில் பொது குடிநீர் வழங்கல் முனை இரண்டும், சாதாரண கைப்பம்பு இரண்டும், மார்க்-2, கைப்பம்பு ஒன்றும் நல்ல நிலையில் இயங்கிவருகிறபடியால் பொதுமக்களுக்கு குடிநீர் தடையின்றி வழங்கப்பட்டு வருகின்றது.

45--

**நாடங்காட்டில் சமுதாய போர்வெல் அமைத்தல்**

வினா எண் 7119--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், நாடங்காட்டில் சமுதாய போர்வெல் போட்டுக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பேராவூரணி ஒன்றியம், களத்தூர் ஊராட்சியில் உள்ள நாடங்காடு கிராமத்தில் விளை நிலமுள்ள ஆதிதிராவிடர்கள் ஒருவருமில்லை. ஊராட்சியின் நிதி நிலையும் நிர்வாகச் செலவினங்களுக்கே போதுமானதாக இல்லை. ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் சமுதாய போர்வெல் அமைக்கும் திட்டம் தற்பொழுது அமுலில் இல்லை. எனவே தற்பொழுது நாடங்காடு கிராமத்தில் சமுதாய போர்வெல் அமைத்துக்கொடுக்க வழிவகை ஏதுமில்லை.

**46--**

புதுக்குப்பம் மீனவர் கிராமத்திற்குப் பேருந்து நிழற்கொடை

வினா எண் *7792*--**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ) புவனகிரி தொகுதி, புதுக்குப்பம் மீனவர் கிராமத்திற்குப் பேருந்து நிழற்குடை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், புதுக்குப்பம் மீனவர் காலனியில் பேருந்து நிழற்குடை கட்டி முடிக்கப்பட்டு பயன்பட்டு வருகிறது.

**47--**

அத்தியூத்துக்கு பேருந்து நிழற்குடை

வினா எண் *10406*--**திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1995 நவம்பர் 3

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியத்திலுள்ள அத்தியூத்து கிராமத்தில் பேருந்து நிழற்குடை அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், அத்தியூத்து கிராமத்தில், பேருந்து நிழற்குடை ரூ.14,500 மதிப்பீட்டில் 7-3-1994 அன்று அமைக்கப்பட்டுள்ளது.

**48--**

**கணபதி கிராமத்திற்கு சமுதாயக்கிணறு அமைத்தல்**

வினா எண் 10549--**திரு. சி. சுவாமிநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புதுக்கோட்டை ஒன்றியம் கணபதி கிராமத்தில் சமுதாயக்கிணறு அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): புதுக்கோட்டை மாவட்டத்தில் பாசனத்திற்காக சமுதாய ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் பணி தற்போது ஒவ்வொரு கட்டமாக நடைபெற்று வருகிறது. கணபதிபுரம் கிராமத்தில் சமுதாய ஆழ்குழாய்க்கிணறு அமைக்கும் பணி எடுத்துக்கொள்ளப்படவில்லை. இரண்டாவது கட்டம் செயல்படுத்தப்படும்போது இக்கிராமத்து விவசாயிகள் சட்டத் திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு கிணறு அமைக்க பாசன கூட்டுறவு சங்கம் அமைக்க முன்வருவார்களேயானால் சமுதாய ஆழ்குழாய்க்கிணறு அமைக்கும் பணி எடுத்துக்கொள்ளப்படும்.

*1995 நவம்பர் 3]*

**49--**

**இடையக்குறிச்சிக்கு குடிநீர் வசதி செய்தல்**

வினா எண் *10595*--**திரு. ஆர். தங்கராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஆண்டிமடம் தொகுதி, இடையக்குறிச்சிக்கு ஒரு ஆழ்குழாய் கிணறும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியும் அமைத்துக் குடிநீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

ஆண்டிமடத் தொகுதி மற்றும் இடையக்குறிச்சி (கிழக்கு மற்றும் மேற்கு) ஆகியவற்றிற்கு ஆழ்குழாய் கிணறு அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை. ஆனால் இடையக்குறிச்சி (கிழக்கு) குடியிருப்புக்கு *30,000* லிட்டர் கொள்ளளவுள்ள மேல் நிலைத் தொட்டி *15–5–1992*ல் முடிக்கப்பட்டு, ஊராட்சி ஒன்றியம் பராமரிப்பிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இடையக்குறிச்சி (மேற்கு) குடியிருப்பிற்கு ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி *24–8–1990*ல் முடிவு பெற்று ஊராட்சி ஒன்றியம் பராமரிப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி குடிநீர்த் திட்டங்கள் மக்கட் தொகைக்கு ஏற்றவாறு போதுமானதாகயிருப்பதால் புதிய திட்டம் ஏதும் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

**50--**

**கட்டயன்காடு உட்கடையில் பேருந்து நிழற்குடை அமைத்தல்**

வினா எண் *11631*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பேராவூரணி தொகுதி கட்டயன்காடு உட்கடையில் *1992–93*ல் பேருந்து நிழற்குடை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், கட்டயன்காடு உட்கடையில் 1992-93-ம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், ரூ. 11,552 செலவில், பயணிகள் நிழற்குடை கட்டி முடிக்கப்பட்டு, அதை மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

51--

புதுக்குடியிருப்பிற்கு தெருவிளக்கு விஸ்தரிப்பு

வினா எண் 12356--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம் செல்லப்பிள்ளையார் கோவில் புதுக்குடியிருப்பிற்கு 1992-93ல் தெருவிளக்கு விஸ்தரிப்பு செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

சேதுபாவாசத்திரம் ஒன்றியம் செல்லப்பிள்ளையார் கோவில் புதுக்குடியிருப்பிற்கு தெரு மின்விளக்குகள் அமைக்கத் தேவையான ஏழு (7) மின் கம்பங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும், மின்வாரியத்தால் வரிசைப்படி நடவடிக்கை எடுத்து விரைவில் மின் இணைப்பு வழங்கப்படும் என்றும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

*1995* நவம்பர் *3*]

**52--**

**பிரகதாம்பாள் கோவில் சீர்செய்தல்**

வினா எண் *12720*--**திரு. சி. சுவாமிநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

புதுக்கோட்டை பிரகதாம்பாள் கோவில் பெரிய குளம் நான்கு கரைகளிலும் புதியதாக தெருவிளக்குகள் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பிரகதாம்பாள் பெரியகுளம் தென்கரைகளில் மொத்தம் *3* தெரு விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது. தற்போது புதுக்கோட்டை மாவட்ட பரவலாக்கும் திட்டத்தின்கீழ் (Decentralised Scheme) அக்குளத்தின் அபிவிருத்திப் பணிக்காக ரூ. *50,000* நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந் நிதியிலிருந்து குளத்தின் வடக்கு மற்றும் மேற்கு கரைகளில் தெருவிளக்குகள் அமைக்கப்படும்.

**53--**

**மழவேனிற்காட்டிற்கு மயான கொட்டகை அமைத்தல்**

வினா எண் *14770*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் மழவேனிற்காட்டிலுள்ள ஆதிதிராவிடர்களுக்கு *1992-93*ல் மயானக் கொட்டகை அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், மழவேனிற்காட்டிலுள்ள ஆதிதிராவிடர்களுக்கு மயானக்கொட்டகை அமைத்துத்தர ஊராட்சி நிதியில் போதுமான நிதி வசதியில்லாததால் தற்போது மயானக் கொட்டகை கட்டித்தர வாய்ப்பு இல்லை.

**54--**

மனக்குடி பள்ளிக்கட்டிடம் சீர்செய்தல்

வினா எண் *16759*--**திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* மயிலாடுதுறை தொகுதி, மனக்குடி கிராமத்தில் பள்ளிக்கட்டிடம் பழுதடைந்து இருப்பது அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், அதைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ):* மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மனக்குடி கிராமத்தில் பழுதடைந்து இருந்த பள்ளிக் கட்டிடம் ரூ.10 ஆயிரம் மதிப்பீட்டில் பழுது நீக்கம் செய்யப்பட்டு 7-10-1994ல் வேலை முடிக்கப்பட்டது.

**55--**

பரமக்குடி நகராட்சியில் பூங்கா அமைத்தல்

வினா எண் *16681*--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சியில் சிறுவர் சிறுமியர்களுக்கு பொழுது போக்கிற்கு பூங்கா அமைக்க செயற்குறிப்பு அரசிடம் வந்துள்ளதா?

1995 நவம்பர் 3]

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**56--**

**குளத்துப்பாளையம் கிராம குடிநீர் குழாய் சரிசெய்தல்**

வினா எண் 19508--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம் குளத்துப்பாளையம் கிராமத்தில் ஊஞ்சலூரில் இருந்து சிவகிரி காங்கேயம் செல்லும் குடிநீர் குழாய் உடைந்துள்ளதை சரிசெய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கொடுமுடி ஊராட்சி ஒன்றியம், குளத்துப்பாளையம் கிராமத்தில் ஊஞ்சலூரிலிருந்து சிவகிரி காங்கேயம் செல்லும் புரவிபாளையம் மற்றும் 31 குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர்த் திட்டத்தில் பிரதான குடிநீர் குழாய் ஏற்கெனவே சரிசெய்யப்பட்டு நல்லமுறையில் குடிநீர் விநியோகம் செயல்பட்டு வருகிறது.

**57--**

**கீழக்கலங்கள் கிராம கிணற்றை பராமரித்தல்**

வினா எண் 20723--**திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், கீழக்கலங்கள் கிராமத்திலுள்ள ஆதிதிராவிட தெருவிலுள்ள கிணற்றிற்கு சுற்றுச் சுவர் கட்டி ஆழப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆலங்குளம் ஒன்றியத்தைச் சார்ந்த கீழக்கலங்கல் ஆதிதிராவிடர் தெருவிலுள்ள கிணறு பல ஆண்டுகளாக உபயோகத்தில் இல்லை என்றும், தண்ணீரின் தன்மை பொது மக்கள் உபயோகிக்கக்கூடிய வகையில் அமையவில்லை என்றும் மேலும் ஊர் பொதுமக்கள் இக்கிணற்றை மூடிவிட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளதால் கிணற்றிற்கு சுற்றுச்சுவர் கட்டி ஆழப்படுத்துவதில் எந்தவித பயனும் இல்லை.

பக்கத்தில் உள்ள ஆழ்குழாய்க் கிணற்றை மேற்படி ஊர்ப் பொதுமக்கள் உபயோகித்துக்கொண்டு வருகிறார்கள்.

**58--**

**அம்பாபுரம் குடிநீர்த் தேக்கத்தொட்டி மின்மோட்டார் பழுதுபார்த்தல்**

வினா எண் 22380--**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புவனகிரி ஒன்றியம், அம்பாபுரம் கிராமத்தில் குடிநீர்த் தேக்கத் தொட்டியில் பொருத்தியுள்ள மின் மோட்டார் பழுது அடைந்ததைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது சரி செய்து தரப்படும்?

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அம்மச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், மேல்புவனகிரி ஊராட்சி ஒன்றியம், அம்பாபுரம் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மின் மோட்டார் பழுது நீக்கம் செய்யப்பட்டு நன்முறையில் இயங்கி வருகிறது.

*1995 நவம்பர் 3*]

**59--**

## அகரநல்லூர் துவக்கப்பள்ளிக்கு விளையாட்டு மைதானம் அமைத்தல்

வினா எண் *22888*--**திரு. என்.ஆர். ராஜேந்திரன்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* காட்டுமன்னார் கோயில் தொகுதி, குமராட்சி ஒன்றியம், அகரநல்லூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியின் பின்புறமுள்ள குளம் புறம்போக்கு இடத்தில் பள்ளி மாணவர்களுக்கு விளையாட்டு மைதானம் அமைக்கப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* காட்டுமன்னார் கோயில் தொகுதி, குமராட்சி ஒன்றியம், அகரநல்லூர் ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளியின் பின்புறமுள்ள குளம் புறம்போக்கு இடத்தில் பள்ளி மாணவர்களுக்கு விளையாட்டிடம் அமைக்க போதிய இடவசதி இல்லை.

*(ஆ)* கேள்வி எழவில்லை.

**60--**

## கழனிவாசல் ஊராட்சி பாசனக் குழாய் செப்பனிடல்

வினா எண் *22993*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, *158.* கழனிவாசல் ஊராட்சியில் ரயில்வே கேட் அருகில் உள்ள பாசனக் குழாய் பழுதடைந்து போக்குவரத்து பாதிக்கப்படுவதால் அப்பாசனக் குழாயை செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தரங்கம்பாடி தாலுக்கா, 158. கழனிவாசல் ஊராட்சியில் ரயில்வேகேட் அருகில் உள்ள குழாய் மதகு குத்தாலம் ஊராட்சி ஒன்றியம் மூலம் பழுது பார்க்கப்பட்டு போக்குவரத்திற்கேற்ற நிலையில் உள்ளது.

**61--**

**காட்டுமுன்னூரில் குடிதண்ணீர் சப்ளை செய்தல்**

வினா எண் 23466--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரவக்குறிச்சி தொகுதி, முன்னூர் ஊராடசி, காட்டுமுன்னூரில் ஆழ்குழாய்க்கிணறு தோண்டி குடிதண்ணீர் சப்ளை செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருச்சி மாவட்டம், அரவக்குறிச்சி தொகுதி, முன்னூர் ஊராட்சி, காட்டுமுன்னூர் ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு சேவை நிறுவனத்தின் மூலம் ஒரு ஆழ்குழாய் அமைத்து அதன்மூலம் குடிநீர் நல்லமுறையில் வழங்கப்பட்டு வருகிறது.

**62--**

**சக்தி நகரில் குடிதண்ணீர் சப்ளை செய்தல்**

வினா எண் 23467--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரவக்குறிச்சி தொகுதி, தும்பிவாடி ஊராட்சி, சக்தி நகரில் ஆழ்குழாய்க் கிணறு தோண்டி குடிதண்ணீர் சப்ளை செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருச்சி மாவட்டம், அரவக்குறிச்சி தொகுதி, க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், தும்பிவாடி ஊராட்சி, சக்தி நகரில் அல்லூர் சேவை நிறுவனம் மூலம் ஒரு ஆழ்குழாய் அமைக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**63--**

**அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றிய குடிநீர்க் குழாய்களைப் பழுதுபார்த்தல்**

வினா எண் *24089*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், வெஞ்சமாங்கூடலூர், ராசாப்பட்டியில் பழுதடைந்துள்ள குடிநீர் மேல்நிலைத் தொட்டியை பழுது பார்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், வெஞ்சமாங்கூடலூர், ராசாப்பட்டி கிராமத்திற்கு 1990-ஆம் ஆண்டு புதியதாகக் கட்டப்பட்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் விநியோகம் வழங்கப்படுவதால் பழைய மேல்நிலைத் தொட்டியின் பழுதுகளை சரிபார்க்க வேண்டிய அவசியம் தற்போது ஏற்படவில்லை. எனவே இக்கிராமத்தில் பழுதடைந்துள்ள குடிநீர்த் தொட்டியை பழுது பார்க்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**64--**

**வடுகக்குடி கிராமப்பள்ளிக்குப் புதிய கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *25138*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், சர்குணேஸ்வரபுரம் ஊராட்சி வடுகக்குடி கிராமத்திலுள்ள ஆரம்பப்பள்ளிக்கு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் புதிய கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், குடவாசல் ஊராட்சி ஒன்றியம், சர்குணேஸ்வரபுரம் ஊராட்சி வடுகக்குடி கிராமத்திலுள்ள ஆரம்பப்பள்ளிக்கு 1994-95ல் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் புதிய கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

**65--**

**கணக்கன்காடு ஊராட்சிக்குத் தெருவிளக்கு அமைத்தல்**

வினா எண் 25250--**திரு. எஸ். சண்முகநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஆலங்குடி தொகுதி கணக்கன்காடு ஊராட்சிக்குப் புதியதாக தெருவிளக்குகள் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆலங்குடி தொகுதி கணக்கன்காடு ஊராட்சியில் தற்போது 102 தெருவிளக்குகள் இயங்கி வருகின்றன. மேலும் 4 புதிய தெரு விளக்குகள் கூடுதலாக அமைத்திட மின் இலாகா மூலம் நடவடிக்கை மேற்கொண்டு வேலைகள் நடைபெற்று வருகிறது.

**66--**

**ஊராட்சி ஒன்றியங்களுக்கு மின்விளக்குகள் பொருத்துதல்**

வினா எண் 25775--**திரு. கே.ஏ. மனோகரன்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

1995 நவம்பர் 3]

(அ) பொது மின்விளக்குகள் பொருத்தும் சிறப்புத் திட்டம் ஒசூர் ஊராட்சி சூளகிரி ஊராட்சி ஒன்றியங்களில் விரைவாகச் செயல்படுத்தப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பணியினை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஒசூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 30 ஊராட்சிகளுக்கும் தன்னிறைவுத் திட்டத்தில் தெரு விளக்குகள் அமைக்க மின்சார வாரியத்திற்கு 1991-92ல் ரூ.6.87 இலட்சம் மற்றும் 1992-93ல் ரூ.5.62 இலட்சம் ஆக மொத்தம் ரூ.12.49 இலட்சம் செலுத்தப்பட்டு மின் வாரியத்தால் 432 மின்விளக்குகள் அமைக்கப்பட்டு, மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் 39 விளக்குகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட வேண்டியுள்ளது. சூளகிரி ஒன்றியத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் தெரு விளக்குகள் அமைக்க 1991-92ல் ரூ.6.87 இலட்சம் மற்றும் 1992-93ல் ரூ.5.62 இலட்சம் ஆக மொத்தம் ரூ.12.49 இலட்சம் மின்வாரியத்திற்குச் செலுத்தப்பட்டு 1991-92ல் 258 விளக்குகளும் 1992-93ல் 66 விளக்குகளும் மொத்தம் 324 விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

**67--**

## தேரடித் தெருவில் மின்விளக்குகள் அமைத்தல்

வினா எண் 26081--திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கும்பகோணம் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம் வில்லி வரம்பில், தேரடித் தெருவில் மின்விளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியம், வில்லிவரம்பில் ஊராட்சி, தேரடித் தெருவில் புதியதாக ஐந்து தெரு மின் விளக்கு கம்பங்கள் கும்பகோணம் கிராமிய மின்சார கூட்டுறவு சங்கம் மூலம் அமைக்கப்பட்டு *4-8-1994*ல் இணைப்பு கொடுக்கப்பட்டு அவ்விளக்குகள நல்ல முறையில் எரிகிறது.

**68--**

**ஊஞ்சலூர் உயர்நிலைப்பள்ளி ஆக்கிரமிப்பை அகற்றுதல்**

வினா எண் *26478*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி ஊஞ்சலூர் அரசு உயர்நிலைப்பள்ளி சாலையின் இருபுறமும் ஆக்கிரமிப்பு உள்ளதால் பேருந்துகளை வசதியாகத் திருப்ப மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி ஊஞ்சலூர் அரசு உயர்நிலைப்பள்ளி சாலையின் இருபுறமும் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

**69--**

**சிவகிரி சுடுகாட்டிற்கு இடவசதி செய்தல்**

வினா எண் *26620*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சிவகிரி சுடுகாட்டிற்கு போதிய இடவசதி இல்லாததால் அங்கு போதிய இடவசதி செய்ய அரசு முன்வருமா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

சிவகிரி பேரூராட்சி பகுதியில் ரோடு ஓர சுடுகாடு தான் உள்ளது. இதை விஸ்தரிப்பு செய்யும் அளவிற்கு புறம்போக்கு இடம் இல்லை. எனவே சுடுகாடு விஸ்தரிப்பு செய்ய இயலாது.

**70--**

**மூர்த்திபாளையம் சுடுகாட்டிற்கு மின்விளக்கு அமைத்தல்**

வினா எண் *26629*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கொடுமுடி ஒன்றியம், வடக்கு மூர்த்திபாளையம் சுடுகாட்டிற்கு மின்விளக்கு வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கொடுமுடி ஒன்றியம், வடக்கு மூர்த்திபாளையம் சுடுகாட்டில் ஏற்கனவே ஒரு தெருவிளக்கு அமைக்கப்பட்டுள்ளதால் மேற்கொண்டும் தெருவிளக்குகள் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

**71--**

**கொடுமுடி ஒன்றியத்தில் மின் விளக்கு அமைத்தல்**

வினா எண் *26630*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கொடுமுடி ஒன்றியம், சின்னப்பையன்புதூர் முதல் வடக்கு மூர்த்திபாளையம் செல்லும் சாலையில் மின்விளக்கு இல்லாத இடத்தில் மின்விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

கொடுமுடி ஒன்றியம், சின்னப்பையன்புதூர் முதல் வடக்கு மூர்த்திப்பாளையம் செல்லும் சாலையில் விளக்கு இல்லாத இடத்தில் புதிய மின்விளக்கு அமைக்கும் பணியை 1994-95ம் ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

**72--**

**அனந்தபுரம் ஊராட்சியில் அடிப்படை வசதிகள் செய்தல்**

வினா எண் *26695*--**திருமதி இலதா பிரியகுமார்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அனந்தபுரம் ஊராட்சிக்கு அனந்தபுரம் சின்னமோசூர், சாலை வசதி, தெருவிளக்கு வசதி, வடிகால் வசதி ஆகிய வசதிகள் செய்து தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செய்து தரப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், அரக்கோணம ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அனந்தபுரம் கிராமத்திலிருந்து சின்னமோசூர் வரை சாலை அமைக்க தற்போது திட்டமேதும் இல்லை. அனந்தபுரம் ஊராட்சியில் 22 தெருவிளக்குகள் அமைக்கப்பட்டு நல்ல நிலையில் எரிகின்றன. இவ்வூராட்சிக்கு வடிகால் வசதிகள் 1995-96ம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் செய்யக் கருதப்பட்டுள்ளது.

**73--**

**தருமபுரி மாவட்டத்தில் ஆழ்துளைக் கிணறுகள் விவரம்**

வினா எண் *27486*--**திரு. கே. முனிவெங்கடப்பன்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

தருமபுரி மாவட்டத்தில் *1993-94*ஆம் ஆண்டில் எத்தனை ஆழ்துளைக் கிணறுகள் குடிநீருக்காக போடப்பட்டுள்ளன?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1993-94*-ஆம் ஆண்டில் தர்மபுரி மாவட்டத்தில் மொத்தம் *473* ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், *1993-94* ஆம் ஆண்டிற்கு உலக வங்கித் திட்டத்தின் கீழ் *750* புதிய ஆழ்துளைக் கிணறுகள் அனுமதிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகிறது.

**74--**

**ராஜீவ் காந்தி நினைவகத்தில் மெர்குரி விளக்கு அமைத்தல்**

வினா எண் *33391*--**திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை நகராட்சி, திருத்துவபுரம் ராஜீவ் நகரில் உள்ள பாரத் ரத்னா ராஜீவ் காந்தி நினைவகத்தில் மெர்குரி விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட திருத்துவபுரத்தில் அமைந்துள்ள மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் நினைவகத்திற்கு குழித்துறை நகராட்சியால் மெர்குரி விளக்கு *30-8-1994* தேதியில் அமைக்கப்பட்டு விளக்கு எரியச் செய்யப்பட்டு வருகிறது என குழித்துறை நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

**75--**

**புவனகிரி தொகுதியில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல்**

வினா எண் *33608*--**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், பள்ளிப்படை, கந்தமங்கலம் கிராமத்திற்கு குடிதண்ணீருக்கான ஆழ்குழாய்க்கிணறுகள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது செய்து தரப்படும்?

**விடை**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ):* பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பள்ளிப்படை கிராமத்தில் ஒரு உவர்நீர் சுத்திகரிப்பு நிலையம் இயங்கி வருகிறது. பள்ளிப்படை மக்கள் இச்சுத்திகரிப்பு நிலையத்தின் மூலமாக நல்ல குடிநீர் பெற்று வருகிறார்கள்.

கந்தமங்கலம் கிராமத்திற்கு தனியாக மிகுந்த ஆழம் கொண்ட ஆழ்குழாய்க்கிணறு ஒன்று அமைத்துத் தருவதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளதால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் கந்தமங்கலம் கிராமத்தில் ஆழ்குழாய்க்கிணறு அமைத்துத்தரப்படவுள்ளது.

**76--**

**புவனகிரி தொகுதியில் தெரு விளக்குகள் அமைத்தல்**

வினா எண் *33625*--**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், பின்னத்தூர் ஊராட்சி பள்ளிப்படை, கந்தமங்கலம், கோவிலாம்பூண்டி, கந்தமங்கலம் இணைப்புச்சாலை ஓரம் ஆகிய இடங்களில் தெரு விளக்குகள் பொருத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது செய்து தரப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

1995 நவம்பர் 3]

(அ) மற்றும் (ஆ): பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் பின்னத்தூர் ஊராட்சியில பள்ளிப்படை, கந்தமங்கலம் சாலையில் 7 தெருவிளக்குகள் பொருத்தப்பட மதிப்பீடு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட மின்வாரியப் பொறியாளர்களுக்கு விண்ணப்பம் அளிக்கப்பட்டு மின் விளக்குகள் பொருத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பூண்டி-கந்தமங்கலம் சாலையில் வீடுகள் ஏதும் இல்லை. இந்நிலையில் இங்கு புதிதாக அனுமதி பெற்று விளக்குகள் பொருத்தப்பட்டால் அவைகள் சேதமடைவதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளன என்பதால் அவசியத் தேவை ஏற்படும் தருணத்தில் கூடுதல் விளக்குகள் பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தென்னாற்காடு வள்ளலார் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**77--**

**கோவில் வாழ்க்கையில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்**

வினா எண் 33793--**திரு. ஆர். தங்கராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, கோவில் வாழ்க்கையில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைத்துத் தரப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி கோவில் வாழ்க்கையில் உள்ள மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த தர்மசமுத்திரம் என்ற கிராமத்தில் அமைக்கப்பட்ட ஆழ்குழாய்க் கிணற்றின் மூலம் தண்ணீர் ஏற்றி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இக்கிராமத்திற்கு தனியே ஆழ்குழாய்க் கிணறு அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

78--

## குமரப்புரத்தில் தெரு விளக்கு அமைத்தல்

வினா எண் *33917*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், குமரப்புரத்திற்கு தெரு விளக்கு வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெரியார் மாவட்டம், கொடுமுடி ஒன்றியம், கொந்தளம் ஊராட்சி, குமரப்புரத்தில் சுமார் 30 வீடுகள் இருக்கின்றன. அந்த ஊரில் ஏற்கனவே 3 தெரு விளக்குகள் போடப்பட்டுள்ளன. இருப்பினும், சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் மேலும் ஒரு மின்விளக்கு அமைக்க மின்வாரியத்திற்கு ஏற்கனவே தொகை செலுத்தப்பட்டுள்ளது.

79--

## கூலிநாயக்கனூரில் தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் *33988*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரவக்குறிச்சி தொகுதி, தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், தாளப்பட்டி ஊராட்சி, கூலிநாயக்கனூரில் தெரு விளக்குகள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், தாளப்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த கூலிநாயக்கனூரில் உள்ள ஆதிதிராவிடர் காலனியில்

*1995 நவம்பர் 3]*

வீட்டுக்கொரு மின் விளக்கு அமைத்துத்தர மனுக்கள் பெறப்பட்டு மின்வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. வீடுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கும்போது தேவையான இடங்களில் தெருவிளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தற்போது ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லை என்றும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**80--**

**துறையூர் ஒன்றியத்தில் தண்ணீர் வசதி**

வினா எண் *34119*--**திரு. வி. ரவிச்சந்திரன்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் ஒன்றியத்தில் உள்ள சிக்கத்தம்பூர்பாளையம் மற்றும் நரசிங்கபுரம் ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் நீர்மூழ்கி மோட்டார் இணைத்து தண்ணீர் வழங்கச் செய்ய அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சிக்கத்தம்பூர்பாளையம் மற்றும் நரசிங்கபுரம் ஊராட்சிகளுக்கு 7.5 குதிரைத் திறன் கொண்ட மோட்டார் பொருத்தப்பட்டு குடிநீர் கட்டுப்பாடின்றி வழங்கப்பட்டு வருவதால், மேற்காணும் ஊராட்சிகளுக்கு நீர்மூழ்கி மோட்டார்கள் அமைத்திடத் தேவையில்லை.

**81--**

**சின்னதாராபுரம் அரசினர் துவக்கப்பள்ளிக்குக் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *35268*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

[*1995 நவம்பர் 3*

அரவக்குறிச்சி தொகுதி, க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம, சின்னதாராபுரம் அரசினர் மகளிர் ஆசிரியர் பயிற்சி நிறுவனத்துடன் கூடிய துவக்கப்பள்ளிக்குக் கட்டிடம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம், சின்னதாராபும் அரசினர் மகளிர் ஆசிரியர் பயிற்சி நிறுவனத்துடன் கூடிய துவக்கப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

**82--**

**தாளவாடியில் சந்தை வசதி**

வினா எண் *36237*--**திருமதி அ.தி. சரஸ்வதி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் தொகுதி, தாளவாடி மலைப்பகுதியில் பொதுமக்கள் நலன் கருதியும் விவசாயிகள் நலன் கருதியும் சந்தை வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெரியார் மாவட்டம், தாளவாடியில் சந்தை அமைக்கத் தேவையான பரப்பளவுள்ள அரசு புறம்போக்கு நிலங்கள் இல்லை. ஆகையால், தனியார் நிலத்தை விலைக்குப் பெற்றுத்தான் சந்தை அமைக்க முடியும். தனியார் நிலங்களைப் பெற்று தாளவாடியில் சந்தை அமைக்கும் எண்ணம் தற்போது அரசுக்கு இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**83--**

### வண்டிநத்தத்தில் ஆழ்குழாய்க்கிணறு அமைத்தல்

வினா எண் *36375*---**டாக்டர் செ. சரோஜா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சங்ககிரி தொகுதி, மல்லசமுத்திரம் ஒன்றியம், வண்டிநத்தம் கிராமத்தில் ஒரு ஆழ்க்குழாய்க்கிணறு அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டிலேயே செயல்படுத்தப்படுமா?

**விடை---**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆழ்துளைக் கிணறு புதியதாக அமைப்பது குறித்து ஆய்வில் உள்ளது.

(ஆ) தற்போது தட்டுப்பாடின்றி போதிய குடிநீர் வசதி அப்பகுதியில் உள்ளது. எனினும் எதிர்வரும் வறட்சியை முன்னிட்டு அடுத்துவரும் நிதியாண்டில் கூடுதல் ஆழ்துளைக் கிணறு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**84--**

### மறவன்குட்டை ஆதிதிராவிடர் காலனிக்கு மின்விளக்கு வசதி

வினா எண் *36633*--திரு. **வே. பெரியசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அந்தியூர் தொகுதி, அம்மாபேட்டை ஒன்றியம், பட்லூர் ஊராட்சி, மறவன்குட்டை ஆதிதிராவிடர் காலனி தெருக்களில் மின் விளக்கு வசதி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை---**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம், பட்லூர் ஊராட்சி மறவன்குட்டை ஆதிதிராவிடர் காலனியில் ஏற்கனவே 5 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு, நல்லநிலையில் உள்ளது. கூடுதலாக தெருவிளக்குகள் அமைக்க ஊராட்சியில் போதிய உபரி நிதி வசதி இல்லை. நிதி வசதி ஏற்பட்டதும் தெருவிளக்கு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பெரியார் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**85--**

**சிவகாசி தொகுதியில் மேல்நிலை நீர்த்தொட்டி அமைத்தல்**

*வினா எண் 37893--***திரு. ஜெ. பாலகங்காதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சிவகாசி தொகுதி, தாயில்பட்டியில் இருக்கும் நாயக்கர் தெரு, இந்திரா குடியிருப்பு ஆகிய இடங்களுக்கு தனித்தனியாக குடிநீர் மேல்நிலை நீர்த்தொட்டி அமைத்துத் தரப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சிவகாசி தொகுதி, தாயில்பட்டியில் இருக்கும் நாயக்கர் தெரு மற்றும் இந்திரா குடியிருப்பு ஆகிய இரு இடங்களும் குடிநீர் பிரச்சினை உள்ள பகுதியாக தரப்படுத்தப்பட்டுள்ளது. தாயில்பட்டி நாயக்கர் தெருவில் உள்ள கையிறைப்பான் கிணறு பழுதடைந்து விட்டமையால் ஒரு ஆழ் குழாய்க் கிணற்றில் ஜெட் நீர் இறைப்பான் பொருத்தி அந்த இடத்தில் நீர் பிடிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்திரா நகர் குடியிருப்பில் ஒரு ஆழ்குழாய் கிணறுடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட இரு தெருக்களுக்கும் குடிநீர் வழங்க தனித்தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க திட்டம் தற்போது இல்லை. இனிவரும் ஆண்டுகளில் முன்னுரிமைப்படியும் நிதி ஒதுக்கீட்டினைக் கருத்திற் கொண்டும் தாயில்பட்டி நாயக்கர் தெரு மற்றும் இந்திரா நகர் குடியிருப்பு ஆகியவற்றிற்கு குடிநீர் வசதி அளிப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

*1995 நவம்பர் 3]*

**86--**

**ஊசிமலை சோளகர் காலனியில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்**

வினா எண் *37675*--**திரு. வே. பெரியசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அந்தியூர் தொகுதி, பர்கூர் ஊராட்சி, ஊசிமலை சோளகர் காலனியில் ஆழ்குழாய்க்கிணறு அமைத்து குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அந்தியூர் ஊராட்சி ஒன்றியம், பர்கூர் ஊராட்சி சோளகர் காலனியில் ஆழ்குழாய்க்கிணறு அமைக்க இவ்வொன்றியப் பொது நிதியில் போதிய உபரிநிதி வசதி இல்லை என்றும், வறட்சி நிவாரணத் திட்ட ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றதும், மேற்படி குடியிருப்பில் புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

**87--**

**மஞ்சூர் விலக்கு-மஞ்சூர் வரை தெருவிளக்கு அமைத்தல்**

வினா எண் *38032*--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பரமக்குடி தொகுதியில், தேசிய நெடுஞ்சாலை-49 மஞ்சூர் விலக்கில் இருந்து மஞ்சூர் வரை தெருவிளக்குகள் போட அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பரமக்குடி தொகுதியில், தேசிய நெடுஞ்சாலை-49, மஞ்சூர் விலக்கிலிருந்து மஞ்சூர் செல்லும் சாலையில் தெரு விளக்குகள் அமைக்க ஊராட்சியில் தற்போது போதுமான நிதியில்லை என்று இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

88--

**விருதம்பட்டு ஊராட்சியில் குடிநீர் பிரச்சினையை தீர்த்தல்**

வினா எண் *38136*--**திருமதி கே.எம். கலைச்செல்வி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காட்பாடி தொகுதி, விருதம்பட்டு ஊராட்சியில் உள்ள குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

காட்பாடி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த விருதம்பட்டு ஊராட்சிக்கு கழிஞ்சூர் பேரூராட்சியிலிருந்து கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் ஒரு நாள் விட்டு ஒரு நாள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் விருதம்பட்டு ஊராட்சியைச் சேர்ந்த அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் மேடான பகுதியாக உள்ள இரு தெருக்களுக்கும் தற்போது இரு கேட் வால்வு பொருத்தி சீரான முறையில் போதுமான அளவு நீர் வழங்கப்பட்டு வருகிறது.

89--

**கோவை மாநகராட்சி மூலம் வங்கி கடன் பெறுவோர் விவரம்**

வினா எண் *38605*--**திரு. சிங்கை கோவிந்தராசு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கோவை மாநகராட்சி மூலம் ஏழைகள் தொழில் புரிய வங்கிக்கடன் பெறுபவர் ஆண்டுக்கு எத்தனை பேர்?

**விடை.--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கோவை மாநகராட்சி மூலம் ஏழைகள் தொழில் புரிய *1991-92* ஆம் ஆண்டில் *407* நபர்களுக்கும், *1992-93*ஆம் ஆண்டில் *405* நபர்களுக்கும்

*1995 நவம்பர் 3]*

*1993-94* ஆம் ஆண்டில் *657* நபர்களுக்கும் வங்கிக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

**90--**

**கண்டியனூர் மேட்டூர் தொட்டியிலிருந்து தண்ணீர் விடுதல்**

வினா எண் *39830*--**திரு. வே. பெரியசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* பெரியார் மாவட்டம், அந்தியூர் ஒன்றியம், கண்டியனூர் மேட்டூர் மக்களுக்கு குடி தண்ணீருக்காக கட்டியுள்ள மேல்நிலைத் தொட்டியிலிருந்து தண்ணீர் விடப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், மோட்டாரைப் பழுதுபார்த்து உடன் குடிதண்ணீர் விட அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* அந்தியூர் ஊராட்சி ஒன்றியம், மைக்கேல்பாளையம் ஊராட்சி கண்டியனூர் மேட்டூரில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் கட்டப்பட்டுவரும் மேல்நிலைத் தொட்டிப்பணி இன்னும் முடிவடையவில்லை. பணி முழுவதும் முடிந்த பின்னர் மேற்படி மேல்நிலைத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்படும்.

*(ஆ)* கண்டியனூர் மேட்டூரில் உள்ள திறந்தவெளிக் கிணற்றில் உள்ள மின் மோட்டார் நல்ல நிலையில் உள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேல்நிலைத் தொட்டி கட்டும் பணி முடிந்த பின்னர், அக்குடியிருப்பில் உள்ள ஆழ்குழாய்க்கிணற்றில், காற்றழுத்த மின்மோட்டார் பொருத்தி, தொட்டியில் நீர்நிரப்பி, குடிநீர் விநியோகம் செய்யப்படவுள்ளது.

**91--**

**நஞ்சுண்டாபுரத்திற்கு குடிநீர் பைப் அமைத்தல்**

வினா எண் *39833*--**திரு. வே. பெரியசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அந்தியூர் தொகுதி, அந்தியூர் ஒன்றியம், குப்பாண்டாம் பாளையம் ஊராட்சி, நஞ்சுண்டாபுரத்திற்குக் குடிநீர் பைப் கூடுதலாக ஊரினுள் போட அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அந்தியூர் ஊராட்சி ஒன்றியம், குப்பாண்டாம்பாளையம் ஊராட்சி, நஞ்சுண்டாபுரம் குடியிருப்பில் மொத்தம் 110 வீடுகள் உள்ளன. அங்கு தற்போது ஆறு குடிநீர் குழாய்கள் உள்ளன. தற்போது மேலும் இரண்டு குடிநீர் குழாய்கள் ஊராட்சி நிதியில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**92--**

**சடையாண்டிகோவில் பாலத்தை அகலப்படுத்துதல்**

வினா எண் 39986--**திரு. கே. செல்வராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கோவை-திருச்சி சாலையில் சடையாண்டி கோவில் பாலம் அகலப்படுத்தப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம், நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறையின் பராமரிப்பில் உள்ள மாநில சாலையான நாகப்பட்டினம் கூடலூர்-மைசூர் சாலை கி.மீ. 341/2ல் உள்ள பாலமாகும். தற்போது இப்பாலம் 5 மீட்டர் நீளம் வீதம் இரண்டு கண்கள் கொண்டதும், 6 மீட்டர் ஒரு தளம் அகலம் கொண்ட குறுகலான பாலமாக உள்ளது. இப்பாலத்தை தற்போதைய போக்குவரத்துக்கு

*1995 நவம்பர் 3]*

ஏற்றவாறு, இப்பாலத்தின் இருபுறமும் 4.5 மீட்டர் வீதம் அகலப்படுத்தி ஏற்கனவே 6 மீட்டர் அகலத்திலிருந்த ஒரு தளத்தை 15 மீட்டராக அகலப்படுத்தி மேம்பாடு செய்யப்படவேண்டும். இதற்கு தோராயமாக ரூ.25.00 இலட்சம் தேவைப்படும. இப்பாலம் கோவை மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது. இப்பணி, இத்துறையின் பகுதி இரண்டு திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட திட்டப் பட்டியலில் இது வரையில் இடம் பெறவில்லை. எனவே, உடனடியாக இப்பணியை இத்துறையின் மூலம் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**93--**

**சீரங்கப்பட்டி ஆதிதிராவிடர் காலனிக்கு ஆழ்குழாய்க்கிணறு அமைத்தல்**

வினா எண் 41009--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, சீரங்கப்பட்டி கிராமத்தில் ஆதிதிராவிடர் காலனியில் ஆழ்குழாய்க்கிணறு அமைக்கப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் உள்ள சீரங்கப்பட்டி கிராம ஆதிதிராவிடர் காலனிக்கு குடிநீர் பற்றாக்குறையினைத் தீர்க்க, 1994-95ஆம் ஆண்டு பரவலாக்கப்பட்ட திட்டத்தின்கீழ் ரூ.20,006 மதிப்பீட்டில் குழாய் விஸ்தரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டும், 1995-96 ஆம் ஆண்டில் புதிய ஆழ்துளைக்கிணறு அமைக்கப்பட உள்ளதாகவும், வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

94--

## திருவாரூரில் மின் விளக்குகள் சீர் செய்தல்

வினா எண் *43454*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், திருவாரூர் பைபாஸ் ரோட்டில் சாலையோர மின் விளக்குகள் சீர் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவாரூர் நகராட்சி புறவழிச் சாலையில் 110 எண்ணிக்கை சோடியம் ஆவி விளக்குகள் பொதுப்பணித் துறையினரால் பொருத்தப்பட்டு, கடந்த 1991-ஆம் ஆண்டு முதல் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவ்விளக்குகளில் சுமார் 37 எண்ணிக்கை பழுதுபட்டதாலும், உரிய உபரி சாமான்கள் பெறுவதில் தாமதம் ஏற்பட்டதாலும், 1994 டிசம்பர் இறுதிவரை எரியாமல் இருந்தது. மேற்படி விளக்குகள் முழுவதும் பழுது பார்க்கப்பட்டு, அனைத்து விளக்குகளும் தற்போது எரியவிடப்பட்டுள்ளது.

95--

## புதுச்சத்திரம் ஒன்றியத்தில் தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் *43456*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சேலம் மாவட்டம், புதுச்சத்திரம் ஒன்றியம், ரெட்டிப்புதூர் கிராம பெருமாள் கோவிலிலிருந்து அசுரான்காடு வரை தெரு விளக்குகள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமல்படுத்தப்படும்?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியம்ரெட்டிப்புதூர் ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால், ரெட்டிப்புத்தூர் கிராமம் பெருமாள் கோவிலில் இருந்து அசுரான்காடு வரை தெரு விளக்கு அமைக்கும் பணியினை தற்போது எடுத்துக்கொள்ளும் வாய்ப்பில்லை.

**96--**

**நாகூர், தர்ஹாவைச் சுற்றியுள்ள பகுதியில் சோடியம் விளக்குகள் அமைத்தல்**

வினா எண் *44846*--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகை-காயிதே மில்லத் மாவட்டம், நாகூர் ஷாகுல் ஹமீது ஒலியுல்லா அவர்களின் நாகூர் ஆண்டவர் தர்ஹாவினைச் சுற்றியுள்ள பகுதிகளில் மெர்குரி விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம் நாகூர் தர்காவைச் சுற்றியுள்ள பகுதிகளில் *24* எண்கள் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

[*1995* நவம்பர் *3*

**97--**

**பரசலூர் ஊரக மருந்தகத்தைப் பழுது பார்த்தல்**

வினா எண் *44967*--**திரு. எம். பூராசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பூம்புகார் தொகுதி, செம்பனார் கோவில் ஒன்றியம், பரசலூர் கிராமத்தில் உள்ள கிராமிய மருந்தகம் (ஊரக மருந்தகம்) வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பழைய கட்டிடம் எப்போது பழுது பார்க்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பழைய கட்டிடம் புதுப்பிக்க இயலாத நிலையில் மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளதால் இதனைப் பழுதுபார்க்க இயலாது. புதிய கட்டிடம் கட்ட உத்தேசமாக ரூ.*5* இலட்சம் தேவைப்படும். நடப்பு நிதி ஆண்டில் இதனைச் செய்ய போதுமான நிதி வசதி இல்லை. எனவே, *1996-97*ல் திட்டத்தில் சேர்த்து நிதி ஒதுக்கீடு பெற்று பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**98--**

**திருப்பத்தூர் தொகுதியில் மின் விளக்குகள் அமைத்தல்**

வினா எண் *45672*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, கருப்பனூர் மற்றும் மாடப்பள்ளி ஆகிய கிராமங்களில் புதிதாகத் தெரு மின்விளக்குகள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், கருப்பனூர் ஊராட்சியில் 18 தெரு மின் விளக்குகள் பொருத்தப்பட்டு தற்போது நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது. திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், மாடப்பள்ளி ஊராட்சியில் 112 தெரு மின்விளக்குகள் பொருத்தப்பட்டு தற்போது நல்லநிலையில் செயல்பட்டு வருகின்றன. எனவே கருப்பனூர் மற்றும் மாடப்பள்ளி ஆகிய இடங்களில் தற்போது போதிய மின் விளக்கு வசதிகள் உள்ளதால் புதியதாக விளக்குகள் அமைக்கத் தேவையில்லை.

**99--**

**பாப்பாவலசில் தெரு விளக்குகள் அமைத்தல்**

வினா எண் *46724*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சித் தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், பழமங்கலம் ஊராட்சி, பாப்பாவலசு கிராமத்தில் தெரு விளக்குகள் அமைக்க ஆவன செய்யப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், பழமங்கலம் ஊராட்சி, பாப்பாவலசு என்ற குக்கிராமத்தில் மொத்தம் 40 வீடுகள் உள்ளன.

இவற்றில் 32 வீடுகள் மட்டும் ஊரிலும், மீதமுள்ள 8 வீடுகள் ஊரின் மேற்கே அவர்களது தோட்டத்திலும் உள்ளன. பாப்பாவலசில் 6 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. அவை போதிய அளவு உள்ளதால் அதிகப்படுத்தத் தேவையில்லை.

**100--**

**வடக்குப்பாளையத்தில் ஆழ்குழாய்க்கிணறு அமைத்தல்**

வினா எண் 46757--**திருமதி கவிநிலவு தர்மராஜ்**: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், பழமங்கலம் ஊராட்சி, வடக்குப்பாளையம் கிராமத்தில் ஆழ்குழாய்க்கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், பழமங்கலம் ஊராட்சி வடக்குப்பாளையம் கிராமத்தின் மக்கட்தொகை 280. இங்கு இரண்டு ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். மேற்படி இரண்டு ஆழ்குழாய்க் கிணறுகளில் ஒன்று ஆதிதிராவிடர் காலனியிலும், மற்றொன்று பொது குடியிருப்பிலும் அமைக்கப்பட்டுள்ளது. தவிர ஆதிதிராவிடர் மற்றும் பொது குடியிருப்புக்கும் தனித்தனியாக திறந்த வெளிக் கிணறுகளும் உள்ளன. எனவே, மேற்படி கிராமத்திற்குப் போதுமான அளவு குடிநீர் வசதி உள்ளது. புதிய ஆழ்குழாய்க் கிணறு அவசியமில்லை.

*1995 நவம்பர் 3]*

# ஏழாம் பட்டியல்

## உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள்

**1--**

### தாலுக்காக்களைப் பிரித்தல்

*வினா எண் 5505--***திரு. எம். ஆண்டி அம்பலம்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

*(அ) தமிழ்நாட்டில் எந்தெந்த தாலுக்கா பெரும் அளவு விஸ்தீரணம் உடையதாக அரசு ஆய்வு செய்துள்ளது?*

*(ஆ) அவற்றில் எந்தெந்த தாலுக்காக்களை பிரித்தமைக்க அரசு ஆய்வுகள் மேற்கொண்டது?*

*(இ) ஆய்வின் விவரம் என்ன?*

*(ஈ) எப்போது அரசு உத்தேசித்துள்ள தாலுக்காக்கள் பிரித்து அமைக்கப்படவிருக்கின்றன?*

**விடை--**

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ), (ஆ), (இ) மற்றும் (ஈ):* பெரும் அளவு விஸ்தீரணம் உடைய தாலுக்காக்கள் தொடர்பாக அரசு ஆய்வு எதனையும் தனியாக மேற்கொள்ளவில்லை. எனினும், புதிய வட்டங்கள் ஏற்படுத்துவது தொடர்பான கோரிக்கைகளின் பேரில் அரசு அதனை ஆய்வு செய்து அவ்வட்டத்தின் பரப்பளவுடன் அவற்றின் பின்தங்கிய நிலை, பொதுமக்களின் நலன் கருதி அரசின் நிதிநிலை இடமளிக்கும்பட்சத்தில் புதிய வட்டங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. அந்த வகையில் மதுரை மாவட்டத்திலுள்ள திருமங்கலம் மற்றும் உசிலம்பட்டி வட்டங்கள் சீரமைக்கப்பட்டு பேரையூர் வட்டமும், தருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி மற்றும் ஊத்தங்கரை வட்டங்கள் சீரமைக்கப்பட்டு போச்சம்பள்ளி வட்டமும், இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர்

வட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, கடலாடி வட்டமும் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. தருமபுரி மாவட்டத்தில் அரூர் வட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு புதிய பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2--

**சாதி சான்றிதழ் காலதாமதமின்றி வழங்கல்**

*வினா எண் 21631--***திரு. செ.து. வரதராஜன்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*காட்டுநாயக்கன் பழங்குடி இனத்தவர்களுக்கு சாதி சான்றிதழ் வழங்க மறுப்பதும், அதிக காலதாமதம் செய்வதும் இதனால் இந்த இனம் இவர்கள் குழந்தைகள் படிப்பு, வேலை பாதிப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:**

இது சம்பந்தமாக குறிப்பான புகார்கள் ஏதும் அரசுக்கு வரவில்லை. இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட நபர்கள் கோரிக்கை கொடுத்தால் அப்புகார் மனுக்களைச் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுப்பி அவற்றின்மீது முறையான விசாரணை மேற்கொண்டு கொடுக்கப்பட்ட கோரிக்கை உண்மையெனத் தெரியவந்தால் உடனடியாகச் சான்று வழங்கவும், கால தாமதம் நேர்ந்துள்ள இடங்களில் உடனடியாக விசார்ணையை முடித்து சம்பந்தப்பட்ட நபர்களுக்கு பழங்குடியினர் சான்றுகள் வழங்கவும், கோட்டாட்சியர்களுக்கு மாவட்ட ஆட்சியரால் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

3--

**ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்குதல்**

*வினா எண் 23965--***டாக்டர் மு. சீனியம்மாள்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

1995 நவம்பர் 3]

அவிநாசித் தொகுதி, அவிநாசிலிங்கம்பாளையம் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:**

அவிநாசி வட்டம், அவிநாசிலிங்கம்பாளையம் கிராமத்திலுள்ள ஆதிதிராவிடர்களிடமிருந்து, வீட்டுமனைப்பட்டா கேட்டு விண்ணப்பங்கள் எதுவும் வரப்பெறவில்லை. அவ்வாறு விண்ணப்பங்கள் வரப்பெற்றால் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

**4--**

**அவிநாசித் தொகுதியில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குதல்**

வினா எண் 23972--**டாக்டர் மு. சீனியம்மாள்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழக்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா---

(அ) அவிநாசித் தொகுதி, ஆத்திக்காட்டுப்பாளையம், ஆதிதிராவிடர் காலனிக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை--**

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அவிநாசி வட்டம். ஆத்திக்காட்டுப்பாளையத்தில் வசிக்கும் ஆதிதிராவிடர்களிடமிருந்து வீட்டுமனைப் பட்டா கேட்டு விண்ணப்பங்கள் எதுவும் வரப்பெறவில்லை. விண்ணப்பங்கள் வரப்பெற்றால் அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

**5--**

**சுமைதூக்கும் தொழிலாளர்களுக்கு இன்சூரன்ஸ் திட்டம்**

வினா எண் 46342---**திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

[1995 நவம்பர் 3

தமிழகத்தில் சுமைதூக்கும் தொழிலாளர்களாகப் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு கேரள மாநிலத்தில் வழங்குவது போல் இன்சூரன்ஸ் மற்றும் இழப்பீட்டுத் தொகை ரூ.10,000 வழங்கப்படுமா?

விடை--

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:**

அரசு ஆணை (நிலை) எண் 471, நிதித்துறை, நாள் 23-5-1989-ன் படி ஆபத்தான குறைந்த வருவாய் ஈட்டும் தொழிலாளர்கள் தாங்கள் செய்யும் தொழிலின்போதோ அல்லது இதர நேரங்களிலோ எதிர்பாராத விபத்துகளில் மரணமடைய நேரிட்டால் விபத்து நிவாரணத் திட்டத்தின் கீழ் ரூ.10,000 நிவாரணம் வழங்க வழிவகை உள்ளது. அவ்வாணையில் குறிப்பிடப்பட்டுள்ள இனங்களில் லாரிகளில் பாரம் ஏற்றி இறக்கும் ஏழைத் தொழிலாளர்களும் அடங்குவர். சுமை தூக்கும் தொழிலாளர்களும் இவ்வினத்தைச் சேர்ந்தவர்களே. எனவே, இத்தொழிலாளர்கள் விபத்துகளில் இறக்க நேரிட்டால் அவர்களின் குடும்பத்திற்கு விபத்து நிவாரணத் திட்டத்தின் கீழ் ரூ.10,000 நிவாரணம் வழங்கப்படுகிறது. ஊனமடைய நேரிட்டால் ரூ.5000 முதல் ரூ.10,000 வரை நிவாரணம் வழங்கப்படுகிறது.

6--

## வெள்ளத்தால் பழுதடைந்தவற்றை சீர்செய்தல்

வினா எண் 84444--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பேராவூரணி, சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தின் பகுதிகளில் நவம்பர் 1994-ல் ஏற்பட்ட வெள்ளத்தினால் பழுதடைந்த சாலைகள், பாலங்கள் ஏரிகளைச் சீரமைக்க நிதி ஒதுக்கீடு செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை---

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:**

கடந்த ஆண்டு 1994-இல் ஏற்பட்ட புயல் வெள்ளம் காரணமாக நீர்நிலைகள், சாலைகள், பாலங்களைச் சீர் செய்ய ரூ.6.55 கோடி நிதி

*1995 நவம்பர் 3]*

ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் தஞ்சாவூர் மாவட்டத்திற்கான தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறைக்கு) ரூ. 15 இலட்சம், தலைமைப் பொறியாளர் (பாசனம்) துறைக்கு ரூ. 5 இலட்சம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறைக்கு ரூ. 10 இலட்சம் ஆக ரூ. 30 இலட்சம் நிவாரணப் பணிக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**7--**

### ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டுதல்

வினா எண் 34356--**திரு. வி. ரவிச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் உப்பிலியாபுரம் ஊராட்சி ஒன்றியம், எரக்குடி, கிராம அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டிடம் கட்ட திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருச்சிராப்பள்ளி மாவட்டம், உப்பிலியாபுரம் ஊராட்சி ஒன்றியம், எரக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்ட தேவையான நிலமும், பொது மக்கள் நன்கொடையும் இன்னும் பெறப்படாமையால் இங்கு கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு தற்சமயம் இல்லை.

**8--**

### சூளகிரி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் வசதி

வினா எண் 52158--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தர்மபுரி மாவட்டம், ஒசூர் வட்டம், சூளகிரி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டவும், குடிநீர் வசதி செய்யவும் அரசு ஆவன செய்யுமா?

விடை--

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

சூளகிரி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**9--**

**மொடக்குறிச்சி தொகுதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல்**

வினா எண் *54279*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், குலவிளக்கு ஊராட்சி, பூசாரிபாளையம், பூசாரிபாளையம் அரிசன தெரு, மிண்ணப்பாளையம், புதுப்பாளையம், கோவில் பாளையம் ஆதி திராவிடர் காலனி, கோவில்பாளையம், காணியம்பாளையம் குலவிளக்கு ஆதிதிராவிடர் காலனி, மொசுகவுண்டன் புதூர், கணக்கம்பாளையம் ஆகிய கிராமங்களில் மகப்பேறு வசதி மற்றும் இரத்த வங்கியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை--

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம் குலவிளக்கு ஊராட்சியில் உள்ள கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**10--**

**கொடுமுடி ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல்**

வினா எண் *54369*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், சிவகிரி ஊராட்சி, பாலமேட்டுப்புதூர் கஸ்பா, வேட்டுவபாளையம், பெரிய காட்டூர், மொசுகவுண்டன்புதூர், தலையநல்லூர் ஆதி திராவிடர் காலனி, வேலாயுதம்பாளையம், கவுண்டம்பாளையம், தொப்பபாளையம், கொமாரவலசு, அண்ணாமலை கோட்டை, கோட்டைபுதூர், எல்லப்பாளையம், சின்னியகவுண்டன்பாளையம், சின்னரங்க கவுண்டன்வலசு, மாரப்பம்பாளையம், மோள விநாயகர்பாளையம், நம்மகவுண்டன்பாளையம், சிலுவம்பாளையம், சாணார்பாளையம் ஆகிய கிராமங்களில் மகப்பேறு வசதி மற்றும் இரத்த வங்கியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், சிவகிரி ஊராட்சியில் அமைந்த கிராமங்களில் மகப்பேறு வசதி மற்றும் இரத்த வங்கியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**11--**

**ஆண்டிமடம் தொகுதியில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *61891*--**திரு. ஆர். தங்கராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஆண்டிமடம் தொகுதி, வாரியங்காவல், குழுமூர் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டிடம் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

பொது மக்களின் நன்கொடையும், போதிய நிலமும் கிடைக்கப் பெறாமையால், இவ்விரு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டிடம் கட்டுவதற்கு தற்சமயம் வாய்ப்பில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

12--

## குருவாடியில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 70735--**டாக்டர் சு. மணிமேகலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரியலூர் தாலுகா, திருமானூர் ஒன்றியம், குருவாடியில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிட வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

அரியலூர் தாலுகா, திருமானூர் ஊராட்சி ஒன்றியம், குருவாடியில் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்ட தேவையான நிலமும், பொது மக்கள் நன்கொடையும் கிடைக்கப்பெறாமையால் இங்கு கட்டிடம் கட்ட தற்சமயம் வாய்ப்பில்லை.

13--

## மொடக்குறிச்சி ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல்

வினா எண் 79700--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், வடுகப்பட்டி ஊராட்சி பச்சாக்குட்டை, நெய்காரன்பாளையம், புதூர், நாவிதன்காட்டு புதூர், ஒடக்காட்டுவலசு, சின்னகிணத்துப்பாளையம், காரமடை ராக்கம்மா புதூர் ஆதிதிராவிடர் தெரு, பாம்பகவுண்டன்வலசு, பண்ணைகிணர், நெலவத்தம் ஆதி திராவிடர் காலனி, நல்லகாட்டுப்பாளையம், தொட்டியன் கிணற்றுபுதூர், எல்லைக்காட்டுவலசு, தம்பிரான்வலசு, காட்டூர்பாளையம், வடுகப்பட்டி, சுத்தம்பட்டி, வெட்டுக்காட்டுவலசு, அமராவதிபாளையம், பொங்காளிவலசு, சுத்தம்பட்டி ஆதிதிராவிடர் தேவனாம்பாளையம் ஆதி திராவிடர் காலனி, தேவனாம்பாளையம் ஆதிதிராவிடர் தெரு,

*1995 நவம்பர் 3]*

வேதனாம்பாளையம், எல்வநத்தம், வாங்கலாவலசு, ராக்கம்ம புதூர், நத்தமேடு, ஆதிதிராவிடர் தெரு, கருமகவுண்டன்வலசு, ஆகிய கிராமங்களில் பிரசவ வசதி மற்றும் இரத்த வங்கியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகை 1,29,025. ஊராட்சி ஒன்றியத்தில் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்கனவே உள்ளன. 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அரசின் கொள்கைப்படி மேலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் வடுகப்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த கிராமங்களில் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. ஆரம்ப சுகாதார நிலைய செயல்பாட்டின்படி இரத்த வங்கி ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிறுவிட சாத்தியக்கூறுகள் இல்லை.

**14--**

## மொடக்குறிச்சி ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல்

வினா எண் 79735--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், வேலாம்பாளையம் ஊராட்சி, பூமாண்டவலசு, குன்னாங்காட்டு வலசு, புதுவள்ளியம்பாளையம், வேலாம்பாளையம் புதூர், கருமாண்டம்பாளையம், நொச்சிக்காட்டுவலசு, வெள்ள பெத்தம்பாளையம், விளாங்காடு ஆகிய கிராமங்களில் பிரசவ விடுதி மற்றும் இரத்த வங்கியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

[1995 நவம்பர் 3

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், வேலாம்பாளையம் ஊராட்சியில் அமைந்த கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

15--

**இரத்த வங்கியுடன் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல்**

வினா எண் *79750*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், கொங்குடையாம்பாளையம் ஊராட்சி, திட்டுப்பாறை புதூர், சத்திரக்காட்டுவலசு புதூர், புதுக்காட்டுவலசு ஆகிய கிராமங்களில் பிரசவ வசதி மற்றும் இரத்த வங்கியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை**---

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், கொங்குடையாம்பாளையம் ஊராட்சியில் உள்ள கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

16---

**இரத்த வங்கியுடன் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மொடக்குறிச்சி ஒன்றியத்தில் அமைத்தல்**

வினா எண் *79753*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா---

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், புஞ்சைலக்காபுரம் ஊராட்சி, கொமாரபாளையம், புஞ்சைலக்காபுரம் ஆதிதிராவிடர் காலனி, புதுவலசு ஆகிய கிராமங்களில் பிரசவ வசதி மற்றும் இரத்த வங்கியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுமா?

**விடை**---

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், புஞ்சைலக்காபுரம் ஊராட்சியில் உள்ள கிராமங்களில் பிரசவ வசதி மற்றும் இரத்த

1995 நவம்பர் 3]

வங்கியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**17--**

**மொடக்குறிச்சி கிராமத்தில் பிரசவ வசதி ஏற்படுத்துதல்**

வினா எண் 79765--**திருமதி கவிநிலவு தர்மராஜ்**: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி ஒன்றியம், மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஊராட்சி, மொடக்குறிச்சி கிராமத்தில் பிரசவ வசதி மற்றும் இரத்த வங்கியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை.--

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், மொடக்குறிச்சியில் அரசு கட்டிடத்தில் 6 படுக்கை வசதிகளுடன் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. ஆரம்ப சுகாதார நிலயங்களில் இரத்த வங்கிகள் நிறுவிட இயலாது என்பதால் மொடக்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரத்த வங்கி அமைத்திடும் திட்டம் ஏதுமில்லை.

**18--**

**குஜிலியம்பாறைக்கு நகரப் பேருந்து இயக்குதல்**

வினா எண் 44231--**திருமதி கே. மரியம் உல் ஆசியா**: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சி மாவட்டம். பள்ளப்பட்டியிலிலுருந்து ஈசநத்தம் வழியாக குஜிலியம்பாறைக்கு தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் நகரப் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை, அமைச்சர்:**

கோரிக்கையில் உள்ள பள்ளப்பட்டி, குஜிலியம்பாறை (வழி) ஈசநத்தம் வழித்தடத்தின் மொத்த தூரம் 30.00 கி.மீ. இவ்வழித்தடத்தில்

தற்பொழுது தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் மூலம் அரவக்குறிச்சி, ஈசநத்தம் (வழி) பள்ளப்பட்டி வழியாக இரண்டு நகரப் பேருந்துகள் மூலம் தினசரி 6 நடைகளும், இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து மூலம் வேடசந்தூர், ஆர். வெள்ளோடு (வழி) குஜிலியம்பாறை ஈசநத்தம் வழியாக தினசரி 6 நடைகளும் இயக்கப்படுகின்றன. பள்ளப்பட்டியானது அரசால் அங்கீகரிக்கப்படாத நகரமாக இருப்பதால், அதனை மையமாக வைத்து நகரப் பேருந்து இயக்க இயலாது. எனவே, கோரிக்கையின் வழித்தடத்தில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்திலிருந்து நகரப் பேருந்து இயக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

**19--**

### திருப்பத்தூர்-மதுரை பேருந்து இயக்குதல்

வினா எண் 46864--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூரிலிருந்து சேலம், நாமக்கல், கரூர், திண்டுக்கல் வழியாக மதுரைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து விடப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக தடம் எண் 981, தூத்துக்குடியிலிருந்து திருப்பதிக்கு திருப்பத்தூர், சேலம், நாமக்கல், கரூர், திண்டுக்கல், மதுரை வழியாக இயக்கப்பட்டு வருகிறது. எனவே, திருப்பத்தூரிலிருந்து மதுரைக்குச் செல்ல விரும்பும் பயணிகள் இத்தடத்தினைப் பயன்படுத்திக் கொள்ளலாம். திருப்பத்தூரிலிருந்து மதுரைக்கு கோரிக்கையில் உள்ள தடம் வழியாக பிரத்தியேகமான வழித்தடம் இயக்குவதற்குப் போதுமான பயணிகள் இருக்கமாட்டார்கள்.

**20--**

### பூம்புகாருக்கு புதிய பேருந்து இயக்குதல்

வினா எண் 47363--திரு. எம். பூராசாமி: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா---

*1995 நவம்பர் 3]*

*(அ) பூம்புகார் செல்ல, சீர்காழியிலிருந்து தென்னலக்குடி அண்ணன்பெருமாள் கோவில், நாங்கூர், திருவெண்காடு வழியாக ஒரு புதிய பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ): கோரிக்கை தடம் முழுவதும் பகுதி, பகுதியாக பேருந்து வசதி போதிய அளவு பெற்றுள்ளது. சீர்காழி, அண்ணன்கோவில், நாங்கூர், மங்கைமடம், கீழ்மூவர்கரை தடத்தில் நகரப் பேருந்து மூலம். தினசரி 14 நடைகள் இயக்கப்படுகின்றன. சீர்காழி, மங்கைமடம், திருவெண்காடு, பூம்புகார் தடத்தில் நகரப் பேருந்துகள் மூலம் 40 நடைகள் இயக்கப்படுகின்றன. கோரிக்கை தடப் பகுதிகளில் தற்பொழுதுள்ள பேருந்து வசதியே போதுமானது. எனவே, கோரிக்கை தடத்தில் புதிய பேருந்து இயக்க செயற்குறிப்பு இல்லை.*

**21--**

### புதிய போக்குவரத்துக் கழகம் துவக்குதல்

*வினா எண் 47871--***திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*தமிழகத்தில் புதிய போக்குவரத்துக் கழகம் துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

*இல்லை.*

**22--**

### செம்பியன் கோமலுக்குப் பேருந்து இயக்குதல்

*வினா எண் 48653--***திரு .எஸ். ஆசைமணி:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

[*1995 நவம்பர் 3*

நாகை–காயிதே மில்லத் மாவட்டம், மயிலாடுதுறையில் இருந்து தேரெழுந்தூர் வரை தடம் எண் 10–சி பேருந்தை செம்பியன் கோமல் வரை இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

**விடை––**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் :**

மயிலாடுதுறை தேரெழுந்தூர், கோமல் வழியாக செம்பியன் கோமல் தடத்தில் தடம் எண் 10–சி மூலம் தினசரி 6 நடைகள் இயக்கப்படுகிறது. இந்நடைகளே அப்பகுதி வாழ் மக்களுக்கு போதுமானது. தேரெழுந்தூர் நடையினை செம்பியன் கோமல் வரை நீட்டித்து இயக்க வாய்ப்பில்லை.

**23––**

**தடம் எண் 10-சியை நீட்டித்தல்**

வினா எண் 48655––திரு. **எஸ். ஆசைமணி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா––

நாகப்பட்டினம்–காயிதே மில்லத் மாவட்டம், மயிலாடுதுறையில் இருந்து கம்பம் செல்லும் தடம் எண் 10–சி சோழன் பேருந்தை கெங்காதரபுரம் திருமங்கலம் வழியாக கம்பூர் செல்ல அரசு ஆவன செய்யுமா?

**விடை––**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

மயிலாடுதுறை நகரத் தடம் எண் 10-சி மயிலாடுதுறை; திருபாம்புரம் (வழி) கோமல், ஸ்ரீகண்டபுரம் மாந்தை, திருமங்கலம், கம்பூர் தடத்தில் இயக்கப்படுகிறது. சில நடைகள் மட்டுமே செம்பியன் கோமலைத் தொட்டுச் செல்கின்றன. செம்பியன் கோமல், ஆட்டூர், கங்காதரபுரம் 4 கி.மீ. தூரம் (கப்பி சாலை) பேருந்து வசதி பெறாத பகுதியாகும். இச்சாலை பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதாக இல்லை. தடம் எண் 10–சி பேருந்து ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கும் தடப் பகுதிகளில் நடைகளைக் குறைக்கும் வாய்ப்பில்லை. எனவே, நகரப் தடம் 10-சி

*1995 நவம்பர் 3]*

செம்பியன் கோமல், உக்கடை, ஆட்டூர், கோவில்பத்து, கங்காதரபுரம், திருமங்கலம் வழியாக இயக்க இயலாது.

**24--**

**திருவாரூர், கும்பகோணம் பேருந்து இயக்குதல்**

வினா எண் 48659--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகைப்பட்டினம்--காயிதே மில்லத் மாவட்டம், திருவாரூரிலிருந்து நன்னிலம், தென்கரை, வடமட்டம் புதூர், ஆடுதுறை, திருவிடைமருதூர் வழியாக கும்பகோணத்திற்கு சோழன் போக்குவரத்துக் கழக பேருந்து இரண்டு இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

கோரிக்கை தடம் சுற்று வழித்தடம் ஆகும். கும்பகோணம்; ஆடுதுறை வடமட்டம், தென்கரை, தென்கரை-நன்னிலம், நன்னிலம், திருவாரூர் என பகுதி, பகுதியாக போதிய அளவு பேருந்து வசதி உள்ளது. கும்பகோணம்-திருவாரூர் நேர்வழியில் அதாவது குடவாசல் வழியாக தடத்தின் நீளம் 42 கி.மீ. மட்டுமே. கோரிக்கை தடமான சுற்று வழியில் 64 கி.மீ. ஆகும். அதிக பயண நேரம், அதிகக் கட்டணம் காரணமாக நேரடி பயணிகள் சுற்று வழித் தடத்தை விரும்ப மாட்டார்கள். எனவே, இத்தடத்தில் பேருந்துகள் இயக்க செயற்குறிப்பு எதுவுமில்லை.

**25--**

**வடமட்டத்திற்கு பேருந்து இயக்குதல்**

வினா எண் 48661--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறையிலிருந்து கொல்லுமாங்குடி, புதூர் வழியாக வடமட்டத்திற்கு சோழன் பேருந்து ஒன்று இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் :**

மயிலாடுதுறை, வடமட்டம் (வழி) கொல்லுமாங்குடி புதூர் தடப் பகுதிகள் அனைத்தும் பேருந்து வசதி பெற்றவையாகும். எனவே, தற்போதுள்ள பேருந்து வசதிகளே போதுமானதாக உள்ளதால் இத்தடத்தில் புதிய பேருந்து இயக்கிட செயற்குறிப்பு ஏதுமில்லை.

**26--**

**கும்பகோணம்-பொறையார் பேருந்து இயக்குதல்**

வினா எண் 48662--திரு. **எஸ். ஆசைமணி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கும்பகோணத்திலிருந்து பொறையார் வரை சென்று கொண்டிருந்த சோழன் பேருந்து மீண்டும் இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் :**

கும்பகோணம்-பொறையார் (வழி) மயிலாடுதுறை ஆக்கூர் தடத்தில் கழக புறநகர் மற்றும் தனியார் பேருந்துகள் மூலம் 22 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. கும்பகோணம்-மயிலாடுதுறை, மயிலாடுதுறை-பொறையார் என பகுதி, பகுதியாக போதிய அளவு பேருந்து வசதி உள்ளன. கும்பகோணம்-பொறையார் (வழி) மங்கநல்லூர் தடத்தில் முன்பு நடைகள் இயக்கியபோது போதிய அளவு மக்கள் பயன்பாடு இல்லாமல் இருந்தது. தற்போது கும்பகோணம்-பொறையார் (வழி), மயிலாடுதுறை, ஆக்கூர் தடத்தில் நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. கோரிக்கை தடத்தில் கும்பகோணம்-மங்கநல்லூர், மங்கநல்லூர்-பொறையார் என பகுதி, பகுதியாக பேருந்து வசதி உள்ளதால், அப்பேருந்தினை மீண்டும் இயக்கிட தேவையில்லை.

*1995 நவம்பர் 3]*

**27--**

## கொழையூருக்குப் பேருந்து இயக்குதல்

வினா எண் *48663*--**திரு. எஸ். ஆசைமணி:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

நாகை-காயிதே மில்லத் மாவட்டம், மயிலாடுதுறையிலிருந்து கொழையூருக்கு சோழன் பேருந்து ஒன்று இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

**விடை---**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

கொழையூர் கிராமம், மங்கநல்லூர்-கோமல் சாலையில் பெரட்டக்குடி பேருந்து நிறுத்தத்திலிருந்து ½ கி.மீ. தூரத்தில் உள்ளது. கோமலிலிருந்து 1 கி.மீ. தூரத்திலும் உள்ளது. மயிலாடுதுறை-மங்கநல்லூர்-கோமல் தடத்தில், கழக நகரப் பேருந்து மூலம் 2 நடைகளும், தனியார் நகரப் பேருந்து மூலம் 14 நடைகளும் இயக்கப்படுகின்றன. மயிலாடுதுறை-தேரழுந்தூர்-கோமல் தடத்தில் கழக நகரப் பேருந்துகள் மூலம் 38 நடைகளும் இயக்கப்படுகின்றன. தற்பொழுதுள்ள இந்நடைகளே கொழையூர் கிராமத்திற்குப் போதுமானது. எனவே, மயிலாடுதுறை-கொழையூர் தடத்தில் புதிய பேருந்து இயக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

**28--**

## பொறையாருக்குப் பேருந்து இயக்குதல்

வினா எண் *48672*--**திரு. எஸ். ஆசைமணி:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

நாகை-காயிதே மில்லத் மாவட்டம், மயிலாடுதுறையிலிருந்து அரிவளூர்-வேலூர்-கிளியனூர், பெரம்பூர் வழியாக பொறையாருக்கு சென்று வர சோழன் பேருந்து இரண்டு இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

விடை--

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

மயிலாடுதுறை-மங்கநல்லூர் சாலையில் எலந்தக்குடியில் இருந்து பிரிந்து அரிவளூர், வேலூர், வழியாக கிளியனூர் சென்றடையும் சாலை கருங்கல் கப்பி சாலையாக பேருந்து இயக்கத்திற்கு தகுதியற்றதாக உள்ளது. இதன் நீளம் 6 கி.மீ. தவிரவும் இப்பகுதியில் அரிவளூரில் பாலம் ஒன்று உள்ளது. இதுவும் பேருந்து இயக்கத்திற்கு தகுதியற்ற நிலையில் உள்ளது. மயிலாடுதுறையிலிருந்து எலந்தங்குடி, சுந்தரப்பன்சாவடி, கிளியனூர், பெரம்பூர் வழியாக திருவிடைக்கழி வரை 8 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. கோரிக்கை தடத்தில் பேருந்து இயக்கத்திற்கு தகுதியற்றதாக 6 கி.மீ. சாலை பகுதி இருப்பதால் இத்தடத்தில் பேருந்து இயக்க இயலாது.

**29--**

### திண்டுக்கல்-வத்தலக்குண்டு பேருந்து வசதி

வினா எண் *54235*--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா---

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரவக்குறிச்சி-கொடைக்கானல் (வழி) பள்ளப்பட்டி, வேடசந்தூர், திண்டுக்கல், வத்தலக்குண்டு இடையில் பேருந்து வசதி செய்வதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை--

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

கோரிக்கையில் உள்ள அரவக்குறிச்சி-கொடைக்கானல் (வழி) பள்ளப்பட்டி, வேடசந்தூர், திண்டுக்கல், வத்தலக்குண்டு வழித்தடத்தின் மொத்த நீளம் *147.3* கி.மீ. இவ்வழித்தடம் முழுவதும் புறநகரப் பேருந்துகள் மூலம் நன்கு இணைக்கப்பட்டுள்ளது. இவ்வழித்தடத்தில் எல்லா நாட்களிலும் நேரடி பயணிகள் பயணம் செய்ய வாய்ப்பு இல்லை. எனவே, இவ்வழித் தடத்தில் பேருந்து இயக்க தேவை இல்லை.

*1995 நவம்பர் 3]*

**30--**

**திருப்பத்தூர் தொகுதியில் கூடுதல் நகரப் பேருந்து இயக்குதல்**

வினா எண் *61489*--**திரு.** ஏ.கே.சி. **சுந்தரவேல்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட-ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஆண்டியப்பனூர் பஞ்சாயத்து, லாலாப்பேட்டை மற்றும் மேச்சேரி வட்டத்திற்கு நகரப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

ஆண்டியப்பனூர் கிராமத்தில் இருந்து பிரிந்து செல்லும் சாலையில் லாலாப்பேட்டையில், மேச்சேரி கிராமமும் உள்ளது. ஆண்டியப்பனூரில் இருந்து லாலாப்பேட்டைக்கு செல்லும் சாலை ஜல்லி சாலையாகவும், மண் சாலையாகவும் இருபுறங்களிலும் முட்புதர்கள் அடர்ந்து உள்ளதால் பேருந்து இயக்கத்திற்கு உகந்ததாக இல்லை. மேலும் லாலாப்பேட்டை மேச்சேரி பகுதியில் உள்ள மிக குறுகிய சாலை வளைவு பேருந்து இயக்க இயலாத அளவுக்கு குறுகியதாக உள்ளது. எனவே, இச்சாலையில் பேருந்து இயக்க சாத்தியக்கூறு இல்லை.

**31--**

**தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் திருப்பத்தூரில் திறத்தல்**

வினா எண் *64958*---**திரு.** ஏ.கே.சி. **சுந்தரவேல்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் திருப்பத்தூர் நகரில் திறக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

இல்லை.

**32--**

**ஈச்சங்காட்டிற்குப் பேருந்து இயக்குதல்**

வினா எண் *65396*--**திரு. ஆர். தங்கராஜ்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* திருச்சிராப்பள்ளியிலிருந்து தளவாய் செல்லும் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழக பேருந்தை ஈச்சங்காடு வரை செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது விடப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)*: திருச்சிராப்பள்ளி-தளவாய் (வழி) அரியலூர், திட்டக்குடி பார்டர், சன்னாசிநல்லூர், பேருந்து இயங்கும் வழித் தடத்தில் ஈச்சங்காடு பிரிவிலிருந்து ஈச்சங்காடு கிராமம் *0.8* கி.மீ. தொலைவில் உள்ளது. இந்த *0.8* கி.மீ. தூரத்தில் ஏரிக்கரையில் செல்லும் சாலை முழுவதும் மழை நீரால் அரிக்கப்பட்டு, மேடு பள்ளங்களாக, சாலை குறுகலாகவும் பேருந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது. மேலும் பேருந்துகள இயங்கும் பிரதான சாலையிலிருந்து *1.0* கி.மீ. தூரம் வரையுள்ள அனைத்து பகுதிகளும் அரசு ஆணைப்படி பேருந்து வசதி பெற்ற பகுதிகளாக கருதப்படும். எனவே, ஈச்சங்காடு கிராமத்தினை பேருந்து வசதி பெற்ற கிராமமாக கருதலாம். எனவே ஈச்சங்காடு கிராமத்திற்கு தற்சமயம் பேருந்து இயக்க இயலாது.

*1995 நவம்பர் 3]*

**33--**

**திருநெல்வேலி-பம்பாய்க்கு எக்ஸ்பிரஸ் ரயில் இயக்குதல்**

*வினா எண் 67581--***திருமதி பே. மரியம் உல் ஆசியா:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*திருநெல்வேலி-பம்பாய் இடையே விரைவு எக்ஸ்பிரஸ் ரயில் விடுமாறு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

*தற்பொழுது 14-7-1995 ஆம் நாள் முதல் திருநெல்வேலி-மதுரை வழியாக நாகர்கோவில் -பம்பாய்க்கு இடையே ஒரு விரைவு இரயில் வாரம் ஒரு முறை சென்று வர அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.*

**34--**

**மொடக்குறிச்சி ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் அமைத்தல்**

*வினா எண் 46537--***திருமதி கவிநிலவு தர்மராஜ்:** *மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், பழமங்கலம் ஊராட்சி, வடக்கு பாளையம் கிராமத்தில் ஆசிரியர் குடியிருப்பு மற்றும் அரசு அலுவலர் குடியிருப்பு அமைப்பது குறித்து அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்:**

*மொடக்குறிச்சி ஒன்றியம், பழமங்கலம் ஊராட்சி, வடக்கு பாளையம் கிராமத்தில் ஆசிரியர் மற்றும் அரசு அலுவலர்களுக்கு குடியிருப்பு அமைப்பது குறித்து செயற்குறிப்பு ஏதும் இல்லை.*



TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

35--

### செந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் குடியிருப்புகள் கட்டுதல்

வினா எண் 60915--திரு. ஆர். தங்கராஜ்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரியும் வளர்ச்சி அலுவலர்களுக்கு குடியிருப்பு வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்:

ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரியும் வளர்ச்சி அலுவலர்களுக்கு குடியிருப்பு வீடுகள் கட்டித் தரும் செயற்குறிப்பு திட்டம் அரசிடம் இல்லை.

36--

### கைவினைப் பொருள் வளர்ச்சி மையம் அமைத்தல்

வினா எண் 44747--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கைவினைப் பொருள் வளர்ச்சி மையம் தமிழ் நாட்டில் மத்திய அரசு ஆரம்பித்திருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது?

விடை--

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) கைவினைப் பொருள் வளர்ச்சி மையங்களை மத்திய அரசு ஆரம்பித்துள்ளது.

1995 நவம்பர் 3]

(ஆ) 1. காகிதக் கூழ் பொம்மைகள் வளர்ச்சிக்கென ஒரு கைவினைப் பொருட்கள் வளர்ச்சி மையம் செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம் பரேரியில் இயங்கி வருகிறது.

2. பனை ஓலைப் பொருட்கள் மற்றும் நார் பொருட்கள் வளர்ச்சிக்கென ஒரு மையம் மேட்டுப்பாளையம், வேலூர் மற்றும் வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்திலும் ;

3. கோரைப் பாய்கள் வளர்ச்சிக்கென ஒரு மையம் செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம் கேளம்பாக்கத்திலும் இயங்கி வருகின்றன.

**37--**

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கட்டிடம் கட்டுதல்**

வினா எண் 39014--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கரூர் வட்டம், சின்னதாராபுரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:**

திருச்சி விற்பனைக் குழுவின் கட்டுப்பாட்டில் சின்னதாராபுரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு சொந்த நிலம் வாங்கிட உரிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது வரை நிலம் வாங்கி முடிக்கப்படவில்லை. எனவே, நிலம் வாங்கும் பணி முடிவடைந்ததும், சொந்த கட்டிடங்கள் கட்ட உரிய மேல் நடவடிக்கை தொடரப்படும்.

**38--**

**கரும்பு செஸ் வரித் தொகை**

வினா எண் 44368--**திரு. எஸ்.எஸ்.ஆர். இராமதாஸ்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தென்னாற்காடு மாவட்டத்தில் செயல்படும் ஆலைகள் ஒவ்வொன்றும் கரும்பு செஸ் வரியாக இதுவரை எவ்வளவு தொகையைச் செலுத்தியுள்ளது?

[1995 நவம்பர் 3

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:.**

தென்னாற்காடு மாவட்டத்தில் செயல்படுகின்ற சர்க்கரை ஆலைகள் இது வரையில் கரும்பு மேல் வரியாக செலுத்திய தொகை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. ஈ.ஐ.டி. பாரி .. .. .. | 559.36 |
| 2. சவுத் இந்தியா .. .. .. | 375.86 |
| 3. அருணா .. .. .. | 500.12 |
| 4. கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை .. | 368.43 |
| 5. செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை .. | 182.13 |
| 6. எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை .. .. .. | 44.32 |

**39--**

**தேங்காய் ஏற்றுமதி செய்தல்**

வினா எண் 44757--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ் நாட்டில் தேங்காய் எவ்வளவு உற்பத்தி செய்யப்படுகிறது ?

(ஆ) தமிழ் நாட்டிலிருந்து வணிகமுறையில் தேங்காய் வெளி மாநிலங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3]*

*(அ) 1992-93-ஆம் ஆண்டு கணக்குப்படி தமிழ்நாட்டில் 28,179 இலட்சம் தேங்காய்களும் 1993-94 ஆம் ஆண்டு கணக்குப்படி 33,114 இலட்சம் தேங்காய்களும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.*

*(ஆ)* வேளாண்மைத்துறையில், தேங்காய் ஏற்றுமதி செயல்பாடுகள் கவனிக்கப்படவில்லை. வேளாண்மைத் துறை மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள் மூலம் வெளி மாநிலம் மற்றும் வெளி நாடுகளுக்கு தேங்காய் ஏற்றுமதி செய்யப்படுவதில்லை. மேலும், தமிழ் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தேங்காய்கள், எண்ணெய் உற்பத்திக்கும், வீட்டு உபயோகத்திற்குமே பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ளன.

**40--**

**எண்ணெய் பனை செடிகள் நட நடவடிக்கை**

வினா எண் *46364*--**திருமதி ப. சரஸ்வதி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* கபிலர் மலை தொகுதியில் காவிரிக்கரை ஓரம் உள்ள மணற்பாங்கான காவிரி புறம்போக்கில் எண்ணெய் பனை செடிகள் நட அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:**

*(அ)* இதற்கான கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை.

*(ஆ)* கேள்விக்கு இடமில்லை.

**41--**

**மானிய விலையில் உரங்கள் வழங்குதல்**

வினா எண் *48008*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

[1995 நவம்பர் 3

விவசாயிகளுக்கு மானிய விலையில் கொடுக்கும் உரங்கள் முறையாக வழங்கப்படுகின்றதா என்பதை கண்காணிக்க குழு ஒன்று நியமிக்கப்படுமா?

**விடை--**

***மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:***

விவசாயிகளுக்கு மானிய விலையில் கொடுக்கும் உரங்கள் முறையாக வழங்கப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க தனியாக குழு ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை. தற்போது மத்திய அரசால் சலுகை விலையில் அளிக்கப்படும் உரங்களின் மூட்டைகளின் மேல் பகுதியில் விலை குறிப்பிடப்பட்டுள்ளது. சலுகை விலையில் அளிக்கப்படும் உரங்களின் விலை காரிப் பருவத்திற்கும், ராபி பருவத்திற்கு, இத்துறையில் விரிவாக்கப் பணியாளர் மூலமாகவும், செய்தித் தாள்கள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் வானொலி மூலமாகவும் தெரிவிக்கப்படுகிறது. மானிய விலையில் அளிக்கப்படும் அனைத்துத் திட்டங்களும், துறைப் பணியாளர்கள், செய்தித் தாள்கள் மற்றும் வானொலி மூலமாகவும் தெரிவிக்கப்படுகிறது. உதவி வேளாண்மை அலுவலரின் பரிந்துரையின் பேரில் வேளாண்மை அலுவலர் மேலொப்பத்துடன்தான் மானிய விலையில் அனைத்து இடு பொருட்களும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. மாவட்டத்திலுள்ள தரக் கட்டுப்பாடு அலுவலர்களும் மானிய விலையில் விநியோகிக்கப்படும் இடுபொருட்களை அவ்வப்போது கண்காணித்து வருகிறார்கள். எனவே, இதனை கண்காணிக்க தனியே குழு அமைக்கத் தேவையில்லை.

**42--**

## மூலனூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கட்டிடம் கட்டுதல்

வினா எண் *47762*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரியார் மாவட்டம், மூலனூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

1995 நவம்பர் 3]

**விடை---**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:**

பெரியார் மாவட்டம், மூலனூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் தற்போது ஏலக் கொட்டகை ஒன்றும், கிட்டங்கி ஒன்றும், உலர் களம் ஒன்றும் மற்றும் ஒரு அரசு கிட்டங்கி ஒன்றும் கட்டப்பட்டுள்ளன. மேலும், குடிநீர் வசதிகள், கழிப்பிட வசதிகளும் அமைத்துத் தரப்பட்டுள்ளன. இந்த விற்பனைக் கூடத்தில் 1994-95 ஆம் ஆண்டு விளைபொருள் வரத்து 1810 டன்கள் ஆகும். எனவே, வரும் ஆண்டுகளில் வரத்துக்களை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வரத்து அதிகரித்ததும் வரும் ஆண்டுகளில் தேவைப்படின் பெரியார் விற்பனைக் குழுவின் நிதிநிலையை உத்தேசித்து கூடுதல் கிட்டங்கிகள், ஏலக் கொட்டகைகள், விவசாயிகள் ஓய்வறைகள் முதலியவை கட்டப்படும்.

**43--**

**கரூரில் வணிக வளாகம் அமைத்தல்**

வினா எண் 52049--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூரில் வணிக வளாகம் அமைப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

**விடை---**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:**

தற்போது திருச்சி மாவட்டம், கரூரில் வணிக வளாகம் அமைக்கும் திட்டம் பற்றி கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. கரூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு தேவையான 9 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு ரூ.22.08 இலட்சம் செலவில் ஏலக் கொட்டகைகள் இரண்டும் ஊரக கிட்டங்கி ஒன்றும் உலர்களம் ஒன்றும் மற்றும் குடிநீர்,

கழிப்பிட வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. கரூரில் வணிக வளாகம் அமைக்க, வரும் ஆண்டுகளில் வரத்துகள் அதிகரித்து விற்பனைக் குழுவின் நிதி நிலைமையை கருத்தில் கொண்டு வணிக வளாகம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**44--**

**தர்மபுரி மாவட்டத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு கட்டிடம் கட்டுதல்**

வினா எண் 52080--**திருமதி கே. மரியம் உல் ஆசியா**: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தர்மபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டி மற்றும் பென்னாகரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைததுறை அமைச்சர்:**

தர்மபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டி ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் தற்போது சொந்த நிலமின்றி வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இந்த விற்பனைக் கூடத்திற்கு 1995-96 ஆம் ஆண்டில் சொந்த நிலம் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சொந்த நிலம் வாங்கியதும், விற்பனைக் குழுவின் நிதி நிலையை உத்தேசித்து கிட்டங்கிகள், ஏலக் கொட்டகை, அலுவலகம் போன்ற கட்டிடங்கள் கட்டப்படும். பென்னாகரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு நிலம் வாங்கப்பட்டு ரூ.4.98 இலட்சம் மதிப்பீட்டில் அலுவலக கட்டிடம் மற்றும் ரூ.4.80 இலட்சம் மதிப்பீட்டில் வர்த்தக பரிவர்த்தனைக் கூடம் ஆகியவை கட்டப்பட்டு வருகின்றன. மேலும், ரூ.5 இலட்சம் மதிப்பில் சுற்றுச் சுவர் கட்டும் பணியும் துவங்கப்பட்டுள்ளது.

*1995 நவம்பர் 3]*

**45--**

**போச்சம்பள்ளி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கட்டிடம் கட்டுதல்**

வினா எண் 52082--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தர்மபுரி மாவட்டம், போச்சம்பள்ளி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:**

தர்மபுரி மாவட்டம், போச்சம்பள்ளி ஒழுங்குமுறை கூடத்திற்கு 5.5 ஏக்கர் சொந்த நிலம் வாங்கப்பட்டு இதில் ஏலக் கொட்டகை ஒன்றும், ஊரகக் கிட்டங்கி ஒன்றும், உலர் களம் ஒன்றும், விவசாயிகள் ஓய்வு அறை ஒன்றும் மற்றும் மாட்டுக் கொட்டகை ஒன்றும் கட்டப்பட்டுள்ளன. மேலும் இங்கு குடிநீர், கழிப்பிட வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. இந்த விற்பனைக் கூடத்தில் 1994-95-ஆம் ஆண்டின் மொத்த வரத்து 1,451 டன்கள் ஆகும். வரும் ஆண்டுகளில் வரத்தினை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே, வரத்தினை அதிகரித்து தேவைப்படின் வரும் ஆண்டுகளில் கூடுதல் கட்டிடங்கள் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

**46--**

**கரூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கட்டிடம் கட்டுதல்**

வினா எண் 52083--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூரில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை--

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு சொந்த நிலம் வாங்கப்பட்டு அதில் ஏலக் கொட்டகைகள் இரண்டும், ஊரகக் கிட்டங்கி ஒன்றும், உலர் களம் ஒன்றும், குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த விற்பனைக் கூடத்தின் 1994-95 ஆம் ஆண்டு மொத்த விளைபொருள் வரத்து 1,214 மெட்ரிக் டன்கள் ஆகும். எனவே, வரும் ஆண்டுகளில் வரத்தினை மேலும் அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வரத்து அதிகரித்து தேவைப்படின் விற்பனைக் குழுவின் நிதி நிலையை கருத்தில் கொண்டு கூடுதல் கட்டிடங்கள் கட்டப்படும்.

**47--**

**விவசாயிகளுக்கு அளிக்கும் மானிய உதவிகள்**

வினா எண் 57179--**டாக்டர் ஜெ. பரந்தாமன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழ்நாடு அரசு விவசாயிகளுக்கு அளிக்கும் மானிய உதவிகள் குறித்து துண்டு பிரசுரங்கள் துறையின் மூலம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுமா?

விடை--

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:.**

1992-93 ஆம் ஆண்டு வரை மானிய உதவிகள் குறித்து துண்டுப் பிரசுரங்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. 1993-94 ஆம் ஆண்டு தொழில்நுட்பச் செய்திகள் அடங்கிய புத்தகம் சட்டமன்ற

*1995 நவம்பர் 3]*

உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. *1995-96*ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து மானியங்கள் குறித்து துண்டு பிரசுரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**48--**

**விவசாயிகளுக்கு டிராக்டர் கடன் வழங்குதல்**

வினா எண் *61454*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

விவசாயிகளுக்கு மானியத்துடன் டிராக்டர் கடன் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:**

மத்திய அரசு உதவியுடன், விவசாயிகளுக்கு சிறிய டிராக்டர்கள் (*18* குதிரை சக்திக்கு குறைவானது) மானியத்துடன் வழங்கும் திட்டம் *1994*ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி அதிக பட்சமாக ஒரு டிராக்டருக்கு ரூ.*30,000* மானியம், வழங்கப்படுகிறது. இதன் மூலம் சிறு-குறு விவசாயிகள் உட்பட அனைத்து விவசாயிகளும் பயன் அடைகின்றனர்.

**49--**

**முதல் சேரியில் விவசாய டெப்போ அமைத்தல்**

வினா எண் *61825*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பட்டுக்கோட்டை ஒன்றியம் முதல் சேரியில் விவசாய டெப்போ அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:**

இல்லை.

**50--**

**வேளாண்மை விரிவாக்கப் பணியாளர்களுக்கான அலுவலகத்திற்கு கட்டிடம் கட்டுதல்**

வினா எண் 61826--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பேராவூரணி தொகுதி, காலகம் ஊராட்சி வேளாண்மை விரிவாக்கப் பணியாளர்களுக்கான அலுவலகத்தைக் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:**

இல்லை.

**51--**

**ஈரோட்டை தொழிலில் பின்தங்கிய வட்டமாக அறிவித்தல்**

வினா எண் 48406--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

. ஈரோட்டை தொழிலில் பின்தங்கிய வட்டமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:**

ஒரு வட்டத்தை தொழில் துறையில் பின்தங்கிய வட்டமாக அறிவிப்பதற்குரிய விதிமுறையை ஈரோடு வட்டம் நிறைவு செய்யாத காரணத்தால், ஈரோடு வட்டத்தை தொழில் துறையில் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1995 நவம்பர் 3]

**52--**

**வட ஆற்காடு மாவட்டத்தில் டயர் தொழிற்சாலை துவங்குதல்**

வினா எண் 61425--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் மோட்டார் வாகனங்கள் மற்றும் இரு சக்கர வாகனங்களுக்கான டயர் தொழிற்சாலை துவக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**53--**

**திருப்பத்தூர் தொகுதியில் கிரானைட் தொழிற்சாலை அமைத்தல்**

வினா எண் 64943--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

(அ) வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி ஜவ்வாது மலையருகில் கிரானைட் தொழிற்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

54--

## தொழில் முனைவோர் பெற்ற கடன் விவரம்

வினா எண் *64948*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரசு நிதி நிறுவனம் கடந்த 3 ஆண்டுகளில் எவ்வளவு தொழில் முனைவோருக்குப் புதிதாக தொழில்கள் துவங்க கடன் உதவி அளித்துள்ளது?

**விடை**--

**மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் போன்ற அரசு நிதி நிறுவனங்கள் கடந்த 3 ஆண்டுகளில் தொழில் முனைவோர்களுக்கு புதிய தொழில்கள் துவங்க அளித்துள்ள கடன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

| | | ஆண்டு | தொழில் முனை வோர் எண் ணிக்கை | கடன் தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| | | (1) | (2) | (3) |
| 1 | தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் | 1992-93 | 36 | 33.42 |
| | | 1993-94 | 36 | 44.60 |
| | | 1994-95 | 39 | 49.63 |
| 2 | தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் | 1992-93 | 2753 | 206.37 |
| | | 1993-94 | 2886 | 321.42 |
| | | 1994-95 | 3341 | 382.01 |

*1995 நவம்பர் 3]*

**55--**

**இராமநாதபுரம் மாவட்டத்தைத் தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய மாவட்டமாக அறிவித்தல்**

வினா எண் *72388*--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

இராமநாதபுரம் மாவட்டத்தை தொழில் வளர்ச்சியில் மிகவும் பின் தங்கிய மாவட்டமாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர் :**

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டங்களும் தொழில் துறையில் பின் தங்கிய வட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளதால், இராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் தொழில் துறையில் பின் தங்கிய மாவட்டமாக உள்ளது. ஆனால், இவ்வட்டங்கள், தொழிலில் மிகவும், பின் தங்கிய வட்டங்களாக, அறிவிப்பதற்கான விதிமுறைகளை நிறைவு செய்யவில்லை. இந்நிலையில், இராமநாதபுரம் மாவட்டத்தை தொழில் துறையில் மிகவும் பின் தங்கிய மாவட்டமாக அறிவிக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**56--**

**பன்னாட்டு சேவா நிறுவனங்களின் பணித்திட்டம்**

வினா எண் *14707*--திரு. **கே.ஏ. மனோகரன்:** மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழ்நாட்டில் எத்தனை பன்னாட்டு சேவா நிறுவனங்கள் எந்தெந்த மாவட்டத்தில் எவ்வகையான திட்டப்பணிகளைச் செய்து வர அனுமதிக்கப்படுகின்றன?

**விடை--**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:**

சுவீடன் பன்னாட்டு முகமை (சிடா) செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., புதுக்கோட்டை மற்றும் நீலகிரி மாவட்டத்திலுள்ள 47 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கிறது.

57--

## ஆதரவற்ற பெண்களுக்கு உதவும் திட்டம்

வினா எண் 33736--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(a) Whether the Government is distributing kits containing farm implements to destitute farm women labourers in this States?

(b) The details thereof.

**விடை--**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை, அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஆதரவற்ற பண்ணை வேலை செய்யும் பெண்களுக்கு இத்துறையின் மூலம் உதவிகள் செய்யும் திட்டங்கள் ஏதும் தற்போது இல்லை.

58--

## ஆதரவற்ற பெண்கள் இல்லங்கள் அமைத்தல்

வினா எண் 48790--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஆதரவற்ற பெண்கள் இல்லங்கள் மாவட்டந்தோறும் அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் :**

இல்லை.

*1995 நவம்பர் 3]*

**59--**

## திருப்பத்தூரில் நூல் ஆலை அமைத்தல்

வினா எண் *61475*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா---

(அ) திருப்பத்தூரில் நூல் ஆலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் :**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**60--**

## நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டுதல்

வினா எண் *61654*--**திரு ஆர். சிங்காரம்:** மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா---

தமிழகம் முழுவதும் நெசவாளர் குடும்பங்களுக்கு கட்டித்தர திட்டமிடப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை---**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் :**

"*1994-95* ஆம் ஆண்டில் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் *1000* தொழிற்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டது. இவற்றில் *128* இனங்களில் கட்டுமானப் பணி துவங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள இனங்களின் அனைத்துப் பணிகளும் *31-12-1995*க்குள் முடிவு பெறும்.

1995-96 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கூட்டுறவுத் துறையின் கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு தொழிற்கூடத்துடன் கூடிய 1000 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ரூ.1.90 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இவ்வீடுகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனவே வீடுகளின் எண்ணிக்கையைத் தற்போது அதிகரிக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை.

**61--**

### ஜவுளி ஆய்வுக்கூடம் அமைத்தல்

வினா எண் 65099--**திருமதி கே. மரியம் உல் ஆசியா** : மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் ஜவுளி ஆய்வுக்கூடம் அமைப்பதற்கு மத்திய அரசு முன்வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கு, எப்பொழுது அமைக்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் :**

(அ) தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் நகரத்தில் ஏற்கனவே தென்னிந்திய ஜவுளி ஆராய்ச்சிக் கழகம் (SITRA) மத்திய அரசு உதவியுடன் இயங்கி வருகிறது. இது நூல் உற்பத்தி, நெசவு மற்றும் பதனிடும் துறைகளில், தமிழ்நாடு நிறுவனங்களில் தற்போதைய ஆராய்ச்சி, ஆய்வு போன்ற இனங்களின் தேவையைப் பூர்த்தி செய்வதால் மேலும் ஒரு ஜவுளி ஆய்வுக்கூடம் தமிழ்நாட்டில் அமைக்கத் திட்டம் ஏதும் இப்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**62--**

### கைத்தறி நவீன வடிவமைப்பு நிலையம் ஏற்படுத்துதல்

வினா எண் 65117--**திருமதி கே. மரியம் உல் ஆசியா**: மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

1995 நவம்பர் 3]

கைத்தறி நவீன வடிவமைப்பு நிலையம் தமிழகத்தில் ஏற்படுத்துமாறு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

**விடை--**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் :**

இல்லை. கைத்தறி நவீன வடிவமைப்பு நிலையம் ஒன்றினைத் தமிழகத்தில் ஏற்படுத்த தற்போது அவசியம் எழவில்லை.

**63--**

**உதகமண்டலம் அல்லது குன்னூரில் திரைப்பட நகரம் அமைத்தல்**

வினா எண் 81998--டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சென்னை தரமணியில் அமைக்கப்பட்ட திரைப்பட நகரைப் போல் உதகமண்டலம் அல்லது குன்னூரில் திரைப்பட நகரம் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வரும்?

**விடை--**

**மாண்புமிகு திரு மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): சென்னை தரமணியில் அமைக்கப்பட்டுள்ள திரைப்பட நகரைப் போல் உதகமண்டலம் அல்லது குன்னூரில் திரைப்பட நகரம் அமைக்கும் உத்தேசம் எதுவும் அரசுக்கு இல்லை.

**64--**

**ஒலைபூர் அரசு உயர்நிலைப் பள்ளியைப் புதுப்பித்தல்**

வினா எண் 33660--**திரு. ஆர். தங்கராஜ்:** மாண்புமிகு கல்வி துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, ஓலையூர் அரசு உயர்நிலைப் பள்ளி, பழுதடைந்து இடிந்து விடும் நிலையில் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் பழுது பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஓலையூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் பழுதடைந்த நிலையில் இருந்த பள்ளிக் கட்டிடம் தற்போது பொதுப்பணித்துறையினரால் பழுதுபார்க்கப்பட்டு நல்ல முறையில் உள்ளது. மேற்படி கட்டிடத்தில்தான் தற்போது பள்ளி செயல்பட்டு வருகிறது.

**65--**

**அரசுப் பள்ளிக்கு புறம்போக்கு நிலங்களை வழங்குதல்**

வினா எண் 37730--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பரமக்குடி தொகுதி, பார்த்திபனூர் அரசு மேல் நிலைப் பள்ளியின் அருகில் உள்ள புறம்போக்கு நிலங்களைப் பள்ளிக்கு வழங்கிட அரசுக்கு பரிந்துரை வந்துள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

பார்த்திபனூர் அரசு மேல்நிலைப் பள்ளியின் பெயரில் பள்ளிக்கென 12 ஏக்கர் நிலம் உள்ளது. மேலும் பள்ளியின் அருகில் உள்ள மேற்படி புறம்போக்கு நிலமான 12 ஏக்கர் பள்ளியின் பெயரிலேயே வருவாய் அடங்கல் 10(1)ல் தாக்கல் ஆகியுள்ளதால் அரசுக்கு நில மாற்றம் குறித்து கருத்துரு அனுப்பும் பிரச்சினை எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**66--**

### எடப்பாடி தொகுதியில் பள்ளிகளுக்கு நிலம் ஒதுக்குதல்

வினா எண் *39669*--**திரு. க. பழனிசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) எடப்பாடி தொகுதி அடையூர், பக்கநாடு அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு இடம் இல்லாமல் ஆரம்பப் பள்ளியில் இயங்கி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றுக்கு நிலம் ஒதுக்கித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம், பக்கநாடு--ஆடையூர் அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு கட்டிடம் கட்ட (சர்வே எண். *243/1*ல் *3.28.0* ஹெக்டேர் நிலத்தை) சங்ககிரி வட்டாட்சியர் மற்றும் சம்பந்தப்பட்ட வருவாய்த்துறை அலுவலர்களால் கூட்டு ஆய்வு செய்யப்பட்டு தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிலம் சென்றாய பெருமாள் கோவில் பெயரில் உள்ளதால் அறநிலையத்துறையின் ஒப்புதல் பெற தகுந்த நடவடிக்கை சேலம் முதன்மைக் கல்வி அலுவலரால் எடுக்கப்பட்டு வருகிறது.

**67--**

### புதுக்கோட்டை மாவட்டத்தில் பள்ளிகளுக்கு கூடுதல் கட்டிடம்

வினா எண் *41545*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

புதுக்கோட்டை மாவட்டம் கொத்த மங்கலம், அறந்தாங்கி, கீரமங்கலம், நெடுவாசல், ஆவணம், லட்சுமி நரசிம்மபுரம், ஆலங்குடி, வடகாடு மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

68--

### அரசினர் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டிடம்

வினா எண் 41566--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், தம்பிக்கோட்டை ஒன்றியம் மற்றும் பட்டுக்கோட்டை அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டிடம் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

தம்பிக்கோட்டை மேலக்காடு அரசு உயர்நிலைப்பள்ளிக்குக் சொந்த நிலமோ கட்டிடமோ இல்லாத காரணத்தால் ஊராட்சி ஒன்றிய கட்டிடத்தில் இயங்கி வருகிறது. எனவே கட்டிடங்கள் கட்டுவது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. பட்டுக்கோட்டை ஆண்கள் மேல்நிலைப் பள்ளி 50 சதவீத மானியம் கட்ட முன் வராததால் இப்பள்ளிக்கு வகுப்பறைகள் கட்டுவது குறித்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவில்லை.

69--

### முத்தாகுறிச்சி அரசு உயர்நிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம்

வினா எண் 43521--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பரமக்குடி ஒன்றியம், முத்தாகுறிச்சி அரசு உயர்நிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை.--

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :**

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

*1995 நவம்பர் 3]*

**70--**

**ராம்பாக்கம் மேல்நிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம்**

வினா எண் *43540*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார் மாவட்டம், கண்டமங்கலம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள ராம்பாக்கம் மேல்நிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**71--**

**திருப்பத்தூர் தொகுதியில் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டிடம்**

வினா எண் *45711*--**திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, மாடப்பள்ளி ஊராட்சி மடவாளம் கிராமத்திலுள்ள அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி மற்றும் அரசினர் மேல்நிலைப்பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

தற்போது கட்டிடம் கட்டும் திட்டம் ஏதுமில்லை.

**72--**

**பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் விவரம்**

வினா எண் *37927*--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை?

(ஆ) இவற்றின் மூலம் பெற்ற வங்கிக் கடன் மதிப்பு எவ்வளவு?

(இ) இந்தச் சங்கங்களுக்கு வங்கிக்கடன் கிடைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

**விடை--**

**மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 241 (கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டுக்குட்பட்டவை).

(ஆ) நடப்பு ஆண்டில் இதுகாறும் மேலே குறிப்பிட்ட சங்கங்களின் மூலம் வழங்கப்பட்ட கடனளவு ரூ. 5,060.87 இலட்சமாகும்.

(இ) இப்பகுதியிலுள்ள விவசாயிகளுக்குத் தேவையான பயிர் சாகுபடிக்கான குறுகிய கால வேளாண்மைக் கடன்கள் மற்றும் வேளாண்மை சார்ந்த துணைத் தொடர்புகளுக்கான மத்திய கால வேளாண்மைக் கடன்கள் ஆகியவற்றை இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள், உழவர் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், பெரும்பால நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் நாபார்டின் மறு நிதி வசதி பெற்று வழங்கி வருகின்றன. விவசாயிகளின் நீண்டகாலக் கடன் தேவைகள் நிலவள வங்கிகள் மூலம் மாநில நிலவள கடனீட்டுப் பத்திரங்கள் வெளியிடுவதின் மூலம் நிதியாதாரங்களைப் பெற்றுக் கடன்கள் வழங்கி வருகின்றன. நகர வங்கிகள் நடுத்தர மக்களின் நகைக்கடன் போன்ற நுகர்வு கடன் தேவைகளை வைப்புகள் திரட்டல் மூலம் நிதி வசதி பெற்று கடன்கள் வழங்கி வருகின்றன. மத்திய கூட்டுறவு வங்கி மாவட்டத்தில் உள்ள நாணயக் கூட்டுறவுச் சங்கங்களின் கடன் தேவைகளை நிறைவு செய்ய காசுக் கடன் வசதி அளித்து வருகிறது.

**73--**

## அதம்பை ஆதிதிராவிடர்களுக்கு மயானத்திற்கு தகரக் கொட்டகை அமைத்தல்

வினா எண் 1970--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை (வடக்கு) ஆதி திராவிடர்களின் மயானத்திற்குத் தகரக் கொட்டகை அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை வடக்கு ஆதி திராவிடர்களின் மயானத்திற்குத் தகரக் கொட்டகை அமைக்க ரூ. 15,000--(ரூபாய் பதினைந்தாயிரம்) மதிப்பீட்டில் 1994-95-ஆம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் முன்னுரிமை கொடுத்து செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**74--**

**ஊராட்சிகளுக்கு அலுவலகக் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் 5989--**திரு. எம். ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா---

(அ) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அண்ணா மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளில் எத்தனை ஊராட்சிகளுக்கான அலுவலகக் கட்டிடம் கட்ட திட்டமிடப்பட்டன?

(ஆ) அவற்றின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

(இ) அவை அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டு ஊராட்சி அலுவலகம் அவற்றில் இயங்குகின்றனவா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ): திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1989-90-ஆம் ஆண்டில் கட்டிடம் ஒன்றிற்கு ரூ. 63,600 மதிப்பீட்டில் 29 ஊராட்சி அலுவலகக் கட்டிடங்களும் 1990-91-ஆம் ஆண்டில் ஒவ்வொன்றும் ரூ. 65,000

மதிப்பீட்டில் 75 அலுவலகக் கட்டிடங்களும் கட்டப்பட்டுள்ளன. 1991-92-ஆம் ஆண்டில் கட்டிடம் ஏதும் கட்டப்படவில்லை. இவைகளின் 103 அலுவலகக் கட்டிடங்களில் ஊராட்சி அலுவலகங்கள் இயங்கவில்லை.

**75--**

### தொத்துப்புளிக்காட்டில் சமுதாயக்களம் அமைத்தல்

வினா எண் 7041--திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் தொத்துப்புளிக்காட்டில் சமுதாயக்களம் ஒன்று அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

பேராவூரணி ஊராட்சி ஒன்றியத்தில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் ஆண்டிற்கு ஒரு சமுதாயக்களம் வீதம் அனுமதிக்கப்பட்டு 1993-94-ம் ஆண்டு செங்கமங்கலம் ஊராட்சியில் ஒரு களம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் நிதி ஆண்டுகளில் நிதி நிலைமைக்கு ஏற்ப தொத்துப்புளிக்காட்டில் சமுதாயக்களம் கட்டப்படும்.

**76--**

### கண்ணங்குடி ஒன்றியத்தில் சாலைகள் அமைத்தல்

வினா எண் 8303--திரு. மா. சா. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் கண்ணங்குடி ஒன்றியம் தாலையூர் சிறுவாச்சி சாலையில் இருந்து வெங்களூர் சாலையை இணைக்கும் சாலை, முடிவடையாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அந்தச் சாலைகளை இணைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

*(அ) கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள நெட்டேந்தல் சாலையின் நீளம் 4 கி.மீ. ஆகும். இதில் 3 கீ.மீ. நீளத்திற்கு 1988-ஆம் ஆண்டு நெடுஞ்சாலைத் துறையினரால் மெட்டல் பரத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 1 கி.மீ. நீளம் மண்சாலை ஆகும்.*

*(ஆ) அந்த ஒரு கி.மீ. சாலை கடந்த ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 16 ஆயிரம் (பதினாராயிரம் ரூபாய்) மதிப்பீட்டில் பராமரிப்பதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் 1994-95-ஆம் நிதியாண்டில் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் இப்பகுதியை மெட்டல் சாலையாக மாற்ற ரூபாய் 1.5 லட்சத்திற்கு திட்டம் தயாரிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.*

**77--**

**செந்தாரப்பட்டியிலிருந்து நரிப்பாடி வரை பாதை அமைத்தல்**

வினா எண் 11556--**திரு. கே. கந்தசாமி :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சேலம் மாவட்டம், செந்தாரப்பட்டியிலிருந்து நரிப்பாடி வரை பாதை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், செந்தாரப்பட்டியிலிருந்து நரிப்பாடிவரை உள்ள சாலையில் நெடுஞ்சாலை ஊரக பணித்துறையின் பராமரிப்பில் உள்ள இதர மாவட்ட சாலையைத் தவிர்த்து, மீதமுள்ள 8.40 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி சாலையை செம்மைப்படுத்தும் பணி மலைவாழ் மக்கள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 1995-96-இல் எடுத்துக் கொள்ளலாம் என்ற செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

**78--**

## குடவாசல் ஒன்றிய சாலையை செப்பனிடல்

வினா எண் *21613*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், மணப்பறவை கிராமத்திலிருந்து மேலபாலையூர் கிராமம் வரை செல்லும் சாலையை செப்பனிட்டு தார்ச் சாலையாக மாற்றி அமைத்துத்தர (ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ்) அரசு ஆவன செய்யுமா?

**விடை**---

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், குடவாசல் ஒன்றியம் மணப்பறவை மேல பாலையூர் சாலையினை கிராம சாலைத் திட்டத்தின் கீழ் (ஆர்.ஆர்.) செப்பனிடும் வேலை நடைபெற்று வருகிறது.

**79--**

## நாட்டாற்றில் கான்கிரீட் நடைபாலம் அமைத்தல்

வினா எண் *21857*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், கம்பூர் கிராமத்திற்கும் அய்யனார்குடி கிராமத்திற்கும் இடையில் உள்ள நாட்டாற்றில் ஜே.வி.வி.டி. திட்டத்தின் கீழ் கான்கிரீட் நடைபாலம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை**---

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3]*

குடவாசல் ஒன்றியம், கம்பூர் கிராமத்திற்கும் அய்யனார்குடி கிராமத்திற்கும் இடையே நாட்டாற்றில் கான்கிரிட் பாலம் அமைக்க உத்தேசமாக ரூபாய் 4 இலட்சம் செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வேலையை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் செய்ய நிதி ஒதுக்கீடு இல்லை.

**80--**

**விவேகானந்தா தொடக்கப்பள்ளி சத்துணவுக் கூடத்திற்கு கட்டிடம் கட்டுதல்**

வினா எண் 22899--திரு. எஸ். **ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி குடவாசல் ஒன்றியம், மானந்தக்குடி அய்யன்பேட்டையில் உள்ள விவேகானந்தா தொடக்கப்பள்ளி, சத்துணவுக் கூடத்திற்கு ஜே.வி.வி.டி. மூலம் நிரந்தரக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

குடவாசல் ஒன்றியம், மானந்தக்குடி அய்யம்பேட்டையில் உள்ள விவேகானந்தா தொடக்கப்பள்ளி உதவிபெறும் தனியார் பள்ளி ஆகும். ஜவஹர் வேலை திட்ட விதிமுறைகளின்படி உதவி பெறும் தனியார் பள்ளிகளுக்கு எவ்வித கட்டிடமும் கட்டித்தர வழிவகை இல்லை. எனவே குறிப்பிடப்பட்ட சத்துணவுக் கட்டிடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்க இயலாது.

**81--**

**கான்கிரீட் வண்டிப்பாலம் அமைத்தல்**

வினா எண் 22907--திரு. **எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், விளாகம் கிராமத்திற்கும், சரபோஜிராஜபுரம் ஊராட்சி நல்லுச்சேரி

கிராமத்தின் இடையே செல்லும் அரசலாற்றின் குறுக்கே ஜே.வி.வி.டி. திட்டத்தின் கீழ் கான்கிரீட் வண்டிப்பாலம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

குடவாசல் ஊராட்சி ஒன்றியம், நல்லுச்சேரி விளாகம், அரசலாற்றில் பாலம் கட்டக் கேட்கப்பட்டுள்ளது. நல்லுச்சேரியிலிருந்து மேற்கே தென்கரையில் 1 கி.மீ. தூரத்தில் வண்டிப்பாலம் உள்ளது. கிழக்கே 1 கி.மீ. தூரத்தில் வடுக்கக்குடியில் பாலம் உள்ளது. எனவே, மேற்குறிப்பிட்ட இடத்தில் கூடுதலாக மற்றுமொரு பாலம் கட்டத் தேவையில்லை.

**82--**

**அரசலாற்றில் வண்டிப்பாலம் அமைத்தல்**

வினா எண் 22912--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகை காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி குடவாசல் ஒன்றியம், கீரங்குடிக்கும் கடலங்குடிக்கும் இடையே அரசலாற்றில் ஜே.வி.வி.டி. திட்டத்தின்கீழ் கான்கிரீட் வண்டிப்பாலம் அமைத்துத்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

கீரங்குடிக்கும் கடலங்குடிக்கும் இடையே அரசலாற்றில் பாலம் அமைக்க உத்தேசமாக ரூ. 14 லட்சம் தேவைப்படும் என்று மாவட்டாட்சியர் தெரிவித்துள்ளார். ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்ட வழிமுறைகளின்படி (Guidelines) அதிகச் செலவினம், அதிகத் தொழில்நுட்பம் நிறைந்த பணிகளை எடுத்துச் செய்ய இயலாதாகையால், இந்தப் பாலம் கட்டும் பணியை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்த இயலாது.

TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**83--**

### திருமலைராஜன் ஆற்றில் வண்டிப்பாலம் அமைத்தல்

வினா எண் *22916*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், பல்லவந்தம் கிராமத்திலிருந்து வெள்ளயதம்பார் கிராமத்திற்குச் செல்ல திருமலைராஜன் ஆற்றில் இடையே ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் "கான்கிரீட் வண்டிப்பாலம்" அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை**.--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

குடவாசல் ஊராட்சி ஒன்றியம், பல்லவந்தம் கிராமத்திலிருந்து வெள்ளையதம்பார் கிராமத்திற்குச் செல்ல, திருமலைராஜன் ஆற்றின் குறுக்கே கான்கிரீட் வண்டிப்பாலம் அமைத்துத்தரும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

**84--**

### சாலையின் இருபுறங்களிலும் மரங்கள் நடுதல்

வினா எண் *27195*--**திரு. என். ஆர். ராஜேந்திரன்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், காட்டுமன்னார் கோயில் தொகுதி, அறந்தாங்கி கிராமத்தில் சாலையின் இரு புறங்களிலும் நிழல்தரும் மரக்கன்றுகள் நட அரசு ஆவன செய்யுமா?

**விடை**.--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

[1995 நவம்பர் 3

ஊரக வளர்ச்சித்துறையால் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சமூகக்காடுகள் அமைப்பது செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் வழிகாட்டி முறைகளின் (Guidelines) படி சாலை ஓரமாக மரங்கள் நட்டுப் பராமரிக்க வழிவகை செய்யப்படவில்லை.

**85--**

### குடவாசல் ஒன்றியத்தில் கப்பிச்சாலைகள் அமைத்தல்

வினா எண் *37201*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், ஆலந்தூர் ஊராட்சி பாம்புலியம்மன் கோவில் தெரு மற்றும் ஆதிதிராவிடர் தெரு மக்கள் செல்லும் சாலையை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் கப்பிச்சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்துத் தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**86--**

### ஒத்தையூரில் இலவச தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் *38516*--**திருமதி. கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், வெஞ்சமாங்கூடலூர் கிழக்கு ஊராட்சி, ஒத்தையூரில் ஆதிதிராவிட மக்களுக்காக இலவசத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்துத் தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

87--

**திருச்சுளி ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண். *39091*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காமராஜர் மாவட்டம், திருச்சுளி ஒன்றியம், வடக்கு நத்தம், கே. வளைக்குளம் வேடநத்தம், விடாதகுளம், மொம்மைகோட்டை, காளையார் கரிசல்குளம், கஞ்சம்பட்டி, குள்ளம்பட்டி, நல்லார்குளம், புல்லாநாயக்கன்பட்டி, இராஜகோபாலபுரம் ஆகிய கிராமங்களில் வாழும் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்துத் தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

[1995 நவம்பர் 3

88--

## வெம்பக்கோட்டை ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 39112--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காமராஜர் மாவட்டம், வெம்பக்கோட்டை ஒன்றியம் துணைச்சாமிபுரம் கங்கரசெவல் டி. கரிசல்குளம், முத்தாண்டியாபுரம் பளையடிப்பட்டி ஆகிய ஊர்களில் உள்ள ஆதிதிராவிட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை.--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்துத் தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

89--

## கரூர் வட்டத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 39153--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் வட்டம், மேலப்பாளையம், பசுபதிபாளையம், வெள்ளியணை, நாகப்பள்ளி, க. பரமத்தி, விஸ்வநாதபுரம், தோட்டக்குறிச்சி, புகளூர், வேலாயுதம்பாளையம்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வாங்கல் ஆகிய கிராமங்களில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**90--**

## ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 39172--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:--

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் வட்டம், புலியூர், செல்லாண்டிப்பாளையம், மண்மங்கலம், ஆகிய ஊர்களில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து

செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்துத் தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**91--**

**அரியலூர் வட்டத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *39178*--திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் வட்டம், சென்னிவானம், மேலமாத்தூர், வெளிபிரிங்கியம், அயலாத்தூர், விளாங்குடி ஊர்களில் உள்ள வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்துத் தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**92--**

**அன்னூர் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *39448*--டாக்டர் மு. **சீனியம்மாள்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

அவிநாசி தொகுதி, அன்னூர் ஒன்றியம், காலைக்கவுண்டன்பாளையம், ஊராட்சி நல்லீச்செட்டிப்பாளையத்தில் ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்துத் தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

93--

**காரியாபட்டி ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்.**

வினா எண் *39512*---திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காமராஜர் மாவட்டம், காரியாபட்டி ஒன்றியம், பந்தவேந்தல், கிழவனேரி, கம்பிக்குடி, டி. கம்பங்குளம், எஸ். கல்லுப்பட்டி, காரியாப்பட்டி, வக்காளங்குண்டு, தோப்பூர், பாப்பானம், டி. செட்டிக்குளம் ஆகிய கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**94--**

### தொகுப்பு வீடுகளைச் சீரமைத்தல்

வினா எண் *39811*--**திரு. வே. பெரியசாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா---

(அ) அந்தியூர் தொகுதி, அம்மாப்பேட்டை ஒன்றியம், பட்லூர் ஊராட்சி, மறவன்குட்டை அரிசனக் கால்வாயில் கட்டப்பட்ட பழைய தொகுப்பு வீடுகள் மிக மிக மோசமான நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், *1994-95*-ல் தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் கட்டிக்கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடமை ஆகிவிடுகிறபடியால் அதைப் பழுதுபார்த்துத்தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளைப் பராமரித்து பழுது பார்த்துத் தருவது என்றால் புதியதாகத் தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் பாதிக்கும். என்வே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

*1995 நவம்பர் 3]*

**95--**

**திருவிடைமருதூர் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *39856*--**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், மஞ்சமல்லி, விட்டலூர், பெரப்படி, கூகூர் மேலையூர், எஸ். புதூர், திருநாகேஸ்வரம் திருவிடைமருதூர், கோவனூர், வண்டுவாஞ்சேரி ஆகிய கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை**----

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்துத் தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**96--**

**சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தில் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *40772*--**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பேராவூரணி தொகுதி சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கோட்டைக்காடு கொரட்டூர், உடையநாடு, மரக்காவலசை, மேட்டுக்கொல்லை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கருப்பட்டிக்காடு, குப்பத்தேவன் மேற்கு விளங்குளம் ஆகிய இடங்களில் வீடற்ற ஆதிதிராவிட மக்களுக்கு புதிய வீடு கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட்ட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்துத் தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**97--**

**வேலூர் தொகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *40800*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், வேலூர் தொகுதி, கார்டானமேடு ராமநாயக்கன்பாளையம், ரத்னகிரி, கங்காபுரம், அரியூர், ஓட்டேரி, நந்தியாவம் வசந்தபுரம், காகிதப்பறை, சத்துவாச்சேரி ஆகிய இடங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3]*

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்துத் தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**98--**

**வட ஆற்காடு--அம்பேத்கார் மாவட்டத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *40817*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், வேலூர் தொகுதி, மூங்கில்பட்டு, தோட்டபாளையம், விபோட்சிபுரம், சைதாப்பேட்டை, களிஞ்சூர் காட்பாடி, சலோம்பேட்டை அடுக்கப்பாறை, கருங்காம்புத்தூர், முள்ளிப்பாளையம், ஆகிய இடங்களில் வாழும் வீடற்ற ஆதி திராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்துக் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

99--

**கெலமங்கலம் ஒன்றியத்தில் வீட்டு மனைப்பட்டா வழங்குதல்**

வினா எண் *35296*--**திரு. கே. முனிவெங்கடப்பன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* தருமபுரி மாவட்டம், கெலமங்கலம் ஒன்றியம், தொட்டதிம்மன அள்ளி ஆதிதிராவிடர் மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* *14-9-1994* அன்று வழங்கப்பட்டு விட்டது.

100--

**சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்துதல்**

வினா எண் *38689*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா :** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் மேலும் குளிர்சாதன பேருந்துகளை இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர்:**

இரண்டு குளிர்சாதனப் பேருந்துகள் விரைவில் வாங்க தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முடிவு செய்துள்ளது.

*1995 நவம்பர் 3]*

# எட்டாம் பட்டியல்

**1--**

**அத்தியாநல்லூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியைச் சீர் செய்தல்**

வினா எண் 6683--**செல்வி கோ. மல்லிகா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள அத்தியாநல்லூர் ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளியைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம் பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், அத்தியாநல்லூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிக் கட்டிடம் பழுதுபார்க்கும் பணி ரூ. 14,600 செலவில் 31-3-1994 அன்று முடிக்கப்பட்டது.

**2--**

**தஞ்சை மாவட்டத்தில் தார்ச் சாலை அமைத்தல்.**

வினா எண் 13265--**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் குளக்குடியிலிருந்து ஆனைகட்டி கொள்ளை வழியாக பெருமகளூர் செல்லும் சாலையை 92-93-ல் பழுது பார்த்துத் தார்ச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேதுபாவாசத்திரம் ஒன்றியம் குளக்குடியிலிருந்து பெருமகளூர் செல்லும் சாலையை நிதிநிலைமை காரணமாக தற்போது தார்ச் சாலையாக மாற்றித்தர இயலாது.

**3--**

**மணப்பாறை வட்டத்தில் தரை மட்டப் பாலங்கள் அமைத்தல்**

வினா எண் *13650*--**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், மருங்காபுரி ஒன்றியத்தில், வேம்பலூர், வண்ணாரப்பட்டி இடையே இரண்டு தரை மட்டப்பாலங்கள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் வினவிய பாலங்கள் கட்டும் பணி முடிக்கப்பட்டு விட்டன.

**4--**

**மயிலாடுதுறை தொகுதியில் தெருவிளக்குகளைப் பழுதுபார்த்தல்**

வினா எண் *16785*--**திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மயிலாடுதுறைத் தொகுதியில் உள்ள ஏனாதி மங்கலத்தில் இருக்கும் பழுதுபட்ட தெருவிளக்குகளைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3]*

*நாகை-காயிதே மில்லத் மாவட்டம், மயிலாடுதுறை தொகுதியில் உள்ள கஸ்கனாம்புத்தூர் ஏனாதி மங்கலம் கிராமத்தில் மொத்தம் நான்கு தெருக்கள் உள்ளன. இந்த நான்கு தெருக்களிலும் 13 தெருவிளக்குகள் உள்ளன. இந்த விளக்குகள் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டு தற்போது நல்ல முறையில் எரிந்து கொண்டிருக்கின்றன.*

**5--**

**அம்பல் ஊராட்சி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை சீர் செய்தல்**

*வினா எண் 21046--***திரு. எஸ். ஆசைமணி** *: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், திருமருகல் ஒன்றியம், அம்பல் ஊராட்சியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்துள்ளதை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை.--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், திருமருகல் ஊராட்சி ஒன்றியம், அம்பல் ஊராட்சியில் பழுதடைந்த மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி பழுதுபார்க்கப்பட்டு இயங்கி வருகிறது.*

**6--**

**அஞ்சாரு வார்த்தலை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை சீர் செய்தல்**

*வினா எண் 21047--***திரு. எஸ். ஆசைமணி***: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*நாகப்பட்டினம்--காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், திருமணஞ்சேரி ஊராட்சி, அஞ்சாரு வார்த்தலை கிராமத்தில் இயங்கி வந்த மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி பழுதடைந்துள்ளதால் அதனை சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குத்தாலம் திருமணஞ்சேரி ஊராட்சி அஞ்சார்வார்த்தலை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 1967–68ல் கட்டப்பட்டது. 50,000 லிட்டர் கொள்ளளவு கொண்டது. அந்த நீர்த்தேக்கத் தொட்டி கோடைகாலங்களில் இயங்காத காரணத்தால் இரண்டு இந்தியா மார்க் 2 பைப்பு மற்றும் கைப்பம்புகள் 4–ம் இயங்கிக் கொண்டிருக்கின்றன. தண்ணீர்த் தட்டுப்பாடு இல்லை.

மேற்குறிப்பிட்ட நீர்த்தேக்கத் தொட்டியினை இயக்கி வைக்க ஜெட் மோட்டார் புதிதாகப் பொருத்த வேண்டும். நீர்த்தேக்கத் தொட்டியின் பைப்புகள் அனைத்தும் ஆற்றைக்கடந்து வருவதால் பைப்பு லைன்கள் புதிதாகச் சீரமைக்க வேண்டியுள்ளது. இதற்கு உத்தேச மதிப்பீடு ரூ. 50,000 செலவினமாகும். இந்த வேலையை வரும் ஆண்டில் ஊரகக் குடிநீர்த்திட்டம், சிறப்பு வேலையில் மேற்கொள்ளப்படும் என நாகை காயிதே மில்லத் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

7--

**மயிலாடுதுறை தாலுகாவில் இந்தியா மார்க்-2 குழாய் அமைத்தல்**

வினா எண் 21331--**திரு. எஸ். ஆசைமணி** : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், மயிலாடுதுறை தாலுகா 90–பொரும்பூர் குளத்துமேட்டுத் தெருவில் இந்தியா மார்க்–2 குழாய் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

குத்தாலம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பொரும்பூர் கிராமத்தில் 400 குடியிருப்புகள் மட்டுமே உள்ளன. இக்கிராமத்தில் தற்போது மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி ஒன்றும் இந்தியா மார்க் 2 மூன்றும்

*1995 நவம்பர் 3]*

இயங்கி வருகின்றன. மேலும் கைப்பம்புகள் 28 உள்ளன. இப்போதுள்ள நீர் ஆதாரங்கள் இருக்கும் 400 குடியிருப்புகளுக்குப் போதுமானதாகும். எனவே மேட்டுத் தெருவிற்கு என்று தனியாக இந்தியா மார்க் 2 பம்பு தேவையில்லை என்று மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**8--**

**தண்டாரம்பட்டு--எடத்தனூர் சாலை செப்பனிடுதல்**

வினா எண் *22544*--**திரு. எம். கே. சுந்தரம்**: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* தண்டாரம்பட்டில் இருந்து எடத்தனூர் செல்லும் தார்ச்சாலையை செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)*: சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்ட தார்ச்சாலையை செப்பனிடும் பணியில் தற்போது ஜல்லி பரத்தல் பணி முடிக்கப்பட்டுள்ளது. தார் பரத்தல் வேலை மற்றும் செப்பனிடும் வேலை ஆகியவை எடுத்துச் செய்யப்பட உள்ளன.

**9-**

**90-பொரும்பூர் குளத்துமேட்டுத் தெருவிற்கு தெருவிளக்கு வசதி**

வினா எண் *23088*--**திரு. எஸ். ஆசைமணி**: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், மயிலாடுதுறை தாலுக்கா, 90-பொரும்பூர் கிராமம் குளத்துமேட்டுத் தெருவிற்கு தெருவிளக்கு வசதி அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குத்தாலம் ஒன்றியம், பொரும்பூர் கிராமம் குளத்து மேட்டுத் தெருவிற்கு தெருவிளக்கு பொருத்துவதற்கு திட்டம் ஏதும் இல்லை. வரும் நிதியாண்டில் குளத்து மேட்டுத் தெருவிற்கு தெருவிளக்கு பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

**10--**

**ஜமீன் ஆத்தூர் காலனியில் தெருவிளக்கு அமைத்தல்**

வினா எண் *23906*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம் ஜமீன் ஆத்தூர் காலனியில் தெருவிளக்கு அமைக்கப்படுமா?

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், அம்மாபட்டி ஊராட்சி ஜமீன் ஆத்தூர் அரிசன காலனியில் 4 புதிய தெருவிளக்குகள் அமைக்கப்பட்டு *11-8-1994* முதல் மின் இணைப்பு வழங்கப்பட்டு எரிகிறது.

**11--**

**செங்கம் தொகுதியில் ஜல்லி சாலை அமைத்தல்**

வினா எண் *24143*--**டாக்டர் பெ. வீரபாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) செங்கம் தொகுதி ரெட்டாலை முதல் செ. நாச்சிப்பட்டு கிராமத்திற்கு ஜல்லிசாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*1995 நவம்பர் 3]*

*(ஆ) ஆம் எனில் நடப்பு நிதியாண்டில் மேற்படி சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ): சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்ட ஜல்லிச்சாலை அமைக்கும் திட்டம் நடப்பு நிதியாண்டில் செயலாற்ற நடவடிக்கையில் உள்ளது.*

**12--**

**ஆலங்குடி தொகுதியில் சாலைகளைப் புதுப்பித்தல்**

*வினா எண் 25251--திரு.* **எஸ். சண்முகநாதன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*ஆலங்குடி தொகுதி பொன்னன் விடுதி, கணக்கன்காடு விணைக்கன்காடு, முள்ளாங்குறிச்சி பஞ்சாயத்துகளில் உள்ள கிராமச் சாலைகளைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்ட சாலை புதுப்பிக்கும் வேலை 1993-94ஆம் ஆண்டு வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் எடுத்துச் செய்து முடிக்கப்பட்டுள்ளது.*

**13--**

**புதுக்கோட்டை தொகுதியில் சாலையைப் பழுதுபார்த்தல்**

*வினா எண் 25392--***திரு. சி. சுவாமிநாதன் :** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*புதுக்கோட்டை தொகுதி, கொத்தகப்பட்டி முதல் பட்டுக்கோட்டை வரை உள்ள சாலையைப் பழுது பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சாலை பழுதுபார்க்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது.

**14--**

**ஆலங்குடி தொகுதியில் சாலைகளை மராமத்து செய்தல்**

வினா எண் 25396--திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடி ஒன்றியம், பெரியவாடியிலிருந்து வடகாடு செல்லும் சாலை, ஒத்தையாண்டிப்பட்டி முதல் பேயாடிப்பட்டிவரை, கறம்பக்குடி முதல் கட்டுவாம்பிறை வரை செல்லும் சாலைகளை உடன் மராமத்து செய்ய எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கறம்பக்குடி ஒன்றியம், ஒத்தையாண்டிப்பட்டியிலிருந்து பேயாடிப்பட்டிவரை செல்லும் சாலை 1993-94-ஆம் ஆண்டு வேலை உறுதியளிப்புத் திட்டத்திலும், கட்டுவாம்பிறை சாலை 1993-94-ஆம் ஆண்டு ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் மெட்டல் சாலையாகவும் எடுக்கப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது. மேலும் பெரியவாடியிலிருந்து வடகாடு செல்லும் சாலை, வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் 1994-95-ஆம் ஆண்டு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**15--**

**புதுக்கோட்டை ஒன்றியத்தில் சாலைகளைப் பழுதுபார்த்தல்**

வினா எண் 25400--திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

புதுக்கோட்டை ஒன்றியம், ஏ. மாத்தூர் மற்றும் பி. மாத்தூர், மூக்கம்பட்டி, செம்பாட்டூர், கணக்கன்பட்டி, கீழவிழாக்குடி, கவினாப்பட்டி, ராஜாவயல் ஆகிய கிராமங்களில் பழுதடைந்துள்ள சாலைகளைப் பழுது பார்க்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*ஏ. மாத்தூர், பி. மாத்தூர், மூக்கம்பட்டி, செம்பாட்டூர், கணக்கன்பட்டி, கீழவிழாக்குடி, கவினாப்பட்டி மற்றும் ராஜாவயல் சாலைகளைப் பழுது பார்க்க வரும் 1994-95-ஆம் ஆண்டு வேலை உறுதியளிப்புத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் இப்பணிக்கு முன்னுரிமை கொடுத்து எடுத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

**16--**

**புதுக்கோட்டை ஒன்றியத்தில் சாலைகளைப் பராமரித்தல்**

*வினா எண் 25407--**திரு. சி. சுவாமிநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

புதுக்கோட்டை ஒன்றியம், சம்பட்டிவிடுதியில் இருந்து வாடிமன்னபட்டி வரை செல்லும் சாலை, நத்தம்பண்ணை கிராமத்திற்குச் செல்லும் சாலை, மங்களத்துப்பட்டியிலிருந்து அண்டக்குளம் வரை, மேலப்பட்டியிலிருந்து முக்கம்பட்டி வரை, கருப்புடையான்பட்டி முதல் நெம்பர் வரை, மீனாட்சி கோயில் முதல் பன்னிரெண்டாம்பட்டி வரை செல்லும் சாலைகள் பழுதடைந்து இருப்பது அரசுக்குத் தெரியுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்ட, சம்மட்டி விடுதி, வாடி மன்னபட்டி சாலை மற்றும் கருப்புடையான்பட்டி, பன்னிரெண்டாம்பட்டி சாலை வேலை செய்ய பரிசீலனையில் உள்ளன. மங்களத்துப்பட்டி சாலை மெட்டல் சாலையாக்க வேலை நடைபெற்று

வருகிறது. மற்றும் நத்தம்பண்ணைசாலை தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மெட்டல் சாலையாக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது.

**17--**

**மரவன்பட்டி-கணக்கன்காடு சாலையைத் தார்ச் சாலையாக்குதல்**

வினா எண் 25416--**திரு. சி. சுவாமிநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஆலங்குடி தொகுதி, மரவன்பட்டியில் இருந்து கணக்கன்காடு செல்லும் மண்சாலையைத் தார்ச் சாலையாக மாற்றிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆலங்குடி தொகுதி, மரவன்பட்டியிலிருந்து கணக்கன்காடு செல்லும் சாலையைத் தார்ச் சாலையாக்க 1994-95-ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டுக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் எடுத்துச் செய்ய பரிசீலிக்கப்படும்.

**18--**

**ஆலங்குடி தொகுதியில் சாலைகள் புதுப்பித்தல்**

வினா எண் 25429--**திரு. சி. சுவாமிநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதியில் இருந்து ஆதி திராவிட தெருவிற்கு மற்றும் ஊமையன் தெருவிற்குச் செல்லும் பாதைகள் பழுதடைந்து இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் புதுப்பிக்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்.

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

(அ) மற்றும் (ஆ) :ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம் வெட்டன்விடுதியிலிருந்து ஆதிதிராவிடர் தெருவிற்கும் மற்றும் ஊமையன் தெருவிற்கும் செல்லும் பாதைகளைப் பழுது பார்க்கும் வேலை நடப்பு ஆண்டில் வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**19--**

**கல்லுகாரன்பட்டி சாலையைப் புதுப்பித்தல்**

*வினா எண் 25558*--**திரு. சி. சுவாமிநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புதுக்கோட்டை ஒன்றியம், கல்லுகாரன்பட்டியில் உள்ள சாலை பழுதடைந்து இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் பழுது பார்த்து எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்.

**விடை**---

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கல்லுகாரன்பட்டி சாலை சீர் செய்யும் பணி நடப்பு நிதியாண்டில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் செய்ய சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

**20--**

**டி. எம். ஆர். சமுத்திரத்திற்குத் தார்ச்சாலை அமைத்தல்**

*வினா எண் 26023*--**திரு. சி. சுவாமிநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

புதுக்கோட்டை யூனியன், டி. எம். ஆர். சமுத்திரம் கிராமத்திற்குச் செல்லும் மண் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றி அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

டி. எம். ஆர். சமுத்திரம் முதல் உப்புப்பட்டி சாலை கடந்த ஆண்டு தன்னிறைவுத் திட்டத்தில் மெட்டல் சாலையாக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள தூரம் நடப்பு ஆண்டில் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது.

**21--**

**கீழ்ச் செட்டியாபட்டி சாலையைப் பழுது பார்த்தல்**

வினா எண் *26033*--திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

புதுக்கோட்டை யூனியன், செட்டியாபட்டி, பொதியகுளம் வழியாக செல்லும் கீழ் செட்டியாபட்டி சாலை பழுதடைந்துள்ளதால் அதனைப் பழுது பார்க்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்ட மண்சாலை சீரமைக்கும் பணி வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு ரூ. *20,000* மதிப்பீட்டில் செய்யப்படுகிறது.

**22--**

**தஞ்சாவூர் மாவட்ட தொடக்கப்பள்ளிகளுக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *26116*--திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஒன்றியம், ஆற்காடு, தொண்டராயன்பட்டி, புதுக்குடி, வெண்டயம்பட்டி, இந்தலூர்

*1995 நவம்பர் 3]*

சோழகம்பட்டி, காங்கேயம்பட்டி, கடம்பக்குடி, ஆச்சாம்பட்டி, பாலையப்பட்டி, வடக்கு மனையேறிப்பட்டி, தோகூர், விஷ்ணம் பேட்டை, சாத்தூர், பவனமங்கலம் ஆகிய கிராமங்களிலுள்ள தொடக்கப்பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஊராட்சி ஒன்றியம், ஆற்காடு வெண்டயம்பட்டி, காங்கேயம்பட்டி, கடம்பகுடி மற்றும் சாத்தூர் ஆகிய இடங்களில் உள்ள பள்ளிகள் சொந்தக் கட்டிடத்தில் இயங்கி வருகின்றன. கூடுதல் கட்டிடம் கட்டப்பெறவில்லை.

புதுக்குடி, சோழகம்பட்டி, மனையேறிப்பட்டி, விஷ்ணம்பேட்டை ஆகிய இடங்களில் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி கிடையாது.

பாலையப்பட்டி (வடக்கு) ஆகிய இடத்தில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் பள்ளிக் கட்டிடம் கட்டப்பட்டு அதில் பள்ளி செயல்பட்டு வருகிறது.

தொண்டராயன்பட்டி, தோகூர் ஆகிய இடங்களில் பள்ளிக் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

ஆச்சாம்பட்டி, இந்தலூர் மற்றும் பவனமங்கலம் ஆகிய இடங்களில் கூடுதல் பள்ளிக் கட்டிடம் 1995-96-ம் திட்டத்தில் சேர்க்கப்படும்.

**23--**

**தொண்டைமான் சாலையை பழுது பார்த்தல்.**

வினா எண் 26412--**திரு. சி. சுவாமிநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா---

புதுக்கோட்டை யூனியன் வளவன்பட்டியில் பழுதடைந்து இருக்கும் தொண்டைமான் சாலையைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வளவம்பட்டி சாலையை வருகின்ற நிதியாண்டில் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் முன்னுரிமை கொடுத்து எடுத்துச் செய்ய நடவடிக்கை எடடுக்கப்பட்டுள்ளது.

**24--**

**கொடுமுடியில் மெர்க்குரி விளக்கு அமைத்தல்**

வினா எண் *26633*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:--

கொடுமுடியில் தொலைபேசி இணைப்பகத்திற்கும் தீயணைப்பு நிலையத்திற்கும் பயன்படும் வகையில் மெர்க்குரி விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கொடுமுடி--கரூர் பைபாஸ் ரோட்டில் அமைந்துள்ள தொலைபேசி இணைப்பகத்திற்கும், தீயணைப்பு நிலையத்திற்கும் எதிரில் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள 1 X 40 வாட்ஸ் மின் குழல் விளக்கு போதுமானது என்பதால் மெர்க்குரி விளக்கு அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**25--**

**வலையமாதேவி குடிநீர் தேக்கத் தொட்டியை பழுது பார்த்தல்**

வினா எண் *26923*--**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், வலைய மாதேவியில் குடிநீர் தேக்கத்தொட்டி சுமார் 6 மாதமாகப் பழுதடைந்துள்ளதைப் பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்.**

(அ) மற்றும் (ஆ): புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம் வளையமாதேவியில் குடிநீர் தொட்டியுடன் இணைக்கப்பட்ட மின் மோட்டார் பழுது பார்க்கப்பட்டு தற்பொழுது குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**26--**

**ஜவ்வாது மலையில் தொகுப்பு விடுகளைப் பழுது பார்த்தல்**

வினா எண் 27747--திரு. **ஏ. கே. சி. சுந்தரவேல்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:-

திருப்பத்தூர் தொகுதி ஜவ்வாது மலையில் மலைவாழ் மக்களுக்கு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளைப் பழுது பார்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடமை ஆகிவிடுகிறபடியால் அதைப் பழுது பார்த்துத் தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளை மராமத்து பழுது பார்த்து தருவது என்றால் புதியதாக தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் பாதிக்கும். எனவே இப்பொருள் குறித்து தனியாக திட்டம் எதுவுமில்லை.

**27--**

**அண்டக்குளம்--மங்களத்துப்பட்டிக்கு கப்பி சாலை அமைத்தல்**

வினா எண் 28965--திரு. **சி. சுவாமிநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

[1995 நவம்பர் 3

அண்டக்குளம்--மங்களத்துப்பட்டிவரை செல்லும் மண்சாலையை கப்பி சாலையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அண்டக்குளம்--மங்களத்துப்பட்டிவரை செல்லும் சாலையை மெட்டல் சாலையாக்கும் பணி ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

**28--**

**குச்சிப்பாளையம் கிராமத்தில் குடிநீர் குழாய்கள் அமைத்தல்**

வினா எண் *33190*--**திரு. எஸ். ஆசைமணி** : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்--காயிதே மில்லத் மாவட்டம்---குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம்--கண்டிராமாணிக்கம் ஊராட்சி, குச்சிப்பாளையம் கிராமத்திற்கு இந்தியா மார்க்-2 குடிநீர் குழாய்கள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குடவாசல் ஒன்றியம், குச்சிப்பாளையம் கிராமத்திற்கு இந்தியா மார்க் 2 குடிநீர் குழாய்கள் அமைத்துத்தர 1994-95 ஆம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு இல்லாததால், அடுத்து வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட உள்ளது.

*1995 நவம்பர் 3]*

**29--**

**குத்தாலம் தொகுதியில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்கு மின் இணைப்பு வழங்குதல்**

வினா எண் *33195*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நாகப்பட்டினம்--காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மருதவாஞ்சேரி கிராமம், மேலேரித் தெருவிற்கு குடிநீர் விநியோகம் செய்யும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மின் இணைப்பின்றி இயங்காமலிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைச் சீர்செய்து தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): நாகப்பட்டினம்--காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மருதவாஞ்சேரி கிராமம் மேலேரித் தெருவிற்கு குடிநீர் விநியோகம் செய்யும் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டு நல்ல முறையில் தற்சமயம் இயங்கி வருகிறது.

**30--**

**கீழ்அனுவம்பட்டில் பஞ்சாயத்துக் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *33583*--**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், கீழ்அனுவம்பட்டு கிராமத்தில் பஞ்சாயத்துக் கட்டிடம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)*: தென்னாற்காடு மாவட்டம், பரங்கிப் பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் கீழ்அனுவம்பட்டு ஊராட்சி அலுவலகக் கட்டிடம் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வருகிறது.

**31--**

**சாத்தரைக்குறிச்சி ஆரம்பப் பள்ளியைச் சீர் செய்தல்**

வினா எண் *33816*--**திரு. சி. சுவாமிநாதன்** : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* புதுக்கோட்டை மாவட்டம், குன்னாண்டார் கோயில் ஒன்றியம், சாத்தரைக்குறிச்சியில் ஆரம்பப்பள்ளிகூடம் பழுதடைந்து இருப்பது அரசுக்குத் தெரியுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது சரி செய்யப்படும்?

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)*: புதுக்கோட்டை மாவட்டம், குன்னாண்டார் கோயில் ஊராட்சி ஒன்றியத்தில் வத்தனாக்குறிச்சி என்ற கிராமத்தின் பெயர் சாத்தரைக்குறிச்சி என்று தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. வத்தனாக்குறிச்சி கிராமத்தில் உள்ள ஆரம்பப் பள்ளிக் கட்டிடத்தில் உள்ள பழுதுகள் *1993-94* ஆண்டு கல்வி நிதியில் இருந்து ரூ.*5,000* மதிப்பீட்டில் சீர் செய்யப்பட்டன.

**32--**

**கிராமிய சாலைத் திட்டத்தில் சாலைகள் செப்பனிடுதல்**

வினா எண் *33844*--**திரு. சி. சுவாமிநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

*(அ)* புதுக்கோட்டை மாவட்டம், குன்னாண்டார் கோயில் ஒன்றியம், வீரக்குடி ஊராட்சியில் பூதலூர் சாலை--திருப்பூர் சாலையை கிராமியச் சாலை திட்டத்தில் எடுத்து செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை**--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)*: வினாவில் குறிப்பிட்டுள்ள சாலை 4 கி.மீ. நீளமுள்ளது. இதனை தார்ச்சாலையாக மாற்ற கிராமச் சாலைகள் திட்டத்தில் பரிசீலிக்கப்படுகிறது.

**33--**

### தெம்மாண்டாபட்டி--செம்பட்டி சாலையைச் செப்பனிடுதல்

வினா எண் 33849--**திரு. சி. சுவாமிநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* புதுக்கோட்டை மாவட்டம், குன்னாண்டார் கோயில் ஒன்றியம், அண்டகுளம் ஊராட்சியில் தெம்மாண்டாபட்டி---செம்பட்டி சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது செய்யப்படும்?

**விடை**---

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)*: வினாவில் குறிப்பிட்டுள்ள தெம்மாண்டாபட்டி--செம்பட்டி சாலை கிராவல் பரப்பிய ஊராட்சி சாலையாகும். இதன் மொத்த தூரம் 1 கி.மீ. இச்சாலையைத் தார்ச் சாலையாக்க ரூ. 2 லட்சம் செலவாகும். இப்பணி கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் செய்ய பரிசீலிக்கப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1995 நவம்பர் 3

34--

## கறம்பக்குடி ஒன்றியத்தில் தார்ச்சாலை அமைத்தல்

வினா எண் 33850--**திரு. சி. சுவாமிநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஒன்றியம், கருக்காக்குறிச்சி கீழ்த்தெருவில் இருந்து ஈச்சன் விடுதி வரை உள்ள சாலையை தார்ச் சாலையாக மாற்றித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வினாவில் குறிப்பிட்டுள்ள கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், கருக்காக்குறிச்சி கீழ்த்தெருவிலிருந்து ஈச்சன் விடுதி வரை 2 கி.மீ. சாலை வேலை 1993-94ஆம் ஆண்டு வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் எடுக்கப்பட்டு வேலை முடிக்கப்பட்டு விட்டது. இதனை தார்ச் சாலையாக மாற்றும் திட்டம் ஏதும் இல்லை.

35--

## உப்பிலியாபுரம் தொகுதியில் தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 34441--திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, மாராடி ஆதிதிராவிடர் குடியிருப்புகள் பச்சமலை, நச்சிலிப்பட்டி மற்றும் காஞ்சேரிப் பட்டி ஆகிய இடங்களில் தெருவிளக்குகள் அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைத்துத் தரப்படும்.?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

***மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

*(அ) மற்றும் (ஆ): உப்பிலியாபுரம் தொகுதி, உப்பிலியாபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மாராடி ஆதிதிராவிடர் குடியிருப்புகள் பச்சை மலை, நச்சிலிப்பிட்டி மற்றும் காஞ்சேரி ஆகிய இடங்களில் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு நல்ல முறையில் எரிந்து வருகிறது.*

**36--**

**பாகநத்தம் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

*வினா எண் 35259--***திருமதி கே. மரியம் உல் ஆசியா:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*அரவக்குறிச்சி தொகுதி, தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், பாகநத்தம் கிராமத்தில் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை--**

***மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

*அரவக்குறிச்சி தொகுதி, தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், பாகநத்தம் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு 1993-94ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 1,52,000 மதிப்பீட்டில் ஒரு கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு உள்ளது.*

**37--**

**மன்னார்குடி தொகுதியில் குடிநீர் வசதி**

*வினா எண் 35915--***திரு. கு. சீனிவாசன்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

[1995 நவம்பர் 3

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி, தொகுதி, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம் சித்திரையூர் மற்றும் ஆதிவிடங்கம் ஆகிய கிராமங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இதுவரை செயல்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) அவை செயல்பட அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சித்திரையூர் மற்றும் சித்திரையூர் கோட்டக மேல்நிலைத் தேக்கத் தொட்டிகள் நன்கு இயங்கி வருகின்றன. ஆதிவிடங்கலில் கட்டப்பட்ட மேல்நிலைத் தேக்கத் தொட்டிக்கு மின் இணைப்பு அளிக்கப்படாததால் விரைவில் மின் இணைப்புப் பெற்று மன்னார்குடி ஒன்றியத்திற்கு ஒப்படைக்க குடிநீர் வடிகால் வாரிய செயற் பொறியாளருக்கு எழுதப்பட்டுள்ளது.

**38--**

### செங்கம் ஊராட்சிப் பள்ளிகளைச் சீர் செய்தல்

வினா எண் *36054*--**டாக்டர் பெ. வீரபாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) செங்கம் தொகுதியில் உள்ள பெரும்பாலான ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிக் கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், வரும் நிதியாண்டில் பள்ளிக் கட்டிடங்களைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): செங்கம் தொகுதியில் உள்ள பழுதடைந்த ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிக் கட்டிடங்களை நிதி வசதிக்கு ஏற்ப சீர் செய்யும் நடவடிக்கை எடுக்கப்படும்.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1995 நவம்பர் 3]

**39--**

**வேலூர் பேருந்து நிலையத்தில் சைக்கிள்களுக்கு கட்டணம் வசூல் செய்தல்**

வினா எண் 36477--**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வேலூர் பேருந்து நிலையத்தில் சைக்கிள்களுக்கு நகராட்சி கட்டணம் வசூல் செய்வதை அனுமதிப்பது ரத்து செய்யப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் நகராட்சி பேருந்து நிலையத்தில் பயணிகள் வசதியை முன்னிட்டு சைக்கிள் நிலையம் பராமரிக்கப்பட்டு வருகிறது. தினசரி சராசரியாக 400 பயணிகள் அவர்களுடைய வாகனங்களை சைக்கிள் நிலையத்தில் விட்டுச் செல்கின்றனர். மேலும், இந்நிலையம் பராமரிக்கப்படுவதால் மாதம் ரூ. 5,700 கட்டணமாக நகராட்சிக்கு வருமானம் கிடைக்கிறது. பொது மக்கள் வசதிக்காக இந்த சைக்கிள் நிலையம் செயல்படுவதால் கட்டண வசூலை ரத்து செய்வது உகந்ததல்ல.

**40--**

**வேலூர் நகராட்சியில் கடைகள் குத்தகைக்கு விடுதல்**

வினா எண் 36925--**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வேலூர் நகராட்சி உலக வங்கி கடன் பெற்று கட்டிய கடைகள் குத்தகைக்கு விடப்படாமல் எத்தனை உள்ளன?

(ஆ) அதனால் நகராட்சிக்கு இழப்பு ஆண்டுதோறும் எவ்வளவு?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) உலக வங்கி கடன் பெற்று கட்டிய கடைகளில் இது வரையில் 60 கடைகள் பலமுறை ஏலம் விட்டும் ஏலம் கோர யாரும் முன் வராத காரணத்தால் குத்தகைக்கு விடப்படாமல் உள்ளது.

(ஆ) பலமுறை செய்தித் தாள்கள் மூலமாகவும், டாம் போட்டு பொது மக்களுக்கு விரிவான விளம்பரம் செய்தும் அரசு நிறுவனங்களில் தேவையைக் கோரி கடிதங்கள் அனுப்பியும் இதுவரையில் ஏலம் கேட்டு யாரும் முன் வரவில்லை. ஆனால் விரைவில் கடைகள் பொது ஏலம் விட்டு நிதி இழப்பைத் தவிர்க்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடைகள் ஏலம் கோரும் வரை நகராட்சிக்கு நிதி இழப்பு என்று கருத இயலாது.

**41--**

### அந்தியூர் தொகுதியில் தெரு விளக்கு வசதி

வினா எண் 37041--**திரு. வே. பெரியசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:--

(அ) அந்தியூர் தொகுதி, சங்கராபாளையம் கிராமம், அருந்ததியர் குடியிருப்பில் தெரு விளக்கு வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், 1994-95ல் அதை அமைக்க ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அந்தியூர் ஊராட்சி ஒன்றியம், சங்கராபாளையம் ஊராட்சி, அருந்ததியர் குடியிருப்பு பாரதிநகர் என்ற பெயரில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட குடியிருப்பாகும். இக்குடியிருப்பில் சுமார் 40 குடும்பங்கள் உள்ளன. ஏற்கெனவே நான்கு தெரு விளக்குகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் 6 தெருவிளக்குகள் கூடுதலாக அமைத்துக் கொடுக்க தேவையான மும்மொழிவுகளை உதவி கோட்டப் பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரியம், அண்ணாமடுவுக்கு அந்தியூர் ஊராட்சி ஒன்றிய ஆணையரால் அனுப்பப்பட்டுள்ளது.

*1995 நவம்பர் 3]*

**42--**

**பருத்தியூர் துவக்கப்பள்ளியை சீர் செய்தல்**

வினா எண் 37178-**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:--

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் குடவாசல் ஒன்றியம் பருத்தியூர் துவக்கப்பள்ளியைச் சீர் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், குடவாசல் ஊராட்சி ஒன்றியம், பருத்தியூர் துவக்கப்பள்ளி சீர் செய்யும் பணி அரசினால் மேற்கொள்ளப்பட்டு தற்போது முடியும் நிலையில் உள்ளது.

**43--**

**தெற்குத்தெரு கிராமத்தில் ஆழ்குழாய்கிணறு அமைத்தல்**

வினா எண் 37180--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம் குடவாசல் ஒன்றியம், 39. நெம்மேலி ஊராட்சி, தெற்குத் தெரு கிராமத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குடவாசல் ஒன்றியம், 39 நெம்மேலி ஊராட்சி, தெற்குத் தெரு கிராமத்தில் 30 வீடுகள் உள்ளன. இப் பகுதியில் ஒரு இந்தியா மார்க் 2 பம்பு நிறுவப்பட்டு நல்ல குடிநீர் வசதியுள்ளது. தற்போது ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அவசியம் இல்லை.

44--

### கருகம்பத்தூர் கிராமத்தில் குடிநீர்க்குழாய் இணைப்புகள் வழங்குதல்

வினா எண் 37260--**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வேலூர் தொகுதியில் கரகம்பத்தூர் கிராமத்தில் வீடுகளுக்கு குடிநீர்க் குழாய் இணைப்புக்கோரி பலர் மனு செய்து நெடுநாட்களாகியும், வேலூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர் அனுமதி வழங்காததை அரசு அறியுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கிராமக் குடிநீர் திட்டத்தின்கீழ் இல்லங்களுக்கு குடிநீர் வழங்குவதன்மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கிய நலிவடைந்த மக்களுக்குத் தேவையான குடிநீர் வழங்க இயலாத நிலை ஏற்பட்டுவிடும் என்றும், எனவே தனியார் இல்லங்களுக்கு மேற்படி குடிநீர் திட்டத்தின்கீழ் குழாய் இணைப்புக் கொடுப்பது தவிர்க்கப்படவேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளது. எனவே கிராமங்களில் வீடுகளுக்குக் குழாய் இணைப்பு வழங்க இயலாது.

45--

### புருவன்தண்டாவில் ஆழ்குழாய்கிணறு அமைத்தல்

வினா எண் 37644--**திரு. வே. பெரியசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அந்தியூர் தொகுதி, அம்மாப்பேட்டை ஒன்றியம், கொமராயனூர் ஊராட்சி, புருவன்தண்டா ஊரில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து குடிநீர் பிரச்சினையைப் போக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3]*

அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கொமராயனூர் ஊராட்சி, புருவன்தண்டா குடியிருப்பில் குடிநீர்ப் பிரச்சனையை தீர்க்க, ஏற்கனவே ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டுள்ளதுடன் இக்குடியிருப்பிற்கு போதிய குடிநீர் வசதியும் உள்ளது. எனவே, கொமராயனூர் ஊராட்சி, புருவன்தண்டா குடியிருப்புக்கு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க வேண்டிய அவசியமில்லை.

**46--**

**கேளூர் ஆரம்பப்பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *38049*--**திரு. தா. வேடியப்பன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* போளூர் ஒன்றியம், கேளூர் ஆரம்பப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டித்தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ):* திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், போளூர் ஊராட்சி ஒன்றியம், கேளூர் ஆரம்பப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் ரூ.*1.30* இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு உள்ளது.

**47--**

கடம்பகுளத்தை மண்மராமத்து செய்தல்

வினா எண் *38227*--**திரு. சி. சுவாமிநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார் கோவில் ஒன்றியம், திருப்பூரிலுள்ள கடம்ப குளத்தை மண்மராமத்து செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்.?

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கடம்பகுளம் 81.50 ஏக்கர் ஆயக்கட்டைக் கொண்டது. இது ஊராட்சி ஒன்றியப் பராமரிப்பில் உள்ளது. இக்குளத்தை மண்மராமத்து செய்ய திட்டம் ஏதும் தற்சமயம் இல்லை. எனினும் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டப் பணிகளில் இக்குளத்தைச் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

48--

**அரவக்குறிச்சி தொகுதியில் சாலையைச் செப்பனிடுதல்**

வினா எண் *38335*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரவக்குறிச்சி தொகுதி, க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், தொக்குபட்டிபுதூர் பேருந்து நிறுத்தத்திலிருந்து வாங்கல்துறை வரையில் ஒரு கிலோ மீட்டர் சாலையைச் செப்பனிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையை *1994-95*ஆம் ஆண்டில் ஊராட்சி நிதியிலிருந்து செப்பனிட்டுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

49--

**மானூர் ஒன்றியத்தில் ஆழ்குழாய்கிணறு அமைத்தல்**

வினா எண் *38568*--**திரு. எஸ். எஸ் ராமசுப்பு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், மானூர் ஒன்றியம், இத்திகுளம் கிராமத்தில் பள்ளிக்கூடத்திற்கு அருகில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைத்துக்கொடுக்க அரசு முன்வருமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், மானூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த இத்திகுளம் கிராமத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் திட்டம் அமைக்க ரூ.3.23 இலட்சத்திற்கு மதிப்பீடு ஒப்புதல் பெறப்பட்டு தற்பொழுது திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தில் இருந்து பள்ளிக்கூடத்திற்கு அருகில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்படும்.

**50--**

**அரவக்குறிச்சி ஊராட்சியில் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் 38869---**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:--

அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், வேலம்பாடி ஊராட்சி, சௌந்திராபுரம், மேலையாண்டிப்பட்டி, பூலாம்வலசு, நாகம்பள்ளி ஊராட்சி, மலைக்கோவிலூர், க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், வேட்டையார்பாளையம், பவித்திரம் ஊராட்சி, பவித்திரம் ஆகிய கிராமங்களில் உள்ள பள்ளிகளுக்குக் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு இருக்கிறதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், வேலம்பாடி ஊராட்சி, சௌந்திராபுரம் மற்றும் பூலாம்வலசு ஆகிய கிராமங்கள் வேலை வாய்ப்பு உறுதி அளிப்புத்திட்டத்தின் கீழ் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டிட தெரிவு செய்யப்பட்டுள்ளன.

நாகம்பள்ளி ஊராட்சியில் மலைக்கோவிலூர் கிராமத்தில் 1994-95ஆம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

வேலம்பாடி ஊராட்சி, மோலையாண்டிப்பட்டி கிராமத்தில் பள்ளிக் கட்டிடம் போதுமான அளவு உள்ளதால் மேற்படி கிராமத்தில் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டும் திட்டம் ஏதுமில்லை.

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில் பவித்திரம் வேட்டையார் பாளையம் உட்பட அனைத்து கிராமங்களிலும் கூடுதல் பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்பட்டுவிட்டன.

**51--**

**ஓசூரில் சோடியம் வேப்பர் விளக்குகளை சீர்செய்தல்**

வினா எண் 38966--**திரு. கே.ஏ. மனோகரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:--

கர்நாடக மாநில எல்லை முதல் ஓசூர் நகராட்சி எல்லை வரை ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் போடப்பட்ட ஓராண்டு காலமாக எரியாமலிருக்கும் சுமார் 120 சோடியம் வேப்பர் விளக்குகளைச் சீர்செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், ஓசூர் ஊராட்சி ஒன்றியத்தில் மூக்கொண்டப்பள்ளி, சூசுவாடி ஊராட்சிகளில் கர்நாடக மாநில எல்லை முதல் ஓசூர் ஊராட்சி எல்லை வரை உள்ள 120 சோடியம் ஆவி விளக்குகளில் 44 விளக்குகள் மட்டும் பழுதடைந்து எரியாமல் இருந்தது. இவைகளுக்கு உதிரி பாகங்களும் பல்புகளும் ரூ.41,201.00 விலையில் வாங்கப்பட்டு பொருத்தப்பட்டு சோடியம் ஆவி விளக்குகள் எரியும் நிலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

*1995 நவம்பர் 3]*

**52--**

**ஓசூர் வாரச்சந்தைகளின் வருமான விவரம்**

வினா எண் *38967*--**திரு. கே.ஏ. மனோகரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:--

ஓசூர் நகராட்சியில் உள்ள பேருந்து நிலையம் மற்றும் வாரச்சந்தைகளின் கடந்த *92-93*-மற்றும் *93-94* ஆம் ஆண்டு வருமானம் எவ்வளவு?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஓசூர் நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையம் *1992-93*-ஆம் ஆண்டில் ரூ.*2,01,600*-க்கு ஏலம் விடப்பட்டுள்ளது, *1993-94*-ஆம் ஆண்டில் ரூ.*2,07,000*-க்கு ஏலம் விடப்பட்டுள்ளது.

ஓசூர் நகராட்சிக்குச் சொந்தமான வாரச் சந்தை *1992-93*-ஆம் ஆண்டில் ரூ.*2,85,000*-க்கு ஏலம் விடப்பட்டுள்ளது. *1993-94*-ஆம் ஆண்டில் ரூ.*2,85,500*-க்கு ஏலம் விடப்பட்டுள்ளது.

**53--**

**குருவரெட்டியூரில் குடிநீர் வசதி**

வினா எண் *39819*--**திரு.வே. பெரியசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா:--

(அ) அந்தியூர் தொகுதி, அம்மாபேட்டை ஒன்றியம், குருவரெட்டியூர் குடியிருப்புகளுக்குக் குடிநீர் பைப் லைன் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், *1994-95*-ல் பைப் கனெக்ஷன் வீடுகளுக்குக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அந்தியூர்-தொகுதி, அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம், குருவரெட்டியூர் ஊராட்சியில், குருவரெட்டியூர் குடியிருப்பில் 1 லட்சம் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டு, பொதுக் குழாய் இணைப்புகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் மேற்படி தொட்டியிலிருந்து தொப்பப்பாளையம், வெங்கட்டரெட்டியூர் ஆகிய குடியிருப்புகளுக்குப் பொதுக்குழாய் மூலம் குடிநீர் விஸ்தரிப்பு செய்ய வேலை நடைபெற்று வருகிறது. எனவே குருவரெட்டியூர் ஊராட்சியிலுள்ள தனியார் வீடுகளுக்குக் குழாய் இணைப்பு வழங்க வாய்ப்புகள் இல்லை.

54--

**பட்டுக்கோட்டை தொகுதியில் தொகுப்பு விடுகள் கட்டுதல்**

வினா எண் 39918--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பட்டுக்கோட்டை தொகுதி, தம்பிக்கோட்டை வடகாடு பரக்கலகோட்டை தம்பிக்கோட்டை மேல்காடு, திட்டக்குடி, செண்டங்காடு, ஆலடிக்குமுளை, மூரப்பள்ளம், ஆத்திக்கோட்டை கீழக்குறிச்சி ஆகிய கிராமங்களில் உள்ள வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**55--**

**மேலூர் ஆரம்பப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *39956*--**திரு.சி. குழந்தைவேலு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

குளத்தூர் தொகுதி, மேலூர் ஆரம்பப் பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, மேலூர் ஆரம்பப் பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டிடம், 1992-93 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது.*

**56--**

**செம்மாம்பாளையத்தில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்தல்**

வினா எண் *40008*--**டாக்டர் வெ. சரோஜா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சங்ககிரி தொகுதி, எலச்சிப்பாளையம் ஒன்றியம், செம்மாம்பாளையத்தில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*சங்ககிரி தொகுதி, எலச்சிப்பாளையம் ஊராட்சி ஒன்றியம், நல்லிப்பாளையம் ஊராட்சியில் செம்மாம்பாளையம் கிராமத்தில் இரண்டு ஆழ்துளைக் கிணறுகள் நன்கு இயங்குகின்றன. மேலும் புதுப்பாளையம் மேல்நிலைத் தொட்டியிலிருந்து குடிநீர்க் குழாய் மூலம்*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

செம்மாம்பாளையத்திற்கு 22 பொதுக் குழாய்கள் (பி.எப். பைப்) போடப்பட்டு குடிநீர் தாராளமாக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது செம்மாம்பாளையத்தில் குடிநீர்ப் பிரச்சினை ஏதும் இல்லை.

**57--**

## தஞ்சாவூர் மாவட்டத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

*வினா எண் 40126--***திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம், ஒன்றியம் இணைபிரியாவட்டம், கொறநாட்டுக்கருப்பூர், சகாதுநாயக்கன் தோப்பு, சுவாமிமலை, வளையப்பேட்டை, அணக்குடி, தில்லையம்பூர், பழவாத்தாறு கட்டணை, ஏரசிரம், பெருமாண்டி கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**58--**

## ஆண்டிமடம் தொகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

*வினா எண் 40889--***திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி பெலாகுறிச்சி, நல்லாம்பாளையம், வீராக்கன், வல்லம் ஆகிய கிராமங்களில் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை *அமைச்சர்:***

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**59--**

**மாயூரம் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *40895*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், மாயூரம் ஒன்றியம், சேந்தல்குடி, தூரியாதெரு கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை *அமைச்சர்:***

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**60--**

**விருதுநகர் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *40920*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காமராஜர் மாவட்டம், விருதுநகர் ஒன்றியம், அய்யதாயக்கன்பட்டி, ஆபத்தூர், ஆவுடைதிரிபுரம் கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**61--**

**மேலத்திருப்புத்துருத்தி ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *40947*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், மேலத்திருப்புத்துருத்தி ஒன்றியம், மேலத்திருப்பத்துருத்தி கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

*1995 நவம்பர் 3]*

**62--**

**சோழபுரத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 40952--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், சோழபுரம் கிராமத்தில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**63--**

**ஆயிரங்குடியில் தொகுப்பு விடுகள் கட்டுதல்**

வினா எண் 40961--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அறந்தாங்கி தொகுதி, ஆயிரங்குடி ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ்

[1995 நவம்பர் 3

எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

64--

**தொகுப்பு வீடுகள் மதிப்பீட்டுத் தொகையை உயர்த்துதல்**

வினா எண் 40966--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழகத்தில் ஆதிதிராவிடர்களுக்கு கட்டிக் கொடுக்கப்படும் தொகுப்பு வீடுகள் மதிப்பீட்டுத் தொகையை உயர்த்திக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

65--

**வீடுகள் கட்டிக் கொடுக்கும் பொறுப்பை தாட்கோவிடம் ஒப்படைத்தல்**

வினா எண் 40967--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழகத்தில் ஆதிதிராவிடர்களுக்கு தாட்கோ வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் பொறுப்பு மீண்டும் தாட்கோவுக்கு ஒப்படைக்கப்படுமா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**66--**

**வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் கட்டப்பட்ட சிறு பாலங்கள் விவரம்**

வினா எண் *41010*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ) வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் 1993-94-ல் கட்டிய சிறுபாலங்கள் எத்தனை?*

*(ஆ) திருப்பத்தூர் தொகுதியில் கட்டிய சிறுபாலங்கள் எத்தனை?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் 1993-94-ல் இத்துறை மூலம் கட்டப்பட்ட சிறுபாலங்கள் 76.*

*(ஆ) திருப்பத்தூர் தொகுதியில் கட்டிய சிறுபாலங்கள் எண்ணிக்கை--14.*

**67--**

**பேராவூரணி தொகுதியில் பள்ளிகளுக்கு கூடுதல் கட்டிடங்கள்**

வினா எண் *41452*--**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா---

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம், கொரட்டூர், சோழகனார் வயல், தேவ்னவயல், செல்லப்பிள்ளையார் கோவில், விளங்குளம், குப்பத்தேவன்வலசை, கழனிக்கோட்டை, முடச்சிக்காடு, காமராசர்புரம், அடைக்கத்தேவன், செம்பியன்மாதேவிப்பட்டணம், பெரியகத்திக்கோட்டை, பள்ளத்தூர் தொடக்கப் பள்ளிகளுக்குக் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பள்ளத்தூர் தொடக்கப்பள்ளிக்கு *1992-93*-ம் ஆண்டு கூடுதல் பள்ளிக்கட்டிடம் ரூ.*1,38,000* மதிப்பீட்டில் கட்டிக் கொடுக்கப்பட்டு உள்ளது. மேலும் இவ்வூராட்சி ஒன்றியப் பகுதியில் புதிதாகத் துவங்கப்பட்ட பள்ளிகளுக்கு முன்னுரிமை அளித்து கட்டப்படுவதால் கொரட்டூர், சோழகனார்வயல், தேவனவயல், செல்லப்பிள்ளையார் கோவில், விளங்குளம், குப்பத்தேவன்வலசை. கழனிக்கோட்டை, முடச்சிக்காடு, காமராசர்புரம், அடைக்கத்தேவன், செம்பியன்மாதேவிப்பட்டணம், பெரியகத்திக்கோட்டை தொடக்கப் பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு நடப்பு ஆண்டில் திட்டம் ஏதும் இல்லை.

**68--**

**பேராவூரணி ஒன்றியத்தில் மெட்டல் சாலைகள் அமைத்தல்**

வினா எண் *42345*--**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பேராவூரணி ஒன்றியம், துறவிக்காடு-பேராவூரணி மெயின் சாலையில் வளசக்காடு வழியாக விளசேரிக்காடு ஆதிதிராவிடர் தெரு வரை செல்லும் சாலை ஒட்டங்காடு ஊராட்சி பெரிய தெற்குக் காட்டிலிருந்து சிறிய தெற்குக்காடு வரை நெடுஞ்சாலையை அடையும் சாலை மற்றும் சீதாம்பாள்புரம்-இடையாத்தி சாலையில் பூவளூர் தேவர்கள் குடியிருப்பு சுடுகாடு வரையுள்ள *3.00* கி.மீ. ஒன்றியச் சாலை ஆகியவற்றை மெட்டல் சாலைகளாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3]*

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம் சீதாம்பாள்புரம்-இடையாத்தி சாலையில் பூவளூர் தேவர்கள் குடியிருப்பு சுடுகாடு வரையுள்ள சாலையில் 1.6 கி.மீ. தூரத்திற்கு 1993-94 ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மெட்டல் அடிக்கப்பட்டுள்ளது. ஏனைய சாலைப்பணிகள் செய்வதற்கு நிதி வசதி இல்லை.

**69--**

**பேராவூரணி ஒன்றியத்தில் தார்ச் சாலைகள் அமைத்தல்**

*வினா எண் 42362--திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

பேராவூரணி ஒன்றியம், சீதாம்பாள்புரம்-இடையாத்தி சாலையில், இடையாத்தி-கொடிமரம் ஆதிதிராவிடர் தெருவிலிருந்து கோனார்குடி வழியாகவும், தெற்கு ஆதிதிராவிடர் தெரு வழியாகவும், வட்டாத்திக் கோட்டை ஆதிதிராவிடர் தெருவில் உள்ள மெயின் சாலை மேற்கு கோனார் தெரு, நெய்யவிடுதியில் பிரிந்து ஆதிதிராவிடர் தெரு வழியாக சூரியநாராயணபுரம் செல்லும் சாலை, கிழக்கில் ஆதிதிராவிடர் தெருவில் பிரிந்து வேளாப்பட்டி மேற்கு அம்பலக்காரத் தெரு, கிழக்கு கள்ளர் தெரு, கிழக்கு கோனார் தெரு வழியாக சி.எம்.பி. சாலையை இணைக்கும் ஒன்றியச் சாலை ஆகியவற்றை ஆர். ஆர். திட்டத்தில் சேர்த்து தார்ச்சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

***மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

பேராவூரணி ஒன்றியம் சீதாம்பாள்புரம்-இடையாத்தி சாலையில் இடையாத்தி கொடிமரம் ஆதிதிராவிடர் தெருவிலிருந்து கோனார் தெரு வழியாகவும் தெற்கு ஆதிதிராவிடர் தெருவிலுள்ள மெயின் சாலையில் 1 கிலோ மீட்டர் தூரம் மெட்டல் அடிக்கப்பட்டுள்ளது. மேலும் 700 மீட்டர் தூரம் 1994-95 ஆம் ஆண்டு பரவலாக்கப்பட்ட திட்டத்தின் கீழ் எடுத்து செய்யப்பட்டு வருகிறது. ஏனைய சாலைப் பணிகள் அடுத்து வரும் நிதியாண்டுகளில் செய்து தர பரிசீலிக்கப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

**70--**

**சாத்தனூரில் தடுப்புச் சுவர் கட்டுதல்**

வினா எண் 43468--**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு ஊராட்சி ஒன்றியம், சாத்தனூர் கிராமத்தில் தடுப்புச் சுவர் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவையாறு ஊராட்சி ஒன்றியம், சாத்தனூர் கிராமத்தில் தடுப்புச் சுவர் 1993-94-ம் ஆண்டு மாவட்ட பரவலாக்கும் திட்டத்தின் கீழ் செய்து முடிக்கப்பட்டு விட்டது.

**71--**

**ஏரிப்புரக்கரை தொடக்கப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம்.**

வினா எண் 43486--**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிப்புரக்கரை தொடக்கப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1994-95-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

*1995 நவம்பர் 3]*

**72--**

**மானியக்காடு ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடு கட்டுதல்**

வினா எண் 43490--**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பட்டுக்கோட்டை ஒன்றியம், மானியக்காடு ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர வாய்ப்புத்தர 1994-95-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**73--**

**வாழமரக்கோட்டை ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் 43512--**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் வட்டம், வாழமரக்கோட்டை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டிக் கொடுக்க ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**74--**

**தஞ்சாவூர் வட்ட தொடக்கப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *43514*--**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் வட்டம், மாரியம்மன் கோயில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டிக் கொடுக்க ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**75--**

**அண்டம்பள்ளம் தொடக்கப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *43518*--**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995* நவம்பர் *3*]

திருவண்ணாமலை ஒன்றிய, அண்டம்பள்ளம் தொடக்கப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த அண்டம்பள்ளம் கிராமத்தில் கூடுதல் பள்ளிக் கட்டிடம் "பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி திட்டத்தின்" கீழ் ரூ.*1.50* இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ளது.

**76--**

**ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கூடுதல் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல்**

வினா எண் *41568*--திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், ஆலங்குடி அகரத்திருமானம், கீரனூர், கக்கலாஞ்சேரி மற்றும் திருமானம் அரசு தொடக்கப் பள்ளிகளுக்கு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், ஆலங்குடி அகரத்திருமானம், கீரனூர், கக்கலாஞ்சேரி மற்றும் திருமானம் அரசு தொடக்கப் பள்ளிகளுக்குப் போதுமான இடவசதி இருப்பதால் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டித்தரும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

77--

**பட்டுக்கோட்டை ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *43572*--**திரு. ஆர் சிங்காரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பட்டுக்கோட்டை ஒன்றியம், மானியக்காடு தொடக்கப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை**--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

78--

**பாச்சல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *43614*--**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருவண்ணாமலை ஒன்றியம், பாச்சல் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை**--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3*]

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், செங்கம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பாச்சல் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் இல்லை.

**79--**

**பட்டுக்கோட்டை ஒன்றியத்தில் சாலைகளைப் பராமரித்தல்**

வினா எண் 43615--**திரு. ஆர். சிங்காரம்** : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பட்டுக்கோட்டை ஒன்றியம், நாசியன்காடு-அதிராம்பட்டினம் முக்கிய சாலை வரை போடப்பட்டுள்ள இணைப்புச் சாலையில் மீதமுள்ள சுமார் 1 கிலோ மீட்டரையும் பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பட்டுக்கோட்டை ஒன்றியம், நாசியன்காடு-அதிராம்பட்டினம் இணைப்புச் சாலையில் மீதமுள்ள 1 கிலோ மீட்டரையும் பராமரிக்கும் கருத்துரு 1995-96 ஆம் ஆண்டு முன்னுரிமை கொடுத்து பரிசீலிக்கப்படும்.

**80--**

**பட்டுக்கோட்டை ஒன்றியத்தில் தொகுப்பு விடுகள் கட்டுதல்**

வினா எண் 43630--**திரு. ஆர். சிங்காரம்** : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பட்டுக்கோட்டை ஒன்றியம், மகிழம்கோட்டை மற்றும் ஏரிப்புறக்கரையில் ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடு கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**81--**

**பட்டுக்கோட்டை ஒன்றியத்தில் தார்ச் சாலை அமைத்தல்**

வினா எண் *43645*--**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கோட்டாக்குடி ஊருக்குள் செல்லும் சாலையை செப்பனிட்டு தார்ச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், கோட்டாக்குடி ஊருக்குள் செல்லும் செங்கல் கப்பிச் சாலையை 1993-94ல் செப்பனிடப்பட்டுள்ளது. இதனை தார்ச் சாலையாக மாற்றித்தர திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

**82--**

**செட்டிமண்டபம் குளச்சாலையை மராமத்து செய்தல்**

வினா எண் *43649*--**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உள்ளூர் செட்டிமண்டபம் குளத்திற்குச் செல்லும் சாலையை மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை உள்ளூர் செட்டிமண்டபம் குளத்திற்குச் செல்லும் பாதையை மராமத்து செய்ய அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**83--**

**பூம்புகார் தொகுதியில் தொகுப்பு வீடுகளை அதிகரித்தல்**

*வினா எண் 44949*--**திரு. எம். பூராசாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பூம்புகார் தொகுதியில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் தொகுப்பு வீடுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**84--**

**கொக்கூர் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிக் கட்டிடத்தை சீர். செய்தல்**

*வினா எண் 45030*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

[*1995 நவம்பர் 3*

(அ) நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், கொக்கூர் கிராம ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிக் கட்டிடம் பழுதடைந்த நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) அப்பள்ளிக் கட்டிடத்தைச் செப்பனிட்டு புதுப்பித்து சுற்றுச்சுவா கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, கொக்கூர் கிராமத்தில் உள்ள துவக்கப் பள்ளிக் கட்டிடம் ரு.6,000 செலவில் பழுது பார்க்கப்பட்டுள்ளது. சுற்றுச்சுவர் கட்டும் திட்டம் அரசிடம் இல்லை.

**85--**

**சின்னசமுத்திரம் வரை தார்ச் சாலை அமைத்தல்**

வினா எண் 45648--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி. சமுத்திரத்திலிருந்து சின்னசமுத்திரம வரை தார்ச் சாலை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்ட வேலை, மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தில் செயலாக்க எடுத்துக் கொள்ளப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது.

*1995 நவம்பர் 3]*

**86--**

**பாப்பாத்தியம்மன் ஆலயத்திற்கு செல்லும் பாதையை சீர் செய்தல்**

வினா எண் *45660*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஆண்டியப்பனூர் காலனியிலிருந்து பாப்பாத்தியம்மன் ஆலயத்திற்கு செல்லும் பாதை சீர் செய்யப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்ட வேலை, நடப்பு நிதியாண்டில் எடுத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**87--**

**ஆண்டியப்பனூரில் சிறு பாலம் அமைத்தல்**

வினா எண் *45661*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஆண்டியப்பனூருக்கு செல்லும் வழியில் ஒரு சிறு பாலம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நடப்பு நிதியாண்டில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் எடுத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

[1995 நவம்பர் 3

88--

**கதிரம்பட்டி மயானப் பாதையைச் சீர் செய்தல்**

வினா எண் 45663--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, கதிரம்பட்டி ஊராட்சி மயானப் பாதையைச் சீர் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கதிரம்பட்டி ஊராட்சி மயானப் பாதை 1993-94-ல் செப்பனிடப்பட்டது. தற்போது அப்பாதை நல்ல நிலையிலுள்ளது. மீண்டும் 1995--96-ல் மேம்பாடு வேலைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

89--

**ஏலகிரியில் இரண்டு சாலைப் பாலம் அமைத்தல்.**

வினா எண் 45670--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஏலகிரி கிராமத்திற்கு இரண்டு சாலைப் பாலம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நடப்பு நிதியாண்டில் பாலங்கள் கட்டும் பணியினை மேற்கொள்ள பரிசீலனையில் உள்ளது.

*1995 நவம்பர் 3]*

**90--**

**பாச்சல் மயானப் பாதையைச் சீர் செய்தல்**

*வினா எண் 45671*--**திரு.** *ஏ.கே.சி. சுந்தரவேல்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, பாச்சல் கிராமத்தில் மயானப் பாதையைச் சீர் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நடப்பு நிதியாண்டில் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் மயானப் பாதை சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**91--**

**செலந்தம்பள்ளி கிராமத்திற்கு தார்ச்சாலை அமைத்தல்**

*வினா எண் 45685*--**திரு.** *ஏ.கே.சி. சுந்தரவேல்:* மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, மாடப்பள்ளி காலனி முதல் செலந்தம்பள்ளி கிராமம்வரை தார்ச்சாலை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருப்பத்தூர் தொகுதி மாடப்பள்ளி காலனி முதல் செலந்தம்பள்ளி கிராமம் வரை ஏற்கெனவே தார்ச்சாலை போடப்பட்டு இவ்வழியாக பஸ் போக்குவரத்தும் நடைமுறையில் உள்ளது.

[1995 நவம்பர் 3

92--

## கருப்பனூர்--அண்ணான்டப்பட்டி சாலை அமைத்தல்

வினா எண் *45695*--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:--

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, கருப்பனூரிலிருந்து அண்ணான்டப்பட்டிவரை புதியதாக சாலை அமைக்கப்படுமா?

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்ட புதிய சாலை அமைக்கபடவேண்டிய இடம் தனியாருக்கு சொந்தமானதால், நிலத்தை கையகப்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

93--

## ஊராட்சி மன்றங்களுக்கு மிதிவண்டி வழங்குதல்

வினா எண் *46002*--திரு. ஏ.ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஊராட்சி மன்றங்களுக்கு ஒரு மிதிவண்டி வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சி மன்றங்களுக்கு ஒரு மிதிவண்டி வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

*1995 நவம்பர் 3]*

**94--**

## பாப்பாவலசில் ஆழ்குழாய்க்கிணறு அமைத்தல்

வினா எண் *46742*-**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சித் தொகுதி மொடக்குறிச்சி ஒன்றியம், பழமங்கலம் ஊராட்சி, பாப்பா வலசு கிராமத்தில் ஆழ் குழாய்க் கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், பழமங்கலம் ஊராட்சி, பாப்பாவலசு கிராமத்தில் மக்கட் தொகை *150*. *1980-81* ஆம் ஆண்டு ஒரு ஆழ் குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு அக்குடிநீரை பொதுமக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். அங்கு ஒரு திறந்தவெளிக் கிணறு உள்ளது. அக்கிணற்று நீரையும் பொதுமக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். எனவே, பாப்பாவலசு குடியிருப்பில் போதுமான அளவு குடிநீர் வசதி இருப்பதால் தற்போது புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க அவசியமில்லை.

**95--**

## பழமங்கலம் ஊராட்சியில் தெருவிளக்குகள் அமைத்தல்

வினா எண் *46762*-**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சித் தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், பழமங்கலம் ஊராட்சி, வடக்குப்பாளையம் கிராமத்தில் தெருவிளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், பழமங்கலம் ஊராட்சி, வடக்குப்பாளையம் என்ற குக்கிராமத்தில் ஆதி திராவிடர்கள் வீடு 7-ம்

இதர வீடு 30–ம் ஆக மொத்தம் 37 வீடுகள் உள்ளன. இதில் பொதுமக்களுக்கென 5 தெரு விளக்குகளும், ஆதிதிராவிடர்களுக்கென தனியாக இரண்டு தெருவிளக்குகளும் மொத்தம் 7 தெருவிளக்குகள் போதுமானதாக உள்ளதால், கூடுதல் தெருவிளக்குகள் அமைக்கத் தேவையில்லை.

**96--**

**ஏ. சப்பாணிப்பட்டியில் தொகுப்பு விடுகள் கட்டுதல்**

வினா எண் *47753*–திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், அடிலம் ஊராட்சி, ஏ. சப்பாணிப்பட்டி கிராமங்களிலுள்ள 25 ஆதிதிராவிட குடும்பங்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

**விடை--**

***மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**97--**

**ஆண்டிமடம் தொகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *60905*–திரு. ஆர். தங்கராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஆண்டிமடம் தொகுதி, நெட்டலங்குறிச்சி ராங்கிமின்றான், காடுவெட்டி ஆகிய காலனிகளுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசிடம் 'செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

***மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**98--**

**இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட விளைவுகளைப் போக்குதல்**

வினா எண் *61649*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், பழைய முதல்சேரி ஆதிதிராவிடர் காலனியில் கடந்த வருடம் புயலாலும், வெள்ளத்தாலும் இடிந்துபோய்விட்ட வீடுகளைப் புதுப்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடமை ஆகிவிடுகிறபடியால் அதை பழுது பார்த்துத்தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளை பராமரித்து பழுது பார்த்துத் தருவது என்றால் புதியதாக தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் பாதிக்கும். எனவே இப்பொருள் குறித்து தனியாக திட்டம் எதுவுமில்லை.

**99--**

**பேராவூரணி தொகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *61656*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

[*1995 நவம்பர் 3*

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி தெற்கு மதன்பட்டவூர், நல்லமான் புஞ்சை வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**100--**

**திருச்சி மாவட்டத்தில் பிற்பட்டோருக்கு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *78765*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், அரவக்குறிச்சி, அம்மாபட்டி ஊராட்சி, வல்லப்பம் பட்டி, இசட் ஆலமரத்துப்பட்டி ஊராட்சி, ஆண்டிப்பட்டிக் கோட்டை, பள்ளப்பட்டி (பழைய) ஆகிய கிராமங்களில் பிற்பட்டோர்களுக்கான வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

*1995 நவம்பர் 3]*

## ஒன்பதாம் பட்டியல்

### ஆணைக்குளத்தைப் பராமரித்தல்

**1--**

வினா எண் *2168*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி மேற்கிலுள்ள ஊராட்சி ஆணைக்குளத்தை தூர் அள்ளி சுத்தப்படுத்தி பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், இடையாத்தி மேற்கிலுள்ள ஊராட்சி ஆணைக்குளத்தை தூர் எடுக்க தற்போது அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

**2--**

### குப்பத்தேவன் நடுநிலைப்பள்ளிக்கு நிலையான கட்டிடம் கட்டுதல்

வினா எண் *3107*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குப்பத்தேவன் நடுநிலைப்பள்ளிக்கு கட்டப்படுகின்ற கட்டிடத்தில் கீற்றுக்கூரை போடாமல் நிலையான கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், குப்பத்தேவன் நடுநிலைப்பள்ளிக்கு 1991-92-ல் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் (சிறப்பு தன்னிறைவுத் திட்டம்) மூலம் புதிய கட்டிடம் கட்டப்பட்டு பள்ளி நடைமுறையில் இருந்து வருகிறது.

**3--**

**விளாத்திகுளம் தொகுதியில் விளக்குகள் எரிய நடவடிக்கை.**

வினா எண் 3389--**திருமதி என். கனகவல்லி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

விளாத்திகுளம் தொகுதியில் சில கிராமங்களில் குழல் விளக்குகள் மாலை 6 மணி முதல் இரவு 10.00 மணிவரை எரியாமல் இருக்கும் குறையைப் போக்கி மாலை 6 மணிமுதல் தொடர்ந்து விளக்குகள் எரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

விளாத்திகுளம் தொகுதியிலுள்ள அனைத்துக் கிராமங்களிலும், மின்னழுத்தக் குறைபாடு நிவர்த்தி செய்யப்பட்டு மின் விநியோகம் சீராக நடைபெற்று வருவதால் குழல்விளக்குகள் மற்றும் தெருவிளக்குகள் நல்ல முறையில் எரிந்து வருகின்றன.

**4--**

**நகராட்சியில் என்.எம்.ஆர். பணியாளர்கள் விவரம்**

வினா எண் 4422--**திரு. பி. சொக்கலிங்கம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஒவ்வொரு நகராட்சியிலும் என்.எம்.ஆர். என்ற பெயரில் பணியமர்த்தப்படாமலேயே கணக்கெடுப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதைக் கண்காணிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

1995 நவம்பர் 3]

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

(அ) ஒவ்வொரு நகராட்சியிலும் அவசர பணி தேவை கருதி வேலை மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அவ்வேலைகளுக்கு நகரமன்ற ஒப்புதல் பெறப்படுகின்றது. வேலை மதிப்பீட்டில் தினக்கூலி பணியாளர்களுக்கு என ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை அடிப்படையில் தினக்கூலி பணியாளர்கள் பணியமர்த்தப்படுகிறார்கள். எனவே, நகராட்சிகளில் என். எம். ஆர். தினக்கூலிகள் பணியர்த்தப்படாமல் கணக்கெடுக்கப்படுவது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**5--**

**மேலமருதப்பபுரம் கிராமத்திற்குக் குடிதண்ணீர் வசதி செய்தல்**

வினா எண் 4649--திரு. **எஸ். எஸ்.** ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியத்தில் மேலமருதப்பபுரம் கிராமத்திலுள்ள சமுதாயக் கிணற்றிலிருந்து தெருக்களுக்கு குழாய் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், மேலமருதப்பபுரம் கிராமத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்குத் தேவையான குடிநீர், சங்கரன்கோவில்-ஆலங்குளம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் ஏற்றப்பட்டு, 15 நல்லிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

6--

**பெரியார் நகர் ஆதிதிராவிடர் சாலையைக் கப்பிச் சாலையாக மாற்றுதல்**

வினா எண் 6433--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பள்ளத்தூர் ஆதிதிராவிடர் தெருவில் பெரியார் நகர் சமுதாயக்கட்டிடத்திலிருந்து அடைக்கலம் காத்தான் ஐயனார் கோவிலுக்குச் செல்லும் ஆதிதிராவிடர் சாலையைக் கப்பிச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

இப்பணியினைச் செய்ய நிதி ஆதாரமோ, நிதி ஒதுக்கீடோ, இல்லாததால் அரசிடம் எவ்வித செயற்குறிப்பும் இல்லை.

7--

**அந்தியூர் ஒன்றியத்தில் லாரி மூலம் குடிதண்ணீர் சப்ளை**

வினா எண் 6929--**திரு. வே. பெரியசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் ஒன்றியத்தில் லாரி மூலம் குடிதண்ணீர் சப்ளை செய்ய 1990-91-ல் டெண்டர் விடாமல் விட்டபோது அதிகப்படியான தொகை செலவு செய்யப்பட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை அதிகப்படியாக செலவு செய்யப்பட்டுள்ளது?

(இ) டெண்டர் விட்டபின் லாரி ஒன்றுக்கு தினம் எவ்வளவு செலவு ஆகிறது?

1995 நவம்பர் 3]

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பெரியார் மாவட்டம், அந்தியூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் கடுமையான குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டதையொட்டி உடனடியாக குடிநீர் வழங்கும் அவசரத்தை முன்னிட்டு, 8-4-1991 முதல் 9-9-1991 முடிய உள்ள காலத்திற்கு விலைப்புள்ளி மூலம் ஒரு லாரிக்கு ஒரு நாளைக்கு 5 ட்ரிப்புக்கு ரூ. 820 என்ற விகிதத்தில் குடிநீர் வழங்கப்பட்டது. இந்த விலைக்கும் டெண்டர் அடிப்படையிலான ரூ. 513-க்கும் உள்ள அதிகப்படியான தொகை ரூ. 307 டெண்டர் விடாததால் 8-4-1991 முதல் 9-9-1991 முடிய உள்ள காலத்திற்கு அதிகப்படியாக செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 9,824 ஆகும்.

(இ) 10-9-1991 முதல் 30-9-1991 முடிய உள்ள காலத்தில் குடிநீர் வழங்க டெண்டர் விட்ட பின்னர் லாரி ஒன்றுக்கு 5 ட்ரிப்புக்கு ரூ. 513 வீதமும், 1-10-1991 முதல் 15-11-1991 முடிய லாரி ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 6 ட்ரிப்புக்கு ரூ. 615 வீதமும் வழங்கப்பட்டுள்ளது.

8--

### சி.எம்.பி. வாய்க்காலில் சிறுபாலம் கட்டுதல்

வினா எண் 7040--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், தொந்து புளிக்காடு ஓரத்தில் சி.எம்.பி. வாய்க்காலில் சிறுபாலம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

தொந்து புளிக்காடு ஓரத்தில் சி.எம்.பி. வாய்க்காலில் சிறுபாலம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

9--

## முனுமாக்காட்டில் மயான தகரக் கொட்டகை அமைத்தல்

*வினா எண் 7104*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், முனுமாக்காடு ஆதிதிராவிடர்களுக்கு மயான தகரக் கொட்டகை அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சி ஒன்றியத்தின் நிதி நிலைமை சரியில்லாததால் மயான தகரக் கொட்டகை அமைக்கும் செயற்குறிப்பு இல்லை.

10--

## காலம் ஊராட்சி மயானக் கொட்டகை அமைத்தல்

*வினா எண் 7177*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், காலம் ஊராட்சி ஆதிதிராவிடர் தெருவிற்கு மயானக் கொட்டகை அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

காலம் ஆதிதிராவிடர் தெருவிற்கு மயான கொட்டகை கட்டுவதற்கு தற்போது அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

11--

## களத்தூர் கிழக்கில் பாசனக் கிணறு அமைத்தல்

*வினா எண் 7242*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், களத்தூர் கிழக்கு ஆதி திராவிடர் காலனி மக்கள் பயன்படுத்த பாசனக் கிணறு ஒன்று அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், களத்தூர் கிழக்கு ஆதிதிராவிடர் காலனி மக்களுக்கு பாசன வசதிக்காக பாசன கிணறு அமைத்துத் தரப்பட்டுள்ளது. அதில் உள்ள மோட்டார் திருட்டு போய்விட்டதால் அதைத் திரும்பப் பெறவும், அதற்குப் பதிலாக மற்றொரு மோட்டார் அடைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

**12--**

**ஒலிராமன் காட்டிலுள்ள நீர்த்தேக்கத் தொட்டியை பழுது பார்த்தல்**

வினா எண் *7298*--திரு. **ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஒலிராமன் காட்டிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை பழுதுபார்த்து நீர் மூழ்கி மோட்டார் இணைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், ஒலிராமன் காட்டிலுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி சீர் செய்யப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகிறது. தற்போது ஊராட்சி ஒன்றியம் மற்றும் சொக்கநாதபுரம் ஊராட்சி ஆகியவைகளில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் நீர் மூழ்கி மோட்டார் அமைக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

**13--**

**செருவாவிடுதி மேற்கில் காலனி வீடுகளை புதுப்பித்தல்**

வினா எண் *7312*--திரு. **ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செருவா விடுதி மேற்கு ஆதிதிராவிடர் தெருவில் கட்டப்பட்ட காலனி வீடுகள் உடைந்து போனதை புதுப்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளின்படி மேற்படி திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுக்கப்பட்ட தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் உடமை ஆகிவிடுகிறபடியால் அதை பழுதுபார்த்துத்தர வழிவகை இல்லை. கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளை பராமரித்து பழுது பார்த்துத் தருவது என்றால் புதியதாகத் தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம் பாதிக்கும். எனவே, இப்பொருள் குறித்து தனியாக திட்டம் எதுவுமில்லை.

**14--**

**பெரியநெகமம் ஆரம்பப்பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *10151*--**திரு. நா. சா. பழனிசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கிணத்துக்கடவு தொகுதி, பெரியநெகமம் அண்ணாநகர் ஆரம்பப்பள்ளி வாடகைக் கட்டிடத்தில் இயங்குவதால் புதிதாக கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு தொகுதி, பெரிய நெகமம் அண்ணா நகரில் தனியாக ஆரம்பப்பள்ளி இயங்கவில்லை. அது நெகமத்தில் இயங்கிவரும் துவக்கப்பள்ளியுடன் இணைந்ததாகும். *1993–94*-ல் வாடகைக் கட்டிடம் காலி செய்யப்பட்டு எம்.ஜி.ஆர். நகரில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒரு கட்டிடம் கட்டப்பட்டு அவ்விடத்தில் பள்ளி இயங்கி வருகிறது.

**15--**

**காட்டுக் கருவேல்மர வருமானத்தை ஊராட்சிகளுக்கு வழங்குதல்**

வினா எண் *11369*--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

இராமநாதபுரம் மாவட்டம் ஊராட்சிகளுக்கு வருவாயைப் பெருக்கும் வகையில் காட்டுக் கருவேலமர வருமானம் அனைத்தையும் ஊராட்சிகளுக்கு வழங்க அரசு முன்வருமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

1985ஆம் ஆண்டு முதல் சமூகக் காடுகள் திட்டத்தின் கீழ் ஊராட்சிக்கு சொந்தமான புறம்போக்கு நிலங்களில் மரக்கன்றுகள் நட்டு அது வளர்ந்த பின் வெட்டி ஏலம் விடப்படுகிறது. அத்திட்டத்தின் கீழ் கருவேல் கன்றுகளும் தோப்பு நடவாக மேற்கொள்ளப்படுகின்றன. அதில் வரும் மொத்த வருமானமும் அந்தந்த ஊராட்சிகளுக்குப் போய் சேருகிறது.

**16--**

### கரம்பயம்-கொல்லன்புரம் சாலையை தார்ச் சாலையாக மாற்றுதல்

வினா எண் 11465--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், கரம்பயம்-கொல்லன்புரம் சாலையை 1992-93-ல் தார்ச் சாலையாக மாற்றிப் பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

பட்டுக்கோட்டை ஒன்றியம், கரம்பயம் ஊராட்சியில், கொல்லன்புரம் கிராமம் அல்லது கரம்பயம், கொல்லன்புரம் சாலை ஏதும் இல்லை.

**17--**

### கீழ்த்தோட்ட குளத்தை பராமரித்தல்

வினா எண் 12184--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[*1995 நவம்பர் 3*

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், இராஜாமடம் ஊராட்சி கீழ்த்தோட்டத்தில் உள்ள குளத்தை *1992-93*-ல் பராமரித்து படித்துறை கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இராஜாமடம் ஊராட்சி கீழ்த்தோட்டத்தில் உள்ள குளத்தில் தடுப்புச் சுவரும், படித்துறையும் *1994-95*-ம் ஆண்டு தீவிர ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. *50,000* மதிப்பீட்டில் வேலை நடைபெற்று வருகிறது.

**18--**

**ஆண்டிமடம் தொகுதியில் கப்பிச்சாலை அமைத்தல்**

வினா எண் *12476*--திரு. இரா. தங்கராசு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஆண்டிமடம் தொகுதி, பெரியத்தூரிலிருந்து தென்னூர் வழியாக வரதராசன்பேட்டை செல்லும் மண்சாலையை செப்பனிட்டு கப்பிச் சாலையாக மாற்றித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்ட சாலை செப்பனிட்டு கப்பிச்சாலையாக மாற்றப்பட்டுள்ளது.

**19--**

**சின்னகுளத்திற்கு படித்துறை அமைத்தல்**

வினா எண் *14307*--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3*]

பேராவூரணி ஒன்றியம், ஆவணம் முகமதியர் தெருவிலுள்ள சின்னகுளத்திற்கு படித்துறை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பேராவூரணி ஒன்றியம், ஆவணம் முகமதியர் தெரு சின்ன குளத்திற்கு படித்துறை அமைக்கும் பணி *1993-94*-ல் ரூ. *50,000* மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டு விட்டது.

**20--**

**அண்ணா குட்டையை மராமத்து செய்தல்**

வினா எண் *15007*--திரு. **ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ஊமத்தநாடு ஆதிதிராவிடர்களின் அண்ணாகுட்டையை *1992-93*-ல் மராமத்து செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஊமத்தநாடு ஊராட்சியில் அண்ணா குட்டை என்ற பெயரில் ஊராட்சிக்கு சொந்தமான நீர்நிலை ஏதும் இல்லை.

**21--**

**கீழ்த்தோட்டத்திலுள்ள காட்டாற்றில் தடுப்புச்சுவர் கட்டுதல்**

வினா எண் *15010*--திரு. **ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--



TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், இராஜாமடம் ஊராட்சி, கீழ்த்தோட்டத்தின் அருகில் உள்ள காட்டாற்றில் அரிப்பு ஏற்படுவதால் ஊரின் வடகரை பகுதியில் 1992-93-ல் தடுப்புச்சுவர் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், இராஜாமடம் ஊராட்சி கீழ்த்தோட்டம் வடகரை குளப்பகுதியில் 1994-95-ஆம் ஆண்டு ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 50,000 மதிப்பீட்டில் தடுப்புச் சுவர் மற்றும் படித்துறை கட்டித் தரப்பட்டுள்ளது.

**22--**

**சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிக்கு மின்மோட்டார் அமைத்தல்**

வினா எண் 16210--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சோலைக்கட்டி காட்டிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீர் மூழ்கி மோட்டார் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், சோலைக்காட்டிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி நல்ல நிலையில் இயங்கி வருகிறது. மேலும் ஊராட்சி ஒன்றியத்திலும் சம்பந்தப்பட்ட ஊராட்சியிலும் போதிய நிதி வசதியில்லாததால் நீர்மூழ்கி மோட்டார் அமைக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**23--**

### பெருங்களூர் கிராமத்திலுள்ள மோட்டாரை மாற்றுதல்

வினா எண் *16422*--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, நயினார்கோயில் ஒன்றியம், பெருங்களூர் கிராமத்தில் உள்ள *1.5* எச்.பி. மோட்டாரை *5* எச்.பி. ஆக மாற்ற அரசுக்கு பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): நயினார் கோயில் ஊராட்சி ஒன்றியம் பெருங்களூர் கிராமத்தில *1.5* எச்.பி. மோட்டாரை *5* எச். பி. மோட்டாராக மாற்றுவதற்கு தற்போது உத்தேசமில்லை. ஊராட்சியில் போதுமான நிதிவசதி பெறப்பட்டவுடன் கிணற்றினை ஆழப்படுத்தி *5* எச்.பி. மோட்டார் பொருத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**24--**

### பரமக்குடி நகராட்சியில் துப்புரவு தொழிலாளர் எண்ணிக்கை

வினா எண் *16648*--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பரமக்குடி நகராட்சியில் உள்ள துப்புரவுத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பரமக்குடி நகராட்சியில் துப்புரவுத் தொழிலாளர் பணியிடங்கள் கீழ்க்கண்டவாறு உள்ளன.

| | நிரந்தரம் | | தற்காலிகம் |
|---|---|---|---|
| | 96 | + | 13 = 109 |
| பொதுச் சுகாதார துப்புரவு பணியாளர் | .. | | 78 |
| கழிவுநீர் வடிகால் துப்புரவுப் பணியாளர் | .. | | 23 |
| கலவை உரக்கிடங்கு மஸ்தூர்கள் | .. | | 2 |
| மலேரியா மஸ்தூர்கள் | .. | | 6 |
| | மொத்தம் | .. | 109 |

குறைந்த செலவில் கழிப்பிடங்கள் கட்டும் திட்டத்தின் கீழ் தண்ணீர் கழிப்பிடங்கள் நிறைய கட்டியுள்ளதால் 14 துப்புரவுப் பணியாளர்கள் விடுவிக்கப்படுகிறார்கள் என்றும், எனவே, கூடுதல் பணியிடங்கள் நியமனம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**25--**

**வெட்டன் விடுதி ஆதிதிராவிடக் குடியிருப்புக்குத் தெருவிளக்கு அமைத்தல்**

வினா எண் *17175*--**திரு. எஸ். சண்முகநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஆலங்குடி தொகுதி, வெட்டன் விடுதி ஆதிதிராவிடர் குடியிருப்புக்குப் புதியதாகத் தெருவிளக்குகள் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆலங்குடி தொகுதி, கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், கணக்கன்காடு ஊராட்சி, வெட்டன்விடுதி ஆதிதிராவிடர் காலனியில் உள்ள 4 தெருவிளக்குகள் நல்ல முறையில் எரிந்து கொண்டிருக்கின்றன. மேற்படி ஊராட்சியில் தற்பொழுது போதிய நிதிவசதி இல்லாததால் நிதி ஒதுக்கீடு வரப்பெற்றதும் முன்னுரிமை அடிப்படையில் புதிய தெருவிளக்குகள் அமைக்கப்படும் என புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

*1995 நவம்பர் 3]*

**26--**

**பரமக்குடி தொகுதியில் ஆற்றின் ஓரம் சாலை அமைத்தல்**

வினா எண் *17198*--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் பகைவென்றி கிராமத்திற்கும் கீழாய்க்குடி கிராமத்திற்கும் ஆற்றின் ஓரத்தில் சாலை அமைக்க அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் பின் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் பகைவென்றி கிராமத்திற்கும் கீழாய்க்குடி கிராமத்திற்கும் ஆற்றின் ஓரத்தில் சாலை அமைக்கும் பணி 1994ஆம் ஆண்டு ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

**27--**

**கீடாமங்கலம்-குரும்பூர் இடையே நடைபாலம் கட்டுதல்.**

வினா எண் *19139*--**டாக்டர் க. கோபால்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நன்னிலம் தொகுதி, திருமருகல் ஒன்றியம், அரசலாற்றின் குறுக்கே, கீடாமங்கலத்திற்கும் குரும்பூர் என்ற கிராமத்திற்கும் இடையே வண்டி நடைபாலம் கட்டித்தர அரசு முன்வருமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இந்நடைபாலம் கட்ட ரூ. 25.00 இலட்சம் (உத்தேச மதிப்பீடு) செலவாகும். இவ்வளவு தொகையினை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

**28--**

**ஆவுடையார்பாறை சமுதாயக் கூடத்திற்குச் சுற்றுச்சுவர் கட்டுதல்**

வினா எண் *19491*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், ஆவுடையார் பாறை ஆதிதிராவிடர் சமுதாயக் கூடக் கட்டிடத்திற்குச் சுற்றுச்சுவர் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்ட விதிமுறைகளின்படி சமுதாயக் கூடத்திற்குச் சுற்றுச்சுவர் கட்டி வழங்க வழிவகைகள் இல்லை.

**29--**

**வரகூர் ஊராட்சிப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *19546*--**திரு. கே. கந்தசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

சேலம் மாவட்டம், தலைவாசல் ஒன்றியம், வரகூர் ஊராட்சித் துவக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், தலைவாசல் ஒன்றியம், வரகூர் ஊராட்சித் துவக்கப்பள்ளிக் கட்டிடம் *1993-94*-ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புக் கூடுதல் நிதித் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**30--**

**கறயான்குளம்-ஜரேனிபுரம் சாலையை தார்ச் சாலையாக்குதல்**

வினா எண் 22621--**திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) விளவன்கோடு தொகுதி, விளாத்துறை பஞ்சாயத்து, கறயான்குளம்-ஜரேனிபுரம் சாலையை தார்ச் சாலையாக மாற்றும் திட்டம் குறித்து அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆமெனில், எப்பொழுது பணி தொடங்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கறயான்குளம்-ஜரேனிபுரம் சாலையின் நீளம் 2.00 கி.மீ. ஆகும். இச்சாலை இரு ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த சாலையாகும். இச்சாலையை மேம்பாடு செய்து தார்ச் சாலையாக்க தோராயமாக ரூ. 7.00 இலட்சம் தேவைப்படும்.

(ஆ) அண்மையில் இப்பணியை மேற்கொள்ள சாத்தியக்கூறு இல்லை.

**31--**

**அரவக்குறிச்சி தொகுதியில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல்**

வினா எண் 23472--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

அரவக்குறிச்சி தொகுதி, ஐ. ஆலமரத்துப்பட்டி ஊராட்சியிலுள்ள ஆண்டிப்பட்டி மற்றும் வண்டாரிச்சிலம்பட்டியில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்துக் குடிதண்ணீர் விநியோகம் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருச்சி மாவட்டம், அரவக்குறிச்சி தொகுதி, ஆலமரத்துப்பட்டி ஊராட்சியிலுள்ள ஆண்டிப்பட்டி மற்றும் வண்டரிச்சிலம்பட்டியில், 1993-94-ஆம் ஆண்டில் புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைத்து "கம்பிரஸ்ஸர்" மோட்டார் வைத்து நல்ல முறையில் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

**32--**

### சொக்கலிங்கபுரத்தில் தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 24391--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

திருநெல்வேலி--கட்டபொம்மன் மாவட்டம், மேலநீவித நல்லூர் ஒன்றியம், சொக்கலிங்கபுரம் கிராமத்திற்கு தார்ச் சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இச்சாலையை மேம்பாடு செய்ய ரூ. 15.00 இலட்சம் செலவாகும். இவ்வளவு அதிகமாக தொகையை ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து எடுத்துச் செய்ய இயலாது.

**33--**

### ராதாபுரம் தொகுதியில் தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 24428--திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ராதாபுரம் தொகுதி, வள்ளியூர் ஒன்றியம், ராதாபுரம் ஒன்றியம் ஆகிய இடங்களில் தெரு விளக்குகள் அமைக்கப்படுமா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

***மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

*வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 18 ஊராட்சிகளிலும் 1886 குழல் விளக்குகளும், 1 சோடியம் விளக்கும் ஆக மொத்தம் 1,887 தெரு விளக்குகள் நிறுவப்பட்டுள்ளன. ராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் 1991-92, 1992-93-ஆம் வருடத்தில் சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூ. 7,80,000 செலவில் 312 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.*

**34--**

**பத்ரப்படுகு அருகே பாலம் கட்டுதல்**

*வினா எண் 24771--**திருமதி அ.தி. சரஸ்வதி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

கடம்பூர் மலைப்பகுதிகளில் பத்ரப்படுகு செல்லும் பாதை அருகே பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

***மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

*வினாவில் குறிப்பிட்டுள்ள இடத்தில், பாலம் கட்ட ரூ. 75.00 இலட்சம் தேவைப்படும். இச்சாலையில் பேருந்து போக்குவரத்து இல்லை. அதிக ஊர்களும் இல்லை. எனவே, இவ்விடத்தில் பாலம் கட்டுவது தற்சமயம் அவசியம் இல்லை.*

**35--**

**ஆலங்குடி சாலையை தார்ச் சாலையாகச் செப்பனிடுதல்**

*வினா எண் 26030--**திரு. சி. சுவாமிநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

புதுக்கோட்டை யூனியன் வாகவாசல்-ஆலங்குடி சாலையை தார்ச் சாலையாகச் செப்பனிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வாகவாசல்-ஆலங்குடி சாலையின் ஒரு பகுதி 1991-92ம் ஆண்டு ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதி 1994-95 நிதியாண்டில் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படுகிறது.

**36--**

**கொடுமுடி ஒன்றியத்தில் மின் விளக்கு அமைத்தல்.**

வினா எண் *26632*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கொடுமுடி ஒன்றியம்--கணபதிபாளையம் வடிவுள்ளமங்கலம் செல்லும் சாலையில் மின் விளக்கு அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கொடுமுடி ஒன்றியம்--கணபதிபாளையத்திலிருந்து முத்தூர் செல்லும் சாலையில் சுமார் 1 கி.மீ. தொலைவில் இடது புறத்தில் உள்ள வடிவுள்ள மங்கலத்திற்குச் செல்லும் சாலை, ஊராட்சி ஒன்றியச் சாலையாகும். இதில் குடியிருப்புகள் இல்லை. மேற்படி சாலையில் மின் விளக்கு அமைக்க இச்சப்பாளையம் ஊராட்சியில் வசதியில்லை. நிதி வசதியைப் பொறுத்து மின் விளக்குகள் அமைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**37--**

**காளியங்கரையான் வாய்க்கால் வழித்தடத்தில் கப்பிச்சாலை அமைத்தல்.**

வினா எண் *26636*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

கணபதிபாளையம் முதல் சாலைப்புதூர் வரையிலான காளிங்கரையான் வாய்க்காலின் வழித்தடம் மண் சாலையாக உள்ளதை கப்பிச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இக்கால்வாயின் கரை ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு ஈப்பு செல்லும் அளவுக்கு மட்டுமே பராமரிப்பு செய்து வருகிறது. வழித்தடத்தில் பெரிய கனரக வாகனங்கள் செல்லும் அளவுக்கு முழு கப்பிச் சாலையாக மாற்றிட தற்போது சாத்தியக்கூறு இல்லை.

**38--**

**புவனகிரி தொகுதியில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல்**

வினா எண் 26877--**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம் வால்புரம் கிராமம் மற்றும் பரங்கிப்பேட்டை ஒன்றியம், மடவாப்பள்ளம் ஆகிய கிராமங்களுக்கு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மேல் புவனகிரி ஊராட்சி ஒன்றியம், வால்புரம் ஊராட்சி பாலுத்தங்கரையில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு ரூ. 96,300 மதிப்பீட்டில் அமைத்திட அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை விரைவில் முடித்து பொது மக்களுக்கு குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளும்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்பார்வைப் பொறியாளரைக் கோரப்பட்டுள்ளது. பரங்கிப்பேட்டை ஒன்றியம். மடவாப்பள்ளம் கிராமத்தில் 20 வீடுகள் மட்டுமேயுள்ளன. மேலும் இக்கிராமத்தில் 2 சாதா ரக கைப்பம்புகளும் உள்ளன. இக்கிராமம் கடற்கரையை ஒட்டியுள்ளதால் 25 அடிக்கு கீழ் உப்பு நீர் உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

எனவே இங்கு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க இனி வாய்ப்பு இல்லை. அதற்கு அவசியமும் இல்லை.

39--

## புவனகிரி தொகுதியில் குடிநீர்த் தொட்டிகளைப் பழுது பார்த்தல்

வினா எண் 26898--**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலும் புவனகிரி ஒன்றியத்திலும் சித்தேரி, முத்துக்கிருஷ்ணாபுரம் மற்றும் ஆலம்பாடியில் குடிநீர்த் தேக்கத் தொட்டிகள் பழுது அடைந்துள்ளதைப் பழுது பார்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பழுது பார்க்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): சித்தேரி கிராமத்திலுள்ள போர் சுத்தம் செய்யப்பட்டு அவ்விசைப்பம்பு திட்டம் 15-2-1995 முதல் நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

முத்துகிருஷ்ணாபுரம் கிராமத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் புதியதாக ஓர் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு அதனருகில் மின் மோட்டார் அறை ஒன்று புதியதாக கட்டப்பட்டு மின் இணைப்புகள் அப்புதிய மின் மோட்டார் அறைக்கு மாற்றம் செய்யப்பட்டு 25-1-1995 முதல் குடிநீர்த் திட்டம் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

ஆலம்பாடி கிராமத்தில் காலனிக்குத் தனியாக ஒரு மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டியும், கிராமத்திற்கெனத் தனியாக ஒரு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் உள்ளது. காலனியிலுள்ள மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி நல்ல முறையில் இயங்கி வருகிறது. கிராமத்திலுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியின் பைப் லைன்கள் தற்போது சீரமைக்கப்பட்டு 25-1-1995 முதல் பொது மக்களுக்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

*1995 நவம்பர் 3]*

**40--**

**புவனகிரி தொகுதி மயானங்களுக்கு மயானப்பாதை சீர் செய்தல்**

*வினா எண் 26902*--**செல்வி கோ. மல்லிகா:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், புவனகிரி மணவெளி, கீழ் மூங்கிலடி, மேல் மூங்கிலடி, சாத்தப்பாடி, இந்திரா நகர், வீரமுடையா நத்தம் ஊராட்சி, பெரியகுப்பம், சின்னகுப்பம் மற்றும் பரங்கிப்பேட்டை ஒன்றியம், பூவாலை ஆகிய கிராமங்களில் உள்ள மயானங்களுக்கு மயானப் பாதை சீர் செய்யவும், எரி கொட்டகை அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வீரமுடையாநத்தம் ஊராட்சியில் 80 சதவீதம் ஊராட்சிகள் வேலையின் கீழ் 1993-94-ல் மயானக் கொட்டகை கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே மற்றப் பணிகள் நடப்பாண்டில் செய்து கொடுக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**41--**

**ஆதி திராவிடர் காலனிக்கு சாலை வசதி செய்தல்**

*வினா எண் 26912*--**செல்வி கோ. மல்லிகா:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், தட்டான் ஓடை முதல் முகந்திரியாங்குப்பம் வரை பெரிய நற்குணம் முதல் தட்டான் ஓடை வரை, விருத்தாசலம் சாலையிலிருந்து முத்துகிருஷ்ணாபுரம் வரை மற்றும் பெரிய நற்குணம் ஆதி திராவிடர் காலனிக்கு சாலை வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தட்டான் ஓடை முதல் முகந்திரியாங்குப்பம் வரை 1993-94 நிதி ஆண்டி ஸ்பெஷல் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில், ரூ. 1,00,000 மதிப்பீட்டில் சாலை வசதி செய்து தரும் வேலை எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும் பெரிய நற்குணம் காலனிக்கு ரூ. 30,000 மதிப்பீட்டில் சாலை வசதி செய்து தரும் வேலை எடுத்துக்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது.

**42--**

**வடக்கு பிச்சாவரம் ஆற்றில் நடைபாலம் அமைத்தல்**

வினா எண் 26916--**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், வடக்கு பிச்சாவரம் ஆற்றில் ஒரு நடைப் பாலம் போட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வடக்கு பிச்சாவரம் ஆற்றின் குறுக்கே ஒரு நடைபாலம் அமைக்க தோராய மதிப்பீடு ரூ. 10 இலட்சம் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நிதிப் பற்றாக்குறை காரணமாக சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்ட நடைப் பாலம் போட செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**43--**

**பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் நடைப்பாலம் அமைத்தல்**

வினா எண் 26918--**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம் கனகரப்பட்டு களப் பகுதி முதல் சிந்தான்பாளையம் வரை நடைப்பாலம் ஒன்று அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

*1995 நவம்பர் 3]*

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கனகரப்பட்டு களப்பகுதி முதல் சிந்தான்பாளையம் வரை நடைப்பாலம் அமைக்க ரூ. 5 இலட்சம் செலவாகும். நிதிப் பற்றாக்குறை காரணமாக சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்ட நடைப்பாலம் போட செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**44--**

**புவனகிரி ஒன்றியச் சாலையை தார்ச் சாலையாக்குதல்**

வினா எண் 26919--**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், சாத்தப்பாடி முதல் சொக்கன்கொல்லை வரை புவனகிரி அண்ணா சாலை வண்டி கேட் முதல் கிள்ளை வரை தார்ச் சாலை போட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): நடப்பாண்டில் இவ்வேலையை எடுத்துச் செய்து முடிக்கத்தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**45--**

**பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் தார்ச் சாலை அமைத்தல்**

வினா எண் 26921--**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், கீழ் அனுவம்பட்டு முதல் கோவிலம்பூண்டி வரை மற்றும் நவாப் பேட்டை முதல் மடுவங்கரை காலனி வரை தார்ச் சாலை போட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கீழ் அனுவம்பட்டு முதல் கோவிலாம்பூண்டி வரை மற்றும் நவாப் பேட்டை முதல் மடுவங்கரை காலனி வரை தார்ச் சாலை போட நடப்பு நிதியாண்டில் திட்டங்கள் ஏதுமில்லை.

**46--**

**கொண்டசமுத்திரத்தில் மயான பாதை வசதி**

வினா எண் 27191--**திரு. என். ஆர். ராஜேந்திரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, கொண்டசமுத்திரம் கிராமத்திலுள்ள மயானத்திற்குப் பாதை வசதி செய்து தர அரசு முன் வருமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நடப்பு நிதியாண்டில் மயானத்திற்குப் பாதை வசதி செய்து தரும் வேலைக்கு முன்னுரிமை அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**47--**

**அறந்தாங்கியில் சாலைகளைச் சீர் செய்தல்**

வினா எண் 27196--**திரு. என். ஆர். ராஜேந்திரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, அறந்தாங்கி கிராமத்தில் ஆதிதிராவிட மக்கள் வசிக்கும் பகுதியில் சாலைகளைச் சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1993-94*-ல் அறந்தாங்கி ஊராட்சி-சென்னி நத்தம் கிராமத்தில் தடுப்புச் சுவர் படித்துறை கட்டுதல் மற்றும் தகவல் மையம் கட்டுதல் ஆகிய வேலைகளை செய்ய மாவட்ட ஆட்சித் தலைவரின் உத்தரவுப் பெறப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் மக்கள் வசிக்கும் பகுதியில் சாலைகளைச் சீர் செய்ய முன்னுரிமை அளிக்கப்படும்.

**48--**

**நெய்வேலி மண்சாலையைப் புதுப்பித்தல்**

வினா எண் *30180*--**திரு. சி. குழந்தைவேலு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருமயம் தாலுக்கா, பனையப்பட்டி-நெய்வேலி மண்சாலை பழுதடைந்துள்ளதால் அதனைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்ட சாலை மூன்று சாலைகளை உள்ளடக்கியதாகும். பழுது பார்க்கும் பணி வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு செப்பனிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**49--**

**நிலையாம்பட்டியில் தெரு விளக்கு அமைத்தல்**

வினா எண் *33132*--**திரு. டி. சாத்தையா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

[1995 நவம்பர் 3

(அ) பரமக்குடி தொகுதி, நிலையாம்பாடி கிராமத்திற்கு தெருவிளக்கு அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, சே. கருங்குளம் ஊராட்சியில் நிலையாம்பாடி கிராமத்தில் ஏற்கனவே பரமக்குடி ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் ஏழு குழல் விளக்குகள் அமைக்கப்பட்டு நல்ல நிலையில் எரிந்து கொண்டிருப்பதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**50--**

**வடகிருஷ்ணாபுரத்திற்கு தார்ச் சாலை வசதி**

வினா எண் *33556*--**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

புவனகிரி தொகுதி, வட கிருஷ்ணாபுரத்திற்கு தார்ச் சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நிதிப் பற்றாக்குறை காரணமாக சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்ட சாலை வசதி செய்ய நடப்பாண்டில் திட்டம் இல்லை.

**51--**

**பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் இணைப்புச் சாலை வசதி**

வினா எண் *33557*--**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், மீதிகுடி முதல் கோவிலாம்பூண்டி இணைப்பு சாலை, கோவிலாம்பூண்டி முதல் சிதம்பரம் சாலை வரை, கோவிலாம்பூண்டி முதல் கீழ் அனுவம்பட்டு வரை கந்தமங்கலம் முதல் மீதிகுடி மேற்கு காலனி வரை இணைப்புச் சாலை வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

*1995 நவம்பர் 3]*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மீதிகுடி முதல் கோவிலாம்பூண்டி வரை உள்ள சாலை வேலை 1993–94–ஆம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் எடுத்து முடிக்கப்பட்டு உள்ளது. கோவிலாம்பூண்டி முதல் சிதம்பரம் வரையிலான சாலை, கோவிலாம்பூண்டி கீழ் அனுவம்பட்டு மற்றும் கந்தமங்கலம் மீதிகுடி இணைப்புச் சாலைகள் அமைக்க திட்டங்கள் ஏதும் தற்சமயம் இல்லை.

**52--**

**புவனகிரி தொகுதியில் சாலை வசதி**

வினா எண் 33565--**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ) புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், தெற்கு திட்டை மீராஜர், மேல் புவனகிரி அண்ணா நகர் மேட்டுத் தெரு ஆகிய இடங்களுக்குச் சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது செய்யப்படும்?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இந்த நடப்பாண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தெற்கு திட்டை காலனி சாலை மேம்பாடு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. மீராஜர் கிராமத்தில் சாலை மேம்பாடு 80 சதவிகிதம் ஊராட்சி நிதியில் 1995–96–ஆம் ஆண்டில் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**53--**

**புவனகிரி தொகுதியில் தார்ச் சாலை அமைத்தல்**

வினா எண் 33568--**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், பின்னத்தூர் முஸ்லீம் தெரு, கொடிப்பள்ளம், மீதிகுடி ஆதி திராவிடர் கிழக்கு காலனி, மீதிகுடி மேற்கு தெரு இணைப்புச் சாலை, புதுச்சத்திரம் முதல் கரிக்குப்பம் சாலைகளைச் செப்பனிட்டு தார்ச் சாலையாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மீதிக்குடி ஆதிதிராவிடர் காலனிக்கு சாலை வசதி செய்ய 1994-95ஆம் ஆண்டு தீவிர ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 20,000 அனுமதிக்கப்பட்டது. இதர தெருக்களுக்கு மேம்பாடு செய்ய திட்டம் எதுவும் நடப்பாண்டில் இல்லை. புதுக்குப்பம் முதல் கரிக்குப்பம் வரை தார்ச் சாலை நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**54--**

**பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் சாலைகளை இணைத்தல்**

வினா எண் 33578--**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், பின்னத்தூர் மேற்கு பகுதியிலுள்ள தெருக்கள் இரண்டையும் சிதம்பரம் பிச்சாவரம் நெடுஞ்சாலையுடன் இணைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செய்யப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) : புதிய சாலைகள் அமைக்கும் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை. மேலும் இக்குறிப்பிட்ட சாலை தனியார் நிலங்கள் ஆர்ஜிதம் செய்து அமைக்க வேண்டியுள்ளதால் நில ஆர்ஜிதம் செய்த பின்னரே இவ்வேலையை மேற்கொள்ள இயலும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**55--**

**புவனகிரி தொகுதியில் சாலை வசதி**

*வினா எண் 33579*--**செல்வி கோ. மல்லிகா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புவனகிரி தொகுதியைச் சேர்ந்த பரங்கிப்பேட்டை ஒன்றியம், பரங்கிப்பேட்டை-பெரியக்குமட்டி-சேந்தரக்கிள்ளை வயலாமூர், சாத்தப்பாடி-குறிஞ்சிப்பாடி மற்றும் பு. ஆதிவராக நல்லூர் முதல் குரியாமங்கலம் வரை உள்ள செம்மண் சாலையை தார்ச் சாலையாக அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செய்யப்படும் ?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்ட தார்ச் சாலையை மேம்பாடு செய்ய இந்த நிதியாண்டில் செயற்குறிப்பேதும் இல்லை.

**56--**

**புவனகிரி ஒன்றியத்தில் மயானப் பாதை வசதி**

*வினா எண் 33589*--**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், கிளாவடிநத்தம் காலனி கிராமத்தில் மயானப்பாதை சீர் செய்யவும், வத்துராயன் தெத்து கிராமத்திற்கு புதியதாக மயானப் பாதை அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கிளாவடிநத்தம் கிராமத்தில் காலனி மேம்பாடு வேலை 1995-96-ல் 80 சதவிகிதம் வேலைகளில் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. வத்துராயன்தெத்து கிராமத்தில் ரூ. 5,000 மதிப்பீட்டில் மயானப் பாதை அமைக்க 1994-95-ல் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

[1995 நவம்பர் 3

57--

### புவனகிரி தொகுதியில் மயானப் பாதையை சீர்செய்தல்

வினா எண் 33591--செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், பின்னத்தூர் மற்றும் கோவிலாம்பூண்டி ஊராட்சி அரிசனக் காலனி மயானப் பாதையைச் சீர் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): நடப்பாண்டில் திட்டம் ஏதும் இல்லை. 1995-96-ல் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் 80 சதவிகிதம் வேலைகளில் சேர்த்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

58--

### புவனகிரி தொகுதி சுடுகாடுகளுக்கு அடிப்படை வசதி

வினா எண் 33613--செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா---

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், மீதிகுடி, மீதிகுடி ஆதி திராவிடர் கிழக்கு காலனி மற்றும் கொடிப்பள்ளம் ஆகிய இடங்களிலுள்ள மயானத்திற்குச் சாலை வசதியும் எரிப்புக் கொட்டகை வசதியும் செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செய்து தரப்படும்?

**விடை---**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): நடப்பு நிதியாண்டில் சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்ட மயான சாலை அமைக்கும் வேலை எடுத்துச் செய்ய நடவடிக்கையில் உள்ளது.

*1995 நவம்பர் 3]*

**59--**

**புவனகிரி தொகுதி சுடுகாடுகளுக்கு அடிப்படை வசதி**

வினா எண் *33618*--**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், மேற்கு மீதிகுடி அரிசனக் காலனி, கந்தமங்கலம் காலனி மற்றும் பின்னத்தூர் ஆதிதிராவிடர் காலனி மயானங்களுக்கு மயானப்பாதை அமைத்து தர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது செய்து தரப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)*: இந்த நிதியாண்டில் சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்ட வேலையை எடுத்துச் செய்ய வாய்ப்பில்லை.

**60--**

**பேரை குடிநீர்த் திட்டத்தில் மின் இணைப்பு வழங்குதல்**

வினா எண் *36025*--**திரு. இரா. அப்பு நடேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* திருவட்டார் தொகுதி, மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்தில், பேரை குடிநீர்த் திட்டத்தில் மின் இணைப்பு வழங்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், உடனடியாக மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மேல்புறம் ஊராட்சி ஒன்றியம், பேரை குடிநீர்த் திட்டத்தில் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, மின் இணைப்பு வழங்கப்பட்டு 11-2-1994 முதல் இத்திட்டம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

**61--**

**ஈரோடு-காங்கேயம் சாலையைப் புதுப்பித்தல்**

வினா எண் 36284--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஈரோடு-காங்கேயம் முனியப்பன் கோவில் வழி சாலையைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஈரோடு--காங்கேயம் சாலையில் பிரிந்து முனியப்பன் கோயில் செல்லும் சாலை மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தில் பராமரிப்பில் உள்ள சாலையாகும். இதன் மொத்த நீளம் (கி.மீ. 0/0-2/0) 2.00 கி.மீ. ஆகும். 1993-94 ஆம் வருடத்தில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இரண்டாம் அடுக்கு கப்பி போடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் (1994-95) கி.மீ. 0/0-1/6 வரை தார்ச்சாலையாக மாற்றுவதற்கு ரூ. 2.00 இலட்சத்திற்கு மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தின் கீழ் சேர்க்க மாவட்ட ஆட்சித் தலைவர், பெரியார் மாவட்டம், ஈரோடு, அவர்களுக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் பெறப்பட்ட பிறகு இப்பணி ஆரம்பிக்கப்படும். மீதமுள்ள 0.4 கி.மீ. நீளத்தில் தார் பரப்பு அமைக்க வரும் ஆண்டில் ஒன்றியத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

**62--**

**காங்கேயம்பாளையம்--கள்ளகவுண்டம்பாளையம் வரை சாலை அமைத்தல்**

வினா எண் 36291--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

மொடக்குறிச்சி ஒன்றியம், காங்கேயம்பாளையம்--உள்ள கவுண்டம்பாளையம் வரை சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நடப்பு ஆண்டில் மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றிய பொது நிதியின் கீழ் மொடக்குறிச்சி ஒன்றியம் காங்கேயம் பாளையம் சின்னகவுண்டம் பாளையம் வரை சாலை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**63--**

**வேலம்பாளையம்--சேமூர் வரை தார்ச்சாலை அமைத்தல்**

வினா எண் *36294*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, வேலம் பாளையத்திலிருந்து--சேமூர் வரை தார்ச்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்.**

இந்தச் சாலையின் மொத்த நீளம் *3.20* கி.மீ. ஆகும். தற்பொழுது *0.60* கி.மீ. நீளம் கப்பிச் சாலையாக உள்ளது. மீதமுள்ள *2.60* கி.மீ. நீளம் தார்ச்சாலையாக உள்ளது. நடப்பு நிதியாண்டில் *0.60* கீ.மீ. நீளத்தை தார்ச் சாலையாக மேம்படுத்த ரூ. *0.80* லட்சம் செலவில் நிதி ஒதுக்கீடு செய்து வேலை ஆரம்பிக்கப்படவுள்ளது.

**64--**

**கணபதிபாளையம்--குமாரசாமிபுரம் சாலை வரை தார்ச் சாலை அமைத்தல்**

வினா எண் *36308*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, கணபதிபாளையத்திலிருந்து குமாரசாமிபுரம் சாலை வரைக்கும் தார்ச்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இந்தச் சாலை 1991-92-ம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் 0.0-2/0 வரை கப்பிச் சாலையாக அமைக்கப்பட்டது. இச்சாலையில் கி. மீ. 0/0-1/6 வரை ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து ரூ. 2.00 இலட்சம் செலவில் தார்ச் சாலையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள சாலையை தார்ச் சாலையாக மாற்ற ரூ. 3.50 இலட்சம் தேவைப்படும். நிதி வசதி இல்லாததால் இதனை தற்சமயம் செய்ய இயலாது.

**65--**

**கூடுவெளிச்சாவடி குடிநீர் கிணற்றைச் சுத்தம் செய்தல்**

வினா எண் 36432--திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காட்டுமன்னார்கோவில் தொகுதி, கூடுவெளிச்சாவடி கிராமக் குடிநீர்க் கிணறு சுத்தம் செய்யப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குமராட்சி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கூடுவெளிச் சாவடி ஊராட்சி, சாவடி அரிசனக் காலனியில் திறந்த வெளிக்கிணறு ஒன்று உள்ளது. அக்கிணறு பொது மக்களால் நீண்டகாலமாக பயன்படுத்தப்படாமல் அசுத்தமான நிலையில் உபயோகமற்றதாகவுள்ளது. இந்தக் கிணற்றை தூர் எடுத்து சுத்தம் செய்து கிணற்றுக்கு சுற்றுச்சுவர் எழுப்பி தூண்கள் கட்டி உருளை பொருத்தினால் தான் பொதுமக்கள் அக்கிணற்றைப் பயன்படுத்த இயலும். இக்கிணற்றை சுத்தம் செய்திட நடவடிக்கை தொடரப்பட்டு வருகிறது.

TRUTH ALONE TRIUMPHS

1995 நவம்பர் 3]

66--

## பொழிச்சலூர்--போரூர் சாலையை தார்ச்சாலையாக்குதல்

வினா எண் 36518--திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பல்லாவரம் அடுத்துள்ள பொழிச்சலூர் கிராமத்திலிருந்து போரூருக்குச் செல்லும் குறுக்குச் சாலையை தார்ச்சாலையாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**விடை**--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்.**

(அ) மற்றும் (ஆ): பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பொழிச்சலூர் ஊராட்சியில் இருந்து போரூருக்குச் செல்லும் சாலையை பொழிச்சலூர் ஊராட்சி எல்லை வரை தற்போது ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1994-95-ஆம் ஆண்டு கப்பி சாலையாகவும் 1995-96 ஆம் ஆண்டு தார்ச் சாலையாகவும் மாற்றி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

67--

## குடவாசல் ஒன்றியத்தில் மேல்நிலைத் தொட்டியைச் சரிசெய்தல்

வினா எண் 36733--திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், அய்யம்பேட்டை ஊராட்சி, மானந்தகுடி கிராமத்தில் பழுதுபட்ட நிலையில் உள்ள மேல்நிலைத் தொட்டியையும், குடிநீர்க் குழாயையும் சரிசெய்து தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை**--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குடவாசல் ஊராட்சி ஒன்றியம், அய்யம்பேட்டை ஊராட்சி, மானந்தகுடி கிராமத்தில் பழுதுபட்ட நிலையில் இருந்த மேல்நிலைத்தொட்டி மற்றும் குடிநீர்க் குழாய்கள் சரி செய்யப்பட்டு தற்போது நல்ல நிலையில் இயங்கி வருகின்றன.

**68--**

### திரியம்பகபுரத்தில் நெற்களம் அமைத்தல்

வினா எண் *37162*--திரு. **எஸ். ஆசைமணி**: *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், பெரும்பண்ணையூர் ஊராட்சி, திரியம்பகபுரத்தில் நெற்களம் அமைத்துத்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*குடவாசல் ஒன்றியத்தில் 1994-95 நடப்பு நிதியாண்டில் 4 ஊராட்சிகளில் கட்டப்படுகிறது. பெரும்பண்ணையூர் திரியம்பகபுரத்தில் 1995-96 ஆம் ஆண்டில் தளம் கட்டித்தர நிதி நிலையைப் பொருத்து செய்து தரப்படும்.*

**69--**

### கிள்ளியூர் ஊராட்சி சாலையை தார்ச்சாலையாக்குதல்

வினா எண் *37203*--திரு. **எஸ். ஆசைமணி**: *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், கிள்ளியூர் ஊராட்சி, ஆலத்தூர்-கிள்ளியூர் உக்கடை சாலையைத் தார்ச் சாலையாக மாற்றி அமைக்க செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*குடவாசல் ஒன்றியம், ஆலத்தூர், கிள்ளியூர், உக்கடை சாலையை தார்ச்சாலையாக அமைக்க தற்போது செயற்குறிப்பு இல்லை.*

*1995 நவம்பர் 3]*

**70--**

## வேலூர் தொகுதியில் தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் *37258*--**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வேலூர் தொகுதி, பிள்ளையார் குப்பம் (பெருமுகை ஊராட்சி) அலமேலுமங்காபுரம் புதிய ஊர்விரிவுப் பகுதி, சத்துவாச்சாரி மலையடிவாரம் ஆகிய பகுதிகளில் தெரு விளக்குகள் அமைக்க ஆவன செய்யப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெருமுகை ஊராட்சி, பிள்ளையார் குப்பத்தில் தெரு விளக்கு அமைக்க ஊராட்சியில் போதிய நிதிவசதியில்லாததால் அடுத்த ஆண்டில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் அல்லது பரவலாக்கப்பட்ட திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படும் என்றும் அலமேலுமங்காபுரம் புதிய ஊர் விரிவுப் பகுதியான அழகிரி நகரில் *6* தெரு விளக்குகள் அமைக்கப் பரவலாக்கப்பட்ட திட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், சத்துவாச்சாரி சிறப்பு நிலை பேரூராட்சி எல்லைக்குட்பட்ட மலையடிவாரம் பகுதிக்கு புதிதாக தெருவிளக்கு அமைத்தல் சம்பந்தமாக மின்வாரிய அலுவலரை கோரியுள்ளதாகவும், மேற்படி தெருவிளக்கு அமைக்க மின்வாரியம் மதிப்பீடு தயாரித்து தெரிவித்தவுடன் மதிப்பீடு தொகை செலுத்தி புதிய விளக்குகள் அமைக்க நடவடிக்கைகளில் உள்ளது என்றும் வடாற்காடு-அம்பேத்கார் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**71--**

## அந்தியூர் தொகுதியில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல்

வினா எண் *37674*--**திரு. வே. பெரியசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அந்தியூர் தொகுதி, அம்மாபேட்டை ஒன்றியம், ரெட்டிப் பாளையம் சேரித்தெருவில் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம், வெள்ளித் திருப்பூர் ஊராட்சியைச் சேர்ந்தது ரெட்டிப்பாளையம் சேரி குடியிருப்பாகும். மேற்படி குடியிருப்பில் 550 பேர் வசித்து வருகின்றனர். இங்கு காற்றழுத்த மின் மோட்டார் பொருத்தப்பட்டுள்ள ஆழ்குழாய்க் கிணற்றிலிருந்து தற்போது தண்ணீர் பெறுகிறார்கள். அப்பகுதி மக்களுக்குப் போதிய குடிநீர் ஆதாரங்கள் இல்லாததால், இக்குடியிருப்புக்கு ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து புதிய ஆழ் குழாய்க்கிணறு அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**72--**

**தெக்கலூர்-சுண்டாகாம்பாளையம் சாலை செப்பனிடல்**

வினா எண் 38836--டாக்டர் மு. **சீனியம்மாள்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அவிநாசி தொகுதி, அவிநாசி ஒன்றியம், வாலியூர் பஞ்சாயத்து யூனியன், தெக்கலூரிலிருந்து சுண்டாகாம்பாளையம் சாலை எப்போது செப்பனிட்டுத் தரப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இச்சாலை 5.00 கி.மீ. நீளமுடையது. இச்சாலையை பழுது பார்க்க கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கோட்டப் பொறியாளரின் ஒப்புதலுக்குப் பின் பணி துவங்கப்படவுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**73--**

## ஆர்.ஆர். சாலையை பழுதுபார்த்தல்

*வினா எண் 38837--டாக்டர் மு.* ***சீனியம்மாள்:*** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

அவிநாசி தொகுதி, புலிப்பாரிலிருந்து வேமாண்டபாளையம் ஆர்.ஆர். *சாலை எப்போது பழுது பார்க்கப்படும்?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை *அமைச்சர்:***

*இச்சாலையின் நீளம் கி.மீ. 0/0/--5/8 நீளமுடையது. இந்த ஜல்லி சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால் கிராமச் சாலைகள் மேம்பாடு திட்டத்தின் கீழ் கோட்டப் பொறியாளரின் ஒப்புதலுக்குப் பின் பணி துவங்கப்படவுள்ளது.*

**74--**

## அவிநாசி ஒன்றியச் சாலையை செப்பனிடல்

*வினா எண் 38838--டாக்டர் மு.* ***சீனியம்மாள்:*** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

அவிநாசி தொகுதி, அவிநாசி ஒன்றியம், தெக்கலூரிலிருந்து ஆலம்பாளையம், வடுகபாளையம், பெரிய ஓலைப்பாளையம், *பிச்சம்பாளையம் சாலை எப்போது செப்பனிட்டுத் தரப்படும்?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை *அமைச்சர்:***

*இச்சாலை நீளம் 0/0--1/6 கி.மீ. உள்ளது. இச்சாலை போக்குவரத்துக்கு ஏற்றதாக உள்ளது. வடுகபாளையம், பிச்சம்பாளையம், பெரிய ஓலைப்பாளையம் வரையிலுள்ள சாலையின் நீளம் 0/6/--2/4 பழுதடைந்துள்ளது. இச்சாலைப்பணி 1995-96 நிதி ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.*

75--

**அன்னூர் ஒன்றியத்தில் மெட்டல் சாலை அமைத்தல்**

வினா எண் 38850--**டாக்டர் மு. சீனியம்மாள்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அவிநாசி தொகுதி, அன்னூர் ஒன்றியம், காரே கவுண்டன் பாளையம் ஊராட்சி கெம்மநாயக்கன் பாளையத்திலிருந்து சாலையூர் வரை மெட்டல் சாலை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இச்சாலை 3.00 கி.மீ. நீளமுள்ளது. இதில் 0/0--1/0 வரை (அக்கம்பாளையம் வரை) 1994-95 ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும். மீதமுள்ள சாலையை 1995-96-ம் ஆண்டில் சேர்த்து நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப மேற்கொள்ளப்படும்.

76--

**கெம்மநாயக்கன் பாளையத்தில் தெருவிளக்குகள் அமைத்தல்**

வினா எண் 39851--**டாக்டர் மு. சீனியம்மாள்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அவிநாசி தொகுதி, அன்னூர் ஒன்றியம், கெம்மநாயக்கன் பாளையத்தில் முக்கிய வீதிகளில் தெருவிளக்குகள் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கெம்மநாயக்கன்பாளையத்திற்கு ஏற்கெனவே உள்ள 14 விளக்குகள் நீங்கலாக, புதியதாக 31 கூடுதல் தெருவிளக்குகள் தேவைப்படும் என்றும், அதற்கு ரூ.80,600 மின்வாரியத்திற்குச் செலுத்தப்பட வேண்டும் என்றும், காரே கவுண்டன்பாளைய

*1995 நவம்பர் 3]*

ஊராட்சியின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு முக்கியமான இடங்களில் *23* தெருவிளக்குகள் மட்டும் முதற்கட்டமாக புதிதாக அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு காரே கவுண்டன்பாளைய தனி அலுவலருக்கு அறிவுரை வழங்கியுள்ளதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**77--**

**ஆலங்குட்டை ஊருக்கு மெட்டல் சாலை அமைத்தல்**

வினா எண் *38852*--டாக்டர் மு. **சீனியம்மாள்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அவினாசி தொகுதி, அன்னூர் ஒன்றியம், ஆலங்குட்டை என்ற ஊருக்கு மெட்டல் சாலை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1994-95* ஆம் ஆண்டுத் திட்டத்தில் போதிய நிதி வசதியின்மையால் மெட்டல் சாலையாக மாற்ற இயலவில்லை. *1995-96* ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டங்களில் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப மெட்டல் சாலையாக மாற்றப்படும்.

**78--**

**வெள்ளை மண்டபம் மயானத்திற்கு கொட்டகை அமைத்தல்**

வினா எண் *39438*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், சீதக்கமங்கலம் ஊராட்சி, வெள்ளை மண்டபம் மயானத்திற்கு கொட்டகை அமைக்க ஆவன செய்யப்படுமா?

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குடவாசல் ஒன்றியம், சீதக்கமங்கலம் ஊராட்சி, வெள்ளை மண்டபம் மயானத்திற்கு கொட்டகை கட்டுவதற்கு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் போதுமான நிதிநிலையில்லாததால் ஒன்றிய பொது நிதியிலிருந்து செய்து முடிக்க நடவடிக்கையில் உள்ளது.

**79--**

வாய்க்கால்களின் குறுக்கே சிறுபாலம் கட்டுதல்

வினா எண் *39434*--திரு. **எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், வயலூர் மயானச் சாலையின் குறுக்கே செல்லும் இரண்டு வாய்க்கால்களிலும் சிறு பாலம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குடவாசல் ஒன்றியம், வயலூர் ஊராட்சியில் மயான சாலையின் குறுக்கே செல்லும் இரண்டு வாய்க்கால்களிலும் சிறு பாலம் கட்டுவதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.*40,000* ஆகும். இதனை ஒன்றிய பொதுநிதியிலிருந்து செலவு மேற்கொண்டு செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**80--**

நடுத்தெருவிற்கு சாலை வசதி செய்தல்

வினா எண் *39442*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம் சீதக்கமங்கலம் ஊராட்சி, ஐந்தில் இரண்டு கிராமத்தில் நடுத் தெருவிற்கு சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சீதக்கமங்கலம் ஊராட்சியில் ஐந்தில்-இரண்டு கிராமத்தில் நடுத்தெருவிற்கு சாலை வசதி 1994-95 ஆம் நிதியாண்டில் எஞ்சிய நிதி ஒதுக்கீடு இல்லாததால் செய்து தரவில்லை. வரும் நிதியாண்டில் நிதிநிலையினை அனுசரித்து செய்து தரப்படும்.

**81--**

**அந்தியூர்-அம்மாபேட்டை சாலையைச் சீர்செய்தல்**

வினா எண் 39766--**திரு. வே. பெரியசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரியார் மாவட்டம், அந்தியூர் ஒன்றியம்-அம்மாபேட்டைச் சாலையில் பள்ளபாளையம் வரை சாலை பழுது அடைந்துள்ளதால் தார்ச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள சாலை 1994-95 ஆம் ஆண்டில் தலசாலை மான்யத் திட்டத்தின் கீழ் பராமரிப்பு செய்யப்பட்டு நல்ல நிலையில் உள்ளது.

**82--**

**லக்காபுரம் பரிசல்துறை பாதையை தார்ச் சாலையாக்குதல்**

வினா எண் 40085--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி-லக்காபுரம் பரிசல்துறை பாதையை தார்ச்சாலையாக மாற்றி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலை ஊரகச் சாலைகள் திட்டத்தின் கீழ் நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டு தார்ச் சாலை அமைக்கப்பட்டு வருகிறது.

**83--**

சாவடிப்பாளையம்-தஞ்சை ஊத்துக்குளிக்கு தார்ச்சாலை அமைத்தல்

வினா எண் 40087--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, சாவடிப்பாளையத்திலிருந்து தஞ்சை ஊத்துக்குளி வரை தார்ச்சாலை போட அரசு ஆவன செய்யுமா?

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சாவடிப்பாளையத்திலிருந்து தஞ்சை ஊத்துக்குளி வரை ஏற்கனவே தார்ச் சாலையாக உள்ளது. இச்சாலை நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்ததாகும்.

**84--**

கொடுமுடி ஒன்றியத்தில் தார்ச்சாலை அமைத்தல்

வினா எண் 40088--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கொடுமுடி ஒன்றியம், கொடுமுடி நத்தம் மேட்டிலிருந்து துளுவம்பாளையம் வரை தார்ச்சாலை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள சாலை 1994-95 ஆம் ஆண்டில் ஒன்றிய பொதுநிதியிலிருந்து ரூ. 2 லட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலை அமைக்க அனுமதிக்கப்பட்டு பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**85--**

**திருப்பத்தூர் தொகுதியில் தெருவிளக்குகளைப் புதுப்பித்தல்**

*வினா எண் 40555*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருப்பத்தூர் தொகுதி, ஜோலார்பேட்டை ஒன்றியம், பெரிய மோட்டூர் கிராமத்தில் பழுதடைந்த தெருக்களைச் சீர்படுத்தி 'கான்கிரிட்' போட்டு புதுப்பித்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள பெரிய மோட்டூர் கிராமத்தில் தெருக்களை சீரமைக்கும் பணி ஊராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, கான்கிரிட் போட வேண்டிய அவசியமில்லை.

**86--**

**திருவலம்பொழிலில் தடுப்புச் சுவர் கட்டுதல்**

*வினா எண் 43466*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு ஊராட்சி ஒன்றியம், திருவலம் பொழில் கிராமத்தில் தடுப்புச் சுவர் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1993-94* ஆம் ஆண்டு மாவட்டத்தின் பராமரிக்கும் திட்டத்தின் கீழ் திருவலம் பொழில் கிராமத்தில் தடுப்புச் சுவர் கட்டித் தரப்பட்டுவிட்டது.

**87--**

## திருச்சோற்றுத் துறையில் தடுப்புச் சுவர் கட்டுதல்

வினா எண் *43467*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு ஊராட்சி ஒன்றியம், திருச்சோற்றுத்துறை கிராமத்தில் தடுப்புச் சுவர் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1993-94* ஆம் ஆண்டு மாவட்டத்தின் பராமரிக்கும் திட்டத்தின் கீழ் திருச்சோற்றுத்துறை கிராமத்தில் தடுப்புச் சுவர் கட்டி முடிக்கப்பட்டு விட்டது.

**88--**

## சிவந்தி திடலில் தடுப்புச் சுவர் கட்டுதல்

வினா எண் *43469*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு ஊராட்சி ஒன்றியம் சிவந்தி திடல் கிராமத்தில் தடுப்புச் சுவர் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3]*

*1993-94* ஆம் ஆண்டு மாவட்ட பரவலாக்குத் திட்டத்தின் கீழ் சிவந்தி திடல் கிராமத்தில் தடுப்புச் சுவர் கட்டி முடிக்கப்பட்டு விட்டது.

**89--**

### பூதராயநல்லூரில் தடுப்புச் சுவர் கட்டுதல்

வினா எண் *43470*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு ஊராட்சி ஒன்றியம், பூதராய நல்லூர் கிராமத்தில் தடுப்புச் சுவர் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவையாறு ஊராட்சி ஒன்றியம், பூதராயநல்லூர் கிராமத்தில் தடுப்புச் சுவர் கட்டித்தர *1993-94* ஆம் ஆண்டு மாவட்டத் திட்டத்தின் கீழ் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**90--**

### பேராவூரணி ஒன்றியத்தில் சாலைகளை செப்பனிடுதல்

வினா எண் *43768*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், குறிச்சியிலிருந்து பாலத்தளி செல்லும் இணைப்புச் சாலை, இடையாத்தி ஊராட்சி, வேலாம்பட்டி மேற்கு வரை செல்லும் ஊராட்சிச் சாலை, வலசக் காட்டிலிருந்து கல்லூரணிக்காடு செல்லும் சாலை, புனல்வாசல் வழியாக கட்டயங்காடு செல்லும் சாலை, பழைய நகரத்திலிருந்து பேராவூரணி மற்றும் ஏரிக்குச் செல்லும் சாலைகள், சீவன்குறிச்சி செல்லும் சாலை மற்றும் சீவன்குறிச்சியில் இருந்து தொந்துபுளிக்காடு வழியாக தென்னங்குடி செல்லும் சாலை, புளிவலம் ஆதி திராவிடர் காலனி சாலை ஆகியவற்றைச் செப்பனிட்டு மேம்பாடு செய்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

புளிவலம் ஆதிதிராவிடர் காலனி சாலை சிறப்பு தீவிர வேலை வாய்ப்புத் திட்டம் 1993–94-ல் முதல் கட்டமாக 400 மீட்டர் அளவில் சிவப்பு கப்பி அடிக்கப்பட்டுள்ளது. பழைய நகரத்தில் இருந்து பேராவூரணி ஏரிக்கு செல்லும் சாலை தீவிர ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1994–95ல் மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. ஏனைய சாலைப் பணிகள் குறித்து தற்போது திட்டம் எதுவும் இல்லை.

**91--**

**பேராவூரணி தொகுதியில் சாலைகளை செப்பனிடுதல்**

வினா எண் 43775--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பேராவூரணி தொகுதி, இடையாத்தி கொல்லர் தெருவில் இருந்து மேற்படி கிழக்குப்பள்ளி வரை ஊராட்சி சாலை, திருச்சிற்றம்பலம் ஊராட்சி, நரியங்காட்டிலிருந்து புனல்வாசல் செல்லும் குறுக்குச் சாலை, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் சாலையிலிருந்து கூத்தாடிவயல், விளங்குளம் செல்லும் சாலை, ரெண்டாம்புளிக்காடு, அழகிய நாயகிபுரம் சானல் ஆகியவற்றைச் செப்பனிட்டு மேம்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி கொல்லர் தெருவில் இருந்து கிழக்குப்பள்ளி வரை செல்லும் சாலை தீவிர ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1994–95ல் எடுத்துச் செய்யப்பட்டு வருகிறது. இதர சாலைப் பணிகள் குறித்து தற்போது திட்டம் எதுவும் அரசு அளவில் இல்லை.

1995 நவம்பர் 3]

92--

## பேராவூரணி ஒன்றியத்தில் சாலைகளை செப்பனிடுதல்

வினா எண் 43786--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், வாட்டாத்தி கோட்டை முதல் வா. கொல்லைக்காடு வரை மீதமுள்ள 1.6 கி.மீ. சாலை குறிச்சி சாலை 2.4 கி.மீ. பழைய நகரம் ஊராட்சியில் குளத்துக்கரை செல்லும் சாலை, திருச்சிற்றம்பலம் ஊராட்சி திருச்சிற்றம்பலம் முதல் பொக்கன்விடுதி வரையுள்ள குறுக்குச் சாலை, தென்னங்குடியிலிருந்து குளத்தூர் வரையுள்ள 1 கி.மீ. சாலை, தென்னங்குடி வடக்கு, சாலை முதல் தொடர்ந்து புளிக்காடு வரையிலுள்ள சாலை, வலப்பிரமன்காடு, வீரக்குடி சாலை ஆகியவற்றைச் செப்பனிட்டு மேம்பாடு செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பேராவூரணி ஒன்றியம், வாட்டாத்திக்கோட்டை முதல் வா. கொல்லைக்காடு வரையுள்ள சாலை, பழைய நகரம் ஊராட்சியில் குளத்துக்கரை சாலை ஆகியவை மேம்பாடு செய்யப்பட்டு உள்ளது. குறிச்சி சாலை 1994–95 ஆம் ஆண்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டு செய்து முடிக்கப்பட உள்ளது. மற்ற சாலைப் பணிகள் குறித்து திட்டம் எதுவும் தற்போதைய நிலையில் இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

93--

## சென்னை நகருக்குக் குடிநீர் வசதிக்கான செலவு விவரம்

வினா எண் 44363--டாக்டர் எஸ்.எஸ்.ஆர். இராமதாஸ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நெய்வேலியிலிருந்து சென்னை நகருக்குக் குடிநீர் கொண்டுவர இதுவரை மாநில அரசு செலவிட்ட தொகை எவ்வளவு?

(ஆ) இதற்காக, நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் தொகை ஏதேனும் அரசிடமிருந்து பெற்றுள்ளதா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சென்னை நகரில் 1993-ல் நிலவிய குடிநீர்த் தட்டுப்பாட்டினை சமாளிக்க 14-4-1993 முதல் 15-11-1993 முடிய நெய்வேலியிலிருந்து சென்னை நகருக்கு இரயில் மூலம் குடிநீர் கொண்டு வர மொத்தம் ரூ.10,84,87,991 (ரூபாய் பத்து கோடியே எண்பத்தி நான்கு லட்சத்து எண்பத்தேழாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்று மட்டும்) செலவிடப்பட்டது.

(ஆ) ஆம்.

(இ) நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனிடமிருந்து பெறப்பட்ட மின்சாரத்தை பயன்படுத்தியதற்கான செலவு மட்டும் ரூ.1,16,580 (ரூபாய் ஒரு லட்சத்து பதினாறாயிரத்து ஐநூற்று எண்பது மட்டும்).

**94--**

**பலேரிப்பள்ளி பேருந்து நிலையத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்**

வினா எண் 44519--திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கிருஷ்ணகிரி தொகுதி, வேப்பன்பள்ளி ஒன்றியம், பலேரிப்பள்ளி பேருந்து நிலையத்தில் ஆழ்குழாய்க்கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கிருஷ்ணகிரி தொகுதி, வேப்பனப்பள்ளி பேருந்து நிலையத்தின் அருகில் ஆழ்குழாய்க்கிணறு அமைப்பது குறித்து, உலக வங்கித் திட்டத்தின்கீழ் சேர்க்க முன்னுரிமை அளிக்கப்படும் என்று தருமபுரி மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**95--**

**கீழவெளி-மாந்தட்டை சுடுகாட்டிற்கு அடிப்படை வசதி**

வினா எண் 45045--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி மயிலாடுதுறை வட்டம், கீழவெளி-மாந்தட்டை கிராமத்திலுள்ள சுடுகாட்டிற்கு நிரந்தர தகரக் கொட்டகையும் சுடுகாட்டிற்கு செல்லும் பாதைக்கு கருங்கல்கப்பி சாலையும் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள மாந்தட்டை கிராமத்திலுள்ள சுடுகாட்டிற்கு தகர கொட்டகையும் சுடுகாட்டிற்கு செல்லும் பாதையில் கருங்கல் கப்பி போடவும் ரூ.45,000 உத்தேச மதிப்பீடாகும். 1995-96 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு பெற்ற பின் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இப்பணியைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**96--**

**திருவாலங்காடு சுடுகாட்டிற்கு அடிப்படை வசதி**

வினா எண் 45046--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், திருவாலங்காடு கிராம சுடுகாட்டிற்கு "நிரந்தர தகர கொட்டகையும்" சுடுகாட்டிற்குச் செல்லும் சாலையை கருங்கல் கப்பிச் சாலையாக அமைத்துத் தரவும் அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1995-96* ஆம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு பெற்ற பின் வினாவில் கேட்கப்பட்டுள்ள தகரக் கொட்டகையும் கருங்கல் கப்பிச் சாலையும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

**97--**

காரனூர் சுடுகாட்டிற்கு அடிப்படை வசதி

வினா எண் *45047*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், காரனூர் கிராம சுடுகாட்டிற்குச் செல்ல "கருங்கல்கப்பி" சாலையும் "நிரந்தர தகரக் கொட்டகை" அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வினாவில் கேட்கப்பட்டுள்ள பணிகள் *1995-96* ஆம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு பெற்று எடுத்துச் செய்யப்படும்.

*1995 நவம்பர் 3]*

**98--**

### கீழப்பெரம்பூர்-சுடுகாட்டிற்கு அடிப்படை வசதி

*வினா எண் 45048*.--**திரு. எஸ். ஆசைமணி:** *மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, தரங்கம்பாடி பெரம்பூர் கிராமம், கீழப்பெரம்பூர் வீரசோழன் ஆற்றங்கரையில் அமைந்துள்ள "சுடுகாட்டிற்குச் செல்ல கருங்கல் கப்பி' சாலையும், நிரந்தர தகரக்கொட்டகையும் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வினாவில் கேட்கப்பட்டுள்ள பணிகள் 1995-96 ஆம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு பெற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

**99--**

### 69-தொழுதாலங்குடி சுடுகாட்டிற்கு அடிப்படை வசதி

*வினா எண் 45049*--**திரு. எஸ். ஆசைமணி:** *மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம் குத்தாலம் தொகுதி, 69, தொழுதாலங்குடி கிராமத்தில் மஞ்சளாறு மதகடிக்கு மேற்கே அமைந்துள்ள சுடுகாட்டிற்கு "தகரக் கொட்டகை" வசதியும் "சாலை வசதியும்" அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள கிராமத்துக்கான மயானப் பாதை நடைபாதை அளவே உள்ளது. இதனை சாலையாக மாற்ற ரூ.50,000 மதிப்பீட்டில் நில ஆர்ஜிதம் செய்து மேம்பாடு செய்ய வேண்டும். இம்மயானத்திற்கு தகரக் கொட்டகை அமைக்க ரூ.20,000 உத்தேச மதிப்பீடாகும். இப்பணிகள் 1995-96 ஆம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு பெறப்பட்ட பின் எடுத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**100--**

**கோனேரிராஜபுரம் சுடுகாட்டிற்கு அடிப்படை வசதிகள்**

வினா எண் 45050--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம் குத்தாலம் தொகுதி, கோனேரிராஜபுரம் கிராமத்திலுள்ள சுடுகாட்டிற்கு செல்ல சாலை வசதியும் தகரக்கொட்டகை வசதியும் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள பணிகள் 1995-96 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு பெற்ற பின் எடுத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

*1995 நவம்பர் 3]*

## பத்தாம் பட்டியல்

**1--**

### போலி சீட்டு கம்பெனிகளை தடை செய்தல்

வினா எண் *47989*--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

"தமிழகத்தில் போலி சீட்டு கம்பெனிகளை" தடைசெய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்:**

"போலி சீட்டு கம்பெனிகள்" என்று ஏதும் தமிழகத்தில் நடைபெறவில்லை. பதிவு செய்யாமல் சீட்டுகள் நடத்தி வரும் நிறுவனங்கள் "போலி சீட்டு கம்பெனிகள்" என்ற பெயரில் அழைக்கப்பட்டு வருகின்றன. கம்பெனிகள் சட்டத்தின் கீழும் கூட்டு வணிகச் சட்டத்தின் கீழும் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் சீட்டுகளை நடத்தி வருகின்றன. இவைகள் பதிவு செய்யப்பட்ட சீட்டுகளை நடத்தி வருகின்றன. பதிவு செய்யப்பட்ட சீட்டுகளுடன் பதிவுறாச் சீட்டுகளும், நடத்தப்படுவது கண்டுபிடிக்கப்பட்டால் அந்த நிறுவனங்கள் மீது அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. எனவே பதிவு பெறாமல் சீட்டுகள் நடத்தி வரும் சீட்டு நிறுவனங்கள் மீது அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**2--**

### பார்த்திபனூரில் சார்பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்துதல்

வினா எண் *43830*--டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* இராமநாதபுரம் மாவட்டம், பரமகுடி தாலுக்கா, பார்த்திபனூரில் சார்பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்த அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா?

*(ஆ)* ஆம், எனில் எப்போது ஆரம்பிக்கப்படும்?

TRUTH ALONE TRIUMPHS

[1995 நவம்பர் 3

**விடை--**

**மாண்புமிகு திரு. எஸ்.டி சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**3--**

**பத்திரம் எழுதுபவர்களுக்கு குறுகியகால பயிற்சி அளித்தல்**

வினா எண் *61328*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பத்திரம் எழுதுபவர்களுக்கு குறுகிய காலப்பயிற்சி அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**4--**

**பூங்குளத்தில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *27740*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருப்பத்தூர் தொகுதி, பூங்குளம் கிராமத்தில் ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டிடம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**விடை--**

***மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:***

பூங்குளம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் தான் செயல்பட்டு வருகிறது. இங்கு ஆரம்ப சுகாதார நிலையம் ஏதும் செயல்படவில்லை. எனவே ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்ட அவசியம் எழாது.

**5--**

**பிரேத பரிசோதனைக்காக சடலங்களைத் திறந்த வெளியில் வைத்தல்**

*வினா எண் 33386--திரு.* ***மா. சுந்தரதாஸ்:*** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

(a) Whether a number of dead bodies intended for post mortem are kept in open places at Royapettah Government Hospital in Madras?

(b) If so, the steps taken to keep the dead bodies free of contamination ?

**விடை--**

***மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:***

*(அ)* சடலங்கள் திறந்த வெளியில் வைக்கப்படுவதில்லை.

*(ஆ)* கேள்விக்கு இடமில்லை.

**6--**

**காசநோய் தடுப்பு முகாம்கள்**

*வினா எண் 47324--***டாக்டர் எஸ். சுந்தரராஜ்:*** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

(அ) 1993-94 ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் காசநோய் தடுப்பு கழகத்தின் மூலம் நடைபெற்ற சிகிச்சை முகாம்கள் எத்தனை?

(ஆ) பள்ளிகளில் காசநோய் மருத்துவர்கள் மூலம் காசநோய் தடுப்பது குறித்து, சொற்பொழிவாற்ற அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:**

(அ) 1993-94 ஆம் ஆண்டில் காசநோய் முகாம் ஏதும் நடைபெறவில்லை. ஆனால் அந்த ஆண்டில் நடைபெற்ற அனைத்து புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா சிறப்பு மருத்துவ முகாம்களில் மாவட்ட காசநோய் அலுவலர்கள் கலந்துகொண்டு காசநோய்க்கான நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

(ஆ) 1995-96 ஆம் ஆண்டு இந்த மாவட்டத்திலுள்ள அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் காசநோய் தடுப்பது குறித்து காசநோய் மருத்துவர்கள் மூலம் சொற்பொழிவு நிகழ்த்த மாவட்ட காசநோய் அலுவலர், இராமநாதபுரம் அவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

**7--**

**நாகரசம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம்**

வினா எண் 52151--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் ஊராட்சி ஒன்றியம், நாகரசம்பட்டி கிராமத்திலுள்ள அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு பொது மக்கள் சார்பில் நிலமும், பணமும் செலுத்தப்பட்டிருப்பதால் புதிய கட்டிடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

நிலம் சரிவர கையகப்படுத்தப்படாமல் இருப்பதால் தற்பொழுது இவ்வாரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டும் வாய்ப்பில்லை.

*1995 நவம்பர் 3]*

8--

**மொடக்குறிச்சி ஒன்றியத்தில் இரத்த வங்கியுடன் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

வினா எண் *54289*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், பழமங்கலம் ஊராட்சி, குட்டப்பாளையம், புதூர், பழமங்கலம் ஊராட்சி, ஆதிதிராவிடர் காலனி, செம்மாண்டம்பாளையம் ஆகிய கிராமங்களில் மகப்பேறு வசதி மற்றும் இரத்த வங்கியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

மாண்புமிகு **திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம் பழமங்கலம் ஊராட்சியில் அமைந்த கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

9--

**காகம் ஊராட்சிக்குட்பட்ட கிராமங்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

வினா எண் *54294*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், காகம் ஊராட்சி, எல்லப்பாளையம், கொளத்துப்பாளையம், தென்னம்பிள்ளை, புதூர், கொமரன்வலசு, மேற்குபாளையம், காகம் ஊராட்சி ஆதிதிராவிடர் காலனி சாணார்பாளையம், புதுப்பாளையம், காணியம்பாளையம் ஆகிய கிராமங்களில் மகப்பேறு வசதி மற்றும் இரத்த வங்கியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

மொடக்குறிச்சி ஒன்றியம், காகம் ஊராட்சியில் அமைந்த கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

10--

### பொங்காலிவரசு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் *54304*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஊராட்சி ஒன்றியம், வள்ளிபுரம் ஊராட்சி பொங்காலிவரசு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மொடக்குறிச்சி தொகுதி-கொடுமுடி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வள்ளிபுரம் ஊராட்சியில் பொங்காலிவரசு கிராமத்தில் தற்போது ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

11--

### மொடக்குறிச்சி தொகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் *54307*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், அட்டவணை அனுமன்பள்ளி ஊராட்சி, கரும்புளியாம்பாளையம், மாப்பிள்ளை பெரியபாளையம், அஞ்சுராம்பாளையம், அமராவதிபாளையம், முருகம்பாளையம், மாப்பிள்ளை கவுண்டன், தோட்டத்துப்புதூர், வேமாண்டம்பாளையம், பழையபாளையம், ஊஞ்சப்பாளையம், வெள்ளிவலசு, வேமாண்டம்பாளையம் ஆதிதிராவிடர் தெரு ஆகிய கிராமங்களில் இரத்த வங்கி மற்றும் பிரவச விடுதியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம் அட்டவணை அனுமன்பள்ளி ஊராட்சிகளில் அமைந்துள்ள கிராமங்களில் தற்போது ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

*1995 நவம்பர் 3]*

**12--**

**ஊஞ்சப்பாளையத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

வினா எண் 54327--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம் ஊஞ்சப்பாளையத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மொடக்குறிச்சி ஒன்றியம், ஊஞ்சப்பாளையத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

**13--**

**காமன்தொட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம்**

வினா எண் 57143--**திரு. கே.ஏ. மனோகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காமன்தொட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

காமன்தொட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்ட போதுமான நிலமும், பொது மக்கள் நன்கொடையும் கிடைக்கப்பெறாமையால் இங்கு புதிய கட்டிடம் கட்ட தற்சமயம் வாய்ப்பில்லை.

**14--**

**வடஆற்காடு மாவட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் விவரம்**

வினா எண் *61380*--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் எத்தனை?

*(ஆ)* இவற்றில் மருத்துவர்கள் நியமிக்காத இடங்கள் எத்தனை?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)*: வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் *62* ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. இதில் தற்போது பன்னிரண்டு மருத்துவப் பணியிடங்கள் காலியாக உள்ளது. அவற்றினை உடனடியாக நிரப்புவதற்கு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மருத்துவம் மற்றும் ஊரக சுகாதாரப்பணி இயக்குநர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

**15--**

**இயற்கை மருத்துவக் கல்லூரி ஏற்படுத்துதல்**

வினா எண் *63620*--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* தமிழ்நாட்டில் இயற்கை மருத்துவர்களை ஊக்குவிக்க அரசு இயற்கை மருத்துவக் கல்லூரி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* இக்கேள்விக்கே இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1995 நவம்பர் 3]

**16--**

**கதிர்வீச்சு சிகிச்சை முறைக்கு தனிப்பிரிவு ஏற்படுத்துதல்**

வினா எண் 67784--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அனைத்து தலைமை மருத்துவமனைகளிலும் கதிர் வீச்சு சிகிச்சை முறைக்கு தனிப்பிரிவு ஏற்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

அனைத்து தலைமை மருத்துவமனைகளிலும் கதிர் வீச்சு சிகிச்சை முறைக்கு தனிப்பிரிவு ஏற்படுத்துவதற்கு தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**17--**

**பரமக்குடியில் இரத்த சேமிப்பு வங்கி ஏற்படுத்துதல்**

வினா எண் 77333--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் இரத்த சேமிப்பு வங்கி ஏற்படுத்தப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

இல்லை.

**18--**

**ஆலந்தூரில் தொழிற்சாலை அமைத்தல்**

வினா எண் 78503--**திரு. ஆர்.பி. பரமசிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ) தமிழ்நாடு மூலிகை மருந்துக் கழகம் மூலம் ஆலந்தூரில் தொழிற்சாலை நிறுவப்படவுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?*

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம், திருப்போரூர் வட்டம் ஆலந்தூரில் உள்ள சிட்கோ தொழில் நிறுவன வளாகத்தில் உள்ள சி–29 மனையில் தொழிற்சாலை ஒன்று டாம்ப்கால் நிறுவனத்தால் 1989–ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் 17 சித்த மருந்துகள் தயாரிக்கப்பட்டன. தற்பொழுது 26 சித்த மருந்துகளும் 2 ஆயுர்வேத மருந்துகளும் தயாரிக்கப்பட்டு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**19--**

## கொடுமுடி ஒன்றியத்தில் இரத்த வங்கியுடன் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 79744--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், கொல்லங்கோவில் ஊராட்சி, கந்தசாமிபாளையம், கருக்கம்பாளையம், கொல்லங்கோயில், நத்தமேடு, ஆதிதிராவிடர் காலனி, எலவநத்தம், காளி பாளையம், கொல்லங்கோயில் ஊராட்சி, மேட்டு ஆதிதிராவிடர் காலனி, விலாங்காட்டு வலசு, வள்ளியாம்பாளையம்புதூர், சின்ன தாண்டாம்பாளையம், மோளப்பாளையம், அம்மன்கோவில் தோட்டம், பச்சங்கவுண்டன்வலசு, ஆகிய கிராமங்களில் பிரசவ வசதி மற்றும் இரத்த வங்கியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

பெரியார் மாவட்டம், கொடுமுடி ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகை 1,05,760. இவ்வூராட்சி ஒன்றியத்தில் ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்கனவே உள்ளன. 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அரசின் கொள்கையின்படி கொடுமுடி ஊராட்சி ஒன்றியத்தில் மேலும் பிரசவ வசதி மற்றும் இரத்த வங்கியுடன் கூடிய புதிய சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

**20--**

### ஆடுதுறைக்கு நகரப் பேருந்து இயக்குதல்

வினா எண் 48665--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகை-காயிதே மில்லத் மாவட்டம், மயிலாடுதுறையில் இருந்து ஆடுதுறை வரை சென்று கொண்டிருந்த தடம் எண் 13-சோழன் பேருந்தை மீண்டும் இயக்கி பள்ளி மாணவ மாணவியருக்கும், மக்களுக்கும் உதவிட அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

மயிலாடுதுறை-ஆடுதுறை தடத்தில் நகரத்தடம் எண் 13-ன் மூலம் தினசரி 6 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றது. பல்வழித் தடத்தில் இயங்கும் கால அட்டவணையை மாற்ற இயலாததால், மாணவியர்களின் நலனைக் கருத்தில் கொண்டு பள்ளி மாணவ-மாணவியர்களை இத்தடத்தில் இயங்கும் புறநகர்ப் பேருந்துகளில் ஏற்றி இறக்கிச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

**21--**

**சின்ன தாராபுரம்-கொடுமுடி பேருந்து வசதி**

வினா எண் *54241*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சின்னதாராபுரம்-கொடுமுடி, சி. கூடனூர், தென்னிலை, தொப்பம்பட்டி, வடபழனி, காட்டம்பட்டி, முருகம்பாளையம், சுமைதாங்கி, சாலைப்புதூர் வழியாக பேருந்து வசதி செய்வதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

கொடுமுடி, காட்டம்பட்டி, முருகம்பாளையம், சுமைதாங்கி, சாலைப்புதூர், வழித்தடத்தில் நேரடிப் பேருந்து வசதி உள்ளது. சி. கூடலூர், தென்னிலை, தொப்பம்பட்டி, வடபழனி முதலிய ஊர்களுக்கு பகுதி வாரியாக பேருந்து வசதி உள்ளது.

**22--**

**திருப்பத்தூர்-கோலார் தங்க வயலுக்கு பேருந்துகள் இயக்குதல்**

வினா எண் *61502*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருப்பத்தூரிலிருந்து கோலார் தங்கவயலுக்கு பேருந்துகள் விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

திருப்பத்தூரிலிருந்து கோலார்-தங்கவயலுக்கு பேருந்து இயக்க அனுமதி கோரி புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகத்திற்கும், கர்நாடக அரசு போக்குவரத்துக்

*1995 நவம்பர் 3]*

கழகத்திற்கும் கடிதம் எழுதப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**23--**

**வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் கூடுதல் பேருந்துகள் இயக்குதல்**

வினா எண் *61506*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ) வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் மேலும் பேருந்துகள் வேண்டி அரசிடம் பரிந்துரை வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தில் 31-3-1995 முடிய 91 பழைய பேருந்துகள் உள்ளன. மேலும் இவ்வாண்டில் பழைய பேருந்துகளுக்கு பதிலாக 136 புதிய பேருந்துகள் பல்வேறு தடங்களில் மாற்றி இயக்க பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் திட்டமிட்டுள்ளது.

**24--**

**வரதராஜன் பேட்டைக்கு பேருந்து இயக்குதல்**

வினா எண் *61883*--**திரு. ஆர். தங்கராஜ்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஜெயங்கொண்டத்திலிருந்து கல்லாத்தூர், பஞ்சனங்கரை, பூவானிப்பட்டு, அனிக்குறிஞ்சான், நெட்டலக்குறிச்சி, கீழநடுவாய், வழியாக வரதராஜன் பேட்டைக்கு புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

விடை--

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்: :

கோரிக்கையில் தெரிவித்துள்ள வழித்தடத்தின் தூரம் 22 கி.மீ. இவ்வழித்தடச் சாலையில் பஞ்சனங்கரை பிரிவு சாலை முதல் பூவானிப்பட்டு, அனிக்குறிஞ்சான், நெட்டலக்குறிச்சி வரையிலான 8 கி.மீ. தூரத்திற்கு கப்பிகள் பெயர்ந்தும், சாலை மேடும் பள்ளமும் நிறைந்து குறுகலான வளைவுகள் உள்ளதாலும், மேற்படி வழித்தடத்தில் பேருந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது. இது தவிர மீதம் உள்ள பகுதியில் தற்போது பேருந்து தேவையான அளவு இயக்கப்படுகிறது.

25--

பரமக்குடி உரச் சேமிப்பு கிடங்கு கட்டிடம் கட்டுதல்

வினா எண் 71525--டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாடு சேமிப்பு கிடங்கின் மூலம் இராமநாதபுரம் மாவட்டம, பரமக்குடியில் உர சேமிப்பு கிடங்கு கட்டிட இடம் தேர்வு செய்யப்பட்டு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை--

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், உணவு அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம், பரமக்குடியில் சேமிப்பு கிடங்கு கட்டுவதற்கான வியாபார நிலவர அறிக்கை மற்றும் சேமிப்பு இட வசதிக்கான தேவை ஆகியவற்றை ஆய்வு செய்து, சுமார் 3,000 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள ஒரு சேமிப்புக் கிடங்கினை, வாடகைக் கட்டிடத்தில் துவக்க முடிவு செய்தது. எனினும், தகுதியான கிடங்குகள் வாடகைக்கு கிடைக்கவில்லை. கிடங்கினை சிறிது காலத்திற்கேனும் வெற்றிகரமாக நடத்தினால் மட்டுமே நிலையான கிடங்குகளை கட்டுவது சாத்தியப்படும். இதற்கு சிறிது காலமாகும். இப்போதைக்கு கிடங்கு கட்ட நிலம் ஏதும் தேர்வு செய்யப்படவில்லை. எனவே, பரமக்குடியில் உடனடியாக நிலையான கிடங்கினைக் கட்டும் குறிப்பேதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

*1995 நவம்பர் 3]*

**26--**

**சிவகிரியில் கூட்டுறவுக் கட்டிட சங்கம் அமைத்தல்**

வினா எண் *53566*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், சிவகிரி பேரூராட்சியில் ஒரு கூட்டுறவுக் கட்டிட சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

ஈரோடு வட்ட கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் எல்லையில் சிவகிரி பேரூராட்சியும் சேர்ந்துள்ளதால், மேற்படி சிவகிரி பேரூராட்சியில் வீடுகட்ட முனைவோர் ஈரோடு வட்ட கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தில் உறுப்பினராக சேர்ந்து பயன் பெறலாம் என்பதால் மொடக்குறிச்சி தொகுதி கொடுமுடி ஒன்றியம் சிவகரி பேரூராட்சியில் ஒரு கூட்டுறவு கட்டிட சங்கம அமைக்கும் கருத்துரு ஏதும் அரசு பரிசீலனையில் இல்லை.

**27--**

**திருக்கோவில்களில் பணிபுரிவோர்க்கு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *83035*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாடு திருக்கோவில்களில் பணி புரிவோருக்கு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் சுலபத் தவணைகளில் வீடுகள் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு திருக்கோவில்களில் பணிபுரிவோருக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் சுலபத் தவணைகளில் வீடுகள் கட்டித் தரும் திட்டம் அரசிடம் இல்லை.

**28--**

**பழங்கள் உற்பத்தியின் மூலம் கிடைக்கும் வருவாய் விவரம்**

வினா எண் 44059--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பழங்கள் உற்பத்தியின் மூலம் வியாபார ரீதியில் தமிழகத்திற்கு எவ்வளவு வருவாய் கிடைக்கிறது.

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

பழங்கள் உற்பத்தி மூலம் தமிழ் நாட்டின் வியாபார ரீதியில் விவசாயிகளுக்கு சுமார் ரூ.400 கோடி வருமானம் கிடைக்கிறது. இதன் தொடர்பாக தமிழ் நாட்டில் பழங்கள் உற்பத்தி மற்றும் மதிப்பீடு பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| பழங்கள் | பரப்பு | உற்பத்தி | விலை-டன் | மதிப்பீடு (லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. மா | 55,392 | 3,08,880 | 2,000 | 6177.6 |
| 2. வாழை | 66,378 | 22,88,030 | 1,000 | 22,880 |
| 3. பலா | 2,798 | 59,965 | 2,000 | 1,199 |
| 4. அன்னாசி | 687 | 28,207 | 1,000 | 282 |
| 5. கொய்யா | 4,722 | 92,800 | 1,000 | 928 |
| 6. பேரி | 1,675 | 34,332 | 1,000 | 343 |
| 7. திராட்சை | 2,100 | 54,942 | 10,000 | 5,494 |
| 8. மற்ற பழவகை | 2,607 | 13,615 | 1,000 | 136 |
| 9. ஆரஞ்சு | 3,107 | 71,064 | 2,500 | 1,776.6 |
| 10. எலுமிச்சை | 5,099 | 95,764 | 1,000 | 957.6 |
| 11. எலுமிச்சை ரகங்கள் | 970 | 11,582 | 1,000 | 115.8 |
| | 1,45,535 | 30,59,181 | | 40289.6 (அ) 40290 கோடி |

*1995 நவம்பர் 3]*

**29--**

## வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள் விவரம்

வினா எண் *46792*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா---

*(அ) வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள் எத்தனை உள்ளன?*

*(ஆ) இவற்றினால் ஏற்படும் பயன்கள் என்ன?*

**விடை---**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் வேலூர் மற்றும் மேலாலத்தூரில் இரண்டு ஆராய்ச்சி நிலையங்கள் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வருகின்றன.

(ஆ) வேலூரில் அமைந்துள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் வாழை, சிறு தானியங்கள், மற்றும் பழவகை மரங்களைப் பற்றிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆராய்ச்சி நிலையம் வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்ட விவசாயிகள் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதுடன் அம்பேத்கார் மாவட்டத்திற்கு உகந்த பயிர் வகைகளையும் உருவாக்குவது மற்றும் பயிர் மேம்பாட்டிற்கான வழி முறைகளையும் வகுத்து வருகின்றது. இதன் மூலம் இந்த மாவட்ட வேளாண் பெருமக்கள் பயன் பெறுகின்றனர். இந்த ஆராய்ச்சி நிலையத்துடன் ஒரு வேளாண்மை மருத்துவ மையமும் இயங்கி வருகிறது. இந்த நிலையம் வேளாண் பெருமக்களின் பிரச்சினைகளை அவ்வப்போது தீர்த்து வைக்கிறது.

இந்த மாவட்டத்தில் மேலாலத்தூரில் அமைந்துள்ள கரும்பு ஆராய்ச்சி நிலையம் வறட்சி மற்றும் ஆலைக்கழிவு நீர்ப் பாசனத்திற்கு உகந்த இரகங்களையும் அவற்றுடன் மேலாண்மை தொழில் நுட்பங்களையும் உருவாக்கிவருகிறது. இதன் மூலம் கரும்பு விவசாயம் செய்யும் இந்த மாவட்ட வேளாண்மை பெருமக்கள் பெரிதும் பயன் பெற்று வருகின்றனர்.

30--

## வேளாண்மைக் கல்லூரிக்கு கூடுதல் கட்டிடம்

வினா எண் *52039*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

குமுளூர் வேளாண்மைக் கல்லூரிக்கும், மாணவர் தங்கும் விடுதிக்கும கூடுதலாகக் கட்டிடம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை--

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

குமுளூர் வேளாண்மைக் கல்லூரியில் மாணவர்கள் மற்றும் அலுவலர்கள் தங்குவதற்குப் போதுமான கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளதால், புதிய விடுதிகள் மற்றும் கட்டிடங்கள் கட்டுவதற்கான திட்டங்கள் எதுவும் தற்போது அரசிடம் நிலுவையில் இல்லை.

31--

## அரவக்குறிச்சியில் தோட்டக் கலைத்துறையின் அலுவலகம் திறத்தல்

வினா எண் *52051*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம். அரவக்குறிச்சியில் தோட்டக்கலை துறையின் அலுவலகம் திறப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை--

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

திருச்சிராப்பள்ளி மாவட்டம் அவரக்குறிச்சியில் தோட்டக்கலைத் துறையின் அலுவலகம் திறப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

*1995 நவம்பர் 3]*

**32--**

## கோவில் நந்தவனங்கள் அமைத்தல்

வினா எண் *57156*--**திரு. கே.ஏ. மனோகரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தருமபுரி மாவட்டத்தில் விவசாயத் துறையின் மூலமாக கோவில் நந்தவனங்கள் எங்கெங்கு அமைக்கப்பட்டுள்ளன?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை கீழ்க்கண்டுள்ள கோவில்களில் நந்தவனம் அமைத்துள்ளது.

| திருக்கோயில் பெயர் (1) | ஊர் (2) | நிறுவிய வருடம் (3) |
|---|---|---|
| 1. அருள்மிகு லக்ஷ்மி நரசிம்மன் திருக்கோவில் | பெண்ணாகரம் | *1993-94* |
| 2. அருள்மிகு மல்லிகார்ஜுன சுவாமி திருக்கோவில் | தர்மபுரி | *1993-94* |

**33--**

## வெளிநாடுகளுக்கு பழங்கள் ஏற்றுமதி செய்தல்

வினா எண் *61455*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* வெளிநாடுகளுக்கு பழங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா?

*(ஆ)* எந்தெந்த வகையான பழங்கள் எந்தெந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன?

விடை--

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம், தமிழ் நாட்டிலிருந்து வியாபாரிகள் மூலமாக பழங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

(ஆ) மா, சப்போட்டா, திராட்சை, மாதுளை ஆகிய பழங்கள் அரேபியா, மத்திய கிழக்கிந்தியா நாடுகள், அமெரிக்கா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

34--

### உழவர் பயிற்சி மையம் அமைத்தல்

வினா எண் 61458--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூரில் அரசு உழவர் பயிற்சி மையம் துவங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்திற்கென உழவர் பயிற்சி மையம் ஒன்று நல்லாக்கில் இயங்கி வருகிறது. இம்மையம் வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள திருப்பத்தூருக்கும் பயன்பட்டு வருவதால் திருப்பத்தூருக்கென தனியாக உழவர் பயிற்சி மையம் ஆரம்பிக்கும் திட்டம் இல்லை.

35--

### கிராம அங்காடியில் உரம் பூச்சி மருந்து வழங்குதல்

வினா எண் 61822--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், ராஜா மடம் கூட்டுறவு வங்கியின் மூலம் வழங்கப்படும் உரம், பூச்சி மருந்து போன்றவற்றை கிராம அங்காடியிலேயே வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

கூட்டுறவு வங்கியின் மூலம் வழங்கப்படும் உரம், பூச்சி மருந்து போன்றவற்றை கிராம அங்காடியிலேயே வழங்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**36--**

**ஆதிதிராவிடர்களுக்கு இல்வச பூச்சிக்கொல்லி மருந்து விதைகள் வழங்குதல்**

வினா எண் *61823*--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் வேளாண்மைத் துறை மூலம் இலவச பூச்சிக்கொல்லி மருந்து, பொறுக்கு விதைகளால் எத்தனை ஆதிதிராவிடர்கள் *1993-94*-ல் பயன்பெற்றனர்?

(ஆ) அதற்காக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் வேளாண்மைத் துறை மூலம் இலவசமாக பூச்சி மருந்துகள் மற்றும் பொறுக்கு விதைகள் ஆதி திராவிடர்கள் மற்றும் மலைவாழ் மக்களுக்கு வழங்கப்படுவதில்லை. இருப்பினும், *50* சதவிகித மான்ய விலையில் இடுபொருட்கள் வழங்கப்படுகின்றன.

(ஆ) *1993-94* ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் சிறப்பு நலத் திட்டத்தின் கீழ் இந்து ஆதிதிராவிட விவசாயிகளுக்கு ஒதுக்கப்பட்ட ரூ.*85* இலட்சத்தில், பூச்சிக்கொல்லி மருந்து ரூ.*12.38* இலட்சமும்

விதைகளுக்கு ரூ.31.82 இலட்சமும் வழங்கப்பட்டு, 60,000 இந்து ஆதி திராவிட விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர்.

**37--**

**அரியலூர் தொகுதியில் சாலையைச் சரி செய்தல்**

வினா எண் 65052--**டாக்டர் சு. மணிமேகலை:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் தொகுதி, திருமானூர் ஊராட்சி ஒன்றியத்தினைச் சேர்ந்த திருமானூர் பாளையப்பாடி, கரும்புச்சாலையை சரி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

திருமானூர் பாளையப்பாடி சாலை கோத்தாரி சர்க்கரை ஆலை பகுதியை சார்ந்தது. மேற்படி சாலை, கரும்பு சாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் போடப்பட்டது. திருமானூர் வழியாக கரும்பு வாகனங்கள் மற்றும் அனைத்து வாகனங்களும், தஞ்சாவூர் செல்லும் வாகனங்களும் செல்கின்றன.

2. கடந்த மார்ச் மாதம் 1995-ல் கி.மீ.0/0-0/8, 3/0-3/8 மற்றும் 4/4-4/8-ல் தார் சாலை புதுப்பிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதி கி.மீ. 0/0-3/0 மற்றும் 3/8-4/4. ஆக மொத்தம் 2.20 கிலோ மீட்டருக்கு தார் நொடிகள் 3/95-ல் போடப்பட்டுள்ளது. இப்பகுதியில் தார் சாலைகள், புதுப்பிக்கப்பட்ட தோராயமான மதிப்பீடு ரூ.6,00,000 ஆகும். மேற்படி வேலை 1995-96 ஆம் ஆண்டு பராமரிப்பு செலவில் செய்யப்பட உள்ளது.

**38--**

**மல்லிகை முல்லை பயிரிடுவோருக்கு வேளாண்மை இடுபொருள்கள் வழங்குதல்**

வினா எண் 65388--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் அதிக அளவு விளையும் மல்லிகை, முல்லை, பயிரிடுவோர்க்கு வேளாண்-இடு பொருட்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் விளையும் மல்லிகை, முல்லை, மற்றும் மலர்ச்செடிகள், பயிடும் சிறு குறு விவசாயிகளுக்கு மானிய விலையில் செடிகள் தோட்டக் கலைத்துறை மூலம் வழங்கப் பட்டு வருகின்றன. இதர இடுப்பொருட்களான உரம், பூச்சி பூஞ்சானக் கொல்லி மருந்துகள் தோட்டக்கலைத்துறை மூலம் வழங்குவதில்லை. இவைகளை வெளி அங்காடிகளில் பெறுவதற்கு வாய்ப்புள்ளது.

**39--**

### மருங்குளம் பழத்தோட்டம் விரிவுப்படுத்துதல்

வினா எண் 70763--**திரு. கு. தங்கமுத்து:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், மருங்குளம் பழத்தோட்டத்தை விரிவுப்படுத்தி மேம்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இல்லை.

**40--**

### ராமநாதபுரம் மாவட்டத்தில் பழமரங்கள் வளர்த்தல்

வினா எண் 72351--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் வேளாண்மைத் துறை மூலம் அதிக பழ மரங்களை வளர்க்க அரசு வழங்கியுள்ள சலுகைகள் யாவை?

(ஆ) ஒன்றியங்கள் தோறும் மாதிரிப் பழப்பண்ணைகள் ஏற்படுத்திட அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சிக்கு இலக்காகும் பகுதி திட்டத்தின் கீழ் பழப்பயிர் சாகுபடிக்கு விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர். இதற்குத் தேவையான பழமரச்செடிகள் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் 50 சதவீதம் மானிய விலையில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்டத்தில் காய்கறி, விதைகள் பழமரச்செடிகள் மானிய விலையில் வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) ஒன்றியங்கள் தோறும் மாதிரிப் பழப்பண்ணைகளை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

**41--**

**வேளாண்மைத்துறை மூலம் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல்**

வினா எண் 77373--திரு. கே.ஆர். இராமசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மாவட்டத்தில் வேளாண்மைத்துறை மூலம் ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இல்லை. எனினும் அம்மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் ஆழ்குழாய் கிணறுகள் அமைத்துக்கொள்ள தேவைப்படும் துளையிடு இயந்திரங்கள் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் வாடகைக்கு வழங்கப்படுகிறது.

**42--**

**விசைத்தறி தொழிலாளர்களுக்கு வாரியம் அமைத்தல்**

*வினா எண் 64920--***திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** *மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*விசைத்தறி தொழிலாளர்களுக்கு தனி வாரியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:**

விசைத்தறி நெசவாளர்களுக்கு எழும் குறைகளை அரசு அவ்வப்பொழுது தீர்த்து வைப்பதால், விசைத்தறி நெசவாளர்களுக்கு தனி வாரியம் ஒன்று அமைக்கும் அவசியம் தற்போது இல்லை.

**43--**

**இலங்கைப் போராளிகள் குடும்பத்தினரை இலங்கைக்கு அனுப்புதல்**

*வினா எண் 39660--***திரு. சி. ஞானசேகரன்:** *மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா---*

வேலூர் கோட்டைக்குள் உள்ள முகாம், மேல் மணவூர், வாலாஜாபேட்டை முகாம்களில் வைக்கப்பட்ட இலங்கைப் போராளிக் குடும்பத்தினர்களை இலங்கைக்கு அனுப்ப அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்:**

வேலூரிலுள்ள திப்பு மற்றும் ஹைதர் மகால்களில் தங்க வைக்கப்பட்டிருந்த இலங்கைத் தமிழர்களில் 81 குடும்பங்களைச் சார்ந்த 239 பேர் வேறு முகாம்களுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் இலங்கைக்கு திரும்பச் செல்ல விருப்பம் தெரிவித்த 36 பேர், கடந்த மார்ச் திங்களில் நடைபெற்ற கப்பல் பயணங்களில் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுவிட்டனர்.

மேல் மொனாவூர் மற்றும் வாலாஜா பேட்டையில் உள்ள பாலார் அணைக்கட்டு ஆகிய முகாம்களில் தங்கி திரும்ப இலங்கைக்கு அனுப்பப்பட்டவர்கள் விபரம் பின்வருமாறு:-

| வரிசை எண். | வட்டம். | முகாமின் பெயர். | 28-2-1995 நிலவரப்படி தங்கியிருந்த அகதிகள். | குடும்ப எண்ணிக்கை மொத்த நபர்கள். | 1995 மார்ச் திங்களில் இலங்கை திரும்பிச் சென்றவர்கள். | குடும்ப எண்ணிக்கை மொத்த நபர்கள். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | வேலூர் | மேல் மொனாவூர் | 263 | 1005 | 37 | 115 |
| 2 | வாலாஜா | பாலார் அணைக்கட்டு முகாம் | 252 | 1000 | 17 | 56 |

*1995 நவம்பர் 3]*

**44--**

**சத்துவாச்சாரி அரசு பள்ளிக்கு விளையாட்டு மைதானம் அமைத்தல்**

*வினா எண் 37738--***திரு. சி. ஞானசேகரன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*வேலூர் சத்துவாச்சாரி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு விளையாட்டு மைதானம் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

*வேலூர் சத்துவாச்சாரி, அரசு மேல்நிலைப் பள்ளிக்குப் பக்கத்தில் சமுதாயத்திற்குச் சொந்தமாக உள்ள தோப்பு விளையாடுமிடமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி சமுதாயத்திற்குச் சொந்தமாக உள்ள தோப்பில் சமுதாயப் பணிகளாகிய பாவு போடுதல், கோவில் திருவிழாக்கள் நடைபெறும் காலங்களில் மட்டும் வீட்டுவசதி வாரியக் குடியிருப்புக்குப் பின்புறம் பூங்காவிற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடம் விளையாட்டு இடமாக அமைத்துக் கொடுக்கப்பட்டு விளையாடும் இடமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி பள்ளிக்கு நிரந்தரமாக விளையாட்டு இடம் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.*

**45--**

**கம்மாபுரம் ஒன்றியத்தில் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம்**

*வினா எண் 41603--***திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*விருத்தாசலம் தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், முதனை, இருப்பு நல்லூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:** தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**46--**

**நாடியம் உயர்நிலைப்பள்ளிக்கு கூடுதல் கட்டிடம்**

வினா எண் *43482*--**திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

பட்டுக்கோட்டை கல்வி மாவட்டம் நாடியம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிட வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:** அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**47--**

**சிரமேல் அரசு உயர்நிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம்**

வினா எண் *43545*--**திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

தஞ்சாவூர் மாவட்டம் மதுக்கூர் ஒன்றியம், சிரமேல் குடி அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**
அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**48--**

**நரிக்குடியில் பாலிடெக்னிக் அமைத்தல்**

வினா எண் 70708--**திருமதி வி.ஜி. மணிமேகலை:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) அருப்புக்கோட்டைத் தொகுதியில் நரிக்குடியில் பாலிடெக்னிக் அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

(அ) அருப்புக்கோட்டை தொகுதி நரிக்குடியில் புதிய அரசினர் பாலிடெக்னிக் நிறுவுவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. காமராஜர் மாவட்டத்தில் ஏற்கெனவே எட்டு தனியார் பாலிடெக்னிக்குகள் இயங்கி வருகின்றன. ஆகவே புதிய பாலிடெக்னிக் இத்தொகுதியில் நிறுவும் செயற்குறிப்பு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**49--**

**திருவாரூர் நகரத்தில் பெண்கள் கல்லூரி அமைத்தல்**

வினா எண் 78585--**திரு. வே. தம்புசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருவாரூர் நகரத்தில் பெண்கள் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை--

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

**50--**

**நாமக்கல் பெண்கள் அரசு கலைக்கல்லூரி விஸ்தரிப்பு**

வினா எண் *81841*--**திருமதி ப. சரஸ்வதி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை பெண்கள் அரசு கலைக் கல்லூரியில் பி.எஸ்.சி. ஹோம் சயன்ஸ், பி.எஸ்.சி. கம்ப்யூட்டர் சயன்ஸ், பாடம் துவக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை--

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

**51--**

**தொழிலாளர்களுக்கு அரசு சலுகைகள்**

வினா எண் *43744*--**திரு. கே.ஏ. மனோகரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஒசூர் தொழிற்பேட்டையிலுள்ள சிறு தொழில் கூடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு எந்தவித வேலைவாய்ப்பு உத்திரவாதமும் அரசு சலுகைகளும் கிடைக்க பெறவில்லை என்பதை அரசு அறியுமா?

*1995 நவம்பர் 3]*

*(ஆ) அக்குறையினைக் களைய அரசு முன்வருமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ): இக்கேள்வி மிகவும் பொதுப்படையாக உள்ளது. பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு உத்தரவாதம் இல்லை எனக் கூறப்பட்டுள்ளது. அதன் உட்பொருள் புரியவில்லை. ஒருவேளை அத்தொழிலாளர்களை நிரந்தரப்படுத்தவில்லையென்ற பொருள்பட குறிப்பிட்டிருக்கலாம். சட்டப்படியான கால அளவு தொழிலாளர்கள் பணிபுரிந்து இருந்தால், 1981-ஆம் ஆண்டு தமிழ் நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் மனு செய்யலாம். இது சம்பந்தமாக கிருஷ்ணகிரியிலுள்ள தொழிற்சாலை ஆய்வாளர் அல்லது சேலத்திலுள்ள துணைத் தலைமை தொழிற்சாலை ஆய்வாளரிடம் மனு செய்யலாம்.*

*அடுத்து, அரசு சலுகைகள் கிடைக்கவில்லை என பொதுவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசு சலுகைகள் என்ன என்ன என்று குறிப்பிடவில்லை. ஒருவேளை, தொழிலாளர் நலச் சட்டத்தின் கீழ் நிர்வாகத்தினர் அளிக்க வேண்டிய சலுகைகளைக் குறிப்பிடுவதாகத் தெரிகிறது. அவ்வாறெனில் தொழிலாளர் நலச் சட்டங்களுள் எந்தச் சட்டப்படியான சலுகைகள் வழங்கப்படவில்லையோ அந்தச் சட்டத்தின்கீழ் நியமனம் செய்யப்பட்ட அலுவலரை அணுகி, நிவாரணம் காணலாம்.*

**52--**

**பீடித் தொழிலாளர்களுக்கு கச்சாப் பொருள் அளித்தல்**

வினா எண் *5942*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*பீடித் தொழிலாளர்களுக்கு தரமான கச்சாப் பொருள் அளிப்பதற்கு அரசிடம் திட்டம் இருக்கிறதா?*

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

**விடை--**

**மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:**

பீடித் தொழிலாளர்களுக்கு தரமான கச்சாப்பொருள் வழங்கு...ற்கான திட்டம் அரசிடம் இல்லை. இருப்பினும் பீடித் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் கச்சாப் பொருள் தொடர்பாக எழுப்பப்படும் தகராறுகளைத் தீர்ப்பதற்கு 1966-ஆம் ஆண்டு பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளில் வகை செய்யப்பட்டுள்ளது.

**53--**

**ஒய்வூதியத் தொகை வாரிசுதாரர்களுக்கு வழங்குதல்**

வினா எண் 46822--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் உள்ள பீடி தொழிலாளர்கள் இறந்தால் அவர்களது கணக்கிலுள்ள ஒய்வூதியத் தொகை வாரிசுதாரர்களுக்கு உடன் வழங்கப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

ஆம். வருங்கால வைப்புநிதிச் சட்டம் 1952 பிரிவு 6ஏ-ன் கீழ் இதற்கான வழி வகை செய்யப்பட்டுள்ளது.

**54--**

**சங்ககிரியில் தொழிற் பயிற்சி மையம் அமைத்தல்**

வினா எண் 63604--டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

*(அ) சங்ககிரியில் ஒரு தொழிற் பயிற்சி மையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது செயற்படுத்தப்படும்.*

**விடை--**

***மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:***

*(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டத்தில் ஏற்கெனவே மூன்று அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் 1,216 இருக்கைகளுடன் இயங்கி வருகின்றன. மேலும், இம்மாவட்டத்தில் 19 தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் உள்ளன. இவற்றில் மொத்தம் 1,552 இருக்கைகள் உள்ளன. ஆக இம்மாவட்டத்தில் 2,768 பேர்கள் தொழிற் பயிற்சி பெற வாய்ப்பு உள்ளது. மேலும் புதிதாக சங்ககிரியில் ஒரு தொழிற் பயிற்சி மையம் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.*

**55--**

**பெண்களுக்கு மகப்பேறு விடுப்பு அதிகரித்தல்**

*வினா எண் 77349--**டாக்டர் பிட்ரிக்ஸ் டி' சோசா:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*பெண் தொழிலாளர்களுக்கு ஆறு மாத காலமாகப் பேறு விடுப்பு வழங்குவதற்கான திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா?*

**விடை--**

***மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:***

*1961–ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டத்தின்படி வழங்கப்பட்டுவரும் விடுப்பு காலம் 12 வாரங்கள் இதை 24 வாரங்கள் ஆக அதிகரிக்கவும் பெண் தொழிலாளி தனது முழு பணிக்காலத்தில் 48 வாரங்களுக்கு மிகாமல் விடுப்பு எடுக்கவும் வகை செய்து இச்சட்டத்தை திருத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1995 நவம்பர் 3

56--

### மாத்தூர் விவசாயக் கூட்டுறவுப் பண்ணை அமைத்தல்

வினா எண் *39720*--**திரு. வே. பெரியசாமி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அந்தியூர் தொகுதி. அம்மாபேட்டை ஒன்றியம் மாத்தூர் விவசாயக் கூட்டுறவுப் பண்ணை அமைக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

விடை--

**மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

பவானி வட்டம், மாத்தூரில் கூட்டுறவுப் பண்ணைச் சங்கம் அமைக்க, பிரஸ்தாப நிலங்கள் ஒதுக்கக் காடுகள் என வகைபடுத்தப்பட்டு வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. மாத்தூரில் கூட்டுறவுப் பண்ணைச் சங்கமாகவோ அல்லது நிலக்குடியேற்ற சங்கமாகவோ பதிவு செய்தால் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஒதுக்கக் காடுகள் நிலங்களைப் பெற மாநில அரசுக்கு பல வருடங்கள் ஆகலாம். அதுவரை சங்கம் செயலிழந்த நிலையிலேயே இருக்க வேண்டிய சூழ்நிலை நேரிடும். எனவே ஒதுக்கப்பட்ட காடுகள் மத்திய அரசின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டு, வருவாய்த்துறைக்கு மாற்றப்பட்டு, சங்கம் பதிவு செய்யப்பட்டதும் சங்கத்தின் வசம் ஒப்படைக்க மாவட்ட ஆட்சித் தலைவர் இசைவு அளித்தால் தவிர தற்போதைய சூழ்நிலையில் சங்கத்தை பதிவு செய்ய சாத்தியக்கூறுகள் இல்லை.

57--

### சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தில் சாலை மராமத்து

வினா எண் *6431*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நாடியம் மெயின் சாலையிலிருந்து ஆதிதிராவிடர் தெருவிற்கு செல்லும் சாலையை மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1995 நவம்பர் 3]

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வவகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நாடியம் மெயின் சாலையிலிருந்து ஆதிதிராவிடர் தெருவிற்கு செல்லும் சாலையை மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

58--

**பேராவூரணி ஒன்றியத்தில் கப்பிச்சாலை அமைத்தல்**

வினா எண் 7047--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், தென்னங்குடி ஆதிதிராவிடர்களின் மயான சாலையை கப்பிச் சாலையாக மாற்றித் தரவும் மயானக் கொட்டகை கட்டித் தரவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தென்னங்குடி ஆதிதிராவிடர் தெரு மயான சாலையை கப்பிச் சாலையாக மாற்றவும் மயானக் கொட்டகை கட்டித் தரவும் தற்போது அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

59--

**பேராவூரணி ஒன்றியத்தில் குளத்தைப் பராமரித்தல்**

வினா எண் 7237--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பஞ்சநதிபுரத்தில் உள்ள உல்லி குளத்தை பராமரித்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**60--**

**கல்லூரணிக்காடு ஆதிதிராவிடர் தெருவிற்கு சாலையை மராமத்து செய்தல்**

வினா எண் *7293*--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் கல்லூரணிக்காடு ஆதிதிராவிடர் தெருவிற்கு செல்லும் சாலையை மராமத்து செய்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சை மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் கல்லூரணிக்காடு ஆதிதிராவிடர் தெருவிற்கு செல்லும் சாலை கிராவல் சாலையாகும். இச்சாலையை கப்பிச் சாலையாக மாற்றித்தர தற்போது அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

**61--**

**ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் சாலையைப் பழுது பார்த்தல்**

வினா எண் *21520*--டாக்டர் மு. **சீனியம்மாள்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புளியம்பட்டி, நம்பியூர் சாலையிலிருந்து அவினாசி புளியம்பட்டி சாலை வரை (வழி) திருமலைக் கவுண்டன்பாளையம் பேரநாயக்கன் புதூர் சாலை பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது சரி செய்யப்படும்?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை *அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ) : 1992-93ம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் புளியம்பட்டி நம்பியூர் சாலை முதல் திருமலைக்கவுண்டம்பாளையம் செல்லும் சாலை 1.60 கி.மீ. வரை மெட்டல் போடும் பணி மேற்கொள்ளப்பட்டு முடியும் நிலையில் உள்ளது. எஞ்சியுள்ள 4.00 கி.மீ மெட்டல் சாலை அமைக்க 1994-95-ம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்றவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

**62--**

**ஆத்தாங்கரை பஞ்சாயத்து மண்சாலை சீர்செய்தல்**

வினா எண் 21683--திரு. **சி. சுவாமிநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புதுக்கோட்டை தொகுதி, ஆத்தாங்கரை பஞ்சாயத்தைச் சேர்ந்த மெயின் ரோட்டில் இருந்து தெற்கு வாண்டான் விடுதிக்கு செல்லும் மண் சாலை சீர் செய்யப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த மண் சாலையை சீர்படுத்த எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை *அமைச்சர்:***

(அ) மற்றும் (ஆ): வினாவில் குறிப்பிட்டுள்ள சாலை கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பிலுள்ளது. இதன் நீளம் 1 கி.மீ. ஆகும். 1994-95-ம் ஆண்டில் நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்து மேற்படி சாலை வேலை எடுத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**63--**

## பொன்னேரி தொகுதியில் சாலை வசதி

வினா எண் 22403--**திரு. ஏ. ரவிக்குமார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பொன்னேரி தொகுதி, பழவேற்காடு பகுதியில், பழவேற்காடு தேனிரவு கிராமத்திற்கு சாலை வசதிசெய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அந்தத் திட்டம் நிறைவேறும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பழவேற்காடு முதல் தேனிரவு வரையிலான சாலையில் மழைக் காலங்களில் கடல்நீர் தேங்கி நிற்கின்றது. ஆகவே 200 மீட்டர் நீளத்திற்கு குழாய் பாலம் அமைத்தால்தான் நிரந்தர சாலைவசதி ஏற்படும். இப்பணிக்கு ரூ. 30 லட்சம் தேவைப்படும். ஊராட்சியின் நிதி நிலை காரணமாக இப்பணியைத் தற்போது எடுத்து செய்யும் சாத்தியக்கூறு இல்லை.

**64--**

## பேராவூரணி மெயின் சாலையை மராமத்து செய்தல்

வினா எண் 24434--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பேராவூரணி ஒன்றியம், பட்டுக்கோட்டை பேராவூரணி மெயின் சாலையில் வலசைக்காட்டில் பிரிந்து நரியங்காடு வழியாகவும், இடையர் தெரு வழியாகவும், கள்ளூரணிக்காட்டிற்கும், வளச்சேரி காட்டிற்கும் செல்லும் சாலையை மராமத்து செய்து தார்ச்சாலையாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3]*

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், பட்டுக்கோட்டை பேராவூரணி மெயின் சாலையில் வளசைகாட்டில் பிரிந்து செல்லும் சாலையை தார்ச் சாலையாக மாற்ற ரூ. 10 லட்சம் செலவாகும். ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் நிதி நிலைமை போதுமானதாக இல்லாததால், இடையர் தெரு, வேளச்சேரியின் மக்கட்தொகை 200-க்கு குறைவாக இருப்பதால் கிராம சாலை மேம்பாடு திட்டத்தில் எடுத்துச் செய்ய வழிவகை இல்லை.

**65--**

**சத்தியமங்கலம் தொகுதியில் குட்டையை தூர்க்க நடவடிக்கை எடுத்தல்**

வினா எண் 24701--**திருமதி அ.தி. சரஸ்வதி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சத்தியமங்கலம் தொகுதி, தாளவாடி, மையப்பகுதியில் பாழடைந்த சுகாதாரக் கெடுதல் விளைவிக்கும் குட்டையை தூர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

***மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

வினாவில் குறிப்பிட்டுள்ள குட்டையை தூர்க்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

**66--**

**மொடக்குறிச்சி தொகுதி சாலைகள் புதுப்பித்தல்**

வினா எண் 26541--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி வடக்குப் புதுப்பாளையம் ரைஸ் மில் முதல் அரசு பள்ளிக்கூடம் வரை, வெங்கம்பூர் பரிசல் துறைக்குச் செல்லும் சாலை, தாமரைப்பாளையம் முதல் பொல்லுக்காட்டுவலசு வரை மற்றும் கொடுமுடி ஒன்றியம் கணபதிபாளையம் முதல் வடிவுமங்கலம் வரையுள்ள சாலைகளை புதுப்பித்து தார்ச்சாலையாக மாற்றித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

1.00 கி.மீ நீளமுள்ள இச்சாலையை 1994-95-ம் ஆண்டில் கொடுமுடி ஊராட்சி ஒன்றிய பொது நிதியின் உபரி நிதியிலிருந்து கப்பி போட்டு, தார்ச் சாலையாக மாற்ற கொடுமுடி ஊராட்சி ஒன்றியத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**67--**

### வெட்டிக்காடு சாலையை செப்பனிடல்

வினா எண் 28981--**திரு. சி. சுவாமிநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஒன்றியம், ஒத்தையாண்டிப்பட்டி வெட்டிக்காடு சாலையை செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஒத்தையாண்டிப்பட்டியிலிருந்து வெட்டிக்காடு வரை செல்லும் சாலையை செப்பனிட சுமார் 18.00 லட்சம் செலவாகும். நிதிபற்றாக்குறை காரணமாக தற்சமயம் இவ்வேலையை எடுத்துக் கொள்ள இயலாது.

**68--**

### உடையான்பட்டி ஊராட்சி சாலையை தார்ச்சாலையாக்குதல்

வினா எண் 33845--**திரு. சி. சுவாமிநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புதுக்கோட்டை ஒன்றியம், குன்னாண்டார் கோவில் ஒன்றியம், பெரியதம்பி உடையான்பட்டி ஊராட்சி சாலையை, தார்ச்சாலையாக மாற்றும் திட்டம் அரசிடம் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3]*

(அ) மற்றும் (ஆ) : வினாவில் குறிப்பிட்டுள்ள (பெருங்களூர் அண்டக்குளம் சாலை) பெரியதம்பி உடையான்பட்டி சாலையில் 0/0-4/4 கி.மீ சாலை புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தின் மூலமும் 6/0-8/6 கி.மீ சாலை குன்னாண்டார் கோவில் ஊராட்சி ஒன்றியத்தின் மூலமும் தார்ச்சாலையாக மாற்றப்பட்டு விட்டது. இடைப்பட்ட சாலை 4/4-6/0 கி.மீ. 1995-96-ல் முன்னுரிமை அடிப்படையில் எடுத்துச் செய்யப்படும்.

**69--**

**அண்டக்குடி ஊராட்சி கவுண்டர் தெரு சீர்செய்தல்**

வினா எண் 33847--**திரு. சி. சுவாமிநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புதுக்கோட்டை மாவட்டம், அண்டக்குளம் ஊராட்சி கவுண்டர் தெருவிற்கு பாலமும், பூங்குடிப்பட்டிக்கு சாலையும் சிறு பாலமும் அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வினாவில் குறிப்பிட்டுள்ள அண்டக்குளம் ஊராட்சி கவுண்டர் தெரு பாலமும், பூங்குடிபட்டி சாலை பாலமும் 1995-96ல் முன்னுரிமை அடிப்படையில் எடுத்துச் செய்யப்படும்.

**70--**

**செனையக்குடி-சுரண்டப்பட்டி சாலை செப்பனிடல்**

வினா எண் 33851--**திரு. சி. சுவாமிநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குன்னாண்டார் கோவில் ஒன்றியம், மூட்டாண்பட்டி ஊராட்சி செனையக்குடி--சுரண்டபட்டிக்கு கஸ்தூரி நகர் வழியாகச் செல்லும் சாலையைச் செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செப்பனிடப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : இவ்வினாவில் குறிப்பிட்டுள்ள மூட்டாண்பட்டி ஊராட்சி செனையக்குடி சுரண்டப்பட்டிக்கு (1கி.மீ) கஸ்தூரி நகர் வழியாகச் செல்லும் சாலையை செப்பனிட ரூ.2.00 லட்சம் செலவாகும். இச்சாலை 1995-96 ஆம் ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் எடுத்துச் செய்யப்படும்.

**71--**

**வித்தரைக்குறிச்சி ஊராட்சி சாலைகளை செப்பனிடல்**

வினா எண் 33852--திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குன்னாண்டார் கோவில் ஒன்றியம் வித்தரைக்குறிச்சி ஊராட்சி, பெராண்டையார்பட்டி திருப்பூர் சாலை (வழி நரஞ்சியன்பட்டி) வேலான்குட்டி-வெவ்வயல்பட்டி ஆகிய சாலைகளைச் செப்பனிட்டு தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செப்பனிடப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): புதுக்கோட்டை மாவட்டம் குன்னாண்டார் கோவில் ஊராட்சி ஒன்றியம் திருப்பூர்-பெரண்டையார்பட்டி சாலையை (3 கி.மீ.) செப்பனிட ரூ. 4.5 லட்சம் செலவாகும். இச்சாலை கிராமச்சாலைகள் திட்டத்தில் எடுத்துச் செய்யப் பரிசீலிக்கப்படுகிறது. மற்றொரு சாலையான வேலான்குடிப்பட்டி-வெவ்வயல் பட்டி சாலை (கி.மீ. 0/0-1/0, 1993-94 ஆம் ஆண்டு வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தில் எடுத்து கருங்கல் ஜல்லி பரத்தப்பட்டு விட்டது.

**72--**

**பட்டுக்கோட்டை தொகுதியில் தார்ச்சாலை அமைத்தல்**

வினா எண் 35529--திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

1995 நவம்பர் 3]

பட்டுக்கோட்டை தொகுதி அதிராமபட்டினத்திலிருந்து தொக்களிகாட்டிற்கு மேலத் தெரு வழியாகச் செல்லும் மண்சாலையைப் பழுது பார்த்து தார்ச் சாலையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையை பழுது பார்த்து கருங்கல் சாலையாக மாற்ற மாவட்ட பரவலாக்கும் திட்டத்தின் கீழ் ரூ. 85,000 மதிப்பீட்டில் வேலை ஒப்படைக்கப்படவுள்ளது.

**73--**

**அவினாசி தொகுதியில் தார்ச்சாலை அமைத்தல்**

வினா எண் 35657--**டாக்டர் மு. சீனியம்மாள்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) அவினாசி தொகுதி சேவூர் குன்னத்தூர் சாலையில் அழகாத்திரி பாளையம், முதலிபாளையம், மாரப்பம் பாளையம் வழியாக வடுகபாளையம் வரை தார்ச்சாலையாக அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இச்சாலையின் நீளம் 6.40 கி.மீ. ஆகும்.

(ஆ) இருமுறை கப்பிபோட்டு தார்ச்சாலையாக மாற்றிட சுமார் 12 லட்சம் தேவைப்படும். 1994-95-ம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் நிதிவசதி இன்மையால் செயல்படுத்த இயலாததால் இச்சாலையினை ஊரக சாலைத் திட்டத்தின்மூலம் செயல்படுத்தபடவுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

**74--**

**திருவெட்டார் தொகுதியில் பாலத்தை விரிவுபடுத்துதல்**

வினா எண் *36109*--**திரு. இரா. அப்புநடேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருவெட்டார் தொகுதி, மஞ்சாலுமூடு ஊராட்சி கைதகம் என்னும் இடத்தில் திற்பரப்பு வலது கரை கிளைக் கால்வாயில் கட்டப்பட்டுள்ள குறுகிய பாலம் சேதமடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இந்த பாலத்தை விரிவுபடுத்தி வாகன போக்குவரத்திற்கு உதவிட அரசு முன்வருமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : பாலம் அமைக்கப்பட்டபோது 3.00 மீட்டராக இருந்தது. 1993-94 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.75,000 செலவில் இந்த பாலம் அகலப்படுத்தப்பட்டது. தற்பொழுது இச்சாலையின் அகலம் 6 மீட்டராக உள்ளது. தற்சமயம் பேருந்து போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

**75--**

**தேவம்பாளையம்--ஆட்டுக்காரன்புதூர் சாலை அமைத்தல்**

வினா எண் *36287*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கொடுமுடி ஒன்றியம் தேவம்பாளையம்--ஆட்டுக்காரன் புதூர் வரை சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3]*

வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையின் நீளம் 2.90 கி.மீ. ஆகும். இதில் 0/8 முதல் 1/0 வரை சாலை மேம்பாட்டுப்பணி நடைபெறுகிறது. 1/0--2/0 வரை மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தில் கப்பி சாலை அமைக்கப்படவுள்ளது. கி.மீ. 2/0--2/8 வரை நல்ல நிலையில் உள்ளது. கி.மீ 2/8--3/7 வரை ஏற்கனவே தார் போடப்பட்டுள்ளது.

**76--**

**வேலம்பாளையம்--கருமாண்டம் பாளையம் சாலை அமைத்தல்**

வினா எண் 36288--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கொடுமுடி ஒன்றியம் வேலம்பாளையம் - கருமாண்டம்பாளையம் சாலையை புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இச்சாலை 1993-94-ம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கப்பிசாலையாக மேம்பாடு செய்யப்பட்டது. இச்சாலையில் கி.மீ. 0/10--1/6 வரை ரூ.2.00 லட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலையாக மேம்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 1/0--2/0 (0.40) கி.மீ பகுதியை வரும் நிதியாண்டில் எடுத்துச் செய்யப்பட உள்ளது.

**77--**

**நஞ்சப்ப கவுண்டன் வலசு சாலையை தார்ச்சாலையாக அமைத்தல்**

வினா எண் 36298--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஈரோடு கரூர் சாலை பிரித்து நஞ்சப்ப கவுண்டன் வலசு செல்லும் சாலை வரை தார்ச்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஈரோடு கரூர் சாலையில் கி.மீ. 14/2-ல் பிரித்து நஞ்சப்ப கவுண்டன் வலசு செல்லும் சாலையை 1995-96 ஆம் ஆண்டு பொதுநிதி வேலையில் மேம்பாடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**78--**

## அந்தியூர் ஒன்றியத்தில் பாலம் கட்டுதல்

வினா எண் 37040--திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் ஒன்றியம் அத்தாணி முதல் பெரிமாபாளையம் வரை அமைக்கப்பட்டுள்ள சாலையில் இரு இடங்களில் பாலம் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், 1994-95-ல் பாலம் கட்டப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1994-95 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் இவ்விடங்களில் இரண்டு தரைமட்ட தாம்போகி ஒவ்வொன்றும் ரூ.30,000 மதிப்பீடு தொகையில் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**79--**

## பரமக்குடி வட்டத்திலுள்ள சமுதாயக் கிணறுகள் விவரம்

வினா எண் 37969--டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டத்தில் உள்ள சமுதாயக் கிணறுகள் எத்தனை?

(ஆ) இதில் பயன்படும் நிலையில் உள்ளவை எத்தனை?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

1995 நவம்பர் 3]

(அ) மற்றும் (ஆ): ஜனவரி 1995 நிலவரப்படி பரமக்குடி வட்டத்தில் உள்ள மொத்த சமுதாயக் கிணறுகள் 20 ஆகும். இதில் பயன்படும் நிலையில், உள்ளவைகள் 6 ஆகும்.

**80--**

### மயிலாடுதுறை வட்டத்தில் மதகு கட்டுதல்

வினா எண் 45976--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி--மயிலாடுதுறை வட்டம், காஞ்சிவாய் ஊராட்சி, ஒதாரி ஒன்றியச் சாலையில் ஐயனார் தெரு மேற்கே உள்ள மதகு குழாய் உடைந்துள்ளதால் ஜவகர் வேலை வாய்ப்பு திட்டத்தில் புதிய "மதகு" கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

காஞ்சுவாய் ஊராட்சி சாலையில் அய்யனார் தெரு மேற்கில் பழுதடைந்துள்ள மதகை புதுப்பிக்க ரூ. 15,000 செலவாகும். 1995-96ம் நிதியாண்டில் ஜவகர் வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**81--**

### வைகல் கிராம சாலையின் மதகுகளைப் புதுப்பித்தல்

வினா எண் 44978--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், குத்தாலம் தொகுதி சிவனாரகரம் கிராமத்திலிருந்து வைகல் கிராமத்திற்குச் செல்லும் சாலையில் பழுது அடைந்த நான்கு மதகுகளையும் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இச்சாலை ஊராட்சி ஒன்றிய சாலையாகும் பழுதடைந்த மதகுகளை பழுதுபார்க்க ரூ. 40,000 செலவாகும். இதனை 1995-96 ஆம் ஆண்டில் தலசாலை மானியத்தின் கீழ் எடுத்து செய்யப்படும்.

**82--**

**கீழ்க்குளத்திற்கு தடுப்புச் சுவரும் படித்துறையும் கட்டுதல்**

வினா எண் 44980--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், பாலையூர் கிராமம்--கீழக்குளத்திற்கு தடுப்புச்சுவரும் படித்துறையும் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பாலையூர் கிராமம் கீழக்குளத்திற்கு படித்துறை கட்டுவதற்கு ரூ. 30,000 செலவாகும். நடப்பு நிதியாண்டில் (1995-96) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப வேலையை எடுத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**83--**

**குத்தாலம் தொகுதியில் வாய்க்கால் மதகைப் புதிதாகக் கட்டுதல்**

வினா எண் 44983--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், அனந்தநல்லூர் ஊராட்சி கந்தமங்கலம் கிராமத்திலுள்ள ஆதிதிராவிடர் கீழத் தெருவிற்கு செல்லும் பாதையில் பழுதடைந்துள்ள வாய்க்கால் மதகைப் புதிதாகக் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3]*

இந்த சாலையின் குறுக்கே வாய்க்காலில் 1992-93ம் ஆண்டில் ஒன்றிய பொதுநிதியிலிருந்து பைப் குழாய் பொருத்தப்பட்டுள்ளது. இதற்கான மதகு கட்டும் வேலை 1995-96ம் நிதி ஆண்டின் 80 சதவிகிதம் நிதி ஒதுக்கீட்டில் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப எடுத்துச் செய்யப்படும்.

**84--**

### குத்தாலம் தொகுதியில் தடுப்புச் சுவரும் படித்துறையும் கட்டுதல்

*வினா எண் 44984*--**திரு. எஸ். ஆசைமணி:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா*--

*நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், மாந்தை ஊராட்சி சந்தை வெளியிலுள்ள குளத்திற்கு தடுப்புச் சுவரும், படித்துறையும், கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*மாந்தை ஊராட்சி சந்தை வெளியிலுள்ள குளத்திற்கு தடுப்புச் சுவர் கட்ட ரூ. 50,000 செலவாகும். நடப்பு நிதியாண்டில் (1995-96) ஜவகர் வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்ய முன்னுரிமை அளிக்கப்படும்.*

**85--**

### கருப்பூரில் குளத்திற்கு தடுப்புச் சுவர் கட்டுதல்

*வினா எண் 44985*--**திரு. எஸ். ஆசைமணி:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா*--

*நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், மாந்தை ஊராட்சி கருப்பூரில் உள்ள குளத்திற்கு "தடுப்புச் சுவர்" கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மாந்தை ஊராட்சி கருப்பூரில் உள்ள குளத்திற்கு தடுப்புச் சுவர் கட்ட மதிப்பீடு ரூ.20,000 ஆகும். 1995-96ம் நிதியாண்டில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் முன்னுரிமை அளித்து தடுப்புச் சுவர் கட்டித் தரப்படும்.

**86--**

**ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மதகுப் பாலத்தைப் புதுப்பித்தல்**

வினா எண் 44987--திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம் பெரும்பூரிலிருந்து சேத்தூர் செல்லும் சாலையில் பழுதடைந்துள்ள மதகு பாலத்தை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் புதுப்பித்துக் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இந்தச் சாலையில் பழுதடைந்துள்ள குழாய் பாலம் புதுப்பிக்கப்பட்டது.

**87--**

**குத்தாலம் தொகுதியில் கான்கிரிட் வண்டிபாலம் அமைத்தல்**

வினா எண் 44988--திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், மாந்தை கிராமத்தில் ஆதிதிராவிடர் மாதா கோவில் தெருவிற்கும், திருமங்கலத்திற்கும் இடையே "நாட்டாற்றிலும்" வாஞ்சியாற்றிலும் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் நிரந்தர "கான்கிரிட் வண்டி பாலம்" அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3]*

மாந்தை கிராம ஆதிதிராவிட மாதாகோவில் தெருவிற்கும், திருமங்கலத்திற்கும் இடையில் ஏற்கனவே ஒரு மூங்கில் பாலம் உள்ளது. இதற்கு பதிலாக 19 மீட்டர் நீளமுள்ள வண்டிபாலம் அமைக்க சுமார் 6 லட்சம் செலவாகும். இதனை ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ள வழி வகையில்லை.

**88--**

**குத்தாலம் தொகுதியில் வாய்க்கால் மதகுகள் கட்டுதல்**

வினா எண் 44992--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், அசிக்காடு மயானத்திற்குச் செல்லும் சாலையின் குறுக்கே இடிந்துள்ள வாய்க்கால் மதகினை ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அசிக்காடு மயானத்திற்குச் செல்லும் பாதையின் குறுக்கே வாய்க்கால் கட்ட ஆகும் செலவு ரூ.20,000 ஆகும். இதே ஊராட்சியில் 1994-95ம் ஆண்டு 80 சதவிகிதம் ஊராட்சி பங்கு நிதியில் தடுப்புச் சுவர் கட்டப்பட்டு உள்ளது. எனவே 1995-96 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப ஊராட்சி மூலம் இந்த வேலை எடுத்து செய்யப்படும்.

**89--**

**குத்தாலம் தொகுதியில் தடுப்புச் சுவர் கட்டுதல்**

வினா எண் 44993--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், நக்கம்பாடி கிராமத்தில் வாய்க்கால் தடுப்புச் சுவர் இடிந்து சாலை அரிப்பு ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) அந்தத் தடுப்புச் சுவரை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ): 1994-95ம் ஆண்டில் பரவலாக்கப்பட்ட மாவட்ட வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.60,000 மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டு வாய்க்கால் தடுப்புச் சுவர் சரி செய்யும் வேலை துவங்கப்பட்டுள்ளது.*

**90--**

**குத்தாலம் தொகுதியில் கான்கிரிட் நடைபாலம் அமைத்தல்**

*வினா எண் 44998*--**திரு. எஸ். ஆசைமணி:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், பருத்திக்குடி ஊராட்சி வடக்கு ஆதிதிராவிடர் மயானத்திற்குச் செல்ல வடகோரையாற்றில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் "கான்கிரிட் நடை பாலம்" அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*மயிலாடுதுறை வட்டம்-பருத்திகுடி ஊராட்சி வடக்கு ஆதிதிராவிடர் மயானத்திற்குச் செல்ல தற்பொழுது மூங்கில் பாலம் உள்ளது. 1995-96ம் நிதியாண்டில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் கான்கிரிட் பாலம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**91--**

**ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் தடுப்புச் சுவர் கட்டுதல்**

*வினா எண் 44999*--**திரு. எஸ். ஆசைமணி:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், கடக்கம் ஊராட்சி கிளியனூர் கடலாழி*

*1995 நவம்பர் 3]*

சாலையிலுள்ள பாலத்தின் இருபுறமும் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் தடுப்புச்சுவர் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கிளியனூர்-கடலாழி சாலையிலுள்ள பஞ்சாயத்து பாலத்தின் ஒரு புறம் தடுப்புச் சுவர் கட்டப்பட்டு வருகிறது. மறுபுறம் வரும் 1995-96ம் நிதியாண்டில் எடுத்து செய்யப்படும்.

**92--**

**குத்தாலம் தொகுதியில் கான்கிரிட் நடைபாலம் அமைத்தல்**

வினா எண் 45000--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், மாந்தை ஊராட்சி, கீழமாந்தை கிராமத்தில் வாஞ்சியாற்றுக்கு குறுக்கே "கான்கிரிட் நடைபாலம்" கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கீழ்மாந்தை கிராமத்தில் வாஞ்சியாற்றுக்குக் குறுக்கே கான்கிரிட் நடைபாலம் அமைத்துத் தர மதிப்பீடு ரூ. 2 லட்சம் ஆகும். 1995-96ஆம் நிதியாண்டில் ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீட்டிற்கு முன்னுரிமை அளித்து வேலையினை எடுத்து செய்யப்படும்.

**93--**

**குத்தாலம் தொகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை செப்பனிடுதல்**

வினா எண் 46477--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

[*1995 நவம்பர் 3*

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, தரங்கம்பாடி வட்டம், 47, அரிவளூர் கிராமம், முஸ்லீம் தெரு, 50, கொடவிளாகம் ஊராட்சி, ஆண்டாஞ்சேரி 59, கழனிவாசல் கிராமம், லெந்தங்குடி கிராமம், ஆகிய இடங்களிலுள்ள இயங்காமல் இருக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை செப்பனிட்டு இயங்கச் செய்யவும் கழனிவாசல் ஆழ்குழாய்க் கிணற்றை செப்பனிட்டுத் தரவும் அரசு முன்வருமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குத்தாலம் தொகுதி 47 அரிவளூர் கிராமத்தில் முஸ்லீம் தெருவில் இருந்த மேல்நிலைத் தொட்டி பழுதுநீக்கம் செய்யப்பட்டு, தற்போது நன்றாக இயங்கி வருகிறது. 50 கொடவிளாகம் ஊராட்சி, ஆண்டாஞ்சேரியில் இருந்த தரைமட்ட நீர்த்தேக்கத்தொட்டி நிரந்தரமாக பழுதடைந்து உபயோகமற்றதாகிவிட்டது. அதற்குப் பதில் அவ்விடத்தில் இந்தியா மார்க் 2 பம்பு இயங்கி வருகிறது. இது போதுமானது ஆகும்.

கழனிவாசல் கிராமத்தில் பழுதுபட்ட மேல்நிலைத் தொட்டி பழுது நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இங்குள்ள ஆழ்குழாய்க்கிணறு தூர்ந்துவிட்டது. மாற்று ஆழ்குழாய்க் கிணறு அமைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் இடம் தேர்வு செய்யப்பட்டு மேல் நடவடிக்கையில் உள்ளது.

எலந்தங்குடி கிராமத்தில் பழுதுபட்ட மேல்நிலை தேக்கத் தொட்டி பழுதுநீக்கம் செய்யப்பட்டு தற்போது நல்ல முறையில் இயங்கி வருகிறது.

**94--**

### மயிலாடுதுறை வட்டத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை செப்பனிடுதல்

வினா எண் *46484*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், கடலங்குடி ஊராட்சி வாளவராயகுப்பம், அசிக்காடு, மாந்தை ஊராட்சி, மேல் அய்யானார்குடி ஆகிய கிராமங்களில் இயங்காமல் பழுதடைந்துள்ள "மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி"யைச் செப்பனிட்டு இயங்கச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், கடலங்குடி ஊராட்சி வாளவராயன்குப்பம், அசிக்காடு, மாந்தை ஊராட்சி மேல் அய்யனார்குடி ஆகிய கிராமங்களில் இயங்கா்மல் பழுதடைந்துள்ள மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டிகள் செப்பனிடப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகின்றன.

**95--**

**மயிலாடுதுறை வட்டத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்**

வினா எண் 46516--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், 85, பண்டாரவாடை கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளியில் "ஆழ்குழாய்க் கிணறு" அமைத்துக் கொடுக்கப்படுமா ?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குத்தாலம் ஊராட்சி ஒன்றியம், 85. பண்டாரவாடை கிராமத்தில் மொத்தம் 19 கைப்பம்புகளும், இந்தியா மார்க் 2 இரண்டும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றும் உள்ளது. ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளிக்கு அருகில் உள்ள இந்தியா மார்க் 2 பம்பு தூர் சுத்தம் செய்யப்பட்டு தற்சமயம் நல்ல நிலையில் இயங்கி வருகிறது. எனவே இங்கு புதிய ஆழ்குழாய்க்கிணறு அமைக்க வேண்டியதில்லை.

**96--**

**தரங்கம்பாடி வட்டத்தில் ஆழ்குழாய்க்கிணறு அமைத்தல்**

வினா எண் 46521--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, தரங்கம்பாடி வட்டம், எலந்தங்குடி கிராமத்தில் நடுத்தெரு, 47, அரிவளூர்

கிராமம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி, சிவன் கோவில் தெரு, ஆகிய இடங்களில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

***மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

குத்தாலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள எலந்தங்குடி கிராமத்தில் உள்ள நடுத்தெருவில் 75 வீடுகள் உள்ளன. இத்தெருவில் தமிழ்நாடு குடிநீர் வாரியத்தால் கட்டப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 22--3--1995ல் ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைக்கப்பட்டு 8 பொது மேடை இணைப்புகள் கொடுக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே இங்கு ஆழ்குழாய்க் கிணறு தேவையில்லை.

அரிவளூர் கிராம ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளி மற்றும் சிவன்கோவில் தெரு ஆகிய இடங்களில் மொத்தம் 5 கைப்பம்புகள் மூலமும், ஒரு மேல்நிலைத் தொட்டியில் குழாய் இணைப்புகள் மூலமும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கூடுதலாக ஆழ்குழாய்க்கிணறு தற்போது தேவையில்லை.

**97--**

### ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டுதல்

வினா எண் 5919--**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், வேலூர் தொகுதியில் உள்ள பெருமுகை, அலமேலுமங்காபுரம் ஆதிதிராவிடர் நல பள்ளிகளுக்குக் கட்டிடம் கட்டவும் விளையாட்டிடம் அமைக்கவும் நிலம் வாங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு பரப்பளவு நிலம்?

**விடை--**

***மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:***

*1995 நவம்பர் 3]*

*(அ) பெருமுகை ஆதிதிராவிடர் நலப் பள்ளிக்கு போதுமான அளவு கட்டிட வசதி உள்ளது. விளையாட்டிடம் அமைக்க வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், வேலூர் வட்டம் பெருமுகை கிராமத்தில் 107/4 மற்றும் 107/8 ச. எண்ணில் 0.44.0 ஹெக்டேர் நிலத்தை கையகப்படுத்த அங்கீகரித்து அரசு ஆணை 3 டி எண் 354, நாள் 17--5--1994ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.*

*(ஆ) வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் வேலூர் தொகுதியில் உள்ள அலமேலுமங்காபுரம் ஆதிதிராவிடர் நலப்பள்ளிக்கு க்ட்டிடம் கட்டவும் விளையாட்டு மைதானம் அமைக்கவும் 5.09 ஏக்கர் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த இடம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. அந்த இடத்தை ஆதிதிராவிடர் நலத் துறைக்கு ஒதுக்கீடு செய்யும்படி கோரியதில் இடத்தின் சொந்தக்காரர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து தடையுத்தரவு பெற்றுள்ளனர்.*

**98--**

**மலைவாழ் மக்களுக்கு தேனீ வளர்ப்புப் பெட்டிகள் வழங்குதல்**

*வினா எண் 19216--***திரு. ஆர்.பி. பரமசிவம்:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

*(அ) கல்ராயன் மலையில் உள்ள மலைவாழ் மக்களுக்கு இலவசமாக தேனீ வளர்ப்புப் பெட்டிகள் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை--**

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) 1993-94ம் ஆண்டில் மொத்தம் 300 பழங்குடியினருக்கு தேனீ வளர்ப்புப் பெட்டிகள் வழங்க அரசு ஆணை நிலை எண் 63, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 25-3-94ல் ஆணையிடப்பட்டுள்ளது. இதில் சேலம் மாவட்டம், கல்ராயன் மலையில் உள்ள 40 மலைவாழ் மக்களும் விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம் கல்ராயன் மலையில் உள்ள 60 மலைவாழ் மக்களும் அடங்குவார்கள். 1994-95ம் ஆண்டில் மொத்தம்*

30 பழங்குடியினருக்கு தேனீ வளர்ப்புப் பெட்டிகள் வழங்க அரசு ஆணை நிலை எண் 18, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 15-2-1995-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதில் சேலம் மாவட்டம் கல்ராயன் மலையில் உள்ள 40 மலைவாழ் மக்களும், விழுப்புரம் இராமசுவாமி படையாச்சியார் மாவட்டம் கல்ராயன் மலையில் உள்ள 40 மலைவாழ் மக்களும் அடங்குவார்கள்.

**99--**

**மலைவாழ் மக்களுக்கு சூரிய ஒளி லாந்தர் விளக்குகள் வழங்குதல்**

வினா எண் 76186--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மலைவாழ் மக்களுக்கு சூரிய ஒளி லாந்தர் விளக்குகள் வழங்குவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

மலைவாழ் மக்களுக்கு சூரிய ஒளி லாந்தர் விளக்குகள் வழங்குவதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**100--**

**இராமேஸ்வரம் கடல்பகுதியை அழகுபடுத்துதல்**

வினா எண் 17433--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

இராமேஸ்வரம் கடல் பகுதியை அழகுபடுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கையின் விவரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

தற்போது எந்த நடவடிக்கையும் இல்லை.

*1995 நவம்பர் 3]*

# பதினொன்றாம் பட்டியல்

**1--**

**பரமக்குடி நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் தொலைபேசி நிலையம் அமைத்தல்**

*வினா எண் 36717*--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** *மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

*(அ) பரமக்குடி நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் தொலைபேசி நிலையம் அமைக்க வேண்டி அரசுக்கு அந்த இடத்தை கொடுக்க பரிந்துரை வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை--**

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ):* இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், காட்டுபரமக்குடி கிராமம், புல எண். *155/2*-இல் *1.41* ஏக்கர், பரமக்குடி நகராட்சிக்குச் சொந்தமான நிலத்தினை தொலைபேசி துறைக்கு நிலக்கிரயம் வசூல் செய்து கொண்டு வருவாய் நிலையாணை எண்.*23*-ன் கீழ் நில மாற்றம் செய்ய அரசாணை நிலை எண். *750*, வருவாய்த்துறை, நாள் *29-11-1994* இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**2--**

**துறையூர்--பச்சைமலை தோனூருக்குப் பேருந்து இயக்குதல்**

*வினா எண் 36131*--**திரு. வி. ரவிச்சந்திரன்:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூரிலிருந்து பச்சைமலை தோனூருக்கு டாப்செங்காட்டுப்பட்டி வழியாக பேருந்து இயக்க அரசு *ஆவன செய்யுமா?*

விடை--

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

துறையூரிலிருந்து தோனூருக் டாப்செங்காட்டுப்பட்டி வழியாக உள்ள வழித்தடத்தின் தூரம் 56 கி.மீ. மேற்படி வழித்தடத்தில் இராமநாதபுரத்திற்கும் தோனூருக்கும் இடையிலான 10 கி.மீ. தூரத்திற்கு சாலையில் சாலை பராமரிப்புப் பணிகள் நடந்து வருவதால் தற்பொழுது பேருந்து இயக்க இயலாது.

3--

குமரபுரத்திற்குப் பேருந்து இயக்குதல்

வினா எண் 36302--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கொடுமுடி குமரபுரத்திற்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

கொடுமுடி அருகில் குமரபுரம் என்ற கிராமம் இல்லை. ஆனால் கொடுமுடி ஒன்றியத்தில் சிவகிரி அருகில் குமரப்பபுரம் என்ற கிராமம் உள்ளது. குமரப்புரத்திற்கு நடை தூரத்தில் பேருந்து வசதிகள் உள்ளன.

4--

சிட்டபுள்ளா பாளையத்திற்குப் பேருந்து இயக்குதல்

வினா எண் 36305--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கொடுமுடி சென்னை சமுத்திரம் பேரூராட்சி சிட்டபுள்ளா பாளையம் ஆதிதிராவிடர் காலனி மக்களுக்கு பேருந்து வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

சிட்டப்புள்ளா பாளையம் ஆதி திராவிடர் காலனி மக்களுக்கு கொடுமுடி--கொடுமுடி கே. 5 நகரப் பேருந்து மூலம் 4 தனி நடைகள் பேருந்து வசதி செய்து தரப்பட்டுள்ளது.

5--

**வடக்கு திட்டை ஊருக்குள் பேருந்து வசதி அளித்தல்**

வினா எண் *38190*--**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், வடக்கு திட்டை ஊருக்குள் பேருந்து சென்று வர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வடக்கு திட்டை கிராமம், நன்கு பேருந்து வசதி பெற்றுள்ள புவனகிரி--குறிஞ்சிப்பாடி நெடுஞ்சாலையில் இருந்து பிரிந்து 1 கி.மீ. தூரத்திலேயே உள் நோக்கி அமைந்துள்ளது. அரசு நெறிமுறைப்படி தற்போது பேருந்து வசதி கிடைக்கப்பெறும் இடத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள கிராமங்கள் பேருந்து வசதி பெற்ற கிராமமாகவே கருதப்படும். தவிரவும் மேற்குறித்த ஒரு கிலோ மீட்டர் தூரம் பகுதியின் சாலையும் பேருந்து போக்குவரத்திற்கு ஏற்ற நிலையில் இல்லை. இப்பகுதியை தட ஆய்வு செய்ததில் சாலையின் நிலையில் எந்த மேம்பாடும் காணப்படவில்லை. சாலை பேருந்து இயக்கிட தகுதியற்ற நிலையிலேயே உள்ளது. எனவே, வடக்கு திட்டை கிராமத்திற்கு நேரடி பேருந்து வசதி அளித்திட இயலாத நிலை உள்ளது.

6--

## மடவாப்பள்ளத்திற்குப் பேருந்து இயக்குதல்

வினா எண் 38294--செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புவனகிரி தொகுதி, கடலூரிலிருந்து சாமியார் பேட்டைக்கு இயக்கப்படும் பேருந்தை பரங்கிப்பேட்டை ஒன்றியம் குமாரப்பேட்டை மடவாப்பள்ளம் வரை நீட்டித்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கடலூரிலிருந்து சாமியார்பேட்டை வரை இயக்கப்பட்டு வந்த பேருந்து 1-2-1993 முதல் மடவாப்பள்ளம் வரை நீட்டித்து இயக்கப்பட்டு வருகிறது.

7--

## புவனகிரி ஒன்றியத்தில் கூடுதல் நகரப் பேருந்துகள் இயக்குதல்

வினா எண் 38346--செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், பூதவராயன் பேட்டை வழியாக 24, 9, 17 பெரியார் போக்குவரத்துக் கழக பேருந்துகள் செல்லாமல் இருப்பதால் மக்கள் சிரமப்படும் நிலையைப் போக்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

1995 நவம்பர் 3]

(அ) மற்றும் (ஆ): பூதவராயன்பேட்டை, மண்வெளி வழியாக நகரப் பேருந்துகளை தடம் மாற்றி இயக்கிடுதல் தொடர்பாக மேற்படி சாலைப் பகுதிகளை தட ஆய்வு செய்ததில் மண்வெளி அருகில் மழையினால் சேதம் அடைந்த பாலம் இன்று வரை செப்பனிடப்படாத நிலையில் தான் உள்ளது. மேலும் சாலையின் அகலமும் மிகவும் குறுகலாக உள்ளது. இவ்விடத்தில் பேருந்தினை திருப்பிட இயலாத நிலை உள்ளது. எனவே, மேற்கண்ட குறைபாடுகள் சரி செய்யப்பட்டு சீர் அமைக்கப்பட்ட பின்னரே மீண்டும் பூதவராயன்பேட்டை மண்வெளி வழியாக பேருந்தினை இயக்கிட இயலும்.

8--

**பெத்தாட்சி நகருக்கு நகரப் பேருந்து இயக்குதல்**

வினா எண் 40615--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பள்ளப்பட்டியிலிருந்து அரவக்குறிச்சி, ஈசநத்தம், ஊத்துப்பட்டி, ஓடப்பட்டி வேலன்செட்டியூர் வழியாக பெத்தாட்சி நகருக்கு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

கோரிக்கையின் வழித் தடத்தில் வேலன்செட்டியூர்-பெத்தாட்சி நகர் வரை உள்ள 3 கி.மீ. பகுதி எவ்வித பராமரிப்பு பணிகளும் செய்யப்படாமல், இரு புறமும் முட்கள் வளர்ந்தும், மண் சாலையாகவே உள்ளது. ஆனால், பெத்தாட்சி நகர்-பள்ளப்பட்டி பிரிவு வரை உள்ள 1.5 கி.மீ. சாலை செப்பனிடப்பட்டு மெட்டல் சாலையாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே, கோரிக்கையின் வழித் தடத்தில் பேருந்து இயக்குவதற்கு ஏதுவாக மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோட்டப் பொறியாளர், புதுக்கோட்டை அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். அவ்வாறு மாற்றம் செய்யப்பட்டவுடன் பேருந்தினை இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9--

## விசுவநாதபுரிக்கு நகரப் பேருந்து இயக்குதல்

வினா எண் 42117--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், விசுவநாதபுரியில் பள்ளி மாணவர்களுக்காக நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

கோரிக்கையில் உள்ள க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம் விசுவநாதபுரியிலிருந்து கரூர் செல்லும் பள்ளி மாணவர்களுக்கு பயனளிக்கும் வகையில் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தில் இருந்து பல நோக்கு திட்டத்தில் நகரப் பேருந்து ஒன்றின் மூலம் காலையில் சின்னதாராபுரம்--கரூர் இயங்கும். காலை 8-10 மணி நடை விசுவநாதபுரிக்கு 9-00 மணிக்கு வந்து கரூருக்கு 9-25-க்கு வந்து சேருகிறது. அதேபோல் மாலையில் கரூர்-பள்ளப்பாளையம் இயங்கும் நகரப் பேருந்து மாலை 5-20 கரூரில் இருந்து நடை எடுத்து, 5-45-க்கு விசுவநாதபுரி வந்தடைகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

10--

## தாராபுரம்--ஊட்டி பேருந்து விடல்

வினா எண் 46089--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா--

பெரியார் மாவட்டம் தாராபுரம்--ஊட்டிக்கு கொடுவாய், திருப்பூர், மேட்டுப்பாளையம், குன்னூர் வழியாக பேருந்து விட அரசிடம் செயற் குறிப்பு இருக்கிறதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3]*

ஜீவா போக்குவரத்துக் கழகம் மூலமாக பழனி--ஊட்டிக்கு தாராபுரம், கொடுவாய், திருப்பூர், மேட்டுப்பாளையம், குன்னூர் வழியாக தற்போது ஒரு பேருந்து இயக்கப்பட்டு வருகின்றது. எனவே, தாராபுரத்திலிருந்து மட்டும் இயக்கும் வாய்ப்பில்லை. பயணிகள் விகிதாச்சாரம் அதிகரிக்கும் நிலை ஏற்படும்போது மேற்கண்ட கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**11--**

**திருப்பத்தூர்--பாண்டிச்சேரி பேருந்து விடல்**

வினா எண் *46865*--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் பாண்டிச்சேரிக்கு திருவண்ணாமலை, செஞ்சி, திண்டிவனம் வழியாக பேருந்து விடப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

இது ஒரு அண்டை மாநில தடமாகும். இரு மாநில ஒப்பந்தத்தின் கீழ் இத்தடம் இடம்பெறவில்லை. அதனால் திருப்பத்தூரிலிருந்து பாண்டிச்சேரிக்கு பேருந்து இயக்க இயலாது.

**12--**

**பூம்புகார்--சென்னை பேருந்து இயக்குதல்**

வினா எண் *47381*--திரு. எம். பூராசாமி: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பூம்புகாரிலிருந்து சென்னைக்கு செல்ல திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

திருவள்ளுவர் போத்துவரத்துக் கழக தடம் எண் 324 வேளாங்கன்னி, சென்னை, பூம்புகார் அருகிலுள்ள கருவேந்திநாதபுரம் வழியாக இயக்கப்படுகிறது. பயணிகள் வசதிக்காக கருவேந்திநாதபுரத்தில் வேண்டுகோள் நிறுத்தம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வசதியை பூம்புகாரிலிருந்து சென்னை வரும் பயணிகள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**13--**

### நல்லாடைக்கு நகரப் பேருந்து விடுதல்

வினா எண் 47386--**திரு. எம். பூராசாமி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ) சீர்காழி, வைத்தீஸ்வரன்கோவில், நத்தம், கஞ்சா நகரம், மேலப்பாதி, செம்பனார்கோவில் வழியாக நல்லாடைக்கு நகரப் பேருந்து விடப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சீர்காழி--நல்லாடை (வழி), வைத்தீஸ்வரன்கோவில், நத்தம், கஞ்சா நகரம், மேலப்பாதி, செம்பனார் கோவில், தடத்தின் நீளம் 35 கி.மீ. ஆகும். இத்தடத்தில் நத்தத்திலிருந்து கஞ்சா நகரம் (5 கி.மீ) வரையிலான சாலை பேருந்து வசதி பெறாத பகுதியாகும். மேலும் இச்சாலை பேருந்து இயக்கத்திற்கு ஏற்றதாக இல்லை. எனவே, இத்தடத்தில் நகரப் பேருந்து இயக்க செயற் குறிப்பு ஏதுமில்லை.

**14--**

### மயிலாடுதுறை--முடிகண்டநல்லூர் பேருந்து விடல்

வினா எண் 47389--**திரு. எம். பூராசாமி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

*(அ)* மயிலாடுதுறையிலிருந்து மன்னம்பந்தல், செம்பனார் கோவில், திருச்சம்பள்ளி வழியாக முடிகண்டாநல்லூருக்கு புதிய பேருந்து தடம் விட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)*: மயிலாடுதுறை--முடிகண்டநல்லூர் (வழி) மன்னம்பந்தல், செம்பனார் கோவில், திருச்சம்பள்ளி தட நீளம் 15 கி.மீ. ஆகும். இத்தடத்தில் மயிலாடுதுறையிலிருந்து திருச்சம்பள்ளி வரையிலான பகுதி பேருந்து வசதி பெற்றுள்ளது திருச்சம்பள்ளியிலிருந்து தனியே பிரிந்து செல்லும் முடிகண்டநல்லூர் வரையிலான 2 கி.மீ. சாலை பேருந்து வசதி பெறாத பகுதியாகும். முடிகண்டநல்லூர் வரை பேருந்து சென்று திரும்புவதற்கு போதிய இட வசதி இல்லை. எனவே, இத்தடத்தில் பேருந்து இயக்க செயற் குறிப்பு ஏதுவுமில்லை.

**15--**

**சீர்காழி--மயிலாடுதுறை புதிய பேருந்து விடுதல்**

வினா எண் 47390--**திரு. எம். பூராசாமி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* சீர்காழியிலிருந்து, நடராஜ பிள்ளைசாவடி, கீழையூர், எருமல், கூத்தூர், சேமங்கலம் வழியாக மயிலாடுதுறைக்கு புதிய பேருந்து தடம் விடுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)*: கோரிக்கை தடம் ஒரு சுற்று வழித்தடம் ஆகும். மேலும் இத்தடத்தில் பேருந்து இயக்க தகுதியற்ற நடராஜப்பிள்ளை சாவடி, திருநின்றயூர் (12 கி.மீ) தவிர மற்ற பகுதிகள் அனைத்தும்

பேருந்து வசதி பெற்ற பகுதிகளாகும். சீர்காழி--மயிலாடுதுறை (நேர் வழி) தட நீளம் 20 கி.மீ. மட்டுமே. ஆனால், கோரிக்கையில் உள்ள தடங்களின் வழியாக சென்றால் தட நீளம் 32 கி.மீ. ஆகும். எனவே, நேர்வழி பயணிகள் இச்சுற்று வழித் தடத்தில் பயணம் செய்ய விரும்பமாட்டார்கள். எனவே, இத்தடத்தில் புதிய பேருந்து இயக்க செயற்குறிப்பு எதுவுமில்லை.

**16--**

**கரூர் வட்ட கிராமங்களுக்கு நகரப் பேருந்து விடுதல்**

வினா எண் *54145*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரூர் வட்டம், சின்னதாராபுரம் கொடுமுடி (வழி) சாலைப்புதூர், தளுவம்பாளையம் சுமைதாங்கிபுதூர், முருகம்பாளையம், காட்டம்பட்டி, தொப்பம்பட்டி, வடபழனி, தென்னிலை, சி.கூடலூர் இடையே நகரப் பேருந்து விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

கோரிக்கை வழித்தடம் முழுமையும் பகுதிவாரியாக ஜீவா கழக கே-8 மற்றும் கே-11 நகரப் பேருந்துகள் மூலம் தலா இரண்டு தனிநடைகள் வீதம் தினசரி 4 தனிநடைகள் இயக்கப்பட்டு வருகின்றது.

**17--**

**தூத்துக்குடி-பம்பாய்க்கு ரயில் விடுதல்**

வினா எண் *67540*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தூத்துக்குடியிலிருந்து மதுரை, திண்டுக்கல், கரூர், ஈரோடு அரக்கோணம் வழியாக பம்பாய்க்கு ரயில் விடுமாறு மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

தற்பொழுது 14-7-1995லிருந்து வாரத்திற்கு ஒரு முறை நாகர்கோவில்-பம்பாய் V.T. விரைவு ரயில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதோடு 21-7-1995 முதல் அதன் இணைப்பு ரயில் வாஞ்சி மணியாச்சிக்கும் தூத்துக்குடிக்கும் இடையே செல்லத்தக்கவகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளபடியால் இது குறித்து மத்திய அரசை வலியுறுத்தும் அவசியம் எழவில்லை.

**18--**

### மானூர் ஒன்றியத்தில் கூடுதல் பேருந்து வசதி

வினா எண் 81820--**திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருநெல்வேலியிலிருந்து மானூர் ஒன்றியம், சீதக்குறிச்சி, களக்குடி ஆகிய கிராமங்களுக்கு புதிய பேருந்து விடப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலியிலிருந்து மானூர் ஒன்றியம், சீதக்குறிச்சி கிராமத்திற்கு இரண்டு கட்டபொம்மன் போக்குவரத்து கழகப் பேருந்துகள் மூலம் 14 சுற்றுக்களும், களக்குடி கிராமத்திற்கு 1 நகரப் பேருந்து மூலம் 12 சுற்றுக்களும் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் மேற்படி நகரப்பேருந்துகளை பழுது நீக்கி நன்கு பராமரிப்பு செய்யப்பட்ட நல்ல நிலையில் உள்ள பேருந்துகளாக இயக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) தற்போது புதிய பேருந்துகள் நகர தடத்தில் இயக்கும் உத்தேசம் ஏதும் இல்லை.

**19--**

**குன்னூரிலிருந்து பாரதியார் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்குதல்**

வினா எண் *81991*--டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் நகரத்திலிருந்து, சென்னை, திருச்சி, கன்னியாகுமரி, மதுரை ஆகிய இடங்களுக்கு பாரதியார் போக்குவரத்துக் கழகம் பேருந்தை இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): குன்னூரிலிருந்து சென்னை, திருச்சி, கன்னியாகுமரி, மதுரை ஆகிய இடங்களில் வழித்தட நீளம் 250 கி.மீ.க்கும் அதிகமாக உள்ளதால் மேற்கண்ட வழித்தடங்களுக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் மட்டுமே பேருந்தை இயக்க இயலும். எனவே பாரதியார் போக்குவரத்துக் கழகத்தால் மேற்குறிப்பிட்ட இடங்களுக்கு பேருந்து இயக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

**20--**

**பெங்களூர் ஓடு தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல்**

வினா எண் *64941*--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் பெங்களூர் ஓடு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3]*

அரசு கொள்கை ரீதியாக எந்த ஒரு சிறு தொழிற்சாலையையும் இத்துறையின் மூலம் நிறுவுவதில்லை. ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்க முன்வருவார்களேயானால் அவர்களுக்கு மாவட்ட தொழில் மையங்கள் மூலம் தக்க ஆலோசனைகளும் உதவிகளும் அளிக்கப்படும்.

**21--**

**கோடைக்கானலில் வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற் சாலை அமைத்தல்**

வினா எண் *67724*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திண்டுக்கல்-அண்ணா மாவட்டம், கொடைக்கானலில் வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

அரசு கொள்கை ரீதியாக எந்த ஒரு சிறு தொழிற்சாலையையும் இத்துறையின் மூலம் நிறுவுவதில்லை. ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்க முன் வருவார்களேயானால், அவர்களுக்கு மாவட்ட தொழில் மையங்கள் மூலம் தக்க ஆலோசனைகளும், உதவிகளும் அளிக்கப்படும். கொடைக்கானலில் வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் பிரேரணை ஏதுமில்லை.

**22--**

**தோல் பொருட்கள் சேகரிப்பு மையம் அமைத்தல்**

வினா எண் *78505*--**திரு. ஆர்.பி. பரமசிவம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலம் சேலத்தில் காலணி மற்றும் தோல் பொருட்கள் சேகரிப்பு மையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை--**

**மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): காலணி மற்றும் தோல் பொருள்கள் சேகரிப்பு மையம் ஒன்று சேலத்தில் தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் மூலம் கடந்த 1-1-1995 முதல் தொடங்கப்பட்டது. இதன் மூலமாக 50-க்கும் மேற்பட்ட தோல் கைவினைஞர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

**23--**

**புளியை பொடியாக அரைக்கும் தொழிற்சாலை அமைத்தல்**

வினா எண் 78556--திரு. கி. தருமலிங்கம்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா---

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, ஒடுகத்தூர் பகுதியில் புளியைப் பொடியாக அரைக்கும் தொழிற்சாலை அமைக்கப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

அரசு கொள்கை ரீதியாக எந்த ஒரு சிறு தொழிற்சாலையையும் இத்துறையின் மூலம் நிறுவுவதில்லை. ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் தொழில் தொடங்க முன் வருவார்களேயானால் அவர்களுக்கு மாவட்ட தொழில் மையங்கள் மூலம் தக்க ஆலோசனைகளும் உதவிகளும் அளிக்கப்படும்.

**24--**

**காளான் வளர்க்க நடவடிக்கை**

வினா எண் 39090---**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

இராமநாதபுரம் மாவட்டத்தில் காளான் வளர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய விவரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தோட்டக்கலைத் துறை மூலம் காளான் உற்பத்தி செய்யப்படவில்லை. ஆனால் எல்லா மாவட்டங்களிலும் காளான் வளர்ப்பு பற்றிய பயிற்சி, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. கடந்த இரு ஆண்டுகளாக 15 மாவட்டங்களில் உள்ள 1,200 விவசாயிகளுக்கு காளான் வளர்ப்பு பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது. மீதமுள்ள மாவட்டங்களில் இவ்வாண்டு பயிற்சி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் சுமார் 80 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

**25--**

**சாலைப் பராமரிப்பு செலவின விவரம்**

வினா எண் 44974--**திரு. எம். பூராசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், தலைஞாயிறு நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ஆர். கூட்டுறவு சர்க்கரை ஆலையின் நிதியிலிருந்து 1993-94-ல் செய்யப்பட்ட சாலைப் பராமரிப்பு செலவினத்தின் விவரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

கரும்பு பயிரிடப்படும் பகுதிகளுக்கும் சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலைகளுக்குமிடையே இணைப்புச் சாலைகள் அமைப்பதற்காக கரும்பு சாலை மேம்பாட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டது. சர்க்கரை ஆலைகளுக்கு அரைவைக்காக எடுத்துச் செல்லும் கரும்புகளுக்கு, டன் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் என்ற வீதத்தில் வசூலிக்கப்படும் கரும்பு மேல் வரி நிதியிலிருந்து, கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டம்

செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசிற்கும் சர்க்கரை ஆலைகள் நிறுவனங்களுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் கரும்பு மேல் வரியிலிருந்து பெறப்படுகின்ற தொகையில் 60 சதவீதம் சம்பந்தப்பட்ட சர்க்கரை ஆலையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிகளுக்கு சாலையமைக்க செலவு செய்யப்படுகிறது. நாகை காயிதே மில்லத் மாவட்டம், தலைஞாயிறு என்.பி.கே.ஆர்.ஆர். கூட்டுறவு சர்க்கரை ஆலைப் பகுதியில் கரும்பு சாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 1993-94 நிதியாண்டில் புதிய சாலை அமைத்தல் மற்றும் பழைய சாலைகள் பராமரித்தல் வகையில் ரூ. 23.04 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும் வட்டார வளர்ச்சி நிதியின் கீழ் 71 சிறு சாலைகள் செப்பனிட ரூ. 5 இலட்சம் அனுமதிக்கப்பட்டு சாலை செப்பனிடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**26--**

**விவசாயிகளுக்கு இலவசமாக வேளாண் பொருட்கள் வழங்குதல்**

வினா எண் 61830--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காய்கறி உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு விதை, கன்று, உரம், பூச்சிமருந்து இலவசமாகத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தோட்டக்கலைத் துறை ஒவ்வொரு ஆண்டும் தீவிர காய்கறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ 500 எக்டர் பரப்பளவிற்கு காய்கறி சாகுபடி பரப்பினை அதிகரித்து வருகிறது. 1994-95 ஆம் ஆண்டு இந்த திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் 350 எக்டேரிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 150 எக்டேரிலும் கூடுதலாக காய்கறி சாகுபடி செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் விதை, உரம், பூச்சிமருந்து ஆகியவை 50 சத மானிய விலையில் வழங்கப்பட்டது. 1993-94 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ.14,540 இலட்சம் செலவிடப்பட்டது. நடப்பு ஆண்டில் இந்தத் திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட வேறு மாவட்டங்களில் செயல் படுத்தப்படும்.

*1995 நவம்பர் 3]*

**27--**

**விவசாயப் பொருள்களுக்கு வரிவிலக்கு**

வினா எண் *35154*--**திரு. ஓ.எஸ். அமர்நாத்:** மாண்புமிகு வணிகவரிகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) விவசாயப் பொருட்களுக்கு என்னென்ன வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது?

(ஆ) இதனால் அரசிற்கு எவ்வளவு வரி இழப்பு ஏற்படுகிறது?

**விடை--**

**மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரிகள் துறை அமைச்சர்:**

(அ) விவசாயப் பொருட்களான நெல், சோளம், கம்பு, ராகி, தினை, வரகு, சாமி, குருதுவாளி மற்றும் ஏனைய காய்கறிகள், பழவகைகளுக்கும் வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளன. மேலும், மனித சக்தியைக் கொண்டு மட்டுமே அல்லது விலங்கு சக்தியினைக் கொண்டு மட்டுமே செயல்படுகின்ற (அ) இயங்குகின்ற பின்வரும் வேளாண் கருவிகளும் அவற்றின் பாகங்கள் உதிரி பாகங்கள் மற்றும் துணைக் கருவிகளுக்கும் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளன.

*1.* மனித சக்தியினைக் கொண்டு மட்டுமே பயன்படுத்தப்படுகின்ற வேளாண் சாதனங்கள்:

1. கடப்பாரை
2. மண் வெட்டி
3. அரிவாள்
4. சுத்திகள்
5. சுழலும் களையெடுக்கும் கருவிகள்
6. மண் வாரிகள்
7. கையினால் இயக்கப்படும் தெளிப்பான்களும், துடைப்பான்களும்.
8. கொழு
9. குத்தாளம்
10. குந்தாலி
11. தோண்டுவதற்கான கவைமுள்
12. மண்வாரி பெரியமுள்
13. கடிமண் வளப்படுத்தும் கருவி.

2. விலங்குச் சக்தியைக் கொண்டு மட்டுமே பயன்படுத்தும் வேளாண்மைச் சாதனங்கள்:

1. உள்நாட்டில் செய்யப்படும் நாட்டுக் கலப்பைகள் யாவும்.

2. கமலைத் தோணி

3. தொப்புரை வளையம்

4. நீரை இடம் பெயர்த்துகின்ற சால் இருப்பு.

மேலும் தற்போது பயன்படுத்தப்படும் விவசாயக் கருவிகள் எத்தனை என அறுதியிட்டு கூற முடியாது. இந்தக் கருவிகள் இடத்திற்கு இடம் வேறுபட்டதாக இருக்கும். மற்றும் பெயர்களும் இடத்திற்கு இடம் வேறுபட்டதாக இருக்கும். மேலும் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின்படி கீழ்க்கண்ட விவசாய கருவிகளுக்கும் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இது 1-4-1995 முதல் அமுலுக்கு வருகிறது.

1. மனித சக்தி மட்டும் பயன்படுத்தப்படுகின்ற வேளாண்மை சாதனங்கள்:

(அ) சமப்படுத்தும் கருவி.

(ஆ) களைக் கொத்தி

2. விலங்கு சக்தியை கொண்டு மட்டுமே பயன்படுத்தப்படும் வேளாண்மை சாதனங்கள்:

(அ) சமப்படுத்தும் கருவி

(ஆ) விவசாயப் பொருட்களுக்கு அளிக்கப்பட்டுள்ள வரி விலக்கு நெடுங்காலமாக இருப்பதால் அதன் மீதும் ஏற்படும் வரி இழப்பு சரிவர தெரிய முடிவது இல்லை. (இவைகள் மூன்றாம் அட்டவணையில் உள்ள பொருட்கள்). சில விவசாயக் கருவிகளுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டதால் அரசுக்கு வருட வரி இழப்பு ரூ. 35.42 இலட்சம் ஆகும்.

**28--**

## ரெக்சின் பொருளுக்கு வரிவிலக்கு

வினா எண் 35158--**திரு. வ.மு. சுப்பிரமணியன்:** மாண்புமிகு வணிகவரிகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

*(அ)* ரெக்சின் (Rexin) எனும் பொருள் வரிவிதிப்புக்கு உட்பட்டதா?

*(ஆ)* ஆம் எனில், ஏன் வரி விதிக்கப்படவில்லை?

**விடை--**

**மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரிகள் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை. ரெக்சின் (Rexin) எனும் பொருள் வரி விதிப்பிற்கு உட்படவில்லை.

*(ஆ)* ரெக்சின் மத்திய கூடுதல் கலால் வரிக்கு 59.03-ன் கீழ் உட்படுவதால் (Additional duties of Excise Goods of special Important Act.) விற்பனை வரி விதிக்கப்படுவதில்லை.

**29--**

**வரிச்சலுகைகள் வழங்கப்பட்டுள்ள பொருள்களின் விவரம்**

வினா எண் *45603*--**திரு. கே. கந்தசாமி:** மாண்புமிகு வணிகவரிகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

எந்தெந்த பொருட்களுக்கு எவ்வளவு வரிச் சலுகை அண்மையில் அளிக்கப்பட்டுள்ளது?

**விடை--**

**மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரிகள் துறை அமைச்சர்:**

*(அ)* அண்மையில் கீழ்க்கண்ட பொருட்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளன:

1. பனைவெல்லம்

2. கைத்தறி மற்றும் ஆலையில் தயார் செய்யப்பட்ட தைத்த கைக்குட்டைகள்.

3. (1) கோழி வளர்ப்பு உணவு.

(2) முயல் வளர்ப்பு உணவு.

(3) குரங்கு வளர்ப்பு உணவு.

(4) பன்றி வளர்ப்பு உணவு.

4. கோரைப் புல் மற்றும் கோரைப் பாய்கள்.

5. நார், நார்த்துகள்கள், நாரிழை, நார் உமி (நார் உற்பத்தி பொருள்கள் நீங்கலாக).

6. தட்சிண சணல்கள் (சணல் உற்பத்தி பொருள்கள் நீங்கலாக).

7. பட்டுப் புழு வளர்ப்புக்கான உள்ளூர் பொருள்கள்.

8. உலர்த்திய தேங்காய்.

9. துடைப்பம்.

10. (1) மரப் பென்சில்களல்லாத பிற பென்சில்கள்.

(2) வண்ணப்பென்சில்கள்.

(3) அழிப்பான்கள்.

(4) கூர் சீவும் கருவிகள்.

11. எஃகினாலான எழுது முனைகள்.

12. (1) பேனாக்கள், உருள் குழை முனைப் பேனாக்கள்.

(2) எபோனைட் பேனாக்கள், எபோனைட் உருள் குழை முனைப் பேனாக்கள்.

(3) மை வில்லைகள் உள்ளிட்ட எழுதும் மை.

13. (1) கரும் பலகைகள்.

(2) துடைப்பத் தூரிகைகள்.

(3) வடிவியல் பெட்டிகள்.

(4) பகுத்தாய்வுப் பெட்டிகள்

(5) வரைவதற்கான அல்லது பகுத்தாய்வு பெறுவதற்கான பிற கருவிகள்.

14. விறகு கரி.

15. 50 கிராமுக்குக் குறைவான ஊறுகாய் பொட்டலங்கள்.

16. எல்லா வகையான அப்பளம் மற்றும் வடாம்.

1995 நவம்பர் 3]

17. மேலும் இந்த ஆண்டு (1995-96) நிதி நிலை அறிக்கையின்படி கீழ்க்கண்ட பொருள்களுக்கும் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(1) மனித சக்தியினால் மட்டும் பயன்படுத்தப்படும் வேளாண்மை சாதனங்கள்.

(1) சமப்படுத்தப்படும் கருவி

(2) களைக் கொத்தி.

(2) விலங்கு சக்தியை கொண்டு மட்டும் பயன்படுத்தப்படும் வேளாண்மைச் சாதனம்.

(1) சமப்படுத்தும் கருவி.

(3) நட்சத்திர அந்தஸ்து இல்லாத உணவகம், சிற்றுண்டிச் சாலை மற்றும் பிற உண்பதற்கான இல்லங்களில் விற்கப்படும் உணவு மற்றும் பானங்கள்.

(4) மெழுகுவர்த்திகள்.

(5) எண்ணெயினால் எரிகின்ற ஹரிக்கேன் விளக்குகள், படுக்கையறை சிமினி விளக்குகள்.

(6) மண்ணெண்ணெய் விளக்குகள் (எரிவாயு விளக்குகளும், பெட்ரோமாக்ஸ் விளக்குகளும் நீங்கலாக).

(7) மேற்குறிப்பிடப்பட்ட விளக்குகளுக்கான தூரிகளும் கண்ணாடிச் சிமினிகளும்.

(8) அழுத்த விசையில்லாத மண்ணெண்ணெய் அடுப்புகள்.

(9) விளையாட்டுக்கான ரப்பர் பந்துகள்.

(ஆ) கீழ்க்கண்ட பொருள்களின் வரி விதிப்பில் மாற்றங்கள் அதாவது ஆறாவது அட்டவணையிலிருந்து முதலாவது அட்டவணைக்கு மாற்றம் செய்யப்பட்டு, ஒருமுனை விற்பனை வரிக்கு கொண்டு வரப்பெற்றுள்ளது. (இரண்டாம் கட்ட விற்பனை முறை அகற்றப்பட்டுள்ளது).

(1) தூள் வடிவத்திலும் பொடி வடிவத்திலும் ஆன தயார் நிலை காப்பி.

(2) (1) மணமூட்டப்பட்ட பாக்குத்தூள் வறுத்து அல்லது மண மூட்டப்பட்ட சீவல் பாக்கு.

(2) பாக்குத்தூள் அடங்கியிருக்கின்ற எப்பெயரில் அழைக்கப்படுவதாயினுமான பான் மசாலா அதாவது கொட்டை பாக்கின் பருப்புகள், உடைந்த மணமூட்டப்பட்டது மற்றும் எலுமிச்சை அல்லது மென்தால் அல்லது சந்தன எண்ணெய் அல்லது ஏலக்காய் அல்லது புகையிலை அல்லது இவற்றின் ஏதாகிலும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை சேர்க்கப்பட்டது.

(3) (1) பிஸ்கோத்துகள்.

(2) மிட்டாய்கள்.

(3) சாக்லேட்டுகள்.

(4) திண்பண்டம்,

(5) வெண்ணெய்,

(6) நெய்,

(7) பாலாடைக்கட்டிகள் மற்றும்

(8) பால் பொடி உள்ளடங்கலாக.

ஆனால், குழந்தை உணவு, பிரிந்து சேர்க்கப்பட்ட பால் நீங்கலாக (தண்ணீர் அன்றி வேறெதுவும் சேர்க்கப்படாமல் நேரடியாக கலக்கப்பட்டது தவிர) மற்றும் சுவையூட்டப்பட்ட பால் மற்றும் உறைந்த பால் உள்ளடங்கலான பால் உணவுகளும் மற்றும் காய்கறிகள், பழங்கள், பால், தானியங்கள் (ரொட்டி நீங்கலாக) பிற மாவுப் பொருள்கள், மாசத்து, பறவைகளின் முட்டைகள், இறைச்சி துண்டுத் துணுக்குகள், விலங்குகளின் குருதி, மீன் செதில்கள் மற்றும் கெட்டி இன உயிர் வகைகள் ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட உணவுகள் (1) முதல் (8) வரையிலான இனங்கள் 1958-ஆம் ஆண்டு தொழில் மற்றும் வணிகக் குறிகள் சட்டத்தின்படி (மையச் சட்டம் 43/1958 பதிவு செய்யப்பட்டவையாயினும் அல்லவாயினும், தொழில் பெயரில் விற்கப்படுபவை.

(4) இயந்திரங்களால் செய்யப்படும் சோப்புகள் அதாவது (1) மருந்து சோப்புகள், திரவ சோப்புகள், ஈரப்பசை சோப்புகள்,

*1995 நவம்பர் 3]*

உள்ளடங்கலான. ஆனால், கையினால் செய்யப்பட்ட சோப்புகள் மற்றும் தலை நுரை திரவங்கள் நீங்கலான குளியல் சோப்புகளின் அனைத்து வகைகள். *(2)* தரையைத் தூய்மைப் படுத்தும் சோப்புகள், சோப்பு சீவல்கள், சோப்பு துகள்கள், திரவச் சோப்புகள் உள்ளடங்கலான அனைத்து வகை தூய்மைப்படுத்தும் சோப்புகளும் மற்றும் ஆனால் இவ்வகைப் பொருட்கள் கையினால் செய்யப்பட்ட இனங்கள் நீங்கலான அனைத்து வடிவ தூய்மையாக்கிகளும்.

*(5)* பற்பசைகள், பற்பொடிகள் மற்றும் வாய் கழுவிகள் மற்றும் பல தூய்மைப்படுத்திகள், மருந்து கலக்கப்பட்டதாயினும் அல்லது கலக்கப்படாததாயினும் அல்லது *1940*-ஆம் ஆண்டு சரக்குகள் மற்றும் அழகுச் சாதனங்கள் சட்டத்தின் (மையச் சட்டம் XXIII /1940) 3-ஆம் பிரிவில் பொருள் வரையறை செய்யப்பட்டதாயினும், இந்த சட்டத்தின்படி வழங்கும் தூரிகைகள், நாக்கு துடைப்பான்கள்.

*(6)* *(1)* உருளை ஊது பத்திகள் மற்றும் அகர் பத்திகள் நீங்கலான, ஆனால் அரகஜா, ஜவ்வாது, புனுகு ஆகிய உள்ளடங்கலான எந்தவொரு வடிவத்திலுமான வாசனைத் திரவங்களும் நறுமணப் பொருட்களும்.

*(2)* தலைமுடி எண்ணெய், தலைமுடியில் பூசும் பசை, தலைமுடிச் சாய[illegible]ள், [illegible]சவர[illegible]னிகள், கூந்தல் மெழுகு, நெய் நறுமண மயிர் சாந்துகள் மற்றும் தலை முடிக்கா[illegible] களிம்புகள்.

*(3)* உதட்டுப் பூச்சு வண்ணக்கோன்கள், உதட்டு களிம்பு, நகச் சாந்துகள், நக மெருகூட்டும் திரவங்கள், நக தூரிகைகள், அழகு சாதனப் பெட்டிகள், முக நறுமண சுண்ணங்கள், குழந்தை பூச்சுத்துக்கள், நறுமணச் சுண்ணம், சுண்ணப் பெட்டிகள், சுண்ணத் திட்டுக்கள், சுண்ணப்பூப்பந்தங்கள் அனைத்து வகைப் பொருட்களாலும் செய்யப்பட்ட (உள்ளிணைப்பினைக் கொண்டதாகவோ அல்லது அற்றதாகவோ உள்ள) ஒப்பனைப் பெட்டிகள், குளியல் துவாலைகள், வாசனைப் பொருள் தெளிப்பான், உரோமம் களையும் கருவிகள், கரை நீக்கும் கருவிகள், அனைத்து வகையான புருவ மை தீட்டிகள், இமைப் பூச்சு, புருவத்தீட்டும் அழகுக் கோல்கள், இமைத் தூரிகைகள், யூடிகலான் என்னும் நறுமண நீர்ம வகை கலான் என்னும் நறுமணத் திடப் பொருள்கள், வாசனைத் திரவியம், பனிச் சாந்துகள், முகப் பூச்சுகள், அனைத்து தேவைகளுக்குமான பூச்சுகள், தூய்மை சாதனப் பூச்சுகள், ஒப்பனை பூச்சுகள், அழகு சாதனப் பூச்சுகள், அழகு சாதனப்பால்

பொருள் தூய்மை சாதனப் பால் பொருள், தலை முடிச் சத்துணவுகள், சர்மவர்த்தினிகள், முகத்திற்கு மெருகூட்டும் சிவப்பு பசைக்கட்டி, நக வெட்டிகள், விடாய்க் காலத் துண்டுகள் மற்றும் துடைப்பு குட்டைகள், திசுக்களை இறுக்கமாக்குவதற்கான மருந்து திரவங்கள், மழிப்பதற்கு முன்பும் பின்பும் தடவும் திரவங்கள் மற்றும் பூச்சுப்பசை, அனைத்து வகையான ஈரப்பதமேற்றிகள் மற்றும் தன் (உடல்) துர் நாற்றமகற்றிகள்.

**30--**

**சேலத்தை தலைமையிடமாகக் கொண்டு கனிம நிறுவனம் செயல்படுத்தல்**

*வினா எண் 26192*--**திரு. எம். நடேசன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கனிம நிறுவனம் பிரிக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும், இதுவரை தனியாக செயல்படாமல் வருவாய்த் துறையுடன் இணைந்து செயல்படுவதால், பல நிர்வாக இடர்பாடுகள் ஏற்படுவது அரசு அறியுமா?

(ஆ) சில நிர்வாக இடர்பாடுகளைத் தவிர்க்கவும், கால தாமதத்தைக் குறைக்கவும் சேலத்தை தலைமையிடமாகக் கொண்டு தனி நிறுவனமாக செயல்படுத்த அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:**

(அ) 1983-ஆம் ஆண்டிலிருந்து புவியியல் மற்றும் சுரங்கத் துறை தனித் துறையாக இயங்கி வருகிறது. மாவட்ட அளவில் கனிம நிர்வாகம் மாவட்ட ஆட்சித் தலைவரின் கட்டுப்பாட்டில் செயல்படுகிறது. புவியியல் மற்றும் சுரங்கத் துறையைச் சேர்ந்த அலுவலர்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தொழில் நுட்ப ஆலோசனை வழங்கும் பொருட்டு பணியாற்றி வருவதோடு கனிம நிர்வாகப் பணிக்கும் பயன்படுத்தப்படுகிறார்கள். மேற்கண்ட நடைமுறையில் நிர்வாக இடர்பாடுகள் ஏதும் தோன்றுமாயின் அரசு அதுகுறித்து பரிசீலனை செய்ய ஆவன செய்யும்.

(ஆ) இல்லை. அரசின் பரிசீலனையில் இதுகுறித்து எந்தவிதமான திட்டங்களும் இல்லை.

*1995 நவம்பர் 3]*

**31--**

**மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் விவரம்**

வினா எண் *38968*--**திரு. கே. ஏ. மனோகரன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* ஒசூர் தொழிற்பேட்டையில் உள்ள மாசுக் கட்டுப்பாட்டுத் துறை மூலம் சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் என்று அறியப்பட்ட தொழிற் கூடங்கள் எவ்வளவு?

*(ஆ)* அவ்வ யாவை?

*(இ)* மாசு கட்டுப்பாட்டிற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

**விடை--**

**மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:**

*(அ)* தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் தர்மபுரி மாவட்டம், ஒசூர் வட்டம், ஜூஜூவாடி கிராமம், சிப்காட் தொழிற் பேட்டையில் அமைந்துள்ள தொழிற் கூடங்களில், சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தும் தொழிற்சாலைகள் என 32 தொழிற் கூடங்கள் அறியப்பட்டுள்ளன.

*(ஆ)* அத்தொழிற் கூடங்களின் பெயர்கள் பின்வருமாறு:

1. மெஸர்ஸ் ஜிஇசி அல்ஸ்தோம் (இ) லிட்.,
   *46*, சிப்காட், ஒசூர்.

2. மெஸர்ஸ் ஈசன் ரீரோல் அண்ட் டிவைசஸ் லிட்.,
   *98*, சிப்காட், ஓசூர்.

3. மெஸர்ஸ் டைட்டன் இண்டஸ்ட்ரீஸ் லிட்.,
   *3, 4* மற்றும் *5*, சிப்காட், ஒசூர்.

4. மெஸர்ஸ் ரினோட் ஆட்டோ புராடக்ஸ் மற்றும் ஷாக்ஸ் லிட்.,
   *122*, சிப்காட், ஒசூர்.

5. மெஸர்ஸ் வெண்ட் (இ) லிட்.,
   *69*, சி, *70*, சிப்காட், ஒசூர்.

6. மெஸர்ஸ் உஷா டெலிறாய்ட்ஸ் லிட்.,
26, சிப்காட், ஓசூர்.

7. மெஸர்ஸ் ரிக்கட் மற்றும் காலமனை (இ) லிட்.,
176, சிப்காட், ஓசூர்.

8. மெஸர்ஸ் கால்சியம் இண்டியா (பி) லிட்.,
1265, சிப்காட், ஓசூர்.

9. மெஸர்ஸ் குளோபல் கால்சியம் (பி) லிட்.,
126, சிப்காட், ஓசூர்.

10. மெஸர்ஸ் இண்டர்பிட் (இ) (பி) லிட்.,
31, சிப்காட், ஓசூர்.

11. மெஸர்ஸ் எலக்ட்ராலை ஸ்பெஷல் ஸ்டீல் காஸ்டிங்ஸ் (பி) லிட்.,
25, சிப்காட், ஓசூர்.

12. மெஸர்ஸ் பெர்ரோமேக்னட் மற்றும் அலாயிடு புராடக்ஸ் லிட்., 42, சிப்காட், ஓசூர்.

13. மெஸர்ஸ் இண்டிகார்ப் லிட்.,
63, சிப்காட், ஓசூர்.

14. மெஸர்ஸ் டி.டி.கே. லிட்.,
82 மற்றும் 85, சிப்காட், ஓசூர்.

15. மெஸர்ஸ் எல்காட் மற்றும் நியூ எரா டெக்னாலஜிஸ்,
பிளாட் எண் 6, சிப்காட், ஓசூர்.

16. மெஸர்ஸ் இண்டோ ஸ்விஸ் ஜுவல்ஸ் (பி) லிட்.,
137, ஏ. சிப்காட், ஓசூர்.

17. மெஸர்ஸ் ஷட்லோ (இ) லிட்.,
(கிராங்க் ஷாப்ட் டிவிஷன்),
எஸ். எப். எண் 1 முதல் 6, சிப்காட்.

18. மெஸர்ஸ் ஷட்லோ (இ) லிட்.,
(ஆக்லிப் பீம் டிவிஷன்),
எஸ். எப். எண் 1 முதல் 12, சிப்காட், ஓசூர்.

*1995 நவம்பர் 3]*

19. மெஸர்ஸ் அசோக் லேலண்ட் லிட்.,
    பி. காக்ஸ் எண் 6, சிப்காட், ஒசூர்.

20. மெஸர்ஸ் ஸ்னேம் அப்ரேசிவ்ஸ் (பி) லிட்.,
    142, சிப்காட், ஒசூர்.

21. மெஸர்ஸ் ஷமி ஆட்டோமாட்டிக் லூம் ஒர்க்ஸ் லிட்.,
    39 மற்றும் 44, சிப்காட், ஒசூர்.

22. மெஸர்ஸ் உமா மகேஸ்வரி மில்ஸ் லிட்.,
    86 முதல் 89, சிப்காட், ஒசூர்.

23. மெஸர்ஸ் ப்ரூக் பாண்ட் (இ) லிட்.,
    50 முதல் 51, சிப்காட், ஒசூர்.

24. மெஸர்ஸ் சாஹரா கீல் லிட்.,
    பி. பாக்ஸ் எண் 12, சிப்காட், ஒசூர்.

25. மெஸர்ஸ் கார்போரன்டம் யுனிவர்ஸல்ஸ் லிட்.,
    47 மற்றும் 48, சிப்காட், ஒசூர்.

26. மெஸர்ஸ் ஆரோ கிரானைட்ஸ் இண்டஸ்ட்ரீஸ்,
    103, சிப்காட், ஒசூர்.

27. மெஸர்ஸ் ஆர்க்கேயன் கிரானைட்ஸ் (பி) லிட்.,
    81-பி, சிப்காட், ஒசூர்.

28. மெஸர்ஸ் எம். பி. கிரானைட்ஸ் (பி) லிட்.,
    19-ஏ, சிப்காட், ஒசூர்.

29. மெஸர்ஸ் சேகெட் (இ) லிட்.,
    60, சிப்காட், ஒசூர்.

30. மெஸர்ஸ் ஹைக்யூ எலக்ட்ரானிக்ஸ் (பி) லிட்.,
    பிளாட் எண் 9, சிப்காட், ஒசூர்.

31. மெஸர்ஸ் டைனாஸ்பீடு இண்டக்கிரேடட் ஸ்டம்ஸ் (பி) லிட்.,
    136-ஏ, சிப்காட், ஒசூர்.

32. மெஸர்ஸ் சிவானந்தா பைப் பிட்டிங்ஸ் (பி) லிட்.,
    சிப்காட், ஒசூர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(இ) மேற்கண்ட தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவு நீர் மற்றும் புகை ஆகியவற்றை தொழிற்சாலைகளின் நிலைக்கு ஏற்றவாறு குறிப்பிட்ட இடைவேளைகளில் சேகரிக்கப்பட்டு பகுத்தாய்வு செய்யப்படுகின்றது. மாசு, வாரியம் நிர்ணயிக்கப்பட்ட அளவுகளுக்கு மேல் கண்டறியப்படின் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளுக்கு, மாசுக் கட்டுப்பாடு சாதனங்களை சரிவர இயக்கவும், தேவைப்படின் மாறுதல்களை செய்து நன்கு பராமரிக்கவும் மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் நிர்ணயிக்கப்பட்ட அளவுகளுக்குட்பட்டு கழிவு நீரை சுத்திகரித்து வெளியேற்றவும் தக்க அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. இதுவரையில் மேற்படி தொழிற்சாலைகளின்மேல் சட்ட நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை. எனினும், தொழிற்சாலைகள், வாரியத்தின் வரைமுறைகளை மீறும்போது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**32--**

### கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு சலுகைகள் வழங்குதல்

வினா எண் *37291*--**திருமதி பி. நிர்மலா:** மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

இளம் விதவைகளுக்கு தற்பொழுது அளிக்கப்படும் சலுகைகளை, கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:**

இளம் விதவைகளுக்கு வழங்கப்படும் அனைத்து சலுகைகளும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும் வழங்கப்பட்டு வருவதால் இக்கேள்வி எழாது.

**33--**

### வெளிநாடுகளில் கோ-ஆப்டெக்ஸ் ஷோ-ரூம்கள் திறத்தல்

வினா எண் *6511*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா---

*1995 நவம்பர் 3]*

வெளி நாடுகளில் கைத்தறித் துணிகள் விற்பதற்கு கோ-ஆப்டெக்ஸ் ஷோ-ரூம்கள் திறப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:**

வெளிநாடுகளில் கைத்தறித் துணிகள் விற்பதற்கு, கோ-ஆப்டெக்ஸ் ஷோ-ரூம்கள் திறப்பதற்கான உத்தேசம் தற்போது இல்லை. ஆனால், கோ-ஆப்டெக்ஸ் வெளி நாடுகளில் நடைபெறும் கண்காட்சிகளில் கலந்து கொள்வதற்கும் முகவர் மூலமாக ஏற்றுமதி விற்பனையைப் பெருக்குவதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**34--**

**திருப்பத்தூர் தொகுதியில் மிகவும் பிற்பட்டோர் மாணவர் விடுதிக்கு கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *47463*--திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் உள்ள மிகவும் பிற்பட்டோர் மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டிடம் அமைக்க ஆவன செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் உள்ள மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்கு சொந்தக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவாய்ப்பில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

35--

## கரூரில் பொருட்காட்சி நடத்துதல்

வினா எண் 46096--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சி மாவட்டம் கரூரில் மீண்டும் ஆண்டுதோறும் பொருட்காட்சி நடத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

மாவட்ட தலை நகரங்களிலும் மற்றும் முக்கிய நகரங்களிலும் நிதி நிலைக்கேற்ப அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. கரூரில் அரசுப் பொருட்காட்சி நடத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

36--

## கீழ்பெண்ணாத்தூரில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி தொடங்குதல்

வினா எண் 43607--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், கீழ்பெண்ணாத்தூரில் அதிகமான பெண்கள் படிப்பதால் பெண்கள் உயர்நிலைப்பள்ளி தனியாகத் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

தற்பொழுது அரசின் ஆய்வின் இல்லை.

*1995 நவம்பர் 3]*

**37--**

**தஞ்சாவூர் வட்டப் பள்ளியில் ஆசிரியர் பற்றாக்குறையை போக்குதல்**

வினா எண் *43613*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், வாண்டையார் இருப்பு உயர்நிலைப் பள்ளியில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை**--

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப *30* பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

**38--**

**சாமியாம்பாளையம் நூலகத்திற்குக் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *63605*--**டாக்டர் வெ. சரோஜா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சங்ககிரி ஒன்றியம், கத்தேரி பஞ்சாயத்து சாமியாம் பாளையத்தில் இயங்கி வரும் பகுதி நேர நூலகத்திற்கு கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டிலேயே கட்ட அரசு முன் வருமா?

**விடை**--

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

(அ) தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

39--

## தாலக்குடியில் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்

வினா எண் 70743--**டாக்டர் சு. மணிமேகலை:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

லால்குடி தாலுக்கா, தாலக்குடியில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை**--

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :**

தற்பொழுது அரசின் ஆய்வில் இல்லை.

40--

## இராமநாதபுரம் அரசு மகளிர் கலைக் கல்லூரிக்கு இடம் ஒதுக்குதல்

வினா எண் 72392--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) இராமநாதபுரம் அரசு மகளிர் கலைக்கல்லூரிக்கு மருத்துவத் துறை வசமுள்ள இடத்தை மாற்றம் செய்திட அரசுக்கு பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை**--

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): கருத்துரு பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

41--

## கிருஷ்ணகிரியில் மகளிர் உயர்நிலைப் பள்ளி துவங்குதல்

வினா எண் 77426--**திரு. கே. முனிவெங்கடப்பன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

(அ) கிருஷ்ணகிரி நகருக்கு புதியதாக மகளிர் உயர்நிலைப்பள்ளி துவங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தற்பொழுது அரசின் ஆய்வில் இல்லை.

**42--**

**திருவிழிமிழலை நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்**

வினா எண் 83033--திரு. **எஸ். ஆசைமணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், திருவிழிமிழலை நடுநிலைப் பள்ளியை உயர் நிலைப் பள்ளியாக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

தற்பொழுது அரசின் ஆய்வில் இல்லை.

**43--**

**நகைத் தொழிலாளர்களுக்கு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தல்**

வினா எண் 47193--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கோயம்புத்தூரில் நகைத் தொழிலாளர்கள் நவீன பயிற்சி பெற தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின் கீழ் தேசிய வாழ்வியல் பயிற்சித் திட்டக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட 36 பொறியியல் மற்றும் 15 பொறியியல் சாராத் தொழிற் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பொற்கொல்லர்கள் நவீன பயிற்சியளிக்க தொழிற் பிரிவு ஏதும் கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின் கீழ் குறிப்பிடப்படவில்லை. மேலும், கோயம்புத்தூரில் நகைத் தொழிலாளர்களுக்கு இத்தொழில் பாரம்பரியத் தன்மை வாய்ந்தது. இத் தொழிலில் பயன்படுத்தப்படும் தங்கம், வெள்ளி, வைரக்கல் போன்றவைகள் மிக அதிக விலை கொண்டவை. விலை மதிப்பு மிக்க பொருட்களை பராமரிப்பது மிகச் சிரமம். மேலும், இத்தொழிலுக்கு ஆள் இல்லை என்ற நிலை இல்லை. ஆகவே, நவீனப் பயிற்சி அளிக்க தொழிற் பயிற்சி நிலையம் ஏற்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது அரசுக்கு இல்லை.

**44--**

**வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள 35 வயதுக்கு மேற்பட்டோர் விவரம்**

வினா எண் 47238--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தஞ்சாவூர் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் வேலைக்காக பதிவு செய்தவர்களில் 35 வயதைத் தாண்டிய பெண்கள், மற்றும் ஆண்கள் எத்தனை பேர்?

(ஆ) இவர்களுக்கு இனி வேலை வாய்ப்பு உள்ளதா?

(இ) இவர்களுக்கு கடனுதவி வழங்க அரசு முன் வருமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 31-12-1994 வரை உள்ள நிலவரப்படி வேலைக்காக பதிவு செய்தவர்களில் 35 வயதை தாண்டியவர்களில் பெண்கள் 4,238 பேரும், ஆண்கள் 6,950 பேரும் ஆவர்.

(ஆ) இவர்கள் மாநில மற்றும் மத்திய அரசு நிர்ணயித்து உள்ள உச்ச வயது வரம்பினையும் கடந்து விட்டிருப்பதால் இவர்களுக்கு

*1995 நவம்பர் 3]*

வேலைவாய்ப்பு ஏதுமில்லை. ஆனால் மாநில அரசு மற்றும் மாநில அரசுத் துறையைப் பொறுத்தவரை, தாழ்த்தப்பட்ட வகுப்பு/பழங்குடி இனம்/மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு அல்லது பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்த நபர்கள் பி.யூ.சி./மேல்நிலை படிப்பு (ப்ளஸ் டூ) அல்லது பட்டப்படிப்பு ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் தேறியிருந்தால் அவர்களுக்கு உச்ச வயது வரம்பு ஏதும் பொருந்தாது என தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி விதிகளில் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மேற்கூறிய 11,188 பேர்களில், 10,338 பேர்கள் இந்த வயதுச் சலுகை பெறத் தகுதி உடையவர்கள் ஆவர். மீதமுள்ள 850 பேர்கள் 35 வயதை தாண்டியும் வயதுச் சலுகை பெறத் தகுதியின்றியும் இருப்பதால் இவர்களுக்குப் பணி வழங்க வாய்ப்பில்லை.

(இ) சுய வேலைவாய்ப்பு முறையில் தொழில் துவங்க ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் நகர்ப்புற நுண் தொழில்களுக்கான திட்டம் (Scheme for Urban Micro Enterprises) தாட்கோ (TADHDCO) நிறுவனம், தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார முன்னேற்ற கழகம் (Tamil Nadu Backward Class Economic Development Corporation) ஆகியவை மூலம் மானியத்துடன் கடனுதவி பெற அரசு ஏற்கனவே வழிவகைகளைச் செய்து உள்ளது.

45--

**வடக்குப் பாளையத்தில் கூட்டுறவு வங்கிகளுக்கு கட்டிடங்கள் கட்டுதல்**

வினா எண் 46556--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், பழமங்கலம் ஊராட்சி, வடக்குப் பாளையம் கிராமத்தில் பெரியார் மத்திய கூட்டுறவு வங்கி, நுகர்வோர் கூட்டுறவு வங்கி மற்றும் விவசாயக் கூட்டுறவு வங்கிகளுக்கு சொந்தக் கட்டிடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

மொடக்குறிச்சி ஒன்றியத்திற்குட்பட்ட பழமங்கலம் ஊராட்சியில் வடக்குப் பாளையம் என்ற கிராமத்தில் நுகர்வோர் கூட்டுறவு சங்கமோ

பெரியார் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கிளையோ தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியோ செயல்படவில்லை. எனவே, சொந்தக் கட்டிடங்கள் கட்டுவது பற்றிய கேள்வி எழவில்லை.

**46--**

**மகளிர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை துவங்குதல்**

வினா எண் *70642*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா**: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நீலகிரி மாவட்டம், ஊட்டியில் மகளிரைக் கொண்டு இயங்கும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை துவக்கப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத்துறை அமைச்சர்:**

ஆம். நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை ஒன்று முழுவதும் மகளிர் பணியாளர்களைக் கொண்டு ஏற்கனவே துந்தளா மட்டம் என்னுமிடத்தில் 19-4-1993 முதல் செயல்பட்டு வருகிறது. இரண்டாவது மகளிர் கிளையை உதகை நகரத்தில் பிங்கர் போஸ்ட் என்ற இடத்தில் துவக்க வங்கிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இக் கிளை முழுவதும் மகளிர் பணியாளர்களைக் கொண்டு விரைவில் செயல்படத் துவங்கும்.

**47--**

**மானந்தக்குடியில் மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை நிறுவுதல்**

வினா எண் *83008*--**திரு. எஸ். ஆசைமணி**: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மானந்தக்குடி கிராமத்தில் "மத்திய கூட்டுறவு வங்கியின் கிளை" நிறுவ அரசு ஆவன செய்யுமா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன், கூட்டுறவுத்துறை *அமைச்சர்:***

**இல்லை.**

**48--**

**பேராவூரணி தொகுதியில் கூட்டுறவுச் சங்கம் தொடங்குதல்**

*வினா எண் 84460--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, கோட்டா குடியிலும், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கொள்ளுக்காடு ஊராட்சியிலும் தனி கூட்டுறவுச் சங்கம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத்துறை *அமைச்சர்:***

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, கோட்டாகுடியிலும், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கொள்ளுக்காடு ஊராட்சியிலும் தனிக் கூட்டுறவுச் சங்கம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**49--**

**ஓயாமேரி சுடுகாட்டில் மின்சார மயானம் அமைத்தல்**

*வினா எண் 1098--திரு. சோ. இராசாராமன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

திருச்சி நகராட்சி, ஓயாமேரி இடுகாட்டில் மின்சார மயானம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை *அமைச்சர்:***

[1995 நவம்பர் 3

திருச்சி மாநகராட்சி, ஓயாமேரி சுடுகாட்டில் மின்சார மயானம் அமைக்கும் உத்தேசம் ஏதும் இல்லை.

50--

**தென்னங்குடிக்கு குடிநீர் வசதி அளித்தல்**

வின... எண் 7225---**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், தென்னங்குடி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து பைப் விஸ்தரிப்பு கொடுத்து தெருவுக்குள் தண்ணீர் சப்ளை செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பேராவூரணி ஒன்றியம், தென்னங்குடியில் தற்போது மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து 12 குழாய்கள் மூலமாக தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. ஒன்றிய பொது நிதியில் இருந்து மேலும் குழாய்கள் விஸ்தரிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

51--

**குடிநீர்த் திட்டங்களை குடிநீர் வாரியத்திடம் ஒப்படைத்தல்**

வினா எண் 7542---**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஊராட்சி ஒன்றியத்தில் ஒப்படைக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்களை மீண்டும் குடிநீர் வாரியத்தில் ஒப்படைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3]*

ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் உள்ள கூட்டுக் குடிநீர் திட்டங்களை மட்டுமே, குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்க அரசு ஆணை எண். 84, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் *10-3-1994*-ல் உத்திரவு இடப்பட்டுள்ளது.

மற்ற குடிநீர்த் திட்டங்கள் அனைத்தும் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிலேயே உள்ளன.

**52--**

**உடையநாடு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை விரிவுபடுத்துதல்**

வினா எண் *8961*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம், உடையநாடு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியின் மின் மோட்டாரை பழுது பார்க்கவும் தொட்டியின் கொள்ளளவை விரிவுபடுத்தவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உடையநாடு கிராமம், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மின் மோட்டார் பழுது நீக்கம் செய்யப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகிறது. மேற்படி நீர்த்தேக்கத் தொட்டியின் கொள்ளளவை அதிகரிக்க இயலாது. தற்போது இப்பகுதியில் மேற்கொண்டு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் கட்டி முடிக்கப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

**53--**

**ஆவணம் விடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புக் கொடுத்தல்**

வினா எண் *14347*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பேராவூரணி ஒன்றியம், ஆவணம் முஸ்லீம் தெரு, வீடுகளுக்கு குடி தண்ணீர் குழாய் இணைப்புக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கிராமக் குடிநீர் திட்டத்தின் கீழ் இல்லங்களுக்கு குடிநீர் வழங்குவதன் மூலம் பொருளாதாரத்தில் பின் தங்கிய நலிவடைந்த மக்களுக்குத் தேவையான குடிநீர் பொதுக் குழாய்கள் மூலம் வழங்க இயலாத நிலை ஏற்பட்டுவிடும் என்றும், எனவே, தனியார் இல்லங்களுக்கு மேற்படி குடிநீர்த் திட்டத்தின்கீழ் குழாய் இணைப்புக் கொடுப்பது தவிர்க்கப்படவேண்டும் என அரசு உத்தரவிட்டுள்ளது. எனவே, கிராமங்களில் வீடுகளுக்கு குழாய் இணைப்பு வழங்க இயலவில்லை. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் குடிநீர் பொது இடங்களில் பைப்புகள் பொருத்தி வழங்கப்பட்டு வருகின்றது.

**54--**

**ஒசூர் வட்டத்தில் ஏரிகளைப் பழுதுபார்த்தல்**

வினா எண் 14593--**திரு. கே. ஏ. மனோகரன்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஓசூர் வட்டத்தில் உள்ள எர்ரண்டபள்ளி ஏரி, கசப்பன் ஏரி, பெருமாள்பள்ளி ஏரி, காளி அக்ரஹாரம் ஏரி, குண்டல் ஏரி, தும்மனபள்ளி ஏரி மற்றும் சிச்ருகான பள்ளி ஏரிகளை தூர் எடுக்கவும், பழுது பார்க்கவும் அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மேற்படி ஏரிகளை பழுது பார்க்கும் பணி 1995-96-ம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

55--

### புவனகிரி ஒன்றியத்தில் குடிதண்ணீர் வசதி

வினா எண் 17379--**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புவனகிரி ஒன்றியம், மருதூர் கிராமத்தில ஆதிதிராவிடர் தெரு மக்களுக்கு குடி தண்ணீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : புவனகிரி ஒன்றியம், மருதூர் ஆதிதிராவிடர் தெரு மக்களுக்கு கைப்பம்பு மூலம் போதுமான குடிதண்ணீர் தட்டுப்பாடின்றி வழங்கப்படுகிறது. அங்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியை, பராமரிப்பிற்கு ஒப்படைத்ததும், பைப் லைன் மூலம் குடிநீர் வழங்கப்படவுள்ளது.

56--

### விளாகம் ஊராட்சியில் குடிநீர்க் குழாய் இணைப்பு விஸ்தரிப்பு

வினா எண் 25192--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், விளாகம் ஊராட்சியில் மேலத் தெருவிற்கு குடிநீர்க் குழாய் இணைப்பு விஸ்தரிப்பு செய்து தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம், காயிதேமில்லத் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், விளாகம் ஊராட்சி மேலத் தெருவில் 10 குடியிருப்புகள் உள்ளன. இதில் சுமார் 50 நபர்கள் வசிக்கிறார்கள். இத்தெருவில் ஒரு கைப்பம்பு நல்ல முறையில் இயங்கி வருகிறது. இந்த வசதி போதுமானது. குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்வது தொடர்பாக திட்டம் எதுவும் இல்லை.

**57--**

**வெட்டன் விடுதியில் தெரு விளக்குகள் அமைத்தல்**

வினா எண் *25385*--**திரு. சி. சுவாமிநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஆலங்குடி தொகுதி வெட்டன்விடுதி ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு தெரு விளக்குகள் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆலங்குடி தொகுதி கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், கணக்கன்காடு ஊராட்சி, வெட்டன்விடுதி ஆதிதிராவிடர் காலனியில் நான்கு தெரு விளக்குகள் உள்ளன. அவை நல்ல முறையில் எரிந்து கொண்டிருக்கின்றன.

**58--**

**கொடுமுடி பேரூராட்சியில் கழிவுநீர் வாய்க்கால் கட்டுதல்**

வினா எண் *26444*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கொடுமுடி பேரூராட்சி ஐந்தாவது இலுப்பத் தோப்பு பகுதியில் கழிவுநீர் வாய்க்கால் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் கட்டித்தர அரசு முன்வருமா?

1995 நவம்பர் 3]

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

கொடுமுடி பேரூராட்சி, இலுப்பத் தோப்பு பகுதியில் கழிவுநீர் வாய்க்கால் பணி 1994-95-ம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 50,000 மதிப்பீட்டில் செயல்படுகிறது.

**59--**

**கொண்ட சமுத்திரத்தில் தெருவிளக்கு அமைத்தல்**

வினா எண் 27192--**திரு. என். ஆர். ராஜேந்திரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காட்டுமன்னார் கோயில் தொகுதி, கொண்ட சமுத்திரம் கிராமத்தில் தெரு விளக்குகள் போட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

காட்டுமன்னார் கோயில் தொகுதி, கொண்ட சமுத்திரம் கிராமத்தில் 51 தெரு விளக்குகள் பொருத்தப்பட்டு நல்ல நிலையில் ஒளிர்கின்றன. கூடுதல் தெரு மின் விளக்குகள் பொருத்துவது பற்றி விண்ணப்பம் ஏதும் தமிழ்நாடு மின்வாரியத்தில் நிலுவையில் இல்லை.

**60--**

**திருப்பத்தூர் தொகுதி திறந்த வெளி கிணறுகள் விவரம்**

வினா எண் 27765--**திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருப்பத்தூர் தொகுதியில் 1992-93-ல் ஆழப்படுத்திய திறந்தவெளிக் கிணறுகள் எத்தனை?

(ஆ) இந்த ஆண்டு புதிய கிணறுகள் வெட்டும் திட்டம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருப்பத்தூர் தொகுதியில் 1992-93-ஆம் ஆண்டில் திறந்தவெளிக் கிணறுகள் ஏதும் ஆழப்படுத்தப்படவில்லை.

(ஆ) இந்த ஆண்டு புதிய திறந்த வெளிக் கிணறுகள் வெட்டும் திட்டம் ஏதும் இல்லை.

**61--**

**ஒசூர் தொகுதியில் சிறுபாலம் கட்டுதல்**

வினா எண் 32998--**திரு. கே. ஏ. மனோகரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஒசூர் தொகுதி, பங்கலபள்ளி அருகில் சின்னார் அணைசாலை குறுக்கே சிறுபாலம் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சின்னாறு என்ற கிராமத்திற்கு அருகில் சூளகிரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சி சாலையில் கி.மீ. 1/2ல் பாலம் கட்ட வேண்டும். இவ்வழியில் சின்னார் 30 மீட்டர் நீர்வழிப்பாதை குறுக்கிடுகிறது. இவ்விடத்தில் இரு உயர் மட்ட பாலம் கட்ட சுமார் ரூ. 45.00 லட்சம் தேவைப்படும். இதனை அண்மை காலத்தில் செயலாக்க திட்டம் ஏதுமில்லை.

**62--**

**கல்லுகான் கொட்டாய்க்கு மின்சார வசதி அளித்தல்**

வினா எண் 33358--**திரு. கே. முனிவெங்கடப்பன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

தருமபுரி *மாவட்டம், கெலமங்கலம் ஒன்றியம், சஜ்ஜலப்பட்டி ஊராட்சி, கல்லுகான் கொட்டாய்க்கு மின்சார வசதி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம் மேல் அக்ரஹாரம் ஊராட்சியைச் சேர்ந்த சஜ்ஜலப்பட்டியில் கல்லுகான் கொட்டாய் கிராமம் உள்ளது. அக்கிராமத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக 4/5 தோட்ட வீடுகள் மட்டுமே உள்ளன. இவைகளுக்கு மின் இணைப்பு பெற்று தெரு விளக்கு அமைக்கப்பட்டவுள்ளது.

**63--**

### மேலநீலிதநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் குளத்தை ஆழப்படுத்துதல்

வினா எண் 33425-**திரு ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், மேலநீவிதநல்லூர் ஊராட்சி ஒன்றியம், சின்னக்கோவிலான்குளம் கிராமத்திலுள்ள வேளாண்மை பொறியியல் துறைக்கு சொந்தமான குளத்தை ஆழப்படுத்த செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இக்குளம் ஊராட்சி ஒன்றிய குளமாகும். 1991-92ம் வருடம் விவசாய பொறியியல் துறையினரால் ரூ. 1,09,374 செலவில் சிறப்புத் தன்னிறைவு திட்டத்தின் கீழ் பராமரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.



TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

64--

குமரன் மார்க்கெட்டை நவீன மயமாக்குதல்

வினா எண் 34535---திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கோயம்புத்தூர் தியாகி குமரன் மார்க்கெட்டிற்கு சுற்றுப் பகுதியிலிருந்து பொதுமக்கள் பெருமளவில் வருவதால் இந்த மார்க்கெட்டை நவீன முறையில் போதுமான இடவசதியுடன் மாற்றியமைக்கப்படுமா?

விடை--

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தியாகி குமரன் மார்க்கெட்டில் ஏற்கனவே இயங்கி வந்த தக்காளி மற்றும் வாழைக்காய் மொத்த வியாபாரங்கள் முறையே மேட்டுப்பாளையம் சாலை மற்றும் தடாகம் சாலைகளுக்கு மாற்றப்பட்டு தற்போது தியாகி குமரன் மார்க்கெட் முழுவதும் சில்லரை வியாபாரிகளுக்கு ஒதுக்கப்பட்டு வியாபாரம் சீராக நடைபெற்று வருகிறது. தியாகி குமரன் மார்க்கெட்டுக்கு அவசியமான வசதிகள் அவ்வப்போது செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

65--

திருவட்டார் தொகுதியில் சாலையைப் பழுது பார்த்தல்

வினா எண் 36079--திரு. இரா. அப்புநடேசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருவட்டார் தொகுதியில் அருமனை அரசு மருத்துவமனையிலிருந்து தும்பகோடு செல்லும் சாலை பழுதடைந்துள்ளது அரசுக்கு தெரியுமா?

*1995 நவம்பர் 3*]

(ஆ) ஆம் எனில், சாலையை சீர் செய்து செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருவட்டார் தொகுதியில் அருமனை அரசு மருத்துவமனையிலிருந்து தும்பகோடு செல்லும் சாலை 800 மீட்டர் நீளமுடைய ஊராட்சி ஒன்றிய சாலையாகும். 1993–94 நிதியாண்டில் ஜவகர் வேலைல வாய்ப்பு திட்டத்தின் கீழ் ரூ. 80,000 மதிப்பீட்டில் பக்கச் சுவர் கட்டி, கல்பரப்புதல் சாலை மேம்பாடு செய்யப்பட்டு இச்சாலை நல்ல நிலையில் உள்ளது.

**66--**

**கையிறைப்பான்களைப் பராமரிக்க நடவடிக்கை**

வினா எண் 36820--திரு. கே.ஏ. மனோகரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஒசூர் ஊராட்சி ஒன்றிய கிராமங்களில் கையிறைப்பான்களைப் பராமரிக்க போதிய உதிரி பாகங்களை வாங்கி வழங்க அரசு சிறப்பு ஆணைப் பிறப்பிக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஒசூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கிராமங்களில் 254 கையிறைப்பான்கள் உள்ளன. மேற்படி கையிறைப்பான்களை ஊராட்சி ஒன்றிய பொருத்துநரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. தருமபுரி மாவட்டத்திற்கு கைப்பம்பு பராமரிப்புக்கான உதிரிப்பாகங்களை வாங்க ரூ. 5 இலட்சம் சுழல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியிலிருந்து கைப்பம்பு உதிரிபாகங்களை திருச்சி டான்சி நிறுவனத்திடம் வாங்கி ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த உதிரிபாகங்களின் விலைத் தொகையை ஊராட்சி ஒன்றியத்திடம் இருந்து வசூலித்து, சுழல்நிதி சரிகட்டப்பட்டு வருகிறது. கைப்பம்பு பராமரிப்புக்காக அரசு

நிதி ஒதுக்கீடு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஆண்டுதோறும் அளிக்கப்படுகிறது.

67--

## செம்பங்காட்டுப்புதூரில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

வினா எண் *36909*--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், முகாசி அனுமன்பள்ளி செம்பங்காட்டுபுதூரில் ஒரு ஆழ்குழாய் கிணறு அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த முகாசி அனுமன்பள்ளி ஊராட்சியில் செம்பங்காட்டுப்புதூர் என்ற பெயரில் ஊர் எதுவுமில்லை. ஆனால் மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம் முகாசி அனுமன்பள்ளி ஊராட்சியில் "செம்பங்காட்டுக்கோட்டம்" என்று அழைக்கப்படும் பட்டா நிலம் உள்ளது. அதில் 8 (எட்டு) குடும்பங்கள் மட்டும் பரவலாக ஆங்காங்கே கிணற்றுடன் வீடு கட்டியுள்ளனர். இந்த இடம் பட்டா நிலமாக உள்ளபடியாலும், இவ்விடத்திற்கு அருகாமையில் அரசுக்குச் சொந்தமான இடம் அல்லது புறம்போக்கு நிலம் எதுவும் இல்லாத நிலையில், புதிய ஆழ்குழாய்க்கிணறு எதுவும் அமைத்துத்தர இயலாத நிலையில் உள்ளது.

68--

## சுரைக்காயூரில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

வினா எண் 37188--திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

*1995 நவம்பர் 3]*

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், சுரைக்காயூர் ஊராட்சியில் சுரக்காயூரில் ஆழ்குழாய்க்கிணறு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், சுரைக்காயூர் கிராமத்தில் *145* வீடுகளில் *850* பேர்கள் வசிக்கிறார்கள். இக்கிராமத்தில் *5* கைப்பம்புகள் நல்ல முறையில் இயங்கி வருகிறது. *1995-96* ஆண்டு திட்டத்தில் *30,000* லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே தற்போது ஆழ்குழாய்க்கிணறு அமைக்கத் திட்டம் எதுவும் இல்லை.

**69--**

**ராமனூத்து கிராமத்தில் ஆழ்குழாய்க்கிணறு அமைத்தல்**

வினா எண் *37904*--**திருமதி என். கனகவல்லி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

விளாத்திகுளம் தாலுகாவில் ராமனூத்து கிராமத்தில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

விளாத்திகுளம் தாலுக்கா, ராமனூத்து கிராமத்திற்கு, மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மூலமாகவும், ஐந்து ஆழ்துளைக் கிணறுகள் மூலமாகவும் குடிநீர் தட்டுப்பாடின்றி வழங்கப்படுகிறது. எனவே இங்கு மேலும் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**70--**

**மணல்மேட்டுத் தெருவில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *39436*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

குத்தாலம் தொகுதி, குத்தாலம் ஒன்றியம், கொழையூர் மணல்மேட்டுத் தெருவில் வசிக்கும் ஆதிதிராவிடர்களுக்கு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**71--**

**திருச்சுளி ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *39492*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காமராஜர் மாவட்டம், திருச்சுளி ஒன்றியம், உடையனாம்பட்டி, குலசேகரநல்லூர், கட்சம்பட்டி, கீழ்குடி, கீழ்க்கண்டமங்கலம், ஆர். கல்லுமடம், மண்டபசாலை ஆவடிப்பட்டி, கே. செட்டிக்குளம் ஆகிய கிராமங்களில் வீடற்ற ஆதி திராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**72--**

**இராசபாளையம் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *39550*--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

காமராஜர் மாவட்டம், இராசபாளையம் ஒன்றியம், நல்லமநாயக்கன்பட்டி, வடக்குதேவதானம், புதூர் நக்கனேரி, முத்துசாமிபுரம், முகவூர், மேலூர், துரைசாமிபுரம் மேல ராஜகுமாரன், திருமர்ணாபுரம், கரிசல்குளம், சேத்தூர் அயன் சொல்லங்கொண்டான் ஆகிய ஊர்களில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

73--

## திருப்பனந்தாள் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 39866--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஒன்றியம், கொண்ட சமுத்திரம், கருப்பூர், திட்டச்சேரி திருமங்கைச்சேரி நரிக்குடி, குரிச்சி சிக்கல் நாயக்கன் பேட்டை, கோவில் ராமபுரம், மனக்குடி, அனைக்கரை, திருவள்ளியங்குடி ஆகிய கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

74--

## தஞ்சாவூர் மாவட்டத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 40388--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், குருங்குளம் மேற்கு, நீலகிரி தெற்கு தோட்டம், பிள்ளையார்பட்டி, கொல்லங்குரை, கா. புதூர், இராமநாதபுரம், முன்னையம்பட்டி, ராஜநாயக்கபுரம், சூரக்கோட்டை, சீராரூர் ஊராட்சிகளிலுள்ள வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படித் திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**75--**

**நரிக்குடி ஒன்றியத்தில் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *40430*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காமராஜர் மாவட்டம், நரிக்குடி ஒன்றியம், இருஞ்சிறை நரிக்குடி, நல்லுகுறிச்சி, ஓடாத்தூர் பனைகுடி, பிள்ளையார் நத்தம் பிள்ளையார்குளம் மாலைப்பட்டி, புல்வாக்கரை, வேலனூரணி ஆகிய கிராமங்களில் வாழும் வீடற்ற ஆதி திராவிடடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

[1995 நவம்பர் 3

76--

## நரிக்குடி ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 40450--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காமராஜர் மாவட்டம், நரிக்குடி ஒன்றியம், டி. கடப்பங்குளம், கண்டுகொண்டான் மாணிக்கம், கீழமொன்றைக்குளம், மதனூர், மேலபருத்தியூர், எள்முக்குளம், நத்தகுளம், பூப்படிகை, சேதுபுரம், திருவளர்நல்லூர் ஆகிய கிராமங்களில் வாழும் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

77--

## ஆற்காடு தொகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 40810--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், ஆற்காடு தொகுதி, செட்டிதங்கல், நாட்டேரி, ராந்தம், விளாப்பாக்கம், ஆற்காடு, உப்புப்பேட்டை, கலவை ஆகிய இடங்களில் வாழும் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை *அமைச்சர்:***

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் ஏதுவுமில்லை.

**78--**

**அருப்புக்கோட்டை ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண். *40838*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*காமராஜர் மாவட்டம், அருப்புக்கோட்டை ஒன்றியம் மந்தக்குடி பெரியநாயகிபுரம், துராஜபுரம், பாதம்பட்டி, டி. மீனாட்சிபுரம், செட்டிபட்டி கிராமங்களில் வாழும் வீடற்ற ஆ. திராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை *அமைச்சர்:***

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

[1995 நவம்பர் 3

79--

**தலைஞாயிறு ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 40900--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்குச் விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், தலை ஞாயிறு ஒன்றியம் பிரிந்தமுனை, நாலுவேதபதி கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

80--

**வேதாரண்யம் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 40913--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், வேதாரண்யம் ஒன்றியம், அண்டர்காடு, தோத்தாக்குடி தெற்கு கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3]*

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**81--**

**ஆலங்குளம் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *40926*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைசசர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், நல்லூர் மருதப்பபுரம், கீழக்கலங்கல், ஆலங்குளம், மேலக்கலங்கல், மாவளியூத்து, தங்கம்மாள்புரம் கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**82--**

**குருவிக்குளம் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *40933*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

[*1995 நவம்பர் 3*

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், குருவிக் குளம் ஒன்றியம், சிதம்பராபுரம் அழகுநேரி கிராமங்களில் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை**––

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**83**––

**வலங்கைமான் தொகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

*வினா எண் 40935*––**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா––

வலங்கைமான் தொகுதி கோவிலூர், பூண்டி கிராமங்களில் வீடற்ற ஆதி திராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை**––

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

*1995 நவம்பர் 3]*

**84--**

**திருவாரூர் ஒன்றியத்தில் தொகுப்பு விடுகள் கட்டுதல்**

வினா எண் *40942*---**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா---

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், திருவாரூர் ஒன்றியம், புலிவலம் கிராமத்தில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்துத் தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**85--**

**மன்னார்குடி தாலுகாவில் தொகுப்பு விடுகள் கட்டுதல்**

வினா எண் *40943*---**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா---

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா, பாமணியில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**86--**

**எடையர் எம்பேத்தியில் ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடு**

வினா எண் *40944*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், மன்னார்குடி ஒன்றியம், எடையர் எம்பேத்தியில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட செயற்குறிப்பு உள்ளதா.

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

**87--**

**செல்லப்பன் பேட்டையில்**

**ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *40947*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஒன்றியம் செல்லப்பன் பேட்டையில் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1995 நவம்பர் 3]

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**88--**

**அச்சங்குளம் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 40965--திரு. **ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காமராஜர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியம், அச்சங்குளம் ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**89--**

**பேராவூரணியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 40968--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

[1995 நவம்பர் 3

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி நகரம், நாட்டாளிக் கோட்டை (தெற்கு) வீடற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுதது செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**90---**

**திருப்பத்தூர் தொகுதியில் இலவச தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *41013*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்**: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியம், ஜம்முனாமுத்தூர் ஆதி திராவிட மக்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் ஏதுவுமில்லை.

*1995 நவம்பர் 3]*

**91--**

**வீடற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *43641*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம் பாதரங்கோட்டை வடக்கு, வீடற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**92--**

**பட்டுக்கோட்டை ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *43644*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பட்டுக்கோட்டை ஒன்றியம், கரம்பயம் வீடற்ற ஆதி திராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால்

வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**93--**

**வாளவராய குப்பத்தில் இரண்டு ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல்**

வினா எண் *45038*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி மயிலாடுதுறை வட்டம், 155, கப்பூர் வட்டத்திலுள்ள வாளவராய குப்பத்தில் இரண்டு ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*குத்தாலம் ஊராட்சி ஒன்றியம் 155, கப்பூர் ஊராட்சி வாளவராய குப்பத்தில் மட்டும் சுமார் 500 பேர் வசிக்கிறார்கள். ஒரு மேல்நிலை தேக்கத்தொட்டி மூலம் மூன்று குழாய்களிலும் 4 கைப்பம்புகள் மற்றும் ஒரு இந்தியா மார்க் 2 பம்பு மூலமும் இக்குப்பத்தில் உள்ள மக்களுக்குப் போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இது போதுமானதாகும். மேலும் ஆழ்குழாய்க்கிணறுகள் தேவையில்லை.*

**94--**

**தத்தங்குடி கீழத்தெருவில் இரண்டு ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல்**

வினா எண் *45039*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*நாகப்பட்டினம்--காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி தரங்கை வட்டம், தத்தங்குடி கீழத் தெருவில் ஆழ்குழாய்க் கிணறுகள் இரண்டு அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, தத்தங்குடி ஊராட்சி கீழத்தெருவில் 30 வீடுகள் உள்ளன. நடப்பு நிதியாண்டில் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப ஆழ்குழாய்க்கிணறு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**95--**

**உதகை வட்டத்தில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்**

*வினா எண் 38824--திரு. எச். எம். ராஜு: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--*

*நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், சோலூர் கிராமம் கிளென் மார்கன் எஸ்டேட் அருகில் ஆதிதிராவிடக் குடியிருப்புப் பகுதியான ஜெயந்தி காலனிக்கு சாலை வசதியும் மின் இணைப்பும், பாதுகாக்கப்பட்ட குடிநீரும் வழங்க அரசு உடன் நடவடிக்கை எடுக்குமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

1. அரசாணை எண் 191 (நிதி) பிஜிஐ-துறை நாள் 2-3-1995-ன்படி மாநிலம் முழுவதும் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு இணைப்புச்சாலை வசதி ஏற்படுத்த ரூ. 1.00 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

2. இந்த வகையில் நீலகிரி மாவட்டத்திற்கும் ரூ. 3 லட்சம் பங்கீடு செய்யப்பட்டு, பணிகள் அந்த மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[1995 நவம்பர் 3

3. இவ்வாறே நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், சோலூர் கிராமம் கிளென்மார்கன் எஸ்டேட் ஜெயந்தி குடியிருப்பிலும் பாதை வசதி ஏற்படுத்த தக்க அறிவுரைகள் நீலகிரி மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலருக்கு அளிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

96--

### மீனவ சங்கங்களுக்கு கடன் வழங்குதல்

வினா எண் 13019--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசமுத்திரம் ஒன்றியம் கணேசபுரம், செம்பியன் மகாதேவி பட்டினம் ஆகிய கூட்டுறவு மீனவச் சங்கங்களுக்கு புதியதாக கடன் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத் துறை அமைச்சர்:

செண்பகமா தேவிபட்டினம் கணேசபுரம் என்பது தனியான சங்கங்கள் அல்ல. இரண்டு கிராமங்களும் ஒரே சங்கத்தில் இணைந்து செண்பகமாதேவிப்பட்டினம் கணேசபுரம் கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கம் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சங்கத்திற்கு அரசுப் பங்கு மூலதனமாக ரூ. 25,000 வழங்கப்பட்டுள்ளது. தற்போது தேசீய கூட்டுறவு வளர்ச்சிக்கழகத்தின் மூலம் ஐந்து கடலோர மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகின்ற ஒருங்கிணைந்த கடல் மீனள அபிவிருத்தித் திட்டத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த சங்கங்கள் சேர்க்கப்படவில்லை. ஆயினும் மீனவர்களுக்கு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் கடனுதவி வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கணேசபுரம் மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் கடன் உதவி பெற மாவட்ட மத்திய கூட்டுறவுச் சங்கத்தை அனுகலாம்.

97--

### பனை வாரியத்தின் தலைமை அலுவலகத்தை இராமநாதபுரத்தில் அமைத்தல்

வினா எண் 39065--டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

*(அ)* பனை வாரியத்தின் தலைமை அலுவலகத்தை இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைத்திட அரசுக்கு பரிந்துரைகள் வந்துள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், அங்கு அமைத்திட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* வெளிநாடுகளில் பனைப் பொருட்கள் விற்பனையை அதிகரிக்கவும் அரசையும் பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவையும் நிதியுதவி தொடர்பாக அடிக்கடி தொடர்பு கொள்ள வேண்டி இருப்பதாலும் மற்ற துறைகளின் தலைமை அலுவலகங்கள் சென்னையில் இயங்கி வருவதாலும் தமிழ்நாடு பனைப்பொருட்கள் வளர்ச்சி வாரியத்தின் தலைமை அலுவலகத்தையும் சென்னையிலேயே அமைப்பது வசதியாக இருக்கும் என்பதால் தமிழ்நாடு பனைப்பொருட்கள் வளர்ச்சி வாரியத்தின் தலைமை அலுவலகம் சென்னையில் செயல்பட்டு வருகிறது.

**98--**

**கிராமப்பொருள் விற்பனையை ஊக்குவிக்க நடவடிக்கை**

வினா எண் *47197*-திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கிராமப் பொருள் விற்பனை நிலையங்கள் எத்தனை?

*(ஆ)* கிராமப் பொருள் விற்பனையை ஊக்குவிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்:**

*(அ)* தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூரில் கிராமப் பொருள் விற்பனை நிலையம் ஒன்றும் ஓரத்த நாட்டில் கிராமசில்பா ஒன்றும் இயங்கி வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(ஆ) அரசுத் துறைகள் மற்றும் அரசுத்துறை நிறுவனங்கள் ஆகியவை தமிழ்நாடு கதர்கிராமத் தொழில் வாரிய அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை வாங்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. வாரியத்தின் கீழ் செயல்படும் சோப்பு அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் சோப்பு ரகங்களுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. சோப்பு முகவர்களை நியமனம் செய்து வெளிமாநிலங்களில் சோப்பு விற்பனை செய்யப்படுகிறது. மேலும் சோப்பு விற்பனைக்கு 2 சத விகிதம் சிறப்பு ஊக்க ஊதியம் அளித்து விற்பனையை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. உற்பத்தி விற்பனை தொடர்பாக ஆய்வுகள் நடத்தப்பட்டு விற்பனையை அதிகரிப்பதற்கான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

**99--**

**கால்நடை கிளை நிலையத்தை மருந்தகமாக உயர்த்துதல்**

வினா எண் 80151--திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் மன்னார்குடி தொகுதி, களப்பால் கிராமத்தில் உள்ள கால்நடை கிளை நிலையத்தைக் கால்நடை மருந்தகமாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. எம்.சி. தாமோதரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): களப்பால் கிராமத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை 10,000க்கும் அதிகமாக இருப்பதாலும் ஏனைய கால்நடை மருந்தகங்கள் மற்றும் கிளை நிலையங்கள் தொலைவில் அமைந்திருப்பதாலும் களப்பால் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக் கூறுகள் உள்ளன. தற்போது களப்பால் கால்நடை கிளை நிலையம் மூலமாக மருத்துவ வசதிகள் அளிக்கப்பட்டு வருகிறது. சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் அனைத்துத் தீர்மானங்களையும் நிறைவேற்றி பரிந்துரை அனுப்புமானால், களப்பால் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைப்பது குறித்து தகுதியின் அடிப்படையில் பரிசீலிக்கப்படலாம்.

*1995 நவம்பர் 3]*

**100--**

**கெங்கவல்லி கால்நடை மருந்தகத்திற்குக் கட்டிடம் கட்டுதல்**

*வினா எண் 80154*--**திரு. கே. கந்தசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சேலம் மாவட்டம்,கெங்கவல்லி கால்நடை மருந்தகத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. எம். சி. தாமோதரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கெங்கவல்லி கால்நடை மருந்தகம் தற்பொழுது வாடகையில்லா இலவச கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இந்தக் கால்நடை மருந்தகம் கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியத்தில் 3-வது கால்நடை மருந்தகமாகும். இந்தக் கால்நடை மருந்தகத்திற்கு கட்டிடம் கட்ட சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் ரூ. 3.-00 இலட்சம் மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே கெங்கவல்லி கால்நடை மருந்தகத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்ட ஊராட்சி ஒன்றியம் நடவடிக்கை எடுக்கும்.

## பன்னிரெண்டாம் பட்டியல்

**1--**

**மது மற்றும் போதை மருந்து அடிமைகளை மீட்க அக்கு பங்க்சர் சிகிச்சை**

*வினா எண் 61379*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மது அடிமைகளையும், போதை மருந்து அடிமைகளையும் மீட்க அக்கு பங்க்சர் சிகிச்சை முறையை அரசு அறிமுகப்படுத்துமா?

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மது அடிமைகளையும், போதை அடிமைகளையும் மீட்பது சம்பந்தமான சிகிச்சை முறையைப் பற்றி நரம்பியல் மற்றும் மனநல சிகிச்சைத் துறை பேராசிரியர்களைக் கலந்து ஆலோசிக்கப்பட்டதில், மது மற்றும் போதை அடிமைகளை மீட்க "அக்கு பங்சர்" சிகிச்சை முறை அவ்வளவு ஏற்புடையதாக அமையவில்லையென தெரிய வந்தது. மேலும், இந்த சிகிச்சை முறை உபயோகமாக இருக்கும் என்று இதுவரை ஆராய்ச்சி மூலமாக நிரூபிக்கப்படவில்லை. மேற்படி, சிகிச்சை முறை மனநல காப்பகத்தில் பின்பற்றப்படவில்லை. ஆகையினால், இது தொடர்பான கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**2--**

**பேராவூரணி தொகுதியில் மூளைக்காய்ச்சல் ஏற்படுவதைத் தடுத்தல்**

வினா எண் *61815*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பேராவூரணி தொகுதியில் பன்றியினால் மூளைக்காய்ச்சல் ஏற்படுவதைத் தடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

பேராவூரணி தொகுதியில் மூளைக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் எவரும் இல்லை.

**3--**

**சென்னை பொது மருத்துவமனையில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் அமைத்தல்**

வினா எண் *61816*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சென்னை அரசு பொது மருத்துவமனையில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

இல்லை.

**4--**

**திருச்சி அரசு பொது மருத்துவமனை கழிப்பிடங்களைப் பழுது பார்த்தல்**

வினா எண் 61846--டாக்டர் ஜி.ஆர். மாலா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி அரசு பொது மருத்துவமனையில் அனைத்து கழிப்பிடங்களையும் பழுது பார்க்க தனி நிதி ஒதுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

அரசு பொது மருத்துவமனைகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் சிறு பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்காக அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. இவ்வாண்டு 1995-1996க்கான பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்காக திருச்சிராப்பள்ளி அரசினர் தலைமை பொது மருத்துவமனைக்கு ரூ.11.87 லட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. தற்போது கழிப்பிடங்களில் கழிவுநீர் தேங்குவது இல்லை. சிறிது நீர் தேங்கினாலும் அதனை மருத்துவமனை பணியாளர்களை வைத்து உடன் சீர் செய்யப்பட்டு வருகிறது.

**5--**

**திருச்சி அரசு பொது மருத்துவமனையில் பயனற்ற பொருட்களை ஏலத்தில் விடுதல்**

வினா எண் 61856--டாக்டர் ஜி.ஆர். மாலா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சி அரசு பொது மருத்துவமனையில் பல காலமாக பழுதடைந்து உபயோகப்படுத்தப்படாமல் இருக்கும் பொருள்கள் ஏலத்தில் விடப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

திருச்சி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை மற்றும் அம்மாவட்டத்தில் உள்ள பிற அரசு மருத்துவ நிலையங்களில் 31-3-1993 வரை சேகரமாகியுள்ள பயனற்ற மற்றும் கழித்தொதுக்கப்பட்ட பொருட்கள் ஒப்பந்தப்புள்ளி விற்பனை மூலம் ஒப்பந்தக்காரர்களால் அப்புறப்படுத்தப்பட்டது. 1-4--1993 முதல் 31-3-1995 வரை சேகரமாகியுள்ள பயனற்ற மற்றும் கழித்தொதுக்கப்பட்ட பொருட்களை ஒப்பந்தப்புள்ளி விற்பனை மூலம் அப்புறப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**6--**

**திருப்பத்தூர் மருத்துவமனை ஊழியர்களுக்கு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 63614--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் மருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் ஊழியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயலாக்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ இடமில்லை.

*1995 நவம்பர் 3]*

**7--**

## சித்த மருந்து தொழிற்சாலை அமைத்தல்

வினா எண் *67725*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* சித்த மருந்து தொழிற்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

*(ஆ)* ஆம் எனில், எங்கு, எப்போது அமைக்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை *அமைச்சர்:***

*(அ)* இல்லை.

*(ஆ)* இக்கேள்விக்கு இடமில்லை.

**8--**

## காயாமொழியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் *70749*--**திரு. ஆ. செல்லத்துரை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*(அ)* சிதம்பரனார் மாவட்டம், திருச்செந்தூர் தொகுதி, காயாமொழியில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், நடப்பு ஆண்டில் செயற்படுத்தப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை *அமைச்சர்:***

*(அ)* திருச்செந்தூர் தொகுதி, காயாமொழி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை.

(ஆ) இனி வரும் காலங்களில் நிதி நிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும்..

**9--**

**சிறு தொழில் கூடங்களை நவீனப்படுத்துதல்**

வினா எண் 81848--திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பட்டுக்கோட்டையில் எளிய மக்கள் உபயோகிக்கும், ரொட்டி, பிஸ்கட் தயாரிக்கும் சிறு தொழில் கூடங்களை நவீனமாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

இல்லை.

**10--**

**தேசிய பயறுவகை அபிவிருத்தித் திட்டம்**

வினா எண் 52075--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தேசிய பயறு வகை அபிவிருத்தித் திட்டம் எங்கெங்கு, எப்பொழுது செயல்படுத்த திட்டமிடப்பட்டிருக்கிறது?

**விடை--**

**மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தேசிய பயறுவகை அபிவிருத்தித் திட்டம் தமிழ் நாட்டில் 1986-87 முதல், சென்னை மற்றும் நீலகிரி மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகின்றது.

(ஆ) தேசிய பயிர் பெருக்கத் திட்டம் 1994-95.

1995 நவம்பர் 3]

| | சாகுபடி பரப்பு (எக்டேரில்) |
|---|---|
| மினிகிட் | 7197 |
| விதை கிராமம் | 32435 |
| 10 ஹெக்டேர் பெருவிளைகட பண்ணை | 7640 |
| சான்று விதை விநியோகம் | 45200 |
| ஆதார விதை | 13385 |
| மொத்தம் .. | 135857 |

| | பரப்பு (1) (எக்டேரில்) | உற்பத்தி (2) (மெட்ரிக் டன்) | உற்பத்திதிறன் (3) (கிலோ) |
|---|---|---|---|
| துவரை .. | 20250 | 9632 | 478 |
| உளுந்து .. | 65640 | 28356 | 432 |
| பாசிபயிறு .. | 32300 | 11884 | 367 |
| காராமணி .. | 10247 | 2100 | 205 |
| கொள் .. | 7420 | 3769 | 508 |
| மொத்தம் .. | 135857 | 55741 | 1990 |

(இ) இத்திட்டத்தின்கீழ் கடந்த நான்கு ஆண்டுகளில் செலவிடப்பட்ட தொகை கீழ்க்கண்டவாறு ஆகும்:--

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1991–92 | 76.99 |
| 1992–93 | 118.51 |
| 1993–94 | 142.35 |
| 1994–95 | 188.92 |

(ஈ) 1995–96 ஆம் ஆண்டு தேசிய பயறுவகை அபிவிருத்தித் திட்டம் சென்னை மற்றும் நீலகிரி மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படவுள்ளது.

(உ) தமிழ்நாட்டில் பயறு உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு புதிய பயறுவகை உற்பத்திக் கொள்கை கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளது:--



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1. பயறு சாகுபடிப் பரப்பை அதிகரித்து, உற்பத்தியை அதிகரித்தல்.

2. உழவர் பெருமக்களுக்கு பயறுவகை தொழில் நுட்பங்கள், பொதுத் தொடர்பு சாதனங்கள் மூலம் சென்றடையச் செய்தல்.

3. பயறுவகை பயிர்களை பருத்தி, கடலை, கரும்பு, சோளம் முதலிய பயிர்களுடன் ஊடுபயிராக பயிர் செய்தல்.

4. பயறுவகை சிறுதளைகள் விநியோகித்து பருத்தி, கரும்பு, நிலக்கடலை மற்றும் சிறு தானியங்களில் ஊடுபயிர் செய்தல்.

5. பயறு சாகுபடி விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

6. ஒரு மாவட்டத்திற்கு ஒரு வட்டம் தேர்வு செய்து அதில் தேசிய பயறு பெருக்கத் திட்ட அனைத்து இனங்களையும் செயல்படுத்துதல்.

7. 25.00 ஹெக்டேர் பரப்பளவில் வீரிய ஒட்டு இரக பயறு விதைப் பண்ணை அமைத்தல்.

**11--**

### சாயப்பட்டறை தொழிற்சாலைகள் துவக்குதல்

வினா எண் 65104--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கைத்தறித் துணிகளுக்குச் சாயமேற்றும் சாயப்பட்டறை தொழிற்சாலைகள் துவங்குவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு துவக்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்:**

(அ) மத்திய அரசு நாடு முழுவதும் 1993-94 ஆம் ஆண்டிலிருந்து 1996-97ம் ஆண்டுக்குள் 3,000 கைத்தறி வளர்ச்சி மையங்களும், 500 தரமான சாயச்சாலைகளும் நிறுவிட இலக்கு நிர்ணயம் செய்து, அறிக்கை வெளியிட்டதில் தமிழ்நாட்டுக்கு 303 கைத்தறி வளர்ச்சி மையங்களும், 58 தரமான சாயச்சாலைகளும் நிறுவிட இலக்கு நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1993-94ம் ஆண்டில் 6 தரமானச்

1995 நவம்பர் 3]

சாயச்சாலைகளும், 1994-95ம் ஆண்டில் 17 தரமானச் சாய சாலைகளும் அங்கீகரிக்கப்பட்டு மான்யமும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இச்சாயச் சாலைகள் தமிழ்நாட்டில் விரைவில் நிறுவப்படவுள்ளது.

(ஆ) தமிழ்நாட்டில் கீழ்க்காணும் இடங்களில் தரமான சாயச் சாலைகள் நிறுவப்படவுள்ளது.

1993-94-ம் ஆண்டு

| | |
|---|---|
| 1. குன்னகம் பூண்டி புதூர் நெச்வாளர் கூட்டுறவுச் சங்கம் | வேலூர் |
| 2. செங்குந்தபுரம் ஸ்ரீ சுந்தர வினாயகர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் | திருச்சி |
| 3. பொன்னம்மா பேட்டை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம். | சேலம் |
| 4. பவானி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் | ஈரோடு |
| 5. சங்கம்பட்டி அன்னை முத்துமாரியம்மன் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் | மதுரை |
| 6. கள்ளிடைக்குறிச்சி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் | திருநெல்வேலி |

1994-95-ம் ஆண்டு

| | |
|---|---|
| 1. ஒலி முகம்மதுபேட்டை அறிஞர் அண்ணா நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் | காஞ்சிபுரம் |
| 2. கோவில் வழி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் | திருப்பூர் |
| 3. ஆர். 90, சந்திரப்பட்டி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் | விருதுநகர் |
| 4. வடசேரி பெரியராசிங்கன் தெரு, நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் | நாகர் கோயில் |
| 5. திரு. வி.க. பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் | திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் |

| | |
|---|---|
| 6. அன்னை அஞ்சுகம் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் | திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் |
| 7. குறிஞ்சிப்பாடி கூட்டுறவு கைத்தறி ஏற்றுமதி உற்பத்தி அபிவிருத்தித் திட்டம் | தென் ஆற்காடு மாவட்டம் |
| 8. பேரறிஞர் அண்ணா பட்டு கைத்தறி உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் | கும்பகோணம் |
| 9. பரமக்குடி ஸ்ரீசுந்தரராஜ பெருமாள் கைத்தறி உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் | ராமநாதபுரம் |
| 10. காந்திஜி கைத்தறி உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் | மதுரை |
| 11. சிவசக்தி கைத்தறி உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் | திண்டுக்கல் |
| 12. மருதூர் கைத்தறி உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் | திருச்சி |
| 13. கணபதி பாளையம் கைத்தறி உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் | திருப்பூர் |
| 14. வெங்கடேஸ்வரா கைத்தறி உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் | இராமநாதபுரம் |
| 15. முருகன் கைத்தறி உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் | பரமக்குடி |
| 16. அம்மாப்பேட்டை பட்டு கைத்தறி உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் | அம்மாப்பேட்டை |
| 17. கஞ்சமநாதன் பேட்டை கைத்தறி உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் | குறிஞ்சிப்பாடி |

*1995 நவம்பர் 3]*

**12--**

**ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அலுவலகக் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *72380*--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் போகலூரிலும், பரமக்குடியிலும் அலுவலகக் கட்டிடம் கட்டிட அரசிடம் திட்டம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில் எப்போது கட்டப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)*: போகலூரிலும், பரமக்குடியிலும் அலுவலகக் கட்டிடம் கட்ட அரசுக்கு முன்மொழிவு ஏதும் வரவில்லை.

**13--**

**கிராமியக் கலைஞர்களுக்குப் பயிற்சி மையம்**

வினா எண் *61710*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழகத்தில் உள்ள கிராமியக் கலைஞர்களுக்குப் பயிற்சி மையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

இல்லை.

**14--**

**அரியலூர் கலைக் கல்லூரிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *65352*--**டாக்டர் சு. மணிமேகலை:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரியலூர் அரசு கலைக் கல்லூரிக்கு போதிய கட்டிட வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை––**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

இப்பணிக்கான கருத்துருவினை *1995–96*–ம் ஆண்டில் பகுதி 2 திட்டத்தில் சேர்த்துக்கொள்ள பரிசீலிக்கப்படும்.

**15––**

### கட்டிடத் தொழிலாளர்களுக்கு ஊதியக்குழு அமைத்தல்

வினா எண் *65065*––திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா––

கட்டிடத் தொழிலாளர்களுக்கு ஊதியக்குழு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

**விடை––**

**மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:**

கட்டிடத் தொழிலாளர்களுக்காக ஊதியக் குழு அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது ஏதும் இல்லை.

**16––**

### எட்டுக்குடி கிராம அரிசன குடியிருப்புகளை மேம்படுத்துதல்

வினா எண் *776*––**திரு. வே. தம்புசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறைஅமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா––

(அ) நாகை வட்டம் எட்டுக்குடி கிராமத்தில் உள்ள அரிசனங்கள் குடியிருப்பு பள்ளமான பகுதியில் இருப்பதால் ஆண்டுதோறும் மழைக்காலங்களில் அவர்கள் அவதிப்படுவது அரசு கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவர்களை மேட்டுப்பகுதிகளுக்கு எப்போது குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ):* நாகப்பட்டினம் வட்டம் எட்டுக்குடி கிராமத்தில் பள்ளமான பகுதியில் ஆதிதிராவிட மக்கள் ஆங்காங்கே குடியிருந்து வருகிறார்கள். அவர்களில் 24 நபர்களுக்கு 1990–91–ல் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ளவர்கள் ஆங்காங்கே பல பகுதிகளில் குடியிருந்து வருவதால் தனித்தனியாக அப்பகுதிகளை மேம்படுத்த அரசிடம் திட்டம் எதுவும் இல்லை. இப்பணிகளை எடுத்துச் செய்ய ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்திலும் நிதி ஒதுக்கீடு இல்லை. எனவே, அத்திட்டத்தின் கீழும் இப்பணி எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**17--**

**சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட பங்க் கடைகள் விவரம்**

வினா எண் 6340--திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் தமிழ் நாட்டில் கடந்த 3 ஆண்டுகளில் எந்தெந்த மாவட்டங்களில் "பங்க்" கடைகள் நடத்த அரசு கடனுதவி எவ்வளவு பேர்களுக்கு அளிக்கப்பட்டது.?

(ஆ) அவற்றின் மூலம் அரசு அளித்துள்ள கடன் உதவி எவ்வளவு?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ):* சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் கடந்த மூன்று ஆண்டுகளில் (1989–90, 1990–91, 1991–92) மாவட்ட வாரியாக அரசால் கடனுதவி அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் அளிக்கப்பட்ட கடனுதவி பற்றிய விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

## இணைப்பு

| வ. எண் | மாவட்டம் | பங்க் கடைகள் நடத்த அரசால் கடனுதவி பெற்றவர்களின் எண்ணிக்கை. | | | அரசு அளித்துள்ள கடனுதவி | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 1989–90 | 1990–91 | 1991–92 | 1989–90 | 1990–91 | 1991–92 |
| | (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. | செங்கை எம்.ஜி.ஆர். | 54 | 102 | 68 | 3,24,000 | 6,12,000 | 5,44,000 |
| 2. | தென்னாற்காடு | 302 | 325 | 286 | 6,04,000 | 9,57,000 | 9,44,000 |
| 3. | வடாற்காடு அம்பேத்கார் | 480 | 350 | 463 | 19,20,000 | 10,50,000 | 13,89,000 |
| 4. | திருவண்ணாமலை சம்புவராயர் | 354 | 281 | 324 | 7,46,529 | 8,00,946 | 9,37,668 |
| 5. | சேலம் | 343 | 266 | 489 | 13,99,700 | 11,40,400 | 22,51,900 |
| 6. | தர்மபுரி | 473 | 414 | 244 | 14,19,000 | 12,42,000 | 8,95,600 |
| 7. | பெரியார் | -- | -- | -- | -- | -- | -- |
| 8. | கோயம்புத்தூர் | 85 | 80 | 86 | 3,48,200 | 4,26,400 | 4,58,380 |
| 9. | நீலகிரி | -- | -- | -- | -- | -- | -- |
| 10. | தஞ்சாவூர் | 305 | 223 | 25 | 15,67,000 | 10,88,000 | 1,50,000 |
| 11. | நாகப்பட்டினம் காயிதேமில்லத் | 251 | 148 | 90 | 11,75,000 | 5,84,000 | 3,35,000 |
| 12. | திருச்சி | 94 | 78 | 73 | 3,63,000 | 2,94,000 | 2,77,000 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 13. | புதுக்கோட்டை | 91 | 122 | -- | 91,000 | 1,48,000 | -- |
| 14. | மதுரை | 1,085 | 901 | 547 | 39,35,000 | 34,41,000 | 18,80,000 |
| 15. | திண்டுக்கல் அண்ணா | -- | -- | -- | -- | -- | -- |
| 16. | ராமநாதபுரம் | -- | -- | -- | -- | -- | -- |
| 17. | காமராசர் | -- | -- | -- | -- | -- | -- |
| 18. | பசும்பொன்முத்துராமலிங்க தேவர் | 967 | 417 | 477 | 57,36,500 | 24,49,250 | 32,49,750 |
| 19. | திருநெல்வேலி கட்டபொம்மன் | 185 | 186 | 191 | 3,52,500 | 3,55,000 | 3,63,300 |
| 20. | சிதம்பரனார் | 71 | 94 | 94 | 1,41,000 | 1,70,000 | 3,17,000 |
| 21. | கன்னியாகுமரி | -- | -- | -- | -- | -- | -- |
| | **மொத்தம்.** | **5,140** | **3,987** | **3,457** | **2,01,12,429** | **1,47,58,596** | **1,39,92,598** |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

18--

### காரங்குடாவில் மீனவர்களுக்கு வீடுகள் கட்டுதல்

வினா எண் 14305--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், காரங்குடா வீடற்ற மீனவர்கட்கு 1992-93-ல் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மீனவர்களுக்கு வீடு கட்டும் பணி மீன்துறை இயக்குநரின் பரிந்துரையின் அடிப்படையில் செய்யப்படுகிறது. காரங்குடாவில் மீனவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு அத்தகைய பரிந்துரை பெறப்படாததால் 1992-93-ல் இப்பணி எடுத்துச் செயற்படுத்தப்படவில்லை. இயக்குநர் பரிந்துரை செய்தவுடன் வீடுகள் கட்டிக் கொடுக்கக் கருதப்படும்.

19--

### கீழப்பார்த்திபனூரில் குடிநீர் திட்டத்திற்கு மோட்டார் அறை கட்டுதல்

வினா எண் 15722--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஒன்றியம் கீழப்பார்த்திபனூரில் உள்ள கூட்டுக்குடிநீர் திட்டத்திற்கு மோட்டார் அறை கட்ட எந்த ஆண்டு ஒப்பந்தம் செய்யப்பட்டது?*

*(ஆ) விரைவில் கட்டி முடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

*(அ) மற்றும் (ஆ):* இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஊராட்சி ஒன்றியம், கீழப்பார்த்திபனூர் கிராமத்தை நீர் ஊற்றி தலைமையிடமாகக் கொண்ட கூட்டுக்குடிநீர்த் திட்டம் ஏதும் செயல்படவில்லை. இக்கிராமத்திற்கு வேதியரேந்தல் என்னுமிடத்தில் வைகை ஆற்றில் கிணறு தோண்டி நீர் ஆதாரமுள்ள சோமாத்தூர் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே கீழப்பார்த்திபனூரில் கூட்டுக்குடிநீரின் திட்டத்திற்கு மோட்டார் அறை கட்ட திட்டம் ஏதும் இல்லை.

**20--**

**வெளிமடம் ஆண்டுக்குளத்தில் கொடிபூவரசை அகற்றுதல்**

வினா எண் *16165*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் வெளிமடம் ஆண்டுக் குளத்தில் உள்ள கொடிபூவரசை அகற்ற *1992-93*-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

***மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

வெளிமடம் ஆண்டுக்குளத்தில் உள்ள கொடிபூவரசை அகற்ற தற்போதைய நிலையில் அரசிடம் திட்டம் எதுவும் இல்லை.

**21--**

**தருமபுரி மாவட்டத்தில் கட்டிய தொகுப்பு வீடுகள் விவரம்**

வினா எண் *16978*--**திரு. கே.ஏ. மனோகரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* தருமபுரி மாவட்டத்தில் எவ்வளவு தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளன?

*(ஆ)* அவற்றில் எத்தனை சமுதாயக் கூடங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன?

*(இ)* இன்னும் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள சமுதாயக் கூடங்கள் எத்தனை?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 31-3-1994 வரை தருமபுரி மாவட்டத்தில் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளின் எண்ணிக்கை--18011.

(ஆ) 31-3-1994 வரை கட்டப்பட்ட சமுதாயக் கூடங்களின் எண்ணிக்கை--196.

(இ) இன்னும் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள சமுதாயக் கூடங்களின் எண்ணிக்கை--246.

**22--**

குமராட்சி ஒன்றியத்தில் இலவச வீடுகள் கட்டுதல்

வினா எண் 22890--திரு. **என். ஆர். ராஜேந்திரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) காட்டுமன்னார் கோயில் தொகுதி, குமராட்சி ஒன்றியத்திலுள்ள வல்லம்படுகை வடக்கு மெயின்ரோடு அக்கரம்பெராம்பட்டு, வெங்காயமேடு, அகரநல்லூர், வடக்குத்தெரு, கடவாச்சேரி காலனி மக்களுக்கு இலவச வீடுகள் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித்தரப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்பட்டுவரும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

*1995 நவம்பர் 3]*

**23--**

**அரசலாற்றில் கான்கிரீட் வண்டிப் பாலம் அமைத்தல்**

*வினா எண் 22917*--**திரு. எஸ். ஆசைமணி:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா*--

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மருத்துவக்குடி ஊராட்சிக்கும் மணவாளநல்லூர் ஊராட்சிக்கும் இடையே செல்லும் அரசலாற்றில் ஜே.வி.வி.டி. திட்டத்தின்கீழ் கான்கிரீட் வண்டிப்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குடவாசல் ஊராட்சி ஒன்றியம் மணவாளநல்லூர் ஊராட்சி மற்றும் மருத்துவக்குடி ஊராட்சிக்கு இடையே கான்கிரீட் வண்டிப்பாலம் அமைக்க மதிப்பீடு ரூ. 15 லட்சம் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதிக செலவினம் மற்றும் அதிக தொழில்நுட்பம் நிறைந்த பணியினை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் விதிமுறைப்படி செய்ய இயலாததாகையால் இத்திட்டத்தின்கீழ் வண்டிப்பாலம் அமைக்க இயலாது.

**24--**

**காரனூரில் பேருந்து நிழற்குடை அமைத்தல்**

*வினா எண் 22933*--**திரு. எஸ். ஆசைமணி:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா*--

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், காரனூர் கிராமத்திற்கு ஜே.வி.வி.டி. திட்டத்தின்கீழ் பேருந்து நிழற்குடை அமைத்துத்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நாகை காயிதேமில்லத் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், காரனூர் கிராமத்தில் பேருந்து நிழற்குடை 1995-96 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் அமைக்க இயலுமா என்பது நிதி ஒதுக்கீட்டின்கீழ் அடிப்படையிலும், திட்டங்களுக்கு அளிக்கப்பட வேண்டிய முன்னுரிமையை கருத்தில் கொண்டும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் செயலாக்கப்படும்.

**25--**

### அய்யன்பேட்டையில் சத்துணவுக் கட்டிடம் கட்டுதல்

*வினா எண் 25149*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், மானாந்தக்குடி அய்யன்பேட்டையிலுள்ள விவேகானந்தர் ஆரம்பப் பள்ளிக்கு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் நிரந்தர சத்துணவுக் கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்ட விதிமுறைகளின்படி (Guide Lines) உதவி பெறும் தனியார் பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டிக் கொடுக்க வழிவகை இல்லை.

**26--**

### குடவாசல் ஒன்றியத்தில் குளத்திற்கு தடுப்புச் சுவரும் படித்துறையும் கட்டுதல்

*வினா எண் 25158*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், செருகுடி ஊராட்சி, மாளிகை நத்தம் கிராமக் குளத்திற்கு தடுப்புச் சுவரும், படித்துறையும் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குடவாசல் ஊராட்சி ஒன்றியம், செருகுடி ஊராட்சி, மாளிகை நத்தம் கிராமக் குளத்திற்கு தடுப்புச் சுவர் மற்றும் படித்துறை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டித் தரப்பட திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை. ஆனால் 1995-96-ம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் முன்னுரிமையில் இவ்வேலை எடுத்துச் செய்யப்படும்.

**27--**

**சேத்தூர் சுடுகாட்டிற்கு தகரக் கொட்டகை அமைத்தல்**

வினா எண் 25182--திரு. **எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, சேத்தூர் கிராமத்திலுள்ள ஆதிதிராவிடர்கள் சுடுகாட்டிற்கு நிரந்தர தகரக் கொட்டகை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குத்தாலம் ஊராட்சி ஒன்றியம், சேத்தூர் கிராமம், ஆதிதிராவிடர்கள் சுடுகாட்டிற்கு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் நிரந்தரத் தகரக் கொட்டகை அமைக்கும் கருத்துரு, 1995-96இல் பரிசீலிக்கப்படும்.

**28--**

**இறவை குளத்திற்கு தடுப்புச் சுவர் கட்டுதல்**

வினா எண் 25184--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், செருகுடி ஊராட்சி, மாளிகை நத்தம் கிராம சுடுகாட்டிற்குச் செல்லும் பாதை ஓரமாக உள்ள இறவை குளத்திற்கு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் தடுப்புச் சுவர் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை--**

***மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

*குடவாசல் ஊராட்சி ஒன்றியம், மாளிகை நத்தம் கிராமத்தில் சுடுகாட்டிற்குச் செல்லும் பாதை ஓரமாக உள்ள இறவை குளத்திற்கு தடுப்புச் சுவர் கட்டும் பணியை 1995-96ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யும் கருத்துரு மாவட்ட ஆட்சியரின் பரிசீலனையில் உள்ளது.*

**29--**

**கிருஷ்ணகிரி வட்டத்தில் குட்டையைப் பழுது பார்த்தல்**

வினா எண் 25676--**திரு. கே. முனிவெங்கடப்பன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ) தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், பெல்லம்பள்ளி ஊராட்சி, பாலிகானூர் கிராமத்தில் கட்டப்பட்ட கசிவுநீர்க்குட்டை பழுது அடைந்ததை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அது சரி செய்யப்படுமா?*

**விடை--**

***மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

*(அ) ஆம்.*

*(ஆ) அந்தக் கசிவு நீர்க்குட்டையை தூர் நீக்கி பழுது பார்க்க ரு. 15,000 மதிப்பீட்டில் வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் இப்பணியை மேற்கொள்வது குறித்து பரிசீலிக்கப்படுகிறது.*

*1995 நவம்பர் 3]*

**30--**

## தொகுப்பு வீடுகளுக்கு மின்சாரம் வழங்குதல்

வினா எண் *26710*--**திருமதி இலதா பிரியகுமார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், அரக்கோணம் ஒன்றியம், கீழ்ப்பாக்கம் கிராமம் மற்றும் முள்வாய் காலனியில் கட்டப்பட்டுள்ள *40* தொகுப்பு வீடுகளுக்கு ஒரு வீடு, ஒரு மின்விளக்கு திட்டத்தின்கீழ் மின்சார இணைப்பு வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், மின் இணைப்பு எப்போது வழங்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)*: அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், கீழ்ப்பாக்கம் கிராமத்தில் *11* பயனாளிகளிடமும், முள்வாய் கிராமத்தில் *40* பயனாளிகளிடம் இருந்தும் மின்சார இணைப்பிற்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டு, ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ. *5* வீதம் மின்சார வாரியத்திற்கு கட்டணம் செலுத்தப்பட்டு *51* வீடுகளுக்கு மின் இணைப்பு பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது.

**31--**

## கும்பகோணம் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் *26950*--**திரு. இராம. இராமநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* கும்பகோணம் ஒன்றியம், பட்டீஸ்வரம் கோபிநாத பெருமாள் கோவில் ஆதிதிராவிடர் தெருவில் தொகுப்பு வீடுகள் அமைத்துத்தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை

**32--**

**ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

*வினா எண் 31897--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

காமராஜர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஒன்றியம், கரிசல்குளம், நாச்சியார் கோவில், இனாம்செட்டி குளம், விழுப்பனூர், தெப்பக்குளம், திருவண்ணாமலை, சாயிநத்தம், ரெட்டியாபட்டி, பி. இராமச்சந்திராபுரம், பூவாளி ஆகிய ஊர்களில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**33--**

**பெண்ணாகரம் தொகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

*வினா எண் 35729--டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

*1995 நவம்பர் 3]*

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னர் மனைப்பட்டா பெற்ற கிராமங்களில் கூட தொகுப்பு வீடுகள் கட்டப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சிறப்பு கவனம் செலுத்தி நிதி ஒதுக்கீடு செய்து தொகுப்பு வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**34--**

**திருச்சி மாவட்டத்தில் என்.ஆர்.இ.பி. திட்டத்தின்கீழ் உதவி**

வினா எண் 35927--**டாக்டர் சு. மணிமேகலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கடந்த இரண்டு ஆண்டுகளில் என்.ஆர்.இ.பி. திட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட நிதி உதவிகளில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு என வழங்கிய தொகை எவ்வளவு?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தற்போது என்.ஆர்.இ.பி. திட்டம் நடைமுறையில் இல்லை. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் தான் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் திருச்சி மாவட்டத்திற்கு கடந்த இரண்டு ஆண்டுகளில் கீழ்க்கண்டவாறு நிதி உதவி வரப்பெற்றுள்ளது.

| | மொத்தம் (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|
| 1992-93 | 1843,487 |
| 1993-94 | 2355,999 |

**35--**

**தென்னடார் ஊராட்சியில் ஒற்றை விளக்கு மின் வசதி**

வினா எண் 36270--**திரு. பி.வி. இராஜேந்திரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியம், தென்னடார் ஊராட்சியில் உள்ள தொகுப்பு வீடுகளுக்கு ஒற்றை விளக்கு மின் இணைப்பு வழங்கப்படாத நிலையை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், துரித நடவடிக்கை மேற்கொண்டு மின் இணைப்பு வழங்கப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தென்னடார் ஊராட்சி தொகுப்பு வீடுகளுக்கு ஒற்றை மின்விளக்கு வசதி செய்து தர 30 வீடுகளுக்கும் விண்ணப்பங்கள் பெறப்பட்டு, வாய்மேடு உதவி மின் பொறியாளருக்கு அனுப்பப்பட்டு மின் வைப்புத் தொகை மதிப்பீடுகள் தயாரித்து விரைவில் மின் இணைப்பு கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**36--**

**குடவாசல் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 37166--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், அதம்பார் ஊராட்சி, ஒத்தவீடு மாரியம்மன் கோவில் தெருவில் வசிக்கும் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**37--**

**குத்தாலம் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 37170--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், செங்குடி வட்டம், முருகன் தோட்டம், அகர சென்னி நல்லூர் ஆகிய இடங்களில் ஆதிதிராவிடர்களுக்கு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் தொகுப்பு வீடுகள் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**38--**

**குடவாசல் ஒன்றிய ஆதிதிராவிடர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல்**

*வினா எண் 37177--திரு.* **எஸ். ஆசைமணி:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், விக்கிரபாண்டியத்தில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் ஆதிதிராவிடர் குடியிருப்பு கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர்வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**39--**

**மொடக்குறிச்சி தொகுதியில் தொகுப்பு விடுகள் கட்டுதல்.**

*வினா எண் 37458--* **திருமதி கவிநிலவு தர்மராஜ்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

மொடக்குறிச்சி தொகுதி, மீனாட்சிபுரம், அவல்பூந்துறை அரச்சலூர், பள்ளியூத்து, பூலசுக்காடு, பள்ளக்காட்டுப் புதூர், 64, புஞ்சை காளமங்களம், சின்னம்மாபுரம் ஆகிய இடங்களிலுள்ள ஆதிதிராவிட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தரஅரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3]*

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**40--**

**சீசோளக்காளிபாளையம் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

*வினா எண் 37464--***திருமதி கவிநிலவு தர்மராஜ்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*கொடுமுடி, சென்னசமுத்திரம் பேரூராட்சி சீசோளக் காளிபாளையம் ஆதிதிராவிட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**41--**

**வடக்கு தெரு சாலையைக் கப்பிச் சாலையாக மாற்றுதல்**

*வினா எண் 37912--***திரு. எஸ். ஆசைமணி:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*குத்தாலம் தொகுதி, குத்தாலம் ஒன்றியம், வழுவூர் ஊராட்சியில் வடக்குத் தெரு சாலையை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கப்பிச் சாலையாக மாற்றித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குத்தாலம் ஊராட்சி ஒன்றியம் வழுவூர் ஊராட்சி வடக்கு தெரு சாலையினை கப்பிச் சாலையாக மாற்றும் பணி ரூ.50,000 மதிப்பீட்டில் 94–95–ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகிறது.

**42--**

**குத்தாலம் தொகுதியில் சாலைகளை மேம்படுத்துதல்**

வினா எண் 37914---திரு. **எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

குத்தாலம் தொகுதி, குத்தாலம் ஒன்றியம், பெருமாள் கோவில் ஊராட்சி, பெருமாள் கோவில் கிராமம், சத்தியா நகர், ஜில்லா தெரு, எம்.ஜி.ஆர். நகர், ஜெ. நகர் இவைகளை இணைக்கும் கிராமச் சாலையை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குத்தாலம் ஒன்றியம், பெருமாள் கோவில் கிராமம் சத்தியா நகர், ஜில்லா தெரு, எம்.ஜி.ஆர். நகர், ஜெ. நகர் இவைகளை இணைக்கும் கிராமச் சாலை 600 மீட்டர் மண் தளமாக உள்ளது. இச்சாலையை மேம்படுத்த ரூ.40,000 செலவாகும். நடப்பு நிதியாண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் சாலை வேலைகள் செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படாத காரணத்தால் தற்போது அந்த சாலைப் பணியை செய்ய இயலவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**43--**

**செங்குடி சாலையை சரி செய்தல்**

*வினா எண் 37919*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

குத்தாலம் தொகுதி, குத்தாலம் ஒன்றியம், அசிக்காடு ஊராட்சி, செங்குடி ஆதிதிராவிடர் தெரு சாலையில் உடைந்த நிலையில் உள்ள சிறுபாலத்தை சரி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குத்தாலம் ஒன்றியம், அசிக்காடு ஊராட்சி, செங்குடி ஆதிதிராவிடர் காலனி சாலையில் உள்ள சிறுபாலத்தை ஊராட்சி நிதியில் இருந்து ரூ.5,000 செலவு செய்து சரி செய்யப்பட்டுள்ளது.

**44--**

**பரமக்குடி தொகுதியில் தெரு விளக்குகள் விவரம்**

வினா எண் *38030*--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பரமக்குடி தொகுதியில் உள்ள தொகுப்பு வீடுகள் உள்ள கிராமங்களில் தெருவிளக்குகள் இல்லாமல் உள்ள கிராமங்கள் எத்தனை?

(ஆ) எந்த ஆண்டு தெருவிளக்குகள் போடப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) பரமக்குடி தொகுதியில், பரமக்குடி, போகலூர் மற்றும் நயினார்கோயில் ஆகிய மூன்று ஊராட்சி ஒன்றியங்களில் 18 கிராமங்கள் உள்ள தொகுப்பு வீடுகளுக்கு தெரு விள்க்குகள் அமைக்கப்பட வேண்டும்.

(ஆ) 18 கிராமங்களுக்கும் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பங்களுடன் பிரேரணைகள் தமிழ்நாடு மின்சார வாரிய உதவி செயற்பொறியாளர், பரமக்குடி, இராமநாதபுரம், தேவிப்பட்டினம் ஆகியோருக்கு தகவல் அனுப்பப்பட்டு இப்பணியினை விரைவில் முடித்துத்தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**45--**

### அவிநாசி தொகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

*வினா எண் 38844*--**டாக்டர் மு. சீனியம்மாள்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*அவிநாசி தொகுதி, அன்னூர் ஒன்றியம், ஒட்டர்ப்பாளையம் ஊராட்சி புலுப்பாளையத்தில் வீடு இல்லாமல் உள்ள சுமார் 30 குடும்பங்களுக்கு தொகுப்பு வீடுகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை

**46--**

### கும்மிடிபூண்டி தொகுதியில் தொகுப்பு வீடுகள்

*வினா எண் 39163*--**திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம், கும்மிடிபூண்டி தொகுதி வச்சிவாக்கம், மைலாப்பூர், பனப்பாக்கம், பாலவாக்கம் ஆவாஜிப்பேட்டை, வெங்கல், செம்மேடு, தாமரைப்பாக்கம் ஆகிய கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை

**47--**

**திருத்தணி தொகுதியில் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டுதல்**

*வினா எண் 39202*--**திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், திருத்தணி தொகுதி, நாகபூண்டி, அருங்குளம், தானவேடு, ராமகிருஷ்ணன்பேட்டை, கனகம்மாள் சத்திரம், ராமஞ்சேரி, ஒசூர், திருகாளங்காடு, ஆற்காடு குப்பம் ஆகிய ஊர்களில் உள்ள வீடு இல்லாத ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை

**48--**

**வில்லிவாக்கம் தொகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

*வினா எண் 39216*--**திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம், வில்லிவாக்கம் தொகுதி, ஆலம்பாக்கம், ஒரகடம், வரதராஜபுரம், மங்களபுரம், கள்ளிக்குப்பம், முகப்பேர், அயப்பாக்கம், ஐ.சி.எப். காலனி, வீராபுரம் ஆகிய கிராமங்களில் உள்ள வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**49--**

**பாரதியார் நகரில் தொகுப்பு விடுகள் கட்டுதல்**

*வினா எண் 39439*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், கம்பூர் வட்டம், பாரதியார் நகர் ஆதிதிராவிடர்களுக்கு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு

வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**50--**

### திருச்சுளி ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 39472--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காமராஜர் மாவட்டம், திரிச்சுளி ஒன்றியம், பரவச்சி, பூலாங்கல், புலிக்குறிச்சி, கல்லாஸ்புரம், செங்குளம், சேதுமடம், தமிழ்பாடி, தும்முச்சின்னம், தொட்டலக்கரை ஆகிய கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**51--**

### தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டுதல்

வினா எண் 39840--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், நாகரசம்பேட்டை, வில்லியவரம்பல்: திருநல்குடி, துக்காச்சி, சீனிவாசநல்லூர், தே. பெருமாநல்லூர், வண்ணாக்குடி, பருத்துங்குடி, கீரனூர், தண்டாலம் ஆகிய கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**52--**

**அம்மாபேட்டையில் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

*வினா எண் 39888--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*தஞ்சாவூர் மாவட்டம், அம்மாபேட்டை ஒன்றியம், நெல்லித்தோப்பு, புலவர்நத்தம், அகரமாங்குடி, விழுதியூர், உக்கடை, கருப்பமுதலியார்கோட்டை, அருந்தபுரம், வையச்சேரி, நெடுவாசல், வடக்கு மாங்குடி, இடையிருப்பு ஆகிய ஊர்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**53--**

**கோவையில் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு விடுகள் கட்டுதல்**

*வினா எண் 39976*--**திரு. கே. செல்வராஜ்**: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

*கோயம்புத்தூர் நரசிம்மநாயக்கன் பாளையம், நகரப் பஞ்சாயத்தில் உள்ள சுமார் 500-க்கும் மேற்பட்ட ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

***மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**54--**

**திருப்பனந்தாள் ஒன்றியத்தில் தொகுப்பு விடுகள் கட்டுதல்**

*வினா எண் 40116*--**திரு. ஆர். சிங்காரம்**: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

*தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஒன்றியம், கஞ்சனூர், நெய்குப்பை, முள்ளங்குடி, வீராக்கன் திருக்கோடிக்காவல், துகிலி, மகாராஜபுரம், ஆரலூர், தத்துவாஞ்சேரி, அணைக்கரை கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை--**

***மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

[*1995 நவம்பர் 3*

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**55--**

**தஞ்சை மாவட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு விடுகள் கட்டுதல்**

*வினா எண் 40136*--**திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஒன்றியம், புத்தூர் பட்டீஸ்வரம், கள்ளப்புலியூர், நிரத்தநல்லூர், குமரன்குடி, சோழன்மாளிகை, அசூர், உடையனூர், திப்பிராஜாபுரம், கிண்ணம்பூர், மருதாநல்லூர், விளைந்தகண்டம் கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**56--**

**ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

*வினா எண் 40156*--**திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*1995* நவம்பர் *3*]

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், தலைஞாயிறு வட்டம், அவுரிக்காடு, கோவில்பத்து, வெள்ளிப்பள்ளம், திருவிடை மருதூர், நீர்முனை பனங்காடி, நால்வேதபதி, தாமரை வட்டாக்குடி, ஒன்றியங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

***மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**57--**

**காயிதேமில்லத் மாவட்டத்தில் தொகுப்பு விடுகள் கட்டுதல்**

வினா எண் *40176*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், வேதாரண்யம் ஒன்றியம், செட்டிபுலம், கீழநெல்வயல் பண்ணாள், ஆதனூர் காரியப்பட்டினம், தோத்தாக்குடி தெற்கு, மருதூர் வடக்கு மற்றும் தெற்கு, ஆயன்காரம்புலம், கோடியகாடு, வாய்மேடு கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

***மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து

செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் செயற்குறிப்பு எதுவுமில்லை.

58--

## ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

*வினா எண் 40207*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், நாகருடையான் மேற்கு, ஆறுகாட்டுத்துறை, அரியலூர், தொண்டியக்காடு, ஆலங்காடு கருப்பங்காடு, சித்தேரி, ராதாநரசிம்மபுரம், சேரன்குளம், சோழபாண்டி ஆகிய கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

59--

## மன்னார்குடி தாலுகாவில் ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

*வினா எண் 40398*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா, பாளையங்கோட்டை, எண்பேத்தி தச்சன்வயல், பனையூர், வரத்தூர்,

*மோகூர் ஆகிய கிராமங்களிலுள்ள வீடற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை--**

***மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**60--**

**ஆயரமழை, நிர்திதனமங்களம் ஆகிய கிராமங்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

*வினா எண் 40404--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*நாகப்பட்டினம்--காயிதே மில்லத் ஒன்றியம், ஆயரமழை, நிர்திதனமங்களம் ஆகிய கிராமங்களில் வாழும் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை--**

***மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

[*1995 நவம்பர் 3*

**61--**

**அருப்புக்கோட்டை ஒன்றிய கிராமங்களில் தொகுப்பு விடுகள் கட்டுதல்**

*வினா எண் 40465*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காமராஜர் மாவட்டம், அருப்புக்கோட்டை ஒன்றியம், கஞ்சநாயக்கன்பட்டி, வேலையாபுரம், காட்டாங்குடி, கொப்புச்சித்தம்பட்டி, கோவிலான் குளம், குல்லூர் சந்தை, குறுந்தமடம், மலைப்பட்டி, பாலவநத்தம், மனையம்பட்டி ஆகிய கிராமங்களில் ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**62--**

**செங்கோட்டை ஒன்றிய ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

*வினா எண் 40883*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா--

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம், நெடுவயல், புளியரை, ஆயக்குடி இலத்தூர், சாம்பவர் வடகரை, செங்கோட்டை ஆகிய இடங்களில் ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**63--**

**ஆலங்குடி தொகுதி கிராமங்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *40902--திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, அனவயல், நெடுவாசல், லெஷ்மிநரசிம்மபுரம், வடகாடு கிராமங்களில் ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

[1995 நவம்பர் 3

64--

### மன்னார்குடி ஒன்றிய கிராமங்களில் ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 40906--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், மன்னார்குடி ஒன்றியம், மேலநெம்மேலி, பைங்காநாடு கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

65--

### முத்துப்பேட்டை ஒன்றியத்தில் தொகுப்பு விடுகள் கட்டுதல்

வினா எண் 40908--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், முத்துப்பேட்டை ஒன்றியம், அரமன்காடு, அரியலூர் கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

***மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**66--**

**தஞ்சை மாவட்டத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

*வினா எண் 40910*--**திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

தஞ்சாவூர் மாவட்டம், வலங்கைமான் ஒன்றியம், ஆலங்குடி, வலங்கைமான், சாரநத்தம் கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

***மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**67--**

**கீழப்பாவூர் ஒன்றிய கிராம ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

*வினா எண் 40923*--**திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

[1995 நவம்பர் 3

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், பாவூத்சத்திரம், வீரசேகரன்புதூர், பங்களாச்சரண்டை கிராமங்களில் ஆதிதிராவிட மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை *அமைச்சர்:***

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**68--**

**பேரளம், நன்னிலம் கிராமங்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *40937*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், நன்னிலம் ஒன்றியம், பேரளம், நன்னிலம் கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை *அமைச்சர்:***

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

LEGISLATURE TAMIL NADU ASSEMBLY சட்டமன்றம் வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**69--**

### திருத்துறைபூண்டி ஒன்றிய ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் *40939*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம்,திருத்துறைபூண்டி ஒன்றியம், தலைக்காடு, ஆலக்கம்பாடி கிராமங்களில் வாழும் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**70--**

### கீரனூரில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்.

வினா எண் *40941*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், நன்னிலம் ஊராட்சி ஒன்றியம், கீரனூர் கிராமத்தில் உள்ள ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**71--**

### மேலவங்காரம்பேட்டை கிராமத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

*வினா எண் 40948*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் ஒன்றியம், மேல வங்காரம்பேட்டை கிராமத்தில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

***மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**72--**

### பட்டகனால் தெருவில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

*வினா எண் 40949*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், திட்டச்சேரி ஒன்றியம், பட்டகனால் தெருவில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**73--**

**ஆடுதுறையில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

*வினா எண் 40950*--**திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*தஞ்சாவூர் மாவட்டம், ஆடுதுறை ஒன்றியம், ஆடுதுறை கிராமத்தில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை--**

**மாண்புமிகு திரு டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**74--**

**கபிஸ்தலத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

*வினா எண் 40951*--**திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் ஒன்றியம், கபிஸ்தலம் கிராமத்தில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**75--**

**மருத்துக்குடி கிராம ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

*வினா எண் 40953*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் ஒன்றியம், மருத்துக்குடி கிராமத்தில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**76--**

**சுந்தர்ராஜபுரம் ஆதிதிராவிடர்களுக்குக் காலனி வீடுகள் கட்டுதல்**

வினா எண் *40955*--**திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், பண்ணவயல் ஊராட்சியைச் சேர்ந்த சுந்தர்ராஜபுரம் ஆதிதிராவிடர்களுக்குக் காலனி வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**77--**

**உடையநாட்டில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *40956*--**திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

பேராவூரணி தொகுதி, உடையநாடு வீடற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச்

செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**78--**

**காட்டாத்தி உஞ்சிய விடுதியில் தொகுப்பு விடுகள் கட்டுதல்**

வினா எண் *40958*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பேராவூரணி தொகுதி, திருவோணம் ஊராட்சி ஒன்றியம், பாதரங்கோட்டை வடக்கு, காட்டாத்தி உஞ்சிய விடுதியில் ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**79--**

**கள்ளிக்காட்டில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *40959*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பட்டுக்கோட்டை ஒன்றியம், துவரங்குறிச்சி ஊராட்சி, கள்ளிக்காடு ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசியம் திட்டம் எதுவுமில்லை.

**80--**

**ஆவணத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *40960*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பேராவூரணி தொகுதி, ஆவணம் கிராமத்தில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**81--**

**ஆனைகுளத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *40963*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

[*1995* நவம்பர் *3*

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கடையநல்லூர் ஒன்றியம் ஆனைகுளம் ஆதிதிராவிட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**82--**

**கலிங்கப்பட்டியில் தொகுப்பு விடுகள் கட்டுதல்**

வினா எண் *40964*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் குருவிக்குளம் ஒன்றியம் கலிங்கப்பட்டி கிராம ஆதிதிராவிடர் மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

*1995 நவம்பர் 3]*

**83--**

**அரவக்குறிச்சி தொகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *41120*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரவக்குறிச்சி தொகுதி, க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், ஆரியூர் ஊராட்சி, பிள்ளாபாளையம், வேலாயுதம் பாளையம், தென்னிலை கிழக்கு ஊராட்சி, கூளம்பட்டி பள்ளம் ஊராட்சி, பொன்னிவாடிப்புத்தூர் புஞ்சைக்காளக்குறிச்சி ஊராட்சி, வாணிக்கரை, கோடந்தூர் ஊராட்சி, முதலிக்கவுண்டன் புத்தூர், நடந்தை ஊராட்சி, பருத்திக் காட்டுப்பாளையம், சின்னதாராபுரம் ஊராட்சி, டி. வெங்கிடாபுரம், நடுப்பாளையம், கூடலூர் கீழ்பாகம், பனையம்பாளையம் ஆகிய கிராமங்களில் வசிக்கும் ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**84--**

**வாண்டையார் இருப்பு தொடக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *43506*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், வாண்டையார் இருப்பு ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டிக்கொடுக்க ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை.--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**85--**

**பொன்னாம்பூர் தொடக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *43507*--திரு. **ஆர். சிங்காரம்**: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், பொன்னாம்பூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டிக்கொடுக்க ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

*1995 நவம்பர் 3]*

86--

**பாப்பா நாடு தொடக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *43508*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், பாப்பாநாடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டிக்கொடுக்க ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

87--

**நாச்சிக்கோட்டை ஒன்றிய தொடக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *43515*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் வட்டம், நாச்சிக்கோட்டை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டிக்கொடுக்க ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

88--

**என்.எம். பாளையம் தொடக்கப்பள்ளிக்குக் கட்டிடம் கட்டுதல்**

*வினா எண் 43601*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருவண்ணாமலை ஒன்றியம், என்.எம். பாளையம் தொடக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை**--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

89--

**அணைக்காடு ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

*வினா எண் 43628*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பட்டுக்கோட்டை ஒன்றியம், அணைக்காடு வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1995 நவம்பர் 3]

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**90--**

**பழச்சூரில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 43629--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பட்டுக்கோட்டை ஒன்றியம், பழச்சூர் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**91--**

**திருவோணம் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 43642--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

[1995 நவம்பர் 3

திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை வடக்கு ஊராட்சி புது நகரில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**92--**

## வள்ளுவர் தெருவில் ஆழ்குழாய்க்கிணறு அமைத்தல்

*வினா எண் 45040*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், திருவாலங்காடு கிராமம் வள்ளுவர் தெருவில் இரண்டு ஆழ்குழாய்க்கிணறுகள் அமைத்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குத்தாலம் தொகுதி, திருவாலங்காடு ஊராட்சி வள்ளுவர் தெருவில் 15 குடியிருப்புகள் மட்டும் உள்ளன. இத்தெருவில் இரண்டு கைப்பம்புகள் நல்லமுறையில் இயங்கி வருகிறது. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்காக ஒரு ஆழ்குழாய்க்கிணறு ஒன்று இறக்கி வைக்கப்பட்டுள்ளது. அதில் ஜெட் மோட்டார் பொருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தப் பணி முழுமை பெற்றதும் கூடுதலான குடிநீர் கிடைக்கும். எனவே இங்கு புதிதாக ஆழ்குழாய்க்கிணறு அமைக்கத் தேவையில்லை.

*1995 நவம்பர் 3]*

**93--**

**கீழவெளி சாலைத் தெருவில் ஆழ்குழாய்க்கிணறு அமைத்தல்**

வினா எண் *45041*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குத்தாலம் கீழவெளி சாலைத் தெருவில் ஆழ்குழாய்க்கிணறு அமைத்து தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குத்தாலம் ஊராட்சி ஒன்றியம், குத்தாலம்-- மாதிரிமங்கலம் ஊராட்சியைச் சேர்ந்த கீழவெளி சாலைத் தெருவில் மொத்தம் 5 வீடுகள் மட்டுமே உள்ளது. இந்தத் தெருவில் கைப்பம்பு ஒன்றும் ஒரு இந்தியா மார்க்-2 பம்பும் இயங்கி வருகிறது. இந்தக் குடிநீர் வசதி போதுமானது. புதிதாக ஆழ்குழாய்க்கிணறு அமைக்க வேண்டிய அவசியமில்லை.

**94--**

**ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு ஆழ்குழாய்க்கிணறு அமைத்தல்**

வினா எண் *45042*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், வேழமுறித்தான் பேட்டையிலுள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளியில் ஆழ்குழாய்க்கிணறு ஒன்று அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குத்தாலம் ஒன்றியம், வழுவூர் ஊராட்சி வேழமுறித்தான் பேட்டையில் உயர்நிலைப்பள்ளி, ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி இரண்டும் ஒரே இடத்தில் அமைந்துள்ளன. உயர்நிலைப் பள்ளி கட்டிடங்கள் பராமரிப்பு மற்றும் குடிநீர் வசதிகள் பொதுப் பணி துறையினரால் செய்யப்பட வேண்டும். இப்பள்ளியில் உள்ள மேல்நிலைத் தொட்டி தூர்ந்து விட்டது. இதனை பழுதுபார்க்க பொதுப்பணித்துறைக்கு எழுதப்பட்டுள்ளது. தற்சமயம் பள்ளிக்கு எதிர்ப்பக்கத்தில் உள்ள இந்தியா மார்க் 2 பம்பு பழுது பார்க்கப்பட்டு நன்றாக இயங்கி வருகிறது. எனவே, புதிய ஆழ்குழாய்க்கிணறு அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

**95--**

### தருமபுரி மாவட்டத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

*வினா எண் 47574--***திருமதி கே. மரியம் உல் ஆசியா:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், ஜெர்த்தலம் ஊராட்சி எண்டப்பட்டியில் ஆதிதிராவிடர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா ?*

**விடை---**

***மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**96--**

### கரகூரில் பிற்பட்டோர்களுக்கு வீடுகள் கட்டுதல்

*வினா எண் 47804--***திருமதி கே. மரியம் உல் ஆசியா:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

1995 நவம்பர் 3]

தருமபுரி மாவட்டம், பேவுஅள்ளி ஊராட்சி-கரகூர் கிராமத்தில் பிற்பட்டோருக்கான இலவச வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

97--

**திருச்சி மாவட்டத்தில் பிற்பட்டோர்களுக்கு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 47805--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம், க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், தொக்குப்பட்டி தொக்குப்பட்டி புதூர், எலவனூர், சின்னபுளியம்பட்டி மற்றும் அகிலாண்டபுரம் ஆகிய கிராமங்களில் பிற்பட்டோருக்கான வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

98--

திருப்பத்தூர் தொகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 48627--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, பள்ளவள்ளி ஊராட்சி, மேட்டுக் காலனி மேலச்சமங்கலம் ஊராட்சி, கிழக்கு காலனி ஆகிய இடங்களில் மக்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

99--

திருச்சி மாவட்டத்தில் பிற்பட்டோர்களுக்கு வீடுகள் கட்டுதல்

வினா எண் 69225--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம் க. பரமத்தி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் பிற்பட்டோர்களுக்கான வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை--

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச்

*1995 நவம்பர் 3]*

செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**100--**

## ஆதிதிராவிடர் குடியிருப்போர் விவரம்

*வினா எண் 26932--***திரு. டி. வேலையா:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

*(அ) திருநெல்வேலி தொகுதியில் அரசுப் புறம்போக்கு நிலங்களில் அமைந்துள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புகளின் விவரம் என்ன?*

*(ஆ) அவைகளில் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்ட விவரம் என்ன?*

*(இ) வழங்கப்படாத பகுதிகளுக்கு விரைவில் வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்படுமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)*

| வரிசை எண். மற்றும் கிராமத்தின் பெயர். (1) | ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள பட்டுள்ள நிலத்தின் பாகுபாடு. (2) | ஆக்கிர மிப்பு செய் துள்ள ஆதி திராவிடர் எண்ணிக்கை. (3) |
|---|---|---|
| 1. மாவடி .. .. .. | மந்தை | 33 |
| 2. களக்குடி .. .. .. | மந்தை | 24 |
| 3. பல்லிக்கோட்டை .. .. .. | பாட்டை | 28 |
| 4. கங்கைகொண்டான் .. .. .. | களம் | 16 |
| 5. சிந்துபூந்துறை .. .. .. | மந்தை | 2 |
| 6. மனப்படைவீடு .. .. .. | களம் | 26 |
| ஆதிதிராவிடர் .. .. .. | 14 | .. |
| பழங்குடியினர் .. .. .. | 12 | .. |
| ஆக மொத்தம் | 26 | 129 |

(ஆ) மற்றும் (இ): மேற்சொன்ன ஆக்கிரமிப்புகளில் சிந்துபூந்துறை கிராமத்தில் உள்ள ஆக்கிரமிப்பு தவிர பாக்கியுள்ள ஆக்கிரமிப்புகளுக்கு ஆக்கிரமிப்பு நிலத்தை நத்தமாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிலவகை மாற்ற நடவடிக்கை முடிந்தவுடன் பட்டாக்கள் வழங்கப்படும். சிந்துபூந்துறை கிராமத்தில் உள்ள ஆக்கிரமிப்பு நிலத்தை நத்தமாக மாற்றி ஒப்படை செய்ய இயலாது என முடிவெடுக்கப்பட்டுள்ளது. மேலும் இதில் உள்ள இரண்டு ஆக்கிரமிப்புதாரர்களுக்கும் வருட வருமானம்-ரூ.9,000-க்கு மேல் உள்ளதால் இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க தகுதியற்றவர்களாக உள்ளனர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

# பதின்மூன்றாம் பட்டியல்

**1--**

**ராஜாஜி மருத்துவமனைக்கு நரம்பியல் நிபுணரை நியமித்தல்**

*வினா எண் 52118--***திருமதி கே. மரியம் உல் ஆசியா:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*மதுரை ராஜாஜி அரசினர் பொது மருத்துவமனையில் நரம்பியல் மருத்துவ நிபுணர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்:**

ஏற்கெனவே போதுமான நரம்பியல் மருத்துவ நிபுணர்கள் பணியாற்றி வருவதால், மேற்கொண்டு நியமனம் செய்யவேண்டிய அவசியம் இல்லை.

**2--**

**மயிலாடுதுறையிலிருந்து தடம் எண் 10-பி யை கூடுதல் இடங்களுக்கு இயக்குதல்**

*வினா எண் 48668--***திரு. எஸ். ஆசைமணி:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*நாகை காயிதே மில்லத் மாவட்டம், மயிலாடுதுறையிலிருந்து பாலையூர், புதூர் வழியாக வடமட்டம் வரை சென்று வரும் தடம் எண் 10-பி சோழன் பேருந்தை கோனேரிராஜபுரம், பொய்கை, ஈச்சங்குடி, நாகம்பாடி வழியாக மயிலாடுதுறை வரை சென்று வர அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

மயிலாடுதுறை-வடமட்டம் (வழி) பாலையூர், புதூர் தடத்தில் நகரத்தடம் எண் 10-பி-யின் மூலம் தினசரி 6 நடைகள் இயக்கப்படுகின்றன. மயிலாடுதுறை-வடமட்டம் (வழி) நாகம்பாடி, பொய்கை, ஈச்சங்குடி தடத்தில் நகரத் தடம் எண் 13 மூலம் தினசரி 4 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த நான்கு நடைகளே அப்பகுதி வாழ் மக்களுக்கு போதுமானதாகும்.

**3--**

**திருப்பத்தூர் தொகுதியிலிருந்து சென்னைக்கு கூடுதல் பேருந்துகள் இயக்குதல்**

வினா எண் 61476--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி ஏலகிரி மலையிலிருந்தும் ஜவ்வாது மலை பூதூர் நாட்டில் இருந்தும் சென்னை வரை பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஏலகிரி மலையிலிருந்தும், ஜவ்வாது மலை புதூர் நாட்டிலிருந்தும் சென்னைக்கு நேரடியாகப் பேருந்து இயக்க சாத்தியக் கூறு இல்லை. ஆனால் அருகாமையில் உள்ள திருப்பத்தூர் வந்தால் சென்னை செல்ல நிறையப் பேருந்துகள் உள்ளன.

**4--**

**ஜலக்காம்பாறை நீர்விழ்ச்சி-சென்னை பேருந்து இயக்குதல்**

வினா எண் 61479--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

*(அ) வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஜலக்காம்பாறை நீர் வீழ்ச்சியிலிருந்து திருப்பத்தூர் வழியாக சென்னைக்கு பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக பேருந்துகளை விட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை--**

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:***

*(அ) மற்றும் (ஆ):* ஜலக்காம்பாறையிலிருந்து திருப்பத்தூருக்கு அதிக நேரடி போக்குவரத்து உள்ளது. திருப்பத்தூர் வந்தால் சென்னை செல்ல நிறைய பேருந்துகள் உள்ளன. எனவே, மேற்படி ஜலக்காம்பாறை நீர்வீழ்ச்சியிலிருந்து சென்னைக்கு பேருந்து இயக்க சாத்தியக் கூறு இல்லை.

**5--**

**அரசுப் பேருந்துகளில் தனியார் விளம்பரம் செய்ய அனுமதி**

வினா எண் *61496*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ) அரசுப் பேருந்துகளில் தனியார் நிறுவனங்கள் கட்டணம் செலுத்தி விளம்பரம் செய்ய அனுமதி வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை--**

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:***

*(அ) மற்றும் (ஆ):* 1994 ஆம் ஆண்டு திறந்த வெளி இடங்கள் (அழகு கெடுக்கப்படுவதை தடுத்தல்) திருத்தச் சட்டத்தில் பொது மக்கள் பார்வையில் படக்கூடிய இடங்களிலும் இயக்கூர்திகளின் மீதும் சுவரொட்டிகளை ஒட்டுவதைத் தடுப்பதற்கான சட்டம்

இயற்றப்பட்டுள்ளதால், அரசுப் பேருந்துகளில் எந்த ஒரு நபரும் போக்குவரத்துக் கழகத் தலைவர் அவர்களின் அனுமதியின்றி விளம்பரங்கள் செய்ய இயலாது.

**6--**

### கீழ்த்தோட்டம் தொடக்கப்பள்ளிக்கு ஆசிரியர் நியமனம்

வினா எண் *43570*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பட்டுக்கோட்டை ஒன்றியம், கீழ்த்தோட்டம், தொடக்கப் பள்ளியில் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கீழ்த்தோட்டம், தொடக்கப் பள்ளியில் ஆசிரியர்கள் பற்றாக் குறை ஏதுமில்லை. ஏனெனில் இப்பள்ளியில் உள்ள மாணவர்களின் சராசரி வருகை 60. அனுமதிக்கப்பட்ட மொத்த இடங்கள் 2. 2 ஆசிரியர்களும் தற்போது பணியாற்றி வருகிறார்கள். எனவே இப்பள்ளிக்கு மேலும் பணியிடங்கள் தேவை இல்லை.

**7--**

### பட்டுக்கோட்டை ஒன்றியத்தில் ஆசிரியர்கள் நியமனம்

வினா எண் *43577*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், மழவேனிற்காடு தொடக்கப் பள்ளியில் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

*1995 நவம்பர் 3*]

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், மழவேனிற்காடு ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு ஆசிரியர் பற்றாக் குறை ஏதுமில்லை. இப்பள்ளியில் மாணவர்களின் சராசரி வருகை 59 ஆகும். இப்பள்ளிக்கு அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் இரண்டு. தற்சமயம் ஒரு ஆசிரியர் பணியாற்றி வருகிறார். மற்றொரு ஆசிரியர் பணியிடத்தை ஆசிரியர் வாரியத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்களிலிருந்து நிறைவு செய்யப்படும்.

**8--**

**காஞ்சிபுரம் வேலை வாய்ப்பு அலுவலகத்தைப் பிரித்தல்**

*வினா எண் 38156*--**திரு. காஞ்சி பன்னீர்செல்வம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காஞ்சிபுரத்திலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகத்தை, பொதுவான வேலை வாய்ப்பு அலுவலகம், தொழில் நுட்ப வேலை வாய்ப்பு அலுவலகம் என இரண்டு வேலை வாய்ப்பு அலுவலகங்களாக பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. ஏ.எம் பரமசிவன், தொழிலாளர் நல அமைச்சர்:**

செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**9--**

**ஜமீன் காளியாபுரத்திலிருந்து பெரும்பதி வரை தார்ச்சாலை அமைத்தல்**

*வினா எண் 11131*--**திரு. நா.சா. பழனிசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம், ஜமீன் காளியாபுரத்தில் இருந்து பெரும்பதி வரை உள்ள சாலையை தார்ச் சாலையாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பொள்ளாச்சி வடக்கு ஊராட்சி ஒன்றியம், ஜமீன் காளியாபுரம்-பெரும்பதி சாலையை, தார்ச் சாலையாக அமைக்கும் பணிக்கு கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, கோட்டப் பொறியாளரின் ஒப்புதலுக்கு பின் துவங்கப்பட உள்ளது.

**10--**

**பொள்ளாச்சி திருப்பூர் சாலையை தார்ச் சாலையாக மாற்றுதல்**

வினா எண் *11134*--**திரு. நா.சா. பழனிசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*பொள்ளாச்சி-திருப்பூர் சாலையிலிருந்து கள்ளிப்பட்டி, களக்கம்பட்டி, கருமாபுரம் வழியாக கொண்டே கவுண்டன்பாளையம் வரை செல்லும் பாதையை தார்ச் சாலையாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இச்சாலையை தார்ச் சாலையாக மாற்ற சிறப்பு தன்னிறைவு திட்டத்தில் வரும் நிதியாண்டில் வேலையை மேற்கொள்ளலாம்.

**11--**

**வீரியங்கோட்டை பெரிய ஏரியைச் செப்பனிடுதல்**

வினா எண் *12059*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வீரியங்கோட்டை பெரிய ஏரியை தூர் வாரி செப்பனிட்டு அதன் கரைகளை கட்டிக் கொடுக்க 1992-93 ஆம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3*]

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேதுபாவாசத்திரம், வீரியங்கோட்டை ஏரியின் பரப்பு 0.50 ஏக்கர் ஆகும். இக்குளத்தை ஆழப்படுத்துவதற்கு சுமார் ரூ.25,000 செலவாகும். ஆனால் அவ்வூராட்சியின் ஆண்டு வருமானம் ரூ.22,500 ஆகும். எனவே, நிதி பற்றாக்குறைவால் தூர் எடுக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**12--**

### பரமக்குடி வட்டத்தில் சாலைகள் அமைத்தல்

வினா எண் 14758--**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுக்காவில் வறட்சித் திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள சாலைகள் எத்தனை?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பரமக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் 3 சாலைகளும், போகலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 3 சாலைகளும், நயினார் கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் 2 சாலைகளும் ஆக மொத்தம 8 சாலைகள் வறட்சித் திட்டத்தின் மூலம் பரமக்குடி தாலுக்காவில் அமைக்கப்பட்டுள்ளன.

**13--**

### சின்னசேலம் தொகுதியில் சாலையை மேம்பாடு செய்யும் திட்டம்

வினா எண் 23743--**திரு. ஆர்.பி. பரமசிவம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சின்ன சேலம் தொகுதியில் உள்ள மேல் நாரியப்பதூர்-புத்தூர் சாலையை மேம்பாடு செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டில் தொடங்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சட்டமன்ற வினாவில் குறிப்பிட்ட சாலையை மேம்பாடு செய்ய தற்சமயம் எந்த திட்டத்திலும் செயற்குறிப்பு இல்லை.

**14--**

**பர்கூர் ஊராட்சியில் பாலம் அமைத்தல்**

வினா எண் 24268--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா---

பெரியார் மாவட்டம், பர்கூர் ஊராட்சி, துரிசனாம்பாளையம் ஊருக்குச் செல்ல ஓடையின் குறுக்கே சிறிய பாலம் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பர்கூர் ஊராட்சி, துரிசனாம்பாளையத்தில் 60 வீடுகள் உள்ளன. மக்கள் தொகை சுமார் 150. மலைவாழ் மக்கள் வாழும் பகுதியான துரிசனாம்பாளையம் செல்லும் பாதையில் ஓடைக்கு பைப் பாலம் அமைக்க ரூ.3.00 இலட்சம் செலவாகும். இச் செலவினை ஏற்க ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் நிதி வசதி இல்லாததால் தற்சமயம் பாலம் அமைக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

**15--**

**சேத்தூர் கிராமத்திற்கு சுடுகாடு வசதி செய்தல்**

வினா எண் 25181--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், 60 சேத்தூர் கிராமத்திலுள்ள சுடுகாடுகளுக்கு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சாலை வசதியும், நிரந்தர தகரக் கொட்டகையும் ஏற்படுத்தித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

*1995 நவம்பர் 3*]

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தரங்கம்பாடி வட்டம், சேத்தூர் கிராமத்தில் சுடுகாட்டில் தகரக் கொட்டகை ரூ.*15,000/*-மதிப்பீட்டில் *1995-96* ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் ஊராட்சிப் பங்கு தொகைப் பணியில் எடுத்துச் செய்யவும், அந்த சுடுகாட்டிற்குச் செல்லும் பாதையை ரூ.*40,000/*-மதிப்பீட்டில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் செய்யவும் பரிசீலிக்கப்படுகிறது.

**16--**

**சூளகிரி ஒன்றியத்தில் சாலை வசதி அளித்தல்**

வினா எண் *26212*--திரு. **கே.ஏ. மனோகரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சூளகிரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அங்கொணப்பள்ளி மற்றும் சில கிராமங்களில் சாலை வசதி செய்து தர அரசு முன் வருமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சூளகிரி ஊராட்சி ஒன்றியம், அங்கொணப்பள்ளி மற்றும் கிராமங்களுக்கு செல்லும் சாலையின் நீளம் *4* கி.மீ. ஆகும். இதில் பாலம் கட்டி, சாலை உயர்த்தி, சாலை அமைக்க மொத்தம் ரூ. *7.40* இலட்சம் செலவாகும். மேற்படி சாலையை *1994-95* ஆம் ஆண்டு வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் எடுத்துச் செய்யப்படும்.

**17--**

**கீழத் தெருவில் ஆதிதிராவிடர் குடியிருப்புகள் கட்டுதல்**

வினா எண் *37167*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

[*1995 நவம்பர் 3*

நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம், பெரம்பூர் கீழத் தெருவில் ஆதிதிராவிடர் குடியிருப்புகளை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

***மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**18--**

**தரங்கம்பாடி வட்டத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *37168*--திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

குத்தாலம் தொகுதி, தரங்கம்பாடி வட்டம், கொடவிளாகம் ஊராட்சி, கோவாஞ்சேரி மேலத் தெருவில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

***மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**19--**

## குத்தாலம் தொகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

*வினா எண் 37169*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், நெடுஞ்சேரி ஊராட்சி, பத்தாளை கிராமம் ஆதிதிராவிடர்களுக்கு ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டத்தில் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**20--**

## கோமல் ஊராட்சியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

*வினா எண் 37172*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், கோமல் ஊராட்சி, கோமல் பெரியார் நகர், ஈச்சங்குடி, சிட்டிருப்பு, வடகாஞ்சிவாய், பாலையூர் ஊராட்சி, கடமங்குடி ஆகிய கிராமங்களில் வசிக்கும் ஆதிதிராவிடர் மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**21--**

**குடவாசல் ஒன்றியத்தில் தார்ச்சாலை அமைத்தல்**

*வினா எண் 37202--***திரு. எஸ். ஆசைமணி:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், விக்கிரபாண்டியம் ஊராட்சி, வல்லம் முதல் திருவிடச்சேரி வரையிலான சாலையை ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் தார்ச்சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**22--**

**குத்தாலம் ஒன்றியத்தில் கப்பிச்சாலை அமைத்தல்**

*வினா எண் 37911*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

குத்தாலம் தொகுதி, குத்தாலம் ஒன்றியம், திருவாவடுதுறை ஊராட்சியில் கீழத்தெருச்சாலையை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் செம்மணகப்பிப் போட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவாவடுதுறை ஊராட்சியில், கீழத்தெரு சாலை தற்போது மண்சாலையாக உள்ளது. *1995-96*ல் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்ட நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப செம்மண் கப்பிச்சாலையைப் போட்டுத்தருவது பரிசீலிக்கப்படும்.

**23--**

**குடவாசல் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

*வினா எண் 37915*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், சற்குணேஸ்வரபுரம், மாதா கோயில் தெரு மற்றும் பனந்தோப்பு தெருவில் வசிக்கும் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும்

அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**24--**

### காமராஜர் மாவட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டுதல்

வினா எண் *39102*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காமராஜர் மாவட்டம், சொசுகுண்டு, சத்திரப்பட்டி, மேட்டமலை, என். மேட்டுப்பட்டி, வள்ளி, அம்மாப்பட்டி, இருக்கன்குடி, கொல்லப்பட்டி, பத்துவார்பட்டி, கரிசல்பட்டி ஆகிய ஊர்களில் உள்ள ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**25--**

### காமராஜர் மாவட்டத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் *39117*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காமராஜர் மாவட்டம், முள்ளிச்சேவல், குண்டலகுத்தூர், ஓ. மேட்டுப்பட்டி, சின்னக்காமன்பட்டி, சின்னசொல்லப்பட்டி ஆகிய ஊர்களில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**26--**

**தென்காசி ஒன்றியத்தில் ஆதிதிராவிடர்களுக்கு விடுகள் கட்டுதல்**

வினா எண் *39122*--திரு. **ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி ஒன்றியம், மின்னடிசேரி, கீழப்புலியூர், சிந்தாமணி, மேலப்புலியூர், புதுப்புச்சேரி ஆகிய ஊர்களில் உள்ள ஆதிதிராவிடர் மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1995 நவம்பர் 3

**27--**

**திண்டுக்கல் தொகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 39127--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திண்டுக்கல் தொகுதி, கணவான்பட்டி கூவதூத்து, வீரசின்னப்பட்டி, ராகலாப்புரம், ராஜக்காப்பட்டி, மரூர் ஆகிய ஊர்களில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**28--**

**தென்காசி ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 39133--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், தென்காசி ஒன்றியம், கொட்டாகுளம், உடைய செல்வன் பட்டி, மத்தளம் பாறை, வாவாநகரம், விஸ்வநாதப்பேரி, மீனாட்சிபுரம், சுந்தரப்பாண்டியபுரம், இலஞ்சி, டி.என். புதுக்குடி ஆகிய கிராமங்களில் ஆதிதிராவிட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**29--**

### ஆலங்குடி தொகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் *39143*--திரு. **ஆர். சிங்காரம்**: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஆலங்குடி தொகுதி, செரியலூர், கீரமங்கலம் வடக்கு, கொத்தமங்கலம் கிழக்கு, மரிமடக்கி, ஆலங் ளம், குளமங்கலம் வடக்கு, குளமங்கலம் தெற்கு, சேத்தங்குடி, கீரமங்கலம் மேற்பகுதி, வெட் டன் விடுதி ஆகிய ஊர்களில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு தொகுபபு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**30--**

**திருத்தணி தொகுதியில் ஆதிதிராவிடர்களுக்கு விடுகள் கட்டுதல்**

வினா எண் 39187--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், திருத்தணி தொகுதி, லக்ஷ்மபுரம், நம்பாக்கம், பெருமந்தூர், நல்லாட்டூர், வெளிலிங்காடு ஆகிய ஊர்களில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**31--**

**பொன்னேரி தொகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 39192--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், பொன்னேரி தொகுதி, நாரவாரிக்குப்பம், புழல், ஆண்டார்குப்பம், செங்கண்ணீர்மேடு காட்டூர், திருனவாயில், ஞாயிறு, மாரப்பேடு, அருமந்தை, திருநிலை ஆகிய ஊர்களில் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1995 நவம்பர் 3]

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

32--

**கும்மிடிபூண்டி தொகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 39211--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், கும்மிடிபூண்டி தொகுதி, புன்னைப்பாக்கம், ஆரிக்கம்பட்டு, தாலரம்பாக்கம், அத்திப்பட்டு, கோடுவள்ளி ஆகிய கிராமங்களில் உள்ள வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

33--

## பொன்னேரி தொகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் *39230*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், பொன்னேரி தொகுதி, முல்லைவாயில், வள்ளூர், சுண்ணாம்புக்குளம் ஆகிய கிராமங்களில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை**---

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

34--

## திருச்சுளி ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் *39482*---**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காமராசர் மாவட்டம், திருச்சுளி ஒன்றியம், காளையர் கரிசல்குளம், இராணிசேதுபுரம், சறுக்குவார்பட்டி, சென்னிலைக்குடி, மறவர்பெருங்குடி, முத்துராமலிங்கபுரம், மதிலைக்குளம், மேலையூர், பள்ளிமடம், பண்ணை மூன்றடைப்பு ஆகிய கிராமங்களில் வாழும் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*1995* நவம்பர் *3*]

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**35--**

**காரியாபட்டி ஒன்றியத்தில் ஆதிதிராவிடர்களுக்கு விடுகள் கட்டுதல்**

*வினா எண் 39502--திரு.* **ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*காமராஜர் மாவட்டம், காரியாபட்டி ஒன்றியம, ஆவியூர், அரசகுளம், அல்லாலப்பேரி, அழகியநல்லூர், பாம்பாட்டி, நத்திகுண்டு, முஷ்டக்குறிச்சி, முடுக்கன்குளம், மாங்குளம், வி. தெங்கூர் ஆகிய கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

36--

## காரியாபட்டி ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் *39532*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காமராஜர் மாவட்டம், காரியாப்பட்டி ஒன்றியம், டி. வேப்பங்குளம், வலுக்கவோட்டி, வரலோட்டி, மேலக் கல்லாங்குளம், எஸ். மரக்குளம், மாந்தோப்பு, மல்லாங்கிணறு, குரண்டி ஆகிய கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

37--

## இராசபாளையத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் *39540*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காமராஜர் மாவட்டம், இராசபாளையம், கொடுக்காம்பட்டி, கிளவிகுளம், கணபதிசுந்தர நாச்சியார்புரம், எளந்திரை கொண்டான், தளவாய்புரம், சொக்கநாதன்புத்தூர், இராமலிங்கபுரம், சம்சியாபுரம், அருள்புத்தூர் ஆகிய ஊர்களில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**38--**

**அண்ணாமடுவு காலனிக்கு விளக்குப் போடுதல்**

வினா எண் 39763--திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பெரியார் மாவட்டம், அந்தியூர் ஒன்றியம், அண்ணாமடுவு ஆதிதிராவிடர் காலனிக்கு தெரு விளக்கு போட அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அண்ணாமடுவு ஆதிதிராவிடர் காலனியில் ஏற்கெனவே நான்கு தெருவிளக்குகள் உள்ளன. இரண்டு புதிய விளக்குகள் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் அண்ணாமடுவு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. புதிய விளக்குகள் அமைக்க மின்சார துறையினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**39--**

**மருதூர் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 39850--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், திருமங்கலக்கோட்டை, மாத்தூர், திருச்சேறை, இஞ்சிக்கொல்லை, திருப்பூந்துறை, கோவிந்தபுரம் ஆகிய கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**40--**

**பூதலூர் ஒன்றியத்தில் தொகுப்பு விடுகள் கட்டுதல்**

வினா எண் *39877*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஒன்றியம், மனையேறிப்பட்டி, புதுக்குடி, விஷ்ணம்பேட்டை, விட்டபுரம், மைக்கேல்பட்டி சாத்தூர், பழமார்னேரி, ஏனெகிரி, ரெங்கநாதபுரம், பாதிரகுடியில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்துசெயல்படுத்தும்

*1995 நவம்பர் 3]*

அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**41--**

**பூதலூர் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *39898*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஒன்றியம், வீரமரசன் பேட்டை, முத்துவீரகண்டியன்பட்டி, கடம்பக்குடி, ஆவாரம்பட்டி, நந்தவனப்பட்டி, புதுப்பட்டி, சானுரப்பட்டி, செங்கிப்பட்டி, ஆச்சாம்பட்டி, பாளையப்பட்டி தெற்கு ஆகிய ஊர்களில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**42--**

**பட்டுக்கோட்டை தொகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *39908*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பட்டுக்கோட்டை தொகுதி, நாட்டுச்சாலை, காசங்காடு, துவறங்குறிச்சி, கன்னியாகுறிச்சி, காடாந்தகுடி, விக்கிமம், வாட்டாகுடி, கல்யாண ஓடை, பழஞ்சூர், அணைக்காடு ஆகிய ஊர்களில் உள்ள

ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**43--**

**பட்டுக்கோட்டைத் தொகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 39927--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பட்டுக்கோட்டை தொகுதி, பொன்னவராயன்கோட்டை, ஏனாதி, பாலமுத்து, வேப்பங்காடு, தம்பிவயல், பாழம்பயம், சஞ்சாயக்கொள்ளை, கீராக்குறிச்சி, சிரவேல்குடி ஆகிய ஊர்களில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

44--

### ஒடுக்கூரில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 39960--**திரு. சி. குழந்தைவேலு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

குளத்தூர் தொகுதி, குன்னன்டார்கோவில் ஒன்றியம், மீஞ்சூர் மற்றும் ஒடுக்கூரில் ஆதிதிராவிட தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை**---

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

45--

### பூதலூர் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 40143--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஒன்றியம, அய்யானபுரம், திருச்சென்டைபூண்டி, திருக்காட்டுப்பள்ளி, ஆவனப்பட்டி, முத்தாண்டிப்பட்டி, நாயமுன்மான்பட்டி, செங்கிப்பட்டி, பொய்யமாமங்கலம் ஆகிய கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை**---

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**46--**

**கும்பகோணம் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 40165--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஒன்றியம், சுந்தரப்பெருமாள் கோவில், அகராத்தூர், கொத்தங்குடி, சாக்கோட்டை திருப்புரம்பியம், மரணம்பாடி, கிடிச்சம்பாடி, குச்சம்பாடி, தேனாம்படுகை, நாகக்குடி, பாபுராஜபுரம் ஆகிய கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**47--**

**வேதாரண்யம் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 40187--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், வேதாரண்யம் ஒன்றியம், பஞ்சநதிக்குளம் மேற்கு, வடமனைக்காடு, நானிக்குடையான், கத்தரிக்குளம், தாணிக்கோட்டம், செம்போடை, மூலக்கரை, நெய்விளக்கு, தென்னொடா, புஷ்பவனம், பஞ்சநதிக்குளம், ஆகிய கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**48--**

**மன்னார்குடி வட்டத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 40198--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா, பைங்காட்டூர், கெருவத்கார், குறிச்சி, ராஜகோபாலபுரம், தட்டன்கோவில், திருமக்கோட்டை, மகாராஜபுரம், களப்பால், ஆவிக்கோட்டை கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து

செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**49--**

## திருமருகல் ஒன்றிய கிராமங்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்

*வினா எண் 40330--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், திருமருகல் ஒன்றியம், திருப்புகலூர் ஏனங்குடி, ஏர்வாடி, கீழ்ப்பூதலூர், அகர கொந்தகை, அம்பல், பண்டாரவரை, போலகம், திருச்செங்காட்டங்குடி, கரையூர் ஆகிய கிராமங்களில் வாழும் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

**50--**

## செம்பனார் கோவில் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

*வினா எண் 40340--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், செம்பனார் கோவில் ஒன்றியம், மருதம்பள்ளம், காளியப்பநல்லூர், நடுக்கரை, கொண்டத்தூர், கானக அன்தினாபுரம், செம்பனார் கோவில், கருவாழக்கரை, சேமங்கலம்,*

*1995 நவம்பர் 3]*

ஆகிய கிராமங்களில் வாழும் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**51--**

**செம்பனார் கோவில் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 40348--திரு. **ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், செம்பனார் கோவில் ஒன்றியம், திருக்கடையூர், மேலையூர், காட்டுச் சேரி, நல்லாடை, மேமாத்தூர், ஆறுபாதியாகசாலை, இறவாஞ்சேரி, கீழ்மாத்தூர் ஆகிய கிராமங்களில் வாழும் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

52--

## திருப்பனந்தாள் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் *40357*--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஒன்றியம், அணைக்கரை, கூட்டாநகரம், காகத்தனூர், மணலூர், கதிராமங்கலம், மரத்துறை, உத்கரை, முகாட்டூர் ஆகிய கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை**--

***மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

53--

## தஞ்சாவூர் வட்டத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் *40365*--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், கொட்டாவிட்டம் திடல், வடகால், மருங்குளம், வண்ணாரப்பேட்டை, வாளாமாக்கோட்டை ஆகிய ஊராட்சிகளில் வாழும் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை**--

***மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

54--

**தஞ்சாவூர் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 40370--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா---

தஞ்சாவூர் ஒன்றியம், கருங்குளம் கீழ்பாதி, புதுப்பட்டினம், நாஞ்சிக்கோட்டை, இரைத்துக்கான்பட்டி, ஆலக்குடி, பெல்லாம்புதூர், நாகத்தி, மாத்தூர் கிழக்கு, தோடக்காடு ஆகிய கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை---**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

55--

**கொள்ளிடம் ஒன்றியத்திற்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 40406--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம், காயிதே மில்லத் மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியம், ஊதியக்காரன் தோப்பு, நல்லூர், கொள்ளிடம், பெரம்பூர் ஆகிய கிராமங்களில் வாழும் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

56--

## நரிக்குடி ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 40420--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காமராஜர் மாவட்டம், நரிக்குடி ஒன்றியம், ஆலந்தூர் கட்டலூர், வி. கரிசல்குளம், கல்லுமடை, பூலாங்குளம், இனலி சிறுவானூர், திம்மாபுரம், உழிதிமடை, உலக்குடி, அழகாபுரி ஆகிய கிராமங்களில் வாழும் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

*1995 நவம்பர் 3]*

57--

### நரிக்குடி ஒன்றியத்திற்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் *40440*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காமராஜர் மாவட்டம், நரிக்குடி ஒன்றியம், கோட்டக்கச்சியவேந்தன், வரையூர், மினாக்குளம், நாலூர், வேலனேரி, டி. வேலங்குடி, வீரசோரம், ஆனைக்குளம், இலுப்பையூர் கிராமங்களில் வாழும் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

**விடை**---

***மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

58--

### நரிக்குடி ஒன்றியத்திற்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் *40460*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காமராஜர் மாவட்டம், நரிக்குடி ஒன்றியம், அகத்தாகுளம், ஏ.முக்குளம் சாலை, இலுப்பைக்குளம், ரகுநாதமடை, ஆண்டிகொண்டான் ஆகிய கிராமங்களில் வாழும் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை**---

***மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சி துறை அமைச்சர்:***

ஜவஹர் வேலைவாய்பபுத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேணடிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**59--**

**அருப்புக்கோட்டை ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *40475*--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா---

காமராஜர் மாவட்டம், அருப்புக்கோட்டை ஒன்றியம், வதுவார்பட்டி, தும்பக்குண்டு, சூலக்கரை, செம்மட்டி, புலியூரான், பெரியவள்ளிக்குளம், வல்லிபத்திரி, கோபாலபுரம், சுக்கில நத்தம், திருவிருந்தான்புரம் ஆகிய கிராமங்களில் வீடற்ற ஆதி திராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை *அமைச்சர்:***

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

TRUTH ALONE TRIUMPHS

**60--**

**அருப்புக்கோட்டை ஒன்றிய கிராமங்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *40485*--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காமராஜர் மாவட்டம், அருப்புக்கோட்டை ஒன்றியம், கோபாலபுரம், கஞ்சநாயக்கன்பட்டி, சரமனக்குந்தம், பந்தல்குடி, இராமனுஜபுரம்,

*1995 நவம்பர் 3]*

ஆத்திப்பட்டி, செட்டிகுறிச்சி, சிதம்பராபுரம், வேலாயுதபுரம் ஆகிய கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். .செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**61--**

**அருப்புக்கோட்டை ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

*வினா எண் 40494--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

காமராஜர் மாவட்டம், அருப்புக்கோட்டை ஒன்றியம், மலைப்பட்டி, பாலவநத்தம், பாளையப்பட்டி, கோவிலான்குளம், கொப்புச்சித்தம்பட்டி, காட்டாங்குடி, அத்திப்பட்டி, சிதம்பராபுரம் ஆகிய கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேணடிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

62--

**ஜோலார்பேட்டை ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *40554*--திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருப்பத்தூர் தொகுதியிலுள்ள ஜோலார்பேட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த பெரிய மோட்டூர் கிராமத்திலுள்ள அரிசன மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டப்படுமா?

**விடை--**

***மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் ளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுததுச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

63--

**பேராவூரணி தொகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *40763*--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ஆலடிக்காடு, செங்கமலம், கொள்ளுக்காடு, இரண்டாம் புளிக்காடு, சொர்ணக்காடு, கழனிவாசல், ரெட்டவயல், பூவாணம் ஆண்டிக்காடு ஆகிய கிராமங்களில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

***மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும்

*1995 நவம்பர் 3]*

அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**64--**

**குருவிக்கரம்பை ஊராட்சியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *40779*--திரு. ஆர். *சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குருவிக்கரம்பை ஊராட்சி, கஞ்சங்காடு, வீரியன்கோட்டை, கைவனவயல், ஊமத்தநாடு, பள்ளத்தூர், சோலைக்காடு, முனுமாக்காடு, சின்னமனை, துறையூர் ஆகிய கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**65--**

**பேராவூரணி ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *40787*--திரு. ஆர். *சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி தொடிமரம், இடையாத்தி தெற்குத் தெரு, நெய்விடுதி, தென்னங்குடி, களத்தூர் செருவாவிடுதி மேற்கு, செருவாவிடுதி வடக்கு, கல்லூரணிக்காடு, வின்னவாசல், குறிச்சி, மணவல், நவனாக்கரம்பை, கொல்லைக்காடு, வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெவளியிடப்பட்டுள்ள விதிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**66--**

**நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 40844--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்--காயிதே மில்லத் மாவட்டம், தலைஞாயிறு வட்டாரம், வடுகர் ஒன்றியம், டாங்கல், துளகாபுரம், மனக்குடி, கொளப்பாடு, அச்சநகரம் ஒன்றியங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேவலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**67--**

**வாசுதேவநல்லூர் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 40853--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், வாசுதேவநல்லூர் ஒன்றியம், முள்ளிக்குளம், தென்மலை, ராமநாதபுரம், சிவகிரி, ராயகிரி, ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை**--

***மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**68**--

**குத்தாலம் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *40897*--திரு. ஆர். *சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்--காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், கடலங்குடி, அனந்தநல்லூர், பேராவூர் கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை**--

***மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும்

அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

69--

**அம்மாபேட்டை ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *40915*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், அம்மாபேட்டை ஒன்றியம், பூண்டி, புத்தூர் கிராமங்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

70--

கொரடாச்சேரி ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் *40917*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், கொரடாச்சேரி ஒன்றியம், செல்லூர், கொராடாச்சேரி, பெருமாநகரம் கிராமங்களில்

*1995 நவம்பர் 3]*

வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**71--**

**திருவோணம் ஒன்றியத்தில் காலனி வீடுகள் கட்டுதல்**

வினா எண 40945--திரு. **ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை தெற்கு, வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்துவதற்கு அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் எதுவுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1995 நவம்பர் 3

**72--**

## இராசேந்திரம் ஊராட்சியில் தொகுப்பு விடுகள் கட்டுதல்

வினா எண் 40954--**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், இராசேந்திரம் ஊராட்சியிலுள்ள வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**73--**

## பேராவூரணியில் தாட்கோ விடு கட்டுதல்

வினா எண் 40957--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பேராவூரணி நகரம், பொன்னாங்கண்ணிக்காடு ஆதி திராவிடர்களுக்கு தாட்கோ வீடு கட்டியது போக மீதமுள்ள இடத்தில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தாட்கோ வீடு கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

1995 நவம்பர் 3]

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**74--**

**சங்கரன்கோவில் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *40962*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், சங்கரன் கோவில் ஒன்றியம், புளியம்பட்டி ஆதிதிராவிட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தினகீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**75--**

**அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தில் இல்வச தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *41105*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், எருமார்பட்டி ஊராட்சி, பெத்தாச்சிநகர், தெத்துப்பட்டி ஊராட்சி, தெத்துப்பட்டி, வெஞ்சமான்கூடலூர் (கிழக்கு) ஊராட்சி, நாச்சிப்பாளையம் புதூர்,

ஆழமரத்துப்பட்டி ஊராட்சி, ஆண்டிப்பட்டி வெஞ்சமான் கூடலூர் (மேற்கு) ஊராட்சி, சின்னக்கரியாம்பட்டி, நாகம்பள்ளி ஊராட்சி, பெத்தாங்கோட்டை ஆகிய இடங்களில் வாழும் ஆதிதிராவிடர் மக்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**76--**

**தஞ்சாவூர் வட்டத்தில் தொடக்கப்பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *41407*--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் வட்டம், துறையூர் மற்றும் சதுரக்கோட்டை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிகளுக்கு கூடுதல் கட்டிடம் கட்டிக் கொடுக்க ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும்

*1995 நவம்பர் 3]*

அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**77--**

**மன்னார்குடி வட்டத்தில் கூடுதல் பள்ளிக்கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *41434*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மன்னார்குடி ஒன்றியம், ஏலக்கலாம்பேட்டை, பைங்கா நாடு, துளசேந்திரபுரம், கண்டிகன்பேட்டை, கூப்பாச்சிக் கோட்டை ஊராட்சி தொடக்கப் பள்ளிகளுக்கு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செலவகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**78--**

**மன்னார்குடி ஒன்றியத்தில் கூடுதல் பள்ளிக்கட்டிடம் கட்டுதல்**

வினா எண் *41438*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மன்னார்குடி ஒன்றியம், கூப்பாச்சிக்கோட்டை, காரக் கோட்டை, காஞ்சிக்குடிக்காடு அரசு தொடக்கப்பள்ளிகளுக்கு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேணடிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**79--**

**வேப்பங்காட்டில் தொகுப்பு வீடு கட்டுதல்**

வினா எண் 43488--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பட்டுக்கோட்டை ஒன்றியம், வேப்பங்காடு ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர 1994-95-ஆம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் :**

ஜவஹர் வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை

*1995 நவம்பர் 3]*

**80--**

## நடுவிக்கோட்டையில் தொகுப்பு வீடு கட்டுதல்

*வினா எண் 43489--***திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

பட்டுக்கோட்டை ஒன்றியம், நடுவிக்கோட்டை எஞ்சிய ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

***மாண்புமிகு திரு. டி. எம். செல்வணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனிய ௬ அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**81--**

## ஈச்சங்கோட்டை தொடக்கப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்

*வினா எண் 43505--***திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமி ௫ உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், ஈச்சங்கோட்டை தொடக்கப்பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டிடம் கட்டிக் கொடுக்க ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

***மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து அரசிடம் தனியாக திட்டம் எதுவுமில்லை.

**82--**

**மேலஉளூர் தொடக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

*வினா எண் 43509--***திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், மேலஉளூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டிக் கொடுக்க ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை--**

***மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:***

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**83--**

**மகிழங்கோட்டை தொடக்கப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

*வினா எண் 43571--***திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*பட்டுக்கோட்டை ஒன்றியம், மகிழங்கோட்டை தொடக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேணடிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**84--**

**மானியக்காட்டில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 43632--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பட்டுக்கோட்டை ஒன்றியம், மானியக்காடு வீடற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடு கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமிலலை.

**85--**

**பழைய முதல்சேரியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 43633--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பட்டுக்கோட்டை ஒன்றியம், மழைய முதல்சேரி வீடற்ற அரிஜன நல மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சி துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**86--**

**பொன்னிவராயங்கோட்டையில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 43634--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பட்டுக்கோட்டை ஒன்றியம், பொன்னிவராயங்கோட்டை வீடற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

1995 நவம்பர் 3]

**87--**

## ரானாபதியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 43635--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பட்டுக்கோட்டை ஒன்றியம், ரத்னாபதி வீடற்ற ஆதி திராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமிலலை.

**88--**

## பள்ளிகொண்டானில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 43637--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பட்டுக்கோட்டை ஒன்றியம், பள்ளிக்கொண்டான் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

89--

## இராஜாமடத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 43638--**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பட்டுக்கோட்டை ஒன்றியம், இராஜாமடத்திற்கு கிழக்கே உள்ள வீடற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

90--

## மழவேனிற்காட்டில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 43639--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பட்டுக்கோட்டை ஒன்றியம், மழவேனிற்காடு வீடற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

*1995 நவம்பர் 3]*

**91--**

**புதுக்கோட்டை உள்ளூரில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

*வினா எண் 43640*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உள்ளூர் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

***மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைதேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**92--**

**திருவோணம் ஒன்றியத்தில் தொகுப்பு வீடு கட்டுதல்.**

*வினா எண் 43643*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருவோணம் ஒன்றியம், அதம்பை தெற்கு, வீடற்ற ஆதி திராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

***மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து

செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**93--**

### பூச்சியூர் கிராமத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் *44830*--**திரு. கே. செல்வராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கோயமுத்தூர் நரசிம்ம நாயக்கன் பாளையம் நகர பஞ்சாயத்தில் உள்ள பூச்சியூர் கிராமத்தில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் ஆதிதிராவிட மக்களுக்கு இலவசத் தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படித் திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத்தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**94--**

### அரவக்குறிச்சி தொகுதியில் பிற்பட்டோர்களுக்கு இலவசவீடு

வினா எண் *44905*--**திருமதி. கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரவக்குறிச்சி தொகுதி, அரவக்குறிச்சி, ஈசநத்தம், பள்ளப்பட்டி மற்றும் ஆண்டிப்பட்டிக்கோட்டை ஆகிய இடங்களில் பிற்பட்டோர்களுக்கான இலவச வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

1995 நவம்பர் 3]

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**95--**

**பூம்புகார் ஊராட்சிகளில் மயான கொட்டகை அமைத்தல்**

வினா எண் 44950--**திரு. எம். பூராசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பூம்புகார் தொகுதியிலுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் ஆதிதிராவிடர்களின் மயானக் கொட்டகைகள் அமைக்கும் பணியை ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுதத அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பூம்புகார் தொகுதியில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் உள்ள ஆதிதிராவிடர்கள் மயானக் கொட்டகைகள் அமைக்கும் ஒட்டுமொத்தமான செயற்குறிப்பு நாகை-காயிதே மில்லத் மாவட்ட ஆட்சியரின் பரிசீலனையில் உள்ளது.

**96--**

**ரெகுபதி கட்டளை கிராமத்தில் பேருந்து நிழற்குடை கட்டுதல்**

வினா எண் 44982--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

[1995 நவம்பர் 3

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், 70, மேலையூர் வட்டம், ரெகுபதி கட்டளை கிராமத்தில் பேருந்து நிழற்குடை கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குத்தாலம் தொகுதியில் உள்ள ரெகுபதி கட்டளை கிராமத்திற்கு பேருந்து நிழற்குடை 1995-96-ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

**97--**

## கோமல் வாய்க்காலின் குறுக்கே கான்கிரீட் வண்டிப்பாலம் கட்டுதல்

வினா எண். 44990--திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், பேராவூர் ஊராட்சி, கத்தரி மூலை கிராமத்தில் வீரசோழன் ஆறுபிரிவு கோமல் வாய்க்காலில் குறுக்கே எழுவேலி, கத்திமூலை கிராமங்களையும், ஆடுதுறை, தரங்கம்பாடி சாலையையும் இணைக்கும் வகையில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கான்கிரீட் வண்டிப்பாலம் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குறிப்பிட்ட பாலம் கட்டுவதற்கு ரூபாய் இரண்டு லட்சம் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில், இப்பணியை அத்திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்ய இதுவரை இயலவில்லை. ஆனால் 1995-96 ஆம் ஆண்டு மாவட்ட பரவலாக்கத் திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்ய முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

*1995 நவம்பர் 3]*

**98--**

**வீரசோழன் ஆற்றில் கான்கிரீட் நடைபாலம் அமைத்தல்**

*வினா எண் 44991--***திரு. எஸ். ஆசைமணி:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*நாகப்பட்டினம்--காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், வடநாச்சினார்குடி கிராமம் வீரசோழன் ஆற்றில் உள்ள மூங்கில் பாலத்திற்குப் பதில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கான்கிரீட் நடைபாலம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

***மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:***

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**99--**

**நக்கம்பாடி கிராமத்தை மேம்படுத்துதல்**

*வினா எண் 44994--***திரு. எஸ். ஆசைமணி:** *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், நக்கம்பாடி கிராம உயர்நிலைப் பள்ளிக்கு கீழ்புறமுள்ள காட்டாற்றில் கான்கிரீட் நடைபாலம் கயிதுளார் கிராமத்திற்குச் செல்ல கான்கிரீட் நடைபாலம் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டித் தரவும், நக்கம்பாடி தர்காவிற்கு எதிர்புறமுள்ள வாய்க்கால் மதகை அகலப்படுத்தி பழுதுபார்க்கவும் அரசு ஆவன செய்யுமா?*

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நக்கம்பாடி ஊராட்சியில் காட்டாறின் குறுக்கே உயர்நிலைப் பள்ளிக்கு கிழக்கே ரூ. 2 லட்சம் செலவில் கான்கிரீட் நடைபாலம் அமைக்க *1994-95*-ஆம் ஆண்டு பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டத்தில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. கயிதுளார் கிராமத்திற்கு செல்ல கான்கிரீட் நடைபாலம் அமைத்தல் மற்றும் தர்கா எதிர்புறமுள்ள மதகுகளை அகலப்படுத்துதல் ஆகிய பணிகளை வரும் *1995-96*-ஆம் ஆண்டுத் திட்டங்களின், நிதி நிலைமைக்கு ஏற்ப பரிசீலிக்கப்படும்.

**100--**

**மயிலாடுதுறை வட்டத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *46493*--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், கோனேரிராஜபுரம் ஊராட்சி ஈச்சங்குடி ஆதிதிராவிடர் தெரு மற்றும் வழுவூர் ஊராட்சி, வடக்கு ஆதிதிராவிடர் தெரு ஆகிய இடங்களில் இலவச கான்கிரீட் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

TRUTH ALONE TRIUMPHS

விடை--

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழி முறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

1995 நவம்பர் 3]

## பதினான்காம் பட்டியல்

1--

### கோவை மாநகராட்சியில் வாக்காளர் பட்டியல் தயாரிக்க நடவடிக்கை

வினா எண் 77453--திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கோவை மாநகராட்சியை உருவாக்கியபோது இருந்த 60 டிவிசன்கள் மட்டுமே தற்போது வாக்காளர் பட்டியலில் உள்ளதா? அதை மாற்றி புதிதாக பிரிக்கப்பட்டுள்ள 72 டிவிசன் வாரியாக வாக்காளர் பட்டியல் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது எடுக்கப்படும்?

விடை--

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்: :

(அ) மற்றும் (ஆ): கோவை மாநகராட்சியில் அடங்கியுள்ள 105 கோயம்புத்தூர் மேற்கு மற்றும் 106 கோயம்புத்தூர் கிழக்கு ஆகிய இரண்டு சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்கள், 1993-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ஆம் நாளைத் தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தீவிர முறையில் புதியதாகத் தயாரிக்கப்பட்டபோதே, 72 வார்டுகளின் அடிப்படையிலேயே, தயாரிக்கப்பட்டுள்ளன.

2--

### முதலைமேட்டில் பவுண்டு கட்டுதல்

வினா எண் 8452--திரு. து. மூர்த்தி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சீர்காழி தொகுதி, முதலைமேடு கிராமத்தில் பயிர்களை நாசம் செய்யும் பிராணிகளை அடைக்க அக்கிராமத்தில் பவுண்டு கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களில் கால்நடைப்பட்டிகள் இல்லாத இடங்களில் கால்நடைப்பட்டிகள் புதிதாக அமைக்க ஒட்டுமொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். இக்கருத்துரு பெறப்பட்டவுடன் நிதிநிலையை அனுசரித்துப் படிப்படியாக கால்நடைப்பட்டிகள் இல்லாத இடங்களில் புதிதாக அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3--

**குலசேகரம் பேரூராட்சியில் வீட்டுமனைப்பட்டா வழங்குதல்**

வினா எண் *19284*--**திரு. இரா. அப்பு நடேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருவட்டார் தொகுதியில், குலசேகரம் பேரூராட்சி, அண்ணா நகரில் உள்ள 88 குடும்பத்தினருக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கும் அரசின் செயற்குறிப்பு எந்நிலையில் உள்ளது?

விடை--

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், பொன்மனை கிராமம் புல எண் 5/4, 5/5-இல் உள்ள, மலேரியா அலுவலகம் கட்ட சுகாதாரத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிலத்தை அத்துறையிடமிருந்து மீள எடுத்து, 'நத்தமாக' வகைமாற்றம் செய்து, அதில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க உரிய நடவடிக்கை எடுக்கும்படி மாவட்ட ஆட்சியருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

4--

**தருமபுரி மாவட்டத்தில் வீட்டுமனைப்பட்டா வழங்குதல்**

வினா எண் *49055*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3*]

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், பருவதனஅள்ளி ஊராட்சி, திருவள்ளுவர் நகரில் 20 ஆண்டுகளாக குடியிருக்கும் சுமார் 200 குடும்பங்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம் மற்றும் நகரம், பருவதனஅள்ளி ஊராட்சி, திருவள்ளுவர் நகரில், புல எண் 652–இல் ஆக்கிரமிப்பு செய்துள்ள இடம் ஒப்படை செய்ய தடை செய்யப்பட்ட குட்டைப்புறம்போக்காக இருப்பதால், இதனை நத்தமாக வகை மாற்றம் செய்து இதில் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்க இயலாது.

**5--**

**நத்தம் பிரிவில் விட்டுமனைப்பட்டா வழங்குதல்**

வினா எண் 54736--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், கொடுமுடி பேரூராட்சி பகுதியில் நத்தம் பிரிவில் இதுவரை வழங்கப்பட்டுள்ள வீட்டுமனைப் பட்டாக்கள் எத்தனை?

(ஆ) இன்னும் எத்தனை பேருக்கு வழங்க வேண்டியுள்ளது?

**விடை--**

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) பெரியார் மாவட்டம், ஈரோடு வட்டம், கொடுமுடி ஒன்றியம், கொடுமுடி பேரூராட்சி, கொடுமுடி 'அ' மற்றும் கொடுமுடி 'ஆ' ஆகிய இரண்டு கிராமங்களில் நத்தம் நிலவரித் திட்டப்பணிகள் 1993–94 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு கீழ்க்கண்டவாறு வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன:–

| | | |
|---|---|---|
| (1) நத்தம் பகுதி | .. | 837 |
| (2) பட்டாப் பகுதி | .. | 369 |
| | **மொத்தம்** | **1206** |

**பயனடைந்தவர்கள் எண்ணிக்கை:**

| | | |
|---|---|---|
| (1) தாழ்த்தப்பட்ட வகுப்பினர் | .. | 209 நபர்கள் |
| (2) மிகவும் பிற்பட்ட/மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | .. | 1,025 நபர்கள் |
| (3) பூறபட்ட வகுப்பினர் | .. | 150 நபர்கள் |
| மொத்தம் | .. | 1,384 நபர்கள் |

(ஆ) உரிமைப்பிரச்சனை மற்றும் இதர காரணங்களுக்காக வழங்கப்படாமல் உள்ள பட்டாக்களின் எண்ணிக்கை 2704

6--

**உத்தனபள்ளியில் சித்த மருத்துவமனையைப் புதுப்பித்தல்**

வினா எண் 52149--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தருமபுரி மாவட்டம், ஒசூர் வட்டம், உத்தனபள்ளி கிராமத்திலுள்ள சித்த மருத்துவமனையை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

இம்மருத்துவமனை 1994-95ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டு இயங்கி வருகிறது.

7--

**வெங்கடங்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடத்திற்கு மின் இணைப்பு வழங்குதல்**

வினா எண் 72387--டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

*(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி வேங்கடங்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடத்திற்கு மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை--**

***மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:***

*(அ) ஆம்.*

*(ஆ) இவ்வாரம்ப சுகாதார நிலையத்தில் புதிய மருந்தகக் கட்டிடம் மற்றும் மருத்துவ அலுவலர் குடியிருப்புக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு அதனை வேங்கடங்குறிச்சி மருத்துவ அலுவலரால் 25-5-1995 அன்று பொதுப்பணித்துறையினரிடமிருந்து பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. நோயாளிகள் கவனிப்பு மற்றும் அலுவலகப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.*

**8--**

**வெள்ளி சந்தை ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் 78628--**திரு. ஆ. பாலையா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

குளச்சல் தொகுதி, வெள்ளி சந்தை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

***மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:***

குளச்சல் தொகுதி வெள்ளிச் சந்தை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்சமயம் இல்லை.

[*1995* நவம்பர் *3*

9--

**கடம்பூரிலிருந்து-குன்றிமலைப்பகுதிகளுக்கு பேருந்து இயக்குதல்**

*வினா எண் 35364*--**திருமதி அ.தி. சரஸ்வதி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* சத்தியமங்கலம் தொகுதி, கடம்பூரிலிருந்து குன்றிமலைப் பகுதிகளுக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது முதல் இயக்கப்படும்?

**விடை**--

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)*: சத்தியமங்கலம் தொகுதி, கடம்பூர் குன்றிமலைப் பகுதிகளுக்கிடையே தற்போது ஜீவா போக்குவரத்துக் கழகம் மூலம் *13-7-95* முதல் *4* தனி நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

10--

**கிருஷ்ணகிரி - கே.ஜி.எப். வரை பேருந்து இயக்குதல்**

*வினா எண் 45625*--**திரு. கே. முனிவெங்கடப்பன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி முதல் கே.ஜி.எப். வரை மணவாரணப்பள்ளி வழியாக புறநகர பேருந்து விடப்படுமா?

**விடை**--

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தடம் ஒரு பிறமாநிலத் தடமாகும். எனவே இத்தடத்தில் பேருந்து இயக்க இருமாநிலங்களின் ஒப்புதல் தேவை. எனவே, எதிர்காலத்தில் ஏற்படும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இக்கோரிக்கை பரிசீலிக்க வாய்ப்புள்ளது.

*1995 நவம்பர் 3]*

**11--**

**பேராவூரணி-பைங்கால் பேருந்து இயக்குதல்**

*வினா எண் 47865*--**திரு. ஆர். சிங்காரம் :** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*தஞ்சை மாவட்டம், பேராவூரணியிலிருந்து பைங்கால் வழியாக இயக்கப்பட்ட சோழன் போக்குவரத்துக்கழக நகரப் பேருந்து நின்றுவிட்டதை மீண்டும் இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை--**

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:***

*பேராவூரணியிலிருந்து பைங்கால் வழியாக கொத்தமங்கலம் வரை தடம் எண் ஏ7-14 நடைகள் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன.*

**12--**

**கும்பகோணம்-டி. பண்டாரவாடை பேருந்து இயக்குதல்**

*வினா எண் 48654*--**திரு. எஸ். ஆசைமணி:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*நாகை காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி மயிலாடுதுறை வட்டம், டி. பண்டாரவாடை கிராமம் வழியாக கும்பகோணம் தேரெழுந்தூர் சென்று கொண்டிருந்த சோழன் பேருந்தை மீண்டும் இவ்வழித்தடத்தில் இயக்கச் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:***

*கும்பகோணம்-டி. பண்டாரவாடை, தேரெழுந்தூர் தடத்தில் நகரப் பேருந்து மூலம் 2 நடைகள் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன.*

**13--**

**நகரப்பேருந்து 31-ஐ கூடுதல் இடங்களுக்கு இயக்குதல்**

*வினா எண் 48658*--**திரு. எஸ். ஆசைமணி:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, தரங்கை வட்டம், திருவிடை சுழி-மயிலாடுதுறை செல்லும் எண் 31-ஐ சோழன் பேருந்தை பழவேலங்குடி-கடக்கம் வழியாக பெரம்பூர் வரை இயக்கிட அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

*மயிலாடுதுறை-திருவிடைக்சுழி தடத்தில் கடக்கம் முதல் பழவேலங்குடி வழியாக பெரம்பூர் வரையிலான 2½ கி.மீ. சாலை மட்டும் பேருந்து வசதி பெறாத பகுதியாகும். எஞ்சிய பகுதிகள் அனைத்தும் பேருந்து வசதி பெற்ற பகுதிகளாகும். கடக்கத்திலிருந்து பழவேலங்குடி வழியாக பெரம்பூர் வரையிலான 2½ கி.மீ. தூரம் குறுகலான மண்சாலையாக வளைவுகள் நிறைந்து பேருந்து இயக்கத்திற்கு தகுதியற்ற சாலையாக உள்ளது. இக்குறைபாடுகளை நீக்கி சாலை, பேருந்து இயக்கத்திற்கு தகுதியாகும்போது பேருந்து இயக்க இயலும்.*

**14--**

**அரவக்குறிச்சி-பொள்ளாச்சி பேருந்து இயக்குதல்**

*வினா எண் 54262*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரவக்குறிச்சி-பொள்ளாச்சி இடையே பேருந்து விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3]*

கரூர்–பொள்ளாச்சி (வழி) அரவக்குறிச்சி, பள்ளப்பட்டி, ஒட்டன்சத்திரம், பழனி வழியாக தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்திலிருந்தும் சேரன் போக்குவரத்து கழகத்திலிருந்தும், புறநகர் பேருந்து மூலம் தினசரி 6 நடை...ள் இயக்கப்பட்டு வருகிறது. எனவே, தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாகும்.

**15--**

**மதுக்கூர்-சென்னை இடையே பேருந்து இயக்குதல்**

வினா எண் 61689--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் நகரத்திலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்து இயக்குவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

அதிராமப்பட்டினத்திலிருந்து 23 கி.மீ. தூரம் உள்ள மதுக்கூர் வழியாக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்து தடம் எண் 333 நாள்தோறும் 2 பேருந்துகள், 4 ஒருவழிப் பயணங்களாக இயக்கப்படுகின்றன. மதுக்கூரிலிருந்து சென்னை செல்லும் பயணிகள் வசதிக்காக இத்தடத்தில் 11 இருக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதுவே மதுக்கூரிலிருந்து சென்னை பயணம் மேற்கொள்ளுவதற்குப் போதுமானது என கருதப்படுகிறது.

**16--**

**தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல்**

வினா எண் 61862--**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் சந்தனத் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை--**

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:***

*(அ)* தமிழ்நாட்டில் சந்தனத் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை புதிதாக அமைக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

*(ஆ)* கேள்வி எழாது.

**17--**

## குமாரமங்கலம் காட்டூர் இடையே பேருந்து இயக்குதல்

வினா எண் *63603*--**டாக்டர் வெ. சரோஜா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்செங்கோடு தாலுக்கா-குமாரமங்கலத்திலிருந்து புதூர் காந்தி ஆசிரமம், ஓடக்காடு, புதூர் அண்ணன்மார் கோயில் வழியாக காட்டூர் வரை பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை--**

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:***

கோரிக்கை வழித்தடத்தில் தம்மங்கிணறு முதல் காந்தி ஆசிரமம் வரையுள்ள *2.5* கி.மீ. தூரம் பராமரிக்கப்படாத ஜல்லிகள் பெயர்ந்துள்ள ஜல்லி சாலையாக உள்ளது. மேலும், அண்ணன்மார் சுவாமிகோயில் முதல் கரிச்சிப்பாளையம் வரை உள்ள *4* கி.மீ. தூரமும் பராமரிக்கப்படாத, அரிமானம் அடைந்த ஜல்லி சாலையாகவும், மிகக் குறுகலான மாட்டு வண்டி தடமாகவும் உள்ளது. இச்சாலைகள் தற்போது இருக்கும் நிலையில் பயணிகள் பேருந்து இயக்கத்திற்கு உகந்ததாக இல்லை. மேற்கூறிய பேருந்து வசதி பெறாத தடப்பகுதியில் உள்ள கிராமங்களில் மக்கள் தொகை மிகவும் குறைவு. *1981* ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி

| | | |
|---|---|---|
| காட்டூர் | - | *182* |
| கருக்கம்பாளையம் | - | *394* |

இக்காரணங்களால் இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

1995 நவம்பர் 3]

18--

## சென்னை-செந்துரைக்குப் பேருந்து இயக்குதல்

வினா எண் 65392--திரு. ஆர். தங்கராஜ்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சென்னையில் இருந்து செந்துரைக்கு தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக சொகுசு பேருந்து விட அரசு ஏற்பாடு செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

சென்னை-செந்துரை தடத்தில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தால், சொகுசுப் பேருந்து இயக்கிடும் திட்டம் ஏதும் இல்லை. மேலும் சொகுசுப் பேருந்துகள் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால் மட்டுமே இயக்கிட இயலும்.

19--

## தர்மபுரி மாவட்டத்தில் புறநகர் பேருந்து இயக்குதல்

வினா எண் 67545--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தர்மபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை (வழி) கெலமங்கலம், இராயக்கோட்டை குளகிரி வழியாக புறநகர் பேருந்து இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை.--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

அன்னை சத்யா போக்குவரத்துக் கழக புறநகர்ப் பேருந்து ஓசூரிலிருந்து குளகிரி வழியாக இராயக்கோட்டை வரையும், அதேபோன்று தேன்கனிக்கோட்டையிலிருந்து கெலமங்கலம், இராயக்கோட்டை வழியாகவும் இயங்கி வருகின்றன. மேற்கண்ட தடம் முழுவதும்

அன்னை சத்யா போக்குவரத்துக் கழக புறநகர்ப் பேருந்துகள் இயங்கி வருகின்றன.

**20--**

**பள்ளப்பட்டி-வெள்ளகோயில் பேருந்து இயக்குதல்**

வினா எண் *67590*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பள்ளப்பட்டி-ஈரோடு (வழி) சின்னதாராபுரம், தென்னிலை அரவக்குறிச்சி, முத்தூர், வெள்ளகோயில் இடையே சென்று கொண்டிருந்த ஜீவா போக்குவரத்துக் கழகப் பேருந்து மீண்டும் இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:**

ஈரோடு-பள்ளப்பட்டி (வழி) முத்தூர், வெள்ளகோவில், மூலனூர் சின்னதாராபுரம் அரவக்குறிச்சி என இயக்கப்பட வேண்டிய பேருந்து வெள்ளகோவில்-மூலனூர் பாதை சரியில்லாத காரணத்தால் வெள்ளகோவிலிருந்து சின்னதாராபுரத்திற்கு தென்னிலை வழியாக இயக்கப்பட்டது. தற்பொழுது பாதை செப்பனிடப்பட்டுவிட்ட காரணத்தால் உரிமப்படி உரிய வழித்தடமான மூலனூர் வழியாக இயக்கப்பட்டு வருகிறது.

**21--**

**ஏலகிரிமலையில் எலக்ட்ரானிக் தொழிற்பேட்டை அமைத்தல்**

வினா எண் *61408*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு ஊரகத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி ஏலகிரிமலையில் எலக்ட்ரானிக் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் உள்ளதா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத்தொழில் துறை அமைச்சர்:**

இல்லை.

**22--**

**திருப்பத்தூரில் எலக்ட்ரானிக் தொழிற்பேட்டை அமைத்தல்**

வினா எண் 64912--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ) வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூரில் எலக்ட்ரானிக் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை--**

**மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத்தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இல்லை.

**23--**

**அரசு சார்பில் ரோபாட் தயாரித்தல்**

வினா எண் 64940--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழ்நாட்டில் அரசு சார்பில் "ரோபாட்" தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:**

செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**24--**

**திருப்பத்தூர் தொகுதியில் கனிமம் வெட்டி எடுக்க அனுமதி**

வினா எண் 64947--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் கருப்புக்கல் கனிமம் வெட்டி எடுக்க தனியாருக்கு எத்தனை ஏக்கரில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது?

**விடை--**

**மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்:**

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் கருப்புக்கல் கனிமம் வெட்டியெடுக்க 16.15 ஏக்கரில் தனியாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**25--**

**கைத்தறித்துறை இணை இயக்குநர் அலுவலகம் ஏற்படுத்துதல்**

வினா எண் 72367--டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கைத்தறித் துறையின் வட்டார இணை இயக்குநர் அலுவலகம்(Regional Joint Director of Handlooms and Textiles office) மதுரையில் ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

*1995 நவம்பர் 3]*

**26--**

**ஆரம்ப கல்வி நிர்வாகம் செயற்படுத்துதல்**

வினா எண் 12146--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஆரம்பக் கல்வி நிர்வாகம் ஆரம்பப் பள்ளிகளில் உள்ள தகுதி பெற்ற ஆசிரியர்களால் செயற்படுத்தும் வகையில் செயற்திட்டம் ஏற்படுத்தப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

ஆரம்பக் கல்வி நிர்வாகம், ஆரம்பப் பள்ளிகளில் உள்ள தகுதி பெற்ற ஆசிரியர்களால் செயற்படுத்தும் வகையில், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களை உதவிக் கல்வி அலுவலர்களாக நியமிக்க அரசாணை எண் 497, கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், நாள் 26-6-95-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**27--**

**காப்பீட்டுத் திட்டத்தில் வாழை, வெற்றிலையைச் சேர்த்தல்**

வினா எண் 38688--**திருமதி ப. சரஸ்வதி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வாழை, வெற்றிலை பயிர்கள் புயலால் பாதிக்கப்படும் போது காப்பீட்டுத் தொகை வழங்க காப்பீட்டுத் திட்டத்தில் வாழை, வெற்றிலையைச் சேர்க்க மாநில அரசு மத்திய அரசுக்கு குறிப்பு அனுப்பியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

28--

**திருப்பத்தூரில் கூட்டுறவு வங்கி வழங்கிய கடன் விபரம்**

வினா எண் 84878--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் திருப்பத்தூரில் மத்திய கூட்டுறவு வங்கி வழங்கிய கடன் விபரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன், கூட்டுறவுத்துறை அமைச்சர்:**

வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்திற்கு வடாற்காடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் திருப்பத்தூர் கிளையின் மூலம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன் விபரம் பின்வருமாறு:-

| ஆண்டு | பயனாளர் எண்ணிக்கை | வழங்கப்பட்ட கடன் தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1991-92 | 214 | 14.30 |
| 1992-93 | 338 | 22.55 |
| 1993-94 | 746 | 54.77 |
| 1994-95 | 545 | 47.70 |
| 1995-96 (30-6-95 முடிய) | 114 | 9.75 |

**கூடுதல் விபரங்கள்:-**

மேற்படி கடன்கள், கறவை மாடுகள் வாங்க, ஆடுகள் வளர்க்க, உழவு மாடு, டயர் வண்டி, டயர் வண்டியும் மாடும் வாங்க, வண்டியும் மாடும் வாங்க, பட்டுப்புழு வளர்ப்பு, தொழில் சேவை, வியாபாரக் கடன்கள், சாண எரிவாயு சாதனம் ஆகிய காரியங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும் 1-7-94 முதல் 30-6-95 வரை முடிவடையும் ஆண்டில் ஏற்பட்ட மொத்த கேட்புத் தொகை ரூ.86.66 இலட்சத்தில் ரூ.15.24 இலட்சம் வசூல் செய்யப்பட்டு ரூ.71.42 இலட்சம் நிலுவையுள்ளது. இது மொத்த கேட்பில் 82.4 சதவிகிதம் ஆகும்.

*1995 நவம்பர் 3]*

**29--**

**மனக்காடு ஊராட்சிக்கு மயான வசதி அளித்தல்**

வினா எண் 7098--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மனக்காடு ஊராட்சி வீரக்குடி ஆதிதிராவிடர்களுக்கு மயான சாலை அமைத்துக் கொடுக்கவும் தகரக் கொட்டகை அமைத்துக் கொடுக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வீரக்குடி, மனக்காடு ஊராட்சியைச் சார்ந்தது. நடப்பு ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் 1 கி.மீ. தூரத்திற்கு ரூ.1,10,000 மதிப்பீட்டில் கருங்கல் ஜல்லி சாலை வேலை நடைபெறுகிறது. இவ்வேலையைத் தவிர வேலைகளைச் செய்திட நிதி ஒதுக்கீடு மற்றும் நிதி ஆதாரம் ஏதும் இல்லாததால் சாலை அமைத்தல் தகரக் கொட்டகை அமைத்தல் ஆகிய வேலை செய்திட இயலாத நிலை உள்ளது.

**30--**

**பாலாற்றின் குறுக்கே தரைமட்ட பாலம் கட்டுதல்**

வினா எண் 8543--**டாக்டர் அ. ஸ்ரீதரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கெங்கம்பாளையம்-சமத்தூர் மற்றும் சோமந்துரை சித்தூர் ஆகிய கிராமங்களின் பாலாற்றில் குறுக்கே, ஊரக சாலைகள் மூலமாக தரைமட்ட பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ):* வினாக்களில் குறிப்பிட்டுள்ள இரு கிராமங்களிலும் பாலாற்றின் குறுக்கே ஊரகச் சாலைகள் மூலம் பாலம் கட்ட ரூ.100 இலட்சமும், சாலை மேம்பாடு செய்ய ரூ.25 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.1.25 கோடி செலவாகும், ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து இவ்வளவு பெரிய தொகை செலவு செய்ய வழிவகை இல்லை.

**31--**

**வேப்பங்காடு ஏனாதி சாலையை கப்பிச் சாலையாக மாற்றுதல்**

*வினா எண் 11457--***திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், வேப்பங்காடு ஏனாதி சாலையை 1992-93-ல் கப்பிச் சாலையாக மாற்றிப் பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேப்பங்காடு-ஏனாதி வரை உள்ள கருங்கல் கப்பிச் சாலை 1990-91 மற்றும் 1991-92-ல் மேம்படுத்தப்பட்டுள்ளது. ஆதலால் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**32--**

**மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்தில் சாலைகளைப் பழுதுபார்த்தல்**

*வினா எண் 22411--***திரு. ஏ. ரவிக்குமார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், காஞ்சிவாயில், பூவாமி, கோளூர் ஆகிய மூன்று கிராமங்களையும் சேர்க்கும் சாலையை பழுது பார்த்து தார்ச் சாலை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) 1993-94 ஆம் ஆண்டில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் எம்.ஜி. சாலை முதல் பூவாமி வழி காஞ்சிவாயில் மற்றும் கோளூர் முதல் புதுச்சேரிமேடு சாலையும் ஜல்லி சாலை அமைக்கப்பட்டது.*

*(ஆ) தார்ச் சாலை அமைக்க நிதி ஒதுக்கீடு இல்லாததால் தார்ச் சாலை அமைக்கப்படவில்லை.*

**33--**

**மீஞ்சூர் ஒன்றியம் எம்.பி. சாலையைப் பழுதுபார்த்தல்**

வினா எண் 22412--திரு. **ஏ. ரவிக்குமார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம் எம்.பி. சாலை முதல் சிறுளப்பாக்கம் வரை 4 கி.மீ. நீளத்திற்கு தார்ச் சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) : ஒன்றியத்தில், நிதி நிலைமை போதுமானதாக இல்லாததால் தார்ச் சாலை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.*

**34--**

**ஜே.வி.வி.டி. திட்டத்தின் கீழ் சாலையைப் புதுப்பித்தல்**

வினா எண் 22931--திரு. **எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், எழுமகளூர் கிராமத்திலுள்ள நண்டலாற்றிலிருந்து கிளயனூர் வரையுள்ள சாலையை ஜே.வி.வி.டி. திட்டத்தின் கீழ் புதுப்பிக்க செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குத்தாலம் ஊராட்சி ஒன்றியம், எழுமகளூர் கிராமம், நண்டலாற்றிலிருந்து கிளயனூர் வரை உள்ள 2.4 கி.மீ. சாலையை சீர் செய்ய ரூபாய் 3 லட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1995-96 இல் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்வதற்காக இப்பணியும் முன்னுரிமை அடிப்படையில் மாவட்ட ஆட்சியரால் பரிசீலிக்கப்படும்.

**35--**

**குடவாசல் ஒன்றியத்தில் தடுப்புச்சுவர் கட்டுதல்**

வினா எண் 25153--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், வடமட்டம் ஊராட்சியில் கூந்தலூர் செல்லும் சாலை ஓரம் அமைந்துள்ள கணிக்கான்குள கீழ்கரையின் மண் அரிப்பைத் தடுக்க ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் தடுப்புச் சுவர் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குடவாசல் ஒன்றியம், கூந்தலூர் வட்டம் சாலையில் கி.மீ. 0/4-ல் தடுப்பு சுவர் கட்ட, மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தின் கீழ் 1994-95-ல் ரூ.25,000/-மதிப்பீட்டில் பணி நடைபெற்று வருகிறது.

*1995 நவம்பர் 3]*

**36--**

### திருச்சி பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் *26160*--**டாக்டர் ச. ஆரோக்கியசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*திருச்சிராப்பள்ளி நகரில் மலைக்கோட்டை பகுதி, பொன்னகர் பகுதிகளில் கட்டப்பட்டுவரும் பாதாள சாக்கடைத் திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருச்சிராப்பள்ளி நகரில், திருச்சி பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் மலைக்கோட்டைப் பகுதிகளில் திட்டம் நிறைவேற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது.

திருச்சி மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள பொன்னகர் பகுதி, திருச்சிராப்பள்ளி பாதாளச் சாக்கடைத் திட்டம் வடிவமைக்கும்பொழுதும் உருவாகவில்லை. மேலும் இத்திட்டப் பணிகள் நடைபெறும் பொழுது நகராட்சியினரிடமிருந்து பொன்னகர் பகுதியை இத்திட்டத்தில் சேர்ப்பதற்கு கோரிக்கை எதுவும் வரவில்லை.

**37--**

### கெட்டூர் கிராமத்திற்கு சாலை அமைத்தல்

வினா எண் *27493*--**திரு. கே. முனிவெங்கடப்பன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*கிருஷ்ணகிரி தொகுதி, சிக்கவூவத்தி ஊராட்சி, கெட்டூர் கிராமத்திற்கு ஊராட்சி சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கெட்டூர் சாலை அமைக்கும் பொருட்டு வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் ஒரு லட்சம் நிதி மாவட்ட வளர்ச்சிக் கழக திட்ட அலுவலர் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இச்சாலையின் பெரும் பகுதி வனத்துறை நிலத்தினூடே செல்வதால், வனத்துறையின் அனுமதி பெற்ற பின் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

**38--**

**சொக்கலிங்கபுரத்தில் பாலம் கட்டுதல்**

வினா எண் *28452*--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், மேலநீலிதநல்லூர் ஒன்றியமும், ஆலங்குளம் ஒன்றியமும் சந்திக்கும் இடமான சொக்கலிங்கபுரம் அருகில் ஏற்படும் காட்டாற்றில் ஒரு பாலம் கட்டப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், மேலநீலிதநல்லூர் ஒன்றியமும், ஆலங்குளம் ஒன்றியமும் சந்திக்கும் சொக்கலிங்கபுரம் அருகில் உள்ள காட்டாற்றில் பாலம் கட்டும் திட்டம் எதுவும் தற்போதைய நிலையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

**39--**

**தெம்மாவூர்-மின்னாத்தூர் சாலையைப் புதுப்பித்தல்**

வினா எண் *28970*--**திரு. சி. சுவாமிநாதன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

புதுக்கோட்டை தொகுதி, தெம்மாவூர், மின்னாத்தூர் வரை செல்லும் பழுதடைந்த சாலையை புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*1995 நவம்பர் 3]*

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தற்போது இச்சாலையில் கி.மீ. 1/0-2/0 பகுதி மட்டும் 1993-94-ம் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் ஜல்லி பரப்பி புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்கூறிய சாலையின் எஞ்சிய பகுதி முழுவதும் தார்ச்சாலையாக புதுப்பிக்க தோராயமாக ரூ. 12 இலட்சம் தேவைப்படும். நிதி வசதி இன்மையால் இந்த வேலையை எடுத்துக்கொள்ள இயலாது.

40--

**புதுக்கோட்டை தொகுதியில் சாலையைப் புதுப்பித்தல்**

வினா எண் 28971--திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

புதுக்கோட்டை தொகுதி, பெரம்பூர் கருப்புடையான்பட்டி பழுதடைந்த சாலையை புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தற்பொழுது சாலையின் பாதி தூரம் கப்பிச் சாலையாக மாற்றப்பட்டுள்ளது. எஞ்சிய பகுதி நிதி நிலைமையின் பற்றாக்குறையால் சாலையை மேம்படுத்த இயலவில்லை.

41--

**கந்தர்வக்கோட்டை யூனியனில் தார்ச்சாலை அமைத்தல்**

வினா எண் 28987--திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கந்தர்வகோட்டை யூனியன், மங்கலூர்-கொட்னாபட்டி வரை தார்ச் சாலையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சி ஒன்றியத்தில் நிதி நிலைமையை கருத்தில் கொண்டு தற்சமயம் மேற்கண்ட வேலையை எடுத்துச் செய்ய இயலாது.

42--

ஒசூர் தொகுதியில் பாலம் கட்டுதல்

வினா எண் 32992--**திரு. கே.ஏ. மனோகரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

ஒசூர் தொகுதி, கஜலன் தொட்டி சாலையில் 0/8--ல் உள்ள காட்டாற்றை கடக்க பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இச்சாலையின் மொத்த நீளம் 1.60 கி.மீ. ஆகும். இவ்விடத்தில் ஒரு உயர்மட்ட பாலம் கட்டி அணுகு சாலை அமைக்க சுமார் ரூ.18.00 இலட்சம் செலவாகும். இதனை தற்சமயம் எடுத்து செய்ய சாத்தியகூறு இல்லை.

43--

ஆலங்குளம் ஒன்றியத்தில் குளத்தை ஆழப்படுத்துதல்

வினா எண் 33427--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், பலபத்திராமாபுரம் மைலா குளத்தை ஆழப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இக்குளம் 1991-92 ஆம் வருடத்தில் பொதுப்பணி துறையினரால் ரூ.1 லட்சம் மதிப்பீட்டில் பழுது பார்த்தல் வேலை நடைபெற்றது. மேலும் 1992-93ஆம் வெள்ள நிவாரணத் திட்டத்தின் கீழ் ரூ. 20,000 மதிப்பீட்டில் பரா்மரிப்பு வேலைகள் நடைபெற்றுள்ளது.

**44--**

**உப்பிலியாபுரம் தொகுதியில் குட்டைகளைப் பராமரித்தல்**

வினா எண் 33446--திரு. **வி. ரவிச்சந்திரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, ஆங்கியம் குட்டை, கோனேரிப்பட்டி குட்டைகளில் கரை உடைப்பு ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைச் சரிசெய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): மேற்படி ஆங்கியம் குட்டை, கோனேரிப்பட்டி குட்டைகளில் கரை உடைப்பு ஏதும் ஏற்படவில்லை. எனினும் இக்கரைகளை மேலும் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**45--**

**வெப்பாலம்பட்டி-காட்டூர் வரை சாலை அமைத்தல்**

வினா எண் 34254--**திரு. கே. முனிவெங்கடப்பன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி ஒன்றியம், வெப்பாலம்பட்டி முதல் காட்டூர் வரை சாலை அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது சாலை அமைக்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வெப்பாலம்பட்டி முதல் காட்டூர் வரையிலான 1.00 கி.மீ. சாலை 1993-94 ஆம் ஆண்டு வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டு தற்போது முடிக்கப்பட்டுள்ளது.

**46--**

## கொடுமுடி பாறையன்காட்டு வலசு பாதையைப் புதுப்பித்தல்

வினா எண் 36289--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கொடுமுடி பாறையன்காட்டு வலசு பாதையைப் புதுப்பிக்கும் பணியைத் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம் பராமரிப்பிலுள்ள சாலையாகும். இச்சாலையின் மொத்த நீளம் 1.4 கி.மீ. ஆகும். 1992-93 ஆம் ஆண்டு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் இச்சாலையின் முழு நீளத்திற்கு முதல் அடுக்கு கப்பி போடப்பட்டுள்ளது. இச்சாலையை தார்ச் சாலையாக்க ரூ.3.00 இலட்சம் தேவைப்படும். தற்சமயம் மேம்பாடு செய்ய சாத்தியக்கூறு இல்லை.

**47--**

## சித்தன்வாளூர்-காங்கேய நகரம் சாலையைச் சீர் செய்தல்

வினா எண் 36736--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1995 நவம்பர் 3]*

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், சித்தன்வாளூர் காங்கேய நகரம் கப்பிச் சாலையை தார்ச் சாலையாக மாற்றித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1992-93* ஆம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சித்தன்வாளூர் காங்கேய நகரம் கப்பிச் சாலை போடப்பட்டது. இச்சாலையை தார்ச் சாலையாக்க நிதி ஒதுக்கீடு பெற்றபின் முன்னுரிமை அடிப்படையில் வேலை மேற்கொள்ளப்படும்.

**48--**

**ஓசூர், சூளகிரி ஒன்றியங்களுக்கு இலவச மின்சாரம் வழங்குதல்**

வினா எண் *36827*--**திரு. கே.ஏ. மனோகரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஓசூர், சூளகிரி ஊராட்சி ஒன்றியங்களில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது மின்சார வசதி வழங்க இயலும்?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ஓசூர் வட்டாரத்தில் கட்டப்பட்டுள்ள *823* வீடுகளில் *180* வீடுகளும், சூளகிரி வட்டாரத்தில் கட்டப்பட்டுள்ள *306* வீடுகளில் *130* வீடுகளும் மின் இணைப்புகள் பெற்றுள்ளன. மீதமுள்ள வீடுகளுக்கு மின் இணைப்பு கோரி தமிழ்நாடு மின்வாரியத்திற்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டுள்ளது. இவர்களுக்கு முன்னுரிமை வரிசைப்படி மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

**49--**

**பாறையூர் கிராமத்திற்கு சாலை வசதி செய்து தருதல்**

வினா எண் *36861*--**திரு. கே. முனிவெங்கடப்பன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கிருஷ்ணகிரிக்கு அருகில் உள்ள பாறையூர் கிராமத்திற்கு சாலை வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

*1994-95* ஆம் ஆண்டு வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் மூலம் பாறையூர் கிராமத்திற்கு சாலை வசதி செய்யப்பட்டு வருகிறது.

**50--**

**க. பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் *38512*--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், அத்திபாளையம் கிராமம், வல்லகொளத்துப்பாளையம், வெள்ளியம்பாளையம் ஆதிதிராவிட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1995 நவம்பர் 3]

# பதினைந்தாம் பட்டியல்

1--

## தொரைப்பாடி சிறைச்சாலைக்கு குடிநீர் வழங்குதல்

வினா எண் 61403--திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், வேலூர் தொரைப்பாடியில் உள்ள சிறைச் சாலைக்கு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர் :

தொரைப்பாடியில் உள்ள கிளைச் சிறை, வேலூர் மத்திய சிறைக்குள் உள்ளது. அரசு ஆணை எண்.672, உள்துறை, நாள் 27-3-84ல் வேலூரில் உள்ள மத்திய சிறை, மகளிர் தனிச் சிறை மற்றும் காவலர் பயிற்சிப் பள்ளி ஆகியவற்றிற்கு குடிநீர் வழங்குவதற்காக ரூ.30,00,000/-செலவில் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பாலாற்றிலிருந்து தனி அமைப்பு ஏற்படுத்தப்பட்டு, 28-6-1990 முதல் குடிநீர் பெறப்பட்டு வருவதால் இச்சிறையில் தண்ணீர் தட்டுப்பாடு ஏதுமில்லை. எனவே, இக்கேள்விக்கு இடமில்லை.

2--

## கிள்ளனூரில் புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குதல்

வினா எண் 38234--திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார் கோவில் ஒன்றியம், கிள்ளனூர் ஊராட்சியில் புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்காதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

4!

[1995 நவம்பர் 3

விடை--

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுக்கா, குன்றாண்டார் கோவில் ஒன்றியம், கிள்ளனூர் கிராமத்தில் டிசம்பர் 1993-ல் பெய்த பெருமழை காரணமாக, வீடுகள் முழுமையாக இடிந்தும், பகுதி சேதமடைந்த நபர்களுக்கு கீழ்க்கண்டவாறு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது:-

| | |
|---|---|
| 1. முழுமையாக பாதிக்கப்பட்ட வீடுகள் | 10 |
| 2. வழங்கப்பட்ட நிவாரணத் தொகை | ரூ.5,000/- |
| 3. பகுதி பாதிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | 31 |
| 4. வழங்கப்பட்ட நிவாரணத் தொகை | ரூ.7,750/- |

இது தவிர பயிர்கள் பாதிப்பு தொடர்பாக விவசாயிகளிடமிருந்து நிவாரணம் கோரி மனு எதுவும் பெறப்படவில்லை.

3--

## தக்காவி கடனின் நோக்கம்

வினா எண் 45610--திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வருவாய்த் துறையின் சார்பில் தக்காவி கடன் என்ன நோக்கத்திற்காக கொடுக்கப்படுகிறது?

(ஆ) இதற்கு ஏதேனும் குறியீடு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர் :**

(அ) தக்காவி கடன்கள் 1883 ஆம் ஆண்டு நிலமேம்பாடு சட்டத்தின் கீழ் கிணறு, ஏரி வெட்டுவது அல்லது பழுதுபார்த்தல், தரிசு நிலங்களைச் சாகுபடிக்கு கொண்டுவருவது, எண்ணெய் இயந்திரங்களையும் நீரேற்றுக் குழாய்களையும் வாங்கி நிறுவுதல் மற்றும் 1884 ஆம் ஆண்டு விவசாயிகள் கடன் சட்டத்தின் கீழ் தானியவிதை

வாங்க விவசாயத்திற்காகவோ, இனவிருத்திக்காகவோ, கால்நடை, பொலி குதிரை வாங்க, நெருப்பு, வெள்ளம் அல்லது புயல் காற்றால் அழிக்கப்பட்ட வீட்டை திரும்ப கட்டிக் கொள்ளவும் அளிக்கப்படுகிறது.

(ஆ) மேற்படி அபிவிருத்தி திட்டங்களுக்காக குறைந்த பட்சம் ரூ.100/- முதல் அதிகபட்சமாக ரூ.10,000/-வரை கடனுதவி அளிக்கப்படுகிறது.

4--

**செங்கம் அரசு மருத்துவமனையில் மின் பழுதுகளை சரிபார்த்தல்**

வினா எண் 14084--டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா---

செங்கம் அரசு மருத்துவமனையில் மின் கம்பிகள் (ஒயரிங்) பழுது அடைந்து அடிக்கடி பல்புகள் எரிந்து போவதைத் தடுக்க புது ஒயர்கள் மாற்ற அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

தற்பொழுது புறப் பிணியாளர் பகுதிக்கு புதிய ஒயர்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதிகளுக்கு வேலை நடந்து கொண்டிருக்கிறது.

5--

**கிளியனூர் அரசு மருத்துவமனையில் பெண் மருத்துவர் நியமனம் செய்தல்**

வினா எண் 48684--திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா---

நாகை-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, தரங்கை வட்டம், கிளியனூர் அரசு மருத்துவமனையில் பெண் மருத்துவரை நியமிக்க அரசு முன்வருமா?

விடை--

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

நாகை-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, தரங்கை வட்டம், கிளியனூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட மருத்துவ அலுவலர்களின் எண்ணிக்கை இரண்டு. அதில் மருத்துவ அலுவலர் எஸ். அசோகன் பணிபுரிந்து வருகிறார். மற்றும் ஒரு பணியிடம் 17-11-1994 முதல் காலியாக உள்ளது. இனி வருங்காலங்களில் தேர்வாணைக் குழுவின் மூலம் போதிய அளவு பெண் மருத்துவர்கள் தேர்வு செய்யப்பட்டு பட்டியல் பெறப்பட்டபின், ஒரு பெண் மருத்துவ அலுவலர் பணிநியமனம் செய்யப்படுவார்.

6--

**முத்தாளியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

வினா எண் 57144--திரு. கே.ஏ. மனோகரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

முத்தாளி கிராமத்தில் ஒரு துணை ஆரம்ப சுகாதார நிலையம் துவங்க அரசு முன்வருமா?

விடை--

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

முத்தாளி என்ற கிராமம் இல்லை. எனினும் முதகானப்பள்ளி ஆரம்ப சுகாதார நிலைய பகுதியில் முத்தளை கிராமத்தில் ஒரு துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது.

7--

**மூலிகைத் தாவரங்களை ஏற்றுமதி செய்வதைத் தடுத்தல்**

வினா எண் 70712--திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

1995 நவம்பர் 3]

மூலிகை மரங்கள், பட்டைகள், தாவரங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதைத் தடுக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

தமிழ் நாட்டில் அபரிமிதமாகப் பயிராகும் மூலிகைகள் மட்டும் அந்நிய செலவாணி ஈட்டும் பொருட்டு மத்திய அரசு விதிகளுக்கு உட்பட்டு ஏற்றுமதியாகின்றன. எனவே மூலிகை ஏற்றுமதி செய்வதைத் தடுக்க மத்திய அரசை வற்புறுத்தத் தேவையில்லை.

**8--**

**யானைக்கால் நோய்க்கு மூலிகை மருந்து தயாரித்தல்**

வினா எண் 84292--டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சகோடகா என்னும் மூலிகைச் செடியிலிருந்து யானைக்கால் நோயை கட்டுப்படுத்தும் மருந்து தயாரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், மூலிகைப் பண்ணைகளில் சகோடகா வளர்க்கும் சிறப்புத் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர் :**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**9--**

**ஈஞ்சம்பள்ளி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

வினா எண் 98962--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

[1995 நவம்பர் 3

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், ஈஞ்சம்பள்ளி ஊராட்சியில் உள்ள அனைத்து கிராமங்களும் பயனடையும் வகையில் பிரசவ விடுதி மற்றும் இரத்த வங்கியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம்,, ஈஞ்சம்பள்ளி ஊராட்சியில் மக்கள் தொகைக்கு ஏற்ப நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. எனவே புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கும் சாத்தியகூறுகள் இல்லை. ஆரம்ப சுகாதார நிலைய செயல்பாட்டின்படி இரத்த வங்கி ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிறுவிட சாத்தியக்கூறுகள் இல்லை. பிரசவ விடுதியுடன் கூடிய இரத்த வங்கி ஊரக மருத்துவ நிலையங்களில் இல்லை. வட்ட மருத்துவமனைகளில் மட்டுமே உள்ளது.

10--

### மொடவாண்டி சத்தியமங்கலம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 98965--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், மொடவாண்டி சத்தியமங்கலம் ஊராட்சியில் உள்ள அனைத்து கிராமங்களும் பயனடையும் வகையில் பிரசவ விடுதி மற்றும் இரத்த வங்கியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், மொடவாண்டி சத்தியமங்கலம் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

ஏதும் இல்லை. இரத்த வங்கி ஊரக மருத்துவ நிலையங்களில் அமைத்திட சாத்தியக் கூறுகள் இல்லை. வட்ட மருத்துவமனைகளில் மட்டுமே இவ்வமைப்பு உள்ளது.

**11--**

**பூந்துறை ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

வினா எண் *98980*--**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஒன்றியம், பூந்துறை சேமூர் ஊராட்சியில் உள்ள அனைத்து கிராமங்களும் பயனடையும் வகையில் பிரசவ விடுதி மற்றும் இரத்த வங்கியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், பூந்துறை சேமூர் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை. ஆரம்ப சுகாதார நிலைய செயல்பாட்டின் படி இரத்தவங்கி ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிறுவிட சாத்தியக்கூறுகள் இல்லை. பிரசவ விடுதியுடன் கூடிய இரத்த வங்கி ஊரக மருத்துவ நிலையங்களில் இல்லை. வட்ட மருத்துவமனைகளில் மட்டுமே இவ்வமைப்பு உள்ளது.

**12--**

**சாம்ராஜ் நகர் நெடுஞ்சாலையை விரிவுப்படுத்துதல்**

வினா எண் *36336*--**திருமதி அ.தி. சரஸ்வதி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தாளவாடி மலைப் பகுதியில் சத்தியமங்கலம்-சாம்ராஜ் நகர் நெடுஞ்சாலையில் சிக்கல்லி வழியாக வரும் சாலையை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் :**

*இந்த சாலையின் நீளம் சுமார் 15.00 கி.மீ. இதனை அகலப்படுத்தினால் விலை உ ந்த காட்டு மரங்கள் மற்றும் வனச்செல்வங்கள் அழிவதுடன் வன விலங்குகளுக்கும் இடைஞ்சல் ஏற்படும். மேலும் இச்சாலையை விரிவுபடுத்தி அமைக்க சுமார் 1.24 கோடி ரூபாய் செலவாகும். இச்சாலையை தார்ச் சாலையாக் அமைத்து வாகனங்கள் சென்று வர அனுமதி வழங்க, முன்வரும் பட்சத்தில் வனக் குற்றங்கள் அதிகம் ஏற்பட வாய்ப்புள்ளது. மேற்கூறிய காரணங்களினால் இச்சாலையை விரிவு படுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.*

**13--**

**"ஜெயதுர்கா" உணவுவிடுதியில் நேசமணி போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் நிறுத்தல்**

வினா எண் *46175*--திரு. இரா. அப்பு நடேசன்: *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

*(அ) கன்னியாகுமரி-சென்னை தேசீய நெடுஞ்சாலையில் உள்ள துலுக்கப்பட்டியில் "ஜெயதுர்கா" உணவு விடுதியில் நிறுத்தப்பட்டு வந்த நேசமணி போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் அனைத்தும் தற்பொழுது அந்த உணவு விடுதியில் நிறுததப்படாததை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், பயணிகளின் நலனை கருதி மீண்டும் "ஜெயதுர்கா" உணவு விடுதியில் என்.டி.சி. பேருந்துகளை நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் :**

*(அ) மற்றும் (ஆ): கன்னியாகுமரி-மதுரை தேசீய நெடுஞ்சாலையில் துலுக்கப்பட்டியில் அமைந்துள்ள "ஜெயதுர்கா" உணவு விடுதியில் பேருந்துகள் நிறுத்தப்படலாகாது என எந்த அறிவிப்பும் நேசமணி*

போக்குவரத்துக் கழகப் பேருந்து பணியாளர்களுக்கு கொடுக்கப்படவில்லை. சிற்றுண்டி உணவு அருந்தும் நேரத்தில், பயணிகள் தேவைக்கேற்ப அவ்வமயம் அதன் அருகாமையில் அமைந்திருக்கும் உணவு விடுதியில் சிற்றுண்டிக்காக நிறுத்தப்பட்டு வருகிறது.

**14--**

**போச்சம்பள்ளி முதல் சென்னை வரை அன்னை சத்யா போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்குதல்**

வினா எண் *46833*--**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

போச்சம்பள்ளி முதல் சென்னை வரை திருப்பத்தூர், வேலூர் வழியாக அன்னை சத்யா போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் விடப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் :**

போச்சம்பள்ளி முதல் சென்னை வரை தடத்தின் நீளம் 250 கி.மீ.க்கு அதிகமாக உள்ள காரணத்தால் இத்தடத்தில் அன்னை சத்யா போக்குவரத்துக் கழகத்தால் பேருந்து இயக்க இயலாது. போச்சம்பள்ளி தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஒரு சிறிய கிராமமாகும். மாவட்டத் தலைநகரான தர்மபுரி 32 கி.மீ. தொலைவில் உள்ளது. தர்மபுரியில் முன்பதிவு செய்யும் வசதிகள் உள்ளன. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் வழித்தடம் எண் 420, தருமபுரியிலிருந்து சென்னைக்கு போச்சம்பள்ளி, திருப்பத்தூர், வேலூர் வழியாக நாள்தோறும் இரண்டு பேருந்துகள் 4 ஒரு வழிப் பயணமாக இயக்கப்படுகின்றன. இதேபோல் மேட்டூரிலிருந்து சென்னைக்கு இயக்கப்படும் வழித்தடம் எண் 427 தர்மபுரி, போச்சம்பள்ளி, வேலூர் வழியாக இயக்கப்படுகின்றன. இந்த வழித்தடம் நாள்தோறும் 2 பேருந்துகள் 4 ஒரு வழிப்பயணமாக இயக்கப்படுகின்றன. போச்சம்பள்ளி பயணிகள் இந்த வசதியைப் பயன்படுத்தி சென்னை வரலாம். பிரத்தியேகமாக வழித்தடம் இயக்குவது தேவைப்படாது என்று கருதப்படுகிறது.

[1995 நவம்பர் 3

15--

## பூம்புகார்-வைத்தீஸ்வரன்கோவில் புதிய பேருந்து விடுதல்

வினா எண் 47393---திரு எம். பூராசாமி: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) பூம்புகாரிலிருந்து திருவெண்காடு, நாங்கூர், அண்ணன் கோயில், தென்னலக்குடி, எடக்குடி, வடபாதி வழியாக வைத்தீஸ்வரன் கோவில் வரை செல்ல புதிய பேருந்து தடம் விடப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை---

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): கோரிக்கை தடத்தில் தென்னலக்குடி, எடக்குடி வடபாதி-வைத்தீஸ்வரன் கோவில் பகுதி பேருந்து வசதி பெறாத பகுதியாகும். இச்சாலை குறுகலாகவும், குறுகிய திருப்பங்கள் உள்ளதாகவும உள்ளது. இச்சாலையில் உள்ள பாலங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. (வைத்தீஸ்வரன்கோயிலும், தென்னலக்குடியும் போதிய அளவு பேருந்து வசதி பெற்றுள்ளன). எனவே இத்தடத்தில் பேருந்து இயக்க செயற்குறிப்பு எதுவும் இல்லை.

16--

## தடம் எண் 10-சி மீண்டும் இயக்குதல்

வினா எண் 48656--திரு எஸ். ஆசைமணி: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், அசிக்காடு கிராமத்திற்கு மயிலாடுதுறையிலிருந்து மாலை 3 மணிக்கு சென்று கொண்டிருந்த தடம் எண் 10-சி சோழன் பேருந்தை மீண்டும் இயக்கி பள்ளி மாணவ, மாணவியருக்கு உதவிட அரசு ஆவன செய்யுமா?

1995 நவம்பர் 3]

விடை--

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் :**

மயிலாடுதுறை-அசிக்காடு தடத்தில் நகரத் தடம் எண் 10-சியின் மூலம் மாலை 3.10க்கு மயிலாடுதுறையில் நடை எடுத்து இயக்கப்பட்டு வருகிறது.

17--

### தடம் எண் 58 நாகம்பாடி வரை நீட்டித்தல்

வினா எண் 48675--**திரு எஸ். ஆசைமணி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சை மாவட்டம், கும்பகோணத்திலிருந்து நக்கம்பாடி வரை சென்று வந்த தடம் எண் 58 சோழன் நகர பேருந்தை நாகம்பாடி கிராமம் வரை சென்று வர அரசு ஆவன செய்யுமா?

விடை--

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் :**

கோரிக்கை தடம் எண் 58 பல்வழித்தடங்களில் இயக்கப்படுகிறது. மயிலாடுதுறைக்காக தடம் எண் 13 மயிலாடுதுறை-வடமட்டம் (வழி) பகுத்திக்குடி, நாகம்பாடி தடத்தில் 4 நடைகள் இயக்கப்படுகிறது. எனவே தடம் எண் 58 நாகம்பாடி வரை செல்வதனால் பயண நேரம், கட்டணம், மற்றும் கால அட்டவணை முழுவதும் மாறுபட்டு பிரச்சினைகள் எழ வாய்ப்பு அளிக்கும். எனவே தடம் எண் 58-ஐ நாகம்பாடி வரை நீட்டிக்க இயலாது.

18--

### சேலம்-பெங்களூர் அகல இரயில்பாதையாக மாற்றுதல்

வினா எண் 65341--**திரு கே.ஏ. மனோகரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சேலம்-பெங்களூர் இரயில் பாதையினை அகல இரயில் பாதையாக மாற்ற வேண்டிய அவசியத்தினை மத்திய அரசுக்கு வலியுறுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ): சேலம்-பெங்களூர் இரயில் பாதையினை அகல இரயில் பாதையாக மாற்றுவது குறித்த திட்டம் 1995-96 ஆம் ஆண்டிற்கான இரயில்வேயின் செயல்முறை திட்டப்பணிகளில் (Railway's Works Programme) சேர்க்கப்பட்டுள்ளதுடன் அதனை நிறைவேற்றுவதற்கான பணிகளும் துவக்கப்பட்டுள்ளன. எனவே இது குறித்து மத்திய அரசை வலியுறுத்தும் அவசியம் எழவில்லை.

**19--**

**ஜெயங்கொண்டம்-பெரம்பலூர் வரை புதிய வழித்தடம் இயக்குதல்**

வினா எண் 65394--**திரு. ஆர். தங்கராஜ் :** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஜெயங்கொண்டம், தீரன் சின்னமலை கிளையில் இருந்து ஜெயங்கொண்டம் செந்துறை, நக்கம்பாடி, காடூர், வேட்டக்குடி வழியாக மற்றும் திட்டக்குடி, பெரம்பலூர் வரை ஒரு புதிய வழித்தடப் பேருந்தை இயக்கித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை--**

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) : கோரிக்கையில் உள்ள ஜெயங்கொண்டம்-பெரம்பலூர் (வழி) செந்துறை, நக்கம்பாடி, காடூர்,

*1995 நவம்பர் 3*]

வேட்டக்குடி, திட்டக்குடி வழித்தடத்தின் மொத்த தூரம் 106 கி.மீ. இவ்வழித்தடப் பகுதி முழுவதும் நகர் மற்றும் புறநகர் பேருந்துகள் மூலம் நன்கு இணைக்கப்பட்டுள்ளது. இவ்வழித்தடம் சுற்றுப் பாதையில் செல்வதால் நேரடி பயணிகள் பயணம் செய்ய வாய்ப்பில்லை. எனவே இவ்வழித்தடத்தில் புதிதாக பேருந்து இயக்க அவசியம் இல்லை.

**20--**

**திருத்துறைப்பூண்டி-மதுரை பேருந்து வசதி செய்தல்**

வினா எண் *67554*---திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி மதுரை இடையே பேருந்து வசதி செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

திருத்துறைப்பூண்டி-மதுரை பேருந்து விடுவதற்கு செயற்குறிப்பு ஏதும் இல்லை. திருத்துறைப்பூண்டி-மன்னார்குடி, மன்னார்குடி-மதுரை எனப் பகுதி பகுதியாகப் போதிய பேருந்து வசதி உள்ளது.

**21--**

**மருதுபாண்டியர் போக்குவரத்துப் பணிமனை ஏற்படுத்துதல்**

வினா எண் *87347*--டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) இராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடியில் மருதுபாண்டியர் போக்குவரத்துப் பணிமனை ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆமெனில், விவரம் என்ன?

விடை--

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) இராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடியில் மருதுபாண்டியர் போக்குவரத்துப் பணிமனை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**22--**

**திருச்சியில் ஜெ.ஜெ. போக்குவரத்துக் கழகத்திற்கு தனிப் பேருந்து நிலையம் அமைத்தல்**

வினா எண் 88126--டாக்டர் ச. ஆரோக்கியசாமி: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சியில் ஜெ.ஜெ. போக்குவரத்துக் கழகத்திற்கு தனிப் பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை--

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:**

திருச்சியில் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா போக்குவரத்துக் கழகத்திற்கு தனிப் பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

**23--**

**வாலாங்குளம் அம்மன் குளத்தில் அடுக்கு மாடி வீடுகள் அமைத்தல்**

வினா எண். 38268--**திரு. வி. கே. லட்சுமணன்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கோயம்புத்தூர் மாநகராட்சியில் வாலாங்குளம் பகுதியில் உள்ள மக்களுக்கு எப்பொழுது அம்மன் குளத்தில் அடுக்கு மாடி வீடுகள் கட்டித்தரப்படும்?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :**

கோயம்புத்தூர் மாநகராட்சியில் வாலாங்குளம் பகுதியில் வசிக்கும் குடிசைப் பகுதி மக்களுக்கு அம்மன் குளம் பகுதியில் வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக அம்மன் குளம் பகுதியில் உள்ள அரசு நிலத்தின் நிலப் பயன்பாடு (Land Use) குடியிருப்புப் பகுதியாக மாற்றப்பட வேண்டியுள்ளது. இதற்கான பிரேரணை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் அனுப்பப்பட்டு கோவை உள்ளூர் திட்ட குழுமத்தால் 8/94-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு அப்பிரேரணை தற்போது நகர மற்றும் ஊரகத் திட்ட இயக்குநருக்கு அனுப்பப்பட்டுள்ளது. நகர மற்றும் ஊரகத் திட்ட இயக்குனர் ஒப்புதல் அளித்த பின்னர் நிலப்பயன்பாடு மாற்றம் குறித்து அரசின் ஒப்புதல் பெற்றவுடன் வரைபட ஒப்புதல் பெற்று அட்கோவிடம் கடனுதவி பெற்று திட்டப் பணிகள் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**24--**

**தட்டான் ஓடை பள்ளிக்கு மதிய உணவு வழங்குதல்**

வினா எண். 38339--**செல்வி கோ. மல்லிகா:** மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், தட்டான் ஓடை துவக்கப் பள்ளிக்கு பி. ஆதானூரிலிருந்து மதிய உணவு வராததால் 6 மாதமாக உணவு சாப்பிடாத குழந்தைகளுக்கு மீண்டும் மதிய உணவு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆமெனில், எப்பொழுது முதல் வழங்கப்படும்?

**விடை--**

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1-4-1995 முதல் தட்டான் ஓடை கிராம குழந்தைகளுக்கு மதிய உணவு மீண்டும் வழங்கப்பட்டு வருகிறது.

25--

## ஒய்வூதியம் பெறும் மொழிப்போர் தியாகிகள் விவரம்

வினா எண். 26816--திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மொடக்குறிச்சி தொகுதியில் மொழிப்போர் தியாகிகள் ஓய்வூதியம் பெறும் நபர்கள் எத்தனை பேர்?

(ஆ) விண்ணப்பித்து காத்திருப்பவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களுக்கு எப்போது ஓய்வூதியம் கிடைக்கும்?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) 21 பேர்.

(ஆ) விண்ணப்பம் ஏதும் நிலுவையில் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

26--

## மைலம் ஊராட்சி ஒன்றியத் துவக்கப்பள்ளிக்கு கூடுதல் ஆசிரியர் நியமித்தல்

வினா எண். 38107--திரு. எஸ். பன்னீர் செல்வம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திண்டிவனம் வட்டம், புலியனூர் கிராமம், மைலம் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிக்கு கூடுதல் ஆசிரியர்களை நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆமெனில், எப்போது?

விடை--

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

*1995 நவம்பர் 3]*

**27--**

**வல்லத்தில் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்குதல்**

*வினா எண். 43612--***திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*தஞ்சாவூர் வட்டம், வல்லத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க அரசிடம் செயற்குறிபபு உள்ளதா?*

**விடை--**

***மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:***

*மாணவியர்கள் எண்ணிக்கை அடிப்படையில் 9 (ஒன்பது) பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.*

**28--**

**கோவிலில் ஓதுவார்களுக்கு கலைமாமணி விருது வழங்குதல்**

*வினா எண் 44335--***திருமதி கே. மரியம் உல் ஆசியா:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*தமிழகத் திருக்கோயில்களில் பணியாற்றும் ஓதுவார்களுக்கு கலைமாமணி விருது வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?*

**விடை--**

***மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:***

*தமிழகத் திருக்கோயில்களில் பணிபுரியும் ஓதுவார்களுக்கும் "கலைமாமணி" விருது வழங்கப்பட்டு வருகின்றது.*

**29--**

**வினாங்குளம் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்**

*வினா எண். 47174--***திரு. ஆர். சிங்காரம்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

*பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வினாங்குளம் நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை--**

***மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:***

*தற்பொழுது அரசின் ஆய்வில் இல்லை.*

**30--**

### தர்மபுரி மாவட்ட அகழ்வாராய்ச்சி விவரம்

*வினா எண் 571312--திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--*

*(அ) தருமபுரி மாவட்டத்தில் எந்தப் பகுதியில் அகழ்வாராய்ச்சி செய்யப்பட்டது?*

*(ஆ) அதன் முடிவுகள் வெளியிடப்பட்டதா?*

*(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?*

**விடை--**

***மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:***

*(அ) தருமபுரி மாவட்டத்தில் மல்லப்பாடி, அதியமான் கோட்டை குட்டூர் ஆகிய இடங்களில் சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறையினரால் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. பனைக்குளத்தில் தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் மாதிரி அகழாய்வு நடத்தப்பட்டது.*

*(ஆ) அதன் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.*

*(இ) முடிவுகளின் விவரம் வருமாறு:*

***மல்லப்பாடி:***

*தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டத்தில் அமைந்துள்ள மல்லப்பாடியில் 1978-ஆம் ஆண்டு அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வகழாய்வில் புதிய கற்காலத்தைச் சார்ந்த கற்கோடாரிகளும்,*

*1995 நவம்பர் 3]*

கண்ணாடி வளையல்கள், சுடுமண் பொம்மைகள் மற்றும் சாம்பல் நிற மண்பாண்டங்கள், கருப்பு, சிவப்பு மண்பாண்டங்கள், மணிகள், சுடுமண் பொம்மைகள், செம்பு மோதிரம், கண்ணாடி மோதிரம் ஆகிய தொல்பொருட்கள் கிடைக்கப் பெற்றன. இவ்வகழ்வாய்வின் மூலம் இப்பகுதியில் புதிய கற்காலம் (கி.மு. 5000) தொட்டு மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் வெளிப்படுத்தப்பட்டன.

**அதியமான் கோட்டை:**

தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டத்தில் அமைந்துள்ள அதியமான் கோட்டையில் சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறையினரால் 1981-92-ஆம் ஆண்டுகளில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வகழாய்வில் சுடுமண் பொம்மைகளும், கல்லினால் செய்யப்பட்ட மணிகள், சங்கு, கண்ணாடி, செம்பு ஆகியவற்றாலான வளையல்களும் மற்றும் தொல்பொருட்களும் கிடைக்கப் பெற்றன. சுடுமண் பொம்மைகளும், பெண்ணின் தலைப்பகுதி, பெண்ணின் கால், பெண் தெய்வத்தின் தலை, அனுமன் உருவம், பாலகிருஷ்ணன் மற்றும் விலங்கின் உருவம் ஆகியனவும், தொல்பொருட்களின் செப்பு விளக்கு, சுடுமண் விளக்குகள், மாக்கல் விளக்கு, கல்சட்டி, இரும்பு பொருட்கள், ஆகியனவும், கருப்பு சிவப்புப் பானைகள், கருப்பு மண்பாண்டங்கள், வழவழப்பான சிவப்பு மண்பாண்டங்கள், காவிக்கலவை பூசப்பட்ட மண்பாண்டங்கள் குறிப்பிடத் தக்கவை ஆகும். இவ்வகழ்வாய்வின் மூலம் பெருங்கற்காலம் (இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது) முதல் தொடர்ந்து மக்கள் வாழ்ந்தமைக்கான சான்றுகள் வெளிப்படுத்தப்பட்டன.

**குட்டூர்:**

தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டத்தில் அமைந்துள்ள குட்டூர் பகுதியில் சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறையினரால் அகழாய்வு மேற்கொள்ளப்பட்ட இவ்வகழாய்வில் கடைக்கால் சுவர் பகுதி, தரைப்பகுதி மற்றும் ஊது உலைகள் கண்டு எடுக்கப்பட்டன. சங்கு, கண்ணாடி, எலும்பு ஆகியவற்றாலான வளையல்கள், பளிங்குகல் ஜாஸ்பர், கார்னீலியன் ஆகியவற்றாலான மணிகள் பல்வேறு வடிவங்களில் சேகரிப்பட்டன. மற்றும் எலும்பினால் ஆன அம்பு முனைகளும், கூர் முனைகளும், இரும்பு ஆணி, குறுவாள் முனைகள், இருபக்கக் கருவிகள், செம்பு வளையம் ஆகியனவும், சுடுமண்ணால் ஆன விலங்குகள் உருவம், பெண்ணின் தலை,

பகடைக்காய்கள், புகைப்பான்கள், தக்கிளி, அகல் விளக்குகள் ஆகியனவும் சேகரிக்கப்பட்டுள்ளன. இவ்வகழ்வாய்வின் மூலம் பெருங்கற்காலம் தொடர்ந்து மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் தெரிய வந்துள்ளன.

**பனைக்குளம்:**

தருமபுரி மாவட்டத்தில் பாலக்காடு வட்டத்தில் அமைந்துள்ள இவ்வூரில் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் மாதிரி அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இப்பகுதியில் மேற்கொண்ட அகழாய்வில் சுடுமண்ணால் செய்யப்பட்ட பச்சைக்கிளி போன்ற பறவைகளின் உருவங்களும், மனிதன் தலைகளும் சேகரிக்கப்பட்டன. இவை கி.பி. 7-8ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. மேலும் பானை ஓடுகளும் சேகரிக்கப்பட்டன. இப்பகுதியில் கிடைத்த கல்வெட்டுக்களின் மூலம் இங்கு சமனப்பள்ளி இருந்ததாக அறிய முடிகிறது.

**31--**

**மல்லப்பாடியில் கண்டுபிடிக்கப்பட்ட குகை ஓவியங்கள் விவரம்**

வினா எண் *65331*--**திரு. கே. ஏ. மனோகரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டத்திலுள்ள மல்லப்பாடி கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட குகை ஓவியங்கள் தன்மையினை அரசு அறியுமா?

(ஆ) அந்தப் பகுதியில் அகழ்வாராய்ச்சி செய்து வரலாற்றுச் சின்னங்களைக் கண்டறிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டத்தில் உள்ள மல்லப்பாடி கிராமத்தில் குகை ஓவியங்கள், 1978-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டது. இக்குகையின் மேல் கூரையில் அழகான ஓவியம் வெள்ளை வண்ணத்தால்

*1995 நவம்பர் 3]*

தீட்டப்பட்டிருக்கிறது. இரு குதிரை வீரர்கள் கையிலே நீண்ட கம்பைப் பிடித்துக் கொண்டு நேருக்குநேர் போர் புரிகின்ற வகையில் அவ்வோவியம் தீட்டப்பட்டிருக்கிறது. குதிரையினுடைய வாய்ப் பகுதியிலிருந்து செல்லும் கடிவாளம் வீரனின் இடக்கையில் பிடிக்கப்பட்டிருக்கிறது. இக்குதிரையின் முகம், காற்குளம்புகள், குதிரையினுடைய அளவு ஆகியவைகளைப் பார்க்கின்றபொழுது நல்ல கைத் தேர்ந்த ஓவியர்களால் இவ்வோவியங்கள் வரையப்பட்டிருக்கிறது என்பதை ஊகிக்க முடிகிறது. இவ்வோவியங்களுடைய உயரம் 10 அங்குலம் அளவிற்குத்தான் உள்ளன. இவை அளவில் சிறியதாக இருந்தாலும் அவற்றினுடைய அமைப்பின் அடிப்படையில் புதிய கற்காலத்தைச் சார்ந்தவையாக இவற்றைத் தொல்லியல் வல்லுநர்கள் கணித்துள்ளார்கள். ஆதலால் இவ்வோவியங்கள் இன்றைக்குச் சுமார் 5000 ஆண்டுகளுக்கு முந்தையவை என்று கூறப்படுகிறது. இவ்வோவியங்கள் கிடைத்துள்ள பகுதியில் முன்னரே சென்னைப் பல்கலைக் கழகத் தொல்லியல் துறையினர் அகழாய்வு மேற்கொண்டு சில தொல்பொருள்களை கண்டெடுத்திருக்கிறார்கள். அப்பகுதியில் மேலும் அகழாய்வு மேற்கொண்டால் புதிய கற்காலத்திலிருந்து, தற்காலம் வரையிலான பண்டைய பண்பாட்டுக் கூறுகளைக் கண்டுபிடிக்க இயலும். ஆதலால் வரும் ஆண்டுகளில், இப்பகுதியில் தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் அகழாய்வு மேற்கொள்ளப்படும்.

**32--**

**பழங்கால வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாத்தல்**

வினா எண் 67676--**திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருங்காபுரியில் ஜமீன்தார்கள் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட அரண்மனை மற்றும் நீராழி மண்டபம், உப்பரிகை மாளிகை முதலிய பழங்கால வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை--**

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருங்காபுரியில் உள்ள ஜமீன்தார்கள் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட அரண்மனையில் வரலாற்றுச் சின்னமாகப் பாதுகாக்க வேண்டிய அளவுக்கு சிறப்புடன் கூடிய பகுதிகளோ, தொன்மையான கட்டடப் பகுதிகளோ ஏதும் இல்லையென்பதால் பாதுகாப்பது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**33--**

## கொட்டமஞ்சி மேலூர் சாலையை சீர் செய்தல்

வினா எண் 37548--திரு. மு. வெங்கட்ராம ரெட்டி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தென்கனிக்கோட்டை வட்டம், தனி ஊராட்சி ஒன்றியம் கொட்டமஞ்சி மேலூர் சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இச்சாலை மண்சாலையாக உள்ளது. மேலும் இச்சாலை முழுவதும் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் செல்வதால் வனத்துறை அனுமதி பெற்று தார் சாலையாக மாற்றினால்தான், கொட்டமஞ்சி கொலுவபேட்டை, குல்லட்டி, மேலூர் போன்ற கிராமங்களில் வாழும் மக்களுக்கு வசதியாக இருக்கும். இச்சாலையை மேம்பாடு செய்ய தோராயமாக ரூ. 45.00 இலட்சம் தேவைப்படும். தற்சமயம் இச்சாலை அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

**34--**

## பெரம்பலூர் வட்டத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 39183--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

1995 நவம்பர் 3]

திருச்சிராப்பள்ளி மாவட்டம், பெரம்பலூர் வட்டம், அயன்பேரையூர் நெய்க்குட்டை, நாத்தப்பூர், அ. மேட்டூர் ஆகிய கிராமங்களில வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்துத் தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**35--**

**வில்லிவாக்கம் தொகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்**

வினா எண் 39225--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம், வில்லிவாக்கம் தொகுதி, நெற்குன்றம், மதுரவாயல், வானகரம் தாதர்குட்டம், போரூர் ஆகிய ஊர்களில் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கடடித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்துத் தனியாக அரசிடம் திட்டம் எதுவும் இல்லை.

36--

## காரியப்பட்டி ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 39522--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

காமராஜர் மாவட்டம், காரியம்பட்டி ஒன்றியம், தனுக்கன் குளம், சூரனூர், பி. புதுப்பட்டி, பிசிந்தி, பணிக்குருப்பு, தோணுகால், தண்டியவேந்தல், கல்குறிச்சி, ஜோசிஸ்பட்டி, சத்திரம், புளியங்குளம் ஆகிய கிராமங்களில் வாழும் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்துத் தனியாக அரசிடம் திட்டம் எதுவும் இல்லை.

37--

## தஞ்சாவூர் மாவட்டத்தில் தொடக்கப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம்

வினா எண் 43510--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், ராராமுத்திரைக் கோட்டை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டிக் கொடுக்க ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்துத் தனியாக அரசிடம் திட்டம் எதுவும் இல்லை.

**38--**

**கண்டிதம்பட்டு ஊராட்சி ஒன்றிய பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்**

வினா எண் 43511--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், கண்டிதம்பட்டு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டிக் கொடுக்க ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டு உள்ளது. எனவே இப்பொருள் குறித்துத் தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

TRUTH ALONE TRIUMPHS

39--

## மடிகை ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 43513--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், மடிகை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டிக் கொடுக்க ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டு உள்ளது. எனவே இப்பொருள் குறித்துத் தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

40--

## காரமடை சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 44820--**திரு. கே. செல்வராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கோயம்புத்தூர் மாவட்டம், காரமடையிலிருந்து செல்லும் சாலையை அகலப்படுத்தித் தார்ச் சாலை அமைக்கப்படுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1995 நவம்பர் 3]*

கோயம்புத்தூர் மாவட்டம், காரமடையிலிருந்து வெள்ளியங்காடு வரை செல்லும் இரு சாலைகளும் ஒரு வழிப்பாதையாக 3.75 மீட்டர் அகலமுள்ள தார்ச் சாலையாக உள்ளன. 16.60 கி.மீ. நீளத்தினை ஒரு பக்கம் மட்டும் 1 மீட்டர் அகலப்படுத்தும் பணி தற்போது நடைபெற்றுக் கொண்டுள்ளது. இப்பணிகளில் 80 சதவிகிதம் முடிவடைந்துள்ளன. மீதம் உள்ள பணிகள் அனைத்தும் விரைவில் முடிவு பெறும்.

**41--**

**குத்தாலம் தொகுதியில் கான்கிரிட் நடைபாலம் அமைத்தல்**

வினா எண் 44997--**திரு. எஸ். ஆசைமணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, மயிலாடுதுறை வட்டம், ஆலங்குடி ஊராட்சி, நாகமங்கலம் கிராம ஆதிதிராவிடர்கள் மயானத்திற்குச் செல்லும் வழியிலுள்ள "காணிவாய்க்காலில்" குறுக்கே ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கான்கிரீட் நடைபாலம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை--**

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆலங்குடி ஊராட்சி, நாகமங்கலம் கிராம ஆதிதிராவிடர்கள் மயானத்திற்கு செல்லும் வழியில் காணிவாய்க்காலில் தற்போது மூங்கில் பாலம் உள்ளது. 1994-95-ம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கான்கிரீட் பாலம் கட்டித்தர நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லையாதலால், இப்பணியை அத்திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்ய இயலவில்லை.

**42--**

**பேராவூரணி தொகுதியிலுள்ள கலங்கரை விளக்குகளைப் பராமரித்தல்.**

வினா எண் 84458--**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

பேராவூரணி தொகுதி, கடலோர மீனவ கிராமங்களான ஏரிப்புறக்கரை, கொள்ளக்காடு, புதுப்பட்டினம்--மல்லிப்பட்டினம், கம்பைப்பட்டினத்திலும், அடைக்கத்தேவன், அம்மணிச் சத்திரம், கெந்துவபட்டினம், மந்திரிப்பட்டினம், அண்ணாநகர் சோமநாதப்பட்டினம், கணேசபுரம், செம்பிய மாதேவிப்பட்டினம் ஆகிய ஊர்களில் உள்ள கலங்கரை விளக்குகளைப் பராமரித்து நன்கு எரியச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை--

**மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் கடற்கரையோரத்தில் உள்ள துறைமுகப் பகுதியில் கலங்கரை விளக்குகள் அமைத்தல் மற்றும் பராமரிப்புப்பணி, மீன்வளத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லை. அவைகள் துறைமுகத் துறையினரால் பராமரிக்கப்படுகிறது.

பேராவூரணி தொகுதியில் கலங்கரை விளக்குகள் ஏதும் மீனளத்துறையின் கட்டுப்பாட்டில் பராமரிக்கப்படவில்லை. எனினும் மல்லிப்பட்டினம், சேதுபாவாசத்திரம், கழுமங்குடா, சோமநாதப்பட்டினம், செம்பிய மாதேவிப்பட்டினம் ஆகிய இடங்களில் வழிகாட்டி விளக்குகளில், (Guide Lights) மல்லிப்பட்டினத்திலுள்ள வழிகாட்டி விளக்கு மட்டும் துறையின் பொறுப்பில் உள்ளது. ஏனைய நான்கு வழிகாட்டி விளக்குகளும் (Guide Lights) ஊரக வளர்ச்சித் துறைக் கட்டுப்பாட்டில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**43--**

**தேனீக்கள் வளர்ப்பவர்களுக்கு ஈட்டுத் தொகை வழங்குதல்**

வினா எண் *46321*--திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

*(அ)* கன்னியாகுமரி மாவட்டத்தில் தேனீக்கள் வளர்ப்பவர்களுக்கு தேனீக்கள் நோயினால் பாதிக்கப்படும் போது அதற்கான ஈட்டுத் தொகையை கேரள மாநிலத்தில் வழங்குவது போல் உடனடியாக வழங்கப்படுமா?

*(ஆ)* ஆமெனில், அதன் விவரம் என்ன?

*1995 நவம்பர் 3]*

**விடை--**

**மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தேனீக்களுக்கு ஏற்பட்ட ஒருவித கொடிய நோயினால் பாதிக்கப்பட்ட தேனீ வளர்ப்புத் தொழிலை மேம்படுத்தும் எண்ணத்தில், தேனீக் குடும்பங்களை வாங்குவதற்கும், பராமரிப்பதற்கும் பாதிக்கப்பட்ட தேனீ வளர்ப்போருக்கு நபர் ஒன்றிற்கு ரூ. 250/– என்ற அடிப்படையில், ஒரு நபருக்கு அதிகபட்சமாக ரூ. 1000/– வரை உடனடி நிவாரணமாக, வாரியத்திலிருந்து மான்யமாக வழங்க மொத்தம் ரூ. 10.00/– இலட்சம் நிதி சுமார் 2000 தேனீ வளர்ப்போர் பயன்பெறும் பொருட்டு கதர் கிராமத் தொழில் வாரிய நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்ய அரசு அனுமதித்துள்ளது.

**44--**

**மண்பாண்டத் தொழில் பயிற்சி நிலையம் அமைத்தல்**

வினா எண் 61419--திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மண்பாண்டத் தொழிலை மேம்படுத்த மாவட்டம் தோறும் மண்பாண்டத் தொழில் பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பாண்டிச்சேரி ஆகிய ஐந்து மாநிலங்களுக்கும் சேர்த்து ஒரு மண்டல மண்பாண்டத் தொழில் பயிற்சி நிலையம் தமிழ்நாட்டில், செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில், செவ்வாய்பேட்டையில் இயங்கி வருகிறது. பயிற்சி நிலையத்திற்குண்டான செலவுகள் யாவும் பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவினால் வழங்கப்பட்டு வருகிறது. மண்பாண்டப் பயிற்சி குறித்த விவரங்கள் தமிழ்நாடு உட்பட ஐந்து மாநிலங்களிலும் செய்தித்தாள்கள் மூலம் பிரசுரிக்கப்பட்டு மாணவர்கள்

சேர்க்கப்படுகின்றனர். ஒவ்வொரு பயிற்சிக் காலமும் 5 மாதங்களாக நிர்ணயிக்கப்பட்டு 25 நபர்கள் சேர்க்கப்பட்டு நபர் ஒன்றுக்கு ரூ. 250/– வீதம் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது. உதவித் தொகை குறைவாக இருப்பதால் ஒவ்வொரு பயிற்சிக் காலங்களிலும் முழு அளவில் மாணவர்கள் சேர்வதில்லை. எனவே, ஒவ்வொரு மாவட்டந்தோறும் மண்பாண்டத் தொழில் பயிற்சி நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

**45--**

**இராதா நரசிம்மபுரத்தில் கால்நடைக் கிளை மருத்துவ நிலையம் தொடங்குதல்**

வினா எண் 76277--திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மன்னார்குடி தொகுதி, இராதா நரசிம்மபுரம் கிராமத்தில் கால்நடைக் கிளை மருத்துவ நிலையம் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆமெனில், விவரம் என்ன?

**விடை--**

**மாண்புமிகு திரு. எம். சி. தாமோதரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி இராதா நரசிம்மபுரம் கிராமத்திற்கு பக்கத்தில் 2 கிலோ மீட்டர் முதல் 12 கிலோ மீட்டருக்கு உட்பட்ட பகுதிகளில் இரண்டு கால்நடை மருந்தகமும், மூன்று கால்நடைக் கிளை நிலையங்களும் மற்றும் ஒரு பார்வைக் கிளை நிலையமும் தற்பொழுது செயல்பட்டு வருகின்றன. இந்நிலையங்கள், இராதா நரசிம்மபுரம் கிராம கால்நடைகளுக்குத் தேவையான மருத்துவ வசதிகளை கவனித்து வருகின்றன. எனவே, புதிதாக கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1995 நவம்பர் 3]

46--

## கோட்டாகுடியில் கால்நடை மருந்துவமனை அமைத்தல்

வினா எண் 82973--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, கோட்டக்குடியில் துணைக் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. எம். சி. தாமோதரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

பேராவூரணி தொகுதி, கோட்டக்குடி கிராமத்திற்கு 6 கி.மீ. தொலைவில் இரண்டாம் புலிக்காடு என்ற இடத்தில் கால்நடை மருந்தகமும், 4 கி.மீ. தொலைவில் சொக்கநாதபுரம் கால்நடைக் கிளை நிலையமும் இயங்கி வருகின்றன. மேலும் கோட்டக்குடி கிராமத்தைச் சுற்றி அமைந்துள்ள கிராமங்களில் கால்நடைகளின் எண்ணிக்கை 5000-க்குக் குறைவாக உள்ளதால், கோட்டக்குடி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

47--

## வெளிவயலில் கால்நடை மருத்துவனை அமைத்தல்

வினா எண் 82987--திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சியைச் சேர்ந்த வெளிவயலில் கால்நடை துணை மருத்துவமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை--

**மாண்புமிகு திரு. எம். சி. தாமோதரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

[1995 நவம்பர் 3

சேதுபாவாசத்திரம் ஒன்றியம் வெளிவயலில் இருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில், இரண்டாம் புலிக்காடு கால்நடை மருந்தகம் அமைந்துள்ளது. மேலும் 8 கிலோ மீட்டர் தூரத்தில் சொக்கநாதபுரம் கால்நடைக் கிளை நிலையமும், 7 கிலோ மீட்டர் தூரத்தில் குருவிக்கரம்பை கால்நடைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருகின்றன. வெளிவயல் கிராமத்திலும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் கால்நடைகளின் எண்ணிக்கை 5000-க்கும் குறைவாக உள்ளது. ஆகவே, வெளிவயலில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் ஏதுமில்லை.

48--

## கால்நடை பண்ணைகள் அமைத்தல்

வினா எண் 84138--திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழ்நாட்டில் மேலும் கூடுதலாக கால்நடைப் பண்ணைகள் அமைப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கின்றதா?

**விடை--**

**மாண்புமிகு திரு. எம். சி தாமோதரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்பொழுது தமிழ்நாட்டில் கால்நடைப் பராமரிப்புத்துறையின் கீழ் 8 கால்நடைப் பண்ணைகளும், 2 ஆட்டுப்பண்ணைகளும் இயங்கி, நமது மாநிலத்தின் தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றன. இந்நிலையில், தற்போது, மேலும் கூடுதலாக கால்நடைப் பண்ணைகள் அமைப்பதற்கு அவசியம் ஏற்படவில்லை. மேலும், செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

49--

## அழகர் கோவிலைச் சுற்றியுள்ள கடைகள் வாடகை விவரம்

Question No 8318--**Thiru M. Sundaradass:-** Will the Hon'ble Hindu Religious and Charitable Endowments Minister be pleased to State--

*1995 நவம்பர் 3]*

(அ) Whether the Koodal Alagar Temple Tank in Madurai City is being let out to traders?

(ஆ) the reasons thereof?

(இ) the steps taken to eject the traders?

**விடை--**

**மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர்:**

(அ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள தெப்பக்குளத்தின் கிழக்கு, மேற்கு மற்றும் வடக்கு ஆகிய மூன்று பக்கங்களிலும் உள்ள காலியிடங்கள் கோவிலால் மாத வாடகைக்கு விடப்பட்டுள்ளன. வாடகைதாரர்கள் தன் சொந்த செலவில் அந்த இடங்களில் கடைகளை அமைத்து வியாபாரம் செய்து வருகின்றனர். தெப்பக்குளத்தின் தெற்கு பக்கத்தில் இருக்கும் கடைகள் மதுரை மாநகராட்சியால் கட்டப்பட்டு வாடகைக்கு விடப்பட்டுள்ளவை ஆகும்.

(ஆ) திருக்கோயிலின் வருமானத்தைப் பெருக்க நகைக் கடைகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளன. நான்கு புறமும் உள்ள இக்கடைகள் மூலம் திருக்கோவிலுக்கு ஆண்டுக்கு ரூபாய் 2,28,633/- வாடகை கிடைக்கிறது.

(இ) இத்திருக்கோயிலால் மதுரை மாநகராட்சியின் மீது மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், கடைகளை இடித்து அப்புறப்படுத்தித் தருமாறு நீதிமன்றம் மதுரை மாநகராட்சிக்கு உத்தரவிட்டுள்ளது. நீதிமன்றத்தில் இந்த ஆணையை செயல்படுத்த வேண்டும் என்று மதுரை மாநகராட்சியின் மீது, திருக்கோயிலால் நிறைவேற்ற மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**50--**

**பெத்த நாச்சியம்மன் கோவில் குளத்தைச் சீர் செய்தல்**

வினா எண் 35398--**திரு. தி. சாத்தையா:** மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) இராஜபாளையம் ஒன்றியம், தேவதானம் பெத்த நாச்சியம்மன் கோவிலையும், அக்கோவில் குளத்தையும் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) இராஜபாளையம் ஒன்றியம், சோழபுரம் பெருமாள் கோவிலையும், அக்கோயில் குளத்தை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை--

**மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்துபிள்ளை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) இராஜபாளையம் ஒன்றியம், தேவதானம் பெத்த நாச்சியம்மன் திருக்கோயில் திருப்பணிகளை மேற்கொள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையரால் நிர்வாக மற்றும் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, இதற்கென முதலமைச்சர் திருக்கோவில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ரூபாய் ஐந்து லட்சம் வழங்கப்பட்டு உள்ளது. திருப்பணி வேலைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோவிலின் திருக்குளத்தின் ஒரு பகுதி வேலை ரூபாய் 1.50 இலட்சம் செலவில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியத்தால் செய்து முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய வேலைகளை அரசு மான்யம் பொது நல நிதி ஆலய மேம்பாட்டு நிதி ஆகியவை மூலமாக மேற்கொள்ள ரூபாய் 6.50 லட்சத்திற்கு மதிப்பீடு பெறப்பட்டு ஆணையரின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இராஜபாளையம் ஒன்றியம், சோழபுரம் பெருமாள் கோவிலின் திருப்பணிகள் ரூபாய் ஒரு லட்சம் செலவில் இரண்டாண்டுகளுக்கு முன்னர் தனியார் ஒருவரால் செய்யப்பட்டுள்ளது. திருக்கோவில் தற்போது பழுதின்றி நன்றாக உள்ளது. இத்திருக்கோவிலின் திருக்குளமும் 1993-94 ஆம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் சீர் செய்யப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.**

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) அனுமதி மறுக்கப்பெற்ற பிரச்சினைகள் குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் ஒரு பிரச்சினையை எழுப்ப அனுமதிக்க இருக்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள். திருமதி பொன்னம்மாள், நீங்கள் கொடுத்ததற்கு நான் உங்களுக்குப் பதில் கொடுத்திருக்கிறேன். நான் உங்களுக்கு விளக்கம் கொடுத்த பிறகு இங்கே வந்து எழுப்பக் கூடாது. (குறுக்கீடு) வேறு ஒரு பிரச்சினையை இன்றைக்கு எடுத்துக் கொள்ள இருக்கிறேன்.

**திரு. வே . தம்புசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் பிரச்சினைக்கு பிறகு வருகிறேன். உட்காருங்கள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதிகள் எல்லாம் இருக்கின்றன. (குறுக்கீடுகள்) நான் உங்களுக்கு விளக்கம் அளித்ததற்குப் பிறகு இங்கே வந்து எழுப்பக் கூடாது என்றும் விதியிருக்கிறது. (குறுக்கீடுகள்) எல்லா விதிகளையும் விட்டுவிடுங்கள் என்று சொன்னால் நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடுகள்) நான் மறுத்த பிரச்சினையை இங்கே வந்து எழுப்பக் கூடாது என்றும் விதியிருக்கிறது. (குறுக்கீடுகள்) விதியிருக்கிறபோது நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடு) விதியிருக்கிறது என்று சொல்லிவிட்டு நீங்கள் நின்றால் அதிலே பொருளே இல்லை. (குறுக்கீடுகள்) இங்கே இப்படி எழுப்பக்கூடாது என்ற விதியிருக்கிறது என்பதை நான் சொல்கிறேன். (குறுக்கீடு) அந்த விதியிருக்கிறது என்று நீங்களும் ஒத்துக் கொள்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இல்லை. இது முறையல்ல. (குறுக்கீடுகள்) சந்தனக் கடத்தல் வீரப்பன் வனத்துறை அதிகாரிகள் சிலரைக் கடத்திச் சென்று பிணைக் கைதிகளாக வைத்திருப்பது பற்றிய ஒரு பிரச்சினையை அவையின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று சில உறுப்பினர்கள் கோரியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) பீட்டர் அல்போன்ஸ், எதற்கு நீங்கள் எழுந்து நிற்கிறீர்கள்? திருமதி பொன்னம்மாள் அவர்கள் கேட்டார்கள், நான் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) விளக்கம் இதிலே

தேவையில்லை. (குறுக்கீடு) நான் உங்களுக்கு எழுத்து மூலமாக அதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்ட பிரச்சினையை இங்கே வந்து எழுப்ப முடியாது. (குறுக்கீடு) இங்கு வந்து எழுப்ப முடியாது. (குறுக்கீடு) மறுபரிசீலனை செய்யுங்கள் என்று சொல்வதைக்கூட என்னுடைய அறையிலே வந்துதான் கேட்க வேண்டும். இங்கு வந்து எழுப்ப முடியாது என்று விதி இருக்கிறது. எனவே, அந்தப் பிரச்சினையை இங்கே எழுப்பக்கூடாது, எழுப்ப முடியாது. (குறுக்கீடு) ஈஸ்வரன், நீங்கள் ஒன்றும் கொடுக்கவில்லை. கொடுக்காத ஈஸ்வரன் எதற்கு எழுந்து நிற்கிறீர்கள்? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அந்தப் பிரச்சனை தொடர்பானதை இங்கே எழுப்ப முடியாது என்று விதி இருக்கிறது. (குறுக்கீடு) விதியில் "No Motion which seeks to raise discussion on a matter pending before any statutory tribunal...." என்று இருக்கிறதே தவிர (குறுக்கீடுகள்) இல்லை, தெளிவாக விதி இருக்கிறது. (குறுக்கீடுகள்) அதிலே இல்லாத பிரச்சினை அல்ல. அதற்கு வழிவகுக்கிற பிரச்சினையை எழுப்ப முடியாது. (குறுக்கீடுகள்) சந்தனக் கடத்தல் வீரப்பன் வனத்துறை அதிகாரிகள் சிலரைக் கடத்தி சென்று வைத்திருப்பது குறித்த ஒரு பிரச்சினையை பேரவை விதி 56-ன் கீழ் எழுப்ப வேண்டுமென்று ஒரு அறிவிப்பை மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. எஸ். எஸ். ராமசுப்பு, திரு. இரா. தாமரைக்கனி, திரு. வே. தம்புசாமி, திரு. வே. பெரியசாமி ஆகியோர் என்னிடத்தில் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) அதுபற்றி பேரவையில் சிறப்புக் கவன ஈர்ப்பாக எழுப்பலாம் என்று நான் அனுமதி அளித்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) சிறப்புக் கவன ஈர்ப்பாக அதை எடுத்துக் கொள்கிறேன். அதை இப்போது பேரவையில் எழுப்பலாம். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்:** நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(திரு. ஆர். சிங்காரம், திரு. இரா. அப்பு நடேசன், திரு. கே. கே. சின்னப்பன், திரு. சஞ்சய் ராமசாமி, திரு. கே. செல்வராஜ், திருமதி ஜீனத் சர்புதீன் மற்றும் திரு. வே. கண்ணன் ஆகியோரைத் தவிர காங்கிரஸ் கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

முற்பகல் 11.25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. திரு. ராமசுப்பு, இருக்கையில் இல்லை. (குறுக்கீடுகள்) எனவே அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரான திரு. வே. பெரியசாமி பேசலாம் (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், நான் சொல்லும்போது இருக்கையில் இல்லை. திரு. வே. பெரியசாமி.

*1995 நவம்பர் 3]*

திரு. வே. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *பேரவை விதி 66,--*"No Motion which seeks to raise discussion on a matter pending before any statutory tribunal or statutory authority performing any judicial or quasi-judicial functions or any commission or court of enquiry appointed to enquire into, or investigate any matter shall ordinarily be permitted to be moved." --என்று இருக்கிறது No motion shall ordinarily be permitted to be moved. *எனவே சாதாரண நோக்கிலே கூட அத்தகைய, இந்த தீர்மானங்களை இங்கே முன்மொழிவதற்குக்கூட அனுமதிக்க முடியாது என்று தெளிவாக விதி இருக்கிறது. ஆகவேதான், நான் அனுமதி மறுத்திருக்கிறேன். எனவே, இதை மேலும் பிரச்சினை ஆக்க வேண்டாம் (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன், நான் கூப்பிடும்போது இல்லையென்றால் என்ன செய்ய முடியும் பிரச்சினை விசாரணைக் கமிஷனிலே இருக்கிற காரணத்தினாலே எழுப்ப முடியாது என்று விதியிலே இருக்கிறது. நான் அடுத்தப் பிரச்சினையை எடுத்திருக்கிறேன் உட்காருங்கள். (குறுக்கீடு).. மாண்புமிகு பேரவை முன்னவர்.*

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெளிவாக, விதி 66-ல் சொல்லப்பட்டிருக்கிறது--"சட்டப்படி அமைக்கப் பெற்ற விசாரணைக் குழு, நீதிமன்றமாக அல்லது பகுதி நீதிமன்றமாக இயங்க சட்டப்படி அமைக்கப்பெற்ற ஆணைக்குழு அல்லது ஒரு பொருள் குறித்து ஆய்வதற்காக அல்லது புலனாய்வதற்காக அமைக்கப் பெற்ற குழு அலலது விசாரணை மன்றம் ஆகியவற்றின் ஆய்வில் இருக்கும் பொருள் குறித்து விவாதம் எழுப்பும் வகையில் அமையும் தீர்மானம் சாதாரணமாக அனுமதிக்கப் பெறலாகாது" என்று திட்டவட்டமாக, தெளிவாக இருக்கிறது. (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சாதாரணமாகவே அனுமதிக்க முடியாது. நீங்கள் என்ன சொன்னீர்கள்? இந்தப் பிரச்சினையை விட்டு வெளியே வந்துவிட்டேன் என்று சொன்னீர்கள்? (குறுக்கீடு) திரும்பத் திரும்ப ஞானசேகரன் பேசிக் கொண்டிருந்தால் அது முறையில்லை. (குறுக்கீடு) ஈஸ்வரன் முறையற்ற போக்கிலே நடந்து கொண்டே இருக்கவேண்டாம் (குறுக்கீடு) உட்காருங்கள். முறையற்ற முறையிலே நடப்பது ஈஸ்வரனுக்கு வழக்கமாகிவிட்டது. உட்காருங்கள் (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன் வெளியே போனீர்களே, போனால்*

போய்விட்டு வரவேண்டியதுதானே, பிறகு இங்கு வந்து பழையபடி பேசமுடியாது. முடியாது, உட்காருங்கள். ஈஸ்வரன், முறையற்ற போக்கிலேயே தொடர்ந்து நடந்துகொண்டு இருப்பது முறையல்ல. ஈஸ்வரனுக்கு இது வழக்கமாகிவிட்டது. இது முறை இல்லை. இந்த மாதிரி முறையற்ற போக்கை நான் அனுமதிக்க முடியாது. *(குறுக்கீடு)* திரு. வே. பெரியசாமி *(குறுக்கீடு).*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** I am on a point of order...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் *(குறுக்கீடு)* பாயின்ட் ஆப் ஆர்டர் கிடையாது. திரு. பெரியசாமியைப் பேச அழைத்து இருக்கிறேன்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

**(அ) சந்தனக் கடத்தல் வீரப்பன் வனத்துறை அலுவலர்கள் சிலரைக் கடத்தி பிணை கைதிகளாக வைத்திருப்பது குறித்து**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வே. பெரியசாமி.

**திரு. வே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதியில் 1-11-95 காலை 6.30 மணியளவில் சந்தனக் கடத்தல் வீரப்பனால் திரு. உடையார் என்ற காவலர் ஒருவரும், திரு. செ. ராஜேந்திரன் என்ற வனக் காவலர் ஒருவரும், திரு. எம். சுப்பிரமணி என்ற வனக்காவலர் ஒருவருமாக, மூன்று பேர்களை வீரப்பன் கடத்திச் சென்று விட்டான். அந்தப் பகுதியில் வனத்துறைக்குச் சொந்தமான இடத்தில் புளியமரக்கன்றுகள், ஏறத்தாழ நான்கு ஏக்கர் பரப்பிலே நட்டு அதனைச் சுற்றி கம்பிவேலி போட்டு அந்த மரக்கன்றுகளை வனத்துறை மூலமாக வளர்த்து வந்திருக்கிறார்கள். நேற்றைக்கு முந்தைய நாள் இரவு அந்தப் பகுதிக்கு வந்த வீரப்பன், அவைகளை எல்லாம் வெட்டி வீசிவிட்டு, வளர்ந்து வந்த பச்சிளம் செடிகளை கற்றை கற்றையாகப் பிடுங்கி, ஆங்காங்கே போட்டுவிட்டுச் சென்ற காரணத்தினால், அதைப் பார்ப்பதற்காக சென்று இருந்த ஒரு வாட்சர், அதை யாரோ பிடுங்கி இருக்கிறார்களே எனறு சொல்லி அடுத்தநாள் வனத்துறையைச் சேர்ந்த ஜீப்பிலே அங்கு போய் பார்க்க சென்றார்கள். காட்டுக்குள்ளே ஒரு தடம் போய்க்கொண்டிருந்தது. அதை பார்த்து காட்டுக்கு உள்ளே சென்றபோது சிலர் தென்பட்டார்கள். அவர்கள் வீரப்பனுடைய ஆட்களா என்று தெரியவில்லை. அந்தப் பகுதியைச்

போய்விட்டு வரவேண்டியதுதானே, பிறகு இங்கு வந்து பழையபடி பேசமுடியாது. முடியாது, உட்காருங்கள். ஈஸ்வரன், முறையற்ற போக்கிலேயே தொடர்ந்து நடந்துகொண்டு இருப்பது முறையல்ல. ஈஸ்வரனுக்கு இது வழக்கமாகிவிட்டது. இது முறை இல்லை. இந்த மாதிரி முறையற்ற போக்கை நான் அனுமதிக்க முடியாது. *(குறுக்கீடு)* திரு. வே. பெரியசாமி *(குறுக்கீடு).*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** I am on a point of order...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் *(குறுக்கீடு)* பாயின்ட் ஆப் ஆர்டர் கிடையாது. திரு. பெரியசாமியைப் பேச அழைத்து இருக்கிறேன்.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

**(அ) சந்தனக் கடத்தல் வீரப்பன் வனத்துறை அலுவலர்கள் சிலரைக் கடத்தி பிணை கைதிகளாக வைத்திருப்பது குறித்து**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வே. பெரியசாமி.

**திரு. வே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதியில் 1-11-95 காலை 6.30 மணியளவில் சந்தனக் கடத்தல் வீரப்பனால் திரு. உடையார் என்ற காவலர் ஒருவரும், திரு. செ. ராஜேந்திரன் என்ற வனக் காவலர் ஒருவரும், திரு. எம். சுப்பிரமணி என்ற வனக்காவலர் ஒருவருமாக, மூன்று பேர்களை வீரப்பன் கடத்திச் சென்று விட்டான். அந்தப் பகுதியில் வனத்துறைக்குச் சொந்தமான இடத்தில் புளியமரக்கன்றுகள், ஏறத்தாழ நான்கு ஏக்கர் பரப்பிலே நட்டு அதனைச் சுற்றி கம்பிவேலி போட்டு அந்த மரக்கன்றுகளை வனத்துறை மூலமாக வளர்த்து வந்திருக்கிறார்கள். நேற்றைக்கு முந்தைய நாள் இரவு அந்தப் பகுதிக்கு வந்த வீரப்பன், அவைகளை எல்லாம் வெட்டி வீசிவிட்டு, வளர்ந்து வந்த பச்சிளம் செடிகளை கற்றை கற்றையாகப் பிடுங்கி, ஆங்காங்கே போட்டுவிட்டுச் சென்ற காரணத்தினால், அதைப் பார்ப்பதற்காக சென்று இருந்த ஒரு வாட்சர், அதை யாரோ பிடுங்கி இருக்கிறார்களே எனறு சொல்லி அடுத்தநாள் வனத்துறையைச் சேர்ந்த ஜீப்பிலே அங்கு போய் பார்க்க சென்றார்கள். காட்டுக்குள்ளே ஒரு தடம் போய்க்கொண்டிருந்தது. அதை பார்த்து காட்டுக்கு உள்ளே சென்றபோது சிலர் தென்பட்டார்கள். அவர்கள் வீரப்பனுடைய ஆட்களா என்று தெரியவில்லை. அந்தப் பகுதியைச்

சேர்ந்த தீய சக்திகள் செய்திருப்பார்களோ என்று எண்ணி, தடத்தின் வழியாக உள்ளே போகும்போது அந்த மூன்று பேரையும் வீரப்பன் ஆட்கள் துப்பாக்கியை வைத்துக் கொண்டு மிரட்டிப் பிடித்துவிட்டார்கள். அத்தோடு அந்தப் பகுதியிலே வந்த மூன்று கல்லூரி மாணவர்கள் வெளிப்பகுதிக்கு சென்றபோது அவர்களையும் சேர்த்து பிடித்து வைத்து விட்டார்கள். ஒருவர் மட்டும் அந்தப் பகுதியைச் சேர்ந்த மாணிக்கம் என்ற வனக்காவலர் அவரைப் பார்த்து பயந்து ஓடிவந்து ஜீப்பிற்கு வந்து விட்டார். அந்த நிலையைப் பார்த்தவுடனே அந்த மாணவர்கள் அழுதிருக்கிறார்கள். ஐயா, எங்களை விட்டுவிடுங்கள். நாங்கள் மாணவர்கள் என்று சொன்னவுடன், அந்த வனக் காவலரைப்பார்த்து வீரப்பன் கேட்டிருக்கிறான். உண்மை தானா, இவர்கள் மாணவர்களா அல்லது உங்களோடு வந்தவர்களா என்று கேட்டபோது அந்தக் காவலரும் அவர் பக்கத்திலே உள்ள தோட்டத்தைச் சேர்ந்த....(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாக இதுபற்றி அரசினுடைய கவனத்திற்குத்தான் கொண்டுவரவேண்டும். இப்படிக் கடத்திச் சென்றிருக்கிறார்கள், இதிலே என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்றுதான் கேட்க வேண்டும். இதைச் சிறப்புக் கவன ஈர்ப்பாகத்தான் எடுத்திருக்கிறேன்.

*முற்பகல் 11.30*

**திரு. வே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மூன்று மாணவர்களைக் கையைக் கட்டி வைத்திருந்தபோது பயந்துகொண்டு கேட்டவுடனே அவர்களை விட்டுவிட்டார்கள். மாணவர்கள்தான், அந்தப் பகுதி கவுண்டர் இனத்தை சேர்ந்தவர்கள், பக்கத்து தோட்டக்காரர்கள் என்று சொன்னவுடனே விட்டுவிட்டார்கள். இந்த நிலையில் அந்த மூன்று பேரையும் கடத்திச் சென்றுவிட்டார்கள் அந்த வீரப்பன் ஆட்கள். இந்தச் செய்தியை வனத்துறை அதிகாரிகள் கேட்டு, அந்த மூன்று மாணவர்களையும் அழைத்து வந்து விவரமாக விசாரித்தார்கள். நானும் சென்றேன். பார்த்தேன். அங்கேயுள்ள உடையார் என்ற அந்தக் காவலருடைய மனைவி மரகதம்மாள், ஆறு மாத பச்சைக் குழந்தையோடு அழுதுகொண்டு சொன்ன வார்த்தைகளை என்னால் சொல்லமுடியவில்லை. அந்த அளவிற்கு மிகவும் வேதனையோடு காட்சியளித்தார்கள்.

அதேபோன்று ராஜேந்திரனுக்கு இப்போதுதான் திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். அடுத்த மாதத்திலே அவருக்குத் திருமணம். அதேபோல எம். சுப்பிரமணியம், வனக் காவலர் அவருடைய மனைவி இரண்டு பையன்களை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இதுகாறும் எந்த ஆட்சியாளரும் செய்யாத, செய்யவேண்டுமென்று நினைத்துக்கூடப் பார்க்காத நிலையில், ஏழை எளிய மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு அள்ளி அள்ளி வழங்கிய நிலைகளையும் நாங்கள் பார்த்திருக்கிறோம். அப்படிப்பட்ட நிலையில் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே சிதம்பரம் போன்று ஒரு வனத்துறை....(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினைக்கு வாருங்கள். இந்தப் பிரச்சினையில்தான் கேட்க முடியும்.

**திரு. வே. பெரியசாமி:** இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நம்முடைய அதிரடிப் படையைச் சேர்ந்தவர்கள் வீரப்பனால் கொலை செய்யப்பட்டபோது எந்த ஆட்சியாளரும் செய்யாத அளவிற்கு ரூ. 10 லட்சத்தை அந்தக் குடும்பத்திற்கு அள்ளி வழங்கினார்கள். எந்த ஆட்சியிலும் செய்யவில்லை. கடந்த தடவை 20 பேர் கொலை செய்யப்பட்டபோது என் தொகுதியைச் சேர்ந்த இரண்டு பேருக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

அதேபோல இந்தக் குடும்பம் பாதிக்கப்பட்டிருக்கின்ற குடும்பம். இவர்களுக்கு நீங்கள் நிறைய உதவி செயதிருக்கிறீர்கள். நாங்களும் பார்த்திருக்கிறோம். அவர்களுடைய குடும்பத்தை, வனத்துறை அதிகாரிகள் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு அம்மாவினுடைய ஆலோசனையின் பேரில், மாவட்ட ஆட்சித் தலைவர் கொடுத்த கடிதத்தை வைத்துக் கொண்டு, பரிசீலனை செய்து, அங்கே வனத்துறை அதிகாரிகளும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் முகாம் செய்து கொண்டிருக்கிறார்கள். வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வழங்குகின்ற நிலையில் அவர்களுடைய நல்ஆலோசனையை ஏற்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்று மாலை நானும், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் அவர்களும் போக இருக்கிறோம், அம்மா அவர்கள் ஆசியோடு அவர்களை மீட்டுத் தரவேண்டும். டி. எஸ்.பி.யை மீட்டு கொடுத்திருக்கிறார்களே, அதேபோல

இவர்களையும் மீட்டுத் தரவேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதங்களை என் தொகுதி மக்கள் சார்பாக தொட்டு வணங்கி மன்றாடிக் கேட்டுக்கொண்டு வீடைபெற்று, அமர்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* திரு. தம்புசாமி, இதுபற்றிப் பேசுங்கள்.

**திரு. வே. தம்புசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தனமரக் கடத்தல் வீரப்பன் வனத்துறைக் காவல் அதிகாரிகளை கடத்தி சென்றதாக பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. அவர்களை மீட்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.35

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* திரு. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தனமரக் கடத்தல் வீரப்பன் இப்போது வனத்துறை அதிகாரிகள் மூன்று பேரைக் கடத்தியிருக்கிறான். இதற்கு முன்னால் பல பேரைக் கடத்தியிருக்கிறார்கள். பல பேரைக் கொன்றிருக்கிறார்கள். ஆனாலும் எல்லைப் பாதுகாப்புப்படை, கர்நாடக அரசு போலீஸ், தமிழக அரசு போலீஸ் இவனைப் பிடிக்க முடியவில்லை. இவனைப் பிடிப்பதற்கு என்ன நடவடிக்கை அரசு எடுத்திருக்கிறது. அந்தப் பகுதியிலுள்ள கிராமப்புற மக்கள் அரசுக்கு ஒத்துழைப்பு கொடுக்கிறார்களா? அந்தக் கிராமப்புற மக்கள் மிகவும் ஏழ்மையான மக்களாக இருக்கிறார்கள். ஆகவே அரசு சமுதாயச் சீர்திருத்தத்தைச் செய்து கல்வி, பொருளாதாரம் போன்றவற்றில் அந்தக் கிராம மக்கள் உயர்கிற வகையில் அவர்களை ஊக்குவித்து வீரப்பனைப் பிடிப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா? அல்லது மிலிட்டரி கமேண்டோ மூலமாக, ஹெலிகாப்டர் மூலமாக குண்டு மழை பொழிந்து, மரங்கள் அழிந்தாலும் பரவாயில்லை என்று உயிர்களைப் பாதுகாக்க, அவனைப் பிடிக்க, வேண்டிய .நடவடிக்கை எடுக்கப்படுமா? அல்லது மத்திய அரசிடம் அனுமதி வாங்கி இஸ்ரித் மசாத் கூலிப்படையைக் கொண்டு வந்தாவது அவனைப் பிடிப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்படுமா? அல்லது மத்தியப் பிரதேசத்தில் எப்படி பூலான்தேவிக்கு பொது

மன்னிப்புக் கொடுத்தார்களோ அதே மாதிரி வீரப்பனையும் சரணடையச் செய்து அவனுக்கு பொது மன்னிப்புக் கொடுத்து அவனும் இந்த நாட்டில் மனிதனாக வாழ்வதற்கு அரசு வழி வகுத்து, இந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க ஆவன செய்யப்படுமா? என்ன நடவடிக்கையை தீவிரமாக எடுக்கிறீர்கள் என்று நான் அறிய விரும்புகிறேன். ஏதோ தொட்டுப் பிடித்து விளையாடுகிற மாதிரி இருக்கிறது. சடுகுடு விளையாடுவது மாதிரி இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். நீங்கள் சடுகுடு விளையாட வேண்டாம். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், நான் கூப்பிடும்போது நீங்கள் இருக்கையில் இல்லை. இதுபோன்ற பிரச்சினைகளில் அனுமதிப்பதில்லை. இருந்தாலும் இன்றைக்கு அனுமதிக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1-11-95-ஆம் தேதியன்று அதிகாலை 5½ மணிக்கு 3 வனத்துறைக் காவலர்களை வீரப்பனுடைய கும்பல் துப்பாக்கி முனையில் கடத்திச் சென்று இன்று காவலில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். வீரப்பனுடைய அட்டகாசம் இன்னும் ஓய்ந்தபாடில்லை. ஏற்கெனவே சுமார் 3 மாதங்களுக்கு முன்னாலே 7 பேரை வீரப்பன் கொன்று குவித்தான். இப்படி காட்டுப் பகுதியில் வாழ்ந்துக்கொண்டிருக்கிற மக்கள் உயிருக்குப் பாதுகாப்பு இல்லாமல் அவர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். வனத்துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிற பணியாளர்களும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவன் ஒரு கடிதத்தை ஒரு மாணவனிடம் கொடுத்து உள்ளான். மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கொடுத்ததாகச் சொல்லப்பட்ட அந்தக் கடிதத்தில் சிதம்பரநாதனை விட்டதுபோல் இவர்களை விடமாட்டோம். இவர்களுடைய தலைகளைச் சீவி நான் சாலையில் போடுவேன் என்று மிரட்டல் கடிதம் விட்டதாகச் சொல்கிறார்கள். இப்படி ஒரு தனி மனிதன் அரசாங்கத்திற்குச் சவாலாக இருந்துக்கொண்டு கடந்த நான்கு ஆண்டுகளாக கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடிக் கொண்டிருப்பதை நாம் அனுமதிக்க முடியாது. ஆகவே தமிழக அரசு, யானை பலம் கொண்ட தமிழக அரசு ஏன் அவனைப் பிடிக்கவில்லை? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மூன்றரை ஆண்டுகளுக்கு முன்னாலே நான் கேள்விக் கணை தொடுத்தபோது தமிழக எல்லையில் இருந்தால் எப்போதோ பிடித்திருப்போம் என்று சொன்னார்கள். இப்போது தமிழக எல்லையில் இருந்துகொண்டிருக்கிற இந்த வீரப்பனை

ஏன் இன்னும் பிடிக்கவில்லை? பிடிக்காமல் இருக்கிற காரணத்தால்தான் இப்படி மூன்று மாதத்திற்கு முன்பு 7 பேர் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். இன்று மூன்று பேர் கடத்தப்பட்டு இருக்கிறார்கள். இப்படியே நிலைமை போய்க்கொண்டிருக்கிறது என்று சொன்னால் பிறகு அவனுடைய அட்டகாசத்தை நம்மாலே அடக்கவே முடியாது. ஆகவே கடத்தப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்கு அரசு இதுவரையில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? இவனை எப்போது பிடிக்கப் போகிறார்கள். இவனைப் பிடித்து அவர்களை விடுவிப்பதற்கு என்ன நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம் அந்தியூர் சரகம் எண்ணமங்கலம் ரிசர்வ் பகுதியில் 1994-ஆம் ஆண்டு நடப்பட்ட புளியங்கன்றுகள் அழிக்கப்பட்டுள்ளன என்ற தகவல் 31-10-1995 அன்று வனத்துறை அலுவலகத்திற்குக் கிடைத்து உள்ளது. அந்தத் தகவலின் அடிப்படையில் உடனடியாக புலத்தணிக்கை மேற்கொள்ள 1-11-1995 அன்று காலை 5.00 மணியளவில் 4 வனக் காப்பாளர்களும் 3 வனக்காவலர்களும் ஈரோடு வனக் கோட்டத்தில் உள்ள எண்ணமங்கலம் ஒதுக்கக் காட்டிற்கு அந்தியூர் வனச் சரகரால் அனுப்பப்பட்டுள்ளனர். காலை 7.00 மணியளவில் அந்தியூரிலிருந்து சென்ற வனத்துறை அலுவலர்கள் சோதனையில் ஈடுபட்டிருந்தபோது, எண்ணமங்கலம் முரளி மேற்குப் பகுதியிலிருந்து ராஜேந்திரன், சுப்பிரமணியன் ஆகிய இரு வனக் காப்பாளர்களும், உடையார் என்ற வனக் காவலர் ஒருவரும் சந்தனக் கடத்தல் வீரப்பன் கும்பலைச் சேர்ந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். அவர்களோடு சென்ற மற்ற இரண்டு வனக் காப்பாளர்களும், இரண்டு வனக் காவர்களும் தப்பி வந்து இந்தத் தகவலைத் வனத்துறை அதிகாரியிடம் தெரிவித்துள்ளனர்.

தப்பி வந்த வன அலுவலர்கள் வனத்துறையினருக்கு அளித்த தகவலின் அடிப்படையில் காவல் துறையினர் மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகள் தகுந்த மேல் நடவடிக்கையை உடனடியாக மேற்கொண்டுள்ளனர். சந்தனக் கடத்தல் வீரப்பன், முரளி கிராமப் பகுதியில் சென்றுகொண்டிருந்த மாணவர் ஒருவர் மூலமாக ஒரு ஒலிப்பதிவு நாடாவை, அதாவது ஆடியோ கேசட்டையும் ஒரு கடிதத்தையும் அந்தியூர் வனச் சரக அலுவலகத்தில் கொடுக்கும்படி

அனுப்பி வைத்தான். பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எழுதப்பட்டுள்ள அந்தக் கடிதத்தில் சந்தனக் கடத்தல் வீரப்பனையும் அவனது சகாக்களையும் கண்டுபிடித்து கைது செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள சிறப்புக் காவல் படையினரை உடனடியாக இரண்டு நாட்களுக்குள் அப்பகுதியில் இருந்து முழுமையாக விலக்கிக் கொள்ள வேண்டும் என்றும், பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவருடன் தான் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஏதுவாக ஒரு தொலைபேசி எண்ணை வானொலியின் மூலமாக அறிவிக்க வேண்டும் என்றும் அதன் பின்னர் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தனது பிரதிநிதி ஒருவரை தான் அனுப்பி வைப்பதாகவும் அக்கடிதத்தில் சந்தனக் கடத்தல் வீரப்பன் குறிப்பிட்டுள்ளான்.

*முற்பகல் 11–40*

ஒலிப்பதிவு நாடாவிலும் கிட்டத்தட்ட இதே மாதிரியான தகவல்தான் தரப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் தகவல் கிடைக்கப்பெற்றதும், காவல்துறை இயக்குநர், திரு. வால்டர் தேவாரம் அவர்களை, உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுப்பி வைத்துள்ளார்கள். அவர் தற்போது அந்தப் பகுதிக்குச் சென்றுள்ளார். பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவரும் இந்தப் பிரச்சினையில் காவல் துறையினருடன் இணைந்து செயலாற்றி வருகின்றார். தங்களது கடமையை ஆற்ற வந்த மூன்று வனத்துறை அலுவலர்களை வீரப்பன் கடத்தி சென்றுள்ள செயல், மிகவும் கண்டனத்திற்குரியதாகும். காவல் துறையினர் வருவாய்த்துறையினரோடு இணைந்து செயலாற்றி வீரப்பன் பிடியில் சிக்கி இருக்கின்ற மூன்று வனத்துறை அலுவலர்களை விரைவில் வீரப்பன் பிடியிலிருந்து மீட்பதற்காக எல்லா ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றார்கள். தற்போது காவல் துறையினர் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை வெளியிடுவது நல்ல விளைவைத் தராது. மாறாக, அவர்கள் மேற்கொண்டுள்ள மீட்புப் பணிகளுக்கு குந்தகம் ஏற்படும் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது. விவேகத்தோடு செயல்பட்டு மீட்புப் பணியை காவல்துறையினர் மேற்கொண்டு வரும் சூழ்நிலையில் தவறான செய்திகளால் புதிய குழப்பங்கள் ஏற்படும் என்பதையும், இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டுள்ளேன். டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நினைத்ததை நடத்திக் காட்டும் ஆற்றல் பெற்றவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவரது சீரிய

*1995 நவம்பர் 3]* [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

ஆலோசனைகளின் பேரில் நிச்சயமாக கடத்தப்பட்டுள்ள மூன்று வனத்துறை அலுவலர்களை விரைவில் மீட்போம் என்பது உறுதி. கடத்தப்பட்டுள்ள வனத்துறை அலுவலர்களின் குடும்பங்களுக்குத் தேவையான பாதுகாப்பை எங்கள் அரசு வழங்கும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு காலத்தில் காவல்துறை அதிகாரிகளையும், வனத்துறை அதிகாரிகளையும் மிரட்டி வந்ததோடு தொடர்ந்து பல குற்றங்கள் புரிந்து வந்தான் சந்தனக்கடத்தல் வீரப்பன். எங்கள் அரசு பதவி ஏற்ற பின்புதான், தமிழகக் காவல் துறையின் சிறப்பு அதிரடிப்படை உருவாக்கப்பட்டது. அந்தப் படை கர்நாடக அதிரடிப் படையினரோடு கூட்டாக இணைந்து வீரப்பனைப் பிடிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டது. இந்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் வீரப்பன் கும்பலின் எண்ணிக்கையும் குறைந்தது, அவர்களிடமிருந்த ஆயுதங்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. இதை இந்த நாட்டு மக்கள் நன்கறிவார்கள். தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மீட்புப் பணிகளுக்கு குந்தகம் விளைவிக்கும் என்பதால் மேற்கொண்டு எந்தத் தகவலையும் இந்த அவைமுன் வைக்க இயலவில்லை. இருப்பினும், உங்கள் அனைவரின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு, கடமையாற்றச் சென்ற வனத்துறை அலுவலர்களை மீட்பதில் தேவையான உறுதியுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மீண்டும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

### (ஆ) இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான போரால் தமிழர்கள் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த பிரச்சினை. திரு. பரிதி இளம்வழுதி, இலங்கை இனத்தவரிடையே ஏற்பட்டுள்ள சூழ்நிலையை இந்தப் பேரவையில் எழுப்புவதற்காக "இலங்கை இராணுவத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்டு வருகின்ற போர் காரணமாக தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்கிற அந்தப் பிரச்சினையை இந்தப் பேரவையில் எழுப்புவதற்காக பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்று பேரவை விதி *56*-ன் கீழ் ஓர் அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார். அதேபோன்று திரு. தாமரைக்கனியும் ஓர் அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார். ஆனால், இந்தப் பிரச்சனையைப் பொறுத்தமட்டில்

*1995 நவம்பர் 3*] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

ஆலோசனைகளின் பேரில் நிச்சயமாக கடத்தப்பட்டுள்ள மூன்று வனத்துறை அலுவலர்களை விரைவில் மீட்போம் என்பது உறுதி. கடத்தப்பட்டுள்ள வனத்துறை அலுவலர்களின் குடும்பங்களுக்குத் தேவையான பாதுகாப்பை எங்கள் அரசு வழங்கும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு காலத்தில் காவல்துறை அதிகாரிகளையும், வனத்துறை அதிகாரிகளையும் மிரட்டி வந்ததோடு தொடர்ந்து பல குற்றங்கள் புரிந்து வந்தான் சந்தனக்கடத்தல் வீரப்பன். எங்கள் அரசு பதவி ஏற்ற பின்புதான், தமிழகக் காவல் துறையின் சிறப்பு அதிரடிப்படை உருவாக்கப்பட்டது. அந்தப் படை கர்நாடக அதிரடிப் படையினரோடு கூட்டாக இணைந்து வீரப்பனைப் பிடிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டது. இந்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளால் வீரப்பன் கும்பலின் எண்ணிக்கையும் குறைந்தது, அவர்களிடமிருந்த ஆயுதங்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. இதை இந்த நாட்டு மக்கள் நன்கறிவார்கள். தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மீட்புப் பணிகளுக்கு குந்தகம் விளைவிக்கும் என்பதால் மேற்கொண்டு எந்தத் தகவலையும் இந்த அவைமுன் வைக்க இயலவில்லை. இருப்பினும், உங்கள் அனைவரின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு, கடமையாற்றச் சென்ற வனத்துறை அலுவலர்களை மீட்பதில் தேவையான உறுதியுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மீண்டும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

### (ஆ) இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான போரால் தமிழர்கள் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த பிரச்சினை. திரு. பரிதி இளம்வழுதி, இலங்கை இனத்தவரிடையே ஏற்பட்டுள்ள சூழ்நிலையை இந்தப் பேரவையில் எழுப்புவதற்காக "இலங்கை இராணுவத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்டு வருகின்ற போர் காரணமாக தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்கிற அந்தப் பிரச்சினையை இந்தப் பேரவையில் எழுப்புவதற்காக பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்று பேரவை விதி *56*-ன் கீழ் ஓர் அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார். அதேபோன்று திரு. தாமரைக்கனியும் ஓர் அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார். ஆனால், இந்தப் பிரச்சனையைப் பொறுத்தமட்டில்

இந்த அரசோ, இந்த அவையோ நேரடியாக விவாதித்து ஒரு முடிவுக்கு வரக்கூடிய சூழ்நிலை இல்லை என்பதை அனைத்து உறுப்பினர்களும் அறிவீர்கள். இதில் ஏதேனும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றாலும், இந்திய அரசுதான் இலங்கை அரசோடு பேசி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டும். எனவே இதை விவாதப் பொருளாக இங்கே விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கொடுத்த அந்த அறிவிப்பு என்னால் நிராகரிக்கப்பட்டு இருக்கிறது. இருந்தாலும், அவர்களுடைய உணர்வை இந்தப் பேரவைக்குத் தெரிவிக்கின்ற வகையில் அவர் கொடுத்துள்ள அந்த அறிவிப்பை மட்டும் இங்கே வாசிக்கலாம். அதற்கு மேலே பேசி அது விவாதப் பொருளாக ஆகக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். அதுபோல அரசாங்கமும் அதற்கு பதில் அளிப்பதாக இருந்தால் அவர்களுடைய உணர்வை மட்டும் தெரிவிக்கலாம். மேற்கொண்டு இதில் என்னென்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதை எல்லாம் தெரிவித்து விவாதப் பொருளாக இதை ஆக்காமல் அரசாங்கம் பதில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனவே, பரிதி இளம்வழுதி அதை மட்டும் நீங்கள் வாசிக்கலாம்.

**திரு. இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு தாங்கள் வழங்கிய இந்த வாய்ப்புக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உணர்வுகளை வெளிப்படுத்துகிற வகையில் நீங்கள் எனக்குக் கொடுத்திருக்கின்ற அறிவிப்பை வாசியுங்கள் என்று தான் சொன்னேன்.

**திரு. இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் இந்தப் பேரவை எந்த இறுதி நடவடிக்கையும் எடுக்க முடியாது என்பதை நான் நன்கு உணர்ந்து இருக்கிறேன். அதனால் நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், இந்தப் பேரவைக்கு இறுதி நடவடிக்கை எடுக்கக்கூடிய அதிகாரம் இலலையென்றாலும்கூட, இந்திய அரசாங்கத்தை கேட்டுக்கொள்ள இந்தப் பேரவைக்கு உரிமை இருக்கிறது. நான் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். உலகத்திலே மற்ற இனங்களெல்லாம் பாதுகாப்போடு, வசதியோடு வாழ்கின்ற காரணத்தால்...

*1995 நவம்பர் 3]*

*முற்பகல் 11-45*

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* திரும்பத் திரும்ப நீங்கள் சொல்வதால் விவாதப் பொருள் ஆகிவிடும். இதில் நம்முடைய ஒட்டுமொத்த உணர்வுகளைத் தெரிவிப்பதற்கு வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் இதை விவாதப் பொருள் ஆக்கினால்--இந்திய அரசாங்கத்தின் கையில் இல்லாத பிரச்சினையில் போய் தலையிடமுடியாது. இந்திய அரசாங்கத்தின் ஆளுகைக்கு உட்பட்ட பிரச்சினை என்றால் நாம் இந்திய அரசாங்கத்தைக் கேட்கலாம். இது அவர்களுடைய ஆளுகைக்கு உட்பட்ட பிரச்சினைகூட அல்ல. இன்னொரு நாட்டினுடைய பிரச்சினை. ஆகவே இதை பேரவை விதி 56-ன்கீழ் ஒத்திவைத்து விவாதப் பொருள் ஆக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன். நீங்கள் உங்களுடைய உணர்வுகளைத் தெரிவிப்பதற்கு, நீங்கள் கொடுத்த அறிவிப்பை மட்டும் வாசிப்பீர்களானால்--நான் அரசாங்கத்திற்கும் தெரிவித்திருக்கிறேன். நீங்கள்கூட இதை விவாதப் பொருள் ஆக்கி பதில் அளிக்க வேண்டாம், உங்களுடைய உணர்வுகளைத் தெரிவிக்கலாம் என்றுதான் தெரிவித்திருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை. நீங்கள் சொல்லிவிட்டீர்கள், போதும். நானே படித்துவிடுகிறேன். (குறுக்கீடு) நானே படித்துவிடுகிறேன். நீங்கள் கொடுத்த அறிவிப்பு "சிங்கள அரசும், சிங்கள இராணுவமும் இலங்கையில் வாழும் அப்பாவித் தமிழர்களை அன்றாடம் கொன்று குவித்து இனப் படுகொலை நடத்தி வருகிறது. இதனால் தமிழ்நாட்டு மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்தும், எஞ்சியுள்ள தமிழர்களைக் காப்பாற்ற இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது குறித்தும் விவாதிக்க" என்று கேட்டிருக்கிறீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையிலே விவாதிப்பதற்கு ஏதுமில்லை. அரசின் நிலையை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதை நிச்சயமாக இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி).. இலங்கையிலே வாழும் தமிழர்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்புத் தரப்பட வேண்டும். அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதையும், அவர்கள் தங்கள் உயிரையும், உடைமையையும் இழக்கும் சூழ்நிலையையும் தடுத்து நிறுத்த இலங்கை அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இது குறித்து, இலங்கைவாழ்

தமிழர்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்புக் கொடுப்பது பற்றி இந்திய அரசு இலங்கை அரசுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும். இது குறித்து தமிழக அரசும் இந்திய அரசுடன் தொடர்பு கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பரிதி, உங்களுடைய உணர்வைத் தெரிவித்துவிட்டீர்கள், போதும். அதற்குமேல் இதில் விவாதிக்க முடியாது.

**திரு. இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இந்தப் பேரவையின் மூலம் இந்திய அரசை நிர்பந்தித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசாங்கம் கேட்டுக் கொள்ளும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்து விட்டார்கள். அதற்குமேல் வேண்டாம். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த உணர்வுகளை அரசாங்கமே மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்லும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மேலும் வேண்டாம், (குறுக்கீடு) (குறுக்கீடு) உட்காருங்கள். நீங்கள் உங்கள் உணர்வுகளைத் தெரிவித்து விட்டீர்கள்.

**திரு. இளம்வழுதி:** இந்திய அரசாங்கத்தை நிர்பந்திப்போமானால் அங்கே எஞ்சியுள்ள தமிழர்கள் காப்பாற்றப்படுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உங்கள் உணர்வுகளைத் தெரிவித்துவிட்டீர்கள். இதில் நடவடிக்கை எடுக்கும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துவிட்டார்கள். அதோடு இந்தப் பிரச்சினை போதும். பேரவை விதி 110–ன் கீழ் (குறுக்கீடு)....

**திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:** ஆலங்குளம் பிரச்சினை.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு ராமசுப்பு, நான் அனுமதி மறுத்திருக்கிறேன். ஏற்கனவே அனுமதி மறுத்த பிரச்சினையோடு சேர்த்து இதற்கும் அனுமதி மறுத்திருக்கிறேன். அனுமதி மறுக்கப்பட்டதற்குப் பிறகு பேச முடியாது (குறுக்கீடு). திரு. இளம்வழுதி

வேண்டாம், உட்காருங்கள். நான் உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்து, நீங்கள் கொடுத்ததையும் வாசித்து விட்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் உங்களுடைய அறிவிப்புக்கு உரிய வகையில் பதில் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு மேலும் இதை விவாதப் பொருள் ஆக்க முடியாது, உட்காருங்கள்.

**திரு. இளம்வழுதி:** நான் கோரிக்கையாக வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை வைத்து விட்டீர்களே, போதும், உங்களுடைய கோரிக்கை இருக்கட்டும்.

*(திரு. இளம்வழுதி அவையிலிருந்து வெளியேறினார்.)*

## 3. தகவல் கோரல்-தொடர்ச்சி

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து

**திரு எஸ். டேனியல்ராஜ்:** நான் கொடுத்த பிரச்சினை . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதி மறுத்திருக்கிறேன். அனுமதி மறுத்ததை எடுத்துக்கொள்ள முடியாது. (குறுக்கீடு) இதுவும் அதனோடு தொடர்புடைய பிரச்சினைதான். அனுமதி மறுத்திருக்கிறேன். நீங்கள் வெளியே சென்று வந்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) நான்தான் இப்போது சொல்லுகிறேனே. (குறுக்கீடு) திரு. டேனியல்ராஜ், நீங்கள் கொடுத்த பிரச்சினைக்கும் அனுமதி மறுத்திருக்கிறேன், உட்காருங்கள்.

**திரு. வே. தம்புசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் காணாமல் போனது சம்பந்தமான பிரச்சினை ஒன்றைக் கொடுத்திருக்கிறேன். அது எடுத்துக்கொள்ளப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுபற்றிப் பிறகு எடுத்துக்கொள்கிறேன். இன்று எடுத்துக்கொள்ளவில்லை.

வேண்டாம், உட்காருங்கள். நான் உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்து, நீங்கள் கொடுத்ததையும் வாசித்து விட்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் உங்களுடைய அறிவிப்புக்கு உரிய வகையில் பதில் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு மேலும் இதை விவாதப் பொருள் ஆக்க முடியாது, உட்காருங்கள்.

**திரு. இளம்வழுதி:** நான் கோரிக்கையாக வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை வைத்து விட்டீர்களே, போதும், உங்களுடைய கோரிக்கை இருக்கட்டும்.

*(திரு. இளம்வழுதி அவையிலிருந்து வெளியேறினார்.)*

## 3. தகவல் கோரல்-தொடர்ச்சி

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து

**திரு எஸ். டேனியல்ராஜ்:** நான் கொடுத்த பிரச்சினை . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதி மறுத்திருக்கிறேன். அனுமதி மறுத்ததை எடுத்துக்கொள்ள முடியாது. (குறுக்கீடு) இதுவும் அதனோடு தொடர்புடைய பிரச்சினைதான். அனுமதி மறுத்திருக்கிறேன். நீங்கள் வெளியே சென்று வந்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) நான்தான் இப்போது சொல்லுகிறேனே. (குறுக்கீடு) திரு. டேனியல்ராஜ், நீங்கள் கொடுத்த பிரச்சினைக்கும் அனுமதி மறுத்திருக்கிறேன், உட்காருங்கள்.

**திரு. வே. தம்புசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் காணாமல் போனது சம்பந்தமான பிரச்சினை ஒன்றைக் கொடுத்திருக்கிறேன். அது எடுத்துக்கொள்ளப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுபற்றிப் பிறகு எடுத்துக்கொள்கிறேன். இன்று எடுத்துக்கொள்ளவில்லை.

# 4. விதி 110-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை.

## வீரன் சுந்தரலிங்கம் போக்குவரத்துக் கழகம் அமைக்கப்படுவது குறித்து

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழ் பேரவையில் ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியிருக்கிறார்கள். அந்த அறிவிப்பை இப்போது பேரவைக்கு வெளியிடக் கேட்டுக் கொள்கிறேன்.

*முற்பகல் 11-50*

**மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலிச் சீமையில் தேவேந்திர குல வேளாளர் இனத்தில் பிறந்து ஆங்கிலேயரின் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடி, வீர மரணம் அடைந்த தமிழகத்தின் தவப் புதல்வர்களில் ஒருவர் "வீரன் சுந்தரலிங்கம்" என்று அழைக்கப்படும் பெருமகன் ஆவார். ஆங்கிலேயரின் அடக்குமுறை ஆட்சியையும், ஏகாதிபத்திய ஆட்சியையும் எதிர்த்துப் போராடி, தனது தேசிய உணர்வை வெளிப்படுத்திய அந்த மாமனிதருக்கு சரித்திரத்தில் சரியான இடம் தரப்படவில்லை என்ற ஒரு ஆதங்கம் அப்பகுதிவாழ் மக்களுக்கு வெகுகாலமாகவே இருந்து வருகின்றது. இந்த நாட்டின் நன்மைக்கு பாடுபட்ட நல்லோர் அனைவருக்கும் தனது நன்றியறிதலைக் காட்டி வரும் அரசு எங்கள் அரசு. அந்த உணர்வின் அடிப்படையில் வீரன் சுந்தரலிங்கம் என்ற மாமனிதரின் நினைவினைப் போற்றும் வண்ணம், அவரது பெயரில் ஒரு புதிய போக்குவரத்துக் கழகம் அமைக்க (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக அரசு முடிவு எடுத்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் வழங்கப்பட்டு வரும் நாட்டுப்புற பாடல்களின் வாயிலாக புகழோடு வாழ்ந்த "வீரன் சுந்தரலிங்கம்" அவர்களின் வாழ்க்கை வரலாற்றை நாம் அறிய முடிகின்றது. சாதாரண போர் வீரனாக தனது வாழ்க்கையைத் தொடங்கிய சுந்தரலிங்கம், பின்னர் வீரபாண்டிய கட்டபொம்மனின் போர்ப்படைத் தளபதிகளில் ஒருவராகத் திகழ்ந்துள்ளார்.

வெள்ளையத் தேவனும், சுந்தரலிங்கமும், வீரபாண்டிய கட்டபொம்மனின் நம்பிக்கைக்கு உரியவர்களாக விளங்கினார்கள் என்றும் அறிய முடிகின்றது. பாஞ்சாலங்குறிச்சியை ஆங்கிலேயர்கள் திடீரென்று முற்றுகையிட்ட போது, வீரபாண்டிய கட்டபொம்மனின் ஆணைப்படி, வீரன் சுந்தரலிங்கம், வெள்ளையத் தேவனை அழைத்து வந்ததாகவும், வீரபாண்டிய கட்டபொம்மன் படை ஆங்கிலேயர்களின் படையைத் தாக்கியதாகவும், பின்னர் ஆங்கிலேயர்களின் கையில் சிக்காமல் வீரன் சுந்தரலிங்கம் தப்பித்து விட்டதாகவும், சுந்தரலிங்கம் அவர்களின் வீரத்தைப் பாராட்டி, வீரபாண்டிய கட்டபொம்மன் தங்க விருதையும், முத்து பதித்த காதணிகளையும், முத்து மாலைகளையும் பரிசளித்ததாகவும் பாடல்கள் மூலம் அறிய முடிகின்றது.

வீரன் சுந்தரலிங்கம் ஆங்கிலேயர்களின் படைக்கலன்களை அழிக்க முற்பட்டபோது, வீர மரணம் அடைந்ததாக திருநெல்வேலிப் பகுதியில் இன்றும் பேசப்படுகிறது. தேவேந்திர குல வேளாளர்கள் வகுப்பைச் சேர்ந்த இந்தப் பெருமகனாரின் வாழ்க்கை வரலாறு, இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் தமிழகத்தின் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெருமக்களின் சீரிய பங்கையும், அவர்கள் ஆற்றிய அரும்பணியையும், உலகிற்கு வெளிப்படுத்தும் ஒரு எடுத்துக்காட்டாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

உயர்ந்த உள்ளத்தாலும், விலை மதிக்க முடியாத தனது வீரத்தாலும், தேசிய உணர்வாலும் தமிழகத்தின் மண்ணின் மைந்தர்களில் ஒருவராக விளங்கிய தேவேந்திர குல வேளாள பெருமக்களின் குலக்கொழுந்தான, வீரன் சுந்தரலிங்கம் அவர்களின் பெயரில் விருதுநகரைத் தலைமையிடமாகக் கொண்டு "வீரன் சுந்தரலிங்கம் போக்குவரத்துக் கழகம்" (மேசையைத் தட்டும் ஒலி) என்ற புதிய போக்குவரத்துக் கழகம் விரைவில் அமைக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழக அரசின் இந்த முடிவை, இம்மாமன்றத்து உறுப்பினர்கள் அனைவரும், மனதார வரவேற்பார்கள் என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த புதிய போக்குவரத்துக் கழகம் அமைப்பதற்கான ஆயத்தப் பணிகள், விரைவில் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

## 5. அறிவிப்புகள்

### (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, உள்விதி (1)-ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் 10-வது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன்.

1. திரு. வி.பி. சந்திரசேகர்
2. டாக்டர் எஸ். சுந்தரராஜ்
3. திருமதி கே. மரியம் உல் ஆசியா
4. திரு. வி.கே. லட்சுமணன்
5. திரு. ஆர். சிங்காரம்
6. திரு. செ.கு. தமிழரசன்

## 6. அறிக்கைகள் அளித்தல்

### அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ஆர். சிங்காரம் அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவனாகிய நான், 1995-96 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவை (10-வது சட்டமன்றப் பேரவை) அரசு உறுதிமொழிக் குழுவின் 30-வது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) சம்பளங்கள் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1995

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதியமைச்சர்.

## 5. அறிவிப்புகள்

### (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, உள்விதி (1)-ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் 10-வது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன்.

1. திரு. வி.பி. சந்திரசேகர்
2. டாக்டர் எஸ். சுந்தரராஜ்
3. திருமதி கே. மரியம் உல் ஆசியா
4. திரு. வி.கே. லட்சுமணன்
5. திரு. ஆர். சிங்காரம்
6. திரு. செ.கு. தமிழரசன்

## 6. அறிக்கைகள் அளித்தல்

### அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ஆர். சிங்காரம் அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவனாகிய நான், 1995-96 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவை (10-வது சட்டமன்றப் பேரவை) அரசு உறுதிமொழிக் குழுவின் 30-வது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) சம்பளங்கள் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1995

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதியமைச்சர்.

## 5. அறிவிப்புகள்

### (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, உள்விதி (1)-ன்கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் 10-வது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன்.

1. திரு. வி.பி. சந்திரசேகர்
2. டாக்டர் எஸ். சுந்தரராஜ்
3. திருமதி கே. மரியம் உல் ஆசியா
4. திரு. வி.கே. லட்சுமணன்
5. திரு. ஆர். சிங்காரம்
6. திரு. செ.கு. தமிழரசன்

## 6. அறிக்கைகள் அளித்தல்

### அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ஆர். சிங்காரம் அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவனாகிய நான், 1995-96 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவை (10-வது சட்டமன்றப் பேரவை) அரசு உறுதிமொழிக் குழுவின் 30-வது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) சம்பளங்கள் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1995

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதியமைச்சர்.

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்"
எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஆ) சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1995

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1995 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்ட அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

*1995 நவம்பர் 3]*

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்"
எனக் கோருகிறேன்.

முற்பகல் 11–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1995

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1995 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்ட அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (இ) மாவட்டக் காவற்படை (திருத்த) சட்டமுன்வடிவு, 1995

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட காவற்படை (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்ட அமைச்சர்.*

***மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்டக் காவற்படை (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(இ) மாவட்டக் காவற்படை (திருத்த) சட்டமுன்வடிவு, 1995**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட காவற்படை (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்ட அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்டக் காவற்படை (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

1995 நவம்பர் 3]

### (ஈ) சட்டமன்ற (தகுதியிழத்தலைத் தடுத்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1995

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியிழத்தலைத் தடுத்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதியமைச்சர்.

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியிழத்தலைத் தடுத்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

## 5. அறிவிப்புகள்-தொடர்ச்சி

### (ஆ) கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1995 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

1995 நவம்பர் 3]

**(ஈ) சட்டமன்ற (தகுதியிழத்தலைத் தடுத்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1995**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியிழத்தலைத் தடுத்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதியமைச்சர்.

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியிழத்தலைத் தடுத்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## 5. அறிவிப்புகள்-தொடர்ச்சி

**(ஆ) கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1995 (ஆ.இ.)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

# 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)-தொடர்ச்சி

## (உ) கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1995

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.*

***மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி :** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"1995–ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"*
*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** *மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்,*

*ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.*

**மாண்புமிகுதிரு. வ. சத்தியமூர்த்தி :** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

## (ஊ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1995

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

# 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)-தொடர்ச்சி

## (உ) கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1995

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

**மாண்புமிகுதிரு. வ. சத்தியமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஊ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1995

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

*1995 நவம்பர் 3]*

***மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 8. மின்வாரிய நிதிநிலை அறிக்கை, 1995-96 மற்றும் திருத்திய மதிப்பீடுகள், 1994-95 அளித்தலும் அவற்றின் மீது விவாதமும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மற்றும் திருத்திய மதிப்பீடுகள் அளித்தல்--அவற்றின் மீது விவாதம். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1995-96 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1994-95 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடுகள் ஆகியவற்றை இந்த மாமன்றம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று முன்மொழிகிறேன்.

*1995 நவம்பர் 3]*

***மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"1995 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

## 8. மின்வாரிய நிதிநிலை அறிக்கை, 1995-96 மற்றும் திருத்திய மதிப்பீடுகள், 1994-95 அளித்தலும் அவற்றின் மீது விவாதமும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மற்றும் திருத்திய மதிப்பீடுகள் அளித்தல்--அவற்றின் மீது விவாதம். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1995-96 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1994-95 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடுகள் ஆகியவற்றை இந்த மாமன்றம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று முன்மொழிகிறேன்.*

நான் ஆற்ற வேண்டிய உரையை மாண்புமிகு உறுப்பினர்களின் வசதிக்காக நூல் வடிவமாக மன்றத்திலே வைத்திருக்கின்றேன். இங்கே வைக்கப்பட்டிருக்கும் எனது தமிழ் உரையை @ அவைக் குறிப்பிலே ஏற்ற அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மின்சார வாரியத்தின் செயல்முறைகள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை அரசும், மின் வாரியமும் கருத்தில் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, மின்சார வாரியம் தனது பணிகளை இன்னும் சிறப்பாக ஆற்றிடத் தங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை கூறிடுமாறு மாண்புமிகு உறுப்பினர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களின் அடிப்படையில் இறுதியில் என்னுடைய பதிலுரையைத் தெரிவிக்கின்றேன் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பகல் *12–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் தொடங்குகிறது. இன்று விவாதத்தில் பெரும்பகுதியான உறுப்பினர்கள் கலந்துகொள்வது நல்லது என்று கருதுகிறேன். காரணம், திங்கட்கிழமை எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற ஒன்றிரண்டு தலைவர்களுக்கு மட்டுமே அந்த வாய்ப்பு கிட்டும். எனவே, முன் வரிசையிலே இருக்கக் கூடியவர்கள் இன்றைக்கே பெரும் பகுதியினர் பேசிவிட்டால் திங்கட்கிழமை பேச இருக்கின்ற தலைவர்களுக்கு நீங்கள் அதிக வாய்ப்புக் கொடுக்கிறீர்கள் என்று பொருளாகும். ஆகவே, அந்த அளவிற்கு மற்றவர்கள் இன்று பேசி விடவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *1995–96* ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை விவர அறிக்கையின் மீது நடக்கின்ற இந்த விவாதத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கலந்து கொண்டு கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான வாய்ப்பினைத் தந்த உங்களுக்கும், காங்கிரஸ் பேரியக்கத்திற்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு நாட்டினுடைய வளத்தினை வாழ்த்தவேண்டுமென்று தமிழ்நாட்டில் முதுபெரும் புலவரான ஔவைப்

---

@ பக்கம் *1055* முதல் *1088* வரை, இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பிராட்டியாரைக் கேட்டுக்கொண்டபோது, 'வரப்புயர' என்று சொன்னார்களாம். வரப்புயர்ந்தால் நீர் உயரும்; நீர் உயர்ந்தால் நெல் உயரும்; நெல் உயர்ந்தால் குடி உயரும்; குடி உயர்ந்தால் கோன் உயரும் என்று சொல்லி, ஒரு நாட்டினுடைய நஞ்சை நிலங்களின் வரப்பு உயர்ந்தால் அந்த நாட்டு அரசனுடைய புகழும், பெருமையும் ஓங்கும் என்கிற அளவிலே அவர்கள் அன்று சொல்லியிருக்கிறார்கள். அதே ஔவைப் பிராட்டியார் அவர்கள் இன்று இருந்திருப்பார்களென்று சொன்னால் ஒரு நாட்டினுடைய மின்சார உற்பத்தி உயரவேண்டும் அல்லது பெருகவேண்டும் என்று வாழ்த்தியிருப்பார்கள். ஏனென்றால், இந்த நாட்டினுடைய எதிர்காலம், இந்த நாட்டினுடைய தொழில் வளர்ச்சி, இந்த நாட்டினுடைய விவசாய மறுமலர்ச்சி, இந்த நாட்டிலே பெருக வேண்டிய வேலைவாய்ப்புகள், இந்த நாட்டிலே பல்வேறு வழிகளிலே பயன்படுத்தப்படுகின்ற இந்த மின்சாரம், ஒரு மாநிலத்திலே எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றதோ, எவ்வளவுக்கெவ்வளவு முறையாகப் பயன்படுத்தப்படுகின்றதோ எவ்வளவுக்கெவ்வளவு மலிவாகக் கிடைக்கின்றதோ, அந்த அளவிற்குத்தான் அந்த மாநிலத்தினுடைய எதிர்காலம் அமைய முடியும் என்பதிலே எங்களுக்கும், இந்த அரசுக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். விவாதங்களிலே போவதற்கு முன்னால் நம்முடைய அமைச்சர் அவர்கள் சந்தோஷமாக இருப்பதால் ஒரு கோரிக்கை ஒன்றை வைக்க ஆசைப்படுகிறேன். திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு சர்க்கிள். அதிலே தென்காசியை தனி சர்க்கிளாக பிரிக்க வேண்டும் என்கிற கோரிக்கையை அரசினுடைய ஆய்விற்கும், ஒப்புதலுக்கும் அனுப்பப்பட்டிருப்பதாக அறிகிறேன். அப்படி அதைப் பிரித்து தென்காசியை ஒரு தனி சர்க்கிளாக அமைப்பது ஒரு நியாயமான கோரிக்கை. அதை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அமைச்சர் அவர்கள் ஆற்றப்பட்டதாகக் கருதப்படுகின்ற இந்த உரையிலே விவசாயிகளுக்காகத் தரப்படுகின்ற மின் இணைப்பு பொறுத்தவரையில் ரூ.10,000/– கட்டினால் உடனே கொடுக்கப்படும்; அல்லது முன்னுரிமை தரப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால், அந்த அறிவிப்பு அமலுக்கு வருவதுபோல, இன்னும் நடந்து கொண்டிருப்பது போல அந்த உரையிலே சொல்லப்படுகிறது. ஆனால், எனக்குக் கிடைத்திருக்கின்ற தகவல்கள் சரியாக இருக்குமென்று சொன்னால், அதற்கான மனுக்கள் 10–5–95க்குப் பிறகு பெறப்படவே

இல்லை. அதற்கென கோரிய மனுக்களை சம்பந்தப்பட்ட மின்சார வாரிய அலுவலகங்களிலே கொடுக்கச் சென்றால், விவசாயிகளுடைய அந்த மனுக்கள் பெறப்படாமல் இருந்து வருகின்றன. எனவே, தமிழ் நாட்டிலே உள்ள ஒரு பெரிய அளவிலான விவசாயிகள் தங்களுக்குத் தேவையான மின் இணைப்பைப் பெற முடியாமல் இருக்கிறார்கள். எனவே, அந்தத் திட்டத்தினை ஏற்கெனவே இந்த அரசு பெருமையோடு அறிவித்ததைப்போல தொடர்ந்து அமல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவது, இன்று தமிழ்நாட்டிலே எல்லா இடங்களிலேயும் கேட்கப்படுகின்ற ஒரு கேள்வி, தமிழ்நாட்டில் மின்வெட்டு இருக்கிறதா? இல்லையா? தமிழ்நாட்டிலே மின்வெட்டு கடந்த 4 ஆண்டுகளாக, இந்த ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்டதிலிருந்து, இந்த அரசு செயல்படத் தொடங்கியதிலிருந்து இந்த மின்வெட்டு இல்லை, இல்லையென்று அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். மின்வெட்டு இருக்கிறது என்று எங்களைப் போன்ற விவரம் தெரியாதவர்கள், நாங்கள் விவரம் தெரியாதவர்கள் என்று ஏன் சொல்கிறேன் என்றால், விளக்கு எரியவில்லை என்று சொன்னால் அதற்கு காரணம் மின்வெட்டு என்று நாங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஒரு ஊரிலே தொழிற்சாலை ஓட முடியவில்லை என்று சொன்னால், ஒரு விவசாயினுடைய பம்பு செட் ஓட முடியவில்லையென்று சொன்னால், வீட்டிலே விளக்கு எரியவில்லை என்று சொன்னால், அந்த நிலை அடிக்கடி தொடரும் என்று சொன்னால் அதற்கு காரணம் மின்வெட்டு என்று நாங்கள் நினைத்துக் கொள்கிறோம். ஆனால், அமைச்சர் அவர்கள் அதற்கு வேறு பெயர் சொல்கிறார்கள். மொத்தத்தில் விளக்கு எரிவதில்லை என்பது மட்டும் உண்மை. இதை ஏதோ நான் விவாதத்திற்காகச் சொல்லவில்லை. சட்டமன்றம் தொடங்குவதற்குச் சரியாக 10 நாட்களுக்கு முன்பு--திருநெல்வேலி மாவட்டத்திலே இருக்கிற, எந்தக் கட்சி உறுப்பினரையும் கேட்டுக் கொள்ளுங்கள்--தொடர்ந்து 20 நாட்கள், 22 நாட்கள் எங்களுக்கு இரவிலே 8 மணி நேரம் மின்சாரம் இல்லை. பகலிலே முழுவதும் மின்சாரம் இல்லை. இதை 'லோட் ஷெட்டிங்' என்று சொல்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அதற்கு இவ்வாறு ஏதோ விளக்கம் சொல்கிறார்கள். இதிலே நான் என்ன சொல்கிறேன் என்று சொன்னால், மின்வெட்டு என்று ஒழுங்காக அறிவிக்கப்பட்ட காலம், இதைவிட நன்றாக இருந்தது என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்று சொன்னால்.......(குறுக்கீடு)

1995 நவம்பர் 3]

பிற்பகல் 12-05

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் முதலிலே விவசாயிகளுக்குக் கொடுக்கிற மின் இணைப்பைப் பற்றித் தெரிவித்தார்கள். 25 ஆயிரம் ரூபாய் செலவிலே, 'டெபாசிட்' தொகையைக் கட்டி மின் இணைப்பைப் பெறலாம் என்ற அறிவிப்பை மாற்றி, நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், விவசாயிகளின் நலனிலே அக்கறை கொண்டு, 10 ஆயிரம் ரூபாய் மாத்திரம் கட்டினால் போதும் என்ற அளவிலே, அந்தத் தொகையைக் குறைத்ததற்குப் பின்னாலே, வெறும் 6,500 படிவங்கள் வந்த அந்த நோக்கம், இன்றைக்கு அதிகமாக நிறைவேற்றப்பட்டு, 30 ஆயிரத்து 121 மனுக்களை நாம் பெற்றிருக்கிறோம். 30 ஆயிரத்து 121 மனுக்களை, ஒரே ஆண்டிலே, அந்த 10-5-95 என்று அவர் சொன்னாரே, அந்தக் காலக்கெடுவுக்குள்ளே நாம் பெற்றிருக்கிறோம். அதற்கு வரவேற்பு, நம்முடைய விவசாயிகள் மத்தியிலே அதிகமாக இருந்திருக்கிறது. ஆனால், நம்மைப் பொறுத்தமட்டிலே, அதிலே ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேலே நாம் செய்ய முடியாது. ஏனென்று சொன்னால், ஏற்கெனவே இருக்கிற 4½ இலட்சம் மின் பயனீட்டாளர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்களே மின் இணைப்பை நோக்கி, அவர்களை நாம் அதிலே சேர்க்க வேண்டும். அதுதவிர, இவர்களுக்கும் நாம் கொடுக்க வேண்டும். அப்படிப் பார்க்கிறபோது, பணத்தைக் கட்டியவர்களுக்கு மாத்திரம், மின் இணைப்பை நாம் கொடுத்து விட்டால், பணம் கட்டாமல் பெறுகின்ற ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய மின் இணைப்பை நாம் கொடுக்க முடியாது. ஆகவேதான், ஆண்டுக்குப் பத்தாயிரம் என்ற அடிப்படையிலே, அதை நாம் இப்போது நிர்ணயித்திருக்கிறோம். 10 ஆயிரம் ரூபாய் கட்டினால்கூட, ஓராண்டுக்கு 10 ஆயிரம் மின் இணைப்பைத்தான் கொடுக்க முடியும். அப்படி 30 ஆயிரம் பேருக்கு 3 ஆண்டுகளிலே கொடுத்து விடலாம். இதைத்தவிர, ஏற்கெனவே நிலுவையிலே 4½ இலட்சத்திற்கும் மேற்பட்ட மின் நுகர்வோர்கள் இருக்கிறார்களே, மின் இணைப்பைக் கேட்கிற விவசாயிகள், அவர்களுக்கும் மின் இணைப்பைத் தொடர்ந்து, 40 ஆயிரம் எண்களாக வழங்கலாம் என்ற அளவிலேதான் நாம் இன்றைக்கு முடிவெடுத்திருக்கிறோம். அதுதவிர, 50 ஆயிரம் ரூபாய் என்று இப்போது இலக்கு நிர்ணயித்திருக்கிறோம். 10 ஆயிரம் ரூபாய் கட்ட முடியாதவர்களுக்கு, 50 ஆயிரம் ரூபாய் அதிகபட்ச செலவு என்பதால், நாம் நம்முடைய மின்சார வாரியத்தின் சார்பிலே, அதன் செலவிலே

கொடுத்துவிடலாம் அந்த மின் இணைப்பை. சில இடங்களிலே அதிகமாக 'போர்' போட வேண்டியிருக்கிறது. 'கண்டக்டர்ஸ்' வேண்டியிருக்கிறது. சில இடங்களிலே அதிகமான செலவினங்கள் வருகிறபோது, அப்படிப்பட்ட செலவினங்களை சிலபேர் ஏற்க முன்வருகிறார்கள். அப்படி 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட தொகையினை அவர்கள் ஏற்க முன்வருகிறபோது, அந்தப் பணத்தை அவர்கள் செலவிடத் தயாராக இருந்தால், அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கிறோம். அதுதான் இந்த விவசாயிகளைப் பொறுத்தமட்டிலே உள்ள நிலைமை.

இரண்டாவதாக, மின்வெட்டைப் பொறுத்தமட்டில், இன்றைக்கு இந்திய நாட்டினுடைய மின்சார அரங்கை நாம் பார்க்கிறபோதும் சரி, மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோதும் சரி, ஏன், தமிழகத்திலே மட்டுமல்லாமல், டெல்லியிலே இருக்கிற அரசாங்கமும் சரி, ஆக எங்கே இருக்கிற சூழ்நிலையையும் எடுத்துக் கொண்டாலும், இன்றைக்கு எல்லோரும் மின்வெட்டை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். மற்ற மாநிலங்களிலே 60 சதவிகிதத்திற்கு மேலே இன்றைக்கு மின்வெட்டு இருக்கிறது. ஆந்திராவிலேயும் சரி, கர்நாடக மாநிலத்திலேயும் சரி, மற்ற மாநிலங்களிலும் சரி அப்படித்தான். நம்மைப் பொறுத்தமட்டில், 20 நாட்களாக சில பிரச்சினைகள். ஆந்திர மாநிலத்திலே நிலக்கரிச் சுரங்களிலே இன்றைக்குப் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. அதனால், ராமகுண்டத்திலேயிருந்து வரவேண்டிய மின்சாரம் நமக்கு வருவதற்குத் தடையாக இருக்கிறது. அங்கே போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. கரி ஒழுங்காக சப்ளை செய்யப்படவில்லை. மைய அரசினுடைய கட்டுப்பாட்டிலே இருக்கிற அந்த ராமகுண்டம் அனல் மின்நிலையம், இன்றைக்கு அதனுடைய செயல்பாடுகளினால், ஏறத்தாழ 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட உற்பத்தித் திறனைச் செய்ய வேண்டிய அந்த மின்நிலையம், 700 அல்லது 800 மெகாவாட் என்ற அளவிற்கு உற்பத்தியைக் குறைத்திருக்கிறது. நமக்குக் கிடைக்க வேண்டிய அந்த 'ஷேர்'-பங்கு-நமக்கு கிடைக்காமல் இருக்கிறது. இது ஒரு குறைபாடு. நமக்கு இடைக்காலத்திலே இப்படி ஒரு சிறிய பிரச்சினை. ஆகவே, இவ்வாறு பிரச்சினைகள் ஏற்படுகிற நேரங்களிலேதான், இதுபோன்ற 'லோட் ஷெட்டிங்' என்று சொல்லப்படுகிற குறைகள் ஏற்படுகின்றனவே தவிர, நம்மைப் பொறுத்தமட்டிலே, ஏறத்தாழ 20 இலட்சத்திற்கு மேலே, மின்இணைப்பை நாம் நடப்பாண்டு காலத்திலே கொடுத்திருக்கிறோம். 650 மெகாவாட்டுக்கு மேலே மின்சார உற்பத்தியை நாம் அதிகரித்திருக்கின்றோம். காற்றாலை மூலம் உற்பத்தி

செய்யப்படுவதையும் சேர்த்தால், ஏறத்தாழ ஆயிரம் மெகாவாட்டுக்கு மேலே நம்முடைய உற்பத்தி அதிகமாக இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே, இந்த அரசைப் பொறுத்தமட்டிலே, புதிய மின் இணைப்புகளைக் கொடுக்கிற நேரத்திலேயும் சரி, புதிய தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்பைக் கொடுக்கிற நேரத்திலும் சரி, வீடுகளுக்கும், கமர்ஷியல் காம்ப்ளெக்ஸுக்கும் என்று இலட்சக்கணக்கான மின் இணைப்புகளைக் கொடுத்த நேரத்திலும்கூட பற்றாக்குறை இல்லாமல், இந்தியாவிலே ஒரு தன்னிறைவு பெற்ற மாநிலமாக சமாளித்து கொண்டிருக்கிற ஒரு மாநிலம் தமிழ்நாடு என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் மறந்திருக்க முடியாது. ஆகவே, இருக்கிற சூழ்நிலையிலே, சில நேரங்களிலே 'லோட் ஷெட்டிங்' என்று வருகிற பிரச்சினை, தற்காலிக பிரச்சினையே தவிர, நிரந்தரம் அல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலை எல்லாம் என்னுடைய நேரத்திலே எடுத்துக்கொள்ளக்கூடாது என்கிற கோரிக்கையை வைத்துக் கொள்கிறேன்.

அமைச்சர் அவர்கள் ஆண்டு ஒன்றுக்கு 10 ஆயிரம் இணைப்புகள் கொடுக்கப்படும் என்று சொல்லி இருக்கிறார். ஏறக்குறைய ஆண்டின் இறுதிக் கட்டத்திற்கு வந்து இருக்கிறோம்; இதுவரை நீங்கள் 3222 இணைப்புகள்தான் கொடுத்து இருக்கின்றீர்கள். அறிவிக்கப்பட்ட ஆண்டிலேயே, ஆண்டுக்கு 10 ஆயிரம் இணைப்புகள் தரப் போகிறோம் என்று அறிவித்த நீங்கள், இந்த அறிக்கையை இந்த மன்றத்திலே தாக்கல் செய்கின்றவரை, மூன்றில் ஒரு பங்கைக்கூட நிறைவேற்ற முடியவில்லையே? நீங்கள் பெருமைப்பட்டு கொள்வதிலே என்ன இருக்கிறது என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலக்கு நிர்ணயித்து இருக்கிறோம். மார்ச் மாதத்திற்குள் அந்த 10 ஆயிரம் மின் இணைப்புகளை நாங்கள் கட்டாயமாகக் கொடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். மின்வெட்டு என்று அறிவித்து விட்டால், ஒரு விவசாயிக்கோ, ஒரு சிறுதொழில் நடத்துகின்றவருக்கோ அல்லது வீட்டிலே வேலை செய்கின்ற--இப்போது மிக்சர், கிரைண்டர் போன்ற இயந்திரங்களை வைத்து இருக்கின்ற பெண்மணிக்கோ-- படிக்கின்ற மாணவனுக்கோ, இந்த நேரத்தில்தான் மின்வெட்டு, இந்த நேரத்தில் மின்சாரம் இராது என்று தெரியும். ஆனால், இப்போது நீங்கள் வைத்து இருக்கிற இந்தப் பணி இருக்கிறதே, இது எப்போது போகும், எப்போது வரும் என்று ஆண்டவனால்கூட சொல்லமுடியாத ஒரு சூழ்நிலை தமிழ்நாட்டில் இருக்கிறது. நீங்கள் இதற்கு வேறு பெயர் சொல்லலாம். A donkey is a donkey. By whatever name it may called, எந்தப்பெயர் சொல்லி அழைத்தாலும் ஒரு கழுதை கழுதைதான். கழுதை குதிரையாக மாறிவிட முடியாது. எனவே நீங்கள், அழகுக்கு பெயர்களை வேண்டுமென்றால் மாற்றிக்கொள்ளலாம். கழுதை குதிரையாக ஆகிவிடமுடியாது.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபோது வேறு பெயர் என்று சொன்னார்கள். மின்வெட்டு என்பது, பற்றாக்குறை இருந்தால்தான் மின்வெட்டு அறிவிக்க முடியும். சில நேரங்களிலே லோடு ஷெட்டிங் செய்வதை நாம் மின்வெட்டு என்று அறிவிக்க முடியாது. மின்சாரம் எந்த நேரத்தில் போகும், எந்த நேரத்தில் வரும் என்று ஆண்டவனுக்கே தெரியாத போது, பீட்டர் அல்போன்ஸுக்கும் கண்ணப்பனுக்கும் தெரிவதற்கு நியாயமில்லை. ஏனென்றால், மின்சாரம் எப்போது போகும், எப்போது வரும் என்பது மாண்புமிகு பீட்டர் அல்போன்ஸுக்கும் தெரியாது; அமைச்சர் கண்ணப்பனுக்கும் தெரியாது. அது போகும். போன உடனே வேலை நடக்கிறதா என்றுதான் பார்க்கவேண்டும். அதை இயந்திரங்களின் வாயிலாக நாம் டிஸ்ட்ரிபியூட் செய்கிறோம். எங்கேயாவது ஒரு மிஸ்டேக் வந்துவிடலாம்; ஒயர் கட் ஆகிவிடலாம், அல்லது எங்கேயாவது டிரான்ஸ்பார்மர் ஃபெயிலியர் ஆகிவிடலாம், அல்லது ஜெனரேஷனில் குறை வந்துவிடலாம். ஆகவே, அதை நாம் யாரும் கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாது. அது ஒரு டேன்ஜரஸ் பிரச்சினை. மின்சாரம் என்பது மிக ஆபத்தான ஒன்று. அதைக் கையாளுவதிலே சில சங்கடங்கள் இருக்கின்றன; அதிலே வேலை பார்ப்பவர்களுக்குத்தான் அவை தெரியும். நாம் மன்றத்திலே எளிதாகச் சொல்லிவிடலாம். அப்படிப் போகின்றபோது அந்த மின்சாரத்தை நாம் திரும்ப கொண்டு

வருகிறோமா, நடவடிக்கை எடுக்கிறோமா என்பதுதான் பிரச்சினை. எங்கேயும் மின்சாரம் திடீரென்று நின்றுவிடாமல் இருக்கிறதா? டில்லியிலேகூடத்தான் நிற்கிறது; ஏன் மேலைநாட்டிலேகூட நின்றுவிடுகிறது. ஆனால், இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து மறுபடியும் ரெஸ்டோர் செய்கிறதா என்றுதான் பார்க்க வேண்டும் என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். அவர் தெரிவித்ததைப்போல வேறு பெயர் என்பது கிடையாது. எல்லாவற்றிற்கும் மின்வெட்டு என்று பெயர் கிடையாது. மின்வெட்டு என்றால் அதற்குத் தனிப் பெயர்; லோடு ஷெட்டிங் என்றால் அதற்குத் தனிப் பெயர். இதையும் அதையும் போட்டு அரசு குழப்பாது; அந்தமாதிரி குழப்பம் இங்கு கிடையாது. (குறுக்கீடு)

**திரு. எஸ். எஸ். ராமசுப்பு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன பாயிண்ட் ஆஃப் ஆர்டர்?

**திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் லோடு ஷெட்டிங் என்பதையும், மின்வெட்டு என்பதையும் பற்றிச் சொன்னார்கள். எங்களுடைய பகுதியிலே தொடர்ந்து, அதாவது ஒரு நாள், இரண்டு நாள் என்றால் பரவாயில்லை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லை. இதைத்தான் அவர் கேட்டுக் கொண்டிருக்கிறார். இதிலே பாயிண்ட் ஆஃப் ஆர்டர் ஒன்றும் இல்லை. திரு. பீட்டர் அல்போன்ஸ், A donkey is a donkey என்பது எல்லாம் தெரியும். கழுதையை கழுதை என்றுதான் எல்லோரும் சொல்லுவார்கள். ஆனால், குதிரையை சிலர் கழுதை என்று சொல்லிக்கொண்டு இருந்தால், அது ஏதாவது பார்வையிலே கோளாறோ, என்னமோ என்றெல்லாம் வந்துவிடும். அந்தமாதிரி உதாரணம் எல்லாம் வேண்டாம்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, The prime motive of the Electricity Board, தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய முக்கியமான நோக்கம் மூன்று, Produce power in plenty; மின்சாரத்தை அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும். உற்பத்தி செய்கின்ற மின்சாரம் தரமானதாக இருக்க வேண்டும்; அதேசமயத்திலே மலிவானதாக இருக்கவேண்டும். இந்த மூன்று தரங்களை வைத்துப் பார்க்கின்றபோது, அமைச்சர் அவர்கள் தந்து இருக்கின்ற அறிக்கை இருக்கிறதே, அது ஏதோ வெள்ளையடிக்கப்பட்ட

கல்லறை போலத்தான் எனக்குத் தெரிகிறது. வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை என்று சொன்னால், உள்ளே எலும்புக்கூடு, வெளியே பார்ப்பதற்கு அழகாக இருக்கும். எனவே, window dressing தான். நான் ஆதாரத்தோடு சொல்கிறேன். முதலில் மலிவான மின்சாரம் என்று நமது அமைச்சர் அவர்கள் பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். ஏதோ ஒரு மாநிலத்திலே 60 விழுக்காடு இருக்கிறது. டில்லியிலே இல்லையா? அங்கே இல்லையா என்றெல்லாம் கேட்கிறார்கள். டில்லிக்கு பதில் சொல்லக்கூடிய தகுதி எனக்கு இல்லை. நான் இன்று தமிழகத்திலிருந்து கேட்க ஆசைப்படுகிறேன். இன்று நீங்கள் வைத்து இருக்கிற மின்சாரக் கட்டணம் இருக்கிறதே, இதிலே இன்டஸ்ட்ரியல் டாரிஃப், தொழிலுக்கு விதிக்கப்படுகின்ற இந்த ரேட், இந்தியாவிலேயே அநேகமாக, மிக அதிகமாக விற்கப்படக்கூடிய மாநிலங்களிலே தமிழ்நாடும் ஒன்று. இன்று புதிய பொருளாதார கொள்கை என்று சொல்கிறீர்கள். ரேட்டை கூட்டிக் கொடுங்கள். நான் வருத்தப்படவில்லை. ஆனால், இங்கே ஒரு வேடிக்கையான விபரீதம் நடந்து இருக்கிறது. இந்த அரசினுடைய பிரையாரிட்டி, இந்த அரசினுடைய தரம் பிரிக்கின்ற தன்மை எப்படி இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. திரைப்படத்திற்கு நீங்கள்தான் தமிழகத்திலே குறைவான விலைக்கு மின்சாரம் கொடுக்கின்றீர்கள். சினிமாவுக்குக் கொடுக்கின்ற சலுகை, திரைப்பட அரங்குகளுக்குக் கொடுக்கின்ற சலுகையைத் தொழிலுக்குக் கொடுக்கக் கூடாதா? தொழிலுக்குக் கொடுக்கவிட்டால் கூட பரவாயில்லை. எனக்கு கிடைத்து இருக்கின்ற தகவல் சரியாக இருக்கும் என்றால், பள்ளிக்கூடங்களுக்கு இருக்கின்ற அந்த ரேட்டை விட, ஆலயங்கள், கோவில்கள், மசூதிகளுக்கு இருக்கின்ற ரேட்டுகளை விட, சினிமா திரையரங்களுக்கு நீங்கள கொடுத்து இருக்கின்ற மின்சாரம் மிக மலிவாக இருக்கிறது. இது என்ன அர்த்தம்? . . .(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் தவறான கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சினிமாத் துறையைப் பொறுத்தவரையிலே அதிகமாக ரெவன்யூ வரக்கூடிய ஒரு துறையாக அது இருக்கிறது. ஏழை, எளிய மக்களுடைய பொழுதுபோக்கு

அம்சமாக அந்தத் துறை இருக்கிறது. அந்தத் துறை நசிந்து விடக்கூடாது. வீடியோ போன்ற தொழில்களால் அந்தத் துறை இன்றைக்குப் பாதிக்கப்படிருக்கிறது. பெரும்பாலும் ஏழை மக்களுக்கு பொழுதுபோக்கு சாதனமாகவும், நமது அரசுக்கு வருமானத்தைத் தருகிற துறையாகவும் இருக்கிற காரணத்தால், எல்லோரும் வந்து அவர்களுடைய கோரிக்கைகளை வைத்ததன் காரணமாக சில அடிப்படை வசதிகளை அந்தத் துறைக்குச் செய்திருக்கிறோம். அதை ஒரு பெரிய சலுகை என்று சொல்லிவிட முடியாது. ஒரு தியேட்டருக்கு மின்சார வாரியத்தின் மூலம் அதிகமான கட்டணத்தைப் போட்டு அவர்கள் இலட்சக்கணக்கில் கட்ட முடியாமல் பாக்கி வைத்துக் கொண்டு வழக்குக்குப் போவதை விட, ஓரளவிற்கு அவர்கள் தொழிலும் லாபகரமாக நடக்க வேண்டும், அந்தத் தொழிலின் மூலம் வருகிற வருமானத்திற்கு அவர்கள் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும் என்ற அடிப்படையிலேதான் அரசு அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து, மின்சார வாரியத்தின் மூலம் அவர்களோடு கலந்து பேசி, எல்லோராலும் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு, முடிவெடுக்கப்பட்டு அந்தத் தொழிலுக்கு ஓரளவுக்கு சலுகைகள் வழங்கப்பட்டதே தவிர அதிலே வேறு ஒன்றும் உள் நோக்கம் கிடையாது. இந்த ஆட்சியைப் பொருத்தவரையில் கோவில்களுக்கோ, பள்ளிகளுக்கோ அல்லது மசூதிகளுக்கோ அதிகமாக நாங்கள் கட்டணம் போட்டுவிடவில்லை. ஏற்கெனவே கடந்த ஆட்சிக் காலங்களில் எந்த அளவு டாரிப் இருந்ததோ அதைத்தான் நாங்கள் பின்பற்றிக் கொண்டிருக்கிறோமே தவிர அதிகமாக நாங்கள் போடவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நினைத்துச் சொன்னார்களோ, அல்லது நினைக்காமல் சொன்னார்களோ அது எனக்குத் தெரியாது. தவறான தகவலை பீட்டர் அல்போன்ஸ் இந்த அவைக்குத் தந்ததாகச் சொல்லிவிட்டார் என்று சொன்னார். ஆனால், அவர் அதற்கு மாற்றுப் புள்ளிவிவரம் தரவில்லை. நான் அதைத் தருகிறேன். தொழிலுக்கு பெர் யூனிட்டுக்கு மெட்ரோ 2.80 காசும், சென்னைக்கு வெளியே அதாவது நான்-மெட்ரோ 2.70 காசும், கன்செஷனல் டாரிப்--அதாவது கோவில், பள்ளிக்கூடங்கள், தரும ஸ்தாபனங்கள் ஆகியவற்றுக்கு மெட்ரோ 2.35 காசும், நான்-மெட்ரோ 2.25 காசும், ரெசிடென்ஷியல் அதாவது வீடுகளுக்கு அதிக பட்சம் 2.20 காசும், வசூலிக்கப்படுகிறது. ஆனால் சினிமாவுக்கு 1.90 காசு தான் வசூலிக்கப்படுகிறது. கமர்ஷியலுக்கு 3.35 பைசா மெட்ரோ,

நான்-மெட்ரோ 3.25 பைசா என்று இருக்கிறது. இதிலே என்ன தவறான தகவல் இருக்கிறது? நான் என்ன கேட்கிறேன், கோரிக்கை வைத்ததனால்.....

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரையிலே சினிமாத் துறையிலே ஏற்கெனவே இருந்த பளுவினைக் குறைப்பதற்காகவும், பல்வேறு காலக் கட்டங்களிலே அவர்கள் கட்ட முடியாமல் பாக்கிகள் வைத்திருந்த சூழ்நிலைகளை எல்லாம் மாற்றுவதற்காகவும், பல்வேறு பேச்சுவார்த்தைகள் நடத்தி ஓரளவுக்கு அந்தத் தொழில் நடப்பதற்குரிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதற்காகவும்தான் அமைச்சர் அளவிலே உயர் அதிகாரிகள் அளவிலே மற்றும் சங்கப் பிரதிநிதிகள் அளவிலே பேச்சு வார்த்தைகள் நடத்தி, அந்தத் தொழிலினால் வருமானம் வருகிறது என்ற காரணத்தினாலே ஓரளவுக்கு சலுகைகளை அறிவித்தோம். கோவில், மசூதிகளைப் பொறுத்தமட்டில் ஏற்கெனவே இருந்தது அப்படியே இருந்து கொண்டிருக்கிறது. நாங்கள் அதிகமாக எதுவும் போடவில்லை. அதைத்தான் அவரிடம் சொன்னேன், சலுகை என்பது வேறு, உயர்த்துவது என்பது வேறு. ஏற்கெனவே பள்ளிக்கூடங்கள் கோவில்கள் குறைந்த கட்டணம்தான் செலுத்துகிறார்கள். அதிலே நாங்கள் அதிகமாகப் போட்டுவிட முடியாது. ஏற்கெனவே இருப்பதை அவர்கள் தருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். அப்படி ஏதாவது பிரச்சினை வந்தால் அதை அரசு பரிசீலிக்கும். ஏதாவது ஒரு கோவிலுக்கு அதிகமாக வசூலிக்கப்படுகிறது என்று அவர் நினைத்தால், அதை அரசுக்குத் தெரிவித்தால், அரசு அதைப் பரிசீலிக்கும். அதிலே மாற்றுக்கருத்து கிடையாது. மிகப்பெரிய வருமானத்தைத் தருகிற ஒரு தொழில் நசித்துவிடுகிற சூழ்நிலை வருகிறபோது, 5 கோடி ரூபாய் கன்செஷன் கொடுக்கிறபோது, ஏற்படுகிற நஷ்டத்தை விட 60 கோடி ரூபாய் வருமானம் தருகிற தொழில் நசிந்துவிட்டால் அரசுக்கு 55 கோடி ரூபாய் நஷ்டம் என்ற அந்த கணக்கிலேதான் பார்க்க வேண்டும். அந்த அடிப்படையிலேதான் மிகப்பெரிய வருமானத்தைத் தருகிற சினிமாத்துறையிலே நாங்கள் ஒருசில காரணங்களுக்காக, மின்சார வாரியத்தின் டாரிப் காரணமாக அந்தத் தொழில் நசிந்து தியேட்டர்கள் மூடப்பட்டால் பல கோடி ரூபாய் இழப்பு ஏற்படுவதோடு, பொதுமக்களின் அதிருப்திக்கு வேறு ஆளாக நேரிடும் என்பதால் சில சலுகைகளைத் தந்தோம். அரசுக்கு இரண்டு பக்கமும் சங்கடம் இருக்கிறது. ஒருபக்கம் பொதுமக்களின் பொழுதுபோக்கு ஸ்தாபனம். இன்னொரு பக்கம் அதிக வருமானம் வரக்கூடிய துறை என்பதால்

சலுகைகள் தரப்பட்டது. அதைப்போலத்தான் பவர்லூம், ஹேண்ட் லூம் போன்றவற்றுக்கு சலுகைகள் அறிவித்தோம். ஆகவே சலுகை என்று வருகிறபோது இப்போது இருக்கிற சூழ்நிலைகளை அனுசரித்து, மக்களுடைய நலன்களை அனுசரித்துத்தான் மின்சார வாரியம் சலுகைகளை வழங்குகிறதே தவிர, தனி நபர்கள் யாருக்கும் வழங்கவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12–20

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது மக்களுடைய சௌகரியம் என்பதை நான் ஒத்துக்கொள்ள மாட்டேன். ஏனென்றால், When we reduced the tariff rate, we have allowed the cinema theatres to increase their fare for the common man. சினிமாக் கட்டணங்களைக் கூட்டுவதற்கு அனுமதித்தது நீங்கள்தான். திரை அரங்குகளின் மின் கட்டணத்தைக் குறைத்துக் கொடுத்தது நீங்கள்தான். எந்த அளவுக்கும் விற்றுக்கொள்ளலாம் என்ற சலுகையினை தமிழகத்திலே இருக்கிற திரை அரங்குகளுக்கு வழங்கியது யார்? அப்படி என்றால் இந்தப் பயன் யாருக்குக் கிடைத்து இருக்க வேண்டும்? பொது மக்களுக்கு அல்லவா கிடைத்து இருக்க வேண்டும். ஆனால் இன்று என்ன நிதர்சனமான உண்மை? It is black and white. இது வெள்ளையும் கருப்புமாக, வெளிச்சமாக, தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது. பொது மக்களுக்காக நாங்கள் செய்கிறோம் என்று சொன்னால், நீங்கள் அதை வாதத்திற்குச் சொல்லலாம்; அதை இந்த அவை ஒத்துக்கொள்ளாது, நாடு ஒத்துக் கொள்ளாது. மக்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். . .(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சே. ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த அளவுக்கு வேண்டுமென்றாலும் விற்றுக் கொள்ளலாம் என்று அரசாங்கம் உத்தரவு போடப்பட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கூறினார்கள். இதற்கு முன்னாலே கள்ளச் சந்தையிலே பெற்றுக் கொண்டிருந்த பணத்திற்கெல்லாம் அரசாங்கத்திற்கு வரி வரவில்லை. இன்றைக்கு இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களிலும் அதிகமான கேளிக்கை வரி தமிழகத்திலேதான் வசூலிக்கப்படுகிறது சினிமாத் துறையிலே. எனவே 15 தினங்களுக்கு முன்னாலேயே என்ன ரேட்டுக்கு விற்க விரும்புகிறார்கள் என்பதை அரசாங்கத்திற்குத் தெரிவித்துவிட்டு, கவுண்டரில் அதை விற்க வேண்டும். ஏனென்றால் சில திரைப்படங்கள்

வெளியிடப்படுகிற நேரத்திலே வெளி மார்க்கெட்டிலே 30 ரூபாய், 40 ரூபாய் அளவுக்கு விற்கப்படுகிறபோது, அதனால் அரசுக்கு வருகிற கேளிக்கை வரிதான் நஷ்டமாகிறது. எனவே அதைத் தடுப்பதற்காகத்தான் புதிய படங்களைத் திரையிடுகிறபோது, கட்டணங்களை உயர்த்தி விற்க வேண்டுமென்று அவர்கள் விரும்பினால், அரசாங்கத்திடம் அனுமதி பெற்று விற்க வேண்டுமென்ற உத்தரவை இந்த அரசாங்கம் தந்திருக்கிறது.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி கள்ளச் சந்தைககு வரக்கூடிய பணமெல்லாம் நியாயமான வருமானமாக வரவேண்டுமென்று நினைத்தால், அப்படிக் கட்டிய பணத்திற்கு நீங்கள் கூடுதலாக வரி விதித்திருக்க வேணடுமல்லவா? அந்தப் பணம் அரசாங்கத்திற்கு அல்லவா வரியாகக் கிடைத்திருக்க வேணடும்? கள்ளச் சந்தையில் விறறதால் கிடைத்த பணம் அரசாங்கத்திற்கு வராமல், தனிப்பட்ட திரை அரங்கு முதலாளிகளுக்குப் போகத்தானே நீங்கள் வழி செய்திருக்கிறீர்கள். பொது மக்கள் நலன் எங்கே இருக்கிறது? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய படங்கள் வெளியிடும்போது வெளியில் திருட்டுத்தனமாக கூடுதல் கட்டணத்திற்கு டிக்கட் விற்கப்படுகிறது என்பதைப் பலகாலமாக இந்த நாடு அறிந்திருக்கிறது. ஆனால் மாண்புமிகு முதல்வரவர்கள்தான் இந்த நிலையை மாற்றி, அப்படிப்பட்ட தருணத்தில் திரையரங்கு உரிமையாளர்கள் படத்தின் தகுதிக்கேற்ப அவர்கள் கட்டணத்தைக் கூட்டிக்கொள்ளலாம். அதன் மூலம் வெளியில் திருட்டுத்தனமாக விற்பதைத் தடுக்கலாம்; அப்படி கூட்டப்படுகிற கட்டணத்தின் தொகையை 15 தினங்களுககு முன்பு அரசுக்கு தெரிவித்து, துறை அதிகாரிகளிடமிருந்து அனுமதி பெற வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். அப்படி கூட்டப்படுகின்ற தொகைக்கு ஏற்கெனவே என்ன சதவிகிதம் வரி விதிக்கப்படுகிறதோ வணிக வரித்துறை மூலம், அதே வரி வீதத்தை--அதாவது 40 சதவிகிதம் என்று சொன்னால், 2 ரூபாய்க்கு 80 பைசா வரும்--அது பத்து ரூபாயாக டிக்கட் கட்டணம் உயர்த்தப்படுமென்று சொன்னால் 4 ரூபாய் வரியாக வரும். அந்த வகையில் கட்டணம் உயர்த்தப்படுமானால் வரி விகிதம் கூடுகிறது. அரசுக்கு வருவாய் கூடுகிறதே தவிர திரையரங்கு

உரிமையாளர்களுக்கு மறைமுகமாக அந்த உதவியைச் செய்யவில்லை என்பதை உறுப்பினர் உணர வேண்டும்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நன்றாகவே உணர்ந்திருக்கிறேன். நீங்கள் அப்படிக் கட்ட அனுமதித்தால் tariff rate of sales tax will increase எப்படி கூடுதல் வருமானத்திற்கு இன்கம்-டாக்ஸ் கட்டுகிறபோது டாரிஃப் ரேட் கூடுகிறதோ அப்படி. நீங்கள் அநாவசியமாக 2 ரூபாய் டிக்கட்டை 8 ரூபாய்க்கு விற்கச் சொல்லுகிறீர்கள். அந்த 8 ரூபாய்க்கு ரூ. 1.60 தான் வரி கட்டுகிறார். அதிகமாக வசூலிக்கின்ற ரூ. 6.40 திரைப்பட உரிமையாளர் சம்பாதித்துக் கொள்கிறார். நீங்கள் என்ன செய்ய வேண்டும்? முதல் 2 ரூபாய்க்கு 20 பைசா வரி; அடுத்து வரும் ஒவ்வொரு ரூபாய்க்கும் 80 பைசா வரி என்று சொன்னால், உங்களுக்குப் பொது மக்கள் நலனில் அக்கறை இருக்கிறது, அரசாங்கத்தின் வருமானத்தைப் பெருக்குவதில் அக்கறை இருக்கிறது என்பதை நான் ஒத்துக் கொள்வேன். நீங்கள் ஏதோ முன் பக்கம் கொடுப்பதைப்போல் கொடுத்துவிட்டு, பின்பககம் எடுத்துக் கொள்வதைப்போல, அரசாங்கமே பின்கடையைத் திறந்து விடும் வழக்கம்தான் இதில் தெரிகிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் முழுமையாகப் புரிந்துகொண்டு பேச வேண்டும். ஒரு குற்றச்சாட்டைச் சொல்வதற்கு முன்பு, அதில் என்ன உண்மை இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டு பேச வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். 2 ரூபாய்க்கு விற்க வேண்டிய டிக்கட்டை 10 ரூபாய்க்கு விற்கிறபோது, அந்தத் திரையரங்கு உரிமையாளர்களுக்கு 8 ரூபாய் கூடுதல் ஆதாயம் கிடைத்தது கள்ள மார்க்கெட் மூலம். இப்போது அந்தப் பத்து ரூபாய்க்கு நாம் 4 ரூபாய் வரி விதிக்கின்றபோது மொத்த வருமானம், 6 ரூபாயாகக் குறைந்திருக்கிறது எனபதைப் புரிந்துகொள்ள வேண்டும். அந்த வகையில் திருட்டுத்தனமாக திரையரங்கு உரிமையாளர்கள் பணம் திரட்டி வந்ததைக் குறைத்திருக்கிறது இந்த அரசு. இன்னும் பிளாக் மார்க்கெட்டில் டிக்கட் விற்கப்படுவதைத் தடுப்பதற்குச் சட்டத் திருத்தம் இந்த அவை முன்பு வர இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12.25

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் அடுத்த பொருளுக்குச் செல்கிறேன். இன்றைக்கு நமது அமைச்சர் அவர்கள் இந்த உரையிலே ஏராளமான புள்ளி விவரங்களைத் தந்திருக்கிறார்கள். இந்தப் புள்ளி விவரங்கள் எல்லாம் உண்மையானவையா, அவற்றில் தவறேதும் உண்டா என்பதைப் பற்றி நாங்கள் தெரிந்து கொள்வதற்கான ஆதாரங்கள் ஒன்றும் இல்லை. ஆனால் இந்த மன்றத்திலே நீங்கள் மூன்றாண்டுகளுக்கு தாக்கல் செய்த ஆண்டு அறிக்கைகளைத் தவிர, இந்த மூன்றாண்டுகளுக்கு நீங்கள் தாக்கல் செய்திருக்கிற இந்த ஆண்டு அறிக்கைகளைப் பார்க்கிறபோது, நீங்கள் எப்படி இந்த புள்ளி விவரங்களைத் தரமுடியும் என்றே எனக்கு விளங்கவில்லை. ஏனென்றால், ஒரு சின்ன பெட்டிக்கடை வைத்திருப்பவன் கூட ஒரு நாளைக்கு, ஒரு மாதத்திற்கு, ஒரு வருடத்திற்கு, தனக்கு என்ன வரவு, என்ன கொள்முதல், என்ன விற்றுமுதல், எங்கே சேதாரம் ஏற்படுகிறது என்பதைப் பார்ப்பதற்கு ஒரு கணக்கு வைத்திருப்பான். ஆனால், மிக அதிகமான முதலீட்டிலே தமிழ்நாட்டிலே நடக்கின்ற இந்த தமிழக மின்சார வாரியத்திடம் சரியாகக் கணக்குப் பார்க்கின்ற இயந்திரமே இல்லை. (குறுக்கீடு) இல்லை. அதை நான் சொல்லவில்லை. நான் சொன்னேன் என்று சொன்னால், நீங்கள் சொல்லலாம், ஏதோ பீட்டர் அல்போன்ஸ் அரசியல் காழ்ப்புணர்ச்சியிலே சொல்கிறான் என்று.

மூன்றாண்டுகளுக்கு நீங்கள் தாக்கல் செய்திருக்கின்ற இந்த ஆய்வறிக்கை இருக்கின்றதே, இந்த அறிக்கையிலே இந்திய கணக்காயர் தந்திருக்கின்ற சான்றிதழ்களைத் தயவு செய்து நீங்கள் பார்க்க வேண்டும். ஏனென்றால், இதில் தமிழக மக்களுடைய வரிப்பணம் எவ்வளவு தூரத்திற்கு முறைகேடாக, தவறாக, யாருடைய கணக்காய்வும் இன்றி, எந்தவிதமான சரி பார்த்தலும் இன்றி, செலவிடப்பட்டிருக்கிறது என்பதற்கு தந்திருக்கின்ற சான்று இதுதான். 1991-92-ஆம் ஆண்டிலே சொல்கிறார். In the report for the year 1991-92, "The difference ledger and balance sheet figures under various heads of accounts amounting to 12332 lakhs was not reconciled. The accuracy of the figure in the final accounts could not be verified due to non-reconciliation of the amounts outstanding under sundry creditors for sale of power in the Circles. The ledgers were not posted upto 31-3-92." முடிவிலே என்ன சொல்கிறார் என்றால், இதனால் எந்தவிதமான புள்ளி விவரத்தையும் சரிபார்க்க

முடியவில்லை என்று சொல்கிறார். 1992-93-ஆம் ஆண்டுக்கான அறிக்கைகளை நீங்கள் பார்க்க வேண்டும். "The capital expenditure on completed works has been arrived at on the basis of certificates given by the Field engineers instead of on the basis of work orders. Further as on 31-3-93, 51,240 capital work orders were pending closure and totally minus balances amounting to 1516 lakhs. These accounts were not verified. The accuracy of the figures in the final accounts could not be verified due to non-reconciliation of amounts outstanding under Sundry Creditors for sale of power. The amount outstanding under security deposits from consumers were not tallied. The ledgers were not posted upto 31-3-93.

For 1993-94, the following defects persist. The differences between ledger and balance sheet figures under various heads of accounts amounting to Rs. 8178.31 lakhs were not reconciled. எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் இப்போது?

*மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கை சம்பந்தமான முறையான பதிலை திங்கட்கிழமை தருகிறபோது, இதற்குரிய விளக்கத்தைத் தர இருக்கிறேன். ஏனென்றால் அதற்கு நெடிய விளக்கம் தரவேண்டியிருக்கிறது. பொதுவாக, அவர்கள் ரிப்போர்ட் கொடுக்கிறபோது ஆடிட்டர் ஜெனரலாக இருந்தாலும் சரி அக்கவுண்டண்ட் ஜெனரலாக இருந்தாலும் சரி, அவர்கள் கணக்குகளை ஆய்வு செய்கிறபோது, பல்வேறு கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள். நாம் கணக்குகளை எழுதுகிறபோதும் சரி, மின்சார வாரியமானாலும், மற்ற துறைகளானாலும் சரி, அதற்குரிய பதிலில், நாம் என்ன செய்திருக்கிறோம், நாம் என்ன சொல்லியிருக்கிறோம் என்பதைச் சொல்வது கிடையாது. அவர்கள் தெரிவிக்கிற கருத்துக்களை அவர்கள் தெரிவிக்கிறபோது, அதற்குரிய பதிலை நாம் சொல்லியிருக்கிறோம். நாங்கள் சொல்கிற விளக்கங்களை அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இது குற்றச்சாட்டு என்றோ அல்லது கண்டுபிடித்துச் சொல்கின்ற பிரச்சினைகளோ அல்ல. அதற்குப் பதில் சொல்கிற முறை காலங்காலமாக இருந்து வந்திருக்கிறது. ஏதோ மூன்று காலத்திலே மாத்திரம் என்று அல்ல. பட்ஜெட் தாக்கல் செய்கிற காலத்திலும் சரி, ஒரு அறிக்கை வைக்கப்படுகிற நேரத்திலும் சரி, கணக்கைத் தணிக்கை செய்யப்படுகின்ற

நேரத்திலும் சரி, அது சம்பந்தப்படட தணிக்கை அதிகாரிகள் அதற்கான காரண காரியங்களை விளக்கமாகச் சொல்வது இல்லை என்று அதற்கு ஒரு முறை உண்டு. அந்த முறையிலேதான் இதையும் கேட்டிருக்கிறார். ஆகவே அதற்குரிய விளக்கங்களை நான் திங்கட்கிழமை பதில் சொல்லும்போது விளக்கத் தயாராக இருக்கிறேன். ஆகவே, அதிலே குறைபாடு என்று அவர் சொல்கிறபோது, அதற்கு நாம் என்ன செய்திருக்கிறோம் என்று நாம் பதில் சொல்லியிருக்கிறோம். அவர்களும் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதற்குரிய விளக்கத்தை நான் திங்கட்கிழமை சொல்கிறேன்.

*பிற்பகல் 12.30*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போது உங்களிடம் கொடுத்தது சி.ஏ.ஜி. ரிப்போர்ட் அல்ல. நான் கொடுத்தது, It is the report from the Department which is directly functioning under the Ministry which is your own Tamil Nadu Electricity Board. அங்கேயுள்ள உங்களுடைய அக்கவுண்டட் ரிப்போர்ட் தான். நான் சி.ஏ.ஜி.வுடைய ரிப்போர்ட்டிற்கு பிறகு வரப் போகிறேன். இதனுடைய விளைவுகள் எவ்வளவு தூரம் போயிருக்கிறது. நான் என்ன சொல்கிறேன் என்றால் நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒன்று சொன்னார். நான் ஒப்புக் கொள்கிறேன். அதாவது ஆடிட் ரிப்போர்ட் இருக்கிறது. அந்த ரிப்போர்ட்டைப் பார்த்தவுடனே நாங்கள் சரி செய்திருக்கிறோம். அப்படி சரி செய்ததாக நாங்கள் இதிலே சொல்லவில்லை என்று சொன்னார். நீங்கள் இந்த அறிக்கையில், இப்போது வைத்திருக்கிற அறிக்கையில் அதைச் சொல்லி இருக்கலாமே?

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறாகச் சொல்கிறார். சரி செய்து கொண்டிருப்போம் என்றல்ல. ஒரு அறிக்கையில் விளக்கம் கேட்கிறபோது, கணக்கு தணிக்கையின் போது அதற்குரிய விளக்கத்தை அளித்து இருக்கிறோம். ஒரு தணிக்கையில் விளக்கம் கேட்கப்படுகிறது. இப்படிச் செய்திருக்கிறீர்களே, அது எப்படி என்று கேட்கிறபோது அதற்கு விளக்கம் தரப்படுகிறது. எந்தத் துறையாக இருந்தாலும் சரி. செலவழிக்கிற எக்ஸ்பெண்டிச்சர் டிபார்ட்மென்டில் ஒரு கான்ட்ராக்ட் கொடுக்கிறோம், அதிலே ஒரு விளக்கம் கேட்கிறார்கள் என்றால் விளக்கம் தருகிறோம். அவர்கள் ஒரு கண்ணோட்டத்தில் பார்ப்பார்கள்.

அதற்கு நாம் சரியான விளக்கத்தை, சட்ட விதிகளுக்கு உட்பட்டு செய்திருக்கிறோம் என்று சொன்னால் அதை ஏற்றுக் கொள்வார்கள். ஆகவே விளக்கம் கேட்பதும் தவறில்லை, அதற்கான சரியான பதிலை அரசின் சார்பில் சொல்வதிலும் எந்தத் தவறும் இருக்க முடியாது. அதிலே பிரச்சினை என்றால் அவர்கள் நடவடிக்கைக்கு போகிறார்கள். அதற்கென்று எத்தனையோ முறைகள் இருக்கின்றன. கையாடல் என்ற பிரச்சினை வருகிறது என்றால் நடவடிக்கை வருகிறது. கோர்ட்டுக்குப் போகிறோம். நடவடிக்கை எடுக்கிறோம். கிரிமினல் நடவடிக்கை எடுக்கிறோம். தணிக்கைத் துறையின் சார்பில் ஏதாவது குற்றம் செய்திருக்கிறார்கள் என்று முடிவாக தீர்மானிக்கப்பட்டால், கொடுக்கப்பட்ட விளக்கங்கள் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் அதற்கான உரிய நடவடிக்கையை இந்தத் துறை எடுத்திருக்கிறது. ஆகவே, இதுபோன்ற முறை வழக்கத்திலே உள்ளது. அதற்கு பதில் அளித்து இருக்கிறோம் என்பதைத்தான் நான் சொன்னேன்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரியத்திலே ஒரு லட்சத்து இருபதாயிரம் பேர் வேலை பார்க்கிறார்கள். The persons totally employed by the Electricity Board is 1,25,000. அதிலே கணக்கு சரி பார்ப்பதற்கு எத்தனை பேர்களை வைத்திருக்கிறீர்கள் தெரியுமா? 477 பேர்களை வைத்திருக்கிறீர்கள். இண்டர்னல் ஆடிட் செக்ஷனுக்கு வைத்திருக்கிற ஆட்கள் 477 பேர்கள்தான். 1¼ லட்சம் பேர் வேலை பார்க்கிற பெரிய நிறுவனத்தில் கணக்கை சரி செய்ய 477 பேர்கள்தான். இப்போது அக்கவுண்டன்ட் ஜெனரல் என்ன சொல்கிறார் என்றால், உங்களுக்கு என்று ஏற்கெனவே ஒரு இண்டர்னல் ஆடிட் சிஸ்டத்தை நீங்கள் உருவாக்க வேண்டுமென்று சொல்கிறார். As per the Central Electricity Act, நீங்கள் ஒரு இண்டர்னல் ஆடிட் சிஸ்டத்தை கண்டிப்பாக உருவாக்கி இருக்க வேண்டும். ஏனென்றால் அது ஊழலுக்கு வழி வகுக்கிறது. அது முறைகேடுகளுக்கு வழி வகுக்கிறது. தவறான செலவினங்களுக்கு வழி வகுக்கிறது. அந்த ஊழலின் ஊற்றுக் கண்ணை அடைப்பதற்காக ஒரு சரியான தணிக்கை கணக்கு வேண்டுமென்று மத்திய அரசினுடைய அரசியல் சாசனச் சட்ட ரீதியாக அங்கீகாரம் செய்யப்பட்ட, அரசியல் சாசன சட்டம் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்கிற இந்த கணக்கு அறிக்கையில் அவர் சொல்கிறார்-- You should find an Internal Audit System immediately. இது வரையில் செய்திருக்கிறீர்களா?

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணக்கைத் தணிக்கை செய்கிறபோது தணிக்கை செய்கிற அதிகாரிகள் பல்வேறு அபிப்ராயங்களைச் சொல்கிறார்கள். It is their opinion. சொல்கிறார்கள். அதைச் செய்ய வேண்டுமென்று சில நேரங்களில் நமக்கு தாக்கீதும் அனுப்புகிறார்கள். ஆனால் அதை ஏற்றுக்கொண்டு செயல்பட வேண்டியது மின்சார வாரியத்தினுடைய பொறுப்பு என்று சொல்லிவிட முடியாது. நமக்கு வேண்டுமென்றால் அதிலே முறைகேடுகள் இருக்கும் என்று நினைத்தால், அவர்கள் சொல்வது சரி என்று நினைத்தால், அதற்குரிய அமைப்புகளை நாம் ஏற்படுத்தலாம். அவர்கள் சொல்கிற அத்தனையையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்ல முடியாது. அது மாண்டேட்டரியாக இருந்தால் ஏற்றுக் கொள்ளலாம். அது டிஸ்கிரீஷனரியாக இருந்தால் விட்டு விடலாம். இதுதான் முறை. ஆகவே அவர்கள் சொன்னதை எல்லாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது கிடையாது. அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை இந்த அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. இப்படி வேண்டுமென்று ஏற்கனவே காலம் காலமாக இருக்கிற பிரச்சினைகளை நமக்குச் சொல்லி இருக்கிறார்கள்.

அடுத்து, ஊழலின் ஊற்றுக்கண் என்று சொன்னார்கள். ஊழலின் ஊற்றுக்கண் எங்கே இருக்கிறது என்று எல்லோருக்கும் தெரியும். இந்த மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் இந்தியாவிலே சிறந்த மின்சார வாரியம் மகாராஷ்டிரா மாநிலமும், தமிழ்நாடும் தான் என்று டெல்லியிலே சர்டிபிகேட் வழங்கி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பாராட்டு பெற்றிருக்கிறோம். இந்தியாவிலே இருக்கிற அனைத்து மின்சார வாரியங்களிலும் மிகச் சிறந்த மின்சாரம் வாரியம் எனறு மகாராஷ்டிரா மின்சார வாரியமும், நம்முடைய தமிழ்நாடு மின்சார வாரியமும் தான் என்று பாராட்டுகளைப் பெற்று இருக்கின்றன என்பதை மாணபுமிகு பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் அறியவில்லையா, மறந்துவிட்டாரா? அல்லது வேண்டுமென்றே மறைக்கிறாரா என்பது எனக்குப் புரியவில்லை. ஆகவே ஊழல் என்று ஒட்டுமொத்தமாக பேசுவதற்கு இல்லை. ஊழல் என்று பேசுவதற்கு சில தகுதிகள் வேண்டும். ஊழல் என்று பேசுவதற்கும் சில நியாயங்கள் வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே, எதிலே ஊழல் நடந்திருக்கிறது, எந்த இடத்திலே ஊழல் நடந்திருக்கிறது, எப்படிப்பட்ட ஊழல் நடந்திருக்கிறது, எந்த இடத்திலே குற்றச்சாட்டு இருக்கிறது என்று தெளிவாகச் சொல்ல வேண்டும். ஒட்டுமொத்தமாக பொத்தாம் பொதுவில் பேசிக் கொண்டிருக்க கூடாது. ஒரு பெரிய நிறுவனம், 4800 கோடிக்கு மேல்

வரவு செலவு நிர்வகிக்கிற நிறுவனம், இலட்சக்கணக்கான பேர்களை உள்ளடக்கி வைத்து வேலை வாங்குகிற நிறுவனம், ஆகவே இந்த நிறுவனத்தில் ஆங்காங்கே ஒன்றிரண்டு பிரச்சினைகள் எழத்தான் செய்யும். அவை அத்தனையையும் ஒட்டுமொத்தமாக கட்டுக்குள் வைத்துக்கொண்டு இன்றைக்கு மிகச்சிறந்த மின்சார வாரியமாக செயலாற்றி கொண்டு இருப்பது, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தமிழகத்தினுடைய மின்சார வாரியம் தான். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் வந்ததற்கு பிறகு தான் இன்றைக்கு பல்வேறு நிலைமைகள் சீரமைந்து இருக்கின்றன. ஆகவே, ஒட்டுமொத்தமாகச் சொல்லாமல், ஏதாவது பிரச்சினை இருக்குமானால், அதைச் சுட்டிக்காட்ட வேண்டும். அதை திருத்துவதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று சொல்லலாம். ஆகவே, ஊழல் என்றும், ஊற்றுக்கண் என்றும் வீணான அரசியல் விவகாரங்களை இங்கே கிளப்ப வேண்டாம் என்று நான் அவரை கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12.35

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊழலைச் சுட்டிக்காட்டுவதற்குக்கூட தகுதி வேண்டும் என்று சொல்கிறார் அமைச்சர் அவர்கள். ஒத்துக்கொள்கிறேன். எனக்கு அந்தத் தகுதி இல்லாமல் இருக்கலாம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டு பேசக்கூடாது. (குறுக்கீடு)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** நீங்கள் அங்கே போய்ப் பேசுங்கள், நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. (குறுக்கீடு) I am Member of this House (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜு, உட்கார்ந்து கொண்டு பேசக்கூடாது. (குறுக்கீடு).

**திரு. இளம்வழுதி:** பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அவர் பேசுகிறார். அதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் வேண்டாம். உட்காருங்கள். உங்களுக்கு ஒன்றும் இதிலே இல்லை. (குறுக்கீடு) இதிலே என்ன இருக்கிறது? உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்த அக்கவுண்ட்ஸ் அன்ட் ஆடிட் பிராஞ்ச்சிலே 477 பேர்கள்தான் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால், ஏறத்தாழ 7950 பேர்கள் அதிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய தகவல் எதன் அடிப்படையில் வைக்கப்பட்டது என்று தெரியவில்லை. நான் சொன்னது, 1992-ஆம் ஆண்டினுடைய ஆடிட்டர் ஜெனரலினுடைய ரிப்போர்ட்டிலே இருக்கின்றது. அமைச்சருடைய கவனத்திற்கு வேண்டும் என்றால், நான் அதைத் தருகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய சந்தேகம். அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்திலே நான் கேட்க வேண்டும் என்று கருதுகிறேன். இண்டர்னல் ஆடிட்டிற்காக தகுந்த அளவிலே ஆட்களை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டு இருப்பதாகவும், அதற்கு முன்னாலேயே அரசியல் சாசனத்திலே அதற்கான ஆணைகள் வழங்கப்பட்டு இருக்கிறது, அதற்கான புரவிசன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்தார்கள். அந்த புரவிசன் எப்போது கொடுக்கப்பட்டது? சமீபத்திலேயா, அல்லது 1992-லே, 1991-லே அல்லது 1990-லே கொடுக்கப்பட்டதா? எந்தக் காலத்திலே அது கொடுக்கப்பட்டது என்பதை கொஞ்சம் தெரிவித்தால் சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** இண்டர்னல் ஆடிட் என்பது ஏற்கெனவே இருந்தது. மின்சார வாரியத்தினுடைய வரவு-செலவுகள் கொஞ்சமாக இருக்கின்றபோது, அப்போது ஏற்கெனவே இருந்த ஆட்கள் அதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கடந்த 4 வருடங்களிலே 48 சதவீதம் வளர்ந்திருக்கிறது என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இப்போது இது ஒரு massive white elephant-ஆக இருக்கிறது பெரிய பூதமாக இப்போது இந்த நிறுவனம் வளர்ந்து இருக்கிறது, நம்முடைய மின்சார வாரியம். இன்றைக்கு இண்டர்னல் ஆடிட் சிஸ்டம் பெர்பக்ட்டாக இல்லை என்றால், இனிமேல் சரியாக

1995 நவம்பர் 3] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

வராது என்று 1992-லே சி.ஏ.ஜி. ரிப்போர்ட் சொல்கிறது. நான் என்ன சொன்னேன் என்பதை அமைச்சர் அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். கணக்குகளை சரிபார்க்கவில்லை என்றால், ஊழலின் ஊற்றுக் கண்ணாக ஆகிவிடும் என்றுதான் சொன்னேனே தவிர, ஊழல் நடந்திருக்கிறது என்று நான் சொல்லவில்லை. அமைச்சர் அவர்கள் எதையோ நினைத்துக் கொண்டு பயப்படுகிறார். அப்படி நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய தணிக்கை முறையின் செயல்பாடுகளை அதிகமான அளவிலே அதிகரிக்கவேண்டும் என்று சொன்னார்கள். அதிலே எனக்கு உடன்பாடு உண்டு. அதிலே மாற்றுக் கருத்து கிடையாது. அதிகமான அளவிலே தணிக்கை அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்றும், அக்கவுண்ட்ஸ் அதிகாரிகளை நியமிகக வேண்டும் என்றும் சொன்னதிலே கருத்து மாறுபாடு கிடையாது. அதிலே வேண்டிய அலுவலர்களை நாங்கள் நியமித்துக் கொண்டு இருக்கிறோம். இன்னும் அதை வலுப்படுத்தவேண்டும் எனறு சொன்னால், அதற்காக உங்களுடைய மேலான ஆலோசனையைச் சொல்லுங்கள் என்றுதான் நான் கேட்டிருக்கிறேன். அதைச் சொல்லியிருக்கிறீர்கள். அதை வலுப்படுத்துவோம். ஆனால் பயம் என்று சொன்னீர்கள். புரட்சித் தலைவியினுடைய தலைமையிலே இருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அமைச்சர்கள் எந்த அச்சுறுத்தலுக்கும் ஒருக்காலும் அஞ்சமாட்டார்கள் என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). பயம் என்பது எங்கள் அகராதியிலேயே கிடையாது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே, அதே நேரத்திலே, 'அஞ்சுவது அஞ்சாமை பேதமை' என்றும் வள்ளுவர் சொல்லியிருக்கிறார். அதையும் நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பிரச்சினைக்கு அஞ்சவேண்டும், எந்தப் பிரச்சினைக்கு நியாயமாக நடக்கவேண்டும் என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால், பிறருடைய மிரட்டலுக்கு அஞ்சமாட்டோம் என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஊழலைப் பற்றிச் சொல்வதற்கு தகுதி வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எனக்குத் தகுதி இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. ஆனால், சென்னை உயர்நீதிமன்றத்திற்கு தகுதி இருக்கிறது என்பதை நீங்கள் ஒத்துக்கொள்வீர்கள் என்று எண்ணுகிறேன். ஊழலைப் பற்றிச் சொல்வதற்கு சென்னை உயர்நீதிமன்றத்திற்கு தகுதி இல்லை என்று இந்த மன்றத்திலே சொல்லமாட்டார்கள். உயர்நீதிமன்றம் ஒரு தீர்ப்பு கொடுத்திருக்கிறது, உங்களுடைய செயல்பாடுகளைப் பற்றி. அந்தத் தீர்ப்பை நீங்கள் பார்க்க வேண்டும். எண்ணூர் அனல் மின் நிலையத்திலே ஒரு கான்ட்ராக்ட் விடுகிறார்கள். அதைப்பற்றி ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது. அதற்கு வேண்டிய பொருட்களை வாங்கியதிலே,--அதாவது ஏ.சி.ஆர். கண்டக்டர்ஸ் 11 ஆயிரம் டன் வாங்கியிருக்கிறார்கள்-11 ஆயிரம் டன் வாங்கியதிலே நீங்கள் வாங்கின முறைகள் தப்பு என்று ஹை-கோர்ட் சொல்லியிருக்கிறது. அதிலே 100 கோடி ரூபாய் லாஸ் ஆகியிருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறது. ஹை-கோர்ட்டுக்கு தகுதி இல்லை என்று இப்போது நீங்கள் சொன்னாலும் சொல்வீர்கள். அது வேறு விஷயம்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வழக்கு டிஸ்மிஸ் செய்யப்பட்டு இருக்கிறது. அதனுடைய விவரத்தை நான் முழுமையாக இங்கே சொல்கிறேன். திங்கட்கிழமை அன்று அந்த விவரத்தைச் சொல்கிறேன். முதலிலே அந்த வழக்கைப் போட்டார்கள். கண்டக்டர்ஸ் வாங்குவதிலே தவறு இருக்கிறது என்று தடை உத்தரவை வழங்கினார்கள். அது முழுமையாக விசாரிக்கப்பட்டு, அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு இருக்கிறது. அதுதான் உண்மை. அது தவிர, அவர் சொல்கின்ற அளவிற்கு அவர் எந்த விவரத்தை வைத்து சொல்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே என்னிடத்தில் அதுபற்றிய முழு விவரமும் இப்போது இல்லை. நான் திங்கட்கிழமையன்று பதில் சொல்கின்றபோது அந்த விவரத்தைச் சொல்கிறேன். ஏற்கெனவே அந்த கண்டக்டர்கள் வாங்குவது சம்பந்தமாக ஒரு வழக்கு தொடுக்கப்பட்டு, அதன்பேரில் தடையுத்தரவு கொடுக்கப்பட்டது. அதன் பின்னாலே முழுமையாக அந்த வழக்கு விசாரிக்கப்பட்டு அந்த வழக்கு உயர்நீதிமன்றத்திலே தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது.

1995 நவம்பர் 3]

பிற்பகல் 12.40

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் எனக்கு வகுப்புத் தோழர், நாங்கள் இரண்டு பேரும் ஒன்றாகப் படித்தோம். He is also a lawyer by profession. இதிலே வந்து டிஸ்மிஸ் ஆனது என்று சொன்னார் என்றால், அவர் தெரிந்து சொல்கிறாரா, அல்லது தெரியாமல் சொல்கிறாரா என்று தெரியவில்லை. ஏனென்றால் என்னிடத்திலே ஜட்ஜ்மெண்ட் காப்பி இருக்கிறது. யார் டிஸ்மிஸ் பண்ணியிருக்கிறார்கள் என்றால்.....(குறுக்கீடு) சொல்கிறேன். என்னைப் பேசவிடுங்கள்.....(குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** இல்லை, ஒரு நிமிடம் இருங்கள். நான் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒப்பந்தப்புள்ளிகள் சம்பந்தமாக பலவேறு ஒப்பந்தங்கள் வருகின்றன. ஒரு நிமிடத்தில் நான் சொல்லிவிடுகிறேன். மின்சார வாரியத்தின் சார்பிலே பல்வேறு பொருட்களை நாம் ஒப்பந்தங்கள் மூலம் கோரி வாங்குகிறோம். ஆயிரக்கணக்கான ஒப்பந்தங்கள் ஆண்டுக்கு வருகின்றன. வெளிநாட்டுக் கம்பெனிகள், நம்முடைய இந்திய நாட்டிலே இருக்கின்ற கம்பெனிகள், தமிழகத்தில் இருக்கின்ற கம்பெனிகள் அத்தனைபேரும் போட்டி போடுகின்றார்கள். ஒரு ஒப்பந்தம் மாத்திரமல்ல. அவர் எந்த ஒப்பந்தத்தைச் சொல்லுகிறார் என்றே எனக்குத் தெரியவில்லை. ஏ. சி. எஸ். ஆர். வாங்கியதில் மிகப் பெரிய முறைகேடு என்று சொல்லி பத்திரிகைகளில் எல்லாம் போட்டார்கள். 100 கோடி ரூபாய் ஊழல் என்று கூட பேப்பரிலே எல்லாம் போட்டார்கள். அந்த வழக்கைத்தான் நான் சொல்கிறேன். அதற்கு முதலிலே நம்முடைய உயர்நீதிமன்றத்திலேயுள்ள உயர்நீதிமன்ற நீதிபதி அவர்கள் தடையுத்தரவு தந்தார்கள். 100 கோடி ரூபாய் ஊழல் செய்துவிட்டார்கள் என்ற வழக்கு போட்டார்கள். அதை வைத்துக்கொண்டு நீதிமன்றம் தடையுத்தரவு தந்துவிட்டது என்று எகிறிக்குதித்தார்கள். வெளியிலே நோட்டீஸ் எல்லாம் ஒட்டினார்கள்.. அந்த வழக்கு முழுமையாக விசாரிக்கப்பட்டு, எங்களுடைய பதிலுரை-கவுண்டர் கொடுக்கப்பட்டதற்குப் பின்னாலே அதனுடைய தன்மையை ஆராய்ந்து அந்த வழக்கு டிஸ்மிஸ் செய்யப்பட்டது.

அதுபோல ஒப்பந்தங்கள் கிடைக்காதவர்கள் சிலபேர் கோர்ட்டிற்குப் போகிறார்கள். 10 பேர் போட்டியிடுகிறார்கள். தகுதியின் அடிப்படையில் சில பேரை நிர்ணயிக்கிறோம். சிலருக்கு ஒப்பந்தங்கள் வழங்கப்படுகின்றன. கிடைக்காதவர்கள் கோர்ட்டிற்கு போகிறார்கள்.

அதுபோல நூற்றுக்கணக்கான வழக்குகள் கூட இருக்கலாம். கிடைக்காதவர்கள் கோர்ட்டிற்குப் போகமுடியாது என்று யாரும் சொல்லமுடியாது. ஒப்பந்தங்கள் கிடைக்காதவர்கள், பி.டபிள்யூ.டி. துறையிலே போகிறார்கள். ஹைவேஸ் துறையிலே போகிறார்கள். ட்வாடிலே போகிறார்கள். அதைப்போல எலக்ட்ரிசிடி டிபார்ட்மென்டிலும் போவார்கள். இதுபோன்ற ஏராளமான வழக்குகளில் எல்லா துறைகளிலிருந்தும் போகிறார்கள். அப்படியானால், எந்த வழக்கைச் சொல்கிறார்கள் என்பது பற்றி மிகத் தெளிவோடு சொல்லவேண்டும். என்னைப் பொறுத்தமட்டில் அந்த கண்டக்டர்கள் வாங்கியதாகப் போடப்பட்ட ஒரு மிகப் பெரிய வழக்கு நம்முடைய உயர்நீதிமன்றத்திலே போடப்பட்டு, அந்த வழக்கு முழுமையாக தள்ளுபடி செயயப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் அந்த வழக்கினுடைய விவரத்தை நம்முடைய பேரவைத் தலைவரிடத்திலே கொடுத்தால், நான் அதற்குரிய பதிலை திங்கட்கிழமையன்று என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கிறேன். அப்படி முறைகேடு இருக்கிறதென்றால் அதிகாரிகள்தான் முடிவு செய்கிறார்கள். மின்சார வாரியத்தைப் பொறுத்தமட்டில், ஒப்பந்தங்களை முடிவு செய்வது அரசினுடைய பொறுப்பு அல்ல. ரூ. 1 கோடிக்கு மேற்பட்ட மதிப்புள்ள ஒப்பந்தங்கள் அரசினுடைய அங்கீகாரத்திற்கு வரவேண்டுமென்று நாம் உத்தரவிட்டிருக்கிறோம். ஏனென்றால் தவறுகள் நடந்துவிடக் கூடாது என்பதற்காக. அதிலே முடிவு செய்கின்ற பொறுப்பு மின்சார வாரியத்தில் இருக்கின்ற போர்டு. அந்த போர்டு முடிவு செய்கிறது. அதிலே ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டு கோர்ட்டிற்கு போனால் அந்த கோர்ட்டினுடைய உத்தரவை நிறைவேற்றுவோம். நான் சொல்வது, சில நேரங்களிலே லோயஸ்ட் கொடுத்திருப்பார்கள். அந்த லோயஸ்ட் டெண்டர் கோட் பண்ணியவர்களைத் தகுதியில்லாதவர்கள் என்று நாம் விலக்கியிருப்போம். இல்லை, நீங்கள் லோயஸ்ட்டிற்கே கொடுங்கள் என்று உச்ச நீதிமன்றம் சொல்லி இருக்கும். அவர்களுக்கு நாம் கொடுத்திருக்கலாம். அவர்கள் ஒரு அடிப்படையிலே தேர்வு செய்திருப்பார்கள், குவாலிபைடு பர்சன் என்று. (குறுக்கீடு) இல்லை (குறுக்கீடு) இல்லை (குறுக்கீடு) குறைந்தவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்பது நீதிமனறத்தினுடைய கருத்தாக இருக்கலாம். ஆகவே, நீதிமன்றத்தினுடைய கருத்தை நாம் முடிவாக ஏற்றுக் கொண்டிருப்போம். அதையெல்லாம் நாம் ஊழல் என்று சொல்லமுடியாது. ஆகவே, அவர்கள் கொடுக்காததை நீங்கள் கொடுத்துவிட்டீர்கள் அல்லது மாற்றிவிட்டீர்கள் என்று

சொன்னால்---எந்த மாநிலத்திலும் எந்த ஒப்பந்தத்தையும் யாரும் 'என்ரான்' முதற்கொண்டு இன்றைக்கு என்ன பிரச்சினை என்பது உங்களுக்குத் தெரியும். எல்லோரும் சொல்வார்கள்--அதிலே நியாயம் இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். உச்சநீதிமன்றமோ அல்லது உயர்நீதிமன்றமோ ஏதாவது ஒரு உத்தரவைப் போட்டால் அதை மின்சார வாரியம் நிறைவேற்றும். எடுக்கின்ற முடிவுகளில் சில மாறுபாடான கருத்துக்களை கோர்ட் தெரிவிக்கின்றபோது அதை ஏற்றுக்கொண்டு, இந்த அரசு செயல்படவேண்டுமென்பது நியதி. அதை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே எடுத்த முடிவுகள் எல்லாம் தவறு என்று வாதிட முடியாது என்பதை அவர் ஒரு வழக்கறிஞராக இருக்கின்ற காரணத்தால் ஏற்கெனவே சொல்லிவிட்டார், அவருக்கும் தெரியும் என்று நான் கருதுகிறேன்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** அமைச்சரவர்கள் சொல்கின்ற வழக்கைத்தான் நான் சொல்கிறேன். அமைச்சர் ரொம்ப கெட்டிக்காரர். அமைச்சர் பற்றி எனக்குத் தெரியும். அவருக்குத் தெரியாத விஷயமே இருக்கமுடியாது. அவர் எல்லா 'பார்டிகுலர்ஸ்'ஐயும் 'ஃபிங்கர் டிப்ஸ்'-ல் வைத்திருப்பார் என்பதும் எனக்குத் தெரியும். 11,000 டன்னிற்கு கேபில்கள் வாங்கவேண்டுமென்று சொல்கிறார்கள். அந்த வழக்கைத்தான் நான் சொல்கிறேன். 11,000 டன் கேபிளை லோயஸ்ட் கொடேஷனில் வாங்கவில்லை என்று கேஸ் போடுகிறார்கள். கேஸ் ஃபைனல் டிஸ்போசலுக்கு வருவதற்கு முன்னால் நீங்கள் 9,500 டன்னை வாங்கிவிடுகிறீர்கள். ஹைக்கோர்ட் என்ன பண்ணும்? அதைச் சொல்லி, இது தவறு என்று சொல்லி, இனிமேல் அப்படிச் செய்யாதீர்கள். ஏனென்றால் பொதுமக்களுடைய நலன் கருதி நாங்கள் இதிலே தலையிடவில்லை என்று சொல்கிறது ஹைக்கோர்ட். (குறுக்கீடு)

பிற்பகல் 12.45

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வழக்கில் நான் என்ன சொல்கிறேன் என்றால், நாம் ஒப்பந்தங்கள் கோருகிறபோது பெரிய கம்பெனிகள் வருகிறார்கள். நம்முடைய எஸ்.எஸ்.ஐ யூனிட் என்பது-இந்த கண்டக்டர்களைப் பொறுத்தமட்டில் நாம் என்ன முடிவு எடுக்கிறோம் என்று சொன்னால், டிரான்ஸ்பார்மர்கள், கண்டக்டர்கள் பொறுத்தமட்டில் நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கிற பேக்டரிகளுக்குத்தான் கொடுக்கவேண்டும். 15% பிரைஸ் பிரிபரன்ஸ் வைத்திருக்கிறோம். அதாவது ஒரு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்பதற்காக, லோயஸ்ட் கொடேஷன் அல்லது அடுத்த

மாநிலத்திலிருந்து இப்போது 50 ரூபாய்க்கு கேட்டால் நாம் அதை விட 15 சதம் அதிகமாக நம்முடைய மாநிலத்தில் இருக்கிறவர்களுக்குக் கொடுக்கலாம் என்று நாம் உத்தரவு போட்டிருக்கிறோம். ஏனென்றால் அவர்களோடு இவர்கள் காம்பீட் பண்ண முடியாது. இந்த சிறு தொழில்களை நம்பி ஆயிரக்கணக்கான பேர்கள் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே எல்லா மின்சார வாரியமும், அந்தந்த மாநிலத்திலே இருக்கக்கூடிய தொழிற்சாலைகளை ஊக்குவிக்கிறார்கள். ஆகவே இது காலம் காலமாக, எஸ்.எஸ்.ஐ. யூனிட்டுக்கு கொடுப்பது என்பது இருக்கிறது. இந்த ஆட்சி வந்த நேரத்திலே அல்ல கடந்த ஆட்சி காலத்திலேயும் சரி, தொன்று தொட்டு இருக்கிறது இந்த பழக்கம். அந்த அடிப்படையிலேதான் இந்த கண்டக்டர்களை வாங்குகிற பொழுது நாம் நம்முடைய எஸ்.எஸ்.ஐ. யூனிட்டுகளுக்கு கொடுத்தோம். அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், அதிகமாக நீங்கள் ரேட் கொடுத்திருக்கிறீர்கள் என்று சொன்னார்கள். நாம் என்ன சொன்னோம் என்றால் 15 பெர்சன்ட் பிரைஸ் பிரபரன்ஸ் இருக்கிறது என்று சொன்னோம். லோயஸ்ட் கொடேஷனை விட, வெளியிலே இருக்கிற பெரிய தொழிற்சாலைகளிலே உற்பத்தி ஆகிற பொருள்களை விட, சிறிய தொழிற்சாலைகளிலே உற்பத்தி ஆவதனால், ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்டீரிக்கு 15 சதவீதம் அதிகமாக கொடுக்கலாம் என்று இருக்கிறது. அந்த அடிப்படையிலே 76 பேர்களுக்கு பிரித்துக் கொடுத்திருக்கிறோம். அவர்களுக்குத்தான் நாம் கொடுத்தோமே தவிர வேறு அல்ல. இதைத்தான் உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. நாம் சரி என்று சொன்னதற்கு பிறகு எப்படி வழக்கு தள்ளுபடி ஆகிறது என்று சொன்னால் அவர்களும், தரவே சொல்லியிருக்கிறார்கள். நியாயம் இல்லை என்று சொன்னால், செட்-அசைட் பண்ணியிருப்பார்கள், நீங்கள் எடுத்த முடிவு தவறு என்று. ஆகவே அந்த முடிவை நாங்கள் ரத்து செய்கிறோம். நீங்கள் செய்தது தவறு, இப்படி உத்தரவு போடுங்கள் என்று எத்தனையோ முறை நீதிமன்றத்திலே இன்றைக்கு உத்தரவைப் போடுகிறார்கள். யார் மறுக்க முடிகிறது. நீங்கள் செய்தது தவறு இப்படிச் செய்யுங்கள் என்றாலும் செய்கிறோம். அதுபோல அவர்கள் சொல்லியிருக்கலாம் அல்லவா? ஆகவே வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்பதை தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் மறக்க வேண்டாம் எனறு கேட்டுக் கொள்கிறேன். ஆகவே இதை உங்கள் கருத்தாக சொல்லியிருக்கிறீர்கள்--வாங்கியிருக்கிறார்கள் என்று. ஆனால் வாங்கியதிலே நியாயம் இருக்கிறது. சட்டத்திற்கு உட்பட்டு செய்திருக்கிறோம். ரூல்ஸ் அண்டு ரெகுலேஷன் புரவிஷனுக்கு

உட்படுத்தான் செய்திருக்கிறோம். ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ரிகளிடத்திலே வாங்கியிருக்கிறோம்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 15 பெர்சன்ட் என்று சொன்னார்கள். இந்த 15 பெர்சன்ட் என்பது 100 கோடி. அதைத்தான் தெரிந்துகொள்ள வேண்டும். அந்த ரேட்டுக்கு வாங்க வேண்டும் எனறு யாரும் கேட்கவில்லை. அவர்கள் கோட் பண்ணியது லோயஸ்ட் ரேட். நீங்கள் எந்த ஆளிடம் வாங்கியிருக்கிறீர்களோ, அதே ஆளே அதற்கு மேலே லோயஸ்ட் ரேட்டிலேயே கோட் பண்ணியிருக்கிறார்கள்.

**Hon'ble Thiru S. Kannappan:** You are giving a wrong information, I have to clarify your doubt. (Interruptions)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** You are saying it is 100 Crores, I have to clarify. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை கோடி ரூபாய்க்கு நாம் பொருள்களை வாங்கினாலும் ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ் என்று வருகிற பொழுது, நம்முடைய மாநிலத்திலே இருக்கிற சிறு தொழிற்சாலைகளுக்கு முன் உரிமை கொடுத்து, 15 பெர்சன்ட் பிரைஸ் பிரபரன்ஸ் கொடுக்க வேண்டும் என்பது ஏற்கெனவே நடைமுறையில் பின்பற்றப்படுகிற முறை. அது ஏற்கெனவே அமலில் இருக்கிறது. அரசினுடைய ஆணை. அதைத்தான் தமிழ்நாடு மின்சார வாரியம் பின்பற்றிக் கொண்டிருக்கிறது. அது இந்த ஆட்சியில் மட்டும் அல்ல அதைத்தான் சொன்னேன். எல்லா ஆட்சி காலத்திலேயும் இதே மாதிரிதான் வாங்கியிருக்கிறார்கள். பிரைஸ் பிரபரன்ஸ் கொடுத்திருக்கிறார்கள். யாராவது வெளியிலே இருந்து குறைந்த விலைக்கு கோட் பண்ணியிருந்தால்கூட 15 பெர்சன்ட் பிரைசை நாம் ஒப்பிட்டுப் பார்ப்போம். அதைவிட அதிகமாக இருந்தால் கொடுக்கமாட்டோம். அதற்கு உட்பட்டு வந்தால் நாம் கொடுப்போம். ஏனென்றால் நம்முடைய நாட்டிலே இருக்கிற தொழில்கள் நசிந்துவிடக்கூடாது என்பதற்காக நாம் ஏற்கெனவே இருக்கிற அரசு ஆணையைப் பின்பற்றுகிறோம். அதைத்தான் மின்சார வாரியமும் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எலக்டிரிசிட்டி போர்ட் துவங்கிய நாளிலேயிருந்து இந்த புரொசீஜர்

பாலோ பண்ணவில்லை. முதன் முறையாக இப்படி வாங்க வேண்டும் என்று இப்படி பண்ணியதே நீங்கள்தான். அதைத்தான் நான் சொல்கிறேன். எலக்ட்ரிசிட்டி போர்டு நேற்று இல்லையா? எலக்ட்ரிசிட்டி போர்ட் 1950-லேயிருந்து இருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கிற சிறு தொழில்களை ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காக, சிறு தொழில் நசிந்து போய்விடக்கூடாதே என்பதற்காக-ஏனென்றால் அதிலே ஆயிரக்கணக்கான லட்சக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். எனவே அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காக--எல்லாத் துறைகளிலேயும், 15 சதவீதம் அவர்களுக்கு, அந்த விலையிலே அவர்கள் கூடுதலாக கோட் பண்ணியிருந்தாலும் அவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தினுடைய உத்தரவு இருக்கிறது. எல்லாத் துறைகளிலேயும், நம்முடைய மாநிலத்திலே சிறு தொழில் செய்யக்கூடியவர்கள் வெளி மாநிலத்திலே அங்கே போய் டெண்டரே கூட போட முடியாது. அப்படி கூட சில மாநிலங்களிலேயெல்லாம் வைத்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் கர்நாடக மாநிலத்திலே காங்கிரஸ் அரசாங்கம் இருக்கிற பொழுது கூட 'மண்ணின் மைந்தர்கள்' என்று சொல்லி, அப்போது நாட்டிலே பெரிய பிரச்சினை கூட உருவாயிற்று. எனவே நம்மை நம்பி தமிழகத்திலே இருக்கிற, தமிழ் மக்கள் துவங்கியிருக்கிற, இங்கே நம்முடைய மக்களுக்கு கிடைத்திருக்கிற வேலை வாய்ப்பிலே உத்தரவாதம் வேண்டும் என்பதற்காக, அரசாங்கத்தின் சார்பாக வாங்குகிற பொருள்கள் அத்தனைக்கும் 15 சதவீதம் கொடுக்க வேண்டும் என்று சொல்லி, இந்த அரசாங்கம் வந்தபின்பு அல்ல, இதற்கு முன்னாலேயே அந்த முறை கடைபிடிக்கப்பட்டு வந்திருக்கிறது, எல்லாத் துறைகளுக்கும் அந்த உத்தரவு இருக்கிறது.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு எலக்ட்ரிசிட்டி போர்டுனுடைய பர்ச்சேஸ் பற்றி ஓரளவுக்குத் தெரியும். நீங்கள் இப்படி சொன்னீர்கள் என்றால், தமிழ்நாட்டிலே இருக்கக்கூடியவர்களைத்தான் ஆதரிக்கவேண்டும் என்று சொன்னால், சர்டன் கேட்டகரிஸ் இருக்கிறது. There are certain categories of purchases reserved totally for Tamil Nadu. ஆனால் நீங்கள்

*1995 நவம்பர் 3]* [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

வயலேட்பண்ணி வெளி மாநிலத்திலேயிருந்து வாங்கியிருக்கிறீர்கள் என்று ஆதாரப்பூர்வமாக ப்ரூவ் பண்ணுகிறேன், அமைச்சர் ராஜினாமா பண்ணுவார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததைப் போல, பொருட்களை வாங்குகிறபொழுது, யாரும் நேரிடையாக வாங்குவது கிடையாது. மின்சார வாரியத்தை பொறுத்த மட்டிலே, ஓப்பன் டெண்டர் முறை மூலம் வாங்குகிறோம். அப்படி வாங்குகின்றபோது, சில பொருள்களுக்கு, இன்னின்ன பொருள்களுக்கு, நாம் பிரைஸ் பிரிபரன்ஸ் கொடுக்கலாம் என்று அரசு ஆணை இருக்கிறது. அப்படிப்பட்ட பொருள்களை, நம்முடைய மாநிலத்திலே உற்பத்தியாகின்ற பொருள்களை, நாம் அந்த பிரைஸ் பிரிபரன்ஸ் கொடுத்து வாங்குகிறோம். இது எல்லாவற்றிற்கும் கிடையாது. இப்போது மீட்டர் வாங்குகிறோம் என்றால், இங்கே இண்டியா மீட்டர்ஸ் இருக்கிறார்கள். ஹைதராபாத்தில் ஈஸ்வரி மீட்டர்ஸ் இருக்கிறார்கள். வி.எச்.எல். மீட்டர்ஸ் இருக்கிறார்கள். எல்லாரும் போட்டி போடுகிறார்கள். அப்படி போட்டி போடுகின்றபோது இண்டியா மீட்டர்ஸ் நிறுவனம் ஒரு பெரிய நிறுவனம் என்பதால் அவர்களுக்கு பிரைஸ் பிரிபரன்ஸ் கிடையாது. எது 'லோயஸ்ட் ரேட்' ஆக வருகிறதோ, அந்த ரேட்டுக்குக் கொடுத்தால்தான் அவர்களிடம் வாங்க முடியும். ஆகவே, சில பொருள்களுக்கு, என்னென்ன பொருள்களுக்கு பிரைஸ் பிரிபரன்ஸ் கொடுக்க வேண்டுமென்று அரசு ஆணை இருக்கிறதோ, அந்தப் பொருள்களுக்கு மட்டும் அந்த முன்னுரிமை வழங்கப்படுகிறதே தவிர, மாண்புமிகு பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொல்லுகின்றதைப்போல அல்ல. இப்படிப்பட்ட குற்றச்சாட்டைச் சொல்லலாமே தவிர, எங்களைப் பொறுத்தமட்டிலே முறைகேடு இதிலே கிடையாது. எல்லாமே ஓப்பன் டெண்டர் முறையிலேதான் நாங்கள் 'கால்பார்' செய்து வாங்கியிருக்கிறோம். ஆகவே, முறைகேடு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் *12.50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ், நீங்கள் முன்னாலேயே கேட்டதன்படி அமைச்சர்களுடைய குறுக்கீடு பூராவும் குறித்துக் கொண்டே வந்துவிட்டேன். இப்போது மணி *12.51* ஆகிறது. *12* மணிக்கு ஆரம்பித்தீர்கள். அமைச்சர்களுடைய குறுக்கீடு

24 நிமிடம் வந்திருக்கிறது. இதுவரை நீங்கள் பேசியது 26, 27 நிமிடம் ஆகிவிட்டது. வேகமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் மாண்புமிகு அமைச்சர் என்ன சொன்னார் என்றால், நாங்கள் தமிழ்நாட்டுக்காரரைத்தான் ஆதரிக்க போகிறோம் என்று சொன்னார். அப்படியானால் சரி. அப்பொழுது தமிழ்நாட்டுக்காரர்களுக்கு ஒதுக்கப்பட்ட ஐட்டத்தை நீங்கள் ஏன் இப்போது முதல் முறையாக வயலேட் பண்ணுகிறீர்கள் என்று நான் கேட்டேன். அதற்கு இன்னும் பதில் வரவில்லை. அதாவது, certain items have been specifically reserved for the Small Scale Industries of Tamil Nadu. But, you have violated it and given to people in Andhra and Maharashtra. அதற்கு வேண்டுமா உங்களுக்குத் தகவல்?

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் வயலேட் செய்யவில்லை. ஓப்பன் டெண்டர் போடுகின்றபோது அவர்கள் குறைந்த விலைக்குப் போடுகிறார்கள். குறைந்த விலைக்குப் போடுகின்றபோது, நம் மாநிலத்தைச் சார்ந்தவர்களும் விலை 'கோட்' செய்கிறார்கள். எல்லாவற்றையும் சேர்த்துப் பார்க்கின்றபோது, அவர்களுடையது குறைந்த விலையாக இருந்தாலும்கூட, இந்த பிரைஸ் பிரிபரன்ஸ் என்று ஒரு ஜி.ஓ. இருக்கின்ற காரணத்தினாலே, நம்முடைய 15 சதவீதத்திற்கு உட்பட்டு வந்தால்தான் அந்த கம்பெனிக்கு மாத்திரம் கொடுக்க முடியும். இப்பொழுது இன்னொரு சதவீதத்திற்கு, 20 சதவீதத்திற்கு இன்னொருவர் போட்டிருக்கிறார் என்றால் எஸ்.எஸ்.ஐ. யூனிட் என்றாலும் அவர்களுக்குக் கொடுக்க முடியாது. 15 சதவீதத்திற்குள் இருக்க வேண்டும் என்பதுதான் விதி. இதிலே 76 யூனிட் போட்டிருக்கிறார்கள் என்றால், அதிலே 56 யூனிட் 15 சதவீதத்திற்குள் வருகிறது என்றால் அந்த 56க்குத்தான் கொடுக்க முடியும். மீதி 20 பேர் 15 சதவீதத்திற்கு மேலே, 20 சதவீதம் என்றெல்லாம் போட்டிருந்தால் நாம் கொடுக்க முடியாது. அந்த முறையைத்தான் பின்பற்றி இருக்கிறோமே தவிர வேறு மாநிலங்களுக்கு கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் கிடையாது. நமக்கு என்ன ஜி.ஓ. இருக்கிறதோ அந்த ஜி.ஓ. வைத்தான் நாம் அப்படியே 'அடாப்ட்' செய்கிறோம்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** தமிழ்நாட்டிலே மொத்தம் 30 பேர்கள்தான் கடந்த 20 வருடங்களாக இதை சப்ளை செய்து கொண்டு

இருக்கிறார்கள். போன வருடம் இந்த 15 சதவீதம் கேட்கப்படவில்லை. நீங்கள் ஏன் இப்போது அந்த 15 சதவீதம் என்பதை கேட்கிறீர்கள்? அவர்கள் 25 வருடங்களாக இங்கே, சி.எஸ்.ஆர். கண்டக்டர்ஸ் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒருபோதும், 15 சதவீதம் என்பது கேட்கப்படவில்லை. தி.மு.க. ஆட்சியிலே கேட்கவில்லை. எம்.ஜி.ஆர். ஆட்சியிலே கேட்கவில்லை. நீங்கள் மட்டும் ஏன் இந்த 15 சதவீதம் என்பதை கேட்கிறார்கள்? அதை நீங்கள் சொல்ல வேண்டுமா, இல்லையா?

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். எல்லா ஆட்சிக் காலத்திலும் அந்த 15 சதவீதம் பிரைஸ் பிரிபரன்சிற்குள்ளே வந்திருந்தால் கொடுத்து இருக்கிறார்கள். நாமாகக் கேட்பது இல்லை. அவர்கள் கேட்பதும் இல்லை. 'கோட்' செய்கிற, ரேட்டை நாங்கள் கம்ப்பேர் செய்து பார்க்கிறபோது 15 சதவீதத்திற்குள் இருந்தால் அவர்களுக்குக் கொடுப்போம். இல்லையென்றால் அவர்களுக்குக் கிடையாது. அதுதான் நடக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைசியாக ஒரு வார்த்தை. அதாவது இந்த பேசிக் அமினிட்டிஸ் எனப்படும் மிக ஆதாரத் தேவைகளான தண்ணீர், மின்சாரம் ஆகியவற்றை அரசியலுக்குப் பயன்படுத்தக் கூடாது என்கிற ஒரு கோரிக்கையோடு கூட ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். இதற்கு ஹை கோர்ட்டிலே போய் ஜட்ஜ்மெண்டை வாங்க வேண்டியதாகப் போய்விட்டது. குமார் டெக்ஸ்டைல்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை என்ற கம்பெனிக்கு மின்சாரமே கொடுக்கக்கூடாது என்று வாரியத்திலே சொல்லிவிட்டார்கள்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** **தேவையில்லாமல் இழுத்திருக்கிறீர்கள். நீங்கள் சொல்வதுகூட அர்த்தம் அற்றது. அது வழக்கு மன்றத்தில் நிலுவையில் இருக்கிற பிரச்சினை.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் :** வழக்கு முடிந்து ஜட்ஜ்மெண்ட் வந்துவிட்டது.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பிற்பகல் 12-55

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதை முழுமையாக விளக்கியாக வேண்டும். மின் இணைப்பைப் பொறுத்தமட்டிலே ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்பு கேட்கிறார்கள். அதற்கென்று சில நார்ம்ஸ் வைத்திருக்கிறோம். இவ்வளவு ரூபாய் பணம் கட்ட வேண்டும், இத்தனை நாட்களுக்குள்ளே கட்ட வேணடும் என்று வைத்திருக்கிறோம். சில பேர் அதை வயலேட் பண்ணிவிடுகிறார்கள். பணம் கட்ட முடிவதில்லை. சில நேரங்களில் லேட் ஆகிவிடும். சில நார்ம்ஸ்படி அவர்கள் பணம் கட்ட வேண்டும. சில பேர் உடனடியாக 3 மாதத்திற்குள்ளே மின்சார இணைப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். சில சமயங்களிலே கனெக்ஷன் கொடுப்பதற்கான சில சாதனங்கள் நம்மிடம் இல்லாமல் இருக்கலாம். எப்போதும் பேசிக் அமினிட்டிசைத்தான் முதலிலே நாம் பார்ப்போம். இண்டஸ்டிரீசை இரண்டாவதாகத்தான் பார்க்க முடியும். சில நேரம் கம்பங்கள் பற்றாக்குறை இருக்கலாம். அல்லது மெட்டீரியல் பற்றாக்குறை இருக்கலாம். அங்கே அந்த தொழிற்சாலை பக்கத்திலே ட்ரான்ஸ்பார்மர் போட்டு கொடுக்க வேண்டியதிருக்கும்; சில நேரம் லோடு பற்றாமல் இருப்பதால் சப்-ஸ்டேஷனே போட்டு அந்தத் தொழிற்சாலைக்கு கொடுக்க வேண்டியிருக்கும். அரசுக்கு இருக்கின்ற சங்கடங்களை நீங்கள் உணர வேண்டும். ஒரு மிகப் பெரிய தொழிற்சாலை வருகின்றபோது அதற்குத் தேவையான மின்சாரத்தை கொடுக்கின்றபோது உடனடியாக கொடுத்துவிட முடியாது. ஒரு சப்-ஸ்டேஷன் போட்டே மின்சாரம் கொடுக்க வேண்டியிருக்கும். அதற்கு 3 கோடி ரூபாய் பணம் வேண்டும். அப்படியென்றால் அந்தத் தொழிற்சாலைக்கு உடனடியாக கொடுத்துவிட முடியாது. அந்த 3 கோடி ரூபாய் ஆதாரத்தை நம்முடைய எலக்ட்ரிசிட்டி போர்டுதான் செலவழிக்க வேண்டும். அந்த தொழிலதிபர் (குறுக்கீடு) Please wait; I have to explain in detail. அதற்கு சில நேரம் காலதாமதம் ஆகிறது. சில தொழிலதிபர்கள் என்ன நினைக்கிறார்கள். உடனே மின்சாரம் வேண்டும் என்கிறார்கள். உடனே மின்சாரத்தைக் கொடுத்துவிட முடியாது. நமக்கு இருக்கின்ற சிக்கல் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய அந்த லோடு கரெக்டாக இருக்க வேண்டும். அதற்குரிய மெட்டீரியல்ஸ் வேண்டும். அதற்குரிய ட்ரான்ஸ்பார்மர் போட வேண்டும். அதற்கு சாமான் சரியாக இருக்க வேணடும். அதற்கெல்லாம் பணம் வேண்டும். ஏற்கனவே நாம் எவ்வளவு பெரிய சங்கடத்தில் மின்சார வாரியத்தை

1995 நவம்பர் 3] [திரு. எஸ். கண்ணப்பன்]

நடத்திக்கொண்டிருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியும். அதேபோல் சப்-ஸ்டேஷன் போட வேண்டியிருந்தால் பெரிய தொழிற்சாலை என்றால் சப்-ஸ்டேஷன் போட வேண்டும். இல்லையென்றால் பெரிய ட்ரான்ஸ்பார்மர் 4, 5 ட்ரான்ஸ்பார்மர் போட வேணடும். ஆக, அப்படிப்பட்ட சூழ்நிலையிலே காலதாமதம் ஏற்படுகிறது. காலதாமதம் ஏற்பட்டால் எல்லோரும் இப்போது கோர்ட்டுக்குப் போகலாம் என்று முடிவு எடுக்கிறார்கள். ஜனநாயகத்திலே அது அவர்களுடைய உரிமை. அதை நாம் மறுக்க முடியாது. உடனடியாக கோர்ட்டுக்குப் போய்விடுகிறார்கள். அதற்குத்தான் பீட்டர் அல்போன்ஸ் போன்றவர்கள் ஆலோசனை சொல்வதற்கு இருக்கிறார்களே அவர்கள் சொன்னவுடனே சில பேர் கோர்ட்டுக்குப் போய்விடுகிறார்கள். கோர்ட்டிலே சில டைரக்ஷன்ஸ் வாங்கி இரண்டு வருஷம் கேஸ் நடந்தது. உடனே டைரக்ஷன்ஸ் கொடுத்துவிடவில்லை. எங்களுக்கு இருக்கிற டிஃபிகல்டியை நாங்கள் சொன்னோம். நாங்கள் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். அவர்கள் இந்த தேதி அப்ளிகேஷன் கொடுத்தார்கள். இவ்வளவு ரூபாய் டெப்பாசிட் கட்டியிருக்கிறார்கள். நாங்கள் இன்னின்ன மாதிரி எங்களுக்கு மெட்டீரியல்ஸ் வேண்டியிருக்கிறது, கேபிள்ஸ் வேண்டியிருக்கிறது. எனக்குத் தெரியும் அந்த வழக்கு மதுரையிலே நான் இருப்பதனால். ** பற்றி பேசக்கூடாது என்று குறிப்பிட்டார்கள்.**

எங்களைப் பொறுத்தமட்டிலே எதிர்ப்பு வந்தால் யாரையும் நேருக்கு நேர் எதிர்த்துதான் பழக்கமே தவிர குறுக்கு வழியிலே அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவியினுடைய ஆட்சியைப் பொறுத்தமட்டிலே அந்த அண்டர்-கிரவுண்ட் வேலையெல்லாம் எங்களுக்குத் தெரியாது. (மேசையைத் தட்டும் ஒலி). ஆனால் சிலருக்கு அண்டர்-கிரவுண்டு வேலை கைவந்த கலை. தேர்தல் களமா? நேரிலோ வா. ஆட்சியா? நேரிலே சந்திப்போம். குற்றச்சாட்டா? நேரிலே சந்திப்போம். வழக்கா நேரிலே சந்திப்போம். ஆகவே, குறுக்கு வழியிலே இங்கே ஆதாயம் தேடுகின்ற ஆட்சி அல்ல. அந்த மாதிரி கிடையாது. அவர்கள் கேட்டார்கள். அதற்குமுன்னால் நாம் ரெடி செய்துவிட்டோம். நாமே கொடுப்போம் என்று ஒத்துக்கொண்டோம். வழக்கு போட்ட காலத்திலிருந்து எங்களை எல்லாம் அவர்கள் கேட்டு, நாங்கள் இந்த மாதிரி எல்லாம் ரெடியாக இருக்கிறது; நாங்கள் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்று நாங்கள் ஒத்துக்கொண்ட

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

பிறகுதான் கேஸ் முடிந்தது. அவர் போட்டது நியாயம் அல்ல. உடனே கேட்டார். கொடுக்க முடியும் என்று சொல்லி எல்லா விளக்கமும் சொல்லியிருக்கிறோம். உடனே கோர்ட்டிலே கொடுங்கள் என்று சொன்னார்கள். கனெக்ஷன் கொடுத்திருக்கிறோம். ஆகவே இதிலே ஒன்றும் அரசியல் காழ்ப்புணர்ச்சியே எதுவும் கிடையாது என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே, ஏதோ புது கனெக்ஷன் கொடுக்கிற மாதிரி மந்திரி சொல்கிறார். அப்படி அல்ல. ஏற்கனவே கொடுத்த கனெக்ஷனிலே பவர் சப்ளை நிறுத்தினதுதான். நான் ஜட்ஜ்மெண்டிலே அந்த போர்ஷனை மட்டும் வாசிக்கிறேன். "It is clearly not open to the State to use its power to stop essential services to penalise persons on the basis of their political affiliation. The trust which is reposed in the elected representatives cannot be abused to stop an essential services such as electricity or water in order to exert pressure on persons whose political affiliations are not liked by those in power." இதுதான் அந்த ஜட்ஜ்மெண்டினுடைய ஆப்பரேஷனல் போர்ஷன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தைப் பொறுத்தமட்டிலே சில தொழிற்சாலைகளிலே நாம் நடவடிக்கை எடுக்கிறோம். டிஸ்கனெக்ஷன் செய்கிறோம். அவர்கள் ஏதாவது வயலேஷன் செய்திருந்தால் டிஸ்கனெக்ஷன் செய்கிறோம். அவர்கள் உடனே கோர்ட்டுக்குப் போவார்கள். ஸ்குவாடு போய் செக் பண்ணுகிறோம். உடனே அவர்களுக்கு கோபம் வந்து விடுகிறது. ஏதாவது நாம் டிஸ்கனெக்ட் செய்து பெனல்டி போட்டால் கோர்ட்டுக்குப் போய்விடுகிறார்கள். அரசியல் காழ்ப்புணர்ச்சியினாலே எங்கள் மேலே பழி வாங்குவதற்காக இந்த மாதிரி ஏவிவிட்டார்கள் என்று அவர்கள் வழக்கு போடுகிறார்கள். அதிலே அவர்களை நாம் குறை சொல்ல முடியாது. அது அவர்களுடைய நோக்கம். ஆனால் நம்மை பொறுத்தமட்டிலே அதிகமாக லோடு தேவைப்பட்டாலும் சரி அல்லது எதுவாக இருந்தாலும் சரி மின்சார வாரியத்திலே அங்கே இருக்கின்ற பவர் பொசிஷன், அங்கே இருக்கின்ற

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மெட்டீரியல்ஸ் அதை பொறுத்துதான் நாம் சப்ளை கொடுக்க முடியும். நான் ஏற்கெனவே பல முறை சொல்லியிருக்கிறேன். கோர்ட்டிலே உத்தரவு போட்டாலும்கூட, நிறைவேற்றுவதற்கு நமக்கு கால அவகாசம் தேவை. கோர்ட்டிலே உத்தரவு போட்டுவிடலாம். சாமான் வேண்டும்; மெட்டீரில்ஸ் வேண்டும்; ட்ரான்ஸ்பார்மர் வேண்டும்; கேபிள் வேண்டும்; கண்டக்டர்ஸ் வேண்டும்; எல்லாம் வேண்டும்; இதையெல்லாம் வாங்குவதற்கு பணம் வேண்டும். ஆகவே உடனே சொல்லி, இப்போது இருக்கின்ற இண்டஸ்ட்ரீஸீக்கு எல்லாம் ஒரே நாளிலே கனெக்ஷன் கொடு என்றால் மின்சார வாரியம் கொடுக்க முடியுமா? ஆக, நடைமுறைக்கு எது வருகிறதோ அதைச் செய்திருக்கிறோம். அவர்கள் சொல்லியிருக்கலாம்; ஆயிரத்தெட்டு காழ்ப்புணர்ச்சியிலே இந்த மாதிரி செய்கிறார்கள்; பொலிடிகல் அபிலியேஷன் என்பதைக் காரணமாகச் சொல்லியிருக்கலாம். அவர்களுடைய ஸ்டேட்மெண்ட் எத்தனையோ கோர்ட்டிலே போடுகிறார்கள். அதையெல்லாம் ஏற்றுக்கொள்ள முடியாது. அவர்கள் கோர்ட்டுக்குப் போகும்போது அப்படித்தான் சொல்வார்கள். கோர்ட்டிலே போய் எங்களுக்கு அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக கொடுக்கவில்லை என்று சொன்னால்தான் கோர்ட்டிலே ஒரு "சிம்பதி" வரும் என்பது எல்லோருக்கும் ஒரு இயற்கை. அந்த அடிப்படையிலதான் அவர்கள் கேஸை தாக்கல் பண்ணுகிறார்கள். ஆகவே, அதையெல்லாம் ஒரு பொருட்டாகக் கருத முடியாது. அவர்கள் சொல்கிறார்கள்; நம்முடைய நிலைமையைக் கேட்கிறார்கள்: நாம் தெளிவுப்படுத்தியிருக்கிறோம்; நம்முடைய பொசிஷன் சரியான உடனே, நாம் கரண்ட் கொடுத்து இருக்கிறோம். ஆகவே அதிலே எந்த வயலேஷனும் கிடையாது. அதிலே எந்த முறைகேடும் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**; பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன கருத்துக்களை எல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு தென்காசியை தனி சர்க்கிள் ஆக்கி ஆதரவு தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1.00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. ரவிக்குமார்.

***திரு. ஏ. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995-96 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை விவர அறிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்ற பிப்ரவரி மாதம் என்னுடைய பொன்னேரி தொகுதியில் அமைந்துள்ள வட சென்னை அனல் மின்சார திட்டம் 210 மெகாவாட் திட்டத்தை நாட்டிற்கு அர்ப்பணித்தும், மெதூரில் ஒரு துணை மின் நிலையத்திற்கும் அழிஞ்சிவாக்கத்தில் ஒரு துணை மின் நிலையத்திற்கும், அடிக்கல் நாட்டிய நம்முடைய இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப்பணித்துறை மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய இதய தெய்வத்தின் பொற்கால ஆட்சியில் தமிழகம் அனைத்துத் துறைகளிலும் வியக்கத்தகுந்த அளவில் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. அதேபோல் மின்சாரத் துறையிலும் எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத அளவுக்கு இன்றைக்கு நம்முடைய இதய தெய்வத்தின் ஆட்சியில் வியக்கத்தகுந்த முன்னேற்றம் அடைந்து இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழகம் திகழ்ந்து, மின்வெட்டே இல்லாத மாநிலம் என்ற பெருமையை நம் மாநிலம் பெற்றிருக்கிறது. காற்றுச் சக்தியிலிருந்து மின் சக்தியை உற்பத்தி செய்கிற திட்டம், கடல் வெப்ப ஆற்றல் மின் திட்டம், புனல் மின் திட்டம், டீசல் மின் திட்டம், எரிவாயு மின் திட்டம், அனல் மின் திட்டம் போன்ற புதிய திட்டங்களின் மூலமும், அனைத்து மாவட்டங்களிலும் ஆயிரக்கணக்கான புதிய துணை மின் நிலையங்களை 4½ ஆண்டுகளில் ஏற்படுத்தி வருங்கால சந்ததியினரும் வணங்குகின்ற விதத்திலேயே தமிழகம் தொழில்துறையில் பொற்கால ஆட்சியைக் காணுவதற்கு ஆவன செய்த மாண்புமிகு இதய தெய்வத்திற்கு நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்-தலைமை)

நம்முடைய இதய தெய்வம் அறிவித்துள்ள புதிய தொழிற் கொள்கையின் அடிப்படையில் புதிய தொழில் தொடங்குவதற்கு முதல் ஆண்டில் 40 சதவீத சலுகை; இரண்டாவது ஆண்டில் 30 சதவீத சலுகை; மூன்றாவது ஆண்டில் 20 சதவீத சலுகை எனவும் 100 சதவீதம் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட தொழிலுக்கு மின் வெட்டிலிருந்து விலக்களித்தல், போன்ற சலுகைகளின் மூலம் தமிழகத்தில் தொழில் துவங்குவதற்கு எளிய நடைமுறைகளை அறிவித்த நம்முடைய இதய தெய்வத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் நோக்கத்துடன் இதுவரை தெருவிளக்குகள் வசதி செய்யப்படாத சுமார் 2085 ஆதி திராவிடர் குடியிருப்புகள் ஒவ்வொன்றுக்கும் 5 விளக்குகள் வீதம் தெரு விளக்குகள் அமைப்பதற்கும், குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டத்தின் கீழ் ஆண்டு ஒன்றுக்கு 99000 குடிசைகள் என்ற வீதத்தில் 1995-96 ஆம் ஆண்டிற்கு முன்னர் 9919 ஆதி திராவிடர் குடியிருப்புகளில் உள்ள 1,98,000 ஆதி திராவிடர் குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்குகின்ற திட்டம்; 1995 டிசம்பருக்குள், 20,000 குடியிருப்புகளுக்கு தெரு விளக்கு வசதிகள் அமைத்துத் தருதல் போன்ற திட்டங்களின் மூலம், ஏழை ஆதி திராவிடர் மக்களின் வாழ்வில் ஒளியை ஏற்றி வைத்த நம்முடைய இதய தெய்வத்திற்கு ஆதி திராவிடர் மக்கள் என்றென்றும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றார்கள்.

தற்போது உள்ளாட்சி மன்றங்களின் மூலம் கிராமங்களுக்குத் தெரு விளக்குகள் பொருத்தும் போது, பல்வேறு நடைமுறை காலதாமதம் ஏற்படுகிறது. இதனைப் போக்குவதற்கு எப்படி கோயம்புத்தூர், மதுரை ஆகிய மாநகராட்சிகளிலும் தஞ்சாவூர், கரூர், பொள்ளாச்சி ஆகிய நகராட்சிகளிலும் உள்ள மின் பகிர்வுப் பணியை 1994-95 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்களிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டதோ; அதேபோல் தமிழகத்தில் உள்ள அனைத்து உள்ளாட்சி மன்றங்களிலிருந்தும் மின் பகிர்வுப் பணியை மின் வாரியம் எடுத்துக் கொள்ள வேண்டும். அல்லது தற்போது ஊராட்சி மன்றங்களில் எப்படி நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்த பொறியாளர்கள், சாலை வசதிகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்களோ, அதேபோல் மின்வாரியப் பொறியாளர்களை, உள்ளாட்சி மன்றங்களில் பணியமர்த்தினால் இந்தக் காலதாமதத்தைப் போக்கி, உடனுக்குடன் மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும். அதற்கு நம்முடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும், மாண்புமிகு பொதுப்பணித் துறை மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மின்சார வாரியப் பணியாளர்களுக்கு பல்வேறு சலுகைகளை நம் புரட்சித் தலைவி அரசு அளித்திருக்கிறது. ஒப்பந்தத் தொழிலாளர்கள் சுமார் 5500 பேர் உதவியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அதேபோல் எண்ணூர் அனல் மின்சாரத்

திட்டத்திலும், தூத்துக்குடியிலும் Incoservice-ல் பல ஆண்டுகளாக வேலை செய்து கொண்டிருக்கின்ற தொழிலாளர்களை நிரந்தரம் செய்வதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பொன்னேரி தொகுதியைப் பொறுத்தவரையில் கடந்த 4½ ஆண்டு காலங்களில் எந்தக் காலத்திலும் இல்லாத அளவுக்கு புதிய டிரான்ஸ்பார்மர்கள், துணை மின் நிலையங்கள், போன்றவை அமைத்துத் தந்து வோல்டேஜ் பிரச்சினையைத் தீர்த்து வைத்திருக்கின்ற நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப்பணித் துறை மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு மேலும் விச்சூர், வெள்ளிவாயில், திருநிலை, கொடிபாளையம், பெருங்காவூர், மாரம்பேடு, பூதூர் போன்ற சுமார் 25 கிராமங்கள் பயன் பெறுகின்ற விதத்தில் அருமந்தையில் ஒரு துணை மின் நிலையமும், ஆரணி, சின்னம்பேடு, வடக்குப்பட்டு, ஆத்தூர் மற்றும் 20 கிராமங்கள் பயன் பெறுகின்ற விதத்தில் ஆரணியில் ஒரு துணை மின் நிலையம் அமைத்துத் தருவதற்கும், காட்டூர் தத்தமஞ்சி, வாயலூர், ஊரணம்பேடு, திருவெள்ளவாயல், வாயலூர் போன்ற 25 கிராமங்கள் பயன்பெறுகின்ற விதத்தில் திருவெள்ளவாயல் கிராமத்தில் ஒரு துணை மின் நிலையம் அமைத்துத் தருவதற்கும் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

என்னுடைய தொகுதியில கடற்கரையை ஒட்டி சுமார் 20 மீனவர் குடியிருப்புகள் இருக்கின்றன. இந்தக் குடியிருப்புப் பகுதிகளில் இருக்கின்ற மின்சார வயர்கள் மிகவும் பழமையானதாகும். இருக்கின்ற மின்சார வயர்கள் அனைத்தையும் மாற்றியமைத்துத் தந்து, உப்புக் காற்றால் மின் ஒயர்கள் பாதிக்காமல் இருப்பதற்கு இந்தப் பகுதியில் கேபிள் ஒயர்களை அமைத்துத் தருவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் காணியம்பாக்கம் கிராமம், சிறுபழவேற்காடு கிராமம், பெரும்பேடு கிராமம் போன்ற கிராமங்களில் புதிய டிரான்ஸ்பார்மர்கள் அமைத்துத் தந்து, அந்தப் பகுதிகளில் இருக்கின்ற வோல்டேஜ் பிரச்சினையைத் தீர்த்து வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த காலங்களில் மழையாலும், வெள்ளத்தாலும் என்னுடைய தொகுதியில் சாலைகள், பாலங்கள் பழுதடைந்தபோது போர்க்கால நடவடிக்கையில் அதனை உடனுக்குடன் சரிசெய்து கொடுத்த நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இருக்கின்ற ஒரே ஒரு குறையாகிய காரனோடை-புதுக்குப்பம் சாலையில் பழுதடைந்த பாலம், சுமார் 10 லட்ச ரூபாய் மதிப்பீடுள்ள இந்தப் பாலத்தை ஏதாவது ஒரு சிறப்பு நிதியிலிருந்து உடனடியாக, இந்த ஆண்டே டிசம்பருக்குள் செய்து முடித்துத் தருமாறு கேட்டுக்கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில்தான் மின்சாரத் துறையில் பல்வேறு சாதனைகளைச் செய்துகொண்டு இருக்கிற இந்தத் துறையினுடைய கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, விடைபெறுகின்றேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோவி. எஸ். மோகனன்.

***திரு. கோவி. எஸ். மோகனன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

*''தமிழ்காத்து போர் செய்து சிறைக்குச் சென்றோன்*
*தலைசிறந்த பேச்சு வல்லோன்;*
*தமிழ் வீரன்; தான் என்றும் தமர் என்றும் நினைப்பதன்றி*
*தமிழ்நாட்டின் நலத்தினுக்கே உடல், உயிர் அமைக என*
*இரவு பகல் உழைத்த மேலோன்''*

என்று புரட்சிக் கவிஞர் அவர்கள் இயற்றி, போற்றிப் பாராட்டியதைப் போலவும், நாடு காக்க தன்னுடைய ஆயுள் காலத்தையெல்லாம், “நாட்டுக்காக உழைப்பதற்கே அண்ணா பிறந்தார்; பொது நலத்தில்தானே நாள் முழுக்கக் கண்ணாய் இருந்தார்; ஏற்றுக்கொண்ட பதவிக்கெல்லாம் பெருமையைத் தந்தார்.“ என்று பாராட்டிய அந்தக் கவிஞனுடைய வரிகளுக்கொப்ப, தமிழகத்தினுடைய வளர்ச்சிக்காக, உழைத்த அறிவுக்கோட்டம், அறக்கோமான், காஞ்சீபுரம் தந்த கரிபால்டி என்றும், இந்திய நாட்டினுடைய இங்கர்சால் என்றும், தென்னாட்டினுடைய பெர்னாட்ஷா என்றும் பாராட்டப்பெற்ற பேரறிஞர் பெருந்தகை

அண்ணா அவர்களுடைய குடும்பம் நலிவுற்றதை எண்ணி, அந்தக் குடும்பத்தினுடைய மேம்பாட்டுக்காக அவருடைய அறிவுப்பொக்கிஷங்களான ஈ.எம். ஃபார்ஸ்டர் அவர்கள் சொன்னார்களே, "பொனான்ஸா மைண்ட்ஸ்" என்று சொன்னார்களே, அப்படிப்பட்ட அறிவார்ந்த நூல்களையெல்லாம் நாட்டுடைமையாக்கி, 75 இலட்சம் ரூபாயை பேரறிஞர் அண்ணா அவர்களுடைய துணைவியார்–அண்ணியார் ராணி அண்ணா அவர்களிடத்திலே வழங்கி இருக்கின்ற தமிழகத்தினுடைய நன்மனத் தலைவி, தமிழகத்தினுடைய பொன்மனத் தலைவி, தமிழகத்தினுடைய செம்மனத் தலைவி, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய திருவடியைத் தொழுது, மின்சாரத் துறையினுடைய இந்த நிதிநிலை அறிக்கையிலே என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மின்துறை அமைச்சர் அவர்களுடைய அந்தச் சாதனையை இன்றைக்கு நாடே பாராட்டிக்கொண்டிருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. தமிழகத்திலே இருக்கின்ற ஏற்றத்தை, தமிழகத்திலே இருக்கின்ற முன்னேற்றத்தை, தமிழகத்திலே மின்துறை அடைந்திருக்கின்ற சாதனையை ஒப்பிடவேண்டுமென்று சொன்னால், தமிழகத்திலே இருக்கிற மக்கள் அண்டை மாநிலங்களான ஆந்திரப் பிரதேசத்துக்கோ, கர்நாடக மாநிலத்துக்கோ அல்லது வடபுலத்திலே இருக்கிற மாநிலங்களுக்கோ சென்று வருவார்களேயானால், தமிழகத்திலே மின்துறை எவ்வளவு வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பதை இங்கே மனம் திறந்து பாராட்டுவார்கள். ஆனால் வடபுலத்திலே இருக்கிற நிலைமையை மறந்துவிட்டு, ஆந்திரத்திலும், கர்நாடகத்திலும் இருக்கிற நிலைமைகளை மறந்துவிட்டு, தமிழகத்திலே இருக்கிற நிலைமையைப் பெரிதுபடுத்தி, ஒரு உருபெருக்கிக் கண்ணாடியை வைத்துப் பார்ப்பதைப்போல, இன்றைக்குச் சொல்லியிருக்கிறார்கள். 1991–க்கு முன்னாலே தமிழகத்தினுடைய நிலைமை எப்படி இருந்தது என்பதை எண்ணிப் பார்க்கக் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாகச் சொல்லவேண்டும் என்று சொன்னால், அண்மையிலே, ஓராண்டுக்கு முன்னால் நடைபெற்ற கர்நாடக மாநில தேர்தலிலே பங்காற்றுவதற்காக, பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் அன்றைக்குச் சென்றிருந்தோம். அங்கே தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரத்திலே, பொதுத் தேர்தல் நேரத்திலேயே மாலை 7–இலேயிருந்து 8 மணி வரையிலே அங்கே மின்சாரம் இல்லாதது, அங்கே கர்நாடக மாநிலத்தினுடைய தலைநகரத்திலேயே மின்சாரம் இல்லாமல் ஒரு நாளைக்கு அல்ல, இரு நாளைக்கு அல்ல, தொடர்ந்து 21 நாட்கள் இருந்ததை நாங்கள்

1995 நவம்பர் 3] [திரு. கோவி. எஸ். மோகனன்]

பார்த்தோம். ஆனால் தேர்தல் பிரச்சாரம் 9 மணிக்கு மேல் நடைபெறக் கூடாது என்கிற விதியைத் தளர்த்தாமல், ஆக ஒரு மணி நேரம்தான் தேர்தல் பிரச்சாரமே செய்ய முடியும் எனகிற நிலமை அந்த மாநிலத்திலே இருந்தது என்று சொன்னால், அங்கே ஜனநாயகம் எந்த அளவிற்கு மறைக்கப்படுகிறது, மறுக்கப்படுகிறது என்பதை உணர்ந்து பார்க்க வேண்டும். மின்தட்டுப்பாடு மாத்திரம் அந்த மாநிலத்திலே இருந்தது என்று சொல்லவில்லை. ஜனநாயகத் தட்டுப்பாடும் அந்த மாநிலத்திலே இருந்தது என்பதைத்தான் தான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1.10

ஆனால், இரவு 9 மணிக்குள்ளே தேர்தல் நேரத்திலே தேர்தல் பிரச்சாரத்தை முடிக்க வேண்டுமென்று தமிழகத்திலே சொன்னால், அதுவும் ஒரு மணி நேரம், 7-இலேயிருந்து 8 மணி வரையிலே பிரச்சாரம் செய்கிற நேரத்திலே வாய்ப்புகள் மின் தடையால் மறுக்கப்படுமேயானால், தமிழகத்திலே எதிர்க்கட்சித் தலைவர்கள் எந்த அளவிற்குக் கூப்பாடு போடுவார்கள் என்பதை இங்கேயிருக்கிற மாமன்ற உறுப்பினர்கள் உணர்வீர்கள் என்று நான் கருதுகிறேன்.

1991-இலே டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக முடிசூட்டிக் கொள்வதற்கு முன்னாலே இங்கே ஏறத்தாழ 25 சதவீதம், 30 சதவீதம் மின்தட்டுப்பாடு இருந்தது. ஆனால் புரட்சித் தலைவி ஆட்சிப் பொறுபை ஏற்றுக்கொண்ட இந்த 4 வருட காலத்திலே, புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே தமிழகத்திலே இருக்கின்ற எல்லாத் துறைகளிலேயும்-மின் துறை உள்பட எல்லாத் துறைகளிலேயும் புரட்சித் தலைவி அவர்கள் சாதனை படைத்திருக்கிறார்கள், சரித்திரத்தைப் படைத்திருக்கிறார்கள்.

அந்த வகையிலே பார்க்கிறபொழுது, புனல் மின் திட்டமாக இருந்தாலும் சரி, அனல் மின் திட்டமாக இருந்தாலும் சரி, எரிவாயுத் திட்டமாக இருந்தாலும் சரி, காற்றலைத் திட்டமாக இருந்தாலும் சரி, எல்லாத் திட்டங்களிலேயும் இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே மிகுந்த சாதனையை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு பழம்பாடல் சொல்லுவார்கள்; அந்தப் பாடல் சொல்வது என்னவென்று சொன்னால், "நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு

எல்லோர்க்கும் பெய்யும் மழை" என்று சொன்னார்களே அதைப்போல, புரட்சித் தலைவி ஆட்சி ஏற்படுத்தியபிறகுதான், ஏற்றுக்கொண்ட பிறகுதான் இந்த நான்கரை ஆண்டுக் காலத்திலே இன்றைக்குப் புனல் மின் திட்டத்திலே 100 சதவீதம் வெற்றியை நாம் பெற்றிருக்கிறோம். ஆக அந்த 100 சதவீதம் வெற்றி இந்திய-தேசிய அளவிலே புனல் மின் திட்டத்திலே பெற்று இருக்கிறோம்.

அதைப் போலவே அனல் மின் திட்டத்திலேயும் பெறுவதற்காகப் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய அரசு இன்றைக்கு நடவடிக்கை எடுத்து வருகிறது. புரட்சித் தலைவியினுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருவதனுடைய விளைவாகத்தான் வடசென்னையிலே இருக்கின்ற அந்த மின் திட்டமாக இருந்தாலும் சரி, எண்ணூர்த் திட்டமாக இருந்தாலும் சரி, தூத்துக்குடி திட்டமாக இருந்தாலும் சரி, இன்றைக்குப் புரட்சித் தலைவியினுடைய அரசு சரித்திரத்தை, சாதனையைப் படைத்திருக்கிறது. அந்த வகையிலே எண்ணூர் திட்டமாக இருந்தாலும், தூத்துக்குடி திட்டமாக இருந்தாலும், மேட்டூரிலே இருக்கின்ற அனல் மின் திட்டமாக இருந்தாலும், எரி எண்ணெயைப் பயன்படுத்தி இன்றைக்குத் தயாரிக்கின்ற அந்த மின்சாரத்திலே எரி எண்ணெயக் குறைத்து, அதைக் குறைத்து சேமித்து இந்தியாவிலேயே சரித்திரத்தைப் படைத்திருக்கிறது இந்த அரசு; அதிகமான மின்சாரத்தை உற்பத்தி செய்திருக்கிறது இந்த அரசு என்று சொல்லிக்கொள்கிறேன்.

இன்றைக்கு இந்திய நாட்டிலே நேஷனல் அவார்டு என்று சொல்லுகிறார்களே அந்த அவார்டு தூத்துக்குடி மின்சார உற்பத்திக்காக வழங்கப்பட்டிருக்கிறது. அதுவும் தொடர்ந்து 7 முறை இந்தத் திட்டத்திற்காக நேஷனல் அவார்டைப் பெற்றிருக்கிறது.

அதேபோல இன்றைக்குப் பல்வேறு சாதனைகளை நாம் பெற்றிருக்கிறோம். மின்சார உற்பத்தியிலே அனல் மின் திட்டத்திலே இன்றைக்கு நேஷனல் அச்சீவ்மெண்ட்-வெற்றி என்று சொல்லுகின்றபொழுது 61 விழுக்காடுதான் இந்தியாவினுடைய முன்னேற்றமே அனல் மின் திட்டத்திலே இருக்கிறது. ஆனால் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே தமிழகத்தினுடைய முன்னேற்றம் இந்திய நாட்டினுடைய சராசரியைவிட 7 விழுக்காடு அதிகமாகப் பெற்றிருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*1995 நவம்பர் 3]* [திரு. கோவி. எஸ். மோகனன்]

புரட்சி தலைவியினுடைய அரசு பல்வேறு திட்டங்களை மேற்கொண்டிருக்கிற அதே நேரத்திலேயே காற்றாலைத் திட்டம்- இந்தியத் துணைக்கண்டத்திலேயே அதிகமாக உற்சாகப்படுத்தி, அதை ஊக்குவித்துக் கொண்டிருக்கிற அரசு புரட்சித் தலைவியினுடைய அரசு என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புரட்சித் தலைவியினுடைய அரசுதான் காற்றாலைத் திட்டத்திலேயே அகில இந்தியாவிலேயே முதலிடம் பெற்றிருக்கிறது என்று இன்றைக்கு நடுவண் அரசை நடத்திக்கொண்டிருக்கின்ற அந்தத் தலைவர் பெருமக்களே பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு கயத்தாறு திட்டமாக இருந்தாலும் சரி, கேத்தனூர் காற்றாலைத் திட்டமாக இருந்தாலும் அதிகபட்சமாக 25 மாநிலத்திலே, உற்பத்தியைப் பெருக்குவதிலே முதலிடத்திலே இருக்கிற அரசு புரட்சித் தலைவியினுடைய அரசு என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல மைய அரசைப் பயன்படுத்தி, இராஜதந்திரத்தோடு காய்களை நகர்த்தி வெற்றியைக் குவித்துக் கொண்டிருப்பவர் புரட்சித் தலைவி என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நெய்வேலியிலே இன்றைக்கு மைய அரசினுடைய பங்காக 420 மெகாவாட் உற்பத்தி செய்வதற்காகத் திட்டம் வழங்கப்பட்டிருக்கிற இந்த நேரத்தில் 135 மெகாவாட் தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டுமென்று புரட்சித்தலைவி அவர்கள் ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 1.15

அதேபோல இன்றைக்கு ராமகுண்டத்திலே 500 மெகாவாட் அனல்மின் உற்பத்தியைச் செய்ய வேண்டுமென்று மத்திய அரசு திட்டம் போட்டிருப்பதிலே 135 மெகாவாட் தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்கள் ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள். தமிழகத்திலே மாத்திரமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற 25 மாநிலங்களில் ஒன்றான உத்திரப்பிரதேசத்திலே ஆயிரம் மெகாவாட் உற்பத்தி செய்கிற அந்த மத்திய அரசினுடைய நிறுவனத்திலேயிருந்து 365 மெகாவாட் தமிழகத்திற்கு கிடைக்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்கள் ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அரிய சாதனைகளைச்

செய்திருக்கிற அரசு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு. அப்படிப்பட்ட அரிய சாதனைகளைச் செய்துகொண்டிருக்கிற அரசு புரட்சித் தலைவியினுடைய தூதுவராக, மின்சாரத் துறையையும், நெடுஞ்சாலைத் துறையையும், பொதுப் பணித் துறையையும் ஏற்றுக் கொண்டிருக்கிற அமைச்சரைப் பார்த்து, இங்கே எனக்கு முன்னால் பேசிய ஒரு உறுப்பினர் சொன்னார்கள்–நான் மிகுந்த அடக்கத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். "ஆயிரம் யானை அமரிடை வென்ற மாணவனுக்கு வகுப்பது பரணி'' என்று ஜெயங்கொண்டார் பாராட்டியதைப் போல, நிக்ஸனுடைய வெற்றிக்கெல்லாம் ஹென்றி கிஸ்ஸிங்கர் உறுதுணையாக இருந்தார் என்று அமெரிக்க சரித்திரத்திலே சொன்னதைப் போல, இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய சரித்திரத்திற்கு, சாதனைகளுக்கு உறுதுணையாக இருந்துகொண்டிருப்பவர் நம்முடைய மின்சாரத்துறை அமைச்சர். அப்படிப்பட்ட அமைச்சரைப் பார்த்து குற்றச்சாட்டு சொல்கிறார்கள். இந்த அரசினுடைய உண்மையான, உத்தமமான, நாணயமான, மக்களுடைய அரசு என்று சொல்வதற்கு சான்று சொல்ல வேண்டுமென்று சொன்னால், 6 ஆயிரம் பேர் இன்றைக்கு மின்துறையிலே அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அதே போல கல்வித் துறையிலே 8 ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 8 ஆயிரம் ஆசிரியர்களும் இன்றைக்கு நாணயமாக அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், நீங்கள் உட்காருங்கள். இப்போது நீங்கள் பாயின்ட் ஆப் கிளாரிப்பிகேஷனா அல்லது பாயின்ட் ஆப் ஆர்டரா என்று எதுவுமே சொல்லாமல், எழுந்து நின்றால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) அவர் ஒன்றும் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை, நீங்கள் உட்காருங்கள்.

**திரு. கோவி.எஸ். மோகனன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவியினுடைய அரசிலே இன்றைக்கு 8 ஆயிரம் ஆசிரியர்கள் ஒரு சல்லிக் காசுகூட வாங்காமல் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை 8 ஆயிரம் வீட்டிலே வேலைவாய்ப்பு பெற்றிருக்கிற அந்தத் தோழர்கள், மாணவ நண்பர்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். சாதனை படைத்துக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவியினுடைய அரசிலே ஒரு சில முன்னேற்றத்தை என்னுடைய தொகுதியிலே தேவையானவற்றை, தமிழகத்திலேயிருக்கின்ற 234 தொகுதிகளிலே மாடல் தொகுதி, முன்மாதிரி தொகுதி என்று சொல்கிற அளவிற்கு இன்றைக்கு புரட்சித் தலைவி அருட்கொடையிலே,

இராணிப்பேட்டை தொகுதியிலே முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. என்னுடைய கன்னிப் பேச்சிலே குறிப்பிட்டதைப் போல புரட்சித் தலைவியினிடத்திலே வேண்டுகோளாக வைக்கப்பட்டதன் விளைவாக, இராணிப்பேட்டை தொகுதியிலே இருக்கின்ற வாலாஜா நீதிமன்றத்திற்கு 88 இலட்சம் ரூபாய் ஒதுக்கியதற்காக இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போல என்னுடைய இராணிப்பேட்டை நகரத்திலே, தொகுதியிலே நீதிமன்றக் கட்டிடம் இன்னொன்று கட்டுவதற்கு புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இராணிப்பேட்டை தொகுதியிலே இதுவரையிலும் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி இல்லை என்கிற குறை இருக்கிறது. புரட்சித் தலைவி அவர்கள் மிகுந்த அக்கறை எடுத்து இராணிப்பேட்டை தொகுதியினுடைய முன்னேற்றத்திற்கு பாடுபட்டதை நாங்கள் பாராட்டுகிறோம். தொகுதி மக்கள் வாயார வாழ்த்துக்கிறார்கள். நெஞ்சார வாழ்த்துகிறார்கள். அப்படிப்பட்ட அற்புதத் தலைவியினுடைய திருக்கரத்தால், இந்த ஆட்சியிலே உடனடியாக கிடைக்கும் என்று நம்புவதை நிறைவேற்ற வேண்டும், பெண்கள் மேல்நிலைப் பள்ளி வாலாஜாபேட்டைக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல சில சாலைகள் ஆந்திரத்திலே இணைத்துக் கொண்டிருக்கின்ற சாலைகளாக இருக்கின்ற சாலைகள், பொன்னையிலிருந்து ஆவுளரங்கம் பள்ளிக்கும், பொன்னையிலிருந்து எஸ்.என். பாளையம், பி.என். பாளையம் போன்ற பள்ளிகளுக்கு அந்தச் சாலைகளை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதே போல புரட்சித் தலைவி அவர்களுடைய அரசிலே, நந்தியாலம் கிராமத்திலேயும், கீழ்மின்னல் கிராமத்திலேயும் (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம் முடித்துவிடுகிறேன். நியாயவிலைக்கடை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு கீழ்மின்னல் வழியாக வேலூர், ஆற்காடு செல்கிற அந்தப் பேருந்துகளை இயக்குவதற்கு போக்குவரத்துத் துறை மூலமாக இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளும் அதே நேரத்தில், எனக்கு முன்னால் பேசிய ** சொன்ன ஒரு கருத்துக்கு மாற்றுக் கருத்து சொல்லாவிட்டாலும்....

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மோகனன், அவையில் பேசுகின்றபோது, "முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள்" என்று குறிப்பிடலாம், **என்பது வேண்டாம்.

*பிற்பகல் 1-20*

**திரு. கோவி.எஸ். மோகனன்:** உறுப்பினர்கள் இங்கே சொன்னார்கள். அந்தக் ருத்து, நாகரீகமான நடைமுறைகளாக இருக்காது என்ற காரணத்தாலே ஒன்றை மாத்திரம் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களுடைய அமைச்சர் எப்படிப்பட்ட அற்புதமான அமைச்சர், எங்களுடைய புரட்சித் தலைவி எப்படிப்பட்ட அற்புதமானத் தலைவி என்பதற்கு சேக்ஸ்பியருடைய ஒரு கொடேஷனிலே அடிக்கடி எடுத்துச் சொல்வார் நம்முடைய நடமாடும் பல்கலைக் கழகம் அவர்கள். 'Rose which calls by any other name it smells and sweet only' என்று சொல்வார்கள். ரோஜாவை எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் அதன் மணம் மாறாது என்று சொல்வார்கள். அதேபோல, புரட்சித் தலைவியைப் பார்த்தோ, அவர்களுடைய அமைச்சரவையிலே இருக்கிற அமைச்சர்களைப் பார்த்தோ என்ன குற்றச்சாட்டு சொன்னாலும் இந்த நாட்டிலே இருக்கிற மக்கள் அவர்களை, குற்றச்சாட்டுச் சொன்னவர்களை கூர்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாட்டுக்காக, மக்களுக்காக, ஏழைபாழைகளுக்காக, சாதாரண மக்களுக்காக, சாமானியர்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கிற புரட்சித் தலைவியினுடைய அரசு தொடர்ந்து நீடிக்கும் என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்களே, "கூலி உயர்வு கேட்டான் அத்தான், குண்டிபட்டு செத்தான்" என்று - அதை நாட்டு மக்கள் மறந்துவிடவில்லை. நீங்கள் ஆண்டது போதாதா, மக்கள் மாண்டது போதாதா என்று சொன்னார்களே அண்ணா அவர்கள், அதையும் மக்கள் மறந்துவிடவில்லை. "பட்டேல் வருகிறார், பணப்பை ஜாக்கிரதை" என்று சொன்னார்களே அண்ணா அவர்கள், அதை எந்தக் கட்சியைப் பார்த்து சொன்னார்கள் என்பதை நாட்டு மக்கள் மறந்துவிடவில்லை என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொண்டு, வாய்ப்பை ஏற்படுத்தி தந்த புரட்சித் தலைவிக்கு கோடானு கோடி நன்றியை தெரிவித்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செ.து. வரதராஜன்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

திரு. செ.து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் 4½ ஆண்டுச் சாதனையில், சமூக நீதி காத்த வீராங்கனை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆற்றல்மிக்க தலைமையின் கீழ், மின்சார மானியக் கோரிக்கையின் கீழ் பேசுகின்ற வாய்ப்பினை அளித்த தங்கத்தலைவி அவர்களுக்கும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கத் தலைவியின் ஆட்சி ஏற்பட்ட காலம் முதல் மின்வெட்டே இல்லை என்று மக்கள் பாராட்டுகிறார்கள். தொழில் துறையில் மின்வெட்டு ஏற்படாத காரணத்தினால், தொழில்கள் எல்லாம் சீரோடும், சிறப்போடும், பொலிவோடும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. லே-ஆப் இல்லாமல் மின்சாரம் வழங்கியதை சிறு சிறு தொழிற்சாலைகள் நடத்துவோர்கள் கூட பாராட்டுகிறார்கள். இதனால் விலைவாசி குறைகின்றது. மக்களின் பொருளாதாரம் மேன்மை அடைகின்றது. வேலையில்லா திண்டாட்டம் குறைகின்றது. இதனால் தமிழக மக்கள் அத்தனை பேரும் நம்முடைய அரசை பாராட்டி புகழ்ந்துக் கொண்டிருக்கின்ற வகையில் ஒரு நல்ல மின்சார வாரியமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன். முன்காலங்களில் மின்வெட்டு 30% வரை இருந்தது. ஆனால், தங்கத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும், மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களும் செய்த முயற்சியினால் மின்வெட்டு என்பதே இல்லாத ஒரு நிலை ஏற்பட்டு இருக்கிறது. அதாவது, ஒரு தொலைநோக்குப் பார்வையோடு இன்று மட்டும் அல்ல; எந்தக் காலத்திலும் மின்வெட்டே இருக்கக் கூடாது என்ற அளவிற்கு 132 மெகாவாட் சக்தி காற்றாலை மின்உற்பத்தி அலகுகளின் வாயிலாக மரபுசாரா மின்சக்தியை பயன்படுத்துவதில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கிறது.

16 தனியார் நிறுவனங்கள் மூலமாக 10,670 மெகாவாட் மின்உற்பத்தி செயல்திட்டம் மற்றும் 1991-ல் 21,287 மில்லியன் அலகுகளாக இருந்த மின்உற்பத்தி 1994-ல் 29,956 மில்லியன் அலகுகளாக உயர்வு செய்யப்பட்டுள்ளது மிகவும் பாராட்டுக்குரியது.

இருக்கின்ற மின் உற்பத்திச் சாதனங்களை மட்டும் நம்பிக் கொண்டு இருக்காமல், வடசென்னை அனல் மின் திட்டம், பேசின் பிரிட்ஜ் எரிவாயு மின்திட்டம், புனல் மின் திட்டம், காற்றுச் சக்தியிலிருந்து

மின்சாரம் உற்பத்தி செய்தல், சர்க்கரை ஆலைகள், இரசாயனத் தொழிற்சாலைகள் ஆகியவற்றிலிருந்து மின் உற்பத்தி செய்தல், கடல் நீரிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்தல், மற்றும் மின்சார உற்பத்தியில் தனியார் துறைக்கு பங்கு கொடுத்தல் ஆகியவற்றை அறித்து மக்கள் வாழ்த்துகிறார்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மின்சாரத் துறை ஊழியர்கள் அத்தனை பேர்களையும் ஊக்குவித்து, அவர்கள் எதிர்பார்த்த அளவிற்கு போனஸ் கொடுத்து மின்வாரியப் பணிகளை சிறப்பாக செயல்பட வைத்தமைக்கு தமிழக மக்கள் அனைவரும் வாழ்த்து தெரிவிக்கிறார்கள்.

கடந்த நான்கு ஆண்டுகளில், 1,78,000 விவசாய மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மொத்தம் 20.35 லட்சம் இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தொலைநோக்குப் பார்வையோடு இன்றல்ல, என்றுமே மின்தடையே இருக்கக்கூடாது என்பதற்காக இந்த அரசு எடுத்துக் கொண்டுள்ள திட்டங்களை மக்கள் பாராட்டுகிறார்கள்.

பரம்பிக்குளம் மின்திட்டம் சம்பந்தமான சாதனங்கள் 19-10-1990-ஆம் நாளன்று தீ விபத்தில் சேதம் அடைந்தது. அதனை மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் உடனே கவனித்து நிவர்த்தி செய்து, மின்சாரத்தை உற்பத்தி செய்து மக்களுக்கு வழங்கவேண்டும் என்ற நல்ல உணர்வோடு 3-2-1995-ஆம் நாளன்று, மீண்டும் அதை செயல்படச் செய்தது மிகவும் மகிழ்ச்சிகரமான ஒன்று. இது திறமையான ஒரு அரசின் செயல்பாடு என்று மக்கள் வாழ்த்துகிறார்கள்.

பிற்பகல் 1-25

1992 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட பருவ மழை காரணமாக முற்றிலும் நீரில் மூழ்கிவிட்ட சேர்வலாறு மின் திட்டத்தை முற்றிலும் புதுப்பித்து, உடனடியாக அது செயல்பட வேண்டும் என்பதற்காக முயற்சி செய்து 18-4-1994 அன்று அதனைச் செயல்படச் செய்தது நம்முடைய மின் உற்பத்திச் சாதனையை மேலும் பெருமைப்படுத்தியுள்ளது. இவ்வாறு செயல்படச் செய்தது நம்முடைய மின்துறை அமைச்சர் அவர்களுடைய சாதனை என்றால் அது மிகையாகாது.

இலவச மின்சாரம் தரக்கூடாது என்று மத்தியஅரசு சொல்கிற நிலை இருந்தாலும் மாநில அரசு ஏழை விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவதைப் பொறுத்தவரையில் 1995-96 ஆம் ஆண்டில் ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பு ரூபாய் 1358 கோடியாக இருந்தாலும், தங்கு தடை

இல்லாமல் மின்சாரம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்து மின்சாரம் வழங்கிக் கொண்டிருப்பதால் இந்த அரசைத் தமிழக மக்கள் அத்தனைபேரும் பாராட்டிக்கொண்டு இருக்கிறார்கள்.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் முயற்சியால் 1994--95 ஆம் ஆண்டில் தூத்துக்குடி அனல் மின்நிலையம், மேட்டூர் அனல் மின் நிலையம், எண்ணூர் அனல் மின் நிலையம் ஆகியவை பரிசு பெறும் தகுதியைப் பெற்றுள்ளன என்பதும், காற்றுமின் வளத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதில் தமிழ்நாடு தொடர்ந்து ஐந்தாவது முறையாக 1993-94 ஆம் ஆண்டுக்கும் மத்திய அரசிடமிருந்து பாராட்டுப் பத்திரத்தைப் பெற்றுள்ளதும் மிகவும் பாராட்டுக்குரியவனவாகும். 'லயன் லாஸ்' என்று சொல்லப்படுவதைப் பொறுத்தவரையில் அதனைக் குறைக்க வேண்டும் என்பதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மின்சாரத்துறை அதிகாரிகளைக் கலந்து இன்சுலேட்டர்கள் மற்றும் வயர்களைப் பொறுத்தவரையில் நல்ல தரமானவையாக மாற்றி என்றுமே 'லயன் லாஸ்' வரக்கூடாது என்ற அளவுக்கு உரிய முயற்சியினை எடுத்துள்ளார்கள். இப்படி இன்சுலேட்டர்கள் மற்றும், சாதனங்களை மாற்றியதன்மூலம் லயன்லாஸ் 17 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டுள்ளது மிகவும் பாராட்டத் தக்கது. இதனை இன்னும் அதிக அளவில் குறைக்க வேண்டும் என்பதற்காக அதாவது 15 சதவீதமாகக் குறைக்க வேண்டும் என்பதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி மேற்கொண்டு நிச்சயமாக அதை நிறைவேற்றுவார்கள்.

அதுமட்டுமல்ல. 31-3-1995 வரையில் பார்த்தால், இதுவரையில் எந்த அரசும் செய்யாத அளவுக்கு 2 சப்-ஸ்டேஷன்கள் 400 கே.வி.யில், 7 சப்-ஸ்டேஷன்கள், 230 கே.வி.யில் 66 சப்-ஸ்டேஷன்கள் 110 கே.வி.யில், 9 சப்-ஸ்டேஷன்கள் 66 கே.வி.யில், 53 சப்-ஸ்டேஷன்கள் 33 கே.வி.யில் என்று ஆக மொத்தம் 137 சப்-ஸ்டேஷன்கள் அமைத்தது நம்முடைய அரசு. ஒரு சாதாரண 11 கே.வி.சப்-ஸ்டேஷன் அமைப்பதற்குக் கூட 5 இலட்சத்திற்கு மேல் செலவாகும். ஆபால் இப்படி 137 பெரிய சப்-ஸ்டேஷன்களை உருவாக்கியது நம்முடைய தங்கத் தலைவி புரட்சித் தலைவியின் ஆட்சி என்றால் அது மிகையாகாது. இந்த விஷயத்தில் இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களுக்கு நல்ல எடுத்துக்காட்டாக தமிழகம் விளங்குகிறது. இது பெருமைப்படத்தக்க ஒன்றாகும். நம்மைப் பார்த்து மற்றவர்கள் இந்த நிலைமைகளைப் பின்பற்ற வேண்டும் என்றால் அதில் எந்தவிதமான ஐயப்பாடும் கிடையாது.

தங்கத் தலைவி, புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில், இதுவரையில் இல்லாத அளவுக்கு 20000 ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு 31-12-95-க்குள் தெரு விளக்குகள் போடப்படும் என்றும், ஆதிதிராவிடர் காலனிக்கு 1,98,000 விளக்குகள் ஒருவிளக்குத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் என்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது குறித்து ஆதிதிராவிட பெருங்குடி மக்கள் எல்லோரும் பாராட்டுவார்கள், வாழ்த்துவார்கள்.

*பிற்பகல் 1.30*

அடுத்ததாக கட்டடத் தொழிலாளர்கள், நெசவாளர்கள், மீனவர்கள், மரம் ஏறிகள் போன்ற தொழிலாளர்கள் தங்கத் தலைவியின் ஆட்சியில் நல்ல பல சலுகைளை அனுபவிக்கிறார்கள். மின்சாரம் உற்பத்தியான காலத்தில் இருந்து, அதாவது, நீண்டகாலமாக மின்சாரத் துறையில் ஒப்பந்தக்காரர்கள் என்கிற சுயவேலைவாய்ப்புத் திட்டத்தில் இருக்கின்ற தொழிலாளர் வர்க்கம் பற்றி அதாவது அப்படி ஒரு வர்க்கம் இருக்கிறது என்பது பற்றி இதற்கு முன்பு ஆண்டுகொண்டிருந்த அரசுகளின் கவனத்திற்கு வரவில்லை. அந்த அளவில் லட்சக்கணக்கானபேர் ஒப்பந்தக்காரர்கள் என்கிற வர்க்கமாக தமிழகத்திலே இருந்துகொண்டிருக்கிறார்கள். இந்த மின் ஒப்பந்தக்காரர்களுக்கு எந்தவிதமான சலுகைகளையும் இதுவரையில் எந்த அரசாங்கமும் வழங்கவில்லை. நம்முடைய தங்கத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில்தான் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்கள், மின்சாரத் துறையில் வேலை செய்கிறபோது ஆபத்து ஏற்பட்டு தொழிலாளர்கள் இறந்து விட்டால் அவர்களுடைய குடும்பத்தினருக்கு பல சலுகைகளைக் கொடுத்து இருக்கிறார்கள்.

அவர்களுடைய குடும்பங்களுக்கு நல்ல பல திட்டங்களை வகுத்துத் தந்திருக்கிறார்கள். ஆனால் அங்கே வேலை செய்கின்ற மின்வாரிய ஒப்பந்தக்காரர்களுக்கு அதுபோன்ற திட்டம் ஒன்றுகூட இல்லை. நம்முடைய தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் லட்சக்கணக்கில் உள்ள இந்தத் தொழிலாளர்களுக்கு இதுபோன்ற ஒரு நல்ல திட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்தால் அவர்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக் கொடுத்தாக இருக்கும் என்று மிக்க பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கோரிக்கை இன்று நேற்று ஏற்பட்டிருக்கின்ற கோரிக்கையல்ல. ஏற்கெனவே ஒப்பந்தக்காரர்களிடம் சிறிதளவு பணத்தைப் பெற்றுக்கொண்டு

அவர்களின் குடும்பத்திற்கு நல்லது செய்திருக்கிறீர்கள். அதைப்போல, மீனவர்களின் குடும்பத்திற்கு அவர்களிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு உதவி செய்து வருகிறீர்கள். மரம் ஏறுபவர்களிடமிருந்து சிறிய தொகையை பெற்றுக்கொண்டு அவர்களின் குடும்பத்திற்கு உதவி செய்கிறீர்கள். அதேபோல, மின்சாரத் தொழிலாளர்களிடமிருந்து ஒரு தொகையைப் பெற்றுக்கொண்டு அவர்களின் துன்பத்தைப் போக்குவதற்கு உதவி செய்யவேண்டுமென்று மிக்க பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். லைசென்ஸ் என்கிற வகையில் பணத்தைப் பெற்றுக்கொண்டு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறீர்கள். இந்த லைசென்ஸ் மூலமாக அரசுக்கு சுமார் 130 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கின்றது. ஆகவே அவர்களிடமிருந்து இன்ஸ்யூரன்ஸ் பாலிசி என்ற வகையில் ஒரு திட்டத்தின் மூலம் சிறிது பணம் பெற்றுக்கொண்டு நம்முடைய தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் அவர்களுடைய நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றித் தருவீர்கள் என்று அவர்கள் நம்பிக்கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் பெருமான் அவர்களின் சீரிய முயற்சியின் காரணமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரும்படி மிக்க பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எங்கள் செங்கற்பட்டு நகரை எடுத்துக்கொண்டால், இந்த நகரிலே நிறைய வியாபாரிகள் இருக்கின்றார்கள், பல கோவில்கள் இருக்கின்றன, பல அலுவலங்கள் இருக்கின்றன, பெரிய மருத்துவமனை ஒன்று இருக்கின்றது. இங்கு பம்ப் ஸ்டேசன் இருக்கின்றது. இந்த பம்ப் ஸ்டேசனில் முன்பு பேக் பீடிங் என்ற முறை செயல்பட்டு வந்தது. எங்கள் நகரத்தில் மின்சாதனத்தை புதுப்பிப்பதற்கும், மாற்றி அமைப்பதற்கும், பல இணைப்புகள் கொடுப்பதற்கும், பல வசதிகள் செய்து கொடுப்பதற்கும் கிட்டத்தட்ட 3 மணி நேரம், 4 மணி நேரம், மற்றும் சில சமயங்களில் 6 மணி நேரம் கூட காலதாமதம் ஆகின்றது. அந்தச் சமயங்களில் ஒரு நாள் பூராவும் மின்சாரம் வருவதில்லை. இதற்கு முன்பு பேக் பீடிங் இருந்த காலத்தில் இரண்டு இணைப்புகள் வைத்திருப்பார்கள். அதில் ஒன்று பழுதடைந்துவிட்டால் மற்றொன்றை இணைத்து மின்சப்ளை கொடுத்துவிடுவார்கள். எனவே அந்த முறையை மீண்டும் எங்கள் நகருக்கு ஏற்படுத்திக் கொடுத்தால் மக்கள் மத்தியில் ஒரு நல்ல மரியாதையை, நல்ல செல்வாக்கை ஏற்படுத்த வாய்ப்பு உண்டாகும் என்பதனை மிக்க பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியில் திருக்கழுக்குன்றம் பேரூராட்சி ஒரு சுற்றுலாத்தலமாகும். இது ஒரு பெரிய தெய்வீகப் பேரூராட்சி. இந்தியாவிலே இருக்கின்ற எத்தனையோ பக்தர்கள் இங்கு வருகிறார்கள். அப்படிப்பட்ட திருக்கழுக்குன்றத்தில் அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது. நான் ஏற்கனவே கூறியபடி பேக் பீடிங் முறையை அமைத்துக் கொடுத்தால் இந்நகருக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். அதுமட்டுமல்லாமல், பேரூராட்சியின் நிதிநிலைமை சரியாக இல்லை. எனவே இந்தப் பேரூராட்சிக்கு நிதிவசதி செய்து கொடுத்து, பேக் பீடிங் என்ற வகையிலே இந்த பம்ப் ஸ்டேசனில் மின் இணைப்பு கொடுத்தீர்களேயானால், சுற்றுலாத்தலமாக விளங்கும் திருக்கழுக்குன்றம் பேரூராட்சிக்கு நலமாக இருக்கும் என்று மிக்க பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இதுகாறும் எனக்கு இந்த அளவிற்கு பேசுவதற்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கும் மற்றும் அமைச்சர் பெருமகனுக்கும் நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கா.பூ. முனுசாமி.

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தினுடைய நிதிநிலையின் மீது சில கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், இங்கே கருத்துக்களைக் கூறும் வாய்ப்பை உருவாக்கித் தந்த மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் *1-35*

மின் துறையைப் பொறுத்தவரையில் நான் தமிழகத்தை ஜப்பானுக்கு ஒப்பிட ஆசைப்படுகிறேன். காரணம், தொழில் திறனில் மிகுந்த ஜப்பான் திருநாட்டிலே மூலப் பொருளை எடுத்துக் கொண்டால்-எந்த பொருளாக இருந்தாலும்--மூலப் பொருள் வாங்க வேண்டுமென்றால் வெளிநாடுகளிலிருந்து அவற்றைத் தருவித்து பொருட்களைத் தயாரித்து, எந்த நாட்டிலிருந்து மூலப்பொருள் வாங்கப்பட்டதோ அந்த நாட்டுக்கே அந்தப் பொருட்களை விற்று வருகிறார்கள். அதைப்போல, மின் துறையைப் பொறுத்த வரையிலே தமிழகத்தில் தேவையான மூலப்பொருள் அரிதாகக் கிடைக்கிறது. மின் தேவை பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்று சொன்னால், அதற்கு நிலக்கரி மிக அவசியமான பொருளாக இருந்து வருகிறது. அவசியமான பொருளான

அந்த நிலக்கரி தமிழகத்திலே கிடைப்பதில்லை. அப்படி இருந்தாலும்கூட மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்பாக தமிழகத்தினுடைய மின் துறையினுடைய நிலைமை, உயர் அழுத்த மின் சப்ளையில் 25 விழுக்காடுகள் மின் வெட்டும், அதேபோல் ஒட்டுமொத்த தேவையினுடைய மின்வெட்டு 30 விழுக்காடுகள் என்றும் இருந்து வந்தன. ஆனால் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனேயே 10-2-1992க்குள்ளாக முழுமையாக மின் வெட்டை ரத்து செய்து நிரந்தரமாக மின்சாரம் அளிக்கும் வழிவகையை இந்த அரசு ஏற்படுத்தி இருக்கிறது. அதேபோல் 1993-94ஆம் ஆண்டில் அதுவரையில் இருந்த மின் பயனீட்டாளர்கள் கூடுதலாக அதாவது 6.6. விழுக்காடுகள் உயர்வு பெற்றிருக்கிறார்கள். 1994-95ஆம் ஆண்டில் மட்டும் ஒரு ஆண்டு வித்தியாசத்திற்குள்ளாக 6.6 விழுக்காடாக உயர்ந்த அந்த மின் பயனீட்டாளர்களின் உயர்வு 13.64 விழுக்காடாக உயர்ந்திருக்கிறது. இப்படி ஒரே ஆண்டில் 100 விழுக்காடு உயர்ந்திருக்கிறது என்று சொன்னால் பயனீட்டாளர்களுக்கு எவ்வளவு வேகமாக இந்த அரசு மின் இணைப்பைக் கொடுத்திருந்தால் இந்த 100 விழுக்காடுகள் உயர்வு ஏற்பட்டிருக்கும் என்பதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

அதேபோல் மின் வழங்கலைப் பொறுத்தவரையில், 4 ஆண்டுகளுக்குள்ளாக மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே 20 லட்சம் பேர்களுக்கு 20 லட்சம் மின் இணைப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். மேலும் 1994-95-ஆம் ஆண்டின் இலக்குப்படி விவசாயிகளுக்கு 40 ஆயிரம் மின் இணைப்புகள் கொடுக்கவேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் இந்த ஆட்சியில் 42,003 மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல் குடிசை மின் இணைப்புகள் 40 ஆயிரம் என்று இலக்கிட்டு அந்த 40 ஆயிரம் இலக்கு முடிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் தொழில்களுக்கு 20 ஆயிரம் மின் இணைப்புகள் கொடுக்கவேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 22,462 மின் இணைப்புகள் தொழிற்சாலைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் பயனாக கிட்டத்தட்ட மின் பயனீட்டாளர்கள் ஒரு கோடிக்கு மேலே பயன்பெற்று வருகிறார்கள்.

அதேபோல் விவசாயிகளுக்கு மேலும் மின் இணைப்புகள் வழங்க வேண்டும் என்பதற்காக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி

அவர்களின் அரசு 25 ஆயிரம் ரூபாய் பணம் கட்டியவர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படும் என்ற அடிப்படையிலே கிட்டத்தட்ட 7,487 விவசாயிகளுக்கு மின் இணைப்புகளை வழங்கியிருக்கிறது. மேலும் 25 ஆயிரம் ரூபாய் என்பது விவசாயிகளால் கட்ட முடியாது என்பதை அறிந்த உடனேயே மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அந்த 25 ஆயிரத்தைக் குறைத்து 10 ஆயிரமாக அறிவித்து அதன் அடிப்படையிலே 30-9-95க்கு உள்ளாக 3622 விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு பதில் சொல்லுகிற நேரத்திலே வருகின்ற மார்ச் மாதத்திற்குள்ளாக 10 ஆயிரம் பேர்களுக்கு அதாவது அந்த 10 ஆயிரம் கட்டியவர்களுக்கு மின் இணைப்புகள் வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். வசதி படைத்தவர்களுக்குக் கொடுக்கின்ற அதே நேரத்தில் இந்த அரசு அடித்தளத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஏழை எளிய விவசாயிகளை மனதிலே கொண்டு--10 ஆயிரம் கொடுத்தாலும்--அவர்களின் ஆண்டுக் குறியீடு 10 ஆயிரம் பேர்களுக்குத்தான் கொடுக்க முடியும். ஆனால் 10 ஆயிரம் கொடுக்காத ஏழை விவசாயிகளுக்கு ஆண்டுக்கு 40 ஆயிரம் மின் இணைப்புகள் வழங்க இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

பிற்பகல் 1-40

மேலும், தொடர்ந்து விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரத்தை வழங்குவதை நான் பாராட்டியாக வேண்டும். காரணம் இந்த ஆட்சி பொறுப்பேற்ற போது, விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்க இந்த அரசால் இயலாது என்பதை மற்றக் கட்சிக்காரர்கள் எடுத்துச் சொன்னார்கள். இருந்தாலும், மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எத்தனை ஆயிரம் கோடி நட்டம் ஏற்பட்டாலும் ஏழை எளிய விவசாயிகளுக்குத் தொடர்ந்து இலவசமாக மின்சாரம் வழங்கப்படும் என்று எடுத்துச் சொன்னதற்கிணங்க, இந்த ஆண்டு, 1995-96 ஆம் ஆண்டு மட்டும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்ற மின்சாரத்திற்கு நட்டமாக ரூ.1388 கோடி ஏற்படுகிறது என்பது இந்த அறிக்கையிலே காணப்படுகிறது. கிட்டத்தட்ட 6344 மில்லியன் யூனிட் மின்சாரம் ஏழை விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிறது. அது மட்டுமல்லாமல் இந்தியத் துணைக் கண்டத்திலே இத்தனை ஆண்டுகள் ஆட்சி செய்த ஆட்சியாளரை விட கீழ்த் தட்டிலே, ஏழையெளிய சமுதாயத்திலே, ஒதுக்கப்பட்ட அந்த ஆதி திராவிட மக்களுக்கு

மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த 4 ஆண்டு காலத்தில் மிகப் பெரிய அளவிலே மின்சாரத்தை இலவசமாக வழங்கியிருக்கிறார்கள். ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு குடிசைக்கு கிட்டத்தட்ட ஆண்டு ஒன்றுக்கு 99,000 என்ற அளவில் 1995-96 ஆம் ஆண்டில் இன்று வரை 1,74,400 ஆதி திராவிட குடிசைகளுக்கு மின் இணைப்பு கொடுத்திருக்கிறார்கள். மேலும், 1,63,789 குடிசைகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்படும் என்று அறிக்கையிலே கூறப்பட்டு இருப்பது, ஆதி திராவிட மக்கள் தங்களால் அந்த ஒளியைக் காண முடியாது என்று சொன்னாலும், நான் அந்த ஒளியைத் தருகிறேன் என்று புரட்சித் தலைவி அவர்கள் இப்படி மின் இணைப்பு கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். இவ்வளவு நட்டங்களுக்கு இடையிலேயும், இன்று மின் உற்பத்தி 4 ஆண்டு காலத்திற்குள் கிட்டத்தட்ட 648 மெகா வாட் அதிகரித்துள்ளது என்று சொன்னால் அதற்குக் காரணம், தேவையான வசதிகள், ஆதாரங்கள், தொழில் நுட்பங்களை மிகத் தீவிரமாகப் பரிசீலனை செய்து, ஏற்பாடு செய்து, இவ்வாறு அதிகமான மின் உற்பத்தியை ஏற்படுத்தி இருக்கிறார்கள். மின் உற்பத்தியைப் பெருக்கியதோடு மட்டும் அல்லாமல் ஏழையெளிய விவசாயிகளுக்கு நட்டம் ஏற்பட்டாலும், மின்சாரத்தை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த ஆண்டு இதேபோன்று, மின் துறையின் மானியத்திலே பேசுகின்றபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு ஒன்றைக் கேட்டுக் கொண்டேன். இந்தியத் துணைக் கண்டத்திலே கிடைக்கின்ற நிலக்கரி ஒரு கிலோவுக்கு கிட்டத்தட்ட 3,000 கிலோ கலோரிகள்தான் தருகின்றது. ஆனால், வெளி நாட்டிலே இருந்து வாங்குகின்ற நிலக்கரி 1 கிலோவுக்கு 5,000 கிலோ கலோரிகள் அளிக்கிறது. அது மட்டுமல்லாமல், அதிகமாக சாம்பலும் உள்நாட்டு நிலக்கரி தருகிறது. வெளி நாட்டிலிருந்து வாங்குகின்ற நிலக்கரி குறைவாக சாம்பல் தருவதால், மேலும் மெஷினரீஸ் தேய்மானம் ஏற்படாமல் இருக்கும் என்பதாலும், வெளிநாட்டிலிருந்து நிலக்கரியை இறக்குமதி செய்யலாம் என்ற கருத்தைக் கூறினேன். அமைச்சர் அவர்கள் இதில் உள்ள சில இடர்பாடுகளை சொன்னார்கள். வெளி நாட்டிலிருந்து வாங்குகின்ற நிலக்கரிக்கு மத்திய அரசு கடந்த ஆண்டு 85 விழுக்காடு வரியாகப் போடுகிறார்கள். ஆனால், கோல் இண்டியா வாங்குவது மட்டும் 35 விழுக்காடுகள் என்று நிலைமையை எடுத்துச் சொன்னார்கள். தற்போது அறிக்கையைப் பார்க்கின்றபோது வெளி நாட்டிலிருந்து வாங்குகின்ற நிலக்கரிக்கு, தாராளமயமாக்கப்பட்ட,

கொள்கையின் மூலம் 85 விழுக்காடுகள் என்பது 35 விழுக்காடு என்று மாற்றப்பட்டு இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முழுமையாக, எல்லா நிலக்கரியையும்--11.5 லட்சம் டன் நிலக்கரி நமக்குத் தேவைப்படுகிறது. வட மாநிலங்களிலிருந்து 7 லட்சம் டன் நிலக்கரிதான் நமக்குக் கிடைக்கிறது. மீதியுள்ளதைப் பெறுவதற்கு இடர்பாடு ஏற்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த 11 இலட்சம் டன் நிலக்கரியையும் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும். இதனால் நமக்கு நல்ல பலன் கிட்டும். ஆகவே......(குறுக்கீடு)

பிற்பகல் 1–45

**மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோல் இண்டியா நிறுவனத்திலிருந்து கிடைக்கும் நிலக்கரியின் தரம் குறைவாக இருப்பதால் நாம் வெளி நாடுகளிலிருந்து நிலக்கரியை இறக்குமதி செய்யலாம் என்று முடிவு எடுத்ததற்கிணங்க நிலக்கரியை இறக்குமதி செய்து கொண்டிருக்கிறோம். நிலக்கரியும் வந்து கொண்டிருக்கிறது. இப்போதுகூட நம்முடைய மகாநதி கோல் ஃபீல்டிலே நமக்குத் தேவையான நிலக்கரியை அவர்களால் தரமுடியவில்லை. அந்தப் பிரச்சினை ஏற்படுகின்ற காரணத்தினாலே நாம் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நிலக்கரியை இறக்குமதி செய்த காரணத்தினாலேதான் நம்முடைய மின்சார நிலைமை இங்கே திருப்திகரமாக இருக்கிறது. ஆகவேதான், இந்த ஆண்டும் 25 இலட்சம் டன் நிலக்கரியை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டும் என்று நாம் ஏற்பாடு செய்து, அதற்கான ஒப்பந்தங்கள் கோரப்பட்டு, அதை நடைமுறைப் படுத்துவதற்காக பல்வேறு நிலைகளில் நாம் அதை ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே, இந்த ஆண்டு 25 இலட்சம் டன் நிலக்கரி வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கா.பூ. முனுசாமி, சீக்கிரம் உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு மிக்க நன்றி. மேலும், இவ்வாறு சமயோசிதமாக இந்தத் துறையிலே எந்த எந்த வகைகளிலே தங்களுடைய கவனத்தைச் செலுத்த வேண்டுமோ அந்த அளவுக்கு கவனம் செலுத்தி, ஒவ்வொரு ரூபாயாகச் சேர்த்து, இன்று பல ஆயிரம் கோடி ரூபாய் நட்டம்

ஏற்பட்டாலும், தமிழகத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் மின்வெட்டே இல்லாமல், மின்சாரத்தை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. அதற்கேற்றவாறு மின் வழங்கல் என்கிறபோது, மின் தடை ஏற்படுகின்ற காரணத்தினால் மற்ற மாநிலங்களிலே பொதுவாக, இந்தியத் துணைக் கண்டத்திலே 22 விழுக்காடுகள் நட்டம் ஏற்படுகிறது என்று இங்கே அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் 17 விழுக்காடு குறைக்கப்பட்டிருக்கிறது என்ற நல்ல செய்தியும் இருக்கிறது. மேலும் 15 விழுக்காடு குறைக்க வேண்டும். அதற்கு நிதி ஆதாரங்கள் தேவைப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்கள் இந்த அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். எவ்வளவோ நட்டத்திற்கு இடையிலேயும் இதை நல்ல முறையிலே பேணிப் பாதுகாத்து வருகின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமகனார், 15 விழுக்காடாகக் குறைக்கின்ற பட்சத்தில் தரமான மின்சாரம் மக்களுக்குச் சென்றடையக் கூடிய நிலைமை ஏற்படும் வகையில் உடனடியாக அதைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் வழங்கலைப் பொறுத்தமட்டிலே 'லைன்-லாஸ்' குறைக்கப்பட வேண்டும் என்பதுதான் நோக்கம். இந்தியாவின் சராசரி விகிதம் 21 விழுக்காடு. நம்முடைய மாநிலத்திலே 17 விழுக்காடாக அதைக் குறைத்திருக்கிறோம். அதை 15 சதவிகிதமாக ஆக்க வேண்டும் என்பதற்காகத்தான் புதிய சப்-ஸ்டேஷன்கள் போடப்பட வேண்டுமென்று எந்த ஆட்சிக் காலத்திலேயும் இல்லாத அளவு 100 சப்ஸ்டேஷன்கள் என்று நாம் நிர்ணயித்து, இன்றைக்கு அது 110 ஆக உயர்ந்திருக்கிறது. அந்த 110 சப்-ஸ்டேஷன்களும் வரும் மார்ச் மாதத்திற்குள் முடிவடையும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு ஏறத்தாழ 359 கோடி ரூபாய் செலவழியும். கடந்த ஆட்சிக் காலங்களிலே எல்லாம் 18,19 துணை மின் நிலையங்கள்தான் ஒரு ஆண்டிலே போட்டார்கள். நாம் 110 துணை மின் நிலையங்களைப் போட்டு இருக்கிறோம். அடுத்த ஆண்டு 76 துணை மின் நிலையங்கள் போடுவதற்கான எஸ்டிமேட் தயாரித்து தயாராக வைத்திருக்கிறோம். அதையும் சேர்த்து அடுத்த ஆண்டு மேலும் 100 துணை மின் நிலையங்கள் போட இருக்கிறோம். இன்னும் இரண்டு ஆண்டு காலங்களிலே 'லைன் லாஸ்' குறைக்கப்படும். தேவையான அளவு மின்சாரம் வழங்கப்பட்டு இந்த 'லைன் லாஸ்' பிராப்ளம் எதிர்காலத்திலே

இல்லாமல் செய்வதற்காகத்தான் துணை மின் நிலையங்களைப் போட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த நடவடிக்கைகளை எல்லாம் எடுத்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கா.பூ. முனுசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்கு நன்றி. இதைத் தொடர்ந்துதான், தர்மபுரி மாவட்டத்திலே தளி பகுதியிலே குறைந்த அழுத்த மின்சாரம் நீண்டநெடுங்காலமாக இருந்து வந்ததை மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அம்மாவட்டத்திற்கு வந்தபொழுது எடுத்துச் சொன்னவுடனேயே அதே இடத்திலே உத்தரவு பிறப்பித்து 100 சப்–ஸ்டேஷன்களிலே கிருஷ்ணகிரி ஒன்றியத்திலேயும், ராயக்கோட்டை ஒன்றியத்திலேயும் இப்போது அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்காக, மாவட்ட மக்களின் சார்பாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், காவேரிப்பட்டினம் நகரத்திலே நீண்ட ஆண்டுகளாக ‘எலக்ட்ரிக் போல்’ போட வேண்டும் என்பதற்காக 14 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தியிருந்தார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே தர்மபுரி மாவட்டத்திற்கு வந்தபொழுது கூறிய உடனேயே 1¼ கோடி ரூபாயை சாங்ஷன் செய்து, உடனே அந்தப் பணி அங்கே துவக்கப்பட்டிருக்கிறது. அதற்காக நான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி, இந்த மின்சார வாரிய நிதி நிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

*பிற்பகல் 1–50*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1995–96–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்திலே கலந்து கொள்கிற வாய்ப்பை நல்கிய தங்களுக்கும், காங்கிரஸ் பேரியக்கத்திற்கும் என் நன்றிதனைக் காணிக்கையாக்குகின்றேன்.

ஆளுங்கட்சி வரிசையிலே இருக்கக்கூடிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், திரு. ரவிச்சந்திரன், திரு. வரதராஜன், திரு. கோவி. எஸ். மோகனன், அவர்கள் எல்லாம் சொல்லுகிறபொழுது, மின்வெட்டே

இல்லாத மாநிலம் என்று திரும்பத் திரும்பச் சொன்னார்கள். 'வானகத்தே தோன்றும் மின்னல் எப்போது தோன்றும், எப்போது மறையும்' என்று மண்ணுலக மாந்தர்க்கு எப்படித் தெரியாதோ, அதேபோல, தமிழகத்திலே மின்சாரம் எப்போது வரும், எப்போது போகும் என்று சொல்ல முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. உதாரணத்திற்கு, எங்கள் வேலூரில் ஒரு நாளைக்கு 6, 7 முறை கரண்ட் கட் ஆகிறது. பல நேரங்களிலே இரவிலேயெல்லாம் கரண்டே வருவது இல்லை. 16–10–1992 முதல் தமிழகம் மின்வெட்டே இல்லாத ஒரு மாநிலம் என்று மாண்புமிகு அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்கள் எப்பொழுதுமே பெருமையாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் மாண்புமிகு நாவலர் அவர்களும் அதைப்படித்து புளகாங்கிதம் அடைகிறார்கள். ஆனால், சாமான்யன் ஞானசேகரன் வாழும் வேலூர் தமிழகத்தில்தானே இருக்கிறது. வேலூர் தமிழகத்தைச் சார்ந்த ஒரு பகுதி இல்லை என்று அதிகாரிகளும், அமைச்சரும் எண்ணுகிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை. எழுதப்பட்ட சட்டங்கள் எல்லாம் கல்லறைக்குள் பதுங்கி, எழுதப்படாத சட்டங்கள் பட்டம் சூட்டிக்கொண்டு பகட்டாய் ஆட்சி புரியும். அதேபோலத்தான் மின்வெட்டே இல்லாத மாநிலத்தில் அறிவிக்கப்படாத மின்வெட்டுகள் அடிக்கடி ஆட்சி செய்து குடிமக்களை இருளில் தள்ளுகிறது. ஒருவேளை ஆளும் கட்சி வரிசையிலே இருக்கும் அமைச்சர் பெருமக்களை மட்டும் அந்த அறிவிக்கப்படாத மின்வெட்டு எட்டிப்பிடிக்கவில்லையோ, தெரியவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன்:** நான் ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன். சமீபகாலமாக ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைகளுக்கு என்ன காரணம் என்பதை நான் விளக்கியிருக்கிறேன். எழுதிய நீண்ட வசனத்தை நம்முடைய ஞானசேகரன் படித்துக் கொண்டிருக்கிறார். அதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. எங்களுடைய இல்லங்களிலேகூட சில நேரங்களிலே கரண்ட் வருவது கிடையாது. பல நேரங்களிலும் மின்வெட்டு ஏற்பட்டிருக்கலாம். ஏனென்று சொன்னால், மின் தடங்கல் ஏற்படுகின்றபோது, அது அமைச்சர் வீடு என்றும் பார்க்காது; அதிகாரி வீடு என்றும் பார்க்காது; அது ஞானசேகரன் வீடு என்றும் பார்க்காது. மின்சாரத்திற்கு யாரை வித்தியாசம் பார்க்க முடியும் ? எங்காவது தடங்கல் ஏற்படுகிறபோது, 'ப்யூஸ்' போகின்றபோது, அல்லது 'ட்ரான்ஸ்பார்மர்' ஃபெய்ல்யூர் ஆகின்றபோது அந்தப் பகுதியிலே மின்சாரம் போகும். ஆகவே, அதற்கு விதிவிலக்கு சொல்ல

முடியாது. ஆக, எல்லோருக்கும் அது பொதுதான். இருந்தாலும், அவருடைய வேலூர் பகுதியிலே இருக்கின்ற பிரச்சினையை பலமுறை என்னிடத்திலே சொல்லி இருக்கலாம். அல்லது தொலைபேசியில்கூட தெரிவித்திருக்கலாம். அல்லது கடிதம் எழுதியிருக்கலாம். சட்டமன்றத்திலே பேச வேண்டும் என்பதற்காகவே அவர் சொல்லாமல் இருந்தார் போல எனக்குத் தெரிகிறது. ஆக, அமைச்சர் ஒருவர் இருக்கிறார். நீங்கள் அமைச்சரிடத்திலே சொல்ல வேண்டும். சில இடங்களிலே ஏற்படுகின்ற இடர்பாடுகளைத் தவிர்ப்பதற்காக நீங்கள் அமைச்சர் இடத்தில் சொல்லவேண்டும். அல்லது ஒரு கடிதம் மூலம் தெரிவிக்கவேண்டும். அல்லது அதிகாரிகளிடத்திலாவது சொல்லவேண்டும். நாங்கள் நடவடிக்கை எடுத்திருப்போம். பரவாயில்லை. தற்போது நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். உடனடியாக வேலூர் பகுதியிலே இருக்கின்ற பிரச்சினைகளைக் கவனித்து அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு மின்சாரம் தடையில்லாமல் வழங்குமாறு பார்த்துக் கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பகுதியிலே உள்ள தோல் தொழிற்சாலை இந்த மின் வெட்டினால் பாதிக்கப்பட் டிருக்கிறது. லெதருக்கு கலர் கொடுக்கின்ற அந்தத் தொழிற்சாலை பாதிக்கப்பட்டு தற்போது பல இலட்சம் பேர்கள் வேலையிழந்து இருக்கிறார்கள். அதேபோல ஆஸ்பத்திரி. வேலூரிலே இருக்கக்கூடிய 'பென்ட் லேண்ட்' மருத்துவமனையிலேகூட கரண்ட் இல்லாத காரணத்தால், ஜெனரேட்டரும் வேலை செய்யாத சூழ்நிலையில் இன்று பல நோயாளிகள் இருளிலே அவதிப்படுகின்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, மின்வெட்டே இல்லாத ஒரு மாநிலம் என்று சொல்லுகின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவு செய்து 'லோட் ஷெட்டிங்' என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்காமல் அதை நூற்றுக்கு நூறு சதவிகிதம் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த மின்வெட்டைப் பற்றித்தான் பீட்டர் அல்போன்ஸ் பேசும்போதே அமைச்சரும் பதில் சொல்லி முடித்திருக்கிறார்கள். இப்போது சவக்குழிக்குள் இருக்கின்ற சட்டம், சவக்குழிக்குள் இல்லாத சட்டம் என்று ஏன் சவக்குழிக்குள் போவதிலேயே.....

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அறையிலே இருந்து நன்றாகக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரிகிறது. இருந்தாலும்கூட, நான் இங்கே வலியுறுத்த வேண்டுவது எல்லாம், நீங்கள் 'லோட் ஷெட்டிங்' என்று ஒரு மாற்றுப் பெயரை அதற்குக் கொடுத்திருக்கிறீர்கள். இருக்கக்கூடிய பிரச்சினையை நான் சொல்ல வேண்டும். வேலூரிலே நிறைய இடங்களிலே அப்படி இருந்து கொண்டிருக்கிறது. இரவெல்லாம் கரண்ட் இல்லாமல் இருக்கக்கூடிய ஒரு நிலை இருந்து கொண்டிருப்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். உடனடியாக நடவடிக்கை எடுங்கள்.

அடுத்து, 1994-95 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே 210 மெகாவாட் திறன் கொண்ட மூன்று பிரிவுகளைக் கொண்ட வடசென்னை அனல் மின் திட்டம் 1994-95 இலே முடிக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அடுத்து வந்த 1995-96-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் 15-2-95 அன்று ஒரு பிரிவைத் தொடங்கினார்கள்; மேலும் இரு மின் உற்பத்திப் பிரிவுகள் 1995-96 இலே தொடங்கப்படும் என்று கூறியிருக்கிறீர்கள். 1994-95 இல் முடிக்கப்படும் என்று சொல்லப்பட்ட அதே திட்டம், 1995-96 இலே தொடங்கப்படும் என்று கூறியிருக்கிறீர்களே, ஏன் இப்படி முன்னுக்குப்பின்......(குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடசென்னை அனல் மின் நிலையத்தைப் பொறுத்தமட்டில், 210×3, ஆக 630 மெகாவாட், மின் உற்பத்தி செய்கின்ற திட்டம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு பிரிவைத் தொடங்கி வைத்தார்கள். இரண்டாவது இந்த மாதம் துவக்கப்பட்டுவிட்டது. அடுத்து, மூன்றாவது பிரிவு சில வேலைகள் காரணமாக ஜனவரி மாதம் துவங்க இருக்கிறோம். ஆக, 1995-க்குள் முடிப்போம் என்று சொல்லியிருக்கிறோம். 1995 டிசம்பர் மாதம் வரை இருக்கிறது. ஆக, ஒரு மாதம் முன்னோ, பின்னோ இருக்கலாம். ஒரு பெரிய திட்டத்தை, 1200 கோடி ரூபாய் திட்டத்தை நிறைவேற்றுகின்றபோது நாம் குறித்த நேரத்திலே நினைத்த நேரத்திலே முடித்துவிட முடியாது. 2 யூனிட் வந்துவிட்டது. மூன்றாவது யூனிட், நாங்கள் ஜனவரி என்று சொல்லியிருக்கிறோம்; நிச்சயமாக அது சொன்ன காலக்கெடுவுக்குள்ளே, 1995-க்குள்ளே முடிந்து உற்பத்தியைத் துவக்குவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-55

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1994-95 என்பது மார்ச்சோடு முடிந்து விடுகிறது. அதனால்தான் நான் அதைச் சுட்டிக்காட்டினேன். இந்த ஆண்டிலே, அதைக் கணக்கிலே எடுக்க வேண்டாம். இருந்தாலும், உடனடியாக முடிப்போம் என்று சொன்னதற்கு நன்றி. மூன்றாவது பிரிவுக்கான வேலை இன்னும் தொடங்கவில்லை என்று அறிகிறேன். நீங்கள் தொடர்ந்து அதை முடித்துவிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** முடியும் தருவாயில் இருக்கிறது, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிசம்பர் மாதம் முடிந்துவிடும். அல்லது ஜனவரி மாதம் உற்பத்தியைத் துவக்கிவிடும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1994-95 நிதிநிலை அறிக்கையிலே சொல்கிறபோது, சென்னையிலே உயரழுத்தத் தேவையை நிறைவு செய்ய, பேசின்பிரிட்ஜ் அனல் மின்நிலையத்தில் ஒவ்வொன்றும் 30 மெகாவாட் திறன் கொண்ட 4 பிரிவுகளைத் தொடங்க உள்ளோம் என்று கூறியிருக்கிறீர்கள். 1994-95இலே வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிறுவனத்தின்–ஜப்பான்--உதவிபெற்று, இத்திட்டம் 367 கோடி ரூபாய் செலவில், 1995இலே முடிக்கப்படும் என்று அப்போது நாவலர் அவர்கள் அந்த 1994-95 அறிக்கையிலே வாசித்தார்கள். ஆனால், 1995-96 நிதிநிலை அறிக்கையிலே ஒவ்வொன்றும் 30 மெகாவாட் திறன் கொண்ட 4 பிரிவுகள் 1995-96 இல் தொடங்கப்படும் என்கிறீர்கள். இப்படி ஏற்கெனவே 1994-95இலே சொன்னதை, 1995-96இலும்......

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசின்பிரிட்ஜ் சுழல் எரிவாயு மின்திட்டம் என்பது, 4×30 மெகாவாட், அதாவது 120 மெகாவாட் திட்டம். அதை இந்த டிசம்பருக்குள் தொடங்க வேண்டுமென்று எல்லாப் பணிகளும் முடிந்து விட்டன. இந்த டிசம்பர் மாதம் 4 யூனிட்டுகளும் இயக்கி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்கள். திட்டத்தின் ஆரம்பப் பணிகளைத் துவக்கி வைத்தார்கள். இப்போது முடிவுறும் நிலையில் இருக்கிறது. நான் ஏற்கெனவே சொல்லியதைப்போல, இந்த டிசம்பர் மாதத்திற்குள் முடிந்து, 4

பிரிவுகளும் இயங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ரூ.450 கோடியில்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1994-95 நிதிநிலை அறிக்கையில், மரபுசாரா எரிசக்தி ஆதாரத்தைப் பெருக்குவதற்காக கடல்நீர் வெப்பத்திலிருந்து, மின்சக்தி உற்பத்தி செய்வதற்கு, அமெரிக்க நிறுவனம் திருவாளர்கள் 'சீ சோலார் பவர்' நிறுவனத்திடம் உடன்படிக்கை செய்யப்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு 800 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே உற்பத்தித் திறன் 100 மெகாவாட்டாக இருக்குமென்று சொல்லப்பட்டது. ஆனால், 1995-96 பட்ஜெட் அறிக்கையிலே கடல்நீர் வெப்ப ஆற்றல் மின்சக்தியை மேம்படுத்த அமெரிக்க நாட்டைச் சேர்ந்த 'சீ சோலார்' நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றை வகுப்பதன்மூலம் இத்துறையில் தமிழகம் முன்னோடியாக உள்ளது என்று கூறியிருக்கிறீர்கள். ஏற்கெனவே, 1994-95இலேயே ஒன்றைச் சொல்லி, அப்போது தொடங்கப்படும் என்று சொன்னவர்கள், இப்போது, 1995-96 இலும்கூட, ஏதோ ஒப்பந்தம் ஒன்றை வகுப்பதன்மூலம் இத்துறையில் தமிழகம் முன்னோடியாக உள்ளது என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஒப்பந்தத்தை வகுப்பதிலேயே இருந்து கொண்டிருந்தால்......

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கடல்நீர் வெப்பத்திலிருந்து மின்சாரத்தைத் தயாரிக்கிற ஒரு புதிய மின்திட்டம் என்பது, உலகத்திலேயே நம்முடைய தமிழ்நாட்டிலேதான் அமெரிக்க நிறுவனத்தோடு நாம் செய்து கொண்ட ஒப்பந்தம். அதற்கு வேண்டிய ஆயத்தப் பணிகளை அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். நாம் ஏற்கெனவே அவர்களிடம் ஒப்பந்தமிட்டிருக்கிறோம். வெளிநாட்டுக் கம்பெனிகள் முதலீடு செய்கிறார்கள். அவர்கள் அதற்கான ஆயத்தப் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். உலகத்திலேயே முன்னோடி திட்டம் என்று சொல்லியிருக்கிறோம். எந்த மாநிலத்திலும், எந்த நாட்டிலும் இல்லாத அளவிற்கு இந்த மின்திட்டம் நம்முடைய தமிழ்நாட்டிலே அமல்படுத்தப்படுகிறது என்பதைத்தான் நாம் சொல்லியிருக்கிறோம். அதற்கான பூர்வாங்கப் பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், நேரம் இப்போது 1-57.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேச ஆரம்பித்து 10 நிமிடங்கள்கூட ஆகவில்லை.

1994–95 லேயும், அதேபோல் 1995–96 லேயும் அதையே திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆகவே, 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது', அதை எப்படியாவது செயல்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

1994–95 நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்ட மயிலாடுதுறை, கள்ளக்குறிச்சி, அரூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலே ரூபாய் 18 கோடியிலே இருக்கக்கூடிய கூட்டு மின்உற்பத்தி நிலையங்கள் ஏன் இன்னும் செயல்படுத்தப்படவில்லை. 1995–96 நிதிநிலை அறிக்கையிலோ, அல்லது இப்போது அமைச்சர் கொடுத்திருக்கக்கூடிய உரையிலோ அதைப்பற்றி மூச்சே விடவில்லை. அந்தத் திட்டம் என்ன ஆனது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்க வேண்டுமென்று நான் இந்தத் தருணத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

1994–95 நிதிநிலை அறிக்கையிலே, கடலூரில் ஆயிரம் மெகாவாட் திறனும், அதேபோல் 2 ஆயிரம் மெகாவாட் திறனும் கொண்ட அனல் மின்நிலையம் அமைக்கத் திட்டமிட்டுள்ளோம் என்று கூறியிருக்கிறீர்கள். 1995–96 இல் அமைச்சருடைய உரையிலேகூட, கடலூர் அனல் மின்நிலைய திட்டத்திற்கு ஒப்புதலை முதலமைச்சர் அவர்கள் அளித்திருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒப்புதல் பெற்றுதானே, நீங்கள் 1994–95 இல் அந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறீர்கள். இன்றைக்கு அதையே கொண்டுவந்து, இப்போது 1995–96இலேயும் இன்னும் அதையே இரண்டாண்டுக் காலம், மூன்றாண்டுக்காலம் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருக்கிறோமே, அதை எப்போது நீங்கள் செயல்படுத்தப் போகிறீர்கள் என்பதை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய மின்திட்டங்களைப் பொறுத்தமட்டில், ஒரு விளக்கத்தை நான் இந்த அவையிலே வைக்க வேண்டியது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். ஒரு அனல் மின்நிலையத்தை நாம் கொண்டு வரவேண்டுமென்றால், அதற்கு நான்காண்டுக் காலம், ஐந்தாண்டுக் காலம் பிடிக்கிறது. ஒரு மெகாவாட் உற்பத்தி செய்வதற்கு

1995 நவம்பர் 3] [திரு. எஸ். கண்ணப்பன்]

4 கோடி ரூபாய் செலவாகிறது. 500 மெகாவாட்டிலே ஒரு மின்திட்டம் போட்டால், 2 ஆயிரம் கோடி ரூபாய் செலவாகிறது. அதற்கு நாம் எம்.ஓ.யு.-'மெமொராண்டம்ஆஃப் அண்டர்ஸ்டாண்டிங்'--போடுகிறோம். அதனை நம்முடைய தமிழக அரசோடு, மின்சார வாரியத்தோடு அவர்கள் போடுகிறார்கள். வெளிநாட்டுக் கம்பெனிகள் அனுமதி பெற்றுப் போடுகிறார்கள். அதற்குப் பின்னாலே, 'பவர் பர்ச்சேஸ் அக்ரிமென்ட்' போடுவதற்கு முன்னாலே, 'சென்ட்ரல் எலக்ட்ரிசிடி அதாரிடி ஆஃப் இந்தியா'-விடத்திலே, அவர்கள் நிதியாதாரங்களை இங்கே கொண்டு வருவதற்கு அனுமதி பெறவேண்டியிருக்கிறது. அவர்களிடத்திலே 'கிளியரன்ஸ்' வாங்க வேண்டியிருக்கிறது. 'கேரன்ட்டி' வாங்க வேண்டியிருக்கிறது. அப்படி இல்லாவிட்டால், நாம் 'எஸ்க்ரோ' அக்கவுன்ட் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆக, இதுபோன்ற நடைமுறைப் பிரச்சினைகள் ஏராளமாக இருக்கின்றன. வெளியிலே இருந்து முதலீட்டாளர்களைக் கொண்டு வரவேண்டுமென்பது, இந்தியாவிலே நீங்கள் நடைமுறைப்படுத்திய கொள்கை. அந்த அடிப்படையிலேதான் இன்றைக்கு நாம் போட்டு இருக்கிறோம்.

பிற்பகல் 2-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** அந்த அடிப்படையிலேதான் இன்றைக்கு மின் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இதுபோன்ற நடைமுறைகளை நாம் பின்பற்ற வேண்டி இருக்கின்ற காரணத்தால்தான் காலதாமதம் ஆகிறதே தவிர, இதற்கு தமிழ்நாடு அரசு மாத்திரம் பொறுப்பல்ல; தமிழ்நாடு மின்சார வாரியம் மாத்திரம் பொறுப்பல்ல. இந்த நடைமுறைகள், இதற்குரிய அனுமதிகள் எல்லாம் மைய அரசிலே இருந்து வரவேண்டி இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த நடைமுறை இருந்து கொண்டிருக்கிறது. அதற்கான பூர்வாங்க வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதற்குப்பின் இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படும்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு, இப்போதுகூட 85 சதவீதமாக இருந்த சுங்கத் தீர்வையை 35 சதவீதமாக குறைத்து இருக்கிறது. அடிக்கடி உங்களுக்கும் ரெஸ்பான்ஸ்

கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அப்படி இருந்தும்கூட, 1994-95 ஆம் ஆண்டு அறிக்கையிலே ஜெயங்கொண்டம் ஒருங்கிணைந்த பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்கின்ற திட்டத்தை சுமார் 7500 கோடி செலவிலே இணைப்பு இரயில் மூலம் மேற்கொள்ளப்படும் என்று நீங்கள் அப்போது அறிவித்தீர்கள். அதனுடைய மதிப்பீட்டுப் பணி அப்போதே நடக்கிறது என்று சொன்னீர்கள்; திட்டம் விரைவிலே நிறைவேற்றப்படும், தொடங்கப்படும் என்றெல்லாம் அப்போது நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டது. ஆனால், 1995-96 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே ஜெயங்கொண்டம் ஒருங்கிணைந்த சுரங்கம் மின் உற்பத்தித் திட்டம் குறித்து இறுதிநிலை மதிப்பீடு, சாத்தியக்கூறு பற்றிய ஆய்வு விரைவிலே மேற்கொள்ளப்படும் என்று சொல்லப்படுகிறது. 1994-95 ஆம் ஆண்டிலே அது தொடங்கப்படும் என்று சொன்ன ஒன்று, பிறகு ஏதோ, இப்போதுதான் ஆய்வு செய்யப்பட்டு இருப்பதாகவும், மதிப்பீடு செய்யப்பட்டு இருப்பதாகவும் சொல்லிக் கொண்டு இருப்பதற்கு காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் இங்கே விளக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே ஒப்புதல் அளித்துத்தானே நீங்கள் 1994-95 லே ஜெயங்கொண்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறீர்கள்? அப்படி இருக்கிறபோது அதையே இப்போது 1995-96இலேயும் கொண்டுவந்து செயல்படாமலேயே இன்னும் இருந்துகொண்டு இருக்கிறதே.. ஜெயங்கொண்டம், ஜெயங்கொண்டம் என்று மட்டும் சொல்லிக் கொண்டு இருக்கிறோம். அதை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1994-95 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே 400 மெகாவாட் திறன் கொண்ட 3 டீசல் மின் உற்பத்தி நிலையங்களை நிறுவுகின்ற பணி தனியார் துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று கூறி இருக்கிறீர்கள். ஆனால், இன்று வரை வேலை தொடங்கவில்லை என்று அறிகிறேன். எப்போது அந்த மின் உற்பத்தி கிட்டும் என்ற விவரத்தையும் அமைச்சர் அவர்கள் அவைக்கு அளிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திங்கட்கிழமை அவர் அளிப்பார், போதும். திரு. இராம. இராமநாதன். (குறுக்கீடு) எப்போது அறிவிப்பார் என்றீர்கள். திங்கட்கிழமை அறிவிப்பார், உட்காருங்கள். இன்னும் 2 உறுப்பினர்கள் பேச வேண்டும். திரு. இராம. இராமநாதன்.

*1995 நவம்பர் 3]*

**திரு. இராம. இராமநாதன்:** மாண்புமிகு பேரவையினுடைய தலைவர் அவர்களே, கோடானு கோடி மக்களின் மனக் கோயிலிலே குடி இருக்கின்ற எங்களுடைய இதயத் தலைவி, எங்களை வாழ வைக்கின்ற தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதம் பணிந்து, இன்றைக்கு மிகச் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றுக் கொண்டிருக்கிற மின்வாரியத்தினுடைய பல்வேறு பணிகள் மீதான இந்த நல்ல விவாதத்திலே கலந்துகொண்டு பேசுவதற்கு வாய்ப்பு அளித்திட்ட எங்கள் தாய், எங்கள் தலைவிக்கு, அவர்களுடைய பொற்பாதம் பணிந்து என்னுடைய நன்றிகளை முதலிலே உரித்தாக்கிக்கொண்டு, மாவீரன் சுந்தரலிங்கம் அவர்களுடைய பெயரிலே போக்குவரத்துக் கழகத்தை அறிவித்திட்ட எங்கள் தங்கத் தலைவிக்கு இந்தத் தமிழ் கூறும் நல்லுலகத்தின் சார்பாக என்னுடைய பணிவான நன்றிகளை நான் முதற்கண் உரித்தாக்கிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வராக, ஏழை எளிய மக்களை வாழ்விக்க வந்த தெய்வமாக, ஒளி பீடத்திலே அமர்ந்து ஆட்சியினை மிகவும் நல்ல முறையிலே, மாற்றாரைப்பற்றி கவலை இல்லாமல், என்னுடைய தாய்த் தமிழகத்திற்கு நான் பல்வேறு காரியங்களை நிறைவேற்றியாக வேண்டும் என்ற அந்த உன்னத இலட்சியங்களோடு பாடுபட்டுக் கொண்டிருக்கிற தங்கத் தலைவிக்கு, எந்தத் துறையிலே எத்தனை இடர்பாடுகள் யார் கொடுக்க நினைத்தாலும், அவர்கள் தூள்தூளாவது உறுதி என்ற உறுதிப்பாட்டோடு, மக்களுடைய இதயத்திலே மட்டும் அவர்களுடைய முழுமையான ஆதரவினை மட்டுமே நம்பி செயல்பட்டுக் கொண்டிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் பல்வேறு சாதனைகளை இன்றைக்கு சாதித்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கே இருக்கின்ற இவைகளை மட்டுமே எடுத்துக்கொள்ளாமல், புதிது புதிதாக உருவாக்கி மக்களுக்குத் தரவேண்டும் என்ற பாங்கோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால்தான், பலர் இன்றைக்கு அதனை பல்வேறாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் நம்முடைய தங்கத் தலைவியினுடைய ஆட்சியிலே பார்க்கின்றபோது, நரிமணத்திலே கேஸ் டர்பைன் பிராஜெக்ட், அதைப்போல நெய்வேலியிலே இன்றைக்கு அமெரிக்காவைச் சேர்ந்த தனியார் மூலமாக பழுப்பு நிலக்கரி அனல் மின்சாரம் தயாரிக்கின்ற மிகச் சிறந்த திட்டம், அதைப்போல நாகை மாவட்டத்திலே பிள்ளைப்பெருமாள் நல்லூரில் வெளிநாட்டைச்

சேர்ந்தவர்கள் இங்கே வருகை தந்து, எரி வாயுத் திட்டத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகளை எல்லாம் ஏற்படுத்திக் கொடுத்து செயல்படுத்துகின்ற ஒரு மிகச் சிறந்த திட்டம், அதைப்போல வடசென்னை பேசின் பிரிட்ஜ் அனல்மின் திட்டத்தில் 2 டாங்குகள் அமைக்கப்பட்டு, இன்னும் ஒன்றின் நடவடிக்கையினை ஜனவரி மாதத்திற்குள்ளாக அது இயங்குவதற்கு, தொடங்குவதற்கு ஆய்வுப் பணிகளை நிறைவேற்ற இருக்கிறோம் என்று இங்கே அறிவிக்கின்ற மிகச் சிறந்த பாங்கு, அதைப்போல இன்றைக்கு 100 துணைமின் நிலையங்களை 110 துணைமின் நிலையங்களாக எங்களுக்கு முழுமையாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதற்காக 100 துணைமின் நிலையங்களை 110 மின் நிலையங்களாக மாற்றி இன்றைக்கு அடிப்படைத் தேவைகளைச் செய்கிற ஒரு ஒப்புயர்வற்ற பாங்கு, அதைப்போல விவசாயிகளுடைய நலனைக் கருதி 25 ஆயிரம் ரூபாய் பணத்தைக் கட்டினால் உடனடியாக மின் இணைப்பு கொடுக்கமுடியும் என்கின்ற நிலையை மாற்றி அதன் மூலம் பலர் பலன்களைப் பெற்றாலும், அதற்கும் மேலாக இன்றைக்கு 10 ஆயிரம் ரூபாய் கட்டினாலே போதும், உடனடியாக மின் இணைப்புகளை தருவதற்கான நடவடிக்கைகளை எங்களுடைய இதயத் தலைவியாக இருக்கக்கூடிய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விவசாயிகளுடைய உன்னதமான வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு மின் இணைப்பை கொடுக்கிற அந்த மிகச் சிறந்த அறிவிப்பை இங்கே வழங்கி இருக்கிறார்கள்.

*பிற்பகல் 2-05*

இப்படி ஒவ்வொரு திட்டத்திலும் மக்களின் நலனை அக்கறையோடு கருத்திலே எடுத்து செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அதனால் தான் இங்கே இருக்கக்கூடிய மின்சாரத்துறை பல்வேறு வளர்ச்சியைக் காண முடிகிறது. இன்றைக்கு இந்த ஆட்சி ஏற்பட்டதற்கு பிறகு நம்முடைய தங்கத் தலைவி ஆட்சியிலே ஒவ்வொரு திட்டமாக அறிவிக்கப்பட்டு, அப்படி அறிவிக்கப்பட்டிருக்கும் திட்டம் எந்த ஆட்சியிலே அறிவிக்கப்பட்டு இருக்கிறதோ, அந்த ஆட்சியிலேயே முழுமையாக நிறைவேற்றுகிற பாங்கான ஒரு செயல்பாட்டை பெற்றிருக்கிற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தான் தமிழகத்தின் முதலமைச்சராக ஒளிமயமாக அமர்ந்து கொண்டு அந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதனைத் தொடர்ந்து பல்வேறு இடங்களிலே, இங்கே கூட சொன்னார்கள்,

மின்சாரத்திலே இடர்பாடு இருக்கிறது என்று சொன்னார்கள். லோடு ஷெட்டிங் என்றுகூட ஏக்கத்தோடு சொன்னார்கள். இன்றைக்குப் பல்வேறு பணிகளை நிறைவேற்ற வேண்டும், அங்கே இருக்கக்கூடிய மின் மாற்றிகளை மாற்றி அமைக்க வேண்டும், ஒயர்களை மாற்ற வேண்டும் அதற்குப் பிறகு கன்டெண்சரைப் புதிதாகப் போடவேண்டும் என்று சொன்னால், அந்தப் பணிகளை நிறைவேற்ற மின்சாரத்தை அணைத்துவிட்டுதான் பார்க்க முடியுமே தவிர, அந்த மின்சாரத்தினுடைய ஸ்விட்சை ஆன் செய்து விட்டு மின் பணியாளர்களை மேலே ஏற்றி வேலை செய்யமுடியும் என்று இங்கே சிலர் நினைத்து சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். நானும் காலையிலிருந்து பார்த்துக் கொண்டு தான் இருக்கிறேன். நான் ஒரு உதாரணத்திற்கு சொல்கிறேன். கிட்டத்தட்ட 250 கே.வி. திறன் கொண்ட புதிய மின் மாற்றிகள் 24 எண்ணிக்கைகளை இன்றைக்கு எங்கள் பகுதியிலே 20 இலட்சத்திற்கும் மேலாக செலவு செய்து மாற்றி கொடுத்திருக்கிறார்கள். அதுபோல, 100 கே.வி. திறன் கொண்ட மின் மாற்றிகள் கிட்டத்தட்ட 36 எண்ணிக்கையிலே 16 இலட்சத்து 54 ஆயிரத்திற்கும் மேற்பட்ட செலவோடு இந்த ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய நல்லாசியோடு அமைக்கப்பட இருக்கிறது. அதுபோல 100 கே.விக்கு பதிலாக 250 கே.வி. திறன் கொண்ட மின் மாற்றிகளை மாற்றித் தரவேண்டும் என்ற உயர்ந்த அந்த திட்டத்தோடு கிட்டத்தட்ட 6 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய் செலவினை ஒரு தொகுதிக்கே செலவழிக்க இருக்கிறார்கள் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதைப்போலவே தமிழகம் பூராவும் இப்படிப்பட்ட திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. 20, 25 ஆண்டுகளில் சாதிக்கப்பட வேண்டிய சாதனைகளை இந்த ஆட்சியிலே 4 ஆண்டுகளிலே முழுமையாக சாதித்துக் கொண்டிருக்கிறோம் என்றால் அந்தச் சாதனையின் தலைவி தான் ஒப்புயர்வற்றத் தலைவி புரட்சித் தலைவியாக விளங்கிக் கொண்டு இருக்கிறார்கள். 33 கிலோவாட் கேபிள்களை நிலத்தடியிலே பதிக்க வேண்டும் என்று கிட்டத்தட்ட 61 இலட்சம் ரூபாய் செலவிலே பணிகள் முடித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. துணைமின் நிலையங்களை சீரமைப்பதற்காக 4 இலட்சத்திலே அந்தப் பணிகளை முடித்துக் கொடுத்திருக்கிறார்கள். இப்படி பல்வேறு திட்டங்களை அதாவது ஒருமுனை துணை அழுத்த மின் பாதையை மும்முறை துணை அழுத்த மின் பாதையாக மாற்ற வேண்டும் என்று அந்த செப்புக் கம்பிகளை

எல்லாம் சீரானமுறையிலே அமைப்பதற்காக 11 இலட்சம் ரூபாயிலே காரியங்களை செய்து கொடுத்திருக்கிறார்கள். மின் கேபிள்களை முழுமையாக மாற்றி பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார்கள். நான் இவைகளையெல்லாம் இங்கு சொல்வதற்குக் காரணம் எங்களுடைய தங்கத் தலைவி புரட்சித் தலைவிக்கு, அந்தத் தங்கத் தலைவியினுடைய அமைச்சரவையிலே ஈடுபட்டு மிகச் சிறந்தமுறையில் மின்சாரத்தை திறம்பட செயல்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய எங்களுடைய அமைச்சருக்கும் நான் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். புரட்சித் தலைவி ஆட்சியிலே இங்கே வந்து பலர் கணக்குகளைப் பற்றி சொன்னார்கள். ஆடிட் ரெக்கன்சிலியேஷன் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். ஆடிட் ரெக்கன்சிலியேஷன் என்று சொன்னால் பல்வேறு ஆண்டுகளிலே செய்கிற பணியை இன்றைக்கே செய்ய வேண்டும் என்று நினைத்து சொல்கிறார்கள். கிட்டத்தட்ட 1977-ஆம் ஆண்டிலிருந்து இந்த மின்சாரத் துறையினுடைய ஆடிட் ரெக்கன்சிலியேஷன் எப்படி வந்து கொண்டு இருக்கிறதோ அந்தத் தொடர்ச்சிதான் இன்றைக்கு நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோமே தவிர, தவறு என்று சொல்லவில்லை.

பிற்பகல் 2-10

அவர்கள் அந்த ஸ்டேட்மென்ட் என்ன என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு விளக்கத்தை இன்றைக்கு நம்முடைய துறை கொடுக்கிறதென்று சொன்னால், இந்த ஆட்சி கொடுக்கிறதென்று சொன்னால், அதற்கு ஒப்புதல் அளித்து கம்ப்ட்ரோலர் & ஆடிட்டர் ஜெனரல் அவர்கள் அதை ஏற்றுக் கொள்கிறார்கள். அதனைப் பார்க்கிறார்கள். ஒரு ஹெட் ஆஃப் அக்கவுன்டிலிருந்து வேறொரு ஹெட் ஆஃப் அக்கவுன்டுக்கு எழுதப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் திருத்தி, சரியான தலைப்புக்குக் கொண்டு வந்ததற்குப் பிறகு, அதனுடைய நிலைமை மிகச் சரியாக இருக்கிறது என்று அவர்கள் சர்ட்டிபிகேட் கொடுக்கிறார்கள். எனவே பல்வேறு ஆண்டுகளாக இருக்கும் பல்வேறு பிரச்சினைகளைச் சொல்லி, இன்றைக்கு திடீரென்று ஒன்றைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்குப் பல்வேறு சுகர் பேக்டரிகளில் இருக்கும் கரும்புச் சக்கைகளைக் கொண்டு மின்சாரம் தயாரிக்க வேண்டுமென்ற உயர்ந்த எண்ணத்தை இந்த ஆட்சி கொண்டிருக்கிற காரணத்தால்தான், பல்வேறு சுகர் பேக்டரிகளில்

மின்சாரம் தயாரிக்கும் ஒரு பாங்கினை நாம் பெற்றிருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், என்னுடைய கும்பகோணம் தொகுதியிலே, கும்பகோணம் நகரத்திற்கு மட்டும் 16 மெகாவாட் மின்சாரம் தேவைப்படுகிறது. திருமண்டடங்குடி சுகர் பேக்டரி மூலமாகப் பணிகள் தொடங்கப்பட்டு, அந்தப் பணிகள் நிறைவேற்றப்பட்டு, அந்தப் பணிகள் முடிக்கப்பட்டு அது துவக்கப்படும் நிலையிலே, இன்னும் நான்கு நாட்களிலோ அல்லது ஒரு வாரத்திலோ அதை துவக்கக்கூடிய நிலையை மின்சாரத் துறை செய்திருக்கிறது. அதன்மூலம் 16.8 மெகாவாட் மின்சாரம் இந்த நாட்டிற்குக் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அதைப்போல தமிழகம் பூராவும் இருக்கும் சுகர் பேக்டரிகள் மூலமாக 187.57 மெகாவாட் மின்சாரம் நமக்குக் கிடைக்கும் மிகச் சிறந்த வாய்ப்புகள் பெறப்பட்டிருக்கிற நிலையிலேதான், கோத்தாரி சுகர்ஸ் ஆகட்டும், திருமண்டடங்குடி சுகர்ஸ் ஆகட்டும், ஆரூரான் சுகர்ஸ் ஆகட்டும், லால்குடியிலே இருக்கிற தரணி சுகர்ஸ் ஆகட்டும், இவர்கள் எல்லாம் இணைந்து, பல்வேறு நிலைகளிலே பக்குவப்பட்டு, மிகச் சிறந்த முறையிலே பணிகளை நிறைவேற்றிக் கொடுத்து, அந்த மின்சாரம் முழுவதுமாகக் கிடைக்கின்ற அளவுக்குச் செய்திருக்கிறார்கள் என்று சொன்னால், நம்முடைய தாய்க்கு, நம்முடைய தங்கத் தலைவிக்கு தமிழக மக்களின் சார்பாக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மணி அடிக்கப்பெற்றது)*

அடுத்து, என்னுடைய தொகுதியில், தாராசுரத்தில் 230 கே.வி. சப்-ஸ்டேஷன் நிறுவ வேண்டுமென்று ஒரு கோரிக்கை அனுப்பப்பட்டு, அது வந்து கொண்டிருக்கிறது. எனவே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அந்தக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல பட்டீஸ்வரம், திருவலஞ்சுழி, சோழபுரம், மாத்தூர் போன்ற பகுதிகளில் புதிதாக டிரான்ஸ்பார்மர்கள் போட வேண்டுமென்ற கோரிக்கை வைத்திருக்கிறார்கள். எனவே அப்படிப்பட்ட கோரிக்கைகளை நீங்கள் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று நம்முடைய தங்கத் தலைவி பாதம் தொட்டு என்னுடைய வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மன்னார்குடியைப் பொறுத்தவரையில் ஒரு மிகச் சிறந்த சப்-ஸ்டேஷனை அனுமதித்து, அதனைத் தொடக்கி வைத்து, அதனை முடித்து வைத்து, அதன் முழுமையான பயனை அந்த மக்கள் துய்த்து

கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், இன்றைக்கு செயல்படுகின்ற ஆட்சி, செய்துகொண்டிருக்கிற ஆட்சி, செய்து முடிக்கின்ற ஆட்சி நம்முடைய தங்கத் தலைவி அவர்களின் ஆட்சிதான் என்பதை இன்றைக்கு அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த அளவிலே மின்சாரத் துறையைப் பொறுத்தவரையில் பல்வேறு நல்ல திட்டங்களை உருவாக்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும். (குறுக்கீடு) திரு. இராம. இராமநாதன். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. இராம. இராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய முக்கியமான கோரிக்கையாக, கும்பகோணத்தைப் பொறுத்தவரையில் ஒரேயொரு கோரிக்கையை வைத்து, இந்த வாய்ப்புக்கு நன்றி சொல்லி, அமைய விரும்புகிறேன். நம்முடைய பொதுப் பணித் துறை மூலம் கும்பகோணத்தில் உள்ள உள்ளூர், பழவாந்தாங்கட்டளை, தேப்பெருமாநல்லூர், எள்ளுக்குட்டை ஆகிய 4 வாய்க்கால்கள் சீரமைக்காத சூழ்நிலையிலே, கும்பகோணமே மூழ்கும் சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் அதிலே தனிக் கவனம் எடுத்து, அதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டு, இன்றைக்கு 27, 28 வருடங்களாக இருக்கும் பிரச்சினை ஆழியநார் வாய்க்கால் பிரச்சினை.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், வாய்க்கால் வரப்பு பற்றி எல்லாம் இன்னொரு வாய்ப்பில் பேசுங்கள். திரு எச்.எம். ராஜு.

பிற்பகல் 2-15

***திரு எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் 1995-96ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே என்னைப் பேச அழைத்ததற்கு நன்றியைக் கூறி, என்னுடைய ஒருசில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நீலகிரி மாவட்டத்தில் உதகையில் எஸ்.இ. (S.E.) அலுவலகத்திற்கு உடனடியாக புதிய கட்டிடத்தை நமது அரசு கட்டித்தரவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குன்னூர் டிவிஷனில் உள்ள வருவாய்த் துறை யூனிட் கட்டிடம் ஒரு வாடகைக் கட்டிடத்தில்தான் செயல்பட்டுக் கொண்டிருந்தது. 1-10-1995 அன்று இந்தக்கட்டிடம் தீப்பற்றி எரிந்து விட்டதால், அங்கே அந்த அலுவலகம் தற்போது

சரிவர செயல்படமுடியாமல் இருக்கிறது. ஆகவே, மின்சார வாரியத்திற்குச் சொந்தமான நிலத்திலேயே ஒரு புதிய கட்டிடத்தை நமது அரசு கட்டித் தரவேண்டுமென்ற ஒரு கோரிக்கையை இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உதகை நகருக்கு அனுமதி அளித்த 110 கே.வி. சப்ஸ்டேனுக்கு, வனத்துறையின் அங்கீகாரம் பெறப்படவேண்டும். அதற்காக மத்திய சர்க்காருக்கு நமது அரசு ஒரு பரிந்துரையை உடனடியாகச் செய்தால், உதகை நகர மக்களுக்கு 110 கே.வி. சப்ஸ்டேஷன் நல்லவகையிலே பயன்படும் என்ற ஒரு கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் வட்டம் அதிகரெட்டியில் துணை மின் நிலையத்திற்கு நிலம் ஸ்வாதீனம் எடுக்கப்பட்டுள்ளது. அதற்காக அரசு 2 கோடியே 12 லட்சம் ரூபாயை அனுமதி அளித்துள்ளது. அந்தப் பகுதி மக்களுக்கெல்லாம் குறைந்த சக்தி மின் அழுத்தம் நீக்கப்பட வேண்டுமானால், தயவு செய்து துணை மின் நிலையத்தை இந்த ஆண்டிலேயே–முக்கியமான இந்தக் கோரிக்கைக்கு முன்னுரிமை அளித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதி மக்களுக்கு இந்த துணை மின் நிலையத்தை ஆரம்பித்து வைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் நீலகிரி மாவட்டத்தில் உள்ள எஸ்.ஈ. சர்க்கிள் அலுவலகத்தில் 50 சதவீதத்திற்கு மேல் பணியாளர்கள் இடம் காலியாக இருப்பதால் வேலை சரிவர நடக்கவில்லை. தயவுசெய்து இந்த நிதியாண்டில் மீதமுள்ள பணியாளர்கள் இடத்தைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். மேலும் நீலகிரி மாவட்டத்தில், உதகை, குன்னூர், கோத்தகிரி, கூடலூர் ஆகிய நான்கு டிவிஷன்களிலும், மின்சாரப் பணியாளர்களுக்கும் அதிகாரிகளுக்கும் தனியாகக் குடியிருப்பு இல்லாமல் மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த நான்கு டிவிஷன்களிலும் உடனடியாகக் குடியிருப்புகள் கட்ட ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் 250 கே.வி.ஏ./11 கே.வி.யும், 100 கே.வி.ஏ./11கே.வி.யும் ஒவ்வொன்றுக்கும் 25 வீதம் 50 உயர்தர டிரான்ஸ்பார்மர்கள் தேவைப்படுகின்றன. தயவுசெய்து இரண்டு மாதத்திற்குள் இந்த டிரான்ஸ்பார்மர்களைக் கொடுத்தால் அது நமது மாவட்டத்தில் உள்ள முக்கியப் பகுதிகளுக்கு உபயோகப்படும். தயவுசெய்து நீங்கள் அதை

உடனடியாக தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உதகை, குன்னூர் டிவிஷன்களுக்கு முன்பு இருந்ததைப்போல, பத்து பேர் கொண்ட மின் பணியாளர்கள் (காங்க் பர்சன்ஸ்) பிரேக் டவுன் வேனுடன் அந்தந்த அலுவலகத்தில் இருந்தால், மலைப் பகுதியான நமது மாவட்டத்திற்கு இது மிகவும் உதவியாக இருக்கும் என்ற ஒரு கருத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதுவரையிலும் எங்களுடைய மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்திற்கு 30 பணியாளர்களுக்கு மட்டும் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அனேகமாக அங்கே மேலும் 100 பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. ஆகவே தயவுசெய்து இந்த மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் நல்லவகையில் செயல்பட வேண்டுமானால் மீதமுள்ள 100 பணியிடங்களையும் உடனடியாக பூர்த்தி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜு அவர்கள் சில கோரிக்கைகளை வைத்தார்கள். நம்முடைய ஆட்சிக் காலத்திலேதான், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வந்ததற்குப் பின்னர்தான் கோவை மின் வட்டத்தை இரண்டாகப் பிரித்து நீலகரி மாவட்டத்திற்கு சர்க்கிள் தந்தோம். அலுவலகத்திற்கு உரிய அலுவலர்களையும் பணியாளர்களையும் தந்திருக்கிறோம். அங்கே சில பேர் வேலைக்குப் போக மறுக்கிறார்கள். அதனால்தான் இந்தப் பிரச்சினை. இருந்தாலும் நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், அங்கே மின்சாரப் பற்றாக்குறை இருக்கக்கூடாது என்று சொல்லி, ஊட்டி, குன்னூர் போன்ற பகுதிகளிலே பலகோடி செலவிலே துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று உத்தரவிட்டார்கள்.

உதகை நகரில் சப்ஸ்டேஷனுக்கு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யவேண்டுமென்று சொன்னார்கள். நாங்கள் முன்பே சென்ட்ரல் பாரஸ்ட் டிபார்ட்மெண்ட்டுக்கு எழுதியிருக்கிறோம். அவர்கள் அனுமதி கொடுத்தால் உடனடியாக வேலை செய்யத் தயாராக இருக்கிறோம். உடனடியாக கிளியரன்ஸ் தேவை என்று எழுதியிருக்கிறோம். அனுமதி

அளித்தால் ஊட்டியில் நாளைக்கே வேலை செய்யத் தயாராக இருக்கிறோம். எல்லா சாதனங்களையும் தயாராக வைத்திருக்கிறோம். ஊட்டியில் துணை மின் நிலையம் வரவேண்டுமென்றுதான் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதைப்போல, குன்னூரிலும் இந்த ஆண்டு பணி தொடங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறோம். மலைப் பகுதிகளைப் பொறுத்தமட்டில் அவர்கள் சொன்ன யோசனை நல்ல யோசனை. ஒரு வேனிலே லேபர் வைத்து உடனடியாக பியூஸ் கால் அட்டென்ஷனைப் பார்க்கிற அளவுக்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று ஆய்வு செய்யச் சொல்லியிருக்கிறோம். உடனடியாக அந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். பணியாளர்களைப் பொறுத்தமட்டிலே, அங்கே பணியாளர்களைப் போட்டால் கூட, சில பேர் அங்கே போக மறுக்கிறார்கள். அதனால்தான் கால தாமதமே தவிர, மற்றபடி எப்படியிருந்தாலும் இன்னும் ஒரு மாத காலத்திற்குள் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எச்.எம். ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், எஸ்.ஈ. அலுவலகம் நீலகிரி மாவட்டத்திற்கு வந்ததற்குப் பிறகு, கோத்தகிரியிலும், கூடலூரிலும் புதியதாக டிவிஷன் அலுவலகங்கள் தேவைப்படுகின்றன. இப்போது எங்களுக்கு குன்னூர், ஊட்டி ஆகிய இரண்டு இடங்களில்தான் டிவிஷன் அலுவலகங்கள் இருக்கின்றன. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கோத்தகிரிக்கும், கூடலூருக்கும் புதிய டிவிஷன் அலுவலகங்களுக்கு அனுமதி கொடுத்தால், நான்கு டிவிஷன்களாகிவிடும். எல்லா ஏற்பாடுகளையும் செய்ய உதவியாக இருக்கும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மலைப் பகுதியிலுள்ள அரசு ஊழியர்களுக்கு புதியதாக ஹில் அலவன்ஸை நமது அரசு அறிவித்திருக்கிறது. மின்சாரத் துறை பணியாளர்களுக்கும் இந்த ஹில் அலவன்ஸ் திட்டத்தை விஸ்தரிக்கவேண்டும் என்ற கோரிக்கையை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், நீலகிரி மாவட்டத்திலுள்ள மின்சார வாரியத்தினுடைய பழைய வண்டிகள் சுமார் 4 லாரிகளும், 7 ஜீப்புகளும் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த வண்டிகளை மாற்றியமைத்து புதிய வண்டிகள் கொடுத்து உதவினால் மின்சாரத் துறை இன்னும் நல்லவகையில் செயல்படும் என்ற கருத்தைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 2-20

நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் மின்சாரம் உற்பத்தியான பிறகு வீணாகச் செல்லும் தண்ணீர் மூலமாக மேலும் 2 அல்லது 3 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் நிலையில் நாம் இருக்கிறோம். ஆகவே, தயவு செய்து, அந்த வீணாகும் தண்ணீரின் மூலமாக மாண்புமிகு அமைச்சர் மனது வைத்து அனுமதி அளித்தால் கண்டிப்பாக இன்னும் 2, 3 மெகாவாட் மின்சாரம் அதிகமாக தயாரிக்கலாம் என்ற கருத்தை சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு சிறு புனல் மின் திட்டங்களுக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒப்புதல் தந்திருக்கிறார்கள். அந்தந்த பகுதிகளில் குறைந்த அளவிலே மின்சாரம் உற்பத்தி செய்தாலும்கூட புனல் மின் திட்டங்களை உற்பத்தி செய்யலாம் என்று யோசனை தெரிவிக்கப்பட்டு, அது இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது. அதற்குரிய திட்டங்களை எல்லாம் நாம் கேட்டிருக்கிறோம். சிறிய சிறிய புனல் மின் திட்டங்களை கொண்டு வர இருக்கிறோம். அதற்கு அனுமதி வழங்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குந்தா-மஞ்சூரில் 110/22 கே.வி. சப்-ஸ்டேஷனுக்கு தயவுசெய்து எங்களுக்கு 10 எம்.வி.ஏ./11கே.வி. ட்ரான்ஸ்பார்மர் கொடுத்து உதவினால் சிறப்பாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

மலைப் பிரதேசங்களில் மின் பணியாளர்கள் கஷ்டப்பட்டு பணி செய்து கொண்டிருக்கிறார்கள். மழை காலங்களில் மின்சாரம் எந்த இடத்தில் தடைப்பட்டாலும் அவர்கள் பணி செய்ய வேண்டிய நிலை இருப்பதால் அவர்களுக்கு ஏற்கெனவே என்னென்ன சலுகைகள் நீலகிரி மாவட்டத்தில் மின் பணியாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளதோ, மேலும் புதிய சலுகைகளை அளிக்க முடியுமோ அவைகளை எல்லாம் நீங்கள் கண்டிப்பாக செய்து கொடுத்தால் நீலகிரி மாவட்டத்தில் மின்சாரத் துறை இன்னும் சிறப்பாகச் செயல்படும். எனவே நான் ஏற்கெனவே சொன்னதைப்போல மின் பணியாளர்கள் சிறப்பான வகையில் பணி செய்ய வேண்டுமென்றால் அவர்களுக்கு எல்லா

வசதிகளையும் சலுகைகளையும் நீங்கள் விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் மழை காலங்களில் மின் பணியாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு நமது அரசு முக்கியமாக உல்லன் வகை துணிகளாகக் கொடுப்பதோடு மேலும் அவர்களுக்கு ரெயின் கோட், ஓவர் கோட் போன்றவைகள் எல்லாம் கொடுத்து, அவர்களுக்கு என்னென்ன புதிய வசதிகளை எல்லாம் செய்து கொடுக்க வேண்டுமோ அவற்றை செய்து கொடுத்து, மேலும் மின்சாரத் துறையில் நீலகிரி மாவட்டம் சிறப்பாக விளங்க மேலும் உதவிகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டு, எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு மீண்டும் நன்றியைச் சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன். வாழ்க பாரதம், வளர்க பாரதம், ஜெய் ஹிந்துஸ்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 6-11-1995 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 2.22 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

39. 1993-94 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் வாணிபக் கழகத்தின் ஒன்பதாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம்) 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

40. 1993-94 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆண்டுக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை (1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது. (தமிழ், ஆங்கிலம்).

வசதிகளையும் சலுகைகளையும் நீங்கள் விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் மழை காலங்களில் மின் பணியாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு நமது அரசு முக்கியமாக உல்லன் வகை துணிகளாகக் கொடுப்பதோடு மேலும் அவர்களுக்கு ரெயின் கோட், ஓவர் கோட் போன்றவைகள் எல்லாம் கொடுத்து, அவர்களுக்கு என்னென்ன புதிய வசதிகளை எல்லாம் செய்து கொடுக்க வேண்டுமோ அவற்றை செய்து கொடுத்து, மேலும் மின்சாரத் துறையில் நீலகிரி மாவட்டம் சிறப்பாக விளங்க மேலும் உதவிகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டு, எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு மீண்டும் நன்றியைச் சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன். வாழ்க பாரதம், வளர்க பாரதம், ஜெய் ஹிந்துஸ்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 6-11-1995 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.22 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

39. 1993-94 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் வாணிபக் கழகத்தின் ஒன்பதாவது ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம்) 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது) (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

40. 1993-94 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆண்டுக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை (1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது. (தமிழ், ஆங்கிலம்).

[*1995* நவம்பர் *3*

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*7. 1993–94* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில பொதுத் துறை நிறுவனங்கள் பற்றிய ஆய்வுரை (ஆங்கிலம்).

*8.* தமிழ்நாடு மின் வாரியத்தின் *1995–96*ஆம் ஆண்டிற்கான நிதிநிலை விவர அ‌றிக்கை மற்றும் *1994–95* ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விவாதங்களைத் தொடங்கி வைத்து மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன் அவர்கள் ஆற்றும் உரை.

*9.* அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பதாவது அறிக்கை, *1995–96.*

*10.* உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் (பட்டியல் *1* முதல் *15* வரை) (பட்டியல்கள் *1* முதல் *13* வரை–வரிசை எண் *1* முதல் *100;* பட்டியல்கள் *14* மற்றும் *15*–வரிசை எண் *1* முதல் *50*).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# இணைப்பு-I

(976 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தமிழ்நாடு மின்வாரியத்தின் 1995-96ஆம் ஆண்டு நிதி நிலை விவர அறிக்கை, 1994-95ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு ஆகியவற்றின் மீதான விவாதங்களைத் தொடங்கி வைத்து மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள் ஆற்றும் உரை.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே,

1. சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின்வாரியத்தின் 1995-96ஆம் ஆண்டு நிதிநிலை விவர அறிக்கையையும், 1994-95-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டினையும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென இம்மாமன்றத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

2. தமிழ்நாடு மின் வாரியம் 1948ஆம் ஆண்டு மின்சார (வழங்கல்) சட்டத்தின் 61-ஆம் பிரிவின் படி இந்நிதிநிலை விவர அறிக்கைகளை அரசுக்குப் பணிந்தனுப்பியுள்ளது. தமிழ்நாடு மின்வாரியத்தின் செயல்பாடு குறித்து மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை அரசும், மின்வாரியமும் உரியவாறு பரிசீலிக்கும்.

3. வளர்ச்சிக்கும், தொழில் மேம்பாட்டிற்கும் மின்சாரம் முக்கியமான இடுபொருளாக அமைவதோடு, அது ஒரு கிரியா ஊக்கியாகச் செயல்படுவதால், இம்மாநிலத்தை மின் தட்டுப்பாடு, அதன் காரணமான மின் வெட்டுகள், மின்சாரக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றிலிருந்து விடுவித்து மாநிலத்தின் மின் உற்பத்தியினைப் போதுமான அளவிற்கு மேம்படுத்த வேண்டியது தனது கடமை என்பதை மாநில அரசு நன்கு உணர்ந்துள்ளது. புனல், அனல் மின் உற்பத்தித் துறையில் பல தடைகளையும், இடர்பாடுகளையும் சந்திக்க வேண்டியிருந்தபோதிலும், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவியின் எழுச்சிமிகு தலைமையின் கீழ் திறமையுடனும், தொலை நோக்குடனும் மின் திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்துவதில், தமிழ்நாடு ஒரு முன்னணி மாநிலமாக உருவாகியுள்ளது. புனல் மின் ஆதாரங்களை முழுவதும் பயன்படுத்தி

விட்ட நிலையில், தற்போது அனல் மின் உற்பத்திக்கும், எரிவாயு, டீசல் எண்ணெய் ஆகியவற்றைப் பயன்படுத்தும் ஏனைய குறுகிய கால-மின் உற்பத்தி திட்டங்களுக்கும், மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. இம்மாநிலத்தில் மிகுந்த திறமையுடனும் சிக்கனமாகவும் மின் உற்பத்தியினை அதிகரிக்க மின் அனுப்புகை மின் பகிர்மானம் ஆகிய பணிகளின் ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்காக, 1948ஆம் ஆண்டு மின் (வழங்கல்) சட்டத்திற்கிணங்க, 1957-ஆம் ஆண்டில், தமிழ்நாடு மின்வாரியம் ஏற்படுத்தப்பட்டது. இம்மாநிலத்தின் மின் வழங்கல் நிலையினை மேம்படுத்துவதற்கான கொள்கைகள் குறித்து ஆழமாக விவாதிப்பதற்கும், கவனம் செலுத்தப்பட வேண்டிய கூர்ந்தாய்வு செய்யப்பட வேண்டிய பிரச்சினைகளை முன்நிலைப்படுத்தவும் மின்வாரியத்தின் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீதான தற்போதைய விவாதம் துணைபுரியமென்று நான் உறுதியாக நம்புகிறேன். நாம் செய்ய வேண்டியுள்ள பணிகளையும், எதிர்காலத் திட்டங்களையும் பற்றி மேலோட்டமாகக் குறிப்பிடும் முன்னர், இம்மாநிலத்திலுள்ள மின் வழங்கல் நிலை குறித்தும், மின் வாரியம் செயல்படும் விதம் குறித்தும் நான் சுருக்கமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

### மின்வழங்கல் நிலைமை

4. இந்த அரசு பொறுப்பேற்ற சமயத்தில், அதாவது 1991 ஜூன் திங்களில், உயரழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரை, மின் சக்தியைப் பயன்படுத்துவதில் 25% மின் வெட்டும், மின் தேவை அளவில் 30% வெட்டும் இருந்தது. நமது அன்பு கெழுமிய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக, நமது அனல் மின் நிலையங்களின் செயல்பாடு, குறிப்பிடத் தகுந்த அளவிக்கு முன்னேற்றம் கண்டது. நீர்த்தேக்கங்களில நீர் வரத்து பெருமளவுக்கு இருந்த காரணத்தால், உயரழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளுக்கான மின்வெட்டு படிப்படியாகக் குறைக்கப்பட்டு, 16-10-92ஆம் நாள் முதல் முற்றிலுமாக நீக்கப்பட்டுவிட்டது. மின் சுமை வரைகோட்டினை சமன் செய்யும் பொருட்டும், புனல்மின் உற்பத்தி நீர்த்தேக்கங்களில், நீரைச் சேமிக்கவும், 15-10-93ஆம் நாள் முதல் உச்ச நேர மின் பயன்பாட்டில் கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டதைத் தவிர, தற்போது மின் சக்தியைப் பயன்படுத்துவதிலும் மின் தேவையிலும் வெட்டு ஏதுமில்லை. மத்திய

*1995 நவம்பர் 3]*

மின் நிலையங்களின் மின் உற்பத்திப் பிரிவுகளில் கோளாறுகள் காரணமாக மின் உற்பத்தியளவு குறையும் நேரங்களிலெல்லாம், இயக்க அலை வேகத்தை 48.5 ஹெர்ட்ஸ் என்ற அளவில் பராமரிப்பதற்காகவும், மின் தேவையைச் சமாளிக்கவும், குறுகிய காலத்திற்கு மின் வழங்கல் நிறுத்தப்படுகிறது. மத்திய மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து நமது பங்கினைப் பெற அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. ஒட்டு மொத்த மின் உற்பத்தி நிலைமை மன நிறைவளிப்பதாகவே உள்ளது. எதிர்வரும் ஆண்டுகளிலும் மின்வெட்டு இல்லாத அளவிற்கு மின் சக்தி வழங்கிடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது.

5. 1994-95ஆம் ஆண்டில் நம் மாநிலத்தின் மின் பயன்பாட்டின் அளவு 13.64% என பெருமளவு உயர்ந்துள்ளது. இதே பயன்பாட்டு அளவு 1993-94-ஆம் ஆண்டில் 6.06% மட்டுமே அதிகரித்தது. மொத்தம் கிடைக்கக் கூடிய மின் சக்தியின் அளவு 29065 மில்லியன் யூனிட்டாக உயர்ந்தது. நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவியின் திறமையான வழி நடத்துதல், தலைமையின் காரணமாகவும், நீர்த்தேக்கங்களில் அபரிமிதமான நீர் வரத்து இருந்ததாலும், அனல் மின் நிலையங்களைத் திறம்படப் பயன்படுத்தியதாலும், புனல்மின் வளங்களைத் திறம்பட நிருவகித்ததாலும் இது சாத்தியமாயிற்று.

6. மேட்டூர் அணை நீங்கலாக, 19-10-95ஆம் நாள் நிலவரப்படி, ஏனைய நீர்த்தேக்கங்களிலிருந்த நீரின் அளவு 1548.27 மில்லியன் யூனிட்டாகும். சென்ற ஆண்டு, இதே நாளன்று இருப்பு 1843.90 மில்லியன் யூனிட்டாகும். 19-10-95ஆம் நாள் நிலவரப்படி மேட்டூர் அணை நீர்த்தேக்க அளவு 63.31 மில்லியன் யூனிட்டாகும். சென்ற ஆண்டு இதே நாளன்று இருப்பு 99.12 மில்லியன் யூனிட்டாகும். தென்மேற்குப் பருவமழை தொடங்கியபோது, ஆரம்ப காலத்தில் சாதகமாக இல்லை எனினும், 1995 ஆகஸ்டு திங்களில் மிதமிஞ்சிய நீர்வரத்து காரணமாக நீர்த்தேக்க அளவு இந்த அளவுக்கு உயர்ந்தது. இதைப் போன்றே, பருவமழை தொடங்கிய கால அளவில் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அளவு ஊக்கம் தருவதாக இல்லை. ஆனால் பின்னர் நன்கு மழை பெய்தது. தற்போதைய நீர் இருப்பையும், அனல் மின் நிலைய மேம்பட்ட செயல் முறையினையும், மத்திய மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து கிடைக்கும் மின் சக்தியையும் கொண்டு வரும் கோடைக்காலத் தேவைகளைச் சமாளிக்க முடியுமென்று நாம் திடமாக

நம்புகிறோம். மின் நிலைமை கூர்ந்து கவனித்து, கண்காணித்து வரப்பெற்று குறைதீர நடவடிக்கைகள் அவ்வப்போது எடுக்கப்பட்டு வருகின்றன.

7. பரம்பிக்குளம்-ஆழியாறு மின் திட்டத் தொகுதியிலுள்ள காடம்பாறை மின் வளாகம் 19-10-1990-ஆம் நாளன்று ஏற்பட்ட தீ விபத்தில் சேதமடைந்தது. பழுதுபார்க்கும் பணிகளை மேற்கொண்ட பின்னர் 3-2-1995-ஆம் நாளன்று 20.15 மணிக்கு III-ஆம் பிரிவு மின் கட்டமைப்புடன் சேர்த்து இயக்கி வைக்கப்பட்டது. இத்துடன், I, III, IV பிரிவுகள் முற்றிலும் பழுதுபார்க்கப்பட்டு மின் கட்டமைப்பு அலைவரிசை சாதகமாக இருக்கும்போது, நீரேற்று முறையில் மின் உற்பத்தி இயந்திரமாக இயக்கி வைக்கப்படுகிறது. இரண்டாவது பிரிவிற்கு புதைவடங்களைப் புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகிறது. 1996 ஜனவரிக்குள் இப்பணி முடிவடையும்.

பரம்பிக்குளம்-ஆழியாறு மின்திட்டத் தொகுதியிலுள்ள சோலையாறு மின் நிலையம் 1 இன் முதல் மின் உற்பத்திப் பிரிவு மின் உற்பத்தி இயந்திர அசையாப் பிரிவு (Stator) சுழலும் மின் கம்பி சுருள்களை (Rotor) காப்பிடப்பட்ட பின்னர் 14-8-1994-ஆம் நாளன்று மீண்டும் மின் உற்பத்தியைத் தொடங்கியது.

8. வடசென்னை அனல் மின் நிலையத்தின் 210 மெ.வா. திறன் கொண்ட இரண்டாம் பிரிவு, எண்ணெயைப் பயன்படுத்தி 27-3-95-ஆம் நாளன்று மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டது. நிலக்கரியைக் கையாளும் அமைப்புத் தொடர்பான பணிகள் முடிவடைந்தவுடன், 1995 நவம்பர் தொடக்கத்திலிருந்து நிலக்கரியை எரித்து இப்பிரிவு செயல்படத் தொடங்கும். நிலக்கரியினை எரித்து முதற்பிரிவு தன் வழக்கமான பணியை 8-8-1995-ஆம் நாள் முதல் தொடங்கியது. இம்மின் நிலையத்தின் மூன்றாம் பிரிவினை 1996 ஜனவரியில் மின் கட்டமைப்புடன் இணைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1995 நவம்பர் 3]

9. 19-10-1995-ஆம் நிலவரப்படி அனல் மின் நிலையங்களில் நிலக்கரி இருப்பு வருமாறு:

| | இருப்பு (இலடசம் டன்னில்) | நாட்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| தூத்துக்குடி | 0.28 | 1.6 |
| எண்ணூர் | 0.07 | 1.0 |
| மேட்டூர் | 0.20 | 1.4 |
| வடசென்னை | 0.16 | 4.7 |
| மொத்தம் | 0.71 | |

அனல் மின் நிலையங்களின் செயல்பாடு

மேட்டூர், தூத்துக்குடியிலுள்ள அனல் மின் நிலையங்களின் செயல்பாடு 1994-95-ஆம் ஆண்டில் மன நிறைவளிப்பதாக இருந்தது. முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் எண்ணூர் அனல் மின் நிலையத்தின் செயல்பாடும் மனநிறைவளிப்பதாக உள்ளது. மூன்று அனல் மின் நிலையங்களின் ஒட்டுமொத்தச் செயல்திறன் 68.41%. ஆனால், தேசிய சராசரி 61% மட்டும் ஆக இருந்தது. இது குறித்து நாம் ஒவ்வொருவரும் பெருமை கொள்ளலாம்.

11. 1993-94-ஆம் ஆண்டில் இந்திய அரசின் மெச்சத்தகு உற்பத்திப் பரிசினை ஏழாவது முறையாகப் பெற்ற தூத்துக்குடி அனல் மின் நிலையம் 1994-95 ஆம் ஆண்டிலும் இப்பரிசினைப் பெறத்தகுதி பெற்றுள்ளது என்பதனை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

12. மேட்டூர் அனல் மின் நிலையம் 1994-95-ஆம் ஆண்டில் 75.98% செயல்திறனை எட்டியது. இந்த மின் நிலையம் தொடர்ந்து இரண்டாவது முறையாக இந்திய அரசின் 1993-94-ஆம் ஆண்டிற்கான மெச்சத்தகு உற்பத்திப் பரிசினைப் பெற்றுள்ளது என்பதுடன் 1994-95-ஆம் ஆண்டிற்கு இதே பரிசினைப் பெறவும் தகுதி பெற்றுள்ளது.

13. மூன்று அனல் மின் நிலையங்களிலுமே குறிப்பிட்ட எரி எண்ணெய் நுகர்வு அளவு குறைக்கப்பட்டு இந்த அரிதான எண்ணெய்

சேமிக்கப்பட்டுள்ளது. *1993-94*-ஆம் ஆண்டிற்கான பரிசுத் தொகையினைப் பெற்ற தூத்துக்குடி அனல் மின் நிலையம், எண்ணூர் அனல் மின் நிலையம், மேட்டூர் அனல் மின் நிலையம் ஆகிய மூன்று அனல் மின் நிலையங்களுமே *1994-95*-ஆம் ஆண்டிற்கான பரிசுத் தொகையினைப் பெறவும் தகுதி பெற்றுள்ளன.

*14.* தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் துணை நுகர்வு அளவு *1991*-ஆம் ஆண்டிலிருந்த *8.1%* என்ற அளவில் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது. *1993*-ஆம் ஆண்டிற்கான குறைவான துணை நுகர்விற்கான பரிசினைப் பெற்ற இந்நிலையம், *1994*-ஆம் ஆண்டிற்கான குறை நுகர்விற்கான பரிசினைப் பெறவும் தகுதி பெற்றுள்ளது.

*15.* நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவியின் திறமையான வழி நடத்துதல், தலைமையின் காரணமாகவே மேற்குறிப்பிட்ட சாதனைகள் அனைத்தையும் எய்த முடிந்தது.

**மின் துறையில் எய்திய சாதனைகள்**

*16.* கட்டமைப்புத் தேவை அளவானது *24-2-1995* அன்று *4370* மெ.வா. என்ற உயரளவை எட்டியுள்ளது. மின் கட்டமைப்பின் அன்றாட மின் சக்தி பயனீட்டளவு *13-4-1995*-ஆம் நாளன்று எப்போதுமில்லாத உயரளவான *93.801* மி.யூ என்ற அளவை எட்டியது. இவை, மின் சக்தி தேவை அதிகரிப்பையும் அவற்றைத் திறம்பட சமாளிக்க நமக்குள்ள திறனையும் உணர்த்துகின்றன.

*17.* இவ்வரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னர், *1995* செப்டம்பர் இறுதிவரையில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு *648.02* மெ.வா அளவிற்கு மின் உற்பத்தித்திறன் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், *20.35* இலட்சம் புதிய மின் இணைப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

1995 நவம்பர் 3]

**மின் உற்பத்தித் திறன் (மெகாவாட்)**

| | |
|---|---|
| தூத்துக்குடி அனல் மின் நிலையம் பிரிவு 4 | 210.00 |
| வடசென்னை அனல் மின் திட்டம் நிலை-1, பிரிவு 1, 2 | 420.00 |
| நரிமணம் வாயுச் சுழலித் திட்டம் | 10.00 |
| புளியங்குளத்தில் காற்றாலைகள் | 1.50 |
| கயத்தாறு காற்றாலை விரிவாக்கம் | 1.55 |
| கயத்தாறு சாலையோர காற்றாலைகள் | 0.22 |
| கேத்தனூர் காற்றாலைகள் | 2.00 |
| மரவக்கண்டி புனல் மின் திட்டம் | 0.75 |
| பூனாச்சி புனல் மின் திட்டம் | 2.00 |
| மொத்தம் | 648.02 |
| புதிய மின் இணைப்புகள் (எண்ணிக்கை இலட்சத்தில்) | |
| வீட்டுப் பயன் | 12.86 |
| வணிகப்பயன் | 1.78 |
| தொழிற்சாலைப் பயன் | 0.66 |
| வேளாண் பயன் | 1.78 |
| குடிசைகள் பயனுக்காக | 2.88 |
| ஏனையவை | 0.39 |
| மொத்தம் | 20.35 |

18. இது தவிர, 404.67 மெகாவாட் திறனுடைய காற்றாலைகள் தனியார் துறையில் தொடங்கப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

## மின் உற்பத்தி மதிப்பீடும், மின் சக்தி தேவைகளை நிறைவு செய்வதற்கான கோட்பாடும்

19. மத்திய மின் ஆணைக்குழு நடத்திய 15-ஆவது மின்சார ஆய்வின்படி, 8, 9 மற்றும் 10-ஆவது திட்டக்கால இறுதியில், தமிழ்நாட்டின் உச்சத் தேவை மற்றும் மின் சக்தித் தேவை அளவுகள் பின்வருமாறு இருக்கும்.

| கால அளவு | உச்சத் தேவை அளவு (மெகாவாட்) | மின்சக்தித் தேவை அளவு (மில்லியன் யூனிட்) |
|---|---|---|
| 8ஆவது திட்டக்கால இறுதியில் | 5290 | 32375 |
| 9ஆவது திட்டக்கால இறுதியில் | 6943 | 42481 |
| 10ஆவது திட்டக்கால இறுதியில் | 8979 | 54917 |

20. மின் தேவை அளவு மற்றும் மின் சக்தி அளவு ஆகியவற்றின் மீது எவ்விதக் கட்டுப்பாடும் விதிக்காமல், எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மட்டுமல்லாது இனி வருகின்ற திட்டக் காலங்களிலும் மின் சக்தித் தேவையை நிறைவு செய்வதே நமது குறிக்கோளாகும்.

### கூடுதல் மின் உற்பத்தி திறன்

21. மின் சக்தியைத் திட்டமிடும் முறை, , பெரும்பாலும் நிலக்கரியை, பழுப்பு நிலக்கரியை மற்றும் எரிவாயுவைப் பயன்படுத்தி உற்பத்தி, செய்யப்படும் அனல் மின்சாரத்தையும், மரபுசாரா மின்சக்தி ஆதாரங்களின் பயன்பாட்டையும் பொறுத்துள்ளது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் எஞ்சிய கால கட்டத்தில், மின் உற்பத்தி நிறுவுத் திறனை மேலும் 645.50 மெ.வா. அதிகரிக்க கருதப்படுகிறது. இவற்றின் விவரங்கள் வருமாறு :--

| மாநிலத்துறை | நிறுவுதிறன் (மெகாவாட்) |
|---|---|
| வடசென்னை அனல் மின் திட்டம் 1, பிரிவு 3 | 210.0 |
| பேசின் பாலம் வாயுச் சுழலி மின் உற்பத்தித்திட்டம் | 120.0 |
| காற்றாலைப் பண்ணைகள் (தனியார் துறை உட்பட) | 300.0 |
| சாத்தனூர் புனல் மின் திட்டம் | 7.5 |
| கீழ் பவானி புனல் மின் திட்டம் | 8.0 |
| மொத்தம் | 645.5 |

*1995 நவம்பர் 3]*

இனி, நடைபெற்று வரும் மின் திட்டங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து நான் சுருக்கமாகக் குறிப்பிடுகிறேன்.

**வடசென்னை அனல் மின் திட்டம்**
**நிலை 1-630 மெகாவாட்**

22. இத்திட்டத்தின் முதல் நிலையில், செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள எண்ணூர் கிராமத்தில், ஒவ்வொன்றும் 210 மெகாவாட் மின் திறனுள்ள மொத்தத்தில் 630 மெகாவாட் திறன் கொண்ட 3 பிரிவுகளை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இம்மின் திட்டத்திற்குத் தேவைப்படும் நிலக்கரி, ஒரிசா மாநிலத்திலுள்ள கலிங்கா நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து பெறப்படுகிறது. இத்திட்டத்திற்கு, மொத்தம் ரூ. 1,405 கோடி செலவாகுமென தற்போது மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் நிலக்கரியைக் கையாளுவதற்கான வெளி அமைப்பின் செலவும் அடங்கும். முதல் பிரிவு 25-10-1994 அன்று 20.46 மணியளவிலும், இரண்டாவது பிரிவு 27-3-95 அன்று 17.48 மணியளவிலும் மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டன. மூன்றாவது பிரிவை நிறுவும் பணி முழு வேகத்தில் நடைபெற்று வருகிறது. 1996 ஜனவரியில் இப்பிரிவு மின் கட்டமைப்புடன் இணைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

23. ஆசிய வளர்ச்சி வங்கி இத்திட்டத்தின் முதல் நிலைப்பணிக்காக இரு கடன்களை வழங்கியுள்ளது. அக்கடன் தொகை 235.5 மில்லியன் அமெரிக்க டாலராகும்.

24. தனியார் துறையில் இத்திட்டம், இரண்டாம் கட்டத்தில் ஒவ்வொன்றும் 500 மெகாவாட் திறனுடைய இரு பிரிவுகளுடனும் மூன்றாம் கட்டத்தில் 500 மெகாவாட் திறனுடைய ஒரு பிரிவுடனும் விரிவுபடுத்தப்பட உள்ளது. இத்திட்டங்கள் ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் பயனளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**பேசின் பாலம் எரி வாயு சுழலி மின் உற்பத்தித் திட்டம்**
**120 மெகாவாட்**

25. இத்திட்டத்தின் கீழ், பேசின் பால மின் உற்பத்தி நிலையத்தில், ஒவ்வொன்றும் 30 மெகாவாட் திறனுடைய நான்கு எரிவாயு சுழலி மின் உற்பத்திப் பிரிவுகளை நிறுவக் கருதுகிறது. அண்மையில் மதிப்பிட்டபடி, இத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு ரூ. 429.40 கோடியாகும்.

[1995 நவம்பர் 3

இத்திட்டத்திற்கு அயல்நாட்டு பொருளாதார கூட்டுறவு நிதியம் 11,450 மில்லியன் யென் நிதியுதவி செய்கிறது.

26. முதல் இரண்டு பிரிவுகளுக்கு ஜப்பானிலுள்ள சுமிடோமோ கார்ப்பரேசனிடமும் மற்ற இரண்டு பிரிவுகளுக்கு பாரத கனமின் நிறுவனத்திடமும் தேவைக் குறிப்பு அளிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 31-1-1994 அன்று இதற்கான அடிக்கல்லை நாட்டினார். இத்திட்டப்பணிகள் முழு வேகத்தில் நடைபெற்று வருகின்றன. இப்பிரிவுகள் பின்வருமாறு செயல்படுத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளன :--

| | |
|---|---|
| பிரிவுகள் 1 மற்றும் 2 | 1995 நவம்பர் |
| பிரிவுகள் 3 மற்றும் 4 | 1995 டிசம்பர் |

27. இரு எரிவாயு சுழலி மின் உற்பத்தி எந்திரங்களிலிருந்து வெளியாகும் வாயுவின் வெப்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம வீணாகும் வெப்பத்தை ஈர்த்துக் கொள்ளும் கொதி கலனை (இது 30 மெகாவாட் திறனுடையது) நிறுவும் புதிய திட்டம் மொத்தம் ரூ. 4815 இலட்சம் செலவில் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

## புனல் மின் திட்டங்கள்

28. நான்கு புனல் மின் திட்டங்களில், அதாவது கீழ் பவானி வலது பக்கக் கரை கால்வாய் மின் திட்டம் (2 x 4 மெகாவாட்), சாத்தனூர் அணை புனல் மின் திட்டம் (1 x 7.5 மெகாவாட்), பைக்காரா இறுதிநிலைப் புனல் மின் திட்டம் (3x50 மெகாவாட்), பார்சன் பள்ளத்தாக்குப் புனல் மின் திட்டம் (1x30 மெகாவாட்) ஆகியவற்றில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கீழ் பவானி வலது பக்கக்கரை காலவாய்த் திட்டம், சாத்தனூர் புனல் மின் திட்டம் ஆகியவற்றுக்கு மின் உற்பத்தி இயந்திரங்களை வழங்குதல், நிறுவுதல், தொடங்குதல் ஆகியவற்றுக்கான தேவைக் குறிப்பு ஏற்கெனவே அளிக்கப்பட்டுள்ளது. இவ்விரு திட்டங்களும் 1996-97இல் செயல்படத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஏனைய இரு திட்டங்களின் பல்வேறு பணிகளுக்குத் தேவைப்படும் சாதனங்களுக்கு தேவைக்குறிப்பு அளித்தல், ஒப்பந்தங்களை அளித்தல் ஆகிய பணிகள் பல்வேறு நிலைகளிலுள்ளன.

1995 நவம்பர் 3]

29. பின்வரும் ஆறு சிறு நுண் புனல் மின் திட்டங்களை செயற்படுத்துவதற்காக வாரியம் அவற்றை எடுத்துக் கொள்ளக் கருதியுள்ளது.

| | |
|---|---|
| 1. அமராவதி சிறு புனல் திட்டம் | 2 x 2000 கி.வா. |
| 2. முக்குர்த்தி நுண் புனல் திட்டம் | 2 x 340 கி.வா |
| 3. ஆழியாறு நுண் புனல் மின் திட்டம் | 2 x 1250 கி.வா. |
| 4. திருமூர்த்தி நுண் புனல் மின் திட்டம் | 3 x 650 கி.வா. |
| 5. பெருஞ்சாணி நுண் புனல் மின் திட்டம் | 2 x 650 கி.வா. |
| 5. திருமூர்த்தி சமநிலைக் கால்வாய் புனல் மின் திட்டம் | 2 x 650 கி.வா. |

30. மேற்சொன்னவை தவிர, பின்வரும் புனல் மின் திட்டங்களையும் செயற்படுத்த மின்வாரியம் உத்தேசித்துள்ளது.

| | |
|---|---|
| 1. கொல்லிமலை புனல் மின் திட்டம் | 1 x 20 மெ.வா. |
| 2. மோயாறு இறுதி நிலைப் புனல் மின் திட்டம் (உச்ச மின் தேவை நிலையம்) | 1 x 50 மெ.வா. |

31. சிறு புனல் மின் திட்டங்களிலிருந்து மின் உற்பத்தி செய்வதற்காகும் செலவு, அதாவது ஒரு மணி நேரத்திற்கு ஒரு கிலோ வாட் மின் உற்பத்தி செய்ய ஆகும் செலவு. ரூ. 2.25க்கும் குறைவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1995-96 திருத்த ஆண்டுத் திட்டத்தில் மேற்சொன்ன சிறு நுண் புனல் மின் திட்டங்களுக்குத் தேவைப்படும் வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## எண்ணூர் துணைத் துறைமுகம்

32. வடசென்னை அனல் மின் திட்டத்திற்குத் தேவைப்படும் நிலக்கரி ஒரிசா மாநிலத்தில் தால்சர் பகுதியிலிருந்து கொண்டு வரப்பட வேண்டியுள்ளது. அந்நியச் செலவாணி ரூ. 307.58 கோடியுடன் ரூ. 593.90 கோடி செலவில் எண்ணூரில் துணைத் துறைமுகம் ஒன்றை அமைப்பதற்கு மத்திய அரசு ஒப்புதலளித்துள்ளது. ஆசிய வளர்ச்சி

வங்கி 150.15 மில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிக்க ஒப்புக் கொண்டுள்ளது. இத்துறைமுகம் கட்டுவதற்காக வாரியம் ஏற்கனவே கையகப்படுத்திய நிலத்தின் ஒரு பகுதி சென்னை துறைமுகப் பொறுப்பு கழகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. இத்துறைமுகம் கட்டிமுடிக்கப்பட்டவுடன் எண்ணூர், மேட்டூர் ஆகிய அனல் மின் நிலையங்களின் நிலக்கரித் தேவையையும் பூர்த்தி செய்யும். புதிய துறைமுகம் 1998-99க்குள் செயல்படத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்துறைமுகம் செயல்படத் தொடங்கும் வரை வட சென்னை அனல் மின் நிலையத்திற்குத் தேவைப்படும் நிலக்கரி சென்னைத் துறைமுகம் மூலம் இரயிலில் அனுப்பப்பட வேண்டியிருக்கும்.

33. வட சென்னை, எண்ணூர், மேட்டூர் ஆகிய அனல் மின் நிலையங்களுக்கு, எண்ணூர் துறைமுகத்திலிருந்து நிலக்கரியை அனுப்புவதற்கு ரூ. 194 கோடி செலவில் நிலக்கரியைக் கையாளும் அமைப்பு வகுக்கப்பட்டுள்ளது. இதற்கு ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவி அளிக்கிறது.

**காற்றுச் சக்தியிலிருந்து மின் சக்தியை உற்பத்தி செய்தல்**

34. தமிழ்நாடு மின் உற்பத்தி செய்வதற்கு ஏற்ற வகையில் பெருமளவு காற்று வளத்தைப் பெற்றுள்ளது. ஆரல்வாய்மொழிக் கணவாய் வழியாகக் காற்று வீசப் பெறும் கன்னியாகுமரி, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டங்களில் உள்ள பகுதிகளும், செங்கோட்டைக் கணவாய் வழியாகக் காற்று வீசப்பெறும் திருநெல்வேலி-கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்டங்களும், பாலக்காட்டுக் கணவாய் வழியாக காற்று வீசப் பெறும் திண்டுக்கல்-அண்ணா, கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களிலுள்ள பகுதிகளும், மின் உற்பத்திக்கு ஏற்ற காற்று வளத்தைப் பெற்றுள்ளன. தமிழ்நாட்டிலுள்ள காற்று வளத்தின் மூலம் குறைந்தது சுமார் 2000 மெ.வா. மின் சக்தி உற்பத்தி செய்ய முடியும் என்று மரபு சாரா எரிசக்தி ஆதார அமைச்சகம் மதிப்பிட்டுள்ளது.

35. இந்தியா முழுவதிலும் தமிழ்நாட்டில்தான் காற்று வளத்தைக் கொண்டு மின் உற்பத்தி செய்வது மிக அதிகமாக உள்ளது என்றும், காற்று வளத்தை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்காக தமிழ்நாடு தொடர்ந்து ஐந்தாவது முறையாக 1993-94 ஆம் ஆண்டுக்கும் மத்திய

*1995 நவம்பர் 3]*

அரசிடமிருந்து பாராட்டுப் பத்திரத்தைப் பெற்றுள்ளது என்றும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். 1-10-95 அன்றுள்ளபடி தமிழ்நாடு மின்சார வாரியம், மாநிலத்தில் நிறுவிய காற்றாலைத் திட்டங்களின் மொத்த திறனளவு 19.355 மெ.வாட் ஆகும்.

36. காற்று ஆதாரத்தின் மூலம் மின் சக்தி உற்பத்தி செய்வதற்குத் தனியார் துறைக்கு ஊக்கமும் விரிவான விளம்பரமும் அளிக்கப்பட்டுள்ளது. இன்றைய நிலவரப்படி, தனியார் காற்றாலைகளின் மொத்த எண்ணிக்கை 1588 ஆகும். அதன் மொத்த உற்பத்தித் திறன் அளவு 409.445 மெ.வா ஆகும். தனியார் தொழில் முனைவோர்க்கு உதவ, வாரியத்தில் ஆலோசனைப் பிரிவு ஒன்றும் செயல்படுகிறது.

37. 1995-96-இல் காற்றுச் சக்தியின் மூலம கூடுதலாக 300 மெ.வா உற்பத்தி செய்ய இலக்கிடப்பட்டதில், 154.09 மெ.வா. திறனுள்ள திட்டம் ஏற்கனவே செயல்படத் தொடங்கியுள்ளது. எஞ்சிய 146 மெ.வா. மின் சக்தி 1996 மார்ச் இறுதிக்குள் மாநில, தனியார் துறையில் உற்பத்தி செய்யப்படும். தனியார் துறையில் ஏற்படுத்தப்பட்ட காற்றாலைகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட உபரி மின் சக்தியை வாரியம் யூனிட் ஒன்று ரூ. 2.00 என்ற விலையில் வாங்கிக் கொள்கிறது.

## இணை மின் உற்பத்தி

38. சர்க்கரை ஆலைகளிலும், இரசாயனத் தொழிற்சாலைகளிலும் இணை மின் உற்பத்தி செய்வதற்கு நம்முடைய அரசு முக்கியத்துவம் அளிக்கிறது. சேத்தியாத் தோப்பில் 7.5 மெ.வா. திறனுள்ள இணை மின் உற்பத்தி தளவாடமும், செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 5 மெ.வா. திறனுள்ள இணை மின் உற்பத்தி தளவாடமும் ஏற்கனவே செயல்படத் தொடங்கியுள்ளன. அவை தமிழ்நாடு மின் கட்டமைப்புக்கு மின் சக்தியை அனுப்புகின்றன. இணை மின் உற்பத்தி மூலம் மின் சக்தி உற்பத்தி செய்வதில் தனியார் துறையை ஊக்குவிக்கும் பொருட்டு, இணை மின் உற்பத்தி செய்யும் சர்க்கரை ஆலைகள் மின் கட்டமைப்புக்கு அனுப்பும் உபரி மின் சக்தியின் கொள்முதல் விலை, 1-4-95-லிருந்து, யூனிட் ஒன்றுக்கு ரூ. 2.25 ஆகவும் (இரண்டு ரூபாய் இருபத்தி ஐந்து காசு மட்டும்) ஐந்தாண்டு காலத்திற்கு ஒவ்வோராண்டுக்கும் யூனிட் ஒன்று ரூ. 2.25 என்ற அடிப்படை விலைக்கு அதிகமாக 5% உயர்வுடனும்

திருத்தப்பட்டுள்ளது. இணை மின் உற்பத்தி செய்யும் இச்சர்க்கரை ஆலைகளுக்கு மின் உற்பத்தி வரியிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. மின் கட்டமைப்பு மூலம் ஏனைய நுகர்வோருக்கு மின் உற்பத்தியை விற்பனை செய்வதற்கு அவை அனுமதிக்கப்படுகின்றன. வருங்காலத்தில் 187.57 மெ. வா. திறனுள்ள இணை மின் உற்பத்தித் தளவாடங்களை நிறுவ மேலும் 12 சர்க்கரை ஆலைகள் முன் வந்துள்ளன.

### மின் உற்பத்தியில் தனியார் துறையின் பங்கு

39. மின் உற்பத்தி மூலதனம் தேவைப்படுகிறது என்பதையும், புதிதாக ஒரு மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தித் திட்டத்தை நிறுவ இன்றைய செலவு மதிப்பீடுகளின் அடிப்படையில் சராசரியாக ரூ. 3.0 கோடியிலிருந்து ரூ. 4.10 கோடி வரையில் முதலீடு தேவைப்படுகிறது என்பதையும், மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். இத்தகைய சூழ்நிலையில், பெருமளவு முதலீடு தேவைப்படுவதைக் கருதிப் பார்க்கையில், மின் உற்பத்தியில் தனியார் துறையை ஈடுபடச் செய்வது தவிர்க்க முடியாததாகிறது. மின் உற்பத்தித் துறையில் தனியார் நிறுவனங்களை ஈடுபடுத்துவதற்காக, நிதி, சட்ட விதிமுறைகளைத் தளர்த்தி, மத்திய அரசு 1991 செப்டம்பரில், 1910 ஆம் ஆண்டு இந்திய மின் சட்டத்தையும் 1948 ஆம் ஆண்டு மின் (வழங்கல்) சட்டத்தையும் திருத்தியது. மின் உற்பத்தியில் தனியார் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் பொருட்டு மத்திய மற்றும் மாநில அரசுகள் பல்வேறு ஊக்கத் திட்டங்களை அறிவித்துள்ளன. மேற்சொன்ன கொள்கையின் அடிப்படையில், மொத்தம் 10,650 மெ.வாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட பின்வரும் திட்டங்களை, கூட்டு/தனியார் துறைகள் மூலம் நிறைவேற்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்.

| திட்டம் | மின் உற்பத்தித் திறன் (மெகாவாட்) |
|---|---|
| **அனல் மின் திட்டம்** | |
| 1. நெய்வேலி அனல் மின் நிலையம் 2-ல் பழுப்பு நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்திப் பிரிவு. | 250 |

*1995 நவம்பர் 3]*

| | | |
|---|---|---|
| 2. | ஜெயங்கொண்டத்தில் பழுப்பு நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தித் திட்டம் | 1500 |
| 3. | திருமுட்டத்தில் பழுப்பு நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட அனல் மின் உற்பத்தி நிலையம் | 250 |
| 4. | கடலூரில் நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட அனல் மின் திட்டம் | 1320 |
| 5. | வடசென்னை அனல் மின் உற்பத்தித் திட்டத்தில் நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட அனல் மின் நிலையம் (நிலை 2) | 1000 |
| 6. | வட சென்னை அனல் மின் உற்பத்தித் திட்டத்தில் நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட அனல் மின் நிலையம் (நிலை 3) | 500 |
| 7. | தூத்துக்குடி நிலை 4 இல் நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட அனல் மின் நிலையம் | 500 |

### எரிவாயு மின் திட்டம்

| | | |
|---|---|---|
| 1. | பிள்ளைப் பெருமாள் நல்லூரில் எரிவாயு சுழலி மின் உற்பத்தித் திட்டம் | 300 |
| 2. | வெம்பார் எரிவாயு சுழலி மின் உற்பத்தித் திட்டம் | 2000 |
| 3. | கும்மிடிப்பூண்டி எரிவாயு சுழலி மின் உற்பத்தித் திட்டம் | 1000 |

### டீசல் மின் திட்டம்

| | | |
|---|---|---|
| 1. | சமயநல்லூரில் டீசல் என்ஜின் மின் உற்பத்தி நிலையம் | 100 |
| 2. | பேசின் பாலம் டீசல் என்ஜின் மின் உற்பத்தி நிலையம் | 200 |
| 3. | சாமல்பட்டி டீசல் என்ஜின் மின் உற்பத்தி நிலையம் | 100 |

**புனல் மின் திட்டம்**

| | | |
|---|---|---|
| 1. | பெரியாறு-வைகை குறுக்கணை புனல் மின் திட்டம் | 10 |

**கடல் வெப்ப ஆற்றல் மின் திட்டம்**

| | | |
|---|---|---|
| 1. | குலசேகரப்பட்டினத்தில், சூரிய வெப்ப அடிப்படையிலான மின் திட்டம் (OTEC) | 100 |

**பல்வகை**

| | | |
|---|---|---|
| 1. | 6 x 120 மெ.வா. + 4 x 200 மெ.வா. மின் நிலையத்தை ஹாங்காங்கிலிருந்து மாற்றி தமிழ்நாட்டில் அமைத்தல் | 1520 |
| | மொத்தம் | 10650 |

40. தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொண்டவாறான, நெய்வேலி அனல் மின் நிலையம் 2 இல் பழுப்பு நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்திப் பிரிவு தொழில் முனைவோருக்கும், தமிழ்நாடு மின் வாரியத்திற்குமிடையே கையொப்பமிடப்பட்ட மின் கொள்முதல் ஒப்பந்தம் (PPA) மேல் உத்தரவாதம் வழங்க ஏற்பாடு செய்வதற்காக மத்திய அரசு மின் அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டது. மத்திய அரசு, மின் அமைச்சகம், பொருளாதார விவகாரங்கள் துறை தெரிவித்த கருத்துத் திருத்தங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. இவ்வொப்பந்தம் மேல் உத்திரவாதம் வழங்குவதற்காக மத்திய அரசிடம் மறுபடியும் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

41. மேலும், நெய்வேலி அனல் மின் நிலையம் 2இல் பழுப்பு நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட மின் நிலையத்தின் தொழில் முனைவோருக்காகக் கருத்துத் தெரிவிக்கப்பட்ட திருத்தங்களின் அடிப்படையில், பிள்ளைப் பெருமாள் நல்லூர் எரிவாயு சுழலி மின் திட்டத் தொழில் முனைவோருடன் ஏற்கனவே செய்து கொள்ளப்பட்ட மின் கொள்முதல் ஒப்பந்தத்தில் சில மாற்றங்கள் செய்ய வேண்டுமென அரசு விரும்பியதால், தமிழ்நாடு மின் வாரியம், இந்தத் தொழில் முனைவோருடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. மின் கொள்முதல் ஒப்பந்தம் விரைவில் கையொப்பமிடப்படவுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

*42.* பின்வரும் திட்டங்களுக்கு, மத்திய மின் அதிகார மன்றம் கொள்கை அளவில் இசைவளித்துள்ளது.

*1.* பேசின் பாலம் டீசல் என்ஜின் மின் உற்பத்தி நிலையம்

*2.* சமயநல்லூர் டீசல் என்ஜின் மின் உற்பத்தி நிலையம்.

*3.* வடசென்னை அனல் மின் உற்பத்தி நிலையம் நிலை 2

*43.* தற்போது தமிழ்நாடு மின் வாரியம், பின்வரும் திட்டங்களுக்காக, தொழில் முனைவோர்களுடன், மின் கொள்முதல் ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

*1.* பேசின் பாலம் டீசல் என்ஜின் மின் உற்பத்தி நிலையம்

*2.* சமயநல்லூர் டீசல் என்ஜின் மின் உற்பத்தி நிலையம்

*3.* வட சென்னை அனல் மின் உற்பத்தி நிலையம் நிலை 2

*4.* வடசென்னை அனல் மின் உற்பத்தி நிலையம் நிலை 3

மின் கொள்முதல் ஒப்பந்தங்கள் விரைவில் முடிவு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றன.

புதிய மத்தியத்துறை மின் திட்டங்கள்

*44.* நெய்வேலி அனல் மின் நிலையம் 1ல் ஒவ்வொன்றும் 210 மெ.வா. திறன் கொண்ட 2 உற்பத்தி பிரிவுகளைத் தொடங்கி விரிவுபடுத்தும் பணியை மேற்கொள்ள மத்திய மின் அதிகார மன்றம், தொழில்நுட்ப பொருளாதார இசைவை வழங்கியுள்ளது. பொது முதலீட்டு வாரியத்திடமிருந்து இத்திட்டத்திற்கு இசைவு பெறும் பொருட்டு, இந்த வட்டாரத்திலுள்ள ஏனைய மாநில மின் வாரியங்களுடன், இந்நிலையத்திடமிருந்து நம் பங்காக 168 மெ. வா. மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ள, நாம் உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டுள்ளோம். இத்திட்டம் 2000ஆம் ஆண்டில் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

*45.* தேசிய அனல் மின் உற்பத்தி நிறுவனம், தற்போது செயல்பட்டு வரும் ராமகுண்டம் உயர் அனல் மின் நிலையத்தில் மேலும் ஒரு 500 மெ.வா. உற்பத்திப் பிரிவை ஏற்படுத்த உள்ளது. இதன் மூலம் இந்த

உயர் அனல் மின் நிலையத்தின் நிறுவு திறன் 2600 மெ.வா ஆக உயரும். இந்தக் கூடுதல் உற்பத்திப் பிரிவிலிருந்து நமக்கு கிடைக்கும் பங்கு 138 மெ.வா. ஆக இருக்கும். தொகை செலுத்தும் முறை ஏனைய நிபந்தனைகள் ஆகியவை குறித்து தேசிய அனல் மின் உற்பத்தி நிறுவனத்துடன் விவாதிக்கப்பட்டு வருகிறது. நம் நலன் பாதுகாக்கப்பட்டு விரைவில் ஒரு முடிவு எடுக்கப்படும்.

46. தென்னக மாநிலங்களுக்கிடையே, அதாவது தமிழ்நாட்டுடன் கேரளா கர்நாடகா, ஆந்திரா, பாண்டிச்சேரி ஆகியவற்றுக்கிடையே பங்கிட்டுக் கொள்ள உத்திரபிரதேசத்தில் உள்ள ரிஹண்டு அனல் மின் நிலையத்திலிருந்து தென்னகத்திற்கு 1000 மெ.வா. உபரி மின்சாரத்தை வழங்க தேசிய அனல் மின் உற்பத்தி நிறுவனம் முன்வந்துள்ளது. மின் உற்பத்திச் செலவு, இந்த மின்சாரத்தைத் தென்னகத்திற்கு அனுப்புவதற்காக வட மாநிலத்திலுள்ள மின் அனுப்புகை கம்பித் தொடருக்குண்டான கட்டணத்தையும், இந்த மின்சாரத்தை ரிஹண்டிலிருந்து தென்னகத்திற்கு அனுப்புவதற்கான தொழில் நுட்ப சாத்தியக்கூறுகள் ஆகியவற்றைத் தெரிவிக்குமாறும் தேசிய அனல் மின் உற்பத்தி நிறுவனத்திடம் கேட்டிருந்தோம். இந்த வகையில் தமிழ்நாட்டிற்குக் கிடைக்கக்கூடிய பங்கு 318 மெ. வா. ஆக இருக்கும்.

47. மொத்தம் 2000 மெ.வா. (2 × 1000) திறன் கொண்ட கூடங்குளம் அணு மின் திட்டத்திற்குப் பங்கு மூலதனம் அளிக்க நாம் விரும்புவதாக ஏற்கனவே தெரிவித்துள்ளோம். இத்திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து மத்திய அரசு விரைவில் முடிவெடுக்க வேண்டும்.

48. தென்னக எரிவாயு இணைப்புத் திட்டத்தை விரைவில் செயல்படுத்த தென் மாநிலங்கள் சேர்ந்து நிதியுதவி செய்ய வேண்டுமென நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார். தென்னக எரிவாயு இணைப்புத் திட்டம் குறித்து முன் சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கையைத் தயாரிக்க, கேரள மாநிலத் தொழில் வளர்ச்சி நிறுவனம் தொடர்பு அமைப்பாக தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது.

**நிலக்கரி பெறப்படுதலும், அதனைக் கொண்டு வருவதற்கான செலவும்**

49. தமிழ்நாடு மின் வாரியம், அதன் நான்கு அனல் மின் நிலையங்களை (அதாவது தூத்துக்குடி, எண்ணூர், வடசென்னை

*1995 நவம்பர் 3]*

*மற்றும் மேட்டூர்)* இயக்க அதற்கு ஆண்டொன்றுக்கு சுமார் *13.5* மில்லியன் டன் நிலக்கரி தேவைப்படுகிறது. இந்த நிலையங்களுக்குத் தேவைப்படும் நிலக்கரி, கோல் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மேற்கு வங்காளம், ஒரிசா ஆகிய மாநிலங்களில் உள்ள ஈஸ்ட்டர்ன், மகாநதி,பாரத் கோக்கிங் கோல் சுரங்கங்களிலிருந்து அனுப்பப்படுகிறது. *1995* சனவரி முதல் *1995* செப்டம்பர் வரையிலான கால அளவில்

| கால அளவு | மின் நிலையம் | பெறுவதற்கான ஏற்பாடு | பெறப்பட்ட அளவு | மிகை/ பற்றாக்குறை |
|---|---|---|---|---|
| | | | (இலட்சம் டன்களில்) | |
| <u>முதல் காலாண்டு</u> | தூத்துக்குடி | 12.6 | 11.52 | (-) 1.08 |
| (1995-ஜனவரி, மார்ச்) | எண்ணூர் | 8.4 | 5.81 | (-) 2.59 |
| | மேட்டூர் | 11.4 | 9.98 | (-) 1.42 |
| <u>இரண்டாம் காலாண்டு</u> | தூத்துக்குடி | 12.6 | 10.20 | (-) 2.40 |
| (1995-ஏப்-ஜூன்) | எண்ணூர் | 7.5 | 4.56 | (-) 2.94 |
| | மேட்டூர் | 11.4 | 7.24 | (-) 4.16 |
| | வடசென்னை | 0.9 | - | (-) 0.90 |
| <u>மூன்றாம் காலாண்டு</u> | தூத்துக்குடி | 11.44 | 10.11 | (-) 1.33 |
| (1995 ஜூலை-செப்) | எண்ணூர் | 7.5 | 4.59 | (-) 2.91 |
| | மேட்டூர் | 11.4 | 8.37 | (-) 3.03 |
| | வடசென்னை | 0.9 | - | (-) 0.90 |

*50.* இம்மாநிலத்திலுள்ள அனல் மின் நிலையங்களுக்கு ஒவ்வொரு மாதமும் சராசரியாக சுமார் *11.25* இலட்சம் டன் நிலக்கரி தேவைப்படுகிறது. நிலக்கரி தேவை இவ்வாறு இருக்க, மேலே உள்ள அறிக்கையிலிருந்து பார்க்கையில், நிலக்கரி சுரங்கங்களிலிருந்து கிடைக்கக்கூடிய அளவு *7* முதல் *9* இலட்சம் டன் ஆகவே உள்ளது. இவ்வாறு பெறப்படும் அளவு கூட நிலையானதல்ல. சில மாதங்களில் இம்மாநிலம் *7* இலட்சம் டன் நிலக்கரியை மட்டுமே பெற்றிருக்கிறது; சராசரியாக மாதந்தோறும் ஏற்படக்கூடிய பற்றாக்குறை இரண்டரை இலட்சம் டன் ஆகும். இது தமிழ்நாடு மின் வாரியத்தை இக்கட்டான

நிலையில் விட்டதோடு, இவ்வாரியத்திற்குக் கிடைக்கக்கூடிய நிலக்கரி போதிய அளவிற்கு இல்லாத நிலையையும் தொடர்ந்திருக்குமாறு ஏற்படுத்திவிட்டது.

*51.* மேலும் மேற்சொன்ன நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து பெறப்படக்கூடிய நிலக்கரி தரம் குறைவானதாகும். நம்முடைய அனல் மின் நிலையங்களுக்குத் தேவைப்படக்கூடிய நிலக்கரியின் தர அளவு தூத்துக்குடி அனல் மின் நிலையத்திற்கு *14* முதல் *23.5* சதவீத சாம்பல் அளவுடன் கூடிய *4300* கிலோ கலோரி மதிப்பும், மேட்டூர் அனல் மின் நிலையத்திற்கு *34* சதவீத சாம்பல் அளவுடன் கூடிய *4260* கிலோ கலோரி மதிப்பும் ஆகும். இதற்கு மாறாக, நமக்கு வழங்கப்பட்ட பெரும்பாலான நிலக்கரி, *40* முதல் *45* சதவீத சாம்பல் அளவுடன் கூடிய *3000* முதல் *3500* (K cal/kg) கிலோ கலோரி மதிப்புடையவனவாகவே உள்ளன. கோல் இந்தியா லிமிடெட் நிறுவனம், கூட்டு மாதிரி கட்டத்தில் (Joint Sampling point) மதிப்பிட்ட தரத்தை ஏற்றுக் கொள்வதில்லை. மேலும் தரவேறுபாட்டிற்கான நம்முடைய கோரிக்கையையும் கருதிப் பார்ப்பதில்லை. தரம் குறைவான நிலக்கரி வழங்கப்படுவதன் விளைவாக சாம்பலின் அளவு அதிகமாகிறது. இதனால், சுற்றுப்புறத் தூய்மைக்கேடு அதிகமாகிறது. அதிக அளவு சாம்பல் இருப்பதால், துணை பாகங்களுடன் சேர்த்து செயல்படக் கூடிய சாதனங்களின் அதாவது ஆலைகள், விசிறிகள் முதலியவற்றின் தேய்மானம் அதிகமாகிறது. எனவே அவற்றின் உழைப்புக் கால அளவும் வெகுவாகக் குறைகிறது. மேலும், நிலக்கரி பயன்பாட்டு அளவும், துணைக் கருவிகளுக்கான மின் சக்தி பயன்பாட்டு அளவும், எதிர்பார்க்கப்பட்ட அளவைவிட அதிகரிக்கின்றன. சாம்பலை அப்புறப்படுத்துவதும் ஒரு பெரும் பிரச்சினையாக உள்ளது.

*52.* நான்கு அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரி, நிலக்கரிச்சுரங்கங்களிலிருந்து இரயில்-கப்பல்-இரயில் மூலமாகக் கொண்டுவரப்படுகிறது. நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து வெகு தொலைவில் அமைந்துள்ள அந்தந்த அனல் மின் நிலையங்களுக்கு நிலக்கரியைக் கொண்டு செல்ல வேண்டியிருப்பதால், அவ்வாறு கொண்டு செல்வதற்கான செலவு நிலக்கரியின் அடிப்படை விலையை விட மிக அதிகமானதாக உள்ளது. *1994–95*–ஆம் ஆண்டில் வரப்பெற்ற நிலக்கரியின் விலை ரூ. *542* கோடியாகும். இந்த நிலக்கரியை இரயில்–கப்பல்–இரயில் மூலமாகக் கொண்டுவர மின் வாரியம், ரூ. *922* கோடி செலவிட்டுள்ளது.

*1995* நவம்பர் *3*]

*53.* கோல் இந்தியா லிமிடெட் நிறுவனத்திடமிருந்து கிடைக்கும் நிலக்கரி, போதிய அளவிற்கு இல்லாமல் இருப்பதால், அதனைச் சரிகட்ட *0.9* மில்லியன் டன் நிலக்கரி இறக்குமதி செய்யப்படுகிறது. மத்திய அரசு, நிலக்கரி இறக்குமதி செய்வதைத் தாராளமாக்கியுள்ளது. நிலக்கரி இறக்குமதி செய்வதற்கான சுங்கத் தீர்வை *85* சதவீதத்திலிருந்து *35* சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. நிலக்கரி இறக்குமதி நிபந்தனையற்ற பொது உரிமப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. கிலோ ஒன்றுக்கு வெப்ப அளவு *5800* கிலோ கலோரிக்கு அதிகமானதாகவும், சாம்பல் அளவு மிகவும் குறைவாகவும் உள்ள நல்ல தரமான நிலக்கரி வெளிநாடுகளில் கிடைக்கிறது. நமக்குத் தேவையான எஞ்சிய நிலக்கரியை இறக்குமதி செய்வதன் மூலம், சுமார் ரூ. *65* கோடி மீதம் ஏற்படும்.

## மின் அனுப்புகை

*54.* மின் உற்பத்தித் திறனைப் பெருக்குவது மட்டும் போதுமானதாக இராது என்பதனையும், மின் அனுப்புகை மற்றும் வழங்கல் திட்டத்தை விரிவுபடுத்தி, பயனீட்டாளர்களுக்குத் தரமான மின் சக்தியை வழங்குவது அவசியமாகும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இதனைக் கருத்தில் கொண்டு நமது அரசு, இத்துறைக்கு போதிய நிதியுதவி அளிக்க உரிய முக்கியத்துவம் அளித்துள்ளது.

*55.* மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சிறந்த வழி காட்டுதலின் பேரில் கடந்த நான்கு ஆண்டுகளில் மின் அனுப்புகை பிரிவில் குறிப்பிடத்தக்க சாதனை அடைந்துள்ளோம்.

*1.* *31-3-95* வரையில் இயக்கப்பெற்ற துணை மின் நிலையங்கள்

| | |
|---|---|
| *400* கி.வோ. | *2* |
| *230* கி.வோ. | *7* |
| *110* கி.வோ. | *66* |
| *66* கி.வோ | *9* |
| *33* கி.வோ. | *53* |
| **மொத்தம்** | *137* |

[1995 நவம்பர் 3

2. 31–3–95 வரையில் மின்னனுப்புகைக் கம்பித் தொடர் இணைப்பு (மின்பாதை கிலோ மீட்டர்கள்)

| | |
|---|---|
| 230 கி.வோ. | 744.0 |
| 110 கி.வோ. | 823.0 |
| 66 கி.வோ. | 94.6 |
| மொத்தம் | 1661.6 |

3. 31–3–95 வரையில் மின்னழுத்த மாற்றிகளின் திறனை அதிகரித்தல்

| வோல்டேஜ் | துணை மின் நிலையங்களின் எண்ணிக்கை | உற்பத்தித் திறன் (மெகா வோல்ட் ஆம்பியரில்) |
|---|---|---|
| 400 கி.வோ. | 1 | 420.0 |
| 230 கி.வோ | 16 | 1645.0 |
| 110 கி.வோ | 107 | 1033.0 |
| 66 கி.வோ | 29 | 77.7 |
| 33 கி.வோ | 105 | 330.4 |
| | மொத்தம் | 3506.1 |

4. 31–3–95 வரையில் இயக்கப்பெற்ற கெபாசிட்டர் பேங்குகள்

| வோல்டேஜ் | திறன் (எம்.வி.ஏ. ஆரில்) |
|---|---|
| 11 கி.வோ | 209.8 |
| 22 கி.வோ | 112.8 |
| மொத்தம் | 322.6 |

56. எந்தவொரு மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மின் சக்தி முக்கிய அடிப்படைத் தேவை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். தரமான மின்சக்தி வழங்குவதை இம்மாநில அரசு எப்போதும் கருத்தில் கொண்டுள்ளது. மின் அழுத்த அளவை மேம்படுத்துவது மற்றும் தரமான மின் சக்தியை உறுதி செய்வது என்ற நோக்கத்தை எய்தும்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

*1995 நவம்பர் 3]*

பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய தலைமையின் கீழ் இந்த அரசு 1995-96ஆம் ஆண்டில் 100 புதிய துணை மின் நிலையங்களை ஏற்படுத்தவும், 1144 கி.மீ. தொலைவிற்கு உயரழுத்த மின்கம்பித் தொடர் இணைப்புகளை அமைக்கவும், 72 எம்.வி.ஏ. ஆர். ஷண்ட் கெபாசிட்டர்களைத் தொடங்கவும், சிறப்புத் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. 30-9-95 அன்றுள்ளபடி, 47 துணை மின் நிலையங்கள் இயக்கப்பெற்றுள்ளன. 97.7 மின் பாதை கிலோ மீட்டர் தொலைவிற்கு உயரழுத்த மின் கம்பித் தொடர் இணைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. எஞ்சிய பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு 31-3-96க்கு முன்னர் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

57. சென்னைப் பெருநகரப் பகுதியில், மின் அனுப்புகை மற்றும் வழங்கல் பணியை விரிவுபடுத்தி, மேம்படுத்தும் பொருட்டு, ரூ. 225 கோடி மதிப்பீட்டுச் செலவில் சிறப்புத் திட்டம் ஒன்று நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்பட்டது. இத்திட்டத்திற்கு ஆசிய வளர்ச்சி வங்கி ரூ. 150 கோடி அளவுக்கு நிதியுதவி அளித்து வருகிறது. ரூ. 56.46 கோடி செலவிலான மேம்பாட்டுப் பணிகள் 1995 செப்டம்பர் வரையில் நிறைவேற்றப்பட்டன. தமிழ்நாட்டில், மயிலாப்பூரில் 230 கி.வோ. (XLPE) நிலத்திற்கடியில் புதைவட இணைப்பு, 230 கி. வோ வாயு மின் கட்டுப்பாட்டு துணை மின் நிலையம் அமைத்தல், சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கு ஸ்கேடா வசதிகளுடன் முதல் முறையாக நவீன மின் வழக்கு கட்டுப்பாட்டு மையம் ஒன்று ஏற்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் சில சிறப்புக் கூறுகள் ஆகும். 1996 மார்ச்சுக்கு முன்னர் அனைத்து சாதனங்களும் வழங்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1996-97-ஆம் ஆண்டில் வாயு மின் கட்டுப்பாட்டு துணை மின் நிலையம் செயல்படத் தொடங்கும். ஸ்கேடா சாதனங்கள் வழங்குவதற்கான ஆணை இறுதியாக்கப்பட்டு வருகிறது.

### மின் வழங்கல்

58. 1994-95 ஆம் ஆண்டு பல்வேறு வகையான மின் இணைப்புகள் வழங்குவது தொடர்பாக வரையறுக்கப்பட்ட இலக்கை விடவும் எய்திய சாதனை அளவு விஞ்சியுள்ளது எனபதைத் தெரிவித்துக் கொள்வதில் நான் உவகை அடைகிறேன்.

| | இலக்கு | எய்திய சாதனை |
|---|---|---|
| பம்பு செட்டுகள் | 40,000 | 42,003 |
| குடிசைகள் | 40,000 | 40,000 |
| புதிய தொழிற்சாலைகள் (உயரழுத்தம் மற்றும் குறைந்தழுத்தம்) | 20,000 | 22,462 |
| கிராமங்களுக்கு வழங்கப்பட்ட மின் இணைப்புகள் | 31-3-92-ஆம் நாளன்றுள்ளபடி முக்கியமான அனைத்து கிராமங்களுக்கும் ஏற்கனவே மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. | |

மேற்கூறிய சாதனைகளைக் கருத்தில் கொண்டு பார்க்கையில் மின் பயனீட்டாளர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு கோடியை விஞ்சியுள்ளது.

**1995-96-ஆம் ஆண்டுற்கான திட்டப் பணிகள் வருமாறு**

| | இலக்கு | 1-10-95 வரையில் எய்திய சாதனை |
|---|---|---|
| வேளாண்மைப் பயனுக்கான பம்புசெட்டுகள் | 40,000 | 17,003 |
| குடிசைகள் | 40,000 | 23,712 |
| புதிய தொழிற்சாலைகள் (உயரழுத்தம் மற்றும் குறைந்தழுத்தம்) | 21,450 | 12,087 |

59. வேளாண்மைப் பயனுக்காக உழவர்கள் மின்னிணைப்பு பெற ரூ. 25,000 அல்லது மின் கம்பித் தொடர் அமைப்பதற்குரிய செலவுத் தொகையை செலுத்த வேண்டும் என்ற சுயநிதியுதவித் திட்டத்தின் கீழ் 1-4-95 அன்றுள்ளபடி, 7196 பம்பு செட்டுகளுக்கு ஏற்கனவே மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளது. 1995 ஏப்ரல் முதல் செப்டம்பர்

*1995 நவம்பர் 3]*

வரையில், 291 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இனி உழவர்கள் வேளாண்மைப் பயனுக்கு பம்புசெட்டுக்கு மின்னிணைப்பு பெற ரூ. 10,000 மட்டுமே செலுத்த வேண்டும் என்று மேற்படித் திட்டம் 14-2-95 முதல் திருத்தியமைக்கப்படடுள்ளது. 30-9-95 அன்றுள்ளபடி, இவ்வாறு திருத்தியமைக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ், 3622 பம்பு செட்டுகளுக்கு மின்னிணைப்பு அளிக்கப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிடர், பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள்**

60. ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கும் நோக்கத்துடன், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவுப்படி தமிழ்நாடு மின் வாரியம், பின்வரும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

1. இதுவரையில் தெரு விளக்குகள் வகை செய்யப்படாத 2085 ஆதிதிராவிடர் குடியிருப்புகள் ஒவ்வொன்றுக்கும், 5 விளக்குகள் வீதம் தெருவிளக்குகளுக்கு வகை செய்தல்.

2. குடிசைகளுக்கு ஒரு விளக்கு என்ற திட்டத்தின் கீழ் ஆண்டு ஒன்றுக்கு 99,000 குடிசைகள் என்ற வீதத்தில், 1995-96ஆம் ஆண்டிற்கு முன்னர் 9919 ஆதி திராவிடர் குடியிருப்புகளில் உள்ள 1,98,000 ஆதி திராவிடர் குடிசைகளுக்கு மின்னிணைப்பு வழங்குதல் 30-9-95 அன்றுள்ளபடி 7596 ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் 9747 தெருவிளக்குகள் அமைக்கப்பட்டதுடன் 1,63,789 குடிசைகளுக்கு மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

**பழங்குடியினர் வாழும் சிற்றூர்களுக்கு மின்னிணைப்பு வசதிகள்**

61. புதிய/விடுபட்டுப்போன ஆதிதிராவிடர் குடியிருப்புகள் 20,000 குடியிருப்புகளுக்கு 1995 டிசம்பருக்குள் தெரு விளக்கு வசதிகள் அளிப்பது என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட்டிய உயர் நிலைக் கண்காணிப்புக்குழுக் கூட்டத்தின் போது முடிவு செய்யப்பட்டது. குடிசைகளுக்கு ஒரு விளக்கு என்ற திட்டத்தின் கீழ் புதிய/விடுபட்டுப்போன ஆதிதிராவிடர் பழங்குடியினர் குடியிருப்புகளில் உள்ள குடிசைகளுக்கு, மின்னிணைப்பு வசதிகள் அளிக்கப்பட வேண்டும்

என்றும் அரசு விழைகிறது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவுப்படி, தமிழ்நாடு மின் வாரியம் இத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

## ஜீவன்தாரா திட்டத்தின் கீழ் கிணறுகளுக்கு மின்னிணைப்பு கொடுத்தல்

62. ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்குச் சொந்தமான நிலங்களில் ஊரக வளர்ச்சித் துறை மூலம் ஜவகர் வேலை வாயப்புத் திட்டத்தின் கீழ் தோண்டப்படும் கிணறுகளில் நிறுவப்படும் பம்பு செட்டுகளுக்கு, முன்னுரிமை அடிப்படையில் ஆண்டிற்கு 40,000 பம்பு செட்டுகள் என்ற இலக்கிற்கு உட்பட்டு, ஆண்டொன்றுக்கு 2000 மின்னிணைப்புகளைக் கொடுக்க தமிழ்நாடு அரசு ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறையின் 5-7-1993-ஆம் நாளிட்ட 151-ஆம் எண் அரசாணையில் அனுமதியளித்துள்ளது. இந்த இனத்தின் கீழ் 1995-96ல் 2698 பம்பு செட்டுகளுக்கு மின்னிணைப்பு கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 30-9-95 அன்றுள்ள நிலவரப்படி 1238 பம்பு செட்டுகளுக்கு மின்னிணைப்பு கொடுக்கப்பட்டது.

## தொழில்கள்

63. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்த புதிய தொழிற் கொள்கையின் அடிப்படையில், புதிய தொழில்களுக்குக் கீழ்காணும் சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| 1. மின் கட்டணத்தில் முதலாண்டு | 40 சதவீதச் சலுகை |
| இரண்டாமாண்டு | 30 சதவீதச் சலுகை |
| மூன்றாமாண்டு | 20 சதவீதச் சலுகை |

2. 100 சதவீதம் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட தொழிற் பிரிவுகளுக்கு மின் வெட்டிலிருந்து விலக்களித்தல்

3. தற்போதுள்ள தொழிற் பிரிவுகளின் விரிவாக்கத்திற்கும் புதிய தொழில் மின் கட்டணச் சலுகை பொருந்தும்.

1995 நவம்பர் 3]

4. வளவாய்ப்பு மிக்க விண்ணப்பதாரர்கள் மின்னிணைப்பு வழங்குவதற்கான செலவை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தால், அத்தகைய புதிய தொழிற்சாலைகளுக்கு 3 திங்களுக்குள் மின்னிணைப்பு வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

## உள்ளாட்சி அமைப்புகளின் மின் பகிர்வுப் பணியை உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து எடுத்துக் கொள்ளுதல்

64. கோயம்புத்தூர், மதுரை ஆகிய மாநகராட்சிகளிலும், தஞ்சாவூர், கரூர், பொள்ளாச்சி ஆகிய நகராட்சிகளிலும், உள்ள மின் பகிர்வுப் பணி 1994–95ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து எடுத்துக் கொளளப்பட்டுள்ளது. இதனால் அனைத்து உள்ளாட்சி மன்றங்களுக்கும் மாநில மின் வாரியம் மின்சாரத்தை வழங்கி வருகிறது. கும்பகோணம், திருமயம், வந்தவாசி ஆகிய இடங்களிலுள்ள ஊரக மின் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே தற்போது இம்மாநிலத்தில் பொதுமக்களுக்கு மின்சாரத்தைப் பகிர்ந்தளிக்கும் உரிமதாரர்களாக இருக்கிறார்கள்.

## திரையரங்குகளுக்கு அளிக்கப்படும் சலுகை

65. 1-3-94 முதற்கொண்டு மின் கட்டணத்தைத் திருத்தியமைக்கையில், உயரழுத்த மின்சாரத்தையும், குறைவழுத்த மின்சாரத்தையும் பயன்படுத்திக் கொள்கின்ற திரையரங்குகள், உயரழுத்த, குறைவழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்தும் ஏனைய தொழிற்சாலைகளுடன் முறையே மின் கட்டண வீதம் VI, VIII என்கிற கணக்கு வகைப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன. மின் கட்டணம் திருத்தியமைக்கப் பட்டதையடுத்து, திரையரங்கு உரிமையாளர்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகள் குறித்து அவர்கள் முறையிட்டனர். அரசு அவர்களுடைய பிரச்சினைகளைக் கவனமாக பரிசீலித்த பின், திரையரங்குகளுக்கு ஏற்கனவே இருந்த மின் கட்டணத்தையே மீண்டும் கொண்டு வர முடிவு செய்து அதற்கிணங்க உயரழுத்த மின் சக்தி, குறைவழுத்த மின் சக்தி என்பதன் கீழ் வரும் திரையரங்குகள் பயன்படுத்தும் மின்சாரத்திற்கு உயரழுத்த மின் வழங்கல் என்பதன் கீழ் VI A என்ற தனி மின் கட்டண கணக்கு வகைப்பாட்டினையும் குறைவழுத்த மின் வழங்கல் என்பதன் கீழ் VIII A என்ற தனி மின் கட்டண கணக்கு வகைப்பாட்டினையும்

ஏற்படுத்தி, பழைய கட்டண வீதங்களையே விதிக்க வேண்டும் என்கிற வகையில் தேவையான திருத்தங்களைக் கொண்டு வந்தது. இதன்படி, திங்களொன்றுக்கு உயரளவு தேவையின் கே. வி. ஏ. ஒன்றுக்கு ரூ. 75 என்ற கட்டணத்தோடு சென்னைப் பெருநகரப் பகுதியில், உயரழுத்த மின் வழங்கலைப் பயன்படுத்தும் திரையரங்குகளில் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 150 காசுகள் எனற வீதத்திலும், பெருநகர்ப் பகுதியல்லாத ஏனைய பகுதியில் உள்ள திரையரங்குகளில் பயன்படு ந்தப்படும் மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 140 காசுகள் என்ற வீதத்திலும் மின் கட்டணம் விதிக்கப்படுகிறது. திங்களொன்றுக்கு ரூ. 10 என்கிற வரையறுக்கப்பட்ட கட்டணத்தோடு, சென்னைப் பெருநகரப் பகுதிகளில் குறைவழுத்த மின் வழங்கலைப் பயன்படுத்தும் திரையரங்குகளுக்கு யூனிட் ஒன்றுக்கு 200 காசுகள் என்ற வீதத்திலும், பெருநகரப் பகுதியல்லாத ஏனைய பகுதிகளில் யூனிட் ஒன்றுக்கு 190 காசுகள் என்ற வீதத்திலும் கட்டணம் விதிக்கப்படுகிறது. திருத்தியமைக்கப்பட்ட இந்த மின் கட்டணம் 18-1-95இலிருந்து செயலிலுள்ளது. 1-2-95இலிருந்து ஏனைய அனைத்து வகை மின் பயனீட்டாளர்களுக்குரிய மின் கட்டணத்தைத் திருத்தியமைக்கையில், மேற்சொன்ன மின் கட்டண வீதம் திருத்தியமைக்கப்படவில்லை.

### மின்கம்பித் தொடரில் ஏற்படும் இழப்பு

66. அரசும், வாரியமும் எடுத்த பல்வேறு நடவடிக்கைகளினால் 1994-95ஆம் ஆண்டில் மின் கம்பித் தொடரில் ஏற்பட்ட இழப்பு 17 சதவீதமாகக் குறைந்துள்ளது என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் தகவலாகும். இது தேசிய சராசரியான 22 சதவீதத்தைவிட மிகக் குறைவாகும். மின் வழங்கலில் ஏற்படும் மின் இழப்பை 15 சதவீத அளவிற்கு மேலும் குறைக்க வாரியம் திட்டமொன்றை வகுத்துள்ளது. இத்திட்டத்தைச் செயல் படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடே முக்கிய இடர்பாடாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், அரசு, நிதியுதவி நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து கடன் உதவியைப் பெற முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

67. மின் அனுப்புகை, மின் வழங்கலில் ஏற்படும் இழப்புகளைக் குறைக்க மாநில மின் வாரியங்களுக்கு ஊக்கம் அளிப்பதற்காக மத்திய அரசு, மாற்றியமைக்கப்பட்ட திட்டமொன்றை 1989 செப்டம்பரில் கொண்டு வந்தது. 1991-92ஆம் ஆண்டு மின் அனுப்புகை மின்

*1995 நவம்பர் 3]*

வழங்கலில் ஏற்பட்ட இழப்பைக் குறைத்துள்ளதற்காக தமிழ்நாடு மின் வாரியம் பாராட்டுக் கேடயத்தினைப் பெற தெரிவு செய்யப்பட்டுள்ளது. 1992–93, 1993–94ஆம் ஆண்டுகளில் மின் அனுப்புகை மின் வழங்கலில் இழப்பைக் குறைத்து சாதனை புரிந்ததற்காக, தமிழ்நாடு மின் வாரியத்திற்குப் பாராட்டுக் கேடயம் வழங்குவதற்குரிய செயற்குறிப்புகள் பரிசீலனைக்காக மத்திய மின் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டு உள்ளன.

## 1994-95ஆம் ஆண்டுக்கான திட்டச் சாதனைகள்

68. திட்டப்பணியின் கீழ் 1994–95ஆம் ஆண்டு ஒப்புதலளிக்கப்பட்ட நிதியொதுக்கம் ரூ. 627.98 கோடியாகும். இதைத் தவிர மத்திய அரசு மின் சக்தி நிதியுதவிக் கழகத்திடமிருந்து கடனுதவியாக ரூ. 71.34 கோடி பெறவும் கருதப்பட்டது. இவ்வகையில், மின் சக்தி நிதியுதவிக் கழகத்திடமிருந்து பெறப்பட்ட கடனுதவி உட்பட ரூ. 870.19 கோடி செலவிடப்பட்டுள்ளது. மேற்சொன்னவற்றுடன், திட்ட ஒதுக்கீட்டுத் தொகையல்லாமல் ஊரக மின் சக்திக் கழகத்திடமிருந்தும் சுயநிதியுதவித் திட்டத்தின் கீழும் பெறும் நிதியுதவியுடன் பம்பு-செட்டுகளுக்கு மின் இணைப்பு அளிக்கும் திட்டத்தை வாரியம் செயல்படுத்துகிறது. இத்திட்டங்களின் கீழ் மூலதனச் செலவாக முறையே ரூ. 93.41 கோடியும் ரூ. 5.88 கோடியும் செலவிடப்பட்டது. சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் தெரு விளக்குகளுக்கு மின் வசதியளிப்பதற்காக அரசு, ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் நிதியுதவி அளித்தது. அதற்காக ரூ. 0.68 கோடி செலவிடப்பட்டுள்ளது. காற்றாலை மின் உற்பத்திப் பணி மேம்பாட்டிற்கு வாரியம் ரூ. 3.77 கோடி செலவிடப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் குடியிருப்புகளிலுள்ள குடிசைகளுக்கு மின் வசதி செய்து கொடுப்பதற்காக ரூ. 15.25 கோடி செலவிடப்பட்டது. திட்டப்பணி, திட்டப்பணியல்லாதவை ஆகிய இருபணிகளிலும் இவ்வாரியத்தின் அனைத்துத் திட்டங்களுக்கும் மொத்தம் ரூ. 989.18 கோடி மூலதனச் செலவு செய்யப்பட்டுள்ளது.

## 1995-96ஆம் ஆண்டுத் திட்டம்

69. தமிழ்நாடு மின் வாரியம் ரூ. 876.54 கோடி மூலதனச் செலவுக்கு உத்தேசித்திருந்தது. ஆனால் 1995–96ஆம் ஆண்டு திட்டப் பணியின் கீழ் மத்தியத் திட்டக்குழு ரூ. 767.89 கோடிக்கு ஒப்புதலளித்தது. மின்

சக்திக் கழகத்திடமிருந்து ரூ. 102.51 கோடியைக் கடனுதவியாகப் பெறவும் கருதப்பட்டுள்ளது. மேற்சொன்னவற்றுடன், வாரியம், ஊரக மின் சக்திக் கழகம் வேளாண்மை, ஊரக வளர்ச்சி தேசிய வங்கி ஆகியவற்றிடமிருந்து ரூ. 69.00 கோடி நிதியுதவி பெறவும், அதனைத் திட்டச் செலவுக்கு அப்பாற்பட்டதாகக் கணக்கிடவும் வாரியம் உத்தேசித்துள்ளது. சுயநிதியுவித் திட்டத்தின் கீழ் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு அளிப்பதற்காக ஆண்டுத் திட்டத்தில் ரூ. 2.50 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகவரமைப்பு மற்றும் மரபு சாரா எரிசக்தி ஆதார அமைச்சகம் ஆகியவற்றிடமிருந்து மொத்தம் ரூ. 4.80 கோடி நிதியுதவியைப் பெறுவதன் மூலம், காற்றாலை மின் உற்பத்தித் திட்டப் பணிகளும் செயல்படுத்தப்படும். தெரு விளக்கு வசதிக்கு ரூ. 3.08 கோடியும் (மாநில அரசு நிதி), ஆதிதிராவிடர் குடியிருப்புகளிலுள்ள குடிசைகளுக்கு, மின் வசதி செய்து கொடுக்க ரூ. 6.36 கோடியும் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1994-95ஆம் ஆண்டு மொத்த மூலதனச் செலவு ரூ. 989.18 கோடி என்றிருக்கையில் 1995-96இல் மொத்த மூலதனச் செலவு சுமார் ரூ. 956.14 கோடியாக இருக்கும்.

## வருவாய்க் கணக்கில் வரவுகளும் செலவுகளும்

70. 1993-94ஆம் ஆண்டில் வருவாய்க் கணக்கில் செலவு ரூ. 2935.91 கோடியாக இருந்தது. அரசிடமிருந்து பெற்ற ரூ. 527.10 கோடி உதவித் தொகையுடன் வருவாய்க் கணக்கில் வரவு ரூ. 3161.45 கோடியாக இருந்தது.

71. 1994-95ஆம் ஆண்டில் வருவாய்க் கணக்கில் செலவு ரூ. 3510.60 கோடியாக இருந்தது. அரசிடமிருந்து பெற்ற ரூ. 350.06 கோடி உதவித் தொகையுடன், வருவாய்க் கணக்கில் வரவு ரூ. 3858.35 கோடியாக இருந்தது.

72. வருவாய்க் கணக்கின் கீழ் வரும் செலவிற்கு 1995-96ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 4537.15 கோடியாகும். பல்வகை வரவுகள், தமிழ்நாடு அரசிடமிருந்து பெற்ற மின் கட்டண இழப்பீட்டுத் தொகையான ரூ. 350 கோடி உட்பட, வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூ. 4329.74 கோடியாகும். பற்றாக்குறை ரூ. 207.41 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

*1995 நவம்பர் 3]*

**மின் கட்டணத்தைத் திருத்தியமைத்தல்**

*73.* தமிழ்நாடு மின் வாரியம், அதன் அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியை மிகவும் தொலைவிலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து எடுத்துவர இரயில்-கப்பல்-இரயில் வழித்தடத்தைப் பின்பற்றுவதாலும், அத்துடன் ஆண்டுதோறும் உயருகின்ற இரயில் சரக்குக் கட்டணங்களினாலும் பணியாளர் குறித்த செலவு, நிருவாகச் செலவு, உதிரி பாகங்களின் விலை முதலிய காரணங்களினாலும், தமிழ்நாடு மின் வாரியத்திற்குக் கடுமையான நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மத்திய இரயில்வே வரவு-செலவுத் திட்டத்தில், இரயில் சரக்குக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டதால், தமிழ்நாடு மின் வாரியத்திற்கு நிலக்கரி சரக்குக் கட்டணங்கள் வகையில் சுமார் *15* சதவீதம் அதிகச் செலவு ஏற்பட்டுள்ளது. அனல் மின் உற்பத்திக் கலவை, *1989–90*இல் *69* சதவீதமாக இருந்தது. அது *1995–96*இல் *76* சதவீதமாக அதிகரித்துள்ளது. இதுவும் அனல் மின் உற்பத்திச் செலவைக் கணிசமான அளவிற்கு அதிகரிக்கக் காரணமாக அமைந்தது.

*74. 1995–96*ஆம் நிதியாண்டில் ஒட்டுமொத்த நிதிப் பற்றாக்குறை ரூ. *522.32* கோடியாகும். (வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை ரூ. *207.41* கோடியும் மூலதனக் கணக்கில் பற்றாக்குறை ரூ. *314.91* கோடியுமாகும்.) தமிழ்நாடு மின் வாரியம் ரூ. *200* கோடி நிதியொதுக்கம் செய்திருப்பதற்கு மாறாக, தமிழ்நாடு மின் வாரியத்திற்குக் கடன் வழங்குவதற்காக அரசு, தமிழ்நாடு மின் விசை நிதியுதவிக் கழகத்திற்கு கடன் நிதியுதவியாக ரூ. *300* கோடி ஒதுக்கியுள்ளது.

*75.* மேற்சொன்ன நடவடிக்கைகளால், அரசின் நிதியுதவி ரூ. *685* கோடியைக் (வருவாய்க் கணக்கில் ரூ. *350* கோடி, மூலதனக் கணக்கில் ரூ. *335* கோடி) கணககில் எடுத்துக் கொண்ட பின்னரும்கூட *1995–96*ஆம் நிதி ஆண்டில் ஒட்டுமொத்த நிதிப் பற்றாக்குறை ரூ. *422.32* கோடியாகும். (வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை ரூ. *207.41* கோடி, மூலதனக் கணக்கில் பற்றாக்குறை ரூ. *214.91* கோடி)

*76.* மின் வாரியத்தின் வருவாய்க்கும் செலவிற்கும் இடையில் உள்ள பற்றாக்குறையைச் சரிகட்டும் வகையில், வேளாண்மை மற்றும் குடிசைகளுக்கான மின்னிணைப்புகள் நீங்கலாக, மற்ற அனைத்து வகை மின் நுகர்வோர்களுக்கு *1–2–1995*ஆம் நாள் முதல் மின் கட்டண வீதங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. வேளாண்மைக்கும், குடிசைகளுக்கும் இலவசமாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது

என்பதை உறுப்பினர்கள் நன்கு அறிவர். 1995-96ஆம் ஆண்டில், குறைந்த அழுத்தத்தில் ஒரு யூனிட் மின்சாரம் வழங்குவதற்கான மதிப்பீட்டுச் செலவு 214 காசு எனக் கணக்கிடப்பட்டுள்ளது. உழவர்களுக்கு மட்டும் இலவசமாக மின்சாரம் வழங்குவதால், 1995-96ஆம் ஆண்டில் ஏற்படும் வருவாய் இழப்பு ஏறத்தாழ ரூ. 1358 கோடியாகும். மேற்சொன்ன வகையில் மின் நுகர்வு 6344 மில்லியன் யூனிட்டுகள் என மதிப்பிடப்பட்டுள்ளது. மின் கட்டண இழப்பீட்டுத் தொகை வழங்குவதன் மூலமும் ஒட்டுமொத்த உதவித் தொகை வழங்குவதன் மூலமும் அரசு மேற்சொன்ன இழப்பை ஓரளவு சரி செய்கிறது.

**பணியாளர்கள்**

77. மின் வாரியம் அதன் பணியாளர்களுடன் நல்ல தொழில் உறவுகளைக் கொண்டுள்ளது. 1994-95ஆம் ஆண்டில் மின் வாரியம், இன்று வரையில் திருத்தப்பட்டவாறான 1965ஆம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கல் சட்டத்தின்படி ஊதியக் கொடை பெறத் தகுதியுள்ள, ஊதிய வீதத்தைத் திருத்தியமைக்கும் ஆணையின் கீழ் வரும் பணியாளர்களுக்கு, சம்பளத்தில் 8.33 சதவீதம் ஊதியக் கொடையாகவும், சம்பளத்தில் 8.67 சதவீதம் கருணைத் தொகையாகவும் அறிவித்துள்ளது. இதனால், ஏறத்தாழ 27,000 பணியாளர்கள் பயன் பெறுகிறார்கள்.

78. ஊதியக் கொடை, கருணைத் தொகை எதனையும் பெறத் தகுதியில்லாத, மாதச் சம்பளம் ரூ. 3500க்கு அதிகமாக, ஆனால் ரூ. 6000க்குக் குறைவாக வாங்கும் பணியாளர்களுக்கு ரூ. 2,500 கருணைத் தொகையாக வழங்க மின் வாரியம் அறிவித்தது. இதனால், ஏறத்தாழ 45,000 பணியாளர்கள் பயன் பெறுகிறார்கள்.

79. ஊதிய வீதங்களைத் திருத்தியமைக்கும் ஆணையின் கீழ் வரும் எஞ்சியுள்ள பணியாளர்களுக்கும், ஊதியக் கொடை/கருணைத் தொகை எதனையும் பெறத் தகுதியில்லாத, திங்களொன்றுக்கு ரூ. 6000க்கும் அதிகமாக வாங்கும் பணியாளர்களுக்கு கருணைத் தொகையாக ரூ. 1500 வழங்க வாரியம் அறிவித்துள்ளது. இதனால், ஏறத்தாழ 11,000 பணியாளர்கள் பயனடைகிறார்கள்.

80. திங்களொன்றுக்கு ரூ. 3500க்கு அதிகமாகச் சம்பளம் பெறுகின்ற 1994-95ஆம் ஆண்டில் ஏதேனும் ஊதியக் கொடை அல்லது கருணைத் தொகை அனுமதிக்கப்படாத, நிலை 1 மற்றும் நிலை 2 அதிகாரிகளுக்கு,

1995 நவம்பர் 3]

தனி ஊதியக் கொடையாக ரூ. 625-ம் தனிப் பண்டிகை முன்பணமாக ரூ. 875-ம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், ஏறத்தாழ 8,500 அதிகாரிகள் பயனடைகிறார்கள்.

81. இந்திய உச்ச நீதிமன்றத்தின் ஆணைகளையொட்டி, இதுவரையிலும் மொத்தம் 5,500 ஒப்பந்தத் தொழிலாளர்கள் மின் வாரியத்தில் உதவியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். 1994-95ஆம் ஆண்டில் இறந்துபோன பணியாளர்களைச் சார்ந்திருக்கும் 447 பேர்களுக்கும் மருத்துவ ரீதியாக ஏலாமையுற்ற பணியாளர்களைச் சேர்ந்த 13 பேர்களுக்கும் பல்வேறு பதவித் தரங்களில் பணி நியமனங்கள் அளிக்கப்பட்டன. மேற்சொன்னவற்றுடன் வட சென்னை அனல் மின் திட்டத்திற்கும், கீழ் மேட்டூர் புனல் மின் திட்டத்திற்கும் நிலம் கையகப்படுத்தியதால் இடம் பெயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த 313 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

82. 1994-95ஆம் ஆண்டில் கரூர், கோபி ஆகிய இடங்களைத் தலைமையிடங்களாகக் கொண்டு இரண்டு புதிய மின் வழங்கல் சரகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கண்காணிப்புப் பொறியாளரின் தலைமையில் மேற்கொண்டு நான்கு சரகங்கள், அதாவது சென்னையிலுள்ள கணினி மையம் மற்றும் மின் திட்ட ஆய்வு மையம், கோயம்புத்தூரிலுள்ள காற்று சக்தி மற்றும் இயக்கச் சரகம் ஆகியவையும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

83. வெவ்வேறு அலுவலகங்களில், பல்வேறு பிரிவுகளில் பணிபுரியும் மின் வாரியத்தின் அதிகாரிகளும் பணியாளர்களும் நேர்மையுடனும், கடமை உணர்வுடனும் மெச்சத் தகுந்த வகையில் பணியாற்றுமாறு எதிர்பார்க்கப்படுகிறார்கள். அவர்களது பணியைப் பாராட்டுவது அவசியமாகும். இந்நோக்கத்துடன், மெச்சத் தக்க, தனிச் சிறப்பு வாய்ந்த பணிக்காக பதக்கம் வழங்கும் திட்டமொன்றை மின் வாரியம் தொடங்கியுள்ளது.

84. 1994ஆம் ஆண்டிற்காக, மின் வாரியத்தின் பல்வேறு பதவித் தரங்களில் உள்ள 11 பணியாளர்களுக்கு 5-8-95ஆம் நாளன்று பதக்கங்கள் வழங்கப்பட்டன.

85. பொது வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின் கீழ் வரும், இறந்துபோன பணியாளர்களின் (இயல்பான ஓய்வூதியப் பயன்களைப் பெற உரிமையில்லாதவர்கள்) குடும்பங்களுக்கும், 1-7-86 ஆம் நாளுக்கு

முன்னர் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கும் கருணைத் தொகை வழங்க மின் வாரியம் அனுமதித்துள்ளது. இத்திட்டத்தின்படி, இறந்துபோன பணியாளர்களைச் சார்ந்துள்ளவர்களுக்கு திங்களொன்றுக்கு ரூ. 300 கருணைத் தொகையும் அகவிலைப்படியும் வழங்கப்படும்.

86. மேற்கண்ட திட்டங்களைச் சேர்த்துக் கொள்ளும் வகையில் தமிழ்நாடு மின் வாரியப் பணியாளர்கள் மருத்துவ நலநிதி விதிமுறைகள் திருத்தப்பட்டுள்ளன.

1. இந்தியாவில் சிகிச்சை மேற்கொள்ளப்படும்போது, ஒரு இலட்சம் ரூபாய் மானியம் அல்லது தனித்தன்மை வாய்ந்த நவீன அறுவை சிகிச்சைக்கு/மருத்துவச் சிகிச்சைக்கு உண்மையில் ஆகும் செலவில் 75 சதவீதம், இதில் எது குறைவோ, அத்தொகை வழங்கப்படும்.

2. மேலே குறிப்பிடப்பட்ட மானியத்துடன், வெளிநாடுகளில் மருத்துவச் சிகிச்சை மேற்கொள்ளப்படும் இனங்களில், 10 சதவீதத்தில் விதிக்கத்தக்க தனி வட்டியுடன், ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேற்படாத தொகை கடனாக வழங்கப்படும். அசல் தொகை, 80 சம மாதாந்திர தவணைகளில் பணியாளரின் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யப்படத் தக்கதாகும். வட்டியானது, 25 சம மாதாந்திரத் தவணைகளில் வசூலிக்கத்தக்கதாகும்.

87. மின் வாரியத்தின் செயல்பாடு குறித்தும், அதன் வருங்காலத் திட்டங்கள் குறித்தும் நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெளிவு படுத்தியுள்ளேன். தமிழ்நாட்டைச் சேர்ந்த மின் நுகர்வோர்க்கு நம்பகமான முறையில் மின்சாரம் வழங்குவதை உறுதி செய்வதே நமது இலக்காகும். இவ்விலக்கை எய்தும் வகையில், மதிநுட்பமுடைய நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஊக்குவிப்பை நாம் எப்போதும் பெறுகிறோம். மேற்சொன்ன இலக்கை எய்துவதற்குத் தூண்டுகோலாக அமையக் கூடிய இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துரைகளை நான் பெரிதும் வரவேற்கிறேன்.

மன்ற நூலகம்
16 அக் 2000
600 009